தேசிய உணர்ச்சியம்

பொருட்பால் - அரசியல்

ச. தண்டபாணி தேசிகர்

பதிப்புக்குழு
சேஷன் காமராசர் பல்கலைக்கழகம்

ACL-MKU
01049

திருக்குறள்
உரைக் களஞ்சியம்

(பொருட்பால் — அரசியல்)

பத்மபூஷண் டாக்டர் மகாவித்துவான்
ச. தண்டபாணி தேசிகர்
முன்னாள் விரிவுரையாளர், திருக்குறள் ஆய்வகம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

உதவி

திருமதி. சலசா கோபிநாத்
விரிவுரையாளர், திருக்குறள் ஆய்வகம்

பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை — 625 021

பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மதுரை —625 021.

© Publications Division
Madurai Kamaraj University
Madurai —625 021.

பதிப்பு எண்:

திருக்குறள் ஆய்வக வெளியீட்டு எண்: 16

பதிப்பு விவரங்கள்:

1. உரைக் களஞ்சிய ஆசிரியர்: பத்மபூஷண் டாக்டர்
மகாவித்துவான்
ச. தண்டபாணி தேசிகர் (1905)
(PadmaBooshan Mahavidwan
S. Dhandapani Desigar)
முன்னாள் விரிவுரையாளர்
திருக்குறள் ஆய்வகம்
மதுரை காமராசர்பல்கலைக்கழகம்

2. தலைப்பு: திருக்குறள் — உரைக்களஞ்சியம்
பொருட்பால்—அரசியல்
(Thirukkural variorum Edition)

3. பதிப்பு:

அ. இடம்: மதுரைகாமராசர் பல்கலைக்கழகம்
(Madurai Kamaraj University)

ஆ. பதிப்பித்தோர்: பதிப்புத்துறை
மதுரை காமராசர்பல்கலைக்கழகம்
மதுரை— 625021.
Publications Division
Madurai Kamaraj University
Madurai

இ. ஆண்டு: முதற்பதிப்பு (1990)

4. மொத்த பக்கங்கள்: 20+848

5. பொருள்: அரசியல்

6. அச்சும் அமைப்பும்: அகரம், சிவகங்கை

7. விலை: ரூ. 120–00

துணைவேந்தர் அணிந்துரை

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறையில் இயங்கி வரும் திருக்குறள் கட்டிலின் ஒரு பெரும்பணி புகழ்மிக்க திருக்குறளுக்கு உரைக்களஞ்சியம் தொகுப்பதாகும். திருக்குறளுக்குப் பழங்காலம் முதலே பெரும்புலவர்கள் பலர் உரை எழுதி வந்திருக்கின்றனர். ஒவ்வோர் உரையும் ஒரு போக்கானது எனக் கருதப்படுகிறது. எல்லாவற்றையும் ஒரே நூலில் காண்பது ஒரு பெரிய அறிவு விருந்தாகும்.

வள்ளுவர் உலகப் பெருஞ்சிந்தனையாளர்களில் ஒருவர். அவர் தந்து விட்டுப்போன அறிவுச் செல்வத்தை உரையாசிரியர்கள் வழியாகவே இப்போது புரிந்துகொள்ளுகின்றோம். அவர்கள் உரைகளும் கூடக் கடினமாக உள்ளன. அவற்றை எல்லாம் தொகுத்து எளிமைப்படுத்தி அவற்றின் ஆழத்தையும் அகலத்தையும் இன்றைய தமிழர்களுக்குத் தருவது எவ்வளவு பெரிய தேவை; அந்தத் தேவை இந்தத் திருக்குறள் உரைக்களஞ்சியம் என்னும் நூல்வரிசையால் நிறைவேறுகிறது. இந்த நூல்வரிசை ஏழு தொகுதிகளாக வெளிவர இருக்கின்றது. நான்கு தொகுதிகள் இதுவரை வெளிவந்துள்ளன. எல்லாத் தொகுதிகளும் சேர்ந்து ஏறத்தாழ 3000 பக்கங்கள் கொண்டன. பழைய உரைகளும் அவற்றின் புதிய உரைகளும் பொருத்தங்களும் ஒத்த சிந்தனைகளும் இந்த நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. ஆராய்ச்சியாளருக்கும் அறிவுவிருந்து தேடுவோருக்கும் இந்த நூல் வரிசை ஒரு பெருந்துணையாகும்.

இந்த அரிய பெரிய நூலைத் தமிழருக்குத் தயாரித்து வழங்கியவர் முதுபெரும்புலவர் தண்டபாணி தேசிகராவர். அவர் இந்தப் பணிக்கு முழுதும் தகுதிபடைத்தவர். அவர் தமிழை முழுதுணர்ந்தவர். அவர் சிறப்புக்கள் மகாவித்துவான், டி.லிட், பத்ம பூஷண். அந்தப் பழுத்த தமிழ்ப் பழம் இன்று நம்முடன் இல்லை: தம் 85 வது வயதில் அண்மையில்தான் காலமானார். மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அவர் பணியைப் பெற்றது அதன் பேறாகும்.

எஞ்சிய தொகுதிகளும் விரைவில் வெளிவரும். உரைக்களஞ்சியப் பணி முழுவதுமாக நிறைவேறித் தமிழுலகத்திற்குப் பயன் தருவதாக.

மதுரை 21
20.2.91

மா. இலட்சுமணன்

முகவுரை

டாக்டர் தி. முருகரத்தனம்
தமிழ்த்துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை 625021.

திருக்குறள் ஒரு சிந்தனை அருவி: அருவியில் புதுப்புதுப் புனல் வந்துகொண்டே இருக்கும்; முப்பாற்குறளில் அறிதொறும் அறியாமை காணுகின்றோம்; சிந்தனைக் கருத்துக்களைப் புதிது புதிதாக அறிந்து கொண்டிருக்கின்றோம். அவ்வாறு அறிந்ததன் பயனே முப்பாலுக்கும் ஆயிரம் ஆண்டுகளாக இன்று வரை புத்துரைகள் தோன்றி வருவ தாகும். பண்டை உரைகள் பத்து என்பர்; இன்றை உரைகள் எத்தனையோ; ஓர் உரையால் மட்டுமே வள்ளுவரின் சிந்தனைப் புதுமையையும் சிந்தனை வெள்ளத்தையும் புரிந்துகொள்ள முடியாது. அதற்கு எழுந்த அனைத்து உரைகளையும் ஒருங்குவைத்துக் காண வேண்டும். அப்படிக்காணும் வாய்ப்பினையே முதுபெரும்புலவர் தாழ்விலாக் கல்வியர் தண்டபாணி தேசிகர் இந்த உரைக்களஞ்சியம் என்னும் நூல் வரிசைகள் வழி வழங்கியுள்ளார்கள்.

இந்த உரைக்களஞ்சியத்தில் முப்பாலின் பொருட்பாலது அரசியல் 25 அதிகாரங்களுக்கு எழுந்த பழைய உரைகள் கோத்துத் தரப் பட்டுள்ளன: இந்த நூற்றாண்டில் எழுந்த புத்துரைகளும் புதுக் கருத்துக்களும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன; அவற்றிடையே அமைந்த ஒற்றுமைகள் வேற்றுமைகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. ஒத்த கருத்துக்கள் இணைக்கப்பட்டுள்ளன.

வள்ளுவர் சிந்தனையின் வளத்தினைஅறிதல் மட்டும்அல்லஇந்நூலின் நோக்கம். இந்நூல் மதிப்புமிக்க பார்வை நூலாகவும் (Reference Book) விளங்கும்.

இன்றும் முப்பாலில் ஆராய்ச்சி முடிந்துவிடவில்லை. அது தொடங்கி யிருக்கிறது என்று சொல்லலாம். அந்த ஆராய்ச்சிக்குப் பயன்படும் அடிப்படை நூலாகவும் இந்தக் களஞ்சியம் உதவும்.

இவ்வரிய நூலை வழங்கிய தமிழ் மூதறிஞர் இன்று நம்மிடை இல்லை. அவர் சைவப் பெரும்புலவர்; இலக்கியச் செம்மல்; முப்பாலறிஞர். அவர் பணிகளில் தலையாயது இந்த முப்பால் உரைக்களஞ்சியமே. அவரது முக்கால் நூற்றாண்டு வாழ்க்கை ஈட்டிய மூதறிவை நூல் வரிசைகளில் காணலாம்.

இந்த நூலைப்போல் முப்பால் ஆராய்ச்சிக்குப் பயன்படுவது வேறு இருக்காது.

இந்நூலை எங்கள் தேவை கருதிச் சிறப்புற அச்சிட்டுத்தந்த அகரம் அச்சகத்தார்க்கு நன்றி உரியது.

இந்நூலை உருவாக்குவதில் தமிழ் விரிவுரையாளர் டாக்டர் திருமதி சலசா பங்கு நன்றிக்குரியது. அச்சகப்பணி முழுவதையும் அவர் நிறைவேற்றினார்.

ம துரை21 தி. முருகரத்தனம்

1·7.90.

முன்னுரை

இப்பணி வளர்ந்து மலர ஏடுகள், பழைய கட்டுரைத்தாள்கள், ஆய்வு மலர்கள் தந்துதவிய, பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரித் தாளாளர் சிவத்திரு இராமசாமி அடியார் அவர்களுக்கும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி செங்கோட்டுவேலன் அவர்களுக்கும், செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, வள்ளுவர், குறளியம் போன்ற தாள்களின் தாளாளர்கள் பலருக்தும் என்னுடைய பணிவான நன்றி என்றும் உரியதாகும்.

இப்பணியில் என்னை ஈடுபடுத்திய முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சை.வே.சிட்டிபாபு அவர்களுக்கும், வழிவழித் துணை வேந்தர்களான டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்களுக்கும், டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்கட்கும், பேராசிரியர் ஜா. இராமச் சந்திரன் அவர்களுக்கும், இந்நாள் துணைவேந்தர், விஞ்ஞானக் கலை வேந்தர், கல்வியுலகிலும் சமுதாய சமயப் பணிகளிலும் பேராதரவு காட்டிவரும் டாக்டர் சீனி. கிருட்டிணசாமி அவர்களுக்கும் மன நிறைந்த நன்றி. வழக்கம்போல உரைக்களஞ்சியம் சிறப்புடன் வரப் பல்லாற்றானும் வழிதுறைகளை வகுத்துக் கொடுத்து ஊக்கம் தந்து தவும் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் தமிழண்ணல் அவர் களுக்கும் நன்றி. உற்றுழி உதவியுறுதுணையாக இருக்கும் திருக் குறள் ஆய்வுத் துறைத் தலைவர் டாக்டர் தி. முருகரத்தனம் அவர் களுக்கும் நன்றி. அயரா அன்போடு படியெடுத்தும், ஒப்பு நோக்கி யும், மேற்கோட்பகுதி ஒப்புமைப் பகுதிகளை மூலநூலோடு ஒப்பு நோக்கிச் செப்பனிட்டும், தந்த ஆய்வுத் துறை உதவியாளர் திருமதி சலசா கோபிநாத், எம்.ஏ.. அவர்களுடைய முழுநேர உழைப்பும் உதவியும் பாராட்டிற்குரியன. இவர் மேன்மேலும் இத்தகைய பணி களில் வளர்ந்து தமிழன்னையின் அருளுக்கு இலக்காகி வாழ்வாராக.

அச்சுப்படியை ஒப்புநோக்கிப் பதிப்புக்காலத்து உடனிருந்து கண் காணித்து வரும் ஓய்வுபெற்ற தமிழாசிரியர் இராம.வரதராசனார் அவர்கட்கும் நன்றி,

பதிப்புமுறை, கட்டு, முகப்பு, அனைத்திலும் சிறப்பு விளங்கப் பதித்துத் தரும் பதிப்புத் துறைத் தலைவர் டாக்டர் உயர்திரு கதிர் மகாதேவன் அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும். காண்பவர்

கருத்துப் பதிப மிகச் சீரிய முறையில் அச்சிட்டுத் தரும் அகரம் அச்சக உரிமையாளர் கவிஞர் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. மீரா அவர் களுக்கும் நன்றி.

பல ஆண்டு உழைத்த உழைப்பும், அமைப்பாளர் சூழ தந்த ஆணை யின் வண்ணம் உருவாக்கிய அநமையும், அவ்வப்போது செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், குறளியம், பல ஆண்டுமலர்கள், விழாமலர்களில் வந்த கட்டுரைகள் இவற்றான் களஞ்சியம் நிரம்பி வழிகிறது. அறிவுப்பசியைப் போக்கி ஆய்வு வன்மையை அளிக்கிறது. இதில் நிறை குறைகண்டு காட்டுபவர்களே இந்நூலை ஊன்றிப் படித்தவர்கள்; பணியாளன் அறிவைப் பதஞ்செய்பவர்கள்; ஆகை யால், குணங்கூறிப் பாராட்டுவானினும், குறை கூறி என்னை வளர்ப்பவர்களே 'எண்ணின் எனக்கினிய' ராவார். ஆதலால் அவர் கள் உதவி இப்பதிப்பு முடியும்வரையில் எனக்கு மிகத்தேவை என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறேன். என்றும் செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருள் துணை நிற்கும். விரைவில் உரைக்களஞ்சியம் முற்றுப் பெற்று நிறைவு விழாப் பெறும் என்று எதிர்நோக்கி அங்கயற் கண்ணியம்மையின் திருவடிகளைப் போற்றி அமைகின்றேன்.

இங்ஙனம்

ச. தண்டபாணி தேசிகர்

குறிப்பு: 'அறத்துப்பால் —துறவறவியல்' ல் உள்ள முகவுரைப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.

சுருக்க விளக்கம்

ஆசிரியர்கள்

இராம.	இராமலிங்கம்பிள்ளை
இளம்.	இளம்பூரணர்
கவிராசர்	கவிராசர்
கா.சு.	கா. சுப்ரமணியபிள்ளை
காரி.	காரி ரத்னக்கவிராயர்
காளி.	காளிங்கர்
குண.	குணவீர பண்டிதர்
கோ.வ.	கோ. வடிவேலு செட்டியார்
சங்கர.	சங்கரநமச்சிவாயர்
சபாபதி, ஈ. சபாபதி	ஈக்காடு சபாபதி முதலியார்
சாமி:, சாமி.சி.	சாமி. சிதம்பரனார்
சி.இ.	சி. இலக்குவனார்
சிவஞான.	சிவஞான சுவாமிகள்
சுப்பிர.	சுப்பரமணிய தீட்சிதர்
சுவாமி.	சுவாமிநாத தேசிகர்
சேனா.	சேனாவரையர்
சொக்கப்.	சொக்கப்ப நாவலர்
தெய்வச்.	தெய்வச்சிலையார்
தேவநேயர்	தேவநேயப் பாவாணர்
ந.சி.கந்.	ந.சி. கந்தையாபிள்ளை
நச். , நச்சி.	நச்சினார்க்கினியர்
பரிதி.	பரிதியார்
பரிப்.	பரிப்பெருமாள்
பரிமேல்.	பரிமேலழகர்
பெருந்.	பெருந்தேவனார்
பேரா.	பேராசிரியர்
மணக்.	மணக்குடவர்
மயிலை.	மயிலைநாதர்
மயிலை சிவ.	மயிலை சிவமுத்து
மு.கோ.	மு. கோவிந்தசாமி
மு.ரா.அரு.	மு. ரா. அருணாசலக் கவிராயர்
மு.ரா.கந்.	மு. ரா. கந்தசாமி
மு.வ.	மு. வரதராசனார்
வ.சுப. மா.	வ. சுப. மாணிக்கம்
வரத. , ஜி.வரத.	ஜி. வரதராஜபிள்ளை
வை.மு.கோ.	வை. மு. கோபாலகிருஷ்ண மாச்சார்யார்

ஆ. நூல்கள் :

அகநா.
அப்பர்.
அதிகை.
கருகா.
அறநெறிச்.
ஆத்தி.
இ.கொ.
இரங்.முதுமொழி
இலக்.
இலக்.சூறா.
இன்னா.
இனிய.
உத.
ஐங்.
கந்த.
அசுரேந்
சூரனமைச்
மாயை
கம்ப.
எதிர்கோட்.
காட்சி.
கிட்கிந்தா.
சம்பா.
நகர.
படைத்தலை.
மந்தரை.
கலி.
காஞ்சி.
கார்.
குண்டல.
குறள்.
கொன்றை.
கௌடி.
சம்பந்தர்.
ஆக்கூர்.

அகநானூறு
அப்பர் தேவாரம்
அதிகை வீரட்டானம்
கருகாவூர்
அறநெறிச்சாரம்
ஆத்திச்சூடி
இலக்கணக்கொத்து
இரங்கேசர் முதுமொழி வெண்பா
இலக்கணவிளக்கம்
இலக்கனவிளக்கச் சூறாவளி
இன்னாநாற்பது
இனியவை நாற்பது
உதயணகுமாரகாவியம்
ஐங்குறுநூறு
கந்தபுராணம்
அசுரேந்திரன் மகேந்திரஞ்
செல்லுதல்
சூரனமைச்சியல்
மாயையின் அஸ்திரமும்
வேலாயுதத்தின் ஆற்றல்
கம்பராமாயணம்
எதிர்கோட் படலம்
காட்சிப் படலம்
கிட்கிந்தா காண்ட்ம்
சம்பாதிப் படலம்
நகரப் படலம்
படைத்தலைவர் வதைப்படலம்
மந்தரை சூழ்ச்சிப் படலம்
கலித்தொகை
காஞ்சிபுராணம்
கார் நாற்பது
குண்டலகேசி
திருக்குறள்
கொன்றை வேந்தன்
கௌடலியம்
சம்பந்தர் தேவாரம்
ஆக்கூர்த்தான்

ஆமாத்தூர்
தூங்கானை.
பேணு பெருந்
வீழிமிழலை.
சரபேந்திர.
சிலப், , சிலம்பு
கனா.
மங்கல.
வழக்கு
சிவபோ.
சிறுபஞ்ச.
சிறுபாணா.
சீவக.
சுக்கிர.
சுந்தரர்.
எதிர்கொ.
சூளா.
மந்திர.
தக்க. உரை.
தகடூர்.
தஞ்சை.
தண்டி.
தணிகை.
தமிழ்விடு., தமிழ்
திரி.
திருக்கோவை., கோவை.
திருநா.
நமச்சி.
திருநாவுக்கரசர்
திருவேதி.
திருமந்.
திருவா.
திருவாச.
திருவிளை.
தடா. அவ.
தருமி.

ஆமாத்தூர்
தூங்கானை மாடம்
பேணுபெருந்துறை
வீழிமிழலை
சரபேந்திரக் குறவஞ்சி
சிலப்பதிகாரம்
கனாத்திறம் உரைத்த காதை
மங்கல வாழ்த்துக் காதை
வழக்குரை காதை
சிவபோதகம்
சிறுபஞ்சமூலம்
சிறுபாணாற்றுப்படை
சீவக சிந்தாமணி
சுக்கிர நீதி
சுந்தரர் தேவாரம்
எதிர்கொள் பாடி
சூளாமணி
மந்திரசாலைச் சருக்கம்
தக்கயாகப்பரணி உரை
தகடூர் யாத்திரை
தஞ்சைவாணன் கோவை
தண்டியலங்காரம்
தணிகைப்புராணம்
தமிழ்விடு தூது
திரிகடுகம்
திருக்கோவையார்
திருநாளைப்போவார் புராணம்
நமச்சிவாயர் உரை
திருநாவுக்கரசர் தேவாரம்
திருவேதிகுடி
திருமந்திரம்
திருவாய்மொழி
திருவாசகம்
திருவிளையாடற்புராணம்
தடாதகைபிராட்டியார்
திரு அவதாரப் படலம்
தருமிக்குப் பொற்கிழியளித்த
படலம்

பன்றி மந்திரி

வாத உபதே

பழியஞ்சின

திருவெங்.

தொல்.

செய்.

சொல்,

பொருள்.

நாலடி.

நான்மணி.

நீதிநெறி.

நீல.

நேமி.

நற்,

நன்.

பதிற்று.

பரமத பானு.

பழ., பழ. நா.

பா.வெ.

பாக.

பிரபு

அக்கமா.

துறவு.

பூசை.

மாயை.

முனிவரர்

வசவன்.

பிரமோத்.

பு.வெ.

புறம்., புற. நா.

பெரிய.

மூர்த்தி.

திருவாரூர்.

பெரிய திரு.

பெருங்,

பன்றிக்குட்டிகளை மந்திரி களாக்கிய படலம்

வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்

பழியஞ்சின படலம்

திருவெங்கைக் கோவை

தொல்காப்பியம்

செய்யுளியல்

சொல்லதிகாரம்

பொருளதிகாரம்

நாலடியார்

நான்மணிக்கடிகை

நீதிநெறி விளக்கம்

நீலகேசி

நேமிநாதம்

நற்றிணை

நன்னூல்

பதிற்றுப்பத்து

பரமத திமிர பானு

பழமொழி நானூறு

பாரத வெண்பா

பாகவதம்

பிரபுலிங்க லீலை

அக்கமாதேவி உற்பத்தி கதி

அக்கமாதேவி துறவு கதி

மாயை பூசை கதி

மாயையின் உற்பத்தி கதி

முனிவரர் கதி

வசவண்ணர் கதி

பிரமோத்தர காண்டம்

புறபபொருள வெண்பாமாலை

புறநானூறு

பெரியபுராணம்

மூர்த்தி நாயனார் புராணம்

திருவாரூர்த் திருநகரச் சிறப்பு

பெரிய திருமொழி

பெருங்கதை

பொருந.	பொருநராற்றுப்படை
மணி.	மணிமேகலை
சிறைக்கோட்.	சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆகிய காதை
மதுரைக்.	மதுரைக்காஞ்சி
மலைபடு.	மலைபடுகடாம்
மனு.	மனுதர்மசாத்திரம்
மனோன்.	மனோன்மணீயம்
மாற.	மாறனலங்காரம்
முத்திநிச்.	முத்தி நிச்சயப் பேருறை
முதுமொழிக்.	முதுமொழிக்காஞ்சி
யசோதர.	யசோதர காவியம்
யா.கா.	யாப்பருங்கலக்காரிகை
யா.வி.	யாப்பருங்கல விருத்தி
வளை.	வளையாபதி
வாக்கு.	வாக்குண்டாம்
விநா.	விநாயக புராணம்
விருத்.	விருத்தியுரை
வில்லி. பாரதம்	வில்லிபுத்தூரார் பாரதம்
கிருட்.	கிருட்டிணன் தூதுச் சருக்கம்
சூது.	சூது போர்ச் சருக்கம்
நச்சுப்.	நச்சுப் பொய்கைச் சருக்கம்
நிரை.	நிரை மீட்சிச் சருக்கம்
வீர.	வீரசோழியம்

இ) பிற:

அத்.	அத்யாயம்
அதி.	அதிகாரம்
சூ.	சூத்திரம்
சுலோ.	சுலோகம்.
திருவே.ப.க.	திருவேங்கடவன்பல்கலைக்கழகம்

இதில் அடங்கியவை

துணைவேந்தர் அணிந்துரை

முன்னுரை

முகவுரை

சுருக்க விளக்கம்

பொருட்பால்

39. இறைமாட்சி

39.1. படைகுடி

39.2. அஞ்சாமை

39.3. தூங்காமை

39.4. இழுக்கா

39.5. இயற்றலும்

39.6. காட்சிக்

39.7. இன்சொலால்

39.8. முறை செய்து

39.9 செவிகைப்ப

39.10 கொடைஅளி

40. கல்வி

40.1. கற்க கசடறக்

40.2. எண்ணென்ப

40.3. கண்ணுடையர்

40.4. உவப்பத்

40.5. உடையார்முன்

40.6. தொட்டனைத்து

40.7. யாதானும்

48.8. ஒருமைக்கண்

40.9. தாமின்பு

40.10 கேடில்

41. கல்லாமை

41.1. அரங்கின்றி

41.2. கல்லாதான் ஒட்பம்

41.3. கல்லாதவரும்

41.4. கல்லாதான் சொல்

41.5. கல்லா ஒருவன்

41. 6. உளரென்னும் ககடு
41. 7. நுண்மாண் ககள
41. 8. நல்லார்கண் கஉஉ
41. 9. மேற் பிறந்தார் கஉடு
41. 10 விலங்கொடு கஉஅ

42. கேள்வி கஙஙு

42. 1. செல்வத்துள் கஙடு
42. 2. செவிக்குணவு கஙஅ
42. 3. செவியுணவின் கசஉ
42. 4. கற்றிலன் கசள
42. 5. இழுக்கல் கஙய
42. 6. எனைத்தானும்நல்லவை கஙசு
42. 7. பிழைத்துணர்ந்தும் கஙசு
42. 8. கேட்பினும் கேளா கஙக
42. 9. நுணங்கிய கசஉ
42.10. செவியின் கசடு

43 அறிவுடைமை கசக

43. 1. அறிவற்றம் கஙக
43. 2. சென்ற கஙடு
43. 3. எப்பொருள் கஅய
43. 4. எண்பொருளவாக கஅங
43. 5. உலகம் தழீஇயது கஅஅ
43. 6. எவ்வதுறைவது ககய
43. 7. அறிவுடையார் ஆவது ககஉ
43. 8. அஞ்சுவது அஞ்சாமை ககசு
43. 9. எதிரதா ககக
43. 10. அறிவுடையார்எல்லாம் ககஅ

44. குற்றங் கடிதல் உயஉ

44, 1. செருக்கும் உயச
44. 2. இவறலும் உயள
44.3. தினைத்துணையாம் உகய
44 .4. குற்றமே உகஉ
44. 5. வருமுன்னர் உகச
44. 6. தன்குற்றம் உகசு
44. 7. செயற்பால உஉய
44 8. பற்றுள்ளம் உஉச
44. 9. வியவற்க உஉக
44.10. காதலகாதல் உஉசு

45 பெரியாரைத்துணைக்கோடல்

45.1. அறனறிந்து
45.2. உற்ற நோய் நீக்கி
45.3. அரியவற்றுள்
45.4. தம்மிற் பெரியார்
45.5. சூழ்வார் கண்
45.6. தக்கார் இனத்தனாய்
45.7. இடிக்கும்
45.8. இடிப்பாரை
45.9. முதலிலார்க்கு
45.10. பல்லார்

46. சிற்றினஞ் சேராமை

46.1. சிற்றினம்
46.2. நிலத்தியல் பால்
46.3. மனத்தானாம்
46.4. மனத்துளது
46.5. மனந்தூய்மை
46.6. மனந்தூயார்க்கு
46.7. மனநலம் மன்னுயிர்க்கு
46.8. மனநலம் நன்குடையர்
46.9. மனநலத்தின்
46.10. நல்லினத்தினூங்கும்

47. தெரிந்து செயல்வகை

47.1. அழிவதூஉம்
47.2. தெரிந்த இனத்தொடு
47.3. ஆக்கம் கருதி
47.4. தெளிவிலதனை
47.5. வகையற
47.6. செய்தக்க
47.7. எண்ணித் துணிக
47.8. ஆற்றின் வருந்தா
47.9. நன்றாற்றல்
47.10. எள்ளாத

48. வலியறிதல்

48.1. வினைவலியும்
48.2. ஒல்வதறிவது
48.3. உடைத்தம்

48.4. அமைந்தாங்கு நஙக
48.5. பீலிபெய் நசஙந
48.6. நுனிக்கொம்பர் நசஎ
48,7. ஆற்றின்அளவறிந்துஈக நஙஙக
48.8. ஆகாறு நஙஙச
48.9. அளவறிந்து நஙஙஞ
48.10. உளவரை நஙஎ

49. காலம் அறிதல் நசஙய

49.1. பகல் வெல்லும் நசஙக
49.2. பருவத்தோடு உசஙச
49.3. அருவினை நசஙசு
49.4. ஞாலம் கருதினும் நசஙஞ
49.5. காலம் கருதி நசஙஎ
49.6. ஊக்கமுடையான் நசஙஞ
49.7. பொள்ளென நசஙஎ
49.8. செறுநரைக் நசஙய
49.9. எய்தற் கரியது நசஙஉ
49.10 கொக்கொக்க சஅசஙச

50. இடன் அறிதல் நசஙக

50.1. தொடங்கற்க நசஙயஙக
50.2. முரண்சேர்ந்த நசஙயஙச
50.3. ஆற்றாரும் நசஙயஙசு
50.4. எண்ணியார் நசஙயஙஅ
50.5. நெடும் புனலுள் சயயஙய
50.6. கடலோடா சயயஙச
50.7. அஞ்சாமை அல்லால் சயயஙஎ
50.8. சிறுபடையான் சயயஙஞ
50.9. சிறைநலனும் சயயஙக
50.10. காலாழ் சகஙஉ

51. தெரிந்து தெளிதல் சகஙநஙக

51.1. அறம் பொருள் சகஙநஙச
51.2. குடிப்பிறந்து குற் சகஙநஙசு
51.3. அரியகற்று சகஙநஙஅ
51.4. குணம்நாடி சஉஙக
51.5. பெருமைக்கும் சஉஙச
51.6. அற்றாரைத் சஉஙசு
51,7. காதன்மை சஉஙஅ

51. 8. தேரான் பிறனை சசசு
51. 9. தேறற்க சசஅ
51. 10. தேரான் தெளிவும் சசுல

52. தெரிந்து வினையாடல் சசுஙு

52.1. நன்மையும் சசுள
52.2. வாரிபெருக்கி சசூக
52.3. அன்பறிவு தேற்றம் சசூஙு
52.4. எனைவகையான் சசூள
52.5. அறிந்தாற்றிச் சளல
52.6. செய்வானை சளஙு
52.7. இதனை இதனால் சளஙு
52.8. வினைக்குரிமை சளள
52.9. வினைக்கண் வினையுடையான் சளக
52.10. நாடோறும் நாடுக சஅக

53. சுற்றந்தழால் சஅஙு

53.1. பற்றற்ற கண்ணும் சஅசு
53.2. விருப்பறா சகல
53.3 அளவளாவு சகஙு
53.4. சுற்றத்தால் சகசு
53.5. கொடுத்தலும் சகக
53.6. பெருங்கொடையான் ஙலஉ
53.7. காக்கை ஙலச
53.8. பொது நோக்கான் ஙலசு
53.9. தமராகித் ஙலக
53.10. உழைப் பிரிந்து ஙகஉ

54. பொச்சாவாமை ஙகசு

54.1. இறந்த வெகுளியின் ஙகஅ
54.2. பொச்சாப்புக் ஙஉஉ
54.3. பொச்சாப்பார்க்கு ஙஉஙு
54.4. அச்சம் உடையார்க்கு ஙஉள
54 5. முன்னுறக் காவாது ஙஉக
54.6. இழுக்காமை ஙஙஉ
54.7. அரிய என்று ஙஙச
54 8. புகழ்ந்தவை ஙஙள
54.9. இகழ்ச்சியின் ஙஙக
54.10. உள்ளியது எய்தல் ஙசஙு

55. செங்கோன்மை நிசள

55. 1. ஓர்ந்துகண் நிசக

55. 2. வானோக்கி நிநிங

55. 3. அந்தணர் நூற்கும் நிநிஅ

55. 4, குடிதழீஇக் நிசுச

55. 5. இயல்புளிக் நிசுள

55. 6. வேலன்று நிளக

55. 7. இறைகாக்கும் நிளங

55. 8. எண்பதத்தான் நிளசு

55. 9. குடிபுறம் நிஅய

55.10. கொலையின் நிஅச

56. கொடுங்கோன்மை நிகூய

56. 1, கொலைமேற்கொண் நிகூஉ

56. 2. வேலொடு நிகூங

56. 3. நாடோறும் நாடி சுயய

56. 4. கூழும் குடியும் சுயஉ

56. 5. அல்லற்பட்டு சுயங

56. 6. மன்னர்க்கு சுயஅ

56. 7, துளியின்மை சுகக

56, 8. இன்மையின் இன்னாது சுகங

56. 9. முறைகோடி சுகள

56.10. ஆபயன் சுகஅ

57.வெருவந்த செய்யாமை சுஉச

57. 1. தக்காங்கு சுஉசு

57. 2. கடிதோச்சி சுஙய

57. 3. வெருவந்த சுஙங

57. 4. இறைகடியன் சுஙள

57, 5. அருஞ்செவ்வி சுசய

57. 6. கடுஞ்சொல்லன் சுசங

57. 7. கடுமொழியும் சுசஙு

57. 8. இனத்தாற்றி சுசள

57, 9. செருவந்த போழ்தி சுஙய

57.10. கல்லார்ப் பிணிக்கும் சுஙங

58. கண்ணோட்டம் சுஙஅ

58. 1,கண்ணோட்டமென்னும் சுசஉ

58, 2. கண்ணோட்டத்து சுசச

58. 3. பண் என்னாம் சுசசு

58. 4. உளபோல் கூஎஉ
58. 5. கண்ணிற்கு கூஎஎ
58. 6. மண்ணோடு கூஎசு
58. 7. கண்ணோட்டம் கூஅய
58. 8. அருமம் சிதையாமல் கூஅங
58. 9. ஒறுத்தாற்றும் கூஅசூ
58.10. பெயக்கண்டும் கூஅஅ

59. ஒற்றாடல் கூகூ

59.1. ஒற்றும் உரைசான்ற கூகஙு
59.2. எல்லார்க்கும் எல்லாம் கூகூஅ
59.3. ஒற்றினான் எயக
59.4. வினைசெய்வார் எயங
59.5. கடாஅ உருவொடு எயஙு
59.6. துறந்தார் படிவத் எயகூ
59.7. மறைந்தவை எகஉ
59.8. ஒற்றொற்றித் எகஎ
59.9. ஒற்றொற்று எகஅ
59.10 சிறப்பறிய எகக

60. ஊக்கம் உடைமை எஉஉ

60.1. உடையர் எனப்படுவது எஉங
60. 2 உள்ளம் உடைமை எஉசு
60, 3, ஆக்கம் இழந்தேம் எஉகூ
60. 4. ஆக்கம் அதர் வினாய் எஙக
60. 5. வெள்ளத் தனைய மலர் எஙஎ
60. 6. உள்ளுவது எல்லாம் எஙசு
60. 7. சிதைவிடத்து எஙகூ
60. 8. உள்ளம் இல்லாதவர் எஎக
60. 9. பரியது எஎங
60.10. உரம் ஒருவற்கு எஎஙு

61. மடியின்மை எஎகூ

61. 1. குடியென்னும் எஙய
61. 2. மடியை மடியா எஙஉ
61. 3. மடிமடிக் எஙஙு
61. 4, குடிமடிந்து எஙள
61. 5. நெடுதீர் எஙகூ
61. 6. படியுடையா எசுங
61. 7. இடிபுரிந்து எசுஙு

61. 8. மடிமை குடிமை எசுஅ
61. 9. குடியாண்மை எளல
61. 10. மடியிலா எளஙு
62. ஆள்வினை உடைமை எளள
62. 1 அருமை எளஅ
62. 2. வினைக்கண் வினைகெடல் எஅக
62. 3. தாளாண்மை என்னும் எஅஙு
62. 4. தாளாண்மை இல்லாதான் எஅள
62. 5. இன்பம் விழையான் எஅஅ
62. 6. முயற்சி எகஙு
62. 7. மடியுள்ளாள் எகஙு
62. 8. பொறியின்மை எகள
62. 9. தெய்வத்தான் அயசு
62. 10. ஊழையும் அயக
93. இடுக்கண் அழியாமை அயசு
63. 1, இடுக்கண் அயள
63. 2. வெள்ளத் தனைய இடும்பை அகக
63. 3. இடும்பைக்க அகஙு
63. 4. மடுத்த வாய் அகள
63. 5. அடுக்கி வரினும் அஉய
63, 6. அற்றேம் என்று அஉஉ
63. 7. இலக்கம் உடம்பு அஉஙு
63. 8. இன்பம் விழையான் இடும்பை அஉசு
63. 9. இன்பத்துள் இன்பம் விழை அஉஅ
63. 10. இன்னாமை இன்பம் அஙய

பொருட்பால்

அ) மணக்.: பொருட்பால்—பொருளின் பகுதி. இதனுள் இறை மாட்சி முதலாக இடுக்கணழியாமை ஈறாகக் கூறிய அதிகாரம் இருபத்தைந்தும் பெரும்பான்மையும் அரசர்க்கு உரியவாதலின் அரசியல் என்றும், அமைச்சு முதலாக அவையஞ்சாமை ஈறாகக் கூறிய அதிகாரம் பத்தும் பெரும்பான்மையும் அமைச்சர்க்கு உரியவாதலின் அமைச்சியலென்றும், நாடு முதலாகப் படைச்செருக்கு ஈறாகக் கூறிய அதிகாரம் ஐந்தும் பொருட்பகுதியாதலின் பொருளியலென்றும், நட்பு முதலாகக் கூடாநட்பீறாகக் கூறிய அதிகாரம் ஐந்தும் நட்பின் பகுதியாதலின் நட்பியலென்றும், பேதைமை முதலாக மருந்து ஈறாகக் கூறிய அதிகாரம் பன்னிரண்டும் கேட்டுக்குக் காரணமாதலின் துன்பவியல் என்றும், குடிமை முதலாகக் கயமையீறாகக் கூறிய அதிகாரம் பதின்மூன்றும் மக்களது இயல்பு கூறுதலின் குடியியல் என்றும் ஆகப் பொருட்பால் கூறிய அதிகாரம் எழுபதும், ஆறு பகுதியாயிற்று.

ஆ) பரிதி.: உரை இல்லை.

இ) பரிப்[1] .: பொருட்பாலாவது பொருளின் பகுதி என்று கொள்ளப்படும். பொருள் என்றது மக்களை உடைத்தாகிய நிலம்; பகுதி என்பது அந்நிலத்தை ஆளுதற்குரிய அரசரது தன்மையும், அவர் ஆளுதற்குச் செய்யும் திறன்களும், அதற்குத் துணையான அமாத்தியர் இலக்கணமும், அவர் செய்யும் திறன்களும், அவ்விருவரானும் உண்டாக்கப்பட்ட நாடும், அரசரும், பொருளும், படையும், ஆகிய இவற்றின் திறன்களும், அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றற்கும் துணையாகிய நட்பின் திறன்களும், அவ்வாறு உண்டாகிய பொருட்கும், பொருள் உடையார்க்கும் கேடு வரும் திறன்களும், அந்நிலத்து உண்டான மக்களது இயல்பும், அவர் பொருள் செய்யுமாறும் கூறுதல். இவை—

---

1. மணக்குடவர் உரையும் பரிப்பெருமாள் உரையும் பெரும்பாலும் ஒன்றாகவே இருப்பதால் ஆங்காங்கு மாறுபட்ட இடங்கள் மட்டும் குறிக்கப்படுகின்றன.

யெல்லாம் அரசியலும், அமைச்சியலும், பொருளியலும், நட்பியலும், துன்பவியலும், குடியியலும் என அடங்கும். படையியல், அரணியல் என வகுத்தார்[2] உளரால் எனின், அவையெல்லாம் ஒருவனால் ஆக்கப் படும் பொருள் ஆகலின், பொருளியல் என அடங்கும். துன்பவியல் என்றது எற்றுக்கு? அதனையும் நட்பியலுள் அடக்கினார்[3] உளரால் எனின், அவையெல்லாம் நட்கப்படாது என்னும் கருத்தினால் கூறி னார்கள். ஆயினும், அவற்றினிடைக்கிடந்த பேதைமை, புல்லறி வாண்மை என்னும் அதிகாரங்கள் நட்கப்படாததும் நட்கப்படுவதும் அன்றி, ஒருவற்குத் துன்பத்திற்குக் காரணம் ஆம் என்றும் கூறுதலால், துன்பவியல் என வேண்டும் என்க. (இதன் மேலுள்ள பகுதிகளை மணக்குடவர் உரைத்தலைப்பிற் காண்க.)

ஈ) *காளி.:* சிதைந்துள்ளது.

உ) *பரிமேல்.:* இனி, இல்லறத்தின் வழிப்படுவனவாய[4] பொருள் இன்பங்களுள் இருமையும்[5] பயப்பதாய பொருள் கூறுவான் எடுத்துக் கொண்டார். அது, தன் துணைக் காரணமாய அரசன் நீதி கூறவே அடங்கும். அரச நீதியாவது காவலை நடாத்தும் முறைமை, அதனை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூவகைப்படுத்து, மலர்தலை உலகிற்கு உயிரெனச் சிறந்த அரசனது இயல்பு இருபத்தைந்து அதி காரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் இறைமாட்சி கூறுகின் றார்.

மல்லர்: அதாவது பொருளின்மேற்படுகிற பிரிவு. ஏற்ற குணங்கள்.

ஊ) *கவிராசர்:* இல்லறத்தின் வழிப்படுவனவாய், பொருள் இன்பங் களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவான்றொடங்கி, அதற்குக்

---

2. & 3. வகுத்தார் போக்கியார் என்க.

4. 'இல்லறத்தின் வழிப்படுவனவாய' என்பதும் பாடம். இப்பாடம் கொண்டவர்கள் இல் லறப் பகுதியிற் சேர்வனவாகிய எனப்பொருள் கண்டு, துறவுக்குரியன அல்ல என்பர். (வை மு.கோ. பொருள் பக்.2) துறவுக்குரியன அல்ல என்பர். கோ.வ. 'துறந்தார்க்கு இல்லறத்தான் தந்த பொருளைக்கொண்டு உண்டு தவஞ்செய்து உயிர்வாழ வேண்டு தலின் அவனுக்கும் பொருள் உரியதே. ஆனால் அவன் ஈட்டுதல் கூடாது. இதனை எண்ணிப் பாராதார் இப்பாடங்கொண்டு இங்ஙனம் கருதினர். 'இல்லறத்தின் வழிப் படுவனவாய' எனப்பாடம் கொண்டு, 'இல்லறத்தின் வழி தோன்றுவனவான' எனப் பொருள் காணலே சிறப்பாகும். ''படுபொருள் வெஃகி என்றாற்போலப் படுதல் தோன்றுதற் பொருளதாதல் காண்க. 'மு.ரா.அரு.'வும் இல்லறத்தின் வழி உண்டா வன அவை'' என்றல் காண்க, (மு.ரா.அரு. தெளிபொருள் வசனம் பக்கம். 116. பதிப்பு 1930)

5. இருமை—இம்மையும் மறுமையும். பொருள் இம்மைக்கு போகம் புகழ் புண்ணியம் விளைத்து நேரேயுதவுகிறது. மறுமைக்கு புண்ணியப்பயனாய்ச் சுவர்க்கம் முதலியன தந்துதவுவது; ஆதலின், இங்ஙனம் கூறினர். இருமை என்பதை 'ஏமுன் இவ் விருமையும்' என்றாற் போல, இரண்டு என்னும் எண்ணுப் பெயராகக் கொண்டு நடு வண தெய்த இருதலையும் எய்தும் என்ற வழக்காற்றான், அறமும்—இன்பமுமாகிய இரண்டும் ஆவன எனலுமாம்.

காரணமாகிய அரச நீதி கூறத் தொடங்குகின்றார். அரச நீதியாவது காவலை நடாத்தும் முறைமை. அதனை அரசியல், இதவியல், ஒழி பியல் என மூன்று வகைப்படுத்தி உலகத்துக்குப் பிராணனாயிருக்கிற அரசன் இயல்பு இருபத்தைந்து அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் இறைமாட்சி கூறுகின்றார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பொருள் 'மக்களையுடைத்தாகிய நிலம்'—*மணக்.*

'அறனும் இன்பமும் பயப்பதாகிய பொருட் செல்வம்'— *பரிமேல ழகர்,*

கவிராசர். நிலமும் பொழுதுமாய முதற்பொருள் இரண்டனுள் நிலம் நிலைத்ததாய்க் காலமுதலாயின நிகழ்தற்கு இடந்தந்து நிற்றலானும், முதற்பொருள் வகையில் முன்வைத்தெண்ணப் படுதலானும், காலம் வினையின் புடைபெயர்ச்சியால் அறியப் பெறுவதாய் நிலத்தைச் சார்ந்தன்றி யறியப் பெறாமையானும், நிலம் இன்றிக் காலமட்டும் பயன் தராமையானும், நிலமே மக்கள் வாழ்விற்கு இன்றியமையாத நெல்லும் காயும் கனியும் போன்ற இயற்கை மூலப் பொருள்களை விளைவித்து அளிப்பதானும், மணியும் பொன்னும் முதலிய கனிப் பொருள்களும் நிலத்திருந்தே பெறப்படுதலானும், பொருளானது நிலம் என்ற *பரிப்பெருமாள்* உரை பாராட்டிற்குரியதாகும்.

உலகவழக்கினும் 'நிலம்பொலம்' என நிலம் முதலிடத்தையும் பொலம் (பொன்) அடுத்த இடத்தையுமே பெறுகின்றன. இதனாலும் பொருள் என்பதற்கு நிலம் என்ற உரை சிறக்கிறது.

சிறப்பிற் சிறப்பாக 'மக்களையுடைத்தாகிய நிலம்' என்ற விளக்கம், நிலத்தைப் பண்படுத்திப் பயன்கொள்வார் மக்களே யாதலானும், பொன்னும் மணியும் தோண்டிக் கண்டு பயன்கொள் வார் அவரேயாதலானும் இங்ஙனம் விதந்து கூறப்பட்டதாம் என்க. இங்ஙனம் பல்லாற்றானும் *பரிப்பெருமாள்* உரை சிறக்கிறது.

பரிமேலழகர் வழங்கும் கருத்து ''அறனீனும் இன்பமுமீனும் திறனறிந்து, தீதின்றி வந்த பொருள்'' என்ற *வள்ளுவர்* வாய் மொழியையும், ''நடுவணதெய்த இருதலையும் எய்தும்'' என்ற *நாலடியார்ப்* பகுதியையும் உளங்கொண்டு உரைக்கப்பட்டதாம்.

இராமலிங்கனார், 'பொருள் என்றது உலக வாழ்க்கையில் மனிதன் அனுபவிக்க விரும்பும் இன்பங்களுக்கு எல்லாம் ஆதாரமான

செல்வப் பொருளும், அதன் தொடர்பான பிறவும்' என்பர். மேலும் துறவிக்குப் பொருளைப் பற்றிய சிந்தனையே இல்லை; தொடர்பும் இல்லை; இல்லறத்தானுக்குத்தான் எல்லாப் பொறுப்பும்; ஆகையால் சமுதாய வளர்ச்சிக்குரிய வழிவகைகளையும், அதற்கான முயற்சி வேறுபாடுகளையும், விளையும் நன்மை தீமைகளையும் அறிந்து, விலக வேண்டியவற்றினின்று விலகியும், கொள்ள வேண்டியவற்றைக் கொண்டும் வாழ வேண்டிய வழிவகைகளை வகுப்பது இப்பால்' என்பர். இவையனைத்தும் *பரிமேலழகர்* கருத்தின் பெருக்கமாகப் பொருளை அரண் செய்வனவே. *தேவநேயர்*, இன்பம் உள்ளிட்ட இல்லற வாழ்விற்கும், உலக நட்பிற்கும் இன்றியமையாதனவும், அறவழி யீட்டத்தக்கனவும் ஆகிய பொருளைப் பற்றிக் கூறுவது என்பர். இவர் தரும் உரைவிளக்கம், 'பொருளாவது அறஞ்செய்தும் இன்பந் துய்த்தும் வாழத்தேவையான இடமும் பொருளும் நுகர் பொருளுமாகிய இவை' எனப் *பரிப்பெருமாள்*, *பரிமேலழகர்* ஆகிய இருவருரையையும் இணைத்துச் செல்கிறது.

ஜி. வரதராசர் 'மனித வாழ்க்கைக்குரிய பொருள் அனைத்தை யும் பொருள் என்றதாம்; செல்வத்தை மட்டும் அன்று. மனிதனுக்கு இன்பம் ஊட்டும் எல்லாப் பொருளும் பொருள் தாம்' என்பர். நிலம் என்றோ பொருள் என்றோ இரண்டும் என்றோ கருதி எல்லாருரை களும் இதனைத்தான் சொல்கின்றன. இவ்வுரைக்குரிய தனிச்சிறப்பு எதுவென்றறியக் கூடவில்லை.

பரிமேலழகர் உரைக்கு விளக்கம் தரும் *வை.மு.கோ., கோ.வ.* இருவரும் பொருளின்பங்கள் துறவிக்கு இல்லை; இல்லறத்தானுக்கே உரியன என்று கொள்வர். ஏதுக்களும் காட்டுவர். 'உழவினார் கைம்மடங்கின், விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கும் நிலையில்லை; என்ற *வள்ளுவர்* வாய்மொழியே துறவிக்கும் பொருட்சிந்தனை இருக்கும். ஆனால், தேவைக்கு மிக வைத்திருக்கக் கூடாது என்கிறது.

முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னான் முடியும்'' (*திருக் கோவை*) என்பதும் முற்றத்துறந்தவரும் அறிவாற் சிவமேயானவரு மான *மாணிக்கவாசகரின்* மனவளந்தானே! இவற்றால் முனிவருக் கும் பொன்வேண்டும்; ஆனால் பேராசை கூடாது என்கிறது. இவை களை எண்ணும்போது துறவிக்குப் பொருள் வேண்டாம் என்ற கருத்து வலிவிழக்கிறது எனலாம்.

இயல்:- பால்–பகுதி. பொருட்பால்–பொருளின் பகுதி. இது *இறைமாட்சி* முதலாகக் *கயமை* யீறாக எழுபது அதிகாரங்கள் என்பதில் யாருக்கும் கருத்துமாற்றம் இல்லை. அதிகாரங்கட்குப்

பெயர் சூட்டும் விழாவையும் **வள்ளுவரே** செய்திருப்பார் என்ற உறுதிப்பாட்டால், அதிகாரத்தையும் அவற்றின் முறைவைப்பையும் பற்றி ஐயமும் ஆய்வும் முதியோர்கள் யார்க்கும் எழும்பவில்லை; ஆதலால், இயற்பாகுபாட்டிலேயே அவர்கள் எண்ணம் ஆழமாகச் சென்றிருக்கிறது. அதன் விளைவாகப் **பொருட்பால்** இரண்டு இயலை யுடையது என்பது முதல், இருபது இயல்களை உடையது என்பது வரைப் பல பாகுபாடுகள் உருவாகியுள்ளன.

முதன் முதல் இயற்பாகுபாட்டை **வள்ளுவமாலையிற்** காண் கிறோம். **வள்ளுவருக்குப்** பாமாலைசாத்திய புலவர்களின் பெயர் சங்ககாலத்தன என்பதில் ஐயமில்லை. ஆனால், அவர்கள் **வள்ளுவர்** காலத்தில் வாழ்ந்தவர்கள் தாமா? இப்பாடல்கள் அவர்களே பாடிய வையா? அவர்கள் பேரால் பாடப்பெற்றனவா? என்ற ஆய்வு இன்னும் முற்றுப்பெறவில்லை. இந்நிலையில் உரையாசிரியர்களிற் **பரிமேலழகர்** போன்றார் செய்திருக்கிற பாகுபாட்டமைப்பிலிருந்து உரை ஆசிரியர் களும் இயற்பாகுபாடு இயற்றியுள்ளார்கள் என்பதைத் துணியலாம். இம்முறையில், முதலில் **வள்ளுவமாலைப்** புலவர்களில், **தொடித்தலை விழுத்தண்டூன்றினார்** என்பவர் நூல் முழுதும் உள்ள இயற்பாகு பாட்டைத் தொகுத்து மொழிகின்றவர் ''**அறிபொருள் ஏழ் ஒன்று**'' என்கிறார். பொருட்பாலியல்கள் ஏழு மட்டுந்தானா? ஏழும் ஒன்றும் எட்டா? என்பது இப்பாடற் பகுதியிலிருந்து துணியக்கூடவில்லை. **பரிமேலழகர்** உரைக்கு விளக்கந்தந்தவை. மு. கோ. 'பொருள் ஏழியல் தான் உடையது, ஒன்றுஎன்பது ஒன்று காமத்திறம் மூன்று' எனக் கூட்டிப் பொருள் காணவேண்டும் என்பர்.

போக்கியார் என்ற மற்றொரு புலவர் **வள்ளுவமாலையில்**,

''அரசிய லையைந் தமைச்சிய லீரைந்–
துருவல் லரணிரண்டொன் றொண்கூழ்—இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை'' (26) என இயல் அதிகாரப்பகுப்புக் களைச் சொல்கிறார். இந்தப்பாட்டு **பெருந்தொகை** என்ற தொகுப்பு நூலில் (2005)ம் பாட்டாக இடம் பெற்றுள்ளது. அதில், இதன் இரண்டாம் அடி ''உரைநாடு அரண்பொருள் ஒவ்வொன்று'' என்ற பாடபேதத்துடன் காணப்படுகிறது. இதன்படித் **தொடித்தலை விழுத்தண்டூன்றினார்** பாடல் 'அறிபொருள் ஏழொன்று' அதாவது பொருட்பால் எட்டியல்களை உடையது என்றும் துணிவினது என லாம். இதனை ஒட்டியே **வியாசபாரதம்**, **ஆஸ்ரம வாசிக** பருவத்தும் அரசற்குரிய அங்கங்கள் எட்டுஎன்றும் கூறப்பெற்றுள்ளது.

போக்கியார் கூறும் வள்ளுவமாலை 26ஆம் பாட்டின் வண்ணம் இயல் ஏழு:—

1	அரசியல்	—	25 அதிகாரங்கள்
2	அமைச்சியல்	—	10 ,,
3	அரணியல்	—	2 ,,
4	கூழியல்	—	1 அதிகாரம்
5	படையியல்	—	2 அதிகாரங்கள்
6	நட்பியல்	—	17 ,,
7	குடியியல்	—	13 ,,

ஆக இயல் ஏழு, அதிகாரங்கள் எழுபது.

மணக்குடவர், பரிப்பெருமாள் ஆறு இயல்களாகப் பகுப்பர்.

1	அரசியல்	25
2.	அமைச்சியல்	10
3.	பொருளியல்	5
4.	நட்பியல்	5
5.	துன்பஇயல்	12
6.	குடியியல்	13

போக்கியார் கூறும் இயற்பாகுபாட்டில் அரணியல், கூழியல் படையியல், என்ற மூன்றியலை அதாவது ஐந்ததிகாரங்களை மட்டும் பொருளியல் எனக்கூறி, அவர் நட்பியலிற் கூறும் பதினேழதிகாரங் களில் நட்பைக் கூறும் ஐந்ததிகாரங்களையும் 'நட்பியல்' என்றே ஒதுக்கி, ஏனைய பன்னிரண்டு அதிகாரங்களுக்கு 'துன்பஇயல்' எனப் பெயர் புனைந்து ஓரியலாக்கி, 'ஆக இயல் ஆறு' என்றனர். இவை மணக்குடவரும், பரிப்பெருமாளும் செய்த மாற்றங்கள். பரிப் பெருமாள் இங்ஙனம் அமைத்ததற்குத் தக்க ஏதுக்களும் காட்டுவர்.

காளிங்கர் அரசனையும் உறுப்பாகக் கொண்டு, படை முதலிய இவ்வாறினோடும் கூட்டி இராச்சியம் என அனைத்தையும் ஒன்றாக்கி, வடநூலார் கூறுமாற்றின் சில வேறுபடுத்து. 'மாசனமுதலாகஇவ் வாறனையும் நாட்டிற்கு உறுப்பாக்கிக் கூறினர் என்பதூஉம் கொள்க. இங்குச் சொன்ன இறை முதலாகிய எழுவகைப் பொருளுமே இப் பொருட்பால் நடைப்பொருள் என அறிக' என்பர். இதனால் பொருட் பால் ஏழ்என்பதனையும் இதுவே வள்ளுவர் வகுத்தமுறை என்பதனை யும் குறிக்கின்றது எனலாம்.

பரிப்பெருமாள், துன்பஇயலைப் புதிதாக இணைப்பதற்கும், படையியல் அரணியல் என வேறு பிரித்தல் பொருந்தாதென்பதற்கும்

காரணங்கூறுகின்றவர் முன்னவர்களிற் சிலரை மறுக்கிறார். இதனாலும், மணக்குடவர் உரைக்கும் முன்பு ஒருரை திருக்குறளுக்கு இருந்திருக்கலாம் என்பதை, அவர் 16ஆம் குறளில் வரும் 'கடிந்து' என்பதற்கும், 390ஆம் குறளில் வரும் 'சொற் பொறுக்கும்' என்பதற்கும் எழுதும் வேற்றுரையாலும் துணியலாம். ஆகவே இயற்பாகுபாட்டின் அமைப்பு வள்ளுவமாலைப் புலவர்கட்குப் பின்பும் மணக்குடவருக்கு முன்பும் இருந்திருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இவையன்றி, செந்தமிழ் 2ஆம் தொகுதி, பக்கம் 246இல், பரிமேலழகர் உரையின் வேறு உரைப்பாயிரத்தில் பகை 6, பெரியாரைப்பிழையாமை 1, பெண்வழிச்சேறல் 1, வரைவின் மகளிர் 1, கள்ளுண்ணாமை 1, சூது 1, மருந்து 1' குடிமை 1, மானம் 1, பெருமை 1, சான்றாண்மை 1, பண்புடைமை 1, நன்றியில் செல்வம் 1, நாணுடைமை 1, குடிசெயல்வகை 1, உழவு 1, நல்குரவு 1, இரவு 1, இரவச்சம் 1, கயமை 1, ஆக இருபத்தேழியல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது என்று குறிக்கப்பெற்றுள்ளது.

பரிமேலழகர் உரை அரசியல் 25, அங்க இயல் 32, ஒழிபியல் 13 என மூன்றியல்களாகப் பிரிக்கிறது. பழைய உரை 2டும், பரிமேலழகரை ஒட்டிச் செல்கின்றன. கவிராசர், உரையும் அங்ஙனமே செல்வதாயினும், இரண்டாவது இயலின் பெயர் 'இதவியல்' என்கிறது, ஆயினும் அரசியல் முடிவில் அடுத்து வரும் இயலை அங்கவியல் என்கிறது. இது ஏடெழுதுவோர், பதிப்பாசிரியர் பிழையாகவும் இருக்கலாம்.

ஜி. வரதராசனார், அரசியல், அமைச்சியல், அங்கவியல், ஒழிபியல் என நான்கு இயல்களாகப் பகுப்பர். பரிமேலழகர் கூறிய அங்கஇயலை, அமைச்சியல், அங்கவியல் என இரண்டாகப் பிரித்தமையால் அவரின் இவர் வேறுபடுகிறார். அரசனுக்கு உரிய அங்கங்களில் அமைச்சு சிறந்ததாகலானும், அருணாசலக்கவிராயர் அங்கவியலில், அமைச்சியல் எனப் பிரித்தமையானும் இவரும் தனியியலாகவே கொண்டவர் போலும்.

மு ரா. அருணாசலக்கவிராயர், பரிமேலழகரை ஒட்டி மூன்றியலாக்கி அங்கவியலை அங்கவியல் அரசியல், என அங்கவியலை இருகூறாக்கினர்.

இங்ஙனம் அமைந்த இயற்பாகுபாடுகள் அனைத்தும் பொருட்பாலுக்கேயாதலின், ஆசிரியர்கள் அனைவரும், வள்ளுவர் நுதலிப் புகுந்த குறட்பாவை அடியாகக் கொண்டே பெரும்பாலும் வகுத்துச், சிறுபான்மையாகத் தம் சிந்தனை ஆய்வாலும் பகுத்திருக்கின்றனர் ஆதல் தெளிவு. அங்ஙனம் பகுத்தவற்றின் சுருக்கம்.

இரண்டியலாகக் கண்டவர் தேவநேயர்; மூன்றியலாகக் கண்டவர்கள் பரிமேலழகரும், கவிராசரும் முதலியோர். நான்கு இயல்களாகப் பகுத்தவர் ஜி. வரதராசபிள்ளை. ஆறு இயல்களாகக் கொண்டவர் மணக்குடவர், பரிப்பெருமாள் முதலியோர். ஏழியல்களாகப் பகுத்தவர் போக்கியார்; எட்டியல்களாகப் பகுத்தவர் தொடித்தலை விழுத்தண்டூன்றினாரும், காளிங்கரும். இருபத்தேழு இயல்களாகப் பிரித்தது பரிமேலழகர் உரைப்பாயிரமாகச் செந்தமிழ் 2ஆம் தொகுதியில் வந்துள்ள மேற்கோள்.

இந்த இயற்பாகுபாட்டைப் பற்றிய ஆய்வை கி.பி. 1905 ஆம் ஆண்டில் செந்தமிழ் முதற்றொகுதி இரண்டாந்தொகுதிகளில் தொடங்கி வைத்தவர் அப்போதைய செந்தமிழ்ப் பத்திராதிபராயிருந்த ரா. இராகவையங்கார். பின்பு செந்தமிழ் முப்பதாந் தொகுதியில், பரிமேலழகரும், மணக்குடவரும் என்ற தலைப்பில் எழுதியவர் பண்டித சித. நாராயணசாமியார். அதன்பின்பு நாடும் காமமும் என்னும் கட்டுரையில் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார். இந்நூல், பொருட்பால் பாகுபாட்டில் எது ஏற்புடையது என்பதை ஓரளவு அறிய உதவுகிறது.

முடிபு:- பகுத்தவர்கள் அனைவரும் வாளாவகுத்தவர் அல்லர்; சிந்தித்தே துணிகின்றனர். ஆனாலும் நூலாசிரியர் கூறும் பகுப்பை அடியொற்றி அமைந்தனவே நூலுக்கு ஏற்புடையனவாம் என்பது.

அங்ஙனம் பார்க்கும்போது அரசியல் இருபத்தைந்து அதிகாரங்கள் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் மணக்குடவர் பரிப்பெருமாள் இருவரிடமும் 'துன்ப இயல்' என ஒன்று தோன்றியதும் 'நாடு' என ஓரதிகாரம் கூறிய வள்ளுவர் அங்கங்கள் ஆறையும் தொகுத்துணர்த்தும் 'படைகுடி' என்ற குறளில் நாட்டைக் கூறாது 'குடி' என்றதால் வள்ளுவர் 'குடி' என்றது நாட்டினைத்தான் எனக் கருதியதாக எண்ணி பரிமேலழகர் 'குடியென்றது அதனையுடைய நாட்டினை' எனக் கூறவேண்டியதாயிற்று மணக்குடவர் 'குடியுள் நாடடங்கிற்று' என்றனர். பரிப்பெருமாள் குடியுள்ளநாடு என்றனர். குடியை நாடு என்று கருதிய பரிமேலழகர் குடிமை முதலானவற்றை எவ்வியலுட் பகுப்பது? என்ற ஆய்வு ஐயம் தோன்றியிருக்கிறது. அதன் பயனாக விளைந்ததே ஒழிபியல் என்ற. ஒதுக்கிடம். அதே நிலையிற்றான் மணக்குடவர், பரிப்பெருமாள் இருவரும் 'பேதைமை முதல் மருந்தீறான' பன்னிரண்டதிகாரங்களையும் துன்ப இயல் எனப்பிரித்தனர். 'மருந்து' என்ற அதிகாரம் 'மருந்தென வேண்டாவாம்' எனத் துன்பம் தோன்றாமைக்கே

உபாயஞ் சொல்லுகிறது. ஆகையால் இதனையும் **துன்ப இயலில்** அடக்கலாம் எனக் கருதினர் போலும்.

எடுத்துக்காட்டாக, அரசனுக்கே இலக்கணம் கூறும் அரசியலில், அரசனுக்குரிய இலக்கணம் மட்டுமா சொல்லப் பெறுகின்றன? அரசனுக்கென்று வெளிப்படையாகச் சொல்வன நாற்பது குறட்பாக்கள். குறிப்பாற் கூறுவன எட்டுக் குறட்பாக்கள். ஏனையவற்றை அரசியலிற் சேர்த்துப் பொதிந்து வைத்தமையால் அரசனுக்குரியன என்று கருதலாமே தவிரப் பொதுமையில் அனைவருக்கும் உரியனவே. எடுத்துக்காட்டாகப் **பொச்சாவாமையும், கண்ணோட்டமும், ஊக்க முடைமையும், மடியின்மையில்** இறுதிக்குறள் நீங்கலாக ஏனையவும் **'ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை** முதலியனவும் யாருக்கு வேண்டாதன? அனைவருக்கும் அமைவனவே. இதனாலேயே இராமலிங்கனார் பொருட்பாலிற் கூறிய நீதிகளுட் பல அரசர்க்கும், அரசர் ஆவார்க்கும், அமைச்சருக்கும், அமைச்சர் ஆவார்க்கும் பொதுமையில் உரியன என்றார்.

இங்ஙனம் ஒவ்வொருவர் கருத்தையும் ஆராயின் இயைபும் இயைபின்மையுமாக விரியும். ஆதலின் 'அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, குடி, என்று அங்க இயல் ஆறாம்' என்ற **போக்கியார்** அமைப்பு முறை **வள்ளுவரை** ஒட்டிச் செல்லுதலின் அதுவே சிறந்தது எனலாம்.

அரசியல்.

தொடர்புரை:

அ) மணக்.: அரசியலாவது அரசர் செய்யுந் திறன் கூறுதல். அஃதியாங்ஙனம் கூறினார் எனின், அது கூறிய அதிகாரம் இருபத் தைந்தினும் முற்பட அரசரால் உண்டாக்க வேண்டும் பொருளும், அவர்க்கு இன்றியமையாத துணையும், காலம் இடம் வலி முதலியன அறிதலும், தெரிந்து தெளிதலும், வினையாடல் முதலியனவும், செங்கோன்மையும் முதலிய பிறவும் முறையாகக் கூறினர் என்க.

உ) பரிமேல்.: அரசன் நீதி கூறுதல்; அரச நீதியானது காவலை நடாத்தும் முறைமை. அதனை அரசியல் அங்கவியல் ஒழிபியல் என மூவகைப்படுத்து, மலர்தலை உலகிற்கு உயிரெனச் சிறந்த அரசனது இயல்பு இருபத்தைந்து அதிகாரத்தான் கூறுவான் தொடங்கி, முதற்கண் **இறைமாட்சி** கூறுகின்றார்.

மல்லர்: அஃதாவது அரசனுடைய தொழிலுக்கு ஏற்ற குணங்கள்.

குழந்தை: அரசனது இயல்பு. நல்லரசின் இலக்கணம். இவ்வியலிற் கூறப்படும் இலக்கணங்கள் எல்லா · அரசியல் தலைவருக்கும் பொருந்தும்.

மு.ரா.அரு.: அஃதாவது அரசனது தன்மை. அது பொருளினது துணைக் காரணமாகிய அரச நீதி கூறுதலான் விளங்கும். அரச நீதி யாவது நடாத்தும் முறைமை. ஏனைய பகுதிகள் பரிமேலழகரைப் போன்றவை.

தேவநேயர்: பொருளீட்ட வேண்டிய மக்கள் எல்லாருள்ளும் அரசன் த லசிறந்தவன்; ஆதலானும், மக்கள் தத்தம் தொழிலைச் செய்து பொருளீட்டுதற்கு அரசனது காவல் இன்றியமையாதது ஆதலானும், அரசாட்சி கூறவே அரசனும் குடிகளும் பொருளீட்டுதல் அதனுள்

ஒருங்கேயடங்கும். அரசாட்சி அரசியல் உறுப்பியல் என இருவகைப் படும். அரசியல் இருபத்தைந்து அதிகாரம். உறுப்பியல் ஏனைய நாற் பத்தைந்து அதிகாரமென்பர். **இராமலிங்கனார்:** அரசு இயல் என்பது அரசன் அல்லது அரசாங்கத்தின் தலைவன் என்பவனுக்குப் பொருந்தி யிருக்க வேண்டிய இயல்புகள். இயல்புகள் என்றால் இருக்க வேண்டிய அமைவுகள்.

ஜி. வரதராசபிள்ளை: அரசியலாவது அரசனது இலக்கணம். அரசன் என்னாது அரசு என்றதால் மனிதனைக் குறிப்பிடாது அரசு செய்வோன் எப்படியிருக்க வேண்டும் என்று கூறுவது அரசியலாகும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பழைய உரையாசிரியர்கள் அனைவரும் அரசியலுக்குத் தனியே உரை விளக்கம் தராது பொருட்பால் உரைப்பாயிரத்தோடு இணைத்து உரைத்தனர். பின்னுரைகாரர்கள் வேறு ஓதினர். இராமலிங்கனார் ஜி. வரதராசனார் உரைகள் இக்காலச் சூழ்நிலைக்கு ஏற்ப அரசாங்கத் தலைவனையும் உடனோதுகின்றன.

39. இறைமாட்சி

அதிகாரப் பொருள்:

அ) மணக்., பரிப்.: இதனுள், இறைமாட்சியாவது இறைவனது உண்மை கூறுதல்[1]. இவ்வதிகாரத்துள் உரைக்கின்ற பொருள் அரசரை நோக்கிற்றாதலானும், அரசன் மக்களிற் சிறந்தானாதலானும் இவ்வதிகாரம், முன் கூறப்பட்டது.

ஆ) பரிதி.: இறைமாட்சியாவது ராசநீதியைச் சொல்லுதல்.

ஈ) காளி.: இப்பால் பொருட்பகுதிதான் மலிகடல் உலகத்து மக்கட்கெல்லாம் நலிவற நடாத்தல்[2] நன்கெனின், அதூஉம் அவ்வரசர் செய்பொருள் முதலாகக் கொண்டு மற்று அவர்வழிப் பிறர் பொருள் அமைப்பதன் பொருட்டாக மற்று இவை அனைத்திற்கும் அன்னவர் மாட்சி முறைப்படவேண்டும் முறைமை நோக்கி இறைமாட்சிமை அறிவிக்கின்றது.

உ) பரிமேல்.: அஃதாவது அவன்தன் நற்குண நற்செய்கைகள், உலகபாலர் உருவாய்[3] நின்று உலகம் காத்தலின், இறை என்றார்.

---

1. இறைவனது உண்மை கூறுதல் என்ற மணக்குடவர் குறிப்பு சிந்தித்தற்குரியது. காட்சியளவையான் அறியக்கூடாததாய் ஏனையிரண்டு அளவைகளானும் ஓராற்றான் அளந்தறியப்படுவதையே உண்மை கூறுதல் என்பதுமரபு. 'கடவுளதுண்மை கூறியது' என்றாற்போல. அன்றியும் மாட்சி என்பதற்கு உண்மை நேர்பொருளுமாகாது ஆதலால் இறையுண்மை என்பது இவர் கண்ட பாடமோ என்று ஐயப்படவேண்டியுள்ளது.
2. நலிவு – துன்பம். 'தன்னாலும், தன் அலுவலர்களாலும், பகைத்திறத்தாலும், கள்வராலும், புலி, யானை முதலிய பிறவுயிர்களாலும் வருந்துன்பங்கள். இவை அனைத்தும் உயிர்களான் வரும் நலிவு. இவையன்றி இடி மழை முதலிய தெய்வச் செயலானும் வருதலும் கூடும் அவை தெய்வத்தான் வரும் நலிவு. இவைகள் குடிகளை அடையாவண்ணம் நடாத்துக என்பதாம்.
3. உலக பாலர்-உலகத்தைப் பாதுகாப்பவர்கள். உலக எல்லையாகிய திசைகளிலிருந்து உலகிற்கு இடர்புகுதாதே காத்தலின் திசைகாப்பாளர் உலகபாலர் எனப்பட்டார். எல்லாவுலகங்களும் அரசனின்றி அச்சத்தால் எப்பக்கமும் சிதறுண்டிருக்குங்கால், அவ்வெல்லாவற்றையும் காத்தற்பொருட்டுப் பிரமன், இந்திரன், வாயு, இயமன், சூரியன், அக்கினி, வருணன் சந்திரன் குபேரன் ஆகிய இவர்களுடைய அழிவில்லாத கூறுகளைக் கொண்டு அரசனைப் படைத்தான் என்று சுக்கிரநீதி கூறுகிறது. (அத் 1 சுலோ 71-72) மனுநூல் 7வது அத்தியாயம் இந்திரன் முதலிய இமையவர்களின் அம்சமாய் நின்று உலகத்தைக் காக்கிறான் என்கிறது. திசை காப்பாளரில் நிருதியையும், ஈசானனையும் பிரித்து சூரியன் சந்திரன் இவர்களைக் கூட்டியது ஆய்வுக் குரியது.

''திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்''[4] என்று பெரியாரும் பணித்தார்.

ஊ) **கவிராசர்:** அஃதாவது அரசனுடைய நற்குண நற்செய்கைகள், உலகரக்ஷகனாக நின்று காத்தலின் அரசனை 'இறை' என்றார்.

ஏ) **பழைய 2:** அஃதாவது, இறைவன் நற்குண நற்செய்கையான் உலகத்தைக் காத்தல் எனக் கொள்க.

மல்லர்: அரசனுக்கு நற்குணங்களாலும் நல்ல நடக்கைகளாலும் வேண்டிய பெருமை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அரசாளும் தலைவனாகிய இறைவனுக்கு இருக்க வேண்டிய மாண்புடைய அறிவாற்றலும் நற்குண நற்செயல்களுமாம். இறுத்தல் –தங்குதல்; இறுப்பது–இறை. ஆகுபெயராய் நாடெங்கும் அதிகாரத் தாற்றங்கியிருக்கும் அரசனைக் குறிக்கும்' என்பர் **தேவநேயர்.**

'உலகம் அனைத்திலும் உள்ள மக்களைப் பாரபட்சமில்லாமல் பாதுகாப்பவர் கடவுள். அவரைப்போல ஒரு நாட்டிலுள்ள எல்லா மக்களையும் பாதுகாப்பவன் அரசன். அரசருள் மரபுவழி வந்து காப்பவரானாலும், பதவியைத் தேர்வுமூலம் பெறுபவரானாலும் அவருக்கு இருக்க வேண்டிய சிறப்புக்களைச் சொல்வது இறைமாட்சி' என்பர் **இராமலிங்கனார்.**

'இறை–அரசன், தலைவன். மாட்சி–நன்மை. இறைமாட்சி–அரசன் அல்லது தலைவனது நன்மைகளைக் கூறுவது' என்பர்.

'அரசன் பெருமை' **சாமி.** 'அரசர்க்குரிய பெருமைக்குணங்கள்' **சி.இலக்குவனார்.** இறை–கடவுள், அரசன், கடவுள் எல்லாவுயிர் களிடத்தும் கலந்து இருப்பதால் இறை. அரசன் மக்கள் அனைவரா லும் போற்றப்படுவதால் இறை. இருவினைப்பயன்களை அவ்வவ் ஆன்மாக்களுக்குக் கூட்டி வைப்பதால் கடவுள் இறை. குடிமக்களுக்கு உரியவற்றை அவரவர்களே நுகரச் செய்வதாலும் தக்கவாறுதண்டமும் பரிவும் தருதலானும் அரசன் இறை.

இவ்வுரைகளில் இறை என்றசொற்பிறப்பாராய்ச்சியும், அரசனது

---

4. பெரியார்—திருவாய்மொழி ஆசிரியராகிய நம்மாழ்வார். திருமால் நிலமகளும் பூ மகளும் ஆகிய இருபெருந்தேவியர்க்கும் தலைவர்; மன்னர்களும் நிலமகளையும், திருமகளையும் தமக்குரிமையாகக் கொண்டவர்கள் ஆதலால் மன்னனைக் கண்ட போது திருமாலைக் கண்டேன் என்பாளாயினள் தலைவி என்பது இதன் பொருள். திருவாய். பதிக. 34: பாடல் 8

நலங்களும், ஆராயப்படுகின்றன. ஆயினும், இறை என்ற பலபொருள் ஒரு சொல்லைக் கடவுளுக்கேயாக்கி அவனது தன்மை வாய்ந்தவன் அரசன்; அவனதியல்பு கூறுவது இறைமாட்சி எனக்கடவுளிலிருந்து அரசனுக்கு அழைத்து வருவன **பரிமேலழகருரையும்**, அவரை ஒட்டிய உரைகளும். **மணக்குடவர்**, **பரிதி**. உரைகள் நேரே அரசனியல்பைக் குறிப்பன. **பரிமேலழகர்** கடவுளைக் காட்டிக் கடவுட்டன்மையுடையான் அரசன் என்று கூற, அவரை இயக்கி வைத்தது 'அறத்திற் பற்றுடைய அரசன் கடவுட் கூறனாவான்; பிரமன், இந்திரன், வாயு இயமன், சூரியன், அக்னி, வருணன், சந்திரன், குபேரன் இவர்களுடைய அழிவில்லாக் கூறுகளைக் கொண்டு உலகப்பாதுகாப்பிற் காகப் படைத்தான்' என்ற **சுக்கிர நீதியில்**70-72ஆம் சுலோகங்களும், **மனுதருமசாத்திரம்** 7ஆம் அத்தியாயக் கருத்தும் தெரிவிக்கும் இதற்கு **நம்மாழ்வார்** திருவாய்மொழியும் தமிழ்ச்சான்றாயிற்று.

தேவநேயர் தரும் விளக்கம் கடவுள் எங்குமாயிருப்பது போல மன்னன் தன்னாடு எங்குமாயிருக்கிறான் என்பது **பரிமேலழகர்** உரைக்கு ஒருவிளக்கம் போல, ''உறங்குமாயினு மன்னவன் தன்னொளி, கறங்குதெண்டிரை வையகங்காக்குமால்'' என்ற சிந்தாமணிக் கருத்தைத் தாங்கி எழுவது. **இராமலிங்கனார்** கருத்தும் அங்ஙனமே. இவ்வுரைகளுள் **காளிங்கர்** கூறும் 'அரசன் செய் பொருளும் பிறர் ஈட்டும் பொருளும் அமைப்பதற்காக அரசன் மாட்சி முறைப்படவேண்டும், என்னும் கருத்து, பொருள் செய்யவும் பாதுகாக்கவும் அரசின் மாட்சி வேண்டும் எள்பது சிறந்ததும் பாலுக்கு இயைபுடையதும் ஆகும்.

இவையன்றி ''இறைவற்கு இறையொருங்கு சேர்வது நாடு' (குறள் 753) என்புழிப்போல இறையை இறுத்தலையுடையவன் இறை எனக்கொண்டு அரசனையே நேரே குறிப்பதுமாகலாம்.

39. 1. படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு. (கூஅக)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: படையும், குடியும், கூழும், அமைச்சும், நட்பும், அரணும் என்னும்[1] ஆறு பொருளினையும் உடையவன் அரசருள் ஏறு போல்வான் என்றவாறு.

ஈண்டுக் குடியுள் நாடு அடங்கிற்று[2]. இஃது அரசனுக்கு உண்டாகுவன கூறிற்று.

ஆ) *பரிதி*: இந்த ஆறு செல்வமும் உள்ளவன், அரசர் என்னும் பசுக்களுக்கு ஒரு ரிஷபம் என்றவாறு.

இ) *பரிப்.*: படையும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரணும் என்று சொல்லப்பட்ட ஆறு பொருளையும் உடையவன் அரசருள் ஏறு போல்வான் என்றவாறு.

ஈண்டுக் குடி என்றது குடி உள்ள நாடு. இஃது அரசனுக்கு உண்டாக வேண்டுவன கூறிற்று.

ஈ) *காளி.*: படையும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரணும் என்னும் இவ் ஆறு உறுப்பினையும் உடையான் அரசருள் ஏறு என்றவாறு.

இனி அரசருள் ஏறு எனவே இவ்வுறுப்பு ஆறில்[3] குறைபாடுடையார் அரசரெனப்படுவாராயினும் சிறப்புடையவர் அல்லர் என்பதூஉம், அரசனை உறுப்பாகக்கொண்டு இவ் ஆறினோடும் கூட்டி, ராச்சியமெல்லாம் ஒன்றாக்கி, வடநூலார் கூறுமவற்றின்[4] சில[5] வேறுபடுத்து மாசனம் முதலாக நாட்டிற்கு இவ்வாறினையும் உறுப்பாக்கிக் கூறினர் என்பதூஉம் கொள்க. இனி இங்குச் சொன்ன இறை முதலாகிய எழு வகைப் பொருளுமே[6] இப்பொருட்பால் நடைப்பொருள் என அறிக.

---

1. என்று சொல்லப்பட்ட;
2. ஈண்டுக்குடி என்றது குடியுள்ளநாடு
3. (பா. ம்) 'இவ்வுறுப்பால்' (திருவேங்கடேசன் பல்கலைக்கழகப் பதிப்பு.)
4. கூறுமாற்றின் (ஷி);
5. சிறிது;
6. இறை முதலாய ஏழு என்றது 'அரசருள் ஏறு' என அரசனையும் உடம்பொடு புணர்த்துக் கூறிய அதனாலாம்.

உ) *பரிமேல்.*: படையும், குடியும், கூழும், அமைச்சும், நட்பும், அரணும் என்று சொல்லப்பட்ட ஆறு அங்கங்களையும் உடையவன், அரசருள் ஏறுபோல்வான்.

ஈண்டுக் குடி என்றது அதனையுடைய நாட்டினை[7] கூழ் என்றது அதற்கேதுவாய பொருளை[8], அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும்[9] ஈண்டுச் செய்யுள் நோக்கிப் பிறழவைத்தார்; ஆறும் உடையான் என்றதனால், அவற்றுள் ஒன்றில் வழியும் அரசனீதி செல்லாது என்பது பெற்றாம். வடநூலார் இவற்றிற்கு அங்கம் எனப் பெயர் கொடுத்ததூஉம் அது நோக்கி. ஏறு என்பது உபசார வழக்கு.[10]

காரி.: 'அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பது முறையாயினும் ஈண்டுச்செய்யுள் நோக்கிப் பிறழவைத்தது' என்பது அரசியலின் பின் அமைச்சியலும், நாடும், அரணும், பொருளும், படையும், நட்பும் என அதிகாரம் வருதலான் என்க. 'நெடுநீர்'[11] என்பதனுட் பிறழவைத்தல் அவ்வதிகாரம் நோக்கி என்க.

ஊ) *கவிராசர்*: சேனையும், குடிகளும், பயிரும், மந்திரிகளும், சினேகிதரும், அரணாகிய கோட்டை கொம்மை துர்க்கங்களும்[12] உடையவன் அரசர்களுக்குள் சிங்கத்தைப் போன்றவனென்றவாறு.

ஆறு அங்கங்களிலே ஒன்றில்லாவிட்டாலும் இராச்சியம் செல்லாதென்பது.

எ) *பழைய* 1[13] படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்று சொல்லப்பட்ட ஆறு அங்கங்களையுமுடையவன் அரசருள் ஏறுபோல்வான்.

---

7. குடி என்பது நாட்டுவாழ் மக்களின் பெயர். அதனை நாட்டிற்கே யாக்கினமையின் தானியாகுபெயர்.
8. கூழ்— 'பகடுநடந்த கூழ் பல்லாரோடுண்க' என்புழிப்போல உணவு என்னும் பொருளது. அதனை உணவுக்குக் காரணமான பொருளுக்கு ஆக்கினர்; காரிய ஆகுபெயர்.
9. [illegible]னும்' வள்ளுவர் பின்னர் நிறுத்த முறையாயினும். இதனை இக்குறளிற் பின்வரும் நுண்பொருள்மாலைக் குறிப்பாம் உணர்க.
10. ஏறுபோல்வானை ஏறு என்றே கூறியது உபசாரவழக்கு. உபசார வழக்கு என்பது பொருளினிடத்து உவமத்தன்மையை ஏற்றிக்கூறுவது.
11. குறள் 605.
12. கொம்மை துர்க்கங்களும்—வட்டமான மதில்.
13. பழைய உரை என்பது 1950—1951ல் வெளிவந்த உரையே. அது 19. 8. 1961ல் அடையாறு ஐயரவர்கள் நூல்நிலைய வெளியீடாகவும் வந்துள்ளது. அடையாறு பதிப்பாசிரியர்கள் உரைவளத்தை ஒப்பு நோக்கியிருக்கமாட்டார்கள் என்று தோன்றுகிறது. இப்பதிப்பைக் குறிப்பிடாமையும் குறிக்கத்தக்கது.

ஏ) *பழைய* 2: படையும், குடியும், பயிரும், அமைச்சும், நட்பும், அரணும் என்று சொல்லப்பட்ட ஆறு அங்கங்களையும் உடையான் அரசருள் ஏறுபோல்வான்.

படை– நால்வகைப்படை; குடி– குடிகளும் நாடும்; கூழ்– பயிர்; அமைச்சு–மந்திரியர்; நட்பு–பிற அரசர் நட்பு; அரண்–கோட்டை, இவையாறும் உடையான் அரசர்க்குட் சிங்கவேறு எனக் கொள்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

வடமொழிப் பொருள்நூல்களாகிய *சுக்கிர நீதியும், கௌடிலீயமும்* அரசுறுப்பு ஏழென்றும், அவை அரசு, அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்றும் கூறும். அவை அரசுக்கு அதாவது ஆட்சிமுறைக்கு அரசனை முதலங்கமாக்கிக் கூறின. ***வள்ளுவர்*** ஆட்சியும், அரசும் முறையே வினையும் வினைமுதலும் ஆதலின் அரசனை முதற்பொருளாகக் கொண்டு அவனியக்க இயங்கும் அமைச்சு முதலியவற்றை அரசனுக்கு வேண்டிய பொருளாக்கி பொருள் என்றார். ஏழும் அங்கமாயின், அங்கியாது? என வினாவப் பட்டு ஆட்சியின் மேலதாகும். அரசனின்றி ஆட்சியில்லை ஆதலால் அரசனை வினை முதலாக்கிக் கூறிய *வள்ளுவர்* கருத்தே சிறந்தது. 'அரசன் உடையான்' என்ற *வள்ளுவர்* நோக்கிற்கியைய ஆறையும் பொருள் என்றலே பொருந்துவதாகும். அன்றியும் வடநூல் மரபில் குடிகட்கு இயலின்மையும் குடிகள் நாட்டில் அடக்கப் பெற்றமையும் அறிக. 'குடி' என ஒரு பொருளைக் கூறி, அதனியல்பைக் குடி செயல் வகை முதலாகப் பின்னுள்ள பதின்மூன்றதிகாரங்களாலும் விளக்கியதைப் *பரிப்பெருமாள்*, *மணக்குடவர்* முதலிய உரையாசிரியர்கள் 'குடி' எனவே உரை கண்டனர். 'வடநூலாரும் அதிகாரத் தலைப்புத் தந்த *வள்ளுவரும்* நாடு கூறி இருத்தலின் அதனைக் குடியுள் அடக்கிக் கொள்க' என ***மணக்குடவர்*** குறிப்பர். குடி இடத்து நிகழ்பொருள்; நாடு–இடம்; இடத்துள் குடியடங்குமா? குடியுள் நாடு அடங்குமா? எண்ணுக. அங்ஙனம் கூழ்–உணவு என்றனர் பழைய உரை ஆசிரியர். *பரிமேலழகர்* நாட்டிற்கேதுவான பொருளைக் கூழ் என்றார். ***வள்ளுவர்*** பொன்னும் மணியும் முதலாயின அணிசெய்யும் பொருள்களேயன்றி ஆவி காக்கும் பொருளாயிருத்தலின் ஏனையோரைப் போலப் பொருள் எனப் பொதுமையிற் கூறாது 'கூழ்' என்ற சிறப்பினை உன்னுக.

பிற்கால உரையாசிரியர்களில், ***இராமலிங்கனார்*** 'குடி — குடிமக்கள், கூழ்–செல்வம் என்றும், குடி–குடிமக்களின் தொகைப் பெருக்கம் அதாவது ஆள் பலம், கூழ்–பொருளாதார பலம்' எனவும்

கூறுவர். இவை யாவும் புற உறுப்புக்கள். இவ்வதிகாரத்தால் இனிக் கூறப்படுவன அகவுறுப்பாகிய அரசனுக்குரிய குணங்கள் எனவும் கூறுவர். *ஜி. வரதராசனார்* 'குடி– குடிமக்கள், கூழ்–உணவுப் பொருள், அரண்–பாதுகாவல்' என்பர். 'படைகுடி கூழமைச்சு' என்ற முறைவைப்பைப் *பரிமேலழகர்* மாற்றியுங் கூறுவர் என்பர். அது அதிகார அடைவில் *வள்ளுவர்* வகுத்த முறையேயன்றிப் *பரிமேலழகர்* தாமே செய்தது அன்று. *சுக்கிர நீதி* போன்ற பொருள் நூல்களின் துணிவும் அது என்க.

மு. கோ.: ''வெல்படை வேந்தன் வெறுக்கையுள் எல்லாந் தலை'' என்று *வள்ளுவரே* கூறுதலான் படை முதலாதல் தகாது என்ற *பரிமேலழகர்* உரை *வள்ளுவர்* நோக்குக்கு முரணானது என மறுப்பர். அரசியல் கோட்பாடு கொண்டும் படையரசு, குடியரசு இரண்டும் இணைந்திருத்தலின் நின்ற நிலையே ஏற்புடையது என்பர்.

சி. இலக்குவனார் 'குடி–குடிமக்கள் அன்பு, கூழ்–பொருட் பெருக்கம், அமைச்சு–நல்லமைச்சர்' என பண்புகளை விரிப்பர்.

இராமலிங்கனார் குடியாட்சிக் காலத்தவர். ஆதலின் அவருரைப் போக்கு, குடி–மக்கள் தொகைப் பெருக்கம் என்று கருதச் செய்தது. *மு. கோ.* கூறும் திருக்குறள் மேற்கோள் படை செல்வங்களின் தலையாய செல்வம் என்கிறதே யன்றிப் படையை இவ்வரிசையில் முன் வைக்கத் துணையாகாது. அரசின் முதல் உறுப்புப் போல்வான் அமைச்சனேயாவன் என்பதை அரசியல் கூறிய வள்ளுவர் அடுத்து அமைச்சிலக்கணம் கூறுவதாலேயே புலனாகும்.

உரைகள் அனைத்திலும், அரசனோடு ஆறங்கங்களையும் கூட்டி இராச்சியமெல்லாம் ஒன்றாக்கி வடநூற்கொள்கையில் சிலவேறுபடுத்து மாசன முதலாக ஆறினையும் கூறினர் *வள்ளுவர்* என்னும் *காளிங்கர்* உரை. இராச்சியத்திற்கு அரசனும் ஓரங்கமானான். அரசனோடுகூட்டி அங்கம் ஏழு, ஏழும் இராச்சியத்திற்கே; அரசனுக்கு அன்று. குடி— மாசனம் (மக்கள்தொகை) என்ற கருத்தினதாய்த் தனித்த சிறப்புடைய தாதலைக் காண்க.

மணக். , பரிப். , இருவரும் படைமுதலாய ஆறனையும் பொருள் என்றனர். *பரிதி.* ஆறுசெல்வம் என்றனர். 'சொன் மாறினும் பொருள் ஒன்றே' ஏனையோர் ஆறும்அரசற்கு உறுப்பு என்றனர் *.மணக்குடவர்*

முதலானோர் பாலின் பெயருக்கு ஏற்பப் பொருள் என்றனர் போலும். **வள்ளுவர்** இவ்வாறினையும் பொருள் என்றோ அங்கம் என்றோ குறித்திலர். உரையாசிரியர்களே மாறுபடுகின்றனர். **காளிங்கரும், பரிமேலழகரும்** அங்கம் எனற்குக் காரணம் **சுக்கிர நீதி** முதலாகிய வடநூல் வழக்குப் பற்றியே எனல் காண்க.

இவற்றுள் படையும் அமைச்சும் நட்பும் ஆகிய மூன்றும் அரசனாகத் தேடிக் கொள்ளத்தக்கன. குடியும் கூழும் தன் முயற்சியானும், நாட்டு வளப்பத்தானும் மழை முதலிய தெய்வத்துணையானும் அமைவன; அரண்களில் மலையும்காடும் கடலும்முதலாயின இயற்கையின் அமைவனவும் அகழ் மதில் முதலாயின இயற்கையின் அமைவனவும் செயற்கையில் ஆவனவுமாக இருநிலைகளும் உடையன, நாடு என்னாது குடி என்றது குடியில்லாத நாட்டிற்கு அரசனாயிருத்தலாற் பயனின்மை கருதிஎன்க.

'பகடு நடந்த கூழ் பல்லாரோடு உண்க' என்றாற்போலக் கூழ் என்றது உணவிற்குப் பெயராதலின் பொன்னும் மணியும் போலாது உணவு சிறத்தலான் என்க.

'ஆறும்' என்னும் முற்றும்மையை எச்சவும்மையாகக் கொண்டு இயற்கையில் அமைவன சில குறையினும் அவன் அரசனாகலாம், அரசருள் ஏறாதற்கு அனைத்தும் வேண்டும் என்பதாம். ஆதலால், செயத்தகும் அங்கமுடையார் அரசரும் அவற்றுடன் இயல்பாகவே அமைந்த அங்கமும் உடையார் அவருள் ஏறுமாவர் என்ற குறிப்பும் காண்க.

ஒப்புமைப் பகுதி:

படை, கூழ்:

1. ''படையின தமைதி கூழின் பகுதியென் றிவற்றின் பன்மாண்பு
உடையவர் அவனோடொப்பார் ஒருவர்மற் றில்லை வேந்தே''—சூளா. 300

அமைச்சு:

2. ''அரசர்க்கு அமைச்சர் அவயவம் அல்லவோ?'' —மனோன் 21. 312.

ஏறு:

3. ''அம்மா ணகருக் கரசனரசர்க் கரசன்'' —கம்ப. 163.

முற்றும்:

4. ''பத்திமை சான்ற படையும் பலர் தொகினும்

எத்துணையும் அஞ்சா எயிலரணும்—வைத்தமைந்த
எண்ணின் உலவா விழுநிதியும் இம்மூன்றும்
மண்ணாளும் வேந்தர்க் குறுப்பு.'' —திரி. 100.

5. ''கோலஞ்சி வாழும் குடியும் குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும்—வேலின்
கடைமணிபோல் திண்ணியான் காப்பும் இம்மூன்றும்
படைவேந்தன் பற்று விடல்.'' —மே 33.

6. ''தாழுஞ்செய லின்றொரு மன்னவன் தாங்க வேண்டும்
கூழும் குடியும் முதலாயின கொள்கைத் தேனும்
சூழும் படைமுன்னவன் தோளிணைக்காவ லின்றி
வாழுந்தகைத் தன்றிந்த வையகம் என்று சொன்னார்.''—பெரிய. மூர்த்தி. 28.

முற்றும்:

7. ''ஆறும் மூன்றும் அடுக்கா யிருந்தால் அறியாப்பிள்ளையும் அரசாளும்''. —பழ.

முற்றும்:

8. ''உற்றவு றஞ்சாப் படையும் உயர்குடியும்
உற்றுலவாப் பைங்கூழும் முன்வருதல் சேமிக்கும்
பெற்றி அமைச்சும் உதவும் பெருந்துணையும்
கொற்ற அரணும் உடையானே கோமானே.'' —பிரமோத்.பத்திரா.2|

9. ''உரைசெயும் அறத்தினாற்றால் ஒருகுடை நிழற்ற முந்நீர்த்
தரைமுழு தாளவேண்டின் தகைபெறும் அமைச்சு நாடு
புரையறும் அரணே மிகக பொருள் படை நட்பென்றாறும்
வரைசெயப் படாத யாக்கை உறுப்பென மதித்துக்கோடி.''
—விநா. அரசி. 42.

10. ''படைகுடி கூழமைச்சுப் பகர்ந்திடு நீதி
நட்பரண் இவற்றின் நயந்திடும் சிறப்பினோன்.'' சரபேந்திர 8:25—26

11. ''அரசியல் அரசு, அமைச்சு, நட்பு, பொருள், நாடு, மதில், படை, என்னும் ஏழு உறுப்புக்களை உடைத்து, அவற்றுள் அரசு தலையாக மதிக்கப்படுவது. அமைச்சு கண்ணாகவும், நட்பு செவியாகவும், பொருள் முகமாகவும், படை மனமாகவும், மதில் கையாகவும், நாடு காலாகவும் இவ்வாறு அரசியல் உறுப்புக்கள் எண்ணப்படுவனவாம்.''
—சுக்கிர. அத். 1 சு. 61. 62.

மேற்கோள் பகுதி:

இளம்பூரணர்: பொருளொடு புணர்ந்த பக்கம் என்றதனான் அறனும் இன்பமும் அன்றி, ஒழிந்த பொருளொடு பொருந்திய பக்கம் என்றுரைப்பினும் ஆம். பொருளாவது—நாடும், பொருளும், அரணும், அமைச்சும், நட்பும், படையும் எனக்கூறி, இக்குறளை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 75)

தெய்வச்சிலையார்: பெயர்க்குரிமரபின் செவ்வெண் இறுதி தொகை பெற்றுவந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 285)

நச்சினார்க்கினியர்: நட்பு அரண் ஆறும் உடையான் என்றாற் போல்வன எல்லாம் ஒருமைப்பொருள் கூறிற்றேனும் பன்மைப் பொருளை உணர்த்தலின் மெய்ந்நிலை மயக்கம் ஆயிற்று என்பர். (தொல். சொல். 449)

பொருளொடு புணர்ந்த பக்கத்திற்கு மேற்கோள் (தொல். பொருள் 76)

கணவிரி என்னும் நிரையீற்றியற்சீர் நேர்பசைச்சீரொடு தளைப் பட்டமைக்கு மேற்கோள் (தொல். பொருள். செய். 75)

சிவஞானமுனிவர்: செய்யுளின்பம்படச் செய்தற்கண் முறை பிறழ வைத்தலும் உண்டு என்பதற்கு மேற்கோள். (இலக். சூறா. பக். 62)

சுவாமிநாத தேசிகர்: உடையான் அரசருள் ஏறு என்பது கூட்டிப் பிரித்தலுக்கு மேற்கோள். (இ. கொ. 42)

வருமொழி நோக்காமலே தனக்குரிய ஒருமைப்பாலை விட்டுப் பன்மைப் பாலை உணர்த்தலின் உயர்திணைச் சாதி ஒருமையாயிற்று என்பர். (மே. 130)

யா. வி.: உயிர் மிக்குவந்த செய்யுளுக்கு மேற்கோள், (சூ. 2)

39. 2. அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தற் கியல்பு.[1] (ங-அ2)

உரைப்பகுதி :

அ) மணக்., பரிப்.: அஞ்சாமையும், ஈகையும் அறிவுடைமையும் ஊக்கமுடைமையும் என்னும்[2] இந்நான்கு குணமும் ஒழியாமை[3] வேந்தனுக்கு இயல்பு எ.று.

1 இயல்பு—யா.வி. பாடம்
2 'என்னும்' இல்லை (திருவே. ப.க. பதிப்பு)
3 ஒழியாமை— குறையாதிருத்தல், நீங்காமையும் ஆம்.

இவை நான்கும் இயற்கையாக வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: திடபுத்தி[4]யும் கொடையும் விசாரமும்[5] அறிவுடைமையும் இந்த நான்கும் உள்ளவன் அரசன் எ.று.

இ) பரிப.: அஞ்சாமையும் ஈகையும் அறிவுடைமையும்ஊக்கமுடைமையும் இந்நான்கு குணமும் ஒழியாமை வேந்தனுக்கு இயல்பு எ-று.

இவை நான்கும் இயற்கையாக வேண்டும் என்றது.

ஈ) காளி.: அஞ்சாமை என்பது தறுகணாண்மை. ஈண்டு ஈகை என்பது கீழ்ச்சொன்ன இல்லறத்து இயல்பாகிய கொடை நெறிக்கு அடங்காது தனது பெரும் பொருட்கும் பெருந்தன்மைக்கும் ஏற்குமாறு மற்று அந்தணர் முதலாக இழிகுலத்தாராகிய புலையர் ஈறாக அனைவர்க்கும் வரம்பற வழங்கும் வண்மை எனஅறிக.அறிவு என்பது மற்றும் இத்தகுதியும், அல்லதும் தெரிந்து உணரும் உணர்வு என்ற வாறு. ஊக்கம் என்பது உள்ளமானது மேம்படக்கருதும் மேற்கோள்[6] என்றவாறு. அஞ்சாமை என்பது ஒழியாமை என்றது; இவை நான்கும் எஞ்ஞான்றும் இடைவிடாது இருத்தலே அரசருக்கு மரபு என்றவாறு.

உ) பரிமேல்.: அரசனுக்கு இயல்பாவது, திண்மையும்[7] கொடையும் அறிவும் ஊக்கமும் என்னும் இந்நான்கு குணமும் இடைவிடாது நிற்றல்.

ஊக்கம் வினைசெய்தற்கண் மனவெழுச்சி. இவற்றுள் அறிவு ஆறங்கத்திற்கும் உரித்து; ஈகை படைக்குரித்து; ஏனைய வினைக்குரிய உயிர்க்குணங்களுள்[8] ஒன்று தோன்ற ஏனைய அடங்கிவரும்[9]. அவற்றுள் இவை[10] அடங்கின், அரசற்குக் கெடுவன பலவாமாகலின், இவை எப்பொழுதும் தோன்றி நிற்றல் இயல்பாக வேண்டும் என்பார் எஞ்சாமை வேந்தற்கு இயல்பு என்றார்.

---

4 திடபுத்தி— மனஉறுதி.
5 ஆய்வுக்குரியது அறிவாதலின் அதனை விசாரம் என்றது.
6 மேற்கோள்—கொள்கை.
7 திண்மை— கலங்காநிலைமை.
8 உயிர்க்குணங்கள் 'அறிவருள் ஆசை முதலாக மறவி ஈறாகக் கூறப்பட்ட முப்பத்திரண்டும் அவை போல்வனவும்' எனக்கூறும் நன்னூல் (452), 'சங்கை, பரிமாணம், வேற்றுமை சையோகம், விபாகம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்தனம், தர்மம், அதர்மம், பாவனை எனப் பதினான்கு' என்னும் தருக்க கௌமுதி; இவற்றிடை வேறுபாடு கண்டு பொருந்துமாறு உணர்தற்குரியது.
9 ஒரேகாலத்து இரண்டு குணங்கள் வெளிப்படாஆதலான் யாதாமொரு குணம்; சிறந்து நிற்கும்போது மற்றொன்று தோன்றாது என்றாராம்.
10 இவை—அஞ்சாமை முதலாக ஆசிரியர் கூறியவை

ஊ) **கவிராசர்.:** அரசனுக்கு லக்ஷணமாகிறது தீரத்துவமும்[11] கொடுக்கிறதும், அறிவும், உற்சாகமும் என்னும் இந்த நாலு குணமும் விடாமலிருக்கவேணு மென்றவாறு.

உற்சாகம், கருமஞ் செய்கிறதற்கு மனவெழுச்சி. அறிவு ஆறங்கத் துக்குமுரியது; கொடுக்கிறதனாலே சேனையுண்டாம். தீரத்துவத்தி னாலே செய்கிற காரியங்கள் முடியும், இவைகளில்லாவிட்டால் அரச னுக்குக் கேடு வருமாதலால், இவைகள் விடாமலிருக்க வேண்டு மென்பதாம்.

ஏ) **பழைய2.:** அரசனுக்கு இயல்பாவது பயமின்மையும் கொடையும் அறிவும் ஊக்கமும் என்னும் நான்கு குணமும் இடைவிடாது நிற்றல்.

ஊக்கம் — வினை செய்யுமிடத்து உற்சாகம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அஞ்சாமை' **மணக்.**, **பரிமேல்.**, **தேவநேயர்**; 'திடபுத்தி' **பரிதி.**; 'தறுகணாண்மை' **காளி.**; 'தீரத்துவம்' இதனால் எடுத்த காரியமனைத்தும் முடியும் என்பர் **கவிராசர்**. 'பயமின்மை' **பழைய2**, 'தைரியமல்ல; தைரியம் அப்போதைக்கு ஆவேசத்தால் உண்டாவது; உடனே மறைவது. அஞ்சாமை அமைதியான அறிவால் உண்டாகி, எப்போதும் இருப்பது' **இராம.**; 'மனவுறுதி' குழந்தை; 'அஞ்சா நெஞ்சம் உடைமை' **ஜி. வரத.**; 'அஞ்சாத வலிமை' **சாமி. சி**; 'அஞ்சும் இயல்பின்மை' **சி.இ**; இவற்றுள் **இராமலிங்கனார்** விளக்கம் நன்று. பொதுவகையில் அஞ்சாமை, அஞ்சாத வலியுடைமை, தறுகணாண்மை என்பதைவிட அஞ்சத் தகாதவற்றிற்கு அஞ்சாமை என உரையாசிரியர்கள் கூறின், அது 'அஞ்சுவதஞ்சல் அறிவார் தொழில்' என்ற வள்ளுவத்தைக் கருதும் விளக்கமாகும்.

'ஈகை': 'ஈகை— படைக்குரித்து' என்ற **பரிமேலழகர்** உரை தன்னலம்பேணும் அரசற்குரியது. 'ஈகை என்றது இல்லறவியலிற் கூறிய ஈகையன்று; அரசனுடைய பெரும் பொருளுக்கும் பெருந் தன்மைக்கும் ஏற்ப அந்தணர்முதல் இழிகுலத்தார் வரை எல்லாருக்கும் வழங்குதல்' என்ற **காளிங்கர்** உரை பல்லாற்றானும் சிறந்தது. 'ஒற்றுக்கும், உறவினர்க்கும், படைகட்கும் வழங்குவன அவ்வப் பெயரால் பரிசாக அழைக்கப்பெறுமேயன்றி ஈகை என்ற சொல்லுக்

11 திரத்துவம்—நிலைத்த தன்மை, உறுதி

குரிய பொருளதாகாது; அரசனும் மக்களுள் ஒருவனாகி அறப்பால் இல்லறவியலிற்கூறிய ஈகையறத்தின்படி நடக்க வேண்டியவனாதலின் ஈண்டு ஈகை என்றது ஏழைகள் நீங்கிய ஏனையோர்க்கு அளித்த லாகாது; படையோர்க்கு வழங்கல்' என்ற *பரிமேலழகர்* கருத்தை மறுப்பர் *இராமலிங்கனார்*. 'ஈகை படைகளையும், குடிகளையும் நோக்கிய' என்பர் *தேவநேயர்*. 'கொடை' என்பர் குழந்தை. ஏனையோரும் இங்ஙனமே உரைப்பர்.

இவ்வுரைகளில், இல்லறத்திற்கூறிய ஈகையையே ஈண்டும் ஆசிரியர் கூறுவாராயின், மக்கட்பொதுமையிற் கூறிய இல்லற ஈகை இவனுக்கும் உரித்தாகலான் ஈண்டுங்கூறுதல் கூறியது கூறலாம். ஆதலால், 'படைகட்குரித்து' என்ற *பரிமேலழகர்* உரை சிறந்தது எனலாம். ஆயினும், அளவுக்குட்பட்ட செல்வம் படைத்த இல்லறத் தான் ஈகையிலும், பெரும்பொருள் படைத்த அரசன் வரையாதீதல் வேண்டும் என்ற *காளிங்கர்* கருத்து முன்னிற்கிறது. இல்லற ஈகை புகழுக்கும் புண்ணியத்திற்கும், மன்னன் ஈகை நாடுகாவலுக்கும் உலக மக்களனைவரும் தம்மையே எதிர்நோக்கியிருக்கவும், ஆதலால், அதனின் இது பெருகிய பயனையளிப்பதாம் என்க.

'அறிவு' : 'அறிவு–விசாரம்' *பரிதி*.; 'தகுதியும் தகுதியல்லதும் தெரிந்துணரும் அறிவு' *காளி*. ; 'ஆறு அங்கங்களையும் வைத்தாளு தற்கு அரசனுக்கு உரிய அறிவு' *பரிமேல்*. ; *பழைய2 கவிராசர்* முதல் அனைவரும். பிற்கால உரைகளில், 'அறிவு'– 'அரசியல் ஞானம்' *இராமலிங்கனார்*. 'பல பிரச்சினைகளைப் பலர்வாயிலாகப் பலவகையாகக் கேட்டாலும் தானே முடிவு செய்யும் அறிவு' என்பர் *ஜி. வரத*.

இவற்றுள்'விசாரம்'என்பது ஆய்ந்து காணும் அறிவு. *காளிங்கர்* உரையும் இக்கருத்தையே நோக்குகிறது. சொல்லும் வகையான் சிறிது மாற்றம் இருப்பினும் கல்வியானாய அறிவுடன் அரசியல் ஆட்சித்திறம், முடிவு காணும் ஆற்றல் இவற்றைக் குறிக்கும் அறிவும் உடையனாதல் என்பது சிறந்த உரையாகும். *சுக்கிர நீதி* 'பகை யரசனை வெல்லவும், மக்களுக்கு இன்பம் விளைவிக்கவும் அரசனுக்கு நீதிநூல் அறிவு இன்றியமையாதது' என்பதால் (*சுக்கிர. அத். 1, சுலோ. 7, 11*) ஈண்டு அறிவு என்றது பொதுவான கல்வியறிவை யன்று; நீதிநூல் அறிவும் படையறிவும்: படைக்கல அறிவும் ஆகியவையே என்பது.

'ஊக்கம்' —'அறிவுடைமை' என்பர் பரிதி. இவர் உரையின் வண்ணம் இவர் கொண்ட பாடமும், வேறாதல் கூடும். இதில் ஏதோ தவறுள்ளது. 'உள்ளம் மேம்படக்கருதும் மேற்கோள்' என்பர் காளிங்கர். ஊன்றிய விசாரத்திலே உயர்பொருள் எய்தவேண்டும்' (ஞான வாசிட்டம். தர்ம 5ஆம் பாடல்) என்றது ''ஆய்வால் உயர் பொருளையடைதல் விசாரம்; ஆதலால், உள்ளம் மேன்மேலுயர மேற் கொள்ளும் கிளர்ச்சியாகிய ஊக்கம் என்பதற்கும் பரிதி. 'விசாரம்' எனப்பொருள் கொண்டனரோ என இயைபு படுத்திப் பார்த்தாலும் அறிவு ஊக்கம் என்பதை ஊக்கம் அறிவு என முறை மாற்றினது ஏன்? என்பதும் சிந்திக்கத் தக்கது.

மு.கோ.மட்டும் 'எஞ்சாமை வேந்தர்க்கு' என்பதை ஒரு தொடராகக் கொண்டு 'மரபு வழி இடையறாது வரும் மன்னர்க்கு' என உரை காண்பர். முடியாட்சிக் காலத்தவர் வள்ளுவர் என்பதை மனத்திற் கொண்டு கருதியது இது.

அஞ்சாமை—மாற்றார் திறங்கண்டும் பொருதற்கண் அஞ்சா திருத்தல்; இதனையே 'வினையின் அஞ்சாதிருத்தல்' என்கிறது விநாயகபுராணம். ஈகை முற்கூறப்பட்டது. அறிவு இந்த ஆறு பொருள்களையும் வைத்தாளும் அறிவுடையனாதல். சூழ்ச்சி வல்ல னாதல் முதலியன. நுண்பொருள் மாலையுடையார் கருத்துப்படி இந்நான்கும் என்ற உம்மை எதிரது தழீஇய எச்சம்.

சுக்கிர நீதி கூறும் எட்டுள் தீயோரைத் தெறுதல், திறைதரச் செய்தல், பகை யழித்தல் ஆகிய மூன்றும் அஞ்சாமையிலும், ஈதல் ஈகையினும், வேட்டல், அறநெறிப் பொருளீட்டல், குடியோம்பல் மூன்றும் அறிவிலும், நிலப்பகுதி கோடல் ஊக்கத்திலும் அடங்குமாறு கண்டு வள்ளுவர் இக்குறளாற் கூறிய நான்கின் இன்றியமை யாமையைத் தெளிக.

ஒப்புமைப் பகுதி:

அஞ்சாமை:

1. ''அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்'' —குறள் 497.

அஞ்சாமை:

2. ''அஞ்சிய அரசன் தஞ்சம் ஆகான்.'' —பழ

அறிவு:

3. ''வீட்டுவா ளரக்க வின்னுந் தீவினை வேரின் வாங்கக்
கேட்டுணர் கல்வி யோடு ஞானமுங் கிடைத்த தொத்தார்.'' —கம்ப.3909

4. ''வினையினஞ் சாமை நிற்றல் வினையருக் களித்தல் செய்யும்
வினையிடை மனமேற் சேறல் விளங்கிய அறிவு- -வேந்தருக்கியல்பு''
—விநா. அஞ்சி. 43

முற்றும்:

5. ''அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு'' —குறள் 863

6. ''ஆதிம் மதியும் அருளும் அறனும் அமைவும்
ஏதில் மிடல்வீ ரமும்ஈகையும் எண்ணில்யாவும்
நீதிந் நிலையும் இவைநேமியி னோர்க்குநின்ற
பாதிம் முழுதும் இவற்கேபணி கேட்ப மன்னோ. —கம்ப. 169

7. ''தீயோரை யொறுத்தலும், ஈதலும், குடிகளைக் காத்தலும், இராசசூய முதலிய வேட்டலும், அறநெறி பிறழாது பொருளீட்டலும், பிற அரசர்களைத் திறைதரச் செய்தலும், பகைவரைத் தொலைத்தலும், மேன்மேலும் நிலப் பகுதி கோடலும் ஆகிய இவ்வெட்டும் அரசர்க்குரிய தொழில்களாம்.''
சுக்கிரநீதி, அத். 1 சு. 124,12

ஒ) மேற்கோள்பகுதி:

யா.வி.: இயல்வு எனப்பாடங்கொண்டு முற்றுகர ஈற்றான் முடிந் தமைக்கு மேற்கோள் காட்டுவர். (சூ.57.)

39. 3. தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலனாள் பவற்கு. (கூஅங)

உரைப்பகுதி:

அ) மணக்.: மடியின்மையும், கல்வியுடைமையும், ஒரு பொருளை ஆராய்ந்து துணிதலுடைமையும் என்று சொல்லப்பட்ட இம்மூன்றும் பூமியை ஆள்பவனுக்கு நீங்காமல் வேண்டும் எ. று.

ஆ) பரிதி.: ஆலசிய[1] புத்தியின்மையும், கல்வியுடைமையும், திட மான புத்தியும் இந்த மூன்று காரியமும் ராசாக்கள் செல்வம் எ. று.

1. ஆலசியம்—அலட்சியம் அல்லது கவனக்குறைவு.

இ) *பரிப்.*: மடியின்மையும், கல்வியுடைமையும், ஒரு பொருளை ஆராய்ந்து துணிதலுடைமையும் என்று சொல்லப்பட்ட மூன்றும் நிலன் ஆள்வார் தமக்கு நீங்கா ஆதல் வேண்டும் எ—று.

இது முதலாகச் செயற்கைக் குணம் கூறுகின்றார். உலகத்துக் குற்றமும் குணமும் ஆராயுங்கால் மயங்கக் காணாது உண்மை ஆராய்ந்து துணிதல் ஒருதலையாக நிலன் ஆள்பவர்க்கு வேண்டும் என்பதனானும், அதுதான் கல்வியான் அல்லது ஆராய்தல் அரிது ஆகலானும், அக்கல்வி மடியின்மையான் அல்லது வாராது ஆக லானும், சிறப்பு நோக்கி முற்பட இம்முறையே கூறினாராம்.

ஈ) *காளி.*: 'ஆள்பவர்க்கு' பாடம். விரையுங்கருமம் தாழாது இயற்றுகையும், அருமறை முதலாக அறநீதி முடிவாக இங்ஙனம் தாம் கற்கத்தகுமவற்றைக் கற்கும் கல்வியும், தாம் செய்யும் கருமத்து மனத்திட்பமும் இம்மூன்றும் ஒழியாது செலுத்துமதுவே மண் ஆளும் வேந்தர்க்கு இயல்பு எ-று.

உ) *பரிமேல்.*: நிலத்தினையாளும் திருவுடையாற்கு, அக்காரியங் களில் விரைவுடைமையும், அவையறிதற்கு ஏற்ற கல்வியுடைமையும், ஆண்மையுடைமையுமாகிய இம்மூன்று குணமும் ஒருகாலும் நீங்கா.

கல்வியது கூறுபாடு[2] முன்னர்க் கூறப்படும். ஆண்மையாவது ஒன்றனையும் பாராது கடிதிற் செய்வது ஆகலின், அஃது ஈண்டு உபசார வழக்கால் துணிவு[3] எனப்பட்டது, உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை.[4] இவற்றுள் கல்வி ஆறங்கத்திற்கும் உரித்து; ஏனைய வினைக்கு உரிய: நீங்கா என்பதற்கு மேல்[5] எஞ்சாமைக்கு உரைத் தாங்கு உரைக்க.

காரி.: முற்கவிக்கண் நான்கையும் கூட்டியதால் மூன்றும் என்பது முற்றும்மையாகாது. இறந்தது தழீஇய எச்சவும்மை யாயிற்று.

ஊ) *கவிராசர்*: பூமியை ஆளப்பட்ட இராசாக்களுக்குக் காரியங் களில் உற்சாகமுடைமையும், சபையை யறிந்து பேசத்தக்க கல்வியுடை மையும், ஆண்மையுடைமையுமாகிய இம்மூன்று குணமு மொரு காலும் விடாமலிருக்கவேணு மென்றவாறு எ. று-

---

2. முன்னர்—கல்வி என்னும் அதிகாரத்து; 'மூன்' ஈண்டு இடமுன் என்க.
3. துணிவு—காரியம். ஆண்மை—காரணம். துணிவுக்குக் காரணமான ஆண்மையைத் துணிவு என்றே கூறியது உபசார வழக்கு. இதனைக் காரிய ஆகுபெயர் எனலுமாம்
4. காரி விளக்கம் காண்க.
5. 'மேல்' முற்கூறிய 'அஞ்சாமை' என்ற குறளில்.

ஏ) பழைய 2: தூங்காமையும் கல்வியும் துணிவுடைமையும் இம் மூன்று குணமும் நிலத்தை ஆளும் அரசர்க்கு நீங்கா.

தூங்காமை—காரியத் தாழ்ச்சி செய்யாமை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'தூங்காமை'—'மடியின்மை' பரிப்., மணக்.; 'ஆலசிய புத்தி யின்மை பரிதி. 'விரையுங் கருமம் தாழாதியற்றுகை' காளி.; 'காரியங்களில் விரைவுடைமை' பரிமேல்.; 'காரியங்களில் உற்சாக முடைமை' கவிராசர்; 'காரியத்தாழ்ச்சி செய்யாமை' பழைய 2' 'அரசு காரியங்களில் கண்ணுங் கருத்துமாக விழிப்போடிருத்தல்; இராம.; 'சோம்பலின்மை' குழந்தை.; 'அரசக் கருமங்களை விரைந்து செய்யும் தன்மை தேவநேயர்.; 'தூங்குதல்—காலங்கடத்துதல். தூங் காமை—காலங்கடத்தாமல் விரைந்து செய்யும் ஆற்றல்' ஜி வரத.; 'காலத்தாழ்வில்லாமை' சி.இ.; இவ்வுரைகள் சோம்பல், காலந்தாழ்த் தல் என உரைகண்டோர் பலர். விழிப்போடிருத்தல் என்றவர் இராம. ஆகவே 'மடியின்மை' எனப் பொருள் கோடலே சிறப்பு.

'கல்வி'— 'கல்வியுடைமை' மணக்., பரிதி., பரிப்.; 'கற்கத் தகுவனவற்றைக் கற்கும் கல்வி' காளி.; 'அவையறிதற்கேற்ற கல்வி யுடைமை' பரிமேல்.; 'சபையை அறிந்து பேசத்தக்க கல்வியுடைமை' கவிராசர்.

''கற்றுக்கொண்டேயிருத்தல்; அப்போதைக்கப்போது அரசியல் நிலைக்கு அறிய வேண்டுவனவற்றைப் படித்துக் கொண்டேயிருத்தல்' இராம;'அரச காரியங்களை அறிதற்கேற்ற கல்வியறிவு' தேவநேயர்; 'ஆளக்கற்றுக் கொள்வது' ஜி.வரத.; அரசியல் அறநூற்கல்வி' மு.கோ.; இவற்றுள் அவையறிந்து அஞ்சாது பேசும் அறிவுதரும் கல்வி என்ற உரைகள் சிறந்தன.

'துணிவுடைமை'—'ஒரு பொருளை ஆராய்ந்து துணிதலு டைமை' மணக்.: 'திடமான புத்தி' பரிதி.; 'மயங்காது உண்மையை ஆராய்ந்து துணிதல்' பரிப்.; 'தாம் செய்யுங் கருமத்துட்டுணிவு' காளி.;'காரியங்களைச் செய்தற்கேற்ற ஆண்மையுடைமை' பரிமேல்.; கவிராசர், பழைய 2, தேவநேயர்.; 'செய்ய வேண்டிய ஆலோசனை களைச் செய்து உடனுக்குடன் முடிப்பது' இராம.; 'ஆண்மை' குழந்தை.; சாமி.; பகைவர் மேற்செல்லுதல் முதலிய காரியங்களில் தெளிந்து செய்யக்கூடிய துணிவு'. ஜி. வரத. 'வலியுடைமை' ஈக் காடு—சபா.; 'துணிந்து செய்யும் பண்பு' சி. இ.; இவற்றுள் மணக் குடவர், காளிங்கர் பரிமேலழகர் போன்றார் உரைகள் சிறந்தவை.;

'நீங்கா' என்பதற்கு ஒருக்காலும் நீங்கா என்பவரினும் இம் மூன்றும் மண்ணாள்வார்க்கு இயல்பான குணம். அதனால் நீங்கா என்ற உரை தெளிவானது.

சென்ற குறளில் 'இயல்பு' (382) என்றதற்கும். இக்குறளில் 'நீங்கா' என்பதற்கும் சிறந்ததோர் நயம் இருத்தல் காண்க. அஞ்சாமை கொடையறிவு ஊக்கம் முதலியன உயிர்க்குணமாதலை அறிவருளாசை அச்சம் மானம் என்ற நூற்பா நன்கு விளக்கும். தூங் காமை முதலியன தொழிற்குணமாதலை 'துய்த்தல் துஞ்சல்' என்ற நூற்பாதெரிவிக்கும். ஆதலால் உயிர்க்குணமாகிய அஞ்சாமை முதலி யன வேந்தர்க்கு இயல்பு என்றும், தொழிற்குணமாகிய தூங்காமை முதலியன நீங்கா என்றும் ஆசிரியர் கூறினர் என்க. மேலும் தொழிற் குணங்கள் மடியானாதல் அறியாமையானாதல் இவனையறியாமலே இவனை விட்டு நீங்கும் அன்றே அதுவும் ஆகாது என்பார் நீங்கா என்றார். அரசனால் நீக்கப்பெறா என்னாது நீங்கா எனக் குணங்களை வினை முதலாக்கிக் கூறினார்; அவற்றின் இன்றியமையாமை விளக்க, 'இது முதலாகச் செயற்கைக் குணம் கூறுகிறார்' எனப் பரிப்பெருமாள் கூறுதலும் காண்க.

ஒ) ஒப்புமைப் பகுதி:

'தூங்காமை':

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க;
தூங்காது செய்யும் வினை. —குறள், 672.

வல்லே வினையினை முடித்தல் ஆண்மை —விநா. அரசியற்படலம்., 43.

தூங்கினவன் கன்று கடாக் கன்று —பழ.,

39. 4. அறன் இழுக்கா தல்லவை நீக்கி மறன் இழுக்கா மானம் உடைய தரசு. (ஊஅச)

உரைப்பகுதி:

அ) மணக்.: அறத்தில் தப்பாமல் ஒழுகி, அறம் அல்லாத காம வெகுளியைக்[1] கடிந்து, மறத்தில் தப்பாத மானத்தை[2] உடையவன் அரசன் எ. று.

1. அறவழிவந்த 'தம் இல்லிருந்து தமது பாத்துண்டற்றாகிய காமமும், நியன கடிந்து நிருத்துதற்கான வெகுளியும் அறமாதலின் அவற்றின் நீங்கிய பிறன் மனை விழைதல், பரத்தமை முதலிய காமமும், தன்னலங் காரணமாக எழும் வெகுளி யுமே அறனல்லாதன என்பது குறிக்கப்பெறுகின்றது.

ஆ) *பரிதி.:* தன்மநீதி குன்றாமல், பாவமான காரியத்தை நீக்கி, வெற்றிப் பாட்டினால் மானமுள்ளவன் அரசன் எ. று.

இ) *பரிப.:* அறத்தினால் தப்பாமல் ஒழுகி அறன் அல்லாத காமம், வெகுளி, மயக்கம் என்னும் இவை கடிந்து, மறத்திற்றப்பாத மானத்தினையும் உடையவன் அரசன் ஆவான் எ-று.

மானமும் கடிய வேண்டுதலின் மறத்திற்றப்பாத மானம் வேண்டும் என்றார். இஃது ஒழுக்கமும் நிலைமையும் வேண்டும் என்றது,

ஈ) *காளி.:* அளித்தற்குத் தகுவதாகிய அறநெறிப்பொருளை[4] வழுவாது செய்து, அதற்குத் தகுவதாகிய அறம் அல்லனவற்றையும் கடிந்து, மற்று இதற்கு ஏற்ற மறத்தினையும் வழுவாது ஏனை அறநெறிப்பொருட்கு ஏற்ற மானத்தை உடையவன் யாவன்? மற்று அவனே அரசன் ஆவான் எ. று.

உ) *பரிமேல்.:* தனக்கு ஓதிய அறத்தின் வழுவாது ஒழுகி, அறனல்லவை தன் நாட்டின் கண்ணும் நிகழாமல் கடிந்து, வீரத்தின் வழுவாத தாழ்வின்மையினை உடையான் அரசன்.

அவ்வறமாவது ஓதல் வேட்டல் ஈதல் என்னும் பொதுத் தொழிலினும்,[5] படைக்கலம் பயிறல் பல்லுயிரோம்பல் பகைத்திறந் தெறுதல் என்னும் சிறப்புத்தொழிலினும், வழுவாது நிற்றல், 'மாண்ட' அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'[6] என்பதனால் இவ் வறம் பொருட்குக் காரணமாதல் அறிக. அல்லவை கொலை களவு முதலியன. குற்றமாய மானத்தின்[7] நீக்குதற்கு, மறன் இழுக்கா மானம் என்றார்; அதாவது,

> ''வீறின்மையின் விலங்காம்என மதவேழமும் எறியான்
> ஏறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சில்என் றெறியான்

---

2. மறத்தின் தப்பாத மானத்திற்குப் பரிமேலழகர் கூறும் மான வகையோடு, ''ஒட்டார் பின் சென்று வாழாமையும், இளிவரின் வாழாமையும், முதலாக ஆசிரியர் கூறுவன வற்றையுங் கொள்க.
3. மாண்பிறந்த மானம்கடிய வேண்டுவனவற்றுள் ஒன்றாதல் காண்க. 'களி மடிமானி' என்னப்பெற்ற உடையார் முன் இல்லார்போல் பிற்றை நிலை முனியாது கற்றல் வேண்டிய போதும் கூடிய வேண்டிாதாதல் ஓர்க
4. ''திறனறிந்து நீதின்றி வந்த பொருளே அறனீனும்'' ஆதலின் இங்ஙன் கூறினர் என்க.
5. இவை மூதன் மூன்று வருணத்தாருக்கும் பொதுவாதலின் பொதுத் தொழில் எனப் பட்டன.
6. புறம் 55
7. குற்றமாய மானத்தை முற்கூறிய 2 குறிப்பான் அறிக. இதனைக் குற்றங் கடிதல்2ஆம் குறளானும், அதற்கு பரிமேலழகர் தரும் விளக்கத்தானும் அறியலாம்.

மாறன்மையின் மறம்வாடும்என் றிளையாரையும் எறியான்
ஆறன்மையின் முதியாரையும் எறியான் அயில்உழவன்''[8] எனவும்,
அழியுநர் புறக்கொடை அயில்வேல் ஒச்சா—''[9]

எனவும் சொல்லப்படுகிறது. அரசு—அரசனது தன்மை; அஃது உபசார வழக்கால் அவன்றன் மேல் நின்றது.

காரி.: அரசு—அரசனது தன்மை; உரையுள் தாழ்வின்மையினை உடையது அரசு என்னாது 'உடையானரசன்' என உரைத்த தால் உபசார வழக்காய் அவன்மேல் நின்றது. மேல் 'உடைய தரசருள் ஏறு' என்னாது, 'உடையான் அரசருள் ஏறு'[10] என்ற தால் ஆகுபெயராக்காது உபசார வழக்கு என்றார். இனி, ஒற்றும் வேந்தும் 'குடிமை ஆண்மை'[11] என்னுஞ் சூத்திர விதியால் அஃறிணைக்கண் வந்த உயர்திணைச்சொல். அவை, 'நின்றாங் கிசைத்தல்'[12] என்னும் விதியால் உரையுள் 'வேந்தன் கொடி யன்'[13] 'ஒற்றனாவான்'[14] என வருவன காண்க. இனி அரசும், அமைச்சும் தூதும் அன்ன.

ஊ) *கவிராசர்:* ராசநீதிக்குச் சொல்லிய தருமத்தின்வழி தப்பாமல் நடந்து தன் நாட்டிலே தர்மமல்லாமலிருக்கிற காரியத்தைச் செய்ய வொட்டாமல் தண்டித்துச் சவுரியத்திலே குறைபடாமலிருக்கிறவனே அரசன் என்றவாறு.

அரசனீதியாவது ஓதல், ஒருபொருளை வேண்டுதல், கொடுத்தல் ஆகிய இந்த மூன்றும் பொதுத்தொழில்; ஆயுதவித்தை கற்கிறது, சகல சீவன்களையும் சமானமாய்ப் பார்க்கிறது, பகையை விசாரித்து வெல்லுகிறது ஆகிய இம்மூன்றுஞ் சிறப்புத்தொழில், ஆகிய இந்த ஆறுவகைத் தொழிலும் தப்பாமற் செய்கிறதாம்.

ஏ) *பழைய* 2: தனக்கு ஓதிய அறத்தின் வழுவாது ஒழுகி, அறன் அல்லாதவற்றை நீக்கி, வீரத்தின் வழுவாது, மானமுடையான் அரசன்.

அரசனுக்கு அறமாவது, ஓதல், வேட்டல், ஈதல், படைக்கலம் பயிறல், பல்லுயிர் ஓம்பல், பகைத்திறந் தெறுதல். (அல்லவை நீக்கல், கொலை, களவு முதலாயின நீக்கல்).

---

8. சீவக. 2251; 9. பு. வெ. 55 10. குறள். 381; 11. தொல். சொல்.57
12. தொல். சொல் 59 13. குறள். 551 14. குறள் 584;

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அறன் இழுக்கா'— 'அறத்தின் தப்பாமல் ஒழுகி' *மணக்.*; 'தன்ம நீதி குன்றாமல்' *பரிதி.*; 'அளித்தற்குத் தகுவதாகிய அறநெறிப் பொருளை வழுவாது செய்து' *காளி.*; 'தனக்கு ஓதிய அறத்தின் வழுவாது ஒழுகி' *பரிமேல்., பழைய* 2. 'ராச நீதிக்குச் சொல்லிய தருமத்தின்வழி தப்பாது ஒழுகி' *கவிராசர்*. இங்ஙனம் ஆசிரியர்கள் மாறுபடுகின்றனர். 'அறத்தின் வழுவாது' எனப் பொதுவகையிற் பொருள் கண்ட *மணக்குடவர்* வழியே *பரிதியார்* உரை செல்கிறது. ஆனால் *காளிங்கர்* உரை 'திறனறிந்து தீதின்றி வந்த பொருளே அறன் ஈனும் இன்பமும் ஈனும்' (754) என்பதை உட்கொண்டு எழுந்தது. ஆதலின், அறன் என்பதற்கு 'அறநெறிப் பொருள்' என உரை கண்டனர். அங்ஙனமே 'அல்லவை நீக்கி என்பதற்கு அதற்குத் தகுவதாகிய– அங்ஙனம் ஈகைக்குத்தக்க' அறனல்லவற்றைக் கடிந்து என உரை கண்டனர். *பரிமேலழகர்*, தனக்கு ஓதிய அறத்தின் வழுவா தொழுகி' என உரை கண்டு, ஒழுக்கம் ஓதல், வேட்டல் ஈதல் ஆகிய பொதுவும், படைக்கலம் பயிறல் பல்லுயிரோம்பல், பகைத்திறந் தெறுதல் என்ற சிறப்புமாகிய தொழில்களாம் என்றனர். இம்முறை, ஐவகைப்பட்ட அரசர் பக்கத்தில் படைக்கலம் பயிறல் இன்மையான் அதுவும் ஆகாது, *வள்ளுவர்* கூறும் 'அஞ்சாமையீகை' (382), 'இயற்றலும் ஈட்டலும்' (385), 'கொடையளி' (390) இவற்றுள்ளும் அடங்காது, *சுக்கிரநீதி* கூறும் எண்வகைத் தொழிலில், ஈதல், காத்தல், வேட்டல், அறநெறி பிழையாது ஈட்டல், பகைவரைத் தொலைத்தல், நிலம் பெரிதாக்கல் முதலியவற்றைக் கருதி நிற்றல் காண்க (அத்.1 ; சுலோ. 124–125) 'அறன் இழுக்காது' என்பது, தீதின்றி வந்த பொருளையும், 'அல்லவை நீக்கி' என்பது, தீயோரை ஒறுத்தலையும் 'மறனிழுக்காமானம்' என்பது பகைவனைத் தொலைத்தல், நிலப்பகுதி கோடல் முதலியவற்றையும் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆயினும் *வள்ளுவர்* கூறியது இவையாகுமா? என்று எண்ணத் தோன்றுகிறது. ஆகவே *பரிமேலழகர்* 'அரசர்க்கோதிய அறம் ஆறு' என்றதன் நிலைக்களன் எங்குள்ளது என்று அறியக்கூடவில்லை. குற்றமான மானத்திற்குப் *பரிமேலழகர்* தரும் விளக்கமும் மேற்கோளும் மிகச்சிறந்தன.

கவிராசர் சைனமரபினராதலின், 'வேட்டலை' நீக்கி 'ஒரு பொருளை வேண்டுதலைச், சேர்த்தனர். வேண்டலாவது ஏற்றல். ஏனைய கருத்துக்கள் *பரிமேலழகருக்கும்* இவர்க்கும் ஒப்பன.

அல்லவை நீக்கலுக்குப் பழைய உரை 2 தரும் 'கொலை களவு முதலியவற்றின் நீக்கல்' என்ற விளக்கம் அரசர்க்கு மட்டுமன்றி, ஏனை யோர்க்கும் உரியவாதலை வள்ளுவர் கொல்லாமை கள்ளாமைகளாற் கூறிப் போந்தமையின் ஈண்டும் கருதார் என்பது.

இராமலிங்கனார், 'அரசன் முதலில் தான் தருமம் தவறாமல் நடந்து கொண்டு. குடிமக்களிடை அதர்மங்கள் ஏற்பட்டால் அவற்றை நீக்கிஆண்மைக்குக் குறைவு வராதபடி மானத்தோடு இருப்பவன்' என் பர். இதனால் அறனிழுக்காமையும் மானமும் அரசற்கும், அல்லவை நீக்கல் குடிகட்கும் உரிய செயல்களாகின்றன. இது ஏனையோர் உரையினும் புதிய நோக்கு. அறன் இழுக்காமையே அல்லவைகளி லிருந்து நீங்கவாதலின், அல்லவை நீக்கலை ஆணைவழி நடக்கும் குடிகள் மேலதாக்கினர் போலும்.

தேவநேயர் 'அல்லவை நீக்கி' என்பதற்கு 'அறனல்லாதவை தன் னாட்டில் பிறராலும் பிறவுயிர்களாலும் நிகழ்வதை நீக்கி' என உரை காண்பர். இதுவும் ஏனையோர் உரையினும் புதிது. பரிமேலழகர் கூறும் ஓதல், படைக்கலம் பயிறல் முதலியன அரசனுடைய கடமை கள் ஆமேயன்றி அறமாகா. அங்ஙனம் கொள்வது ஆரிய முறை. அன்றியும் வேட்டல் தமிழர்க்குரிய தொழிலன்று; ஆதலால் வேட்டல்— வேட்டையாடுதல் எனக்கொள்க. ஊனமிகு பகைத்திறத்தால் கள்வ ரால் உயிர்தம்மால் ஆன பயந்தீர்ப்பவனே அரசன் என்பதும் காண்க என்பர் தேவநேயர். சிறந்தன கொள்க.

ஜி. வரதராசனார், 'அறன்' இதுவரை அறத்துப்பாலிற் கூறிய 'அறம்' என்றும், 'அல்லவை' — 'மக்களுக்கு வரும் குறைகள்' என்றும் கூறுவர். ஆனால், அல்லவை நீக்கல்—மக்களுக்கு வரும் களவு புறங்கூறல் முதலான தீச்செயல்களைத் தண்டனையால் பாது காப்பது என விளக்குவர், இவ்வுரையும் இராமலிங்கனார் கருத்தை நோக்கியுள்ளது.

மு.கோ. 'மறன் இழுக்கா மானம் உடையதரசு; மானம் அறனி ழுக்காது அல்லவை நீக்குவதால்ஆவது அத்தகைய மறனிழுக்கா மானமுடையதேயரசு' என இணைத்துப்பொருள் காண்பர். அவர் விளக்கம் மறனிழுக்காமை மானமாதல் போல அறனிழுக்காமையும் மானமாம் என்பது. அறனிழுக்காமையும் அல்லவை நீக்கலும் மற னிழுக்காமையும் மானத்திற்கு ஏது என்பது இவர் கருத்துப்போலும். ஆசிரியர் கருத்து இதுவாயின் மானமுடைமையில் வைத்து ஓதி

யிருப்பர். ஆதலால் ஆழ்ந்த ஆய்வுக்குரியதாதலைக் காண்க. ஈக்காடு சபாபதி முதலியாரும், இராமலிங்கனார் கருத்தை ஒத்து 'அல்லவை களை நாட்டினின்று நீக்கி' என்பர்.

ஆகவே, தான் அறனிழுக்காமையும், அல்லவை செய்யாமையும், தன்னாட்டில்யாரும் அல்லவை செய்யாமையும், தன் குடிகள் பிறருக்கு அல்லவை செய்யாமையும் பாதுகாத்து மறனிழுக்காமானமும் உடையவனே அரசு ஆவான் எனக்கோடல் பழைய உரைகளும் புதிய உரைகளும்தந்த கொடை என்னலாம்.

அறன் மறன் என்பன ஒன்றற்கொன்று மறுதலைச் சொல்லாய், நல்வினை தீவினை என்னும் பொருட்டாதலை ஓர்ந்து, இங்கே கூறிய மறன் அங்ஙனம் ஆகாது 'வீரம்' என்னும் பொருளது ஆதலை உணர்த்த, 'அல்லவை நீக்கி' என்பதை இடைப்பெய்து தீவினை களைக் களைந்தமை காண்க. சொற்றளராமை முதலாக மக்கள் நிலைக்கு ஏற்ப மானம் பலவாயினும், அரசற்குரிய மானம் வீரத்திற் றவறாவழியே சிறந்தது என்று வற்புறுப்பர் 'மறன் இழுக்கா மானம்' என்றார். இழுக்கா மானவகைகளைப் பரிமேலழகர் உரையிற் காட்டிய சிந்தாமணிச் செய்யுளான் அறியலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

அறன் இழுக்காது:

1. ''ஞான முன்னிய நான்மறை யாளர்கைத்
தான மென்னத் தழைத்தது நீத்தமே.'' —கம்ப. 16

2. ''.....பார்க்கு நோக்கருங் காவலின்
அறனொன்றுந் திருமனத்தான்.....
.....உயர் கீர்த்திச் சேங்கோல் வேந்தன்'' —கம்ப. 244

மறன் இழுக்கா மானம்

3. வீறின்மையின் விலங்காமென மதவேழமும் எறியான்
ஏறுண்டவர் நிகராயினும் பிறர் மிச்சிலென் றெறியான்
மாறன்மையின் மறம்வாடுமென் றிளையாரையும் எறியான்
ஆறன்மையின் முதியாரையும் எறியான் அயிலுழவன். சீவக.2261

4. மின்போன் மளிர்வாளொடு தோள் விழவும்
தன்போர் தவிரா தவனைச் சலியா
என்போலியர்போர் எனின் அன்றிதுவோர்
புன்போரென நின்றயல் போயினனால் —கம்ப. படைத்தலை.83

5. .....''பொர வுரியாரிவை யல்லால்
எளியாரிடை வலியார்வலி யென்னாவ தென்றான்.'' —கம்ப. 1368

6. ''வினையின் அஞ்சாமை நிற்றல் வினையருக் களித்தல் செய்யும்
வினையிடை மனமேற்சேறல் விளங்கிய அறிவு வல்லே
வினையினை முடித்தல் ஆண்மை வெங்கொலை யாதிநீக்கல்
வினைவளர் மானம் மற்றும் வேந்தருக்கு இயல்பு மைந்தா.''
—விநா. அரசி. 43

7. ''வீரங்கெட்டவன் சேரனாவானா?'' —பழ.

மானம்:

8. ''மானமுடை முடிமன்னவன்.....'' —கம்ப. 1373

முற்றும்:

9. ''அறனல்லது நல்லது மற்றறியான்
மறனல்லது பல்பணி மாறணியான்
திறனில்லாதா ராருயி ருஞ்சிதையான்
உறனல்லது பேரிசை யென்றுணர்வான்.'' —கம்ப. 7921

10. ''தேவர் நிலைகடவார் மேலோர் திறம்பிழையார்
நாவின் இரண்டுரையார் நன்கல் லவைபுரியார்
காவன் முறைதிறம்பார் காமச் செயல்பெருக்கார்
பூவலயங்காவல் புரியும் புரவலரே.'' —பிரமோத். பத்திரா. 20

39.5. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு[1]. (ஈ அடு)

உரைப்பகுதி:

அ) மணக்.: பொருள்வரும் வழி இயற்றலும்[2], அதனை அழியாமல் ஈட்டலும், அதனைச்சோர்வுபடாமல் காத்தலும், காத்த அதனை[3] வேண்டுவனவற்றிற்குப் பகுத்தலும் வல்லவன் அரசனாவான். எ. று. பகுத்தல்-யானை குதிரை முதலிய படைக்குக் கொடுத்து, அவையிற்றை உண்டாக்குதல்.[4] இது பண்டாரம் கூறுமாறு கூறிற்று.

---

1 'அரசன் அடையப்படாத பொருளைச் சம்பாதிக்க விரும்ப வேண்டும்; சம்பாதித்த பொருளை முயற்சியோடு காப்பாற்ற வேண்டும்; காப்பாற்றிய பொருளை விருத்தி செய்ய வேண்டும்; விருத்தி செய்த பொருளைச் சற்பாத்திரத்தில் செலவு செய்ய வேண்டும்' என்பது மநுதர்மம் சாஸ்திரம் (அத் 7)

2. 'பொருள் பெறுவழி முயறலும்' பாடபேதம் திருவே. ப. க. பதிப்பு.

3. 'காத்த அதனை - அதனை'; 4. அவையிற்றை உண்டாக்குதல் - அவற்றை உண்டாக்குதல்.

ஆ) *பரிதி.:* பொருளைத் தேடுதலும், பொருளை வளர்த்தலும், பொருளைக்காத்தலும், பொருளைவழங்குதலும். வல்லவன் அரசன் எ.று

இ) *பரிப.:* பொருள் பெறுவழி முயறலும், அதனை அழியாமல் ஈட்டலும், அதனைச் சோர்வுபடாமற் காத்தலும். அதனை வேண்டுவன வற்றுக்கு வகுத்தலும் வல்லவன் அரசன் ஆவான் எ-று.

வகுத்தலாவது யானை, குதிரை, படைக்குக் கொடுத்து, அவையிற்றை உண்டாக்குதலும், அரண் செய்யவும், படைக்கலன்கள் பண்ணுதல் முதலாயினவற்றுக்கும் கொடுத்தல் இவை எல்லாம் பண்டாரம் ஆதலின் ஒரு பொருளைப் பலவாக வகுத்தல் என்றார். இதுபண்டாரம் கூட்டுமாறு கூறிற்று.

ஈ) *காளி.:* அரசு நெறி வழுவாமல் ஆறில் ஒன்றாகிய அறநெறிப் பொருளும், மற்று இங்ஙனம் வரும் வழி அறிந்து உள ஆக்குதலும், இங்ஙனம் கூடிய பொருளைச் சோர்வுபடாமல் தமது ஆணையால் பாதுகாத்தலும், மற்று இங்ஙனம் காத்த பொருளை அகத்துளார்க்கும் புறத்துளார்க்கும் வகுக்கும் நெறி வழுவாமல் வகுத்தலும் செய்ய வல்லது யாது? மற்று அதுவே அரசு ஆவது எ.று.

உ) *பரிமேல்.:* தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை மேன்மேல் உளவாக்கலும், அங்ஙனம் வந்தவற்றை ஒருவழித் தொகுத்தலும், தொகுத்தவற்றைப் பிறர்கொள்ளாமல் காத்தலும், காத்தவற்றை அறம் பொருள் இன்பங்களின் பொருட்டு விடுத்தலும் வல்லவனே அரசன்.

ஈட்டல், காத்தல், வகுத்தல் என்றவற்றிற்கேற்ப இயற்றல் என்ப தற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது.[5] பொருள்களாவன மணி, பொன், நெல் முதலாயின. அவை வரும் வழிகளாவன பகைவரை அழித்தலும், திறைகோடலும்[6] தன்நாடு தலையளித்தலும்[7] முதலாயின. பிறன் என்றது பகைவர், கள்வர், சுற்றத்தார். வினை செய்வார் முதலாயினாரை. கடவுளர் அந்தணர் வறியோர் என்றிவர்க் கும், புகழிற்கும் கொடுத்தலை அறப்பொருட்டாகவும், யானை குதிரை படை நாடு அரண் என்றிவற்றிற்கும், பகையொடு கூடலின் பிரிக்கப்படுவார்க்கும், தன்னிற் பிரிதலின் கூட்டப்படுவார்க்கும்

---

5. காரி. காண்க. 6. திறை-வென்ற பகைவர் மாட்டுக்கொள்ளப்படும் கப்பப்பொருள்; வரியாகாது 7. தலையளித்தல் - காத்தலும் சிறப்புச் செய்தலும்

கொடுத்தலைப் பொருட்பொருட்டாகவும், மண்டபம் வாவி[8] செய் குன்று[9] இளமரக்கா[10] முதலிய செய்தற்கும், ஐம்புலன்களான் நுகர்வன வற்றிற்கும் கொடுத்தலை இன்பப் பொருட்டாகவும் கொள்க. இயற்றல் முதலிய தவறாமற் செய்தல் அரிதாகலின், வல்லது என்றார். இவை நான்குபாட்டானும் மாட்சியே கூறப்பட்டது.

காரி.: இயற்றல்–பொருள் வரும் வழிகளை மேன்மேல் உளவாக்கல், மற்ற மூன்றற்கும் அப்பொருளே செயப்படு பொருளாக வருமாதலால் ஈட்டல், காத்தல், வகுத்தல், என்பவைக்கு ஏற்ப, இயற்றல் என்பதற்குச்செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது என்றார். பதவுரையுள் அங்ஙனம் வந்தவற்றை என்றதனால் அறிக. இனிச் செயப்படுபொருள் வருவிப்பது 'சென்றவிடத்தாற் செலவிடா'[11] 'சுழலும் இசை வேண்டி'[12] என்ற குறள் உரைகளிலும் காண்க.

ஊ) கவிராசர்: தனக்குப் பொருள் வரும் வழிகளை மேன்மேலும் உண்டாக்கலும், வந்த பொருளை நல்லவிடத்திலே வைத்தலும், வைத்த பொருள்களைப் பிறர் கொள்ளாமல் காத்தலும், காத்த பொருள்களைத் தர்மார்த்த காமங்களாகிய அறம் பொருளின்பம் பொருட்டு விடுதலும் வல்லவன் அரசன் என்றவாறு.

ஏ) பழைய2: பொருள் வரும் வழியை உண்டாக்கலும், எல்லாப் பொருளும் சேரத்தொகுத்தலும், தொகுத்தபொருளைப் பிறர் கொள்ளாமல் காத்தலும், காத்த பொருளை அறம் பொருள் இன்பங் களின் செலவிடுத்தலும் வல்லவன் அரசன்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இயற்றல்' – 'பொருள் வரும்வழியை இயற்றுதல்' மணக்., பரிமேல்., கவிராசர், பழைய 2. 'பொருளைத்தேடுதல், பரிதி.; 'அறநெறிப்பொருளும் அவை வரும் வழியை உளவாக்குதல்' காளி.

'ஈட்டல்' – 'பொருளையழியாமல் ஈட்டல்' மணக்.; 'பொருளை வளர்த்தல்' பரிதி.; 'பொருளைச் சோர்வு படாமல் தமது ஆணையிற் பாதுகாத்தல்' காளி,; 'ஒருவழித் தொகுத்தல்' பரிமேல்.; 'வந்த பொருளை நல்ல இடத்திலே வைத்தல்' கவிராசர்; 'எல்லாப் பொருளும் சேரத் தொகுத்தல்' பழைய2.

---

8. வாவி-குளம்; 9. செய்குன்று-கட்டுமலை. 10. இளமரக்கா - நந்தவனம் அல்லது பூஞ்சோலை; 11. குறள் 422. 12. குறள் 777.

'காத்தல்' - 'சோர்வுபடாமல் காத்தல்' மணக்., காளி ; 'பிறர் கொள்ளாமற் காத்தல்', பரிமேல். கவிராசர், பழைய2.

'வகுத்தல்' –'வேண்டுவனவற்றிற்குப் பகுத்தல்' மணக்.:'பொருளை வழங்குதல்' பரிதி.: 'யானை குதிரைபடைக்குக் கொடுத்து அவை யிற்றை உண்டாக்குதல், அரண் செய்தல், படைக்கலன் பண்ணுதல் முதலாயின' பரிப்.; 'அகத்துளார்க்கும் புறத்துளார்க்கும் வகுக்கும் நெறி வழுவாமல் வகுத்தல்' காளி.; 'அறம் பொருளின்பங்களின் பொருட்டு விடுத்தல்' பரிமேல்., கவிராசர், பழைய2. இவற்றுள் 'அறம் பொருள் இன்பங்களின் பொருட்டுப்பகுத்தல்' என்னும் பரிமேலழகர் தரும் விளக்கம் பிறர்தரும் உரைகளைக் காட்டிலும் மிகச் சிறந்தது.

இராம. 'இயற்றல்' – 'நீதிபரிபாலனம் செய்தல்'. 'பொருள் வரும் வழிகளை யுண்டாக்குதல் என்பது பொருந்தாது;ஈட்டல் என்பதி லேயே இக்கருத்து அடங்கியுள்ளது; ஆதலால் இயற்றல் அரசியற் றலையே காட்டும்' எனப் பரிமேலழகரை மறுப்பர்.

தேவநேயர், 'இயற்றல்'– அரசியற்கும் பொருள் வருமிடங்களை வேண்டுமேல் அமைத்தல்'. பரிமேலழகர் 'பொருள்களாவன பொன் மணி, நெல் முதலாயின' என்பர். இவர் பொன் மணி முதலான இயற்கையான விளைபொருள்களும்' நெல் பயறு முதலான செயற்கை யான விளைபொருள்களும், ஆடை அணிகலம் முதலான செயற்கைப் பொருள்களுமாம் என்பர். அறம் பொருள் இன்பப்பொருட்டாகப் பகுத்தலை பழைமையும் புதுமையுங் கலந்திட்ட வகைகள் பல வற்றைக் குறிப்பிடுவர்.

ஜி வரத. 'இயற்றல்–உணவு பொருள் முதலியவற்றைப் பெருக்கு தல். வகுத்தல் காத்தல் பொருள்களை வேண்டும் இடங்களுக்கும் பங்கீடு செய்தல். காத்தல்–பொருள்களை அழுகாமலும் உலறாமலும் அழியாமற் பாதுகாப்பது' என்பர்.

மு.கோ. இயற்றல்–சட்டங்களை இயற்றலும் புதிய அறிவியல் உண்மைகளைக் காணலும் ஆம்.ஈட்டல்–புதிய அறிவியல் முறை களாற் பொருளீட்டல். வகுத்தல்—திட்டமிடுதல் என்பர். இவை இந்த நூற்றாண்டு அரசியற் போக்கு ஒட்டி எழுந்த கருத்துக்கள்.

சாமி. 'வகுத்தல்–அளவறிந்து செலவு செய்தல்' என்பர்.

இவற்றுள் இக்காலத்துச் சூழ்நிலையை ஒட்டி இயற்றலாவது ஆட்சிக்குத்தேவையான பொருள் வருவழிகளைக் கண்டு, உணவுப் பொருள்களை யுண்டாக்கிச் சட்டங்களைச் செய்து நீதிபரிபாலனம் செய்தலே இயற்றல் என்பதும், வகுத்தற்கு – அளவறிந்து – மக்கள் தேவைகளையறிந்து நாட்டு நலனுக்காகச் செலவழித்தலே என்பது மாய உரைகள் கருதத்தக்கவை.

இயற்றல் முதலியன ஒன்றற்கொன்று காரண காரியத் தொடர் புடையன. ஈட்டலும் துன்பம்; ஈட்டின ஒண்பொருளைக் காத்தலு மாங்கே கடுந்துன்பம் என்பவாதலின், இயற்றல் முதலிய நான்கும் ஒன்றின் ஒன்று ஆற்றுதற்கு அரிய ஆதலின், அவற்றை முயன்று முடிப்பவனே அரசன் என்பார்; 'வல்லது அரசு' என்றார். 'வல்லது' என்பது அதன் அருமை விளங்க நின்றது. 'அரசு' என்பதற்கேற்ப வல்லது என அஃறிணை முடிபேற்றது. இது சொல்லால் அஃறிணை யாயினும் பொருளால் உயர்திணையேயாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

இயற்றலும் வகுத்தலும்,

''பெற்ற தன்முத லாப்பின் பெறாததும்
சுற்றி வந்தடையும்படிச் சூழ்ந்து சென்று
உற்ற வான்பொருள் காத்துய ரீகையும்,
கற்ற வன்பிறர் காவல னாகுவான்'' –சூளா.,626

''மாற்றலர் தூதர் வந்து வருதிறை யளந்து நிற்ப
ஆற்றலர் வரவ வர்க்கே யானபொன் றுகில ளித்தே
ஏற்றநற் சனங்கட் கெல்லாம் இனிப்பொரு ளுவந்து வீசிக்
கோற்றொழில் நடத்தி மன்னன் குறைவின்றிச் செல்லு கின்றான்''
-உத.,187.

முற்றும்:

''செருவின் ஒட்டலரைக் கொன்று திறைகொண்டு நாடுகாத்துப்
பொருளினை ஈட்டிக் கள்வர் புல்லலர் சுற்றமாதி
பருகுதல் இலாமை காத்துப் பயிலற மாதி மூன்றின்
மருவுற விடுத்துச் செங்கோல் வளர்ப்பது மாட்சியாமே''
–விநா. அரசி.,45.

''அரசன் அடையப்படாத பொருளைச் சம்பாதிக்க விரும்ப வேண்டும்; சம்பாதித்த பொருளை முயற்சியோடு காப்பாற்ற

வேண்டும்; காப்பாற்றிய பொருளை விருத்தி செய்யவேண்டும்; விருத்தி செய்த பொருளைச் சற்பாத்திரத்தில் செலவு செய்ய வேண்டும்''

-மனு. அத்.. 7.

''பகையுடன் கிடந்த நிலைபிரி வழக்கினைப்
பொருத்தலும் பிரித்தலும் பொருபகை காட்டலும்''

-கல்லாடம்.

39. 6. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம். (க அசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: காண்கைக்கு எளியனாய்[1] கடுஞ்சொல் கூறுதலும் அல்லனாயின்[2] அம்மன்னனை உலகத்தார் உயர்த்துக் கூறுவர் எ.று.

இது மன்னன் உலகத்தார்மாட்டு ஒழுகும் திறம் கூறிற்று.

ஆ) பரிதி.: குடியானபேர் வந்தால் எளிதாகக் காணவும், இன் சொல் சொல்லவும் வல்லவனாகில் அவனை மிகுதியாகச் சொல்லும் வானாடு எ.று.

இ) பரிப்:. காண்டற்கு எளியனுமாய்க் கடுஞ்சொல் கூறுதலும் இலனாயின், அம்மன்னவனை உலகத்தார் உயர்த்துக் கூறுவர் எ—று.

இஃது உலகத்தார் மாட்டு ஒழுகும் திறன் கூறிற்று.

ஈ) காளி.: வேண்டுநர் வேண்டுழிக் காட்சிக்கு எளியனுமாய் மரபு டைய மக்கட்கு இன்சொலாளனும் ஆவானாகின், மற்று அம்மன்ன னையே இவ்வுலகத்து வாழ்வார் யாவரும் புகழ்ந்துரைப்பார் எ.று.

உ) பரிமேல்.: முறை வேண்டினார்க்கும் குறை வேண்டினார்க்கும் காண்டற்கு எளியனாய், யாவர்மாட்டும் கடுஞ்சொல்லன் அல்லனு மாயின், அம்மன்னனது நிலத்தை எல்லா நிலங்களினும் உயர்த்துக் கூறும் உலகம்.

முறைவேண்டினார், வலியரால் நலிவெய்தினார். குறைவேண்டி னார், வறுமையுற்று இரந்தார். காண்டற்கு எளிமையாவது பேரத் தாணிக்கண் அந்தணர் சான்றோர் உள்ளிட்டாரோடு செவ்வியுடை யனாயிருத்தல். கடுஞ்சொல் கேள்வியினும் வினையினும் கடியவாய

1 'காண்டற்கு எளியனுமாய்' பாடம் (வே.ப.க)

2 'இலனாயின்' பாடம்.(வே.ப.க)

சொல்,[3] நிலத்தை[4] மீக்கூறும். எனவே, மன்னனை மீக்கூறுதல் சொல்ல வேண்டாவாயிற்று. மீக்கூறுதல் இவன் காக்கின்ற நாடு. பசி பிணி பகை முதலிய இன்றி. யாவர்க்கும் பேரின்பம் தருதலின் தேவருலகினும் நன்று என்றல். உலகம் என்னும் எழுவாய் வருவிக்கப் பட்டது.

ஊ) *கவிராசர்:* சனங்கள் வந்து காண்பிறதற்கு எளிபனாய், கடின வார்த்தைகள் சொல்லாதவனுமாயிருக்கிற இராசாவினுடைய இராச்சியத்தை எல்லா இராச்சியங்களிலும் அதிகமென்று சொல்லு வார்களுலகத்தோர் என்றவாறு.

ஏ) *பழைய* 2: காண்பதற்கு எளியனாகவும், கடிய சொல்லன் அல்லனாகவும், ஆயின மன்னன் நிலம், எல்லா நிலத்தினும் அதிகம் என்று சொல்லப்படும்.

அம் மன்னன் நிலம், விளைவும் செல்வமும் உடைத்து என்று கூறுமென்க.

மல்லர்: அரசன் பிரசைகள் தன்னை எளிமையாகக் கண்டு பேசுவ தற்கு இடங்கொடுக்கிறவனுமாய். பிரசைகளைத் துன்புறுத்தும் வார்த் தைகளைச் சொல்லாதவனுமாய் இருந்தால் அவனுடைய சீர்மையை உலகம் உயர்த்திச் சொல்லும் ஏ.று.

அந்தக் குணங்களையுடைய அரசன் சீமையிலே கேள்வியுண்டு; கேள்வியுண்டானால் நீதியுண்டு; நீதியுண்டானால் செல்வம் உண்டு. ஆகையால் எல்லாரானுஞ் செல்வமான சீமை என்று சொல்லப்படும் என்பது கருத்து.

காட்சி—தரிசனம்; சொல்லன் அல்லன்-சொல்லாதவன்; ஏன்-ஆனால்; மீ-மிகுதி; கூறல்-சொல்லுதல்; மன்னன்-அரசன்

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'மன்னன் . ...எளியன்...கடுஞ்சொல்லன் அல்லனேல்(அம்மன்னனை) நிலம் மீக்கூறும்' எனக்கூட்டி 'எளியனும் இனியனுமாய அரசனை நிலவுலகம் அனைத்தும் புகழும்'எனப்பொருள் கண்டவர்கள் *மணக்., பரிதி., காளி., குழந்தை. ஜி.வரத. , சி. இ.*

---

3 கேள்வியின் கடியவாய சொல் — கொடுஞ்சொல், பயவில் சொல்லும் முதலாயின. இவைகளைப் பொய் குறளை கடுஞ்சொல் பயனில என்ற பாடற்பகுதியான் உணர லாம். வினையாற் கடிய வாய சொல்—சொல் பயக்கும் வினையாற் கொடிய சொல் எனப்பிரித்துக் கூட்டுக.

4 நிலம்— கோ.வ. பாடம்.

எளியன் அல்லனேல் அம்மன்னனது நிலத்தை (உலகம்) உயர்த்துக் கூறும் எனக்கூட்டி சில சொல் வருவித்து அத்தகைய மன்னனது நிலத்தை உயர்த்துப்பேசும் எனப்பொருள் கண்டவர்கள் *பரிமேலழகர், கவிராசர், பழைய 2 இராம, தேவநேயர், சபாபதி, சாமி.* இங்ஙனம் 'மன்னனை நாடுபுகழும்'என்பாரும், 'மன்னனது நாட்டை உலகம் புகழும்' என்பாரும் ஆக இருதிறத்தர் ஆசிரியர்கள்.

இவற்றுள் 'மன்னனை நாடு புகழும்' என்பது குறட்சொல்லமைதியை ஒட்டி, வேறு சொல் வருவிக்க வேண்டாது கொள்ளப்படும் நேரிய பொருள். மற்றொன்று 'நிலத்தை உலகம் புகழும்' என்ற பொருளோ மீக்கூறுதற்கு எழுவாயாக 'உலகம்[8] என்ற ஒரு சொல் வருவித்துரைத்தல் இன்றியமையாததாகிறது. எளியனாதலும், இன்சொல்லனாதலும் மன்னனியல்பாதலின் இவ்விருகுணங்களாலும் புகழ்தற்குரியவன் அரசனே எனல் எளிமையும் பொருத்தமுமான பொருள்கோளாகும். இத்தகைய மன்னன் ஆட்சி புரிவதால் அவன் நிலம் உலகத்தாரால் புகழப்படும் என்பதற்குப் புகழப்படுதலாகிய மன்னன் இயல்பை அவனால் ஆளப்பெறும் நிலத்திற்கு ஏற்றிய உபசார வழக்காகும் என்பது இப்பொருள் கொண்டவர் கருத்து. அவன் நாட்டு மக்கள் மன்னனைப் புகழ்தல் இயல்பான அச்சம் அன்பு இரண்டானும் ஆகலாம். அவன்நிலத்தை உலகம் புகழ்தல் அவனாட்சிக்குட்பட்ட சிறப்பினாலே என்பது பெறப்படுதலால் புகழ்ச்சி பொருள்சேர்புகழ்ச்சியாம் என்று கருதியிருப்பர் போலும். சிறந்தது கொள்க. நிலம் புகழப்படும் என்பார் பசி பிணி பகை நீங்கிப் புகழப் பெறும் என விளக்கமும் தருவர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

காட்சிக்கு எளியன்:

1. ''முறை வேண்டுபொழுதிற் பதனெளியோர்'' —*புறநா 35:15*
2. ''காட்சிக் கெளியனும் ஆம்'' —*அப்பர் கருகா.4*
3. ''கனியமுகம் அன்னகரு ணைக்குறையுள் காட்சிக்கு
எளியன்வட சொற்கடல் தமிழ்க்கடல் இகந்தோன்.''
—*திருவிளை, தடா–அவ.2*

'காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லன்'

4. ''இன்சொல் எண்பதத்தை யாகுமதிபெரும!'' —*புறநா.40:9*
5. ''. . . தங்கள் விழுக்குறை முறை சொல்வார்க்குத்
தடையறக் காட்சி நல்கித் தண்ணிய இன்சொல் காட்டி''—*விநா, அரசி44*

கடுஞ்சொல்லன் அல்லன்

6. ''வெஞ்சொலொன் றுரைக்க மாட்டா விடுசுடர் விளங்கு பூணோய்''
—சூளா.275

6.அ. ''வெச்சே னுஞ்சொல் ஒன்றுமேலடுத்த
மெய்ம்மை மேவினான் — சூளா.139

7. வைவன வந்த போதும் வசையில இனியகூறல் —கம்ப .4229

'மீக்கூறும் மன்னன் நிலம்'

8. ''நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்'' —புறம்.72:1

எதிர்மறை விளக்கம்:

9. ''அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து'' (இது எதிர்மறையான விளக்கம்-குறள்.565)

39.7. இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால் தான்கண் டனைத்திவ் உலகு.[1] (ஈஅஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: இனிய சொல்லோடே கொடுத்துத் தலையளி செய்ய வல்ல அரசனுக்குத் தன் ஏவலாலே இவ்வுலகம் தான்கண்டாற்போலும் தன்வசத்தே கிடக்கும் எ.று.

ஆ) பரிதி.: இன்சொல்லாலே குடியைக் காப்பானாகில் தன் சொல்லினாலே தானே உலகத்தைப் படைத்துத் தானே உலகத்தைக் காத்தற்கு ஒக்கும் எ.று.

இ) பரிப்.: இனிய சொல்லோடே கொடுத்துத் தலையளி செய்ய வல்லவனுக்குத் தன் ஏவலானே தான் கண்டாற்போல உலகம் தன் வசத்தே கிடக்கும் எ–று.

தலையளியாவது வரிசை கொடுத்தல். அவ்வரிசை பெற்றவர் அரசனுக்கு நல்லர் ஆதலானே, தாம் இருந்த இடம் எல்லாம் அரசன் இருந்தானாகக்கொண்டு, இராச காரியத்தைத் தப்பாமல் செய்வ ராதலால் தான் கண்டால் ஒக்கும் என்றது. இஃது அமாத்தியர்க்கு அரசன் செய்யும் திறன் கூறிற்று.

1. 'இன்சொலால்' 'தன் சொலால்' என்பனவற்றின் ஆல் உருபு 'அறத்தான்' என்றாற்போல உடனிகழ்ச்சிப் பொருளில் வந்துள்ளது.

ஈ) *காளி.:* இன்சொல்லாலே குடிகளைக் காப்பாற்றிப் பின் வந்து எய்தும் மக்கள் யாவர்க்கும் கீழ்ச்சொன்ன முறைமையானே இன் சொல்லால் சில வழங்குதலேயுமன்றி மற்றுத்தன் நெஞ்சினாலும் தண்ணளிசெய்யவல்ல அரசர்க்கு இங்ஙனம் சொல்லுகின்ற தனது சொல்நலத்தினாலே தான்படைத்த அத்தன்மைத்து இவ்வுலகு. எனவே மற்று இவ்வுலகில் வாழ்வார் யாவரும் தன்வசத்து ஒழுகுவர் எ.று.

உ) *பரிமேல்.:* இனிய சொல்லுடனே ஈதலைச்செய்து அளிக்க வல்ல அரசனுக்கு, இவ்வுலகம் தன் புகழோடு மேவித் தான் கருதிய அளவிற்றாம்.

இன்சொல், கேள்வியினும் வினையினும்[2] இனியவாய சொல், ஈதல், வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல். அளித்தல்–தன் பரிவாரத்தானும் பகைவரானும் நலிவு படாமல் காத்தல். இவை அரியவாகலின் வல்லாற்கு என்றும், அவன் மண்முழுதும் ஆளுமாகலின் இவ்வுலகு என்றும் கூறினார். கருதிய அளவிற்றாதல் கருதிய பொருளெல்லாம் சுரத்தல்.

ஊ) *கவிராசர்:* நல்ல வார்த்தைகளுடனே பொருளைக் கொடுத்து இரட்சிக்கவல்ல இராசாவுக்கு இந்த உலகம் அவன் கீர்த்தியைத் தான்சுமந்து கொண்டு அந்த இராசா வேண்டின வஸ்துக்களை யெல்லாம் கொடுக்குமென்றவாறு.

ஏ) *பழைய 2:* இனிய சொல்லுடனே ஈதலைச் செய்தளிக்கவல்ல அரசனுக்கு இவ்வுலகம் தன் புகழோடு மேவித் தான் கருதிய அளவிற்றாம்.

ஈந்தளிக்க வென்பது, ஈத்தளிக்கவென வல்லொற்றானது சொல் லால் தான் கண்டது–தன்புகழொடு தன் செல்வம் காண்டல். அனைத் திவ்வுலகு–அனையதிவ்வுலகு என்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இன்சொல்லும் ஈகையும், சிறப்புஞ்செய்யவல்ல அரசனுக்கு உலகம் வயப்பட்டு நடக்கும்' என்ற கருத்துடையவர் **மணக்குடவர்.**

'இன்சொல்லால் குடிகளைக் காப்பானாயின், உலகத்தைத் தானே படைத்துத் தானே காப்பது ஒக்கும்' என்ற *பரிதியுரை* சொற்கிடக்கை முறைக்கு அமைவுடையதாயில்லை'; வலிந்து கொள்ளின்

2. விளைவினும் என்றும் பாடமுண்டு.

'கண்டனைத்து' என்பதற்குத் தானே படைத்துத் தானே காப்பது என்பதுவரை கொள்ள வேண்டியிருக்கும் அன்றியும் குறளிலுள்ள 'ஈத்து' என்பது பொருளின்றி நிற்கும்.

பரிப்பெருமாள் உரை. கருத்துப்பொருளாகத் 'தலையளி பெற்றார் அரசனில்லாவிட்டாலும் அவனிருப்பது போலச் சிறிதும் சோர்வின்றிக் காவற்பணி நடத்துவர்' என்பது. அதுபொருந்தாது; குறளமைதி குடிமக்களுக்கே பொதுவகையில் அரசன் செய்யும் அளித்தலை யறிவிக்கிறது. அன்றியும் 'உலகு தான் கண்டனைத்து' என்பதற்குப் பொருளியைபு இன்றாகும்.

காளிங்கர், 'இன்சொல்லால் அளித்து- இன்சொல்லால் குடிகளைக் காப்பாற்றி, எல்லார்க்கும்-பின்வந்து எய்தும் மக்கள் யாவர்க்கும் இன்சொல்லுடனே சில வழங்குதலேயுமன்றி, அளித்து-மனத்தாலும் தண்ணளி செய்யவல்ல (அரசற்கு இவ்வுலகம்) தன் சொல்லால், தன்புகழோடு தான்கண்ட அனைத்து- தான்படைத்த அத்தன்மைத்து எனச் சொற்சிதைவு செய்திருப்பர்' என்பதையும். 'ஈத்தளித்து எல்லார்க்கு' எனப் பாடங்கொண்டிருப்பர் என்பதையும் அவருரையமைப்பு எண்ணச் செய்கிறது. ஊன்றி அவருரையைக் கண்டு ஏலுமேல் ஏற்க.

மணக்குடவர், 'தன்சொலால்' என்பதற்குத் 'தன் ஏவலாலே' என்பர். *பரிதியார்*, 'உலகத்தை வாய்ச்சொல்லாலேயே படைத்து' என்பதுபோலக் கருதுவர். 'தன்சொல் நலத்தினாலேயே' என்பர் *காளிங்கர், பரிமேலழகர், கவிராசர், பழைய2*. இவர்கள் உரை 'தன்புகழோடு மேவி அல்லது அதனைச் சுமந்துகொண்டு' என்னும்.

'யான் கண்டனையர் என் இளையரும்' என்புழிப்போல் தானிட்ட ஏவல் வழிநிற்கும் உலகம் என்பதே சிறந்த கருத்தாகும். இன் சொல்லாலும் ஈதலாலும் அளித்தலாலும் மக்கள் அனைவரும் இவன் வயப்பட்டு, மந்திரத்தாற் கட்டுண்ட மாநாகம் போல இவன்வழி நடப்பர் என்ற கருத்தமைத்த *மணக்.*, உரையே சிறந்தது. 'குலாலன் திகிரிவைத்த பசுமண்திரள்போல' அரசன் எண்ணத்தின் வழி இயங்குவது உலகம் என்பதும் இக்கருத்தை வலியுறுத்தும்.

இராம. 'ஈத்து அளிக்கவல்லான்-உதவிகொடுத்து (முறைதீர்த்து) காப்பாற்றவல்ல அரசன், தான் கண்டனைத்து-அவன் நினைத்ததை யெல்லாம் செய்யும்' என முன்னோர் உரைக்கு விளக்கம் தருவார்

போலச் சிறிது மாறுபடுவர். கருத்தாக, ஈத்து- குறைவேண்டினார்க்கு உடனே வேண்டியதைக்கொடுத்து. எனவும் அளித்து-முறை வேண்டினார்க்குப் பாதுகாப்பு அளித்துப் பயத்தைப் போக்கி எனவும் கூறுவர். இக்கருத்துரை புதியதொரு விளக்கமாகும். தேவநேயர் இன் சொல் குரலாலும் பொருளாலும் வினையாலும் இனியசொல்; ஈதல்- புலவர் பாணர் முதலியோர்க்குப் பரிசாகவும். கோயில் முதலிய வற்றிற்கு அறப்புறமாகவும் கொடுத்தல்; அளித்தல்-தன்னாலும் பரிசனத்தாலுமாக ஐவகைப் பயங்களையும் நீக்கிக் காத்தல் எனப் பாகுபடுத்தி விளக்குவர்.

மு. கோ. குடியரசியல்புரைப்பது இக்குறள் என வலிந்து பொருள் காண்பர்.

சாமி.,சபாபதி முதலியோர் தன்சொலால் என்பதற்குப் பரிமேலழகர் கவிராசர் இவர்களைஒட்டி 'அரசனது புகழோடே' என்பர். இவற்றுள் வலிந்து கோடலின்றிச் சொற்கிடக்கை முறையில் எழுந்த உரைகள் இனியன ஆம்.

'வல்லாற்கு' என்றது ஈபவர் கொடைச் செருக்கால் அல்லது கொடையுரிமையால் கொடிய சொல்லுஞ்செயலும் உடையராதலுங் கூடும். அதனையும் மாற்றும் வன்மையுடையார்க்கு என்பது விளக்கிய வாறு.'சொல்லால்' என்றது செயலும் மிகை என்பதாம்.

ஒப்புமைப்பகுதி

இன்சொல்:

1. ''வெச்சே னுஞ்சொல் ஒன்றுமே விடுத்த
மெய்ம்மை மேன்னான்'' — சூளா 139

இன்சொலால் ஈத்தளிக்க வல்லான்:

2. ''செய்வன செய்தல், யாண்டுந் தீயன சிந்தி யாமல்
வைவனவந்த போதும் வசையில வினிய கூறன்
மெய்சொலல் வழங்கல்.....'' —கம்ப. 4229

2. அ. ''ஈயுநர் இன்மொழிக் கம்பலும்'' —பெருங்2,2:75

2. ஆ. ''இன்னுரை அமிழ்தமொடு மன்னவன் ஈத்து —பெருங்4.3:31

தன்சொல்—தன்ஏவல்

3. ..... மன்னும்
கொதிதவழ் வேலினான்றன் குறிப்பொடு கூடிற்றன்றோ'' —சூளா297

முற்றும்:

4. இனிய சொல்லினன் ஈகையன் எண்ணினன்
வினையன் தூயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதி நெறிகட வான்எனில்
அனைய மன்னற்கு அழிவும்உண் டாங்கொலோ''—கம்ப:மந்தரை18

39.8. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு) இறைஎன்று வைக்கப் படும். (ஈ-அ அ)

உரைப்பகுதி:

அ) மணக்., பரிப்.: குற்றஞ் செய்தாரை அதற்குச் செய்யும் முறைமை தப்பாமற்செய்து, எல்லாவுயிரையும் காத்தலைச் செய்கின்ற அரசன்[1], மனிதர்க்கு நாயகன் என்று எண்ணப்படுவான் எ.று.

ஆ) பரிதி.: செங்கோல் முறைமை செய்து உலகங்காக்கும் அரசன் உலகத்தை இரட்சிக்கிற பரமேஸ்வரன் என்று எண்ணப்படும் எ. று.

இ. பரிப்:7 குற்றம் செய்தாரை அதற்குச் செய்யும் முறை தப்பாமல் செய்து எல்லா உயிரையும் காத்தல் செய்கின்ற மன்னவன் மக்களுக்கு நாயகன் என்று எண்ணப்படும் எ-று.

இ) பரிப்.: குற்றம் செய்தாரை அதற்குச் செய்யும் முறை தப்பாமல் செய்து எல்லா உயிரையும் காத்தல் செய்கின்ற மன்னவன் மக்களுக்கு நாயகன் என்று எண்ணப்படும். எ—று.

ஈ) காளி,: அளித்தலும் செறுத்தலும்[2] ஆகிய செய்தியின் கூறு பாடு அறிந்து, மற்று, அவரவர்க்குத் தக்காங்குச் செய்யு முறை வழுவாமல் செய்து, மற்று இங்ஙனம் காத்தலைப் புரியும் மன்னவன் யாவன்?[3] அவன் உலகத்து மக்கள் யாவர்க்கும் இறையவன் என்று முன் வைத்து எண்ணப்படும் எ.று.

உ) பரிமேல்.: தான் முறை செய்து பிறர் நலியாமல் காத்தலை யும் செய்யும் அரசன். பிறப்பான் மகனேயாயினும், செயலான் மக்கட்குக் கடவுள் என்று வேறு வைக்கப்படும்.

முறை அறநூலும் நீதிநூலும்[4] சொல்லும் நெறி. பிறர் என்றது மேற்

1. 'மன்னவன்' பாடம்(வே.ப.க.)
2. செறுத்தல்-கோபித்தல்.
3 'யார்' பாடம் (வே.ப.க.)
4. அறநூல்-எண்ணப்படுவனவும் இயற்றப்படுவனவும் ஆய இயல்பான அறங்களைச் சொல்லும் நூல்கள்,- நீதிநூல் காலம் இடம் இவைகட்கு ஏற்றவாறு இவ்வாறு செய்க என விதிக்கும் நூல்.

சொல்லியாரை. வேறுவைத்தல் மக்களிற் பிரித்து உயர்த்து வைத்தல்.

ஊ) **கவிராசர்:** தான் நியாயம் தப்பாமல் நடத்திப் பிறர் நலிய வொட்டாமற்காக்கப்பட்ட இராசா மனுஷனே யானாலுந் தெய்வ மென்று சொல்லப்படும் என்றவாறு.

ஏ) **பழைய 2:** தான் செங்கோல் செலுத்திப் பிறர் வருந்தாமல் காத்து நிற்கும் மன்னன் மனிதனாயினும் கடவுள் என்று புகழ்ந்து வேறாக வைக்கப்படும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்;

'முறைசெய்து'-'குற்றஞ்செய்தாரை அதற்குச்செய்யும் முறைமை தப்பாமற் செய்து' **மணக்.**; செங்கோல் முறைமை செய்து **பரிதி.**; 'அறநூலும் நீதிநூலும் சொல்லும் நெறிப்படிச் செய்து' **பரிமேல்**; 'அளித்தலும் செறுத்தலுமாகிய செய்தியின் கூறுபாடு அறிந்து, மற்று அவரவர்க்குத் தக்காங்கு செய்யும் முறைமை வழுவாமல் செய்து' **காளி.**; 'தான் நியாயந்தப்பாமல் நடத்தி' **கவிராசர்.** 'தான் செங்கோல் செலுத்தி' **பழைய2.** இவற்றுள் **காளிங்கர்** உரை தெளிவும் சிறப்பும் உடையது காண்க.

'மக்கட்கு இறை' – 'மனிதர்க்கு நாயகன்' **மணக்.**; 'உலகத்தை யிரட்சிக்கிற பரமேஸ்வரன்' **பரிதி.**; 'உலகத்துமக்கள் யாவர்க்கும் இறைவன்' **காளி.**; பிறப்பால் மகனேயாயினும் செயலால் மக்கட்குக் கடவுள்' **பரிமேல்., கவிராசர்; பழைய2.**

பிற்கால உரைகளில், **இராம.** 'முறைசெய்து–தாமாகவே தரமறிந்து நீதி நடத்தி'. **குழந்தை.** 'குற்றஞ்செய்தாரைத் தண்டித்து முறைசெய்து'. **தேவநேயர்,** 'நடுநிலையாகத் தீர்ப்புச் செய்து'. **மு.கோ.** 'வேண்டிய வேண்டியார்க்கு வேண்டியாங்கு எய்தச் செய்தல் தன் மக்கள் என முறை கொண்டாடிச் செய்தல்'. **சி.இ.** முதலிய ஏனையோர் உரைகள் பரிமேலழகரை ஒட்டியன.

இறை, என்பதற்கு 'நாயகன்' என உரை காண்பாரும், 'கடவுள்,' 'தெய்வம்' என உரை காண்பாரும். ஆக இருவகையர் ஆசிரியர்கள். 'இறை என்று வைக்கப்படும்' என்பதால் மரபு வழி மன்னனாயினும் அக்கால மரபுக்கேற்ப, அவனாற்றும் முறைகண்டு மக்கள் தத்தம் தலைவனாக ஏற்கின்றனர் என்பது சிறந்த கருத்தாகலாம்.

முறைசெய்தல் —இவர் உற்றார், இவரயலார், இவர் நண்பினர்,

இவர் பகைவர் என்ற வேற்றுமை கருதாது, ஒப்ப நாடி நீதிவழங்குதல். காப்பாற்றுதல் — தன்னாலும் தன் பரிசனத்தாலும், கள்வராலும், பகைவராலும், விலங்காலும் தீமை நேராத வண்ணம் பாதுகாத்தல். இறை - அரசனாகவே பிறந்தவனாயினும் மக்கள் ஒத்துக்கொண்ட மன்னனாவது முறையும் காத்தலும் பொருந்தியபோது தான் என்பது விளக்கியவாறு.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முறை செய்து:

1. ''அரசுமுறை செய்க'' ஐங்.8. 2.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்:

2. ''குடிமிசை வெய்ய கோலும் கூற்றமும் பிணியும் நீர்சூழ்
படிமிசை யில்லையாயின் வானுள்யார் பயிறும் என்பார்'' —சூளா. 269

2. அ. முறையறிந் தவாவை நீக்கி முனிவுழி முனிந்து வெஃகும்
இறையறிந் துயிர்க்கு நல்கு மிசைகெழு வேந்தன் காக்க'' —கம்ப.51

3. ''செய்வன செய்தல் யாண்டுந் தீயன சிந்தி யாமல்'' —கம்ப.4229

இறை என்று வைக்கப்படும்:

4. ''ஒருமையாற் றுன்ப மெய்தும் ஒருவனை உம்மை யாலே
திருமையான் முயங்குஞ் செல்வச் செருக்கொடு திளைப்ப நோக்கி
இருமையும் ஒருமையாலே யியற்றலின் இறைவன் போலப்
பெருமையை யுடைய தெய்வம் பிறிதினி இல்லை யன்றே'' சூளா.267

5. ''.....யோகி னெய்திய
சக்கரத் தவனெனத் தமிய னாயினான்.''

6. பூவறு பொலன்கழற் பொருவில் மன்னவன்
காவலி னாணைசெய்க டவுளாமென'' கம்ப.1403

7. ''குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்—அறவோர்க்கு
அடிகளே தெய்வம் அனைவோர்க்கும் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை.'' —நீதிநெறி.27.

39.9. செவிகைப்பச்[1] சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. (ஙஅகூ)

1. இது பண்பு புலன்மாறிவந்த உபசார வழக்கு.

உரைப்பகுதி:

அ) *மணக்.:* தன் செவி வெறுக்கும்படியாகப் பிறர் செய்த குற்றங்களைக் கேட்டு வைத்தும், அதனைப் பொறுக்கவல்ல குணமுடைய வேந்தனது குடைக் கீழே உலகு தங்கும் எ.று

சொற்பொறுக்கும் என்பதற்குப் புரோகிதர் தன்னிடத்துச் சொல்லுஞ்[2] சொற்களைப் பொறுக்கவல்ல என்பாரும் உளர்.

ஆ) *பரிதி.:* பொறுத்தற்கரிய சொல்லைக் குடியானபேர் வாசலிற் பதினெட்டுப்பேர்[3] சொன்னாலும் குற்றம் பாராட்டாமல் பொறுப்பான் குடை நிழலிலே இராச்சியம் அடங்கும் எ.று.

இ) *பரிப்.:* தன் செவி வெறுக்கும் படியாகப் பிறர்செய்த குற்றங்களைக் கேட்டு வைத்தும் அதனைப் பொறுக்கவல்ல குணமுடைய வேந்தனது குடைநிழற்கீழே கிடக்கும் உலகு எ—று.

வேறு ஒரு நிழல் தேடாது என்று ஆயிற்று. இஃது அமாத்தியர் குற்றம் செய்தார் என்று பலரும் சொல்லுங்கால், பலவாற்றானும் பொறுக்க வேண்டும் என்றது. அன்றியும் மந்திரி, புரோகிதர் அடர்த்துச் சொல்லும் சொற்களைப் பொறுக்க வேண்டும் என்பாரும் உளர்.

ஈ) *காளி.:* நெறி அல்ல செய்வோர் ஆகிய மறமக்களும் கொடுங்கோன்மை செய்வோர் ஆகிய மறமன்னரும் தனது செவிகைப்பச் சொல்லுவன எல்லாம் வரையாது பொறுத்து ஒழுகும் மரபுடை மன்னவன் யாவன்? மற்று அவனது குடைநிழற் கீழ்த்தங்கும் இவ்வுலகு. எனவே இவ்வுலகில் வாழும் உயிரெல்லாம் ஒரு வெம்மையுறாது மற்றவன் தண்ணளி நிழற்கீழ் நிலைபெறும் என்பது பொருள் எ.று.

இதனான் மற்று இவனது பொறை முனிவரைப் போலன்று; மற்று எங்ஙனமோ[4] எனின் அப்பொழுதைக்கு விரையாது நின்று அதனை ஓர்ந்துணர்ந்து பின்செறுப்போரைச் செறுத்தும், பொறுப்போரைப் பொறுத்தும், இங்ஙனம் ஒழுகுதலே ஆசிரியர் கருத்து என்றவாறு.

இனி மற்று அரசியல் பொருளியல் சிறந்த செல்வமானது கல்விச்

---

2. 'மந்திரி புரோகிதர் அடர்த்துச் சொல்லுஞ்' பாடம் (வே ப.க.)
3. இது பள்ளும் பறையும் பதினெட்டுச் சாதிகளும் என்ற வட்டார வழக்குப்பற்றி எழுந்த கருத்து.
4. 'மற்று அஃது எங்ஙனமோ' பாடம் (வே. ப. க.)

செல்வம் ஆதலான் மற்று இதன்பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்[5].

உ) *பரிமேல்.:* இடிக்கும் துணையாயினார் சொற்களைத் தன்செவி பொறாதாகவும், விளைவு நோக்கிப் பொறுக்கும் பண்புடைய அரசனது. குடை நிழற்கண்ணே தங்கும் உலகம்.

செவிகைப்ப என்றதற்கு ஏற்ப இடிக்கும் துணையார்[6] என்பது வருவிக்கப்பட்டது. நாவின் புலத்தைச் செவிமேல் ஏற்றிக் கைப்ப[7] என்றார். பண்புடைமை, விசேட உணர்வினனாதல். அறநீதிகளில்[8] தவறாமையின் மண்முழுதும் தானேயாளும் என்பதாம்.

ஊ) *கவிராசர்:* தன்னை அதட்டிச் சொல்லப்பட்ட சினேகிதருடைய சொற்களைத் தன்செவி பொறாததாகச் சொன்னாலும் அதனுடைய பலனை யறிந்து பொறுக்கப்பட்ட குணமுடைய இராசனிவனது குடை நிழலின் கீழே யுலகம் தங்கியிருக்கும் என்றவாறு.

ஏ) *பழைய2:* செவிக்குக் கசக்கும் சொற்களைப் பொறுக்கும் பண்புடைய அரசனுடைய குடைநிழலின்கீழ் அடங்கிவாழும் இவ் வுலகம்.

செவிக்குக் கசக்கும் சொல்- இடித்துச்சொல்லும் பெரியவர்சொல். நீதியால் மண் முழுதும் ஆளும் என்பதாம்.

மல்லர்: என்பது காதுக்குக் கசப்பாயிருக்கிற சொற்களைப் பொறுக்கத் தக்க குணமுள்ள அரசருடைய குடைக்குக்கீழ் உலகந்தங்கும் எ. று.

அரசன் ஒரு காரியம் செய்யவேண்டும் என்று இருக்கிறபோது மந்திரிமார் இது அநியாயம்; இது தாறுமாறு; இது செய்யலாகாது என்று சொன்னால் அரசனுடைய காதுக்குப் பொருந்தாத சொல்லா யிருக்குமே, இப்படிப்பட்ட சொற்களைப் பொறுமையோடு கேட்டுக் கொண்டு, அதற்குத் தக நடக்கிற அரசனிடத்திலே புண்ணியமும் நீதியும் நீங்காமல் நிற்பதால் அவனுக்கு ஒரு விக்கினமும்[9] வாராது

---

5 பத்தாவதாக இக்குறளைக் கொண்டமையின் இவ்வாறு கோற்றுவாய் செய்துள்ளார்.

6. இடிக்குந்துணையாயினார்- அரசன் கூறற நேர்ந்தழி வற்புறுத்திக் கூறி அவனைத் திருத்தும் துணையாக இருப்பவர்கள். அவர் அமாத்தியர், அந்தணர், ஆசிரியன் போல்வார் என்க.

7. நாவின்புலம்- கைத்தல், அதனை செவியின் புலமாக மாற்றிச் சொன்னது கண்ணிற் சொலச் செவியினோக்கும் இறைமாட்சி 'நாற்றங் கேட்டலும் தின்ன நயப்பது' என வரும் இலக்கிய வழக்கான் அறிக.

8. அறனீதி- அறநூலிலும், நீதிநூலிலும் என்க. உம்மைத்தொகை.

9. விக்கினம்- இடையூறு.

என்பது. ஆகையால், வேண்டுமானால், உலகம் எல்லாம் ஆளுவான் என்பது கருத்து.

கைத்தல்-கசத்தல். பண்பு-குணம். வேந்தன்-அரசன். கவிகை-குடை, உலகு- உலகம். போகம் -கலவி.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'சொல்'- 'பிறர்செய்த குற்றங்களைக் குறிக்கும் சொல்'; 'புரோகிதர் தன்னிடத்துச் சொல்லும் சொல் என்பாரும் உளர்' மணக்.; குடியான பேர் வாசலிற் பதினெட்டுப்பேர் நின்று சொல்லும் சொல்' பரிதி.; இது 'பள்ளும் பறையும் பதினெட்டுச் சாதிகளும்' என்று வட்டார வழக்குப்பற்றி எழுந்த கருத்து. 'அமாத்தியர் குற்றஞ் செய்தார்' என்று பலரும் சொல்லுஞ்சொல் பரிப்.; நெறியல்ல செய்வோர் ஆகிய மறமக்களும், கொடுங்கோன்மை செய்வோராகிய மறமன்னர்களும் தன் செவிகைப்பச் சொல்லும் சொல்' காளி ; 'இடிக்குந்துணையாயினார் சொற்கள்' பரிமேல்.; 'தம்மைத் தட்டிச் சொல்லப்பட்ட சினேகிதருடைய சொற்கள்' கவிராசர், இராம.'செவி கசக்கும் சொல்' பழைய2, 'பிறர் கூறும் சொல், குழந்தை, 'இடித் துரைக்கும் நல்லமைச்சர் சொல்' தேவநேயர், 'தன் ஆட்சியைக் குறைகூறிப்பேசும் சொல்' ஜி.வரத.; 'உலகச் சான்றோரும் எதிர்க் கட்சியாரும் சொல்கின்ற சொல்' மு. கோ. 'மக்களின் குறைகளும் அமைச்சர்களின் அறிவுரைகளும்' சி.இ.; மந்திரி முதலானோர் கண்டித்துப் புத்திசொல்லும் சொல்' ஈ.சபாபதி.

இவ்வுரைகள் 'யாருடைய சொல்' என்பதை விளக்குவதிலே மாறுபடுகின்றன. இவற்றுள், பரிமேலழகர் உரை இடிப்பாரையில்லாத ஏமராமன்னன்' என்ற குறட் கருத்தையும், கவிராசர் உரை 'மிகுதிக்கண் மேற்சென்றிடித்தற் பொருட்டு' என்ற குறட்கருத்தை யும், மு. கோ. உரை இன்றைய அரசியலமைப்பையும் எண்ணி எழுந்தவை. பரிப்பெருமாள் கூற்று, 'தெளிந்தான்கண் ஐயுறவு இடும்பை தரும் என்பதை எண்ணி எழுதியதாகும்.

சிலவுரைகள் பிறர் குற்றங்கூற அவற்றை அரசன் பொறுத்தலை யும், சில உரைகள் அரசன் குற்றங்களை அவன் முன்னேயே குறை காணும் இழிநோக்குடன் சொல்லப் பொறுத்தலையும், சில உரைகள் இடித்துரைத்துத் திருத்தும் நன்னோக்குடன் சொல்ல அதனைப் பொறுத்தலையும் கருதுகின்றன. இவற்றுள் கட்சி மாறுபாட்டாலும், குறைகாணும் நோக்கோடும் கூறப்பெறும் தன்குறைகளையும் கேட்டுப்

பொறுத்துக் கொள்ளுதல் சிறந்ததாகும். இந்த வகையில் காளிங்கர் உரை முன்னிற்கிறது. பிற்கால உரைகள் பழைமையை ஒட்டி எழுந்தனவே யாதலால் வேற்றுமையின்று எனலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடைவேந்தன்:

1. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும்'' —குறள்.448

2. ''மாறிநின் றவரையும் வணக்கின் அல்லது
சீறிநின் றவருயிர் செகுப்ப தில்லையே'' —சூளா.54

3. ''கொதிநுனைப் பகழியான் குறிப்பினல்லதொன்று
இதுநமக் கிசைக்கென வெண்ணு மெண்ணிலா
நொதுமலர் வடுவுறா நுவற்சி யானபின்
அதுவவன் பகுதிதன் னமைதி வண்ணமே'' —சூளா.58

4. ''வடுவற இடித்துச் சொல்வார் வன்மொழி பொறுத்தல் வேண்டும்'' —விநா.அரசி.44

கவிகைக் கீழ்த்தங்கும் உலகு:

5. ''முற்றுநீர் வளாக மெல்லாம் முழுதுகூ னிழற்று மூரி
ஒற்றைவெண் குடையி னீழல் உலகுகண் படுப்ப ஓம்பி'' சூளா.69

6. ''சூழுநீ ருலகெலாந் தொழுது தன்னடி
நீழலே நிரந்துகண் படுக்குந் தன்மையின்'' —சூளா.112.

39 10. கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும் உடையானாம் வேந்தர்க் கொளி (நகூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: கொடுத்தலும், தலையளி செய்தலும், செங்கோன்மையும், குடிகளைப் பாதுகாத்தலும்[1], என்று சொல்லப்படுகின்ற இந்நான்கினையும் உடையவன் வேந்தர்க்கெல்லாம் விளக்காம் எ.று.

கொடுத்தல் - தளர்ந்த குடிக்கு விதை ஏர் முதலியன கொடுத்தல்;

1. 'ஓம்பலும்' பாடம். வே.ப.க.

அளித்தல் - அவரிடத்துக்[2] கொள்ளும் கடமையைத் தளர்ச்சி பார்த்து விட்டு வைத்துப் பின்பு கோடல்[3]. செங்கோன்மை — கொள்ளும் முறையைக் குறையக் கொள்ளாமை; குடியோம்பல்—தளர்ந்த குடிக்கு இறை கழித்தல்[4]. இது குடிக்கு அரசன் செய்யும் திறம் கூறிற்று.

ஆ) *பரிதி.*: கொடையும், செங்கோல் நீதியும் குடியைப் பார்த்துக் காத்தலும், கருணையும் இந்த நாலுகாரியமுள்ளவன் இராசசூரியன் எ.று.

இ) *பரிப.*: கொடுத்தலும், தலையளி செய்தலும், செங்கோன்மையும் குடிகளை ஓம்புதலும், என்று சொல்லுகின்ற நான்கினையும் உடையவன் வேந்தர்க்கு எல்லாம் விளக்கு ஆம் எ-று.

கொடுத்தலாவது தளர்ந்த குடிக்கு விதையும் எரு முதலியனவும் கொடுத்தல். அளித்தலாவது அவரைக் கொள்ளும் கடமையைத் தளர்ச்சி பார்த்து இட்டுவைத்துப் பின்பு முதல் உண்டானால் கோடல். செங்கோன்மையாவது கொள்ளும் முறைமைஒழியக் கொள்ளாமை. குடிஓம்பலாவது - தளர்ந்த குடிக்கு இறையை இழிப்பித்தல். இது குடிக்கு அரசன் செய்யும் திறன் கூறிற்று.

ஈ) *காளி.*: அனைவர்க்கும் பொருள் வழங்கும் கைவழக்கமும் அளிக்கத்தகுவார்-மாட்டு நிகழும் தண்ணளியும், அவரவர் குற்றமும் குணமும் தெரிந்து நடாத்தும் செங்கோலும், தனது குடைநிழற்கீழ் வாழும் குடிகளைப் பாதுகாக்கும் குறிக்கோளும் என்று சொல்லப்பட்ட இந்நான்கும் உடையவன் யாவன்? மற்று அவனே அரசர்க்கு எல்லாம் அருக்கன் எ.று.

உ) *பரிமேல்.*: வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தலும், யாவர்க்கும்[5] தலையளி செய்தலும், முறை செய்தலும், தளர்ந்த குடிகளைப் பேணலுமாகிய, இந்நான்கு செயலையும் உடையவன். வேந்தர்க்கு எல்லாம் விளக்காம்.

தலையளி - முகமலர்ந்தினிய கூறல். செவ்விய கோல் போறலின், செங்கோல்[6] எனப்பட்டது. குடியோம்பல் என எடுத்துக் கூறினமையால் தளர்ச்சி பெற்றாம்; அஃதாவது, ஆறிலொன்றாய பொருள் தன்னையும் வறுமை நீங்கியவழிக் கொள்ளல் வேண்டின்

2. 'அவரை' பாடம் வே.ப.க.
3. 'பின்புமுதல் உண்டானால் கோடல்' பாடம். வே.ப.க. இழிப்பித்தல்' பாடம் வே.ப.க. 5.யாவர்மாட்டும்' பாடம்.
6. செங்கோல் உவம ஆகுபெயர், காரி ரத்தின கவிராயர் செய்த நுண்பொருள் மாலை காண்க.

அவ்வாறு கோடலும், இழத்தல்வேண்டின் இழத்தலுமாம். சாதிமுழுதும் விளக்கலின் ' விளக்கு ' என்றார்[7]. ஒளி ஆகுபெயர்[8]. இவை ஐந்து பாட்டானும் மாட்சியும் பயனும் உடன் கூறப்பட்டன[9].

காரி.: முறை செவ்வியகோல் போறலின் செங்கோல் என உவமையின் பெயர் பொருள் மேல் நின்றது. உவமையாகு பெயர். ஒளி—விளக்கு. செங்கோன்மையாவது அரசனால் செய்யப்படும் முறையினது தன்மை; அம்முறை ஒருபாற்கோடாது செவ்விய கோல் போறலின் செங்கோலெனப்பட்டது. வடநூலாரும் தண்டம் என்றார்[10]. கொடுங்கோன்மையாவது அம்முறையினது கோணு தற்றன்மை; ஈண்டும்உவமையின் பெயர் பொருள் மேலாயிற்று[11].

ஊ) *கவிராசர்*: வேண்டினவர்கள் வேண்டின வஸ்துக்களைக் கொடுத்தலும், எல்லார்க்கும் தயைசெய்தலும், முறைமை தப்பாமல் நடக்கிறதும், தளர்ந்த குடிகளைப் பேணுதலும் இந்த நான்கு குணங்களும் உடையவன் இராசாக்களுக்கெல்லாம் விளக்காம் என்றவாறு.

ஏ) *பழைய 2*: வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தலும், யாவர்க்கும் தலையளியாகிய கருணை செய்தலும் செங்கோல் செலுத்திக் குடிகளைப் புரந்து காத்தலும் ஆகிய இந்நான்கு செயலையும் உடையவன் வேந்தர்க்கு எல்லாம் ளிளக்கமாம்.

செங்கோல்-இறைமுறை வழுவாது நடத்தல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

கொடை முதலியநான்கிற்கும் *மணக்குடவர்* தரும் விளக்கம் சிறந்தது. *இராமலிங்கனார்* 'குடியோம்பல்-குடிகளின் உடலுக்கும் உடைமைக்கும் பாதுகாப்பளித்தல்' என்பர்- 'வேந்தர்க்கு ஒளி என்பதற்கு ஏனையோர் வேந்தர்களுக்குள் ஒளி பெற்றவனாவன்'

7. 'ஒளி என்றார்' பாடம்.
8. ஒளி—ஒளி என்னும் பண்புப்பெயர் அதனையுடைய விளக்கிற் காதலால் பண்பாகு பெயர்.
9. ஐந்து பாட்டானும் கூறப்பட்ட மாட்சிகள் காட்சிக்கு எளியனாதலும், கடுஞ்சொல்லன் அல்லனாதலும், இன்சொலாலீத்தளிக்க வல்லனாதலும், முறைசெய்து காத்தலும், சொற்பொறுத்தலும் ஆகிய இவைகளாம்.
   பயன்கள், உலகத்தால் மீக்கூறப்படுதலும், இவ்வுலகு தான் கண்டனைத்தாய்த் தன்னாணை வழி நடத்தலும், மக்கட்கு இறையென்று வைக்கப்படுதலும், உலகு தன் குடையின் நிழலிற்றங்கப் பெறுதலும், வேந்தரனைவர்க்கும் ஒளியாக மதிக்கப் படுதலுமாம்.
10. அதி. 55. செங்கோன்மை.
11. அதி. 56. கொடுங்கோன்மை.

என்றனர். இவர் அரச இனத்திற்கே கலங்கரை விளக்கம் போல்வர் என்பர்.

'கொடை' —'தளர்ந்த குடிக்கு வேண்டுவன கொடுத்தல்' என்பர் குழந்தை. இதனினும், மிடிமையைப் போக்கக் கூடியதும், உழைத்துப் பொருளாதாரத்தை உயர்த்துவதுமான ஏர் கலப்பை முதலியன கொடுத்தல் என்பது எவ்வகையினும் சிறந்த உரையாம்.

'குடிஓம்பல்' —'வரி விலக்களித்தல், என்பர் குழந்தை. ஜி.வரத. கொடை இரக்கத்தால் கொடுப்பது.; அளி—எவ்வுயிர்க்கும் இரங்கல், குடி ஓம்பல் -தன் குடி மக்களையே பேணல்' என்பர். கொடை அளி என்பவற்றிற்குப் பெரிதும் வேறுபாடின்மை காண்க.

'உண்ணான் ஒளிநிறாஅன்' என்பது போல ஒளி என்றது அகலாது அணுகாது தீக்காய்வார் போல யாவரையும் ஒழுகச்செய்யும் அச்சமும் அன்புங்கலந்த ஒருவகைத்தேசு. ஆகவே இந்நான்கும் உடைய அரசனைப் பகைவர் செய்யக்கிடந்ததொரு தீமையின்மை யால் அவர்கட்கெல்லாம் ஒளியாவான் என்பதாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

குடியோம்பல்:

1. ''சாலக்குடியோம்பல் வல்லான் அரசன்'' திரிகடுகம்.13.

செங்கோல் குடியோம்பல்

2. ''பால்வளை பரந்து மேயும் படுகடல் வளாக மெல்லாம்
கோல்வளை யாமற் காத்துன் குடைநிழற் றுஞ்ச நோக்கி
நூல்விளைந் தனைய நுண்சொற் புலவரோ டறத்தை யோம்பின்
மேல்விளையாத இன்பம் வேந்த மற்றில்லை கண்டாய்'' சீவ.2906

அளிசெங்கோல் குடியோம்பல்:

3. ''ஆதிம் மதியும் மருளும்மற னும்ம மைவும்
ஏதின் மாடல்வீ ரமுமீகையு மெண்ணில் யாவும்
நீதிந் நிலையும் மிவை நேமியி னோர்க்கு நின்ற
பாதிம் முழுதும் மிவற்கேபணி கேட்ப மன்னோ'' கம்ப.169

முற்றும்:

4. ''குடிதளர் வுற்றகாலைக் கொள்பொருள் ஆறில் ஒன்றும்
விடுவது செய்தும் தங்கள் விழுக்குமுறைசொல் வார்க்குத்
தடையறக் காட்சி நல்கித் தண்ணிய இன்சொல்காட்டி
வடுவற இடித்துச் சொல்வார் வன்மொழி பொறுத்தல் வேண்டும்''
—விநா.அரசி.44

பணிடைய உரையாசிரியர்களின் குறள்வைப்புமுறை

	படைகுடி	அஞ்சாமை	தூங்காமை	அறன் இழுக்கா	இயற்றலும்	காட்சிக்	இன்சொலால்	முறை செய்து	செவிகைப்பச்	கொடையளி
மணக்.	1	2	3	4	6	5	8	9	10	7
பரிதி.	1	9	2	3	7	5	6	10	8	4
பரிப்.	1	2	3	4	6	5	8	9	10	7
காளி.	1	2	4	8	3	5	6	7	10	9
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

39வது அதிகாரம் 'இறைமாட்சி' முற்றிற்று.

40. கல்வி.

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: கல்வியாவது கல்வியாமாறும், அதனினாகிய[1] பயனும் கூறுதல். இது முதலாகப் பொருள் வரவு இயற்றும் திறம் கூறுகின்றார். ஆதலின், அஃது இயற்றுங்கால் கல்வி முந்துறவேண்டும் அதனால், இது முன் கூறப்பட்டது,

ஆ) பரிதி.: கல்வியாவது அரசற்கு மனுசாஸ்திரம் மந்திரிசாஸ்திரம் தொண்ணூற்றெட்டாயுதக்கல்வி[2] வேணும் எ—று

இ) பரிப்.: கல்வியாவது, கல்வி ஆமாறும் அதனான் ஆகிய பயனும்; கூறுதல். இது முதலாகப் பொருள் வரவு இயற்றும் திறன்கூறுகின்றார் ஆதலின், அஃது இயற்றுங்கால் கல்வி முந்துறவேண்டுமென்று இது முற்கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல், அவையாவன அறநூலும், நீதிநூலும், யானை குதிரை தேர் படைக்கலமென்ற இவற்றின் நூல்களும் முதலாயின[3]. அரசன் அறிவுடையன் ஆயக்கால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும்[4] பயன்படுதல் நோக்கி இஃது அரசியலுள் வைக்கப்பட்டதாயினும் யாவர்க்கும் உறுகி பயத்தற் சிறப்புடைமையின் பொதுப்படக் கூறுகின்றார். மேல்[5] 'தூங்காமை கல்வி' எனத் தோற்றுவாய் செய்த மாட்சியை விரித்துக் கூறுகின்றமையின், இஃது இறைமாட்சியின் பின் வைக்கப்பட்டது.

---

1. 'அதனான்' பாடம் வே.ப.க.
2. 'தொண்ணூற்றெட்டு ஆயுதக்கல்வி' படைக்கலப் பயிற்சித் தொண்ணூற்றெட்டு நூல்கள் உள்ளன போலும், இவையென அறியக்கூடவில்லை. பரிப்பெருமாள் வடநூல் மரபையுங் கலந்து எழுதுபவராதலின் ஆண்டுள்ளனபோலும்.
3. ''கவனவாம் புரவி யானை, தேர் படைத் தொழில்கள் கற்று பலமுயன்றதுவும் பேறே யென வரும் பண்பின் மிக்கான்' என்னும் பெரியபுராணத்தில் மனுநீதி கண்ட புராணப்பகுதியும் இக்கருத்தை நன்கு விளக்கும்.
4. தன்கோல் நோக்கி வாழுங் குடிகட்கும் என்க.
5. 'மேல்' என்றது இறைமாட்சி 3—வது குறளை.

ஊ) **கவிராசர்:** அஃதாவது அரசனாலே கற்கவேண்டின நூல்களைக் கற்றல். நூலாவது அறநூலும், நீதிநூலும், யானை குதிரை ஆயுத வகைகள் என்றிவற்றின் நூல்களுமாம். அரசன் அறிவுடையவனானால் தன்னுயிர்க்கே யல்லாமல் சகல சீவன்களுக்கும் பயன் படுவன். இந்தக் கல்வி யாவர்க்கும் உறுதி பயத்தலிற் பொதுப்படக் கூறுகின்றார்.

ஏ) **பழைய 2:** அஃதாவது அரசன் கற்றற்குரிய கல்வி; அவை எல்லார்க்கும் ஒக்குமெனக் கொள்க.

மல்லர்: அதாவது ராசா தன்தொழிலுக்கு வேண்டிய சாஸ்திரங்களைப் படிப்பிக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

கல்வி யின்னது என்பதும், அதன் பயனும் கூறுவது: **மணக்குடவர்** 'அரசற்கு மநுதர்ம சாஸ்திரங்கள் முதலிய வேண்டும் என்பர். **பரிதி.** 'கற்றற்குரியவான அறநூல், நீதிநூல், படைநூல், படைக்கலநூல் முதலியன கற்றல்'. **பரிமேல்.**, அரசனாலே கற்கவேண்டிய நூல்களைக் கற்றல்'. **கவிராசர்**'அரசனாலே கற்கவேண்டின நூல்களைக் கற்றல்.; நூல்களை என்றிருப்பின் நலம். **பழைய2** 'அதாவது அரசன் கற்றற்குரிய கல்வி'. இவற்றுள் **பரிதி.**, கூறும் 'தொண்ணூற்றெட்டு ஆயுதக் கல்வி' என்பதன் விளக்கம் காணக் கிடைத்திலது. ஏனைய உரைகள் முடிவு ஒத்தன.

இராமலிங்கனார்'எல்லாரும் எழுத—படிக்க—கணக்குப் பார்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும்; கல்வி கரையில ஆதலால் கூடியமட்டும் புதுப்புது நூல்களைப் படித்து நல்லறிவுகளைச் சேர்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதைக் கூறுவது. இது மக்களனைவர்க்கும் உரியது' என்பர். **குழந்தை** 'கற்க வேண்டிய கலைகளைக் கற்றல். அரசற்குக் கூறினும் அனைவர்களுக்குமாகும்'. **தேவநேயர்** 'அரசன் கற்றற்குரிய நூல்களைக் கற்றல்—அவையாவன இலக்கணம், கணிதம், வனப்பியல், அறம், அரசியல், போர் பற்றிய நூல்களாம். அரசியல் நூலும் போர் நூலும் தவிர ஏனைய எல்லார்க்கும் பொது. இவையிரண்டும் அரசர் அமைச்சர் போர்வீரர் இவர்கட்குச் சிறப்பாக இன்றியமையாதது'.

திருவள்ளுவர் வேத்தியலை அடிப்படையாக வைத்தே பொதுவியற்கும் பொருந்துமாறு பொருளீட்டும் முறையைக்

கூறுகிறார். ஆதலால் கல்வியனைவர்க்கும் பொது. கற்றபின்பே பொருளீட்ட வேண்டும் என்பர். இது சிறந்த விளக்கம். ஆனாலும் கல்வி போன்ற பொருள்நிலை நீதிகளை அரசியல் அமைச்சியல்களில் வைத்தமையால் இங்ஙனம் அமைதிகூற வேண்டியதாயிற்று எனவும் எண்ணலாம்.

ஜி. வரத. 'மக்களிடம் அறிவு விளக்கஞ்செய்யப் பல நூல்களையும் படித்தல் ஆகும்; அரசன் கல்வியிற் சிறந்தவனாக இருந்தால்தான் மக்களையும் சிறக்கச் செய்வான்' என்பர். கல்வி அரசற்கேயுரிய நீதியாக்கப்பெறுகிறது.

அரசியலிற் கூறப்பட்டதன் காரணம்: வள்ளுவர் பொருட் செல்வமும், கல்விச்செல்வமும் என இரண்டையுமே செல்வமாகக் கருதுவதைச் 'செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்' 'பொருட் செல்வம் பூரியார்கண்ணும் உள' என்பதால் அறியலாம். அதனினும் செவிச்செல்வத்திற்கு ஏற்றந்தருவதால் கல்விக்கு முதலிடம் தந்து, நாட்டின் பொருள்வளத்தை வளர்க்க அறிவுவளம் இன்றியமையாதது என்பதையும் எண்ணிக்கல்வியை அரசனும் படிக்க வேண்டும்; மக்களையும் படிக்கச் செய்யவேண்டும் என்ற இறைமாட்சியை யடுத்துக் கல்வியை வைத்தனராதல் கூடும் எனவும் கருதலாம், அரசனுக்கு இன்றியமையாமையை 'தூங்காமை கல்வி' என்ற குறட்பாவால் இறைமாட்சியிலேயே வலியுறுத்தியதால், கல்வி கல்லாமைகளால் வலியுறுத்துவன அரசன் குடிமக்களைப் பயிற்றுவித்தல், இன்றியமையாதது என்பதைக் காட்டவேயாம் எனல் தெளிவு. *இராமலிங்கனார்* உரை போன்றவை அரசியற் கண்ணோடு கருதப் பெற்றவையாகும்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

தவமுயன் றரிதிற் பெற்ற தனியிளங் குமரனாளும்
சிவமுயன் றடையுந் தெய்வக் கலைபல திருந்தவோதிக்
கவனமாம் புரவி யானை தேர்படைத் தொழில்கள் கற்று
பவமுயன் றதுவும் பேறே யெனவரும் பண்பின்மிக்கான்.

—பெரியபுராணம். திருவாரூர்.,

40. I கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக (கூகக)

உரைப்பகுதி:

அ) மணக்.: கற்கப்படுவனவற்றைக் குற்றமறக்கற்க; கற்றபின்பு அக்கல்விக்குத் தக ஒழுகுக எ.று.

இது கற்கவும் வேண்டும்; அதனைக் கடைப்பிடிக்கவும் வேண்டும்[1] என்றது.

ஆ) *பரிதி.:* கல்வியைப் பிழையறக் கற்க; கற்றால் அந்த நெறியிலே நிற்க எ.று.

இ) *பரிப.:* கற்கப்படுவனவற்றைக் குற்றம் அறக் கற்க. கற்ற பின்பு அக்கல்விக்குத் தக ஒழுகுக, எ—று.

கல்வி பல வகைத்து. அவை எல்லாவற்றுள்ளும் கற்கப்படுவன வற்றைக் கற்று அக்கல்வியிற் கூறினது தப்பாமற் செய்க. அது கல்வியாற் பயன் என்றவாறாயிற்று. இது கற்கவும் வேண்டும் அதனைக் கடைப்பிடிக்கவும் வேண்டும் என்றது.

ஈ) *காளி.:* முதற்சொன்ன எண்ணும் எழுத்துமாகிய[2] இவை இரண்டையும் துணை உறுப்பாக[3] கொண்டு, தாம் கற்கும் அவற்றை மாசறக் கற்று உணர்க. இங்ஙனம் தெளியக் கற்றபின் கல்விக்குத் தகும் ஒழுக்கத்தின் கண்ணே நிலைநிற்க என்றவாறு.

பரிமேல்.: ஒருவன் கற்கப்படும் நூல்களைப் பழுதறக் கற்க, அங்ஙனம் கற்றால் அக்கல்விக்குத் தக அவை சொல்லுகின்ற நெறிக் கண்ணே நிற்க,

கற்பவை என்றதனான், அறம் பொருள் இன்பம், வீடு என்னும்[4] உறுதிப்பொருள் உணர்த்துவன அன்றி, பிறபொருள் உணர்த்துவன[5] சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினர்க்கு ஆகா என்பது பெற்றாம். கசடறக் கற்றலாவது விபரீத ஐயங்களை[6] நீக்கி, மெய்ப்பொருளை நல்லோர் பலருடனும் பலகாலும் பயிறல், நிற்றலாவது இல்வாழ்வுழிக் 'கருமமும் உள்படாப் போகமும் துவ்வாத், தருமமும் தக்கார்க்கே, செய்'[7] தலினும், துறந்துழித்தவத்தான் மெய்யுணர்ந்து அவா அறுத்தலினும் வழுவாமை. சிறப்புடை மகற்காயின்[8] கற்றல்வேண்டும்,

---

1. கடைப்பிடிக்கவும்—உறுதியாகப் பற்றி ஒழுகவும்.
2. 'எண்ணம் எழுத்தும்' பாடம் வே.ப.க.; 3. துணையுறுப்பு—கருவிநூல்கள்.
4. உறுதிப்பொருள்—பயன்தருவதிற்றவறாத குறிக்கோளான பொருள்கள்.
5. களவுநூல், காமநூல்முதலியன.
6. விபரீதம்—இப்பியை வெள்ளி என உணர்தல் போல ஒன்றையொன்றாக அறிதல். இது திரிபு உணர்ச்சி எனவும் படும். ஐயம்—பாம்போ கயிறோ என ஒன்றிலும் துணிவு பிறவாத உணர்வு.
7. நாலடி. 250
8. வீடுபேற்றிற்குச் சிறந்த ஆண்மகற்காயின் என்பது. சிறப்பு என்பது பெரும்பான்மை பற்றிய வழக்காகும். காரைக்காற் பேயாரும், மங்கையர்க்கரசியாரும், ஆண்டாளும் போல்வார் வீடுபெற்றவர்கள் சிலர் உளராதலின் சிறப்பு பெரும்பான்மை பற்றி வந்த வழக்காகும்.

என்பதூஉம், அவனால் கற்கப்படு நூல்களும், அவற்றைக் கற்குமாறும் கற்றதனாற் பயனும் இதனால் கூறப்பட்டன.

காரி.: அதற்கு—அக்கல்விக்கு என்றதனால், கற்பவை பன்மை ஒருமை மயங்காது.

ஊ) *கவிராசர்:* கற்கவேண்டின சாஸ்திரங்களைப் பழுதில்லாமல் நன்றாய்க் கற்க வேண்டும். அப்படிக்கற்றால் அந்த நூல்கள் சொன்ன வழியே நிற்கவேணும் எ.று.

ஏ) *பழைய 2:* ஒருவன் கற்கப்படும் நூல்களைப் பழுதறக் கற்க. அப்படிக் கற்ற கல்விக்குத் தக்க வகை சொல்கின்ற நெறியே நிற்க.

மல்லர்: படிக்கத்தக்க சாஸ்திரங்களைக் குறையத்த பிரகாரமாகப் படிப்பிக்கவேணும். படித்ததுக்குப் பிறகு அந்த சாஸ்திரங்கள் காண்பித்த நெறியிலே நிக்க வேண்டும் எ—று

ராசா அறிய வேண்டிய வேத சாஸ்திரமும் நீதி சாஸ்திரமும் வழு வற்ற வகையோடே படிக்காதே போனான் ஆனாலுங்குறை யில்லாமல் படித்து அதிலே சொல்லியிருக்கிற பிரகாரத்துக்குத் தக நடக்காதே போனான் என்கிலும் ஆட்சிப்பிரகாரஞ்செவ்வைப் படாது என்பதாகையில் அவ்விருவகையோடே படித்த சாஸ்திரத்திலே பிரயோசனமில்லை என்பது கருத்து.

கற்றல்—படித்தல்; கசடு—சந்தேகம்; அற—இல்லாமல்; கற்பவை கற்பதுகளை; அதற்கு—அதுக்கு; தகுதல்—உரிமை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'கற்பவை' — 'அறம் பொருள் முதலான உறுதிப்பொருள் உணர்த்துவனவற்றைக் கற்க' என்பர் *பரிமேலழகர்*. 'முதற்சொன்ன எண்ணும் எழுத்துமாகிய அவ்விரண்டனையும் கற்க' என்பர் *காளிங்கர்*. 'முதற்சொன்ன' என்பது எண்ணையும் எழுத்தையும் குறித்தலின் இவற்றைக்கூறும் 'எண்ணென்ப' என்ற குறள் இவரது முறை வைப்பிலேனும் இக்குறளுக்கு முன்பிருத்தல் வேண்டும். ஐந்தாவது குறளாகப் பின் இருக்கிறது. அது ஏட்டுப்பிறழ்ச்சியாலோ எழுதுவார் பிறழ்ச்சியாலோ விளைந்ததாகலாம். அல்லது 'மேற்சொல்லும் என்பது முதற் சொன்ன என்று படிக்கப்பட்டிருக்கலாம். மேல் என்பது இனி என்னும் பொருளதுமாகலின்.

'கசடு அறக் கற்க' — 'படிக்குமுறையில் ஐயந்திரிவின்றிக் கற்க' என்பது *பழைய உரையாசிரியர்கள்* அனைவரின் முடிவு.

இராமலிங்கனார் 'குற்றங்கள் நீங்குதற்காகக் கற்க,என்பர்.ஜி.வரத. 'நம்மிடம் உள்ள குற்றங்களைக் களைந்து கொள்ளவும். நூல்களிலே உள்ள குற்றங்களை நீக்கவும் கற்க' என்பர்.

இக்குறளின் முதற்றொடர் படிக்கத் தக்க நூல்களையும், படிக்கும் முறையையுமே உணர்த்துவன. அடுத்ததொடர் 'கற்றல்மட்டும் அமையாது; கற்ற வண்ணம் நிற்க' என விதிக்கிறது. அங்ஙனமாக, கற்குமுறையைப் பயனாகச் சொல்வது இயையுமேல் ஏற்க. ஐயந்திரி பறக் கற்பவைகளைக் கற்று, அதற்கேற்ப ஒழுகுகிறபோதுவிளையும் மனமாசகறல் 'இறைநிலம் எழுதுமுன் இளையபாலகன் முறை வரைவேன்' எனத் தொடங்குதல் போலக் கற்கத் தொடங்குகிற காலத்திலேயே நூல்களின் குறைகளைப் போக்குதல் என்பதும் ஏற்புடையதாகாது. பரிமேலழகர் எழுதும் விளக்கவுரையில் 'கற்றதனாற் பயனுங் கூறப்பட்டது' என்பதும் சிந்தனைக்குரியது.

காரிரத்தின கவிராயர் 'அதற்கு— அக்கல்விக்கு என்றதனாற் கற்பவை பன்மை மயங்காது' என்ற குறிப்புத் தேவையா? (ஒருவன்) கற்பவை கசடறக் கற்க எனின், கற்பவைகளை என இரண்டனுருபேற்றுச் செயப்படுபொருளாய்க் கற்க என்ற வியங்கோள் வினை கொண்டு முடிகிறது. பின்னர் 'அதற்குத்தக' எனின் அங்ஙனம் கற்றதற்குத் தக என்றேனும், கற்ற கல்விக்குத் தக என்றேனும் பொருள்படும்.ஆகையால் பன்மைஒருமை மயக்கத்திற்கே இடமின்மை காண்க.

'கற்றபின்'— 'கற்றபின்பு' மணக்.; 'கற்றால்' பரிமேல்.மணக் குடவர் இதனை இறந்தகாலப் பெயரெச்சமாகக் கொண்டு,பின்பு என்னும் காலப்பெயரேற்றதாகக் கருதுவர். பரிமேலழகர் 'கற்றால்' என வினை எச்சமாகக் கருதுவர்.தொல் சொல்.231 நூற்பாவின் வண்ணம் 'அன்னமரபிற் காலங்கண்ணிய,என்ன கிளவியும் அவற்றியல்பினவே, என்பதால் 'உண்டபின்வரும்' என்புழிப் போல இறந்த காலங்கருதிய வினை எச்சம் என்றனர். 'அன்னமரபின்' என்றமையானும், இப் பகுதிக்குத் தெய்வச் சிலையார் தரும் மேற்சொல்லப்பட்ட செய்து செய்ய முதலான வினை எச்சங்களோடு ஒருதன்மைய அல்ல என்ற உரையினும் பின் விகுதி பெற்றவை சொல்லளவிற் பெயரெச்சத் தொடர் போல்வன ஆயினும், வினை எச்ச இயல்பின ஆதலின் பரிமேலழகர் 'கற்றால்' என எச்சமாக்கினார். இவர் உரையே மரபு வழி வந்ததாகலின் சிறந்தது.

'கற்பவை'— 'தொல்லாசிரியர்கள் 'எண்ணும் எழுத்தும்', அறம் பொருளின்பக் கல்விகள்' என்று கூற, பிற்கால உரையாசிரியர்

களில் இராமலிங்கனார் 'கலைக்கல்வியும் தொழிற்கல்வியும் அல்லாத பண்பை வளர்க்கும் ஒழுக்கக் கல்வி' என்பர். மு. கோ. போன்றவர் 'விஞ்ஞானக் கல்வி முதலியன' என்பர். வள்ளுவர் காலக் கல்விநிலை பொதுவகையான எண்ணும் எழுத்தும் ஆவன அன்றிப் பிறதுறைகள் அன்மையை எண்ணுக. தமிழ்விடுதூதுடையாரும் இக்குறளை முழுதும் எடுத்துக்காட்டி, 'என்ற சொற்குள்ளே எல்லார்க்கும் புத்தி யியம்பிக் கரையேற்ற வல்லாய்' எனத்தமிழைப் பாராட்டுகின்ற முறையால், இவ்வதிகாரம் மன்னர்க்கும் மக்களுக்கும் பொதுவான கல்வி வகைகளைக் குறிப்பதேயாதல் தெளிக.

கவிராசர் கசடறக் கற்கிறதாவது அந்தச் சாஸ்திரம் ஒருவழி யிருக்கத் தான் ஒருவழியைச் சொல்லாமல், மெய்யான பொருளை நல்லோரிடத்திலே பலகாலும் கேட்கிறது. நிற்றலானது சம்ஸாரத்திலே இருந்தால், நல்ல உத்தியோகங்களைச் செய்து அதன் வழிவந்த பொருளை அறம்பொருளின்பங்களின் வழியே விடுதல். துறந்தால் மெய்ப்பொருளையுணர்ந்து ஆசையை மறுத்தல். இப்படி யிருந்தால் பிறவியற்று வீடு பெறும் என்பதாம் என்பர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கற்க கசடறக் கற்பவை:

1. ''கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்
வாலுண் குருகின் தெரிந்து'' —நாலடி.135

ஒருபுடை:

''நூலேந்து கேள்வி நுகரார்ப்புலனோக்க லுற்றார்'' கம்ப.4888

முற்றும்:

3. ''வான்பொருள் கேள்வித்துறை போயவர்—மறைநூலும் அங்கமும் கற்று
அதற்குத் தக நிற்போர்.
—சிலம்பு,கனா. 29.30

4. எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பின் பிறிதில்லை—அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின். அறநெறிச். 114

5. ''கற்றாங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனம்திருத்திப்—பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின்றொன்றுணர்ந்து
நிற்பாரே நீள்நெறிச் சென்றார். —நீதிநெறி.101.

6. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தகவென்ற—சொற்குள்ளே
எல்லார்க்கும் புத்தி இயம்பிக் கரையேற்ற
வல்லாய் உனக்குரைக்க வல்லேனோ. —தமிழ் விடு.97

7. ''ஐயமே திரிபே என்னும் அவையற அறநூல் நீதி
வையமால் யானை பாய்மா வன்படைத் தொழில்நூலாதி
பையவே கற்றுக் கற்ற பண்பின ரோடு நாளும்
உய்யவே அரச ளாவி உரைத்தவா நிற்றல் வேண்டும்.''-விநா-அரசி.46

''சொல்லிய சொற்கள் கற்றீர் சொற்ற அந் நெறியில் நிற்கும்
நல்லிய லில்லை நும்பால் நவில்தரு மாற்றம் ஒன்று
புல்லிய செயலொன்றாகப் பொருந்துநர் தம்மி லார்க்கும்
பல்லிய மொடுந டிக்கும் பரதரே பெரிய ராவர்'' —பிரபு,வசவண். 41

ஒ) மேற்கோள்பகுதி:

நச்: நேரும் நிரையும் ஒன்றாது இயற்சீர் வெண்டளை யானதற்கு மேற்கோள்.
(தொல். பொருள். செய். 56)

முற்று மோனைக்கு மேற்கோள். (ஷி.92.)

மயிலை: எழுத்துக்கள் பலவற்றையும் கூட்டித் தொடர்புபடக் கூறுமிடத்தும், தனித்து நின்றாற்போல, தத்தம் வடிவும் அளவும் திரியா என்பதற்கு மேற்கோள். (நன். 126)

யா.வி.: குற்றெழுத்து மிக்குவந்த செய்யுளுக்கு மேற்கோள். (சூ.2.)

40. 2. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (சுகூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: எண்ணென்று சொல்லப்படுவனவும், மற்றை எழுத்தென்று சொல்லப்படுவனவுமாகிய இவ்விரண்டு பொருளையும்[1]

1. 'பொருளும் ஓர்' வே. ப. க.

உலகின்கண் வாழும் உயிர்களுக்குக் கண் என்று சொல்லுவர்அறிவோர் எ-று.

ஆ) *பரிதி.:* எண்ணாகிய சோதிடமும்[2] எழுத்து முதலாகிய அஞ்சு லட்சணமும்[3] இரண்டு கண்ணாம் எ.று.

இ) *பரிப.:* எண்ணென்று சொல்லப்படுவனவும் ஒழிந்த எழுத்தென்று சொல்லப்படுவனவும் ஆகிய இவ்விரண்டு பொருளும் ஒருலகின்கண் வாழும் உயிர்கட்குக் கண்ணென்று சொல்லுவர் அறிவார் எ—று.

மேற்பொதுப்படக் கூறிய கல்வி பலவற்றுள்ளும் இவை இரண்டும் சிறப்புடைத்து என்று கூறிற்று. உயிர் என்றது மக்களை, இவை யறிவார் மக்கள் ஆதலின்.

ஈ) *காளி.:* எண் என்றது இருமை இன்பமும் தமது உள்ளத்தால் தெரிந்து பிரித்து எண்ணிக் கொள்வது. எழுத்து என்றது தாம் கற்கும் கல்விக்குத் துணையுறுப்பாகிய[4] எழுத்து என்று ஆயிற்று[5]. மற்று இவ்வாறன்றிக் கணக்கு நிலை ஆகிய சிற்றெண்ணும், பேரெண்ணும், நிறை எண்ணும், நிலவெண்ணும், பிறவும் ஆகிய நுண்குறி எண் என்றும், மற்று இவற்றின் அறிகுறி எழுத்தாய் அடிப்பட வருகின்ற தொகை விரி எழுத்தும் என்றும்,[6] இவை இரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு எனலுமாம் எ.று.

உ) *பரிமேல்.:* அறியாதார் எண் என்று சொல்லுவனவும் மற்றை எழுத்து என்று சொல்லுவனவுமாகிய கலைகள் இரண்டினையும், அறிந்தார் சிறப்புடையுயிர்கட்குக் கண் என்று சொல்லுவர்.

எண் என்பது கணிதம். அது கருவியும் செய்கையும் எனஇருவகைப் படும்.[7] அவை ஏரம்ப முதலிய நூல்களுட்காண்க. எழுத்தெனவே, அதனோடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று. இவ்விருதிறமும்,

---

2. எண்-கணிதம். அதனாற் கணித்தறியப்படும் சோதிடமும், தருக்கமும் ஆம் என்பாரும் உளர். கணித வகையான சிற்றெண், பேரெண், முதலாக நிலவெண் ஈறாகப் பலவகை என்பதனைக் காளிங்கர் உரையான் அறிக.
3. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களும்.
4. துணையுறுப்பு-கருவிநூல்
5. 'ஒன்றாயிற்று' பாடம் வே.ப.க.
6. 'தொகை விரி எழுத்தும் இவை இரண்டும்' பாடம் வே. ப. க.
7. கணிதம் இருவகைப்படும் 'கருவியும் செய்கையும் என' என்ற பரிமேலழகர் உரைக் குறிப்பிற்கு கோ. வ. எழுத்திலக்கணம் கருவியும் செய்கையும் என இருவகைப் படுதலை உளங்கொண்டு குறிப்பெழுதுவர். அது பொருந்தாது. கணிதம் கொள்கையுஞ் செய்கையும் என இருவகைப்படுதலைக் காட்டுதலே ஏற்புடைத்தாதலை எண்ணிப் பார்க்க.

அறமுதற் பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின், கண் எனப் பட்டது. அவை கருவியாதல்,

> ''ஆதி முதலொழிய அல்லா தனஎண்ணி
> நீதி வழுவா நிலைமையவான்—மாதே
> அறமார் பொருளின்பம் வீடென்றிவற்றின்
> திறமாமோ எண்ணிறந்தாற் செப்பு''
> ''எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
> மொழித்திறத்தின் முட்டறுப்பானாகும்—மொழித்திறத்தின்
> முட்டறுத்த நல்லோன் முதனூல் பொருளுணர்ந்து
> கட்டறுத்து வீடு பெறும்''.

இவற்றான் அறிக. என்ப என்பவற்றுள், முன்னைய இரண்டும் அஃறிணைப் பன்மைப்பெயர்; பின்னது உயர்திணைப் பன்மைவினை. அறியாதார் அறிந்தார் என்பன வருவிக்கப்பட்டன. சிறப்புடையுயிர் என்றது மக்களுயிருள்ளும் உணர்வுமிகுதி உடையதனை. இதனால் கற்கப்படுநூல்கட்குக் கருவியாவனவும், அவற்றது இன்றியமையாமை யும் கூறப்பட்டன.

> *காரி.*: என்ப-முன்னது அஃறிணைப் பன்மைப்பெயர்; பின்னது உயர்திணைப் பன்மைவினையாகிய முற்றுச்சொல். 'ஆதி. முதலொழிய' 'எழுத்தறியத் தீரும்' என்னும் இரண்டு பாட்டும் காண்க. எழுத்து-எழுத்தும் சொல்லும். 'எழுத்தெனவேஅதனோடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று' என்றாராதலின் பொருள் அவ்வாறு சிறப்பதல்ல என்க.

ஊ) *கவிராசர்*: அறியாதவர்கள் எண்ணென்றும் எழுத்தென்றுஞ் சொல்லுவார்கள். அறிந்தவர்கள் எண்ணாகிய கணக்கும் எழுத்தும் இவை இரண்டும் அறிவுடைய சீவனுக்கு இரண்டு கண்ணென்று சொல்லுவார்கள். எண்ணும் எழுத்தும் முதற்பொருளாகிய பரப் பிரமத்தைக் காக்கிறதற்கு வழியான படியினாலே கண்களென்று சொல்லப்பட்டன. 'ஆதி முதலொழிய வல்லாதன வெண்ணி-நீதி வழுவா நிலைமையவான்-மாதே-யறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்-திறமாமோ எண்ணிறந்தாற் செப்பு'. ஆதிமுதலாகிய சருவக்கியனொன்றுமே எண்ணப்படாதது. மற்றதெல்லாம் லக்கத்திலே யடங்கின படியினாலே எண்ணை யறியாதவன் அறம் பொருளின்பம் வீடென்னப்பட்டன முதலானவற்றை அறியமாட்டானென்றவாறு.

ஏ) பழைய 2: எண்ணென்று சொல்லப்படுவனவும், மற்றை எழுத் தென்று சொல்லப்படுவனவுமாகிய இவ்விரண்டு கலையுங் கற்றறிந் தார் கல்லாதவர்க்குக் கண்ணென்று சொல்வர்.

இவ்விரண்டுங் கற்றறிந்தார் கல்லாதவர்க்கு அறிவித்தலாற் கண்ணென்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'எண்—எழுத்து'— 'எண்ணும் எழுத்தும்' **மணக்.**, **பரிப்.**; 'எண்ணாகிய சோதிடமும் எழுத்து முதலாகிய அஞ்சு லட்சணமும். **பரிதி.**; 'இருமையின்பமும் தமது உள்ளத்தால் தெரிந்து, பிரித்து எண்ணிக் கொள்வது எண். கல்விக்குத் துணையுறுப்பாகிய எழுத்து' என்பர் **காளி:**; 'வேற்றுரையாக சிற்றெண் பேரெண் முதலாகிய கணக்கு நிலைகளும், தொகை விரி எழுத்துக்களுமாம்' எனவும் கூறுவர். 'எண்ணும் எழுத்தும் கலைகள்' என்பர். மற்றும் எண்—கணிதம், எழுத்து— எழுத்தும் சொல்லும் என விளக்கந்தருவர் **பரிமேலழகர், கவிராசர், பழைய 2.**

இராமலிங்கனார் உரைப்போக்கு ஒன்று இரண்டு ஆயிரம் பதினாயிரம் எனக் கணக்கெண்ணத்தெரிதலும், எழுத்துக்களைப் படிக்கத் தெரிதலுமாகிய அவ்வளவையே சருதுவது போலும்.

தேவநேயர். 'எண்—எண்ணூல் கணக்கும் கணிதமும். எழுத்து எல்லாவகையான அறிவுத்துறைகளும் எனவும், கண்— அல்லது கண்ணாடி போல் உதவுவன' எனவும் கூறுவர்.

ஜி. வரத. 'எண்— தன்னறிவால் அறிவது. எழுத்து— நூல் அறிவால் அறிவது. இதனை 'மதிநுட்பம் நூலோடுடையார்க்கு' என்பதனாலும், அறியலாம் எனக்கூறி, கணிதம்—இலக்கியம் எனவும் இலக்கணம்— இலக்கியம் எனவும் கூறுவாரும் உளர்' எனப்பிறர் மதமுங் கூறுவர். ஆகவே இவர் கருத்து எண்—எண்ணியறியப்பெறும் தன்னறிவு. எழுத்து— எழுத்துருவான நூல்களைப் படித்தறியும் புற அறிவு என்பதாம்.

குழந்தை 'எண்—பொருள்களைப் பலவகைஅளவைகளால்எண்ணியறிதல்; எழுத்து—இலக்கண இலக்கியங்களைப் படித்தும் எழுதியும் அறிதல்' என்பர்.

மு. கோ., சி. இ., 'எண்—அறிவியல் (விஞ்ஞானம்), எழுத்து—கலை' என்பர். **ஈக்காடு சாமி.** 'கணக்கும் இலக்கணமும்' என்பர்.

தொகுத்து எண்ணும் உரைகளை உரையாசிரியர்கள் கலை வழக்கமும், வள்ளுவர் காலத் தேவைகளும் ஆக இருபகுதிகளாகப் பிரிக்கலாம். இன்றைய விஞ்ஞான அறிவுகளைத் திணித்துப்பார்க்கவும் திருக்குறள் விரிந்து இடங்கொடுக்கிறது என்ற அளவில் மகிழலாமே

யன்றி அவர் கலை வழக்கு, கணக்கும்—இலக்கணங்களுமே என்பதில் ஐயமில்லை. அத்தகைய உரைகளே பழைய உரைகள்.

எழுதப்படிக்கத் தெரிதலும், கணக்கறிதலும் மட்டும் கல்வி என்பதும் சிறப்பினது அன்று. எண்ணும் எழுத்தும் ஆகிய எல்லா நூல்களையும்படிப்பதே சிறந்தது என்ற உரை தகுதி ஆனது. அங்ஙனமே.

ஜி.வரத. 'மதிநுட்பம் நூலோடுடையார்' என்ற வள்ளுவத்தைத் துணைக்கொண்டு கற்பவை—செயற்கையறிவு பயக்கும் கல்வியே என்பர். இது அதிகார இயைபுடைய கருத்தன்று. ஆதலால் எண்ணும் எழுத்தும் என்பார் உரையை இயைபுடையதென்க.

"எண்என்ப ஏனைஎழுத்தென்ப:
அண்ணலும்நூலும் பொருளும் நிகழ்வும் இவை எனலும்
எண்ணினும் ஏனை எழுத்தினும் மிக்காங் கிருந்தவர்முன்
கண்ணினும் அன்றிக் கருத்தினும் வேறெனக் காட்ட லுற்றுப்
பண்ணலம் கொண்டசொல் லாள் அவை பேர்த்தும் பகர்ந்தனளாய்."
—நீல.(679)

"எண்ணும் எழுத்தும் குறியும் அறிபவர் தாமொழியப்
பண்ணின் இசைமொழி பாடிய வானவர் தாம்பணிவார்
திண்ணென் வினைகளைத் தீர்க்கும் பிரான்திரு வேதிகுடி
நண்ண அரிய அமுதினை நாமடைந் தாடுதுமே"
—திருநாவுக்கரசர், திருவேதி.6.

எண்ணெழுத் திகழேல்." —ஆத்தி.7

முற்றும்.:

"கண்ணெனப் படுவ மூன்று காவலன் கல்வி காமர்
விண்ணினைச் சுழல ஓடும் வெய்யவன் என்னும் பேர
எண்ணினுள் தலைக்கண் வைத்த கண்ணடு வில்லை யாயின்
மண்ணினுக் கிருளை நீக்கும் வகைபிறி தில்லை மன்னோ." சூளா.
மந்திர-30

கண்ணுங்கால் கண்ணும் கணிதமெழுத் தியாழோடு
எண்ணுங்கால் சாந்தே இலைநறுக்கிட்டு—எண்ணுங்கால்
இட்டஇவை ஐந்தும் அறிவான் இடையாய
சிட்டன்என் றெண்ணப் படும். —சிறுபஞ்ச.87

எண்ணும் எழுத் தும்கண் ணிவையாய்ந்திந் நூற்பயனைக்
கண்ணுககாண் பார்நற் கதி —பரமதபானு.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்." —கொன்றை.7.

ஒ) மேற்கோள்பகுதி:

மயிலை.: எண் என்ப.....உயிர்க்கு; எண்ணென்ப ஏனை எழுத்தென்ப உலகத்து வாழும் உயிர்க்கெல்லாம் கண் என்ப கற்றார் என எஞ்சிய பெயர் கொண்டு முடிதலின் பெயரெச்சம் என்பர். (நன்.359)

எண் என்பது சொல்லுதல் என்னும் தொழில் குறித்துப் பெயர் வினைகட்குரிய விகுதிகளுடனே வந்ததற்கு மேற்கோள். (நன்.420)
சிவஞான.: 'மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி என்புழி எழுத்து என்றது இயற்றமிழை. அஃது 'எண்ணென்ப.....உயிர்க்கு .....என்பவற்றானும் உணர்க'. (தொல்.விருத்.பக்.11
சுவாமி.: இதனுள் உயர்திணைச் சாதிப்பன்மையும் அஃறிணைச் சாதிப்பன்மையும் காண்க என்பர். (இ.கொ.130)

40.3. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர். (கூகூ)

உரைப்பகுதி:

அ)மணக்.: கற்றோர் கண்ணுடையர் என்று சொல்லப்படுவர்; கல்லாதார் முகத்தின் கண்ணே இரண்டு புண்ணுடையர் என்று சொல்லப்படுவர் எ.று.

அறிவு கல்வியின் கண்ணது ஆகலான், அக்கல்வியில்லாதார் கண் புண்ணாயிற்று. இது மேற்கூறியதனையே வலியுறுத்துகிறது.

ஆ) பரிதி.: கல்வியான கண்ணுடைய பேர் கண்ணுள்ளவர்; கல்வியான கண் இல்லாதார் குருடர் எ.று.

இ) பரிப்.: கண்ணுடையரென்று சொல்லப்படுவோர் கற்றோர்: கல்லாதார் முகத்திலே இரண்டு புண்ணுடையரென்று சொல்லப்படுவர் எ–று.

அறிவு கல்வியின் கண்ணது ஆகலான். அக்கல்வியில்லாதார் கண் புண்ணாயிற்று. இது மேற்கூறிஅதனை வலியுறுத்திற்று.

ஈ) காளி.: கண்ணுடையர் என்று எடுத்து ஏத்திச் சொல்லப்படுவார் கற்றவரே இனிக் கல்லாதார் முகத்து இரண்டு புண்ணுடையார் அல்லது, மற்று யாது ஒன்றினையும் பழுதறக் காண்பதொரு[1]

1. 'காண்பதோர்' பாடம் வே.ப.க.

கண்ணுடையர் அல்லர்; மற்று அஃது எப்படியோ எனின் கண் முதலாகிய ஐம்பொறிகளும் தத்தம் பொருள்களைக் காணுமிடத்துக் கருவியாகிய ஞானக்கண்ணினால் அவற்று உண்மைத் தன்மையையும் அளவிறந்த வீடு ஆகிய நுண்பொருளையும் பழுதறக் காண்பர்; மற்று அஃது இல்லார், புறத்ததாகிய முகத்து இரண்டு நீர்ப்பசையறாது நெகிழ்ந்து, தோலும் தசையும் உடைய புண்கண்ணர் எ.று.

உ) *பரிமேல்.*: கண்ணுடையர் என்று உயர்த்துச் சொல்லப்படுவார் கற்றவரே, மற்றைக் கல்லாதவர் முகத்தின்கண் இரண்டு புண்ணுடையர் கண்ணிலர்.

தேயம் இடையிட்டவற்றையும்[2], காலம் இடையிட்டவற்றையும்[3]. காணும் ஞானக் கண்ணுடைமையின் கற்றாரைக் கண்ணுடையர் என்றும், அஃதின்றி நோய் முதலியவற்றால் துன்பஞ்செய்யும் ஊனக்கண்ணே உடைமையின் கல்லாதவரைப் புண்ணுடையர் என்றும் கூறினார். மேல் கண் அன்மை உணர நின்ற[4] ஊனக்கண்ணின் மெய்ம்மை கூறியவாற்றான், பொருள் நூல்களையும்[5] கருவிநூல்களையும்[6] கற்றாரது உயர்வும், கல்லாதாரது இழிவும் இதனால் தொகுத்துக் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: கண்களையுடையவர்களென்று சொல்லப்படுகிறது கல்வியைக் கற்றவர்களையே கல்லாதவர்கள் கண்களையுடையவர்களல்லர், புண்ணுடையவர்களென்று, சொல்லப்படுவர் என்றவாறு. கல்வியினாலே பரப்பிரம சுவரூபத்தையும் காலங்களையு மறியப்பட்ட ஞானக் கண்ணுடையவர்களே. கண்ணுடையவர்கள். அஃதில்லாதவர்களே புண்ணுடையவர்களென்பதாம்.

ஏ) *பழைய 2*: கண்ணுடையரென்று சொல்லப்படுவர் கற்றவரே மற்ற கல்லாதவர் முகத்திரண்டு புண்ணுடையர்; கண்ணிலர்.

இதனால், ஞானக் கண்ணும் ஊனக்கண்ணும் அறிந்து கொள்க. *மல்லர்*: படிப்புள்ளவர்கள் கண்ணையுள்ளவர்கள் என்று சொல்லப் படுவார்கள். படிப்பு இல்லாதவர்கள் முகத்திலே இரண்டு

---

2. தாமிருக்கும் தேசத்தன்றி வேறு தேசத்தில் இருப்பனவற்றையும்
3. நிகழ்காலத்தன்றி இறந்தகாலத்தில் இருந்தனவற்றையும் எதிர்காலத்தில் இருப்பன வற்றையும்.
4. மேல்கண் அன்மையுணர நின்ற—'எண்ணென்ப' என்ற குறளால் எண்ணும்எழுத்தும் அறியாதார்களின் கண்கள் கண்களல்ல; புண் என்று உணர நின்றது.
5. பொருள் நூல்கள்—அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருள் பயக்கும் நூல்கள்.
6. கருவி நூல்கள்—இலக்கணமும் கணிதமுமாகிய நூல்கள்.

புண்ணையுள்ளவர்கள் என்று சொல்லப்படுவார்கள். படிப்புள்ளவன் கண் தெரியாதவனாயிருந்தாலும் அவனுக்குத் தெரியத்தக்க காரியந் தெரிகிறதினால் கண்ணுடையவன் என்று சொல்லலாம். படிப்பில்லாதவனுக்கு ஒன்றுந்தெரியாததினால் அவன் முகத்திலே கண்ணிருந்தாலும் காரியங்களைத் தெரிகிறதுக்கு ஏதுவாயிராத படியினால் இல்லாதது போலேயிருக்கும். ஆகையில் அவன் முகத்திலே இருக்கிற கண் குருடன் கண்ணுக்குச் சரியான ரெண்டுபுண் என்று சொல்லலாம் என்பது கருத்து.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பழைய உரையாசிரியர்கள் அனைவரும் குறளின் பொருள் கூறும் வகையில் மாற்றமிலர். கல்லாதவரின் கண்கள் புண்கள் என்பதற்கு விளக்கந்தரும் வகையிற் பெரிதும் மாறுபடுகின்றனர். *மணக்குடவர்* 'அறிவு கல்வியில் உள்ளது; கல்வியில்லையானால் கண்ணும் இல்லை' என்கிறார். *பரிதியாருடைய* கருத்தும் இது. *காளிங்கர்* 'ஐம்பொறிகளும் அறிவது ஞானக்கண்களால்; ஆகவே கண்ணுக்கும் ஒரு கண்ணாவது கல்வி. அஃதில்லாத கண் புண் தான்' என்று ஒரு விளக்கம் தருவர். இது மெய்ப்பொருள் நூல் வழிவந்த நுணுகிய கருத்து. உயிரறிவு (ஆன்ம சிற்சக்தி) பொறிகளின் வழியாகப் புலன்களைச் சென்று பற்ற காட்சி முதலிய அறிவுகளை மனம் பெற்று உயிருக்கு உணர்வாகிறது என்பது மெய்ப்பொருணூல் கருத்து. அதனை விளக்கும் கருத்து *காளிங்கர்* எழுத்து.

பரிமேலழகர் 'காலம் தேயம் இடையிட்டனவற்றையும் அறியும் அறிவு—அவ்வறிவுத் துணையில்லையாயின் கண் அவற்றையறியாது' என்ற விளக்கந்தோன்ற உரைப்பர். 'ஞானக்கண் ஒன்றேபரப்பிரமஸ்வரூபத்தையும் காலங்களையும் அறிய வல்லது. அந்த ஞானக் கண்ணுடையரே கண்ணுடையவர்' என்பர் கவிராசர். இவர் சைனராதலின் 'பரபிரமசொரூபம்' என்ற விளக்கம் ஏற்புடையதாகாது. சைனர்கள் கடவுள் உண்டு என்பதை ஒப்பாதார். ஆகையாலும், பரபிரம சொரூபம், என்பது வைதீக சுத்தாத்துவிதக் கொள்கையாதலாலும் இப் பகுதி இவருடையதன்று என்று துணியத்தோன்றுகிறது.

ஜி. வரத. 'கல்வியில்லாதவன் பொருளைப் பார்த்தாலும் பொருட்டன்மையை யறியான். அதனால் அக்கண்ணைப் புண் என்றார்' என்பர். இது *காளிங்கர்* கருத்திற்கு விளக்கமாகிறது. *இராமலிங்கர்* 'கல்வி என்பது புலமை மட்டுமல்ல. வாழ்க்கைக்கு

வேண்டிய அறிவே கல்வி. அஃதில்லாதார் கண் புண்ணோடு ஒக்கும்' என்று விளக்கந்தந்து, 'இரண்டு கண் என்பதற்கு முதற் குறளிற் கூறிய எண்ணும் எழுத்துமாகிய இரு கண்களையுடையவரே கண்ணுடையர்' என இயைபுபடுத்தியும் கூறுவர். இங்ஙனம் முற்செய்யுளோடு இயைபுபடுத்துபவர் இவர் ஒருவரே. குழந்தை, *பரிமேலழகர்* கூறிய நாடிடையிட்டவற்றை யறிதல் அயல் நாட்டைப் பற்றியறிதல், காலம் இடையிட்டவற்றையறிதல் — பழங்காலத்தைப் பற்றியறிதல் என அவரை ஒட்டியுரைப்பர்.

மு. கோ. 'கல்லாதவர் என்போர் கற்றோர்' கண்ணுடையர்; கற்றோர் என்போர் கல்லாதவரை புண்ணாகவுடையர் எனக்கூட்டிக் 'கல்லாதவர் கற்றார் முகத்துப் புண்; கல்லாதவர்க்குக் கற்றோரே கண்' எனப் புதிய பொருள் கொணரப் பெரிதும் முயல்வர். 'இதன் பயன் கண்ணிருந்தும் பொட்டையாகாமற் கற்றார் கல்லாதாரேயில்லையாம்படி முயல்க என்பதாம்' என்பர். இக்குறள் கல்வியின் இன்றியமையாமையை உணர்த்த வந்ததேயன்றிக் கற்றார் கல்லாதார் இல்லையாம்படிச் செய்க என வாதிக்க வந்த தன்மையானும், சொற்சிதைவுக்கும் இயைபிற்கும் பொருந்தாமையானும் இவ்வுரை ஆழ்ந்து எண்ணுதற்குரிய. ஆகவே கற்றோர் முகத்திலுள்ளது கண் மற்றோர் முகத்திலுள்ளது புண் என்ற கருத்தமைந்த *மணக்குடவர்*. *பரிமேலழகர்* போன்றார் உரைகளேசிறந்தன;ஏனைய புதுமைகாணும் முயற்சியின் விளைவால் வீழ்ந்தவைகளாம்.

ஒப்புமைப் பகுதி:

'புண் உடையர்'

"கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும்." **குறள்.575**

"கல்லாது முதிர்ந்தவன்—கண்ணில்லா நெஞ்சம்" **கலி 130:6.**

கண்ணுடையர் என்போர் கற்றோர்:

"கைப்பொருள் கொடுத்தும் கற்றல் கற்றபின் கண்ணுமாகும்."
—சீவக.1595

முற்றும்

"விண்ணுடை யார்புகழ் நூபுர மாதர்வெல் வேனெடுங்கண்
பெண்ணுடை யார்மகிழ் தென்வெங்கை மாநகர்ப் பெண்ணணங்கே
கண்ணுடை யார்கற் றவரேகல் லார்கள் முகத்திரண்டு
புண்ணுடையார் எனக் கூறிநம் காதலர் போயினரே." **திருவெங்.408.**

ஓ) மேற்கோள்பகுதி:

நச்.: கட்டளைப் பொழிப்பு மோனைக்கு மேற்கோள். (தொல். பொருள். செய். 92)

40.4 உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். (ஙகஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: மக்களிருவர்[1] உவக்குமாறு கூடி, அவர் நினைக்கு மாறு பிரிதல் போலும் கற்றோர் செய்யுந்தொழில் எ. று.

இஃது இன்பம் நுகரினும், வினை செய்யினும் தமக்கும் பிறர்க் கும் இன்பம் பயக்கச் செய்தல் கல்வியாலாம்[2] என்றது.

ஆ) பரிதி.: நல்லோரும் நல்லோரும் மனப்பூரணமாகக்[3] கூடியிருந்து, பிரிகிறபோது ஒருவரை ஒருவர் அனவரதகாலமும்[4] நினைந்திருப்பார்; அதுபோல, கற்கும்போதும் பிரியத்துடனே கற்க; கற்றுவிட்டால் கற்ற கல்வியை மறவாது அதிகரிக்க எ.று.

இ) பரிப்.: உவக்குமாறு கூடி அவர் நினைக்குமாறு பிரிதல் போலே, கற்றார் செய்யும் தொழிலும் ஆம் எ—று.

இன்பம் நுகரினும் வினைசெய்யினும் தமக்கும் பிறர்க்கும் இன்பம் பயக்கச் செய்தல் கல்வியான் ஆம் என்றது.

ஈ) காளி.: தாம் பிறர் ஒருவருடன் கூடுங்காலம் எல்லாம் தம்மை அவர் பெரிதும் உவக்குமாறு அவரிடத்துக் கூடி, மற்று யாதானும் ஒருவழியால் பிரிய வேண்டிற்று ஆயினும் மற்று அவர் தம்மையே எப்பொழுதும் சிந்திக்குமாறு பிரிதல், அதுவே கல்வியாற் சிறந்த அறிவினை உடையோர் தொழில் என்றவாறு.

உ) பரிமேல்.: யாவரையும் அவர் உவக்குமாறு தலைப்பெய்து[5] 'இனி இவரை யாம் எங்ஙனம் கூடுதும்' என நினையுமாறு நீங்குதலாகிய அத்தன்மைத்து, கற்றறிந்தாரது தொழில்.

1. மூல பிரதிகளில் 'மக்களிருவர்' என்பது இல்லை.
2. கல்வியானாம் பாடம் வே.ப.க.
3. மனப்பூரணமாக—உள்ளம்நிறைய.
4. அனவரத காலமும்—எஞ்ஞான்றும்.
5. தலைப்பெய்து—கலந்து பழகி.

தாம் நல்வழியொழுகல் பிறர்க்கு உறுதிகூறல்:என்பன இரண்டும் தொழில் என ஒன்றாயடங்குதலின், அத்தன்மைத்து என்றார். அத்தன்மை அப்பயனைத் தருந்தன்மை. நல்லொழுக்கம் காண்டலா னும், தமக்கு மதுரமும்[6] உறுதியுமாய கூற்றுக்கள் நிகழ்வு எதிர்வுகளின் இன்பம் பயத்தலானும், கற்றார் மாட்டு எல்லாரும் அன்புடையர் ஆவர் என்பதாம். இதனால் கற்றாரது உயர்வு வகுத்துக் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: எல்லாரும் வந்து தன்னைச் சேருமாறு தயை[7]பண்ணி அவர்கள் பிரிந்து போகிறோமென்றால் இனி அவர்களை எங்கே காணப்போகிறோமென்று நினைத்து விசாரப்படுகிறதே[8] வித்துவான் கள் தொழில் என்றவாறு.

புலவர் தொழிலாவது—தாம் நல்வழி யொழுகல், பிறருக்குறுதி யான வார்த்தை சொல்லுதல். இவற்றால் கற்றாரிடத்திலே எல்லாரும் அன்புடையவராவரென்பதாம்.

ஏ) பழைய 2: யாவரும் உவந்து கூடி மகிழும்படித் தலைப் பெய்து, இனி இவரை யாங்ஙனம் கூடுதும் என நினையுமால நீங்குதலாகிய அத்தன்மைத்தே, கற்றறிந்தோர் தொழில்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் 'அனைத்து' என்பதைப் 'போலும்' என உவமமாகக் கொள்வர். 'இருவர் நட்புப் போல்வது அறிஞர் தொழில்' என்பது அவர் கருத்து, உவமவிளக்கமும் உவமத்தோடும் இயைபு காட்டுவது தொடர்ந்து வரும் விளக்கம். மணக்குடவர் மக்களிருவரும், எனப் பொதுவகையாற் கூறியதை 'நல்லோரும்' என வரை செய்தது பரிதி. உரை. ஆனால் நல்லோரைப் போலக் கல்வியைப் பயிலும் விருப்புடன் பயில வேண்டும்; பயிற்சியை முடித்துக் கொண்டாலும் மறவாமல் நினைத்துக் கொண்டேயிருக்க வேண் டும் எனத் தலைக்கூடுதலையும் பிரிதலையும் கல்விப்பயிற்சிக்கும், பயிற்சியின் முடிவுக்கும் ஆக்குவர்: இது இவருடைய புதிய நோக்கு. ஏனையோர் புலவர்கள் பிறருடன் பழகும் போதும் பிரியும்போதும் உளதாம் நிலையைக் குறிப்பர். 'அனைத்து—அத்தன்மைத்து; அதாவது பயனைத்தருந்தன்மை' என்பர் பரிமேலழகர். தன், தனை

6. மதுரம்—இனிமை, உறுதி—நன்மை, கூற்றுக்கள்—சொற்கள்.
7. தயை—கருணை, அன்பின் மூதிர்ச்சி.
8. விசாரப்படுதல்—நினைந்து கவலைப்படுதல்.

என்பன தன்மையையும், அளவையும் உணர்த்தும். அ என்னும் சுட்டு எழுத்தோடு இணைந்து, 'அனைத்து' என விகாரப்பட்டு அத்தன்மைத்து; அவ்வளவிற்று என்னும் குறிப்பு முற்றாயிற்று என்பர். *சாமி.வேலா., மணக்குடவர்* 'அதுபோலும் என்பர். *இளம் பூரணர்* 'அன்றியனைத்தும்' (*தொல். சொல்.67*) என்பதற்கு 'அத் துணைப்பொருளும்' என உரை காண்பர். *தொல்காப்பியத்து* இச் சொல் பெரும்பாலும் அளவைப்பொருளிலேயே காணப் பெறுவதால் அதுவே தொல் வழக்கு எனவும், பின்னர் அளவும் ஒரு பண்பாதலின் தன்மைக்கும், அதனால் விளையும் உவமத்திற்கும் வந்ததாகல் வேண்டும்எனவும் நினைக்கலாம். ஆதலால் அனை என்பதே வேர்ச்சொல் என்பதும் விளங்கும்.

இவ்வுரைகளுள் யாரோ இருவர் நட்புப்போல்வது புலவர் ஒருவரோடு கூடுவதும் பிரிவதும் என்பதைக் காட்டிலும், நல்லோரும் அல்லோரும் கூடுவதும் பிரிவதும் போல்வது கல்விப் பயிற்சியும், அதன் முடிவும் என்பது மேலானது, உவப்பக்கூடுதல் உள்ளப்பிரிதலுமே புலவர் தொழில் என்னும் *காளிங்கர், பரிமேலழகர்* உரைகள் மிகத் தெளிவானவை. ஆனாலும், கற்றோர் தன்மை என்பதிலும் கல்வியே அத்தன்மையிரண்டையும் உடையதெனல் அதிகார இயைபிற்குப் பொருந்துமன்றோ? பிறிது மொழிதலாய் வலிந்து பொருள் கோடலாகும் என்பர் *சாரங்கபாணியார். பரிதியார்* 'தலைக்கூடி' என்பதற்கு அதிகாரப்பொருளாகிய 'கல்வியைக்கூடி' எனவும், 'உள்ள, என்பதற்கும் 'அக்கல்வியையே விடாத தன்மைத்து' எனவும் பொருள் கண்டனர். புலவர் தொழில் கல்வியை உவப்பத்தலைக்கூடி, உள்ளப் படுதல் தொழில் எனின் பிறிதுமொழிதற்கு இடம் எங்கே எனச் சிந்திக்க.

மு.ரா.அரு. இக்குறட் கருத்தால் கற்றோர்க்கு விளைவதென்ன என வினவிக்கொண்டு 'தான் கண்ட உறுதிப்பொருளைப் பிறர்க்குக் கூறி அவர்களை நல்வழிப்படுத்தும் புண்ணியம்' என்பர். 'புலவர்தொழில்' என்பது 'புலவரதுஇயற்கை' என்ற அளவே பொருள் படுவதாகலின் பயனுக்குப்பயன் கூறவேண்டியதாயிற்றுப்போலும்.

ஜி.வரத. 'முதல் நாள் கூடும்போதே மகிழ்ச்சியை உண்டாக்கிப் பின்னரும் பலகால் கூடவேண்டும் என்ற எண்ணத்தை எழுப்பும் அவ்வளவுதான் புலவர் தொழில்'. 'தலைக்கூடி—இதுவரை இத்தகை யோரைக் கண்டில்னே யென்று எண்ணும்படிச் செய்தல்' என்பர். இவர் தலைக்கூடி—சிறப்பாகக் கூடி எனத் தலை—சிறப்பு எனக்

கொண்டிருப்பார் போலும். ஏனையோர் 'கைவிட்டான்' 'ஓடிப் போனான்' போலத் 'தலைக்சகூடி' என்பதை ஒரு சொல்லில் அமைந்த தாகக் கொண்டு ,கூடி' என்றனர்.

இராமலிங்கனார் 'உள்ளப்பிரிதல்' என்பதற்கு உரை காண்பது 'தாமோ பிறரோ அல்லது தாமும் பிறருமோ வருந்தப்பிரிதல் என்றும், இருவர் புலவர் இணைந்தால் மகிழ்வோடு கூடியிருந்தாலும் கருத்து வேற்றுமையால் வாதம் பல செய்து மனஸ்தாபம் உண்டாய்ப்பிரிதல்' என்றும் இரு கருத்து வழங்குவர். அதனால் மகிழ்வர். இவரால் நட்கப்பட்ட பிறரேயன்றிப் புலவராகார்; ஆதலாலும், புலவர் பிரிவின் கவல்வார் பிறரேயாகலானும் இந்த உரை எளிமை போலக் காணப் பெறினும் தெளிவு இலது எனலாம். ஆதலால் கூடுதலும் பிரிதலும் புலவர்தொழில்களே. உள்ளுதல் பிறர் தொழில் என்க.

மு.கோ. ,பிரிதல்—இறத்தல்' எனப்பொருள் கண்டு 'இறந்த பிறகும் தம்மை எண்ணச்செய்தல் புலவர் தொழில்' என்பர். உள்ளப்— புலவர் கலையைப் பிறர் கண்டு மகிழ எனவும், பொருள் கண்டு வாழ் வில் ஈடுபாடு வேண்டும் கல்வி' என முடிவு கண்டார். இதுவும் ஒரு புதிய நோக்குத்தான்.

உள்ள—எஞ்ஞான்றும் எண்ணிப்பார்க்கும் அரிய கருத்துக்களை அளவளாவிய காலத்து அறிவித்தமையால் நினைத்துக்கொண்டே யிருக்க என்பதாம்.

பிறர்மனம் நோகாதவண்ணம் பேசுதலும், பிறர் தவறுசெய்யின் ஏதுக்களாலும் எடுத்துக்காட்டாலும் திருத்துதலும்.உடையார் கற்றார் ஆதலின் இன்செல்லால் இடித்துக் கூறினும் உவப்பேயுண்டாம் என்பது,

''உவப்பத்தலைக்கூடி'' —'மக்களிருவர் உவக்குமாறு கூடி' எனப் பொதுமையில் உரைத்தனர் மணக்குடவர். பரிதியார் 'நல்லோரும் அல்லோரும் கூடினாலோ அல்லோரும் அல்லோரும் கூடினாலோ இத்தகைய நற்பயன் விளையாதே என்று ஐயுற்று நல்லோரும் நல்லோரும் கூடி' என்றனர். காளிங்கர், பரிமேலழகர் முதலிய அனைவரும் மணக்குடவர் போலப் பொதுமையிற் கூறினர்.

'அனைத்து' — 'போலும்' என உவமமாகக் கொண்டு' 'மக்களிருவர் கூடிப் பிரிவதுபோல்வது புலவர் தொழிலாகிய

கூடுதலும் பிரிதலும், என்பர் மணக்குடவர். பரிதியாரும் உவமமாகக் கொண்டாலும், பயிலுகின்ற காலத்தும் பயிற்சியை முடித்த காலத்தும் அக்கல்வியை மகிழ்வோடு பயிலுவதற்கும், பின்பு மறக்காமல் நினைத்துக் கொண்டேயிருப்பதற்கும் இயைத்து வேறுபொருள் காண்பர். இது புலவனுக்கேயுரியதான தனிச்சிறப்பைக் கருதுவதாதல் காண்க.

பரிமேலழகர் போன்றார் அனைவரும், அத்தன்மைத்து; அதாவது பயனைத்தரும் தன்மைத்து என சுட்டு முதலாகிய பண்படியாற் பிறந்த குறிப்பு முற்றாக்கினர். கூட்டத்தில் உவத்தலும், பிரிவில் நினைத்தலுமாகிய இரு தன்மைகளையுடையது அறிஞர் செயல்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

உவப்பத்தலைக்கூடி:

தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பாம் அகல் வானத்து
உம்ப ருறைவார் பதி. —நாலடி., 137

நற்றா மரைச்சுயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம். —வாக்கு., 24.

40.5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் கடையரே கல்லா தவர். (ஈகூடு)

உரைப்பகுதி:

அ) மணக்.: பொருளுடையார் முன்பு பொருளில்லாதார் நிற்குமாறு போல, அதனைக் காதலித்து நிற்றலுமன்றித் தாழ்ந்து கற்றாரிடத் தாவர் கல்லாதார் எ.று.

இது, எல்லாரினும் கற்றார் தலையாவார் என்றது.

ஆ) பரிதி.: செல்வர் முன்னே செல்வமில்லாதார் நிற்பது ஒக்கும் கல்வியுடையார் முன் கல்வியில்லாதார் நிற்பது எ.று.

இ) பரிப்.: பொருள் உடையார் முன்பு பொருள் இல்லாதார்

நிற்குமாறு போலத் தாழ்ந்தும் கற்றாரிடத்தர் ஆவர் கல்லாதவர் எ—று.

இது எல்லாரினும் தலைவனாம் என்றது.

ஈ) *காளி.*: கற்றார்முன் சென்று கல்லாதார் கற்குமிடத்துச் செல்வம் உடையார் முன்சென்று வறியவர் ஏக்கற்று ஒடுங்கி ஒரு பொருளை விரும்புமாப்போல, விரும்பிக் கற்றவர் கற்றார்[1] ஆவர். மற்றுக் கடையர்[2] என்பது புலைமக்கள் உயர்ந்தோர்முன் ஒன்றினைச்சொல்லக் கூசுமாப்போலக் கல்லாதார் ஆகிய கடுவினையாளரும்[3] கற்றார் முன் சொல்லத் தாமே கூசுவார் என்றவாறு.

உ) *பரிமேல்.*: பிற்றை நிலைமுனியாது கற்றல் நன்று[4], ஆதலான், செல்வர்முன் நல்கூர்ந்தார் நிற்குமாறு போலத்தாமும் ஆசிரியர்முன் ஏக்கற்று நின்றும் கற்றார் தலையாயினார், அந்நிலைக்கு நாணிக் கல்லாதவர் எஞ்ஞான்றும் இழிந்தாரேயாவர்.

உடையார் இல்லார் என்பன உலகவழக்கு: ஏக்கறுதல் ஆசையால் தாழ்தல். கடையர் என்றதனால் அதன் மறுதலைப்பெயர் வருவிக்கப்பட்டது[5] பொய்யாய மானம் நோக்கி மெய்யாய கல்வி யிழந்தார் பின் ஒரு ஞான்றும் அறிவுடையர் ஆகாமையின், கடையரே என்றார். இதனால் கற்றாரது உயர்வும் கல்லாதாரது இழிவும் கூறப்பட்டன.

காரி.: ஏக்கறுதல்—ஆசையால் தாழ்தல். கடையர் என்றதனால் மறுதலைப் பெயர் வருவிக்கப்பட்டது என்றார். இவ்வாறு உரையாத 'பிறவிப்பெருங்கடற்'[6]கும் இவ்வாறு வினவுக.

ஊ) *கவிராசர்*: வருத்தப்பட்டாகிலும் கற்கிறது நல்லது. கற்றால் அவர்கள் முன்னே கல்லாதவர்கள் நிற்கிறது எப்படிப்போலே என்றால் ஐசுவரியவான்கள் முன்னே தரித்திரவான்கள் ஏக்கற்று நின்றாற் போல, கற்றவர்களைப் பார்த்துக்கல்லாதவர்கள் நாணித் தலையிறக்கிக் கொள்ளுவார்கள் என்றவாறு.

ஏ) *பழைய 2*: செல்வமுடையார் முன்னே செல்வமில்லார்நிற்கு மாறு போலக் கல்விச் செல்வமுடையார் முன்னே கல்விச்

1. 'விரும்பிக் கற்றார்' பாடம் வே.ப.க
2. 'கடையார்' பாடம் வே ப.க
3. கடுவினையாளரும்—கொடுந்தொழிலர்.
4. புறநா. 183. வழிபாடு செய்தற்கண் வெறுக்காது கற்றல் நன்று என்பதாம்.
5. கடையர் என்பதற்கு மறுதலைப்பெயர் 'தலையாயினார்' என்பது.
6. குறள் 10.

செல்வமில்லாதவர் ஏக்கற்று நின்று கற்றாரே, கல்விச் செல்வமுடைய தலைமையராவர்; அப்படிக் கற்க மாட்டாதவரே கடையராவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் 'கல்லாதார் இல்லாதார்போல ஏக்கற்று நிற்றலும் அன்றி கற்றார் கடையர் ஆவர்' எனக்கூட்டிக் 'கடை' என்பதற்கு இடப்பொருள்கண்டு, 'கற்றாரிடத்தராவர்' என்றார். ஏக்கற்றும்—விரும்பி நிற்றலும் 'அன்றி' என ஒரு சொல் வருவித்தனர். இங்ஙனம் வருவித்தும், கடை என்பதற்கு இடப்பொருள் கண்டும் அவர் கண்ட பேறு கல்லாதார் கற்றாரிடத்து நிற்பர் என்ற முடிவுதான். 'கற்றார் செல்வர். அவர் முன்னே கல்லாதார் நிற்பது செல்வர் முன்னே வறிஞர் நிற்பது போலும்' என்பர் *பரிதி. காளிங்கர்* 'கல்லாதார் கற்றார் முன் சென்று ஏங்கிக் கிடந்து கற்றனராயின் கற்றார் ஆவர். கடையர் (அங்ஙனம் கல்லாதார்) புலைமக்கள் போல்வர்; அதாவது கற்றார்முன் சொல்லக் கூசுவர்' எனச் சிதைத்தும் அவாய் நிலையான் வேண்டியன வருவித்தும் பொருள் காண்பர். *பரிமேலழகரும்* அவர் போன்றாராகிய பலரும் 'கற்றார்' என்பதை எழுவாயாக்கித் தலையாயினார் என முடிக்தும் சொல் வருவித்துக் கற்றார் தலையாயினார் கல்லாதார் என்றும் இழிந்தாரே' என்பர். இது *காளிங்கர்* கண்ட உரை தான். கடை—கீழான நிலை எனப்பொருள் 'கண்டனர். இதுவும் *காளிங்கர்* கண்ட பொருள்.

கவிராசர் உரை *காளிங்கரைப்* பின்பற்றுகிறது. இவர்கள் உரை மாற்றம் கடை — கீழ்நிலை, வாயிலாகிய இடம் என்பதிலும், சில சொற்களை வருவித்தலிலுமாக அமைகிறது. இவற்றுள் *பரிமேலழகர்* உரை சில சொற்களே எதிர்மறை இயைபுபட விரிக்கப்படுதலான் தெளிவும் சுருக்கமும் உடையதெனல் கூடும். 'இல்லார்போல் ஏக்கறுதல் — வறியரைப்போலப் பொருள் விரும்பி ஏங்கிநிற்றல். இதனைச் 'சித்திரப்பாவையின் அத்தகவு ஒடுங்கி' ஆசிரியன் கருத்தின் அருள்வர நடத்தல் முதலான பிற்காலச்சான்றுகளும் வலியுறுத்தும்' என்பார் மு. ரா. அரு.

தேவநேயர், *பரிமேலழகரை* ஒட்டி எழுதி, 'கற்றார் உடையார் முன் இல்லாரைப்போல ஏக்கற்று நின்று கற்றவரேயாவர். (அங்ஙனம்) கல்லாதார் கடையரே' என இயைத்துப் பொருள் காணும் *ந. சி. கந்தையாஉரையையும்* ஒப்புவர்.

இராமலிங்கனார் 'ஏக்கற்றும்' என்பதனை ஏக்கு அற்றும்

எனப்பிரித்து எந்த விதமான ஏக்கமும் இல்லாத போதும் என உரை காண்பர். ஏக்கம்—ஒரு பொருளும் இல்லையே என்ற கவலை. அது அம் ஈறு குறைந்து உலகம் உலகு என நின்றாற் போல நின்றது எனக்கருதுவர். இன்சொல் ஏக்கறவு என ஒரு சொல்லாகவே 'மதியேக்கறூஉம்மாசறு திருமுகத்து' எனச் *சிறுபாணி*லும்' 'ஒருதிதி முலைக்கிடந்த ஏக்கறவால்' என *இராமாயணத்தும்* வருகின்ற தொன்மை மரபு காட்டுகிறது. இங்ஙனம் இரு சொல்லால் பிரித்துக் கூட்டிக் கவலையே யில்லாதபோதும் செல்வன் முன்னே இல்லார் நிற்பது போலக் கற்றவர் வாசலில் நிற்க வேண்டியவர்களே கல்லாதவர்கள் எனில், 'இல்லார்' என்ற சொல்லே நிற்பார் குறை யுடையர் என்பதைக்காட்டும் ஆதலின் இப்பொருள் சிறப்புடைய தன்று.

குழந்தை ஏனையோர், இல்லார் உடையார் முன் பல்லெல்லாந் தெரியக்காட்டிப் பருவரல் முகத்திற்றேக்கி நிற்றலைக்கருத, இவர் விரும்பி நிற்பதைக் கருதுகிறார். இல்லார் பொருளை விரும்பிப் பணி வுடன்நிற்பர் கல்லாதார் கல்வியை விரும்பிப் பணிவுடன் நிற்க வேண்டும் என்பதையே இக்குறள் காட்டுகிறது.

மு. கோ கற்றார் கடையரே? என ஏகாரத்தை மாறுகோள் பொருளிற் கொண்டு கற்றார் கடையராகார் கல்லாதாரே கடையர் என்று உரை காண்பர். கல்வியும், செல்வமும் ஆகிய இரண்டையுமே செல்வம் என வள்ளுவர் வழங்கலின் பூரியார் கண்ணும் உள பொருட் செல்வத்திற்கு ஏக்கற்று நிற்றலை, சிறந்தார் மாட்டேயுளதாகிய கல்விச் செல்வத்திற்காகநிற்க என்ற நயம் சிறந்தது.

சி. இலக்குவனார் முன் இல்லார் ஏக்கற்றும் (ஈட்டுதல் போல) கற்றார் உடையார்; கல்லாதவர் கடையர் எனச் சிதைவுகண்டு, முன்வறியார் ஏக்கற்று நின்று பொருளையீட்டுதல் போலக் கல்வியை ஆர்வத்துடன் படித்தவரே படித்தவர்கள்; அங்ஙனம் கல்லார் என்றும் கடையரே என்றனர். இவர் கருத்து விரும்பி ஈட்டவேண்டும் என்ற அளவிலே அமைகிறது. பணிவுடைமையனாதலைக் குறித்திலது எனலாம்.

இங்ஙனம் காணப்பெறும் பல உரைகளில், ஆசிரியர்க்கு அடங்கி ஆர்வத்தோடு படிப்பதே முறை என்ற **வள்ளுவர்** காலப்பயிற்சி நிலையைக் காட்டும் உரைகளே சிறந்தன. கற்றாரின் வறுமைநோக்கிச் செல்வர் அவரிடம் சென்று கற்றலை அவமதியாக எண்ணுவரன்றே! அவ்வெண்ணத்தால் அவர்க்குக் கல்வி வளராமையைக் கருதி இல்லார்

போல் கற்கவேண்டும் என்றார். செல்வமுடைமை பொருளுடைமை என்றிரண்டுமே உடைமையாக மதிக்கப்படுமாதலின் கற்றார் பாலுள்ள கல்வியையும் செல்வமாக எண்ணித் தம்பாலுள்ள கல்வி யின்மையை வறுமையாக எண்ணிக் கற்கவேண்டும் என்பதாம். பள்ளமடையில் தண்ணீர்போல பணிவுள்ள இடத்திலேயே கல்வி தங்கும் என்பதாம்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

உடையார் முன் இல்லார்போல்.

''கல்வி யுடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமும் செல்வ மெனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின்.'' —நீதி நெறி .16.

முற்றும்:

''களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.'' —நாலடி, 133

ஒருபுடை ஒப்புமை:

''வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பாலொருவனும் அவன்கட்படுமே.'' —புறம். 183, 8–16

''கற்றானுங் கற்றார்வாய்க் கேட்டானு மல்லாதான்
தெற்ற வுணரான் பொருள்களை—எற்றே
அறிவிலான் மெய்த்தலைப் பாடு பிறிதில்லை
நாவற்கீழ்ப் பெற்ற கனி.'' —பழமொழி.11

ஒ) மேற்கோள் பகுதி:

யா.வி. :ஒருவிகற்பக் குறள் வெண்பாவிற்கு மேற்கோள். (சூ.59.)

குண :ஷி (யா . கா . 24 .)

40.6. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு. (உகசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: அகழ்ந்த அளவு மணற்கேணி[1] நீருண்டாம்; அது போல மாந்தர்க்குக் கற்ற அளவு அறிவுண்டாம் எ.று.

இது அறிவுண்டாம் என்றது.

ஆ) பரிதி.: ஊற்று எத்தனையாழமுண்டு அத்தனையாழமும் தண்ணீர் ஊறும். அதுபோலக் கல்வி மிடுக்கு எத்தனையுண்டு அத்தனையும் அறிவூறும் எ.று.

இ) பரிப்.: அகழ்ந்த அளவு மணற்கேணி நீருண்டாம். அதுபோல மாந்தர்க்குக் கற்ற அளவும் அறிவு உண்டாம் எ—று.

இஃது அறிவுண்டா மென்றது.

ஈ) காளி.: ஒருவன் கல்லுதற்கு[2] முயலும் முயற்சியானது எவ்வளவைத்து? மற்று அவ்வளவைத் தாக்கி வந்து ஊறாநிற்கும் மணற்கேணியின் நீரானது; அதுபோல உலகத்துப்பண்புடையோர்க்குத்தாம் கற்கும் கல்வி முயற்சியானது எவ்வளவைத்து மற்று அவ்வளவைத்தாகவந்து ஊறா நிற்கும் அக்கல்வியின் நிகழும் அறிவும் எ—று.

உ) பரிமேல்,: மணலின்கட் கேணி தோண்டிய அளவிற்றாக ஊறும், அதுபோல மக்கட்கு அறிவு கற்ற அளவிற்றாக ஊறும்.

ஈண்டுக் கேணி என்றது அதன்கண்நீரை, அளவிற்றாக என்றது அதனளவும் செல்ல என்றவாறு. சிறிது கற்ற துணையான் அமையாது மேன்மேல் கற்றல் வேண்டும் என்பதாம். இஃது ஊழ் மாறுகொள்ளா வழியாகலின், மேல் 'உண்மை அறிவே மிகும்' என்றதனோடு மலையாமை அறிக[3].

காரி.: தொட்டல்—தோண்டல். 'தோட்கப்படாத செவி[4]' துளைக்கப்படாத செவி ஆதலால், தொட்டலும் தோட்கலும் வேறு.

---

1. கேணி—சிறுகுளம். திசைச்சொல். கேணி நீரூறுவதாக இருக்கக்கேணியூறும் என்ற இடத்து நிகழ்பொருளின் தொழிலை இடத்தின் மேல் ஏற்றிச் சொன்னதாம். அன்றி கேணி என்ற இடப்பெயர் நீருக்கான இடவாகுபெயருமாம்.
2. கல்லுதற்கு—தோண்டுதற்கு.
3. மேல்—ஊழதிகாரத்து 3-வது குறளில். உண்மையறிவு. கல்வியானாய அறிவு செயற்கையாய் உண்மையறிவை விளக்க நிற்பது. ஊழ்மாறுபடின் விளக்கமுறாது இயற்கையறிவே மிக்குத்தோன்றும் என்பது.
4. குறள் 418.

ஊ) **கவிராசர்:** மணலிலே கிணறு எம்மாத்திரம் ஆழம் தோண்டினால் அம்மாத்திரம் தண்ணீர் சுரக்கும். அப்படிப்போல மனுஷர்களும் எம்மாத்திரம் நூலைக் கற்றார் அம்மாத்திரம் அறிவு உண்டாம் என்றவாறு.

சிறிது கற்றுவிடாமல் மேன்மேலுங் கற்கவேண்டுமென்பதாயிற்று.

ஏ) **பழைய 2:** மணலின்கண் கேணி, தோண்டிய அளவிற்றாக ஊறும்; அதுபோல, மக்கட்கு அறிவு கற்ற அளவிற்றாக ஊறும்.

மல்லர்: எ—து தோண்டுகிறதுக்கு அளவாக மணற்கேணியில் தண்ணீர் ஊறும். படிக்கிறதுக்கு அளவாக மனுஷருடைய அறிவு வளரும் எ.று.

கொஞ்சமாய்த் தோண்டினால் நிறைய தண்ணீர் ஊறாது. அப்படிப் போல சில படிச்சதினால் பெரிய அறிவு உண்டாகாது. ஆகையால் மென்மேலும் படிக்கவேண்டியது என்பது கருத்து.

தொடல்—தோண்டல்; அனைத்து—அளவாகும்; மாந்தர்—மனுஷர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

உரையுலகத்தில் கருத்து மாற்றம் மிக இல்லாத குறளிது. ஆயினும் **பரிமேலழகர்** இக்குறள் கருத்து 'நூண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன் உண்மையறிவே மிகும்' என்பதனோடு மாறுபடுவதாகக் கருதி 'ஊழ்மாறுகொள்ளாதவழியாகலின் மலையாமை அறிக என்றார்.

தேவநேயர், 'ஈண்டு மிகும் என்றது அறிவு வளரும் வகை பற்றியது; ஆண்டுக் கூறியது மிக்க அறிவு பயன்படும் வகை பற்றியது; நோக்கு வேறாதலான் மாறுபாடின்று; மாறுபாடில்லையாகவே அதற்கு அமைதி கூறியதும் மிகையாம்' என மறுப்பர்.

'கற்றனைத்து அறிவு ஊறும்' என்பதும் 'உண்மையறிவே மிகும்' என்பதும் ஒரு நோக்கு உடையனவே. ஆகவே மாறுபாடும் உடையதாம்; அமைதியும் இன்றியமையாதது தான். ஆனால் **பரிமேலழகர்** கூறியதும், **தேவநேயர்** முடிவும் இதற்கு ஏற்ற அமைதியாகாது.

'தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி மெய்வருத்தக் கூலி தருவது' போல, தோண்டிய அளவு நீர் சுரப்பதுபோல உழைப்புக்கு

ஊதியமாகும் அளவு அறிவுமிகுதலும்—சுருங்கலும் உளவாம். ஆனால் உயிர்க்குணமாகிய அறிவு மிகும் ஆண்டு. ஈண்டுப்பயிலும் முயற்சிக் கேற்பச் சிறிது சிறிதாக ஊறிக்கொண்டே இருக்கும். இரண்டிடத்தும் உழைப்பின் அளவாக ஊதியம் கிடைத்தலே அறிவிக்கப் பெறுகின்றன. ஊழ்துணையாயின் சிற்றுழைப்பால் பெரும் பயனை எய்தலாம். என்பதே. ஆண்டும் 'மிகும்' என்றாரேயன்றிப் பயன்படும் என்றனரல்லர்.

இதின் தொடர்பான சில சிந்தனைகள்:

மணற்கேணியானாலும் தோண்டிய அளவு நீர் சுரப்பதில்லை. நிலத்தில் நீர் மட்டமும் ஓட்டமும் எவ்வளவு ஆழத்தில் இருக்கிறதோ அந்த ஆழத்திற்குக் கீழே தோண்டிச் சென்றாற்றான் நீர்மட்ட அளவுக்கு நீர் சுரக்கும். அதுபோல மனிதனிடமும் உயிர்க்குணமாகிய உண்மையறிவுதான் புறக்கல்வியின் முயற்சியால் மிகுகிறது என்பதே இக்குறட் கருத்து. ஆதலாலும் முரண் ஆகாது.

மணற்கேணியாயிருப்பதால் ஆழத்தோண்டினால் கரையிடிந்தும் சரிந்தும் தோண்டிய ஆழத்தையும் தூர்த்துவிடும். அதனால் நீர் நசையாளன் ஆழத்தோண்டவும் வேண்டும்; கரையின் சரிவு அல்லது இடிபாட்டைக் காக்கவும் வேண்டும்: இருதொழிலும் ஒருங்கு நிகழின் அன்றி நீரைப்பெறுதல் இயலாது. அதுபோல் நாம் பயிலும்போது, மறக்காமல் பழம்பாடம் போற்றுதலும் வேண்டும். மேன்மேலும் பல நூல்களைப் படிக்கவும் வேண்டும் என்பார் மணற்கேணியைக் கூறினர்,

ஊறுதல்—எடுக்கச் சுரத்தல். அதுபோல, படிக்கப்படிக்கக் கேட்பார்க்குச் சொல்லச்சொல்ல அறிவு ஊறும் என்றது. ஊறுதல்—உள்ளது சுரத்தல். அதாவது உண்மை அறிவு வெளிப்படுதல். பல நூல்களைப் படிக்கும் முயற்சியான் அறிவுமிகும் என்பதாம், இதனால் கல்விப்பயிற்சியினால் ஆவது அறிவைப் புதிதாக உண்டாக்குதல் அன்று; உயிர்க்குணமாகிய இயற்கையறிவை மிகுவித்தலும் விளங்கச் செய்தலுமேயாம் என்ற அறிவின் இலக்கணமும் உணர்த்தப்பெறுதல் காண்க.

'கேணி' சிறுகுளத்தைக் கேணி என்றல் அருவா நாட்டார் வழக்கு. அருவாநாடு அன்றைய தென்னார்க்காடு மாவட்டமும் செங்கற்பட்டின் தென்பகுதியும். ஆதலால் **வள்ளுவர்** திருமயிலை வாழ்வாளர் என்பர். அங்ஙனமாயின் ஊருணியைக் கூறுவதால் தென் பாண்டிநாட்டார்; தக்கிணமாமதுரைக்கச் சென்ப என்பது வலியுறுமே என வினா எதிர் வினாவியமைவோம்.

இக்குறள் எடுத்துக்காட்டுவமை என்பாரும் உளர். வை. மு. கோ. எடுத்துக்காட்டுவமையாயின் பொதுத்தன்மை வேறுபட்டிருத்தல் வேண்டும். ஈண்டு 'ஊறும்' என்பதே. உவமையும் பொருளுமாகிய ஈரிடத்தும் இருத்தலின் எடுத்துக்காட்டுவமையன்று தொடர் முழுவதுவமையணி என்றலே ஏற்கும். முதற்குறளில் 'அகரமுதல்'. 'உலகமுதற்று' என்பதைப் போல என்பர்.

தொடர் முழுவதுவமையணியை வடநூலார் பிரதிவஸ்து அலங்காரம் என்பர். இதன் விரிவையும் விளக்கத்தையும் முதற்குறள் குறிப்பிற் காணலாம்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

கற்றனைத்தூறும் அறிவு:

''நூல்வரைத் தொடர்ந்து பயத்தொடும் பழகி
நுணங்கிய நுவலரும் உணர்வே'' —கம்ப : நகர. 8.

''நீரளவே யாகுமாம் நீராம்பல் தாங்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு'' —வாக்கு, 7

தொட்டனைத்தூறும் மணற்கேணி:

''இறைக்க ஊறும் மணற்கேணி ஈயப்பெருகும் பெருஞ் செல்வம்''
—பழ.,

ஒ) மேற்கோள் பகுதி:

சங்கர: தொகுத்தல் என்னும் செய்யுள் விகாரத்திற்கு மேற்கோள். தொட்டது கற்றது எனற்பாலன தொட்டு கற்று எனத் தொக்கவாறு காண்க என்பர். (நன். 155)

சுவாமி: 'அதிமதி நுட்பமோடு அதிகலை கற்பினும் விதியது வசத்தால் விதிவிலக்கு அயர்வர்' என்பதற்கு மேற்கோள்.
(இ. கொ. 6.)

40.7. யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு. (கூகை)

உரைப்பகுதி:

அ) மணக்., யாதோரிடத்தே செல்லினும் அதுவே தனது நாடும் ஊரும் போலவாம்[1], ஆதலால், ஒருவன் சாந்தனையும் கல்லாது ஒழுகுதல் யாதினைக்கருதி எ.று.

1. 'போலாம்' பாடம் வே.ப.க.

இது கல்வி எல்லோரானும் கைக்கொள்ளப்படுவதாம் என்றது.

ஆ) *பரிதி.*: எந்தத் தேசமேயானாலும் தன்தேசமேயாம்; மாலூராகிய வைகுண்டப்பதம் மறுமைக்காம்; ஆதலால் சாமளவும் கல்வியே பயிலுவான் எ—று.

இ) *பரிப.*: யாதோரிடத்துச் செல்லினும் அதுவே தனதுநாடும் ஊரும் போலாம். ஆதலால் ஒருவன் சாந்துணையும் கல்லாது ஒழுகுதல் யாதினைக் கருதியோ எ—று.

இஃது எல்லாரானுங் கைக்கொள்ளப்படுவர் என்றது.

ஈ) *காளி.*: இங்ஙனம் கற்று உணர்ந்த பெரியோர்க்கு வேறு யாதானும் ஒருநாடும் யாதானும் ஓரூரும் முன்னந் தாம் பயின்ற நிலம் போலத் தமது நாடும் தமது ஊரும் ஆம். அதனால் மக்கட்பண்பு உடையான் ஒருவன் தனது யாக்கை இறந்துபடும் துணையும் கல்லாது ஒழிகின்ற முறைமை என்ன முறைமையாயிருக்கின்றதோ அரசர்க்கும் யாவர்க்கும்[2] எ—று.

உ) *பரிமேல்.*: கற்றவனுக்குத் தன்நாடும் தன் ஊருமே யன்றி, யாதானும் ஒருநாடும் நாடாம், யாதானும் ஓரூரும் ஊராம், இங்ஙன மாயின் ஒருவன் தான் இறக்குமளவும் கல்லாது கழிகின்றது என் கருதி எ—று.

உயிரோடு சேறலின் சாந்துணையும் என்றார். பிறர் நாடுகளும் ஊர்களும் தம்போல் உற்றுப் பொருட்கொடையும் பூசையும் உவந்து செய்தற்கு ஏதுவாகலின் கல்வி போலச் சிறந்தது பிறிதில்லை; அதனையே எப்பொழுதும் செய்க என்பதாம்.

ஊ) *கவிராசர்*: கல்வியைக் கற்றவனுக்கு யாதொரு நாடும் தன்னாடாம்; யாதொரு ஊரும் தன்னூராம். இப்படியாகிறது அறிந்திருந்தும் சாகிற பரியந்தம்[3] கல்லாமல் நாளை விருதாவிலே[4] கழிக்கிறது என்ன காரியத்தினாலே என்றவாறு.

ஏ) *பழைய 2*: கற்றவனுக்குத் தன் நாடும் ஊருமேயன்றிப் பிறநாடும் தன்னாடாம்; பிறவூரும் தன்னூராம் எனக் கருதி ஒருவன் கல்லாது காலங் கழிக்கின்றதென்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'மால் ஊராம்' எனப்பிரித்து 'மாலூராகிய வைகுண்டபதமாம்'

2. ஒழிகின்ற மூனறமையாயிருக்கின்றதோ ஆர்க்கும் யாவர்க்கும்
3. பரியந்தம்—வரை. (இ முதல் இது வரை என்பது போல அளவு குறித்த பெயர்ச் சொல்.)
4. விருதாவிலே—பயனின்றி.

என்றுள்ளது பரிதியுரை. அறத்துப்பாலில் 'கடவுள் வாழ்த்துப்' பகுதியில் 'சிவன் சிவந்தான்' 'சிவனடிசேர்ந்தார்', 'பரமேஸ்வரன் பாதத்துணை' என்று சொல்லி வந்தவர் ஈண்டு இங்ஙனம் சொற் சிதைவு செய்யார்; பொருளுங்கொள்ளார். ஆதலால் எழுதுவோர் செய்த பிழையாதல் வேண்டும். இங்ஙனம் பிரித்தவர் 'ஊராம்' என்பதன் பின்வரும் 'மால் என்னொருவன்' எனக்கொண்டு அறிவு திரிந்து அல்லது மயங்கிய ஒருவன் கல்லாதவாறு என்? என கூறியிருப்பாரேல் அவர் கருத்து அதுவே எனலாம். அங்ஙனமின்மை யின் இது எழுதுவோர் பிழையே என்பது தெளிவு.

'சாந்துணையுங் கல்லாதவாறு' இதில் உரையாசிரியர், எழுத்துப் போக்கில் இருவகையான கருத்தமைதியைக் காணலாம். ஒன்று, சாகும்வரை படித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பது. மற்றொன்று, சாவதற்குள் எப்போதாயினும் படித்தாலும் போதுமே; அங்ஙனம் படியாமலிருப்பது ஏனோ? என்பது.

மற்றொன்றும் கருதலாம்; 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' 'இளமையிற்கல்' என்ற அறிவுரையும் அறவுரையும் கற்றற் குரிய காலம் இளமை என்றன. அதுகழியின் பின்னர்ப்படிப்பது வாழ்க்கைக்குப் பயன்படுவதன்மையானும், காலங்கெட்ட பிறகு முயன்றென்ன? என்பதனால், பயன்மிகுதியில் என்ற கருத்தை மறுக்கவும், கற்பதற்குக் காலவரையறை இல்லை;என்றுங் கற்கலாம். இப்போது படித்தவை மறுபிறப்பினும் தொடரும் என்பதை வலியுறுத்த வும் சாந்துணையும் கல்லாதவாறு என்? என வினவுகிறார் எனலாம். 'படிக்க' என ஏவுவதைக் காட்டிலும் படிக்காதது ஏன்? என வினவுதல் இன்றியமையாமையை மிகுவிப்பதாகும்.

இராமலிங்கனார், 'சாகிறவரை புதுப்புது நூல்களைப் படித்துக் கொண்டேயிரு; என்றவர் விளக்கத்தில் ஒரு மொழியை மட்டும் கற்றார் அம்மொழி வழங்கும் நாட்டில் செல்வாக்குப் பெறுவர் அதனால் யாதானும் ஊராகலாம். யாதானும் நாடாக இயலாது. ஆதலால் பல மொழிகளையும் பயில்க' என்றனர்.

தேவநேயர், ஒரு மொழிமட்டுங் கற்ற கவிஞன் வேற்றூருக்கும் நாட்டுக்கும் சென்று சிறப்பெய்துதலைக் குறித்ததேயன்றிப் புலவன் பன்மொழிப் பயிற்சி பெறுதல் வேண்டும் என்பதை நோக்கியது அன்று. **கம்பன்** தெலுங்கு மொழி வழங்கும் ஓரங்கல் நாட்டில் தெலுங்கு மன்னன் பிரதாபருத்திரனால் பாராட்டப் பெற்றான். தமிழே தெரிந்த வணிகர்கள் நந்தன் நாட்டிலும் இமயத்திலும் சென்று வணிகம் நடத்தினர். ஆகையால் தன்மொழியில் தலைமையிருந்தாற்

போதும் வேற்றுமொழியும் வல்லவர்களை வலியாகக்கொண்டு எங்கும் பாராட்டுப் பெறலாம் என மறுப்பர்.

வரத. 'சாந்துணையும் பயிலற்குக் கல்வி கரையில ஆதலாற் பயிலுக என்பர். கல்வி கரையில என்றதால் படித்துக்கொண்டேயிரு' என்பது கருத்தன்று. 'ஆராய்ந்து அமைவுடைய கற்க' என்பதே தொல்லோர் துணிவு. வள்ளுவரும் கற்பவை கற்க என்றது இக்கருத்தினதேயாதல் தெளிவு'.

மு. கோ. 'சாந்துணையும் கற்றால்தான் எல்லாவற்றையும் நாடுஊர்ஆக்கலாம்' என்பது நாடுகின்ற ஊராக்கலாம் என்ற கருத்தினதாதலை' 'நாடு—நாட்டுப்பிரிவுமாம்' என்ற அவர் குறிப்பே காட்டுகிறது. சாந்துணையும் கற்ற அத்தனையனுபவங் கொண்டு எழுத வேண்டும் என்பது கற்க வேண்டாம். கற்ற அவ்வளவு அனுபவ மாவது கொண்டுஎழுத வேண்டும் என்கிறார். மேலும் சாந்துணையும் ஊராமால் எனக்கூட்டி நாடோடி வாழ்வில் கல்வி வளராது என்ற கருத்தைக் கொணருகிறார் இங்ஙனம் பலப்பல சிந்தனைகளைத் தருவதால் மூலத்தின் துணிபு நிலைகுலையும். அன்றியும் மயங்க வைத்தல் என்ற குற்றத்திற்கும் இலக்காகும் என எண்ணித்துணிக.

இவ்வுரைகளுள் குறளின் சொல் முடிவுக்கு இயையச் சாவதற்குள் எப்போது தொடங்கியாயினும் படித்து எந்த நாட்டையும் ஊரையும் தம்முடையதாக்கிக் கொள்ள முயலு என்ற கருத்தமைந்த உரைகள் சிறந்தன.

ஒ) ஒப்புமைப்பகுதி:

யாதானும் நாடாமால்

"காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" —புறம் 206-10.13

"ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அ.துடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை — அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம் ஆதலினால்
ஆற்றுணா வேண்டுவதில்" —பழ.நா.55

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் — மன்னற்குத்
தன்தேசம் அல்லால்சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றஇட மெல்லாம் சிறப்பு." —வாக்கு.26

யாதானும்.....ஊராம்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" —புறம்.192.

ஓ) மேற்கோள்பகுதி:

நச்.: சீர்வகையடிக்கும் 'யாதானு நாடாமால் ஊராமால் யாதோ தான்' என்றால் சீர்வகைத் துள்ளலோசையும் 'என்னொருவன்' என்றால் சீர்வகைச் செப்பலோசையும் பிறக்குமாறு இசையொடு சேர்த்தி உணர்க என்பர்.

தொல். பொருள். செய்: 11.)

'ஈரசை கொண்டு மூவசை புணர்த்தும், சீரியைந்திற்றது சீரெனப் படுமே' என்பதற்கு மேற்கோள் (ஷி. 12)

குறுவெண்பாட்டிற்கு மேற்கோள். (ஷி. 159)

யா. வி.: ஏந்திசைச் செப்பலோசைக்கு மேற்கோள். (சூ. 57)

40.8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து. (கூகூஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒருவனுக்கு ஒரு பிறப்பிலே கற்ற கல்விதானே எழுபிறப்பினும் ஏமமா[1]தலை உடைத்து எ.று.

கற்ற கல்விதான் என்று கூட்டுக. இது வாசனை தொடர்ந்து நன்னெறிக்கண் உய்க்கும் என்றது.

ஆ) பரிதி.: ஒரு பிறப்பிலே கற்ற கல்வி எழுபிறப்புக்கும் உதவும் எ.று.

இ) பரிப்.: ஒருவற்கு ஒரு பிறப்பிற் கற்ற கல்விதானே ஏழு பிறப்பின் கண்ணும் காவல் ஆதலை யுடைத்து எ-று.

கற்ற கல்விதான் என்று கூட்டுக. இது வாசனை தொடர்ந்து நன்னெறிக்கண் உய்க்கும் என்றது.

ஈ) காளி.: ஒரு பிறப்பின்கண் நல்வழிக்கு உரிய கல்விகளைத் தன் நெஞ்சத்து ஒருப்பாட்டுடனே[2] தான் கற்ற கல்வியானது, அங்ஙனம்

1. ஏமம்-பாதுகாப்பு.
2. 'ஒருப் பாடுடனே' பாடம் வே.ப.க.; ஒருப்பாடு-ஒரு மனப்பட்ட தன்மை,

கற்ற இணையிறந்த இறைவற்கு இம்மைக்கண் உளதாய்[3] நீதிப் பொருளாகிய இன்ப உறுதியே அன்றிப் பின்பு நிகழும் மறுமையாகிய இனிய சேம உறுதியையும்[4] உடைத்து என்றவாறு.

உ) *பரிமேல்.*: ஒருவனுக்கு, தான் ஒரு பிறப்பின்கண் கற்ற கல்வி ஏழுபிறப்பினும் சென்று உதவுதலையுடைத்து ஏ—று,

வினைகள் போல உயிரின்கட்கிடந்து அது புக்குழிப் புகுமாதலின்,[5] எழுமையும் ஏமாப்புடைத்து ஏன்றார், எழுமை மேலே[6] கூறப்பட்டது. உதவுதல்–நன்னெறிக் கண்ணே உய்த்தல்.

ஊ) *கவிராசர்*: ஒருவனுக்குத் தான் ஒரு பிறப்பிலே கற்ற கல்வி ஏழேழு பிறப்பினும் சென்று உதவும் எ-று.

ஏ) *பழைய 2*: ஒருவனுக்குத் தானொரு பிறப்பில் கற்ற கல்வி ஏழுபிறப்பினுஞ் சென்றுதவிப் பெருமை தரும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

காளிங்கர் உரைப்போக்கு 'ஒருமைக்கண்- ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து' எனப்பிரித்து, இயைத்துப் பொருள் கொள்ளப் பெற்றுள்ளது என்று தோன்றுகிறது. அங்ஙனம் கொள்ளின் 'ஒருமைக்கண்— ஒருபிறப்பின்கண். தான்கற்ற— தந் நெஞ்சத்து ஒருமைப்பாட்டுடனே தான் ஒரு பிறப்பின்கண் கற்ற கல்வியானது ஒருவற்கு— அங்ஙனம் கற்ற அரசற்கு இம்மைக்கண் உளதாய நீதியாகிய இன்பப் பொருளாகிய உறுதியேயன்றி, எழுமையும்—பின்பு நிகழும் மறுமையாகிய இனிய சேம உறுதியையும் உடைத்து' என்ற பதவுரை சிலவற்றை வருவித்துரைப்பதாற் கிடைக்கக்கூடும். இவ்வுரையால் அவர் காட்டவிழையும் புதுமை, ஒருமைக்கண்— ஒருபிறப்பிலே, ஒருமைப்பாட்டோடு, ஒருவற்கு என்பதை மக்கள் என்ற பொதுமையினீக்கி, இயல் இயைபு நோக்கி 'இறைவற்கு' எனக்கொள்ள வைத்திருக்கிறது. அங்ஙனமே 'எழுமையும்' என்பதை எழுகின்ற அதாவ இனிவர இருக்கின்ற மறுமையிலும் என்றும், அரசற்குரிய இம்மையின்பம் நீதியான் வரும் இன்பம் எனவும், எண்ணச் செய்கிறது. ஆகவே 'கல்வி' என்னும்

---

3. 'உளதாம்' பாடம் வே.ப.க.
4. 'உறுதியை' பாடம் வே.ப.க.
5. நல்வினை தீவினைகளின் காரியமாகிய தருமாதருமங்கள் உயிரினிடத்து உற்பூதமாய் இருப்பது போலக் கல்வியறிவின் சமஸ்காரமும் உயிரினிடத்திருக்கும் என்பது உணரத்தக்கது.
செய்ந்நன்றியறிதல் 7-வது குறள்.

அதிகாரம் மக்கட் பொதுமையிற் செல்வத்தைச் சிந்தித்து இயற் பொருளமைதியோடு இயைபுபடுத்துகிறது இவ்வுரை எனலாம்.

ஏனையோர் உரைகள் எவற்றைப் படிக்கவேண்டும், எப்படிப் படிக்கவேண்டும் என்பவை முன்னரே உணர்த்தப் பெற்றமையின் அவற்றை விட்டு இம்மையிற்கல்வி மறுமைக்கும் தொடரும் என்பதை வலியுறுத்துவ ஆயின. *பரிமேலழகர்* போன்றார் 'ஏழுவகையான பிறப்பு' என்று கூற, *காளிங்கர்*, கல்வியறிவு மக்கட்பிறவிக்கே பயன்படுவதாதலை எண்ணி எழுகின்ற மறுபிறப்பு என்றுரைத்தனர் என்பதைச் சிந்திக்கச் செய்கின்றது.

பரிமேலழகர் 'எழுமை மேலே கூறப்பட்டது' என்றது 'எழு பிறப்புந்தீயவை' என்ற (62) குறளுக்கு அவர் தந்த விளக்கத்தைக் கருதியது ஆம்; அங்கு அது ஒருவகையான் ஏற்புடையதாயினும் ஈண்டு ஊர்வனவும் பறவையும் விலங்கும் நீர்வாழ்வனவும் முதலாயின வற்றைக் கல்வியறிவு தொடரும் என்றல் ஏலாமையறிக. முன்னைய ஆசிரியராகிய *காளிங்கர்* மக்கட்பிறப்பில் ஒருமைக்கண் கற்ற கல்வி மறுமையினும் பயன்தரும் என்றார். மக்களாகப் பிறந்து கல்வி பயின்றார் தீய செய்யார்; செய்யாராகவே இழிபிறப்பும் இன்றாம் ஆகவே மறுமை மக்கட்பிறப்பேயாம் என்ற துணிவு பற்றி என்க. இங்ஙனமே எழுமை, எழுபிறப்பு வருமிடங்களில் பகுத்துணர வைக்கின்றனர் உரையாசிரியர்கள்.

மேலும் *காளிங்கர்* ஏனையோர் போல 'ஏமமாதல்' 'அரணாதல்' 'வலியறிதல்' என்னாது 'சேம உறுதியாதல்' என்றார். சேமஉறுதி — எய்ப்பினில் வைப்பாகும் உறுதியாகிய பயன் என்றமை காண்க. 'கல்வி எழுகின்ற மக்கட்பிறவிகளிலும் உறுதியாம்' என்னும் *காளிங்கர்* உரை, கொண்டு கூட்டும், வருவித்துரைத்தலும் முதலியவற்றால் சுழலச் செய்வதாயினும் தெளிவாகக் கல்வி மக்களுக்கேயுரியது என்ற உரிமைச் சீட்டையும் மறுமையில் ஞான வாயிலாக வீடளிக்கும் என்ற உறுதிமொழியையும் வழங்குகிறது என்பது தெளிவு.

தேவநேயர், 'எழுபிறப்பு — எழுகின்ற மக்கட்பிறப்பை' என்ற தும், 'அன்றேல் அக்கல்வியறிவு பயன்படாமையும் காண்க' என்ற குறிப்பும் மிகச் சிறந்தது. இது காளிங்கர் கருத்தைத் தழுவியது. 'ஏழு பிறப்பு வரையில்' என்பர் *இராம*. அதற்குமேற்பயன்படாது என்ப தன்று. எழுகின்ற பிறப்பு மக்களாகவே இருந்து. அதிலும் அது பயன் பட மேன்மேலுங் கற்க, அச்செயல் எல்லையற்ற மக்கட்பிறவி ஏற்படி னும் பயன்படும் என்பதேயாம்.

குழந்தை: ஒருமை எழுமை என்பவற்றிற்கு ஓரிடம் ஏழிடம் எனப்பொருள் கண்டு, 'ஒருவன் ஓரிடத்திலிருந்து கற்றான்; அவன் செய்த நூல்கள் பலவிடங்களிலும் (உலகெலாம்) பரவி அவனைச் சிறப்பிக்கிறது' எனக் கருத்தும்இங்குகொணர்வர்.இது மறுபிறவியுண்டு என்பதை ஒவ்வாதார் கொள்கை. வள்ளுவர் வாய்மொழியில் எழுமை என்பது எழுதலையுணர்த்தும் தொழிற்பெயராகவும் ஏழு பிறப்பு என்னும் பொருளிலே வழங்குவதாலும், இடப்பொருளில் வழங்காமை யானும் இங்ஙனம் பொருள் கோடல் இயைவதாயின் ஏற்க. ஜி. வரத. பின்வரும் 'கேடில்விழுச் செல்வம்' என்ற குறளையும் இதனோடு இணைந்து எண்ணி இவர் எழுதும் கல்வி செல்வங்களுக்கு உள்ள நான்கு வேறுபாடுகள் சிறந்தன.ஆயினும் 'நம்மைவிட்டு இம்மையிலே பிரிந்து விடுகிற செல்வத்தைக் காட்டிலும் ஏழுபிறவியிலும் பின் தொடருகின்ற கல்வியே சிறந்தது என்பது இக்குறட்கு ஏற்றது ஒன்றே யாகும். மு. கோ. எழுமை—ஏழு பருவம், ஏழுதலைமுறை, ஏழு வகைப்பட்ட உறவினர்,ஏழுமடங்கு பொருள் என்றெல்லாம் சிந்தித்துச் சிந்தித்து பொருள் தருவர். ஏழுபருவம்—பெண்களுக்கு உண்டு;ஆண் களுக்கும் உண்மை இலக்கிய உலகில் அறியக்கூடலில்லை. ஏழு தலை முறை எனின், கல்வி உணர்வாகக் கற்றவன் உயிரையே ஒட்டி நிற்பது ஆகலின்,அன் மகனுக்கும்,மகனின் மகனுக்கும் வரும்என வள்ளுவர் கூறியிருப்பாரோ என்ற ஐயம் தோன்றும்போது, 'மகன்றிவு தந்தையறிவு' என்ற சொல்லதிகார எடுத்துக்காட்டு வந்து தலை காட்ட, தந்தையறிவு மகனுக்காகலாம்; ஆனால் ஏழுதலைமுறை வருமா! என்ற எண்ணம் தடுக்கிறது. மகனுக்கே இந்நிலையாயின் உறவினர்கட்கு எங்கே? ஏழு மடங்கு பொருள் எனிலோ அது நியதியான நிகழ்ச்சியன்று. பயன் படலும் ஆம். அறவே பயன் படாது போதலும் கூடும். ஆதலால் கற்றவனை ஒட்டி நின்று தொடர்ந்து வரும் என்ற கருத்தே வலியுறுகிறது.

சி.இ. 'உள்ள ஒருமைப்பாட்டோடு கற்றகல்வி மிகுதியும் ஏமாப்புடைத்து' என்பர். ஒருமை-ஒருமைப்பாடு. எழுமை மிகுதி பற்றிய வழக்குச்சொல். ஆகவே மனித ஒருமைப்பாட்டுடன் படித் தாலும் பெரும்பாலும் பயன்படும் என்பது இவர் கருத்து. இருமை. எழுமை என்பன இந்நூலில் எங்கேனும் இப்பொருளில் வழங்கியிருக்கு மானால் ஏற்புடைய உரையாகும்.ஆதலால் வள்ளுவர் உளப்போக்கின் படி ஒரு பிறப்பிற் கற்ற கல்வி ஏழுபிறப்பில் தொடர்ந்து வரும், ஏழு என்பது மக்கட் பிறப்பே என்பதும், ஏழு என்றது பன்மை குறித்து நின்றதே அன்றி எண் வரையறை செய்வதன்று என்பதும் ஆகிய கருத் தமைந்த உரைகள் சிறந்தன.

'எழுபிறப்பு' பரிமேலழகர் காட்டும் ஊர்வன முதலியவற்றையே குறிக்கலாம். அவன் செய்த தீவினையால் விலங்கானவனாயினும், முற்பிறவியிற் கற்ற கல்வி அப்பிறப்பில் அறிவுடைய விலங்காக-குறிப் பறிந்து ஒழுகும் விலங்காக-இயங்கும். கல்வியான் விளைவது; அது கல்வியாகவே பயன்பட வேண்டுவதின்று. அங்ஙனமாயினும் அதற்கு ஏமாப்பு ஆகலாம் என்று என்னாசிரியர் ஐயர்* அவர்கள் கூறுவார்கள்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

எழுமையும் ஏமாப்புடைத்து:

எழுமையும் ஏமாப்புடைத்து குறள்.,126.

ஓ) மேற்கோள்பகுதி:

மயிலை.: செப்பத்தால் பொருள் தரும் வெளிப்படைக்கு மேற்கோள். (நன். 268)

40. 9. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். (ஙகூ)

உரைப்பகுதி

அ) *மணக்.:* தாம் இனிதாக நுகர்வதொன்றை உலகத்தார் நுகர்ந்து இன்புறுவாராகக் கண்டால், அதற்கு இன்புறுவர் கற்றறிந்தவர் எ—று.

இஃது அழுக்காறு செய்யாது இன்புறுதல் அறமாதலின் அது கல்வியான்வரும் என்றது.

ஆ) *பரிதி.:* தங்கள் கல்வியைத் தாங்கள் மகிழ்ந்ததுபோல், உலகம் மகிழ்வது கண்டு மேன்மேலே கற்பார், கல்வியின் மிக்கார் எ—று.

இ) *பரிப்.:* தாம் இன்புறுதற்கு ஏதுவாகிய கல்வியை உலகம் இன்புறுதல் கண்டால் அதற்கு இன்புறுவர்[1] கற்றறிந்தவர்கள் எ—று.

அழுக்காறு செய்யாது இன்புறுதல் அறமாதலின், அதுவும் கல்வியானே வருமென்றது,

ஈ) *காளி.:* தாம் கசடறக் கற்று உணர்ந்த கல்வியானது கொண்டு, எவ்வாற்றானும் தாம் இன்புறுவதல்லது, தமக்கு உளதாய கல்வியைக்

1. 'இன்புறுவர்' பாடம் வே.ப.க.;

* மகா மகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்.

குறித்து உலகத்தார் யாவரும் தமது உள்ளத்தால் பெரிதும் இன்புறக் கண்டு பின்னும் மேன்மேலும் அதனையே வற்புறுத்த ஆசைப்படுவர் மாசறக்கற்ற பெரியோர் எ—று.

உ) *பரிமேல்.*: தாம் இன்புறுதற்கு ஏதுவாகிய கல்விக்கு உலகம் இன்புறுதலால் அச்சிறப்பு நோக்கி, கற்றறிந்தார் பின்னும் அதனையே விரும்புவர்.

தாம் இன்புறுதலாவது நிகழ்வின்கண்[2] சொற்பொருள்களின் சுவை நுகர்வானும்,[3] புகழ் பொருள் பூசைபெறுதலானும், எதிர்வின் கண்[4] அறம்வீடு பயத்தலானும், அதனான் இடையறாத இன்பம் எய்துதல். உலகு இன்புறுதலாவது இம்மிக்காரோடு தலைப்பெய்து அறியாதன எல்லாம் அறியப்பெற்றேம் என்றும், 'யாண்டு பலவாக நரையிலம்[5] ஆயினேம் என்றும் உவத்தல். செல்வமாயின், ஈட்டல் காத்தல், இழத்தல் என்றிவற்றால் துன்புறுதலும், பலரையும் பகையாக்கலும் உடைத்து என அறிந்தும் அதனைக் காமுறாமையின் 'கற்றறிந்தார்' என்றும், கரும்பு அயிறற்குக்[6] கூலி போலத் தாம் இன்புறுதற்கு உலகு இன்புறுதல் பிறவாற்றானின்மையின் அதனையே காமுறுவர் என்றும் கூறினார்.

ஊ) *கவிராசர்*: தாங்கள் இன்பத்தை அடைவதற் கேதுவாய கல்வியைக் கண்டு உலகத்தார் இன்புறுவர். அவர்கள் சந்தோஷப் படுகிறதைக் கண்டு கற்றறிந்தார் மேன்மேலுங் கற்க விரும்புவர் எ—று.

ஏ) பழைய 2: தாமின்புறுதற்கு ஏதுவாகிய கல்விக்கு உலகம் இன்புறுதலால், அந்தச் சிறப்பு நோக்கி கற்றறிந்தார் பின்னும் அந்தக் கல்வியை விரும்புவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், 'தாம் இன்புறுவது ஒரு கருத்தை உலகமும் இன்புறுமாயின், அதனைக்கண்டு கற்றார் அழுக்காறு கொள்ளார் இன்புறுவர். இந்நிலை கல்வியான் விளைவது' என்பர்.

---

2. நிகழ்வின்கண்-பயிலுங்காலத்து.
3. சொற்களை நுகர்வு- சொற்களையடுக்கிச் சொல்லுதலாலும், எதுகை மோனை, குழிப்பு வண்ணம் முதலிய தொடை வகைகளாலும் உண்டாம் இன்பத்தை நுகர்தல். பொருட்சுவை—பொருளாலும், அணி முதலியவற்றாலும் தோன்றும் இன்பம்.
4. எதிர்வு —வரப்போகுங்காலத்தில்.
5. புறநா., 191.
6. அயிறற்கு—உண்ணுதற்கு.

ஏனைய ஆசிரியர்கள் 'தங்கள் அறிவுடைமை கண்டு தாங்கள் மகிழ்வதுபோல் உலகமும் இவர்கள் கல்வி கண்டு மகிழுமாயின் அதனைக்கண்டு தாமும் மகிழ்ந்து மேன்மேலும் அத்தகைய கல்வியைக் கற்பார்கள்' என்ற கருத்தினர்.

மணக்குடவரினும் ஏனையோர் 'மேலும் கற்பார்கள்' 'கற்க விரும்புவார்கள்' என்ற கருத்தினை இணைத்துள்ளனர்.

தம் அறிவு தமக்கு இனிதாதல் இயற்கை— அதனை உலகத்தவர் பலர் கண்டு இன்புறும் போது எழுச்சியும் ஊக்கமும் தோன்றும். அதனால் மேன்மேலுங் கற்கும் ஆர்வம் உண்டாம் என்ற உரைகள் சிறந்தன. அழுக்காறு தோன்றாமை கல்வியான் ஆவதாம் என்பது முற்கூறிய கருத்தை வழிவழி பயப்பதாம். காளிங்கர் உரைநடையில் 'மேலும் அதனையே வற்புறுத்த ஆசைப்படுவர்' என்ற தொடர் தாம் இன்புறுதலைக்கண்டு அவர்களும் இன்புறுதலை நழுவாமற் செய்து கொண்டேயிருக்க என்னுங் கருத்தினது.

கற்றறிந்தார் என்ற சொல்லாலும், அதிகார இயைபாலுமே இன் புறுவது என்பதற்கு இன்புறக்கூடிய கல்வியை எனப்பொருள் கொள்ள வேண்டியுள்ளது.

இராமலிங்கனார் கற்றறிந்தார் தாமடையும் இன்பங்களை உலகத்தோர் அனைவரும் காண ஆசைப்படுவார்கள். எனவே கல்வி யின் நோக்கம் 'தான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்பதே என்பர்.

தேவநேயர், 'காமுறுவர்' என்பதற்கு 'மேன்மேலுங் கற்கவும் கற்பிக்கவும் விரும்புவர்' என்பர், 'தாமின்புறுவது கண்டு, உலகின் புறக் காமுறுவர்' என்று கொண்டு கூட்டாக்குதல் ஏற்புடையதாகாது. கண்டு என்னும் சொல்லோடு பொருந்தாமையின் என மறுப்பர். அங்ஙனங்கூட்டிப் பொருள் காண்பார் எவர்?என அறியக்கூடவில்லை. ஆயினும் இன்புறுதலும் காணாததும் கற்றறிந்தான் செயலேயாதலா னும், இன்புறுதல் பிறன்பால் நிகழ்ச்சியானால் அதனைக் காணலாமே யன்றி, தானேயறிதல் கூடாமையானும் தேவநேயர் மறுப்புத்தக்கது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

.... மாகவிஞர்
தாமின் புறுவ துலகின் புறக்கண்டு

காமுறுவர் கற்றறிந் தார்என்னும்—மாமகிமை
சேர்ந்ததுஉன் பாலன்றோ. —தமிழ்., 196

ஒருபுடை:

அஞ்ஞனம் போன்றுடலை யறுமந்தியில்
வஞ்சக வாத மறுமத் தியானத்திற்
செஞ்சிறு காலையிற் செய்திடிற் பித்தறும்
நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே —திருமந்திரம்

கரையருகே நின்ற கான லுவரி
வரைவரை யென்பர் மதியிலா மாந்தர்
நுரைதிரை நீக்கி நுகர வல்லார்க்கு
நரைதி ரைமாறு நமனு மங்கில்லையே —திருமந்திரம்.

40.10. கேடில் விழுச்செல்வம்[1] கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை. (சOO)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒருவனுக்குக் கேடில்லாத சீரிய பொருளாவது கல்வி; மற்றவையெல்லாம் பொருளல்ல. எ—று.

இது கல்வி அழியாத செல்வம் என்றது.

ஆ) பரிதி.: அழியாத செல்வமாவது கல்வி; அழிந்துபோகிற செல்வம் செல்வமல்ல எ—று.

இ) பரிப்.: ஒருவனுக்குக் கேடில்லாத சீரிய பொருளாவது கல்வி: மற்றவை எல்லாம் பொருள் அல்ல எ—று.

இஃது அழியாத செல்வம் கல்வி என்றது.

ஈ) காளி.: 'ஒருவர்க்கு' பாடம். உலகத்துச் சிறந்தார் ஒருவர்க்கு எஞ்ஞான்றும் கேடுபடாத விழுமிய செல்வம் யாதோ எனில், சிறந்த நூல்களைக் கற்கும் கல்வியே; அதனால் மற்றைப் பல செல்வமெல்லாம் செல்வம் என்று சொல்லப்படுவன அல்ல எ—று.

மாடு என்பது பொருள். கல்வியால் சிறந்த பெரியோரது பெருந்தன்மை இதுவாகலான்: மற்று, இதன்பின்னரே கல்லாதாரது நிலைமை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

1. கேடில் விழுச்செல்வம் - இதில் 'கேடில் விழுச்செல்வம்' என்ற அடைமொழி இனம் விலக்க வந்தது. பொருட்செல்வத்தினின்று விலக்கியவாறு.

உ) பரிமேல்.: ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வமாவது கல்வி, அஃதொழிந்த மணியும் பொன்னும் முதலாயின செல்வமல்ல.

அழிவின்மையாவது தாயத்தார். கள்வர், வலியர், அரசர் என்றிவரால் கொள்ளப்படாமையும், வழிபட்டார்க்குக்[2] கொடுத்துழிக் குறையாமையுமாம். சீர்மை, தக்கார் கண்ணே நிற்றல். மணி பொன் முதலியவற்றிற்கு இவ்விரண்டும் இன்மையின், அவற்றை மாடல்ல என்றார். இவை ஐந்துபாட்டானும் கல்வியது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: ஒருவனுக்கு அழிவு இல்லாத செல்வமாகிறது கல்வியே. இதல்லாத மணியும் பொன்னும் முதலானவெல்லாஞ் செல்வமல்ல என்றவாறு.

ஏ) பழைய2: ஒருவனுக்கு அழிவில்லாத செல்வமாவது கல்வி. அதுவன்றிப் பொருள் முதலிய செல்வம் செல்வமல்ல.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மாடு—பொருள் என்பவர் பலர். இடம் என்பவர் இராமலிங்கர் 'ஒருவர்க்கு மாடல்ல' என்றவழி ஒருவனிடம் நிலைக்கமாட்டா என்ற பொருள் இயையாமையின் கருதத்தக்கதாம். பின்னர், 'நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே, கல்லார்கட் பட்ட திரு' 'நன்றியில் செல்வம்' இவற்றால் பொருட்செல்வம் கேடு பயத்தல் கூறப்படுதலின் கேடு இல்-தனக்கும் கேடு இல்லாத, தன்னையுடையார்க்கும் கேடு பயத்தல் இல்லாத செல்வம் கல்வி எனலுமாம்.

மு. கோ. மற்றையவை கேட்டில் விழுச்செல்வம் என்றியைத்து கேடில் விழுகின்ற செல்வமுமாம் என்பர். கேடு என்பது இல் என்னும் ஏழனுருபு ஏற்கும்போது டகரம் இரட்டியே ஏற்குமாதலானும், அங்ஙனமே விழு செல்வம் வினைத்தொகையாயின் வல்லொற்று மிகாதாதலானும் இது கொண்டு இத்தகைய பொருள்கோடல் தமிழ் மரபாகாது. அன்றியும் 'ஒருவற்குமாடல்ல' என்பதை மட்டும் இணைத்துச் செல்வம் போலத் தனியுடைமையன்று என்பதும் ஏற்புடையனவல்ல.

---

2. வழிப்பட்டார்-வழிபாடு செய்து பிற்றைநிலை முனியாது நிற்பார்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கேடில் விழுச்செல்வம் கல்வி

.....கேடில் விழுச்செல்வம் கல்வி என்று
பூண்டாய் நீ தானே பொருளன்றோ" —தமிழ்., 190.

கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி — கொன்றை. 22.

வைப்புழிக் கோட்படா வாய்த் தீயின் கேடில்லை
மிக்கசிறப்பின் அரசர் செறின் வவ்வார்
எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற" —நாலடி., 134.

முற்றும் :

கைப்பொருள் கொடுத்தும் கற்றல் கற்றபின் கண்ணு மாகும்
மெய்ப்பொருள் விளைக்கும் நெஞ்சின் மெலிவிற்கோர் துணையுமாகும்
பொய்ப்பொருள் பிறகள் பொன்னாம் புகழுமாம் துணைவி யாக்கும்
இப்பொருள் எய்தி நின்றீர் இரங்குவ தென்னை யென்றான்
—சீவக., 1595

இம்மை பயக்கு மால்ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்.

மாற்படு புந்தியின் மறுவில் சேதனம்
பாற்படும் உயிர்க்கெலாம் பலத்தின் மாண்பயன்
நூற்படு கல்வியின் நுவல்வ ளத்தினின்
மேற்படுகின்றதில், விழுமி தில்லையே" —கந்த. மாயையுப., 6.

திருமைகொள் வளனொடு தீதில் கல்வியாம்
இருமையின் ஒன்றினை எய்தி டாதெனின்
அருமைகொள் அவ்வுயிர் அதனி னாற்றவும்
பெருமைய துடையது பேயின் தோற்றமே — ஷி. 7..

ஒ) மேற்கோள்பகுதி:

சுவாமி.: அப்படி ஒழுகி அரும் பொருள் பெறுக: பொருள் என்னும் பெயர் பொதுவாயினும், கல்விப்பொருளினை மாத்திரம் அங்ஙனம் கூறாது, நற்பொருள்.....விழுமியபொருள் முதலாக யாதானும் ஓரடை கொடுத்தே கூறுவர் 'கேடில் விழுச்செல்வம் கல்வி' எனச் சிறுபான்மை பல அடையும் கொடுத்துக்கூறுவர். அக்கருத்து பண்டை நூல்கள் எல்லாவற்றுள்ளும் காண்க என்பர்.

(இ:கொ.8.)

பண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை.

	கற்க	எண்ணென்ப	கண்ணுடையர்	உவப்பத்	உடம்பார்	தொட்டனைத்	யாதானும்	ஒருமைக்கண்	தாமின்	கேடில்
மணக்.:	1	2	3	8	10	4	7	5	9	6
பரிதி.,	10	5	4	8	9	6	2	1	7	3
பரிப்.,	1	2	3	8	10	4	7	5	9	6
காளி.,	6	5	3	8	2	4	9	1	7	10
பரிமேல்.,	1	2	3	4	5	6	7	8	9	10

40வது அதிகாரம் 'கல்வி' முற்றிற்று.

41. கல்லாமை.

அதிகாரப் பொருள்:

அ) மணக்.: கல்லாமையாவது கல்வியில்லாமையால்[1] உளதாகும் குற்றம் கூறுதல். மேல் கல்வி வேண்டும் என்றார் அஃது இலாதார்க்கு உளதாகும் குற்றம் என்னை என்றார்க்குக் கூறியது இது[2] ஆதலான், அதன்பின் கூறப்பட்டது.

ஆ) பரிதி.: கல்லாமையாவது கல்வியை விடவொண்ணாது எ—று

இ) பரிப்.: கல்லாமையாவது கல்லாமையான் உளதாகும் குற்றம் கூறுதல்: மேற்கல்வி வேண்டுமென்றார், அது இல்லாதார்க்கு உளதாகும் குற்றம் என்னை என்றார்க்குக் கூறியது ஆகலான், அதன் பிற் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது கற்றலைச் செய்யாமை: என்றது அதனினாய இழிபினை கல்விச் சிறப்பு, மேல்[3] விதிமுகத்தால் கூறிய துணையான் முற்றுப்பெறாமை நோக்கி, எதிர்மறைமுகத்தாலும் கூறுகின்றது. ஆதலின், இது கல்வியின் பின் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர்: அஃதாவது, வித்தையைக் கல்லாதவனுடைய குற்றத்தைச் சொல்லுகிறது.

ஏ) பழைய 2: அதாவது கற்றலைச் செய்யாமை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

கல்லாமை—கல்வி கற்காதிருத்தல். இராம.; 'கல்லாதிருத்தல்' தேவநேயர், 'கல்லாமையான் வரும் இழிவு' குழந்தை, சாமி. சிதம்பரனார், 'கற்றதற்குரிய நூல்களைக் கல்லாதிருத்தலின் கேடு' சி. இ.

1. 'கல்லாமையான்' பாடம் வே. ப. க.
2. 'இது' என்பது இல்லை வே. ப. க.
3. 'கல்வி' அதிகாரத்தில்.

கல்லாமை என்பது கற்றல் என்னும் தொழிலின் எதிர்மறை, கல்வி என்பது கூட 'வி' விகுதி பெற்ற தொழிற்பெயரே. அதன் எதிர் மறைவாய்பாடு கல்லாமை. ஆகவே அதனைக் கற்றலைச் செய்யாமை எனத் தொழில்வாய்பாடு பட விரித்தலே ஏற்புடையது. அங்ஙனன்றிக் கல்வியில்லாமை எனப் பண்பாக விரித்தல் ஏலாததாம். *பரிதி., கவிராசர்* உரைகள் கருத்தளவில் விரிந்தனவே. கற்காமை என்பது மரபுச் சொல்லன்று.

பிற்கால உரைகளில் கல்லாமையான் வரும் இழிவு கூறுதல் என்பதும், நேரியபொருள் அன்று. கல்லாமை என்ற காரணப்பெயர் அதன் விளைவாகிய இழிவையுணர்த்தினதாகக் கொள்ளுதல் வேண்டும்.

ஆதலால், கற்றலைச் செய்யாமை என்ற *பரிமேலழகர்* விளக்கமும் அதனை ஒட்டி வந்த பிற்கால உரைகளும் சிறந்தனவாம்.

41. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொளல். (சo க)

உரைப்பகுதி:

அ) மணக்.: கொம்மையின்றி[1] வட்டாடினாற்[2] போலும் நிரம்பிய நூல்களைக் கற்றலின்றி வார்த்தை சொல்லுதல் எ. று.

அரங்கு அமைவின்றி வட்டாடினாற் போலும் நிரம்பியநூல்களைக் கற்றலின்றி வார்த்தை சொல்லுதல் எ. று.

ஆ) பரிதி.: சதுரங்கக்கோடு இல்லாமல் சதுரங்கம் ஆடுவோம் என்பதற்கு ஒக்கும்; பெரிய கல்வி யில்லாதார் ஆஸ்தானத்தைப்[3] பிரியப்படுத்துவோம் என்பது எ—று.

இ) பரிப்.: அரங்கு அமைவின்றி வட்டாடினாற் போலும்: நிரம்பிய நூல்களைக் கற்றலின்றி வார்த்தை சொல்லுதல் எ—று.

அரங்கு — கோட்டம். வட்டாடல் — உண்டை யுருட்டுதல்.

---

1. கொம்மை—வீடு அல்லது வட்டம்: சூதாடு காய்களை வைக்குமிடம் விடு என வழங்கும் அதனை வட்டமாகவும், சதுரமாகவும் அமைப்பது வழக்கம். அதளால் அதனைக் கொம்மை எனக் கூறினர் போலும்.
2. வட்டு—சூதாடு காய்.
3. ஆஸ்தானம்—அரசவையும், அவையின் பொதுப்பெயருமாம்.

கோட்டிகொளல்—சொல் சொல்லுதல், 'புல்லாவெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி'[4] என்றாற்போல, இலக்கணம் அறியாதான் வார்த்தை சொல்லிற் றப்பும் என்றது.

ஈ) காளி.: சூதுக் கருவிக்கு நிலையறிந்து இயற்றிய வரையினாற்[5] சதுரப்பட்ட பலகையின்றி வட்டுக்கொண்டு சூதாடிய தன்மைபோலும்: இவ்வாறு அனைத்துவகைப்பட்ட நெறியினாலும் நிறைவுற்ற நூல்கள் யாதானும் ஒன்றினும் தமக்கு ஒருமுயற்சியின்றி, வறிதே, இவற்றால் சிறந்த சான்றோருழைச் சென்று தாமும் கல்வி வினோதம் கொள்ளக்[6] கருதுகின்ற கருத்து எ—று,

உ) பரிமேல்.: அரங்கினை இழையாது வட்டு ஆடினாற்போலும், தாம் நிரம்புதற்கு ஏதுவாகிய நூல்களைக் கல்லாது ஒருவன் அவை யின்கண் ஒன்றனைச் சொல்லுதல்.

அரங்கு —வகுத்ததானம். வட்டாடல்—உண்டை உருட்டல், இவை 'கட்டளையன்ன வட்டரங்கிழைத்துக் கல்லாச் சிறாஅர் நெல்லிவட்டாடும்[8] என்பதனான் அறிக. நிரம்புதல்—அறிய வேண்டு வன எல்லாம் அறிதல். கோட்டி என்பது ஈண்டு ஆகுபெயர். 'புல்லா எழுத்திற் பொருளில் வறும் கோட்டி'[9] என்புழிப்போல, சொல்லும் பொருளும் நெறிப்படா என்பதாம்.

---

4. நாலடி: மேன்மக்கள் செய்5. இலக்கணத்தொடு பொருந்தாததும் பொருட்சிறப்பில்லா ததும் பயனற்றவை எனப்பொருள் காண்க. கோட்டி—கோஷ்டி என்பதன் வட சொல் கூட்டம் என்பது பொருள். கோட்டி—இடம் என்றும் அதன்கண் சொல்கின்ற சொல்லுக்கு ஆயினமையின் ஆகுபெயர் என்பாரும் உளர். பசனை கோட்டி, தேவார கோட்டி என்பன இடத்தையுணர்த்தாமையும் மக்கள் கூட்டத்தையே உணர்த்தினமை யும் காண்க. ''கோட்டி கொளல்'' என்ற தொடரே மக்கள் கூடுதல் என்றும் பொருளதாதலைத் தெளிவுறக்காட்டுதல் கொண்டு தெளிக. கோட்டி—சபை. அங்கு நிகழும் சொல்லையுணர்த்தியது என்ற கோ.வ. அடிக்குறிப்பு பின்வந்தோரை இயக்கி யிருக்கிறது. கோ. வ. சபை என்றாவது குறித்தனர். சபை—கல்வித் தொடர்புடையார் கூடிய கூட்டம். அதனை இடமெனக் கொண்டு மயங்கல் ஏலாது.
5. வரை—கோடு.
6. கல்வி வினோதம் கொள்ளல்—கல்வியாற் களித்தல். இதனை ''தவல்ருந்தொல் கேள்வித் தன்மையுடையார். இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ, நகலின் இனி தாயிற் காண்பாம்'' (நாலடி -137) என்பதனாலும் காண்க.
7. வகுத்த தானம்—சூதுக்காய்களை நகர்த்த அமைந்த வீடு.
8. நற்றிணை செய் 3. செங்கல் அச்சுக்கட்டளையை ஒத்த வட்டாடும் அரங்கினை அமைத்து என்க. ''கட்டளை கோடித்திரியின்'' என்பது காண்க. (அறநெறிச் 56) அரசனது கட்டளை தவறாமைபோல உருட்டிய உண்டை சென்று நிற்றற்குரிய வகுப் பிடத்தை ஏற்படுத்தி என்பர் கோ. வ. சதுரங்கப்பலகையின் வரைகள். உருட்டிய உண்டையின் எண்ணிற்கேற்பக் காய்களை நகர்த்துவதற்கு அமைந்தனவேயன்றி உண்டையுருட்டுவதற்காகவும், உண்டை நிலைக்கவும் அன்மை தெளிக. அரசன் கட்டளைபோல' என்ற விளக்கமும் ஈண்டு ஏற்புடையதன்று. பின்பின் பதிப்பித்த பதிப்பாசிரியர்களும் கோ. வ, தொடரை அப்படியே எழுதிப் போந்தனர்.
9. செண்டாடுதல்—பந்தாடுதல். .வட்டாடுதல்' என்பதற்குச் செண்டாடுதல் நேர் பொருளன்மை நிகண்டுகளிற் காண்க.

காரி. : கோட்டிகொளல்—அவையின்கண் ஒன்றைச் சொல்லுதல். ஈண்டுத் தொழிற்பெயர். 'அங்கணத்துள்' என்னும் குறளில் கொளல் என்பதனை வியங்கோளாகக் கொண்டார் பரிமேலழகர்; உவம இலக்கணம் பற்றி.

ஊ) கவிராசர் : ஒருவன் எல்லை குறியாமல் செண்டாடினாற் போலும், நல்ல அறிவுகளைக் கொடுக்கப்பட்ட நூல்களைக் கல்லாமல் ஒருசபையிலே போய் ஒருவார்த்தையைச் சொல்ல நினைக்கிறது என்றவாறு.

ஏ) பழைய 2 : அரங்கினை வகுக்காது வட்டாடினாற்போலும் நிரம்பிய நூல்களைக் கல்லாது, ஒருவன் பலருங்கூடிய சபையின் ஒன்றினைச் சொல்லிப் பாராட்டல்.

மல்லர்: எ—து விளையாடப்படும் இடத்திலே கோடுகளைச் செய்யாமல் உண்டையுருட்டுகிறதும் ஒருவன் வேண்டிய சாஸ்திரங்களால் நிறைந்திராமல் சபையிலே பேசுகிறதும் ஒக்கும் எ—று.

கோடுகளில்லாமல் உண்டையுருட்டினால் ஜெயித்தலும் தோற்றலுந்தெரியாததனால் விளையாட்டுச் செவ்வே படாது. அப்படிப்போல வேண்டிய படிப்பில்லாமல் சபையிலே பேசப் போனால், பேசுகிற காரியத்தை வகை விவரமாகச் சொல்லத் தெரியாததினால் அந்தக் காரியஞ் செவ்வை படாது என்பது கருத்து.

அரங்கு—வகுத்த தானம்; இன்றி—இல்லாமல்; வட்டு—உருண்டை; ஆடல்—அசைதல்; நூல்—கல்வி; கோட்டி—சபை, கொளல்—பேசிக்கொள்ளுதல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அரங்கின்றி, — 'கொம்மையின்றி எனப் பொழிப்பில் கூறும் மணக்குடவர், குறிப்பில் அரங்கு—சூது என்பார். அன்றியும் 'அரங்கு—சூதுக்கோட்டம்' என்பது முதல். தப்பும் என்பது வரையுள்ள பகுதி முழுதும், பரிப்பெருமாளின் உரை. (திருமலை திருப்பதி, பதிப்புக் காண்க).

கொம்மை என்பது அரங்கென்ற பொருளில் யாண்டும் வழக்காறில்லை. முதல் உரை ஆசிரியராகிய மணக்குடவர் இங்ஙனம் எழுதியிருக்கமாட்டார். ஆதலால் 'அரங்கு அமைவின்றி' என்பதை ஏடு

படிப்பாரும் எழுதுவாரும் ஏட்டின் சிதைவால் 'கொம்மையின்றி' எனக் கண்டிருக்கலாம் அல்லது கொம்மை வட்டத்திற்குப் பெயரா தலின். ஒரு வட்டமிட்டு அதற்குள் உருண்டையையுருட்டி அதுபோய் நிற்கும் இடங்கொண்டு வெற்றி தோல்விகளைக் கண்டிருக்கலாம். ஆயின் கொம்மை என்பதும் இயைவதாகும். *பரிப்பெருமாள்* முதலிய உரையாசிரியர் காலத்தும் முன்பு *நற்றிணைக்* காலத்தும் கட்டளை— சதுரமான கோடாகி யிருக்கலாம். அரங்கு சதுரமாதலைக் 'கட்டளையன்ன' என்ற உவமையாற் காண்க. ஆதலால் அரங்கு இன்றுள்ள சொக்கட்டான், தாயம் இவற்றின் கோட்டமைப்பினதாக லாம். *கவிராசர்* 'ஒருவன் எல்லை குறியாமல் செண்டாடினாற் போலும்' என்பர். செண்டு சூதாட்டக்காயின் பெயராக இலக்கிய வழக்குக் கிடைக்கவில்லை. ஆனால்'பந்து'என்ற பொருளில் உள்ளது. கோடின்றிப் பந்தாடினாற்போலும் என்னுங் கருத்தினர் *கவிராசர்* எனலாம். பந்தும் பணயம் வைத்து ஆடுதல் பழங்கால மரபு ஆம். *பரிதியார்* சதுரங்கக்கோடு என்பர்.

இராமலிங்கனார் 'அரங்கு— சதுரங்கம், சொக்கட்டான் தாயம் முதலிய விளையாட்டுக்களுக்காக வரையப்பெறும் கோடுகளமைந்த கட்டம் என்பர். தேவநேயரும் 'சதுரம் சதுரமாக அமைத்த கட்டம், என்பர். ஜி. வ'ரத. 'கோடுகள் வகுத்த அரங்கம் என்பர். சதுரங்கப் பலகை'என்பர் *சாமி.சிதம்.*

வட்டாடும் விளையாட்டு, காலந்தோறும் பலகை, ஆடும் கருவி வைக்குங்காய், இவற்றால் மாறுபட்டு வந்திருப்பதை உரைகள் தெரிவிக்கின்றன. ஆனாலும், என்றும் கட்டம் இட்டு, உருட்டும் காயை உருட்டி, வைக்கும் காயை வைத்து, வெற்றியும் தோல்வியும் உணரப்பட்டமை தெளிவு. அரங்கு—வெற்றிதோல்விகளை வரையறை செய்வது. அதுபோல்வது கோட்டி. பேசுவான் நூலறிவை அளப்பது. அரங்காடக்காய்கள் தேவை. அதுபோலக் கோட்டி கொள நிரம்பிய நூலறிவு தேவை;என்பது வரை எக்காலத்தும் இயைந்த கருத்து ஆதல் காண்க.

ஒரு மரம் தோப்பாகாதவாறு போலச் சில நூற்கல்வியே சிறந்த பேச்சிற்கும் போதுமானதன்று; அவையிற் பேச நிரம்பிய பலதுறை அறிவு வேண்டும் என்பதாம்.

ஒ) மேற்கோள்பகுதி:

பெருந்: விகற்பக் குறள் வெண்பாவிற்கு மேற்கோள். (வீர.114)

41. 2. கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும் இல்லாதாள் பெண்காமுற் றற்று. (சo உ)

உரைப்பகுதி:

அ) மணக்.: கல்வியில்லாதான்[1] சொல்லுதற்கு ஆசைப்படுதல், இரண்டு முலையுமில்லாதாள் பெண்மைக்குக் காமுற்றாற்போலும் எ—று

இது தன்னாசையல்லது பிறர்க்குப் பொருந்தாது என்றவாறு. சொன்னாலும் விரும்புவாரில்லை என்றது.

ஆ) பரிதி.: கல்லாதான் சொல்லைக் காமுறுதல் தனபாரம் இல்லாத பெண்ணைக் காமுறுதற்கு ஒக்கும் எ—று

இ) பரிப்.: கல்வி இல்லாதான் சொல்லுதற்கு ஆசைப்படுதல் இரண்டு முலையும் இல்லாதாள் பெண்மைக்குக் காமுற்றாற்போலும் எ—று

இது தன்னாசை யல்லது பிறர்க்குப் பொருந்தாது என்றவாறு 'சொன்னாலும் விரும்புவாரில்லை.'

ஈ) காளி.: கற்றிலாதான் மற்று அக்கற்றவர் முன்னர் தானும் சில சொல்லுதலைக் காதலித்தல் எத்தன்மைத்தோ எனின், முலையிரண்டும் முன்னமே தனக்கு இல்லாதாளாகிய பேடியானவள், மற்று அம்முலை வனப்புறூஉம் திருவுடையாட்டியது பெண்மைகொண்டு இன்புறுதற்குத் தானும் காதலித்த அத்தன்மைத்து எ—று

உ) பரிமேல்.: கல்வியில்லாதான் ஒருவன் அவையின்கண் ஒன்று சொல்லுதலை அவாவுதல், இயல்பாகவே முலைஇரண்டும் இல்லாதாள்[2] ஒருத்தி பெண்மையை அவாவினாற்போலும்:

இனைத்தென அறிந்த சினை[3] ஆகலின், தொகையொடு முற்றும்மை கொடுத்தார். சிறிதும் இல்லாதாள் என்பதாம். அவாவிய வழிக் கடைபோகாது, போகினும் நகைவிளைக்கும் என்பதாயிற்று.

---

1. 'இலக்கணம் அறியாதான்' பரிப்பெருமாள் கொண்ட பாடம்,
2. தன்மை திரிதலும் அவாவுதலும் அன்றி உறுப்புக்குறை பேடியாகாமையை எடுத்துக் காட்டானும், இலக்கண நூற்பாக்களானும் இச்செய்யுளின் தொகுப்பின் குறிப்பானும் உணர்க.
3. சொல், 33.

காரி.: சொல் சொல்லுதல், முதனிலைத் தொழிற்பெயர், 'முலை யிரண்டும்' என்பது, 'இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு, வினைப்படு தொகுதியின் உம்மைவேண்டும்[4]' என்னும் சூத்திரவிதி பற்றியது.

ஊ) *கவிராசர்*: கல்வியில்லாதவன் ஒருவன் சபையிலே போய் ஒன்றைச் சொல்ல நினைக்கிறது, சுவபாவமான[5] முலையிரண்டு மில்லாதாளொருத்தி பெண்மையை வேண்டினாற் போலும் எ.—று.

ஏ) *பழைய 2*: கல்வியில்லாதான் ஒருவன் பலரும் இருக்கும் சபையில் ஒன்று சொல்லிப் பாராட்டுதற்கு ஆசைப்படுதல், முலையில் லாதவள் ஒருத்தி அணிகலன்களினால் தன்னை அலங்காரஞ்செய்தற்கு ஆசைப்படுதல் போலும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'கல்லாதான்' 'இல்லாதான்' என்பவற்றை எழுவாய் ஆக்கிக் 'காமுறுதல்' 'காமுற்றது' என்ற வினைப்பெயரோடும், குறிப்பு முற்றோடும் இணைத்து முடிப்பர். *மணக்., பரிப்., காளி., பரிமேல்., கவிராசர், பழைய 2.*

பரிதி., ஆறாம் வேற்றுமையுருபு ஏற்ற பெயராகக் கொண்டு 'கல்லாதானது சொல்லை' எனப்பொருள் காண்பர். சொல் காமுறுதல்—சொல்லுதற்குக் காமுறுதல் என நான்கனுருபு ஏற்ற முதனிலைத் தொழிற்பெயராகக் கருதுவர் *மணக்., பரிப்.* 'சொல்லு தலைக் காதலித்தல்' என இரண்டனுருபு விரித்துப் பொருள் காண்பர் *காளி.*

'சொல்லைக் காமுறுதல் *பரிதி.*; இவரும் இரண்டாம் வேற்று மையாக விரிப்பினும் அங்ஙனமே விரித்த ஏனையோர்க்கும் இவர்க்கும் பெரிதும் வேறுபாடுண்டு. *காளிங்கர்*, காதலித்தலைக் கல்லாதான் தொழிலாகக் காட்டுகிறார். *பரிதியார்* கேட்கும் அவையோர் வினையாக்குகிறார்.

'முலையிரண்டும் இல்லாள் பேடி' என்பர் *காளிங்கர்*.

'பேடி' என்னுஞ்சொல் 'பெண்ணவாய் ஆணிழந்த பேடி' (நாலடி., செங்.251) இலக்கிய வழக்கினும், 'பெண்மை சுட்டிய

4. தொல்சொல், 33. 5. சுவபாவமான—இயல்பான; 6. அணிகலன்—நகை.

உயர்திணை மருங்கின் ஆண்மை திரிந்த பெயர்' என இலக்கண மரபினும் வருதலான் 'பேடி' என்பது ஆணாக எண்ணப்படும் ஒருவன் ஆண் தன்மையின்றிப் பெண்தன்மையை அவாவும்போது அமையும் பெயராகக் கருதப்படுதலின், முலையிரண்டும் இல்லாதாள் உறுப்பில் பேடியாயினும், உள்ளத்தாற் பெண்மையை அவாவுதல் கூடும். இலக்கண நூல்களும் பிறவும் கூறுவன உறுப்பமைந்தும் மாறி அவாவுந்தன்மையினவற்றையே ஆகலான். அவள் பெண்மையைக் காமுறுதல் இழுக்கின்று. காமுறினும் காமப்பயனை அவள் உறுப்புக் குறையால் எய்தாள். இக்கருத்தைக் கொண்டே பெண்மைக்குரிய குணநலன்களும், சிறப்புறுப்பும் இருந்தும் இவையின்மையான் பயன் எய்தாள் என்றதாம். அதுபோல மக்களாதற்குரிய அமைப்பனைத்தும் இருந்தும், கல்வியில்லாமையான், அவையிற் பேசினும் அதன் பயனை எய்தான் என்பதாம். இது கல்லாதான் பயனெய்தாமையைக் கருத வைக்கிறது.

பரிதியார் உரை பெண்ணின் அழகுறுப்பாய்க் காமத்தை மிகுவிப் பனமுலைகள். அவையின்றேல் நுகர்வானுக்கு இன்பமும் இல்லை. அது போலக் கல்லாதவன் சொல்லைக்கேட்போர் காமுறுதல் கரும்பின் சக்கையைக் கடித்தாற் போலச் சுவையின்றி இருக்கும் என்பது. இது கேட்போன் நிலையை உணர்த்துவது.

இவ்விரண்டு வகைக்கருத்தில் சிறந்தது எது? என அதிகாரத்தலைப்பு ஒன்றையே கொண்டு கல்லாதான் சொல்ல விரும்புதல் அவனுக்கு இன்பந்தராது என்பதைவிட, சொல்ல விரும்புவானுக்கும் கேட்பானுக் கும் இன்பந்தராது என இருவரையும் எண்ண வைக்கின்ற **வள்ளுவர்** வாக்கின் நயம் தலை சிறந்தது என இருபாலும் துய்க்கலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி

கல்லாதான் சொல்:

"கல்வி நலமில்லாப் புலமை" —வளை— 12

முலை இரண்டும் இல்லாதாள்

"இன்னா முலையில்லாள் கேண்மை விழைவு." —இன்னா. 13

ஒ) மேற்கோள்பகுதி:

யா. வி.: வெண்சீரோடு வேற்றுச்சீர் ஒன்றிய சிறப்பில் வெண்சீர் வெண்டளைக்கு மேற்கோள். (சூ. 18.)

41. 3. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன் சொல்லா திருக்கப் பெறின், (சoஈ)

உரைப்பகுதி

அ) மணக்.: கல்லாதவரும் ஓரிடத்து மிகவும் நல்லவராவர்; கற்றவர் முன்பு உரையாடாதிருக்கக் கூடுமாயின் எ—று

சொல்லாதொழிய அறிவாரில்லையாம்[1] என்றவாறாயிற்று. இது கல்லாதார்க்கு உபாயம் இது என்றது.

ஆ) பரிதி.: கல்லாதாரும் மிகவும் நல்லராகுவர்; கல்விமான்கள் முன்னே வாய்திறவாமல் இருப்பாராகில் எ—று

இ) பரிப்.: கல்லாதவரும் ஓரிடத்து மிகவும் நல்லவர் ஆவார்கள், கற்றவர்கள் முன்பு உரையாடா திருக்கக் கூடுமாயின்—எ—று

சொல்லா தொழிய அறிவாரில்லையாம் என்றவாறாயிற்று. கல்லாதார்க்கு உபாயம் இது என்றது.

ஈ) காளி.: கசடற நூல்களைக் கற்றிலாதோரும் அறிவினாற் பெரிதும் நல்லர் என்று கொள்ளலாம்; எப்பொழுதுஎனின்? மற்று அக் கசடறக் கற்ற மாசற்றார் முன் தமதுநா உரைநடையைக் காட்டா திருக்கப்பெறின் எ—று

நனி என்பது மிகுதி.

உ) பரிமேல்.: கல்லாதாரும் மிக நல்லவராவர், தாமே தம்மை அறிந்து[2] கற்றாரவையின்கண் ஒன்றனையும் சொல்லாதிருத்தல் கூடுமாயின்.

உம்மை இழிவு சிறப்பும்மை. தம்மைத் தாம் அறியாமையின் அது கூடாது என்பார் 'பெறின், என்றும்' கூடின் ஆண்டுத்தம்மை வெளிப் படுத்தாமையானும், பின் கல்வியை விரும்புவராகலானும் நனி நல்லர் என்றும் கூறினார். இவை மூன்றுபாட்டானும் கல்லாதார் அவைக்கண் சொல்லுதற்கு உரியரன்மை கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: கல்வியில்லாதவரும் நல்லவர்களாய்த்தோன்றுவர், கற்றவர்களுடைய சபையிலே ஒன்றையுஞ் சொல்லாதிருந்தால் எ—று

1. 'அறிவார் இல்லை யாவர்' மணக்குடவர் பாடம்.
2. தம் கல்வியறிவின் எல்லைனியத் தாமே அறிந்து என்பதாம்.

ஏ) பழைய 2: கல்லாதாரும் மிக நல்லார் ஆவர்; தாமே தம்மை அறிந்து, கற்றார் பலரும் இருக்கும் அவைக்கண் ஒன்றினையுஞ் சொல்லாதிருக்கக் கூடுமாயின்.

மல்லர்: எ—து படிப்பில்லாதவர்களும் வெகுநன்மையுடையவர் களாய் இருப்பார்கள் படித்தவர்கள் சபையிலே பேசாமல் இருக்கிறதுக்கு அவர்கள் உண்டாயிருந்தால் எ—று

பேசாமல் இருந்தால் தன்னுடையஅறியாமை வெளிப்படுத்தாமல், நிந்தை தருமவமறியாததற்குத் தப்பிப்போறதினாலேயும், படித்தவர் களுடைய புத்திகெடுகிறபோது தன்னுடைய அறியாமை மென்மேலும் படிக்கிறதுக்கு ஆசை பிறக்கிறதுக்கு ஏதுவாயிருக்கிறதினாலேயும், அவர்களுக்குப் பேசாமல் இருக்கிறது வெகுநன்மை என்பது கருத்து.

நனி—மிகுதி; கற்றார்—கற்றவர்கள்; பெறின்—பெற்றால்.

ஒ) மேற்கோள் பகுதி:

நச்.: சீர்வகை ஒருஉமோனைக்கு மேற்கோள் (தொல். பொருள் செய்: (சூ92)

41.4. கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார். (சoச)

உரைப்பகுதி:

அ) மணக்.: கல்லாதானது ஒண்மை மிகவும் நன்றாயிருப் பினும், அதனை ஒண்மையாகக் கொள்ளார் அறிவுடையார் எ.று.

ஒண்மை எனினும் அறிவு எனினும் சாமர்த்தியம் எனினும் அமை யும். இது கல்லாதார் ஒள்ளியராயினும், மதிக்கப்படார் என்றது.

ஆ) பரிதி.: கல்லாதவன் வயதால் பெரியவனாகிலும் அறிவுடை யார் கொள்ளார்கள் எ—று.

இ) பரிப்.: கல்லாதானது ஒண்மை மிகவும் நன்றாயிருப்பினும், அதனை ஒண்மையாகக் கொள்ளார் அறிவுடையார் எ—று.

ஒண்மை—சாமர்த்தியம்; அறிவெனினு மமையும். இஃது ஒள்ளிய ராயினும் மதிக்கப்படா ரென்றது.

ஈ) *காளி.*: இடம்படு நூல்களை இனிதாகக் கற்றிலாதானது அறிவு மிகவும் நன்றாயினும், அதனை ஓர் அறிவாகக் கைக்கொள்ளார்; யாரெனில், கல்வியாற் சிறந்த அறிவுடையோர் எ—று.

ஒட்பம் என்பது ஒள்ளிமை.

உ) *பரிமேல்.*: கல்லாதவனது ஒண்மை ஒரோவழி மிக நன்றா யிருப்பினும், அறிவுடையார் அதனை ஒண்மையாகக் கொள்ளார்.

ஒண்மை— அறிவுடைமை. அது நன்றாகாது; ஆயிற்றாயினும், ஏரல் எழுத்துப் போல்வதோர் விழுக்காடாகலின்,[1] நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை மதியார் என்பதாம்.

காரி.: ஒட்பம்— அறிவுடைமை. 'ஏரலெழுத்துப் போல்வது' ஏரல்—நந்து. வடநூலார் குணாக்ஷரம் என்பர். இதனால் 'நீர்மேல் எழுத்து' என்பது பாடமல்லாமையும் கல்லாதா னொட்பத்துக்கு உவமையாகாமையும் அறிக.

ஏரல் எழுத்து— நத்தையுழுதபோதுண்டாகும் எழுத்துருவம். இதனை நியாய நூலார் ஏரலக்கர நியாயம் என்பர். 'ஆகுமோ நந்துழுதவெல்லாம் கணக்கு' என்ற பழமொழி (245)யும், இதனை நமக்கு விளக்கும். ஒட்பம்—உறவு என்பர் கவிராச பண்டிதர்.

ஊ) *கவிராசர்.*: கல்வியில்லாதவனுடைய உறவு நன்றாயிருந் தாலும் அறிவுடையார் அவனுடனே சினேகம் பண்ணார்கள் எ—று.

ஏ) *பழைய2.*: கல்வியில்லாதவன் மிகவும் அழகுடையவனாய் இருந்தாலும், அதனை அறிவுடையார் அழகாகக் கொள்ளார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஒட்பம்' = 'ஒண்மை அதாவது அறிவு என்னும் சாமர்த்தியம்' *மணக்.*: 'வயதால் பெரியனாதல்' *பரிதி.*: 'அறிவு அதாவது ஒள்ளிமை' *காளி.*: 'அறிவுடைமை' *பரிமேல்.*: 'உறவு' *கவிராசர்*, 'அழகு' *பழைய2.*

இவற்றுள் அறிவுடைமை என்ற பொருளே சிறந்தது. அழகென்பது அறிவுடைமையாலான அழகாயின் ஆம். உடற்கட்டாயின் இங்கு

1. 'நீர்மேலெழுத்துப் போல்வதோர் விழுக்காடு' பாடம்.

ஏலாது. வயதாற்பெரியவனாதலைப் பற்றிய சிந்தனை ஈண்டுச் சிறிதும் இயைபின்று.

இராமலிங்கனார் 'ஒட்பம்—அறிவுள்ள பதங்கள், கொள்ளார்—அவனையறிஞனாக ஏற்கார்' என்பர். தேவநேயர் 'ஒரோவழித் தற்செயலாகத் தோன்றும் உயரிய கருத்து' என்பர். மு கோ. 'ஒட்பம்—அனுபவ அறிவு. இவ்வுரைகளிலும் முன்னதை ஒட்டி வருவனவே ஏற்றற்குரியன. இவ்விருவகையுரைகளிலும் ஒட்பம் என்பது மணியின்கண் ஒளியியற்கையாதல் போல உயிரின்கண் அமைந்த இயற்கையறிவு என்பதே அமைவுடைத்து.

உயிர்க்குணமாகிய இயற்கையறிவு ஒளிதீட்டப்பெறுவது கல்வியான் ஆதலின், கல்லாதாரிடை இயற்கையறிவான் ஒருகாலத்து வெளிப்பட்ட நுணுக்கமும் சொல்திறம் இன்றி வெளிப்படுதலின், கற்றார் 'குருட்டுப் பூனைவிட்டத்திற் பாய்ந்தாற் போல்வதோர்' வழக்காறாகக் கொள்வரேயன்றி அதனைச் சிறக்க ஏற்கார் என்பதாம்.

ஒருமைக்கண் தாங்கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்தாதலின், இப்பிறவியிற் கல்லானாயினும் சென்ற பிறவிகளின் கல்வியறிவு ஒட்பமாக வெளிப்படின் அதனைக் கொள்ளார் எனின், முற் சொன்னது பயனில் கூற்றாய்க் கழியுமே எனின், அற்றன்று; ஊமைத் தசும்புள் நீர் நிறைந்திருந்தாலும் தாகங்கொண்டாரால் குடிக்க இயலாதவாறு போல, இவன் அறிவு நிரம்பியிருந்தாலும், தசும்பின் நீர் கசிவான் வெளிப்படினும் இணைத்தும் விரித்தும் சொல்லும் ஆற்றலின்மையின், கற்றார் கொள்ளார் ஆயினர் என்க. ஆதலின் மலைவன்றாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கல்லாதான் ஒட்பம்

"கல்வி நலமிலாப் புலமை" **வளையாபதி.12**

"அறிவில்லான் மெய்த்தலைப் பாடு பிறிதில்லை
நாவற் கீழ்ப்பெற்ற கனி" **—பழ 12.**

"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் தானும்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி." **—வாக்கு.14.**

முற்றும்:

"கல்லாதான் கண்ட கழிநுட்பம் கற்றார்முன்
சொல்லுங்கால் சோர்வு படுதலால்-நல்லாய்
வினைமுந் துறாத உரையில்லை இல்லைக்
கனாமுந் துறாத வினை." —பழ.13

"கல்லாதான் தான்காணும் நுட்பமும்...
நல்லார்கள் கேட்பின் நகை" —சிறுபஞ்ச.5.

ஒருபுடை:

"ஓதாதார்க் கில்லை உணர்வொடு ஒழுக்கம்" —கொன்றை.91

ஓ) மேற்கோள் பகுதி:

நச்.: கட்டளை வருக்கமோனைக்கு மேற்கோள். (தொல்.பொருள். செய்:94)

41.5. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து சொல்லாடச் சோர்வு படும் (சஅநி)

உரைப்பகுதி:

அ) மணக்.: கல்லாத ஒருவனது பெருமை கற்றவன் கிட்டி உரையாட மறையும் எ—று.

இது பெருமையுடையராயினும் மதிக்கப்படார் என்றது.

ஆ) பரிதி.: கல்லாத ஒருவன் பெருமையெல்லாம் களரி[1]யேறி வார்த்தை சொல்லக் கெடும் எ—று.

இ) பரிப்.: கல்லாத ஒருவனது பெருமை கற்றவன் கிட்டி உரையாட மறையும் எ—று.

இது கல்லாதார்க்குப் பெருமை இல்லை என்றது.

ஈ) காளி.: உலகத்துக் கற்றிலா ஒருவன் தனது செல்வத் தகை யையும் பிறவும் கொண்டு என்ன பயன்? மற்றுக் கற்றுவல்ல சான்றோருழைச் சென்று, தலைப்பட்டு, உரையாடவே அவை அனைத்தும் சோர்வுபடும் எ—று.

உ) பரிமேல்.: நூல்களைக் கல்லாத ஒருவன்'யான்அறிவுடையேன்' எனத் தன்னை மதிக்கும் மதிப்பு, அவற்றை[2]க் கற்றவன் கண்டு உரையாடக்கெடும்.

---

1. களரி—அவை. 2. அவற்றை—நூல்களை.

கற்றவன் என்பது வருவிக்கப்பட்டது. யாதானும் ஓர் வார்த்தை சொல்லும் துணையுமே நிற்பது, சொல்லியவழி வடுப்படுதலின், அழிந்துவிடும் என்பதாம். இவை இரண்டுபாட்டானும் கல்லாதாரது இயற்கையறிவின் குற்றம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: நூல்களைக் கல்லாதவன் 'யான் அறிவுடையேன்' என்று தன்னைப் பெரியவனாக மதிக்கும் மதிப்பு, கற்றவன் அவனைக் கண்டு வார்த்தைபேசினால், கெட்டுப்போம் எ—று.

ஏ) பழைய2: நூல்களைக் கல்லா ஒருவன் யான் அறிவிற் பெரியன் என்று தன்னை மதிக்கும் மதிப்பினைக் கற்றவன் கண்டு, சில சொற் களைச் சொல்ல, அவன் மதிப்புக்கெடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'தகைமை' —'தகுதி', அதாவது 'பெருமை' மணக்.; கல்வி யல்லாத செல்வம் செல்வாக்கு முதலானவற்றான் விளைந்த பெருமை' என்பர் காளிங்கர். கற்றார் கல்வியறிவைக் கொண்டே எடையிட்டு மதிப்பர் ஆதலின், பிற தகைமை கண்டு மதியார்; ஆகவே பிறவற்றான் உண்டான தகைமை கெடும் என்றலாற் சிறப்பின்று. ஆகவே கல்லா தான் தன்னைக் கல்வியாளன் என்று காட்டிக் கொள்ளும் போலித் தகுதி கெடும் என்றலே சிறந்த கருத்து. இக்கருத்தமைந்த உரைகளும் சிறந்தன.

'சொல்லாட'— 'உரையாட மணக்., பரிப்., முதலிய அனைவரும் தன்னையறிஞனாக மதித்து அவையிற் பேச, அல்லது அவையோருடன் அளவளாவ எனலுமாம். இதற்கு ஆலோசனைகள் கூறுதல், அவையிற்பேசுதல் இரண்டையுங்கருதுவர் இராமலிங்கனார். கல்லாதான் உரை கற்றார் முன் பூனை முன் கிளிபோலக் கெடும் என மேற்கோள் காட்டி விளக்குவர் தேவநேயர். 'நன்றாயினும்' என்னும் செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் நன்றேயாகாது என்ற எதிர்மறைப் பொருளையும் காட்டும். அங்ஙனமும் கருத்துக் கொள்க.

'சோர்வுபடும்' ஒரு சொல். படு விகுதி துணிவுப்பொருளது.

கல்லாரும் கற்றாரும் வடிவான் மக்களேயாயினும், சொல்லான் வெளிப்படுதலின், சோர்வுபடும் என்றார். 'குயிலும் கருப்பு; காகமும் கருப்பு; எனினும் வாய்திறந்தபோது குயில் குயில்தான்; காகம் காகந் தான்' என்பதும் ஈண்டு இணைந்து எண்ணுதற்குரியது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

அயர்வில் கேள்விசால் அறிஞர் வேலைமுன்
பயில்வில் கல்வியார் பொலிவில் பான்மைபோல் —கம்ப., 3919

மற்றும்:

கல்லாதான் கண்ட கழிநுட்பம் கற்றார்முன்
சொல்லுங்காற் சோர்வு படுதலால் —பழமொழி., 13.

எழுத்தறியார் கல்விப்பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார் காணின் இலையாம்—எழுத்தறிவார்
ஆயும் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயும் சுரநீர் மிகை. —நன்னெறி..21.

41.6. உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர். (சoக)

உரைப்பகுதி:

அ) மணக்.: உளரென்னும் அளவினையுடையாரல்லது. பயன் படாத களர் நிலத்தை[1] யொப்பர் கல்லாதவர் எ—று.

இது பிறர்க்குப் பயன்படார் என்றது.

ஆ) பரிதி.: கல்வியில்லாதார் செல்வம் பெற்றார்களாகில், பெருமை பெறுவர்; அது எப்படி என்றால் விளைநிலத்தின்முன்னே உவர்நிலம் போல எ—று.

இ) பரிப்.: உளர் என்னும் அளவினை யுடையார் அல்லது பயன் படாத களர் நிலத்தை யொப்பர் கல்லாதவர் எ—று.

இது பிறர்க்குப் பயன் படார் என்றது.

ஈ) காளி.: கல்லாதார் வெறும் பிணம் ஆதலின்றிச் சிறிது உயிரோடு நடைபெறுதலை உடையரென்று சொல்லிக்கொள்ளும் அளவன்றி, மற்று வித்தியது ஒன்று விளைதல் சிறப்பில்லாத களர்த் தரையே ஒப்பு; அவர்க்குக் கல்வியினால் விளையும் மறுமை ஆக்கமும் இல்லை எ—று.

உ) பரிமேல்.: கல்லாதவர் காணப்படுதலான், இலர் அல்லர், உளர்

1. களர் நிலம்—நெல்முதலியன விளைதற்கு உரியதாகாத நிலம்;

என்று சிலர் சொல்லும் அளவினராதல் அன்றி, தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் விளையாத களர் நிலத்தோடு ஒப்பர்.

களர் தானும் பேணற்பாடழிந்து[2], உயிர்கட்கும் உணவு முதலிய உதவாதது போலத் தாமும் நன்கு மதிக்கற்பாடழிந்து, பிறர்க்கும் அறிவு முதலிய உதவார் என்பதாம். இதனால் கல்லாதாரது பயன் படாமை கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்.:* கல்லாதவர்கள்; மனுஷராயிருக்கிறார்களென்கிற மாத்திரமே; தமக்கும் பிறருக்கும் பயன்படாமையால், விளையாத களர் நிலத்தோடு ஒப்பர்.

ஏ) *பழைய 2:* கல்லாதவர் காணப்படுதலான் இலர் உளர் என்று சிலர் சொல்லும் சொல் மாத்திரமல்லாமல், தமக்கும் பிறர்க்கும் பயன் படாமையால், விளையாத களர் நிலத்தோடு ஒப்பர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'உளர் என்னு மாத்திரையர்' என்ற இத்தொடர்க்கு* *பரிதி*. ஒழிந்த ஏனைய பழைய ஆசிரியர்கள் 'ஏதோ இருக்கிறார்கள் என்னும் அளவினர்' என உரை கண்டனர்.

பரிதியார். 'காசும் பணமும் முதலான செல்வங்கள் உள்ளவர் கள்' என உரை கண்டார். உடையார் என்பது செல்வம் உடையவர் களையும் உடைமை செல்வத்தையும் குறிப்பதுபோல உள்ளவர் என்பது கைத்துள்ளவர் என உரை கண்டிருக்கிறார். ஏதோ பணக் காரன் என்பதல்லாமல் உவர் நிலம்போல யார்க்கும் பயன்படாதன்றி யில் செல்வம் உடையார் ஆவர் கல்லாதார் எனக் கருதியிருக்கிறார். *வள்ளுவர்* பேரறிவாளனாகிய கற்றான் செல்வம் ஊருணி நீர் நிறைந்தது போலவும், பயன்மரம் உள்ளூர்ப்பழுத்தது போலவும் எல்லார்க்கும் பயன்தரும் என்ற கருத்தும், 'ஈயாதான் செல்வம் நடுவூருள் நச்சுமரம் பழுத்தற்று' 'ஈயான் செல்வம் ஏதம்' என்ற கருத்துக்களும் இவர் உள்ளத்து நிலவ, இவர் 'உள்ளான்—செல்வம் உள்ளான்; பிறர்க்கோ தனக்கோ பயன்படாத் தன்மையால் உவர்நில மனையர்' என்று உரை கண்டிருக்கிறார். இங்ஙனமின்றி இவர் சொற்களை வருவித்ததும், 'விளைபுலத்தின் உவர்நிலம் போலப் பெருமை பெறார்' என்ற குறிப்புப்படக் கூறியதும் குற்றம் என்பாரும்

2. பேணற்பாடு—விரும்புந்தன்மை.

உளர். உற்றுநோக்கி உணர்க. கல்லாதார் களரனையராதற்குப் பரிமேலழகர் கூறும் ஒத்த தன்மைகள் மிக நயமுடையன.

ஒ) மேற்கோள் பகுதி:

தெய்வச்.: பயப்பு என்ற உரிச்சொல் பயன் என்னும் பொருளில் வந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 303)

நச் : ஷி (தொல். சொல். 307)

பெருந்.: முதலடி நாற்சீராய், கடையடி முச்சீராய் வந்த குறளுக்கு மேற்கோள். (வீர. 127.)

41. 7. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று. (சஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: நுண்ணியதாகிய மாட்சிமைப்பட்ட ஆராய்ச்சியையுடைய கல்வியில்லாதான் அழகு, மண்ணினாலே நன்றாகச் செய்த பாவையின் அழகினை யொக்கும் எ—று.

இஃது அழகியராயினும் மதிக்கப்படார் என்றது.

ஆ) பரிதி.: நுண்ணிய அறிவில்லாதவன் அழகு மண்ணினால் பண்ணின பொம்மைக்கு நிகராம் எ—று.

இ) பரிப்.: நுண்ணிதாய் மாட்சிமைப்பட ஆராய்ச்சியையுடைய கல்வி இல்லாதான் அழகு மண்ணினானே நன்றாகச் செய்த பாவையினது அழகை ஒக்கும் எ—று.

அறிவிற்கு மாட்சியாவது பொருளைக் கடிதிற் காண்டலும் மறவாமையும் முதலாயின. இஃது அழகியல் ஆயினும் மதிக்கப்படார் என்றது.

ஈ) காளி.: நுண்ணியதாய் மாட்சிமைப்பட்டு எஃகுதலை[1] உடைத்தாயுள்ள ஞானத்தைத் தருவதாகிய நூலினைக் கற்றிலாதான் எழில் நலமானது பலவகைப்பட்ட நிறங்களால் அழகு புனைந்த[2] பாவையைப் போல உறுப்பழகு உண்டு; உணர்வழகு இல்லை எ—று.

1. எஃகுதல்—நுணுகுதல்' வலியாதல்,
'மண்ணினால் அழகு புனைந்த' பாடபேதம்.

நுழைதல் என்பது எஃகுதல்; தேறுதல், புலம் என்பது அறிவு.

உ) பரிமேல் : நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டுப் பல நூல்களிலும் சென்ற அறிவு இல்லாதவனுடைய எழுச்சியும்[3] அழகும், சுதையான் மாட்சிமைப்பட புனைந்த பாவையுடைய எழுச்சியும் அழகும்போலும்.

அறிவிற்கு மாட்சிமையாவது பொருள்களைக் கடிதிற்காண்டலும், மறவாமையும் முதலாயின. பாவை ஆகுபெயர். 'உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதலும் அரிது[4] ஆதலான் எழில் நலங்களும் ஓர் பயனே எனினும், நூலறிவு இல்வழிச் சிறப்பில் என்பதாம். இதனான் அவர் வடிவழகால் பயனின்மை கூறப்பட்டது.

காரி.: எழில்—எழுச்சி. 'ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா, கற்பும் ஏரும் எழிலும் என்றா'[5] என்னும் பொருளியற் சூத்திரத்தில் காண்க. 'இல்லம் இளமை எழில் வனப்பு'[6] என்றார் நாலடியாரிலும்.

ஊ) கவிராசர்: நுண்ணிதாய் நூல்களைக் கற்று மாட்சிமைப்பட்ட அறிவில்லாதவனுடைய அழகும் ஆபரணங்களும், மரப்பாவைக்குப் பூட்டின ஆபரணங்கள் போலேயாம் எ—று.

ஏ) பழைய—2: நுண்ணியதாய் மாட்சிமைப்பட்டுப் பல நூலினுஞ் செல்லும் அறிவில்லாதவனுடைய எழுச்சியும் அழகும் அலங்காரமாகக் கண்ணுக்கு இனிமைபடப் புனைந்த பாவையுடைய எழுச்சியுமழகும் போலும்.

மல்லர்: நுண்ணிதமான படிப்பின் பெருமையடைந்த பல சாஸ்திரங்களில் நுழைந்தும் அறிவில்லாதவனுடைய பெருமையும் அழகும் மண்ணால் செய்யப்பட்டதுமாய பெருமையும் அலங்கரிக்கப்பட்டது மாயிருக்கிற பாவையின் பெருமையை ஒக்கும் என்றவாறு.

பாவையானது மனுஷர் போடத்தக்க நகைகளாலும் ஆபரணங்களாலும் எத்தனை சோடித்திருந்தாலும் உயிரில்லாததினால்

---

3. 'எழுச்சி—' எழுகின்ற நிலைமை. நிகழ்காலமே குறித்து நிற்கும். அழகு—அங்ஙனம் வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறியது அன்றி இன்னும் வளரும் என்பதுபோலக் காட்டுதல். நச்சினார். தொல்—ஒப்பும் உருவும் "சூத்தி". 'இல்லம் இளமை எழில் வனப்பு' என்ற நாலடியார்..... செய்யுளையும் இணைத்து எண்ணுக.
4. சிவக., 2752.
5. தொல்.பொருள்.53
6. நாலடி., 53.

ஒருக்காலும் மெய்யான மனுஷனாக மாட்டாது அப்படிப்போல ஒருவன் பெரியவர்களுக்குண்டான பெருமைகள் எல்லாம் பெற்றிருந்தாலும் படிப்பில்லாதே போனால் ஒருக்காலும் மெய்யாகவே பெரியவனாக மாட்டான் என்பது கருத்து.

நுண்—நுண்ணிய; மாண்—பெருமை; நுழை—நுண்மை புலம்—அறிவு; இல்லான்— இல்லாதவன்; எழில்—அழகு; நலம்—பெருமை; புனைபாவை—புனைந்தபாவை; புனைதல்—அலங்கரித்தல்; அற்று—உவமைச்சொல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'நுண் மாண் நுழை புலம்'—'நுட்பமும் மாட்சியுமாகிய இரு பண்புகளையும் நுழை புலத்திற்கே அடைமொழியாக்கினார்' **மணக்., பரிப்.,** இருவரும் **,கா.சு.வும்** இங்ஙனமே. நுண்மாண் நுழைபுலம் என்பதைச் சுருக்கி 'நுண்ணிய அறிவு' என்றார் **பரிதி.**'நுழைபுலம்—எஃகுதலையுடைத்தாகிய ஞானம் தருவதாகிய நூல்' என்ற அளவு பொருளை விரிப்பர். **காளிங்கர்.** இதனை ஒட்டிப் **பரிமேலழகரும், கவிராசரும் பழைய 2ம்** பல நூல்களிலும் சென்ற அறிவு என்றனர். **பரிமேலழகர்.** போன்றார் புலம்—அறிவு. அறிவைத் தருவதாகிய நூல் எனக்காரியத்தின் பெயர் கருவிக்காகிய ஆகுபெயராகக் கொண்டனர். அறிவு எனினும் அறிவைத்தரும் நூல் எனினும் கருத்தில் வேறுபாடின்று.

'நுழை' — எஃகுதலையுடைய அறிவு என்றது மிகச் சிறந்த பொருளாழம் உடையது. கத்தி முதலிய ஆயுதங்கள் தீட்டப் படுங்கால் ஒருகாலைக்கொருகால் கூர்மை மிகுதல் போல அறிவு பல நூல்களிலும் பலமுறைப்பயிலுங்கால் நுணுக்கம் மிகும் என்ற பொருளாழம் உடையது. வள்ளுவரும் 'அஃகி யகன்ற அறிவு' என மேலும் கூறியிருத்தலைக் காண்க. அஃகுதல் எஃகுதல் ஒருபொருட் கிளவி.

எழில் நலம் என்பதனை ஒரு பொருட் பன்மொழியாகக்கொண்டு அழகு என்ற அளவிலே பொருள் கண்டனர் **மணக்., பரிதி., பரிப்.** எழில் நலமானது என ஒன்றாகத் துணிய விருப்பின்றி அப்படியே எழுதினர் காளிங்கர். அதனைப் **பரிமேலழகர்** 'எழுச்சியும் அழகும், என்றனர். இதற்கு விளக்கந்தரும் நுண்பொருள் **மாலை ஆசிரியர்** 'எழுச்சி—கட்புலனாகாத பொருள். அதனைக் கட்புலனாகும் அழகோடு இணைத்துக் கூறினார். அதனை'ஒப்பும் உருவும்' என்ற பொருளியற் சூத்திரத்தான் 'காட்டலாகாப்பொருள்' ஆனால்

'நெஞ்சு கொளத்தக்கவை' என்பதை வலியுறுத்தினர். எழில்வேறு வனப்புவேறு என்பதனை 'இல்லம் இளமை எழில்வனப்பு' என்ற நாலடியார் ஆட்சியைக் காட்டுவார். நாலடியார் உரையாசிரியர் எழில்—இளமையின் கொழுந்து; அஃதாவது இளமையின் வளர்ச்சி நிலையாகிய தோற்றப்பொலிவு என்பர். கவிராசர் அழகும் ஆபரணங்களும் என்பர். நலம் என்ற சொற்கு ஆபரணம் என்ற பொருளில்லையாயினும் நலம் பயப்பனவாகிய ஆபரணங்களை நலம் என்று கருதினர் போலும் பழைய 1. எழுச்சியும் அழகும் என்றது. இவ்வுரைகளில் காளிங்கர் கருத்தும் அதனை ஒட்டி வளர்ந்து நேரிய பொருளாக விளங்குவனவும் சிறந்தன.

'மண்மாண் புனைபாவை' —'மண்ணினாலே நன்றாகச் செய்த' மணக்., பரிதி., பரிப்., என்பர். 'சுதையால் மாட்சிமைப்பட்ட புனைந்தபாவை' என்பர் பரிமேலழகர். 'மரப்பாவை' என்பர் கவிராசர். 'கண்ணுக்கினிமையாகப் புனைந்த பாவை' என்பது பழைய 2. இங்ஙனம் மணக்குடவர் முதலியோர் 'புனை' என்பதற்கு 'நன்றாக' என்ற அளவில் அமைய, காளிங்கர் 'பலவகைப்பட்ட நிறங்களால் அழகு புனைந்த' என்பர். இவர் 'புனை' என்பதற்குத் தனி விளக்கந்தருவர். இவருரை இப்பகுதிக்குச் சிறந்தது எனலாம்.

இராமலிங்கனார் 'நுழைபுலம்'—'நுணுகிய மாட்சிமைப்பட்ட நூல்களில் நுழைந்து ஆய்ந்த அறிவு' என்பர்.

ஜி. வரத. 'நுண்மாண் நுழைபுலம் — கூர்மையுடையதாய் மாண்பினதாய் வளர்ச்சி பெற்று பிறருக்கு ஏற்பச் சொல்லும் ஆற்றல் உடைய அறிவு' என உரை தந்து, 'அறிவின் ஆழம் நுட்பம்; அறிவின் அகலம் மாட்சி; நுழைதல்—தாங்கற்ற செலச் சொல்லும் வன்மை, என விளக்கந்தருவர். முன்னோர் அனைவரும் பல நூல்களைக் கற்றதால் அஃகி அகன்ற அறிவு என உரை காண, இவர் பிறர் அறிவிற் புகுத்தும் சொல்வன்மைக்கு இச்சொல்லை அழைத்துச் செல்கிறார். நேர்பொருளன்றிப் பொருளுக்குப் பொருளாய் படரும் இப்பொருள் இயைபுடையதாயின் புதுக்கருத்தாகும். சி.இ. 'நுட்பமான பெருமை மிக்க நூல்களைக்கற்று அதனால் பெற்ற அறிவு நுண்மாண் அடை மொழிகளை நூலுக்கு ஆக்குவர். 'நுட்பமாகி மாட்சிமைப்பட்டுப் பல நூல்களிலும் சென்ற அறிவு' என ஈக்காடு சபாபதி முதலியார் அறிவுக் காக்குவர். சாமி.சி. நுண்—நுண்ணறிவு; மாண்—சிறப்பறிவு; நுழைபுலம்—ஆய்வறிவு என்பர். நுழைபுலம்—செவிஏறாத செவியிலும் நுழையும் அறிவு என்பன போலப் பலவகை நயவுரை காண்பர். அவைகளைச் சில சொற்களாலான யாவிடைச் சொற்களில்

பார்க்க வேண்டுமாயின் பல சொற்களை வருவித்தல் இன்றியமை யாததாகிறது.

உடலழகினும் ஒளிதருவது உயிரழகாகிய கல்வி என்றவாறு.

ஒ) ஒப்புமைப்பகுதி:

நுழைபுலம் இல்லான் எழில் நலம்:

குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே அழகு —நாலடி. 131.

"மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும்—செயிர் தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு. —சிறுபஞ்ச. 36.

இடை வனப்பும் தோள் வனப்பும் ஈடின் வனப்பும்
நடை வனப்பும் நாணின் வனப்பும்—புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோ(டு)
எழுதத் தன் வனப்பே வனப்பு ஏலாதி. 74

"ஆழியான் மைந்தர்பே ரறிவினா ரழகினார்
ஊழியா ரெளிதுணக் கரசுதந் துதவுவார்." —கம்ப. 3891

"கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டாளரும்" சிலப். 5. 30.

"நெடுநிலை மண்ணீடு நின்ற வாயிலும்" —மணி. 6. 47

"பாங்குற மண்ணீட்டிற் பண்புற வகுத்து" "6—200

"ஈங்கிம் மண்ணீட்டியாரென வுணர்கேன்" "18—156

மூற்றும்:

"மண்ணோடி யைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர்" திருக்குறள். 576

ஒ) மேற்கோள்பகுதி:

மயிலை.: 'நுண்மாண்.....அற்று; நுண்ணறிவில்லாதான் எழில் நலம் மண்புனை மாண்பாவை எழில் நலம் எற்று அற்று என வினையும் வினையுள் அடங்கும் வினைக் குறிப்பும் கொண்டு முடிதலின் வினை எச்சம்' என்பர். (நன். 359.)

சிவஞான.: 'மண்மாண் புனை பாவையற்று என்புழி மாட்சிமைப்பட என்று பொருள் பட்டு முதனிலைத் தனிவினைகள் வினையெச்ச மாதலும் உண்டு' என்பர். (நன், 351)

சுவாமி.: ஷி (இ.கொ. 66)

41. 8. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு. (சஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: நல்லார்மாட்டு உண்டாகிய வறுமைபோல பிறர்க்கு இன்னாமையைச் செய்யும் கல்லாதார்மாட்டு உண்டாய செல்வம் எ—று. இது செல்வம் உண்டாயின், பிறரைத்துன்பமுறுவிப்பர் என்றது.

ஆ) பரிதி.: நல்லாரிடத்தில் வறுமை மிடைப்படும்,[1] அதுபோல மிடைப்படும் கல்லாதாரிடத்தில் செல்வம் எ—று.

இ) பரிப்.: நல்லார் மாட்டுண்டாகிய வறுமை போலப் பிறர்க்கு இன்னாமையைச் செய்யும் கல்லாதார் மாட்டு உண்டாகிய செல்வமும் எ—று.

இது செல்வம் உண்டாயிற் பிறரைத் துன்புறுவிக்கும் என்றது.

ஈ) காளி.: கல்வியிற் சிறந்த நல்லறிவாளரிடமிருந்து உளதான வறுமையினும் சால இன்னாதே; கல்வியின் விளங்கு நல்லறிவில்லா தார் கைப்பட்ட செல்வமானது. அது கொண்டு தாம் இனிது நுகர்தலும், தம் சுற்றம் ஓம்பலும், நட்டோர்க்குப் பகுத்தலும் வறியவர்க்கு உதவலும், மற்றும் பிற நல்லறம் செய்தலும் என்னும் இவை முதலிய இனிய பயன்கோடலின்றிச் சிறியதே உண்டு, வறிது உயிர்வாழும் தன்மையர் ஆகலான் குற்றங்கள் பலவும் உடையர் எ—று

உ) பரிமேல்.: கற்றார்மாட்டு நின்ற வறுமையினும் இன்னாது, கல்லாதார்மாட்டு நின்ற செல்வம்.

இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. தத்தம்

1. மிடைப்படுதல்—வருந்தும்.
2. மாறிநிற்றலாவது—செல்வம் கல்லாதானிடத்தும், வறுமை கற்றானிடத்தும் நிற்றல்

நிலையினன்றி மாறி நிற்றலான்[2] தாம்[3] இடுக்கட்படுதலும்[3] உலகிற்குத் துன்பம் செய்தலும் இரண்டற்கும் ஒக்குமாயினும், திரு கல்லாரைக் கெடுக்க, வறுமை நல்லாரைக் கெடாது நிற்றலான். வறுமையினும்[4] திரு இன்னாது என்றார். இதனால் அவர் திருவின் குற்றம் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*.: நூல்களைக் கற்றாரிடத்து நின்ற வறுமையினுங் கல்லாதாரிடத்து நின்ற செல்வம். பொல்லாது எ—று.

ஏ) *பழைய* 2: கற்றவரிடத்து நின்ற வறுமையினும் பொல்லாது; கல்லாதவரிடத்து நின்ற செல்வம்.

கல்வியும் அமைதியும் இல்லாதவன் செல்வம், கல்வியும் அமைதியு முடையவர் வறுமையிற் கொடிது.

மல்லர்: என்பது படிப்பவர்கள் அனுபவிக்கிற தரித்திரத்தைப் பார்க்க படிப்பில்லாதவர்கள் அனுபவிக்கிற செல்வம் பொல்லாதது எ—று

தரித்திரம் படிப்புள்ளவர்களுடைய உடம்பை வாதிக்கும், ஆத்துமத்துக்கு கேடு செய்யாது. படிப்பில்லாதவர்களுக்குச் செல்வ முண்டானால் அதனுடைய நிலையாமை தெரியாததினால் அவர்கள் அதின்பேரிலே வைக்கிற பற்றுதல், அனேகம் பாவங்களுக்கு ஏதுவாயிருக்கிறதினால் அவர்களுடைய ஆத்துமத்துக்குகேடு செய்யும் என்பதாகையில் படித்தவன் தரித்திரத்தினும் படியாதவன் செல்வம் மிஞ்சின கேடு என்பது கருத்து.

நல்லார்—அறிஞர்; கண்—இடம்; வறுமை—தரித்திரம்; இன்னாது—பொலலாப்பு; திரு—செல்வம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

நல்லார்கள் வறுமைபோல என உவமமாகக் கொண்டார் *மணக்குடவர்*. கல்லாதார்கட்பட்ட திரு இன்னாது என்பதற்கு ஏற்ப நல்லார்கட்பட்ட வறுமை இன்னா செய்யாது என விரியாது செல்வம் உண்டாயின் கல்லார். பிறரைத் துன்புறுத்துவர் என்று மட்டும்

3.—தாம்—செல்வமும் வறுமையும் இடுக்கட்படுதலாவது, கல்லாரிடமிருந்து செல்வம் உடையவனாகிய தனக்கும், பிறர்க்கும் பயன்படாதொழிதல்.

4.—வறுமையின்என்றும் பாடமுண்டு.

விளக்கந்தந்தது, நல்லார் எந்நிலையினும் பிறர்க்குத் துன்பஞ்செய்யார். என்று அவரியல்பு நோக்கி என்க.

பரிதி. நல்லாரிடத்து வறுமைமிடைப்படும் என்றது, 'இடும்பைக்கு இடும்பைபடுப்பர்' என்பதுபோல உடையவனை வருத்தும் வறுமையைக் கற்றார் வருத்துவர் என்பதாம். மிடைப்படுதல்—வருந்துதல். 'இன்னாது' என்பதற்கு இவர் கண்டபொருள் வருந்துவது என்பதாகும். அதனை மிடைப்படும் என்றார். முடைப்படுதல் என்பது இன்றைய உலகியல் வழக்கு:

காளிங்கர் கருத்து, நல்லார்கட்பட்ட வறுமை பிறர்க்குச் செய்யத்தக்கன செய்யமாட்டாமையானும், துய்க்கத்தகுவன துய்க்கக் கிடையாமையானும் அவர்கட்கு அவ்வப்போது உண்டாம் துன்பம் ஒன்றே. கல்லாதான் பட்ட திரு தனக்கும், பிறர்க்கும் என்றும் துன்பம் தருவது என்பதாம். வறுமையின் செல்வம் இன்னாது ஆதற்குப் **பரிமேலழகர்** தரும் விளக்கம் மிகச்சிறந்தது.

இராமலிங்கனார், கல்லாதார் செல்வம் கற்றார் நல்குரவைக் காட்டிலும் பயனற்றது என வறுமையின் என்பதிலுள்ள இன்னுருபு உறழ்ச்சியல்லது எல்லைப்பொருளில் வந்ததாகவும், கற்றாரிடைப்பட்ட வறுமை தன்னாற்றலைக்காட்ட முடியாமல் பயனற்றுப் போவது போலக் கல்லார் செல்வம், அவர்க்கும் பிறர்க்கும் பயனின்றாய்க்கழியும் என்னும் கருத்தினது என்றும், உரைப்பர் ஆயினும், 'இன்னாது' என்பது 'இனிமையற்றது' என்ற பொருளோடு நிற்பது; துன்பமெனக் கொள்ளுதல் கூடாது எனக் கூறுவது விளக்கந்தருவதாக இல்லை; அன்றியும், இனிமையற்றது எனின் துன்பமானது என்பதுதானே பொருள் ஆகும். ஆதலால், பழைய உரையாசிரியர்களிலிருந்து இவர் எங்ஙனம் மாறுபடுகிறார் என்பதை அறியக்கூடவில்லை.

ஜி.வரத 'இன்பந்தரும் செல்வம் கல்லாரிடைப்பட்டதனால் அவனுக்கும் பிறருக்கும் துன்பந்தருவதாய்ப்பாழாகிறது. துன்பந்தரும் வறுமை கற்றாரிடைப்பட்டதால் பயனற்றுப் போகிறது' என்று கூறுவர்.

கல்லாதார்கட்பட்ட திரு அக்கல்லானைக் கெடுத்தலோடமையாது, பிறருக்கும் கேடு தரும். நல்லார்கட்பட்ட வறுமை வறுமையிற் செம்மையாகப் போற்றப்படும் என்று சொல்லலாம்.

ஓ) ஒப்புமைப் பகுதி:

கல்லார்கண் பட்ட திரு:

"மெய்நெறி உணர்கிலார் வெறுக்கை பெற்றது
துன்னிய வினைக்கொரு துன்ப மாதல்போல்." —கம்ப. 6826

முற்றும்:

"மிகப்பேர் எவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி யில்லோர் உடைமை உள்ளேம்
நல்லறி வுடையோர் நல்குரவு
உள்ளுதும் பெருமயாம் உவந்துநனி பெரிதே." புறம்.197: 15—18

"எறிநீர்ப் பெருங்கடல் எய்தி இருந்தும்
அறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்
மறுமை அறியாதான் ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை." —நாலடி. 275

"சிறியவர் எய்திய செல்வத்தின் மாணப்
பெரியவர் நல்குரவு நன்றே—தெரியின்
மதுமயங்கு பூங்கோதை மாணிழாய் மோரின்
முதுநெய்தீ தாகலோ இல்." —பழ. 90

"நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்டதிருக் கண்டாயே." தமிழ். 194.

ஓ) மேற்கோள்பகுதி:

மயிலை.: கண் என்னும் ஏழாம் வேற்றுமை உருபு இடப்பொருளில் வந்ததற்கு மேற்கோள். (நன். 301.)

காரி.: உவமையுள் ஒருவகைக்கு மேற்கோள். (மாற.122.)

சுப்பிர.: தெரிதருதேற்ற உவமைக்கு மேற்கோள்.
(தண்டி. சூ. 39 உரை)

41.9. மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும் கற்றார் அனைத்திலர் பாடு. (சஉக)

உரைப்பகுதி,

அ) மணக்.: கல்வியில்லாதார் உயர்குலத்தில் பிறந்தாராயினும் இழிகுலத்துப் பிறந்தும்[1] கற்றாரோடு ஒத்த பெருமையிலர் எ-று.

இது குலமுடையராயினும் மதிக்கப்படார் என்றது.

ஆ) பரிதி.: மேலான குலத்திலே பிறந்தும், கல்வியில்லாதார்க்குக் கீழான சாதியிலே பிறந்தும் கல்வி உள்ளார்க்குள்ள பெருமையத்தனை இல்லை எ–று.

இ) பரிப்.: உயர்ந்த குலத்திற் பிறந்தாராயினும் கல்வி இல்லாதார் இழிகுலத்துப் பிறந்த கற்றாரோடு ஒத்த பெருமை இலர் எ.று.

இது குலம் உடையராயினும் மதிக்கப்படார் என்றது.

ஈ) காளி.: உலகத்துக் கல்லாதாராகிய மக்கள் உயர்குடிப் பிறந்து ஒள்ளியர் ஆயினும், மற்றுக் கீழ்க்குடிப் பிறந்தும் கற்றாரைப் போல்வ–தோர் பெருந்தன்மை என்றும் இலர் எ-று.

உ) பரிமேல்.: கல்லாதார் உயர்ந்த சாதிக்கண் பிறந்தார் ஆயினும், தாழ்ந்த சாதிக்கண் பிறந்துவைத்தும் கற்றாரது பெருமை யளவிற்றாய பெருமையிலர்.

உடலோடு ஒழியும் சாதியுயர்ச்சியிலும் உயிரோடு செல்லும் கல்வியுயர்ச்சி[2] சிறப்புடைத்து என்பதாம். இதனால் அவர் சாதியுயர்ச்சியால் பயனின்மை கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: கல்வியில்லாதவர், உயர்ந்த சாதியிலே பிறந்தவரானாலும், கீழான சாதியிலே பிறந்து கல்வியைக் கற்றவருடனே சரியல்லர் எ-று.

ஏ) பழைய 2: கல்லாதவர் உயர்ந்த சாதிக்கட் பிறந்தாராயினும், தாழ்ந்த சாதிக்கட் பிறந்தும் கற்றார் போலப் பெருமையிலராம்.

மல்லர்: எ-து படிப்பில்லாதவர்கள் மேல்சாதியில் பிறந்தாலும் படிப்புள்ள கீழ் சாதியரும் உடைத்த பெருமைக்குச் சரியான பெருமையில்—லாதவர்கள் எ.று.

கல்வியினால் வருகிற பெருமை, சாதிப்பெருமைக்கு மேலான பெருமையாய் இருக்கிறதினால், கல்வியில்லாத மேல்சாதியார் கல்வியுள்ள கீழ்ச்சாதியாருக்குக் கீழாய் இருப்பார்கள் என்பது கருத்து.

மேற்பிறந்தார்-மேல்சாதியார்; ஆயினும்-ஆனாலும்; கீழ்ப்பிறந்தார்-கீழ்ச்சாதியார்; கற்றார்-கற்றவர்கள்; அனைத்து-அளவாகும்; இலர்-இல்லாதவர்கள்; பாடு-பெருமை.

1, 'பிறந்த' பரிப்பெருமாள் பாடம். வே. ப. க.
2. கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து ஆதலின் 'உயிரொடு செல்வது கல்வியுயர்ச்சி' எனப்பட்டது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இராமலிங்கனார், மேற்பிறப்புக்கும் கீழ்ப்பிறப்புக்கும் காரணமாகச் சாதியை மட்டும் ஏனோர்கூற, இவர் செல்வத்தையும் கூறுவர். 'பணம் பந்தியிலே குணம் குப்பையிலே' என்ற உலகப் பழமொழி மேற்பிறப்பு பணத்தாலும் ஆம். பணத்தாலாவது செயற்கையான மேற்பிறப்பு. சாதியாலானது இயற்கை மேற்பிறப்பு என்று எண்ணச் செய்திருக்கிறது.

குழந்தை, 'மேற்பிறப்பு— மேலான குடிப்பிறப்பு. அதாவது வழிவழியான நல் ஒழுக்கம் உள்ள குடி' என்பர். இவர் கருத்து மேற்பிறப்பு என்பது நூலளவையைக் கொண்டு வரையறுக்கப்பட்டதன்று. ஒழுக்கமுடைமையால் வழிவழியாக வருவது என்பது.

மணக்., பரிப்., பரிதி., 'மேற்பிறப்பு—உயர்ந்த குலம்' என்பர் காளிங்கர், 'உயர்குடி' என்பர். பரிமேலழகர், கவிராசர், பழைய உரை 2, 'உயர்ந்த சாதி' என்பர். ஈண்டு இவை மூன்றும் ஒன்றுபோற் கூறப்பெறினும் குடியினும் குலமும், குலத்திற் சாதியும் விரிந்தனவாதலைக் காணலாம். சாதி உடலொடு ஒழிவது எனச் சாதியின் நிலையைக்காட்டும் பரிமேலழகர் கருத்து மிகச் சிறந்தது. ஆயினும், உடல் உயிரொடு கூடி, தாய்க் கருவில் வளர்ந்து பிறப்பது. அதிலே உயர்வு தாழ்வு உண்டா? என்ற ஐயம் எழும்போது 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்ற குறள் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது. ஆகவே 'உடலொடுகழியும்' என்ற அமைதி அறநூல்கள் பிறவற்றை நோக்கியும், உலகியலை ஒட்டியும் கூறியது போலத் தோன்றுகிறது.

ஒ) ஒப்புமைப் பகுதி:

முற்றும்:

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயு மனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்

மேற்பா லொருவனும் அவன்கட் படுமே." —புறம்.183.

"களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோராயினும் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்." —நாலடி. 133.

"தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
காணின் கடைப்பட்டான் என்றிகழார்—காணாய்
அவன் துணையா வாறுபோ யற்றேநூல் கற்ற
மகன் துணையா நல்லகொளல்." ஷே. 136

"திரியழல் காணின் தொழுப விறகின்
எரியழல் காணின் இகழ்ப—ஒருகுடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமைபா ராட்டும் உலகு" —நான்மணி.64.

"உடல்வயத் தாகும் சாதி உயர்ந்தவர் சாதி தாழ்ந்தோர்
திடமுற உயிரி னோடு செல்லுறும் கல்வி தம்மால்
அடர்தரும் பெருமை எய்தார் ஆதலால் அகக்கண் ணாகித்
தொடர்புறும் கல்வி; கல்லாத் தொழிலினை விடவே வேண்டும்".
விநா. அரசி .47

"நுட்புல நுணங்கு கேள்வி நுழைவின ரெனினும்..." கம்ப.4941

41. 10. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோ டேனை யவர்[1]. (சக0)

உரைப்பகுதி:

அ) மணக்.: விலங்குச் சாதியோடும் மக்களோடும் உள்ள வேறு பாடு உடையர், விளங்கின நூல்களைக் கற்றவரோடு கல்லாதவர் எ—று.

இது கல்லாதார் விலங்கு என்றது.

ஆ) பரிதி.: நாற்கால் சீவனாகிய மிருகத்திற்கும், மனிதற்கும் எத்தனை தூரமுண்டு; அத்தனை தூரமுண்டு கல்லாதார்க்கும் கல்வி யுள்ள பேருக்கும் எ—று.

இ) *பரிப.*: விலங்குச் சாதியோடும் மக்களோடும் உள்ள வேறுபாடு உடையர்: விளங்கின நூல்களைக் கற்றவர்களோடு கல்லாதவர் எ—று. இது கல்லாதவர் விலங்கு என்றது.

ஈ) *காளி.*: இவ்வுலகத்துப் பிறந்த விலங்குச் சாதிக்கும், மக்கட்கும் வேற்றுமைபோல, விளங்கிய நூல்களைக் கற்றுணர்ந்த சான்றோரோடும், மற்றைக் கல்லாதாரோடும் வேற்றுமை உடைத்து எ—று.

உ) *பரிமேல்.*: விலங்கொடு நோக்க மக்கள் எத்துணை நன்மையுடையர்; அத்துணைத் தீமையுடையார், விளங்கிய நூலைக் கற்றாரோடு நோக்கக் கல்லாதவர்.

விலங்கு, நூல் சாதிப்பெயர்[2]. விளங்குதல்—மேம்படுதல். விலங்கின் மக்கட்கு ஏற்றமாய உணர்வுமிகுதி காணப்படுவது கற்றார்கண்ணேயாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்த பிறப்பினரல்லர் என்பதாம். மயக்க நிரனிறை. இதனால் அவர் மக்கட் பிறப்பால் பயன் எய்தாமை கூறப்பட்டது.

காரி.: எதிர்நிரல்நிறை. 'சாயலும் நாணும் அவர் கொண்டார்'[3] என்பதும் அது. நன்மையை ஒத்த தீமை என்றதனால் 'கெடுப்பதூஉம்'[4] 'இழிவறிந்து உண்பான்'[5] என்பனவும் அவ்வாறாம்.

ஊ) *கவிராசர்*: மிருகசாதியும் மனுஷசாதியும் பார்த்தால் ஒன்றிற் கொன்று எத்தனை நன்மையுடையவர், அத்தனை நன்மையுண்டு, கற்றவர்களுக்குங் கல்லாதவர்களுக்கும் எ—று.

ஏ) *பழைய 2*: மிருகத்தொடு மக்களெத்தனை நன்மையுடையவர்; அத்தனை நன்மையுடையர் கல்லாதவரொடு விளங்கிய நூலைக் கற்றவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்:: *பரிப. காளி.*, முதலானோர் குறட்கிடக்கை முறையே

---

1 ஒப்பாகாத விலங்கை ஒப்பாக உரைத்தமையின் இது ஒப்பல் ஒப்பு ஆம். ஈண்டு நன்மை தீமை என்பன மக்களும் விலங்கு செய்யும் வினையின் பயனைக் கருதியதாதல் இயலாது நன்மை-மேன்மை என்ற பொருளில் வந்திருக்கும் என்பதைப் பரிமேலழகர் தரும் ஏற்றமாய உணர்வு மிகுதி என்பதே விளக்குதல் காண்க.

2. விலங்கு-விலங்கினத்தையும், நூல்-நூலின் தொகுதியையும் உணர்த்துதலின் சாதிப் பெயர் எனப்பட்டது என்றனராயினும், சாதிப்பெயர் உயிருடையனவற்றிற்கன்றி நூல் போன்ற உயிரில்லாதவற்றிற்கு ஆம் போதும்; தொகுதிப்பெயர் எனலே ஏற்றதாம் நூற்சாதியென வழங்காமை காண்க.

3. குறள் 1182.

4. குறள் 15.

5. குறள் 944.

பொருள் கொள்கின்றனர். *பரிமேலழகரும்* அவர் வழிபற்றும் பிறரும் அங்ஙனமே உரைப்பார்களாயினும், விலங்கொடு மக்கள் எத்துணை நன்மையுடையர் அத்துணைத் தீமையுடையர் கற்றாரோடு ஏனையவர் என மயக்க நிரனிறையாகக் கொள்வர். 'களிறும் கந்தும் போல நளிகடற் கூம்பும் கலனுந்தோன்றும்' என்புழி, களிறுபோலக் கலனும் கந்து போலக் கூம்புந் தோன்றும் என முறையானன்றி மயங்கிக் கிடத் தலின் மயக்க நிரனிறையாயிற்று. இதனை எதிர்நிரனிறை என்றலும் உண்டு என்பதனை *நுண்பொருள்மாலையுடையார்* குறித்தனர்.

தேவநேயர், விலங்கொடு நூல் கற்றாரோடு ஏனையவர் மக்களொடு விலங்கு அனையர் எனக்கூட்டி முறை நிரனிறையாக்குவர். உலகில் கற்றவர் கல்லாதவர் இருசாராரும் கூடி வாழ்கின்றனர். அவர்களை இலக்கணநூல் மக்கள் மாக்கள் என இருவகைப்படுத்தும். ஆதலால், இரு சாராரையும் மக்கள் இவர் மாக்கள் இவர் என பிரித்துக் காண்க என்று கருத்துரைப்பர்.

இவற்றுள் நன்மை தீமைகளை வைத்து, அளந்து காணுதல் குறளமைதிக்கு இயலுமா? தீமையே விளையும் விலங்குகளால் என்ற முடிவு கருதத்தக்கது. நன்மை தரும் விலங்குகளும் உள. ஆதலால் கல்லாதார் தமக்கென ஒன்றிலராதலின் தீமையே விளைப்பர். ஆதலான் தீமை செய்யும் விலங்கினை ஒப்பர் என ஏற்புழிக்கோடலான் கொள்ளுதலும் அமைவதாகும்.

'விலங்கொடு மக்களனையர்' என்ற உவமை விலங்கிலும் பயன் படுவ உளவாதலான் நன்மை தீமையைக் கருதிற்றன்று. கற்றார் கல்லாரிடையே உள்ள வேறுபாடு அத்துணை என அறுதியிட்டுக் காட்டியவாறு ஆம். 'மாவும் மாக்களும் ஐயறிவினவே' என்பவாகலின், மாக்களில் ஒருவனாகிய இவனைக்காட்டிலும் கற்றார் பகுத்தறிவும் பெற்ற மக்களனையர் என வேறுபடுத்திக் காட்டியதாம். கேள்வியும் கல்வி போல அறிவு விளக்கந்தருவதாயினும் அஃது 'ஒருவற்கு ஒற்கத் தின் ஊற்றாந் துணை'யேயன்றிப் பிற சிறப்புக்களைப் பயவாது.

ஒ) ஒப்புமைப் பகுதி:

விலங்கொடு மக்கள் அனையர்:

"வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்ளார்
—நாலடி.315

"ஆமகன் ஆதற் கொத்தனை அறியா
நீமகன் அல்லாய்"
—மணி 13:61-62

"நன்று தீதென் றியல்தெரி நல்லறி (வு)
இன்றி வாழ்வதன் றோவிலங் கின்னிடை
நின்ற நன்னெறி நீயறி யாநெறி
"ஒன்று மின்மையுன் வாய்மை யுணாத்துமால்" கம்ப. 4157

"தக்க இன்ன தகாதன இன்னவென் (று)
ஒக்க உன்னல ராயி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்நெறி
புக்க வேல்அவ் விலங்கும் புத்தேளிரே" கம்ப. 4158

"திருகு நெஞ்சின் வஞ்ச ராகி இளைஞர் தீமை செய்தக்கால்
உருகு கின்ற தாதைநீ உடன்படுத்தி ருப்பதோ
மிருக மன்று பறவை யன்றி ரக்க மின்றி மேவுநின்
அருகு வந்த ணைந்த தெங்கள் அறிவி லாமை யாகுமே."
வில்லி. சூது. 184

முற்றும்.

"கல்லாது நீண்ட வொருவன் உலகத்து
நல்லறி வாளர் இடைப்புக்கு - மெல்ல
இருப்பினும் நாயிருந் தற்றே யிராஅ
துரைப்பினும் நாய்குரைத் தற்று." நாலடி.. 254

ஒ) மேற்கோள் பகுதி

மயிலை.: எதிர்தொடங்கிப் பொருள்கொள்ளும் எதிர்ப்பெயர் நிரல் நிறைக்கு மேற்கோள். (நன்.413.)

சுவாமி.: 'விலங்கொடு மக்கள்அனையர் என்பது மூன்றனுருபு ஒப்ப லொப்பில் வந்ததற்கு மேற்கோள். (இ.கொ.54)

யா. வி.: எதிர்நிரல்நிறைக்கு மேற்கோள். (சூ. 95.)

சுப்பிர.: சாதிக்கேற்ற உவமைக்கு மேற்கோள் காட்டி, இதில் கல்லாத மாந்தர் சாதிக்கு விவேகமற்ற மிருகசாதியை உவமை கூறியமை காண்க என்பர். (தண்டி. சூ. 90 உரை)

பண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்பு முறை.

	அரங்கின்றி	கல்லாதான்	கல்லாதவரும்	கல்லாதான் ஒட்பம்	கல்லா ஒருவன்	உளரெனினும்	நுண்மாண்	நல்லார்கண்	மேற்பிறந்தார்	விலங்கொடு
மணக்.:	1	8	3	4	5	6	7	9	6	10
பரிதி.,	1	2	4	3	5	6	8	7	9	10
பரிப்.,	1	8	3	4	5	8	7	9	6	10
காளி	1	8	4	3	7	5	2	6	9	10
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

41வது அதிகாரம் 'கல்லாமை' முற்றிற்று.

42. கேள்வி.

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: கேள்வியாவது கேள்வியாமாறும் அதனானாகிய பயனும் கூறுதல்[1]. நூல்களைக் கற்கமாட்டாதார் அவற்றைக் கற்றார் மாட்டுக் கேட்டலும்அறிவுக்குக் காரணமாம் என்பதனால், அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: கேள்வியாவது கல்வி இல்லாதபோது கேள்விவேணும் எ:று.

இ) பரிப்.: கேள்வியானது கேள்வியினான்ஆய பயன் கூறுதல். நூல்களைக் கற்க மாட்டாதார் அதனைக் கற்றார்மாட்டுக் கேட்டலும் அறிவுக்குக் காரணமாம் என்பதனால் அதன்பிற் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல். கற்றவழி அதனினாய அறிவை வலியுறுத்தலானும், கல்லாத வழியும் அதனை உண்டாக்குதலானும் இது கல்வி கல்லாமைகளின் பின் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர்: அஃதாவது. கேட்கவேண்டிய சாத்திர நூல்களைக் கற்றறிந்தவர் சொல்லக் கேட்டல். கற்றவனுக்குக் கல்வியினாலான அறிவைக் கெட்டிபண்ணும், கல்லாதவனுக்குங் கேள்வியால் அறிவுண்டாக்கலுமாம் என்பது.

ஏ) பழைய 2: அஃதாவது நூற்பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்டல்

மல்லர்: அதாவது தானறியாத காரியங்களைப் படித்தறிந்தவரீகளிடத்திலே கேள்.

---

1. 'கேள்வியானது கேள்வியினானாய பயன்கூறுதல்' பரிப்பெருமாள் பாடம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'கேள்வியாவது கேள்வியாமாறும் அதனானாய பயனும் கூறுதல்' என்ற மணக்குடவர் உரையில் 'கேள்வியாமாறும்' என்பது மிகை யெனக்கொண்டு, மணக்குடவரையே பின்பற்றிச் செல்லும் பரிப் பெருமாள் 'கேள்வியானாய' என்று மட்டும் பாடங்கொண்டனர். ஆயின் வள்ளுவர் எது கேள்வி என்பதை 'ஒழுக்கம் உடையார் வாய்ச் சொல்லைக் கேட்டலே கேள்வி'; 'எனைத்தானும் நல்லவை கேட்டலே கேள்வி' என்ற குறட்பாக்களால் கேள்வியாமாறும், ஏனைய குறட்பாக்களாற் கேள்வியின் சிறப்பும், இன்றியமையாமையும், பயனும் உணர்த்துகின்றாராதலின், மணக்குடவர், கேள்வியாவது கேள்வியா மாறும், என்று அதிகார வரைவிலக்கணத்தைத் தொடங்கிய சிறப்பைச் சிந்தை கொள்ளலாம். மணக்குடவரும், பரிப்பெருமாளும், பரிதி யாரும் கூறுவதைக் காட்டிலும் 'கற்றவர்க்கும் கேள்வி இன்றியமை யாதது. கல்லாதவர்க்கும் அங்ஙனமே; ஆனால், கற்றார் பெறும் பயன் அறிவின் துணிவு. கல்லார் பெறும் பயன் புதிதாகக் கல்வியறிவைப் பெறுதல்' என்ற பரிமேலழகர் விளக்கமும், அதனை, ஒட்டி வளர்ந்த தவிராசர், பழைய உரைகளும் சிறந்தன, ஆனால், கேட்கப்படும் பொருளைக் கேட்டல் என்பதால் மணக்குடவர் கருத்தையும் பரிமேல ழகர் தழுவினராதல் காண்க.

இராமலிங்கனார், 'தாமின்புறுவது உலகின்புறுதலைக் காண வேண்டிய அறிஞர்கள் தாமாகவே வலியவந்து கூறும் அறிவுரை கேட்டலும். நாமாக அறிஞர்களைக் கேட்டறிதலும் கேள்வி; படிப்பில் அறிவுபெறலாம் ஆயினும், மேலான அறிவு கேள்வியான் ஆம், ஏட்டுப் படிப்பு மட்டும் அறிவை விளைக்காது. அறிஞர்கள் உரைக்கக் கேட்டல் படித்த அறிவை வளர்க்கச் செய்யும். அதனால் அனைவரும் கேட்க வேண்டும்' என்பர். இது சிறந்த சிந்தனைக்குரிய விளக்கமாதலைக் காண்க.

தேவநேயரும், 'ஓராசிரியனிடத்து முறையே கேட்டவனும் அத் துறையில் வல்லார் பலரிடமும் சென்று, கேட்டறிதல். இது கேள்வியின் தொடர்ச்சி. கல்லாமையின் குறையைப் போக்குவது' என்பர். கேட்டவனும் என்ற உம்மையால் கல்லாதவன் இன்றியமையாமற் கேட்க வேண்டியவன் என்பதை வலியுறுத்தினர்:

குழந்தை, 'ஒருவன் தான் கற்றதோடு அமையாமல் கற்றார் கூறுவதையும் கேட்பதே கேள்வி' என்பர். இத்துடன் கல்லாதார்

கேட்டேனும் அறிவு பெறுதல் வேண்டும் என்பதையும் வெளிப்படையாகக் கூறியிருக்கலாம்.

ஜி. வரத. 'அனுபவமுடைய ஆசான்பால் கற்றாரும் கல்லாரும் கேட்டல் வேண்டும்' என்பர். இது பொதுவகையான் கேள்வி என்பதன் இலக்கணம் கூறுவர்.

42.1. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை[1] (சகக)

உரைப்பகுதி:

அ) மணக்.: உரை இல்லை.

ஆ) பரிதி. :செல்வமானது செவி, மெய், வாய், கண், மூக்கு, இவற்றுள் செவியான் விளையும் உணர்வு பெரியது. அது எட்டுவகைச் செல்வத்திலும்[2] பெரியது எ.று.

இ) பரிப்.: செல்வத்துள் வைத்துச் செல்வமாவது செவியுணர்வுடைமையாகிய் செல்வம்; பயன்படும் இடத்து மற்றுள்ள செல்வம் எல்லாவற்றினும் தலையாம் ஆதலான் எ–று.

ஈ) காளி.: உலகத்துச் செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்த செல்வம் யாதெனின், செவிச்செல்வம்; ஆகலான், ஒருவன் கேட்பனவற்றுள் தனது செவியினான் மறுமைக்கு ஆக்கம் இனிதுறக் கேட்கும் கேள்வியே தலைச்செல்வம் எ.று.

உ) பரிமேல்.: ஒருவற்குச் சிறப்புடைய செல்வமாவது செவியான்வரும் செலவம், அச்செல்வம் பிற செல்வங்கள் எல்லாவற்றினும் தலையாகலான்.

செவியான் வரும் செல்வம், கேள்வியான் எல்லாப்பொருளையும் அறிதல். பிற செல்வங்கள் பொருளான் வருவன.[3] அவை[4] நிலையா

---

1. ஏனைய செல்வங்கள் பின்பின் வறுமையாம்; ஈறு வருஞ்செல்வங்கள். செவிச்செல்வம் என்றும் வளர்தலேயன்றி இன்மை பயவாது ஆதலின், செல்வத்துள் செல்வம் எனப்பட்டது. துன்பத்துட்டுன்பம் (369) என்னுங் குறளுரையில் 'ஏனைய துன்பங்கள் எல்லாம் இன்பமாக வருந்துன்பம்' எனப் பரிமேலழகர் எழுதியது கொண்டு, 'செல்வத்துட் செல்வம்' என்பதற்கு 'ஏனைய செல்வங்கள் இன்மையால் என்றும் வறுமையே யாகாத செல்வம்' எனப்பொருள் கண்டாம் என்க.
2. தனம், தானியம், வாகனம், வீரம், வித்தை, கீர்த்தி, விசயம், அரசு என்பன.
3. பொருளான் வருவன—பொருள் கொடுத்துப் பெறுவனவாகிய உணவு உடை மனையினி முதலிய அனைத்தும் என்க.
4. அவை—பொருளான் வருஞ்செல்வங்கள்.

ஆகலானும், துன்ப விளைவின ஆகலானும், இது தலையாயிற்று. அவற்றை ஒழித்து இதனையேசெய்க என்பது குறிப்பெச்சம்.[5]

ஊ) *கவிராசர்:* ஒருவனுக்கு அதிகமான செல்வமாவது, செவியால் நூல்களைக் கேட்கிறதே. அந்தக் கேள்வி சகலமான ஐசுவரியங் களிலும் தலையாய செல்வம் எ–று.

ஏ) *பழைய 2:* ஒருவருக்குச் செல்வத்துட் செல்வமாவது செவி யான் வருஞ்செல்வமே. அதுவே செல்வங்களுள் சிறந்ததாகும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவர் உரை மட்டும் உள்ள பதிப்புக்கள் *பரிப்பெருமாள்* உரையையே *மணக்குடவரதாக* ஆண்டுள்ளன.

பரிதி, 'ஐம்பொறிகளான் நுகரும் உணர்வுகளில் செவியான் விளையும் உணர்வு பெரியது. எட்டுவகைச் செல்வத்திலும் பெரிது' என்பர். இவ்வுரை எவ்வகையினும் ஏற்புடையதன்று. எட்டுவகையாஞ் செல்வங்களனைத்தும் பொருட் செல்வங்களே. ஏனையோர் கூறும் உரையாகவே இருத்தலின் இதுவும் சிறப்பன்று. *பரிப்பெருமாள்* 'செவிச்செல்வம்—செவியுணர்வுடைமையாகிய செல்வம்'. செவியுணர் வாகிய செல்வம் எப்போது சிறந்த செல்வமாக மதிக்கப்பெறும்? என்ற வினாவிற்கு விடைதருவார்போலப் பயன் தருங்கால் என்பது சிறந்த நயமாகிறது. பொருட் செல்வங்கூட பெட்டியிலிருக்கும் போது செல்வமாவதில்லை. உண்டும்—ஈத்தும் பயன்படுத்துகிற போது தான் செல்வமாகிறது. அதுபோல கேள்விச்செல்வமும் உயிருக்கு உணவாகத் துய்க்கப்படும்போதுதான் உணர்வாகிய பயன்தந்து செல்வமாகிறது என்ற சிந்தனைகளைக் கொடுப்பதால் அது சிறந்த நயமாகிறது.

வள்ளுவர், அருட்செல்வம்—பொருட்செல்வம் (241). அடக்கம் செல்வம் (121), என்பன போலப் பலவற்றைச் செல்வமாக உருவகிப் பர். ஆதலால் அவர்கூறும் செல்வங்களனைத்தினும் சிறந்தது இது எனலும் தவறாகாது. அன்றியும் அவர்காட்டும் அடக்கச் செல்வம் பொருட் செல்வத்துள் அடங்கியதுமாகாது.

காளிங்கர், 'கற்பனவும் கேட்பனவும் உலகியல் வாழ்விற்கு உரியனவும் வீட்டு நெறிக்குதவுவனவுமாகலாம். அங்ஙனமாகச் செவி யினால் மறுமைக்கு ஆக்கம் இனிதுறக் கேட்கும் கேள்வியே தலைச்

5. குறிப்பெச்சம்—சொல்வானுடைய சொற்களைத் துணைக்கொண்டு சொல்வான் மனக் குறிப்பினை உணர்தல். அவன் மனக்குறிப்பு அவன் கூறுஞ் சொற்களில் குறைந்து நிற்றல் பற்றிக் குறிப்பு எச்சம் எனப்பட்டது. 'தத்தங்குறிப்பின் எச்சம் செப்பும்' என்பதன் உரையில் நச்சினார்க்கினியர் கூறுமாற்றான் அறிக.

செல்வம்' என்றது கேள்விச்செல்வம் இரண்டனுள் வீட்டு நெறிக்கு 'வழித்துணையாகும் செல்வத்தைத் தலையாய செல்வம் எனற்கு என்க. 'அருட் செல்வம் செல்வத்துட்செல்வம்' என்ற வள்ளுவம் வழி காட்ட இவர் இக்கருத்தைக் கொண்டிருப்பார் எனலாம்.

பரிமேலழகரும் பிறரும் குறட்போக்கிற்கேற்ப உரை எழுதி உயர் கின்றனர்.

இராமலிங்கனார் 'செல்வம்' என்பதற்குச் செல்வத்தான் வரும் இன்பம் என்ற அளவு உரையை நடத்துகிறார். ஒரு செல்வம் பொருளாகவும், செவிச் செல்வம் உணர்வு வடிவாகவும் இருப்பதால் பொருளுக்குப் பண்பு உவமமாதல் யாங்ஙனம்? என்ற எண்ணத்தால் இரண்டையும் இன்பம் எனக் கொண்டனர் போலும். மேலும், அவர் அறிவு இன்பம் அனுபவிப்பதற்கும், ஆன்மா உணர்ச்சி பெறுவதற்கும் கேள்வியைப்போல உதவக்கூடியது வேறில்லை என்கிறார். அறிவு, ஆன்மா இன்பத்தை நுகரத் துணையாமேயன்றி அதுவே இன்பத்தை அனுபவியாது; அன்றியும் இன்பம் என்பது ஓர் உணர்ச்சி அதனைப் பெறுவது ஆன்மா; அதற்குத் துணையாவது அறிவு ஆகையால் இக் கருத்துரை தெளிவில்லாதது.

தேவநேயர், 'செல்வங்கள் இருவகையும் மூவகையும் எண்வகை யும் ஆதலின் எல்லாவற்றுள்ளும் தலையாயது கேள்விச் செல்வம்' என விளக்கந் தருவர். 'எல்லா வகையும் பொருட் செல்வமும், அறிவுச் செல்வமும் என இருவகையுள் அடங்கும். அவற்றுள் அறிவுச்செல்வம் கல்வியும் கேள்வியும் என இரண்டாம் அவற்றுள்ளும் கல்வியினும் கேள்வியே தலையாய செல்வம்' என்பர். அவர் எடுத்துக்காட்டும் மேற்கோள்கள் கல்வி கேடில் விழுச்செல்வம் . கேள்வி தலைச்செல்வம் என்பதை விளக்குகின்றன.

குழந்தை, பரிமேலழகரை ஒட்டி, தலையாயினமைக்குக் காரணம் கூறும்போது 'நிலையற்ற பொருட்செல்வத்தினும் நிலை யான கேள்விச்செல்வம் சிறந்தது' என்பர். மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்டானாயினும் நினைப்பு மீண்ட வழி வெளிப்படுதலின் நிறையாயினமை காண்க.

ஜி. வரத. 'செவிச்செல்வம் அறிவு. அது நிலைத்தது; பொருட் செல்வம் அழியுந் தன்மையுடையது; நிலையாதது' என வேறுபாடு காட்டுவர்.

உயிருக்கியல்பான அறிவாற்றல் செவி முதலான கருவிகள் வாயிலாக மனத்தைப் பற்றிச் சென்று, புலன்களைப் பற்றுகிறபோது

பற்றிய பொருளைப் பற்றியதாக உயிரை வந்து ஒட்டுவது. ஆதலால் இது நேரே செவி அறிவாகாது. மலரைக் கண்ட ஒருவன் அதன் நிறம் அமைப்பு முதலியவற்றைச் சொல்கிறான். சொல் அவனுடைய காட்சி யறிவை நம் செவியின் வாயிலாக உயிருக்கு ஊட்டுகிறது. அதுபோல மணத்தைச் சொல்கிறான். அவ்வுரை கேள்வியாக மூக்குணர்வை நம்முயிர்க்கு ஊட்டுகிறது. ஆதலால் ஏனைய பொறிகளால் அறியப் பெறும் அறிவுகளைக் கூட அறிஞர் சொற்களைக் கேட்பதன் வாயிலாக நேர்முக ஞானமில்லாதவன் செவிவழி யறிவாகப் பெறுகின்றான் ஆதலின் தலை என்றார் எனலுமாம். சிந்திக்க.

'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்ற குறளாற் கல்வி செல்வம் இரண்டையும் செல்வம் விழுச்செல்வம் என்ற ஆசிரியர் 'செல்வத்துட் செல்வம்' என்பாராயின் பொருட் செல்வத்தைக்காட்டிலும் சிறந்தது கேள்விச் செல்வம் என்று எண்ணியிரார். விழுச்செல்வம், செல்வம் என்ற இரண்டினும் சிறந்தது கேள்வி என்றே கருதியிருப்பர். ஆதலால் உழைத்தும் பயின்றும் பெறும் கல்விச்செல்வம் பொருட்செல்வங்களைக் காட்டிலும், இருந்து எளிதிற் கொள்ளும் செவிச்செல்வம் சிறந்தது என்பது விளக்கியவாறு.

ஓ) மேற்கோள் பகுதி :

சுவாமி.: பொருத்தமில் புணர்ச்சிக்கு மேற்கோள்காட்டி, 'செல்வத்து ளெல்லாம் தலை' என்ற இடத்து, 'செல்வமெல்லாவற்றுள்' என்று உருபுபொருந்தலே முறை என்பர், (இ. கொ. 108.)

42.2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும். (சகஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: செவிக்கு உணவாகிய கேள்வி இல்லாதபோது வயிற்றுக்கும் சிறிது உணவு கொடுக்கத்தகும் எ-று.

பெருக உண்ணின் கேள்வியை விரும்பாது காமநுகர்ச்சியை விரும்புமாதலான்[1] சிறிது என்றார்[2]. இஃது எல்லாக்காலமும் கேட்க வேண்டும் என்றது.

1. துயிற்சுவையும் தூநல்லார் தோட்சுவையும் எல்லாம், அயிற்சுவையின்ஆகுவ. நீதிநெறி (85) ஆதலான் இங்ஙனம் கூறப்பட்டது.
2. இதே பகுதி 'சிறிது உணவு என்றார்..... விரும்புமாதலான்' எனப்பரிப்பெருமாள் உரையிற் காணப்படுவதால் வேறுவேறுபாடின்மையின் விடப்பெற்றது உரைவளத்தின் வழிவந்த உரைக்கொத்து இதனையும் பரிப்பெருமாள் உரையிற் சேர்த்திருக்கிறது.

ஆ) *பரிதி.* : 'செவிக்குணர்வு' பாடம்.

செவியிற் கேள்வி இல்லாதபோது சிறிது வயிறாகிய எறும்புக்கும் ஈய[3]வினப்படும் எ.று.

இ) *பரிப்.* . செவிக்கு உணவாகிய கேள்வி இல்லாத பொழுது வயிற்றுக்குச் சிறிது உணவு கொடுக்கத் தகும் எ-று.

சிறிது உணவு என்றார், பெருக உண்ணின் கேள்வியை விரும்பாது காமநுகர்ச்சியை விரும்புமாதலான். மேற்கேள்வி வேண்டுமென்றார்: இஃது ஒருகால் கேட்டுவிட அமையுமோ என்று ஐயுற்றார்க்கு, எல்லாக்காலமும் கேட்க வேண்டுமென்று கூறப் பட்டது.

ஈ) *காளி.* : செவிக்கு அமுதமாகிய கேள்வி உணவானது சான்றோருழைக் கிடையாத போழ்தின்கண் சிறிதே வயிற்றுக்கும் உணவு அளிக்க அடுக்கும்[4] எ-று.

உ) *பரிமேல்.* : செவிக்கு உணவாகிய கேள்வியில்லாதபொழுது, வயிற்றுக்கும் சிறிது உணவு இடப்படும்.

சுவைமிகுதியும் பிற்பயத்தலும் உடைய கேள்வியுள்ளபொழுது வெறுக்கப்படுதலான் இல்லாத போழ்து என்றும், பெரிதாயவழித் தேடல் துன்பமேயன்றி, நோயும் காமமும் பெருகுதலால் சிறிது என்றும், அது தானும் பின்னிருந்து கேட்டற் பொருட்டாகலான் ஈயப்படும் என்றும் கூறினார். ஈதல் வயிற்றது இழிவுதோன்ற நின்றது[5]. இவை இரண்டு பாட்டானும் கேள்வியது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: செவிக்கு உணவாகிய கேள்வி யில்லாதபோழ்து வயிற்றுக்குச் சாப்பிடுகிறதிலே சிறிது விட்டுவிட வேணும் என்றவாறு.

---

3. ''சிறிது வயிறாகிய எறும்பிற்கும் ஈய'' என்று வயிற்றை எறும்பாக உருவகிக்கும் எண்ணத்தையும் 'வாங்குங்கவளத்து' என்ற நீதிநெறி விளக்கத்து, ''ஒரு சிறிது வாய்தப்பின்.....எறும்பிங்கொரு கோடியுய்யும்'' என்ற பகுதி விளைவித்திருக்கிறது பரிதியார் குமரகுருபரசுவாமிகள் காலத்திற்கு முன்னையரல்லாராயினும், ஏடெழுது-வாரின் இணைப்புக் கற்பனையாக இருத்தல் கூடும். பரிதியுரை சுவாமிகட்கு ஆண்டு அவ்வுருவகத்திற்கு உதவியிருக்கவும் கூடும். எங்ஙனமாயினும் செவிக்குணவு பெரிதும் வேண்டப்படுவது. வயிற்றுணவு சிந்திய நேரத்தில் ஊட்டினாற்போலும் என்ற கருத்தையுதவுகிறது.
4. அடுக்கும்— பொருந்தும்.
5. 'ஈயென் இளவி இழிந்தோன் கூற்றே' ஆதலால் ஈயப்படும் என்றதாம்.

ஏ) பழைய 2: செவிக்கு உண்பனவாகிய கேள்வி இல்லாத போழ்து, வயிற்றுக்கும் சிறிது உணவிடப்படும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'பெருக உண்ணின் கேள்வியை விரும்பாது; காமநுகர்ச்சியை விரும்பும்' என்ற மணக்குடவரும், பரிப்பெருமாளும் எழுத உள்ளத் திருந்து ஊக்கியவை 'மருந்து' என்ற அதிகாரத்திலுள்ள 942 முதல் 947 முடிய உள்ள குறட்பாக்களேயாம்.

கேட்டற்குரிய செவியோடு வயிற்றுக்குரிய உணவுஎன்ற சொல்லை உருவகத்தான் இணைத்து, வயிற்றுக்குமீயப்படும் என வாளாகூறிய மையான் மணக்., பரிப்., இருவரும் சிறிது—சிறிதளவு எனத் தகுதி வழக்குப் பற்றி இணைத்துக்கூறினர்.

பரிதியார், எப்போதும் கருத்துரை எழுதுபவர். அதனுடன் தம் கற்பனைகளையும் இணைத்துச் சுவைபடக் கூறும் மரபினர். ஆதலால் 'வயிறாகிற எறும்புக்கும் ஈயப்படும்' என்றார். இங்ஙனம் கூறியதன் சிறப்பு விளங்கிற்றிலதாயினும் எறும்பு சிற்றுணவு கொள்வது என்று கருதிக் கூறினர்போலும் என நயம் உரைப்பர் சாரங்கபாணியார். சிற்றுணவும் பேருழைப்பும் உடையது எறும்பு. அதுபோல வயிற்றுக் குச் சிறிது தந்து எப்போதும் கேட்டலாகிய பேருழைப்பை ஒருவன் பொருந்துக எனக்கருதியதும் ஆகலாம். 'செவிக்குணர்வு' எனப் பாடம் கொண்டிருப்பர் என்பதைச் 'செவியிற் கேள்வியில்லாத போது' என்ற அவர் உரை காட்டுகிறது. ஆனால் உணவு என்ற பாடமே உருவமாகச் செவிக்கும் உண்மையாக வயிற்றுக்கும் இயைதல் காண்க.

காளிங்கர் கேள்வியை அமுதமாகவும் உருவகிக்கிறார். 'இல்லாதபோழ்து 'சிறிது' 'ஈயப்படும்' என்பவற்றிற்குப் பரிமேல ழகர் தரும் நயமும் விளக்கமும் மிகச் சிறந்தன. 'வயிற்றினிழிவு தோன்ற ஈயப்படும்' என்றது 'ஈயென்கிளவி இழிந்தோன் கூற்றாத லான்' என்க.

கவிராசர் 'கேள்வியில்லாதபோது வயிற்றுக்குச் சாப்பிடுகிறதிலே சிறிது விட்டுவிட வேண்டும்' என்கிறார். இதன் பொருணோக்கம் புரிந்திலது. குறள் நோக்கிற்குப் பொருந்தியதா? என்றும் எண்ணத் தோன்றுகிறது.

தேவநேயர் 'இல்லாதபோழ்து' என்பதற்குக் கேள்வி பண் பட்டார்க்குச் சுவைமிக்கதாகவும், மறுமைக்குப் பயன்படுவதாயும், அருமையாய்க் கிடைப்பதாயும்' என மூன்று ஏதுக்காட்டுவர். இதில் மூன்றாவது ஏது இவர் படைப்பு: ஏனைய இரண்டும் பரிமேலழகரின் எதிரொலிகளே.

ஜி.வரத. இக்குறட்பாவிற்குக் கூறும் நயமான விளக்கவுரைகள் பரிமேலழகர் குறிப்பை விளங்கிக் கொள்ளத்துணையாய் மாற்றமின்றி யுள்ளன. 'ஈயப்படும்' என்ற சொல் 'உணவின் இழிவைக் குறித்தது' என்றார். வயிற்றின் இழிவைக் குறிக்கும் என்பர் ஏனையோர் ஆதலால் ஏற்போனிழிவைக் குறிப்பதே இலக்கண மரபு. ஈண்டு ஏற்பது வயிறு.

மு.கோ. 'செவியிரண்டாகவும் வயிறு ஒன்றாகவும் இருப்ப தாலும், வயிற்றிற்குச் சிறிது ஈக என்பதாலும் பெரிதும் கேட்க எனப் பெறுதல் காண்க' என்பர். இது நயமான பகுதி.

இத்தனை நயங்களும் பொருளும் அமைந்திருப்பினும் சொல் லமைதிக்கு ஏற்பனயாவும் சிறந்தனவாம்.

'ஈயப்படும்'—'கொடுக்கத்தகும்' மணக்., பரிப்., 'உணவளிக்க அடுக்கும்' காளி., 'இடப்படும்' பரிமேல்., கவிராசர் பழைய 2, முதலியன. இதில் 'படும்' என்பது தகுதிப் பொருளிலும், விதித்தற் பொருளிலும் வருதலைப் பார்க்கலாம். வேண்டும், படும், தகும் என்பன மூன்றும் ஒருபொருட்கிளவியாய்த்தொழிற்பெயராய்த் தேற்றப்பொருள் பட்டே நிற்கும் என்க. தேற்றப் பொருளாவது 'தக்கது பொருத்தம் துணிவு முதலாய பொருள் பெறுதல். என்பவாதலின் உரையாசிரியர் கள் படும் என்பதற்குத் தகுதிப்பொருளும் பிறவும் கொண்டனர். இதனை இலக்கணக்கொத்து 85 நூற்பா உரையிற் காண்க.

'மானங்குலங்கல்வி' என்ற பாடலில் பசி வந்திடப் பறப்பவற்றுள் கேள்வி இல்லாமை சிந்தித்து இன்புறத்தக்கது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

செவிக்குணவு :

பருகுவனன்ன வரர்வத்தனாகிச் செவி வாயாக நெஞ்சுகளனாக—

42.3. செவியுணவிற்[1] கேள்வி உடையார் அவியுணவின் ஆன்றாரோ டொப்பர் நிலத்து. (சகஉ)

உரைப்பகுதி:

அ) மணக். : செவிக்கு உணவு போன்ற கேள்வியை உடையவர்[2] நிலத்தின் கண்ணே இருப்பினும் அவியை உணவாகவுடைய தேவ ரோடு ஒப்பர் எ—று.

இஃது எல்லாராலும் நன்கு மதிக்கப்படுவர் என்றது.

ஆ) பரிதி. : 'செவியுணர்வின்' பாடம்.

செவியிற் கேள்வியுள்ளபேர் பூலோகத்திலே இருந்தும் தேவரோடு ஒப்பாவர். அது எப்படி என்றால், தெய்வலோகத்திலே இருந்தும் பூலோகத்திலே அவிப்பாகம் கொள்ளும் முறைமைபோல எ—று.

இ) பரிப். : செவிக்கு உணவுபோன்ற கேள்வியுடையவர்கள் நிலத்தின் கண்ணே இருப்பினும் அவியை உணவாக உடைய தேவரோடு ஒப்பர் எ—று.

இஃது எல்லாரானும் நன்கு மதிக்கப் படுவரென்றது.

ஈ) காளி. : இவ்வையகத்துத் தம் செவிக்கு அமுதமாகிய கேள்வி யினை உடையார் யாரை ஒப்பார் எனின், அவியுணவினர் ஆகிய அமரரோடு ஒப்பர்; ஈண்டு மக்களில் இவர்க்கு ஓர் நிகர் இல்லை எ-று.

உ) பரிமேல். : செவியுணவாகிய கேள்வியினை உடையார், நிலத் தின் கண்ணராயினும் அவியுணவினை உடைய தேவரோடு ஒப்பர்.

செவியுணவு செவியான் உண்ணும் உணவு. அல்வழிக்கண் வந்த இன்சாரியையது னகரம் வலிந்து நின்றது[3]. அவியாகிய உணவு[4]

---

1. நாவின் புலனுக்குரியதாகும் உணவைச் செவியின் மேலேற்றிக் கூறியது உபசார வழக்கு.
2. 'கேள்வியுடையவர்' பரிப். பாடம்.
3. உணவிற்கேள்வி என்பது முகமதி என்றாற்போல உணவாயே கேள்வி உருவகமாய் பெற்ற பண்புத்தொகை. இது ஒருபொருட்ருபெயர் வந்தனவாயினும் இரு பெயரொட்டில் பொதுப்பெயரும் சிறப்புப்பெயரும் தொகையாதலே சாரைப்பாம்பு வேழக்கரும்பு என்பனபோல இருபெயர் ஒட்டாம் அங்ஙனம் இன்மையின் இது இரு பெயர் ஒட்டாதல் ஏற்புடையதாமா? பண்புத்தொகை யனைத்தும் அல்வழியாயினும் ஈண்டு அல்வழிக்கண் வந்த இன்சாரியை என்றது. சாரியை பெறவேண்டாத அல்லாத வழிக்கண்ணே பெற்று வந்தது என்பதே கருத்தாகும். 'அக்கின்னவாமணி' என்ற கோவையாரினும் இதுவே கருத்தாதல் பேராசிரியர் உரையான் உணர்க.

'உணவிற் கேள்வி' என்பதில் னகரத்திரிபு செய்யுள் விகாரமாம் எனின், செய்யுட்கண் நிகழும் விகாரங்கள் எதுகை மோனை முதலிய செய்யுளியம் பற்றி விளைவன. இங்கு அத்தகைய ஹேதியம் எது என்று உணரக்கூடவில்லை. ஆய்க.

4. 'அவியுண்வு' என்றும் பாடமுண்டு.

தேவர்க்கு வேள்வித் தீயில் கொடுப்பன. அறிவான் நிறைந்தமையான் ஆன்றார் என்றும், துன்பமறியாமையால் தேவரோடு ஒப்பர்[5] என்றும் கூறினார். இதனால் அதனையுடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

காரி. : உணவாகிய கேள்வி என்றுரைத்து, 'இன்சாரியை அல்வழிக்கண் வலிந்து நின்றது, என்றார். கவர்பொருட்பாடு நோக்கி 'அக்கின்றவாமணி'[6]யும்அது.

ஊ) கவிராசர்: செவியுணவாகிய கேள்வியினை நன்றாய்க் கேட்டு அறிந்தவர்கள், பூமியிடத்து மனிதரேயாயினும், அவியுணவினை யுடைய தேவரோடு ஒப்பர் எ–று.

ஏ) பழைய 2: செவியுண்பனவாகிய கேள்வியினை யுடையார் நிலத்தின்கண் இருந்தாராயினும் அவியுணவினையுடைய தேவ ரோடொப்பர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அவியுணவின் ஆன்றாரோடு ஒப்பர்' —*'தேவரொடு ஒப்பர்' மணக்.*; *'தேவர்களைப் போல் எல்லாராலும் நன்கு மதிக்கப் படுவர்' பரிப்.*: *'விண்ணிருந்தும் மண்ணவர் தரும் அவியைக் கொள்ளும் தேவரொடு, மண்ணிருந்தே செவியுணவைக்கொள்ளும் அறிஞர் ஒப்பர்' பரிதி.*; *'கேள்வியுடையார்க்கு மண்ணில் யாரும் நிகரில்லை; தேவரொடு ஒப்பர்' காளிங்கர்.*

'செவியுணவிற் கேள்வி'— *'செவிக்கு உணவு போன்ற கேள்வி' மணக்., பரிப்., 'செவிக்கு அமுதமாகிய கேள்வி' காளி., 'செவியுணவாகிய கேள்வி' பரிமேலழகர்* முதலனைவரும். இதிற் *காளிங்கர் 'செவியுணவு'* என்று *வள்ளுவர்* பொதுமையிற் சொல்ல அமுதம் என்றது தேவர்க்கு ஒப்பாவதை நோக்கிப்போலும். அமுதம் தேவர்க்கன்றிப் பிறருக்குக் கிடையாமையின்.

தேவர்கள், விண்ணுலகு, அமுதம் முதலியன நூலளவையின் அன்றி ஏனைய அளவைகளால் அறியப்பெறாதவை. அவற்றோடு மண்ணுலகு, செவியுணவு, அதனாற் பெறும் உணர்வின்பம். இவை காட்சியளவைக்கு உரியவை. இதனை ஆகம அளவைக்கு ஒப்பாகக் கூறியது கேள்வியின் சிறப்பைப் புலப்படுத்தற்கு.

---

5. ஆன்றோரோடு ஒப்பர் என்றும் பாடமுண்டு.
6. 'அக்கு இன் தவாமணி' எனப்பிரித்து 'இன்' அல்வழிச்சாரியை என்றார். அதன் உரையாசிரியராகிய பேராசிரியர்.

இராமலிங்கனார், கேள்வியிலேயே லயித்திருப்பவர்கள் மனிதர் களேயாயினும், உணவு வகையில் தேவர்களை ஒத்திருப்பர்' என உரை எழுதி, 'தேவர்களுக்குப் படையல் இட்டால் அவர்கள் உண்ப தில்லை; வைத்தது வைத்தபடியிருக்கும். அதுபோல மக்களும் கேள்வியின் இன்பத்தில் மூழ்கி தேவர்களைப் போல இருப்பர். என்றதாம்' என்பர். அத்தகைய கேள்வி ஆன்மஞானக் கேள்வி ஆன்ம ஞானம் பெற்றுப் பரமே பார்த்திருப்பதால் பத பதார்த்தங்கள் பாரார் என விளக்கமும் தருவர். இது ஒருவகையில் புதிய சிந்தனை தான். இத்தகைய ஞானவுணர்வுடையோர் 'வானோர்க்கு உயர்ந்த உலகம் புகுவரேயன்றி வானோரோடொப்பர்' என்பதில் சிறப் பின்று. இத்தடையேயன்றி, இப்பொருள் கோடற்கேற்ற இயைபான சொல்லமைதியும் இருக்குமேல் நலமாகும்.

தேவநேயர், 'தேவர் அறிவுடையர் என்னுங் கருத்தால் ஆன்றோர் என்னப் பெற்றார். கேள்வியுடையோர் துன்பமின்றி இன்பமே நுகர்தலால் தேவர்க்கு ஒப்பர் எனப்பட்டார்; என நயம் காட்டுவர். தேவர்கட்குப் 'புலவர்' என்பதும் ஒரு பெயர். அவர்களது அறிவு முற்செய்தவப்பயனால் இன்பமொன்றையேயறியும் அன்றித் துன்பத்தை யறியாது. கேள்வியுடையாரும் அத்தகையர் எனக் கருதி இவ்விளக்கம் தந்தனர் போலும்.

குழந்தை, 'அவித்தல்—குறைத்தல். அவியுணவின் ஆன்றோர்— உணவைக் குறைத்துப் பொறியடக்கிப் புத்தொளி பெற்ற பெரியோர். கேள்வியுடையாரும் அத்தகையர்' என்பர். இவர் விண்ணுலகு விண்ணவர் நிலை இவைகளை ஒப்புங்கருத்தினர் அல்லராதலின் 'ஆன்றோர்—ஆன்றவிந்தடங்கிய ஞானியர்' என்றனர். நிலத்துச் செவியுணவிற் கேள்வியுடையோர் என்றமையின் நிலத்து அவியுணவின் ஆன்றாரோடு ஒப்பர்' என்பதே இயைபாகும் என்னுங் கருத்தினர் போலும்.

உரைவளம் முதற் பதிப்பில், 'நிலத்து செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின் ஆன்றோரோடு ஒப்பர்' எனக் கூட்டிக் 'கேள்வி ஞானம் உடையார் தேவர்க்கு ஒப்பாவரோ? ஆகார். அவி—சோறு. அவியுணவின் ஆன்றோர் என்றது உணவாற் பெரியோர் என இகழ்ச் சிக் குறிப்பும் தோன்ற நின்றது. ஞானபோனகம் உடையார் ஊன போனகம் உடைய தேவர்க்கு ஒப்பாகார் என விளக்கமும் காட்டப் பெற்றது.

'ஒப்பர்' என்பது இயல்பாய முற்றுவினை. அதனை வினாப் பொருண்மையாகக் கொண்டு குறிப்புப்பொருள் கூறியது சாலாது. அவியுணவின் ஆன்றோர் என்பது இந்திரன் முதலிய குறளிடைவரும் குறிப்புக்களை நோக்கின் தேவரையே குறிப்பதாகலாம். 'தேவரே போல்வர் கயவர்' மேவன செய்தொழுகுதலாகிய பொதுத்தன்மையால் விளக்குதல்போல, ஆசிரியர் வள்ளுவனார் அவியுணவைத் தவிர பிற வுணவைத் தேவர் விரும்பார்; கேள்வியுடையாரும் செவியுணவைத் தவிர பிற விரும்பார் என்பதை அடைமொழிகளான் விளங்க வைத் தமை காண்க என்பர்.

உரைவள ஆசிரியர் 'ஒப்பர்' என்பது வினைமுற்றன்று என்றிலர். ஒலிக்குறிப்பால் வேறு பொருள்தந்தது என்றே கூறினர். குறிப்புக் கூற ஏ, ஒ முதலிய இடைச்சொல் வினையொடு இயைந்திருப்பின் அது இயல்பாய இடைச்சொல் பெற்ற வினைமுற்றாய் வேறுபொருள் உணர்த்தியதாமேயன்றிக் குறிப்புச் சொல்லன்றாம். ஆகையினா லேயே ஒலிக்குறிப்பால் என்றது.

தொழில் நிகழ்ச்சியை யறிவிக்கும் வந்தான் படித்தான் என்பன செறல் இகழ்ச்சி முதலியன சொல்லுவான் மனத்துநிகழ்ச்சி சொல்லப் படுமாயின் அவை வேறுபொருளையே தரும். அங்ஙனம் தருவது முக வேறுபாடும், ஒலிவேற்றுமையும் ஆம். இங்ஙனம் வருவனவற்றைப் 'பலவாற்றானும் வரும் குறிப்புச் சொற்கள்' என்னும் நன்னூல் விருத்தியுரை.

அன்றியும், இங்ஙன்ம் பொருள் கோடலை இசை எச்சத்தாற் கோடலாம் என அலங்கார நூலார் கூறுவர் என்றும், இங்ஙனம் பொருள் காட்டுதல் ஒலியானும் ஆம் என்றும், அவ்வொலிக்குக் 'காகு' என்று பெயர் என்றும் பிரயோக விவேகமும் அறிவிக்கிறது (காரிகை., 50 உரை).

'இயல்பான பெயரும் வினையுமான சொற்கள் ஒலிக்குறிப் பானும், சொல்வானுடைய முகவேறுபாட்டானும் குறிப்புப் பொரு ளைத் தரும்' என்பர் பிரயோக விவேக உரை ஆசிரியர். இவை போல்வனவற்றைப் பலவகையான் வரும் குறிப்பில் அடக்கும் நன்னூல் உரை. ஆதலால், இங்ஙனங் கோடல் தவறின்றாயின் பொருட் சிறப்புளதென்று ஆன்றோர் கருதின் கொள்ளலாம் என்ற வேறுரையேயன்றி மாற்றுரையன்று.

'அவியுணவின் ஆன்றோர்' : தேவர் அவி உணவைத் தவிர பிற விரும்பார் என்றது. அவி என்பது நிலவுலகில் எப்போதேனும் யாரேனும் பயன்கருதிப் பல்வேறு வேள்விகளைச் செய்யும்போது தீ வாயிலாகத் தேவர்கட்கு அளிக்கும் உப்பின்றட்டு நெய்கலந்த சோறும், ஊன் முதலியனவுமேயாம். இது எப்போதும் கிடைப்ப தில்லை. விண்ணுலகில் அவர்கள் விரும்பியுண்பது அமுதம். அன்றிக் கற்பகமும் காமதேனுவும் தரும் விருந்தினையும் உண்பர். ஆதலால் நிலவுலகத்து அவர்கள் விரும்பி யுண்பது அவியென்றல் சாலும். வேறுணவே வேண்டார் என்பது நூலளவைக் கேலாதது. செவியுண வுடையாரும் அஃதில்லாதபோது சிறிது வயிற்றுக்கு ஈயப்படும் உணவையும் உண்பர். இங்ஙனம் செவியுணவாற் கவலையின்றி வாழ்கின்ற மக்கள் அவியுணவின் ஆன்றாரோடொப்பாகார் என்ற பொருளை ஒலி வேற்றுமையில் வருத்தலால் 'கேள்வி' என்றும் அதிகாரநோக்குச் சிறக்கலாம். 'ஈவாரும் ஏற்பாரும் இல்லாத வானத்து வாழ்வாரே வன்கணவர்' என்று தேவர்கள் மக்கட்கு ஒப்பாகார் என்ற கருத்துக்களும் புலவர் மரபிலுண்டு. 'உணவின்' என்பதிலுள்ள 'இன்'உருபுக்கு 'போல' என ஒப்புப்பொருள் கொண்டு உரை தந்தவர்கள் மணக்., பரிப். 'உணவாகிய கேள்வி' கேள்வி என்பொருள் கண்டு 'இன்' என்பதைச் சாரியை யாக்கி வேண்டாத விடத்து வந்தது என்பர் பரிமேலழகரும் அவருக்குப் பின்னோர்களும்.

பரிதியார் 'செவிக்குணர்வு' என்று சென்ற குறளிற் பாடங் கொண்டது போலவே இக்குறளுக்கும் செவியுணர்வின், எனப் பாடங் கொள்வர்.

ஓ) ஒப்புமைப் பகுதி:

அவியுணவின் ஆன்றோர் :

"அவியுணவினோர் புறங்காப்ப" —புறம் 377-5

கேள்வி :

2. "மருந்தினும் இனிய கேள்வி செவியுற மாந்து வாரும்." —கம்ப.46

ஒருபுடை—கேள்வி உடையார் :

மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்." —கொன்றை.7 5

42.4. கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்(கு) ஒற்கத்தின் ஊற்றாம் துணை. (சகச)

உரைப்பகுதி :

அ) மணக்., 'கற்கிலன்', 'அஃதொருவன்' ஒற்கத்துக்கு' பாடம்[1].

கற்கமாட்டானாயினும் கேட்க, அக்கேள்வி ஒருவன் தளர்ச்சிக்கு[2]த் தாங்குவதொரு துணையாம் எ—று.

இது கேள்வி வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: கல்லாதபோதும் கேள்வி உண்டாயிருக்க அது வழுக்குத் துறையில்[3] ஊன்றுகோல் போல உதவும் எ—று.

இ) பரிப்.: கற்க மாட்டானாயினும் கற்றோர்மாட்டே கேட்க; அக் கேள்வி ஒருவன் தளர்ச்சிக்கண் தாங்குவது ஒரு துணையாம். இது கேள்வி வேண்டுமென்றது.

ஈ) காளி.: 'அதுவொருவற்கு' பாடம்.

இவ்வுலகத்துள் ஒருவன் கற்கும் நெறியினால் கற்கப் பெற்றில னாயினும், கற்றுணர்ந்த சான்றோருழைச் சென்று வழிபட்டுப் பயிலக் கேட்க. மற்று அக்கேள்வியானது அங்ஙனம் கேட்ட ஒப்பிறந் தோனுக்கு[4] நரகினும் சென்று விழாது மறுமைநெறி செல்லுதற்குப் பெரியதோர் உறுதித்துணை எ—று.

ஒற்கம் என்பது நரகம்.

உ) பரிமேல்.: உறுதி நூல்களைத் தான் கற்றிலனாயினும், அவற் றின் பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக்கேட்க, அக்கேள்வி ஒருவனுக்குத் தளர்ச்சி வந்துழிப் பற்றுக் கோடாந்துணை ஆகலான்.

உம்மை கற்கவேண்டும் என்பதுபட நின்றது[5]. தளர்ச்சி வறுமை யானாதல் அறிவின்மையானாதல் இடுக்க[6]ட்பட்டுழி மனந்தளர்தல்.

---

1. 'கற்கிலன்' 'அஃதொருவன்' 'ஒற்கத்துக்கு' என்பன இக்குறளிற் மணக்., பரிப்., கொண்ட பாடங்கள் அதற்கேற்ப அவர்கள் உரையமை ந்திருத்தலையும்காண்க.
2. 'தளர்ச்சிக்கு' தளர்ச்சிக்கண் பரிப்பெருமாள் பாடம்.
3. வழுக்குத்துறை — வழுக்கி விழும் இடம்.
4. ஒப்பிறந்தோனுக்கு — நிகரில்லாதவன்.
5. 'கற்றிலனாயினும்' என்ற உம்மை கற்றிலனாயின் விலங்கோடொப்பர். ஆதலான், கற்கவேண்டும் என்பது பட நின்றமையின் உம்மை எதிர்மறைப் பொருளதாம்.
6. இடுக்கண்—'மலர்ந்த நோக்கமின்றி மையல் நோக்கம் படவரும் இரக்கம்'. தொல். பொருள். 260. பேராசிரியர் உரை.

அதனைக் கேள்வியினாய அறிவு நீக்குமாதலின், ஊற்றாந்துணை என்றார். ஊன்று என்னும் ஆகுபெயரின் னகரம் திரிந்து நின்றது[7].

காரி .: ஒற்கம்—தளர்ச்சி, ஊற்று—ஊன்றுகோல் ஊன்று என்னும் ஆகுபெயர் னகரந் திரிந்தது.

ஊ) *கவிராசர் :* உறுதியாகிய நூல்களைத் தான் கல்லாதபோதுங் கற்றறிந்த பெரியோர்களிடத்திலே கேட்டு அறிந்திருக்கில், அது, அவனுக்கு ஒரு தளர்ச்சி வந்தவிடத்து, ஊன்றுகோலாம் எ—று.

ஏ) *பழைய 2:* 'அஃதொருவன், ஒற்கத்தின்' பாடம்.

உறுதி நூல்களைத் தான் கற்றிலனாயினும், அவையிற்றினைக் கற்றறிந்தார் சொல்லக்கேட்க; அக்கேள்வி ஒருவருக்கு வந்தவிடத்து ஊன்றுகோல் துணையாவதுபோலும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'கற்றிலன் ஆயினும்'— 'கற்கமாட்டானாயினும்' *மணக்.' பரிப்.*; 'கல்லாத போதும்' *பரிதி.*; 'கற்கப்பெற்றிலனாயினும் *காளி.*; 'கற்றிலனாயினும்' *பரிமேல்.*, முதலியோர். 'கற்றிலன்' என்பதற்குக் கல்லாதவன் என்பதே நேரிய பொருள். 'கல்லாத போதும்' என்பது வேறுவாய் பாட்டான் வந்த அதே கருத்தைத் தரும் சொல். 'கற்கமாட்டான்' கற்கப்பெற்றிலன் என்னும் உரைகள் கற்கிலனாயினும்' என்னும் பாடங்கொண்டதால் வந்த பொருளாகும் எனலாம். அடுத்து வரும் 'ஒற்கத்தின்' என்பதற்கேற்ப, கற்கிலனாயினும் என்று பாடங்கொண்டு 'கில்' என்னும் ஆற்றல் பொருளைத் தரும் இடைநிலையைப் புணர்த்தி இவ்வுரைகள் கண்டனர் எனலாம். 'கற்றிலன்' என்பது 'கற்கும் ஆற்றலும் வாய்ப்பும் இருந்தும் கல்லாதவன்' என்பதையும். 'கற்கிலன்' என்பது 'அவையில்லாமையான் கற்க மாட்டாதவன்' என்பதையும் விளக்குவன என்று வேறுபாடறிந்து பாடங் கொள்ளலாம்.

'ஒற்கம், — தளர்ச்சி' *மணக்., பரிப்., பரிமேல்., கவிராசர். பழைய 2.* 'வழுக்குத்துறையில்' *பரிதி.* இது சொற்பொருளன்று, ஊற்றாந்துணை என்பதாற் பெற்ற உருவகக் கருத்துப்பொருள். பின் வரும் குறள் இவர்க்கு இக்கருத்தை முன்னரே தந்துவிட்டது எனலாம்.

---

7. ஊற்று என்பது ஊன்று என்னும் முதனிலைத் தொழிற்பெயர். ஊற்று எனத் திரிந்தது. தொழிலாகுபெயராய் ஊன்றுவதற்கு உதவுங்கோலை யுணர்த்திற்று.

காளிங்கர் உரையில் 'வழிப்பட்டு' என்பதற்கு 'வழிபட்டு' எனப் பாடங் கொள்ளுதலும் உண்டு. வழிப்பட்டு — ஆசிரியர் இருவென இருந்து, சொல்லெனச் சொல்லி அவன் குணத்தோடு பழகுதல் வரை வேண்டும். வழிபட்டு—வணங்கி என்பதே பொருளாகும். ஏற்புடையது கொள்க 'ஒற்கம்—நரகம்' என்பர் *காளிங்கர்*. நிகண்டுகளிலும், அகராதிகளிலும் இச்சொல் இப்பொருளிற் காணக் கிடைக்கவில்லை. எங்கோ கண்டு 'நரகிற் சென்று விழாமல்' என்று எழுதுவதால். ஒற்கம்—நரகம் என்னும் பொருளது என்று ஆசிரிய வசனமாகக் கருதி அமையலாம்.

'ஊற்று' — 'தாங்குவது' *மணக்., பரிப்.*: 'ஊன்றுகோல், *பரிதி.*: 'உறுதித்துணை' *காளி.*: 'பற்றுக்கோடு' *பரிமேல்., கவிராசர், பழைய* 2.

பரிமேலழகர், 'இழுக்கல்—தளர்ச்சி'. அது வறுமையானாதல் அறிவின்மையானாதல் மனந்தளர்தல்' என்றார். *காளிங்கர்* 'நரகிற் சென்று விழுதல்' என்றார்.

இராம., 'ஒழுக்கம் உடையவர்களின் உபதேசமொழி, கால் சறுக்கி விட்ட சமயத்தில் கையிலுள்ள ஊன்றுகோல் போல உதவும்' என்பர்.

தேவநேயர், 'ஊன்றுகோல் அற்றே' என்பர். யார்க்கு? என்ற வினா உடனெழும் அதற்கு விடை விளக்கமாக, 'உலக மக்களுக்கும் அரசற்கும்' என விதந்துரைப்பர்.

இவ்வுரைகளின் ஒருமைப்பட்ட கருத்து, ஒழுக்கமுடையார் வாய்ச் சொல்லைக் கேட்டிருந்தோழாயின் நாம் தவற நேர்ந்த காலத்து அச்சொற்கள் நம் எண்ணத்திலிருந்து ஊன்றுகோல் போலத் தவறாத வண்ணம் உதவும் என்பதாம்.

இக்குறள், கேள்வியறிவு கல்லாதார்க்குப் பயன்படுங்காலம் இது வென்று அறிவிக்கின்றது. 'கற்றலிற் கேட்டல் சிறந்ததென்பார் கல்லாதான் ஒட்பம் கொள்ளார்', 'கல்லாதான் சொற்காமுற்றுச் சொல்லாதிருக்கப்பெறின்' என்பவற்றாற் கூறிய கல்விச்சிறப்போடு முரண்படுமே எனின், கேள்வி ஞானமுடையாரது அறிவு பேரவையிற் பேசப் பயன்படாது; ஆனால் தளர்ந்த காலத்துத் தன்னைத் திருத்திக் கொள்ள உதவும் என்பதை விளக்குதலால் முரணாகாமை தெளிவு.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கற்றிலனாயினும் கேட்க:.

வீட்டுவா ளரக்கர் என்னுதீவினை வேரின் வாங்கக்
கேட்டுணர் கல்வியோடு ஞானமும் இயைந்தது ஒத்தார் —கம்ப.3909

''கூட்டமுற் றிருந்த வீரர் குறித்ததோர் பொருட்கு முன்னாள்
ஈட்டிய தவமும் பின்னர் முயற்சியு மியைந்த தொத்தார்.'' —கம்ப.3909

''சாலநூ லுணர் கேள்விவீர.....'' —கம்ப.4317

''நூலேந்து கேள்வி நுகரார்புலனோக்க லுற்றார்'' —கம்ப.4888

''நூ ற்பெருங்கட லுணங்கிய கேள்வியான்.....'' —கம்ப.5146

''உணற்கினிய இன்னீர் பிறிதுழியில் என்னும்
கிணற்றகத்துத் தேரைபோ லாகார்—கணக்கினை
முற்றப் பகலும் முனியா தினிதோதிக்
கற்றலின் கேட்டலே நன்று.'' —பழ. கல்வி. 5.

கேட்க:

''கேள்வி முயல்.'' —ஆத்தி. 39.

42.5. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல். (சகடு)

உரைப்பகுதி:

அ) மணக்., வழுக்குதல் உண்டான இடத்து உதவும் ஊன்று கோல் போலும் ஒழுக்கமுடையார் கூறும் சொற்கள் எ—று.

இது கேட்பது ஒழுக்கமுடையார்மாட்டு என்பது கூறிற்று.

ஆ) பரிதி.: உலகத்துள் ஓதியுணர்ந்த ஒழுக்கமும் கேள்வியும் உள்ளவன். பேரிழுக்காயிருக்கும் ஓதி உணராதபேர்க்கு, ஊன்றுகோல் ஆதாரமாய்த் திரிகிற பேர்க்குக்கோல் உதவி செய்தது ஒக்கும் எ—று.

இ) பரிப்.: வழுக்குதல் உண்டாயின இடத்து உதவும் ஊன்று கோல் போலும் ஒழுக்கமுடையார் கூறும் சொற்கள் எ—று.

இது கேட்பது ஒழுக்கமுடையார் மாட்டென்பது கூறிற்று.

ஈ) காளி.: மற்று யாதானும் ஒருவழித் தமது கால் வழுக்குதல் உடைய இடத்துத் தமது கையகத்து உற்றதோர் ஊன்றுகோல்

உதவியது எத்தன்மைத்தோ! அத்தன்மைத்து கல்வி ஒழுக்கத்தை யுடைய சான்றோர் வாய்ப் பிறக்கும் சொற்கள் எ—று.

சொல் என்பது கேள்வி.

உ) *பரிமேல்.*: வழுக்குதலையுடைய சேற்று நிலத்து இயங்குவார்க்கு ஊன்றுகோல்போல் உதவும், காவற் சாகாடு உகைப்பார்க்கு[1] ஒழுக்கம் உடையார் வாயிற் சொற்கள்.

அவாய் நிலையான் வந்த உவமையடையாற் பொருளடை வருவிக்கப்பட்டது[2]. ஊற்றாகிய கோல்போல் உதவுதல் தளர்ந்துழி[3] அதனை நீக்குதல். கல்வியுடையரேனும், ஒழுக்கமில்லாதார் அறிவிலார் ஆகலின், அவர் வாய்ச்சொல் கேட்கப்படாது என்பது தோன்ற ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் என்றார். வாய் என்பது தீச்சொல் அறியாமையாகிய சிறப்புணர நின்றது. அவற்றைக் கேட்க என்பது குறிப்பெச்சம்.

காரி.: ஊற்றாகிய கோல் என இருபெயரொட்டாகியது முன் ஆகுபெயரானது பற்றி என்க. இயங்குவார்க்கு, காவற்சாகாடு உகைப்பார்க்கு என, அவாய் நிலையான் வந்த உவமையடையால் பொருளடை வருவிக்கப்பட்டது.

ஊ, *கவிராசர்*: வழுக்குதலுடைய சேற்று நிலத்து நடந்து போவார்க்கு ஊன்றுகோல் உதவுவது போல, ஒழுக்கமுடைய கற்றறிந்த பெரியோர்களால் கேட்டறிந்தவர்களுக்கு அந்தக் கேள்வி ஒரு காலத்தும் தவறு வாராமல் காக்கும் எ—று.

ஏ) *பழைய 2*: வழுக்கி வீழ்த்தும் நிலத்தில் செல்வர்க்கு ஊன்று கோல் உதவியாய் நிற்கும்; (அதுபோல) காவற் சாகாடு உகைப் பார்க்கு ஒழுக்கமுடையர் வாய்ச்சொற்கள் (நிற்கும்.)

மல்லர்: வழுக்கலான சேத்து நிலத்திலே திரிகிறவனுக்கு ஊன்று கோல் உதவுகிறாப்போலே அறிவில்லாதவனுக்குக் கல்வியோடே கூடி நல்ல நடக்கைகளையுடையவனுடைய வாய்ச்சொல் உதவியாயிருக்கும் எ—று.

சேத்திலே திரிகிறவனை விழாதபடிக்கு ஊன்றுகோல் தாங்கும் படிப்போல அறிவில்லாதவர்களை அறியாமை என்கிற மயக்கத்தினால்

---

1. 'காவற்சாகாடு உகைப்போன் மானின், ஊறின்றாகி யாறிலிது படுமே' —புறம்
2. அவாய் நிலை—முடிப்பதொரு சொல்லை அவாவி நிற்றல். ஈண்டு 'இழுக்கலுடையுழி ஊற்றுக்கோல்' என்பது உவமை. அதற்குரிய அடை 'இயங்குவார்க்கு' என்பது. பொருள்: உவமானம் ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல், அதற்கு அடை காவற்சாகாடு உகைபபார்க்கு என்பது. இவை உரையில் வருவிக்கப்பட்டமை காண்க.
3. தளர்ந்துழி—வறுமை அறிவின்மைகளால் மனம் தளர்ந்தபோது.

அபத்தமான காரியங்களிலே விழாதபடிக்குச் சிரேஷ்டருடைய வாய்ச் சொல் தாங்கிக் கொள்ளும் என்பது கருத்து.

இழுக்கல்—வழுக்கல்; உழி—இடம்; ஊற்றுக்கோல்—ஊன்றுகோல் அற்று—உவமைச்சொல்; ஒழுக்கம்—குணம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., உரை முற்குறளிற் கூறிய வண்ணம் கேள்வியின் பயனை உணர்ந்தவன் ஒருவனுக்கு யாரிடம் கேட்பது நல்லது என்ற ஐயம் விளைய, ஒழுக்கம் உடையார் மாட்டுக் கேட்க என வரையறை செய்கின்றது.

பரிதியார் உரை 'ஒக்கும்' என்ற வினைக்கு எழுவாய் ஓதியுணர்ந்தவன் சொல் என அறியக் கிடக்கிறது. அதனால் இவ்வுரை ஏடெழுதுவோர் பணியாற் செப்பமிழந்து இருக்கிறது. அதனால் *பரிதியார்* கருதுவது என்ன என்பதைக் கொண்டு கூட்டுகளால் அறிய வேண்டியுள்ளது. *காளிங்கர்*, *பரிமேலழகர்* உரைகளும், அவற்றைத் தழுவிய பின் வந்தவையும் மிகச் செப்பமான உரைகள். *மணக்குடவர்* உரை இக்கருத்தையே தழுவியதாயினும் செறிவானது. *பரிமேலழகர்* தரும் 'ஊற்றாகிய கோல்' என்பதற்கு விளக்கந்தரும் *காரி ரத்தின கவிராயர்*, 'ஊன்று' என்ற தொழிற்பெயர் மென்தொடர், வன்தொடர்க் குற்றியலுகரமாய் ஆகுபெயராய் ஊன்றுதற்குப் பயன் படும் கோலைக்காட்டியது. ஊற்றுக்கோல் என்னும்போது அதுவே இருபெயரொட்டாய்ப் பண்புத்தொகையாயிற்று என்பர். இவ்விலக் கணக்குறிப்பு ஆய்தற்குரியது. 42.4ம் குறளில் 'ஊற்றாம்' என்ற விடத்து ஊன்று என்னும் முதனிலைத் தொழிற்பெயர் ஆகுபெயராய்க் கோலைக்காட்டியதும், அதன் மெல்லொற்று வல்லொற்றாயதும் ஏற்புடையதும் இன்றியமையாததும். இக்குறளில் ஆகுபெயர் வேண்டாதே ஊன்றுகோல் என வருதலின் நிலைமொழியை ஆகு பெயராக்கல் வேண்டற்பாலதன்றாம்; அங்ஙனம் வேண்டின் ஊன்று என்பதே ஊன்றுங்கோலை யுணர்த்த மேலும் கோல் எனில் பொருளில் கூற்றாம். வள்ளுவர் ஊன்று என்பதனை முதனிலைத் தொழிற் பெயராகவே கொண்டு ஊன்றுவதற்கு உதவுங் கோல் என நான்கனுருபும் பயனும் விரியப்புணர்த்தியுள்ளார். 'மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்றெல்லாம் வல்லொற்றாதல் வேற்றுமைக் கன்றி அல்வழிக்கின்மையானும், இருபெயரொட்டெனின் அல்வழி

யாதலானும் இக்குறிப்பு ஆய்வுக்குரியது என்றாம். முற்குறளில் 'ஊற்று' ஆகுபெயர். இக்குறளில் ஆகுபெயர் வேண்டாதே ஊன்று கோல்.

வள்ளுவர், மக்கட்பொதுமைக்குக் கூறிய இவ்வறத்தை இயல் நோக்கிப் பரிமேலழகரும், பழைய உரை2-ம் 'காவற் சாகாடு உகைப்பார்க்கு' என அரசற்குரிமையாக்கினர்.

இராமலிங்கனார், 'கேள்வியறிவு கால் வழுக்கியபோது உதவும் ஊன்றுகோல் போல்வது' என்பர். கால் வழுக்கியபோது என்பதற்குப் பொருந்த கேள்வியுடையார்க்கு நேர்ந்த நிகழ்ச்சியையும் விளக்குதல் இன்றியமையாதது. கேள்வி யதிகாரத்தில் ஒழுக்கமுடை யார் வாய்ச்சொல் கேட்கத்தக்கது என விதந்தமையின், சொல்வார் கல்வியும் கேள்வியும் உடையராயிருந்தும், ஒழுக்கமிலராயின் அவர் வாய்ச்சொல் நன்மை பயவாது என்றவாறாம் என நயம் விதப்பது சிறப்பு. தேவநேயரும் இதனை விளக்குவர்.

வாழ்க்கையில் ஆபத்துக் காலத்து உதவும் எனச் சபாபதி முதலியாரும், கா.சு. வும் உரைப்பர்.

மு.கோ. இழுக்கல் — நீத்தம். ஊற்றுக்கோல் — புணைமரம். பிறவிக்கடற்குப் புணை என்பது என வேறு பொருள் தருவர். இழுக்கல் —நீத்தம் என்னும் பொருளில் இல்லாமையை எண்ணுக.

இக்குறள் சொல்வேறு செயல்வேறு பட்டார் வாய்ப்பேச்சுப் பயனளியாது சிந்தையும் செயலும் சொல்லும் ஒன்றான ஒழுக்க முடையார் வாய்ச்சொல்லே ஊன்றுகோல் போல உதவுவது என்பதாம்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்:

மேன்மக்கள் சொல் கேள். ஆத்தி. , 95.

முற்றும்:

வறுமையான் மடமை தன்னால் வருந்திநெஞ் சழியும் காலை
உறுதிசெய் துணையாம் கற்ற உணர்வினை வளர்க்கும் என்றும்
இறுதியில்லாத இன்பம் ஈட்டுமா தலினால் கற்று
மறுவறு ஒழுக்க முள்ளார் வாய்மொழி கேட்டல் வேண்டும். —விநா. அர.,.48

பிற :

சாலநூ லுணர் கேள்விவீர..... ..... —கம்ப. ,4317.

ஓ) மேற்கோள்பகுதி:

வெள்ளி. : 'இழுக்கல், ... சொல்' என்பவாகலின் பிறர் 'பலவும்' எனினும் குருபரம்பரையாக வரும் அவிச்சின்ன சம்பிரதாய உபதேசத்தில் நிகழும் அநுபவம் உண்டாயினோர் அவர் சொற்களைக் கொள்ளாமை நியாயமாகலின், அவையிற்றை நீக்குதற்கும், பிறருக்குப் பரம்பரையாக வரும் ஞானோபதேசம் இல்லையாகவும் உண்டானவைபோல் சில கற்பித்துக்கூறலின் அது பொருந்தாமை காட்டி நிராகரிக்குமாறு போல ஈண்டுக்கூடாது என்பதற்கும் 'குறிவழி அநுபவம் குருமொழி' என்றது. (முத்திநிச். பக். 7.)

42.6 எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும். (சகசு)

உரைப்பகுதி:

அ) இ) மணக்., பரிப்.: எவ்வளவிற்றாயினும் நல்ல நூல்களைக் கேட்க; அக்கேள்வி அவ்வளவிற்றேயாயினும், நிரம்பின பெருமையைத் தரும் எ—று.

இஃது எல்லாக்காலமும் கேட்டிலனாயினும், கேட்குங்கால் நல்லது கேட்க வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: என்றென்றும் ஏதாயினும் நல்லதே கேட்க; அது, என்றென்றும் பெருமையே தரும் எ—று.

இ) பரிப்.: யாது ஒன்று ஆயினும் நல்ல நூல்களைக் கேட்க: அக்கேள்வி அவ்வளவிற்றே ஆயினும் நிரம்பின பெருமையைத் தரும் எ—று.

இஃது எல்லாக் காலமும் கேட்டிலனாயினும் கேட்கும் காலத்து நல்லது கேட்க வேண்டும் என்றது.

ஈ) காளி.: எவ்வளவைத்தேனும் சிறிது என்று இகழாது சான்றோ ருழைச்சென்று நல்லவற்றிலே சில கேட்டுக்கொள்க, அது சிறிதே யாயினும் ஒருவருக்குப் பெரிய உபதேசமாய் முடியும்; ஆகலான் அமைந்த பெருமையவாகிய முத்தியைக் கொடுக்கும் எ—று.

இனி, மற்று, உலகத்து அரசர்க்கும் பிறர்க்கும் இக்கல்வியும் கேள்வியும் சிறந்த ஞானத்தைப் பயக்கும்; ஆதலான், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

உ) *பரிமேல்* : ஒருவன் சிறிதாயினும் உறுதிப்பொருள்களைக் கேட்க, அக்கேள்வி அத்துணையாயினும் நிறைந்த பெருமையைத் தரும் ஆகலான்.

எனைத்து அனைத்து என்பன[1] கேட்கும் பொருண் மேலும், காலத் தின் மேலும் நின்றன. அக்கேள்வி மழைத்துளி போல வந்தீண்டி எல்லா அறிவுகளையும் உளவாக்கலின், சிறிது என்று இகழற்க என்பதாம்.

ஊ) *கவிராசர்* : ஒருவன் நல்ல ஆசாரமுடைய பெரியோரிடங்களிலே உறுதியான நூல்களைச் சிறிது கேட்டிருந்தானாயினும், அந்தக் கொஞ்சங் கேட்ட பொருளே அவனுக்கு நிறைந்த பெருமையைத் தரும் எ-று.

ஏ) *பழைய 2* : ஒருவன் எவ்வளவுஞ் சிறிதானும் நல்ல உறுதிப் பொருள்களைக் கேட்க, அக்கேள்வி அத்துணையாயினும் நிறைந்த பெருமையைத் தருமாகலான்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

எனைத்து அனைத்து என்பன கேட்கும் பொருண் மேலும் காலத்து மேலும் நின்றது என்பதை நிரனிறையாகக் கொள்ளின், வினவப்பட்டதொன்று யாது அதனையே கருதிச் செல்வது சுட்டாத லின் எனைத்து என்பது பொருள் மேலதாக, அனைத்து என்ற சுட்டடி யாகப் பிறந்த சொல்மட்டும் காலத்தின் மேலதாதல் யாங்ஙனம்? என்ற ஐயம் எழும். எனைத்து அனைத்து என்பன பொருளும் காலமுமாகிய இரண்டனையும் உணர்த்திற்று எனின், கேட்டவை சிறுபொழுதில் நன்மை பயப்பதாகச் சிற்றின்பமாக ஒழியும், நற்கேள்வியோ ஆயுள் வரை மனத்தூன்றிப் பயன் அளிப்பது. இதனைச் 'சொன்னான் ஒரு சொல்' என்ற ஆன்றோர் மொழிகளிலும் மிகச் சிறிய ஒரு சொல்லே கேட்டாரது ஆயுள் பரியந்தம் அநுபவத்திற்குரியதாய்ப் பெருமை தந்தமையைக் குரு ஞானசம்பந்தர் வரலாறு கொண்டு காண்க.

எனைத்து என்பது வினா அடியாகவும் அனைத்து என்பது சுட்டு அடியாகவும் பிறந்து வினவுதற் பொருளையும் அவ்வவற்றின் இயற்கைத் தன்மையையும் உணர்த்தும் சொல்லாய் தன்மையையும் வினாவையும் உணர்த்துமாயினும் எனைத்து அனைத்து என்பன பண்பும் செயலுமாகிய இரண்டனையும் உணர்த்தும் பொதுச் சொல் லாய் இக்குறளுக்கு நிறைவான விளக்கத்தைத் தருகிறது.

1. இதனைப் பற்றிய ஆய்வினைத் தொகுப்பாசிரியர் குறிப்பிற் காண்க.

ஒப்புமைப்பகுதி:.

ஒருபுடை:

"பலவாய்க்கால் ஆறாய்ப் பெருகும்" பழ.
"சிறுதுளி பெரு வெள்ளம்" ,,
"கண்டது கேட்கப் பண்டிதன் ஆவான்" ,,

எனைத்தானும் நல்லவை கேட்க:

மறவுரையுங் காமத் துரையு மயங்கிப்
பிறவுரையு மல்கிய ஞாலத்—தறவுரையைக்
கேட்குந் திருவுடை யாரே பிறவியை
மீட்குந் திருவுடை யார்

—அறநெறி., 2.

42. 7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து ஈண்டிய கேள்வி யவர். (சகஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒரு பொருளைத் தப்ப[1] உணர்ந்தாலும், அறிவின்மை யாயின சொல்லார்; ஆராய்ந்து உணர்ந்து நிரம்பிய கேள்வியுடையார் எ—று.

இது கேட்டறிந்தார் அறியாமை சொல்லார் என்றது.

ஆ) பரிதி.: பிழைத்தும் பேதை வார்த்தை[2] சொல்லார்; பதார்த்த கேள்வியுள்ளார்[3] எ—று.

இ) பரிப்.: ஒரு பொருளைத் தப்ப உணர்ந்தாலும் அறியாமை யாயின சொல்லார்; ஆராய்ந்துணர்ந்த நிரம்பிய கேள்வியை உடையார் எ—று.

இது கேட்டறிந்தார் அறியாமை சொல்லார் என்றது.

ஈ) காளி.: இவ்வுலகின்கண் தப்பியும் குறிக்கொண்டும்[4] இருவாற் றானும் பேதைமை நிகழும் சொற்களைச் சொல்வது இலர்; மற்று யாரோ எனின், யாம் சான்றோருழைச்சென்று நல்லன கேட்க

1. தப்ப—தவறாக.
2. பேதை வார்த்தை — தம் அறியாமையை வெளிப்படுத்துஞ் சொல்.
3. பதார்த்த கேள்வியுள்ளார் —சொற் பொருளாய்வுடையார்.
4. குறிக்கொண்டும் — அங்ஙனம் கூறுதல் வேண்டும் என எண்ணியும்.

வேண்டும் என்று கருதிக்கொண்டு பலநாளும் கேட்டுத் தொக்க தொகைக் கேள்வியை உடையவர் எ—று.

இழைத்து என்பது எண்ணி.

உ) *பரிமேல்.* : பிறழ உணர்ந்தவழியும் தமக்குப் பேதைமை பயக்கும் சொற்களைச் சொல்லார், பொருள்களைத்தாமும் நுண்ணிதாக ஆராய்ந்து, அறிந்து, அதன்மேலும் ஈண்டிய கேள்வியினை உடையார்.

பிழைப்ப என்பது திரிந்து நின்றது. பேதைமை ஆகுபெயர். ஈண்டுதல் பலவாற்றான் வந்து நிறைதல்[5]. பொருள்களின் மெய்ம்மை யைத் தாமும் அறிந்து, அறிந்தாரோடு ஒப்பிப்பதுஞ் செய்தார் தாமதகுணத்தான்[6] மயங்கினராயினும், அவ்வாறு அல்லது சொல்லார் என்பதாம். இவை நான்குபாட்டானும் கேட்டார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்:* நூல்களின் பொருளை நன்றாக ஆராய்ந்து அறிந்த பெரியோரிடத்திற் கேட்கப்பட்ட கேள்வி சிறிதாயினும், நல்ல கேள்வித் திறமையுடையவர் தமக்குக் குற்றம் வரத்தக்க சொற்களைச் சொல்லார் எ—று.

ஏ) *பழைய 2:* மறந்தும் நினைந்தும் தமக்குப் பேதைமை தருஞ் சொற்களைச் சொல்லார், தாமும் நுண்ணிதாக ஆராய்ந்து அறிந்ததன் மேலும் அறிந்தோரிடத்துக் கேட்குங் கேள்வியினை யுடையார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

காளிங்கர் 'பிழைத்தும்—உணர்ந்தும்' என இரண்டாக்கித் 'தப்பியும்' 'குறிக்கொண்டும்' என்றனர். இவர் கருத்து வாய் தவறியோ வேண்டுமென்றோ பேதைமை சொல்லார் என்பதாகிறது. தப்பிச் சொன்னாலும் குறிக்கொண்டு சொன்னாலும் பேதைமை பேதைமைதான். ஆகையினாலே ஈண்டிய கேள்வியுடையார் அவ்விருவகையானும் பேதைமை சொல்லார் என்றவாறாம். *பரிதி* பிழைத்துணர்ந்தும் 'வந்துவிட்டான்' என்பது போல ஒரு சொல்

---

5. பல்லாற்றான் வந்து நிறைதலாவது தன்னாசானோடு பழகுதல், உடன் பயில்வா—ரோடு பழகுதல், வேறு ஆசிரியர் அறிஞர்களிவரோடு பழகுதல், இவற்றான் நிறைதல்.

6. தாமதம் — தமோகுணத்தின் தன்மைகளாகிற காம வெகுளி மயக்கம் சோம்பல் துயில் மறதி முதலியனவாம். தமம் — அஞ்ஞானம். இது மந்தம்—உன்மத்தம் —மத்திமம் என்ற மூன்று நிலையாகச் செயற்படும்.

நீர்மையாக்கிப் 'பிழைத்தும்' என்றனர். கேள்வியவர்- சொற் பொருளாய்வுடையர் என்பர்.

'இழைத்து' — 'ஆராய்ந்து' மணக்.; 'எண்ணி' காளி. 'நுண்ணிதாக ஆய்ந்து' பரிமேல்., கவிராசர், பழைய2.

'பேதைமை' — 'அறிவின்மையாயின' மணக்., பரிப்.; 'பேதை வார்த்தை' பரிதி.; 'பேதைமை நிகழும் சொல்' காளி.; 'பேதைமை பயக்கும் சொல்' பரிமேல்., கவிராசர், பழைய2. 'உணர்ச்சி தவறுதலான வார்த்தை இழைத்து' 'அறிவைக் கூர்மைப்படுத்தி' என்பர் இராம. இவருடைய முடிந்த கருத்து உணர்ச்சி தவறுதலாகக் கூட அறிவிலாச் சொற்களைச் சொல்லமாட்டார்கள் என்பது. குழந்தை, 'பிழைத்து உணர்ந்தும் என்பதிலுள்ள உம்மை அங்ஙனம் தவறாக உணரமாட்டார்கள் எனவும், அங்ஙனம் உணரினும் சொல்ல மாட்டார் எனவும் எதிர்மறைப் பொருளது' என்பர்.

சி.இ. 'பிழைத்துணர்ந்தும் — இழைத்துணர்ந்தும் இரண்டிடத் தும் உம்மை தோன்றப் பாடங்கொண்டு, 'பிழைத்துணர்ந்தும் என்பதற்கு உம்மைப்பொருள் கண்டு, மற்றொன்றற்கு வாளா விடுத்தனர். இங்ஙனம் உம்மை தோன்றப் பாடங் கொண்டவர் இவர் ஒருவரே. மு.வ. இப்பகுதி மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லிப் 'பிறரைத் தீயவழியில் செலுத்த மாட்டார்' என்பர். இவர் உரை 'உணர்ந்து—உணர்ந்து சொல்லி' என்றும், 'பேதைமை சொல்லார்' என்பதற்குத் 'தீயவழியிற் செலுத்தமாட்டார்கள்' எனச் சொல்லுதல்— 'சொல்லிச் செலுத்துதல்' என்றும் பொருள் காண்பர். இது வழிவழிப் பயனேயன்றி நேரிய பொருளன்று எனலாம்.

காளிங்கர் கூறும் பிழைத்தும்—உணர்ந்தும் என்பதன் உரையில் எங்ஙனம் உணர்ந்தார் என வினா எழுதற்கே இடமில்லாமையை முற் கூறிய விளக்கத்தான் அறியலாம்.

பரிமேலழகர், மணக்குடவர் முதலானோர் கருத்து கேட்டறி யாது தாமேகற்றவர் தம்நுண்ணறிவிற்கு ஏற்பத் தவறியுணர்ந்தாலும், பின்னர் நன்றாக நுணுகி நுணுகி யாராய்ந்து உணர்ந்த கேள்வி ஞான முடையார் ஆயின் பேதைமை சொல்லார் எனக் கல்வியறிவோடு கேள்வி ஞானமுடையார் பிறழ உணரார். ஆதலால் பேதைமை சொல்லார் என்னும்பொருளதாய்க் கற்றார்க்கும் கேள்வியின்றியமை யாதது என்பதை வலியுறுத்தியவாறாம். தாம்தனியிருந்து நுண்ணிதாக ஆராயினும் தாமத குணத்தால் தவறாகவும் உணர நேரும். அதனைப்

பெரியோர்பாற் கேட்ட கேள்விஞானம் தெளிவிக்கும். அதனால் பேதைமை வழுக்கியும் சொல்லார் என்பதாம்.

'அவ்வாறு அல்லது சொல்லார்' என்ற *பரிமேலழகர்* உரைக்கு அங்ஙனம் மயங்கித் தவறான பேதைமை சொற்களைச் சொல்லார் எனப்பொருள் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

இம்மூ வுலகின் இருள்கடியும் ஆய்கதிர்போல்
அம்மூன்றும் முற்ற அறிதலால் — தம்மின்
உறழா மயங்கி உறழினும் என்றும்
பிறழா பெரியோர்வாய்ச் சொல். —*பு. வெ. 167.*

பொய்ம்மை மொழி புகன்றறியேம் புகலமன மெண்ணுகினும்
மெய்ம்மை யலதுரையாநா வேதநவில் பயிற்சியால். —

42. 8. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால் தோட்கப் படாத செவி. (சகஅ)

உரைப்பகுதி:

அ) மணக். : ஓசைமாத்திரம் கேட்டனவாயினும், அதுவும் கேளாத செவி போலும்; நல்லோர் கூறும் சொற்களால் துளைக்கப்படாத செவி எ—று.

இது கேள்வி இல்லாதார் செவிடர் என்றது.

ஆ) பரிதி. : செவி கேட்டாலும் செவிடு ஒக்கும்; கேள்வியினால் துளையிடாத செவி எ—று.

இ) பரிப். : ஓசை மாத்திரம் கேட்டனவாயின் அதுவும் கேளாத செவிபோலும், நல்லோர் கூறும் சொற்களாற் துளைக்கப்படாத செவி எ—று.

இது கேள்வியில்லாதார் செவிடரென்றது.

ஈ) காளி. : இவ்வுலகத்துப் பயின்று வருகின்ற வழக்குச் சொல்லளவே யாண்டும் எப்பொழுதும் கேட்டு வரினும், மற்று எஞ்ஞான்றும் கேளாத தகைமைப்பட்டன. யாவை எனின், சான்றோருழைச் சென்று

தாம் கேட்கும் கேள்வியாகின்ற கூரிய கடைகோலான்[1] இரண்டாவது துளையிடப்படாத செவிகள் எ—று.

உ) **பரிமேல்.** : தம் புலமாய ஓசை மாத்திரத்தைக் கேட்குமாயினும் செவிடாந் தன்மையவேயாம், கேள்வியால் துளைக்கப்படாத செவிகள்.

ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஓசை மாத்திரத்தான் உறுதி எய்தாமையின் கேளாத் தகையது என்றும், மனத்தின்கண் நூற்பொருள் நுழைதற்கு வழியாக்கலில்[2] கேள்வியைக் கருவியாக்கியும் கூறினார். பழைய துளை துளையன்று என்பதாம்.

ஊ) **கவிராசர்:** நல்ல சாத்திரங்களாற் பெரியோரிடத்திற் கேள்வியைக் கேளாத செவி நல்ல செவியல்ல; செவிடான செவி எ—று.

ஏ) **பழைய 2:** செவி கேட்குமாயினும் கேளாத செவிட்டுச் செவியாம், கேள்வியால் துளைக்கப்படாத செவிகள்.

மல்லர் : கேள்வியினால் துளைக்கப்படாத காது சத்தத்தை நன்றாய்க் கேட்டாலுங் கேளாத காதின் குணத்தை யுடைத்து எ—று.

மனுஷருடைய காது தெரியாத காரியங்களைக் கேள்வியினால் அறிகிறதுக்கு வழியாகையில் கேள்வியில்லாதவனுக்குக் காது பிரயோசனஞ் செய்யாததினால் கேளாக் காது போலே இருக்கும் என்பது கருத்து.

கேட்பினும்—கேட்டாலும்; தகைய—குணமுடைத்து; தொடுதல்—தோண்டல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறள் உரைகளிற் பெரிதும் கருத்து மாற்றம் இல்லாதது. 'தோட்கப்படாத' என்பதற்குக் **காளிங்கர்** 'கூரிய கடைகோலால் இரண்டாவது துளையிடப்படாத' என்று கூறும் உரை 'ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல் துளையிடும் கருவி போன்றது. அது கடை போகத் துளைத்த செவியே பயன் தருவது' என்கிறார்.

ஜி. வரத. 'கேள்வியறிவு பெறவே காதுகள் அமைந்துள்ளன; அத்தகைய ஆற்றல் காதுகட்கு இல்லை என்றார் அவையிருந்தும் பயனில்லை' என்பர். கேட்பது காது. அதனாலாகிய அறிவு

1. கூரிய கடைகோல் — கூர்மையான துரப்பணம்.
2. காதில் சிரிய மொழிகள் வந்துபுக வழியாக்கலின் என்க.

பெறுவர். உயிர் கேட்பதும், அறிவு பெறுவதும், ஒளிபுக இருள் நீங்குவது போல ஒருங்கு நிகழ்வதாகலின் செவியின் செயலாக எண்ணினர் இவர் எனலாம்.

இக்குறள் அமைப்பு ஓரணிபட நிற்கிறது. அறநூற் கேள்வியோ அல்லது ஆன்றோர் வாய்மொழிக் கேள்வியோ கேட்கும்போது துன்பம் தருவதாகும். அது காதைத் துளைப்பது போன்றுதான் இருக்கும். வேம்பும் கடுவும் போன்றது என்பர் ஆசிரியர் தொல் காப்பியர். இதனையடியொற்றிய வள்ளுவரும், 'செவி கைப்ப' என்றார் ஆதலால், செவி உலகியல் உரைகள், ஒலிகள் அனைத்தை யும் கேட்கும் துளையுடையனவே; ஆயினும், அவற்றிலும் நன்மைதீமை காண வல்ல செவிய ாக வேண்டுமாயின், ஒழுக்கம் உடையார் வாய்ச் சொல்லால் நன்றாகத் துளைக்கப் பெறுதல் வேண்டும் என்பதாம்.

'தோட்கப்படாத செவி' என்பதால் பலமுறையும் கேட்கவேண்டும் என நயந்தருவாரை 'எனைத்தானும் நல்லவை கேட்க' என்ற ஆசிரிய வசனத்தை எடுத்துக்காட்டி 'ஓரிரு முறை கேட்பினும் செவி தோட்கப்பட்டதேயாம்' என மறுப்பர் உரை வேற்றுமை யாசிரியர். ஆண்டு ஒரு முறை இருமுறை கேட்டாலும் கேட்ட அளவிற்குப் பயன் பெறக் கூடும் என்றது. ஈண்டு நற்கேள்வி செவி வழியாக நுழைய வேண்டுமாயின் தொளைப்பது போலப் பன்முறையும் கேட்க வேண்டும் என்றது.

செவி கடலொலி சங்கொலி போன்ற பூதகாரிய ஒலிகளையும், அன்றாட வாழ்க்கை வழக்குச் சொற்களையும் கேட்குமாயினும் அவற்றால் உயிர்க்கு உறுதி இன்மையின், கேட்டும் கேளாச் செவி யாயின என்றதாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும் :

... . இரும்பிற் போர்த்த
பழுதெண்ணும் வன்மனத்தார் ஓட்டை மரச்செவியர் கேளார்.

—சீவக. ,1552.

எண்கணை விழுத்துளை அன்றே செவித்துளை
மையறு கேள்வி கேளாதோர்க்கே —இரும்பல்.
அறச்செவி திறந்தும் மறச்செவி யடைத்துப்

பிறவிப்பிணி மருத்துவன் இருந்தற முரைக்கும்
—மணி. மந்திரங்., 60

கேள்வியாளரிற்
றோட்ட செவியைநீ யாகுவை யாமெனின்
—மணி. உதய., 134-5

''... ..... கேள்விபாற் செவிகண் முற்றுந்
தொட்டவ ருணர்வி னுண்ணு முதத்தின் சுவையாய் நின்றான்.
—கம்ப., 3807.

இருடீர் விளக்கத் திமிழிசையார் கோவே
குருடேயும் அன்று நின்குற்றம் — மருடீர்ந்த
பாட்டு முரையும் பயிலாதன விரண்டு
ஓட்டைச் செவியு முள —ஔவையார்.

ஒருபுடை:

மரக்கண் என்செவி இரும்பினும் வலிது —திருவா., 399.

திருமால்சீர் கேளாத செவிபென்ன செவியே —சிலம்பு.

ஒ) மேற்கோள்பகுதி:

சுவாமி.: கேள்வியால் தோட்கப்படாத செவி என்பதை கேள்வி தோளாத செவி எனத் தொகுத்தல் கூடாது பொருள் வேறுபடுதலான் என்பர். (இ. கொ.78).

42.9 நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய வாயினர் ஆதல் அரிது. (சகசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: நுண்ணிதாகிய கேள்வியை உடையார் அல்லாதார், தாழ்ந்த சொற்கூறும் நாவுடையாராதல் இல்லை எ—று.

மணக்: இது கேள்வியுடையார், தம்மை வியந்து சொல்லார் என்றது.

ஆ) பரிதி.: நுண்ணிய கேள்வி இல்லாதாற்கு வணக்கமுள்ள சொல் அரிது எ—று.

இ) *பரிப்.*: நுண்ணிதாகிய கேள்வியுடையர் அல்லாதார் தாழ்ந்த சொற்கூறும் நாவுடையராத லில்லை எ—று.

இது கேள்வி யுடையராயின் மிகை சொல்லாரென்றது.

ஈ) *காளி.*: கல்வியாற் சிறந்த சான்றோர் உரைக்கும் நுண்ணிய வாகிய கேள்வியை யுடையரல்லது மற்று ஏனையோர், பலரிடத்தும் தாழ்ந்த சொல்லினராதல் பெரிதும் அரிது எ—று.

நுணங்கிய என்பது நுண்ணிமை

உ) *பரிமேல்.*: நுண்ணிதாகிய கேள்வியுடையர் அல்லாதார், பணிந்த மொழியினை உடையராதல் கூடாது.

கேட்கப்படுகின்ற பொருளினது நுண்மை கேள்விமேல் ஏற்றப் பட்டது[1]. வாய் ஆகுபெயர்[2]. பணிந்த மொழி பணிவைப் புலப்படுத்திய மொழி. கேளாதார் உணர்வின்மையால் தம்மை வியந்து கூறுவர் என்பதாம். அல்லால் என்பதூஉம் பாடம்[3].

காரி.: 'அல்லாதார்' என்றார் இவ் உரையாசிரியர். நச்சினார்க் கினியர் அல்லால் என வினையெச்சக் குறிப்பாக்கினார். பொருளி னுண்மை கேள்வி மேல் ஏற்றினார்.

ஊ) *கவிராசர்*: நுண்ணியதாகிய கேள்வியுடையவரல்லாதார் சகல மான பேர்க்கும் வணக்கமான வசனங்களைச் சொல்லமாட்டார்கள் என்றவாறு.

ஏ) *பழைய 2*: நுண்ணிய கேள்வியை உடையரல்லாதார் பணிந்த மொழியினை யுடையராதல் கூடாது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'வணங்கியவாயினர்' — *'தாழ்ந்த சொற் கூறும் நாவினர்' மணக்., காளி.*; *'வணக்கமுள்ள சொல்' பரிதி.*; *'பணிந்த மொழி' பரிமேல்.*; கேள்வி ஞானம் உடையார் தம்மிற் பெரியார் அறிவுடைமை கண்டு தம் சிறுமையைத் தெரிந்தவர்களாதலின் பணி மொழிதானே வரும் என்பது கருத்து.

---

1 நுணங்குதல்—நுட்பமாதல் இது கேட்கப்படும் பொருளின் மேலது. இதனைக் கேள்வியின் மேலேயேற்றி 'நுணங்கிய கேள்வி' என்றது இடத்து நிகழ்பொருளின் மேலாய உபசார வழக்கு.

2. வாய் உறுப்பினைக் காட்டாமற் சொல்லைக் குறித்தலின் கருவியாகு பெயர்.

3. இப்பாடத்திற்கு நுணங்கிய கேள்வியரல்லாமல் ஏனையோர் வணங்கிய வாயினராதல் அரிது என்று பொருளாம்.

'நுணங்கிய கேள்வி' — 'நுணுக்கமான கேள்வி' எனப் பிறர் அனைவரும். 'கேட்கப்படும் பொருள் மிக நுணுக்கமானது' எனப் பொருள் மேலதாக்குவர் இராமலிங்கனார். பணிவு தணிவுகளுடன் அறவுரைகளைக் கேட்டு என நுணங்கிய என்பதனைக் கேட்பவன் மேலதாக்குவர். 'விநய விருப்பத்துடன் கேட்க' எனக் கருத்தும் உரைப்பர். 'வணங்கிக் கேளாதவன் வணங்கிப் பேசமாட்டான்' என முடிவும் கூறுவர். இத்தனை நயமும் 'நுணங்கிய' என்பதற்குப் பணிவான அல்லது தணிவான என்ற பொருள் இலக்கிய உலகில் இருந்தால்தானே! சங்க இலக்கியங்களில் நுண்மை—அசைதல், கூரிதாதல், மெல்லிதாதல். வளைதல் முதலிய பொருள்களிலே வழங்கப்பெறுதல் காண்க. வேண்டுமாயின் வளைதலைப் பணிதல் எனக் கருதலாம்.

பிறருடைய பேரறிவு அவர்கள் சொல்லால் வெளிப்படுதலின் அதனைக் கேட்கும்போது தம்மறிவின் சிறுமையும், அவர்கள் பெருமையும் புலனாதலின் பணிவு விளையும்; அதனால் வணங்கிய வாயினராவர் என்பதாம். வணங்கிய வாய்—தம்மை வியந்து தருக்காத வாய்ச்சொல்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

நுணங்கிய கேள்வி:

நெடுநுண் கேள்வி —பதிற்று., 7:பதிகம்.

நுணங்கிய நுவலரும் உணர்வே போல் —கம்ப., 100

நுணங்கு கேள்வியாய் —கம்ப., 369.

நுட்புலன் நுணங்கு கேள்வி நுழைவின ரெனினும் நோக்கம்
கட்புல வரம்பிற் றாமே காட்சியும் கரையிற் றாமே. —கம்ப., 4941

நூற்பெருங்கடல் நுணங்கிய கேள்வியன் — கம்ப., 5146.

வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
நுணங்கிய கேள்வியன் நுவல்வ தாயினான் —கம்ப., 6576.

.... ஒதுநூல்
மல்கு கேள்வியன் வள்ளல் ..... —கம்ப., 1500.

....நுணங்கு கேள்வியான் —கம்ப., 4783.

பணிவாயுள்ள நன்கெழு நாவிற் பத்தர்கள்
—சம்பந்தர், பேணுபெருந் 5.

உணற்கிணிய வின்னீர் பிறிதுழியில் லென்னும்
கிணற்றகத் தேரை போல். —பழமொழி

முற்றும்:

கற்றறிவார் கண்ட தடக்க மடங்காதார்
பொச்சாந்தும் தம்மைப் புகழ்ந்துரைப்பர் — தெற்ற
அறைக லருவி யணிமலை நாட
நிறைகுட நீர் தளும்பலில் —பழமொழி

ஒருபுடை:

நூன்முகத் தோங்கு கேள்வி நுணங்கியோன் வணங்கு நெஞ்சன்
—கம்ப., 10482.

ஓ) மேற்கோள் பகுதி:

தெய்வச்.: நுணங்கு என்ற உரிச்சொல் நுண்மை என்னும் பொருளில் வந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 369)

நச்.: நுணங்கிய கேள்வியரல்லால் என்பது, அன்றி என்னும் செய்தெனெச்சக்குறிப்பு உணர்த்துவதோர் வாய்பாடு, 'அல்லவாயின்' என்று பொருளாயின், இதன் குறிப்பாம் என்பர். (தொல். சொல். 230)

குணவீர.: நுணங்கிய கேள்வியவர்: நுணங்கு என்பது நுண்மைப் பொருளில் வந்ததற்கு மேற்கோள். (நேமி., 59)

42.10. செவியிற் சுவைஉணரா வாயுணர்வின் மாக்கள் அவியினும் வாழினும் என். (சூஉ0)

உரைப்பகுதி:

அ) மணக்.: செவியால் நுகரும் இன்பத்தை அறியாத[1], வாயால் நுகரும் இன்பத்தை யறியும் மாக்கள் செத்தால் வரும் தீமை யாது? வாழ்ந்தால் வரும் நன்மை யாது? உலகத்தார்க்கு? எ—று.

இது கேள்வியில்லாதார் பிறர்க்குப் பயன்படார் என்றது.

ஆ) பரி.: செவியின் சுவையாகிய கேள்வியில்லாதார் செத்தால் என்? இருந்தால் என்? எ—று.

இ) பரிப்.: செவியால் நுகரும் இன்பத்தை அறியாது வாயால்

1. 'அறியாது' பரிப்பெருமாள் பாடம் (வே.ப.க.).

நுகரும் இன்பத்தை அறியும் மக்கள் செத்தால் வரும் தீமை யாது? வாழ்ந்தால் வரும் நன்மை யாது உலகத்தார்க்கு? எ—று.

இது கேள்வி யில்லாதார் பிறர்க்குப் பயன்படா ரென்றது.

ஈ) *காளி.*: சான்றோரால் தம் செவியிற் சொல்லுவதாகிய கேள்விச் சுவையை நுகர்ந்தறியா மாந்தர் ஆகலான், வெறும் வாயுணர் வினையே ஓர் உணவாக மதித்திருக்கின்றவர் மாய்ந்தால் வரும் சேதமும், இருந்தால் வரும் இலாபமும் என் உலகோர்க்கு? எ—று.

உ) *பரிமேல்.*: செவியான் நுகரப்படும் சுவைகளை உணராத வாயுணர்வினையுடைய மாந்தர், சாவினும் வாழினும் உலகிற்கு வருவது என்னை.

செவியானுகரப்படும் சுவைகளாவன சொற்சுவையும் பொருட் சுவையும். அவற்றுள் சொற்சுவை, குணம்[2], அலங்காரம்[3] என இரு வகைத்து. பொருட்சுவை[4] காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தம் என ஒன்பதுவகைத்து. அவையெல் லாம் ஈண்டுஉரைப்பின் பெருகும். வாயுணர்வு என்பது இடைப்பதங்கள் தொக்குநின்ற மூன்றாம் வேற்றுமைத்தொகை; அது வாயால் நுகரப் படும் சுவைகளை உணரும் உணர்வு என விரியும். அவை கைப்பு, காழ்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு என ஆறாம். செத்தால் இழப்பதும் வாழ்ந்தால் பெறுவதும் இன்மையின், இரண்டும் ஒக்கும் என்பதாம். வாயுணவின் என்று பாடம் ஓதுவாரும் உளர். இவை மூன்றுபாட்டானும் கேளாத வழிப்படும் குற்றங் கூறப்பட்டது.

காரி.: குணவலங்காரம் பத்துஞ் சொற்சுவை. வீரம் அச்சம் இழிப்பொடு வியப்புக் காமம் அவலம் உருத்திரம் நகை சாந்தம்

---

2. குணம்—தொடைகளைப் பற்றி நின்று காப்பியத்திற்கு அழகு செய்வது. இது செறிவு முதல் சமாதியீறாகப் பத்துவகைப்படும் எனத் தண்டியலங்காரம் கூறும். இது ஒருவற்கு இளமை. அழகு முதலிய போல ஒன்றி நின்று அழகுசெய்வன. காப்பியத் துக்கு அழகு செய்வன இவை.
3. அலங்காரம் சொல்லையும் பொருளையும் பற்றி நின்று, அழகு செய்வது. இது சொல்லணி, பொருளணி என இருவகைப்படும். சொல்லணி -நாகபந்தம், கோ முத்திரி முதலான சித்திரக்கவிகளாம். பொருளணி உவமை முதலாகப் பலவாம். இது கடகம்' குண்டலம் முதலியன போலச் சார்ந்து நின்று வேற்றுமை நயத்தான் அழகு செய்வன. காப்பியத்திற்கு வியப்பளிப்பன. என இவற்றிடையே வேறுபாடு காண்க.
4. சுவை என்பது பொருளைப் பற்றி நின்று நுகரப்படும்போது நுகர்வானிடம் தோன்றும் உள்ளுணர்வு. அதுவே சிரித்தல் அழுதல் முதலான செய்கைகளாக வெளிப்படுமாயின் மெய்ப்பாடு எனப்படும். இவற்றை 'நகையே யழுகை' முதலாக அப்பாலெட்டே மெய்ப்பாடு என்ப என மெய்ப்பாட்டியலிற் கூறப்படுவதைக் காட்டுவர் சிலர். மெய்ப்பாட்டிற்குக் காரணமாயிருப்பது சுவை. அவற்றின் காரியம் மெய்ப்பாடு எனஅறிக. இவற்றின் விரிவை அணி நூல்களிலும், சுவை நூல்களிலும் காண்க.

இவை பொருட்சுவை. கைப்பு காழ்ப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு தித்திப்பு இவை அறுசுவை.

ஊ) **கவிராசர்:** செவியாற் கேட்டுச் சகலமான ருசிகளையும் அறியாத பேர் வாயுணவாகிய ருசிபதார்த்தங்களைப்[5] புசித்து வாழ்ந்திருந்தாலென்ன, இறந்தாலென்ன எ—று.

ஏ) **பழைய 2:** 'வாயுணவின்' பாடம்,

செவியான் உண்ணப்படும் சுவையை யுணராத வாயுணவினை உடைய மாந்தர் செத்தாலென்? இருந்தாலென்?

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிமேலழகர் 'வாயுணர்வு' என்பது இடைப்பதங்கள் தொக்கி நின்ற மூன்றாம் வேற்றுமைத்தொகை எனவும், அதுவாயான் நுகரப் படும் சுவைகளையுணரும் உணர்வு என விரியும் எனவும், விரித்துஎழுத வேண்டிய இன்றியமையாமை **மணக்குடவர்** தரும் 'வாயால் நுகரும் இன்பம்' என்ற உரையும்; **காளிங்கர்** தரும் வாயுணர்வினையே ஓர் உணவாக மதித்திருக்கின்றனர் என்ற குறிப்புமேயாம். **பரிமேலழகர்** தரும் 'வாயுணவின்' என்றயிடமும், **காளிங்கரைச்** சுட்டுவதாகும். ஆதலால் **காளிங்கர்** பாடம் 'வாயுணவின்' என்பது. **கவிராசர், பழைய உரை** 2-ம்'வாயுணவின்'என்பதே பாடம் கொண்டனர். இவர் கள் **பரிமேலழகர்க்குக்** காலத்தாற் பிற்பட்டவர்களாதல் தெளிவு.

இராமலிங்கனார் 'வாய் — வாயுணவு, சுவை—உணவால் ஆம் உணர்வு' என்று பொருள் கண்டிருப்பர் போலும். குழந்தை 'வாயுணர்வு—வாயால் நுகரப்படும் இன்பம்' என்பர். வயிற்றுக்கீயப் படும் உணவால் விளைந்த வாயுணர்வும், உயிர் உடலின்கண் உரிய காலம்வரை நிலைத்திருக்கவும், உடல் வளம்பெற்று வாழவும், இருந்து தக்கார் வாய்ச்சொற் கேட்டுப் பயனெய்துதற்குமே ஆதலின், அப்பயன் எய்தாத மாக்கள் மடிந்தால் என்ன? வாழ்ந்தாலென்ன என்றார். மாக்கள் என்றது வாயுணவால் விலங்கொடு ஒத்தல் பற்றி. விலங்கா யினும் உழைப்பால் பிறர்க்கு நல்லவகையிற் பயன்படும்; இவர்கள் அதனாலும் பயன் படார் என்பார், அவியினும் வாழினும் என் என்றார்.

பரிமேலழகர் 'சுவை சொற்சுவை பொருட்சுவை என இருவகைப் படும்'என்றும் 'சொற்சுவை குணம் அலங்காரம் என இருவகைப்படும்' எனவும் கூறுவர். அவற்றுள் குணவணி என்பன சொல்லின்

5. ருசிபதார்த்தம்—சுவைப் பொருள்.

குணமாய் யமகம் மடக்கு முதலாயினவும் கௌடம் வைதருப்பம் பாஞ்சாலம் நெறிகள்போல எழுத்தமைவால் வருவனவும் ஏனைய சித்திரப்பாவின் அமைப்புமாம். அலங்காரம் என்பன உவமை முதலாகக் கூறப்படும் அணிவகைகளாம். இவ்வணியைப் பொருளணி எனத் தண்டியலங்காரம் கூறும். இதனையும் பரிமேலழகர் சொற் சுவையுள் அடக்கியது சொல் கருவியாக நிற்க உணரப்படும்பொருளிற் றோன்றும் அணிகளாதலின் எனலாம். பரிமேலழகர் 'பொருட்சுவை' என்றதும், பொருளணியுள் சுவையணி என்ற பெயருடன் வழங்கு தலைத் தண்டியலங்காரத்தும், இலக்கண விளக்கத்தும் காணலாம். குணம் சொல்லைப் பற்றியே நிற்கும் அழகு என்பது ஆனந்த வர்த்தனர் கருத்து.

பண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	செல்வத்துள்	செவிக்குணவு	செவிபுணவின்	கற்றில்லன்	இழுக்கல்	எனைத்தானும்	பிழைத்துணர்ந்தும்	கேட்பினும்	நுணங்கிய	செவியிற்
மணக்.:	3	2	7	1	4	3	6	10	5	9
பரிதி.,	4	5	3	1	10	2	7	8	6	9
பரிப்.,	7	2	8	1	4	3	6	10	5	9
காளி	4	8	9	1	2	10	6	3	5	7
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

42வது அதிகாரம் 'கேள்வி' முற்றிற்று.

43. அறிவுடைமை.

அதிகாரப்பொருள்:

அ) இ) மணக்.: அறிவுடைமையாவது, அறிவாவது இன்னது என்பதும், அதனாலாகிய பயனும் கூறுதல். இது கல்வியும் கேள்வியும் உடையராயினும் கேட்ட பொருளை உள்ளவாறு உணர்ந்தறிதல் வேண்டுமாகலின் அதன்பின் கூறப்பட்டது.

ஆ) பரிதி.: அறிவுடைமையாவது கல்வியினும் கேள்வியினும் பெரிது எ—று.

இ) பரிப்.: அறிவுடைமையாவது.அறிவாவது இன்னது என்பதூஉம் அதனானாய பயனும் கூறுதல். இது கல்வியும் கேள்வியும் உடை யர் ஆயினும் கேட்ட பொருளை உள்ளவாறு அறிந்து உணர்தல் வேண்டுமாதலின் அதன்பிற் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது, கல்வி கேள்விகளினாய அறிவோடு உண்மையறிவுடையனாதல், அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

ஊ) கவிராசர்: அஃதாவது, கல்வி கற்றுங், கேள்வி கேட்டும் அறிகிற அறிவோடு, நல்ல புத்தியாகிற அறிவுடையனாதல்.

எ) பழைய 2: அஃதாவது, தன்னறிவன்றிக் கல்வி கேள்வி களினானும் மிகுந்த அறிவுடைமை.

மல்லர்: அதாவது கல்வியினாலேயுங் கேள்வியினாலேயும் அடைந்த அறிவைக்கொண்டு காரியங்களுடைய வயனங்களைப் பிரிக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இராம. கல்வி கேள்விகளால் திரட்டிய அறிவை வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளுதல். அதாவது வாழும்போது நேர்படும் சூழ் நிலைக்கு ஏற்பச் சொந்த அறிவொடு நடந்து கொள்வது.

குழந்தை, அறிவின் தன்மையும் சிறப்பும்.

சாமி. சிதம்பரனார், உண்மையறிவுடையனாதல்.

சி. இ. கல்வி கேள்விகளானாய அறிவின் இயல்பும் பயனும்.

கா. சு. மனிதர்க்கு இயற்கையாய் உளதாய பகுத்தறிவுடைமை.

தேவநேயர், கல்வி கேள்விகளானாய தெள்ளிய அறிவும் மிகுதியும் உடைமை. அறிவு என்பது அறிதல்' (perception knowing understanding). அறிந்த செய்தி (knowledge), ஓதி (wisdom), மதி (intelligence) என்னும் நான்கு பொருளையும் உணர்த்தும். இந்நான்கின் சேர்க்கையே இங்கு அறிவெனப்பட்டது என்பர்.

ஜி.வரத. கல்வி கல்லாமை கேள்விகளாற் பேசப்பட்டவை நூலறிவு. கல்வி கேள்வி நூலறிவு பெறுதற்குக் காரணங்கள். நூலறிவு நுண்ணறிவைத் தெளிவாக்கவேண்டும். முற்கூறிய இரு வகை யறிவோடு உண்மையறிவுடையனாதல் வேண்டும். அதுதான் அறிவுடைமை என்பர்.

மு. ரா. அரு. கல்வி கேள்வியறிவோடு மெய்யறிவுடையனாதல்.

அறிவின் இலக்கணமும் பயனும் உணர்த்துவது என்பர் **மணக்.**, **பரிப்.**, மேலும் கல்வி கேள்வி உடையராயினும் கேட்டபொருளை உள்ளவாறு உணர்ந்தறிதல் என்பர். இவர்களது நோக்கு கல்வியும் கேள்வியுமாகிய இவற்றான் வரும் அறிவு செயற்கையறிவு. அதனை ஐயந்திரிபின்றி உள்ளவாறு உணர்தலே அறிவுடைமை என்னும் கருத்தினது. **பரிதியாரின்** போக்கு கல்வியறிவு—கேள்வியறிவுகளைக் காட்டினும் அறிவுடைமை பெரிதெனின் அவ்வறிவு இயற்கையறி வாதல் கூடும் என எண்ணலாம். அறிவோடு உண்மையறிவையுடைய னாதல் என உடனிகழ்ச்சியொடுக் கொடுத்தோ, கல்வியறிவு கேள்வி யறிவு உண்மையறிவு என மூவகையறிவினை ஓதுகின்றனரோ என்றெண்ணக் கிடக்கிறது. இதனை ஒட்டிச் செல்வனவே **கவிராசர்**, **பழைய உரைகள்**, செயற்கையான அறிவை இயற்கையறிவோடு பயன்படுத்திக் கொள்ளுதல் என்பர் **இராமலிங்கனார்**. பிற்கால ஆசிரியர்களின் உரைகளும் இதனை ஒட்டியே இயங்குகின்றன. ஆகவே இதுவரை காட்டிய உரைகள் கல்வி கேள்விகளாகிய அறிவாக உயிரைப் பற்றுதல். இவ்வுரைகளில், அறிவு இயற்கையும் செயற்கை யும் என இருவகை. செயற்கையறிவு கற்றல் கேட்டலால் விளைவது; இயற்கையறிவு உண்மையறிவு என்பது பெறப்படும். பிற்கால உரையாசிரியர்களில் **இராமலிங்கனார்** சேர்த்த அறிவை வாழ்க்

கைக்குப் பயன்படுத்துதல் வரை பொருள் காண்பர். கா. .சு பகுத் தறிவு என்பர். தேவநேயர் அறிவும் அறிந்த செய்தியும் புத்தியும் மதியுமாகிய நான்கன் கூட்டமேயறிவு என்பர். பொருளதிகாரவுரை யில் அறிவு—நல்லதன் நலனும் தீயதன் தீமையும் உள்ளவாறு உணர்தல் என்பர். நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன் உண்மையறிவே மிகும் என்ற திருக்குறள் உண்மையறிவு உயிர்க் குணமாக என்றும் உள்ள இயற்கையறிவு என்றும், கல்வி கேள்வி களான் வருவன உண்மையறிவை மிகுவிக்கவும் விளக்கவும் வரும் செயற்கையறிவு என்றும் கொள்ளல் ஆகும். அங்ஙனமாக, ஐயந் திரிவில்லாதது. நிச்சய ஞானம் விவேகம் என்பன எல்லாம், அளவை களானும், நூலானும், இலக்கிய இயற்கையானும் அறியப்பெறும் செயற்கையை உணர்த்துதல் கூடும் என்றும் சொல்லச் செய்கிறது.

43.1. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண். (சஉக)

உரைப்பகுதி:

அ) மணக்.: குற்றமறைக்கும்[1] கருவியாவது அறிவு;பகைவராலும் உட்புகுந்து அழிக்கலாகா அரணும் அது தானே எ—று.

இது தனக்குள்ள குற்றத்தை மறைக்கும் என்றும், பிறரால் வரும் தீமையைக் காக்கும் என்றும் அறிவினாலாம் பயன் கூறிற்று.

ஆ) பரிதி.: அறிவுக்கு ஈனம் வராமல் எப்பொழுதும் அறிவுடைமை யாயிருப்பானாகில் அது சத்துருக்களாலும் அழிக்கப்படாத அரண் எ—று.

இ) பரிப்.: ஒருவனுக்குக் குற்றம் காக்கும் கருவியாவது அறிவு; பகைவரால் உள்புகுந்து அழிக்கல் ஆகாதஅரணும் அதுதானே எ—று.

இது தனக்குள்ள குற்றத்தை மறைக்கும் என்றும், பிறரால் வரும் தீமையைக் காக்கும் என்றும் அறிவினாலாம் பயன் கூறிற்று.

ஈ) காளி.: அரசர்க்கு ஆனை குதிரை தேர் காலாள் என்னும் நாற்

1. மறைக்கும் என்பது பிறரறியாமற் காத்தல். அது புண் வைத்து மூடினாற் புரையோடு தல் போல் அழிவிற்குக் காரணமாம். ஆதலானும், பெரும்பாலும் இவரை ஒட்டியே உரை காணும் பரிமேலழகர் 'முன்னறிந்து நீக்குதல்' என்றெழுதுதலானும் ,மறுக் கும்' என்ற பாடமே இருந்திருக்கும். மறைக்கும் என்பது பிழைபட்ட பாடமேயாம்.

பெரும் சிறையும்[2] அரண் அன்று; தமக்கு இங்ஙனம் சிறந்த அறிவு யாது? அதுவே தமக்கு ஓர் இடையூறு வரும்வழி பாதுகாக்கும் படையானது; அதுவும் அன்றிப் பின்னும் பகைவேந்தர்க்கு உள்புக்கு அழித்தல் அரிதாய அரண் ஆவதும் அதுவே எ—று.

உ) பரிமேல்.: அரசர்க்கு அறிவு என்பது இறுதி வாராமல் காக்கும் கருவியாம். அதுவேயுமன்றிப் பகைவர்க்கு அழிக்கலாகாத உள் அரணுமாம்.

காத்தல் முன்னறிந்து பரிகரித்தல்[3]. உள் அரண்—உள்ளாய அரண்; உள்புக்கு அழிக்கலாகா அரண் என்றுமாம், இதனால் அறிவினது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: ஒருவருக்கு அறிவென்பது, குற்றம் வாராமற் காக்கப்பட்ட பொருளாம்; அதுவுமல்லாமல், சத்துருக்களால் அழிக்கப் படாத உள்ளரணுமாம் எ—று.

ஏ) பழைய 2: அரசர்க்கு அறிவென்பது இறுதி வாராமற் காக்கும் ஆயுதமாம்; அதுவேயுமன்றிப் பகைவர்க்கு அழிக்கப்படாத உள் ளரணுமாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அற்றம் காக்கும் கருவி அறிவு' — 'குற்றத்தை மறைக்கும் கருவியாவது அறிவு. இது தனக்குள்ள குற்றத்தை மறைக்கும் என்பதாம் என்றது **மணக்குடவர், பரிப்பெருமாள்** உரை. இது 'குற்றமேபொருளாகக் காக்க குற்றமே அற்றந்தரூஉம் பகை' என்ற ஆசிரியவசனத் தொடு மாறுகோடலின், **காளிங்கர்** முதலிய பழையஆசிரியர்மரபு பற்றிக் கூறிய பொருளைக் கோடலே சிறப்பு.

கருவி என்பதற்கு நால்வகைப்படை, படைக்கலம், கருவி முதலாகப் பல பொருள் கொள்ளுதலினும் கருவி எனப்பொருள் கண்டு நயமும் விளக்கமும் கூறும் **பரிமேலழகர்** உரை சிறந்தது. **இராமலிங்கர்** உரை **பரிமேலழகர்** உரைக்கு விளக்கமாய் எளிமையிற் பொருளை விளக்குகிறது.

மு.கோ. 'அறிவு—மெய்யறிவு, போர் அறிவு இரண்டையுங் கருதுவதும் மெய்யறிவு மெய்யுணர்தலிற் கூறப்பட்டு உலகியலுக்கு

---

2. சிறை—பாதுகாப்பான இடம். 'சிறை காக்கும்' என்பதும் நோக்குக.
3. பரிகரித்தல்—நீக்குதல்.

ஏலாமையறிக. மு.ரா. அரு. 'அறிவு என்பது கேடு வராமல் தடுத்தற் காரணமாகிய செய்கை' என்பர். அறிவு பண்புப் பெயராய், அதனா னாய முன்னேற்பாடுகள் எனப் பொருள் காண்பர். அறிவு செய்கை யாய்ப் புறத்துத்தோன்றுமாயின் பகைவரால் முன்னெச்சரிக்கையாய் அழிக்கப்படுதலேயன்றி உள்ளழிக்கலாகா அரண் ஆகாது. ஆதலால் பண்பளவிற் பொருள் கோடலே சிறந்தது.

தேவநேயர், 'அழிக்கலாகா உள் அரண்' எனக் கூட்டிப் பரிமேலழகரை ஒட்டி உரை காண்பர். உள்ளரண் — அகக்காரணக் கூறாகிய அரண். அறிவு கருவியாகவும் அரணாகவும் பயன்படுகிறது. படையாகிற புறக்கருவியாய் புறப்பகையையும். அகக் கருவியாய் தன்னம்பிக்கை துணிவு இவைகளை இழத்தலாகிய உட்பகையையும் ஒழித்து ஊக்கமும் தந்து பாதுகாக்கும் என்பர். மேலும் இவர் கூறும் விளக்கங்கள் மிகச் சிறந்தவை.

அற்றம்—சோர்வு என்றுமாம் 'கொக்கொக்க கூம்பும் பருவத்து' என்பதற்கு, பகைவர் என்றும் சோர்வையே எதிர்நோக்குவர். அத்தகைய சோர்வு வாராவண்ணம் பாதுகாக்கும் கருவி அறிவு என்றும் ஆம்.

43. 2. சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ நன்றின்பால் உய்ப்ப தறிவு. (சஉஉ)

உரைப்பகுதி:

அ) மணக் : உள்ளம் சென்ற இடத்தே உடம்பையும் செல்ல விடாது, தீமையை நீக்கி, நன்மைப் பகுதியிலே செலுத்துவது அறிவாவது எ—று.

இது காமநுகர்ச்சியின்கண் பழியும் பாவமும் பொருட்கேடும் வராமல் செலுத்துவது அறிவு என்றது.

ஆ) பரிதி.: ஐம்புலன் சென்ற பாவத்தின் வழியிலே மனத்தை விடாமல் நல்ல வழியிலே செலுத்துவது அறிவு எ—று.

இ) பரிப.: உள்ளம் சென்ற இடத்தே உடம்பையும் செல்ல விடாது தீமையை நீக்கி நன்மைப் பகுதியிலே செலுத்துவது அறிவாவது எ—று.

இது காம நுகர்ச்சியின்கண் பழியும் பாவமும் பொருட்கேடும் வாராமல் செலுத்துவது அறிவு என்றது.

ஈ) **காளி.:** காற்றினுங் கடிய வேகமுடைமை நெஞ்சிற்கு இயல்பு ஆகலான், அங்ஙனம் அஃது ஓடியவழி ஓட விட்டுக்கொடாது மற்று அதனை ஒழித்து அவ்வுள்ளத்தை நீக்கி நன்மைப் பகுதியிலே வருந்தியும் செலுத்தவல்லது அறிவாவது எ—று.

உ) **பரிமேல்.:** மனத்தை அது சென்ற புலத்தின்கண் செல்ல விடாது, அப்புலத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து, தீயதனின் நீக்கி நல்லதன்கண் செலுத்துவது அறிவு.

வினைக்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் எனப் புலம் ஐந்தாயினும், ஒருகாலத்து ஒன்றின்கண் அல்லது செல்லாமையின், இடத்தால் என்றார். விடாது என்பது கடை குறைந்து நின்றது. குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்[1] போல வேறாக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்துவது அறிவு என்றார், அஃது உயிர்க்குணம் ஆகலின்,

ஊ) **கவிராசர்:** அறிவாவது மனசைப் போன வழியே போகவொட்டாமல் தடுத்து நன்மை தீமைகளை ஆராய்ந்து பொல்லாததை நீக்கி நல்ல காரியத்திலே செலுத்துவதாம் எ—று.

எ) **பழைய 2:** மனத்தை அது சென்றவிடத்திற் செல்லவிடாது, அவ்விடத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து, (தீயதனின் நீக்கி) நல்லவிடத்திற் செலுத்துதல் அறிவு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'சென்ற விடத்தால்' — 'உள்ளஞ் சென்ற இடத்தே' **மணக்.** செலவிடாது— உடம்பு செல்லவிடாமல் என ஈரிடத்து எழுவாய் வருவித்து எழுதுபவர். இவருரை உள்ளம் செல்லினும் தீதில்லை. உடம்பு செல்வதுதான் கூடாது என்பதனைக் கருதுவது போலுள்ளது. 'உள்ளத்தால் உள்ளலும் தீதே' 'பெட்டு ஒழுகும் பேதைமை' என்பன உள்ளஞ் செல்லுதலைக்கடிவன ஆதலைக் காண்க.

பரிமேல்., 'புலத்தின்கண் செல்லவிடாது' என்பர். ,ஐம்புலன் சென்ற பாவ வழியிலே' என்பர் **பரிதி.** 'செல்வம் உள்ளம்' என்பதே **காளிங்கர்** கருத்தும்.

'இடத்தால்' என்பது 'இடத்தின்கண்' எனப்பொருள் தருதலின் உருபு மயக்கம். காலத்தாற் கொண்டான் என்பது போல. உள்ளம்

1. வாதுவன் — குதிரைப் பாகன்.

தீ நெறிக்கண் தானே செல்லும்; அதனைத் தடுக்க வேண்டும் என்பார், செலவிடாது என்றார். நன்னெறிக்கண் அறிவு செலுத்தினாலல்லாது தானே செல்லும் தகைமையதன்றாகலின் உய்ப்பது எனப் பிறவினை வாய்பாட்டாற் கூறினார்.

மனம் சென்று தைக்குமிடம் நன்மை பயக்கும்; அல்லது, தீமை தரும் என்பது இறுதியிற் காணப்பெறும் பயனால் அன்றி, யறிப் படாமைகாண்க. மனம் சென்று பற்றும் புலன்களும் அங்ஙனமே. மக்களின் உளப்பண்பிற்கும் உடற்பண்பிற்கும் ஏற்பச் சென்று பற்றுமிடம் எதுவும் ஆகலாம். காம இன்பமாகத்தான் வேண்டும் என்ற நியதியில்லை. ஆகையால் காமநுகர்ச்சியைக் குறித்து எழுதும் மணக்குடவர். 'காமம்—ஆசை' என்ற பொதுவான பொருளிற் கொண்டு எழுதினர் ஆகலாம். ஆயினும் பொதுமையில் எழுதிய பரிமேலழகர் உரையே சிறந்தது.

ஓ) மேற்கோள் பகுதி:

இளம்: 'பெருமையும் உரனும் ஆடூஉமேன': இதனானே மேற் சொல்லப்பட்ட தலைமகளது வேட்கைக் குறிப்புக்கண்ட தலைமகன் அந்நிலையே புணர்ச்சியை நினையாது, வரைந்து எய்தும் என்பது பெறுதும். 'சென்ற இடத்தால்... ..... உய்ப்பதறிவு' என்பவாகலின்

(தொல். பொருள். 95)

நச்.: ஷி (தொல். பொருள். 98)

43. 3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (சஉங)

உரைப்பகுதி:

அ) மணக்.: யாதொரு பொருளை யாவா சிலா சொல்லக் கேட்பினும், அப்பொருளினது உண்மையை யாராய்வது அறிவாவது எ—று.

இது யாவர் சிலர் நட்டோராயினும் பகைவராயினும் அவர் கூறக்கேட்டவற்றில் தெள்ளியராய்[1] ஆராய்ந்து துணிதல் அறிவு என்றது.

1. தெள்ளியராய் — தெளிந்து தேர்ந்த அறிவை உடையவராய்.

ஆ) **பரிதி.:** எந்தப் பொருளாகிலும் யார் வாக்கிலே கேட்டாலும் அந்தப்பொருளை மெய்ப்பொருளாகக் காண்பது அறிவு எ—று.

இ) **பரிப.:** யாதொரு பொருளை யாவர் சிலர் சொல்லக் கேட்பினும் அப்பொருளினது உண்மையை ஆராய்வதே அறிவாவது எ—று.

யாவர் சிலர் நட்டார் ஆயினும் பகைவர் ஆயினும் இது கேட்டவாற்றால் தெளியாது, ஆராய்ந்து துணிதல் அறிவு என்றது.

ஈ) **காளி.:** யாதானும் ஒரு பொருளைக் கீழ்ச்சொன்ன தம்மரபின் உயர்ந்தோர்மாட்டுக் கேட்பினும் கேட்க; மற்று ஏனை இழிந்தோரிடத்துக் கேட்பினும் கேட்க; நாம் கேட்கின்ற பெரும் பொருளின் கண் சிறிதும் குல வேற்றுமை இல்லாமையான், அவர் உரைக்கும் பெரும்பொருளின் உண்மையைத் தெரியக் காண்பதும் மற்று ஏனைய சிறு பொருளை விரும்பாது விடுத்தலுமே அறிவினது இயல்பு எ—று.

உ) **பரிமேல்.:** யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்பினும், அப்பொருளின் மெய்யாய பயனைக் காணவல்லது அறிவு.

குணங்கள் மூன்றும்[2] மாறிமாறி வருதல் யாவர்க்கும் உண்மையின், உயர்ந்தபொருள் இழிந்தார்வாயினும், இழிந்தபொருள் உயர்ந்தார்வாயினும், உறுதிப்பொருள் பகைவர்வாயினும், கெடுபொருள் நட்டார்வாயினும், ஒரோவழிக் கேட்கப்படுதலான், எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் என்றார். அடுக்குப் பன்மைபற்றி வந்தது. வாய் என்பது அவர் அப்பொருளின்கண் பயிலாமை உணர நின்றது.[3] மெய்யாதல் நிறைபெறுதல். சொல்வாரது இயல்பு நோக்காது, அப்பொருளின் பயனோக்கிக் கொள்ளுதல் ஒழிதல் செய்வது அறிவு என்பதாம்.

ஊ) **கவிராசர்:** யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்டாலும், அப்பொருளின் நல்ல பொருளைக் கைக்கொண்டு நடக்கவல்லது அறிவு எ—று.

ஏ) **பழைய 2:** யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்பினும், அப்பொருளின் மெய்யான பயனைக் காண்பதறிவு.

---

2. குணங்கள் மூன்று — சாத்விகம், இராசதம், தாமதம் என்பன. அவற்றுள் சாத்விகம் என்பது அன்பு அருள் ஞானம் அடக்கம் என்பவற்றில் நாட்டங்கொள்ளச் செய்வது நான் என்ற முனைப்புடன் அகங்கரித்துச் செயற்படச் செய்வது ராசதம், மந்தம், உறக்கம், அறியாமை முதலியவற்றில் நீட்டங்கொள்ளச் செய்வது தாமதம் எனக.
3. 'உணர்த்தி நின்றது' என்றும் பாடமுண்டு.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவர் உரை 'யாதொரு பொருள்' என்பதால், பொருள் ஒன்றாகவும், 'யார்யார்வாய்' என்பதால் சொல்வோர் பலராகவும், அவர்கள் சொல்வன பல வகையாகவும் இருக்கக்கூடும். ஆதலால், தேர்ந்து மெய்ப்பொருளைக் காண்க என்னுங் கருத்தினது. சிலர் பொருளும் பல; சொல்வாரும் பலர், சொல்வனவும் பல ஆயினும் உண்மை ஒன்றில்தானிருக்கும். அதனை ஆய்ந்து தெளிக என்னும் கருத்தினது என்பர்.

காளிங்கர், தம் உரையாற் பெறுபயனாக 'உரைக்கும் பொருளின் உண்மையைக் காண்க; ஏனைய சிறுபொருளை விடுக; இதுவே அறிவின் மேன்மை என்பர்.

பரிதி., 'எந்தப்பொருளாயினும் யார் வாயிலே கேட்டாலும் அதனை மெய்ப்பொருளாகக் காண்க' என்பர். இவ்வுரை, ஆய்வுக்கும் தேர்வுக்கும் இடங்கொடாமல் நம்புக என்கிறது.

பரிமேலழகர் உரை 'மெய்யாய பயனைக் காண்பதுதான் அறிவு' என்றும், பொருள் என்பதற்குப் பயன் என்றும், பொருளைத் தருகிறது.

மு. ரா. அரு., பரிமேலழகர் உரைக்குத் தெளிபொருள் வசனம் எழுதுபவராயினும் இக்குறளை நான்காவதாக அமைப்பர். இம்முறையில் இவரிடம் மட்டுந்தான் காணப்படுவது. சொல்வானது குணத்தை நோக்காது சொல்லின் பயனைக் காணவல்லதே அறிவு என்கிறது, 'எப்பொருள்' 'அப்பொருள்' என்பவற்றிலுள்ள பொருள் பொருளையும், மெய்ப்பொருள் என்பது உண்மைத்தன்மையையும் உணர்த்துவதாகக் கொள்வர். இது பரிமேலழகரை ஒட்டிய போக்காகும்.

இராம., 'சொல்லும் பொருள் ஒன்று; சொல்வார் பலர்; சொல்லும் முறை பல; ஆயினும் உண்மையைத் தெளிக' என்பர்.

தேவநேயர் முற்றும் பரிமேலழகரை ஒட்டிச் சென்று 'மெய்ப் பொருள்—உண்மைப் பொருள்கள் எனின் இதனை நன்கு ஊன்றி நோக்கின் பொருள்கள் பலவானால் அன்றி, அவற்றில் இது மெய்ப் பொருள் என ஒன்றைத் துணிதல் இயலாது. ஆகையால் மெய்ப் பொருள்—பொருளின் உண்மைப் பொருளை என்ற இவர் பொருள் சிந்தனைக்குரியதாம்.

ஜி. வரத 'பொருளின் பயனைக்கொண்டு தெளிக' என்பர்.

இவர் கருத்து சொல்வான் தரத்தையோ, சொல்லுந் திறத்தையோ கொண்டு துணியற்க. சொல்லப் பெறும் பொருளின் பயனைக்கொண்டு தெளிக. என்பதாம்.

ஈ. சபாபதி 'அப்பொருளினது மெய்யான பொருளைக் காண்பது அறிவு' என்பர். இதில் பொருளினது பொருளை என்பதில் பொருள் விளக்கம் இன்று; மெய்யான பயனை என்றிருத்தல் நலம்.

சாமி சிதம்பர, குழந்தை இருவரும் இங்ஙனமே உரை காண்பர்.

சி.இ. அப்பொருளின் உண்மையான இயல்பைக் காணவல்லதே என முன்னோரை ஒத்து மொழிபவர்.

இவற்றில் பலருரை **பரிமேலழகரை** ஒட்டியே எழுதுதலின் அவர் உரைச்சிறப்பு, பலரையும் கவர்ந்துள்ளது எனலாம்.

பரிமேலழகர் 'யார்யார் வாய்' என்பதிலுள்ள 'வாய்' என்பதற்கு 'அவர் அப்பொருளின்கண் பயிலாமை யுணர நின்றது' எனக்குறிப்பு வழங்குவர். இக்குறிப்புக்கு விளக்கம் எழுதும் **வை. மு. கோ.** 'பயிலாமையாவது, அவ்விழிந்தார் முதலியோர் உயர்ந்த பொருளிற் பழகி இராமையை' என்பர். 'சொல்லுவான் தரம் நோக்காதே; பொருட்டிறமே நோக்கிக் கொள்க' என்ற ஆசிரியர் கருத்துக்கு முரணாதலைக் காண்க. தாழ்ந்தார், உயர்ந்த பொருளில் இயற்கையிற் பழகியிரார் எனின், 'செயற்கையான் ஒரொருக்கால் பழகி. இருக்கவும் கூடும் என்பதும் உயர்ந்தார் அங்ஙனமே இழிந்த பொருளிற் பழகியிருக்கவும் கூடும்' எனவும் பெறப்பட்டுச் சொல்வான் தரநோக்காது பொருட்பயன் அல்லது அதன் நிலைத்த தன்மை நோக்கி மெய்ப் பொருள்என்று கொள்க என்பதே குறட்கருத்தொடு மாறாகக் கூடும்.

கோ. வ. 'இழிந்தார் வாய் உயர்ந்த பொருளையும், உயர்ந்தார் வாய் இழிந்த பொருளையும், பகைவர் வாய் உறுதிப்பொருளையும் நட்டார் வாய் கெடு பொருளையும் பழகியிராது என்பர். இது முடிவாயின் குணங்கள் மாறிவருதலான் ஓரோவழி யார் வாயினும் எதுவும் வரலாம் என்ற கருத்தமைந்த **பரிமேலழகர்** விளக்கத்தோடு கூடிய யார்யார் வாய்க்கேட்பினும்' என்ற ஆசிரிய வசனம் பயனற்றுப்போம்.

இத்தனை வாதமும் விளக்கமும் 'வாய் என்பது வேண்டாக் கூற்றாயினன்றே'! அவர் அப்பொருளின்கட் பயிலாமை உணரநின்றது' என்று வேண்டியது முடிக்க வந்ததாகக் கூறலமையும். ஓரிய

கருத்தைக் கற்று வல்லார்வாய்க்கேட்டுணர்க எனின், வாய் என்பது இதனைப் பயின்றிரார் என்று கூறலமையுமா? அது போன்றதே இதுவும் என்க.

ஆதலால், 'வழுக்கியும் வாயாற்சொலல்' என்றவிடத்துப் பரிமேல ழகர் வாயென வேண்டாது கூறினார்; தீய சொற்கள் பயிலா என அறிவித்தற்பொருட்டு' என எழுதினர். ஆண்டு 'சொலல்' எனவே சொல்லுதற்சொலல்' என்பதற்கு அமைதியிருத்தல் மிக ஏற்புடையது.

ஈண்டு 'யார்யார் வாய்க்கேட்பினும்' என்புழிக் கேட்டல், வாயின் தொழிலன்று என்க. கேட்பினும் எனவே சொல் என்பது பெறப்படு மாலோ எனின் ஆண்டும் வாய் என்பது ஒரு பெயராய்ச் சொல் என்ற பொருளைக் காட்டுமேயன்றி வேண்டாக் கூற்றாகாது.

ஆதலான் இக்குறிப்பு பரிமேலழகருடையதாக இருக்க இயலாது. முன்னும் பின்னும் உள்ள உரையைப் பயின்றார். அவ்வெண்ணத்தால் இணைத்ததாக இருத்தல் கூடும். படிப்போரும் பாடஞ்சொல்வோரும் ஏட்டில் எழுதிவைக்கும் மரபும் உண்டு. அங்ஙனம் இணைந்ததாதல் வேண்டும். எல்லப்ப நாவலர் வீட்டு ஏட்டில் 'யார்யார் வாய்' என்றது அவர் அப்பொருளின்கட் பயிலாமை உணர நின்றது' என்று காணப்படு கிறது. இப்பாடம் பொருளின் உண்மை யாண்டும் யார் வாயினும் ஒன்றாகவே இருக்க வேண்டி இருக்கப் பலர் பலவாறு சொல்லக் காரணம் யாதோ எனின், அவர் அப்பொருளின்கட் பயிலாமை உணர நின்றது என்பது விடையாய் மிக இயைபுடைத்தாதலைச் சிந்திக்க. ஆகவே 'யார்யார் வாய்' என்பதை ஏழனுருபாகக் கொள்ளின் இத்தகைய இடர்ப்பாடு இல்லையாம் என்க. வாய் என்பதை வேண்டா கூற்றாகக் கருதி நயங் கூற வந்ததின் விளைவு இது.

மெய்யுணர்தலில் எப்பொருள் எத்தன்மைத்தாயினும் என்ற குறளாற் பொருளின் தன்மை நோக்காது அதன் நிலைத்த தன்மையை அறிந்து இதுவே மெய்ப்பொருள் என்று துணிக என ஆசிரியர் ஈண்டுச் சொல்லுவான் தரம் நோக்காது மெய்ப்பொருளை உணர்க என்கிறார்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்:

கள்ளி யகிலும் கரும்காக்கைச் சொல்லும்போல்
எள்ளற்க யார்வாயின் நல்லுரையைத்—தெள்ளிதின்
ஆர்க்கும் அருவி மலைநாட நாய்கொண்டால்
பார்ப்பாரும் தின்பர் உடும்பு. —பழ. நா.,

மெய்ப்பொருள் காண்பதறிவு:

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு. —குறள். 355.

உள்பொருள் இதுவென உணர்தல் ஞானமாம் —சீவக., 2845.

ஒருபுடை.:

ஏதிலார் யாதும் புகல இறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு நேர்நின்று
காக்கை வெளிதென்பார் என்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரும் உண்டு. —நீதிநெறி. 33.

முற்றும்:

இழிந்தவன் உயர்ந்த தொன்றை இயம்பினும் உயர்ந்தோன் வாயின்
இழிந்ததொன் றுறினும் உள்ள இயல்பறிந் தோம்பி நீக்கிப்
பொழிந்தெனப் பிறர்தாம் கூறும் புலப்படாப் பொருளும் தெள்ளி
வழிந்தெனத் தெளியக் கேட்போர் மனங்கொளப் புகறல் வேண்டும்.
—விநா. அரசி. 49

எவ்வுரை எவர்சொற் றாலும் தன்னறி வேற நோக்கி
அவ்வுரை உண்மை அன்மை அறிபவர் அறிவுளோ ராம். —
நீயும்கண்டு நுமரொடும் எண்ணி
அறிவறிந் தளவல் வேண்டும். —நற்., 32: 5—6

ஓ) மேற்கோள் பகுதி :

சுவாமி: 'அதிமதி நுட்பமோடு அதிகலை கற்பினும் விதியது வசத்தால் விதிவிலக்கு அயர்ப்பார்' என்பதற்கு மேற்கோள்.
(இ: கொ. 6.)

43. 4. எண்பொருள வாகச் செலச்சொல்லித்
தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. (சஉச)

உரைப்பகுதி:

அ) மணக்.: அறிதற்கரிய பொருளவாகிய சொற்களைத் தெளிய பொருளாம்படி பிறரிசையச் சொல்லி, பிறர் சொல்லுஞ் சொற்களின் நுண்ணிய வாகிய பொருள்களை அவர் சொல்லாமல் தானே காண்பது அறிவாவது எ—று.

இது சொற்பொருள் காண்டல் அறிவு என்பது.

ஆ) *பரிதி.:* நல்லோர் செவியும் மனமும் பொருந்த எளிதாகச் சொல்லித் தாம் பெரியோர் வாய்ச்சொற் பொருளைக் காண்பது அறிவு எ—று.

இ) *பரிப.:* அறிதற்கு அரிய பொருளவாகிய சொற்களை எளிய பொருள ஆம்படி பிறர் இயையச் சொல்லிப் பிறர் சொல்லும் சொற்களின் நுண்ணியதாய பொருளை அவர் சொல்லுமாற்றானே காண்பது அறிவாவது எ—று.

இது சொற்பொருள் காண்டல் அறிவு என்றது.

ஈ) *காளி.:* தாம் சொல்லும் சொல்லின் நுண்மையை மற்று எப்பெற்றியோரும் நெஞ்சினால் தேர்ந்து உணரும் பொருளாகவும் சொல்லி, மற்று அதுவேயும் அன்றி, அதனைக் கேட்போர் செவிக்குப் பெரிதும் இனிதாகவும் சொல்லிப் பின்னும் தாம் பிறர் வாய்ச் சொற்களில் தீர்ந்த நுண்ணிய பொருளையும் அங்ஙனம் காண வல்லது யாது? மற்று அதுவே அறிவாவது எ—று.

உ) *பரிமேல்.:* தான் சொல்லும் சொற்களை அரிய பொருள வாயினும் கேட்பார்க்கு எளிய பொருளவாமாறு மனங்கொளச்[1] சொல்லி, பிறர் வாய்க் கேட்கும் சொற்களின் நுண்ணியபொருள் காண அரிதாயினும் அதனைக்[2] காணவல்லது அறிவு.

உடையவன் தொழில் அறிவின்மேல் ஏற்றப்பட்டது[3] சொல்லுவன வழுவின்றி இனிது விளங்கச் சொல்லுக என்பார் சொன்மேல்வைத்தும், கேட்பன வழுவினும் இனிது விளங்காவாயினும் பயனைக் கொண் டொழிக என்பார் பொருள்மேல்வைத்தும் கூறினார்.

காரி.: எண்மை — எளிமை. செல்லச்செல்ல மனம் கொளச் சொல்லல் காண்பவன் அறிவுடையன் என்னாமையால் உடை யவன் தொழில் அறிவின்மேல் ஏற்றப்பட்டது.

ஊ) *கவிராசர்.:* தான் சொல்லப்படா நின்ற பொருள்கள் அரிய வாயினும் அவற்றை எளிய பொருள் போலக் கேட்போர்கள் மனங்

1. மனங்கொள—மனத்திற் பதியும் வண்ணம். 2. அதனை என்றது அந்த நுண் பொருளை. 3. அறிவுடையவனது செயலாகிய சொல்லுதல் காணுதல் தொழில்களை அறிவின்மேல் ஏற்றிக் காண்பதறிவு என்றார். இது குணியின் வினையைக் குணத்தின்மேல் ஏற்றிக் கூறிய உபசார வழக்கு.

கொள்ளச் சொல்லி, பிறர்வாயாற் கேட்கப் படா நின்ற சொற்களின் நுட்பாநுட்பந் தெரிந்து, பொருள்களைக் காணவல்லதே அறிவு.

ஏ) பழைய 2: தான் சொல்லும் சொற்களான், அரிய பொருள வாயினுங் கேட்பார்க்கு எளிய பொருளவாய் மனங்கொள்ளச் சொல்லி, பிறர்வாய்க் கேட்கும் சொற்களின் நுண்பொருள் காணவரிதாயினும் அதனைக் காணவல்லதே அறிவாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் தரும் 'இது சொற்பொருள் காண்டல் அறிவு' என்ற விளக்கம் இக்குறளுக்குப் போதுமானதன்று; பிறர்சொல்லின் நுட்பங் காண்டலும் தன்சொல்லின் நுட்பத்தைக் காட்டுதலுமாகிய இரண்டுமே அறிவு என்க.

'செல' 'பிறர் இசைய' மணக்.: 'செவியும் மனமும் பொருந்த' பரிதி.: 'எப்பெற்றியோரும் நெஞ்சில் தேர்ந்துணரும் பொருளாக' காளி.: 'மனங்கொள்ள' பரிமேல்., கவிராசர், பழைய 2,

'எண்பொருள'—'தெளியப்பொருளாம்படி' மணக்.: 'எளிதாக' பரிதி.; 'நெஞ்சினால் தேர்ந்துணரும் பொருளாக' காளி.: 'கேட்போர்க்கு எளிய பொருளவாமாறு' பரிமேல்., கவிராசர், பழைய 2. 'எளிய பொருளாக அவர்க்குச் சொல்லி' தேவநேயர், ஜி. வரத.; இராமலிங்கனார் முதலிய அனைவரும் ஒத்த கருத்தினரே யாவர். இத்தகைய பொருள்களோடு, கேட்டவர் பின்னர்ப் பலகாலும் எண்ணியெண்ணிப் பார்த்து மகிழக் கூடிய பொருளாக எனினும் ஆம்.

நுண்பொருள் — சொல் எளியவாயினும் நுணுகி ஆராய்ந்தால் நல்லது. அழுந்திக் கண்டாலல்லது விளங்காத நுண்ணிய பொருள். எண்பொருள்—அங்ஙனம் நுணுகியிருப்பினும் தம் வாழ்விற் பலமுறை எதிர்ப்படுவதால் எண்ணிப் பார்க்கக்கூடிய பொருள் 'கொள்வது நுண்பொருள்; கொடுப்பது எண்பொருள்' என்ற ஆசிரியர் கருத்து. கொடுப்பவன் எண்ணிப் பார்க்கக்கூடிய பொருளாக அளித்தால் சிறந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியவாறு. 'செலச்சொல்லி' என்பதும் பொருணிறைந்த சொற்றொடர். கேட்பவன் செருக்காலும் செல்வத்தானும் அதிகாரத்தானும் சொல்லுவனவற்றை மனம் பொருந்த ஏற்க மாட்டான். இத்தனை தடைகளையும் மீறி மனங் கொள்ளச் சொல்லுதல் வேண்டும் என்பதாம்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

நுண்பொருள் காண்பது:

நுண்பொருள் அன்று நாலவர்முன் கேட்க
—சம்பந்தர், ஆமாத்தூர்., 6

ஒருபுடை.:

வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள். —குறள்., 646.:

தனக்கு அனுபவமில்லாத பொருளைப் பற்றித் தன் கருத்து இன்னது என்று வெளியிடலாகாது. பிறர் கருத்தை நன்றாக உணர்ந்து அவர் எளிதில் விளங்கிக் கொள்ளுமாறு விடை கூறுதல் வேண்டும். —சுக்கிர. அத். 3. சு. 30.

ஒ) மேற்கோள் பகுதி:

நச்.: அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கத்தில் ஓதுவித்தலுக்கு மேற்கோள். (தொல். பொருள். 75)

43. 5. உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும் கூம்பலும் இல்ல தறிவு. (சஉடு)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒருவனுக்கு ஒள்ளிமை[1]யாவது உலகத்தோடு பொருந்தினது; அதனை நீர்ப் பூப்போல மலர்தலுங் குவிதலும் இன்றி, ஒரு தன்மையாகச் செலுத்துதல் அறிவு எ—று.

இஃது உயர்ந்தாரோடு நட்புப் பண்ணுதலும் அறிவு என்றது.

ஆ) பரிதி.: உலகமாகிய பெரியோர்க்குப் பொருந்திய ஒழுக்கத்தில் குறையாமல் ஒரு தகைமையாக நிற்பது அறிவு எ—று.

இ) பரிப்.: ஒருவனுக்கு ஒள்ளிமையாவது உலகத்தோடு பொருந்தினது. அதனை நீர்ப்பூப் போல மலர்தலும் குவிதலும் இன்றி ஒரு தன்மையாகச் செலுத்தல் அறிவாவது எ—று.

இஃது உயர்ந்தாரோடு நட்புப் பண்ணுதலும் அறிவு என்றது.

ஈ) காளி.: உலகத்தாருள் முனிவராகிய பெரியோர் மறை முதலிய

1. ஒள்ளிமை—மேன்மை; 2. ஒருநிலையனாவது—ஒரு தன்மையனாவது.

நூல்கள் பலவற்றானும் தெரிந்துகொண்டதாய ஒட்பம் யாதொன்று, மற்று அதுவே அறிவாவது எ—று.

தழீஇயது என்பது பெரியோர் தழுவியது. ஒட்பம் என்பது ஒள்ளிமை.

உ) *பரிமேல்.*: உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமாம். அந்நட்பின்கண் முன் மலர்தலும் பின் கூம்புதலுமின்றி ஒரு நிலையனாவது[3] அறிவாம்.

'தழீஇயது' 'இல்லது' என்பன அவ்வத்தொழின்மேல் நின்றன.[3] உலகம் என்பது ஈண்டு உயர்ந்தோரை.[4] அவரோடு கயப்பூப்[5] போல வேறுபடாது கோட்டுப்பூப்[6] போல ஒருநிலையே நட்பாயினான் எல்லா இன்பமும் எய்துமாகலின், அதனை அறிவு என்றார். காரியங்கள் காரணங்களாக உபசரிக்கப்பட்டன.[7] இதனைச் செல்வத்தின் மலர்தலும் நல்குர்வில் கூம்பலும் இல்லது என்று உரைப்பாரும் உளர்.

ஊ) *கவிராசர்*: ஒருவனுக்கு உலகத்தை நட்பாக்குவது அறிவே; அந்நட்பின்கண் முன் மலர்தலும் பின் சுருங்குதலுமின்றி ஒரு நிலையே யாம், நல்லறிவை உடைத்தானவர்கட்கு எ—று.

ஏ) *பழைய 2*: உலகத்தைத் தழுவி நட்பாக்குவது ஒருவனுக்கு அழகாம். அந்த நட்பினிடத்து மலர்தலும் குவிதலும் இன்றி ஒரு நிலையாய் நிற்பது அறிவு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஒருவனுக்கு ஒள்ளிமை உலகத்தொடு பொருந்தினது அதனை ஒருதன்மைத்தாய்ச் செலுத்துவது அறிவு' என்ற *மணக்குடவர்* உரை 'ஒள்ளிமை உலகத்தோடொத்துப்போதல். அங்ஙனஞ் செல்ல இயக்குவது அறிவு' என்னுங் கருத்தினது. அதனையடுத்துள்ள

---

3. தழீஇயது என்பது வினைமுற்றுப்பொருளை விட்டுத் தழுவுதல் எனவும், இல்லது என்பது குறிப்பு முற்றுப்பொருளை விட்டு இல்லையாதல் எனவும் தொழிற் பெயர்ப் பொருளில் வந்தன.
4. 'அவனி இசை யாகாயம் உயர்ந்தோர், குலமிவை யுலகெனக் கூறலாகும்' என்பது பிங்கல நிகண்டு ஆகலின் உலகம்—உயர்ந்தோர் மேலதாயிற்று.
5. கயப்பூ—குள முதலியவற்றில் உண்டாகும் நீர்ப்பூக்கள்.
6. கோட்டுப்பூ—மரஞ்செடி கொடிகளில் தோன்றும் பூ.
7. காரியங்கள் காரணங்களாக உபசரிக்கப்பட்டமைக்குக் காரணம் அவையிரண்டுக்கும் உள்ள ஒற்றுமை பற்றியேயாம். ஈண்டு ஒட்பம் காரணமாயிருந்து உலகத்தை நட்பாக்குகிறது. அங்ஙனமே அறிவு காரணமாயிருந்து ஒரு நிலைத்தாந் தன்மையை உதவுகிறது. அங்ஙனமாகவும் தழீஇயது ஒட்பம், இல்லதறிவு எனக் கூறப்பட்டுள்ளன இவை உபசாரம் என்றார்.

மணக்., பரிப்., இருவரில் ஒருவர் விளக்கம் 'உயர்ந்தாரோடு நட்புப் பண்ணுதல் அறிவு' என்கிறது. உரை உலகத்தோடு ஒத்துப்போதலை ஒட்பம் என்ன, கருத்து பெரியோர் நட்பு என்றது உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டாதலைக் கருதிப் போலும்.

பரிதியுரை, 'உலகமே பெரியோர்கள்; அவர்கள் ஒழுக்கங் குன்றாமல் ஒரு தன்மையாய் இருப்பது அறிவு' என்கிறது. இது கருத்தாய்ப் பெரியோர் இலக்கணத்தை அறிவித்ததேயன்றி குறட்போக்கை முற்றுந்தழுவியதாக இல்லை. காளிங்கருரை 'முனிவர்கள் வேதங்களால் அறிந்தவை ஒட்பம்; அதுவே அறிவு' என்கிறது. உலகம்—உயர்ந்தோர் எனக்கொண்டு, தழுவுதல்—வேத வேதாந்தங்களை அறிதல் என்பது ஈண்டு இயைபிலது.

பரிமேலழகர் உரை 'உலகத்தை(உயர்ந்தோரை)நட்பாக்குவது ஒட்பம். அந்நட்பை ஒரு படித்தாக வைத்திருப்பது அறிவு' என்கிறது. கவிராசர், பழைய உரை 2, இரண்டும் பரிமேலழகருரையின் மாற்றுருவங்களேயாம். பின்னுரைகளில், தேவநேயர், சாமி. சிதம்பரனார், இவர்களும் இக்கருத்தினரே: முதன்முதல் மணக்குடவர் உயர்ந்தாரோடு நட்புச்செய்தல் என்றதைப் பற்றி அனைவரும் வழி வழியாகக் கூறிவருகின்றனர். இராம. 'அறிவுடைமை திடபுத்தி. அது சமூகநலம் உலகச்சூழ்நிலைக்குத் தக விட்டுக்கொடுத்து நடந்து கொண்டாலும், திடபுத்தியாகிய இயற்கையறிவு மாறிவிடாது' என்பது அவர் உரை, இது உலகப்பன்மையோடு ஒத்துப்போதலை யுணர்த்துவது.

வரத. உரை 'பெரியோர் வாழ்க்கையைப் பார்த்து அதன்படி தம் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதும், அப்போது மகிழ்ச்சியான் மைந்துறாமலும், தாழ்ச்சியால் துன்புறாமலும் இருப்பதே அறிவு' என்கிறது. இக்குறள் அறிவைப் பற்றி யறிவிக்கிறதே யன்றி அதனைக் கொண்டு வாழ்வது எப்படி என்பதை விளக்க வந்திலது.

ஈ. சபாபதி, 'உயர்ந்தோரை நட்பாக்குவது அறிவுடைமை; அந்நட்பில் விருப்பு வெறுப்பில்லாததே அறிவும்' என்கிறது.

சி. இ. உரை, 'உலக நன்மையைப் பொருந்திச் செல்வது அறிவு; இன்பத்தில் மகிழ்ந்தும், துன்பத்தில் சோர்ந்தும் கடமையைக் கைவிடுதல் அறிவன்று; என்கின்றது.

குழந்தையுரை, 'உயர்ந்தோரை நட்பாக்குவது அறிவுடைமை;

அது குவிதலும் விரிதலுமின்றி ஒரு தன்மையாயிருக்க வேண்டும்' என்கிறது.

கா. சு. உரை, 'உயர்ந்தோரை நட்பாக்கிக் கொள்வது ஒள்ளிய அறிவு; ஒரு நிலையிலிருப்பது அறிவுடைமைக்குச் சிறந்த அடையாளம்' என்பர்.

மு. ரா. கந்., 'உயர்ந்தோரைத் தழுவி நடப்பது புகழ்; அங்ஙனம் நடக்கும் போது மகிழ்தலும் சினத்தலுமின்றி இருப்பது அறிவு' என்கிறது. இவ்வுரை ஒட்பம், அறிவு இரண்டிற்கும் ஒரு பொருள் தர விரும்பாமல் ஒட்பம்—புகழ் என்றது.

மயிலை சிவ., 'ஒட்பம் — நுண்ணறிவு உலகத்தார் தழுவுவது நுண்ணறிவையே; அது செல்வக்காலை மலர்ந்தும் அல்லற் காலை குவிந்தும் இல்லாமல் என்றும் ஒருபடித்தாதல் வேண்டும்.' இவ்வுரை தழீஇயது என்ற இறந்தகால வினையாலணையும் பெயரைத் தழுவுவது என எதிர்காலமாக்கலின் சிந்திக்கத்தக்கது.

ஒட்பம்—புகழ், ஒழுக்கம் என்ற பொருள் இலக்கிய ஆட்சியிலும் அகராதியிலும் இல்லாதது ஆதலால் அவ்வுரைகள் பொருத்தமற்றன.

அதிகாரம் அறிவுடைமை. கல்வி கல்லாமை கேள்விகளால் உணர்த்தியது செயற்கை அறிவை. அதாவது கற்றும் கேட்டும் பெறும் அறிவை. அறிவுடைமையால் விளக்குவது இயல்பாக உயிரின் குணமான அறிவை. **கா. சு.** வும் 'இயற்கையாய் மனிதர்க்கு உளதாகிய பகுத்தறிவுடைமையே' எனல் காண்க. **பரிமேலழகரும்** அதிகார வரைவிலக்கணத்துள் 'கல்வி கேள்விகளானாய அறிவோடு உண்மையறிவினராதல்' எனல் காண்க. ஆதலால் இயற்கையும் செயற்கையுமாகிய அறிவு ஒளிபொருந்தியதாதல். அதுஉலக சமுதாயச் சூழ்நிலைகட்கு ஏற்ப விட்டுக்கொடுத்து நடந்து கொள்ளுதலேயாம். ஒப்புரவால் உலக நடையை அறிந்து செய்தலை இல்வாழ்வானுக்குக் கூறிய ஆசிரியர் இதனால் உலக நடையை அறிதலே அறிவு என்கிறார்.

உயர்ந்தோர் நட்பைப் பின்னர் **பெரியாரைத் துணைக்கோடல், நட்பு, நட்பாராய்தல், தீ நட்பு** முதலிய பல அதிகாரங்களாற் கூறுகின்றார், ஆதலின் இங்கு நட்புக்கோடலை இணைத்தல் இயலாது. பொதுவாக உலகம் உயர்ந்தோர் தாழ்ந்தோர் ஆகிய அனைவரும் அடங்கியது. உலக நடையையறிதல் உலகப்போக்கிற்கு ஏற்ப விட்டுக் கொடுத்து ஒத்து நடத்தல். அடுத்த குறளாலும்

வள்ளுவர் அதனையே வலியுறுத்துதல் காண்க. மகாபாரதத்து, வீமன் பகாசுரனைக் கொன்று மீள, அதனைக் கண்ட ஏகசக்கர புரத்து மக்கள் அஞ்சி ஓடினர். வருபவன் வீமனே என்பதை அறிந்தும் தருமனும் தம்பியரும் உடனோடினர். வீமன் தமையனை அணுகிக் கேட்க, உலகம் போகிறவழியே நாமும் போகவேண்டும்; பின்னர்த் திருத்தவேண்டும் என்றாராம். அதுபோல 'எவ்வதுறைவது உலகம் அவ்வதுறைவது அறிவாதலின் உலகத்தை ஒத்துப்போதல்' என்பதே ஏற்புடையது. இங்கு உயர்ந்தோர்க்கும், அவருடன் நட்புக் கோடலுக்கும் கூறின் நட்பின் நாம் சுருங்கிலும் உயர்ந்தோர்கள் சுருங்கார்களாதலின் குவிதற்கு இடமேயின்று என்பதும் கண்டு. 'கூம்பலும் மலர்தலுமின்றி இருப்பது அறிவு; உலகத்தைத் தழுவி நடப்பது தான் நுண்ணறிவு; எனப்பொருள் கோடல் ஏற்புடையதாம். ஆய்க.

இராமலிங்கனார், சி. இலக்குவனார் உரைகளும் இக் கருத்தையே உணர்த்துவன.

ஓ) ஒப்புமைப்பகுதி :

முற்றும்:

கோட்டுப்பூப் போல மலர்ந்துபின் கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி—தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரு நட்பாரும் இல். —நாலடி., 215.

நலமிக உயர்ந்தோர் தன்மை நண்புறத் தழுவிக் கொள்க
நிலவிய கயத்துப் பூவை நிகர்தரா துயர்ந்த கோட்டின்
அலரென அவர்பால் நிற்க ஆக்கமிக் கடுத்த காலை
மலர்வதும் வறங்கூர் காலைக் கூம்பலும் ஒழிக மைந்தா —விநா. அரசி., 51.

ஒருபுடை

வேற்றுமை யுற்றிலர் —கம்ப ராமா., 1546

ஓ) மேற்கோள் பகுதி

யா.வி.: நாலசைச்சீர் வேண்டாமே நடாத்தும் உபாயம் கண்டா ராயினும் இவ்வாறு உரைப்பின் உணர்வினார்க்கன்றி அறிய ஒண்ணாது ஆதலானும், பழைய நூல்வழிநில்லாது தமது மதம்

படுத்துச் சொன்னார் என்னும் பாதுகாவலானும், 'உலகம்.....அறிவு' என்பவாகலானும் காக்கைபாடினியார் முதலாகிய ஒருசார் ஆசிரியர் மாப்பெரும் புலவர்தம் மதம்பற்றி நாலசைச்சீர் விரித்தோதினார் இந் நூலுடையார் எனக்கொள்க.

—(சூ., 95)

43. 6. எவ்வ துறைவ துலகம் உலகத்தோ(டு) அவ்வ துறைவ தறிவு. (சஉசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: யாதொருவாற்றால் ஒழுகுவது உலகம், அதனோடு கூடத் தானும் அவ்வாற்றான் ஒழுகுதல் அறிவாவது எ—று.

அறிவாவது எத்தன்மைத்து என்றார்க்கு, முற்படி உயர்ந்தாரோடு பொருந்த ஒழுகுதல் அறிவு என்றார்.

ஆ) பரிதி.: பெரியோர் எப்படி நடந்தார் அந்த ஒழுக்கத்திலே நடப்பது அறிவு எ—று.

இ) பரிப்.: யாதொரு வாற்றான் ஒழுகும் உலகம்; அவரொடு கூடத் தானும் அவ்வாற்றான் ஒழுகுதல் அறிவாவது எ—று.

அறிவு என்பது எத்தன்மைத்து என்றார்க்கு முற்பட உயர்ந்தாரோடு பொருந்த ஒழுகுதல் அறிவு என்று கூறப்பட்டது.

ஈ) காளி.: இவ்வுலகத்து நீதிப்பொருள் உடையராகிய நாற்பெருங் குலத்தோர்[1] எவ்வகையது ஆகிய நயத்[2] தொடு ஒழுகுவது மற்று அவ்வகையதாகவே என்னும் குறிக்கொண்டு நடப்பதே அறிவாவது எ—று.

உலகம் என்பது உயர்ந்தோர்

உ) பரிமேல்.: உலகம் யாதொருவாற்றான் ஒழுகுவதாயிற்று, அவ்வுலகத்தோடு மேவித்தானும் அவ்வாற்றான் ஒழுகுவது அரசனுக்கு அறிவு.

உலகத்தை எல்லாம் யான் நியமித்தலான்[3] என்னை நியமிப்பார் இல்லையெனக் கருதித் தான் நினைத்தவாறே ஒழுகின் பாவமும்

---

1. நாற்பெருங்குலத்தோர் — அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்.
2. நயம் — 'நயனீன்று நன்மை பயக்கும்' என்பது போல நடுவுநிலையாகிய நன்மை என்க.
3. நியமித்தல் — இஃது இன்னவாறு இயங்குக எனத் தன் விருப்பப்படிக் கட்டளை யிடுதல்.

பழியும் ஆகலான்; அவ்வாறு ஒழுகுதல் அறிவு அன்று என விலக்கிய வாறாயிற்று. இவை ஐந்துபாட்டானும் அதன் இலக்கணம் கூறப் பட்டது.

ஊ) *கவிராசர்*: உலகம் யாதொரு வழியாய் நடக்கிறதோ அந்தப் படியே நின்று தானும் நடத்திவருதல் அரசனுக்கு நல்ல அறிவு எ—று

ஏ) *பழைய 2*: உலகம் யாதொரு வகையாயினும், எவ்வாறாயிற்று, அவ்வாறு தான் மேவி, எவ்வாறு ஒழுகிற்று, அவ்வாறு தானும் ஒழுகுதல் அறிவு.

மல்லர்: எ—து எந்தப் பிரகாரமாக லோகம் நடக்கிறது லோகத்தோடே கூட அந்தப் பிரகாரமாக நடக்கிறது அரசனுக்கு அறிவு எ—று.

எல்லாத்துக்கு மாதிகாரணமாய லோகத்திலே சகலமும் நடப்பிக் கிற கடவுளுக்கு லோகம் எல்லாம் கீழ்ப்படிந்து நடக்குது அப்படிப் போல அரசன் தன் சீர்மையாளுகிற படியினாலே தனக்கு ஆண்டவ ரில்லை என்று நினையாமல், தன்னையுஞ் சகலமும் ஆளுகிற கடவுளுக்கு லோகங் கீழ்ப்படிகிறாப் போலே தானுங் கீழ்ப்படிந்து நடக் கிறது நீதியோட ஆட்சிப்பாரம் பண்ணிச் செல்வம் அடைகிறதுக்கும் பாவத்தைத் தவிர்த்து மோட்சத்தை அடைகிறதுக்கும் ஏதுவாய் இருக்கிறதினால் மத்தறிவுகளைப் பார்க்க பெரிய அறிவாய் இருக்கும் என்பது கருத்து.

எவ்வது—எப்படி; அவ்வது—அப்படி; உணர்தல்—ஒழுகுதல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவர், 'எவ்வதுறைவதுலகம்' என்ற குறளை இவ் வதிகாரத்து ஐந்தாம் குறளாகவும், 'உலகந்தழீஇயது' என்பதனை ஆறாவது குறளாகவும் கொண்டார்; ஆதலின், இக்குறளில் 'முற்பட உயர்ந்தாரோடு பொருந்த ஒழுகுதல் அறிவு என்றார் என்றும், 'உலகந்தழீஇயது' என்னுங் குறளில்உயர்ந்தாரோடு நட்புப் பண்ணு தலும் அறிவு என்றும் கூறினர். இவர் நோக்கம் உயர்ந்தாரோடு ஒத்துப்பழகுதலும், நட்புக்கோடலுமே அறிவாம் என்றாகிறது. 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பது உரை நூல்களில் கட்டுரைச் சுவைபட எழுந்த தொடரேயாம். உலகம் மக்கட்டொகுதி யைப் பொதுமையிற் குறித்தலைத் *தொல். சொல். நூற்பா. I சேனாவரையர்* உரையானும், நன்மக்களைச்சுட்டுதலை 'உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்' என்ற *திருமுருகாற்றுப்படை*

(வரி 124) யானும் அறியலாம். அன்றியும் இவ்வதிகாரத்து ஐந்தாங் *குறளின் அடிக்குறிப்பானும் அறிக. இச்சொல் யாண்டும் நன் மக்களையே உணர்த்துவதன்று. நன் மக்கள் என்றது ,உவப்ப' என்ற தகுதியாற் போந்த பொருளேயாகும். ஆதலால் உலகம் என்பது தொல்காப்பிய மரபுப்படி மக்கட்டொகுதியையே யுணர்த்துவதாகும்.

பரிதி., காளிங்கர் உரைகள் உலகம் — உயர்ந்தோர் என்றே சொல்கின்றன.

இராமலிங்கனார், 'பொதுமக்களின் போக்கை ஒட்டி நடப்பதே அறிவு' என்பர். **தேவநேயர், குழந்தை, கா. சு.** 'உலகம்—உயர்ந் தோர்' என்பர். 'சான்றோர்' என்பர் **ஜி. வரத.** உலகம் என்றே பொதுவகையிற் கூறுவது **சாமி. சிதம்., ஈ.சபாபதி**, 'உலகநன்மை' **சி. இ.** ஆகவே உயர்ந்தோர் என்ற பொருளே மிகுத்துக்காணப்படுவ— தாயினும் முன்னர்க் கூறிய காரணங்களால் ஈண்டுப் பொதுமைப் பொருள் கோடலே ஏற்புடையதாகலாம், எண்ணுக.

ஒ) ஒப்புமைப்பகுதி:.

எவ்வது உறைவது உலகம்:

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலசுற்றும்
கல்லார் அறிவிலா தார். **குறள்., 140.**

தேசத்தோ டொத்துவாழ் —**ஆத்தி., 61.**
நாடொப்ப செய். —**ஆத்தி., 66.**

முற்றும்:

எவ்வகை உலகத் துள்ளார் இயல்புடன் ஒழுகு கின்றார்
அவ்வகை ஒழுக்கில் நின்றே அழிவன வருமுன் காத்து —**விநா.**
அரசி., 50.

43.7. அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார் அஃதறி கல்லா தவர். (சூஉ)

உரைப்பகுதி:

அ)மணக்.: பிற்பயக்குமது அறிவார் அறிவுடையாராவர்; அதனை அறியாதவர் அறிவில்லாதவர் ஆவர் எ—று.

இது மேற் சொல்லுவன எல்லாம் தொகுத்துக் கூறிற்று.

அறிவுடைமை ஙஙங

ஆவது — இனி வருங்காரியம்; இலார் — இல்லாதவர்கள்; அஃது — அது; அறி — அடையாளம்; கல்லாதவர் — கல்லாதவர்கள்

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஆவது'— 'பிற்பயக்குமது' மணக்., பரிப்: 'தமக்கு ஆகும் காரியத்தையும் அறியார்' பரிதி.: 'தமக்கு இருமை யாக்கமும் ஆவதனை அறிந்து' காளி.; கவிராசர்.

காளிங்கர் உரை 'தமக்கு ஆவதனை' என்பதால் தன்னல ஆக்கம் கருதுகிறது, ஆதலால் ஏனையோர் உரை சிறந்தன. தன்னலங் கருதுதல் அறிவுடைமையாகாமையின் என்க.

முன்னறிதல் எண்ணியறிதலும், எண்ணாது அறிதலும் என இரு வகை. எண்ணியறிதல் பொதுவகைப்பட்ட அறிஞர் செயல்; எண்ணாது அறிதல் சித்தர் ஞானியர் இவர்கட்கு இறைவன் அறிந்த அறிவின் செயல் என்பர் தேவநேயர், இவ்விருவகை அறிதலையும் அரசனும் மற்றோரும் உடையராகலாம்.

மு. ரா. அரு., எண்ணியறிதலாவது காலமும் இடனுங்கொண்டு முன்னரே அறிந்து கொள்ளுதல் என்பர். கம்பர், 'உற்றது கொண்டு மேல் வந்துறுபொருள் உணர்வார்' என்பர். காலமும் இடனுங் கொண்டு அறிதலோடு நடந்த நிகழ்ச்சியைக் கொண்டு நடக்கப் போவதையும் கருதுவார் என வினையையும் கூட்டி எண்ணச் செய்கிறார் எனலாம்.

ஒ) மேற்கோள்பகுதி:

மயிலை.: அறிவு என்பது உடம்போடு கூடிய உயிர்க்குணம் என்பதற்கு மேற்கோள்.

—(நன்., 451).

43. 8. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில். (சஉஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: அஞ்சத் தகுவதனை அஞ்சாதொழிதல் ஒருவர்க்கு அறிவின்மை யாகும்; அஞ்சத்தகுவதனை அஞ்சுதல் அறிவுடையார் தொழில் எ—று.

மேல் அஞ்சாமை வேண்டும் என்றாராயினும் ஈண்டு அஞ்ச வேண்டுவனவற்றிற்கு அஞ்சுதல் அறிவு என்றார்.

ஆ) *பரிதி.*: பாவத்தின் வழிச் செல்லப் பயப்படும் அறிவுடைமை ஒருவற்கு ஏதொன்றும் கொடாமல் வஞ்சிக்கும் அறிவில்லாமையின் குணம் எ—று.

இ) *பரிப்.*: அஞ்சத் தகுவதனை அஞ்சாது ஒழிதல் ஒருவற்கு அறிவின்மையாவது. அஞ்சத் தகுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாவது எ—று.

மேல் அஞ்சாமை வேண்டுமென்றார்; ஆயினும் அஞ்சவேண்டுவன வற்றுக்கு அஞ்சுதல் அறிவு என்றார்.

ஈ) *காளி.*: கீழ்ச்சொன்ன இருவகை மரபின் புறத்தன எல்லாம் பெரிதும் அஞ்சத்தகும் அன்றே; மற்று அதனை அஞ்சாமை பேதைமை எனவே, அதன்கண் சேறலே அறியாமையாவது. இனி அஞ்சத் தகுவதனைப் பெரிதும் அஞ்சுவது அறிவார் தொழில் எனவே, அதனிற் செல்லாது மரபிற் சேறலே அறிவுடையாரது செய்தி எ—று.

உ) *பரிமேல்.*: அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதைமையாம், அவ் அஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம்.

பாவமும் பழியும் கேடும் முதலாக அஞ்சப்படுவன பலவாயினும், சாதி பற்றி அஞ்சுவது என்றார். அஞ்சாமை எண்ணாது செய்து நிற்றல். அஞ்சுதல் எண்ணித் தவிர்தல். அது காரியமன்றென்று இகழப்படாது என்பார் அறிவார் தொழில் என்றார். அஞ்சாமை இறைமாட்சியாகச் சொல்லப்பட்டமையின், ஈண்டு அஞ்சவேண்டும் இடம் கூறியவாறு. இவை இரண்டுபாட்டானும் அதனை. உடையார் இலக்கணம் கூறப் பட்டது.

ஊ) *கவிராசர்*: அஞ்சப்படுவதனை அஞ்சாதிருத்தல் பேதைமையாம்; அஞ்சத்தக்க காரியங்களுக்குப் பயந்து நடத்தல் அறிவுடையோர் தொழிலாம் எ— று

ஏ) *பழைய 2* : அஞ்சப்படுவதனை அஞ்சாமலிருப்பது பேதைமையாம் அஞ்சப்படுவதனை அஞ்சுவது அறிவார் தொழிலாம்.

மல்லர் : அஞ்சத்தக்கக் காரியத்தை அச்சமில்லாமல் செய்கிறது மிலேச்சத்தனம். அஞ்சத்தக்கக் காரியத்தை அஞ்சிச் செய்யாமலிருக் கிறது அறிவுள்ளவர்களுடைய லட்சணம் எ.று.

அறிவுள்ளவன் வருங்காரியத்தை அறிகிறதினாலே பாவம் அநியாயம் இதுமுதலான காரியங்களுக்குத் துன்பமும் நரகமும் வரும் என அறிந்து பாவத்தையும் அநியாயத்தையும் அஞ்சிச் செய்ய மாட்டான். மிலேச்சர் செய்கிற காரியத்தினால் என்ன வரும் என்று தெரியாததினாலேயும் எண்ணாததினாலேயும் பயமில்லாமல் பாவமும் அநியாயத்தையும் செய்கிறார்கள் என்பது கருத்து.

அறிவார்—அறிவுள்ளவர்கள்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அச்சமே கீழ்களதாசாரம' எனப் பொதுமையில் இழிப்பார் உளர் ஆதலால், மறுத்து அச்சத்திற்கு எல்லைக் கோடிடுவது இக்குறள். 'அஞ்சாமை ஈகை யறிவு ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தற்கு இயல்பு' என அஞ்சாமை வேந்தற்கு வேண்டும் என விதித்தார். ஈண்டு அச்சமும் வேண்டும். 'அஞ்சுதல் அறிவுடைமை என்கறார்' என்ற **மணக்., பரிப்.,** விளக்கம் மிகத் தகுதியானது.

காளிங்கர் வழங்கும் 'மரபின் புறத்தன எல்லாம் அஞ்சத்தகுவன. அதன் கட்சேறல் அறியாமை; அதனிற் செல்லாது மரபிற் செல்லுதல் அறிவார் செயல்' என்னுங் கருத்தே **பரிமேலழகரை** 'அஞ்சாமை எண்ணாது செய்துநிற்றல்; அஞ்சுதல்—எண்ணித் தவிர்தல்' என எழுதத் தூண்டியது எனலாம்.

பரிதி. ,உரைக் கருத்து விளங்கவில்லை. ஆயினும், 'அஞ்சுவ தஞ்சலாகிய அறிவார் தொழில் அஞ்சுவதஞ்சாமையாகிய பேதைமை யின் குணம்' எனக் கூட்டி 'அஞ்சும் அறிவுடைமை அஞ்சாமையாகிய அறிவில்லாமையின்' குணம்' என்ப் பொருள் கண்டு, 'அஞ்சாமையாகிய அறிவின்மையின் பட்டறிவே அஞ்சுவதஞ்சலாகிய அறிவுடைமை' என இரு தொடரையும் காரண காரியத் தொடர்களாகக் காட்டுகிறார் எனலாம். இதிலும் 'அஞ்சுவதஞ்சாமை உலோப குணம் அதாவது இவறன்மை' எனக் கருத்துக் கொள்கின்றனர். ஈண்டு இவறன்மைக் குள்ள இயைபு எம்மால் அறியக்கூடவில்லை. இவர் உரைப் போக்கு யாண்டும் இங்ஙனமிருத்தலின் விளங்கவில்லை' என ஒதுக்கி விடுவதும் பாவின் சொல்லமைப்பிற்கும் பொருந்தவில்லை என்று கூறி விடுவதும் எளிமை. ஆனால் **பரிதியாரும்** பழம்பெரும்புலவர்; ஏதோ நயங்காணும் உரையைத்தான் காண முயன்றிருப்பார் என்று இது போல நாமும் காண முயன்று தோற்பது கூட நலமாம் என்க.

தீமை செய்ய அஞ்சுவார் அறிஞர்; அஞ்சார் அறிவிலார் என்ற சாமி. சிதம். , உரை அரசற்கு மட்டுமன்றிப் பொதுமையின் நிற்பது. ஜி.வரத. இக்குறட்பாவின் கருத்தமைதி தீய செய்தற்கச்சமும், நல்லன செய்தற்கு அஞ்சாமையும் அறிவு; தீய செய்யத் துணிதலும் நல்லன செய்தற்கு அச்சமும் அறியாமை என அறிவின் செயலும் அறியாமையின் செயலும் இரண்டிரண்டாய்க் கூறப்பட்டன என்பர்.

மேலும், 'உலகம் அஞ்சுங்காரியங்களைத் துணிந்து செய்வது அறியாமை; அதனைக் கண்டு அஞ்சி நடப்பது அறிவு' என உரை காண்பர். இது தெளிவிலது. வள்ளுவனாரும், பரிமேலழகர் போன்ற பழைய ஊரையாசிரியர்களும், செயலான் வரும் பயன் பழியும் பாவமுமாயின் அஞ்சுக; புகழும் புண்ணியமும் நாடுகாவலுமாயின் அஞ்சாது செய்தலே அறிவு என்ற கருத்துடையர். அதனையே வரத. உரையுங் கருதுமாயின் ஏற்புடையது. வள்ளுவர் கூறும் அச்சம் 'புலியைக் கண்டஞ்சினன் என்பது தன்னுயிர்க்கிறுதி வருமாற்றைக் கண்டு அஞ்சிய அச்சம் அன்று என்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை:

அஞ்சுவ தஞ்சா அறனிலி —கலி., 42:263.

அஞ்சுவதஞ்சல்:

துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவதஞ்சி —புறநா., 182:4.7

அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி:

உறுவ துலகு வப்பச் செய்து — நாலடி., 74.

ஒருபுடை:

தவ்வெனும் பழிபா வங்கள் தபுதிஎய் தாமை அஞ்சிச்
செவ்விய நெறியில் நாளும் செலுத்துக பொறிகள் ஐந்தும் —

ஒ) மேற்கோள்பகுதி:

சுவாமி.: வருமொழியை நோக்காமலே தனக்குரிய ஒருமைப்பாலை விட்டு பன்மைப்பாலையே விளக்குதலால் அஃறிணைச்சாதிஒருமையாயிற்று என்பர்.

—(இ, கொ., 130).

43.9. எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை அதிர வருவதோர் நோய். (சஉசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: துன்பம் வருவதற்கு முன்பே வருமென்று நினைத்துக் காக்கும் அறிவையுடையார்க்கு நடுங்க வருவதொரு துன்பம் இல்லை எ—று,

இது முன்னை வினையால் வருந்துன்பமும் முற்பட்டுக் காக்கின், கடிதாக வாராது என்றது.

ஆ) பரிதி.: விதனம் [1] என்றறிந்து அந்த விதனம் வராமல் முன்னே பரிகரிப்பாற்கு [2] இல்லையாம்; அது எது? என்னில், தன் மனத்தை வருத்தஞ் செய்கிற விதனம் என்னும் நோய் எ—று.

இ) பரிப்.: துன்பம் வருவதற்கு முன்னே வரும் என்று நினைத்துக் காக்கும் அறிவை உடையார்க்கு நடுங்க வருவது ஒரு துன்பமும் இல்லை எ—று.

முன்னை வினையான் வரும் துன்பமும் முற்படக் காக்கின் கடிதாக வாராது என்பது.

ஈ) காளி.: மேல்வரும் காரியத்தின் நலமும்தீங்கும் சீர்தூக்கில், நல்லனவற்றின் வழி இடம் படுத்தியும் தீயனவற்றைத் தெறும்வழி நோக்கியும் இங்ஙனம் அவை அவை கருமத்தைப் பெற வந்த இடத்து மயங்குதல் அன்றியே, எதிரதாக் காத்து ஒழுகும் அறிவுடையோர்க்கு எஞ்ஞான்றும் இல்லை, தமது உள்ளம் துணுக்குற வருவது ஓர் இடம் எ—று.

உ) பரிமேல்.:வரக்கடவதாகிய அதனை முன்னறிந்து காக்கவல்ல அறிவினையுடையார்க்கு அவர் நடுங்க வருவதொரு துன்பமும் இல்லை.

நோய் என வருகின்றமையின், வாளா 'எதிரதா' என்றார். இதனால்; காக்கலாம் காலம் உணர்த்தப்பட்டது. காத்தல் அதன் காரணத்தை விலக்குதல். அவர்க்குத் துன்பமின்மை இதனால் கூறப்பட்டது.

---

1. விதனம் — துன்பம் 2. பரிகரிப்பாற்கு—நீக்குவார்க்கு

ஊ) கவிராசர்: தமக்கு வருந்துன்பங்களை முன்னே அறிந்து வாராதபடி காத்துக் கொள்ளவல்ல அறிவுடையவர்க்கு ஒரு காலத்தி லும் அவர் பயப்படத்தக்க துன்பம் வருவதில்லை எ—று.

ஏ) பழைய 2: வரக்கடவதாகிய அதனை முன்னறிந்து காக்கவல்ல அறிவினையுடையார்க்கு அவர் நடுங்க வருவதொரு துன்பம் இல்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'பழவினையால் வருந்துன்பங்களும் அவை வருவதற்குமுன் அறிந்து காக்கின் விரைந்து வாரா' என்ற மணக்குடவர் விளக்கம் 'ஊழையும் உப்பக்கங் காணலாம்' என்ற கருத்தாற் பிறந்தது. 'கடிதாக வாராது' என்பதன் கருத்து வராமலே கழியும் என்பதன்று; சிறிது சிறிதாகவோ — காலந்தாழ்த்தோ வந்து துன்பந்தோன்றாமல் வரும் என்பது. 'ஊழ்வினை ஊட்டாது கழியாததாதலான் உருத்து வாராது' என்பதாம்.

நோய் வரும் என்பதையும், அதன் காரணங்களையும் முன்னே யறிந்தமையானும், எதிரதாக்காக்க முற்பட்டதாலும் அந்நோய் அதிர்ச்சி செய்யாது. அமைதியாக விலக்கப்படும் அல்லது உண்டு கழிக்கப்படும் என்பது,

தேவநேயர், வருமுன் காத்தல், வந்தபின் காத்தல் வருங்காற் காத்தல் என்ற காவல்வகை மூன்றனுள் முன்னது இக்குறளால் கூறப்படுகிறது என்பர்.

ஜி. வரத. 'நோய்—உடற்றுன்பம்' என்பர். துன்ப இன்பங்களை உடலைக் கருவியாகக் கொண்டு நுகர்வன உயிரேயாதலால், உடல் துன்பம் என்று ஒன்றில்லையாயினும், உடல் கருவியாகக் கொண்டு நுகரப் படுதலாற் கூறப்பட்ட உபசார வழக்கு எனலாம்.

ஓ) ஒப்புமைப் பகுதி:

''வருவது சொன்னேன் படுவதுபடு.'' —பழ.,

ஓ) மேற்கோள்பகுதி:

தெய்வச்.: அதிர்வு என்ற உரிச்சொல் நடுக்கம் என்னும் பொருளில் வந்ததற்கு மேற்கோள். (தொல்.சொல்.,313)

நச்.: ஷி (தொல்.சொல்.316)

43.10. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார் என்னுடைய ரேனும் இலர். (சகூ0)

உரைப்பகுதி:

அ) மணக். : அறிவினையுடையார் யாதொன்றும் இல்லாராயினும், எல்லாமுடையர்; அறிவிலார் எல்லாப் பொருளும் உடையாராயினும் ஒரு பொருளும் இலர் எ-று.

இஃது அறிவுடைமை வேண்டும் என்றது.

ஆ) பரிதி. : அறிவுடையாற்கு அருமையானது ஒன்றும் இல்லை; எல்லாப் பதார்த்தமும் உடையர். அறிவில்லாற்கு ஏதுண்டு? ஒன்றும் இல்லை எ-று

இ) பரிப். : அறிவினை உடையார் யாதொன்றும் இலர் ஆயினும், எல்லாம் உடையர்; அறிவில்லாதார் எல்லாப் பொருளும் உடையர் ஆயினும் இலர் எ-று

ஆதலான் அறிவுடைமை வேண்டு மென்றது.

ஈ) காளி. : கற்றும் கேட்டும் கசடு அற்ற அறிவுடையோரை மற்று எல்லாம் உடையரென்று உணரப்படும் ஆகலான், மற்று அங்ஙனம் தெளிந்த அறிவிலாதார் வேறு யாதானும் உடையரேனும் யாதும் இலர் எ-று.

உ) பரிமேல். : அறிவுடையார் பிறிதொன்றும்[2] இலராயினும் எல்லாம் உடையராவர், அறிவிலாதார் எல்லாம் உடையராயினும் ஒன்றும் இலராவர்.

செல்வங்கள் எல்லாம் அறிவால் படைக்கவும், காக்கவும் படுதலின் அஃது உடையாரை எல்லாம் உடையார் என்றும், அவை எல்லாம் முன்னே அமைந்து கிடப்பினும், அழியாமல் காத்தற்கும், தெய்வத் தான்[3] அழிந்துழிப்படைத்தற்கும் கருவியுடையவர் அன்மையின் அஃது இல்லாதாரை என்னுடையரேனும் இலர் என்றும்கூறினார். 'என்னும் என்புழி உம்மை விகாரத்தால் தொக்கது. இதனான் அவரது உடைமையும் ஏனையாரது இன்மையும் கூறப்பட்டது.

காரி. : 'என்னும்' என்பதிலுள்ள உம்மை செய்யுள் தொடை காரணமாக

1. பதார்த்தம்—பொருள்:
2. பிறிதொன்றும்—அறிவு ஒழிய வேறு ஒன்றும்.
3. தெய்வத்தான்-ஊழ்வினை வசத்தால்

விகாரத்தால் தொக்கது 'எண்ணும்' பயன் தூக்காது யார்க்கும் வரையாது[4] என்பதும் இப்பொருட்டு.

ஊ) **கவிராசர்:** அறிவுண்டாயிருக்கப் பட்ட பேர்களுக்கு ஒன்றுமில்லாதிருந்தாலும் அவர் அந்த அறிவாலே சகலபதார்த்தமும் உண்டாயிருப்பராவர். அறிவு இல்லாத பேர்கள் வெகு தனங்களையுண்டாயிருந்தாலும் ஒன்றும் இல்லாத பேராவர் எ-று.

ஏ) **பழைய 2:** அறிவுடையார் பிறிதொன்றும் இலராயினும் எல்லாமுடையார்; அறிவில்லாதார் எல்லா முடையராயினும் ஒன்றுமில்லாராவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அறியாமை உய்க்கிற்பின் — பிறரறியாமல் செலுத்துவானாயின்' *மணக்.*, காதலித்த பொருளுக்கும் தனக்குமன்றிப் பிறர் எவர்க்கும் அறியாமல் என்ற கருத்தினர் இவர். ***பரிப்பெருமாள்*** நூல் என்றது அவர் கற்ற கல்வியை என்ற குறிப்பை அடியொற்றி, ஏதிலார்சித்தத்தினாலேயே அவனை வெல்லுதற்குபாயம் யாது எனச் சிந்தித்திருத்தலின் நூல் என்றது சிந்தனையை என்ற விளக்கந் தந்தனர். அதனுடன் காதல் என்றது மாதர்மேற் செல்லும் மனப் பற்று மட்டுமன்று; நேர்மையான முறையில் ஒன்றன்மேற் செலுத்தப் பெறும் ஆசையையும் பிறரறியின் தீங்காம் என்ற இவர் விளக்கம் மிகச் சிறந்தது. குற்றமாகாத காதலும், குற்றமாய்ப் பகைவர்க்கு உபகாரப் படுதலை விளக்குகிறது.

காளிங்கர் *பரிப்பெருமாளை* ஒட்டிக் காமத்தொடு படாத பிற பொருட் காதலும், பிறரறியின் குற்றமாய் இவன் கொலைக்குக் காரணமாதலுங் கூடும் என்பதனை விளக்கி, அறியின் பகைவர் விரும்பிய பொருளை எய்த இயலாத வண்ணம் தடுக்கவும் செய்யலாம்; ஆதலால், அறியாமற் செலுத்துக. காதலித்த பொருளை எய்தலாம். பகைவர் எண்ணமுந் தோற்கும் என விளக்கமுந் தருவர். இத்தனையும் குறளில் இல்லையாயினும் குறள் நிலைக்களனாக அனைத்தையும் பெறலாம் என்றறிவிப்பது அவர் உரை.

தேவநேயர், காமம் கள் முதலாகச் சூது நீங்கலாக உள்ள விருப்பத்தைப் பிறரறியாமல் அரண்மனைக்குள் நிறைவேற்றிக்

---

4. தண்டி.சூ.48 மேற்கோள்.

கொள்ளல் வேண்டும். வெளியிற் போக வேண்டுமாயின், மாறுவேடம் பூண்டு சென்று, மறைவின் திரும்புதல் வேண்டும் என அறியாமை உய்க்கிற்பின் என்பதற்கு விளக்கந் தருவர்.

சாமி.சிதம்., ஈ.சபாபதி, 'காதல காதல்' காதலித்த பொருள் கண்மேலுள்ள பற்றுள்ளத்தை என ஒரு தொடராக்காமல், காதலித்த பொருள்களையும், தமக்கு அவற்றின் மேல் உள்ள காதலையும் எனப் பிரிப்பர்.

ஜி.வரத., 'தான் நுகர விரும்பிய பொருளை அதற்குத் துணை யாவார் அறியாமல் பெற முயல்வானானால்' என்பர். ஏனையோர் கூறுவது போலத் துணையாவாரும் பிறரும் அறியாமல் என்ற உரையே சிறந்தது.

இராம., 'ஆசைப்பட்டதை எல்லாம் அடைய விரும்புகிற அறியாமை நீக்கி விட்டால்' எனப் புதிய பொருள் கொணருவர்.

பழைய உரை 2, 'காதலர் காதல்' எனப் பாடம் கொண்டு, அரசன் தான் காதல் வைத்த தேவியரிடத்துள்ள காதலை, காதல் வையாத தேவியர், தெரியாதபடி நுகரவல்லனாயின், எனப் புதிய வுரை தருவர். அரசன் இங்ஙனம் தன்னால் காதலிக்கப்படாத தேவி யரும் அறிய அவன், மாற்றாளிடம் நடந்து கொள்வது அவனுக்குள்ள கல்லாமையே காரணம் என விளக்கமும் தருவர். இவ்வுரை பலரை மணந்த மன்னன், நடந்து கொள்ளத் தெரியாமையால், பகைவர் வலையிற் சிக்குவன் என அவன் அங்ஙனம் சிக்காமைக்குபாயம் உணர்த்துகிறது.

வள்ளுவர் எல்லாப் பொருள்கண் மேலும் விருப்பத்தைப் பிறரறி யாமல் நடத்த வேண்டும் என்று உபாயம் உரைக்க உரையாசிரியர்கள் காமக் காதலையே எண்ணியும், பலமணங் கூடினாரைக் குறித்தும் திசை திருப்பிச் செல்கின்றனர். ஆதலால் குறளமைதிக் கேற்ற பொது வகையான மணக்குடவர் பரிமேலழகர் உரைகள் சிறந்தன. காதலை யுய்த்தலாவது நுகர்தல் என்று கருதிய பரிமேலழகர் போலவே தேவ நேயர், சி.இ. முதலிய பிற்காலத்தவர்களும் கருதுகின்றனர்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

அறிவுடையார் எல்லாம் உடையார்:
வித்துவான் தனவான்,

—பழ.,

முற்றும்:

நுண்ணுணர் வின்மை வறுமை அஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம் நாலடி., 251.:

அறிவினால் மாட்சிஒன் றில்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட தெவனாம் — பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணிஎல்லாம் ஆடையின் பின் —பழ.நா.,

ஒ) மேற்கோள் பகுதி

தக்க — உரை: 'பொன்மலையுடையவன் மகள் வெள்ளிமலையுடையவன் மகனைக் கும்பிடுதற்குக் காரணம் வேதவேள்வி தப்பாமையும் அறிவுடையார் .....இலர்' என்பதுமே. —(தா.,185)

பண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்பு முறை.

	அறிவற்றம்	சென்ற	எப்பொருள்	என்பொருள	உலகம்	எவ்வ	அறிவுடையார் ஆவ	அஞ்சுவ	எதிரதாக்	அறிவுடையார் எல்
மணக்.:	9	6	4	5	3	2	8	7	10	1
பரிதி.,	9	6	5	4	2	3	1	7	8	10
பரிப்.,	9	6	4	5	3	2	8	7	10	1
காளி	8	10	4	5	2	3	6	7	9	1
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

43வது அதிகாரம் 'அறிவுடைமை' முற்றிற்று.

44. குற்றங்கடிதல்

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: குற்றங்கடிதலாவது[1] காமக் குரோத லோப மோக மத மாற்சரியம் என்னும் ஆறு குற்றமுங் கடிந்து ஒழுகுதல். இஃது அறிவுடையாராயினும் குற்றங் கடிதல் வேண்டுமென்று இதன்பின் கூறப்பட்டது.

ஆ) பரிதி.: குற்றங் கடிதலாவது தன்னிடத்தில் அறிவுண்டாகில் குற்றம் வராமல் நடக்க வேணும் எ—று.

இ) பரிப்.: குற்றங் கடிதலாவது காமக் குரோத லோப மத மானம் உவகை என்னும் ஆறு குற்றமும் கடிந்து ஒழுகுதல் வேண்டும் என்று அதன்பிற் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட குற்றங்களாறனையும் அரசன், தன் கண் நிகழாமல் கடிதல். இவற்றை வடநூலார் பகைவர்க்கம்[2] என்ப. இவை குற்றம் என்று அறிதலும் கடிதலும் அறிவுடையார்க்கல்லது கூடாமையின், அதன்பின் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர்: அஃதாவது, குற்றங்களாறனையும் தன்னிடத்து வாராமற் காத்தல் ராசாவுக்குச் சிறப்பா மென்பது.

ஏ) பழைய 2: அஃதாவது, காமம், வெகுளி, மயக்க முதலாகிய குற்றங்களை விலக்கல்.

மல்லர்: அதாவது தன்னிடத்திலே கண்ட குற்றங்களைத் திரும்பி வராதபடிக்குக் கண்டிருக்கிறது.

---

1. இதன் தமிழ்ப் பெயரும் விளக்கமும் பரிமேலழகர் உரையிற் காண்க. இவற்றின் இயல்புகளையும் வேறுபாடுகளையும் இக்குறள் கோ.வ. அடிக்குறிப்பில் விரிவாகக் காணலாம்.
2. அரிஷட் வர்க்கம் என்ப' என்றும் பாடமுண்டு.

கா.சு.: அறுவகை மனக்குற்றங்களையும் நீக்குதல்.

இராம.: குற்றங்களை நீக்குவதும், விலக்குவதும், கண்டிப்பது மூன்றையுங் குறிப்பது குற்றங்கடிதல் என இவற்றிற்கு விளக்கமும் தருவர்.

தேவநேயர்: ஐம்பெருங்குற்றமும் அறுவகை உட்பகையும் ஆகிய குற்றங்களைக் கடிதல்.

ஜி.வரத.: குற்றங்களைப் போக்கிக் கொள்ளுதல் என்பர். தன்மாட்டு அமைந்த குற்றங்களைக் கடிதல்—குற்றங்களைப் போக்கிக் கொள்ளுதல்; பிறர்மாட்டுக் காணும் குற்றங்களைப் போக்குவதும் குற்றங் கடிதலாம். இவ்விருவகையும் உள்ளடக்கியே வள்ளுவர் குற்றங்கடிதல் என்றாராதலின் குற்றங்களைப் போக்கிக் கொள்ளுதல் ம்ட்டும்கடிதல் ஆகாது என்க.

சாமி.சிதம்.: குற்றங்களை நீக்குதல்.

குழந்தை.: குற்றம் — அறிவுடையோரால் குற்றமெனக் கடியப் பட்டவை, அவைகளைத் தன்கண் நிகழாமற் கடிதல் என்பர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிமேலழகர் குற்றங்கள் இவையென அறிதலும், அவற்றைக் கடிதலும் என்பர். இவை இரண்டுமே அவை தன்கண்ணவாயிருப்பதை அறிதலும், அவற்றைக் கடிதலும், பிறன்கண் அறிதலும், நீக்குதலும் என ஆக நான்காகும் என்பதை இதன் விளக்கமாகக் கொள்க.

உரைகளில் தன்னிடம் கடிதலும், பிறனிடம் கடிதலுமாகிய இரண்டுங் கூறுவன சிறந்த உரைகள். அங்ஙனமன்றித் தன்னிடம் கடிவன மட்டும் கூறுவது முற்றுங் கூறுவதாகாது என்பர். இவ்வதி காரம் அரசற்கும் மக்கட்குமாகப் பொதுமையிற் கூறப்படுவன ஆகலின்.

அறுவகைக் குற்றங்களின் விளக்கந் தரும்போது **மணக்குடவர்**, **பரிமேலழகர்** இருவரும் சிறிது வேறுபடுகின்றனர். **வள்ளுவர்** செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த, மானம், மாணாவுவகை என்பர். **பரிமேலழகர்** முறையே மதம், வெகுளி, மானம், காமம், உவகை, கடும்பற்றுள்ளம் என்பர். **மணக்குடவர்** இவற்றுள் மானம் உவகை யிரண்டையும் நீக்கி மோகம் மாற்சரியம் இரண்டையுங்

கூட்டுவர். இவற்றின் இயல்புகளும் பிறவும் தத்துவ நூல்களிற் காணத் தக்கனவாம்.

44.1. செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. (கஙக)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* பிறர்மனை நயத்தலும், வெகுளியும், சிறியார் செய்வன செய்தொழுகுதலும் இல்லாதார்க்கு ஆக்கம் தலையெடுக்கும் நீர்மையுடைத்து எ—று.

பிறர்மனை விரும்புதல் செருக்கினால் வருதலின், செருக்கு என்றார்.

ஆ) *பரிதி.:* கர்வமும் கோபமும் அற்பக் குணமும் இல்லாதார் பெருக்கம் அளவுபடாத பெருமையுடையது எ—று.

இ) *பரிப்.:* பிறர்மனை நயத்தலும் வெகுளியும் சிறியார் செய்வன செய்து ஒழுகலும் இல்லாதார் ஆக்கம் தலையெடுக்கும் நீர்மையை உடைத்து எ—று.

பிறர்மனை நயத்தல் செருக்கினால் வருதலின் செருக்கு என்றார். சினம் குரோதத்தால் வருதல். சிறியார் செய்வன செய்தலாவது காம நுகர்ச்சியும், சூதும், கள்ளும், வேட்டையும் முதலானவற்றின் மிக்கொழுகுதல். இதனை வடநூலார் இந்திரிய செயமின்மை என்பர். இவை பெரியாரால் கடியப்படுதலின் சிறுமை என்றார். இவை மூன்று குற்றமும் இல்லாதார் ஆக்கம் உடையார் என்றதனாலே,இவை உடையார்க்குக் கேடு வரும் என்றவாறாயிற்று. பிறர்மனை நயத்தலாற் கெட்டான் இராவணன். வெகுளியாற் கெட்டான் சனமேசயன். நுகர்ச்சியாற் கெட்டான் சச்சந்தன்.

ஈ) *காளி.:* செருக்கு முதலாகச் சொன்ன மூன்று குற்றமும், தமக்கு இல்லாதவாறு கடிந்தொழுகுவாரது ஆக்கமானது பெரிய மேம்பாட்டுத் தன்மையினை உடைத்து; எனவே மற்று ஏனை ஆக்கத்தை ஒன்றாகக் கருதார் உயர்ந்தோர் எ—று.

உ) *பரிமேல்.:* செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம்

---

1. குரோதம் — பகை.

—மதமும் வெகுளியும் காமமுமாகிய குற்றங்களில்லாத அரசரது செல்வம், பெருமித நீர்த்து—மேம்பாட்டு நீர்மையினையுடைத்து.

மதம் செல்வக்களிப்பு.[2] சிறியோர் செயலாகலின், அளவிறந்த காமம் சிறுமை எனப்பட்டது. இலவ நீதியல்லன செய்வித்தலான், இவற்றைக் கடிந்தார் செல்வம் நல்வழிப்பாடும் நிலைபேறும் உடைமையின் மதிப்புடைத்து என்பதாம். மிகுதிபற்றி இவை முற்கூறப்பட்டன.[3]

ஊ) *கவிராசர்:* மதமும் கோபமும் காமமுமாகிய குற்றங்களில்லாத அரசரது செல்வம், மெத்தவும் நல்ல பெருமையுடைய செல்வம் எ—று.

ஏ) *பழைய 2:* அரசர் மதமும், வெகுளியும் காமமுமாகிய குற்றங்களில்லாதவர் செல்வமே பெருமையாகிய குணத்தையுடைத்து.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'செருக்கு' — 'பிறன்மனை நயத்தல். இது செருக்கினால் விளைதலின் இதனைச் செருக்கென்றனர்' *மணக்.*; 'செருக்கு இறுமாப்பு முதலான மாற்றுப் பெயர்களால் வழங்குவர்' ஏனைய உரையாசிரியர்கள். 'செல்வச் செருக்கு' என்பர் *வரத.* செருக்கு செல்வத்தான் மட்டும் விளைவதன்று; கல்வி தறுகண் இசைமை கொடை என்ற நான்காலும் விளையும். செருக்கு பெருமிதமாய்ச் சுவைக்கப்பட்டு மெய்ப்பாடினைத் தோற்றுவிக்குமாயின் குற்றமாகாது. இலக்கியம் கூறும் சுவையும் அதன் விளைவாகிய மெய்ப்பாடும் அது; குற்றம் அன்று. பிறருக்குத் தீமை பயக்குமாயின் குற்றமாம்; ஆதலின், *சபாபதி முதலியார்* 'கல்விச் செருக்கு' என்றனர்.

'சினம்' — 'வெகுளி' *மணக்.*; 'குரோதத்தால் வருதல்' *பரிப்.*; 'வெகுளி' *கா.சு.*; 'சினம் இதனால் ஐம்பெருங் குழுவும் உறுதிச் சுற்றமும் போன்றவற்றின் அன்பையிழத்தல் உண்டாம்' என விளைவும் கூறுவர் *தேவநேயர்.* 'கோபம்' *இராம.*; 'செருக்கால் விளைவது சினம்' என்றும் கூறுவர் *வரத.*

'சிறுமை' — 'சிறியார் செய்வன செய்தொழுகுதல்' *மணக்.*; இதற்கு விளக்கம் தரும் *பரிப்பெருமாள்* 'காம நுகர்ச்சி முதல்

2. மதம்—பெற்றதைப் பெரிதாக மதிக்கும் மயிழ்ச்சி, அவை குலம், சிலம், தனம், ரூபம், யௌவனம் கல்வி, அரசியல், தவம் என்ற எண்வகையாலும் விளைதலின் எண் வகைப்படும். அவற்றுள் தனமதமே செல்வக்களிப்பு எனப்பட்டது.
3. 'மிகுதி பற்றி' ஒருவனைக் கெடுத்தலில் முற்பட்டும் பெரும்பாலானவுமாக இருத்தலின் முற் கூறப்பட்டதாம்.

வேட்டை யீறாக' உள்ளவற்றை அடக்குவர். காமநுகர்ச்சியை சிறுமையுட் கூறும் பரிப்பெருமாளுக்குப் பிறர்மனை நயத்தலைக் காம நுகர்ச்சியுள் ஒன்றாக கருதிற்றிலராதல் வேண்டும். 'அற்பக் குணம்' பரிதி.; 'இழிவான ஒழுக்கம்' கா.சு.; 'அற்பத்தனம்' இராம.; 'கழிகாமம்' தேவநேயர்; 'காமம்' பழைய 2, கவிராசர், சபாபதி; 'சிறுமைக் குணம்' குழந்தை; 'தாழ்ந்த செயல்களைச் செய்யும் இயல்பு' சி.இ.; 'சிற்றறிவு' மு.கோ.; 'கெட்ட குணம்' சாமி.சிதம்பரம். இங்ஙனம் சிறுமை பல நோக்கத்திற் பல பொருளில் ஆளப்படுவதைப் பார்க்கிறோம். எல்லாத் தீய குணங்களையும் உள்ளடக்கி நிற்கும் 'சிறியார் செய்வன செய்தொழுகுதல்' என்னும் மணக்குடவர் உரை சிறந்தது எனலாம். திருக்குறள் உரையுலக இரட்டையர் ஆகிய மணக்குடவர் பிறன் மனை நயத்தலைச் செருக்கு என பரிப்பெருமாள் காமநுகர்ச்சி என சிறுமையுள் அடக்குகிறார். இதனால், பிறர் மனை நயத்தல் காமநுகர்ச்சியாகாதா? காமநுகர்ச்சி சிறுமையாகாதா? என்றெல்லாம் எண்ணத்தோன்றிக் கருத்துக் குழப்பத்தை அளிக்கிறது,

'பெருக்கம்' — 'ஆக்கம்' மணக்.; காளி.; 'செல்வம்' பரிமேல்., இராம., முதலிய அனைவரும்.

மூன்று தீய குணங்களும் இல்லாதார் செல்வமே பெருமித 'நீர்த்து என்ற வள்ளுவர் வாய்மொழி 'பெருமிதம்' முற் கூறிய வண்ணம் மெய்ப்பாட்டுள் ஒன்றாய் கவிஞர் பெருமக்களாற் போற்றப்படுவதாய்க் கொடைக்குக் காரணமாயின் பெருமிதமாம். சிறுமைகட்கே ஏதுவாயின் குற்றமாம் என்ற உண்மையை உணர்த்துகிறது. ஆசிரியர் தொல்-காப்பியனார் செல்வமும் பெருமிதக் காரணங்களுள் சிறந்ததாகவும், அது தீங்கிற்கும் காரணமாதலான் அதனைச் செல்வம் என்னாது, கொடை என்று கூறினர் என்க. வள்ளுவர் செல்வத்தால் விளையுந் தீமை நோக்கிச் செருக்கு என்றனர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

'அரசன் காமம், வெகுளி, மோகம், உலோபம், மானம், மதம் என்னும் இவ்வறுவகைக் குற்றங்களையும் களைதல் வேண்டும்; இவை அங்ஙனம் களையப்படின் அவன் இன்பம் நுகர்பவனாவான்!

'காமத்தால் தண்டகன் என்னும் அரசனும், கோபத்தால் சனமே சயனும், மோகத்தால் வாதாபி என்னும் அசுரனும், உலோபத்தால் அயிலன் என்னும் இராச இருடியும், மானத்தால் புலத்திய

குமாரனாகிய இராவணனும். மதத்தினால் தம்மோற்பவன் என்னும் அரசனும் அழிவெய்தினர்'. —சுக்கிரநீதி அத்.,1 சு.143, 144,145.

44.2 இவறலும் மாண்பிறத்த மானமும் மாணா உவகையும் ஏதம் இறைக்கு. (சஙஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: உலோபமும், நன்மையைக் கடந்த மானமும் நன்மையைத் தாராமகிழ்ச்சியுமாகிய இம்மூன்றும் அரசர்க்குக் குற்றமாம் எ—று.

இது பொதுப்படக் கூறாது இறைக்கு என்றமையால் பெரும்பான்மையும் அரசர்க்கே வேண்டும் என்பது கூறிற்று.

ஆ) பரிதி.: குற்றம் என்றது தன் பேரிலே வராமல் அழகு உண்டாக நடப்பானாகில் இறையென்று சொல்லப்பட்ட சிவனும் இவனைப் பிரியமாக மனத்துளே கண்டிருப்பர் எ—று.

இ) பரிப்.: உலோபமும் நன்மையைக் கடந்த மானமும் நன்மையைத் தராத மகிழ்ச்சியும் இம்மூன்றும் குற்றம் ஆம் அரசர்க்கு எ—று.

பொதுப்படக் கூறாது அரசர்க்கு என்றமையாற் பெரும்பான்மையும் அரசர்க்கு வேண்டுமென்பது கருத்து. உலோபம் இரண்டு வகைத்து: தனக்கு முறைமையல்லாத பொருளை விரும்புதலும், உண்டான பொருளை விடாமையும்: அஃது ஆமாறு பின்பே கூறப்படும். மாண்பு இறந்த மானம் ஆவது தொடங்கின வினை நன்மை பயவாது ஆயினும் அதனை விடாதொழிதல். இதனாற் கெட்டான் துரியோதனன். மாணாவுவகையாவது எளியாரை அடர்க்கையாற் பிறந்ததொரு மகிழ்ச்சியால் வலியார் மாட்டும் செல்லுதல். இதனாற் கெட்டான் வாதாபி.

ஈ) காளி.: பலர்க்கும் உபகரிக்குமதை உபகரியாது உலோபித்தலும், மற்றும் நன்மையின் நீங்கிய நாணக்கேடும், தகாதவற்றைக் காதலித்தலும் என்னும் இவை மூன்றும் குற்றமே வேந்தர்க்கு எ—று.

இவறல் என்பது உலோபித்தல், இறத்தல் என்பது கடத்தல்.

உ) பரிமேல்.: வேண்டும்வழிப் பொருள் கொடாமையும், நன்மையின் நீங்கிய மானமும், அளவிறந்தவுவகையும் அரசனுக்குக் குற்றம்.

மாட்சியான மானத்தின்[1] நீக்குதற்கு மாண்பிறந்த மானம் என்றார்: அஃதாவது 'அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தை தாய் என்றிவரை' வணங்காமையும், முடிக்கப்படாதாயினும் கருதியது முடித்தே விடுதலும் முதலாயின. அளவிறந்த உவகை யாவது கழிகண்ணோட்டம்[2]. பிறருஞ் 'சினனேகாமம் கழிகண் ணோட்டம் என்றிவற்றை 'அறந்தெரி திகிரிக்கு வழியடையாகுந் தீது'[3] என்றார். இவை இரண்டு பாட்டானும் குற்றங்களாவன இவை எனக் கூறப்பட்டன.

ஊ) **கவிராசர்:** தன்னை வந்து கேட்ட பேர்களுக்குக் கொடாமல் இல்லை என்கிறதும், நல்ல காரியங்களை விட்டுவிடுகிற அபிமானமும், மட்டு மிதமில்லாத சந்தோஷமும் ஆகிய இந்த மூன்று குணமும் ராசாக்களுக்குக் குற்றம்.

ஏ) **பழைய 2:** பொருள் மேலாசையும் நன்மை நீங்கிய மானமும், அளவிறந்த மகிழ்ச்சியும் அரசனுக்குக் குற்றமாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இவறல்' — 'உலோபம்' **மணக்., வரத.;** 'உலோபம் இரண்டு வகையுள் உண்டான பொருளை விடாமை பற்றிப் பின் கூறப் படும் என்றலின் ஈண்டுக் கருதப்படும் உலோபம் தனக்கு முறைமை யல்லாத பொருளை விரும்புதலாம்' என்பர் **பரிப்பெருமாள்.** 'பல பேருக்கு உபகரிக்கக்கூடிய பொருளை உபகரியாது உலோபித்தல் **காளிங்கர்.** 'வேண்டும் வழிப்பொருள் கொடாமை' **பரிமேல்., ஈ.சபாபதி;** 'கேட்டவர்களுக்கு இல்லை என்றல்' **கவிராசர்;** 'பொருள் மேல் ஆசை' **பழைய 2;** 'செலவு செய்ய வேண்டிய இடத்தில் செலவிடாமை' **மு.ரா.அரு, தேவநேயர், சி.இல.;** 'அளவு கடந்த ஆசை' **இராம.;** 'ஈயாத்தன்மை' **குழந்தை;** 'அர சிறை தருதற்கு மக்கள் இவறலும்; அரசன் செல்வத்தை யிறுக்கிப் பிடித்தூதி தனதாக்கிக் கோடலும்' **மு.கோ,** 'கருமித்தனம்' **சாமி. சிதம்.** இவற்றுள் 'பற்றுள்ளம் என்னும் இவறன்மை' என **வள்ளுவரே** பொருள் விரித்தலின் இக்கருத்துடையனவே ஏற்புடையன.

'மாண்பு இறந்த மானம்' — 'நன்மையைக் கடந்த மானம்'

---

1. மாட்சியான மானம் —வணங்கத் தக்காரை வணங்குதலும், முடிக்கக் கூடாத செயலை முடிக்காது விடுதலும் முதலாயின.
2. கழிகண்ணோட்டம் — எல்லை மீறிய தாட்சண்ணியம்.
3. தருமத்தை வளர்க்கும் (ஆக்ஞாசக்கரத்துக்கு) ஆணையாகிய வழித்தடையான குற்றம் என்பது பொருள்.

மணக்.; 'தொடங்கிய வினை நன்மை பயவாதாயினும், அதனை விடா தொழிதல்' பரிப்.; 'நன்மை யினீங்கிய மானக்கேடு' காளி., பரிமேல்.; தம்முரைக்கு விளக்கந் தரும் பரிமேலழகர், 'தந்தை தாய் முதலிய வணங்கத் தக்கவர்களை வணங்கக் கூசுதல்' என்பர். 'நல்ல காரியங்களை விட்டு விடுகிற அபிமானம்' பழைய 2. 'நன்னெறியைக் கடந்த மானம்' கா.சு.; 'பெருந்தன்மையில்லாத நன்மதிப்பு' இராம.; 'தவறான தன்மானம்' தேவநேயர்; 'நல்ல பண்பாடு இல்லாத இழிகுணம்' ஜி.வரத.; 'நன்மையினீங்கிய மானம்' குழந்தை, ஈ.சபாபதி; 'பெருமையில்லாத மானவுணர்ச்சி' சாமி-சிதம்.; 'தன்னிலையிற்றாழாமை' என்பர் வள்ளுவர்.

பின்னது மானமாகிய தன்னிலையில் தாழாமை மன்னர்க்கும் மற்றோருக்கும் மிக இன்றியமையாதது. நன்மை கடந்த — பெருந் தன்மையை யிழந்த மானம் கூடாது என்றவாறு. பரிமேலழகர், காளிங்கர் போன்றார் பலர் பலவகையான் மாண்பு சிறந்த மானத்தை விளக்குவர். அத்தனையும் மாண்பிறந்த மானமே எனலாம்.

'மாணாவுவகை' — 'நன்மைதராத மகிழ்ச்சி மணக்.; எளியாரை அடக்கிய மகிழ்ச்சியால் வலியார் மேலும் செல்லுதல்' 'பரிப்.; 'தகாதனவற்றைக் காதலித்தல்' காளி.; 'அளவிறந்த உவகை' பரிமேல்.; 'மட்டுமிதமில்லாத சந்தோஷம்' கவிராசர், 'அளவிறந்த மகிழ்ச்சி' பழைய 2.

இவற்றுள் பரிப்பெருமாள் தரும் விளக்கம் வலியறிதலானும் உணர்த்தப்பெறுவதாதலானும் மாணா என்ற பண்படியாகப் பிறந்த எதிர்மறைப் பெயரெச்சம் உவகையை விசேடிக்கும் போது பண்பின்மை யையே குறிக்கும் ஆதலானும் மாட்சிமைப்படாத — நன்மைதராத என்ற பொருள்களே சிறந்தன. இங்ஙனமே பின்னோருரையுளும் காண்க.

பரிதியார் 'ஏமம் இறைக்கு' எனப் பாடங் கொண்டிருப்பார் போலும். ஆதலால், மூன்று குற்றமும் இல்லாமல் நடப்பானாகில், சிவனுக்கு இன்பம் ஆம் என்பர். ஒருயிர் ஒரு குற்றமும் இல்லாதிருந் தால் இறைவனுக்கு இன்பம் ஊட்டுவதாம் என்ற கருத்தினர். கொண்டு கூட்டி இயைத்துப்பொருள் காணினும் இக்கருத்தை யமைக்க ஆங்காங்குச் சில பல சொற்களை வருவிக்க வேண்டிய இன்றியமை யாமையுளதாம். ஆதலால் பழைமை போற்றல் என்பதால் இவ்

வுரையும் ஓரளவு ஏற்புடைத்தாக்கலாம். ஆயினும் அரசியல் அதிகாரப் பொருள் நோக்கிற்கேற்ப இறை—சிவன் எனல் இயைபின்று என்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

சினனே காமம் கழிகண்ணோட்டம்
அச்சம் பொய்ச் சொலன்பு மிகவுடைமை
தெறல் கடுமையொடு பிறவு மிவ்வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழியடையாகும்
தீதுசேணிகந்து நன்றுமிகப் புரிந்து —பதிற்றுப்பத்து., 22.

அருந்தவர் குரவர் முன்னோர் அந்தணர் உயர்ந்தோர் தம்பால்
திருந்திய வணக்கம் இன்மை செருக்குவேண் டியபக் கத்தும்
பொருந்திய பொருள்கொ டாமை பொங்கிய வெகுளி காமம்
விருந்துசெய் கழிகண் ணோட்டம் இவைஎலாம் விடுக மைந்தா.
—விநா. அரசி., 52.

இவறல் தன்மை:

ஈதலில் குறைகாட்டாது அறனறிந்து ஒழுகிய
தீதிலான். —கலி., 27:1.

மாண்பிறந்த மானமின்மை:

அடிநிழ லரசரை யளிக்கு மாய்கதிர்
முடிநிழல் முனிவரர் சரணம் மூழ்குமே. —சூளா மணி.,

44.3 தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாகக் கொள்வர் பழிநாணு வார். (சஙஙு)

உரைப்பகுதி:

அ) மணக்.: தினையளவு குற்றம் வந்ததாயினும், அதனை அவ்வள விற்று என்று இகழாது பனையளவாகக்கொள்வார் பழிக்கு நாணுவார் எ—று.

ஆ) பரிதி.: தினையளவு குற்றம் வரினும், அதனைப் பனையளவு குற்றமாகக் கண்டு நோவார் சொற் பழியஞ்சும் பெரியோர் எ—று.

இ) *பரிப்.*: தினை அளவு குற்றம் வந்ததாயினும் இவ்வளவிற்று என்று மேற்கூறியவே அன்றி உளதாகும் குற்றமும் கடிய வேண்டு மென்றது எ—று.

ஈ) *காளி.*: குணப்பயன் அறியும் குணமுடையோர் தினையளவாகிய சிறிது குற்றம் ஒருகால் வருவதாயினும், அதனைப் பனையளவாகும் குற்றம் ஆகக் கொள்வர்; குற்றத்துக்கு நாணும் அறிவுடையோர் எ—று.

உ) *பரிமேல்.*: பழியை அஞ்சுவார், தங்கண் தினையளவாம் குற்றம் வந்ததாயினும் அதனை[1] அவ்வளவாகவன்றிப் பனையின் அளவாகக் கொள்வர்.

குற்றம்[2] சாதிப்பெயர். தமக்கு ஏலாமையின் சிறிது என்று பொறார்[3], பெரிதாகக் கொண்டு வருந்திப் பின்னும் அது வாராமல் காப்பர் என்பதாம்.

ஊ) *கவிராசர்.*: பழியை அஞ்சி நடக்கிற பெரியோர், தம்மிடத்தில் தினையத்தனை குற்றம் வந்ததாயினும், அதனை ஒரு பனையத்தனை யாக எண்ணுவர் எ—று.

ஏ) *பழைய 2*: தினைத்துணையுங்...'பனைத்துணையாய்க்' பாடம். தினையளவு குற்றம் வந்தாலுமதனைப் பனையளவாகக் கொள்வர் பிறர் பழிப்பரென்றும் நாணமுடையவர்.

மல்லர்: ஒரு தினையரிசிக்குச் சரியான குற்றம் வந்தாலும், 'ஒ பனை' மரத்துக்குச் சரியானது என்று எண்ணுவார்கள். அதனால் வருகிற ஈனத்துக்கு அஞ்சுகிறவர்கள் எ—று.

ஒரு சின்னக் குற்றம் ஈனத்தைக் கொண்டுவிடுகிறதினாலேயும் பெரிய வர்களுக்கு ஈனம் பெரிய கேடாயிருக்கிறபடியினாலேயும் சின்னக் குற்றஞ் செய்தாலும் ஈனம் வரும் என்று அறிகிறவர்கள் இதுக்கு வெகுவாய்ப் பயந்து, அந்தக் குற்றத்தைக் கனமாய் எண்ணுவார்கள் என்பது கருத்து.

துணை—அளவு, ஆம்—ஆகும், வரினும்—வந்தாலும், கொளல்—எண்ணிக் கொள்ளுவார்கள், பழி—ஈனம், நாணுதல்—வெட்கப்படுதல்.

---

1. அதனை—அத்தினையளவான குற்றத்தை.
2. குற்றம்—காமம் வெகுளி முதலான குற்றங்கள்.
3. 'தேறார்' எனவும் பாடம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

உரைகள் அனைத்தும் ஒரு நோக்குடையன. மு.கோ. வினை எச்சம் தீயெச்சம் போலத் தெறுதலால் தினையளவு குற்றத்தையும் பனையளவாகக் கருதுவர் என நயம் உரைப்பர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கை அரிந்தான் மாறன் கதவிடித்த குற்றத்தால்
எய்யும் சிலைக்கை இரங்கேசா — பைய — இரங் - முதுமொழி 44.

44.4. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தருஉம் பகை. (சஉச)

உரைப்பகுதி:

அ) மணக்.: தமக்குப் பொருளாகக் குற்றம் வராமல் காக்க; அக் குற்றந் தானே இறுதியைத் தரும் பகையும் ஆதலான். எ—று.

இது குற்றம் கடிய வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: தன் பேரிலே குற்றம் வராமல் அறிவுடைமையைத் தனம் போல் பாதுகாப்பான்; காவாத போது தனக்குப் பகையான குற்றம் வரும் எ—று.

இ) பரிப்.: தமக்குப் பொருளாகக் குற்றம் வாராமல் காக்க: அக் குற்றம் தானே இறுதியைத் தரும் பகையாம் ஆதலான் எ—று.

இது குற்றம் கடிய வேண்டுமென்றது.

ஈ)காளி.: இவ்வுலகத்து அரசருள்ளார் தமக்கு ஒரு குற்றம் நிகழாமல் கருதிப் பரிகரித்துக் கொள்க; மற்று இதுதானே பொருளாகக் கொண்டு ஒழுகின் அக்குற்றம் தாமே தமக்கு ஆபத்தைத் தருவதாகிய பகை எ—று.

உ) பரிமேல்.: தனக்கு இறுதி பயக்கும் பகை குற்றமே, ஆகலான், அக்குற்றம் தன்கண் வாராமையே பயனாகக் கொண்டு காக்க வேண்டும்.

இவை பற்றி யல்லது, பகைவர் அற்றம் தாராமையின், இவையே பகையாவன என்னும் வடநூலார் மதம் பற்றிக் 'குற்றமே அற்றந் தரூஉம் பகை' என்றும், இவற்றது இன்மையே குணங்களது உண்மையாகக் கொண்டென்பார் 'பொருளாக' என்றும் கூறினார். குற்றமே காக்க என்பது 'அரும்பண்பினால் தீமை காக்க'[1] என்பது போல நின்றது.

1. அடைதற்குரிய நற்குணங்களைத் தேடுவதால் தீமைகளை வராமற் காக்க என்பது பொருள்.

ஊ) கவிராசர்.: ஒருவனுக்குப் பொல்லாங்கு பண்ணுகிறது பகையாகிற குற்றமேயாகலான், அந்தக் குற்றம் தன்னிடத்தில் ஒருகாலும் வாராமல் காத்திருப்பதே பயன் எ—று.

ஏ) பழைய 2: பொருளைக் காப்பது போலத் தன்னிடத்திற் குற்றம் வராமற் காக்க. குற்றமே தன்னைக் கொல்ல வரும் பகையாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'குற்றமே காக்க பொருளாக' — 'பொருளாகக் குற்றமே காக்க; தமக்குப் பொருளாகக் குற்றம் வராமற் காக்க' மணக்.; 'தன் பேரிலே குற்றம் வராமல் அறிவுடைமையைத் தனம் போலப் பாதுகாக்க பரிதி. 'அக்குற்றம் தங்கண் வாராமையே பயனாகக் கொண்டு காக்க வேண்டும்' பரிமேல்.; சி.இ. அங்ஙனமே. 'குற்றமே பொருளாக (ஒழுகின்) அற்றந் தரூஉம் பகை எனக் கூட்டிக் குற்றத்தைப் பொருளாகக் கொண்டொழுகின் அக்குற்றம் ஆபத்து விளைவிக்கும் பகையாம்' காளி.; பரிமேலழகரைப் போன்று, கொண்டுகூட்டிக் 'குற்றத்தையே குறிப்பாகக் காக்க' என்பர் இராம.; பொருள்—குறிப்பு. தேவநேயர் பரிமேலழகரைத் தழுவியுரைப்பர்.

மு.கோ. 'பொருட்டாக—பொருட்படுத்தி, மறவாமல், மடியின்றிக் காக்க சிறிதும் அலட்சியமாக இல்லாமல்' என்பது. ஈ.சபாபதி, 'பொருளாக — நோக்கமாகக் கொண்டு'. குழந்தை, 'குற்றத்தை ஒருபொருளாகக் கொண்டு காக்க'. சாமி.சிதம். பரிமேலழகரை ஒட்டிப் 'பொருளாக—பயனாக' என்பர். ஜி.வரத. உரை பொருளாக என்பதற்கு உரை எழுதாமல் கருத்தாகச் செல்கிறது.

இவ்வுரைகளில் 'குற்றமே பொருளாகக் காக்க' என்ற தொடர் ஆசிரியர் அனைவரையும் இடர்ப்படுத்தியுள்ளது என்பது தெற்றென விளங்கும். பொருள், பயன், கருவி, தனம், செல்வம் என்றெல்லாம் கூறி இடர்ப்பட்டுள்ளனர். அக்குற்றம் தங்கண் வாராமையே பயனாகக் கொண்டு காக்க என்ற பரிமேலழகர் உரையில் குற்றம் என்பதற்கு குற்றம் வாராமையே என வருவிக்க வேண்டியுள்ளது. பிணி நீக்கமே உடல் வளர்ச்சியாகாதவாறு போலக் குற்றமின்மையே பொருளாகாது. இவற்றை எண்ணிய காளிங்கர் குற்றமே காக்க; குற்றமே பொருளாக ஒழுகின் அது அற்றந் தரூஉம் பகையாம் எனக் கூட்டிச் செம்பொருள் தந்தனர்.

வள்ளுவர் 'காக்க பொருளா அடக்கத்தை' — 'குற்றமே காக்க பொருளாக' என வழங்குவர். இவற்றுள் முன்னது அடக்கத்தைப் பொருள் போலக் கவனமாகக் காக்க. குற்றத்தை வராமற் காக்க என விதியும் மறுப்புமாகிய இருபொருளில் வந்தமை காண்க. இருவகையாக வரும் இடர்ப்பாட்டை நீக்கவே காளிங்கர் பின்னதையும் விதிப் பொருளிலேயே உரைத்தனர்.

44.5. *வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்.* (சகடு)

உரைப்பகுதி :

அ) மணக்.: துன்பம் வருவதன் முன் அதற்குத் தக்கது அறிந்து காவல் செய்யாத அரசனது செல்வம், எரிமுன்னர்க் கிடந்த வைத்திரள்[1] போலக்கெடும் எ—று.

இது முந்துற்றுக் காவல் செய்வன செய்யாமையும் குற்றம் என்றது.

ஆ) பரிதி.: தனக்கு ஒரு விதனம் வருமுன்னே பாதுகாவாதான் வாழ்க்கை, நெருப்பின் முன்னர் வைக்கோற்போர் பட்டது போலவும் தூறு போலவும் படும் எ—று.

இ) பரிப்.: துன்பம் வருவதன் முன்னர் அதற்குத் தக்கது அறிந்து காவல் செய்யாத அரசனது செல்வம், எரியின் முன்னர்க் கிடந்த வைத்திரள் போலக் கெடும் எ—று.

முந்துற்றுக் காவல் செய்ய வேண்டுவன செய்யாமையும் குற்றமென்றது.

ஈ) காளி.: சிறிதேனும் குற்றமானது வந்து எய்துவதன் முன்னமே உற்றுணர்ந்து தம்பால் வராமல் பரிகரிக்கமாட்டானது செல்வமானது, மற்று எரிமுன்னர்ப் பட்ட வைக்கோற்போர் போலக் கெடும் எ—று.

உ) பரிமேல்.: குற்றம் வரக்கடவதாகின்ற முற்காலத்திலே அதனைக் காவாத அரசன் வாழ்க்கை, அது வந்தால், எரிமுகத்து நின்ற வைக்குவை[2] போல அழிந்துவிடும்.

குற்றம் என்பது அதிகாரத்தான் வந்தது. முன்னர் என்றதன்

1. வைத்திரள் — வைக்கோல் கட்டு.
2. எரிமுகத்து நின்ற வைக்குவை — தீ முன்பட்ட வைக்கோற் போர்.

ஈற்றது பகுதிப் பொருள்விகுதி. வரும் என்னும் பெயரெச்சம் முன்னர் என்னும் காலப்பெயர் கொண்டது.[3] அதனால் காக்கலாங் காலம் பெறப்பட்டது. குற்றம் சிறிதாயினும் அதனால் பெரிய செல்வம் அழிந்தே விடும் என்பது உவமையால் பெற்றாம்.

ஊ) **கவிராசர்:** ராசாவானவன், தனக்கொரு குற்றம் வருவதை முன்னே அறிந்து, அது வாராமற் பரிகரிக்கவேணும். அப்படிப் பரிகரியாதவன் அரசு, நெருப்பு எதிராக இருந்த வைக்கோற்போர் போல அழிந்துவிடும் எ—று.

ஏ) **பழைய 2:** குற்றம் வருமுன்னர்க் காவாத அரசன் வாழ்க்கை குற்றம் வந்தால் நெருப்பின் முன்னே நின்ற வைக்கோற்போர் போல வெந்துவிடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'வாழ்க்கை' — 'செல்வம்' *பரிமேல்., மணக்., காளி.,*

'வைத்தூறு' — 'வைக்கோற்குவை' என ஒரு தொடராகக் கொண்டவர்கள் அனைவரும். *பரிதியார்* வை—வைக்கோற்போர், தூறு—புதர் என உம்மைத்தொகையாகக் கொள்வர்.

எரி சிறியதாயினும் வைக்கோற்போரையே சாம்பராக்கல் போலக் குற்றம் சிறியதாயினும் வாழ்க்கை முழுதையுங் கெடுத்து விடும் என்பதாம்.

'வைக்கோற்போரின் அருகில் நெருப்பு வரவே விடக்கூடாது. வந்தால் அதனையழித்து விடும். அதுபோல வாழ்க்கையைக் குற்றங்கள் அணுகவே விடக்கூடாது' என்ற **இராமலிங்கனார்** விளக்கம் நன்று.

வரத. 'தீ போரைத் தன்மயமாக்கிவிடும்; குற்றம் சிறியதாயினும் தன்னையுடையவரைத் தன்மயமாக்கிவிடும்' என நயமும் உரைப்பார்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

வருமுன்னர்க் காவாதான்:

மேல்வரவறியாதோன் தற்காத்தல் பொய்'— *முதுமொழிக், ,7:5.*

---

3. 'ஈற்றது' ...முன்னர் என்பதன் ஈற்றிலுள்ள அர் விகுதி. அர் ஆர் என்பன திணையும் பாலும் காட்டும் வினைவிகுதியாயினும் ஈண்டுப் பகுதிப் பொருளதாய் நின்றமை காண்க.' முன், பின் என்பன காலமும் இடமும்உணர்த்தும்போது பெயர்ச்சொல். வினை எச்ச விகுதியாகும்போது இடைச்சொல். முன்னர் என்பது பெரும்பாலும் பயின்றுவருதலின் 'முன்னர்' என்பதே ஒரு சொல்லாதலுமாம்.

விண்ணுன அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றும் இல்லையாம். —திருநா.நமச்சி.,3.

முற்றும்:

குற்றம் புரியா திருந்துபிறர் குற்றம் களைக; சிறிதேனும்
குற்றம் புரியின் சிற்றெரிவை குவையை யழிக்கு மாறேபோல்
பற்றும் பெருவாழ் வினைஅழிக்கும் பகைவர்க் காக்கம் மிகப்பெருக்கும்
முற்றும் பெருநோ யுழப்பிக்கும்முனியா ரானும் முனிவிக்கும்.—விநா.,அரசி.53

பிற:

வெள்ளம் வருமுன்னே அணைபோட வேண்டும். —பழ.,
பருத்திப் பொதிக்கு ஒரு நெருப்புப் பொறி —பழ.,
கடுகத்தனை நெருப்பும் போரைக் கொளுத்திவிடும் —பழ.,
ஒருகுடம் பாலுக்கு ஒருதுளி பிரை —பழ.,

ஓ) மேற்கோள் பகுதி:

நச்.:'முன்' என்னும் வினையெச்ச வாய்பாடு இறப்புப் பற்றி வந்ததற்கு வருமுன்னர் என்பது மேற்கோள். —தொல். சொல்.231
சிவஞான.:'னகரஇறுவாய்', இறுவாய் என்பது வினைத்தொகை. நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. வினைத்தொகை பெயர் கொண்டு முடியாது, இடைச் சொல்லைக்கொண்டு முடியுமோ எனின், இடைச்சொல்லெல்லாம் பெயரெனப்படும் என்க என விளக்கி 'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை' என்றாற் போல்வனவும் இவ்வாறே கொள்க என்பர். —தொல்விருத். பக். 46.

44.6. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின் என்குற்றம் ஆகும் இறைக்கு. (சஉசு)

உரைப்பகுதி :

அ) மணக்.: தனக்குள்ள குற்றத்தை நீக்கிப் பிறர்மாட்டுள்ள குற்றத்தை ஆராய வல்லனாயின், அரசனுக்கு என்ன குற்றம் உளதாம்? எ—று.

இது தன் மாட்டுள்ள குற்றத்தை நீக்குதலேயன்றிப் பிறர் மாட்டுள்ள குற்றத்தையும் கடியவேண்டும் என்றது.

ஆ) பரிதி.: பிறர் குற்றம் போல் தன் குற்றம் பார்ப்பானாகில் அவனுக்குக் குற்றம் உண்டோ? எ—று.

இ) *பரிப்.*: தன் மாட்டுள்ள குற்றத்தை நீக்கிப் பிறர் மாட்டுள்ள குற்றத்தை ஆராய வல்லனாயின் அரசனுக்கு என்ன குற்றம் உளதாம் எ—று.

இது தன் மாட்டுள்ள குற்றத்தை நீக்குதலே அன்றிப் பிறர் மாட்டுள்ள குற்றங்களும் கடிய வேண்டுமென்றது.

ஈ) *காளி.*: முன்னம் தனது குற்றமுள்ளன பலவும் தான் அறிந்து நீக்கித் தான் நீதியில் தூயனாய்ப் பின்பு பிறரது குற்றங்களை நோக்கி அக்குற்றங்களை ஒழிப்பதாக நினைக்குமாயின், பின்பு என்ன குற்றம் உளதாகும் அரசர்க்கு. எ—று.

உ) *பரிமேல்.*: முன்னர்த் தன் குற்றத்தைக் கண்டு கடிந்து பின்னர்ப் பிறர் குற்றம் காண வல்லனாயின், அரசனுக்கு ஆகக்கடவ குற்றம் யாது?

அரசனுக்குத் தன் குற்றம் கடியாவழியே[1] பிறர் குற்றம் கடிதல் குற்றமாவது, கடிந்தவழி முறைசெய்தல் ஆம் என்பார், என் குற்ற மாகும் என்றார்; எனவே தன் குற்றம் கடிந்தவனே முறை செய்தற்கு உரியவன் என்பதாயிற்று. இவை நான்குபாட்டானும் அவற்றது[2] கடிதற்பாடு பொதுவகையால் கூறப்பட்டது. இனிச் சிறப்பு வகையால் கூறுப.

ஊ) *கவிராசர்*: முன்னே தனக்கு வரக்கடவ குற்றங்களைக் கண்டு பரிகரித்து, பின்பு பிறருக்கு வருங் குற்றங்களைக் காண வல்ல அரசனுக்கு, இம்மை மறுமைக்கும் குற்றமே இல்லை எ—று.

ஏ) *பழைய 2*: முன்பு தன் குற்றத்தைக் கண்டு தவிர்த்துப் பின்பு பிறர் குற்றத்தைச் செய்யாமல் நீக்குவானாகில், பின்னை என்ன குற்றம் அரசனுக்கு?

மல்லர்: எ—து தன்னிடத்திலே கண்ட குற்றங்களை நீக்கிப் பிரசைக ளிடத்திலே கண்ட குற்றங்களைத் தவிராமல் பிரசைகளுடையதை தண்டித்தால் இதுக்கு மேலே அரசன் நீக்கத்தக்க குற்றம் என்ன எ—று.

பிரசைகள் தவிர்த்த குற்றங்களை அரசனுந் தவிர வேண்டிய தாகையில் தான் குற்றங்களைத் தவிராமல் பிரசைகளுடைய குற்றங்

1. கடியாவழியே — நீக்காத இடத்திலே.
2. அவற்றது — காமம் வெகுளி முதலான குற்றங்களின்.

களைத் தண்டித்தால் குற்றமாயிருக்குமாகையால் அரசன் பிரசைகளுடைய குற்றங்களைத் தண்டிக்க வேண்டுமானால் தானுந் தன் குற்றங்களை நீக்க வேண்டியது என்பது கருத்து:

பிறர்—பிறத்தியார், காணல்—தண்டித்தல், என்—என்ன, இறை—ராசா.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் முதலான தொல்லாசிரியர் அனைவரும் ஒத்த கருத்தினர். ,மன்னன் தன் குற்றத்தைக் கண்டு கடியாவழியே பிறர் குற்றங் காண்பது குற்றமாம். முதலில் தன்னைத் திருத்திக்கொண்டு பின்னர் குடிகளைத் திருத்த முற்படுவானாயின் மன்னற்குக் குற்றம் ஏது; இல்லை என்ற *பரிமேலழகர்* விளக்கம் தெளிவானது.

பரிதி. 'பிறர் குற்றம் (போல்) தன் குற்றம் காண்கிற்பின் இறைக்கு என்குற்றம் ஆகும்' எனக்கூட்டிப் பொருள் கொள்கிறார். ஆனால் 'நீக்கி' என்ற சொல் எங்கும் ஒட்டாமல் பொருளின்றி நிற்கிறது. ஆகையால் இவ்வுரைக்குச் சிறப்பில்லை. இது 'ஏதிலார் குற்றம்போல்' என்ற குறளை நினைவில் வைத்து எழுதிய உரை. *கா.சு*. 'காண்கிற்பின்—கண்டு கடியவல்லனாயின்' என்று கண்டு கடிதல் வரைப் பொருள் கொள்வர்.

இராம.'பிறருடைய குற்றத்தை அவர் காணச் செய்தால்'என்பர். 'காண்கிற்பின் என்பது தன் வினையெச்சம். அது பிறவினையாயின் 'காட்டுகிற்பின்'எனவே வரும்.ஆதலால், அரசன் காண வல்லனாயின் என்று ஏனையோர் கூறும் பொருளே நேரிது.

மு. கோ. 'தன்குற்றம்—சட்டத்திலுள்ள குற்றம்; பிறர்குற்றம்—மக்களுடைய ஒழுக்கத்திலுள்ள குற்றம் எனப் புதிய நோக்கிற் பொருள் கொணர்வர். இது அரசற்குக் கூறுதலால் அரசன் சட்டத்திலுள்ள ஓட்டைகளை யடைத்துச் சமுதாயத்திலுள்ளதை அடைக்க வேண்டும். சட்டத்திலேயே குற்றமிருக்கும்போது சமுதாயம் குற்றஞ்செய்யின் எப்படித் திருத்துவது? எனக் கருதுவர். வள்ளுவர் பாடற் போக்கின் வழிச்செல்லும் ஏனோர் உரைகள்'அரசன் தன்னைத் திருத்திக் கொண்டால்தான் மக்களைத் திருத்துவது பயனுள்ள செயலாகும்' என்பது. 'அரசன் சட்டத்தைத் திருத்தலாம் அதன்படி மக்களையும் திருத்தலாம். தான் நடவாவிடின் பயனில்லை' என்பது. இக்கருத்து இவர் உரைப்போக்கில் அமையாமை காண்க. *தேவநேயர்*

தரும் விளக்கம் தெளிவானது 'தன் குற்றம் நீக்கிய அரசன், பிறர் குற்றங்கண்டு, தண்டிப்பானாயின் அது முறை செய்தலாம்; குற்ற மாகாது' என்பர்.

குழந்தை இக்குறளுக்கு எல்லோரையும் போலவே உரை கண்டு, விளக்கத்தில் 'முறைக்குக் கூறினும் பொதுவாகக் கொள்க' என்பர். இதனால் இவர் கருத்து பொருட்பாலின் ஏனைய சில அதிகாரங்கள் போல இதுவும் அரசற்கும் குடிகட்கும் பொதுவாகக் கூறப்பட்டது என்பது போலும்.

'ஏதிலார் குற்றம்போல்' என்ற புறங்கூறாமைக் குறள், பொது மக்கள் குற்றங்கண்டு கூறுமியல்பினரேயாவர். ஆதலால் 'தீதுண்டோ மன்னும் உயிர்க்கு' என மக்களுக்கு அறிவித்தனர். ஈண்டு, குற்றங் களுக்கு தண்டித்துத் திருத்துதல் மன்னற்கேயுரிய செயலாதலின் அவர் கட்கு அறிவித்தார். ஆதலின், இது இறைவற்கேயுரியது. மக்கட்பொது விற்கு ஏலாது என்க. ஏலும் என்போமாயின் கூறியது கூறலாம். ஆசிரியர் எச்சரிக்கையாக ஆண்டு புறம்பழிக்கும் பொதுவுரிமையுடைய மக்கட்கு என்பார், 'மன்னுயிர்க்கு' என்றும், ஈண்டுக் குற்றங்கடிதல் குற்றங்கண்டு அத்தகவொறுத்து அதனைப் பின்னர் செய்யாவகைச் செயல்படுவதாகலின் 'என்குற்றமாகும் இறைக்கு' என்றும் கூறினார். இவ்வேறுபாடுகளைச் சிந்திக்க.

ஒ) ஒப்புமைப் பகுதி:

தன்குற்றம்:

தன் குற்றம் தனக்குத் தெரியாது —பழ.,
தன் குற்றம் பார்ப்பவர் இங்கு இல்லை —பழ:,
தன் குற்றம் கண்ணுக்குத் தெரியாது —பழ.,

தன் குற்றம் பிறர் குற்றம்:

தன் முதுகு தனக்குத் தெரியாது —பழ.,
தன் குற்றமிருக்கப் பிறர்குற்றம் பார்க்கிறதா? —பழ.,

முற்றும்:

தங்குற்றம் நீக்கல ராகிப் பிறர்குற்றம்
எங்கேனும் தீர்த்தற் கிடைப்புதல்—எங்கும்
வியனுலகின் வெள்ளாடு தன்வளி தீரா(து)
அயல்வளி தீர்த்து விடல். —பழ. நா.,

மன்னிய பகைக்குழாம் ஆறும் வையகம்
துன்னிய அரும்பகைத் தொகையும் இன்மையால்

தன்னையும் பிறரையும் காக்கும் என்பதம்
மன்னவன் திறத்தினி மருள வேண்டுமோ —சூளா.,

44.7 செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும், (சஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பொருளால் தனக்குச் செய்து கொள்ளப்படுமவற்றைச் செய்துகொள்ளாது, அதன்கண் பற்றுள்ளஞ் செய்தானது செல்வம், பின் உளதாம் பான்மைத்தன்றி வறிதே கெடும் எ—று.

ஆ) பரிதி.: செய்யும் முறைமை அறிந்து செய்யாதான் செல்வம் தன்னைச் சத்துருக்கள் கெடுக்காமல் தானே கெடும் எ—று.

இ) பரிப்.: செய்யும் முறைமை செய்யாதே ஈட்டுதற்கு விரும்பினவனும், அவனது செல்வமும் உய்யும் பகுதி இன்றிக் கெடும் எ—று.

கெடும் என்பதனை இரண்டிடத்தும் கூட்டுக. இது பிறர் பொருளை விரும்பினால் வரும் குற்றம் கூறிற்று. இதனாற் கெட்டான் 'புரூரவா' என்றவாறு.

ஈ) காளி.: தனக்கு எய்திய பொருள்கொண்டு, அதனால், செய்தற்பாலனவாகிய நல்வழக்கம் செய்யாத உலோபியினது செல்வமானது கெடுவழிப் பின் ஒருகால் இவனுக்கு உயதற்பகுதியாம் குறி இன்றிச் செலவறக் கெட்டுவிடும் எ—று.

உ) பரிமேல்.: பொருளால் தனக்குச் செய்து கொள்ளப்படுமவற்றைச் செய்து கொள்ளாது, அதன்கண் பற்றுள்ளஞ் செய்தானது செல்வம், பின் உளதாம்பான்மைத்தன்றி வறிதே கெடும்.

செயற்பாலவாவன அறம் பொருள் இன்பங்கள், பொருளால் பொருள் செய்தலாவது பெருக்குதல்; அது.

பொன்னி னாகும் பொருபடை அப்படை
தன்னி னாகும் தரணி தரணியில்
பின்னை யாகும் பெரும்பொருள் அப்பொருள்
துன்னுங் காலைத்துன் னாதன இல்லையே'[1]

என்பதனால் அறிக. அறம் செய்யாமையானும் பொருள் பெருக்காமை

1. சிவக., விமலை', 35.

யாலும் உயற்பாலதன்றி என்னும், இன்பப் பயன் கொள்ளாமையின் கெடும் என்றும் கூறினார். உயற்பாலதின்றி[2] என்று பாடம் ஓதுவாரும் உளர்[3].

ஊ) கவிராசர்.: தன்னால் தேடப்பட்ட பொருள்களால் தனக்கு இம்மைமறுமைக்குச் செய்துகொள்ளவேண்டுங் காரியங்களைச் செய்து கொள்ளாது, பணத்தைச் செலவுபண்ணாமல் கெட்டியாய்த்தேடவேணு மென்று வைத்தவன் செல்வம் வெகுசீக்கிரத்திலே கெட்டுப்போம் என்றவாறு.

ஏ) பழைய 2.: 'உயர்பாலதின்றிக் கெடும்' பாடம். பொருளால் தனக்குப் பகை வராமற் செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாது, பொருள்மேல் ஆசை வைத்தானாகில், அவ்வரசன் செல்வம், தாங்குவாரில்லாமற் கெடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'செயற்பால செய்யாது'—'பொருளால் தனக்குச் செய்து கொள்வதைச் செய்து கொள்ளாது' மணக்., பரிமேல்., மு.ரா.அரு., ஈ.சபாபதி. 'செய்யும் முறைமை செய்யாதே' பரிப்., பரிதி.; 'பொருள் கொண்டு அதனால் நல்வழக்கம் செய்யாதே, காளி.; 'பொருளால் செய்து கொள்ளப்படும் வசதிகளை அமைத்துக் கொள்ளாது' கா.சு.; 'செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாமல்' ஜி.வரத., சி.இ., குழந்தை, சாமி.சிதம்., 'தன்னிடத்திலும் தன்னைச் சேர்ந்தவர்களிடத்தும் குற்றஞ்சேராமலிருக்கச் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல்' இராம., 'பொருளால் தனக்குப் பகை வராமற் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல்' பழைய 2. 'பொருளால் தனக்கும் தன் நாட்டிற்கும் ஆக்கமும் பாதுகாப்பும் பற்றிச் செய்யவேண்டியவற்றைச் செய்து கொள்ளாமல்' தேவநேயர்.

இவற்றுள் தனக்குச் செய்து கொள்ள வேண்டியவைகளைச் செய்து கொள்ளாமல் என்ற உரை தன்னலத்தையே மிகுதியுங் கருதுதலான், 'செய்யும் முறைமை செய்யாமல்' 'செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல்' எனப் பொதுமையினிற்பன சிறந்தன. அதனினும் தேவநேயர் உரை மிகச் சிறந்தது.

'இவறியான்' — 'அதன்கண் பற்றுள்ளம் செய்தான்' மணக்., பரிமேல்., குழந்தை, தேவநேயர்; 'ஈட்டுதற்கு விரும்பினவன், பரிப்.,

2. உயற்பாலதின்றி — பின் உளதாகும் பான்மையதன்றி.
3. இங்ஙனம் பாடங்கொண்டவர் காளிங்கர், பரிப்பெருமாள்.

'இங்ஙனமே கூறுவர்' பரிதியும்.; 'நல்வழக்கம் செய்யாத உலோபியினது' காளி.; 'செட்டுச் செய்தவன்' கா. சு.; 'உலோப குணம் உடையவன்' மு. ரா. அரு.; ,இறுகப்பிடித்துக் கொள்பவன்' ஜி. வரத., சி. இ.; 'அசட்டையாக இருந்து விடுகின்றவன்' இராம; 'கறுமித்தனம் செய்பவன்' சாமி. சிதம்.; 'பொருள் மேல் ஆசை வைத்தவன்' பழைய 2: 'கெட்டியாய்த் தேடவேண்டும் என்று வைத்தவன்' கவிராசர்; 'நாட்டு நலத்திட்டங்களை நிறை வேற்றாதவன்' மு. கோ.

இவ்வுரைகளுள் வேறுபெயர் உரைத்தனவும் 'பற்றுள்ளம் வைத்தவன்', 'ஈட்ட விரும்பினவன்' என்பன உலோபி என்ற பொருளைக் கருத்தால் விளக்குவன ஆதலின் அவையும் கொடாமை உலோபம் என்பனவும் பொருத்தமான உரைகள் அவையன்றி 'அசட்டையாக இருப்பவன்' என்பது இச்சொல்லின் நேர்பொருளாகாது. ஆதலாற் சிறந்தன கொள்க.

'உயற்பாலது அன்றி'. 'உயற்பாலதின்றி' என இரு வேறுபாடங்கள் உள. அவற்றுள் 'அன்றி' எனப்பாடங்கொண்டு 'அல்லாமல்' எனப்பொருள் கண்டவர்கள் மணக்குடவரும்' பரிமேலழகரும் ஆகிய இருவருமே. 'இன்றி' எனப்பாடங்கொண்டு, 'இன்றி', 'இல்லாமல்' எனப்பொருள் கண்டவர்கள் பரிப்பெருமாள், காளிங்கர், கா. சு., தேவநேயர்' குழந்தை, சி. இ., ஈ. சபாபதி, சாமி. சிதம். என்போர்.

இவற்றுள் எப்பாடம் ஏற்புடையது என்று துணிவது எளிதன்று. பரிமேலழகரே 'இன்றி' எனக் கூறுவாரும் உளர் என எடுத்துக்காட்டி 'அன்றி' என்பது தான் சிறந்தது என்ற விளக்கந்தருகிறார். 'இன்றி' என்பது தொல்காப்பியராலேயே எடுத்து ஓதப்பட்ட ஒரு வினையெச்சம். 'அல்—இல்' என்பன இரண்டும் தமிழ் வினையடிகள். அல் என்பது இனம் உண்மையைக் காட்டி அஃதன்று இது என மறுக்கும் பொருளது. இன்மை என்பது இல்லாமையை மட்டும் உணர்த்துவது. வடமொழியில் அத்துவைதம், என்ற சொல்லிலுள்ள நகரம் இன்மை அன்மை மறுதலை என்னும் மூன்று பொருளைப் பயப்பதுபோல ஒரு சொல் அன்மையின், இரண்டும் இருவேறு வேர்ச்சொல்லின் விளைவாகலின் வேறேயாகும். அதனாலேயே பரிமேலழகர் 'இன்றி' எனப்பாடங் கொள்வாரை மறுத்து 'அன்றி' என்கிறார். இதனாலேயே பொருள் வேறுபாடுண்மை பெறுதும். பரிமேலழகர் செயற்பால அறம்பொருள் இன்பங்கள். அவற்றுள் பொருளைக் கொண்டு அறஞ்செய்யாமை

யானும் பொருளற்ற பொருளைப் பெருக்காமையானும் 'உயற்பால தன்றி' என்றும், பொருளான் இன்பங்கொள்ளாமையின் கெடும்' என்றும்,விளக்கங் கூறினர். மணக்குடவர் ,உயற்பாலதின்றிக் கெடும் என்பதை ஒரு தொடராக்கி பின் உளதாந்தன்மைத்தன்றிக் கெடும் என்றனர். இவர் உரையால் 'அன்றி' என்று சொல்லாமல் வேறு பொருளின் அன்மை பெறப்படாமையின் உயற்பாலதன்றி என்பதால் அறம் பொருள்களைக் கூறிப் பின் எஞ்சி நின்ற இன்பத்தை கொள்ளாமையாற் கெட்டது என்பார் கெடும் என்பதனோடு இயைத்து அன்மைப்பொருளை நிறுவினர்.ஏனையோர்களாகிய பரிப்பெருமாளும் காளிங்கரும் உயற்பாலதின்றாதலும் கெடுதலும் இரண்டும் ஒருகருத் தினதாதலின் 'இன்றி' எனப்பாடங்கொண்டு இல்லாமைப் பொருளை நிறுவினர். அவர்கள் செயற்பால நல்வழக்கமும் செய்யும்முறைமையும் எனப்பொருள் கண்டமையின் 'இன்றி' என்ற பாடமே ஏற்புடைத் தாயிற்று. 'அன்றி' என்ற பாடத்திற்கு 'இல்லாமல்' 'இன்றி' எனப் பொருள் கண்டவர்களோ இவ்வேறுபாட்டை எண்ணவில்லை என்று சொல்வதைக்காட்டிலும், இக்குறள் பொருட் குற்றங்கடிதலைக் குறித்தலின் அன்மையால் உணர்த்தப்பெறுவது வேறொன்றின்மை யின் 'இல்லாமல்' எனப்பொருள் கண்டனராதல் வேண்டும்.

பரிப்பெருமாள், 'இவறியானும் செல்வமும் கெடும்' என்றனர். ஏனையோர்'இவறியானது செல்வம் கெடும்'என ஒரு தொடராக்கினர். பரிப்பெருமாள் இங்ஙனம் கூறினால் இவறியானும் செல்வமும் இரண்டும் உயற்பாலதின்றிக் கெடும் என ஒருமைகொண்டு முடியாது என்று எண்ணிப் பின்வரும் குறிப்பில் 'கெடும்' என்பதனை மட்டும் ஈரிடத்தும் கூட்டுக என்றனர். இங்ஙனம் பார்க்குங்கால் செல்வம் உயற்பாலதின்றிக் கெடும். இவறியான் கெடும் எனக்கூட்டுக என எழுதிய அவர் நோக்கு நுனித்தறிதற்குரியது.

ஆகவே 'செயற்பால' 'நாடு காவலும், படை கூட்டலும், செல்வம் பெருக்கலும்,கொடையும், பரிசும் ஆகிய அனைத்தும் பொருளாற் செய் யத்தக்கன'என்ற உரையும், 'இவறியான்' என்பதற்கு 'உலோப குணத்தால் இறுக்கிப்பிடித்தவன்' என்ற உரையும், 'இன்றிக் கெடும்' என்பதும் அதன் விளக்கமும் ஏற்புடையன ஆகலாம்.

ஓ) ஒப்புமைப்பகுதி:

மூற்றும்:

உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்— கொன்னே

வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அ ஆ
இழந்தானென் றெண்ணப் படும். —நாலடி., 9.

ஒரு புடை:

ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர். —கொன்றை., 4.

44.8. பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும் எண்ணப் படுவதொன் றன்று. (சஉஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: கூடின பொருளை விடாமையாகிய உலோபம் யாதொன்றினுள்ளும் எண்ணப்படுவதொன்றன்று எ—று.

இஃது உலோபம் தனக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் ஒரு பொருளாக மதிக்கப்படாது என்றது.

ஆ) பரிதி.: குற்றமாவது பொருளை அவாவி அறஞ்செய்யாமை; அந்தக் குற்றம் எந்த வகையான குற்றத்திலும் மேலான குற்றம் எ—று.

இ) பரிப்.: கூடின பொருளை விடாமையாகிய உலோபம் யாதொன்றனுள்ளும் எண்ணப்படுவது ஒன்று அன்று எ—று.

இது தனக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் உலோபம் ஒரு பொருளாக மதிக்கப்படாதென்றது.

ஈ) காளி.: எய்திய செல்வம் யாவர்க்கும் ஈயாது இறுகப் பற்றுதலை நெஞ்சினால் நினைக்கக்கடவது அன்று என்று, ஈதலுடையவன் தகுதியாகிய நன்மையை மற்று. யாதானும் ஒரு நன்மையுள்ளும் வைத்து எண்ணப்படுவதற்கு ஓர் இணையில்லை; ஆகலான் இவறுதல் பெரிதும் குற்றம் என்று பொருள் ஆயிற்று எ—று.

உ) பரிமேல்.: பொருளை விடத்தகுமிடத்து விடாது பற்றுதலைச் செய்யும் உள்ளமாகிய உலோபத்தினது தன்மை குற்றத் தன்மைகள் எல்லாவற்றுள்ளும் வைத்து எண்ணப்படுவதொன்றன்று. மிக்கது.

இவறலது தன்மையாவது குணங்களெல்லாம் ஒருங்குளவாயினும் அவற்றைக் கீழ்ப்படுத்தித்தான் மேற்பட வல்ல இயல்பு. ஒழிந்தன[1]

1. ஒழிந்தன — இயற்றன்மை நீங்கியே ஏனைய நிய குணங்கள்.

அது மாட்டாமையின்[2], எற்றுள்ளும் எண்ணப்படுவதொன்றன்று என்றார். 'எவற்றுள்ளும்' என்பது இடைக் குறைந்து நின்றது. இவை இரண்டுபாட்டானும் உலோபத்தின் தீமை கூறப்பட்டது.

காரி.: எவற்றுள்ளும் என்பது எற்றுள்ளும் எனச் செய்யுள் —தொடையும் அடிப்பாடும் நோக்கி இடைக் குறைந்தது. இவறன்மை—இவறற்றன்மை, 'காதன்மையும்'[3], 'வள்ளன்மை யும்' அவ்வாறாம்.

ஊ) *கவிராசர்.*: பொருள்களைச் செலவு பண்ணுமிடத்து ஆசை யென்னப்படா நின்ற லோபம் குற்றங்களெல்லாவற்றிலும் பெரிய குற்றம் எ—று.

ஏ) *பழைய* 2: பொருளை விடத்தகும் இடத்து விடாது பற்றிக் கொள்ளும் ஆசையாகிய உள்ளத்தின் உலோபம் எல்லாவற்றுள்ளும் வைத்தெண்ணப்படுவதொன்றன்று; மிகப் பெரிதென்றவாறு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'சேர்த்த பொருளைச் செலவழியாமை உலோபம்; அது எதிலும் வைத்து எண்ணத் தகாதது; இழிந்தது' என்பர் *மணக்குடவர்.*

பரிதியார், 'உலோபம் ஒரு குற்றம்' என்பர். இவர் உரை கருத்துரையே. *காளிங்கர், வள்ளுவர்* கூறும் உலோபம் எதிலும் ஒருங்குவைத்து எண்ணத்தகும் ஒரு குணம் அன்று என்ற எதிர்மறை யாற் போந்த 'ஈதலுடையவன் தகுதி எல்லா நன்மைகளிலும் பெரிது என்ற உடன்பாட்டுக் கருத்தையும் விளக்குவர்.

தேவநேயர், 'இவறன்மையை ஏனைய குற்றங்களுடன் வைத்து எண்ணக் கூடாது; இது இணையற்ற பெரிய குற்றம்' என்பர் *பழைய உரை* 2, *குழந்தை, சாமி. சிதம்., ஈ.சபாபதி.*

மு.கோ. 'எற்றுள்ளும் — முற்கூறிய கடியத்தகும் குற்றங்கள் அனைத்திலும்' என்பர்.

---

2. அது மாட்டாமையின் — உலோபம் போல நற்குணங்களை யமிழ்த்தித்தாம் மேலோங்க மாட்டாமையின்.
3. குறள்., 507, 832.

சி.இ. 'இவறன்மை எதனுள்ளும் வைத்துக் கருதப்படுவதற்குரிய குணம் அன்று; குற்றமே' என்பர். இவர் சிக்கனமும் ஒரு குணம் என் பாரை மனத்துட் கொண்டு, 'நீக்க வேண்டிய குற்றத்தை நீக்காமல், அசட்டை செய்வது எதனுடனும் சேர்ந்ததல்ல' என்பர். இவ்வுரை நடு நிலை அல்லது செங்கோன்மை என்ற அதிகாரத்திற்கு இக்குறளை வழங்குகிறது. இவறன்மை என்ற காட்சியே இது பொருள் பற்றிய குற்றமாதலைக் குறிக்கிறது.

மு.ரா.அரு.உலோபம், தான் குற்றமாதலேயன்றி உள்ள உத்தம குணங்களையும் போக்குவதாற் குற்றத்தின் மிக்க குற்றம் என விளக்க உத்தம குணங்கள் எல்லாம் உலோபத்தால் அழியுமாப் போல் என்ற பரஞ்சோதி திருவிளையாடல் வாக்கையும் மேற்கோள் காட்டுவர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும் —பழ.,

உண்ணாமல் தின்னாமல் ஊரம்பல மானேனே —பழ.,

பூட்டிப் புசிக்காமல் புதைப்பார், ஈயைப்போல ஈட்டி இழப்பார் —பழ.,

44. 9. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க நன்றி பயவா வினை. (சஉகூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: எல்லாநாளும்[1] தன்னைப் பெரியனாக நினைத்து வியவாதொழிக; வியந்தானாயினும், அவ்வியப்பினானே நன்மை பயவாத வினையைச் செய்யாதொழிக எ—று.

செய்யின் கெடும் என்றவாறாயிற்று. இதனை மதம் என்ப. இதனாற் கெட்டான் கார்த்த வீரியார்ச்சுனன்.

ஆ) பரிதி.: தன்னை வியந்து கொள்ளக் கடவனல்லன்; புண்ணியம் தாராத காரியத்தை விரும்புவான் அல்லன் எ—று.

இ) பரிப்.: எல்லா நாளும் தன்னைப் பெரியனாக வியவாதொழிக, வியந்தானாயினும் அவ்வியப்பினானே நன்மை பயவாத வினையைச் செய்யாதொழிக எ—று.

1. எல்லாநாளும் என்பதைவிட 'எந்நாளும்' எனப்பாடமிருப்பின் தெளிவாகும்.

செய்யின் கேடுதரும் என்றவாறாயிற்று. இதனை மதமென்ப. இதனாற் கெட்டான் கார்த்த வீரியார்ச்சுனன்.

ஈ) *காளி.:* வேந்தனானவன் எஞ்ஞான்றும் தன்னைத்தானே பெருமிதம் கருதற்க. மற்று இதுவேயும் அன்றித் தனக்கு இருமைக்கும் நன்மை பயவாக் கருமங்களை எஞ்ஞான்றும் விரும்பாது ஒழிக எ—று.

இனித் தாமே இங்ஙனம் குற்றங்கடிந்து ஒழுகினும், மற்று அக்குற்றமும் தெரிந்துணரும் கற்றுணர்ந்த பெரியோர் இவ்வாறு தமக்குத் துணையாக வேண்டும் என்று உண்டாகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) *பரிமேல்.:* தான் இறப்ப உயர்ந்த ஞான்றும் மதத்தால் தன்னை நன்கு மதியாதொழிக; தனக்கு நன்மை பயவா வினைகளை மானத்தால் விரும்பாது ஒழிக.

தன்னை வியந்துழி இடமும் காலமும் வலியும் அறியப்படாமையானும், அறனும் பொருளும் இகழப்படுதலானும், எஞ்ஞான்றும் வியவற்க என்றும், கருதியது முடித்தே விடுவல் என்று அறம் பொருள் இன்பங்கள் பயவா வினைகளை நயப்பின் அவற்றால் பாவமும் பழியும் கேடும் வருமாகலின், அவற்றை நயவற்க என்றும் கூறினார். இதனான்[2] மதமான்ங்களின் தீமை கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்:* தான் சகல குணங்களானும் நிறைந்திருக்கிற பெரியோனாயினும் அந்த மதத்தால், தன்னை நன்குமதியாது ஒழிக; தனக்கு நல்லதல்லாத காரியத்தை மனத்தினும் நினையாதொழிக.

ஏ) *பழைய 2:* அரசன் செல்வ மதத்தால் தன்னை எக்காலமாகினும், நன்கு மதியாதொழிக; தனக்கு நன்மை பயவாத வினைகளை மனத்தால் விரும்பாது ஒழிக.

மல்லர்: எந்த நாளிலேயும் தன்னை வெகுவாய் மதிக்கவேண்டாம்; நன்மை செய்யாத செயல்களை விரும்ப வேண்டாம் எ—று.

தான் பெருமையாய் இருக்கிற நாளிலேயுந் தன்னை மற்றவர்களைப் பார்க்கப் பெரியதாக மதிக்கிறதும் நன்மை செய்யாத தீவினைகளை விரும்புகிறதும் குற்றமாயிருக்கிறதினால் அவ்விரண்டும் அரசன் தவிரவேண்டியது என்பது கருத்து.

---

2. இதனான்—தன்னை வியத்தலானும், நன்றி பயவா வினையை நயத்தலானும் என்க.

வியத்தல் — புகழ்தல்; அற்க — வேண்டாம்; எஞ்ஞான்றும்— எப்பொழுதும்; நயத்தல்—விரும்புதல்; நன்றி—நன்மை; பயத்தல்— உண்டாக்கல், வினை செய்தல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., 'வியவற்க' என்பதனைப் பிற்கூறும் 'நயவற்க' என்பதனோடு 'வியந்தானாயினும் நயவற்க' என்பர். இதனால் இரண்டும் குற்றம் எனப்படுநோக்கு வழுவி, வியத்தலும் பொறுக்கக் கூடியது ஒன்று என்பதைத் தெரிவிக்கிறதாகக் கூடும். *பரிதியுரை*, 'வியத்தலும் நயத்தலும் குற்றமே' என்கிறது. *காளிங்கர்* உரை இவ்விரு குற்றங்களையும் அரசியல் நோக்கி யரசற்கே உரிமையாக்கு வதுடன், நன்றி பயவா வினைநயவாமையை இம்மை மறுமை இரண்டற்கும் உரிமையாக்குகிறது.

தேவநேயர், 'எஞ்ஞான்றும்' என்பதற்கு 'அறிவாற்றல் கல்வி, இடம், பொருள் ஏவல் இவற்றான் மிக உயர்ந்த போதினும்' என விளக்கந் தருவர். அரசற்கு இவை இயல்பாகவே என்றும் உரியன ஆதலான் இவ்வுரை மக்களைக் கருத்திற் கொண்டது போலத் தோன்றுகிறது. அடுத்துவரும் விளக்கம் அவ்வெண்ணத்தை மாற்றுகிறது.

மு. கோ. 'வியத்தல் வல்லரசு எனச் செருக்கல்; நன்றி— மக்கட்குச் செய்யும் நன்மை' என்பர். இவை காலப்போக்கால் ஆன கருத்து.

ஒ) ஒப்புமைப்பகுதி:

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை:

அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் வியந்து கெடும். குறள்.,474.

எம்மை அறிந்திலிர் எம்போல்வார் இல்லென்று
தம்மைத்தாங் கொள்வது கோளன்று — தம்மை
அரியரா நோக்கி அறனறியும் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள். —நாலடி.,165.

கற்றனவும் கண்ணகன்ற சாயலும் இற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தும் தானுரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்தில் தணியாத
பித்தனென் றெள்ளப் படும். —நாலடி.,340.

தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால் — தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தீன்பம்
நயவாமை அன்றே நலம். —நீதிநெறி.,19.

தான் தற்புகழ்தல் தகுதி அன்று —நன்.,52.

தன்னைப் புகழ்வானும் சாணேறி நிற்பானும்
பொன்னைப்புதைத்து வைத்துப் போவானும் பேய். —பழ.,

முற்றும்:

கன்று மினிய பொருள் பலவும் காதல் பகைவர் அறியாமே
நன்று நுகர்க நினைஎன்றும் நன்கு மதித்து வியவற்க
நன்றி பயவா வினையினையும் நண்ணும் மதத்தான் முடியற்க
வென்றி விளங்கப் புகழ்விளங்க விழுப்பம் விளங்க வேண்டிடினே.
—விநா.அரசி.,54.

44.10. காதல காதல் அறியாமை உய்க்கிற்பின் ஏதில ஏதிலார் நூல். (சசo)

உரைப்பகுதி:

அ) மணக்.: காதலிக்கப்பட்ட யாவற்றின்மேலும் செல்லுங் காதலைப் பிறரறியாமல் செலுத்துவானாயின், பகைவர் இவனைக் கொல்லுமாறு சிந்திக்கும் சிந்தனை இவன்மாட்டுச் செல்லாது அயலாம் எ—று.

நூல் என்பது அவர் கற்ற கல்வி.

ஆ) பரிதி.: தானொன்று விரும்பினதை ஒருவரும் அறியாமல் நடத்துவானாகில் சத்துருக்கள் எண்ணின எண்ணமெல்லாம் கெடும் எ—று.

இ, பரிப்.: காதலிக்கப் பட்டவற்றின் மேற்செல்லுங் காதலைப் பிறர் அறியாமல் செலுத்துவனாயின், பகைவர் இவனைக் கொள்ளுமாறு சிந்திக்கும் சிந்தனை இவன்மாட்டுச் செல்லாது; அயலாம்எ—று.

நூல் என்பது அவ்வேதிலாரது சித்தம். அதனாலேயே சிந்தித்தலின் நூல் என்றார். இது மேற்கூறிய குற்றமே அன்றி அறம் பொருள் இன்பத்துக்கு மாறாகாத பொருள்கள்மேற்செல்லும் ஆசையைப் பிறர் அறியின், அதுவே வாயிலாக வஞ்சிப்பர்; ஆதலான்

அக்காதலை அடக்காமையும் குற்றமென்று கூறப்பட்டது. வத்தராயன் யானை பிடிக்கப் போய்ச் சிறைப்பட்டான்.

ஈ) *காளி.:* பொன்னும், யானையும், நாடும், மற்றும், பிறவும் ஆகிய பொருள்களில் யாவை சிலவற்றைத் தாம் காதலித்தார். அதைத் தானும் பிறர் ஒருவரும் அறியாதபடி, தம் அகத்துள் அடக்கிச் செலுத்தவல்லவராயின், தாம் விரும்பின பொருள் எய்தும். இதுவும் அன்றிப் புறத்தனவாகியே போம்; யாவை எனின், மற்றுத் தாம் தாற் பரித்த பொருளைத் தலையழித்தற்கு ஏதிலார் எண்ணிய எண்ணங்கள் எ—று.

உ) *பரிமேல்.:* தான் காதலித்த பொருள்களை அவர் அக்காதல் அறியாமல் அனுபவிக்க வல்லனாயின் பகைவர் தன்னை வஞ்சித்தற்கு எண்ணும் எண்ணம் பழுதாம்.

அறிந்தவழி அவை வாயிலாகப்[1] புகுந்து வஞ்சிப்பாராகலின், அறியாமலுய்த்தால் வாயிலின்மையின்[2] வஞ்சிக்கப்படான் என்பதாம். காமம், வெகுளி, உவகை என்பன முற்றக் கடியும் குற்றமன்மையின், இதனால் பெரும்பான்மைத்தாகிய காமம் நுகருமாறு கூறி, ஏனைச் சிறுபான்மையவற்றிற்குப் பொதுவகை விலக்கினையே கொண்டொழிந்தார்.

ஊ) *கவிராசர்:* தன்னால் விரும்பப்பட்ட ஸ்திரீ முதலான பொருள்களை அவர்கள் அவ்வாசையறியாமல் அனுபவிக்க வல்லனாயின் பகையாளி, தன்னைவஞ்சிக்க நினைக்கிற நினைவு பழுதாம் எ—று.

ஏ) *பழைய 2:* 'காதலர் காதல்' பாடம். அரசன் தான் காதல் வைத்த தேவியரிடத்து, காதல் வையாத தேவியர் அறியாமல் அனுபவிக்க வல்லானாயின், பகைவர் வஞ்சித்தற்கு எண்ணும் எண்ணம் பழுதாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அறியாமை உய்க்கிற்பின்'—'பிற ரறியாமல் செலுத்துவானாயின் *மணக்.:* 'காதலித்த பொருளுக்கும் தனக்குமன்றிப் பிறர் எவர்க்கும் அறியாமல்' என்ற கருத்தினர் இவர். *பரிப்பெருமாள்* 'நூல் என்றது அவர் கற்ற கல்வியை' என்ற குறிப்பை அடியொற்றி 'ஏதிலார் சித்தத்தினாலேயே அவனை வெல்லுதற்கு மாயம் யாது எனச்சிந்தித்து

1. அவை வாயிலாக—தாம் காதலித்த பொருள்கள் வழியாக.
2. வாயிலின்மையின்—வழியின்மையான்.

இருத்தலின் நூல் என்றது சிந்தனையை' என்ற விளக்கந் தந்தனர். இதனுடன் 'காதல் என்றது மாதர் மேற்சொல்லும் மனப்பற்று மட்டு-மன்று; நேர்மையான முறையில் ஒன்றன்மேற் செலுத்தப் பெறும் ஆசையையும் பிறரறியின் தீங்காம்' என்ற இவர் விளக்கம் மிகச் சிறந்தது. குற்றமாகாத காதலும் குற்றமாய்ப் பகைவர்க்கு உபகாரப் படுதலை விளக்குகிறது.

காளிங்கர், பரிப்பெருமாளை ஒட்டிக் காமத்தொடு 'பிற பொருட் காதலும் பிறரறியின் குற்றமாய், இவன் கொலைக்குக் காரணமாதலுங் கூடும்' என்பதனை விளக்கி, 'அறியின் பகைவர், விரும்பிய பொருளை எய்த இயலாத வண்ணம் தடுக்கவும் செய்யலாம்; ஆதலால் அறியாமற் செலுத்துக. காதலித்த பொருளை எய்தலாம். பகைவர் எண்ணமுந் தோற்கும்' என விளக்கமுந்தருவர். இத்தனையும் குறளில் இல்லையா யினும், குறள் நிலைக்களனாக அனைத்தையும் பெறலாம் என்றறி விப்பது அவர் உரை.

தேவநேயர், 'காமம் கள் முதலாகச் சூது நீங்கலாக உள்ள விருப்பத்தைப் பிறரறியாமல் அரண்மனைக்குள் நிறைவேற்றிக் கொள்ளல் வேண்டும்; வெளியிற் போக வேண்டுமாயின், மாறுவேடம் பூண்டு சென்று, மறைவின் திரும்புதல் வேண்டும்' என 'அறியாமை உய்க்கிற்பின்' என்பதற்கு விளக்கந் தருவர்.

சாமி. சிதம்., ஈ.சபாபதி 'காதல காதல்' காதலித்த பொருட் கண் மேலுள்ள பற்றுள்ளத்தை என ஒரு தொடராக்காமல் 'காதலித்த பொருள்களையும், தமக்கு அவற்றின் மேல் உள்ள காதலையும்' எனப் பிரிப்பர்.

ஜி. வரத. 'தான் நுகர விரும்பிய பொருளை அதற்குத் துணை யாவார் அறியாமல், பெற முயல்வானானால்' என்பர். ஏனையோர் கூறுவதுபோலத் துணையாவாரும் பிறரும் அறியாமல் என்ற உரையே சிறந்தது.

இராம., 'ஆசைப்பட்டதை எல்லாம் அடைய விரும்புகிற அறியாமை நீங்கி? விட்டால்' எனப்புதிய பொருள் கொணருவர்.

பழைய 2, 'காதலர் காதல்' எனப்பாடங்கொண்டு, அரசன் தான் காதல் வைத்த தேவியரிடத்துள்ள காதலை' காதல் வையாத தேவியர், தெரியாதபடி நுகர வல்லனாயின்' எனப் புதியவுரை தருவது அரசன் இங்ஙனம் தன்னால் காதலிக்கப்படாத தேவியரும் அறிய அவன் மாற்றாளிடம் நடந்துகொள்வது அவனுக்குள்ள கல்லாமையே

காரணம் என விளக்கமும் தருவர். இவ்வுரை பலரை மணந்த மன்னன் நடந்துகொள்ளத் தெரியாமையால் பகைவர் வலையிற் சிக்குவன் என அவன் அங்ஙனம் சிக்காமைக்கு உபாயம் உணர்த்துகிறது.

வள்ளுவர் எல்லாப் பொருள்கள் மேலும் விருப்பத்தைப் பிறரறியாமல் நடத்த வேண்டும் என்று உபாயம் உரைக்க, உரையாசிரியர்கள் காமக் காதலையே எண்ணியும், பல மணங் கூடினாரைக் குறித்தும் திசை திருப்பிச் செல்கின்றனர். ஆதலால் குறளமைதிக் கேற்ப பொது வகையான மணக்குடவர், பரிமேலழகர் உரைகள் சிறந்தன. காதலையுய்த்தலாவது நுகர்தல் என்று கருதிய பரிமேலழகர் போலவே தேவநேயர், சி. இ., முதலிய பிற்காலத்தவர்களும் கருதுகின்றனர்

ஒ) ஒப்புமைப்பகுதி:

காய்ந்தெறி கடுங்கற் றன்னைக் கவுட்கொண்ட களிறு போல
ஆய்ந்தறிவுடைய ராகி அருளொடு வெகுளி மாற்றி
வேந்தர்தாம் விழைப எல்லாம் வெளிப்படார் மறைத்தல் கண்டாய்
நாந்தக உழவர் ஏறே! நன்பொரு ளாவ தென்றான் —சீவக., 2910.

பண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்பு முறை.

	செருக்கும்	இவறலும்	நினைத்துணையாம்	குற்றமே	வருமுன்னர்	தன்குற்றம்	செய்தபால	பற்றுள்ளம்	வியவற்க	காதல
மணக்.	2	3	10	1	8	9	4	5	6	7
பரிதி.	1	10	9	8	6	6	2	3	4	5
பரிப்.	2	3	10	1	8	9	4	5	6	7
காளி	1	2	7	8	5	9	4	3	10	6
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

44வது அதிகாரம் 'குற்றங்கடிதல்' முற்றிற்று.

45. பெரியாரைத் துணைக்கோடல்

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: பெரியாரைத் துணைக்கோடலாவது தம்மின் முதிர்ந்த அறிவுடையாரைத் தமக்குத் துணையாகக் கொள்ளுதல். அரசன் குற்ற மற்றானாயினும், தன்னின் முதிர்ந்த அறிவுடையாரைத் துணை யாகக் கொண்டு வினைசெய்ய வேண்டுதலின், இஃது அதன்பின் கூறப்பட்டது.

ஆ) பரிதி.: பெரியாரைத் துணைக்கோடலாவது பெரியாரைத் தனக்குத் துணைபெறுதல் எ—று.

இ) பரிப்.: பெரியாரைத் துணைக்கோடலாவது தம்மின் முதிர்ந்த அறிவுடையாரைத் தமக்குத் துணையாகக் கொள்ளுதல், அரசன் குற்றம் அற்றானாயினும் தன்னின் முதிர்ந்த அறிவுடையாரைத் துணையாகக் கொண்டு வினைசெய்ய வேண்டுதலின் அதன்பிற் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது மூவிருகுற்றமும்[1] முறைமையின் கடிதலின் காவற்சாகாடு[2] உகைத்தற்கு உரியனாகிய அரசன், தீநெறி விலக்கி, நன்னெறிச் செலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணை யாகக் கோடல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். பேரறிவு உடையராவார் அரசர்க்கும் அங்கங்கட்கும்[3] மானுடத் தெய்வக் குற்றங்கள்[4] வாராமல் காத்தற்கு உரிய அமைச்சர், புரோகிதர்.

ஊ) கவிராசர்: அஃதாவது — காமக் குரோத லோப மோக மத

---

1. மூவிரு குற்றம் — சென்ற குற்றங் கடிதலின் 431, 432 குறட்பாக்களில் கூறப்பட்ட குற்றங்கள் ஆறும் என்க.
2. நாடு காத்தலாகிய ஆட்சியை ஓர் உருளையாக உருவகித்தவாறு. வண்டி, தேர் என்பாரும் உளர்.
3. அங்கங்கள் — அமைச்சு நாடு அரண் பொருள் படை நட்பு என்பன.
4. 'தெய்வ மானிடக் குற்றங்கள்' எனவும் பாடம். இருவகைக் குற்றங்களின் விளக்கத் தைப் பின்வரும் 452ம் குறட்குப் பரிமேலழகர் உரையான் உணர்க.

மாத்சரியமென்னப்பட்ட குற்றங்களை நீக்கி அரசாளுகிற ராசா, பொல்லாத நெறிகளை விலக்கி, நல்ல நெறிகளிலே செலுத்தப்பட்ட அறிவுடைய பெரியோரைத் தனக்குத் துணையாகக் கொள்ள வேணும் எ—ம்

ஏ) பழைய 2: அஃதாவது, மூவிரு குற்றமும் முற்றக் கடிந்து காவற்சாகாடு உகைக்கும் அரசனைத் தீநெறி விலக்கி, நன்னெறி செலுத்தும் பெரிய அறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதல். அவர்கள் மந்திரியர், புரோகிதர், சேனாவரையர், முதுகுரவர் எனக்கொள்க.

மல்லர்: 'பெரியாரைத் துணைக் கொண்டால்' — அதாவது பெரியவர்களைத் தனக்குத் துணையாக்கிக் கொள்ளுகிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இராம., 'அறிவிலும், ஆற்றலிலும் அனுபவத்திலும் நம்மைக் காட்டிலும் பெரியவர்களைத் துணையாகக் கொள்வது'.

தேவநேயர், 'தன்னாட்சியைக் குற்றமின்றிச் செம்மையாக நடத்துதற்கு, மதிநுட்பமும் நூலறிவும் சூழ்ச்சித்திறனும் நல்லொழுக்கமும் உடைய பெரியாரைத் தன்னமைச்சராகத் துணைக் கொள்ளுதல்.

ஜி.வரத. 'அறிவாலும் செயலாலும் பெரியாரைத் துணையாகக் கொள்ளுதல்'.

கா.சு., 'தீநெறி விலக்கி நன்னெறியிற் செலுத்தும் பேரறிவுடையோரைத் துணைக்கொள்ளுதல்'.

குழந்தை, 'அரசனுக்குச் சொன்னாலும் எல்லாருக்கும் கொள்க'. முதிர்ந்த அறிவுடையாரைத் துணைக்கொள்க என்ற மணக்., பரிப்., உரைகட்கு ஒரு விளக்கம் போல அமைந்தது பரிமேலழகர் விளக்கம். அரசன் தன் கடமையறிந்து, காமம் முதலான ஆறு குற்றங்களையும் இயல்பாகக் கடிந்து, ஒழுகுவானாயினும், அவனையும் திருத்தவும், நன்னெறி செலுத்தவும் பெரியோர் துணை இன்றியமையாதது என்பது பரிமேலழகர் கருத்து. ஆனால், பரிமேலழகர் பெரியோர், ஆவார். அமைச்சரும், புரோகிதரும் ஆவர் என்கிறார். அமைச்சியலால் அமைச்சர் அரசற்குத் துணையாதலை வலியுறுத்தி—

இருக்கவும் ஈண்டும் உணர்த்துதல் ஏற்புடையதாகுமா? அரசர்க்குரிய ஐம்பெருங்குழு, எண்பேராயத்துள், அமைச்சரும், ஒற்றரும், தூதரும் நீங்க ஏனையோருள்ளும் முற்கூறிய மூத்தோரைக் கொள்க என்றலே ஏற்புடையதாகும். ஆயினும், அமைச்சியலாலும் படை முதலியவற்றானும் அவர்கள் இலக்கணங் கூறப்பட்டதேயன்றி, அரசன் அவர்களைத் துணையாகக் கொள்க என விதிமுகத்தாற் கூறவில்லை என்பதை எண்ணியமைக.

இங்ஙனம் குறியாது, பிற்கால உரையாசிரியர்களைப் போலப் பொதுவகையாற் கூறின் அரசன் அவ்வப்போது அதிற்றகுதியுடையாரைத் துணைக்கோடல் ஆம் என்பது பெறப்படும். சீர்தூக்கிச் சிந்தை கொள்க.

45.1. அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல். (சசக)

உரைப்பகுதி:

அ) மணக்.: அறத்தின் பகுதியறிந்து முதிர்ந்த அறிவுடையாரது கேண்மையை அவரவர் செய்தியாகிய திறங்களை அறிந்து, ஆராய்ந்து கொள்க எ—று.

இது புரோகிதரைக் கூட்டுமாறு கூறிற்று.

ஆ) பரிதி.: கல்வி கேள்வி அறிந்து தன்மத்தின்வழி நிற்பார் உறவை எந்த வகையினாலும் பண்ணிக் கொள்வார் எ—று.

இ) பரிப்.: அறத்தின் பாடு அறிந்து முதிர்ந்த அறிவுடையாரது கேண்மையை அவரவர் செய்தியாகிய திறன்களை அறிந்து ஆராய்ந்து கொள்க எ—று.

இது புரோகிதரைக் கூட்டுமாறு கூறிற்று

ஈ) காளி.: இவ்வாறு பெரியோரை இவ்வரசர் தமக்கு துணை கொள்ளும் இடத்துப் பல அறநூல்களாலே அறநெறிகளை அறிந்து, முதிர்ந்த உணர்வுடைய பெரியோரது நட்பின் திறப்பாட்டினை அறிந்து, மற்று இதற்குக் குறைபடாதவாறு தேர்ந்து கைக்கொள்க எ—று.

உ) பரிமேல்.: அறத்தினது நுண்மையை அறிந்து, தன்னின் மூத்த அறிவுடையாரது கேண்மையை அரசன் அதனது அருமையை ஓர்ந்து, கொள்ளும் திறம் அறிந்து கொள்க.

அறநுண்மை நூலானே அன்றி, உய்த்துணர்வானும் அறிய வேண்டுதலின், 'அறன் அறிந்து' என்றார். மூத்தல்—அறிவானும், சீலத்[1]தானும், காலத்தானும் முதிர்தல். அறிவுடையார்—நீதியையும் உலகியலையும் அறிதலை உடையார். திறன் அறிதலாவது நன்கு மதித்தல், உயரச் செய்தல், அவர்வரைநிற்றல்[2] என்பன முதலாக அவர் பிணிப்புண்ணும் திறன்[3] அறிந்து செய்தல்.

ஊ) கவிராசர்: தருமத்தினுடைய வழியை நன்றாகவறிந்து, தன்னிலும் பெரிய அறிவுடைய பெரியோர்களது கேள்விகளை நன்றாகக் கேட்டறிந்து கொள்ளுதலே அரசற்குச் சிறப்பு எ—று.

ஏ) பழைய 2: அறத்தின் உண்மையை அறிந்து, முதிர்ந்த அறிவுடையார் கேண்மையை அரசன் கொள்ளுந்திறமறிந்து ஆராய்ந்து கொள்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'அறன் அறிந்து' — 'அறத்தின் பகுதியறிந்து' மணக்.; ஆனால் 'புரோகிதரை எண்ணினராதல் போலும்'. 'அறிந்து அறன் மூத்த அறிவுடையார்' எனக்கூட்டி கல்வி கேள்வியறிந்து, தன்மத்தின் நிற்பார்' என்பர் பரிதி.; 'அறநெறிகளையறிந்து' என்பர். காளி,; 'அறத்தின் நுண்மையை அறிந்து' என்றுரை கூறி, 'நூலானும் உய்த்துணர்வானும் அறிந்து' என விளக்கமும் தருவர் பரிமேலழகர். பழைய 2, 'அறத்தின் உண்மையை உணர்ந்து' என்னும் பழைய உரை எல்லாவற்றானும் பரிமேலழகர் உரையை ஒட்டிச் செல்வதாகலின் 'அறத்தின் நுண்மையை உணர்ந்து என்றிருந்திருக்கும். பதிப்பிப்பார் அறிவால் நுண்மை உண்மையெனக் காணப்பெற்றது. கவிராசர் 'தரும வழியை அறிந்து' என்பர்.

பிற்கால உரைகளுள் குழந்தை அறத்தின் கூறுபாடறிந்து; கூறுபாடாவன பலவகை அறங்கள் என்பர்.

தேவநேயர், 'அறத்தின் இயல்பை யறிந்து' என்பர். ஜி.வரத. 'அறவாழ்க்கையை அனுபவத்தால் அறிந்து' என்பர். 'வாழ்நாள் முழுதும் அறத்தை அறிந்தே மூத்தவர், அதாவது ஏனைய பொருளாலும் இன்பத்தானும் மூத்தவரல்லார்' என்பது மு.கோ. உரை.

---

1. சீலம் — ஒழுக்கம்.
2. அவர்வரைநிற்றல் — அறிவுடையார் அறிவித்த எல்லையினீற்றல்.
3. பிணிப்புண்ணும் திறன் — கட்டுப்படும் வகை, பிணிப்புண்டலாவது அன்பால் நீங்காமல் இருத்தல்.

ஈ.சபாபதி, 'அறனறிந்து — அரசன் அறத்தின் நுட்பங்களைத் தானறிந்து' என அறனறிதலை அரசன் தொழிலாக்கி, முதிர்ந்த— அவ்வகையில் தன்னை விட முதிர்ந்த பெரியோர் எனக் கருதுவர். ஏனையோர் உரையினும் இவ்வுரைப்போக்கு சிறிது மாற்றமானது. சிந்தித்துக் கொள்ளுதற்கும் உரியது. கா.சு.வும் அங்ஙனமே.

'திறன் அறிந்து' — 'அவரவர் செய்தியாகிய திறன் அறிந்து' மணக்., பரிப்.; 'அத்தன்மத்தின் வழி நிற்பார்' பரிதி.; 'நட்பின் திறப்பாட்டினையறிந்து' காளி.; 'அருமையை யறிந்து' அதாவது நன்குமதித்தல், உயரச்செய்தல், அவர்வரைநிற்றல் என்பன முதலான அவர் பிணிப்புண்ணுந்திறன் அறிதல் என்பர் பரிமேல்:; 'கொள்ளுந் திறமறிந்து' பழைய 2. 'தகுதியை அறிந்து யார்யார் எந்தெந்தக் காரியத்திற்கு உதவுவர் என்ற திறங்களை யறிந்து' இராம.; 'அடுத்தும் கொடுத்தும் தேர்தல்' மு.கோ.; 'கொள்ளுவேமை அறிந்து' குழந்தை; 'தரம்தெரிந்து—தலை—இடை—கடை என்ற தரம் தெரிந்து' தேவநேயர்.

இவ்வுரைகளிலும் ஒரு சிலர் 'அரசன் பெரியோர்களின் தரந் தெரிந்து கொள்ளுக' என்றும், 'கொள்ளுந் திறம் அறிந்து கொள்க' என்னும் இக்கருத்தினவற்றைக் காணலாம். ஆகவே கொள்ளப்படும் பெரியோர் தரத்தையும், கொள்ளுந் தரத்தையும் அறிந்து கொள்ளுக என்ற இணைந்த உரை மிக இனிதாகும்.

திறன் தேர்ந்து அறிந்து கொளல் எனக்கூட்டித் திறன் தேர்தல்— கொள்ளும் வகைகள் பலவாதலான் இவர் எவ்வகையாற் கொள்ளத் தக்கார் என்பதைத் தேர்ந்து கொள்க என்பர்.

மணக்குடவர், 'புரோகிதரைக் கூட்டுமாறு கூறிற்று' அமைச்சரைக் கூட்டுமாறு கூறிற்று என்பதால் பின் வந்த பரிமேலழகரும் இதனைப் போற்றியுரைத்தமை பிழையாகாது என்க.

இவற்றுள் முதலடி பெரியோரினியல்பு கூறுவதாகவும், பின்னடி கொள்ளும் முறைமை கூறுவதாகவும் இருத்தலின் இவ்வமைப்பிற்கு மாறாத உரைகள் சிறந்தன.

ஒ) ஒப்புமைப்பகுதி:

அறனறிந்து மூத்த அறிவுடையார்:

''அறந்தலை நிரம்பமுப் படைந்த பின்னரும் கம்ப. 1426

அறிவுடையார்:

''மதிநெறியறிவு சான்ற மாலிய வான்.....'' கம்ப. 6944

அறிவுடையார் கேண்மை:

''தூ ய்மைசால் புணர்ச்சி பேணித் துகளறு தொழிலையாகிச்
சேய்மையோ டணிமை யின்றித் தேவரிற்றெரிய நிற்றி'' கம்.4226

முற்றும்:

''மேலவர் மெய்ப்பொருள் விரிக்கும் வீறுசால்பு
நூலினாற் பெரியவர் நுழைந்த சுற்றமா'' தூளா. 57.

''என்னைநீ ரிறைவ னாக்கி இராப்பகல் இயற்ற வன்றே
இன்னநீ ரின்ப வெள்ளம் இயைந்துயான் உயர்ந்தது.....'' தூளா. 254

முற்றும்:

''சிறியவர் அறிவினின் மிக்க விருத்தரை
அடிவீழ்ந் திடம்புகும் வீழிம் மிழலை'' சம்பந்தர். வீழிமிழலை.3.

''நுண்மை அறனும் மிகத்தெளிந்து நூலின் இயல்பும் உலகியல்பும்
வண்மை யுறத்தேற் றிடுமாற்றல் வல்ல ராகி வளர்சீலம்
திண்மை அறிவா யுளின்முதிர்ந்தோர்சேரநன்கு மதித்திடுக;
எண்மை புரியாது உயர்ந்திடுக; இயல்பும் வழியே நின்றிடுக.''
விநா. அரசி. 55.

ஒருபுடை:

''ஓர்வி னல்வினை யூற்றத்தி னாருரை
பேர்வி றொல்விதி பெற்றுள தென்றரோ
தீர்வி லன்பு செலுத்தலிற் செவ்வியோர்
ஆர்வ மன்னவற் காயுத மாவதே''. கம்ப. 1515.

45. 2. உற்றநோய் நீக்கி உறாஅமை முன்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல். (சசஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: அரசர் தமக்குற்ற நோயை விடுவித்துப் பின்பு துன்ப முறாமல் முன்னே காக்கவல்ல தன்மையுடையாரை விரும்பிக் கொள்க எ—று.

பெற்றியாரென்று பொதுப்படக்கூறினமையால், இது மந்திரி களைக் கூட்டுமாறு கூறிற்று.

ஆ) *பரிதி.:* ஒரு விதனம் வருமுன்னே விதனம் வராமல் காத்து, அப்படிக்கு விதனம் வந்தால் அந்த விதனத்தை நீக்கும் உபாயஞ் செய்யும் பெரியோரைப் பேணிக்கொள்வான் எ—று.

இ) *பரிப்.:* அரசர்க்கு உற்ற நோயை விடுவித்துப் பின்பு துன்பம் உறாமல் முன்பே காக்கவல்ல தன்மை உடையாரை விரும்பிக் கொள்க எ—று.

மேற் பெரியா ரென்று பொதுப்படக் கூறினார்: அவருள் மந்திரியைக் கூட்டுமாறு கூறிற்று.

ஈ) *காளி.:* வேந்தரானவர் தாம் யாதானும் ஒருவழியால் உற்றது ஓர் இடர் உளராயின் மற்று அதனையும் துடைத்துப் பின் ஓர் இடர் உறாதவாறு முன்னுறத் தேர்ந்து காக்கும் தன்மையாராகிய பெரியோரைப் பேணித் துணையாக் கொள்க எ—று.

இனி இங்ஙனம் தமக்கும் பெரியோரைத் துணையாகக் கொண்டோர்க்கும் மற்று இதுவேயுமன்றி, தீவினை உளராகிய சிறியோரைச் சேர்ந்து ஒழுகாமையும் வேண்டுமாகலின் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கிறது மேலை அதிகாரம்.

உ) *பரிமேல்.:* தெய்வத்தானாக மக்களானாகத் தனக்கு வந்த துன்பங்களை நீக்குமாறு அறிந்து நீக்கி, பின் அப்பெற்றியன வாராவண்ணம் முன் அறிந்து காக்கவல்ல தன்மையினை உடையாரை, அரசன் அவர் உவப்பன செய்து துணையாகக் கொள்க.

தெய்வத்தான் வரும் துன்பங்களாவன, மழையினது இன்மை மிகுதிகளானும், காற்று தீ பிணி என்ற இவற்றானும் வருவன். அவை கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச் செய்யும்[1] சாந்திகளான் நீக்கப்படும். மக்களான் வரும் துன்பங்களாவன பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் என்றிவர்களான் வருவன. அவை சாம பேத தான தண்டங்களாகிய[2] நால்வகை உபாயத்துள் ஏற்றதனால் நீக்கப்படும். முன்காத்தலாவது தெய்வத்தான் வருவனவற்றை உற்பாதங்களான்[3] அறிந்து, அச்சாந்திகளாற் காத்தலும்; மக்களான் வருவன—

1. சாந்தி—குற்றங்கள் நீங்கச் செய்யப்படும் மந்திர செபம் அருச்சனை வழிபாடு முதலியன
2. சாமம்—சமாதானங்களாற் காரியங்கொள்ளுதல்' பேதம்—சேர்ந்திருப்பார் இருவரைப் பிரித்து வைத்துக் காரியங் கொள்வது. தானம்—பொருள் கொடுத்துச் சாதித்தல். தண்டம்—படை கொண்டும், பலங்கொண்டும் வருத்திக் காரியங்கோடல் என்பன.
3. உற்பாதம்—பின்வருந் தீங்கை முன்னர் அறிவிக்கும் அடையாளங்கள்.

வற்றை அவர் குணம், இங்கிதம், ஆகாரம், செயலென்பனவற்றான் அறிந்து அவ்வுபாயங்களுள் ஒன்றாற் காத்தலுமாம். ஆகவே புரோகிதரையும் அமைச்சரையும் கூறியவாறாயிற்று. இங்கிதம்—குறிப்பான் நிகழும் உறுப்பின்தொழில். ஆகாரம்—குறிப்பின்றி நிகழும் வேறுபாடு. உவப்பன—நன்கு மதித்தல் முதலியன. இவை இரண்டுபாட்டானும் பெரியாரது இலக்கணமும், அவரைத் துணையாகக் கோடல் வேண்டும் என்பதூஉம், கொள்ளுமாறும் கூறப்பட்டன.

காரி.: பெற்றி—தன்மை. இங்கிதம்—குறிப்பால் நிகழும் உறுப்பின்தொழில். ஆகாரம்—குறிப்பின்றி நிகழும் வேறுபாடுகள்.

ஊ) *கவிராசர்:* தெய்வத்தானாவது, மனிதராலாவது தனக்கு வந்த பொல்லாங்குகளை நீக்கும் உபாயம் அறிந்து நிக்கி, பின் அப்படி வாராமல் முன்னே அறிந்து காக்கவல்ல அறிவுடைய பெரியோரை, அவர்கள் மனது சந்தோஷமாகும்படிச் செய்து துணையாகக் கொள்க எ—று.

ஏ) *பழைய 2:* தெய்வத்தினால், மக்களால், தனக்கு வந்த துன்பங்களை நீக்குமாறு அறிந்து நீக்கிப் பின், அப்படி வாராவண்ணம் முன் அறிந்து காக்கவல்ல தன்மையை உடையாரை அரசன் உவப்பன செய்து, துணையாகக் கொள்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், முதலிய பழைய உரையாசிரியர்கள் அனைவரும் 'பெற்றியார்' எனப் பொதுப்படக் கூறியதைக்கொண்டு மந்திரிகளைச் சுட்டுமாறு கூறிற்று என்றனர். *பரிமேலழகரும்* அவர் வழி வந்தோரும், 'நோய் என்பது மக்களாலோ தெய்வத்தாலோ வருவதாதலின் இரு கூறாகும். மக்களால் வந்த நோய் நீக்குவார் அமைச்சர் தெய்வத்தான் வந்தனவற்றையும் வருவனவற்றையும் சாந்திகளால் நீக்குவோர் புரோகிதர்' என்று கொண்டு இக்குறள் இருவகையாரையும் துணை கொள்க என்கிறது என்பர்.

'யாண்டும் இடும்பையில' என்ற குறளில் துன்பங்கள் தன்னைப் பற்றி வருவன, பிறவுயிர்களைப் பற்றி வருவன தெய்வத்தைப்பற்றி வருவன என மூன்றாகக்கூறிய *பரிமேலழகர்* இக்குறளில் மக்களாலும் — தெய்வத்தாலும் வருவன இரண்டைக் கூறித் தன்னைப் பற்றி வருந்துன்பங்களைக் கூறாது ஒழிந்ததேன்? என்பது சிந்தித்தற்குரியது. பெரியாரைத்துணைக்கோடல் தன்னைப் பற்றிய காமக்

குரோதங்களால் விளையுந்துன்பமும் நீங்குதலின் அதனையும் இணைத் திருக்கலாம் என்றே துணிய நேருகிறது. இதனையொழித்த உரை யாசிரியர் கருத்து அறிய இயலவில்லை.

குழந்தை, 'வந்த துன்பத்தைப் போக்கி, அது மீண்டும் வராதபடிப் பாதுகாப்பவர் பெரியோர்' என்றார். ஏனையோர் 'வந்ததைப்போக்கி' வர இருப்பவற்றை வருமுன் காக்கும் தன்மையர்' என்றனர். கம்பர் 'உற்ற துன்பத்தை நீக்கி, வந்த துன்பக்காரணங்களை ஆய்ந்து இங்ஙனம் எந்தெந்த வகையால் துன்பம் வரக்கூடும் என்பதையும் கண்டு, முன்னரே நீக்க வல்லவழிகள்' என்பர். 'உற்றது கொண்டு மேல் வந்து உறுபொருண்உணருங்கோளார்' மற்றது வினையின் வந்ததாயினும் மாற்றலாற்றும் பெற்றியர்' என்றமை காண்க,

ஒ) ஒப்புமைப் பகுதி:

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும் பெற்றியார்:

''உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணருங் கோளார்''
—கம்ப., 1405

''ஓர்வின் நல்வினை யூற்றத்தி னாருரை
போர்வி றொல்விதி பெற்றுள தென்றரோ'' —கம்ப., 1515

''நூலினா னுணங்கிய வறிவு நோக்கினர்
போலுமா லுறுபொருள் புகலும் பூட்சியோர்
காலமேல் விளைபொரு ளுணருங் கற்பிலாப்
பாலனீ யினையன பகரற் பாலையோ''. —கம்ப., 6263.

''விருத்தமே தகையவர் வினைய மந்திரத்
திருத்தியோ விளமையான் முறைமை யெண்ணலாய்''
—கம்ப., 6264.

''தன்னை யடைந்தார் வினைதீர்ப்ப தன்றோ
தலையாய வர் தங்கட னாவதுதான்'' —அப்பர்: அதிகை., 4.

''செயல்வேண்டா நல்லவை செய்விக்கும் தீய
செயல் வேண்டி நற்பின் விலக்கும்— இகல்வேந்தன்
தன்னை நலிந்து தனக்குறுதி கூறலால்
முன்னின்னா மூத்தார்வாய்ச் சொல்.'' —பழ—நா.,

''பெரியாரைத் துணைக்கொள்க''. —ஆத்தி., 83.

''மழையின் மிகுதி மழையின்மை வளிதீப் பிணியால் வந்ததுயர்
குழைவில் அமரர் தக்கோரைக் குறித்துச்சாந்தி யாற்கடியா
விழைவில் பகைவர் கள்வர்வினை செய்வார் சுற்றம் இவர்களினாம்
பிழையை உபாயம் நான்கானும் பெயர்க்கும் பெரியர் எனும் துணையே''.
—விநா. அரசி., 56

''நற்பான் மையினால் தேவர்களால் நண்ண லாகும் எதிர்வினையை
உற்பா தங்க ளான் அறிந்தே ஒழிப்பர் மனித ரால்வருவ
பொற்பா ரவரிங் கிதம்குணம்ஆ காரம் செயலால் புக்கறிந்து
பிற்பா லுறச்செய் குவர்அதனால் பெரியோர் துணையே துணையாகும்''
—விநா. அரசி. 57.

45.3. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல். (கசஙூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: செய்தற்கரியன எல்லாவற்றினும் அரிதே, தம்மின் முதிர்ந்த அறிவுடையாரை விரும்பித் தமக்குச் சுற்றமாகக் கொள்ளுதல் எ—று.

பெரியாரைக் கொளல் என்பது மந்திரி புரோகிதரைக் கூட்டிக் கொள்கை.

ஆ) பரிதி.: அரிதான காரியம் ஒருமலையை யெடுத்து ஒருமலை மேலே வைத்தல். ஒரு கடுகிலே ஏழு கடலை அடக்கல். இதிலும் பெரியது எது என்னில் பெரியாரைத் துணைக்கோடல் எ—று.

இ) பரிப்.; செய்தற்கு அரியன எல்லாவற்றினும் செய்தல் அரிது தம்மின் முதிர்ந்த அறிவுடையாரை விரும்பித் தமக்குச் சுற்றமாகக் கூட்டிக் கொள்ளுதல் எ—று.

பெரியார் என்றது மந்திரி புரோகிதரை; அவரைத் தேடிக் கூட்டுதல் அரிது என்றது.

ஈ) காளி.: கீழ்ச்சொன்ன கல்வியும் கேள்வியும் அறிவுடைமையும் குற்றங்கடிதலும் பிறவும் ஆகிய செயற்கரிய எல்லாவற்றினுள்ளும் பெரிதும் அரிது; யாது எனின், முழுதும் உணர்ந்த பெரியோரை ஓம்பித் தமக்குத் துணையாகக் கோடல் எ—று.

உ) *பரிமேல்.*: அப்பெரியவர்களை அவர் உவப்பன அறிந்து செய்து தமக்குச் சிறந்தாராகக் கொள்ளுதல், அரசர்க்கு அரிய பேறுகள் எல்லாவற்றுள்ளும் அரிது.

உலகத்து அரியன எல்லாம் பெறுதற்குரிய அரசர்க்கு இப்பேறு[1] சிறந்தது என்றது, இதனால் அவையெல்லாம்[2] உளவாதல் நோக்கி.

ஊ) *கவிராசர்.*: முன்னே சொன்ன மந்திரி முதலான பெரியோர்களை அவர்கள் மனது சந்தோஷமாம்படி செய்து, தமக்கு மெத்த சினேகிதராகப் பண்ணிக்கொள்ளுகிறது. ராசா முதலான பேர்களுக்கு அருமையான பொருள்கள் எல்லாவற்றிலும் மெத்த அருமை எ—று.

ஏ) *பழைய 2.*: பெரியவர்களை அவர் உவப்பன அறிந்து செய்து தமக்குத் தமராய்க் கொள்ளுதல் அரசர்க்கு அரிய பெறுவனவற்றுள்ளும் அரியது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அரியன' எவை என்பதில் சிறிது மாறுபடுகின்றனர் ஆசிரியர்கள். *பரிதி.*, 'மலையைத்தூக்கி மலைமேல் வைத்தல்', 'கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டுதல்' முதலியன போல என உவமங்காட்டி விளக்குவர் *காளிங்கர்* கீழ்ச் சொல்வன கல்வி, கேள்வி. அறிவுடைமை குற்றம்கடிதல் முதலான எல்லாம் செயற்கும் அரியன. அவற்றுளும் அரிது பெரியாரைத் துணைக்கோடல் என்பர். *பரிமேலழகர்* 'அரசன் உலகத்திலே அரிய பேறுகள் அனைத்தையும் பெறலாம். பெரியாரைத் துணைக் கோடல் அனைத்தையும் விட அரிது' என்பர். இவைகளுள் ஒன்றினொன்று அருமையாதலைக் காட்டியும் காட்டும் அருமையைக் கடந்து போகாமையின் அவருரை சிறந்தது.

'உலகத்து அரியன எல்லாம் பெறுதற்குரியர் அரசர்' எனப் *பரிமேலழகர்* காட்டுந்தொடர். உலகத்தில் மக்களில்—மகளிருள்—யானையுள்—குதிரையுள்— அரதனங்களுள்—மரங்களுள்— அனைத்திலும் உயர்ந்தன யாவும் அரசர்க்குரியன' என்னும் வடமொழி நியாயம் பற்றி எழுதியதாம். அத்தகைய அரியவற்றுள் எல்லாம் அரியது பெரியாரைத் துணைக்கோடல் என்பது.

---

1. இப்பேறு - பெரியாரைத் துணையாகக் கொள்ளும் இப்பேறு.
2. அவை எல்லாம் - உலகத்து அரியன எனப் பேசப்பெறும் பொருள்களனைத்தும்.

பேணுதலும் தமராக்கொளலும் உயரச்செய்தலாதலின், 'நவின் றோர்க்கினிமை' என்னும் தந்திர குணத்திற்கு உதாரணங்காட்டி, முற்கூறிய உயரச்செய்தலாக முடிதல் இனிமை பயப்பதாம் என எடுத்தாளுகிறது. **வீரசோழிய உரை** (செய். 180ல் பார்க்க) தந்திர குணம் — நூலுக்குள்ள பத்தழகு.

இராமலிங்கர் பெரியாரைப்பேணி — பெரியவர்களை விரும்பி யடைந்து, தமராக—அவர்கள் நமக்குத் துணைவராக என்று பிரித்துப் பொருள் காண்பர். **ஜி.வரத.** 'பெரியோரைப் போற்றி, அவர் விருப்பத்தின்படி நடந்து அவரை அறிவினால் தம்மவர் ஆக்கிக் கொள்வது' என உரை கண்டு, பெரியார் துணையால் நல்வழி நடப்பவன் அவரைத் தம்மவராகக் கொண்டு, தானும் அறிவாலும் அனுபவத்தாலும் பெரியோராக நடந்தால் சிறப்பனைத்தும் எய்துவன் என விளக்கம் தருவர். தானும் பெரியோனாக நடந்தால் என்ற வரையில் பொருள் அழைத்துச் செல்லப்படுகிறது. அதற்குக் குறள் இடந்தருமா? என்பதும் சிந்திக்க.

தேவநேயர், 'தமரா—சுற்றமாக' என்பர்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

முற்றும்:

பொலந்தார் இராமன் துணையாத்தான் போந்த
இலங்கைக் கிழவற் கிளையான் — இலங்கைக்கே
பேர்ந்திறை யாயதூஉம் பெற்றான் பெரியாரைச்
சார்ந்து கெழீஇயலார் இல் —பழ.நா., அரசியல்.17.

தீர்வி லன்பு செலுத்தலிற் செவ்வியோர்
ஆர்வ மன்னவற் காயுத மாவதே —கம்ப., 1515.

ஒ) மேற்கோள் பகுதி:

பெருந்.: நவின்றோர்க்கினிமை என்ற தந்திரகுணத்திற்கு மேற் கோள். —(வீர., 180)

45.4 தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாம் தலை. (சாசா)

உரைப்பகுதி:

அ) மணக்.: தம்மின் மிக்க அறிவுடையார் தமக்குத் தமராக ஒழுகுதல், வலியானவை எல்லாவற்றினும் தலையான வலிமை எ—று.

ஆ) *பரிதி.*: செல்வம் கல்வி அறிவு தம்மிலும் பெரியாரைத் தமக்கு உறவாகப் பண்ணிக் கொள்ளுதல் வன்மைக்குள் வன்மை எ—று.

இ) *பரிப்.*: தம்மின் மிக்க அறிவை யுடையார் தமக்குத் தமராகி ஒழுகுதல் வலியானவை எல்லாவற்றிலும் தலையான வலி எ—று.

இவர்கள் உண்டாகவே யானை குதிரை படையினால் உண்டான வலியினும் மிக வலியுடையவனாவன் என்றது.

ஈ) *காளி.*; குலத்தானும் குணத்தானும் கல்வியானும் தம்மின்சிறந்த பெரியாரை இவ்வரசர்க்குத் துணையாகக் கொண்டு ஒழுகுதலே வன்மையுள் எல்லாம் தலைப்பாடுடைய வலியானது எ—று.

உ) *பரிமேல்.*: அறிவு முதலியவற்றால் தம்மின் மிக்கார் தமக்குச் சிறந்தாராகத் தாம் அவர்வழி நின்று ஒழுகுதல், அரசர்க்கு எல்லா வலியுடைமையினும் தலை.

பொருள் படை அரண்களானாய வலியினும் இத் துணைவலி சிறந்தது என்றது. இவர் அவற்றான் நீக்கப்படாத தெய்வத்துன்பம் முதலியனவும் நீக்குதற்கு[1] உரியராகலின்.

ஊ) *கவிராசர்.*: அறிவு முதலான நல்ல காரியங்களிலே தன்னிலும் பெரியவர்களைத் தமக்கு நல்ல உறவாகப் பண்ணிக்கொள்ளுதலும் அந்தப் பெரியவர் சொற்படி கேட்டு நடத்தலும் ராசாக்களுக்குச் சகல பலத்திலும் மிகுந்த பலம் எ—று.

திரவியம், சேனை, நல்ல பத்திரமான இடம் இவைகளைப்பார்க்கத் தனக்கு வந்த குற்றங்கள் எல்லாவற்றையும் தீர்க்கும் பெரியவர்களுடைய உறவே மெத்த நல்லது.

ஏ) *பழைய* 2: அறிவு முதலியவற்றால் தம்மின் மிக்கார், தமக்குத் துணையாகத் தம் வழி ஒழுகுதல், அரசர்க்கு வலியுடைமையுள் எல்லாந் தலைமையான வலிவுடைமையாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'தமரா ஒழுகுதல்' என்பதனை அரசன் தொழிலாக உரைக்கும் உரைகள் *மணக்., பரிப்., பரிமேல்.*, உரைகள். இவ்வுரை பெரியோர் என்னும் எழுவாயை தமர் ஆக என்பதனோடு முடித்து அதாவது பெரியார் என்னும் எழுவாய் 'ஆக' என்னும் எச்சப் பயனிலை ஏற்று, அரசன் வினையாகிய ஒழுகுதல் என்னும் பிறவினை கொண்டு முடிவதாக இயங்குகிறது.

1. 'முதலியனவும்' என்றது மக்களான் வருந் துன்பங்களை.

காளிங்கர் இவ்வரசர்க்குத் துணையாக தம்மிற் பெரியாரைக் கொண்டு ஒழுகுதல் என்பது அரசன் தொழிலாக அன்றி அரசர்க்கு நீதி சொல்லும் வேற்றோர் கூற்றாக முடிகின்றது. ஆதலால், துணைக் கொள்வோன் பெரியோர் தம் பேணுதலானும் பிறவற்றானும் என்றும் தம்மவராகவே நடந்துகொள்ள ஒழுகுதல், என்ற கருத்தினதாகும் உரைகளே இயலுக்கும் அதிகாரத்திற்கும் ஏற்புடையதாகும்

பெரியோர் தமராக தாம் அவர் வழி நின்று ஒழுகுதல் என்ற **பரிமேலழகர்** உரையும் வழிவரும் உரைகளும் மிகச் சிறந்தன.

'தம்மிற் பெரியார்' — 'அறிவாற் பெரியார்' **மணக்., பரிப.**; 'செல்வம், கல்வி, அறிவு இவற்றான் தம்மிற் பெரியார்' **பரிதி.**; 'குலத்தானும், குணத்தானும், கல்வியானும், தம்மிற் பெரியார்' **காளி.**; 'அறனறிந்து மூத்த அறிவாற் பெரியார்' **இராம.**; 'அறிவு முதலியவற்றால் பெரியோர்' **பரிமேல.**; 'அறிவாலும் அனுபவத்தாலும்' **தேவநேயர்**; 'பெரியோர்களின் அறிவும் அனுபவமும் தான் அரசர்க்குத் துணையாவன' **ஜி.வரத. காளிங்கர்** 'கூறும் குலமும் குணமும் கல்வியும் நேரே துணையாகும் அறிவுக்கும் அனுபவத்திற்கும் துணையாவன' எனக் கருதிக் **காளிங்கர்** இணைத்தனர் போலும்.

மு.கோ. 'பெரியார் தமரா ஒழுகுதல்' என இயைத்துப் பெரியோர்கள் தாமாகவே வந்து தம்முறவுபோல நடத்தல் தம்மிற் பெரியோர் — பெரியாருட் பெரியோர் பிளேற்றோ போன்றவர் என நயம் காண்பர். இந்நயம் நுகர்தற்குரியவற்றுள் ஒன்று.

படை முதலிய வன்மைகளும் பெரியோரின் அறிவு. செயலாற்றுந் திறம் முதலிய கொண்டு இயங்குதலான் வன்மையுள் எல்லாந் தலையாயிற்று என்பதாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

ஆர்வ மன்னவற்கு ஆயுத மாவதே செவ்வியோர் —**கம்பராமா., 1515.**

நல்ல தேறினைந் தாயது நாலுமுன்
சொல்லு வான்றுணி நின்றது தோன்றனீ
செல்க வாண்டவர் சேருதி சேர்ந்தபின்
இல்லை நின்வயி னெய்த கில் லாதவே —**கம்பராமா., 2754.**

45. 5. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். (சசநு)

உரைப்பகுதி:

அ) மணக்.: அரசன் தன்னைச் சூழ்ச்சியாற் கொல்ல நினைப் பாரைத் தானும் சூழ்ச்சியால் கொல்லவல்லவனாதல்; காரியமெண்ண வல்லார் தனக்குக் கண்ணாக வொழுகலான் எ—று.

ஆ) பரிதி.: தன்னிற் பெரிய பலமான அரசரைத் தான் உறவு கொள்ள வேண்டினால் அவருக்கு இஷ்டமான பேரைத் துணையாகப் பண்ணிக் கொள்வான் எ—று.

இ) பரிப்.: அரசன் தன்னைச் சூழ்ச்சியாற் கொள்ள நினைப்பத் தானும் சூழ்ச்சியாற் கொள்ள வல்லனாதல்: காரியம் எண்ண வல்லார் தனக்குக் கண்ணாக ஒழுகலானே எ—று.

பகைவர் சூழ்ச்சியால் தேற்றாமையால் அவரைத் தோள் வலியாற் கோடல் அரிதாம்; ஆகலாற் சூழ்வார் கண்ணாக ஒழுக வேண்டும் என்றது.

ஈ) காளி.: மறைமுதலாக இராச நீதிக்கு அடுத்த முறைநெறியும், நெறி அல்லதும் பிரித்ததும் ஆராயினும், பெரியோரைத் தனக்கு அவற்றை விளங்கக் காட்டும் கண்ணாகக் கொண்டு ஒழுகவேண்டு தலான் உலகத்து மன்னனானவன் இங்ஙனம் அவற்றைப் பழுதறத் தேரும் பெரியோரைத் தான் ஆராய்ந்து கைக்கொள்க எ—று.

உ) பரிமேல்.: தன்பாரம்[1] அமைச்சரைக் கண்ணாகக் கொண்டு நடத்தலான் அரசன் அத்தன்மையராய அமைச்சரை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்க.

இரண்டாவது விகாரத்தால் தொக்கது. தானே சூழவல்லனா யினும் அளவிறந்த தொழில்களான் ஆகுலம்[2] எய்தும் அரசன்பாரம் அதுவே தொழிலாய அமைச்சரான் அல்லது இனிது நடவாமை பற்றி, அவரைக் கண்ணாகக்[3] கூறினார். ஆராய்தல்—அமைச்சியலுள் சொல்லப்படும் இலக்கணத்தினர் என்பதனை ஆராய்தல். இவை

1. தன் பாரம்—தனது அரசியற் பொறுப்பு. 'ராஜ்யபாரம்' என்பது வழக்காதலின் பாரம்- என்றனர்.
2. 'சூழ்வார் கண்ணாக' என்பதில் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது.
3. ஆகுலம்—துன்பம்.

மூன்றுபாட்டானும் பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்புக் கூறப் பட்டது.

ஊ) **கவிராசர்:** ராசா மந்திரிகளைத் தன் கண்போலப் பார்த்து நடத்திவருதல் முறைமை, அப்படிப்பட்ட மந்திரிகளை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்ளுக எ—று.

ஏ) **பழைய 2:** அரசன் தன் பாரம் அமைச்சன் கண்ணாகக்கொண்டு நடத்தலால், அத்தன்மைத்தாகிய அமைச்சரை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்க.

மல்லர்: ராசாவைச் சுத்திக்கொண்டு இருக்கிற மந்திரிகள் அவருக்குக் கண்போலேயிருந்து அவர்ளே சீர்மைக்காரியங்களை நடத்தினால் தன்னைச் சுத்திக்கொண்டிருக்கத் தக்கவர்களை ஆராய்ந்து பார்த்துத் தமக்குத் துணையாக்கிக் கொள்ள வேண்டியது எ—று.

கண்ணுக்கு மோசமிருந்ததனால் செவ்வே நடக்கப்படாது ஆகை யால் ராசாவுக்குக் கண்ணாயிருக்கிற மந்திரிகள் நல்லவர்களாயிராதே போனால் ராசா தன் தொழிலிலே செவ்வே நடக்கமாட்டான் என்கிற தினால் அவர்களுடைய குணங்களைப் பார்த்து, ராசா அவர்களைத் தன் கிட்ட வைக்கவும் தள்ளவும் வேணும் என்பது கருத்து.

சூழ்வார்—சுத்தியிருக்கிறவர்கள்; ஒழுகல்—நடத்தல்; மன்னவன்—ராசா; சூழ்வாரை—சுத்தியிருக்கிறவர்களை; சூழ்ந்து—ஆராய்ந்து; கொளல்—கொள்ளுதல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'சூழ்ச்சியால் வெல்ல நினைக்கும் பகைவரைத் தோள் வலி கொண்டு வெல்ல இயலாது. பெரியோரோடு சூழ்ந்து சூழ்ச்சியால் வெல்க' என்னுங் கருத்தினது *மணக்குடவர்* உரை. *பரிப்பெருமாளும்* இந்நோக்கினரே. 'கன்றைக் காட்டி மாட்டை வசப்படுத்துவது போல் பேரரசனை உறவு கொள்ள வேண்டின் அவனுக்கு மிக நெருக்க மானவரோடு கலந்து அவர்களையே கண்ணாகக் கொண்டு உறவு கொள்க' என்கிறது *பரிதியுரை*.

'மன்னவன் வேத ஆகம நீதி நூல்களையும் போர்நூல்களையும் தானாக எவ்வளவு படித்திருந்தாலும் தெளிந்த பெரியோர்களிடம் கலந்து தெளிக' என்கிறது *காளிங்கர்* உரை. 'சூழ்ந்து கொளல்' *காளி., பரிமேல்., பரிப்., முதலியோர்* 'அமைச்சரை அமைச்சர்க்குரிய

இலக்கணங்கள் அமைந்தவரா? என்று ஆய்ந்து கொள்க' என்பர். ஏனையோர் 'அமைச்சர்களைக் கண்ணாகக் கொண்டு பகைவன் சூழ்ச்சிகளையும் வெல்லும் உபாயத்தையும் ஆய்ந்து தெளிக' என்பர்.

இவற்றுள் அமைச்சரை யாய்ந்து கோடல் 'தெரிந்து தெளிதல்', 'தெரிந்து வினையாடல்' முதலிய அதிகாரங்களால் விளக்குவதால் ஈண்டும் பெரியோரையே துணைக் கொள்க என்பதே கூறப்பட்டதாதல் தெளிவு. பெரியோரைத் துணைக்கொண்டு பகைவர் சூழ்ச்சிகளைச் சூழ்க என்பதே துணைக்கோடலின் பயன்கூறுவதாக அமைகிறது.

ஆய்ந்து அறிவு சொல்லக்கூடியவர்களே அரசனுக்கு வழி காட்டும் கண். அத்தகையவர்களை ஆய்ந்து துணைக்கொள்க என்பது இராமலிங்கனார் உரை.

மந்திரிகளைக் கண்ணாகக் கொண்டே அரசு இயங்குதலால் அரசன் மந்திரவினைஞரைத் தேர்ந்து கொள்க என்பது தேவநேயர் உரை.

சூழ்வார் — அரசனைச் சூழ்ந்திருக்கும் பெரியோர், அவர்கள் வாயிலாக உலகத்தைத் தெளிந்து அரசு நடத்துதலால் அரசன் அவர் கள்துணையைப் பெறுக என்பது ஜி.வரத. உரை.

சூழ்வார்– அரசனைச் சூழ்ந்துள்ள அமைச்சர் புரோகிதர் சேனாபதியர் முதலியோர். இவர்கள் அரசுக்குக் கண்போல்வர் ஆதலால் இவர்கள் வரையும் சூழ்ந்து செயற்படுக என்பது மயிலை சிவமுத்து உரை.

ஈக்காடு சபாபதி முதலியாரும், பரிமேலழகர் கவிராசர் முதலியோரைப் பின்பற்றுவர்.

இவற்றுள் அமைச்சு, ஒற்று, தூது முதலியவற்றால் பின்னர்த் தனித்தனியே வினைகோடலும், வினையாற்றலும் கூறுதலின் இது அறிவானும் அனுபவத்தானும் சூழ்ச்சியானும் தேர்ந்தபெரியோர் கள் அனைவரையும் கொள்க என்றலே சிறப்பு.

ஒ) ஒப்புமைப்பகுதி:

சூழ்வார் கண்ணாக ஒழுகலான்:

''கற்றார் பலரைத்தம் கண்ணாக இல்லாதார்
உற்றிடர்ப் பட்ட பொழுதின்கண் தேற்றம்

மரையா துணைபயிரும் மாமலை நாட
சுரையாழ் நரம்பறுத் தற்று.'' —பழ.நா. அமைச்சர்., 3.

''கண்போற் காதல்நின் கழிபே ரமைச்சன்''. —பெருங்., 2.11. 167.

''உற்றது முடிக்கும் உறுதி நாட்டத்துக்
கற்றுப் பொருள்தெரிந்த கண்போற் காட்சி
அருமதி அமைச்சர் திருமதில் சேரி.'' —பெருங். 3. 3. 93—95.

''ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்
கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்.....
கொற்றம் கொள்குறிக் கொற்றவற் கென்பவே''. —சீவக., 1921.

''...நம்பிதன் கண்க ளாக'' —சீவக., 2916.

''மந்திரக் கிழவர் கண்ணா மக்கள்தன் தாள்க ளாகச்
சுந்தர வயிரத் திண்தோள் தோழராச் செவிகள் ஒற்றா
அந்தர உணர்வு நூலா அரசெனும் உருவு கொண்ட
எந்திரம் இதற்கு வாயாத் தூதுவர் இயற்றப் பட்டார்'' —சூளா.,565.

''மற்றவன் மனமும் கண்ணும் வாழ்க்கையும் வலியும் சால்பும்
அற்றமில் அரசும் கோலும் ஆபவர் அமைச்சர் அன்றே''. —சூளா.,மந்திர.6

''கண்அனார் கருத்துட் கொண்டு'' —சூளா.,1862.

'வீரக், கழலி னாற்கொரு கவசமும் கண்ணுமாய் நடப்பார்''.
—திருவிளை.பன்றி.மந்திரி.,12.

''கற்றறிந்தோ ராதலினால் காவலற்குக் கண்போன்ற
முற்றுணர்ந்த அமைச்சரினும் முதலமைச்ச ராய்த்திகழ்வார்.''
—திருவிளை.வாத.உபதே.7.

முற்றும்:

''.....மந்தி ரத்தொழில்
நிரம்பிய முதியரும் சேனை நீள்கடல்
தரம்பெறு தலைவருந் தழுவத் தோன்றினான்.'' —கம்பராமா.,6203.

''ஊழ்வர வன்ன தேனு மொருவகைக் கரும மெல்லாஞ்
சூழ்பவர் சூழ்ந்த சூழும் சூழ்ச்சியுட் டோன்று மன்றே
யாழ்பகர்ந் தனைய தீஞ்சொ லமிழ்தனா ரேனுஞ் சூழ்ச்சி
வாழ்பவர் வல்ல ராயின் மன்னராய் மலர்ப வன்றே''. —சூளா.,249

''.....சூழ்கழ லரசர் வாழ்க்கை
தந்திர மறிந்து சூழ்வான் சூழ்ச்சி சார்ந்த தமையல் வேண்டும்'' —சூளா.,252.

சூழ்வார் ஒருபுடை:

''அந்தணர் ஒழுக்கமும் அரசர் வாழ்க்கையும்
மந்திர மில்லையேல் மலரு மாண்பில''. —சூளா.,237.

''மண்ணியல் வளாகங் காக்கு மன்னரால் வணக்க லாகாப்
புண்ணிய நீர ரேனும் புலவராற் புகலப் பட்ட
நுண்ணிய நூலி னன்றி நுழைபொரு ளுணர்தல் செல்லாது
எண்ணிய துணிந்து செய்யுஞ் சூழ்ச்சியுமில்லை யன்றே''. —சூளா.,242

ஒருபுடை:

''அறிவோ பிணையோ என்னு மரசே யரசே யென்னும்'' —கம்பராமா., 172

45.6. தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச் செற்றார் செயக்கிடந்த தில். (சசசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: தகுதியுடையார் இனத்தானாய்த் தானும் அவரோ ஒக்க ஒழுக வல்லவனைப் பகைவர் செய்யக் கிடந்ததொரு நெறி இல்லை எ—று.

இஃது இவனைப் பகைவரால் வெல்லல் ஒண்ணாது என்றது.

ஆ) பரிதி.: தக்கார் மிக்கார் தனக்குத் துணையாக கொண்டிருப்—பவனைச் சத்துருக்களால் ஒன்றுஞ் செய்யப் போகாது எ—று.

இ) பரிப்.: தகுதி உடையார்க்கு இனவனாய்த்[1] தானும் அவரோடு ஒக்க ஒழுக வல்லானைப் பகைவர் செய்யக் கிடந்தது ஒரு நெறி இல்லை எ—று.

தகுதியுடையார்க்கு இனவன் ஆதலாவது, தன்னோடு ஒத்த வரிசை அவர்க்கு உண்டாக்குதலும் தன்னைக் கண்டாற் போல அவரை உலகத்தார் மதிக்கப் பண்ணுதலும் ஒக்க ஒழுகுதலாவது— ஒத்த சூழ்ச்சி உடையனாதல். இவனைப் பகைவரால் வெல்ல ஒண்ணாதென்றது.

1. இனவன் — இனமானவன்.

ஈ) *காளி.:* தமது அறிவு மிகுதியால் தகாதனவற்றுக்கு இடிக்கத் தகும்[2] சான்றோர் இனத்தனாய்க் கொண்டு இங்ஙனம் தான் ஒழுக வல்லவனை வேறு பகைவரால் செய்து முடிப்பக் கிடந்தது யாதும் இல்லை எ—று.

உ) *பரிமேல்.:* தக்காராகிய இனத்தை உடையனாய்த் தானும் அறிந்து ஒழுகவல்ல அரசனை, பகைவர் செய்யக் கிடந்ததொரு துன்பமும் இல்லை.

தக்கார்—அறிவு ஒழுக்கங்களால் தகுதியுடையார். ஒழுகுதல்—அறநீதிகளில் நெறிவழுவாமல் நடத்தல். வஞ்சித்தல், கூடினரைப் பிரித்தல், வேறுபகை விளைத்தல், என்று இவற்றானும், வலியானும், பகைவர் செய்யும் துன்பங்கள் பலதிறத்த ஆயினும், தானும் அறிந்து அறிவார் சொல்லுங்கொண்டு ஒழுகுவான்கண் அவற்றுள் ஒன்றும் வாராது என்பார், 'செற்றார் செயக்கிடந்தது இல்' என்றார்.

ஊ) *கவிராசர்:* முன்சொல்லப்பட்ட பேர்களைத் தனக்கு உறவாகிய இனங்களாகப் பண்ணி, தானும் மேல்வருங் காரியங்களை நன்றாக விசாரித்து அறிந்து நடக்கவல்ல ராசாவைச் சத்துருக்களாலே ஒரு காலத்திலும் ஒன்றும் செய்யக்கூடாது எ—று.

எ) *பழைய 2:* தக்கார் தனக்கினமாத் தானறிந்து நடந்து கொள்ள வல்ல அரசனைப் பகைவர் செய்யக்கிடந்த உபாயம் யாதும் இல்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

உரையாசிரியர்களும், சிலர் 'தான் ஒழுகவல்லான்' என்பதற்குத் 'தனித்த பொருளாழந்தாராது அவரொடு 'ஒக்க ஒழுகவல்லவனை', 'துணையாகக் கொண்டிருப்பவனை', 'ஒத்த சூழ்ச்சியுடையனாதலை' 'தான் ஒழுகவல்லவனை', என்ற அளவில் விட்டனர்.

பரிமேலழகரும் அவர் வழிவருவாரும் 'தானும் அறிந்து ஒழுக வல்ல அரசன்', 'தானும் மேல்வருங் காரியங்களை நன்றாக விசாரித்து அறிந்து ஒழுகுவானை', 'தானறிந்து நடக்கவல்லவனை' என பெரியோர் சொற்கேட்டு நடத்தல் மட்டுமன்றித் தானும் சிந்திக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினர்.

இராமலிங்கனார், 'தானும் மேலானமுறையில் ஒழுகவல்லவனை,

2. இக்கருத்து 'மிகுதிக்கண் மேற்சென்றிடித்தற் பொருட்டு' என்பதை எண்ணி இணைக்கப் பெற்றது.

அதாவது தானும் அவர்களை ஒட்டி நடந்து கொள்வானாயின்' என்பர். இது மணக்குடவர் முதலியோர் கருத்தினை ஒத்துப் பெரியோர் துணைக்கொண்டு நடத்தலையே வலியுறுத்தித் தன்னாய்வுக்கும் தேர்வுக்கும் இடர்தந்திலது. தேவநேயர் உரை பரிமேலழகர் போன்றார் கருத்தைத் தழுவித் தெளிவுபடுத்துவது. ஜி. வரத. 'தக்கார் தன்னைச் சூழ்ந்திருக்கத் தானும் அறவாழ்க்கையை நடத்தக் கூடியவனாக இருந்தால்' என ஒழுகுதல் — அறவாழ்க்கை வாழ்தல் என்றமைகின்றார். சாமி. சிதம்பரனாரும் இக்கருத்தினர். சி. இ. 'தான் அறிந்தொழுக வல்லானை' எனப் பரிமேலழகரோடு இணைவர். 'நடக்கவல்ல அரசனுக்கு' என மணக்குடவர் வகுப்பிற் சேர்வர். 'வல்லானைச் செற்றார் செயக்கிடந்தது இல்' என்றமையால் பெரியார் துணையிலாதான் தானே தனக்கு அழிவைத் தேடிக் கொள்வான் என எதிர்மறைப் பொருளும் காட்டுவர். மு.கோ., கா.சு., பரிமேலழகரின் கருத்தினர்.

'தக்கார் இனத்தனாய்' — 'தக்காராகிய இனத்தையுடையவனாய்' 'தக்கார்க்கு இனத்தவனாய்' என்ற இரு கருத்தால் பரிப்பெருமாளும் ஏனையோரும் இருபாற்படுகின்றனர். இதில் தக்காராகிய இனத்தையுடையவனாய் என்னும்போது மன்னன் தக்காருரைத்தவற்றை உடைமையாகக்கொள்கிறான் என அவன் சிறப்புத் தோன்ற இருக்கிறது. தக்கார்க்கு எனின், மன்னன் தக்கார்க்கு இனமாய் விடுகிறார் எனப்பெரியோர் சிறப்புத் தோன்ற நிற்கிறது. இப்பகுதி மன்னன் கடமையுணர்த்த வந்ததாகலானும் அதிகாரம் பெரியாரைத் துணைக்கோடலேயன்றிப் பெரியார்க்குத் துணையாதலன்மையானும் பரிமேலழகர் போன்றார் கருத்தே வலியுறும். அதனாலேயே தான் ஒழுக — தானும் அறிந்து ஒழுக என மன்னற்குத் தலைமை தந்தமையுங் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

தக்கார் இனம்:

''சான்றோரினத்து இரு'' ஆத்தி—45

முற்றும்:

''கொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைந்தபுல்
ஒல்காவே யாகும் உழவர் உழுபடைக்கு
மெல்லியரே ஆயினும் நற்சார்வு சார்ந்தார்மேல்
செல்லாவாம் செற்றார் சினம்''. —நாலடி., 178:

''பொலந்தார் இராமன் துணையாத்தான் போந்த
இலங்கைக் கிழவற் கிளையான் — இலங்கைக்கே

பேர்ந்திறை யாயதூஉம் பெற்றான் பெரியாரைச்
சார்ந்து கெழீஇயிலா ரில்''. —பழமொழி. ,257.

''நூலவர் நுழைவொடு நுழைந்து செல்லுமேல்
வேலவர் ஒழுக்கமும் வேலை காணுமே!'. —சூளா. ,235.

''உம்மையா னுடைமையி னுலகம் யாவையும்
செம்மையி னோம்பிநல் லறமுஞ் செய்தனன்'' —கம்ப. .1422.

''..... தோள்வலி தாங்கின ராயினும்
அமைச்சர் சொல்வழி ஆற்றுதல் ஆற்றலே''. —கம்ப. ,1519

''நல்லன நிமித்தம் பெற்றோம் நம்பியைப் பெற்றோம் நம்பால்
இல்லையே துன்ப மான தின்பமு மெய்திற் றின்னும்''. —கம்ப. ,3886

''உன்னையே உடையவற் கரியதெப் பொருளரோ''. —கம்ப. ,3903

''ஆகுநர் யாரையுந் துணைவ ராக்கி .....'' —கம்ப. ,4352

''சிறிய ராயினார் சார்பினை விழையன்மின் திறங்கெழு பெரியராம்
அறிஞ ராயினார் சார்பினை விழைமினோ அலரிதழ் விரிகொன்றை
வெறிந றும்தொடை எம்பிரான் சார்பினை விழைதலால் உரகங்கள்
மறுவி லாற்றல்சால் கலுழனை வினாயின வாழ்ந்தனை யோஎன்ன,''.
—காஞ்சி, பாணத., 6.

45.7 இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே கெடுக்கும் தகைமை யவர். (சசஎ)

உரைப்பகுதி :

அ) மணக்.: குற்றங் கண்டால் கழறுந்தன்மை[1] யுடையாரைத் தமக்குத் தமராகக் கொள்ளவல்லாரைக் கெடுக்குந் தகைமையுடையார் உலகத்து யாவர் எ—று.

இது கேடில்லை என்றது.

ஆ) பரிதி.: சிரிக்கச் சொல்லின் கெடுக்காமல்–அடிச்சுப் புத்தி சொல்லுகிறபேர் வார்த்தை கேட்டுத் துணையாகக் கொண்டிருப்பாரை யாராலே கெடுக்கலாம் எ—று.

இ) பரிப்.: குற்றம் கண்டால் கழறும் தன்மை உடையாரைத் தமக்குத்தமராகக் கொள்ள வல்லவரைக் கெடுக்கும் தகைமை உடையர் இவ்வுலகத்து யார்? எ—று.

1. கழறுந்தன்மை — இடித்துரைக்கும் வன்மை.

இது கேடில்லை என்றது. இதனானும் தம்மிற் பெரியராக மதித்து வைக்கப்படுமென்று கண்டு கொள்க.

ஈ) காளி.: மறந்தும், உணர்ந்தும் தகாதன செய்யுமிடத்து 'நமக்கு இது இயல்பல்ல' என்று கழறி நெருக்கும் பெரியோரை ஆள்வாரை மற்று யாரே தான் வந்து கெடுக்கும் தகைமைப்பாட்டினை உடையார்? யாரும் இல்லை எ—று.

உ) பரிமேல்.: தீயன கண்டால் நெருங்கிச் சொல்லும் துணையாந் தன்மையை உடையாரை இவர் நமக்குச் சிறந்தார் என்றாளும் அரசரை, கெடுக்கும் பெருமையுடைய பகைவர் உலகத்து யாவர்?

தீயன—பாவங்களும்[2] நீதியல்லனவும்[3] துணையாந்தன்மையாவது தமக்கு அவையின்மையும் அரசன்கண் அன்புடைமையும் ஆம். அத்தன்மையுடையார் நெறியின் நீங்கவிடாமையின், அவரை ஆளும் அரசர் ஒருவரானும் கெடுக்கப்படார் என்பதாம். நெருங்கிச் சொல்லும் அளவினோரை என்று உரைப்பாரும் உளர்[4]. இவை இரண்டு பாட்டானும் அதன்பயன் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்.: தீயனவாகிய பாவங்களும் நீதியல்லனவும் வாராத படி சொல்லி நடப்பிக்கவல்ல பெரியோர்களைத் தனக்குச் சிறந்த தோழராக உடைய ராசாவைக் கெடுக்கப்பட்ட பேர்கள் உலகத்து யாவரும் இல்லை எ—று.

ஏ) பழைய 2: தீயன கண்டால் நெருங்கிச் சொல்லும் துணை-யுடையாரை, இவர் நமக்குத் துணையென்றாளும் அரசரைக் கெடுக்கும் பெருமையுடைய பகைவர் உலகத்து யாவர்?

மல்லர்: செவ்வே நடவாதவிடத்திலே தனக்குக் கண்டிதமாய்ப் புத்தி சொல்லுகிற துணையின் குணத்தையுடையவர்களை அரசன் பட்சமாய் நடப்பித்தால் நீதியோடு ஆட்சிப் பாரம் பண்ணுவான் என்கிறதினாலே அவருக்கு எத்தனை பெலத்த பகைவர் இருந்தாலும் இவர்களால் ஒரு கேடும் வராதபடிக்கு அவருடைய நீதிக்குப் பயனாகத் தெய்வங் காத்துக் கொள்ளும் என்பது கருத்து.

---

2. பாவங்கள் — பாவத்தை உண்டுபண்ணும் கொலை, கள், சூது பொய், முதலியன செய்தல்.
3. நீதியல்லன — அற நூல்களிற் கூறப்பட்டனவற்றுள் இன்றைய உலக நிலைக்கு ஒவ்வாதவற்றை நீக்கி ஒத்தனவற்றை மட்டும் மேற்கொள்ளாது தன்மனம் போனபடி ஒழுகுதல்.
4. இடித்தல் — நெருங்கிச் சொல்லுதல். இடிக்குந்துணையார் — நெருங்கி நல்லன தீயன இவை என எடுத்துச் சொல்லும் பெற்றியாரை எனப்பொருள் கொள்வாரும் உளர் என்றது காளிங்கரை.

இடித்தல் — உறுதி செய்தல்; ஆள்வாரை — ஆள்கிறவர்களை; யார் — ஆர்; தகைமையவர் — பெருமையுள்ளவர்கள்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

ஏனையோரைக் காட்டினும் காளி., மன்னன் தகாதன செய்வது மறந்தும் செய்யலாம்; தெரிந்தும் செய்யலாம் என இரு ஏதுக் காட்டுவர்.

'இடிக்கும் துணையாரை' — (குற்றங்கண்டால்) 'கழறுந் தன்மையுடையவரை' மணக்., பரிப்.; 'அடித்துப் புத்தி சொல்கிற பேர்' பரிதி.; 'இது இயல்பல்ல கழறி நெருக்கும் பெரியோர்' காளி.

'நெருங்கிச் சொல்லும் துணையாந் தன்மையை உடையவர்' பரிமேல்.; பழைய 2; 'சொல்லி' கவிராசர். இவருள் இடிக்கும் என்பதற்குத் தொல்லோர் 'நெருக்கி' என்பர். பரிமேலழகர் 'நெருங்கி' என்பர். இவையிரண்டும் தன்வினையும் பிறவினையுமாய் ஓரடியிலிருந்தே இளைத்தனபோல் தோன்றுவதாயினும் 'நெருங்கி' என்பது அணுகி என்னும் பொருளிலும் நெருக்கி — இங்ஙனஞ் செய்யற்க என இடித்துரைத்து என்னும் பொருளிலும் வருதலைக் காண்க. ஆதலின் பரிமேலழகரினும் அவர் முன்னோர் பொருள் ஈண்டு எடுப்பாயுள்ளது. பின்னோரனைவரும் கடிந்து, இடித்து என்னும் கருத்தினரே யாவர்.

'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென்றிடித்தற் பொருட்டு' என்றாற்போல இடிக்குந்துணையார் என்றது அரசு, ஆணை, முதலியன கண்டஞ்சாது அவன் திருந்தும்படி எடுத்துரைக்கும் பேராற்றல் உடையார் என்பது விளக்கிற்று. 'ஆள்வாரை' என்றது, தன்னுயர்வும் பெரியார் நிலையும் இடித்துரைப்பாரை உடனே விலக்க வேண்டும் என்ற எண்ணம் இயல்பாகவே உண்டாகக்கூடும். சிற்றினமாவார் இதுகொண்டு மன்னன் மனத்தை மாற்றவும் கூடும். இந்நிலையிலும் ஏமாந்து போகாமல் ஆளுதல் வேண்டும் என்னும் அருமை தோன்ற நின்றது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

''இடிக்குங் கேளிர்''. —குறுந்., 58.

''மேனின்று மெய் கூறுங் கேளிர்'' —கலி.3–21.

இடிக்குந்துணை:

''நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு''. —குறள்., 784.

''கொதிநுனைப் பகழியான் குறிப்பி னல்லதொன்று
இதுநமக் கிசைக்கென வெண்ணு மெண்ணிலா
நொதுமலர் வெருவுறா நுவற்சி யாளர்பின்
அதுவவன் பகுதிக ளமைதி வண்ணமே.'' —சூளா., 58.

45.8 இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும். (சசஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: கழறுவாரை யில்லாத காவலில்லாத அரசன்[1] தன்னைப் பகைவராய் வந்து கெடுப்பார் இல்லையாயினும், தான் வேண்டியவாறு ஒழுகக்கெடும் எ—று.

ஆ) பரிதி.: அடிச்சுப் புத்தி சொல்லுகிற பெரியோரையல்லாமல் தன் விபரீத புத்தி[2]யினாலே மிகுத்த மன்னவன், கெடுப்பார் இல்லாத போதும் தானே கெடுவன் எ—று.

இ) பரிப்.: கழறுவாரை இல்லாத— காவல் இல்லாத அரசன் தன்னைப் பகைவர் வந்து கெடுப்பார் இல்லையாயினும் கெடும்: தான் வேண்டியவாறு ஒழுகி எ—று.

ஈ) காளி.: தனக்குத் தகாத காரியங்கள் செய்யுமிடத்துக் கழறி நெருக்கும் பெரியோரைத் தனக்கு இல்லாததனால் நல்லுறுதி பெறாத வேந்தன் மற்றுத் தன்னைக் கெடுப்பார் ஈண்டு இல்லையாயினும் தனது மறவியானும்[3] செல்வச் செருக்கினாலும் தானே கெடும் எ—று.

உ) பரிமேல்.: கழறுதற்கு உரியாரைத் தனக்குத் துணையாகக்

---

1. இல்லாத, ஏமரா என்னும் பெயரெச்சங்கள் அடுக்கி மன்னன் என்னும் பெயரைக் கொண்டு முடிந்தன.
ஏமம் மருவாத— ஏமரா என வந்தது. ஏமம்—பாதுகாப்பு.
இல்லாத—இல்லாமையின் எனப் பரிமேலழகர் ஏதுப் பொருட்டாய வினையெச்சமாகக் கொண்டு இடிப்பாரை யில்லாமையின் காவலற்ற மன்னன் என உரைப்பது.
'இல்லாத' என்பது மன்னன் என்ற பெயரைக் கொண்டு முடியாமையானும் இல்லாமையின் ஏமம் மருவாத என அடுத்து வரும் பெயரெச்சத்தின் ஏமரு என்ற தொழிற்பெயரைக்கொண்டு முடிதலானும் என்க.
2. விபரீத புத்தி—மாறுபட்ட அறிவு. 3, மறவியானும்—மறதியானும். 4. சிவக., சிந்., 1.

கொள்ளாமையின் காவலற்ற அரசன், பகையாய்க் கெடுப்பார் இல்லை ஆயினும் தானே கெடும்.

இல்லாத ஏமரா என்பது பெயரெச்ச அடுக்கு. கெடுப்பார் உளர் ஆவர் என்பது தோன்ற, இலானும் என்றார். தானே கெடுதலாவது பாகனில்லாத யானை போல நெறியல்லாநெறிச் சென்று கெடுதல்.

காரி.: 'இல்லாத' 'ஏமரா' என்பன பெயரெச்ச அடுக்கு. 'மூவா முதலா உலகம்'[4] என்பதும் அது.

ஊ) *கவிராசர்*: தீயனவாகிய பாவங்களும் நீதியல்லனவும் வாராத படி சொல்லி நடப்பிக்கவல்ல பெரியோர்களைத் தனக்குச் சிறந்த தோழராக உடைய ராசாவைக் கெடுக்கப்பட்ட பேர்கள் உலகத்து யாவரும் இல்லை எ—று.

ஏ) *பழைய 2*: 'இல்லாதவேமாரா' பாடம். இடித்துச் சொல்லும் தகுதியுடைய துணையாவாரைக் கொள்ளாமையால் தனக்கு ஏமம் இல்லாத அரசன், பகையாய்க் கெடுப்பார் இல்லையாயினும் தானே கெடும்.

இடி இடிப்பாரையில்லாத ஏமமாராத மன்னன் எனக் கொள்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஏமரா மன்னன்' — 'காவல் இல்லாத அரசன்' *மணக்.*, *பரிப.*; 'மிகுத்த மன்னன்' *பரிதி.*; 'நல்லூறுதி பெறாத மன்னன்' *காளி.*; 'காவலற்ற அரசன்' *பரிமேல்*. 'ஏமம் இல்லாத அரசன்' *பழைய 2*.

'பாதுகாப்பற்ற அரசன்' *இராம.*; 'காப்பற்ற அரசன்' *தேவநேயர்*; இங்ஙனம் பிற்காலப் புலவர்களும் மாறுபாடிலர். ஆனால் *பழைய 2* மட்டும் 'இலாத வேமாரா மன்னன்' எனப் பாடங் கொண்டது. அப்பாடத்திற்கு ஏற்பவே உரையும் அமைந்துள்ளது. வகர ஒற்றை உடன்படுமெய் என்று விலக்கினும் 'ஏமாரா' என்றாகிறது. அவரே ஏமம் ஆராத மன்னன் எனப் பிரித்துக் காட்டுவதால் ஏமம்—காவல், ஆராத—அதனைப் பொருந்தாத என்பதாம். ஏமம் ஆராத என்பதே ஏமாரா என்றாயிற்று இவர் கருத்துப் போலும். *தேவநேயர்* ஏ மருவு காப்புறுதல். ஏமரா — காப்புறாத என்பர். ஏனையோர் ஏமம் மருவு ஏமருவு என்றாயிற்று என்பர். *வை.மு.கோ.* ஏமா என்னும் வினைப்பகுதியினடியாக 'ஏமராத' என்னும் எதிர் மறைப் பெயரெச்சம் பிறந்தது. ஏமம் மருவு ஏமரு என்றலுமாம்

என்பர். 'கழாஅக்கால்', 'தழாத் தொடர்' என்பன போல ஏமம் மருவாத என்பது ஏமரா என்றாயிற்று என்பர் கோ.வ. 'ஏமரா — காக்கப்படாத' குழந்தை. ஏமரா என்பதற்குச் சொல்காணும் வகையால் வேறுவேறு வழியில் அழைத்துச் சென்றிருப்பதை யறியலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

உளைவன எனினும் மெய்ம்மை யுற்றவர் முற்றும் ஓர்ந்து
விளைவன சொன்ன போதும் கொள்கிலை விடுதி கண்டாய்
கிளைதரு சுற்றம் வெற்றி கேண்மைநம் கல்வி செல்வம்
களைவரு தானை யோடும் கழிவது காண்டி யென்றான்.

—கம்பராமா., 7431.

கடிக்கும்வல் லரவுங் கேட்கு மந்திரங் களிக்கின் றோயை
அடுக்குமீ தடாதென் றான்ற வேதுவோ டறிவு காட்டி
இடிக்குந ரில்லை யுள்ளவ ரெண்ணிய தெண்ணி யுன்னை
முடிக்குந ரென்ற போது முடிவன்றி முடிவ துண்டோ.

—கம்பராமா., 5310.

முடிப்ப முடித்துப் பின் பூசுவ பூசி
உடுப்ப உடுத்துண்ப உண்ணா — இடித்திடித்துக்
கட்டுரை கூறின் செவிக்கொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம். —நீதிநெறி.,31.

ஒ) மேற்கோள்பகுதி:

சுவாமி.: மறையாய் அடுக்கலுக்கு மேற்கோள் —இ.கொ., 120.

45.9 முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம் சார்பிலார்க்கு இல்லை நிலை. (சசசு)

உரைப்பகுதி :

அ) மணக்.: முதலிலாதார்க்கு இலாபம் இல்லையானாற்போல, தாங்குதலாகிய சார்பு இல்லாதார்க்கு அரசு நிலை நிற்றல் இல்லை. எ—று.

ஆ) பரிதி: முதற்பொருள் இல்லாற்கு லாபமில்லாதது போலப் பிள்ளையில்லாதாற்கு நிலைமையில்லை எ—று.

இ) பரிப்:. முதல் இல்லார்க்கு இலாபம் இல்லையாயினாற் போலத் தாங்குதலாகிய சார்பு இல்லாதவர்க்கு நிலை நிற்றல் இல்லை. எ—று

பெரியாரைத் துணையாகக் கொள்ளாதார்க்கு வரும் குற்றம் கூறுகின்றார் ஆதலின், முற்படப் பொருட்கேடு உண்டாம் என்று கூறினார்.

ஈ) காளி:. முன்னம் தமக்கு நெஞ்சுறுதியாகிய முதற்பொருள் இல்லாதாற்கு மற்று அஃதடியாகப் பின்பு பொலிந்து வரும் இலாபம் யாதும் இல்லையன்றே; மற்று அதுபோலத் தமது நீதி தளராமல் தாங்கும் தாணுவாகிய[1] சார்வில்லாதார்க்கு நிலை இல்லை எ—று.

மதலை—பாரந்தாங்கிய தூண்.

உ) பரிமேல்.: முதற்பொருள் இல்லாத வணிகர்க்கு அதனால்[2] வரும் ஊதியம் இல்லையாம்; அதுபோலத் தம்மைத் தாங்குவதாம் துணையில்லாத அரசர்க்கு அதனால்[3] வரும் நிலையில்லை.

முதலைப் பெற்றே இலாபம் பெறவேண்டுமாறுபோலத் தாங்குவாரைப் பெற்றே நிலைபெறவேண்டும் என்பதாம். நிலை—அரசர் பாரத்தோடு[4] சலியாது நிற்றல்.

ஊ) கவிராசர்: முதற்பொருளாகிய கையிருப்பில்லாத பேருக்கு அதனாற் படைக்கப் பட்ட லாபம் இல்லாததுபோல, தம்மைத் தாங்குந் துணைகள் இல்லாதபோது ராசாக்களுக்கு ஒருபொருளும் நிலைநில்லாது எ—று.

ஏ) பழைய 2: முதற்பொருள் இல்லாத வணிகனுக்கு ஆதாயம் இல்லையாம்; அதுபோலத் தம்மைத் துணையில்லாத அரசனுக்கு நிலையில்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

உரையாசிரியர்களிற் பெரும்பாலோர் 'மதலையாஞ் சார்பு' என்பதற்குத் 'தாங்குந் துணை' என்றதால் பரிதியார் 'பிள்ளை' எனப் பொருள் கண்டார். 'சிதலைதினப்பட்ட' என்ற நாலடியாரில் மதலையாய் மற்றதன் வீழுன்றியாங்கு, சூதலைமை தந்தைக்கண் தோன்றின் தான் பெற்ற புதல்வன் மறைப்பக்கெடும்' என்ற பாடலில்,

1. தாணுவாகிய—தூண் போன்ற; 2. அதனால்—பொருளால்.
3. அதனால்—துணையான்; 4. பாரம் அரசுரிமைம் பொறுப்பு.

மதலை தாங்குந்தூணாய்; பின் உவம ஆகுபெயராய்த் தாங்குந் தூண் போன்ற பிள்ளைகட்குப் பெயராயினமை காட்டப் பெறுகின்றது. ஆதலால் மதலை என்பது தாங்குந் தூணுக்கே இயற்பெயர். பிள்ளைக்கு ஆனது ஆகுபெயரான் என்க. ஆதலால் இங்குப் பிள்ளை எனப்பொருள் கோடல் அதிகார இயைபு உடையதன்று.

இங்ஙனமாதலை எண்ணிய *இராமலிங்கனார்*, *பரிதியார்க்கு* அரண் செய்வோர் போல, 'குழந்தையாகத் தம்மையணைப்பவர்களை இல்லாதவர்களுக்கு நல்ல நிலையிருக்காது' என உரை காண்பர். 'தாய் தந்தையர் பிள்ளையினிடம் தவறு கண்டுழி அடித்தும் இடித்தும் திருத்துதலும் அறிவுடைமை கண்டுழிச் சீராட்டிப்பாராட்டுதலுமாகிய இருவகைச் செயலும் உடையர். அதுபோலப் பெரியோர்களும் அரசனிடம் தகாதன காணின் இடித்தும், தக்கன காணின் புகழ்ந்து ஊக்கியும் உதவுவர்' என்ற கருத்து வர *இராமலிங்கர்* இங்ஙனம் விரித்தனர் போலும் எனலாம். ஆனால் *வள்ளுவர் பெருமான்* தவறு கண்டுழி இடித்துத்திருத்துதலையே இன்றியமையாமை பற்றிக் கூறுதல் காண்க.

மணக்குடவர் பொழிப்பும் பரிப்பெருமாள் விளக்கமும் ஒவ்வொரு குறட்கும் இரு பகுதிகளாக இரட்டையர் பாட்டைப்போல அமைந் துள்ளமையை யாண்டுங் காணலாம். ஆதலால் *மணக்குடவர்* பொழிப் புரையைக் கொண்டே *பரிப்பெருமாள்* கூறும் உரைவிளக்கம் உணரத் தக்கதாகும். இக்குறளின் உவமவாசகம் 'முதலிலார்க்கு ஊதியம் இல்லை' என்பது. பொருள் வாக்கியம் 'மதலையாம் சார்பு இலார்க்கு நிலை இல்லை' என்பது. பெரியாரைத் துணைக்கொள்ளாதார்க்கு வருங்குற்றம் கூறுகிறார். ஆதலின் முற்படப் பொருட்கேடுண்டாம் என்றார் எனின், 'மதலையாம் சார்பிலார்க்கு நிலை இல்லை' எனப் பெரியாரைத் துணைக்கொள்ளாத பேருக்கு ஆட்சி நிலையே இல்லை என்பது பெறப்படுதலின், ஆட்சி நிலைபெறுதல் பொருளான்மட்டும் அன்று; படை குடி அமைச்சு என்ற பல்லாற்றானும் ஆதலின் இங்ஙனம் கூறுதல் குற்றமாம். ஆகவே 'முதலிலார்க்கு ஊதியம் இல்லை' என்பதை எடுத்துக்காட்டுவமையாகக் கொண்டு முதலில்லாதவர்க்கு ஊதியம் இல்லையானாற் போலத் தாங்குவார் இல்லார்க்கு நிலை யில்லை எனக் கோடலே அமைவு ஆகும். *மணக்குடவரும்* இதனையே கருதுதல் காண்க. ஆதலால் பொருட்கேட்டை உவமமாகப் பெரியாரைத் துணைக் கொள்ளாதார்க்கு வருந்தீங்குகளை அளந்து காட்டத் துணிந்த ஆசிரியர் பொருட் கேடு உண்டாதலை முதற்கண் கூறி ஏனையவும் கெடுதலை வழிவழியாக உய்த்துணரவைத்தார் எனக் கருத்துக் கோடல் ஏற்றதாகும். 'நிலை' என்பது அரசு நிலைபெறு

தலையே குறிக்குமாதலின் அது நிலைபெறுதற்குரிய அனைத்தும் பெரியார் கையால் உண்டாம் என்க.

ஏனைய உரையாசிரியர்கள் 'முதலிலார்க்கு ஊதியம் இல்லை' என்பதற்கு, முதல்-கை முதலாகிய பொருள், ஊதியம், இலாபம் என வணிகர்க்குரிய முறையில் பொருள் கண்டனர். காளிங்கர் இத் தொடரையும் அரசற்கு உரியதாக்க வேண்டி முதல்—மனவுறுதி, ஊதியம்—பேறு அல்லது இலாபம் அது மனவுறுதியால் விளையும் ஏனைய பொருள் முதலியவற்றின் நிலைபேறுகள் என்றனர். 'நெஞ் சுறுதியாகிய முதற்பொருள்' என்ற உரைப்போக்கே உருவகமாதலை உணர்த்தி நிற்கிறது. ஆதலால் முதல் என்றது மனவுறுதியை என்றது உருவகப் பொருளேயன்றிச் சொற்பொருளன்மை தெளிக.

ஒ) ஒப்புமைப்பகுதி:

''முதலிலார்க்கு ஊதியம் இல்லை''. —பழமொழி. 312

மதலையாம்சார்பு:

''ஒருவனைப் பற்றி ஓரகத்திரு''. —கொன்றை., 10

சார்பிலார்க்கு இல்லை நிலை:

''துணையிலா தவற்கும் இன்றால் பகைப்புலம்
தொலைந்து நீக்கல்''.
—கம்பராமா., 3796.

45. 10. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே நல்லார் தொடர்கை விடல். (சநிo)

உரைப்பகுதி:

அ) மணக்.: பலரோடு பகைகொண்டால் எவ்வளவு துன்பமுறும்; அதனினும் பத்துமடங்கு துன்பமுறும் பெரியாரைத் துணையாகக் கொள்ளாது ஒழியின் எ—று.

ஆ) பரிதி.: துர்ச்சனர் பதினாயிரம்பேரைப் பகைகொள்வதிலும் பொல்லாது; நல்லோரைக் கைவிடல் எ—று.

இ) பரிப்.: பலரோடு பகைகொண்டான் எவ்வளவு துன்பமுறும்; அதனினும் பத்துமடங்கு துன்பமுறும் பெரியாரைத் துணையாகக் கொள்ளா தொழியின் எ—று.

இஃது இடுக்கண் வருமென்றது.

ஈ) காளி.: தான் தனியனாயிருந்து அளவிறந்த பலரோடும் பகை கொள்வதனினும் நூறு மடங்கு குற்றத்தை உடைத்து; இங்ஙனம் தெரிந்துணர வல்ல பெரியோரைத் துணையாகப் பெற்று வைத்தும் அவரது தொடர்ச்சியைத் தாம் கைவிடுதல் எ—று

உ) பரிமேல்.: தான் தனியனாய் வைத்துப் பலரோடும் பகைகொள் ளுதலின் பதிற்று மடங்கு தீமையுடைத்து, அரசன் பெரியாரோடு நட் பினைக் கொள்ளாது ஒழிதல்.

பலர் பகையாயக்கால் ''மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல், பேதுசெய்து பிளந்திடல்''[1] என்பவை யல்லது ஒருங்கு வினையாக் குறித்துச் செய்தாலும் ஒருவாற்றான் உய்தல் கூடும், நல்லார் தொடர் கைவிட்டால் ஒருவாற்றானும் உய்தல் கூடாமையின், இது செய்தல் அதனினும் தீது என்பதாம். இவை மூன்றுபாட்டானும் அது[2] செய்யாத வழிப்படும் குற்றம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: தான் தனியனாய்ப் பல பேர்களுடனும் பகையாய் இருக்கிறபோதிலும் பத்தத்தனை[3] பொல்லாதாம், பெரியாரோடு நட்புக்கொள்ளாதொழிதல் எ—று.

ஏ) பழைய 2: அரசன் மனமறிந்து பலரோடும் பகை கொள்ளுதலிற் பத்துமடங்கு அதிகமாகிய தீமையுடைத்து அரசன் பெரியாரோடு நட்பினைக் கொள்ளாது ஒழிதல்.

மல்லர்: எ—து தனக்குப் பலனில்லாமல் சமயத்திலே அனேகம் பேர்களைப் பகைக்கிறதைப் பார்க்கப் பத்துப் பங்கு பெரிய கேடு கொண்டிருக்கும் நல்லவர்களுடைய சினேகிதத்தை விடுகிறது எ—று.

அனேகம் பேர்களை பகைத்தால் அவர்கள் செய்யத்தக்க பொல்லாப்புக்கு எப்படியுந் தப்பிப் போகலாம். நல்லவர்களைத் தனக் குத் துணையாக்காத அரசன் அவர்களுடைய புத்திகேட்கிறதுக்கு அவகாசமில்லாமல் தன்னிடத்திலே அவசியமாய் நடக்கும் பாவங் களாலேயும் அநியாயங்களாலேயும் வரும்கேடு நீக்கமாட்டாததினால் அதைப்பார்க்க பெரிய கேடு என்பது கருத்து.

---

1. சிவக., 1920. 'முள்ளைக்கொண்டு முள்ளைக் களையுமாறுபோலத் தமக்குப் பகையாய் இருவரைத் தம்மிற் பிரியச் செய்து ஒருவரைக் கொண்டு ஒருவரைமோதுத லும் ஒருங்குகூடி வருவாரைப் பிரித்து, தம்மோடே கூட்டிக் கொள்ளுதல்' நச்சி., உரை.
2. அது—பெரியாரைத் துணைக் கொள்ளுதல்.
3. பத்தத்தனை—பத்து அத்தனை—பத்து அளவு.

பல்லார்—பலபேர்களை; கொள்ளல்—கொள்ளுதல்; பத்தடுத்த—பத்து விசை; தீமைத்து—பொல்லாப்புடைத்து; நல்லார்—அறிஞர்; தொடர்பு—சினேகம்; விடல்—விடுதல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவில் *பரிமேலழகருரை காளிங்கர்* உரையைத் தழுவிச் செல்கிறது. ஆனால் 'பத்தடுத்த தீமை' என்பதற்குக் *காளிங்கர்* 'நூறு மடங்கு குற்றம்' என்றார். *மணக்குடவர்* 'பத்து மடங்கு' என்றார். அதனைத் தழுவியுள்ளது *பரிமேலழகர்* உரை. *பரிதி* இக்குறளிற் குறிக்கப்படாத 'துர்ச்சனர் பதினாயிரம்பேரை' என உரை காண்கிறார். 'துர்ச்சனர்தங் கண்ணிற் கெட்டாத தூரத்தே நீங்குவதே நல்ல நெறி' என்பவாகலான் பதினாயிரவரோடு பகை கொள்ளின் என்னவாகும். ஆதலால் ஏனைய உரையாசிரியர்கள் போலப் பொதுமையில் 'பலரோடு பகைகொளலின்' என்பதே சிறந்ததாகும் 'பத்தடுத்த தீமைத்தே' என்பது. 'எழுபது கோடியுறும்' (639) 'எண்பது கோடி நினைந்தெண்ணுவன' என்பன போல அளவிறந்தமை கருத நின்றது காண்க. அதனாலேயே ஆசிரியர்களில் நூறு என்பாரும், பதினாயிரம் என்பாருமாகப் பலவுரைத்தனர் என்க.

நல்லார் நம்மை விட்டு அவர்களே விலகும்படிச் செய்தலோ அல்லது நாமாக அவர்களை விட்டுப் பிரிதலோ இரண்டையும் குறிக்கும் என்பர் இராமலிங்கனார்.

நல்லவரொருவரோடு பகைத்தல் பல்லோரோடு பகைத்தலின் தீது என்னாது 'தொடர் கைவிடுதல்' என்றது நல்லோர் ஒருவரோடு துணைகொள்ளின் 'நெல்லிற்குமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு, புல்லிதழ் பூவிற்குமுண்டு' எனப் பொறுத்துப் போவார். அவர்களாக விலகுவார். அரசன் கைவிடுவானாயின் அது பெருந்தீமையாய் முடியும் என்றவாறாம், 'கைவிடல்' என்பதனை மன்னன் தொழிலாகக்கூறலே சிறப்பு. 'அவர்களே விடும்படிச் செய்தல்' என்ற இராமலிங்கனார் உரை இவ்வதிகாரப் போக்கிற்கு உரியதாகுமா? என்பது சிந்தித்தற் குரியது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

தீமைத்தே நல்லார் தொடர் கைவிடல்:

பெரியாரோடு யாத்த தொடர்விடுதல் இன்னா. **இன்னா., 27**

.... நீதிநூல்
ஒதி னார்தமை வேறுகொண் டோதினான். —சீவக., 240.

முற்றும்:

ஆன்றமை கேள்விய ரெனினு மாண்டொழிற்
கேன்றவர் நண்பின ரெனினும் யாரையும்
வான்றுணைச் சுற்றத்து மக்க டம்பியர்
போன்றவ ரல்லரைப் புறத்துப் போக்கினான். —கம்பராமா., 6206.

பிண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்பு முறை.

	பிறன்பழிநாடு	உற்றநோய்	அரியவற்றுள்	கூம்மிற்	சூழ்வார்கண்	தூக்கார்	இடிக்கும்	இடிப்பாரை	முதலொக்கு	பல்லார்
மணக்.	3	2	1	5	4	6	7	10	9	8
பரிதி.	5	9	1	2	8	3	6	7	4	10
பரிப்.	3	2	1	5	4	6	7	10	9	8
காளி	3	10	1	4	2	7	5	6	9	8
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

45வது அதிகாரம் 'பெரியாரைத்துணைக்கோடல்' முற்றிற்று.

46. சிற்றினஞ் சேராமை.

அதிகாரப் பொருள்:

அ) மணக்.: சிற்றினஞ் சேராமையாவது காமுகரையும், சூதாடிகளையும், பெண்டிர் முதலாயினோரையும் சேர்ந்தொழுகினால் வருங் குற்றமும், சேராமையால் வரும் நன்மையும் கூறுதல். பெரியார் துணையாயினாலும் சிறிய இனத்தாரோடு ஒழுகின், அது தீமை பயக்கும் என்று அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: சிற்றினம் சேராமையாவது அறிவுக்கீனனுடன்[1] சேராமை எ—று.

இ) பரிப்.: சிற்றினம் சேராமையாவது காமுகரும் சூதாடிகளும் பெண்டிரும் முதலாயினாரைச் சேர்ந்து ஒழுகினால் வரும் குற்றமும் சேராமையால் வரும் நன்மையும் கூறுதல். பெரியார் துணையானாலும் சிறியார் இனத்தராய் ஒழுகின் அது தீமை பயக்கும் என்று அதன்பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது சிறிய இனத்தைப் பொருந்தாமை. சிறிய இனமாவது நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லென்போரும்[2] விடரும்[3] தூர்த்தரும்[4] நடரும்[5] உள்ளிட்ட குழு. அறிவைத் திரித்து இருமையும் கெடுக்கும் இயல்பிற்றாய அதனைப் பொருந்தின் பெரியாரைத் துணைக்கோடல் பயனின்று என்பது உணர்த்துதற்கு இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

ஈ) கவிராசர்: அஃதாவது சிறியவினங்களைப் பொருந்தாமை. சிறிய வினமாவது நல்ல பொருள்களினுடைய நன்மையும் பொல்லாத

---

1. ஈனன் — இழோன் அல்லது அறிவுகெட்டவன்; 2. இவர்கள் நாத்திகர் எனப் படுவர்.
3. விடர் — காமம் விஞ்சிய காளையர். பல பெண்களைப் புணர விரும்பியலைவோர்.
4. தூர்த்தர் — காமக்குறிப்பான வஞ்சனையுடையவர்கள். உள்ளே பகையும் உதட்டில் உறவுமாய்த் திரிபவர்கள்.
5. நடர் — கூத்தாடிகள்.

பொருள்களினுடைய பொல்லாங்குகளும் தெரியாமல் ஒன்றுமில்லை என்பவரும், அடங்காத காளைகளும், எக்காலமும் பொல்லாத தொழில்களைச் செய்யும் தூர்த்தரும், கூத்தாடி முதலாகிய கூட்டங்களுமாம். இப்படிப்பட்ட பேர்களுடன் சினேகம் பண்ணினால், எந்த விதத்திலும் அறிவைக் கெடுத்து இம்மையிலே பொல்லாதவன் என்று எண்பித்து,[6] மறுமையிலும் பொல்லாத கதியிலே விடும்; ஆதலால், இப்படிப்பட்ட பேர்களுடைய உறவு ஒருகாலத்திலும் ஆகாது என்பதாம்.

ஏ) பழைய 2: அஃதாவது சிறிய இனத்தைப் பொருந்தாமை. சிறிய இனமாவன; சிற்றறிவுடையார், உலகியல்பறியார், அறம் விலக்குவார், காமம் கூறுவார், விடர், தூர்த்தர், கூத்தர் முதலாயினார்.

மல்லர்: அதாவது தன்கிட்ட அறிவில்லாதவர்களுடைய கூட்டத்தை வையாமலிருக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்

இவ்வதிகாரத்தின் முதற்குறளாகிய 'சிற்றினம் பெருமை' என்பதும் இறுதிக்குறளாகிய 'நல்லினத்தினூஉங்கு' என்பதுமே இனத்தை இருவகைப்படுத்தி அவற்றின் இயல்பைக் கூறுவன. ஏனையவை 'சினம்' எனப்பொதுமையிற் கூறிப் பொதுவகையான பயன்களையே அறிவிப்பன. ஆதலால் இவ்வதிகார முழுதும் சிற்றினஞ்சேராமை என்ற பெயர்க்கு உரித்தாதல் யாங்ஙனம்? முதற்குறளிலுள்ள 'சிற்றினம் அஞ்சும்' என்ற சொல்லாட்சியைக் கொண்டு பெயர் வைத்தார் எனினும் அதன் இயைபு ஆய்வுக்குரியது ஆகும். பெரியாரைத் துணைக்கோடல் சொல்லி அடுத்து 'இனத்தானாம் மாந்தர்க்குணர்ச்சி', 'இனந்தூயார்க்கு நன்றாகா வினையில்லை', 'இனநலம் எல்லாப்புகழும் தரும்', 'இன நலம் ஏமாப்புடைத்து', 'இனத்துளதாகும் அறிவு' எனப் பல்லாற்றானும் இனம் பற்றியே பொதுமையிற் கூறினும் அது குறிப்பாகச் சிற்றினஞ்சேர்தலாகாது என்பதை வலியுறுத்துதலின் அதிகாரப்பெயர் இங்ஙனமைந்தது எனிலோ பெரியாரைச் சேர்தல் வேண்டும் என்பதையும் குறிப்பானுணர்த்திற்று என்பதற்கும் இழுக்கில்லை. முதற்குறளினும் கடைக்குறளினும் இனப்பாகுபாடு செய்து, சிற்றினத்தின் தீமை குறித்தால் எதிர்மறைமுகத்தான் பெரியாரைச் சேர்தலையும் உடன்பாட்டு முகத்தான் சிற்றினஞ்சேராமையும் சிந்திக்க வைத்தது என்று ஒருவகையான் அமைதி காணலாம். ஆனாலும் 'பெரியாரைத் துணைக்

6. எண்பித்து — எண்ணச் செய்து.

கோடலில்' பெரியாராகிய அமைச்சரும் புரோகிதரும் வினைவலசுற்ற மும் ஆகிய சிலரைக் குறிப்பதாகும். ஈண்டு இனம் என்ற ஆட்சியால் இவ்வதிகாரம் பலபேரைக் கலந்து வாழ்தலைக் குறித்ததாகவும் கொள்ளலாம். கா. சு., இராம., அறிவினும் குணத்திலும் ஒழுக்கத் தினும் இழிந்தவர்கள் சிற்றினத்தார். அவரோடு சேராமை.

தேவநேயர், 'சிறியோராவார், கயவரும் ஐங்குற்றவாளிகளும்[7], தன்னலக்காரரும், கல்வி நிரம்பாதவரும், உயர்ந்தோர் உண்டென் பதை இல்லென மறுப்போரும் ஆவர். இவருடன் சேர்வதால் அறிவும் ஒழுக்கமும் கெடும்'. ஜி.வரத., 'தன்னைவிட அறிவு முதலியவற்றால் தாழ்ந்தவரிடம் சேராதிருத்தல்', பெரியாரைத் துணைக்கோடல் மீண்டும் எதிர்மறைமுகத்தான் வலியுறுத்தப்பெறுகிறது.

சி.இ., தீயோர் கூட்டத்தைச் சேராதிருத்தல்.

மணக்., பரிதி., பரிமேலழகர் தரும் அதிகார விளக்கமும் இயைபும் பெரியாரைத் துணைக்கோடலாகிய பெரும்பயனும் சிற்றினஞ்சேர்தலாற் பயனிழத்தல் கருதி முறைவைக்கப்பட்டது. என்னும் கவிராசர் உரை சிற்றினச் சேர்க்கையால் விளையும் தீமையை மட்டும் கூறும். முறைவைப்பின் காரணம் கூறிற்றிலது.

ஜி.வரத., கல்வி கல்லாமை போலப் பெரியாரைத்துணைக் கோடலின் இன்றியமையாமை எதிர்மறைமுகத்தான் இவ்வதிகாரம் வலியுறுத்துகிறது என்பர். பரிமேலழகர் விளக்கம் மணக்குடவர் உரைக்கு விளக்கம் போல்வது சிறந்தது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

சிற்றினஞ்சேர்தல்: நல்ல வினைக்கு நற்பயனுந் தீயவினைக்குத் தீப்பயனும்
இல்லை யெனுமவல் விழுதையரு மெள்ளும் விடருந்
தூர்த்தர்களும்
சொல்லு நடரு முதலாகத் தொக்க குழுவைச்
சேர்ந்தொழுகின்
புல்லு மறிவைத் திரித்திருமை பொருளுங் கெடுக்கும்
புகழோடே.
—விநா.,

7. ஐங்குற்றம் —கொலை, களவு, பொய், காமம், கள்

46.1. சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். (சநிக)

உரைப்பகுதி:

அ) மணக்.: சிற்றினத்தை யஞ்சுவர் பெரியர்; சிறியவர் அதனைச் சுற்றமாகக்கொண்டு விடுவர் எ—று.

இது பெருமை வேண்டுவார் சிற்றினஞ் சேரார் என்றது.

ஆ) பரிதி.: பெரியோர் சிறுமையுடையார்க்குப் பயப்படுவார், சிறுமையுடையோர் சிறுமையுடையோரைத் தமக்கு உறவாக்கிக் கொள்ளுவார் எ—று.

இ) பரிப்.: சிற்றினத்தாரை அஞ்சுவர் பெரியார்: சிறியார் அவர்களைச் சுற்றமாகக் கொண்டுவிடுவர் எ—று.

இது பெருமை வேண்டுவார் கொள்ளார் என்றது.

ஈ) காளி.: தமது நீதிநெறிக்குத் தகாதோராகிய சிற்றினத்தை மருவுதற்கு[1] அஞ்சுவர் பெரியோர், இனி மற்று அவரோடு ஒரு தன்மையாகிய சிறியோர் தமது கிளைஞராக[2] விசாரித்து[3]க் கைக் கொண்டு விடுவார் எ—று.

உ) பரிமேல்.: பெரியோரியல்பு சிறிய இனத்தை அஞ்சா நிற்கும்; ஏனைய சிறியோர் இயல்பு அது சேர்ந்தபொழுதே அதனைத் தனக்குச் சுற்றமாக எண்ணித் துணியும்.

தத்தம் அறிவு திரியுமாறும் அதனால் தமக்கு வரும் துன்பமும் நோக்கலின் அறிவுடையார் அஞ்சுவர்[4] என்றும், அறிவொற்று மையால் பிறிது நோக்காமையின் அறிவிலாதார் தமக்குச் சுற்றமாகத் துணிவர்[5] என்றும் கூறினார். பொருளின் தொழில்கள் பண்பின் மேல் நின்றது[6]. இதனால் சிறிய இனம் பெரியோர்க்கு ஆகாது என்பது கூறப்பட்டது.

காரி.: பெருமை — பெரியோர் இயல்பு. சிறுமை — சிறியோர் இயல்பு. பெரியோர் அஞ்சுவர் என்னாது, பெருமை அஞ்சும்

---

1. மருவுதற்கு — சேர்தற்கு;
2. கிளைஞராக — சுற்றத்தாராக.
3. விசாரித்து — ஆய்ந்து;
4. 'பெருமை அஞ்சும்' என்றும் பாடமுண்டு.
5. 'சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்து விடுவர்' என்றும் பாடமுண்டு.
6. சிறியோர் பெரியோர் என்னும் பொருள்களின் சூழும், அஞ்சும் என்னும் தொழில் கள் சிறுமை பெருமை என்னுங்குணங்களின் மேல் நின்றன. இதனைக் கண்டு வினை குணவினையாயிற்று என்பர், பிரயோக விவேக நூலார். பிரயோக:

என்றதனால், பொருளின் தொழில் பண்பின் மேல் நின்றது. 'பணியுமாம்'[7], 'அற்றமறைக்கும்'[8], என்பனவும் அவ்வாறாம். இதற்கு மறுதலை, 'ஆகாறளவிட்டிதாயினும்'[9], என்பதனுள் பொருண்மேல் நின்றது[10]. பண்பின்மேல் நிற்குங்கால். 'ஆகாற்றளவு' என ஒற்று மிகும்.

ஊ) கவிராசர்: பெரியோர்களுடைய வியல்பு சிறியவினமாகிய ஈனரை அஞ்சவேண்டும். அந்தச் சிறியவினங்களைச் சேரவே அப்பொழுதே அவர்களையே சுற்றமாக்கிப் பெரியோர்கள் சேரார்கள் (எ—று).

ஏ) பழைய 2: 'சுற்றமாய்ச் சூழ்ந்து விடும்' பாடம்.

சிற்றினத்தைக் கண்டு அஞ்சுவார், பெருமை இயல்பை உடையார். சிறுமை இயல்பை உடையார் சிற்றினத்தைக் கண்டால் தமக்குச் சுற்றமாக எண்ணிப் பற்றிக் கொள்ளுவார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'பெருமை—சிறுமை' என்பனவற்றிற்குப் 'பெரியோரியல்பு—சிறியோரியல்பு' எனப் பண்பாகவே உரை கூறினர் பரிமேலழகரும் அவர் வழிவந்தோரும். மணக்., பரிதி., காளி., பழைய 2, இவர்கள் பெருமை சிறுமை முதலிய பண்புப்பெயர்கள் அப்பண்பையுடையாரை ஆகுபெயரான் உணர்த்தியதாகக் கொண்டு பெரியோர் சிறியோர் என்பர்.

மு.ரா.அரு., 'பெருமை சிற்றினம் அஞ்சும்; அங்ஙனம் நெருங்கின் சிறுமை சுற்றமாச் சூழ்ந்துவிடும். அதனால் பெரியோர் அறிவுங் கெடும்; துன்பஞ்சேரும். நம்வழி போகவிடாது தன்வழி நடத்தும்; அதனால் பெரியார்க்குச் சிறியார் உறவு கூடாது' எனக் கருத்துக் கொணர்வர். அதனால் பெருமை சிற்றினமஞ்சுதற்குக் காரணம் இது வெனல் பெறப்படும். ஏனையோர் பெரியோர் சிறியோர்களின் வேறுபாடு சொல்வது போலக் கூறுவர். பெரியோர் சிற்றினத்தைக் கண்டு அஞ்சுவர்; சிறியோர் தமக்கும் சிற்றினத்துக்கும் உணர்ச்சியும் ஒழுகலாறும் ஒத்திருத்தலின் தம்சுற்றமாக எண்ணிச் சுற்றிக் கொள்ளுவர்

காரிகை., 48—உரை.

7. குறள்., 978.
8. குறள்., 980.
9. குறள்., 478.
10. அளவிட்டிதாயினும் எனப் 'பண்பின் தொழில்' பாடபேதம். டாக்டர். இ. சுந்தர மூர்த்தி பதிப்பு. சென்னைப் பல்கலைக்கழகம், 1980.

என்ற கருத்தை அமைப்பர். மு.ரா.அரு. இதனின்று வேறாத லைக் காண்க. கா.சு.வும் பெரியோர்கள் கொள்வர் என்பர். இதுவும் தொல்லோர் கருத்தைத் தழுவியதே. இராமலிங்கனார், தேவநேயர், சி.இ., ஈ. சபாபதி, குழந்தை.

ஜி.வரத., பெரியார் சிறியாரோடு பழக நேரினும் மனம் பொருந்தாமையான் விலகுவர். சிறியார் பெரியாரோடு பழகினும் இவர்களோடு மனம் ஒத்துப் பழகாமல் சிறியாரை நேசிப்பர்' எனச் சிறிதளவு மாற்றுருக் கொடுப்பர்.

இக்குறளின் உரையமைப்பு, சிறியோர் பெரியோர் இயல்பு கூறுவ தாக அமைந்தது ஒன்று; சிறியோர் இயல்பு மட்டும் கூறுவதாக அமைந்தது ஒன்று; ஆக இருவகையாக விளங்குவது. மு.ரா.அரு. 'உடும்பை விட்டால் அது பிடித்தவன் கையை விடாதது போலச் சிறியார் சேர்க்கையைப் பெரியோர் விட்டாலும் சிறியோர் விடார். பற்றி நின்று பெரியோர் பண்பாட்டை அழிப்பர், என்பர்.

இவற்றுள் இவ்வதிகாரம் 'சிற்றினஞ் சேராமை'யாதலின் இயற் சிறப்பால் மன்னனோ பொதுவகையான் மக்களோ சிற்றினஞ்சேர்த லாகாது என்பதை வலியுறுத்துவது. ஆகவே சிற்றினம் பெருமையை யஞ்சும்; சிற்றினம் (சிற்றினத்தைச் சுற்றமாச் சூழ்ந்துவிடும்) எனச் சிற்றினத்தின் இயல்பாகப் பொருள் கூறுவதினும், பெருமை—அஞ்சும் —சிறுமை சூழ்ந்து விடும் எனப் பெரியோர் சிறியோர் இயல்பைக் கூறுவதன் வாயிலாக மக்களுக்கு அறிவுறுத்தியதாகக் கொள்வது சிறப்பு.

ஒ) ஒப்புமைப்பகுதி:

சிற்றினம்:

''மடையனுக்கு மறுமொழி இல்லை''. —பழமொழி.
''துர்ச்சனனைக் கண்டால் தூர விலகு'. —பழமொழி.

சிற்றினம் அஞ்சப் பெருமை:

சிற்றினத் தவரொடுஞ் செறிதல் சீரிதோ''. —கம்பராமா., 6563.

''நல்வினைக்கு நற்பயனும் தீய வினைக்குத் தீப்பயனும்
இல்லை எனும்வல் இழுதையரும் எள்ளும் விடரும் தூர்த்தர்களும்
சொல்லு நடரும் முதலாகத் தொகுத்த குழுவைச் சேர்ந்தொழுகின்
புல்லும் அறிவைத் திரித்திருமைப் பொருளும் கெடுக்கும் புகழோடே''.
—விநா.அரசி., 58.

46.2. நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு) இனத்தியல்ப தாகும் அறிவு. (சநிஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: நிலத்தின் தன்மையால் நீர் தன்தன்மை வேறுபட்டு அந்நிலத்தின் தன்மைத்தாவது போல, மக்கட்கு அறிவு இனத்தின் தன்மையதாய் வேறுபடும் எ—று.

ஆ) பரிதி.: நிலத்திற்குத் தக்க குணம் நீர் காட்டினாற்போல. இனத்துக்குத் தக்கதாக அறிவு உண்டாம் எ—று.

இ) பரிப்.: நிலத்தின் இயல்பாலே நீர் நிறம் திரிந்து நிலத்தின் நிறம் ஆகுமாறு போல மாந்தர்க்குத் தமக்கு இயல்பாகிய அறிவும் தாம் சேர்ந்த இனத்திற்கு இயல்பாகிய அறிவு ஆம் எ—று.

நீர் திரிந்து ஆகும் அற்று[1] என்று கூட்டுக. இது தமது அறிவு திரியு மென்றது.

ஈ) காளி.: நிலத்தின் நிறம் முதலிய வேறுபாட்டுத் தன்மையால் நீரானது தன் தன்மை வேறுபட்டு, மற்று அந்நில இயல்பினை உடைத்தாம். அதுபோல உலகத்து வாழும் மக்களுக்கும் தத்தம் இனத்தின் தன்மையதாகும் தமது அறிவு எ—று.

உ) பரிமேல்.: தான் சேர்ந்த நிலத்தினது இயல்பானே நீர் தன் தன்மை திரிந்து அந்நிலத்தின் தன்மைத்தாம். அதுபோல மாந்தர்க்கு தாம் சேர்ந்த இனத்தினது இயல்பானே அறிவும் தன்தன்மை திரிந்து அவ்வினத்தின் தன்மைத்தாம்,

எடுத்துக்காட்டுவமை[2] விசும்பின்கண் தன்தன்மைத்தாய்[3] நீர் நிலத்தோடு சேர்ந்த வழி, நிறம், சுவை முதலிய[4] பண்புகள் திரிந்தாற் போலத் தனி நிலைக்கண் தன்தன்மைத்தாய அறிவு பிறவினத்தோடு சேர்ந்தவழிக் காட்சி முதலிய[5] தொழில்கள் திரியும் என இதனால் அதனது காரணம் கூறப்பட்டது.

பரிப்பெருமாள் இங்ஙனம் கூட்டி முடிப்பதால் உவமையணியாகவே கொள்வர் என லாம்.

2. எடுத்துக்காட்டுவமை அறத்துப்பால் முதற்குறளைக் காண்க.

3 தன் தன்மைத்தாய—நிறமும் சுவையுமின்றித் தன்னியல்பின் வெண்மையாய் நிற்கும்.

4. முதலிய என்றது கனம் பரிசம் முதலியவற்றையும் என்க

5 காட்சி முதலிய என்றதனால் கருதுதல் உரையனுமான முதலிய ஏனைய அளவை களையும் கருதுக

ஊ) *கவிராசர்:* தண்ணீராவது எந்த நிலத்தைச் சேருகிறதோ அந்தப்படியாய் நின்று தன் குணம் கெட்டுப்போவதுபோல, மனிதர்க்கும் தாம் சேர்ந்த வினங்களாலே அறிவு திரிந்து அந்தவினங்களினுடைய அறிவே வர்த்திக்கும்[6] எ—று.

ஏ) *பழைய 2:* நிலத்தினியல்பானே நீர் தன்னியல்பு திரிந்து, அந்நிலத்தியல்பு ஆனது போல, மாந்தர்க்குந் தற்குணங்கெட்டு இனத்தின் குணம் ஆம்.

மல்லர்: எ—து நிலத்தின் குணத்தால் தண்ணீர் தன்குணத்தை மாற்றும். அப்படிப்போல மனுஷனுடைய அறிவு அவனோடே புழங்குகிற மனுஷருடைய குணத்துக்கு ஏற்றதாய்ப் போம்.

தண்ணீர் தரை சுவாபமாய் நல்லதாயிருந்தாலும் உவர் நிலத்திலே ஓடினால் உவர் நீராய்ப் போகும் அப்படிப்போல மனுஷன் தன்சுவாபமாய் நல்லவனாயிருந்தாலும், பொல்லாத குணங்களையுள்ள மனுஷரோடே புழங்கினால் பொல்லாதவனாய்ப் போவான் என்பதாகையில் ஆகாத குணத்தோடேயும் ஆகாத துணைகளோடேயுஞ் சேரலாகாது என்பது கருத்து.

இயல்பு—குணம்; திரிதல்—வேறுபடல்; அற்று—உவமைச்சொல்; மாந்தர்—மனுஷர்; இனம்—கூட்டம்; இயல்பது—குணமுடைத்தது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் உரையும் பரிப்பெருமாள் உரையும் 'நீர்திரிந்து ஆகும் அற்று' என்று கொண்டு கூட்டும் இக்குறளை உவமையணியாகக் காட்டுகின்றன. *காளிங்கர் உரையும், பரிமேலழகர் உரையும்* வழிவந்த பிறவுரைகளும் கூறும் நிலத்தின் தன்மையால் நீர் நிறமும் குணமும் மாறுபட்டு அந்நிலத்தின் தன்மையதாகும் அதுபோல அறிவு இனத்தியல்பதாகும் என்பதால் எடுத்துக்காட்டுவமையாகிறது.

மணக்குடவர் முதலானார் விண்ணீர் மண்ணீரன்றோ கொள்ளாது பொதுமையில் நீர் என்றனர். தனித்த நீருக்குச் சுவையும் நிறமும் இல்லை. ஊற்றுநீராயினும் ஊறியமண்ணின் தன்மையை இயல்பாகப் பெற்றே இருக்கும். ஆதலாற் *பரிமேலழகர்* விசும்பின்கண் நின்று வீழும் நீரைச் சுட்டினர். *இராமலிங்கர்* ஊற்று நீரைச் சுட்டினர். இங்ஙனம் நீரின் இயல்பு ஒரு நிறமும் சுவையுமில்லாதது.

---

6. வர்த்திக்கும்—வளரும்

எனவே ஊற்றுநீர் ஊறுகின்ற இடத்தின் தன்மையை எய்துதலின் *பரிமேலழகர்* விண்ணின்று வீழும் நீர் என்பதே சிறந்தது.

தேவநேயர், பரிமேலழகர் போல எடுத்துக்காட்டுவமைப் பொருளமையக் கூறியதேயன்றி 'மாந்தர்க்கு இனத்தியல்பதாகும் அறிவு நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும்' என ஒரு தொடராக்கி அறிவு அற்றாகும் என முடித்தலுமாம் என்பர். இங்ஙனம் கொள்ளின் உவமமாகுமேயன்றி எடுத்துக்காட்டுவமமாகாது. இவ்வுரை குழந்தையினதுமாகும். 'அப்பென்றும் வெண்மையதாயினும் ஆங்கந் நிலத்தியல்பாய்த், தப்பின்றியே குண வேற்றுமைதான் பல சார்தலினால்' எனப் *பட்டினத்தார்* பாடல் கூறுவதால் நீர் என்றும் வெண்மை எனல் பெறப்படுமே எனின் அது நிறங் குறிப்பதாகாது; வெள்ளறிவு வெண்களமர் என்பன போல நிறம் குணமின்மையையே குறிக்கும் என்பது. ஆதலால் குறட் கருத்தோடு மாறிற்று.

ஒ) ஒப்புமைப்பகுதி:

நிலத்தியல்பான் நீர்திரிந்தற்று:

செம்புலப் பெயனீர் போல *குறுந்., 40:4.

இனத்தியல்பதாகும் அறிவு:

தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே.
—*கம்பராமா., 905.*

ஆன தூயவ ரோடுட னாடினா
ஞான நீரவ ராகுவர் நன்றரோ
தேனு நாவியுந் தேக்ககி லாவியும்
மீனு நாறின வேறினி வேண்டுமோ. —*கம்பராமா., 1033.*

தூய ரென்றவர் வைகியடந் பன்னினால்
தீய ரன்றியுந் தீமையுஞ் செய்வரால். —*கம்பராமா., 6041.*

இனத்தியல் பாம்அறி வென்ப துண்மையே
மனத்துயர் செயும்மயல் மாற்று நீறுதான்
அனிச்சமெல் அடியினார் நுதல் அடுத்தலும்
பனித்துடல் வெதும்புமால் படுத்த லால்என்பார்.
—*பிரபு. மாயைபூசை., 34.*

முற்றும்:

பளிங்கு செற்றிக் குயறிற்றிய பாயொளி
விளிம்பும் வெள்ளமு மெய்தெரி யாதுமேல்
தெளிந்த சிந்தைய ருஞ்சிறி யார்களோடு
அளிந்த போதறி தற்கெளி தாவரோ. —கபம்ராமா., 5094.

புலத்தியன் வழிமுதல் வந்த பொய்யறு
குலத்தியல் பழிந்தது கொள்ள முற்றுமோ
வலத்தியல் அழிவதற் கேது மையறு
நிலத்தியல் நீரியல் என்று நீராதல். —கம்பராமா., 7480.

ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பெரிதாகித் தீர்த்தமாம் — ஒருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து. —நாலடி., 175.

நிலத்தின் வண்மையே நீரெனு மியற்கையா னீசக்
குலத்தின் வண்மையாற் கொலைத் தொழிற் காலயமானேன்.
—பாரதம், அரசநீதிச்சருக்கம்.

அப்பென்றும் வெண்மைய தாயினு மாங்கந் நிலத்தியல்பாய்த்
தப்பின்றி யேகுண வேற்றுமை தான்பல சார்தலினால்.
—பட்டினத்தடிகள்.

.... ஒட்டிய

காட்சி திரியினறந் திரியு மென்று ரைப்பர். —அறநெறிச்சாரம்.

பிற:

பையலோடு இணங்கேல் —ஆத்தி., 85.
பன்றியொடு கூடினால் கன்றும் மலம் தின்னும். —பழமொழி.
சேராரோடு சேராதே சேம்பு புளியிட்டுக் கடையாதே. —பழமொழி.

46.3. மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம் இன்னான் எனப்படும் சொல். (சநிங)

உரைப்பகுதி :

அ) மணக்., மாந்தர்க்கு அறிவு மனத்தினானே உண்டாம்; ஆயினும் தான் சேர்ந்த இனத்தினால் இனியனல்லன் என்று பிறரால் பழிக்கப்படும் சொல் உண்டாம் எ—று.

இது பிறரால் பழிக்கப்படும் என்றது.

ஆ) *பரிதி.:* மன அழுக்கு அற்றால் அறிவு உண்டாம்; அதுபோலே இனம் நல்லதாகில் இன்னான் என்னும் புகழும் உண்டாம் எ—று.

இ) *பரிப்.:* மாந்தர்க்கு அறிவு மனத்தினானே உண்டாம்; ஆயினும் தாம் சேர்ந்த இனத்தினானே இனியர் அல்லர் என்று பிறர் பழிக்கப்படும் சொல் உண்டாம் எ—று.

இது பிறர் பழிக்கப்படுவர் என்றது.

ஈ) *காளி.:* தமது மனத்தின் நன்மை எவ்வளவு? மற்று அவ்வளவும் உளதாம் மக்கட்கு அறிவானது; மற்று இதனுடனே மனத்தின் தூய்மை எவ்வளவு மற்று அவ்வளவு நன்மைகளை உடையர் என்னும் புகழ்ச்சியாவராலும் எடுத்து உரைக்கப்படும்.

உ) *பரிமேல்:* மாந்தர்க்குப் பொதுவுணர்வு தம் மனங்காரணமாக உண்டாம்; இத்தன்மையனென்று உலகத்தாரால் சொல்லப்படும் சொல் இனங்காரணமாக உண்டாம்.

இயற்கையாய புலனுணர்வு மாத்திரத்திற்கு இனம் வேண்டாமையின், அதனை மனத்தான் ஆம் என்றும், செயற்கையாய விசேட உணர்வு பற்றி நல்லன் என்றாகத் தீயன் என்றாக நிகழுஞ்சொற்கு இனம் வேண்டுதலின் அதனை இனத்தானாம் என்றும் கூறினார்[1]. உவமையளவை கொள்ளாது, அத்திரிபும் மனத்தானாம் என்பாரை நோக்கி, இதனான் அதுமறுத்துக் கூறப்பட்டது[2].

ஊ) *கவிராசர்:* உலகத்து மனிதர்க்குப் பொதுவான அறிவு தம் மனங் காரணமாக உண்டாம். சகல சனங்களாலும் நல்லவன் பொல்

---

1. வள்ளுவர், 'நால் பல கற்பினும் தன் உண்மையறிவே மிகும்' என்பர். இதனால் உயிர்கட்குள்ள உணர்வு இயற்கை என்றும், செயற்கை என்றும் இருவகைப்படும் என்பதும், கல்வியறிவு பொறிகள் புலன்களைச் சென்று பற்றியதால் விளைவதன்றாம் என்பதும் உணரப்படும். ஆகவே மனத்தான் ஆம் உணர்ச்சியைப் பரிமேலழகர் பொதுவுணர்வு என்பர். 'இன்னான்' எனப்படுஞ்சொல் விளைவது இனத்தான் என்பர் விளக்கந் தந்தனர். நல்லன் தீயன் என இனம் வேண்டும் என்றனர். அங்ஙனமாயின் ஒருவனுக்கு இனமாக வருகின்றவன நல்லினத்தான் தீயினத்தான் எனப்படுதற்கும், அதனால் இவன் இன்னான் எனப்படுதற்கும் காரணமான அவன் நல்லனாதலும் தீயனாதலும் அவனுடைய சுற்றுச் சூழலிலுள்ள இனத்தானன்றி வேறு எங்ஙனம் விளைந்திருக்கக்கூடும். ஆகவே வழிவழியாக இன்னான் எனப்படுஞ்சொல் இனங்காரணமாகவே விளைந்திருக்கவேண்டும் என்பது உறுதி.
2. மாந்தர்க்கு அறிவு, 'நிலத்தியல்பால் நீர்திரிந்தாற் போல இனத்தியல்பால் ஆம்' என்பதை மறுத்து அறிவு திரிதலும் மனங் காரணமாகவே உண்டாம் என்பாரை நோக்கிக் கூறுகின்றார். இயற்கையறிவுக்கு இனமாகிய காரணம் வேண்டுவதில்லை. செயற்கையறிவாகிய சிறப்பறிவுக்கு சேர்க்கை இன்றியமையாதது. ஆதலால் அதுவும் இனத்தின் சேர்க்கை இல்லாமல் மனங் காரணமாகவே உண்டாம் என்பது பொருந்தாதாம் ஆதலால் இனங்காரணமாக விளையும் சிறப்பறிவை விளக்குதற்கு உவமை இன்றியமையாதது ஆதலைக் காண்க.

-லாதவன் என்கிற பேர் தங்களைச் சேர்ந்த இனங் காரணமாக உண்டாம் எ—று.

ஏ) *பழைய 2:* மாந்தர்க்கு ஐம்புல உணர்ச்சியும் மனத்தினால் தெரியப்படும்; இவன் இன்ன தன்மையனென்று தெரிந்து சொல்லப்படும் அவன் சேர்ந்த இனத்தின் காரணத்தினான்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்

'மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தான் ஆம்'—'அறிவு மனத்தான் உண்டாம்' *மணக்.*, 'மன அழுக்கு அற்றால் அறிவுண்டாம்' *பரிதி.*, 'பொது உணர்வு மனங்காரணமாக உண்டாம்' *பரிமேல்.*, *கவிராசர்* முதலிய பிறரும்; 'உணர்ச்சி—ஐம்புல உணர்ச்சி' *பழைய2*, *இராம.*, *மு.ரா.அரு.*, *மணக்குடவரை* ஒத்த கருத்தினர். *தேவநேயர்*. அவர் 'மனிதர்க்குள்ள இயற்கையறிவு அவரவர் மனங்காரணமாக உண்டாவதுதான்' என்பர். *ஜி.வரத*. 'மக்களுக்கு மனத்தின் வளர்ச்சி அளவாக உணர்வு வளர்கிறது' என்பர். *ஈ.சபாபதி*, *குழந்தை பரிமேலழகரை* ஒத்துரைப்பர்.

மு.கோ. 'சொல் மனத்தானாம்; உணர்ச்சி இனத்தானாம்' என்றும், 'மனத்தானாம் உணர்ச்சியும் சொல்லும் இனத்தான் ஆம் எனவும் இணைத்துப் பொருள் கொள்க' என்பர். இதனால் பொருள் நயங்களையும் விளக்கியிருப்பின் மிக நலமாகும்?

'இன்னான் எனப்படுஞ்சொல்'—'இனியன் அல்லன் எனப்படும் சொல் இனத்தான் ஆம்' *மணக்.*; இவர் 'இன்னான்' என்பதை இனியன் என்ற சொல்லின் எதிர்மறையாகக் கொண்டமையின் 'இனியன் அல்லன்' என உரை கண்டனர். ஏனையோர் 'இத்தன்மையையுடையவன்' எனப் பொருள் கண்டனர். அதிகாரத் தலைப்பு *மணக்குடவரை* இங்ஙனம் பொருள்கூறச் செய்திருக்கிறது. ஆதலால் இது *மணக்குடவர்* தவறன்று. பொதுமையின் இன நலப்பயன் கூறும் அதிகாரத்தைச் *சிற்றினஞ் சேராமை* என்றதால் விளைந்த பயன். 'எனப்படும் சொல்' என்பதற்கு 'என்று பழிக்கப்படும் சொல்' என்ற அளவு பொருள் விரியச் செய்திருக்கிறது.

'மனத்தைப் பற்றி நிற்கும் காமம் வெகுளி மயக்கம் ஆகிய மூன்று அழுக்குகள் அற்றால் உணர்ச்சி அறிவு உண்டாம்' என்ற *பரிதி* யாரின் கருத்து அறிவு உயிர்க்குப் புதிதாகத் தோன்றும் என்பதன்று.

மண்ணிற் கிடந்த மணியைக் கழுவினால் மணியின் ஒளி வெளிப்படுதல் போல மனமாசகன்றால் மனமணி அறிவொளியை வெளிப்படுக்கும் என்பதே. ஆயினும் இவ்வுரை வேண்டா கூறலாகவே கருதப்படு கிறது.

'மற்று மனத்தின் தூய்மை எவ்வளவு? மற்று அவ்வளவு உண்மை களையுடையார் என்று யாவரானும் எடுத்துரைக்கப்படும் புகழ்ச்சியை' என்ற காளிங்கர் உரையின் பிற்பாதி முன்னதனோடு பொருளியை புடையதாக இல்லை. ஆதலால் இரண்டொரு தவறுகள் கலந்து உள் ளன. ஒன்று 'இனத்தின் தூய்மை எவ்வளவு?' என்றிருத்தலே சிறந் தது. அடுத்த பகுதியின் முடிவு சரிக்கட்ட இயலவில்லை. அது 'உடையர்' என ஒருமுற்றினைக் கொண்டு முடிந்திருத்தல் வேண் டும். இவையனைத்தும் ஒப்பு நோக்க ஒரே சான்று கிடைப்பின் உறுதி செய்யலாம். இருக்கிறநிலையில் தவறு என்று தான் அறியப்பெறும்.

(ஒ) ஒப்புமைப்பகுதி:

இனத்தானாம் இன்னான் எனப்படும் சொல்:

''முயலவோ வேண்டா முனிவரை யானும்
இயல்பின்னர் என்பது இனத்தால் அறிக
கயலியலுண் கண்ணாய் கரியரோ வேண்டா
அயலறியா அட்டுனோ இல்.'' பழ.நா.,148

''தெருண்டு மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவர் எனுமிது வழக்கே''
கம்பராமா., 905.

''.....தீயவர்ச் சேர்தல் செய்தால்
தூயவ ரல்லர் சொல்லிற் றொன்னெறி தொடர்ந்தேர்...''
கம்பராமா.,3470.

முற்றும்

''மனத்தான் மறுவில ரேனும்தாம் சேர்ந்த
இன்த்தான் இகழப் படுவர்-புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனம் தீப்பட்டக் கால்'' நாலடி., 180.

''கடல் சார்ந்தும் இன்நீர் பிறக்கும் மலைசார்ந்தும்
உப்பீண் டுவரி பிறத்தலால்-புனத்து
இனத்தனைய ரல்லர் எறிகடல் தண்சேர்ப்ப
மனத்தனையர் மக்களென் பார்''. நாலடி., 245.

''வேம்பின் இலையுட் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம்–ஆங்கே
இனம்தீ தெனினும் இயல்புடையார் கேண்மை
மனம்தீதாம் பக்கம் அரிது''. நாலடி., 244

''தக்கார் வழிகெடா தாகும் தகாதவர்
உக்க வழியராய் ஒல்குவார்–தக்க
இனத்தினான் ஆகும் பழியும் புகழும்
மனத்தினான் ஆகும் மது''. சிறுபஞ்ச. 81.

**46.4. மனத்துளது போலக் காட்டி ஒருவற்(கு)
இனத்துள தாகும் அறிவு.** (சருசை)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒருவனுக்கு உண்டாகும் அறிவு முற்படமனத்துள்ளது போலத் தோன்றிப் பின்பு தான் சேர்ந்த இனத்தினுண்டான அறிவாகும் எ—று.

ஆ) பரிதி.: மனத்துள்ளது அறிவுபோலக் காட்டும்; தான் சேர்ந்த இனத்தின் தொழிலே செய்யும் எ—று.

இ) பரிய்.: ஒருவனுக்கு உண்டாகும் அறிவு முற்பட மனத்து உள்ளது போலத் தோன்றித் தான் சேர்ந்த இனத்தின் உண்டான அறிவாகும் எ—று.

மேல் மனத்தினானே அறிவு உண்டாம் என்றார். அதன்பின் இனத்தினானே திரியும் என்றார். அது மாறுபட்டாற் போலப்பட்டது நோக்கி இது கூறப்பட்டது. இத்துணையும் சேர்ந்ததனால் வரும் குற்றம் கூறிற்று.

ஈ) காளி.: ஒருவர்க்கு அறிவு உளதாவது மனத்தின்கண் ஆகலான், மற்று அம்மனத்து உளதாவதுபோலத் தோற்றியும், பின்னும் தாம் மருவி வருவது ஓர் இனத்தினளவே உளதாகும் அறிவானது எ—று.

உ) பரிமேல்.: அவ்விசேடவுணர்வு; ஒருவற்கு மனத்தின்கண்ணே உளதாவது போலத் தன்னைப் புலப்படுத்தி, அவன் சேர்ந்த இனத்தின் கண்ணே உளதாம்.

மெய்ம்மை, நோக்காமுன்[1] மனத்துளது போன்று காட்டியும், பின் நோக்கியவழிப்[2] பயின்ற இனத்து உளதாயும் இருத்தலின், காட்டி என இறந்தகாலத்தால் கூறினார். விசேட உணர்வு தானும் மனத்தின் கண்ணே அன்றே உளதாவது என்பாரை நோக்கி, ஆண்டுப் புலப்படுந் துணையே உள்ளது; அதற்கு மூலம் இனம்[3] என்பது இதனால் கூறப் பட்டது.

ஊ) கவிராசர்: நல்ல விசேஷமாகிய அறிவுடன் கூடியிருந்த பேர் களிடத்தில் சிற்றினமாகிய தூர்த்தர்[4] கூடவே, இவருடைய நல்ல அறிவும் அந்தவினங்கள் அறிவுடனே கூடிவிடும் எ—று.

ஏ) பழைய 2: ஒருவற்கு விசேட உணர்வு மனத்தின் உள்ளது போலக் காட்டி, அவன் சேர்ந்த இனத்தினிடத்தே வந்ததாம் அறிவு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் உரை அறிவு மனத்தில் உள்ளது போலத் தோன்றும்; பின் இனத்தால் திரியும் என்பதை விளக்கிற்று. **பரிப் பெருமாள்** 'உணர்வைச் செயலன்றிப் பிறர் அறிதல் கூடாமையின், இனத்தின் தொழிலையே செய்யும்' என்றார்.

அறிவு மனத்தின் பண்பாய் அங்குள்ளது போலக் காட்டும். அறிவு செயற்படும் போது மனத்தில் உள்ளபடியே செயற்படுவதில்லை; இனத்தின் தொழிலையே செய்யும் என மனப்பண்பு செயலாகப் பரிணமிக்கும்போது இனத்தின் செயலாய் விடும் என்பது பரிதி. கருத்து 'செயலாக மாறும்போது' என்பதற்குக் குறளிற் சொல் லில்லை. ஆயினும் உலகத்தோடு ஒட்ட ஒழுகுவாரே கற்றார் எனப்படுதலின் செயற்படும்போது 'உலக நடையை ஒத்து ஒழுகுக' என விதிக்க இங்ஙனம் எண்ணினரோ என்று அமைதி காண விரைகிறது நம் மனம்.

காளிங்கர், உரைப்போக்கு 'மன அறிவு இயற்கையறிவு. இனத்தான் ஆகும் அறிவு செயற்கையறிவு' என்ற கருத்தினதாதலைக் காட்டுகிறது.

---

1 மெய்ம்மை நோக்கா முன்—உண்மையை தேர்ந்து தெளிவதன் முன்
2 பின் நோக்கிய வழி—பின்பு ஆராய்ந்து பார்த்தவிடத்து
3 இனவுணர்வு நல்லினத்தால் நல்லுணர்வும் தீயினத்தால் தீயுணர்வும் விளைதலின் பெரியாரைத் துணைக்கோடலால் நல்லுணர்வு கூறப்பட்டமையின் ஈண்டு ஏனைய சிற்றின உணர்வையே கொள்க
4 தூர்த்தர்—காமுகர்

பரிமேலழகர் 'காட்டி' என்பதற்குத் தரும் உரைவிளக்கம் 'அறிவு மனத்துளதாதல் பொய்த் தோற்றம்; இனத்தின் உளதாயதே மெய்ம்மை' என்பதை வற்புறுப்பது. ஆயின், உள்ளதே வெளிப்படுவ தல்லது இல்லாதது யாண்டும் வெளிப்படுதல் இயற்கைக்கு மாறாகுமே என்ற எண்ணந்தோன்ற மனவுணர்வு பொது உணர்வு. இன உணர்வு சிறப்புணர்வு. பொது உணர்வின் நுணுகிய வளர்ச்சியே சிறப்புணர்வு. அது இனத்தானாவது எனத் தொடர்ந்து விளக்கந் தந்து அரண் செய்கின்றார். இத்தகைய ஆய்வினையடியாகக் கொண்ட உரை சிறந்ததாதற்குத் தடையென்னை? என்க.

கவிராசர் உரை 'நல்லோரும் தீயோர் சார்பில் அறிவு திரிவர்' என்ற நோக்கு உடையது. இக்கருத்து 'நிலத்தியல்பால்' என்ற குறட்பாவால் முன்னரே குறிக்கப்பெற்றதாதலின் ஈண்டும் இக்கருத்து வேண்டுமோ என்று ஐயுற்றுச் சிறந்ததைக் கொள்க.

இராமலிங்கர் அறிவு, 'ஒருவன் செய்வதை எல்லாம் அவன் மனத்திலுள்ள சொந்த அறிவாற் செய்வது போலவே காட்டி ஏமாற்றிக் கொண்டேயிருந்தாலும் கடைசியில் இனத்தால் விளையும் அறிவின் செயலாகவே இருக்கும்' என்பர். இவர் கருத்து ஒருவன் செய்வன யாவும் இன அறிவின் செயலேயன்றி சொந்த மன அறிவின் செயலன்று என்பது. சிறந்த சிந்தனையாளன் சொந்த அறிவாலும் சில பல செய்தல் கூடும். ஆயினும் இக்குறள் இன அறிவின் ஆற்றலை விளக்குவதாக அமைகிறது எனலாம். ஆதலால் செய்வன அனைத்தும் இன அறிவின் செயலே எனல் இயலாது.

கா.சு., 'அறிவு — செயற்கையறிவு மனத்தில் உள்ள இயற்கை யறிவு போலக் காட்டினாலும் உள்ளபடி இனத்தாலான அறிவே' என்பர். இது இன அறிவே மன அறிவு போல மயங்கச் செய்கிறது என்பது கருத்து. இது *பரிமேலழகரை* ஒட்டிய கருத்தாகும்.

மு—கோ. 'அறிவு—மெய்யறிவு. இனம்—குருக்கள் மனத்தின் இனத்தால் வளர்வது மெய்யறிவு. மனத்தில் வளரும் சிற்றறிவு இனத் தால் பேரறிவாகும்' என்பர். அதிகாரம் பெரியாரைத் துணைக் கோடலை யடுத்த சிற்றினஞ்சேராமை.இயல் அரசியல். இங்குக் குருக்களும் மெய்யறிவும் இயைபுடையனவா என்பதை ஆராய்ந்து கொள்க. *ஈ. சபாபதி*. சிறப்பறிவானது அப்போது மனத்தில் இயல் பாக உண்டாவது போலக் காட்டி உண்மையான் நோக்குவார்க்கு அவன் சேர்ந்த இனத்தினிடத்தே உண்டாகும்' என்பர். இதில்

உளது — உண்டாவது எனக் காணும் பொருள் இயற்கையைச் செயற்கை யாக்குகிறது. மனவுணர்வு இயற்கையறிவு. இனவுணர்வு— இனத்தான் சேர்ந்தொழுகும் மனிதனிடத்தே உண்டாகும் செயற்கை உணர்வு என்பதே வள்ளுவர் கருத்தாகும். இவ்வுரை அதற்கு மாறாதலின் இயைபுடையதன்று. உளதாதற்கும் உண்டாதற்கும் பெரிது வேறுபாடு உண்டென்க.

சி.இ., 'இவரும் இனத்தின் கண்ணே யுண்டாவது' என்பர். இத்தொடர் 'இனத்தான் இவன் கண்ணே உண்டாவது என்ற பொருள் தருமாயின் இயைபுடையது ஆம். குழந்தையின் உரையும் இனத்தால் என்றே செல்கிறது.

ஆகவே இவ்வுரைகளின் திரண்ட கருத்து மனத்து உளது — மனத்தின் கண்ணே உளது' இனத்துளது — இனத்தான் உளதாவது என்ற அமைப்பில் இருப்பதே குறட்கருத்தைத் தழுவியதாகும். அந் நிலையில் உள்ள பரிமேல்ழகர், முதலானோர் உரைகள் சிறந்தன. சிற்றினஞ்சேராமை அதிகாரத்தில் இடம் பெற்றதால் இக்குறளில் 'சிறப்பறிவு' எனப் பரிமேலழகர் கருதும் அறிவு தீயனவும், விதி நூல்களால் விலக்கப்பட்டனவும், சமுதாய நலங் கருதாது சமுதாயத் திற்கும் நாட்டிற்கும் தீமையே பயப்பனவுமாய செயல்களைச் செய்விக்கும் அறிவே எனத் துணியப்படும். நல்லனவே செய்யும் சிறப்பறிவும் உளதாகலாம். அது பெரியாரைத் துணைக்கோடலாற் கூறப்பட்டமையின் ஈண்டுக் கூறியது தீமை பயக்கும் அறிவையே எனத் துணியக்கூடும்.

ஓ) மேற்கோள் பகுதி:

நச்.: முற்றியலுகரம் அடியிறுதிக்கண் உரியசையாய் நின்றதற்கு மேற்கோள.

—தொல். பொருள். செய்., 9.

46.5. மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். (சருஙு)

உரைப்பகுதி:

அ) மணக்.: மனம் நன்றாதலும் செய்வினை நன்றாதலுமாகிய இரண்டும், இனம் நன்றாதலைப் பற்றி வரும் எ—று.

இனிச்சேராமையான் வரும் நன்மை கூறுவார் இவை இரண்டும் நன்றாம் என்று கூறினார்.

ஆ) **பரிதி.:** மனம் தூய்மையும் செய்வினை தூய்மையும் ஆகித் தன் இனத்தைத் தான் பாதுகாப்பானாகில். அதனாலே இந்த இரண்டு காரியமும் வரும் எ—று.

இ) **பரிப.:** மனம் நன்று ஆகலும் செய்யும் வினை நன்று ஆகலும் இரண்டும் இனம் நன்று ஆகலைப் பற்றி வரும் எ—று.

இனிச் சேராமையால் வரும் நன்மை கூறுவார் இவை இரண்டும் நன்றாம் என்று கூறினார்.

ஈ) **காளி.:** உலகத்துப் பெரியோர் தமது மனம் தூய்மை உடைத்தாகலும், தம் செய்வினை தூய்மையாகலும் என இவை இரண்டும் தாம் இணங்கும் இனத்தின் தூய்மை காரணமாக வரும் எ—று.

உ) **பரிமேல்.:** அவ்விசேடவுணர்வு புலப்படுதற்கு இடனாய மனந்தூயனாதல் தன்மையும் செய்யும் வினைதூயனாதல் தன்மையும் ஆகிய இரண்டும், ஒருவற்கு இனந்தூயனாதல் தன்மை பற்றுக் கோடாக உளவாம்.

மனந்தூயனாதலாவது விசேடவுணர்வு புலப்படுமாறு இயற்கையாய அறியாமையின்[1] நீங்குதல், செய்வினை தூயனாதலாவது மொழி மெய்களால் செய்யும் நல்வினையுடையனாதல் தூ என்பது அப்பொருட்டாதல் 'தூவறத் துறந்தாரை'[2] என்பதனாலும் அறிக. ஒருவன் இனந்தூயனாகவே, அதனொடு பயிற்சிவயத்தான் மனந் தூயனாய் அதன்கண் விசேடவுணர்வு புலப்பட்டு. அதனால் சொல்லும் செயலும் தூயனாம் என, இதனால் இனத்துள்ளவாமாறு கூறப் பட்டது.

ஊ) **கவிராசர்:** அந்த நல்ல அறிவு பயன்படுதற்கு இடமாகிய மனது சுத்தமாகிறதும், ஒருவன் செய்யுங் காரியம் நல்லதாகிறதும் இந்த இரண்டு காரியமும் நல்ல இனங்களைச் சேர்ந்தாலல்லதில்லை எ—று.

---

1. இயற்கையாய அறியாமை நீங்குதல் என்பதால் அறியாமை உயிர்க்கட்கு இயற்கை எனல் துணியப்பெறும். அறியாமை என்பது உள்ளதன் மறுதலையாதலின் அதனை இயற்கையெனல் ஏற்புடையதாகாது. உடல்கொள் உயிர்க்குணமாக அறிவுதான் சொல்லப்படுகிறது, அறியாமை சொல்லப் பெறவில்லை என்பதையும் சிந்திக்க. (நன். உரியியல் சூ.) அறியாமை ஆணவம் அல்லது ஆணவத்தின் மறைப்பால் விளையும் காரியமாகிய செயற்கை என்றே மெய்ப்பொருள் நூல்களும் கூறுகின்றன.
2. 'தூ வறத் துறந்தாரை' (118:9, கலி.) பற்றுக்கோடற நீக்கினவர் என்பது பொருள். நச்சினார்க்கினியர், 'தாவறத்துறந்தாரை' எனப்பாடங்கண்டு 'வலியில்லையாம் படித்தம்மைத் துறந்தாரை' எனப்பொருள் காண்பர்.

ஏ) பழைய 2: மனந்தூய்மையாதலும், செய்வினை தூய்மை யாதலும் இரண்டும் ஒருவர்க்குத் தான் சேர்ந்த இனந்தூய தன்மையா யிருப்பின் அது பற்றுக்கோடாக வரும்.

தூவாவரும் — கலந்ததனால் வரும் என்றது. தான்சேர்ந்த இனந்தூய்மையாயிருப்பின் மனமும் செயலும் தூயனவாயிருக்கும் என்றது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் முதலான தொல்லாசிரியர்களின் உரைப்போக்கி லிருந்து விலகிப் புதிய பொருள் காண முயலும் பரிதியார் 'முன்னர் இரண்டு தூய்மைகளையும் உடையனாய்; (தன்) இனத்தைப் பாது காத்து தூய்மை செய்வானாயின் இரண்டும் தூவாவரும்—அதனால் இந்த இரண்டு காரியமும் வரும்' என வலிந்து கூட்டிப்பொருள் காண முயற்சிக்கிறார். அதனால் அதிகார இயைபை இக்குறளிழந்து விடு வதும் அன்றிப் 'பொருள் நனி விளங்காமை' என்ற குற்றமும் தங்கும் என்க.

தூவா — 'காரணமாக' காளி.: 'பற்றி' மணக்.: 'பற்றுக் கோடாக' பரிமேல்.: 'கலந்து' பழைய 2. பற்றுக்கோடு அல்லது துணை என்னும் பொருளே சிறப்புடையது. 'துணையாகக் கொண்டு' என்பர் சாமி. சிதம்பரம்.

மனந்தூயனாதலாவது சிறப்புணர்வு புலப்படுமாறு இயல்பாய அறியாமையினின்று நீங்குதல் என்பர் பரிமேலழகர். அறியாமை என்பது அறிதலின் எதிர்மறையாதலானும், உடல் கொள் உயிர்க் குணமாகிய அறிவு இயற்கை என இலக்கண நூல்களின் விதித்தலானும், ஒளியும் இருளும் ஞாயிற்றின் குணமாகாதவாறு போல் அறிவும் அறியாமையும் உயிர்க்குணமாகாமையின் அறியாமை உயிர்க்குணமாகாமை தெளிவு. ஆகலின் மனந்தூ யனாதல் காம வெகுளி மயக்கமின்றியிருத்தல் எனலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

மனம் தூய்மை:

.....நெடுமனம்
துணையா உடையையால் உறவினைத் துணிகுவார்.

—கம்பராமா., 3901.

இனந்தூய்மை தூவாவரும்:

ஆன தூ யவ் ரோடுட னாடினார்
ஞான நீரவ ராகுவர் நன்றரோ
தேனு நாவியுந் தேக்ககி லாவியும்
மீனு நாறின வேறினி வேண்டுமோ. —கம்பராமா., 1033.

முற்றும்:

மிக்குப் பெருகி மிகுபுனல் சேர்ந்தாலும்
உப்பொழிதல் செல்லா ஒலிகடல்போல்—மிக்க
இனநலம் நன்குடைய வாயினும் என்றும்
மனநல ஆகாவாம் கீழ். —பழ. நா. கிழ்மக்கள் இயல்பு

.....தீயவர்ச் சேர்தல் செய்தால்
தூ யவ ரல்லர் சொல்லில் தொன்னெறி தொடர்ந்தோர் என்றாள்.
—கம்பராமா., 3470.

46.6. மனந்தூயார்க் கெச்சம்நன் றாகும் இனந்தூயார்க்(கு) இல்லைநன் றாகா வினை. (சநிசூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: மன்நல்லார்க்குப் பின்பு நிற்கும் காணம் முதலான பொருள்கள் நல்லவாம்; இனம் நல்லார்க்கு நன்றாகாததொரு வினையும் இல்லை எ—று.

இது மேலதற்குப் பயன் கூறிற்று.

ஆ) பரிதி.: மனந்தூயரான பேர்க்குப் புதல்வர் நல்லகுணமுண்டாம்; அதுபோலேதான் நல்லோரைச் சேவை செய்யின் நல்லகுண முண்டாம் எ—று.

இ) பரிப்.: மனம் நல்லார்க்குத் தமக்குப் பின்பு நிற்கும் மக்கள் முதலான பொருள்கள் நல்லவாம்; இனம் நல்லார்க்கு நன்றாகாதது ஒரு வினையும் இல்லை எ—று.

இது மேலதற்குப் பயன் கூறிற்று.

ஈ) காளி.: உலகத்து மனம் தூயார்க்கு மக்கட்பேறு முதலிய நன்மை உளவாம்; மற்று அதனுடன் இனம் தூயார்க்கு நன்றாகாத காரியம் யாதும் இல்லை, எனவே அவர்க்கு எல்லா நன்மையும் உள எ—று.

உ) பரிமேல்.: மனம் தூயராயினார்க்கு மக்கட்பேறு நன்றாகும், இனந் தூயராயினார்க்கு நன்றாகாத வினை யாதும் இல்லை.

காரியங் காரணத்தின் வேறுபடாமையின் எச்சம் நன்றாகும் என்றும்[1], நல்லினத்தோடு எண்ணிச் செய்யப்படுதலின் எல்லாவினையும் நல்லவாம் என்றும்[2] கூறினார்.

ஊ) கவிராசர்.: மனது சுத்தமாயிருந்த பேர்களுக்கல்லது நல்ல உத்தம குணமான புத்திரரில்லை; இனந் தூயராயினார்க்கு நன்றாய் முடியாத காரியமுமில்லை எ—று.

ஏ) பழைய 2: மனந்தூ யார்க்கு மக்கட்பேறு நன்றாம்; இனந்தூ யார்க்கு நன்றாகாத வினையில்லை; எல்லா(ம்) நன்றாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'எச்சம்'—'காணம்' (அதாவது பொன்னும் பொருளும் **மணக்.**; ஆசிரியர் முன்னர் செப்பம் உடையவனாக்கம் சிதைவின்றி எச்சத்திற்கு ஏமாப்புடைத்து என்றாராகலானும், சேர்த்தவனுக்குப் பின்னும் எஞ்சி நிற்பது காரணமாதலானும் எச்சம்—காரணம் எனப்பொருள் கண்டவர் **மணக்குடவர்.**

ஏனையோர் அனைவரும் **'மக்கள்'** என்றே கொண்டனர். தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும் எச்சத்திற்கு ஏமாப்புடைத்து என்புழியெல்லாம் மக்கள் என்றே கொள்ளக் கிடத்தலான் இங்ஙனம் கொண்டனர் என்க.

அறத்துப்பாலில் எச்சம் புகழ் அல்லது பழி என்ற இலக்குவனார் ஈண்டு **'மக்கள்'** என்கிறார். இதன் காரணம் வள்ளுவரே புகழ்க் காரணம் இனநலம் (456) என்றலான் என்க.

இராம. **'இனச் சுத்தமில்லாமல் மனம் மட்டும் சுத்தமாக** இருந்தால் அவர்களுக்குப் பின் வருவன யாவும் நல்ல பலன்களாகவே இருக்கும். மனம் சுத்தமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் (சகவாசஞ்) செய்கிற இனம் சுத்தமாக இருந்தால் நன்மையாக முடியாத காரியமே யில்லை' என்று விளக்கந் தந்து, **'எச்சம்—**

1. ஈண்டுக் காரணம் எனப் பொதுப்படக் கூறினாரேனும் முதற்காரணம் ஒன்றையே கொள்க. குடத்திற்கு மண் முதற்காரணம். முதற்காரணமாவது காரியத்தோடு உடனிகழ்வதால். காரியங்கெடின் தன்னுள் ஒடுங்குவதாயிருப்பது. ஈண்டு மக்கட் பேறுகாரியம். தந்தையின் மனத்தூய்மை காரணம். **'மகனறிவு தந்தையறிவு'** அவரவர் எச்சத்தாற் காணப்படும் என்பன ஈண்டு எண்ணற்குரியன தந்தைக்கும் மகனுக்கும் உள்ள பொது அறிவே ஈண்டுக் காரணம் என்க.
2. நன்றாகா வினையில்லை என்றும் பாடமுண்டு.

பின்னால் பெறக்கூடிய மிச்சம் என்பதுதான் நேரிய பொருள்; அதிலிருந்து தான் பிள்ளை, பொருள் என்றெல்லாம் பொருள் விளைந்திருக்கிறது. ஆதலால் 'மக்கட்பேறு' என்று பொருள் கொள்வது பொருத்தமற்றது' என்பர். மனத்தூய்மையில்லாமல் இனத் தூய்மையிருந்தாலும் போதும் என்பதும் அங்ஙனமே. இனத்தூய்மை யில்லாமல் மனத்தூய்மை மட்டும் போதும் என்பதும் 'மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் இனந்தூய்மை தூவா வரும்' என்ற குறளில் இனத்தூய்மையின் முதற்பயன் மனந்தூய்மை எனக் கூறுதலின் இந்த இரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று இராது என்பது தெளியப்பெறுதலின் இக்கருத்து அரசியலனுபவத்தை மட்டும் உளத்தமைத்துக் கண்டதாகும்.இவைகளை எண்ணி எச்சம் என்பதற்கு ஆண்டாண்டு ஏற்றவாறு பொருள்கோடலே சிறப்பு என ஒழிக.

மு.கோ. முற்கூறிய உரைகள் யாவும் பொதுமக்கட்குரியனவாகக் கொண்டு அரசற்காயின், எச்சம்—குடிமக்கள். மனந்தூயாரது நாட்டு மக்கள் நல்லவராவர். 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்றது. 'நல்ல குடிமக்களைப் பெற்றிருத்தலையே குறிக்கிறது எனவும் கொள்க' என்பர். குடிமக்களை அரசன் ஆட்சிக் காலத்து உடன் உறைபவர்களாய் எஞ்சி நிற்பவர்கள் அல்லராதலான் எச்சம் என்ற பெயருக்கு ஏற்றவராகாமையை உணர்க.

மயிலை சிவமுத்து இனத்தூய்மையால் மனத்தூய்மையும், அதனால் வினைத்தூய்மையும் உண்டாகும் என்பது பொருள். ஆகையால் எச்சம்—எஞ்சி நிற்பது; மிகுந்து இருப்பது; மனத்-தூய்மையின் மிகுதியால் தோன்றுவது நற்செயல் ஆதலால் எச்சம்—நற்செயல் என்பர். இது நேரிய பொருளாகாது வழிவழிப் பொருளாய் ஒன்றை ஒன்று பற்றிச் செல்வதால் ஏற்புடையதன்று. அன்றியும் 'மனந்தூய்மை செய்வினை தூய்மை' என்ற குறளால் ஆசிரியரே இக் கருத்தைப் பெற விழைந்தாராதலின் ஈண்டும் இது வேண்டா:

ஒ) ஒப்புமைப்பகுதி:

மனந்தூயார்க்கு எச்சம் நன்றாகும்:

யோக்கியவான் பாக்கியம் பிள்ளையிலே தெரியும. —பழமொழி.

'ஒரு தானியத்தை விதைத்தால் மற்றொரு தானியமாக
விளைகின்றதென்பதில்லை;
எந்த வித்தை விதைக்கிறோமோ அந்தப் பயிர்தான் முளைக்கும்'
—மனு. அத். 9 புத்திரவிஷயம்

தன்னாத்மாவிற்கும் பிள்ளைக்கும் வேற்றுமையில்லை
—மனு. அத். 9 எடுகூறு.

மகனுரைக்கும் தந்தை நலத்தை.
பழியின்மை மக்களாற் காண்க.
பித்துமலடுமை மூடம் பேயர் குருடு கூன் செவிடு என்னும்
மெய்த்துயர் நோயொன்றும் இன்றி வாழும்.

இனந்தூயார்க்கில்லை நன்றாகா வினை:

செப்பமுடைய வனாக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற்கு ஏமாப் புடைத்து.
நன்றிப்பயன் றூக்கா நாணிலியுஞ் சான்றோர்முன்
மன்றிற் கொடும்பா டுரைப்பானும் — நன்றின்றி
வைத் தடைக்சலங் கொள்வானு மிம்மூவர்
எச்ச மிழந்து வாழ்வார்.

46. 7. மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம் எல்லாப் புகழும் தரும். (சநிஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: மனநன்மை நிலைபெற்ற உயிர்க்கு ஆக்கமாவது போல, இன நன்மை எல்லாவற்றானும் வரும் புகழினைத் தரும் எ—று.

இஃது எல்லாப் புகழும் தரும் என்றது.

ஆ) பரிதி., மனம் நன்றாகில் தீர்க்கமான ஆயுசு உண்டாம்; இது நலம் எல்லாப்புகழுந் தரும் எ—று.

இ) பரிப்.: மன நன்மை நிலைபெற்ற உயிர்க்கு ஆக்கம் ஆம். அதுபோல இனநன்மை எல்லாவற்றானும் வரும் புகழினைத் தரும் எ—று.

இஃது எல்லாப் புகழும் தரும் என்றது.

ஈ) காளி.: மனத்தின் தூய்மை உலகத்து மன்னி வருகின்ற[1] உயிர்கட்கு ஆக்கமாகும். மற்று இனநலம் அதுவேயும் அனறி, எல்லாப் புகழையும் கொடுக்கும் எ—று.

உ) பரிமேல்.: நிலைபெற்ற உயிர்கட்கு மனத்தது நன்மை செல்

1. மன்னி வருகின்ற-நிலைபெற்று வருகின்ற.

வத்தைக் கொடுக்கும். இனத்தது நன்மை அதனோடு எல்லாப் புக ழையும் கொடுக்கும்.

மன்னுயிர் என்றது ஈண்டு உயர்திணைமேல்[2] நின்றது. தரும் என்னும் இடவழுவமைதிச் சொல் முன்னும் கூட்டப்பட்டது[3]. உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை[4]. மனம் நன்றாதல் தானே அறமாகலின் அதனை ஆக்கந்தரும் என்றும்[5], புகழ் கொடுத்தற்குரிய நல்லோர் தாமே இனமாகலின் இனநலம் எல்லாப் புகழுந்தரும் என்றும் கூறினார். மேல்[6] மனநன்மை இனநன்மை பற்றி வரும் என்பதனை உட்கொண்டு அஃது இயல்பாகவே உடையார்க்கு அவ்வினநன்மை வேண்டா என்பாரை நோக்கி, அதுவே யன்றி அத்தன்மைய பலவற்றையும் தரும் என அவர்க்கும்[7] இதுவேண்டும் என்பது இவ்விரண்டு பாட்டானும் கூட்டப்பட்டது.

காரி.: 'தரும்' என்னும் இடவழுவமைதிச் சொல் முன்னும் கூட்டப்பட்டது.

---

2. மனநலமும் இனநலமும் உடைமை மக்களுயிர்க்கேயாதலின், உயர்திணை மேனின் றது என்றார்.

3. தன்மை முன்னிலைக்குரிய தரும் வரும் என்பன தன்மை முன்னிலைகளைச் சார்ந்து வருமாற்றை இளம்பூரணர் முதல் தெய்வச்சிலையார் ஈறான உரையாசிரியர்கள் 'எனக்குத் தரும் சாணம்', 'நினக்குத் தரும் சாணம்' என்ற எடுத்துக்காட்டுகளால் விளக்கினர். எனக்குத் தரும் சாணம் எவின் சாத்தன் எனக்குத் தருஞ்சாணம் கொற்றன் நினக்குத் தரும் சாணம் எனத் தருதலுக்கு வினைமுதல் சாத்தனும் கொற்றனும் ஆக வினைப்பயன் சாருமிடம்' எனக்கு நினக்கு என்ற தன்மை முன்னிலைகளாக இருத்தலே ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தாதல் பெறப்படும். அதுபோல ஈண்டும் வாராமல் மன்னுயிர்க்குத் தரும் என வந்தமையின், மன்னுயிர் என்பது படர்க்கையாதலின் வழுவாயிற்று. ஆயினும் 'அந்நாற் சொல்லும் தன்மை முன்னிலைப்படர்க்கை என்னும் அம்மூவிடத்தும் உரிய' என்ற வரைந்தோதா விதி யான் வழுவன்மை பெறப்படுமாயினும் 'பொதுவிதியிற் சிறப்புவிதி வலியுடைத்து என்னும் மரபு பற்றி, தருசொல் வருசொல்.....தன்மை முன்னிலை யாயீரிடத்த' ஆகலின் வழுவாய 'பெருவிறலமரர்க்கு வென்றிதந்த' (புறநா.. 55)' 'தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது' (அகநா 36) எனப் பழந்தமிழ் நூல்களில் வழங்குதலா னும் அமைதியாய், ஈண்டு மன்னுயிர்க்குத் தரும் என்பதும் வழுமைதியாயிற்று என்பதே பரிமேலழகர் கருத்தாயிற்று.
அங்ஙனமாக இப்பகுதிக்கு அடிக்குறிப்பு எழுதும் ஆசிரியரிற் சிலர். இனநலம் என்னும் படர்க்கையிடத்துச் சொல்லோடு கூட, வழுவமைதியாய் வந்த தரும் என்னும் வினைச்சொல் 'மனநலம்' என்பதனோடும் கூட்டப்பட்டமையும் வழுவமைதி என்பர். ஈண்டு மனநலம் இனநலம் என்பன வினைமுதல்; தரும் என்பது பயனிலை. மன்னுயிர்க்கு என்ற படர்க்கைப் பெயரோடு தருசொல் சாருகிறது. அது வழுவாய் அமைதியாயின் காண்க.

4. 'புகழும்' என்பதிலுள்ள உம்மை 'மனநலம் மன்னுயிர்க்காக்கம்' தருவதல்லாமல் என்பதனை யுணர்த்துதலால் இறந்தது தழீஇய தாயிற்று.

5. 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்பதனையும், 'அறத்தினூஉங்காக் கும் இல்லை' என்ற குறட்பாக்களே இந்த பரிமேலழகர் உரைநடையின் பின்னணி யாதல் காண்க.

6. மேல்-455குறளில். 7. அவர்க்கும்-மனநலம் உடையார்க்கும்.

ஊ) *கவிராசர்*: எக்காலமும் நிலைபேறுடைய உயிர்கட்கு மனத்தின் நன்மை செல்வத்தைக் கொடுக்கும்; இனத்தின் நன்மை அந்தச் செல்வத்துடனே எல்லாப் புகழையும் கொடுக்கும்.

ஏ) *பழைய 2*: நிலைபெற்ற உயிர்கட்கு மனத்து நன்மை செல்வத்தைக் கொடுக்கும்; இனத்தின் நன்மை, அதனோடு எல்லாப் புகழையுங் கொடுக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் இக்குறட்பாவை எடுத்துக்காட்டணியாகக் கொண்டு, 'ஆக்கமாவது போல இனநலம் புகழ் தரும்' என்பர். *பரிதி.*, 'உயிர்க்கு ஆக்கம் தரும்' என்பதனை எண்ணித் 'தீர்க்காயுசு தரும்' என்றார். *பரிமேலழகரும்* மற்றோரும் 'ஆக்கம் — செல்வம் என்பர். 'மன நன்றாதல் தானே அறமாகலின் அதனை யாக்கம் என்றார் என்ற *பரிமேலழகர்* சிறிப்புக்குறிப்பு 'அறத்தினூஉங்காக்கமும் இல்லை' என்பதனைக் கொண்டு உருவானது.

'இனநன்மை வேண்டா' என்றவர் *பரிமேலழகர்க்கு* முன் யார் என்பது அறியக்கூட வில்லை. பிற்காலத்தில் *இராமலிங்கர்* இக் கருத்துடையவர் 'ஆக்கம்–வலிமை' என்பர் இவர். மனநல மிருப்பதால் ஆத்மசக்தியுண்டாம் வாழ்க்கைக்கு இருநலமும் இன்றியமையாதன என விளக்கமுந் தருவர்.

கா சு., 'ஆக்கம்–மேன்மேலுயர்ச்சி' என்பர். *மயிலை. சிவமுத்து* 'மேலுலகச் செல்வம்' என்பர். மு.கோ. 'உயிர்க்குணங்களின் வளர்ச்சி மனநலம் பிறர்க்கும். இனநலம் தனக்கும் ஆக்கந் தருவன' என்பர்.

குழந்தை, ஏனையோர் போல மனநலம் ஆக்கந்தரும் என்னாது 'மனநலமே ஆக்கமாம்' என்பர். இது *மணக்குடவர்* கருத்தைத் தழுவியதாகும். ஆக்கந்தரும் எனிலோ ஆக்கம் ஒருபொருள் போல உயிரான் ஏற்கப்படுவதொன்றாகாமையின் மனநலமே ஆக்கம் எனல் சிறந்த பொருளாம். *தேவநேயரும்* இக்கருத்தினரே. வரத. 'மனநலம் உடலோடு கூடிய உயிர்க்கு வளர்ச்சியைக் கொடுக்கிறது' என்பர். இதுவும், மனம் உயிரின் வேறன்றாதலானும், ஈண்டு ஈவாரும் ஏற்பாரும் ஆக இருப்பது உயிரின் கருவியாகிற மனமேயாதலானும் இவ்வுரை ஏற்புடையதன்று. இதனாலேயே இனநலம் எல்லாப் புகழும் தரும் என்ற ஆசிரியரும், மனநலம் உயிர்க்கு ஆக்கம் என்றனர். *பரிமேலழகர்* 'தரும் என்ற இடவழுவமைதிச் சொல்லை முன்னுங்கூட்டுக என்றனர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

இனநலம்:

ஆன தூயவ ரோடுடன் ஆடினார்
ஞான நீ ராடுவர். —கம்பராமா., 3903:
இம்மை யடக்கத்தைச் செய்து புகழாக்கி
யும்மை யுயர்கதிக் குய்த்தலால—மெய்ம்மையே
பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே
நட்டார் எனப்படு வார். —அறநெறிச்சாரம்.

46.8 மனநலம் நன்குடையர் ஆயினும் சான்றோர்க்(கு)
இனநலம் ஏமாப் புடைத்து. (சநிஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: மனநன்மை மிக உடையராயினும், இன நன்மை யுடைமை சான்றோர்க்குக் காவலாதலையுடைத்து எ—று

இஃது இனம் நன்று அல்லராயின், பிறரால் இகழப்படுவராதலான் இனநலம் இகழ்ச்சி வாராமல் காக்கும் என்றது.

ஆ) பரிதி.: மனம் நல்லதாகிலும் தன்னுடைய இனம் நல்லினமாக வேணும்; அது எல்லாப்புகழும் தரும் எ—று.

இ) பரிப்.: மன நன்மை மிகவும் உடையவர் ஆயினும், இனம் நன்மை உடைமை சான்றோர்க்குக் காவல் ஆதலை யுடைத்து எ—று.

இனம் நன்று அல்ல ஆயின் பிறரால் இகழப்படுவர் ஆதலான் இகழ்ச்சி வாராமல் காக்கும் என்றது.

ஈ) காளி.: மனம் தூய்மை மிகவும் உடையர் ஆயினும் சால்புடை யோர்க்கு மற்று அதனுடனே இனத்தினது நன்மை உளதானால் தமக்குப் பெரிதும் இம்மை மறுமைக்கு ஏமாப்பு உடைத்து எ—று

உ) பரிமேல்.: மனநன்மையை முன்னை நல்வினையால் தாமே உடையராயினும், அமைந்தார்க்கு இனநன்மைஅதற்கு வலியாதலை உடைத்து.

நன்கால் என்னும் மூன்றனுருபு விகாரத்தால் தொக்கது[1]. அந் நல்வினையுள்வழியும் மனநலத்தை வளர்த்து வருதலின், அதற்கு ஏமாப்புடைத்தாயிற்று.

1. நன்கு—நன்மைக்கு ஏதுவாகிய வினை. காரிய ஆகுபெயர். கருவிப்பொருளில் வந்த மூன்றனுருபு செய்யுள் விகாரத்தான் தொக்கு நின்றது

காரி.: நன்குடையர் — நல்வினையால் தாமே உடையர், என்றமையான். மூன்றாவது செய்யுள்தொடை காரணமாக விகாரத்தால் தொக்கது மனநலம் செயப்படுபொருளாதலான், நன்கு கருவியாதல்நோக்கி என்க.

ஊ) கவிராசர்: தாம் முன் செய்யப்பட்ட நல்வினையாலே நல்ல மனத்தை உடையவராயினும், அதற்குத் துணையாக இனநன்மையைத் தேடுவதே கருமம் எ—று.

ஏ) பழைய 2: மனநன்மையை, முன்னே நல்வினையால், தாமே உடையாராயினும் சான்றோர்க்கு இனம் நன்மை அதற்கு வலி யுடைத்து.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'நன்கு உடையராயினும்' — 'மிக உடையராயினும்' மணக்.; 'மிகவும் உடையராயினும்' காளி:; 'நன்கு—முன்னை நல்வினையால் பரிமேலழகரும் அவர் வழிவந்தோரும், நன்கு—பண்புப் பெயராகக் கொண்டனர். நன்கு தீங்கு என்பன 'கு' விகுதி பெற்ற பண்புப் பெயர் கள் அது உடையர் என்னும் குறிப்பு முற்றை விசேடித்து மிக அல்லது மிகவும் உடையராயினும் என உரை கண்டனர் அவரிருவரும்.

பரிமேலழகர். இனநலம் மனநலத்தை வளர்த்து வருதலின் மன நலம் செயப்படு பொருள் ஆகிறது. மனநலம் உடையராதற்கு நன்கு (நல்வினை) கருவி ஆகிறது. ஆதலால் 'நன்கால்' என கருவிப் பொருளில் வந்த மூன்றனுருபு பெறவேண்டிய சொல், செய்யுள் விகாரத் தால் மூன்றனுருபின்றி வந்தது என்பர். இத்தனை விளைவுகளும் இலக்கண அமைதிகளும் மனநலம் இயற்கையாகவே யமைந்தது அன்று; 'நல்வினையின் வாய்ப்பு' என்ற தத்துவ ஆய்வு கண்ட முடிவு. நன்கு என்ற பண்புப்பெயரை நன்றாகியவினை எனப் பண்பாகு பெயராக்கி, அவ்வினையாலான மனநலம் என மனநலத்திற்கு நல் வினையைக் கருவியாக்கி, கருவிப் பொருளைத் தருதற்காக ஆல் உருபு விகாரத்தாற் தொக்கது என்று கூற வேண்டிய இன்றியமையாமை பரிமேலழகர்க்கு உண்டாயிற்று. அதனை யரண் செய்ய நன்கால் வாய்த்த மனநலம் இனநலத்தால் வலிமையுறுகிறது. ஆகவே மன நலம்—காரியம்; கருவி—நன்கு (நல்வினை) அது அரணாதற்கு இன நலம் கருவி. ஒருவற்கு மனநலம் அமைதற்கும் அது ஏமாப்பாதற்கும் கருவிகள் இன்றியமையாதன என்ற முடிவைத் தருகின்றன. மணக் குடவர், காளிங்கர், போன்றார் 'செடி நன்கு வளர்ந்தது' என்பது

போல நன்கு என்னும் பண்புப் பெயரை 'மிக', 'மிகவும்' என எச்ச மாக்கி உடையார் என்னும் குறிப்புமுற்றெச்சத்தோடு முடித்தனர். இந்த இலக்கண நுணுக்கத்தாலும் மன நலமும் மாந்தர்க்கு இயற்கை-யமைவன்று. வினையின் வந்தது என்ற நயம் பெறப்படுதல் காண்க. ஆதலால் மூன்றனுருபு விகாரத்தாற் தொக்கது என்றதாற் பயனின்றா தலைக்காணலாம். தேவநேயர் இங்ஙனம் கோடல் ஆசிரியர் கருத் தன்மை காண்க என்பர்.

கா.சு., 'சான்றோர்கள் மனச்செம்மையைச் செவ்விதாக இயற்கையில் உடையராயினும்' என்பர். இதனால் மனநலம் இயல் பானது; காரியப்பாங்குடையதன்று; அதனால் கருவி வேண்டத்தக்க தன்று என்பது பெறப்படும். இதனால் இவர் பரிமேலழகரோடு சிறிது மாறுபடுகின்றார் எனலாம்.

மு. கோ., 'மனநலமுடைய துறந்தோரும் இனத்தைத் துறத்தலா காது' என கருத்துரைப்பர். சான்றோர்க்கு உடல்நலம் உலகியல் நலம் இவற்றை ஆக்கித்தரும் இனம் வேண்டும் என்பர். இக்கருத்தை தாங்கி நிற்கும் சொல்லமைதி இக்குறட்பாவில் இல்லாமையும், மன நலமுடையார்க்கும் இனநலம் இன்றியமையாதது என்பது உண்மை யுங் காண்க.

'ஏமாப்பு' உடைத்து என்பதனைச் சான்றோர்க்கு ஏற்றிக் கூறுவன மணக்., காளி., கா. சு., குழந்தை. சி. இ., தேவநேயர். ஈ. சபாபதி, ஜி. வரத., சாமி. சிதம்., உரைகள், பரிமேலழகரும் அவர் வழி வரும் உரைகளும் 'அதற்கு' என ஒரு சொல்வருவித்து 'மனநலத்திற்கு ஏமாப்புடைத்து' என்று முடிவு காணும். மனநலம் பண்பும், அந்நலம் உடைய சான்றோர் பண்பறமாதலின் பண்புக்கு ஏற்றினும் பண்பிக்கு ஏற்றினும் ஒற்றுமை நயத்தால் பயன் ஒன்றே யாம். ஏமாப்பாதலால் புகழ் பெறுவார் சான்றோரேயாதலானும், ஆசிரியரே 'சான்றோர்க்கு' நான்கனுருபு புணர்த்து உரிமையாக்குத லானும் ஆசிரியர் கருத்து சான்றோர்க்கு ஏற்றுதலேயாம் என்க. அன்றியும், 'மற்றஃதும் இனநலத்தின் ஏமாப்புடைத்து' என்பதால் மனநலத்திற்கு ஏமாப்பாதலைக் கூறுவர். ஆதலானும் ஈண்டு சான்றோர்க்கு ஏற்றிக் கூறுதலே ஆசிரியர் கருத்தாதலைத் தெளியலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி

மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த
இனத்தான் இகழப்படுவர் — புனத்து

வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனந் தீப்பட்டக் கால், —நாலடி., 180.

இனநலம் ஏமாப்புடைத்து:

உன்னையே யுடையாவற் கரியாதப் பொருளரோ. —கம்பரா மா., 3903.

ஓ) மேற்கோள்பகுதி:

சுவாமி: மறையாய் அடுக்கலுக்கு மேற்கோள். இ.கொ., 120.

46.9. மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும் இனநலத்தின் ஏமாப் புடைத்து (சநுகூ)

உரைப்பகுதி:

அ). மணக்.: மனநலத்தினாலே மறுமைப் பயன் நன்றாகும், அம்மனத்தின் நன்மையும் இனநன்மையாலே தீத்தொழிலில் செல்லா மல் காவலாதலையுடைத்து,

இது மறுமைக்குத் துணையாம் என்றது.

ஆ) பரிதி.: மனம்நன்றாகில், வருகிற சென்மம் நல்ல சென்மமாம்; அதுவும், இனத்துக்கு நன்றாகில், அந்தப் புண்ணியத்தினாலே பெருமைபெறும் எ—று.

இ) பரிப்.: மன நன்மையானே மறுமைப் பயன் நன்றாம். இம் மனத்தின் நன்மையும் இன நன்மையாலே தீத்தொழிலிற் செல்லா மைக் காத்தலை உடைத்தாம் எ—று.

இது மறுமைக்குத் துணையாம் என்றது.

ஈ) காளி.: தத்தம் மனத்தினது தூய்மையினாலே உளதாகும் மறுமை, இனமான மற்று அதுதானும் இனத்தினது நன்மையினாலே பெரிதும் சேமத்திட்பம் உடைத்தாம் எ—று,

உ) பரிமேல்.: ஒருவற்கு மனநன்மையானே மறுமை இன்பம் உண்டாம்; அதற்கு[1] அச்சிறப்புத்[2] தானும் இனநன்மையான் வலி பெறுதலை உடைத்து.

---

1. அதற்கு — மனநன்மைக்கு.
2. அச்சிறப்பு — மறுமையின்பத்தைத் தரும் சிறப்பு.

மனநலத்தின் ஆகும் மறுமை என்றது, மறுமை என்பது மனநன்மை தானே பிறிதொன்று அன்று என்னும் மதத்தை உடம் பட்டுக்[3] கூறியவாறு. மற்று—வினைமாற்று. உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. ஒரோவழித் தாமதகுணத்தான் மனநலம் திரியி னும் நல்லினம் ஒப்ப நிறுத்தி மறுமை பயப்பிக்குமென நிலைபெறச் செய்யுமாறு கூறப்பட்டது. இவை ஐந்துபாட்டானும் சிற்றினஞ் சேராமையது சிறப்பு நல்லினஞ் சேர்தலாகிய எதிர்மறை முகத்தால் கூறியவாறு அறிக.

ஊ) கவிராசர்: ஒருவனுக்கு மனது நன்மையாயிருக்கவே மறு மைக்கு வேண்டின செல்வமெல்லாம் உண்டாம்; அச்செல்வ முண்டா கிறதற்குப் பலமாவது. நல்லறிவுடைய பெரியோர்களாற் சொல்லப் பட்ட வழியைக் கேட்டு நடக்கவேணும் எ—று.

ஏ) பழைய 2: ஒருவற்கு மன நன்மையானே மறுமை இன்ப முண்டாம்; அப்படி உண்டாம் மன நன்மைக்கு இன நன்மை வலியுடைத்து.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவில் 'மறுமை' என்ற சொல்லுக்கு உரை காண்பதி லும், முடிந்த கருத்து வகையிலும் உரையாசிரியர்கள் சிறிது மாறுபடு கின்றனர்.

'மறுமை'—'மறுமைப்பயன்' என மணக்குடவரும், காளிங்கரும் பொதுமையிற் கூறப் பரிமேலழகரும் வழிவந்த பின்னுரையாசிரியர்கள் அனைவரும் பயன் என்பது இன்பந்தானே எனக் கண்டு 'மறுமை யின்பம்' என்றனர். கவிராசர் 'இன்பம் செல்வத்திலே தானிருக்கிறது என்றுஎண்ணி 'மறுமைக்கு வேண்டி செல்வம்' என்றனர். மறுசென்மம் அல்லது மறுபிறப்பு உண்டாவதே மனநலத்தால் என்றனர் பரிதியாரும், காளிங்கரும். எங்ஙனமாயினும் மறுபிறப்பும், அதன் பயனாய இன்பமும் வாய்க்கப் பெறுவது மனநலத்தால் என்பதற்கும் ஒரு பிறவியிலிருந்து மற்றொரு பிறவிக்குத் தொடர்ந்து வரும் இன்பத்துன்பங்களும் மனநலத்தான் விளைவனவாயினும், எடுத்த பிறவியில் நிலையிற்றளராது பாதுகாப்பது இனநலம் என்ற கருத்தையே உரைகள் உதவுகின்றன.

---

3. உடம்பட்டு — ஒத்துக்கொண்டு.

ஆனால் சில இலக்கணக் குறிப்புக்களும், விளக்கங்களும் சிறிது குழப்பத்தை விளைவிக்காமல் இல்லை. எடுத்துக்காட்டாகப் பரிமேலழகர் 'மறுமை பயப்பது மன நன்மை தானே; பிறிதொன்று இன்று; என்னும் மதத்தை உடம்பட்டுக் கூறியவாறு' என்றனர். வள்ளுவர் யாண்டும் முற்பிறப்பின் நலந்தீங்குகளே பின் பிறவிக்குக் காரணம் என்பவர். அவர்க்கு இதைக்காட்டிலும் வேறு என்ன முடிவு இருக்க இயலும். ஆதலால் இத்தொடர் பரிமேலழகர் உரைக் குறிப்பாக இருக்காதோ என ஐயுற நேருகிறது.

பரிதியுரையின் பிற்பகுதி குறட்சொல்லமைதிக்கு ஏற்றதா யில்லை. காளிங்கர், உரைப் பிற்பகுதியும் அங்ஙன்மே. ஆயினும் அவர் உரைநடை அது எனக்கொண்டு, 'இனமான மற்று அதுதானும் பிற் கூறப்படும் இனநலத்திற்கு இனமான அம்மனநலமும் இன நலத்தால் பெரிதும் சேமத்திட்பம் உடைத்தாம் எனக் கருத்துக் கொள்ளுதல் கூடும்.

மனநலத்தின் விளைவு மறுபிறப்பும் அதில் நுகரக்கிடக்கும் இன்பங்களும். அவை அப்பிறப்பில் தவறாமல் எய்தப்படுவது இன நலத்தால் என்னுங் கருத்தினைத் தரும் உரைகள் சிறந்தன.

ஒ) ஒப்புமைப்பகுதி

வாயுவினை நோக்கியுள மாண்டவய நாவாய்
ஆயுவினை நோக்கியுள வாழ்க்கையது வேபோல்
தீயவினை நோக்குமியல் சிந்தனையு மில்லாத்
தூயவினை நோக்கியுள துப்புரவு மெல்லாம். —குண்டல., 3.

மனநலத்தினாகும் மறுமை:

கெடுக்க வல்லதுங் கெட்டவர் தங்களை
எடுக்க வல்லது மிம்மன மென்றதை
யடக்க வல்லவ னைய பவக்கடல்
கடக்க வல்லவ னாவன் கடிதரோ. —பிரபுலிங்கலீலை.

46.10. நல்லினத்தி னூங்கும் துணைஇல்லை தீஇனத்தின் அல்லற் படுப்பதூஉம் இல். (சகூ0)

உரைப்பகுதி:

அ) மணக்.: நல்லினத்தின் மிக்க துணையாயிருப்பதூஉம் இல்லை, தீயினத்தின் மிக்க அல்லற்படுத்துவதூஉம் இல்லை எ—று.

இது சேராமைக்குக் காரணம் கூறிற்று.

ஆ) *பரிதி.:* சற்புருஷர்[1] துணைபோலே சுகம் இல்லை; துற்சனர் சங்காத்தம்[2] போலே துன்பம் இல்லை எ—று.

இ) *பரிப.:* நல்லினத்தின் மிக்க துணையா யிருப்பதும் இல்லை. தீயினத்தின் மிக்க அல்லற் படுப்பதுவும் இல்லை எ—று.

இது சேராமைக்குக் காரணம் கூறிற்று.

ஈ) *காளி.:* உலகத்து ஒருவர் இணங்கும் இனவேற்றுமையான் வரும் புகழும், பழியும் இவையாகலான் நல்லினத்தின் மேலாயிருப்ப தொரு துணையும் இல்லை; தீயினத்தின் துன்பம் தரும் பகையும் இல்லை எ—று.

இனி, மற்று இங்ஙனம் பெரியோரைத் துணைக்கோடலும், சிற்றினம் சேராமையும் ஆகிய நன்மைக் கூற்றினது மருவுதல் செய்வுழி அவர் நலமும் தீங்கும் தெரிந்து செய்ய வேண்டுதலான் அவ்வகையினை உணர்த்துவான் வேண்டி, மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

உ) *பரிமேல்.:* ஒருவற்கு நல்லினத்தின் மிக்க துணையும் இல்லை தீய இனத்தின் மிக்க பகையும் இல்லை.

ஐந்தனுருபுகள்[3] உறழ்பொருளின்கண் வந்தன[4]. ஊங்கு என்பது; பின்னும் கூட்டி உம்மை மாற்றி உரைக்கப்பட்டது. நல்லினம் அறியாமையின் நீக்கித் துயர் உறாமல் காத்தலின் அதனைத் துணை என்றும், தீயினம் அறிவின் நீக்கித் துயர் உறுவித்தலின் அதனை, பகை[5] என்றும் கூறினார். அல்லற்படுப்பது என்பது ஏதுப்பெயர் இதனால், விதி எதிர்மறைகள் உடன் கூறப்பட்டன.

காரி: ஐந்தனுருபு உறழ்வின்கண் வந்தது. ஊங்கு என்பது பின்னுங் கூட்டி அதனிடைநின்ற உம்மை துணையுமில்லை என மாற்றி உரைக்கப்பட்டது.

---

1. சற்புருஷர்—நல்லோர்; 5.துற்சனர்சங்காத்தம் —தியோர் கூட்டுறவு.
3. நல்லினத்தின் , ,தியினத்தின்' என்பவற்றிலுள்ள உருபுகள்
4. உறழ்பொருள் — ஒன்றின் ஒன்று மிகுவதை உணர்த்தும் பொருள் காக்கையிற் கரிதுகளம்பழம் என்ற வழி கருநிறத்தான் காகத்தைவிடக் களம்பழம் சிறந்திருத்தலை விளக்குதல் போல 'நல்லினத்தைக் காட்டிலும் சிறந்த துணையும், தியினத்தைக் காட்டிலும் மிக்க பகையும் இல்லை என ஒன்றினொன்று அவ்வக்குணங்களில் மிகுந்திருத்தலைக் காண்க. உறழ்தல் — ஒன்றனான் ஒன்றை மிகுத்தல் என்பர் நச்சினார்க்கினியர் இதனை இக்காலத்தார் எல்லைப் பொருள் என்பர்.
5. ,அல்லற்படுப்பதூஉம், என்றும் பாடமுண்டு.

ஊ) **கவிராசர்:** ஒருவனுக்கு நல்லினஞ்சேர்தலை யொத்த துணையு மில்லை; தீயினம் சேர்தலை யொத்த பகையு மில்லை எ—று.

(ஏ பழைய 2: ஒருவற்கு நல்லினத்தின் மிக்க துணையுமில்லை. இன்ப மனுபவித்தற்கு; தீயினத்தில் மிக்க பகையுமில்லைத் துன்பம் அனுபவித்தற்கு,

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

ஊங்கு பகையை விசேடிக்குங்கால் மிக்க எனவும், துணையை விசேடிக்குங்கால் 'சிறந்த' எனவும் பொருள் கொள்வர். தேவநேயர். ஜி.வரத. 'மேம்பாடு என்னும் பொருளைத் தரும்' 'ஊங்கு' என்பது புணர்க்கப் பெற்றமையால் 'நல்லினத்தின்'. 'தீயினத்தின்' என்ற ஐந்தனுருபுகள் ஒப்புப் பொருளில் வந்தனவாகக் கொள்வர். பரிமேலழகர் முதலியோர் உறழ்ச்சிப் பொருளில் வந்தன வாகக் கொள்வர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

நல்லினத்தினூங்குத் துணை இல்லை:

''தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவர்.'' —கம்பராமா., 905.

''நிந்தையிலாத் தூ யவரும் நிந்தையரைச் சேரினவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் தன்பால் அருந்திடினும
பாலதெனச் சொல்லுவரோ பார்''. —நீதி., 79.

தீ இனம்:

''சிறியாரொடு தீயன்மின்.'' —வளையாபதி: 16.

''தீயினம் படர்ந்து வேந்தன் செறுவதே புரியு மாயின்
போயினம் படர்ந்து வாழும் புகலிடம் இன்மை யாலே
வேயினம் படர்ந்த சாரல் வேங்கையை வெருவிப் புல்வாய்
மாயினம் படர்வ தெல்லாம் வையகம் படரும் அன்றே.''
சூளா—. 265.

தீ இனத்தின் அல்லற் படுப்பதூஉம் இல்

''தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது.'' —வாக்கு., 9.

''சேராத இடந்தனிலே சேரவேண்டாம்.'' —உலக., 8.

''துஷ்டனைக் கண்டால் தூ ரவிலகு.'' —பழமொழி

''நல்லினக்கமல்லது அல்லற் படுத்தும்'' —பழமொழி

''சேராத இடத்திலே சேர்ந்தால் வாராத துன்பம் வரும்''
—பழமொழி

''மொய்சிதைக்கும் ஒற்றுமை யின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்கும்
கூடார்கண் கூடி விடின்.'' —நான்மணி., 21.

முற்றும்:

''உணர உணரும் உணர்வுடை யாரைப்
புணரப் புணருமாம் இன்பம்—புணரின்
தெரியத் தெரியும் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமாம் நோய்'' —நாலடி.' 247

''சீலமுற் றுயர்ந்தவர்ச் சேரின் வீடுறும்
மாலையுற் றறிவிலார் மருங்க டைந்திடின்
வேலையுற் றலைதுரும் பென்ன வெம்பவக்
கோலமுற் றிறந்திறந் துழலல் கூடுமால்.'' —பாக.

பண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்பு முறை.

	சிற்றினம்	நிலத்தியல்பான்	மனத்தானாம்	மனத்து	மனந்தூய்மை	மனந்தூயார்க்	மனநலம் மன்னு	மனநலம் நன்கு	மனநலத்தின்	நல்லினத்தின்
மணக்.	1	4	3	5	6	7	10	9	8	2
பரிதி.	10	2	7	3	6	4	8	5	9	1
பரிப்.	1	4	3	5	6	7	10	9	8	2
காளி.	1	9	7	8	2	4	6	5	3	10
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

46வது அதிகாரம் 'சிற்றினஞ் சேராமை' முற்றிற்று.

47. தெரிந்து செயல்வகை

அதிகாரப் பொருள்:

அ) மணக்.: தெரிந்து செயல்வகையாவது வினை செய்யுங்கால் அதனை எண்ணிச் செய்ய வேண்டும் என்று கூறுதல். அறிவுடைய வனாய்க் குற்றம் கடிந்து, மந்திரி புரோகிதரைத் துணையாகக் கொண்டு, சிற்றினஞ் சேராது ஒழுகும் அரசனும் வினைசெய்யுங் காலத்து முன்பே எண்ணிச் செய்யவேண்டுதலின், அவையிற்றின் பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: தெரிந்து செயல்வகையாவது புண்ணியமும் பாவமும் அறிந்து தனக்கு ஆன காரியம் செய்வான் எ—று.

இ) பரிப்.: தெரிந்து செயல்வகையாவது வினை செய்யுங்கால் அதனை எண்ணிச் செய்ய வேண்டும் என்பது கூறுதல். அறிவுடையனாய்க் குற்றம் கடிந்து மந்திரி புரோகிதரைத் துணை யாகக் கொண்டு சிற்றினம் சேராது ஒழுகும் அரசனும் வினைசெய்யும் காலத்து முன்பே எண்ணிச் செய்ய வேண்டுதலின் அவையிற்றின் பிற் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது, அரசன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யுந்திறம், அச்செயல் பெரியாரைத் துணைக்கோடல் பயனுடைத்தாயவழி அவரோடும் செய்யப்படுவது ஆகலின், இது சிற்றினஞ் சேராமையின் பின் வைக்கப் பட்டது.

ஊ) கவிராசர்.: அஃதாவது, ராசாவானவன் தான் செய்யுங் காரியங்களை நன்றாக ஆராய்ந்து அறிந்து பெரியோர்களையும் துணையாக வைத்துக்கொண்டு செய்யுந் திறம். அப்படிச் செய்தால் குறையில்லாமல் முடியும் எ—ம்.

ஏ) *பழைய* 2: அஃதாவது அரசன் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யும் வகை. வினையென்பது தொழில்.

மல்லர்: அதாவது செய்யத்தக்க காரியங்களை ஆராய்ந்து பார்த்துச் செய்கிறது.

சி.இ.: செய்யுஞ் செயல்களை ஆராய்ந்து செய்யும் வகை.

வரத.: செய்யும் வினைகளை வகை தெரிந்து செய்ய வேண்டும்

இராம.: ஒவ்வொருவரும் தாம் தொடங்கும் எந்த வேலையையும் ஆய்ந்து, பயன் தெரிந்து தொடங்க வேண்டும் என்பதையும் அதன் வகையைச் சேர்ந்த அறிவையும் சொல்வது.

கா.சு.: ஆராய்ந்து செய்யும் திறம்.

இவற்றுள் பரிதியார் உரை புண்ணிய பாவந்தெரிந்து செய்தலைக் கூறுவது. அது பொதுமையில் இயையுமேனும் அரசியலுக்கு இயைபில் லாதது எனலாம்.

47. I. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும் ஊதியமும் சூழ்ந்து செயல். (சகூக)

உரைப்பகுதி :

அ) *மணக்.*: வினைசெய்து முடித்தற்கு அழியும் பொருளும், அது செய்து முடித்தால் உளதாகும் பொருளும், ஆய் நின்று அப்பொருளி னாற் பின்பு உண்டாய்வரும் பயனும் எண்ணிப் பின்பு வினை செய்ய வேண்டும் எ—று.

ஆ) *பரிதி.*: ஒருவனால் வருகிற ஆக்கமும் சேதமும் விசாரித்து தொன்றுதொட்டு வருகிற ஊதியமும் விசாரித்துச் செய்வான் எ—று.

இ) *பரிப்.*: வினைசெய்து முடித்தற்கு அழியும் பொருளும் அது செய்து முடித்தால் உளதாகும் அப்பொருளினால் உண்டாம் அப் பயனும் எண்ணிப் பின்பு வினைசெய்க எ—று.

வழிபயக்கும் ஊதியம் ஆவது முன்பு நன்றாகத் தோற்றிப் பின்பு தீது ஆகாத வினை. இது முதலாக எண்ணுமாறு கூறுகின்றார் ஆகலின் முற்பட இவை மூன்றும் எண்ணுதல் வேண்டு மென்பது கூறிற்று.

ஈ) *காளி.*: யாவரொடும் யாதானும் ஒரு காரியம் செய்யும் இடத்து ஆவதொன்றாகியும்அழிவதொன்றாகியும் இங்ஙனம்வேறுபட்டிருக்கும்.

அதனால், அவற்றை ஆராய்ந்து, அழிவது விடுத்தும், ஆவது கைக் கொண்டும் செய்யுங்கால், மற்று அதன் பயனுடைமையும் தேர்ந்து பின்பு அக்கருமம் செய்க எ—று.

உ) பரிமேல். : வினை செய்யுங்கால் அப்பொழுது அதனால் அழிவதனையும், அழிந்தால் பின் ஆவதனையும், ஆய்நின்று பிற் பொழுது தரும் ஊதியத்தையும்[1] சீர்தூக்கி உறுவதாயின் செய்க.

உறுவதாவது, நிகழ்வின்கண் அழிவதனில் ஆவது மிக்கு, எதிர் வினும் அது வளர்ந்து வருதல். அழிவது இன்மையின். எதிர்வினைக் கண் வரும் ஆக்கத்தை ஊதியம் என்றார்; எனவே அவ்வூதியம் பெறின் நிகழ்வின்கண், அழிவதும்[2] ஆவதும்[3] தம்முள் ஒத்தாலும் ஒழிதற் பாற்றன்று என்பது பெற்றாம், இரண்டு காலத்தும்[4] பயனுடைமை தெரிந்து செய்க என்பதாம்.

ஊ) கவிராசர் : காரியங்கள் செய்யுமிடத்து, அந்தக் காரியங் களால் அழிந்துபோகிறதும் போன பிற்பாடு ஆகிறதுமாய் நின்று பிற்பொழுது தரும் பலாபலத்தையும்[5] நன்றாய் ஆராய்ந்து, செய்வ தாயிற் செய்க எ—று.

ஏ) பழைய 2 : அரசன் வினை செய்வதனை, அழிவதனையும் அழிந்தாற்பின் ஆவதனையும், அப்படி ஆவதனைப் பிற்பொழுது தரும் ஆதாயத்தையும் சீர்தூக்கிப் பார்த்து, ஆதாயம் உண்டாயிற் செய்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பொதுமையினிற்கும் ஆவது அழிவது ஆகிய இவற்றைப் பொருள் மேல் வைத்துச் சொல்கிறார் மணக்குடவர். 'வழிபயக்கும் ஊதியம்— முன்பு நன்றாகத் தோற்றிப் பின்பும் தீதாகாத வினை' என்ற பரிப்பெருமாள் உரைப்போக்கு ஆவது அழிவது இவைகளையும் வினைமேல் வைத்துக் காணப் பணிக்கிறது எனலாம். பரிதி., 'வழி பயக்கும் ஊதியம்' — 'தொன்றுதொட்டு மரபுவழி வரும் ஊதியம்' என்பர். காளிங்கர், 'தொடங்கும் வினைகளில் ஆவதொன்றாயும் அழிவதொன்றாயும் இருக்கும்'. ஆதலால் அழிவதனை விட்டு

1. ஊதியம் - தொழில் முற்றுப் பெற்ற பின் தொழிலின் மூலமாகவும், அப்போது ஆயிய மிச்சப் பொருள் மூலமாகவும் கிடைக்கும் இலாபம்.
2. அழிவது - தொழில் செய்யும்போது தொழிலுக்காகச் செலவாகும் பொருள்.
3. ஆவது - அப்போது அழியுந்தொகை போக மிஞ்சி நிற்கும் பொருள்.
4. இரண்டு காலத்தும் - தொழில் நிகழுங்காலத்தும் எதிர்காலத்தும்.
5. பலாபலம் - பயனும் பயனின்மையும்.

ஆவதனைத் தொடங்கும் வினைகளில் ஆவதொன்றாயும் அழிவ தொன்றாயும் பயனாகிய முடிவைக் கருதித் தொடங்குக; விடுக என்கிறார்.

தேவநேயருரையும் வினைதொடங்கும்போது வினைக்காகும் செலவையும் அதன் பயனையும் அதனால் பின்வரும் இலாபத்தையும் கருதித் தொடங்குக எனப்பொருளையே கருதுகிறது.

பிற்கால உரைகளிற் பல பொதுமையில் ஆவது அழிவது ஊதியம் என்றே கூறுகின்றன. அரசியல் தொடங்கும் வினை நாடு காவலும்—மக்கள் நலமும் பற்றியே யிருக்கும். அதில் பொருளும் அழியலாம். ஆனால் அழிவனவும் ஆவனவும் வேறு பலவும் உள. ஆதலால் பொருள் ஒன்றையே கருதும் உரைகளிற் பொதுமையில் நிற்பன சிறப்புடைத்து.

ஜி.வரத., 'தெரிதல் வகையை நான்காக்கிச் செய்வன இரண்டும் தவிர்வன இரண்டும் பகுப்பர். விடத்தகுவன அழிவது மிகுந்து ஆவது குறைவது; சமமாய்ப் பிற்பயன் இல்லாதது; கொள்ளத் தகுவன ஆவது மிகுந்து அழிவு குறைந்தன; சமமாய்ப் பிற்பயக்கும் ஊதியம்உடையன. குழந்தை, இராம., இவர்களும் பொருளையே கருதி உரைப்பர். வழி பயக்கும் ஊதியம், ஆவது முதலியன பொரு ளாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை; புகழும் வெற்றியும் ஆதலும்கூடும்; இவையும் ஊதியமும் ஆவதும் ஆகும். ஆகையாற் பொதுமையினிற்கும்உரைகளே பொருத்தமானவை.

மு.கோ., 'வழி பயக்கும் ஊதியம்—தன் சந்ததிகளுக்கு, காலத்திற்கெல்லாம் பயன்படும் ஊதியம்' என்பர். தெரிந்து செயல் அரசியலின் கூறு. அது அரசற்குச் சிறப்பாகவும், பொதுமக்களுக்குப் பொதுவாகவும் அமைந்தது என்பதனை உரையாசிரியர்கள் ஆங்காங்கு உணர்த்தி வருகின்றனர். இக்குறள் உணர்த்தும் 'ஆக்கம்' 'அழிவு' 'ஊதியம்' என்பன அரசனால் நாட்டிற்கும், மக்களால் நாட்டிற்கும், விளைய இருக்கும் அறிவு ஆக்கங்கள். அரசனாயினும், மக்களாயினும் தன் சந்ததிக்குப் பயன்படும் வகையில் முயலுதல் சிறிதும் ஏலாது. ஆதலால் இவ்வுரை ஆய்வுக்குரியதாகிறது.

(ஒ) ஒப்புமைப்பகுதி :

சூழ்ந்துசெயல் :

"செய்யும் ஒருகருமம் தோ்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபம் சேருமே — செய்யஒரு

நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல்.'' —நீதி. 16

''முடியும் வகை யோசியாமல் முயற்சி கொள்ளாதே.'' —பழமொழி.

முற்றும் :

''செய்யும் பொழுதே அழிபொருளில் சிறப்பதொப்ப திரண்டினுள் ஒன்று
உய்ய உதவி வழிபயக்கும் ஒண்மை வினையைத் தேர்ந்துளத்தின்
ஐயம் அகன்ற இனத்தோடும் ஆய்ந்து தனித்தும் புரிந்திடுக.''
—விநா.அரசி.59

47.2. தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க் கரும்பொருள் யாதொன்றும் இல். (சசூஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: அமாத்தியர் பலருள்[1] ஆராய்ந்து கூட்டிக்கொள்ளப் பட்ட மந்திரிகளாகிய இனத்தோடே கூடச்செய்யும் வினையை ஆராய்ந்து அதனைச் செய்யுமாறு எண்ணிச் செய்யவல்ல அரசர்க்குப் பெறுதற்கு அரிதாயிருப்பதொருபொருள் யாதொன்றும் இல்லை எ—று.

ஆ) பரிதி.: விசாரித்தால் பெரியோர் கூட விசாரித்து மேலெண்ணி யாதொன்றும் செய்வார்க்கு அரிதான காரியம் ஒன்றும்இல்லை எ—று.

இ) பரிப்.: அமாத்தியர் பலருள்ளும் ஆராய்ந்து கூட்டிக் கொள்ளப் பட்ட மந்திரிகளாகிய இனத்தோடே கூடச் செய்யும் வினையை ஆராய்ந்து அதனைச் செய்யுமாறு எண்ணிச் செய்ய வல்லவனுக்குப் பெறுதற்கு அரியது ஒரு பொருளும் இல்லை எ—று.

இனம் என்றார் மந்திரிகள் பலர் வேண்டும்[2] என்றற்கு. இஃது எண்ணுதற்கு ஆவாரையும் கூறி எண்ணிச் செய்யவேண்டும் என்பதும் கூறிற்று.

ஈ) காளி.: யாதும் ஒரு கருமம் செய்யும் இடத்து அதனைத் தெரிந்து செய்யும் திறமையரேனும், மற்று அதனைக் கல்வியால் தெரிந்த நல்லினத்துடனே உசாவிக்கொண்டு தமதுநெஞ்சாலும் தெரியத்தெர்ந்து கொண்டு, இங்ஙனம் செய்யும் அரசர்க்கு இனிச் செயற்கு அருமையுடைய பொருள் யாது ஒன்றும் இல்லை; மற்று இவர்க்குயாவையும் செய்தல் எளிது எ—று.

---

1. அற்ப லாபம் - சிற்றுதியம்
2. அமாத்தியர் பலர் - அமைச்சர் சேனாபதியர் ஒற்றர் புரோகிதர் முதலான பல பேர்
3. இவர் கருத்து மந்திரிகளே பலர் வேண்டும் என்பது.
4. உசாவி - விஞவியாராய்ந்து.

உ) *பரிமேல்.*: தாம் தெரிந்து கொண்ட இனத்துடனே செய்யத்தகும் வினையை ஆராய்ந்து, பின் தாமேயும் எண்ணிச் செய்து முடிக்கவல்ல அரசர்க்கு, எய்துதற்கு அரிய பொருள் யாதொன்றும் இல்லை.

ஆராயப்படுவன, எல்லாம் ஆராய்ந்துபோந்த இனம் என்றும் ஆம். செய்வார்க்கு என்றதனால், வினை என்னும் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. வினையாவது மேற்சேறல் முதல் வேறலீறாய தொழில்[4]. பொருள்கட்கு ஏதுவாய அதனில் தளறாமையின், அரிய பொருள்கள் எல்லாம் எளிதின் எய்துவர் என்பதாம். இவை இரண்டு பட்டானும் செய்யத் தகும் வினையும், அது செய்யுமாறும் கூறப் பட்டன.

ஊ) *கவிராசர்*: நன்றாகச் செய்காரியம் தவிர, காரியம் அறிந்து செய்விக்கத்தக்க வினயத்துடனே[5] செய்யத்தகும் வினையை ஆராய்ந்து பின் தானும் அக்காரியத்தை நன்றாக வாராய்ந்து அறிந்து செய்து முடிக்கவல்ல ராசாக்களுக்கு, ஆகாத காரியம் ஒன்றுமில்லை.

ஏ) *பழைய 2*: தான் மனமறிந்து தெரிந்த இனத்தைக் கொண்டு செய்யத் தகுந்தொழிலை ஆராய்ந்து, பின் தானும் மனத்தில் எண்ணிப் பார்த்துச் செய்து முடிக்கவல்ல அரசர்க்கு அரிய பொருள் யாதொன்றுமில்லை; எல்லாம் எளிது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'தெரிந்த இனம்' அமைச்சர்கள் பலருள் தேர்ந்து இவரே, இதற் குரியவர்; எனத்தெளிந்து கூட்டிக்கொண்ட இனம்என்பர்., *மணக்.*; *பரிப்.*; *பரிமேல்.*, *பழைய உரை 2*, *தேவநேயர்*, *சாமிசிதம்.*, *குழந்தை*, *ஈ. சபாபதி*.

'கல்வியால் தெரிந்த நல்லினம்' என்பர் *காளிங்கர்*. *பரிமேலழக* ரும் இக்கருத்தை மாற்றுரையாகத் தழுவுவர். காரியம் அறிந்து செய்விக்கத்தக்க இனம் என்பர் *கவிராசர்*. *தேவநேயர்*.

தமக்கு நன்றாகத் தெரிந்த நண்பர் கூட்டத்தினோடு' *சீ. இ.*; 'முன்பே செய்து அனுபவம் பெற்ற நல்லினத்தோடு' *ஜி.வரத.*; 'தாம் மேற்கொள்ளும் செயலைத் தெரிந்த இனத்தோடு' *இராம.*; 'தாம்

---

4. மேற்சேறல், வளைத்தல், எதிருன்றல், பொருதல் முதலாக இடைநின்ற தொழில்கள்.
5. வினயத்துடனே - முறைமை யறிந்து.

தக்கவர் என்று தெரிந்து கொண்ட இனம்' மு. ரா. அரு.; 'தெரிந்த மனையாள்' 'தெரிந்த பெரியார்' 'எடுத்த செயல்பற்றித் தெரிந்த பெரியோர்' மு.கோ.

தாம் தெளிந்து எடுத்துக்கொண்ட இனம், செயல் தெரிந்த இனம் என்ற இரு கருத்துக்கள் கொள்ளப்பெறுகின்றன. பலருள் தேர்ந்து எடுத்துக்கொண்ட இனமும் எடுத்த செயலைப் பற்றிய அறிவிலதாயின் பயனின்றாம்; செயல்தெரிந்த இனம் செயற்படுந்தலைவனுடைய நம்பிக்கைக்கு உரியதன்றாயினும் அங்ஙனமே. ஆதலால் இரண்டையும் இணைத்துப் பலருள் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயலுந் தெரிந்த இனத்தோடு எண்ணிச் செய்வார்க்கு எனல் ஏற்புடைய உரையாகும். 'தெரிந்த இனம்' என்பதில் 'இனம்' என்றதனால் வினை செய் சுற்றமும், சூழ்திறன் சுற்றமும் என்ற இருவகைச் சுற்றத்திலும் இன்னவினைக்கு இன்னார் பயன்படுவர் என்று சிலரைத் தேர்ந்து எனவும் கொள்ளலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

தெரிந்த இனம்:

ஆசான் பெருங்கணி யருந்திற லமைச்சர்
தானைத் தலைவர் தம்மொடு குழீஇ.....கூறும்.—சிலப்., 26:3—4.

தேர்ந்து எணணி:

எண்ணுறு சூழ்ச்சி விருக்கை ... ...—கம்பராமா., 1400

47 .3. ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை ஊக்கார் அறிவுடை யார். (சசுஙூ)

உரைப்பகுதி :

அ) மணக்.: தமக்கு ஆக்கம் உண்டாக வேண்டி, முன்பு உண்டான முதலும் இழக்கவரும் வினையைச் செய்ய நினையார் அறிவுடையார் எ—று.

இது பிற்பயவாதவினை செய்யலாகாது என்றது.

ஆ) பரிதி.: அற்பலாபத்தை[1] எண்ணி முதலைச் சேதம் பண்ணுகிற காரியம் செய்யார் அறிவுடையார் எ.று.

1அற்ப லாபம்-சிற்றா தியம்.

இ) *பரிப்.* : தனக்கு ஆக்கம் உண்டாக வேண்டி முன்பு உண்டான முதலும் இழக்கவரும் வினையைச் செய்யார் அறிவுடையார் எ—று.

மேற் பிற்பயக்க வேண்டும் வினை செய்ய வேண்டும் என்றார். இது பிற்பயவாத வினை செய்யலாகா தென்றது.

ஈ) *காளி.* : இங்ஙனம் தெரிந்த அறிவினர் தம்வயின்மேல் ஆவதோர் ஆக்கம் கருதித் தமது பழகிய பொருளும் சிதையுமாறு செய்யும் கருமத்தின்மேல் ஒருப்படார்; யார் எனின் மற்று ஆக்கமும் முதலும் அழிவின்றிச் சிறக்கும் தகுதியை அறியும் அறிவுடையார் எ—று.

உ) *பரிமேல்.* : மேல் எய்தக்கடவ ஊதியத்தினை நோக்கி முன் எய்தி நின்ற முதல் தன்னையும் இழத்தற்கு ஏதுவாய செய்வினையை, அறிவுடையார் மேற்கொள்ளார்.

கருதி என்னும் வினையெச்சம் இழக்கும் என்னும் பெயரெச்ச வினை கொண்டது. எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. ஆக்கமே அன்றி, முதலையும் இழக்கும் வினைகளாவன வலியும் காலமும் இடனும் அறியாது பிறர்மண் கொள்வான் சென்று, தம்மண்ணும் இழத்தல் போல்வன. முன் செய்து போந்த வினையாயினும் என்பார். செய்வினை என்றார்.

ஊ) *கவிராசர்* : தான் செய்யுங் காரியங்களிலே வரும் லாபத்தினைப் பார்த்து, லாபம் வருகிற தென்று, முன் தன்னிடத்திலிருந்த முதலாகிய திரவியங்களை இழந்துவிடுகிற காரியங்களைச் செய்யாத அறிவுடையார் எ—று.

ஏ) *பழைய 2* : மேல் வரும் ஆதாயத்தைக் குறித்துக் கையிலிருக்கும் முதலை இழக்குந் தொழில்களைச் செய்யார் அறிவுடையார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

தேவநேயர் 'ஆக்கம் – உறுதியற்ற எதிர்கால ஊதியம்; முதல் - இருப்பிலுள்ள முதல்' என்ற விளக்கங்கள் தெளிவு அளிப்பன. சி.இ. 'அடையக்கூடிய மேம்பாடு' என்பர். இது மிக ஏற்புடையதாதல் முன்னரே குறிக்கப் பெற்றது. 'ஊக்கார்' என்பதற்கு, 'உணர்ச்சி வேகத்தில் அவசரப்பட்டுச் செய்துவிடமாட்டார்' என்ற நயம் சிறந்தது. 'நினைக்கவும் மாட்டார்' என்பர் மு.கோ.

ஒ) ஒப்புமைப்பகுதி:

''வாணிகம் ஒன்றும் தேற்றாய் முதலொடும் கேடு வந்தால்
ஊணிகந் தீட்டப் பட்ட ஊதிய ஒழுக்கின் நெஞ்சத்து
ஏணிகந்து இலேசு நோக்கி இருமுதல்கெடாமை கொள்வார்
சேணிகந் துய்யப் போநின் செறிதொடி ஒழிய என்றார்.''
-சிவக.,770.

முற்றும்:

''ஆஅ மெனக்கெளிதென் றன்றுலகம் ஆண்டவன்
மேஎந் துணையறியான் மிக்குநீர் பெய்திழந்தான்
தோஒ முடைய தொடங்குவார்க் கில்லையே
தாஅம் தரவாரா நோய்.'' —பழ.நா.,183.

ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை!

ஒன்றாக்கி யொன்றிழத்த லுணர்வுடையோர்க் குரித்தன்றால்.''
-கம்பரமா., 5162.

''தோற்பன தொடங்கேல்'' -ஆத்தி., 65.

''வெய்ய ஆக்கம் கருதிமுதல் விளிக்கும் வினையைப் புரியற்க.''
—விநா. அரசி., 59

ஒரு புடை ஒப்பு:

''வயிற்றுப்பிள்ளையை நம்பி மாடு மேய்க்கிற பிளளையைப்
பறிகொடுத்தாற்போல.'' —பழமொழி.

''அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டது போல., —பழமொழி

''வானத்துப் புறாவை நம்பி கைப்புறாவை யிழந்ததுபோல.''
—பழமொழி.

''கையிற் பறவையை விட்டுக் காட்டுப்பறவைக்குக்
கண்ணிவைக்கலாமோ''.

47.4 தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும் ஏதப்பா டஞ்சு பவர் (சசுச)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஆராய்ந்தறிதல் இல்லாத வினையைச் செய்யத் தொடங்கார். இகழ்ச்சியாகிய குற்றப்பாட்டிற்கு அஞ்சுபவர் எ—று.

ஆ) *பரிதி.*: உலகத்துக்குப் பொருந்தாக் காரியம் செய்யார்; உலகத்துக்கு இழிவான காரியம் செய்யப் பயப்படுபவர்கள் எ—று.

இ) *பரிப்.*: ஆராய்ந்து அறிதல் இல்லாத வினையைச் செய்யத் தொடங்கார். இகழ்ச்சியாகிய குற்றப்பாட்டிற்கு அஞ்சும் அவர்கள் எ—று.

ஒருவினை செய்ய நினைக்கும் காலத்து நின்றநிலை அறிய வேண்டும் என்றது.

ஈ) *காளி.*: இங்ஙனம் தாமும் சான்றோரும் தம்முள் கூடியாயினும் தனித்தாயினும் தெளிந்து, சிறந்த கருமஞ் செய்யும் அத்துணை அல்லது மற்றுத் தெளிவில்லதனைச் செய்யத் தொடங்கார். யாரெனின் மற்று அவர் இது செய்தார் என்று பிறர் நகுதல் நமக்கு ஓர் இழிவாம் என்னும் குறைபாட்டை நாணுவார் எ—று.

உ) *பரிமேல்.*: இனத்தொடும் தனித்தும் ஆராய்ந்து துணிதலில்லாத வினையைத் தொடங்கார், தமக்கு இளிவரவு என்னும் குற்றம் உண்டாதலை அஞ்சுவார்.

தொடங்கின், இடையின் மடங்கல்[1] ஆகாமையின், தொடங்கார் என்றார். இளிவரவு அவ்வினையால் பின் அழிவு எய்தியவழி அதன் மேலும்[2] அறிவும் மானமும் இலர் என்று உலகத்தார் இகழும் இகழ்ச்சி. அஃது உண்டாதல் ஒருதலை ஆகலின், தெளிவு[3] உள்வழித் தொடங்குக என்பதாம்.

ஊ) *கவிராசர்.*: நல்ல மனங்களுடனும் தனித்தும் ஆராய்ந்தும் துணிதலில்லாத காரியங்களைச் செய்யார், தமக்கு இளிவரவாகிய குற்றம் வரப்போகிற தென்றஞ்சி நடப்பவர் எ—று.

ஏ) *பழைய 2*: தொழிலறிந்த வினத்தொடும் ஆராய்ந்து தெளியாத தொழிலைத் தொடங்கிச் செய்யார், தமக்கு இளிவரவு என்னும் குற்றத்திற்கு அஞ்சுபவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி. 'தெளிவிலது — உலகத்துக்குப் பொருந்தாக் காரியம்' என்பர். இது ஏனையோர் உரை போலத் தெளிவிலதாகவேயுள்ளது. 'தானும் சான்றோரும் கூடியாயினும் தனித்தாயினும் தெளிந்த காரியம்' என்னும் *காளிங்கர்*, *பரிமேல்.*, உரையினும், நல்ல மனங்

1. மடங்கல்—வினையைத் தொடர்ந்து செய்யாது, நடுவில் விடுதல்.
2. அதன்மேலும் அந்த அழிவின் மேலும். 3. தெளிவு—செய்யலாம் என்ற தெளிவு.

களோடும் என்ற கவிராசர் உரையும் எடுத்த தொழிலிற் சிறந்த இனம் என்ற பழைய உரையும் படிப்படியாக விளக்கந்தருவன 'நன்மை பயக்கும் என்று தெளிவாகத் தெரியாத செயல்களை' என்பர் கா.சு., தேவநேயர். இவ்வுரைகள் அனைத்துமே புறஞ்செல்லாமல் பாவின் சொல்லைப் பற்றியே செல்வதால் மயக்கமின்று என்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

தெளிவு இலதனைத் தொடங்கார்:

தேற்றம் இல்லாதான் துணிவு இன்னா. —இன்னா., 8·

ஒன்றாக்கி யொன்றிழத்தல் உணர்வுடையோர்க் குறித்தன்றால்.
—கம்பராமா., 5161.

475.. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு. (சகூடு)

உரைப்பகுதி:

அ) மணக்.: மேற்சொன்ன வகையில் போக்கறச்[1] சூழாதே போர் கருதி எழுதல் பகைஞராகிய விதையை நிலத்தின்கண்ணே இடுவ தொரு நெறி எ—று.

இது பகைவர்க்கு ஆக்கம் உண்டாம் என்றது.

ஆ) பரிதி.: ஒரு சத்துருவைச்[2] செயிக்க வேண்டினால் அவனுக்கு அடுத்த பேரைக் கூட்டிக் கொண்டு அவர் துணையாலே இராசகாரியம் காண்பானல்லது சத்துருவை அசைவறத் தாவிப்பதாம்[3] எ—று.

இ) பரிப்.: மேற்சொன்ன வகை எல்லாம் போக்கு அறச் சூழாதே போர் கருதி எழுதல் பகைவர் ஆகிய விதையை விளைநிலத்தின் கண்ணே இடுவது ஒரு நெறி எ—று.

இது பகைவர்க்கு ஆக்கம் உண்டாம் என்றது.

ஈ) காளி.: உலகத்து வேந்தரானவர் தாம் செய்யும் கருமங்களின் கூறுபாட்டினைச் செலவற[4]த் தேராது தொடங்குதல் யாதாமோ எனின், தம் பகைவராகின்ற வித்தினைப் படாமல் விளைத்தற் பொருட்டுப் பாத்தி கட்டி[5] மற்று அதனுள் விளைவிப்பதோர் நெறி எ—று.

---

1. போக்கற —குற்றமின்றாக, 'போக்கறுபனுவல்' என்பது கொண்டு தெளிக.
2. சத்துரு — பகைவனை'
3. அசைவறத் தாவிப்பதாம் — உறுதியாக நிலைநிறுத்துவதாம்.
4. செலவறத்தேராது—முடிவு வரையில் ஆராயாமல்.
5. பாத்தி கட்டி — வரப்பு கட்டி.

உ) *பரிமேல்.*: சென்றால் நிகழும் திறங்களை எல்லாம், முற்ற எண்ணாது, சில எண்ணிய துணையானே அரசன் பகைவர் மேற் செல்லுதல், அவரை வளரு நிலத்திலே நிலைபெறச் செய்வதொரு நெறியாம்.

அத்திறங்களாவன வலி, காலம், இடன் என்றிவற்றால் தனக்கும் பகைவர்க்கும் உளவாம் நிலைமைகளும், வினை தொடங்குமாறும், அதற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும் வெல்லு மாறும், அதனால் பெறும் பயனும் முதலாயின. அவற்றுள் சில எஞ்சினும் பகைவர்க்கு இடனும் ஆகலான், முற்றுப்பெற எண்ண வேண்டும் என்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஒழியத்தகும் வினை யும் ஒழியாவழிப்படும் இழுக்கும் கூறப்படும்.

ஊ) *கவிராசர்*: ராசாக்கள் முதலான பேர்கள் பகைவர்மேல் செல்லுங்காலத்து 'இந்த வேளை பகையாளிகள் மேற் போனால் இப்படியாமென்கிறதை நன்றாக ஆராய்ந்தறியாது சிறிது ஆலோசனையானவுடனே போனால் அது அவர்களை வளரு நிலத் திலே நிலைபெறச் செய்வதொரு நெறியாம் எ—று.

ஏ) *பழைய உ*: தன்னால் முடியும் முடியாது என முழுதுமெண்ணிப் பாராமல், சிறிதெண்ணிய உடனே அரசன் பகைவர் மேற்செல்லுதல் பகைவரைத் தன் வீட்டில் அழைத்துவந்து வைப்பதற்கு வழியாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'பாத்திப்படுப்பது' என்ற வழக்கால் பகைவரை விதையாகக் கூறுவர் *மணக்.*, *காளிங்கர்*. 'பகுத்து—தடுத்து எனப்பொருள் கண்டு பாத்தியைத் தடுத்து நீரை வருவிப்பது போலாம்' என்பர் *வரத.*; *பரிதி.*, உரையைக் குறட்பாவில் உள்ள சொற்களோடு இயைத்துக்காண முடியவில்லை. *கவிராசர்* உரை 'காலமறிதல் நோக்குடையது': *பழைய உரை* 2: 'வேற்றிடம் நோக்குஞ்சனியனை வீட்டுக்கழைப்பது போல்' என்ற பழமொழியை நினைத்து எழுதுவது போலத் தோன்றுகிறது. 'பாத்திப்பகுப்பது என்பது குறிப்பு வேகம்' என்பர் *தேவநேயர்*.

வகையற என்பதை ஒரு தொடராகக் கொண்டு 'போக்கற' என்பர் *மணக்குடவர்*. 'போக்கு—குற்றம்'. *தேவநேயரும்*., குழந்தையும் 'வகை அறச்சூழாது' எனப்பிரித்து வகைகளாவன வலியறிதல் முதலியனவும், போர்முறைகளும் படை வகுப்புக்களும், வலக்காரமும் முதலியன என்பர். *வரத.*, 'எல்லாத் துறைகளையும்

வகைப்படுத்தியறிதல்' என்பர். ஏனையோரும் இக்கருத்தினரே. இவற்றுள் வகை—உபாயங்களாகக் குழந்தை முதலியோர் உரைப்பனவும், முற்றும் எச்சமின்றி என்பதும் சிறந்த உரைகள், வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்தற்று என்றாற் போலப் பாத்தியும், பகுத்தல் உசிதை ஊன்றுதலுமாகப் பொருள் கோடல் சிறந்ததாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

வகையறச் சூழாது எழுதல்

பின்னின்றார் ஏனைய ரென்றும் உணர்கிலம் பிடித்த மாயம்
என்னென்றுந் தெளிதல் தேற்றாம் யாவதீ தென்றும் ஓராம்
முன்னின்ற முறையின் நின்றார் முனிந்துள வேட்டம் முற்றல்
பொன்னின்ற வயிரத் தோளாய் புகழடைத் தாமன் றென்றான்.

—கம்பராமா., 3398.

முற்றும்:

வலியே காலம் வினையிவற்றால் மாற்றான் றனக்கும் உனக்கும் உள
பலவா நிலையும் வினைதொடங்கும் பண்பும் அதற்காம் இடையூறும்
விலகா ததனை விலக்குவதும் வெல்லு மாறும் வென்றதனால்
உலவாப் பயனும் முதலனைத்தும் ஓர்ந்து தெளிந்தே வினைசெய்க.

—விநா. அரசி., 60

ஒருபுடை:

... ... அதன் பொருள் சொல்ல லாகும்
சேக்கையி னரவு நீங்கிப் பிறந்தது தேவர் செய்த
பாக்கிய முடைமை யன்றோ வன்னது பழுது போமோ.

—கம்பராமா., 3391.

47.6. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க செய்யாமை யானும் கெடும். (சசுசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: செய்யத் தகாதனவற்றைச் செய்தலாலும் கெடும். செய்யத்தகுவனவற்றைச் செய்யாமையாலும் கெடும் எ—று.

இது மேற்கூறாதன எல்லாம் தொகுத்துக் கூறிற்று.

ஆ) *பரிதி.:* உலகத்துக்குச் செய்ய வேண்டாத காரியம் செய்யக் கெடும்; உலகத்துச் செய்யவேண்டிய காரியம் செய்யாமலிருந்தாலும் கெடும் எ—று.

இ) *பரிப்.:* செய்யத் தகாதனவற்றைச் செய்ததனாலும் கெடும்; செய்யத் தகுவனவற்றைச் செய்யாமையானும் கெடும்.

இது மேற்கூறாதன எல்லாம் தொகுத்துக் கூறிற்று.

ஈ) *காளி.:* யாதானும் ஒரு காரியம் செய்யத் தொடங்குமிடத்து அரசியல்பிற்கு நீதியல்லது செய்யின் கெடுவர்; மற்று அஃது அன்றி அரசியல்பிற்கு நீதியாம் அவற்றைச் செய்யாமையாலும் கெடுவர். மற்று அதனால் தகாதனவற்றைச் செய்யாமையும் தகுவன செய்தலும் என்னும் இரண்டினாலும் கேடு இன்றிப் பெரிதும் ஆக்கம் எய்தும் எ—று.

உ) *பரிமேல்.:* அரசன் தன் வினைகளுள் செய்யத்தக்கன அல்ல வற்றைச் செய்தலால் கெடும், இனி அதனானே அன்றிச் செய்யத்தக் கனவற்றைச் செய்யாமைதன்னானும் கெடும்.

செய்யத்தக்கன அல்லவாவன: பெரிய முயற்சியினவும், செய்தால் பயனில்லனவும், அது[1] சிறிதாயினவும், ஐயமாயின[2]வும், பின் துயர் விளைப்பனவும் என இவை. செய்யத்தக்கனவாவன: அவற்றின் மறு தலையாயின்[3]. இச்செய்தல் செய்யாமைகளான் அறிவு ஆண்மை பெருமை என்னும் மூவகை ஆற்றலுள் பொருள் படை என இரு வகைத்தாய பெருமை சுருங்கிப் பகைவர்க்கு எளியனாம் ஆகலான், இரண்டும்[4] கேட்டிற்கு ஏதுவாயின. இதனால் செய்வன செய்து, ஒழிவன ஒழிக என இருவகையனவும் உடன் கூறப்பட்டன.

காரி: செய்தக்க — செய்யத்தக்க என்றதனால் செய் என முதனிலையாகாது செயவெனச்சமாயது. 'பாலொத்த நீற்றம்

1. அது—பயன்.
2. ஐயமாயின்—பயன் விளையுமோ விளையாதோ என ஐயந்தருவன.
3. அவற்றின் மறுதலையாயின்—முற்கூறிய பெரிய முயற்சியின் முதலான நான்கிற்கும் மாறுபட்ட சிறிய முயற்சியின், பயனுள்ளன, பயன் பெரிதாயின, ஐயமில்லாதன பின்பும் இன்பம் விளைப்பன ஆகிய செயல்கள்.
4. இரண்டும்—செய்யத்தகாதனவற்றைச் செய்தலும், தகுவனவற்றைச் செய்யாமை யுமாகிய இரண்டும்.

பலவன்'[5] என்னும் கோவையாருள் 'பிணிவாய்' என்பதும் அது. அறிவு, ஆண்மை, பெருமை என மூவகையாற்றல் காண்க. அவற்றுள் பெருமை—பொருள்படை.

ஊ) கவிராசர்: ராசாவானவன் தான் செய்யத்தகுவன வல்லாத காரியங்களைச் செய்யவே கெடும்; தன்னால் செய்யத்தக்க காரியங் களைச் செய்யாதிருக்கினும் கெடும் எ—று.

ஏ) பழைய 2: அரசன் செய்யத்தகாத வினைகளைச் செய்தால் கெடும்; இனிச்செய்யத் தகும் வினைகளைச் செய்யாதிருந்தாலும் கெடும்.

ஐ] தொகுப்பும் குறிப்பும்:

'செய்தக்க' என்பதற்குப் பொருள்காணும் வகையில் 'யாருக்கு?' அல்லது 'எதற்குச் செய்தக்கன?' எனக்கூட்டும் வகையில் ஆசிரியர்கள் பெரிதும் வேறுபடுகின்றனர்.

பரிதி., 'உலகத்திற்குச் செய்தக்கன' என்பர். காளி., 'அரசியல் பிற்கு' என்பர் பரிமேல்., 'தன்வினைகளுள்' எனக்கூறிச் 'செய்யத் தகாதனவாவன, பெருமுயற்சி செய்தல், பயனில்லன செய்தல், பயன் சிறிதாயின செய்தல், ஐயமாயின செய்தல், பின் துன்பம் விளைப்பன செய்தல் என இவை' என விளக்கந் தருவர். தேவநேயர். 'ஆகாவினை' என முடிவுறாத செயலையும் கூட்டிக்கூறுவர். பெரு முயற்சி செய்தல் எனவே முயற்சிக்கேற்ற பயனறியாத சிறுபயன் தரும் வினையும் அடங்குதலின் வேறு கூறவேண்டா என்பது ஆய்தற்குரியது.

ஜி.வரத., செய்தக்க அல்லவற்றுள் தாழ்வு தரக்கூடியதையும் இணைப்பர். தாழ்வு பயப்பதனைச் செய்தலாகாது என்பதனையும் ஐயப்பாடுடையதனையும் செய்தலாகாது என்பதனை 'தெளிவிலதனை' என்ற குறளால் விதித்தனராதலின் மீண்டும் கூறல் வேண்டா. பரிமேலழகரும் பிறரும் தரும் விளக்கங்கள் முன்னர்க் குறள்களாலே விலக்கப்பட்டிருப்பதால் அவையனைத்தையும் தொடுத்துக் கூறல் வேண்டத்தக்கதன்மையின் 'மேற்கூறாதன எல்லாம் தொகுத்துக் கூறியது' என்ற மணக்குடவர் உரை சிறந்தது எவை எனத் தேட நம்மைச் செயற்படுத்துகிறது எனலாம். இராமலிங்கர் உடனே செய்யத்தக்கன அல்ல ஆனால் என்பர். ஆகவே 'விரைந்து செய்யத் தகாதன' என்பது இவர் கருத்து. இவைகளை எண்ணும் போது

5. திருக்கோவை.,238.

செய்யத்தகாதன இவை' என, முன்னர் விலக்கப்பட்டவற்றையே குறித்தலைக்காட்டிலும் மேற்கூறப்பட்டன அல்லாத செய்யத்தகாத வற்றைஎன்று மணக்குடவர் கூறுகின்றார். நாடு, மக்கள், மேற் கொண்டவினை இவைகட்கு இயைய செய்யத்தகாதனவும், தக்கனவும் அவ்வப் போது அமையும் ஆகலின் அவைகளை வரைந்து கூறாது உய்த்துணர வைத்த மணக்குடவர் உரைக்குறிப்பு விஞ்சி நிற்கிறது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

பெரிய முயற்சி வினைபயனைப் பேணா வினையே பயன்சிறீ தாம்
அரிய வினையே பின்துயரம் ஆக்கும் வினையே புரிந்தாலும்
பெரிய முயற்சி முதலாகப் பேசும் வினைக்கு மறுதலையாம்
உரிய வினையை விடுத்தாலும் உலவாப் பெருமை ஒழியுமே.
—விநா.அரசி., 61

ஒ) மேற்கோள்பகுதி:

சிவஞான.: செய்தக்கவல்ல செயக்கெடும் என்புழி, செய்ய என்று பொருள்பட்டு முதனிலைத் தனிவினைகள் வினையெச்சமாதலும் உண்டு என்பர். -நன்., 351.
சுவாமி.: ஷி —இ.கொ.,66.

47.7. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்ப திழுக்கு. (சகூஎ)

உரைப்பகுதி :

அ) மணக்.: ஒரு வினை செய்யத் துணிவதன் முன்னே அதனால் வரும் பயனை எண்ணிப் பின்பு செய்யத் துணிக; துணிந்தபின் எண்ணுவோம் என்றல் தப்பாம் ஆதலான் எ—று.

ஆ) பரிதி.: ஏதொருகாரியமும் மேல் எண்ணியெண்ணித் துணிந்து செய்க; காரியத்தைத் தொடங்கினபின்பு விசாரிப்போம் என்பது இழத்தலான காரியம் எ—று.

இ) பரி ப்.: ஒரு வினையைச் செய்யத் துணிக: துணிந்த பின்பு எண்ணுவேம் என்றல் தப்பு ஆம் ஆதலான் எ—று.

காரியம் நின்ற நிலை அறிந்தாலும் எண்ணாது துணிதல் ஆகாது என்றது.

ஈ) காளி.: யாதானும் ஒன்றினை ஒருவர் செய்யும் காலத்து மற்று அதனைக் கீழ்ச் சொன்னாங்குச் சூழ்ந்து வாய்ப்பது அறிந்து செய்யத் துணிக. மற்று அவ்வாறு செய்யத் துணிந்தபின் செயற்பாட்டு நிகழ்ச்சிக்கண்ணே புகுந்து நின்று இதனை எண்ணுவேம் என்று நினைக்கின்றது பெரிதும் குற்றம் எ—று.

உ) பரிமேல்.: செய்யத்தக்க கருமமும் முடிக்கும் உபாயத்தை எண்ணித் தொடங்குக, தொடங்கி வைத்துப்பின் எண்ணக் கடவம் என்று ஒழிதல் குற்றம் ஆகலான்.

துணிவுபற்றி நிகழ்தலின், துணிவு எனப்பட்டது[1]. சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. உபாயம் என்பது அவாய்நிலையான் வந்தது[2]. அது, கொடுத்தல், இன்சொல்சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தல் என நால்வகைப்படும். இவற்றை வடநூலார் தான சாம பேத தண்டம் என்ப[3]. அவற்றுள் முன்னைய இரண்டும்[4] ஐவகைய; ஏனைய மூவகைய[5]; அவ்வகைகள் எல்லாம் ஈண்டு உரைப்பிற் பெருகும். இவ்வுபாயம் எல்லாம் எண்ணாது தொடங்கின் அவ்வினை மாற்றானால் விலக்கப்பட்டு முடியாமையானும், இடையின் ஒழிதல் ஆகாமையானும், அரசன் துயருறுதலின, அவ்வெண்ணாமையை 'இழுக்கு' என்றார் .செய்வனவற்றையும் உபாயம் அறிந்தே தொடங்குக என்பதாம்.

காரி.: உபாயம் அவாய்நிலை; சாம, பேத, தான, தண்டத் துக்கு வகை காண்க.

---

1. துணிவு பற்றி நிகழும் வினையைத் துணிவு என்றது கருவியாகுபெயர்.
2. அவாய்நிலை — கருதிய பொருள் முற்றுப்பெற வேறொரு சொல்லை விரும்பி நிற்ப — ஈண்டு எண்ணி என்னும் வினைஎச்சம் உபாயத்தை என்னும் செயப்படு பொருளை அவாவி நிற்றல் காண்க,
3. சாமம் — இனிதாகக் கூறல், பேதம் - மென்மையாகவும் வன்மையாகவும் மனத்தை மாற்றுதல், தானம் — மனம் மகிழக் கொடுத்தல்; தண்டம் - மீளாடும் அவர்கள் தலை தூக்காவண்ணம் அழித்தே விடுதல்.
4. முன்னைய இரண்டும் - தானமும் சாமமும். தானங்களின் ஐவகையாவன, மிகமிக அரிய பொருளைக் கொடுத்தல், தனக்குத் தரும் பொருளை வாங்காது விடுதல், கொடுக்க வேண்டியதிருந்தால் உடனே கொடுத்தல்,பிறன் பொருளைக் கொடுத்தல், கப்பம் வாங்காதொழிதல் என்பனவாம். சாமத்துள் ஐவகையாவன, வணங்கல், புகழ்தல், எதிர்கொள்ளல். நட்புக்கூறல். உறவு கூறல் என்பனவாம்.
5 'ஏனைய' பேதமும் தண்டமும் மூவகைப் பேதங்களாவன நட்பொழிதல் கூடின வரைப் பிரித்தல், வேறு பகை விளைத்தல் என்பன. மூவகைத் தண்டங்களாவன துன்புறுத்தல், பொருளைக் கொள்ளுதல் கொல்லுதல் என்பன,

ஊ) *கவிராசர்*: செய்யத்தக்க காரியங்களை முடிவுற வுபாயங்களை நன்றாக வெண்ணிச்செய்க; உபாயங்களை யறியாமல் செய்து 'பின் உபாயந்தேடிக் கொள்வோ' மென்பது குற்றமாம் எ—று.

ஏ) *பழைய 2*: காரியம் ஆகும், ஆகாது என்பதனை எண்ணிப் பார்த்து ஆகுமென்னுங் காரியத்தைச் செய்தற்குத் துணிக. துணிந்த பின் எண்ணுவோம் என்பதிழுக்காம்.

மல்லர்: 'துணிவது' பாடம். எ—து. ஒரு காரியஞ் செய்யவேணும் என்று துணிகிறதுக்கு முன்னே அத்தை நன்று ஆராய்ந்து எண்ணவேணும் துணிந்ததற்குப் பிறகு எண்ணுவேன் என்கிறதும் இழுக்கென்றவாறு.

காரியந் துணிகிறதுக்கு முன்னே அது தன்னாலாகுமோ ஆகாதோ என்று ஆராயாமல் துணிந்து, துவக்கினதுக்குப் பிறகு அது எல்லாம் என்னாலாமென்று சொல்லித் துவக்கினால்ப் பிறகு அதை முடிக்கிறதுக்குத் தன்னாலாகாதே போனால் அதை விடுகிற போது வெகு வெட்கக் கேடாயிருக்கும் என்பது கருத்து.

எண்ணுவம் —எண்ணுவோம், இழுக்கு —ஈனம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

உரைகளில் கருத்துவேறுபாடு இல்லையாயினும் 'எண்ணி' என்பதற்குப் 'பிற்பயக்கும் பயனை மட்டும் எண்ணி' என்று வினையைக் கூடும் தடைகள், தடை நீக்கும் உபாய முதலியவற்றையும் எண்ணி, என்ற *பரிமேலழகரையும்* அதனைப் பின்பற்றி வந்தனவும் சிறப்புடையன.

ஒ) ஒப்புமைப்பகுதி

''நாடாது துணிந்துநா நல்கூர்ந் தனைபென.''

—மணி. மறைக்கோட்., 4.

''... ....எண்ணினன்

—கம்பராமா.,1513.

''அடுத்ததம்எண்ணிச் செய்தல் அண்ணலே அமைதியன்றோ.''

—கம்பராமா,3400

''எண்ணார் துணிந்தபின் பண்ணார் தாமதம்''

—மனோன்.,4:1.36.

''எண்ணுமின் நன்றா யேற்குமின் பின்புநீர்
பண்ணுந் தவறு நம்பாலாய் முடியும்.''

—மனோன்.,4:2.84—85.

''நுண்ணிய கருமமும் எண்ணித் துணி''
—கொன்றை.,52.

''கருதாமல் கருமங்கள் முடிக்கவேண்டாம்.'' —உலக.:7.

''யா தொரு கரும மேனும் எண்ணியே துணிக என்றும்
காதலில் துணிந்து செய்தால் எண்ணுதல் கடனன் றென்றும்
ஓதுநூல் புலவர் சொன்னார் உமக்குள உணர்வுற் றன்றே
பேதுற அடர்த்தும் பின்னை உருகிநீர் பிழைசெய் தீரே.''
வில்லி.சூது.,266.

''பார விசாரத்தைப் பண்ணாதே ஏதொன்றும்
தீர விசாரித்துச் செய்.'' —சிவ.,131.

மற்றும்:

''பேதாய் பிழைசெய் தனைபே ருலகின்
மாதா வனையா ளைமனக் கொடுநீ
யாதாக நினைத்தனை யெண்ண மிலாய்
ஆதா ரம்நினக் கினியா ருளரே.'' —கம்பராமா.,3511.

',ஆலம்பார்த் துண்டவன்போ லாற்றலமைந் துளரெனினும்
சீலம்பார்க் குரியோர்கள் எண்ணாதுசெய்பவோ..,
—கம்பராமா.,5163

ஒ) மேற்கோள்பகுதி:

மயிலை.: எண்ணித் துணிக கருமம் என்பது செய்து என்னும் வாய்பாட்டு வினை எச்சம் தன்வினை கொண்டதற்கு மேற்கோள்.
—நன்..343.

சங்கர.: ஷி —நன்.,344.

47.8. ஆற்றின் வருந்தா வருத்தம்[1] பலர்நின்று போற்றினும் பொத்துப் படும். (சசுஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: மேற்கூறிய நெறியினாலே முயலாத பொருள், பலர் நின்று காப்பினும் புரைபடும் எ—று.

1. வருந்தா வருத்தம்—பிரயாசை இன்மை எனல் பொருந்தாது. ஆற்றின் வருந்தா வருத்தம் என்பதற்கு எடுத்த காரியத்திற்கு உரிய வழிவகைகள் யாவை என்று அறிந்து அவ்வழியால் முயலாத முயற்சி என்பதே பொருள். முயற்சியைக் கண்டு வருத்தம் என்றது பயனின்றி மெய்வருந்துதல் ஒன்றே முடிவாதலான் என்க. இப்பகுதியைப் பரிமேலழகர் உரை விளக்கம் நன்கு விளக்குதல் காண்க.

இஃது எண்ணிச் செய்யாதது தப்பும் என்றது.

ஆ) பரிதி.: ஒரு காரியத்தை எடுத்து அந்தக் காரியமே உறுதியாக விசாரிப்பான்; அல்லது காரியம் பழுதானால் பின்பு பலருங்கூடி எடுத்து நாட்டுகிறோம் என்றாலும் காரியம் கூடாது எ—று.

இ) பரிப்.: மேற்கூறிய நெறியினானே முயலாத பொருள் பலர் நின்று காப்பினும் குற்றப்படும் எ—று.

எண்ணிச் செய்யாதது தப்பும் என்றது.

ஈ) காளி.: அரசராவார் தமது நீதியால் முயன்று ஈட்டாத நெடும் பொருளைச் சான்றோர் பலரும் கூடி மற்று இது நன்று என்று கொண்டாடினும் சாலக் குற்றப்படும் எ—று. பொத்துப்படும் என்பது குற்றப்படும்.

இனி. மற்று இங்ஙனம் தெரிந்து செய்வுழியும் சிறந்த கருமத்தின் கண்ணும் தெவ்வரைத் தெறுவுழியும் அரசர்க்கு வேட்கை செல்லுதல் மரபன்று என்று சொல்லினும், தத்தம் வலியறிந்து இயற்றாக்கால் வாய்ப்பின்று என்பதனால் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

உ) பரிமேல்.: முடியும் உபாயத்தால் கருமத்தை முயலாத முயற்சி, துணைவர் பலர் நின்று புரைபடாமல் காப்பினும் புரைபடும்.

முடியும் உபாயத்தான் முயறலாவது கொடுத்தலைப் பொருள் நசையாளன் கண்ணும்; இன்சொல்லைச் செப்பமுடையான், மடியாளன் முன்னே பிறரோடு பொருது நொந்தவன் என இவர் கண்ணும்; வேறுபடுத்தலைத் துணைப்படையாளன், தன்பகுதியோடு[2] பொருந்தாதான் என இவர்கண்ணும் ஒறுத்தலை இவற்றின் வாராத வழி[3] இவர் கண்ணும். தேறப்படாத கீழ்மக்கள் கண்ணும் செய்து. வெல்லுமாற்றான் முயறல். புரைபடுதல் கருதிய நன்மையன்றிக் கருதாத தீமைபயத்தல். உபாயத்தது சிறப்புக் கூறியவாறு.

காரி: பொத்துப்படல் என்பதனை நீட்டல் விகாரமாக்கிப் 'போத்தறார் புல்லறிவினார்'[4] என்றார் நாலடியாரிலும்.

---

2. தன் பகுதியோடு — தன் கருத்துடன்.
3. இவற்றின் — இச்சொல்லப்பட்ட தான சாம பேதங்களான்.
4. நாலடியார்351.

ஊ) கவிராசர்.: முடியுமுபாயத்தை யறியாது கருமங்களைச் செய்ய நினைக்கிறதும் செய்கிறதும், துணைவராகிய பந்து ஜனங்களனேகம் பேர் நின்று புரை வாராமற் காத்தாலும், புரை வந்து முடியாது கெட்டுப்போம் எ—று.

ஏ) பழைய 2: வருந்தாமல் செய்து முடியும் உபாயத்தைப் பார்த்துச் செய்யாத வருத்தம், பலருள் கூடிச் செய்தாலும் (வருத்தம்) ஒபாகாது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஆற்றின் வருந்தா வருத்தம்' — 'நெறியினாலே முயலாத பொருள்' மணக்.; 'நீதியால் முயன்று ஈட்டாத பெரும்பொருள் காளி.; 'முடியும் உபாயத்தால் கருமத்தை முயலாத முயற்சி' பரிமேல்.; சாமி. சிதம்.; 'உபாயத்தை அறியாது கருமங்களைச் செய்ய நினைக்கிறது' கவிராசர்; 'உபாயத்தைப் பார்த்துச் செய்யாது வருத்தம்' பழைய[2]; 'காரியத்தை முடிக்கும் வழியை யறிந்து முயலாமல் தொடங்கிய பின்வரும் வருத்தம்' இராம.: தக்க வழியில் வருந்தி முயலாத முயற்சி' கா.சு., தேவநேயர், குழந்தை; ''வழி முறைகளில் வருந்திச் செய்யாத முயற்சி' சீ.இ.

இவ்வுரைகளில் ஆற்றின் என்பதற்கு நெறியினால், நீதியால் உபாயத்தால், தக்க வழியால் எனப் பல தொடர்களைக் கூறினும் முடிந்த கருத்து ஒன்றாதலைக் காண்கிறோம். ஆனால் 'வருந்தா வருத்தம்' என்ற தொடர் உரைகாரர்களை அலைக்கழிக்கின்றது. மணக்குடவர், காளிங்கர் இருவரும் வருத்தத்தால் விளைந்த பொருள் என்றனர். ஏனையோர் முயற்சி என்றனர். சிலர் 'வருந்தா' உடன் பாட்டு வினையெச்சமாக எடுத்துச் சில சொற்கள் வருவித்து முடித் தனர். வருத்தம் — பொருள் என்பாரை விட முயற்சி என்பார் பலர். ஆதலாலும் அப்பொருள் ஏற்புடையது. ஆற்றின் வருந்தா முயற்சி எனினும் தளை சிதையாது. ஆயினும், முயற்சியான் விளையும் பயனின்றி வெறும் வருத்தமளவாயிற்று; அதினும் பலர் நின்று போற்றிப் போற்றி மறைத்தாலும் மறைக்கப் படாத வருத்தமாயிற்று என்ற நயம் பயப்பதால் ஆசிரியர் 'வருத்தம்' என்று குறித்தனராதல் காண்க.

வரத., 'செயலில் ஈடுபடும்போது நேரும் உடலுழைப்பும் முயற்சியும் அதிகமாயினும், அதற்கு அஞ்சி, நடுங்குவனாயின் பல நண்பர்கள் துணை நின்று உதவினாலும் அச்செயல் குற்றப்படும்' என ஏதோ ஒரு நோக்கில் புதிய உரைத்திருப்பம் தருகிறார். முடிந்த பயன் முன்னோர்

கண்ட கருத்தின் வளர்ச்சியாகக் கூடத் தெளிவாகத் தெரியவில்லை. சொற்களுக்கு இயைந்த பொருளாகவும் இல்லாமையாகிய கருத்துத் தந்தது.

'போற்றினும் பொத்துப்படும்' — 'போற்றினும்—காப்பினும்' மணக்.; 'நல்லதென்று பாராட்டினும்' காளி.; ' புரை படாமற் காத்தல்' பரிமேல்.; ஏனைய சில உரைகள் கருத்தளவில் அமைந்தவை.

காளிங்கர் உரை 'தீதின்றி வந்த பொருள்', 'அருளொடும் அன் பொடும் வாராப் பொருளாக்கம்' என்ற குறட்பாக்கள் உரைத்த உள்ளத்தில் எழுந்ததைக் காட்டுகிறது.

ஒ) ஒப்பு மைப்பகுதி

முற்றும் :

"வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பில்
தூங்கும் எயிலும் தொலைத்தலால் - ஆங்கு
முடியும் திறத்தால் முயல்கதாம் கூர்அம்(பு)
அடிஇழுப்பின் இல்லை அரண். -பழ.நா., 321.

"தற்றூக்கித் தன்துணையுந் தூக்கிப் பயன்தூக்கி
மற்றவை கொள்வ மதிவல்லார் - அற்றன்றி
யாதானும் ஒன்றுகொண டியாதானும செய்தக்கால்
யாதானும் ஆகி விடும்." பழ.நா. 154.

"கொடுத்தல் பொருள்வேட் கையனிடத்தும்
குளிர்சொல் செவ்வி யான்மடியன்
அடுத்துப் பிறரோ டமராற்றி அயர்ந்தான் இவர்பாங் கினும்வேறு
படுத்தல் துணையாம் படையின்ன பகுதி யொடுசோ ரன்இவர்கள்
இடத்தும் ஒறுத்தல் இவற்றன்வரா இவர்கீழ் மக்க ளிடத்தினுமாம்',
வி.நா.அரசி.,62

ஒ) மேற்கோள் பகுதி:

சுவாமி: 'படுசொல் வந்தே வேறுபொருள் பட்டும்' என்பதற்கு மேற்கோள். —இ கொ., 78

47.9. நன்றாற்ற லுள்ளும் தவறுண் டவரவர் பண்பறிந்து ஆற்றாக் கடை. (சுசுகூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: நன்மையைச் செய்யுமிடத்தினும் குற்றம் உண்டாம்; அவரவர் குணமறிந்து செய்யாதவிடத்து எ—று.

இதுவும் ஓர் எண்ணம்.

ஆ) பரிதி.: ஒருவற்குத் தான் நல்ல காரியம் செய்தாலும், குற்றம் உண்டு; அவரவர் இயற்கை அறிந்து காரியம் செய்வானாகில், எ—று.

இ) பரிப்.: நன்மை செய்யும் இடத்திலும் குற்றம் வரும், அவரவர் குணம் அறிந்து செய்யாத இடத்து எ—று.

இதுவும் ஓர் எண்ணம் கூறிற்று.

ஈ) காளி.: அந்தணர் முதலிய குடிப்பிறந்தோர்க்கும், பிறர்க்கும் அரசரானவர் தாம் பல நன்மைகளைச் செய்யுமிடத்துக் குற்றம் உண்டாம். மற்று எப்பொழுது எனின், அவை செய்கின்ற இடத்து மற்று அவரவர் மரபு அறிந்து தக்காங்குக் குறிக்கொண்டு நீதியைச் செய்யா இடத்து எ—று.

உ) பரிமேல்.: வேற்று வேந்தர்மாட்டு நன்றான உபாயஞ் செய்தற் கண்ணும் குற்றம் உண்டாம், அவரவர்[1] குணங்களை ஆராய்ந்து அறிந்து அவற்றிற்கு இயையச் செய்யாவிடின்.

நன்றான உபாயமாவது கொடுத்தலும் இன்சொல் சொல்லுதலு மாம். அவையாவர்கண்ணும் இனியவாதற் சிறப்புடைமையின், உம்மை சிறப்பும்மை. அவற்றை[2] அவரவர் பண்பறிந்து ஆற்றாமை யாவது அவற்றிற்கு உரியரல்லாதார்கண்ணே செய்தல்[3]. தவறு— அவ்வினை முடியாமை

ஊ) கவிராசர்.: பகையாளிகளிடத்திற் செல்லுமிடத்து நன்றான வுபாயங்களாலறிந்து செல்லினும் குற்றமுண்டாம், அவரவர் குணங் களை ஆராய்ந்தறிந்து அந்தக் குணங்களுக்குத் தக்க காரியங்களைச் செய்யாவிடின் எ.று.

---

1. அவரவர் — அந்தந்த வேற்று மன்னர்கள்.
2. அவற்றை — தான சாமங்களை.
3. தானம் பெறுவாரிடத்துச் சாமமும், சாமத்தால் மகிழ்வாரிடத்து தானமும் செய்து கெடுதி செய்யாமல் என்பது.

ஏ) பழைய 2: நன்மை செய்யுமிடத்தும் தவறுண்டு, அவரவர் குணமறிந்து செய்யாதவிடத்து.

மல்லர் : அரசன் வேறரசனிடத்திலே காரியங்களைக் கொள்ளுகிற -தாக வேண்டி நல்ல உபாயங்கள் எல்லாஞ் செய்தாலும் அதுகளுக் குள்ளே புழைவிடும் அவனவனுடைய குணத்துக் கேற்கச் செய்யாதே போனால் எ—று.

அவனவனுக்கேற்கச் செய்த காரியம் எளிதாய்க் கொள்ளலாம்; ஓராமல் செய்தால் அத்தாட்சியாய்ப்போம் என்கிறதினால் அவனவ னுடைய குணத்துக்கேற்கச் செய்யாதே போனால் காரியம் முடியாத படியினால்அச் செய்த உபாயங்கள் எல்லாம் அபத்தமாய்ப்போம் என்பது கருத்து.

நன்று—நன்மை; ஆற்றல்—செய்தல்; தவறு—குற்றம்; பண்பு —குணம்; ஆற்றா—செய்யாத; கடை—இடம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

நன்றாற்றற் செயலை அரசர் செயலாக்குவர் கீளிங்கரும் பரிமேலழகரும், பகையானிடத்தில் பேசும்போது நல்லது செய்து கொண்டு போனாலும் தீமையாம் என்று கூறுவர். 'தீரக் காய்ந்துழி நல்லவும் தீயவாதல் இயல்பேயாதலின்' இவ்வுரை சிறப்பிலது. ஒரு வேந்தன் வேற்று வேந்தனிடம் நல்லது செய்யினும் தீதாம் என்றது. பகைமையுணர்ச்சியிருவர்மாட்டும் இருப்பதால் நல்லதாகாமை துணிவு. ஆதலால் பகைவர்முன் என்றும், அரசர்முன் என்றும் கூறும் உரைகளிலும் பொதுவகையிற் கூறிய மணக்குடவர் உரையே சிறந் தது. 'அவர் அவர், என்ற சொல்லாட்சி பொதுமைக்கே துணை நிற்கும் என்க. 'நன்று' செய்யுங்காரியத்திலும் செய்பவனிடமும் மட்டும் இல் லை. ஏற்பவன் பண்பில் இருக்கிறது என்பது ஆள்வோர் ஆளப்படு வோர் இருசாராரர்க்கும் ஏற்புடையது. ஆதலையும் நோக்குக.

வேற்றரசர்களில் செல்வத் தகுதி மிகுந்தாரை இனிய சொற்களா லும், செல்வ விருப்புடையவர்களைப் பொன் மிகக் கொடுத்தலானும், அவரவர் குணம் அறிந்து மதித்தும் பாராட்டுதல் வேண்டும். பண்பறிந் தாற்றுதலாவது அவர்கள் குணந்தெரிந்து கொடுத்தும், அடுத்தும் தடுத்தும் பாராட்டுதல்.

ஒ) ஒப்புமைப்பகுதி

பண்பறிந்து ஆற்றாக் கடை:

ஆலம்பார்த் துண்டவன்போ லாற்றலமைந் துளரெனினும்
சீலம்பார்க் குரியோர்கள் எண்ணாது செய்பவோ.

—கம்பராமா5162

47.10. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு கொள்ளாத கொள்ளா துலகு. (சுஎ0)

உரைப்பகுதி:

அ) மணக்.: முடியுமாயினும் பிறரால் இகழப்படாதனவற்றை எண்ணிச் செய்தல் வேண்டும்; தமக்குத்தகாத செய்தியை உலகத்தார் கொள்ளாராதலான் எ–று.

இது பிறரால் இகழப்படாதன செய்ய வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: உலகம் இகழாத காரியத்தை விசாரித்துச் செய்க; செய்யானாகில் தன்மனம் கொள்ளாத காரியம் உலகங் கொள்ளாது எ–று.

இ) பரிப்.: முடியும் ஆயினும் பிறரால் இகழப்படாதனவற்றை எண்ணிச் செய்தல் வேண்டும். தமக்குத் தகாத செய்தியை உலகத்தார் கொள்ளார் ஆதலான் எ–று.

இது பிறரால் இகழப்படாதன செய்யவேண்டும் என்றது.

ஈ) காளி.: அரசராயினோர் தாம் யாதானும் ஒரு கருமம் செய்யும் இடத்துப் பிறர் இகழாதனவாகிய நற்கருமங்களே தம் மனத்தோடு தெரியத் தேர்ந்து செய்யவேண்டும். மற்று இங்ஙனம் செய்யார் மனத்தோடு கொள்ளாதனவற்றைச் செய்ய விரும்புவாராயின், உயர்ந்தோராகிய நல்லினத்தோர் கண்ணுற்றுத் தெரியுமிடத்து அதனைச் சிறிதும் கைக் கொள்ளார் எ—று.

உ) பரிமேல்.: அரசர் வினை முடித்தற்பொருட்டுத் தந்நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்வராயின் உலகம் தம்மை இகழாநிற்கும்; ஆகலான் அஃது இகழாத உபாயங்களை நாடிச் செய்க.

---

1. தான சாம பேதங்கள் என்னும் மூன்றனைச் செய்தல்.
2. இவையிரண்டும்—வலியரான அரசர் மெலியார் செய்யுஞ் தான முதலிய மூன்றனையும், மெலியராயினார் ஒறுத்தலையும் செய்தல்.

தம் என்பது ஆகுபெயர். தம் நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது தாம் வலியராய் வைத்து மெலியார்க்குரிய கொடுத்தல் முதலிய மூன்றனைச் செய்தலும்[1], மெலியராய் வைத்து வலியார்க்குரிய ஒறுத்தலைச் செய்தலுமாம். இவை இரண்டும் அறிவிலார்[2] செய்வனவாகலின் உலகங்கொள்ளாது என்றார் அஃதெள்ளாதன செய்தலாவது அவற்றைத் தத்தம் வன்மை மென்மை கட்கு ஏற்பச் செய்தல். மேல்[3] இடவகையான் உரிமை கூறிய உபாயங் கட்கு, வினைமுதல் வகையான் உரிமை கூறியவாறு. இவை நான்கு-பாட்டானும் செய்வனவற்றிற்கு உபாயமும் அதனது உரிமையும் கூறப்பட்டன.

காரி.: 'ஓஒதல் வேண்டும்'[4], 'புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்'[5], என்னும் குறள்களில் போல, அல்லீற்று வியங் கோள் முடிபாக வேண்டும் என்பது ஒரு சொன்னீர்மைத்தாய் முடிந்தது, இனிப் 'பல்லோர் படர்க்கை'[6] என்னும் சூத்திரத்துள் 'ஓஒதல் வேண்டும்'[7] என்பதனையும் ஈற்று வியங்கோளாக் கினார் நச்சினார்க்கினியர் என்க.

ஊ) கவிராசர்: ராசாக்கள் செய்யுங் கருமம் முடிகிறபோது தம் நிலையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்வராயின், உலகம் தம்மையிகழா நிற்கும்; ஆதலான், அப்படி உலகத்தார் இகழாத உபாயங்களையறிந்து செய்க எ-று.

ஏ) பழைய 2: இகழ்ச்சி வாராத காரியத்தை எண்ணிச் செய்ய வேண்டும்; அரசனும் உலகத்தார்க்கு ஒவ்வாத காரியத்தைச் செய்தால் ஒத்துக் கொள்ளார்கள்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

காளிங்கரும், பரிமேலழகரும், வரதராசரும் இக்குறள் கூறும் செய்தி யை அரசர் மேலதாக்குவர். *மணக்குடவரும், பரிதியாரும்,* பொது மையிற் கூறுவர். வினை முடிப்பதற்காகத் தம் தகுதிக்கொவ்வாத ஈதலும் பணிதலுமாகியவற்றை ஒருவன் செய்யின் உலகம் ஒவ்வாது இகழும் என்பதைக் கருத்தாகவுடைய உரைகள் தெளிவானவை.

---

3. மேல் - 468வது குறட்பாவில். இடவகையால் உரிமை கூறினார். இங்குச் செய்பவன் வகைபற்றி உரிமை கூறினார் என்க.

4. குறள்., 653.
5. குறள்., 538.
9: தொல். சொல்., 229
7. குறள்., 653.

ஒ) ஒப்புமைப்பகுதி

எள்ளாத எண்ணி:

.....புகழ்க்கு வேண்டுஞ் செய்கையுந் தெரிந்து கொண்டு. கம்பராமா.1406.

கொள்ளாது உலகு

பிள்ளாய் பெரியாய் பீழைசெய் தனையால்
கொள்ளா துலகுன் னையிதோ கொடிதே. கம்பராமா., 3709

முற்றும்

வலிய ரான காலத்தும் வழங்க லாதி முன்றனையும்
மெலியா ரிடத்துச் செய்திடவும் மெலிய ரான காலத்தும்
வலியா ரிடத்தின் ஒறுத்தலையும் வகுக்கின் வேந்தர்க் கவைமைந்தா
நலிவாம் அதனால் அவரவர்பால் நடத்தும் முறைதேர்ந் தியற்றிடுக.
விநா.அரசி., 63.

பண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்பு முறை.

	அழிவதூஉம்	தெரிந்த	ஆக்கம்	தெளிவி	வகையறச்	செய்தக்க	எண்ணித்	ஆற்றின்	நன்றாற்ற	எள்ளாத
மணக்.	4	1	5	2	10	8	3	9	7	6
பரிதி.	1	2	7	3	5	10	4	6	8	9
பரிப்.	4	1	5	2	10	8	3	9	7	6
காளி.	1	5	8	7	3	4	2	10	9	6
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

47வது அதிகாரம் 'தெரிந்து செயல்வகை' முற்றிற்று.

48. வலியறிதல்.

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: வலியறிதலாவது தனக்குள்ள வலியும் பிறர்க்குள்ள வலியும் அறிதல். செய்யத்தக்க வினையை எண்ணினாலும் அதனைச் செய்து முடிக்குங்கால் வலியறிந்து செய்யவேண்டுதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: வலியறிதலாவது மாற்றான் சத்துவ[1]த்தை அறிய வேண்டும் எ—று.

இ) பரிப்.: வலி அறிதலாவது தனக்குள்ள வலியும் பிறர்க்குள்ள வலியும் அறிதல். செய்யத் தக்க வினையை எண்ணினாலும் அதனைச் செய்து முடிக்குங்கால் வலி அறிந்து செய்ய வேண்டுதலின் அதன்பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது அவ்வுபாயங்களுள் ஒறுத்தல்[2] குறித்த அரசன் நால்வகை வலியை[3]யும் அளந்து அறிதல். அதிகாரமுறை மையும் இதனானே விளங்கும்.

ஊ) கவிராசர்: அஃதாவது இப்படிச் சொல்லப்பட்ட உபாயங் களாலே செய்கிற ராசா நாலுவகை வலியையும் அளந்து அறிதல் எ—று.

ஏ) பழைய :2 அஃதாவது அரசன் பகைவர் வலியை யறிதல்.

மல்லர்: அதாவது அரசன் தன்னுடையபலனும் எதிராளிபலனும் அறிந்து நடக்கிறது.

சி.இ.: வலிமையை அளவிட்டு அறிதல்.

சாமி.சிதம்.: வலிமையைத் தெரிந்து கொள்ளுதல்.

---

1. தத்துவம் —ஆற்றல்.
2. ஒறுத்தல் —தண்டித்தல்.
3. நால்வகை வலிகளாவன: வினைவலி தன்வலி மாற்றான்வலி துணைவலி என்பன.

குழந்தை: பகையை வெல்லுதற்கேற்ற வலியினை அறிதல். வலி—திறமை.

இராம.: காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றல் தனக்கு இருக்கிறதா? என்று, தன்னுடைய பலத்தைத் தானறிதல்.

ஜி வரத.: நாலுவகை யுபாயங்களையும் செய்து பலன் பெற வேண்டிய அரசன் தந்நிலையில் தம்வலிமை தெரிதல்.

தேவநேயர்: ஆம்புடை[4] நான்கனுள் நான்காவதைத் துணிந்து அரசன் நால்வகை வலியையும் ஒப்ப நோக்கி அறிதல். இது பரிமேலழகரை ஒட்டிய விளக்கமேயாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவரும் பிறரும் 'வினைமேற்செல்லுழி வலியறிந்து செல்லுதல் வேண்டும்' என்பர். பரிமேலழகர் ஒறுத்தல் கருதிய வழி அறிதல் வேண்டும் என நால்வகையுபாயத்துள் இறுதியாகிய ஒறுத்தலை மட்டும் எண்ணச் செய்வர். தேவநேயரும் அப்படியே.

இராம. 'தொடங்கும் காரியத்தைப் பற்றி எல்லாம் தெரிந்து கொண்டாலும், அதனைக் கடைபோகச் செய்யும் ஆற்றல் தனக்குண்டா? என்பதையும், வினைவலி, தடைவலி தடைநீக்கும் உபாய வலி அனைத்தையும் அறிதல்' என்பர். சி.இ, 'வலிமையை அளந்து அறிதல்'. மு.ரா.அரு. 'அரசன் நால்வகை வலிமைகளையறிதல்' என அரசன் செயல் ஆக்குவர். ஆகவே வலியறிதல் அரசற்குமட்டுமா? அனைவர்க்குமா? என்ற வகையிலேயே உரைகள் இயலுவதைப் பார்க்கிறோம். அரசனும் மக்களுள் ஒருவனே ஆதலால் மக்களுக்குக் கூறியனயாவும் அரசற்கும் ஆம் எனலாம்.

பரிதி., வலியில், படை, குடி, அமைச்சு, நட்பு முதலிய நான்கன் வலியும் எண்ணப் படுதலான் அரண் வலியைத் தன் வலியுள் அடக்கிக் கூறுகிறார். பரிமேல்., 'வினை வலியுள் அடக்கி அரண் முற்றலும் கோடலும் முதலிய தொழிலான் உணர்க, என்பர். கவிராசர் முதலிய அனைவரும் பரிமேலழகரை ஒத்த கருத்தினர்.

தேவநேயர் 'வினைவலி படை எடுத்தல் முற்றுகையிடுதல் தாக்குதல் பற்றுதல் ஆகிய வினைகளால் அளந்தறிதல்' என்பர்.

---

4. ஆம்புடை — உபாயங்கள்.

படை எடுத்தல் முதலான நான்கு வினைகளைக்கொண்டு படை எடுத்த பின் அறிதல் வலியறிதலாகாது. படை எடுப்பதற்குமுன்பே அறிவு அனுபவங்களால் அறிதல்வேண்டும் பின்னரே செயலாற்றல் வேண்டும். ஆதலால் இவ்விளக்கமும் அக்கருத்தினதாதல் நலம்.

துணைவலி — தனக்குத் துணையாவாரும், எதிரிக்குத் துணையாவாரும் ஆகிய இருவகை துணைவலியும் என்பர் மணக்., காளி,. பரிமேல்., கவிராசர், பழைப 2, தேவநேயர். இராம., வரத., சாமி.சிதம்., முதலானோர்.

தனக்குத் துணையாவார் வலி என்று மட்டும் உரை கண்டவர்கள் பரிதி.. கா.சு.; எவன் போர்மேற்செல்லுகிறானோ அவனே இத்தனை வலிகளையும் அறியக் கடமைப்பட்டவனாதலின், பரிதியார் உரைப்போக்கு, தன் துணை வலியை என்றாலே எதிரியின் வலியோடு தன் துணைவலியையும் ஒத்திட்டு நோக்கி மிகுதியறிதல் என்பதே கருத்தாதலால் குறையுடைத்தன்று.

வினைவலி, மாற்றான்—அவற்குத் துணையாவார் வலிமைகளின் மிகுதி குறைவானும். அரண்வலி காலமாற்றம் இவைகளானும் மேற் கொண்ட வினை எளிமையும் அருமையும் உடைத்தாதல். தன்வலி என்றது தனக்குத் துணையாம் பிறரும் பிறவும் பிரிந்தகாலத்தும் தனித்து வினைசெய்யும் ஆற்றலுடைமை. மாற்றான் வலி பகைவரது தனித்த ஆற்றல். ஆகவே துணைவலியும் வினைவலியும் தனக்கும் பகைவர்க்கும் பொதுவானவை. அரண் படை படைக்கலம் 'முதலிய வற்றைப் பற்றியன. தன்வலி மாற்றான்வலி இரண்டும் தனித்தவை.

பரிமேலழகர் உரையில் மூவகையாற்றல் என்றது அறிவு ஆண்மை பெருமை என்ற மூன்றையுமாம். தன்னின் வலி குறைந் தார் மேல் படை எடுத்தல் வீரத்திற்கு இழுக்காதலானும் அழிகுநர் புறக்கொடையில் வானோச்சாமை வீரர்க்கியல்பாதலானும், படை வலியிழந்து நின்ற இராவணனை நோக்கி இராமன் 'இன்றுபோய் நாளைவா' என்றது படைத்துணை கொண்டுவரினும் வருக; எமது வலி நோக்கி வாளா அமைகினும் அமைக என்பது குறிப்பாதலானும், 'தன் வலி மிகுமாயின்' என்ற உரை சிந்தித்தற்குரியது.

ஆயினும் இராமன் படையெடுத்துச் சென்றது இராவணன் வலியைத் தன்னோடு ஒத்ததாக எண்ணியே ஒத்தாரிடம் சேறல் இயையுமோ எனின் 'அறம் போலவே ஏனைய அரசர்களும் ஒத்தார் மேலேயே படை எடுத்தாலும் அறந்துணை நின்று வெற்றி விளைத்த

லும் மரபாக இருத்தலையும் காண்க. ஆதலால் அறத்துணை கொண்டு வெற்றிக்கு ஐயமாகாத ஒப்பின்கண் போர்மேற்செல்லலாம் என்றவாறு.

48.1. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல். (சகை)

உரைப்பகுதி:

அ) மணக்.: செய்யும் வினையினது வலியும், தனக்கு உண்டான வலியும், பகைவனது வலியும், தனக்கும் பகைவர்க்கும் துணையாயினார் வலியும் எண்ணிப் பின்பு வினைசெய்க எ.று.

இது வலியறியும் இடம் கூறிற்று.

ஆ) பரிதி.: நாலுவகை அரணின்[1] சத்துவமும்[2] தன்சத்துவமும், மாற்றார் சத்துவமும், தனக்குத் துணையானவர்கள் சத்துவமும் விசாரித்துச் செய்க எ—று.

இ) பரிப்.: செய்யும் வினையினது வலியும் தனக்கு உண்டான வலியும் பகைவனது வலியும் தனக்கும் பகைவர்க்கும் துணை ஆயினார் வலியும் எண்ணிப் பின்பு செய்க எ—று.

இது வலி அறியும் இடம் கூறிற்று.

ஈ) காளி.: தான் செய்யும் கருமத்தின் வலியும், தனது வீரப்பாட்டின் வலியும்,[3] தனக்கு எதிர்மாற்றான் வலியும், தனக்கு உதவும் படைத்துணைவலியும், மாற்றார்க்கு உதவும் படைத்துணைவலியும், ஆகிய இவை இரண்டினையும் சீர்தூக்கிக் கொள்க. எனவே மற்று இவை மாற்றானிலும் தனக்கு மிக உளவாயின் அவனொடுதான் வினைசெய்வானாக. அல்லது நட்பின்கண் பொருந்துவது பொருள் எ—று.

உ) பரிமேல்.: தான் செய்யக் கருதிய வினைவலியையும் அதனைச் செய்து முடிக்கும் தன்வலியையும், அதனை விலக்கலுறும் மாற்றான்

---

1. நால்வகைஅரண்—மலையரண், காட்டரண், நீரரண், நிலவரண் என்பன. இவற்றுள் மலையும் காடுமாகிய அரண்கள் இயல்பின் ஆனவை நில அரண் பருக்கைக்கற்கள் நெருஞ்சி இடுமுள் கோட்டைச் சுவர் முதலியன பரப்பி அமைக்கப்படுவன. நீரரண் அகழி; புனை சேருக்குவித்தல். படுகுழி வெட்டி நீர் நிரப்புதல் போல்வன. இவை தன் வலியுள் அடங்குவன. ஆதலின் பரிதியார் ஈண்டுரைத்தனராதல் காண்க.
2. சத்துவம்—வலிமை.
3. வீரப்பாட்டின்—வீரம்

வலியையும் இருவர்க்கும்[4] துணையாவார் வலியையும், சீர்தூக்கித் தன்வலி மிகுமாயின் அவ்வினையைச் செய்க.

இந்நால்வகை வலியுள் வினைவலி அரண் முற்றலும், கோடலும், முதலிய தொழிலானும், ஏனைய மூவகை ஆற்றலானும்[5] கூறுபடுத்துத் தூக்கப்படும் தன்வலி மிகவின்கண் செய்க என்ற விதியால், தோற்றல் ஒருதலையாய குறைவின்கண்ணும், வேறல் ஐயமாய ஒப்பின்கண்ணும் ஒழிக என்பது பெற்றாம்.

ஊ) கவிராசர்: தான் செய்யக் கருதிய வினைவலியையும், இதனைச் செய்து முடிக்குந் தன்வலியையும், அதனை விலக்குகிற மாற்றான் வலியையும், இருவர்க்குந் துணையானவர் வலியையுஞ் சீர்தூக்கி, தன்வலி மிகுதியாயின் அவ்வினையைச் செய்க எ—று.

ஏ) பழைய 2: அரசன் தான் செய்யக் கருதிய வினையின் வலியையும் அதனைச் செய்து முடிக்கும் தன்வலியையும் அதனை விலக்கும் மாற்றான்வலியையும், மாற்றானுக்கும் தனக்குந் துணையாவார் வலியையும், சீர் தூக்கிப் பார்த்துத் தன்வலி மிகுமாயின் அவ்வினையைச் செய்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

துணைவலியில் படை, குடி, அமைச்சு, நட்பு முதலிய நான்கன் வலியும் எண்ணப் படுதலான் அரண்வலியைத் தன்வலியுள் அடக்கிக் கூறுகிறார் பரிதி: பரிமேலழகர் வினைவலியுள் அடக்கி 'அரண்முற்றலும், கோடலும் முதலிய தொழிலான் உணர்க' என்பர். கவிராசர் முதலிய அனைவரும் பரிமேலழகரை ஒத்த கருத்தினர்.

தேவநேயர், 'வினைவலி படை எடுத்தல், முற்றுகையிடுதல், தாக்குதல், பற்றுதல் ஆகிய வினைகளால் அளந்தறிதல்' என்பர். படை எடுத்தல் முதலான நான்கு வினைகளைக் கொண்டு படை எடுத்தபின் அறிதல் வலியறிதலாகாது. படை எடுப்பதற்குமுன்பே அறிவு அனுபவங்களால் அறிதல்வேண்டும். பின்னரே செயலாற்றல் வேண்டும் ஆதலால் இவ்விளக்கமும் அக்கருத்தினதாதல் நலம்.

'துணைவலி' — தனக்குத் துணையாவாரும், எதிரிக்குத் துணையாவாரும் ஆகிய இருவகை துணைவலியும்' என்பர் மணக்., காளி., பரிமேல்., கவிராசர், பழைய 2, தேவநேயர், இராம.,

4. இருவர்க்கும்—தனக்கும் தன் பகைவனுக்கும்.
5. மூவகை ஆற்றல்—அறிவு ஆண்மை பெருமை என்னும்மூவகையாற்றலானும்.

வரத., சாமி.சிதம்., முதலானோர். 'தனக்குத் துணையாவார் வலி, என்று மட்டும் உரை கண்டவர்கள் பரிதி., கா.சு.: எவன் போர்மேற் செல்லுகிறானோ அவனே இத்தனை வலிகளையும் அறியக்கடமைப் பட்டவனாதலின், பரிதியார் உரைப்போக்கு தன் துணைவலியை என்றாலே எதிரியின் வலியோடு தன்துணைவலியையும் ஒத்திட்டு நோக்கி மிகுதியறிதல் என்பதே கருத்தாம். ஆதலால் குறையுடைத் தன்று.

வினைவலி, மாற்றான்—அவற்குத் துணையாவார் வலிமைகளின் மிகுதி குறைவானும், அரண்வலி காலமாற்றம் இவைகளானும் மேற் கொண்ட வினை எளிமையும் அருமையும் உடைத்தாதலின தன்வலி என்றது தனக்குத் துணையாம் பிறரும் பிறவும் பிரிந்த காலத்தும் தனித்து வினைசெய்யும் ஆற்றலுடைமை. மாற்றான்வலி பகைவரது தனித்த ஆற்றல். ஆகவே துணைவலியும் வினைவலியும் தனக்கும் பகைவர்க்கும் பொதுவானவை. அரண் படை படைக்கலம் முதலிய வற்றைப் பற்றியன. தன்வலி மாற்றான்வலி இரண்டும் தனித்தவை.

பரிமேலழகர் உரையில் 'மூவகையாற்றல்' என்றது அறிவு ஆண்மை பெருமை என்ற மூன்றையுமாம். தன்னின் வலிகுறைந்தார் மேல் படைஎடுத்தல் வீரத்திற்கு இழுக்காதலானும், 'அழிகுநர் புறக் கொடையில் வாளோச்சாமை, வீரர்க்கியல்பாதலானும், படைவலி யிழந்து நின்ற இராவணனை நோக்கி இராமன் 'இன்றுபோய் நாளைவா' என்றது படைத்துணை கொண்டுவரினும் வருக; எமது வலி நோக்கி வாளா அமைகினும் அமைக' என்பது குறிப்பாதலானும்' 'தன்வலிமிகுமாயின்' என்ற உரை சிந்தித்தற்குரியது.

ஆயினும் இராமன் படையெடுத்துச் சென்றது இராவணன் வலியைத் தன்னோடொத்ததாக எண்ணியே ஒத்தாரிடம் சேறல் இயையுமோ எனின் 'அறம் வெல்லும் பாவந்தோற்கும்' ஆதலால் நீதிக்கட்சியாகிய எமது தகுதி வெல்லும் என்ற துணிவால் என்க. அதுபோலவே ஏனைய அரசர்களும் ஒத்தார் மேலேயே படைஎடுத்தா லும் அறந்துணை நின்று வெற்றி விளைத்தலும் மரபாக இருத்தலை யும் காண்க. ஆதலால் அறந்துணைகொண்டு வெற்றிக்கு ஐயமாகாத ஒப்பின்கண் போர்மேற் செல்லலாம் என்றவாறு.

ஒ) ஒப்புமைப்பகுதி:

தன்வலி:

அராவணைத் துயிலு மண்ணல் காலமோர்ந் தற்ற நோக்கி
இராவண னுயிர்மே லுய்த்த திகிரியு மென்னல் ஆனான்.

—கம்பராமா., 3271.

தன்வலியும்'

தன்பலங் கொண்டு அம்பலம் ஏறவேண்டும். —பழமொழி

ஆழந் தெரியாமல் காலை விடாதே. —பழமொழி.

மாற்றான்வலி:

பல்பதி னாயிரந் தேவர் பக்கமா
எல்லையில் சேனைகொண் டெதிர்ந்த விந்திரன்
நல்லையி னுடைந்த னன்... ... ... —கம்பராமா.,5796

மூற்றும்:

தற்றூக்கித் தன்துணையும் தூக்கிப் பயன்தூக்கி
மற்றவை கொள்வ மதிவல்லார் — அற்றன்றி
யாதானும் ஒன்றுகொண்டி யாதானும் செய்தக்கால்
யாதானும் ஆகி விடும். —பழ. நா. முயற்சி .6

மாற்றலர் வன்மை யோராய் மற்றவர் படைஞர் தங்கள்
ஆற்றலை உணராய் நின்றன அரும்பெரும் தலைமை உன்னாய்
போற்றிடும் அமைச்சரோடும் புரிவன தூராய் வாளா
சீற்றமங் கதுமேல் கொண்டு செல்லலும் திறலின் பாற்றோ.
—கந்த அசுரேந்..,57.

வினையின் வலியா திகள்நான்கும் வேறு வேறு சீர்தூக்கி
நினது வலிமிக் குழிவினையை நிகழ்த்து; நிகர்த்த காலத்துப்
புனையும் வென்றி யுறாஇழுக்கும் பொருந்தும் அதனால் அவ்விடத்து
வினையும் தோல்வி யுறுங்குறைந்த விடத்தும் வினையை எண்ணற்க.
—விநா. அரசி., 64.

மூற்றும்—ஒருபுடை:

....எண்ணுவ
சேகுறப் பன்முறை தெருட்டி ..... —கம்பராமா., 4352

இன்னாதா மென்ன லாமோ வுலகிய லிகழ லம்மா
மன்னனோ டெதிர்ந்த வாலி குரங்கென்றான் மற்று முண்டோ
சொன்னது துணிவிற் கொண்டு சேறியென்றுணரச் சொன்னான்.
—கம்பராமா., 5796.

ஓ) மேற்கோள் பகுதி:

சுவாமி': செய்யுள் விகாரத்தால் சிதைந்ததனால் மொழி வருவித்த லாவது 'தூக்கிச் செயல்' என்றவிடத்துச் சீர்தூக்கிச் செயல் என்று வருவித்தாற் போல்வது என்பர்.

—இ. கொ., 89.

48.2. ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில். (சஎஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: தமக்கியலும் வினைக்கு அறிய வேண்டுவதாய திறம் இது என அறிந்து அதன் பின்பு அவ்வளவிலே நின்று ஒழுகு வாராயின், அவர்க்கு இயலாதது இல்லை எ—று.

இது வலியறிந்தாலும் அமைந்தொழுக வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: தன் சத்துவம் அறிந்து மந்திரி வார்த்தைகள் கேட்டு நடப்பானாகில் அவன் நினைத்த காரியம் முடியாதது இல்லை எ—று.

இ) பரிப்.: தனக்கு இயலும் திறன் இது என அறிக; அறிந்தபின் அவ்வளவிலே நின்று ஒழுகுவானாயின் அவனுக்கு இயலாதது இல்லை எ—று.

இது வலி அறிந்தாலும் அமைந்து ஒழுகவேண்டும் என்றது.

ஈ) காளி.: உலகத்து வேந்தரானோர் தாம் யாதானும் ஒரு கருமம் செய்யுமிடத்துத் தமக்கு இயல்வது அறிந்து, மற்று அக்கருமநிலை விளங்குமாறு செய்யத் துணிந்தபின் அதனைச் சோரவிடாது அதன் கண்ணே நிலைநின்று மற்று அது முடியுமாறு அங்ஙனம் சென்று முடிப் பார்க்குச் செல்லப்படாதது யாதும் இல்லை எ—று.

ஒல்வது என்பது இயல்வது.

உ) பரிமேல்.: தமக்கியலும் வினையும்[1] அதற்கு அறியவேண்டு வதாய வலியையும் அறிந்து, எப்பொழுதும் மனமொழி மெய்களை அதன்கண்[2] வைத்துப் பகைமேற்செல்லும் அரசர்க்கு முடியாத பொருள் இல்லை.

1. அதற்கு—அவ்வினைக்கு.
2. அதன்கண்—மேற்கொண்ட அத்தொழிலின்கண்ணே.

ஒல்வது எனவே வினைவலி முதலாய மூன்றும் அடங்குதலின், ஈண்டு அறிவது என்றது துணைவலியே யாயிற்று. எல்லாப் பொருளும் எய்துவர் என்பதாம். இவை இரண்டுபாட்டானும் வலியின் பகுதியும், அஃது அறிந்து மேற்செல்வார் எய்தும் பயனும் கூறப்பட்டன.

ஊ) *கவிராசர்:* தமக்கான காரியமும் அந்தக் காரியத்துக்கு வேண்டிய வலிமைகளையும் அறிந்து, எப்போதும் மனத்தை அக்காரியத்தின்மேல் வைத்துச் செய்ய வல்லவர்களுக்கு முடியாத காரியமில்லை என்று.

ஏ) *பழைய 2:* தனக்கியலும் வினையும் அதற்கறிய வேண்டுவதாய வலியையும் அறிந்து கருத்தை அதன்மேல் வைத்துப் பகைமேற் செல்லும் அரசர்க்கு முடியாத காரியமில்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்.: 'ஒல்வதற்கு அறிவது அறிந்து' எனக்கூட்டித் தமக்கு இயலும் வினைக்கு அறிய வேண்டிய அறிந்து' என உரை காண்பர். *பரிதியார்,* 'ஒல்வது அறிந்து—அறிவது அறிந்து' என 'அறிந்து' என்பதனை ஈரிடத்தில் கூட்டித் 'தன் சத்துவம் அறிந்து' மந்திரி மார்கள் வார்த்தையும் கேட்டு' என்பர். அறிவது—செயல் முடிதற்கு இன்றியமையாத அமைச்சர் முதலாயினார் ஆலோசனைகளையும் கேட்டு எனப்பொருள் காண்பர்.

காளிங்கர், 'ஒல்வது—இயல்வது; அறிவது—சோரவிடாமல் முடிக்கக்கூடிய ஆய்வுகள்' என்பர். *பரிமேலழகர்,* ஒல்வதும் அறிவதும் அறிந்து' எனக்கூட்டித் 'தமக்கு இயலும் வினையையும் அதற்கு அறிய வேண்டுவதாகிய வலியையும்' என்பர். மேலும் ஒல்வது வினைவலி முதலான மூன்றும், அறிவது — துணைவலியே எனக்குறிப்புந் தருவர். *கவிராசர், பழைய 2:,* இருவரும் *பரிமேலழகருடன்* ஒத்த கருத்தினர். *மணக்குடவர்* 'ஒல்வது' என்ற சொல்லாற்றலாலேயே தன்வலியும் வினைவலியும், 'அறிவது' என்றதனால் மாற்றான்வலி துணைவலியும் அறிதல்வேண்டும் எனக் கருதுகிறார் என்பது. *பரிதியார்* தன்வலியும் துணைவலியும்கருதுகிறார் எனலாம். *பரிமேலழகர்* நால்வகை வலிகளையும் அறிந்து என்கிறார். ஒரு பொருளின் தரத்தையோ அகல நீளத்தையோ அளந்தறிய வேண்டின் மற்றொன்றனோடு சாத்தியே அறியவேண்டுதல் போலத் தன்வலியின் மிகுதி குறைகளை வரையறை செய்ய, மாற்றான் வலியையும் முன்னர்

3. துணைவலி—தனக்கும் மாற்றார்க்கும் துணையாவாருடைய வலிமைகளை என்க.

உணர்ந்து, துணைவலி, வினைவலி யிவற்றான் மாற்றானைவிடத் தன்னை உயர்த்திக்கொண்டு வினை மேற்செல்லவேண்டும் ஆதலின் தன்வலியறிதல் ஒன்றானே மாற்றுவலியும் துணைவலியும் அளந்தறியப்படும். ஒல்வது என்பது இயல்வது என்னும் பொருளதாய் வினைவலியை அறிதலையும், அறிவது என்பது ஏனைய வலிகளை யறிதலை மட்டுமன்றி இடைக்கண்நேரும் தடையும் அதனை நீக்கும் உபாயங்களும் ஆகிய இவற்றைத் தன்னறிவான் அறிதலும், அமைச்சர் முதலாயினாரைக்கொண்டு அறிதலும் ஆகிய இரண்டும் அடங்கும். ஆதலாலேயே முதற்குறளில் நான்கு வலிகளை யறிதலை வலியுறுத்திய ஆசிரியர் இக்குறட்கண் அவற்றை இரண்டில் அடக்கிக் காட்டினர். ஆதலால் இக்கருத்தைத் தழுவிய உரைகள் சிறந்தன.

'அதன்கண் தங்கி' — 'அவ்வளவிலே நின்று' என்னும் மணக்குடவர் கருத்து, அறிவதறிந்த பிறகும் ஐயத்தாலோ அச்சத் தாலோ இயலும் என்று எடுத்த வினையை விடலாகாது; அறிந்த அளவில் உறுதியாக நிற்கவேண்டும் என்னும் கருத்தினது. இக் கருத்தையே 'சோரவிடாது அதன் கண்ணே நின்று' என்ற காளிங்கர் உரையும் 'அதன் கண்தங்கி' என்னும் பரிமேலழகருரையும் அரண் செய்கின்றன. தேவநேயரும் இக்கருத்தையுடையவர். இராம, 'ஒல்வது அறிவது; அறிந்ததன்கண் தங்கிச் செல்வார்க்குச் செல்லா தது இல்' எனப் பகுத்துக் கூட்டித் 'தன்னால் முடிவதை அறிவதும் அங்ஙனம் அறிந்து அறிந்த எல்லைக்குள் நின்று செயலாற்றுவார்க்கு நடக்காதது ஒன்றுமில்லை' என்பர். இது ஒரு புதுமை நோக்குடையது தான்.

ஜி.வரத., 'தான் செய்யக்கூடிய செயலையும், அதற்கான தன்னுடை திறனையும் ஆய்ந்தறிந்து, செய்து கொண்டு போம்போதே செயலின் வலிமையையும், தன்வலிமையையும் சீர்தூக்கிப் பார்த்துக்கொண்டே காலம் வாய்க்கும் வரை காத்திருந்து, செய்வார்க்கு முடியாதது ஒன்றும் இல்லை' என்பர். இதில் 'ஒல்வது அறிந்து' என்றபோதே தான் மேற் கொள்ளும் செயல்வன்மையும் செய்வோனாகிய தன்னாற்றலும் அறியப்படுதலின் மீண்டும் செய்துகொண்டு போம்போதே மீளவும் அறிதல் வேண்டப்படாததாகலாம். வேண்டப்படுமேல் ஒல்வது நன்கு அறியப்படாதது ஆகும். அன்றியும் 'எண்ணித் துணிக கருமம் என்பதோடு மாறுபடும். இதனை எண்ணியே தொல்லாசிரியர்கள் தன்னால் இயலுங் காரியத்தைச் செய்க; அறிய வேண்டுவற்றை அறிந்து செய்க என்றனர்.

தம்மால் முடியுந்திறத்தையும், துணைவலி முதலியவற்றையும் அறிந்திருப்பினும் பின்னரும் தவறுதல்கூடாது என்பார் 'அதன்

கண்தங்கி' என்றார். அதன்கண் தங்குதலாவது எடுத்த வினையின் மேற் கண்ணுங்கருத்துமாக இருத்தல். ஒல்வது அறிவது என்ற செவ்வெண் ஒல்வதும் அறிவதும் என விரிந்து, அறிந்து என்றஎச்சங் கொண்டு முடிந்தன.

48. 3. உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி இடைக்கண் முரிந்தார் பலர். (சாஎங)

உரைப்பகுதி:

அ) மணக்.: தம்முடைய வலியறியாது மனமிகுதியாலே[1] வினை செய்யத் தொடங்கி, அது முடிவதன்முன்னே கெட்டார் பலர் எ—று.

இது வலியறியாதார் கெடுவர் என்றது.

ஆ) பரிதி.: தம்முடைய சத்துவத்தை அறியாமல் இடும்பினாலே[2] ஒருகாரியத்தை எடுத்து எடுத்த காரியமும் முடிக்க மாட்டாமல் நடுவே கெட்ட பேர் பலருண்டு எ—று.

இ) பரிப்.: தம்முடைய வலியறியாது மனமிகுதியாலே வினை செய்யத் தொடங்கி முடிவதன் முன்னே கெட்டார் பலர் எ—று.

வலியறியாதார் கெடுவர் என்றது.

ஈ) காளி.: தமது பொருள் வலியும் துணைவலியும் முதலிய பல வரம்பினைக் கருதாராய் வறிதே ஒரு கருமத்தை நெஞ்சின் ஊக்கத் தானே தாமும் அதன்மேற்சென்று,பின்பு அக்கருமம் முடிக்க மாட்டாது இடையிலே தொடங்கிய கருமத்தை முரிந்து ஒழிந்தார் இவ்வுலகத்து அனேகர் எ—று.

உ) பரிமேல்.: கருத்தாவாதலையுடைய தம் வலியின் அளவறி யாதே, மனவெழுச்சியால்[3] தம்மின் வலியாரோடு வினைசெய்தலைத்[4] தொடங்கி, அடர்த்தலான்[5] அது செய்து முடிக்கப் பெறாது இடையே கெட்ட அரசர் உலகத்துப் பலர்.

உடைய என்பது அவாய்நின்றமையின்[6], செயப்படுபொருள்

---

1. மனமிகுதி—மனஎழுச்சி. உற்சாகம்.
2. இடும்பு—அகந்தை.
3. மனஎழுச்சி—உள்ளக் கிளர்ச்சி, அதாவது உற்சாகம்.
4. வினைசெய்தல்—போரிட்டு வெல்லுதல்.
5. அடர்த்தல்—நெருக்குதல்.
6. அவாய் நிற்றல் முன் விளக்கப்பட்டது.

வருவிக்கப்பட்டது[7]. பலவகையாற்றலுள்ளும் சிறப்புடைய அறிவுடையார் சிலராதலின், முரிந்தார் பலர் என்றார். அதனால் தம்வலி அறிந்தே தொடங்குக என்பது எஞ்சி நின்றது.

ஊ) *கவிராசர்*: தங்களுடைய பலத்தை யறியாமல் மனவுற்சாகத்தினாலே தம்மிலும் வலியாருடனே பகையைச் செய்துகொண்டு அவர்கள் வலிமையினாலே கெட்டுப்போன பேர் லோகத்திலே அனேகம் பேர் உண்டு எ—று.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பழைய உரையாசிரியர்கள் எடுத்த காரியத்தை முடிக்கமாட்டாமைக்கு ஏற்ற காரணங்காட்டாது வாளா விடுத்தனர். *பரிமேலழகர்* 'அடர்த்தலான் அது முடிக்கப் பெறாது' என ஏற்ற காரணங் காட்டுகின்றார். அடர்த்தல்—போரில் பல்லாற்றானும் முன்னேறி வெற்றி காணாதவாறு நெருக்குதல். இவருக்குப் பின் எழுதிய *கவிராசர்* 'எதிர் மன்னர்களின் வலிமையினாலே' என்றும், பழைய 2 'நடுப்படையில் என்றும் எழுதினர். ஆயினும் *பரிமேலழகர்* உரைத் தெளிவு பின்னர் இல்லை.

மு. ரா. அகு., *பரிமேலழகரை* ஒட்டி அவ்வலியார் நெருக்கலால் வெற்றி யடையாமல் என *பரிமேலழகர்* உரைக்கு விளக்கம் தருவர். 'அவர் தாக்குதலைப் பொறுக்கமாட்டாமல்' *தேவநேயர்*; 'உடைத்தம் வலி' என்றதை ஒரு தொடராகக் கொண்டு ஒல்வது எனவும், 'இடைக்கண் முடிதல்—வலி பயவாது ஊதியமும் இன்றி' எனவும் கூறுவர் மு. கோ. ஊக்கி—ஊக்கப்பெற்று என்பர் ஜி. வரத. இவ்வுரைகளின் கலந்த கருத்தாக தம்முடைய வலிமையின் வகைகளை அளந்தறிந்து கொள்ளாமல் ஊக்கம் ஊக்க வினை மேற்சென்று இடையில் எதிரியின் நெருக்குதலால் ஆற்றல் கெட்டவர் பலர் என்ற உரை சிறந்தது.

'உடை தம் வலியுடையார்' என்பதனைத் 'தம் உடை வலியுடையார்' எனவும்' 'உடைய தம் வலியுணரா' எனவும் இருவகையானும் பொருள் கண்டுள்ளனர் உரையாசிரியர்கள். அவருள் உடை தம் வலி எனக் கொண்ட *பரிமேலழகரும்* பிறரும் கொண்ட உரைக்கு அதனை உடைய எனச் செயப்படு பொருள் எஞ்சி நிற்கிறது. அதனாலேயே *பரிமேலழகர்* 'கருத்தாவாதலையுடைய' என எழுதி அவாவி நின்றதால் செயப்படுபொருள் வருவிக்கப் பட்டதென்றார்.

---

7. 'உடைத்தம்' என்பதிலுள்ள ஈறு குறைந்த பெயரெச்சம் கருத்தாதலை என்ற செயப்படு பொருளை அவாவி நின்றது.

மற்றொரு உரைக்கு தம் உடை வலி எனச் சொல் மாற்றியமைத்தலே போதும் வருவித்தல் வேண்டுவதின்றாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி

ஊக்கத்தின் ஊக்கி

மாற்றார் செல்வங் கண்டழிந்தால் வெற்றி யாக வற்றாமோ?.

கம்பராமா.3278,

48.4. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை வியந்தான் விரைந்து கெடும். (சுசெ)

உரைப்பகுதி:

அ) மணக்.: அமைவுடையனாய் ஒழுகுதலும் இன்றித் தன்வலியளவும் அறியாதே தன்னை மதித்தவன் விரைந்து கெடுவான் எ—று.

இது மேற்கூறியவாறு செய்தார் கெடுவர் என்றது.

ஆ) பரிதி : மந்திரிகள் புத்திக்குள்ளே அடங்கி ஒழுகாத அரசன் தன் சத்துவமறியாமல் தன்னை வியந்து கொள்வானாகில் சடுதியிலே கெடுவன் எ—று.

இ) பரிப்.: அமைவு உடையனாய் ஒழுகுதலும் இன்றித் தன்வலி அளவும் அறியாதே தன்னை மதித்தவன் விரைந்து கெடுவான் எ—று.

மேற் கூறியவாறு செய்யாதார் கெடுவர் என்றது.

ஈ) காளி.: யாதானும் ஒருபொருள் முற்றுப்பெற்றது யாங்கு; மற்று ஆங்கு அதற்கு ஏறக் கடவானுமாய் மற்றுத் தன்விதி வரம்பினை உணராதானுமாய் வறிதே தன்னைப் பெரிதும் மேலாகத் தன்னை மதிக்கின்றான் யாவன் மற்று அம்மதிப்புக்குத் தக்காங்கு நடக்க வேண்டினதால் விரைந்து கெடும் எ—று.

உ) பரிமேல்.: அயல்வேந்தரோடு பொருந்தி ஒழுகுவதும் செய்யாது, தன் வலியளவு அறிவதுஞ் செய்யாது, தன்னை[1] வியந்து அவரோடு பகைத்த அரசன் விரையக் கெடும்.

---

1. தன்னை வியந்து —ஏனைய அரசரெல்லாரினும்தான் மிகுந்தான் எனச் செருக்கி

காரியத்தைக் காரணமாக உபசரித்து, வியந்தான் என்றார்.[2] விரைய என்பது திரிந்து நின்றது [3] நட்பாய் ஒழுகுதல், வலியறிந்து பகைத்தல் என்னும் இரண்டனுள் ஒன்றன்றே அயல்வேந்தரோடு செயற்பாலது, இவையன்றித் தான் மெலியனாய் வைத்து அவரோடு பகைகொண்டானுக்கு ஒருபொழுதும் நிலை[4] இன்மையின், விரைந்து கெடும் என்றார். இவை இரண்டுபாட்டானும் தன்வலி அறியாவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்:** அயலிலே யிருக்கிற ராசாக்களுடனே சினேகம் பண்ணிக்கொண்டுமிராது, தன்னுடைய வலிமையும் அறிந்து செய்யாமற் றன்னைத்தானே பெரியவனாக நினைத்துக் கொண்டு பகைபண்ணிக் கொண்டவன் கொப்பெனக்[5] கெட்டுப்போவான் எ—று.

ஏ) *பழைய* 2: அயல்வேந்தரோடு பொருந்தி நடந்துகொள்ளுதலும் செய்யான், தன்வலியும் மாற்றரசர் வலியும் அளந்தறிதலும் செய்யான், தன்னை வலியனென்று எண்ணி வேற்று வேந்தரோடு பகைத்த அரசன் உடனே கெடுவன்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்

'அமைந்து ஆங்கு ஒழுகான்' —'அமைவு உடையனாய் ஒழுகுதலும் இன்றி'; அமைதியாய் ஒழுகாமல் என்பது கருத்து என்பர் மணக்.; *பரிதி.*, 'மந்திரிகள் புத்திக்குள்ளேயடங்கி ஒழுகாத அரசன்'; மந்திரிகளைக் கொண்டும் அவர்கள் கருத்தின்படி அடங்கி நடக்காத அரசன் என்பது கருத்து. *காளி.*, யாதானும் ஒருபொருள் முடிவுற நடந்து விடுமானால், அந்த அளவில் எல்லை கடவாமல் அடங்கி யிருப்பவனுமாய்' என்பர். இவர் கருத்து ஒருவன் ஒரு காரியத்தைத் தொடங்கினான்; அது ஏதோ ஒருவகையில் வெற்றியாக முடிந்தது

---

2. வியத்தலே கேடு பயவாது; வியத்தலின் விளைவு பகை. அப்போது வியத்தல் காரணம்; பகைத்தல் காரியம். பகைத்தான் கெடும் என்னாது வியந்தான் கெடும் என்றது காரியத்தின் வினையைக் காரணத்தின் மேல் ஏற்றிக் கூறிய உபசாரவழக்கு. இங்ஙனம் கூறுதல் நியதிப் பெயரன்மையானும், தொன்முறையன்மையானும் காரிய ஆகுபெயராகாமை எண்ணியே ஆசிரியர் உபசாரம் என்றனர். இங்ஙனம் அன்றி பகைத்தான் என்னாது வியந்தான் என்றது உபசாரம் என்பர். இதில் ஏற்றிக் கூறுவ தென்று வேறின்மைகண்டு தெளிக.
3. கெடும் என்பது நிகழ்கால எதிர் காலங்களுக்குப் பொதுவாகிய வினைமுற்று. விரைந்து- இறந்தகால வினையெச்சம், விரைதலும் கெடுதலும் முன்பின்னாக வன்றி உடனிகழ்வன. ஆகவே விரைந்து என்ற வினையெச்சம் விரைய எனச் செய என் எச்சமானாலன்றிக் கெடும் என்பதனோடியையாது ஆதலால் 'விரைய என்ற எச்சம் ஈண்டு விரைந்து எனத்திரிந்து நின்றது என்றார்.
4. நிலை—உறுதி யாக அழியாதிருத்தல்.
5. கொப்பென—விரைவுக்குறிப்பு இடைச் சொல்.

அந்த அளவில் அவன் அமையவேண்டுமே யல்லது அதனைக்கொண்டு எல்லாம் இப்படி முடியும் என்று எண்ணிவிடாமல் அவ்வளவில் அமையவேண்டும் என்பது. பரிமேலழகர் 'அயல் வேந்தரோடு கலந்து பழகுதலும் செய்யாது' என்பர். கவிராசர், பழைய 2, மு.ரா.அரு. இவர்கள் கருத்தும் இதுவே. இராம; 'தனக்கு அமைந்துள்ள சக்திக்குத் தகச் செய்யாமல்' என்பர். தேவநேயர், ஈ.சபாபதி, பரிமேலழகரை ஒட்டி வேற்றரசரோடு பொருந்திப் பழகாமல் என்பர் வரத., 'அமைதியோடு ஒரு செயலைச் செய்யாதவன்' என்பர். குழந்தை, 'அயலாரோடு ஒத்து நடவாமல்' என்பர். மு.கோ. 'துணையுடனும் மாற்றாருடனும் அமைந்தொழுகாதவனாய்' என்பர்

'அளவறியான்' — 'தன் வலியளவை அறியாமல்' மணக்., பரிமேல்., கவிராசர், கா.சு., பழைய 2, குழந்தை. பரிதி. 'தன் சத்துவம் அறியாமல் காளி. 'தன்விதி வரம்பினை உணராதானுமாய்' வரத. 'தன்னுடைய ஆற்றலின் அளவை அறியாதவன்'.

'தன்னை வியந்தான்' பரிமேலழகரும் அவரை ஒட்டியே உரைப்பாரும் 'தன்னை வியந்து அவரோடு பகைத்த அரசன் என்பர். ஏனையோர் அனைவரும் 'தன்னை மதித்தவன்' 'செருக்குக் கொண்டவன்' என்பர், 'கிடைத்ததைவிட்டு, யான் அப்பெருந்தொழிற்குத் தகுதியுடையேன் என எண்ணிச் செருக்குதல்' என்பர் மு.கோ.

'விரைந்துகெடும்' — 'விரையக்கெடும்' என்பர் பரிமேலழகர். ஏனையோர் 'விரைந்து கெடுவான்' எனக் கிடந்தபடியே கொள்வர். இவருள் வரத. 'ஒழுகாதவனும், அறியானும், வியந்தானுமாகிய மூவரும் விரைந்து கெடுவர்' என்றனர். ஏனையோர் இம் மூன்றையும் ஒருவன் செயலாக்கிக் கூறுவர். மணக்குடவர் போன்றார் அரசனுக்கு என்றும் ஏனையோர்க்கென்றும் விதவாது பொதுவகையிற் கூறுவர். குழந்தை மக்களினத்திற்கே கூறியதாகப் பொதுமையிற் கூறுவர். காளிங்கர் ஒரு காரியம் நன்கு முடிந்தால் ஏனையவும் அங்ஙனமே முடியும் எனத் தன்னம்பிக்கை விளைதலும், அதன் காரணமாகச் செருக்குண்டாதலும் மக்களியற்கை. அங்ஙனம் செய்யக் கூடாது; மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்கும் அமைதலும், அளவறிதலும் வேண்டும் என்பர். இது ஏனையோர் உரையினும் ஒருவகைக்குப் புதிய கருத்தைத் தருகிறது. 'மூவரும் கெடுவர்' என்பது 'வலியறிதலை' அளவறியான் என்பதனாற் கொண்டு ஏனைய வற்றைப் பயனால் ஒத்தன எனக்கொள்ளின் 'ஒப்பின் முடித்தல்' என்னும் உத்தியான் அமையக்கூடும். ஈண்டு வலியறியாமைக்கு

அமைந்தாங்கு ஒழுகாமையும் வியத்தலுமே ஏதுவாக விரைந்து கெடச் செய்யும் என்பதே அதிகாரத்திற்குச் சிறப்புத் தருவதாதலையும் காண்க.

'வியந்தான்' என்பதற்குத் 'தன்னை வியந்து பகை கொண்டான்' என்ற வரை பொருள்கொள்ள விரிவுபடுத்துகின்ற தேவையே உபசாரம் எனப் பரிமேலழகரை உரைக்கச் செய்திருக்கிறது. ஏனையோர் வியத்தலே வினைக்கேடாய் மடியை யுண்டாக்கும் என்பதனைக் கருத்துட் கொண்டிருத்தலையும் காண்க. வியத்தலால் பகைதான் உண்டாக வேண்டும் என்ற நியதியில்லை. மடிமையும் உண்டாகலாம் என்பது ஏனையோர் கருத்து.

அங்ஙனமே 'விரைந்து கெடும்' என்பது ஒரு சொன்னீர்மைத்தாய் வியந்தான் வினையாகவே இருத்தலின் முடிபு வழுவாகாது. அன்றியும் 'செய்தெனச்சத் திறந்தகாலம், எய்திடனுடைத்தே வாராக்காலம்' என்ற நூற்பாவின் படி' 'விரைந்து' என்னும் செய்தெனெச்சம், கெடும் என்ற நிகழ்வு எதிர்கட்குப் பொதுவாகிய செய்யுமென் முற்றைக் கொண்டு முடிதற்கிழுக்கின்றாம். செய்தெனெச்சம் செய்வேன் எச்சமாசத் திரித்துப் பொருள் கொள்ளவேண்டிய இன்றியமையாமை பிறவினைமுதல் வினையைக் கொண்டு முடியும் போதே யாதலானும் 'விரைந்துகெடும்' என்பதில் விரைதலும் கெடுதலும் வியந்தான் வினையே யாதலானும் இக்குறிப்புச் சிந்தித்தற்குரியது ஆதல் காண்க

அமைந்தாங்கொழுகல் புலனடக்கத்தையும், அளவறிதல் ஏனைய ரோடு ஒத்துப் பழகுதலையும், வியவாமை செருக்கின்மையையும் விளக்கி நிற்கின்றன எனலுமாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஒன்னார் அடநின்ற போழ்தின் ஒருமகன்
தன்னை எனைத்தும் வியவற்க—துன்னினார்
நன்மை இலராய் விடினும் நனிபலராம்
பன்மையில் பாடுடைய தில். —பழ. நா. பகைத்திறம்., 19.

தன்னை வியந்தான் விரைந்து கெடுதல்:

துரைத்த லோடுத் அறிந்தனன் அடங்கி நெஞ்சம்
தருக்கினர் கெடுவ ரென்றல் தத்துவம் நிலையிற் றன்றோ,
—கம்பராமா., 3365.

களித்தவர் கெடுதல் திண்ணம். —கம்பராமா. சம்பா 59

முற்றும்:

செந்நெறி நோக்கி அமைந்தாங் கொழுகான் அளவறி கில்லான்
தன்னை வியந்தான் விரைந்து கெடும்எனல் சத்தியம்கண்டாம்
மன்னியமேரு வரையோ டிகலி வளர்ந்தெழு விந்தம்
முன்னுள தோற்றமும் வீறும் முழுதும் இழந்தது மன்னோ.

—காஞ்சி..தழுவக்.,224.

48.5 பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின். (சஎடு)

உரைப்பகுதி:

அ) மணக்.: பீலி[1] யேற்றிய சகடமும்[2] அச்சு முறியும்; அப்பீலியை மிகவும் அளவின்றி ஏற்றின் எ—று.

இஃது அரண் மிகுதல் நன்றென்று இருப்பார்க்கு பகைமிகின் அரண் நில்லாது என்று கூறிற்று.

ஆ) பரிதி.: நொய்ய[3] பீலியாகிலும் கனமாக ஏற்றினால் வண்டி அச்சு முறியும். அதுபோலப் பலமில்லாதார் பலர் கூடினாலும் சத்துவமாம். ஆகையால் அரசன் வீரராகாத பேரையும் கனம்பெறக் கூட்டிக் கொள்வான் எ—று.

இ) பரிப்.: பீலியை அடைந்த சகடமும் அச்சு முறியும் அப்பீலியை மிகவும் நெருங்க இடின் எ—று.

அரண் வலிது என்றார்க்குப் படைமிகின் அரண் நில்லாது என்றற்குக் கூறிற்று; எனவே பகைவர் மேலே நெருங்கிச் செல்லினும் அளவு அறியாது செல்லின் கெடும் இடனும் உண்டாம் என்றது.

ஈ) காளி.: உலகத்தின் நொய்யவாக நிகழ்கின்ற பொருள்களின் ஒன்றாய பீலியைப் பண்டமாக உள்ளுச் சொரிந்து[4] வைத்த சகடமும் அதுகொண்டு நடக்குமிடத்துத் தனக்கு அச்சு முறிந்து கெடும்.

1. பீலி—மயிலிறகு.
2. சகடம்—வண்டி.
3. நொய்ய—மெல்லிய.
4. உள்ளுச்சொரிந்து—உள்ளேயிட்டு.

எப்பொழுது எனின், அப்பண்டம் கொண்டு ஓர் அழிவு இன்றி நடக்கும் உரத்த அளவு[5] அறியாது மற்று அதனைச் சால மிகுத்து உள் ளூறச் சொரிந்து செலுத்தின் எ—று.

உ) *பரிமேல்.*: பீலியேற்றிய சகடமும் அச்சுமுறியும் அப்பீலியை அதுபொறுக்கும் அளவன்றி மிகுத்து ஏற்றின்.

உம்மை சாகாட்டது வலிச்சிறப்பேயன்றிப் பீலியது நொய்மைச் சிறப்பும் தோன்ற நின்றது. இறும் என்னும் சினைவினை முதன்மேல் நின்றது எளியர் என்று பலரோடு பகை கொள்வான் தான் வலியனே யாயினும் பலர் தொக்கவழி வலியழியும் என்னும் பொருள் தோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம்[6]; இதனை நூவலாநுவற்சி என்பாரும் ஒட்டு என்பாரும் உளர். ஒருவன் தொகுவார் பல ரோடு பகைகொள்ளற்க என்றமையின் இதனான் மாற்றான் வலியும் அவன் துணைவலியும் அறியா வழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

காரி.: சினைவினை முதன்மேல் நின்றது[7]. சினைமேல் நிற்கின் சாகாட்டச்சிறும் என ஒற்று மிகும். பிறிதுமொழிதல் என்னும். அலங்காரம், இதனை நுவலாநுவற்சி; ஒட்டு என்பாரும் உளர்

ஊ) *கவிராசர்*: மயிலிறகை யேற்றின வண்டியும் இருசு ஒடிஞ்சு போம், அந்த மயிலிறகையும் வண்டி பொறுக்குமட்டுமல்லாமல் அதிக மாக ஏற்றினால் எ—ம்.

ஏ) *பழைய 2*: பீலியேற்றிய வண்டியில் அச்சு முறியும்' பீலியது பொறுக்கும் அளவன்றி, மிகுத்தேற்றின்.

5: உரத்த அளவு-வலிமையினுடையவாகிய அளவு.

6. கருதியபொருளைப் புலப்படுத்துதற்கு அதனோடு ஒத்த மற்றொரு பொருளைக் கூறுதல். பிறிது மொழிதலணி ஆகும். இங்கு மெலிந்த பகைவர் பலர் கூடின் வலிய அரசனை வெல்வர் என்ற கருத்தினைப் பீலி மிகுதியாக ஏற்றிய வண்டியும் அச்சுமுறியும் என்ற ஒத்த ஒன்றான் புலப்பட வைத்தமையான் அவ்வணியாயிற்று. ஒட்டு, நுவலா நுவற்சி, உள்ளுறை உவமம், உவமப்போலி, என்பன ஒருபொருட்கிளவி என்பர், இலக்கண விளக்க நூலார். இதன் பொருந்துமாற்றை ஆராய்தல் ஈண்டு வேண்டுவதின்று.

7. வண்டியின் (சினை) உறுப்புஅச்சு. அதன் சினைஇறுதல் அச்சின் செயலாகிய இறுதல் சாகாடு என்னும் முதன் மேல் நின்றது. முதலுக்கும் சினைக்கும் உள்ள ஒற்றுமை நயம் பற்றி என்றனர்: சினைக்கு வரும் கேடும் ஆக்கமும் முதலையே சார்தல் இயல்பு. அங்ஙனமன்றி, சினைவினை சினையொடும் முதலொடுஞ் செறியும், என்று நன்னூல் கூறுவதையும் இங்கு கருதுக என்பர் சிலர். அச்சுத்திரம் முதலில் நான்கும் என்ற வினை எச்ச முடிபுக்கு எய்தியதன் மேற்றிறப்பு விதியாய்க் கூறியதன்றி சினைவினை முதன் மேனின்றதற்கு அன்று என்க. இதனைப் பிரயோக விவேக நூலுடையார் (கா[7] கை48 உரை) பொருளினும் தோன்றும் என்ற உம்மையால் சினை வினை முதல் வினையானமைகாண்க. என உபசாரம் என்றனர்.

8. இருசு—அச்சு

மல்லர்: ஒருவண்டியில் மேலே இறகுகளைப் போட்டாலும் அந்தப் பண்டம் வண்டிப் பலத்தை மிஞ்சும்படிக்கு மிகுதியாகப் போட்டால் வண்டிலுடைய அச்சு பாரத்தைத் தாங்காமல் முரிந்துபோம் எ—று.

ராசா தனக்குச் சரியான பலனில்லாத அரசருடைய பகை தாங்கத்தக்கவனாயிருந்தாலும் அனேகம் அரசர் ஒருமிக்கக்கூடி ராசாவுக்கு எதிராய் நின்றால் அவன் தாங்கமாட்டாமல் முரிஞ்சு போவான் என்கிறதினால் வண்டிலுக்கு இறகுகளைப்போட்டாலும் மிஞ்சிப் போடலாகாது, போல அரசன் தனக்கு சரியான பலனி லாத அரசரைப் பகைத்தாலும் அப்படிப்பட்ட அனேகம் அரசரைப் பகைக்கலாகாது என்பது கருத்து.

பீலி — இறகு; பெய்தல் — போடல்; சாகாடு — வண்டில்; இறும் — இற்றுப்போம்; சாலுதல் —மிகுதல்; பெயின் — போட்டால்

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவுக்குச் சொற்பொருள் காணும் முறையில் இன்றைய ஆசிரியர்கள் வரை கருத்து மாற்றம் பெரிதும் இலர். ஆனால் பிறிது மொழிதலாகப் பொருள் கொள்ளும் முறையில் பெரிதும் வேறுபடு கின்றனர்.

மணக். 'அரண்வலி மிகுதியும் உடையேம் என்றிருப்பார்க்குப் பகைமிகின் அரண் அழியும் என்பது'. *பரிதி* 'பலம் இல்லார் பலர் கூடினாலும் பலமாம்; ஆதலால் 'சண்டியனுக்கு இரண்டாள்' என்பது போல மக்கள் பலரைச் சேர்த்துக்கொண்டு பலமுள்ள அரசனையும் அழித்து' என்பர். *பரிப்,* 'பகைவர் மேற்படையெடுத்துச் செல்லினும் அவர்வலியறிந்து அளவோடு செல்லவேண்டும். அளவிற்கு மிகுதியான படையைத் திரட்டிச் சென்றாலும் கேடுண்டாம்' என்பர்போலும்.

காளிங்கர், நேரே பிறிதுமொழிதலைக் கூறாது அவ்வணி படக் கூறும் குறட்பாவிற்குச் சொற்பொருள் விளக்கும் முறையால் 'மிகவும் நொய்ய பீலியை வண்டியில் சிறிதும் இடமில்லாமல் ஏற்றி அதனை ஓய்வு ஒழிவின்றி ஓட்டிச் செல்லும் போது அச்சு முறியும்' என்பர். இதிலிருந்து நாம் எண்ணத்தகுவன படைகளை அளவுக்கு மிச்சமாகத் திரட்டிச் செல்லுதல் கூடாது; அடிக்கடி இடைவிடாமல் போருக்குப் போதல் கூடாது என்பனவே. ஓயாது ஒழியாது ஏற்றுதலும் போதலும் கூடாது என்பது இவர்தரும் புதிய இணைப்புக் கருத்து. *பரிமேலழகர்* கருதுவது 'தான் வலியனே ஆயினும் பகைவர் பலர் கூடினால் தோல்வியாம்' என்பது. *தேவநேயர்,* 'பகைவர் தனித்

தனியே மிகச் சிறியர் மெலிவுடையோர் ஒன்றுகூடின் வலிய பகைவனையும் வெல்வர். அதனால் பகைவர் மிகச் சிறியராயினும் ஒன்று சேரவிடக் கூடாது என்பது' என்பர். வரத. 'பலரைப் பகைத்து வாழமுடியாது என்பது' என்பர்.

இவற்றுள் ஓருரை பகைவர் பலராயின் படையெடுத்துப் போதலாகாது என்கின்றது, மற்றொன்று அளவுக்கு மிகுதியாகப் படைதிரட்டிச் செல்லலாகாது என்கிறது. மற்றொன்று பகையை ஒன்று சேரவிடலாகாது என்கிறது. மற்றொன்று தம் அரண் வலிகண்டு ஏமாறலாகாது என்கிறது. மற்றொன்று ஆள்பலம் அவசியம் என்கிறது. இவையனைத்திலும் தன்வலி அரண், இடம், காலம், துணை இவற்றாற் சிறந்ததாயினும் பகைவர் பலர் தொகின் கேடுவிளையும் என்ற கருத்தமைந்த உரை தெளிவானது.

யாண்டும் இலக்கணத்தைத் துணைக்கொண்டு தம் கருத்தை வலியுறுத்துபவர் *பரிமேலழகர்* ஒருவரே என்பதை யாவரும் அறிவர். இக்குறளின் 'சாகாடும் அச்சிறும்' என்பதிலுள்ள உம்மை வண்டியின் உறுதியை நினைக்கும்போது உயர்வு சிறப்பாயும், அச்சிறுதலாகிய பயனிலிருந்து ஏற்றப்பட்ட பீலியின் நொய்ம்மையை நினைக்கும் போது இழிவு சிறப்பாயும் கருதப்படுதலைப் *பரிமேலழகர்* விளக்கினர். ஆயின், கண்ணிரண்டு ஒருகாலத்து ஒன்றையே நோக்குதல்போல உம்மையும் இரண்டையும் ஒருசேர உணர்த்தாது, ஒன்றொன்றாகவே உணர்த்தும் என்ற குறிப்பும் தோன்ற உரைத்ததாம்.

'இறும்' என்பது அச்சின் வினை. அச்சுக்கும் சாகாட்டிற்குமுள்ள இயைபு சினையும் பொருளுமாகிய இயைபு. சினைக்கும் முதலுக்கும் ஒற்றுமை நயம்பற்றிச் சினைவினை முதன்மேனின்றது என்கிறார். இதற்கு விளக்கந்தந்த *நுண்பொருள் மாலையுடையார்* 'சினைமேல் நிற்கின் சாகாட்டச்சிறும் என்று ஒற்றுமிகும்' என்பர். சாகாடும் என உம்மையிடைச் சொல் இடை வந்தமையின் ஒற்று மிகுதல் வேண்டப்படுவதன்று. 'சாத்தன் காலொடிந்தான்' என்ற வழி ஒடிதல் சினை வினையாயினும் ஒற்றுமை நயம்பற்றி முதற்பொருளின் விகுதியையே பெற்று வந்தமை காண்க. 'இதுவே மாடுகாலொடிந்தது' என்று அஃறிணைமுடிபாய வழி ஒடிதல் கால்வினையாயினும் காலொடிந்தது என்னும் அனைத்தும் ஒரு பயனிலையாய் மாடு என்னும் வினை முதற்குப் பயனிலையாயினவாறு போல ஈண்டும் 'சாகாடு அச்சிறும்' என்றாயிற்று. மேலும் சிறப்பும்மை வந்து ஒற்று மிகுதலை விலக்கிற்று. ஆகவே இக்குறிப்பு இடைச்செருகலாக இருக்கலாம் என்பது. காரி, ஆசிரியர் இங்ஙனம் எழுதார் என்க.

ஒ ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

''..... .... துன்னினார்
நன்மை யிலராய் விடினும் நனிபலராம்
பன்மையின் பாடுடைய தில்.'' —பழமொழி. 306.

குறைந்த வலியராயிடினும் கொற்ற மைந்தர் பலர்கூடின்
நிறைந்த வலிஎன் னாமதனான் நேரா தொழிக பலரொடுளத்
துறைந்த ஊக்கந் தனைக்கொண்டே உற்ற நினதுவ லியளவின்
இறந்தும் வினைமேல் நடவற்க இறவா வென்றி வேண்டிடினே.''
—விநா. அரசி.. 65

''அடப்பங் கொடியும் திரண்டால் மிடுக்கு'' —பழமொழி.
''முண்டனுக்கு இரண்டாள்'' —பழமொழி.
''பஞ்சு கயிறானாலும் பாரந்தாங்கும்'' —பழமொழி.

ஒ) மேற்கோள்பகுதி:

மயிலை : 'பீலிபெய்... ... ... பெயின்' இது மெலியரும் பலர் தொகின் வலியராகுப எனக்குறித்த பொருள் கொண்டு முடிதலின் குறிப்பெச்சம் என்பர். —நன்.,359.
சங்கர.: ஷை —நன்.,360,

காரி.: கருப்பொருளில் பிறக்கவேண்டும் என்னும் யாப்புறவின்றி புறத்தினும் புறப் புறத்தினும் சென்று செய்யுள் செய்யும் புலவன் முதலாயினோர் கூறும் கூற்றாய்க் கூட்டு என்னும் உள்ளுறையால் நடத்தற்கு மேற்கோள். —மாற்.,125. நீலகேசி உரை: 'பிறன் சுமவான் தான் நடவான்' என்ற பாடல் நுவலாநுவற்சி அலங்காரம் எனக் கூறி, இக்குறளை எடுத்து மேற்கோள் காட்டி விளக்குவர்.
—பா.,307

48.6. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும் (சூசூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒருமரத்தின் நுனிக்கொம்பு ஏறினவர் தம் அளவு அறிந்து வைத்துப் பின்னும் மேலேறுவராயின், அஃது அவர்தம் உயிர்க்கு இறுதியாகிவிடும் எ—று.

இஃது அரசன் தன்னால் செல்லலாமெல்லையளவும் சென்றால் பின்பு மீளவேண்டும் என்றது. இதுவும் ஒரு வலியறிதல்.

ஆ) *பரிதி.*: அடிப்பனையிலே நின்று மரத்தில் பழம் பறியாமல் நுனிக்கொம்பிலே ஏறினார் போல, கெட்ட புத்தியை எண்ணாமல் உறுதியான காரியத்தை விசாரிக்கில் அக்காரியம் பலிக்கும் எ—று.

இ) *பரிப.*: ஒரு மரத்தின் நுனிக்கொம்பில் ஏறினவன் தன் அளவு அறிந்து வைத்துப் பின்னும் மேலே செல்வனாயின் அது தன் உயிர்க்கு இறுதியாகிவிடும் எ—று.

இஃது அரசன் தன்னால் செல்லலாம் அளவும் சென்றால் பின்பு மீள வேண்டும் என்றது. இதுவும் ஒரு வலியறிதல்.

ஈ) *காளி.*: நின்றதோர் பசுமரத்தின் இளந்தழைக் கொம்பின் மேலேபோய் ஏறினார் போல மற்று அதனை அறிந்து பின்னும் உரம் செய்வராயின் தமது உயிர்க்கு இறுதியாகி விடும் எ—று.

ஊக்கின் என்பது உரம் செய என்றது.

உ) *பரிமேல.*: ஒரு மரக்கோட்டினது நுனிக்கண்ணே ஏறி நின்றார் தம் ஊக்கத்தால் அவ்வளவினைக்[1] கடந்து மேலும் ஏற ஊக்குவராயின்[2], அவ்வூக்கம் அவருயிர்க்கு இறுதியாய்முடியும்.

நுனிக்கொம்பர் என்பது கடைக்கண் என்பதுபோலப் பின் முன்னாகத் தொக்க ஆறாம்வேற்றுமைத்தொகை[3]. பன்மை அறிவின்மைபற்றி இழித்தற்கண் வந்தது[4]. இறுதிக்கு ஏதுவாவதனை இறுதி என்றார்[5]. பகைமேற்செல்வான் தொடங்கித் தன்னால் செல்லலாமளவும் சென்று, நின்றான் பின் அவ்வளவின் நில்லாது மனவெழுச்சியான் மேலும் செல்லுமாயின், அவ்வெழுச்சி வினைமுடிவிற்கு ஏதுவாகாது அவன்

---

1. அளவினைக்கடந்து—நுனிக் கொம்பின் அளவினைக் கடந்து,
2. ஊக்குவராயின் —தம்படையை ஊக்கப்படுத்துவராயின், முயலுவராயின் எனலுமாம்
3. கொம்பரது நுனி — நுனிக்கொம்பர். முன்பின்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை. இங்ஙனம் வருவன இலக்கணப் போலியாம் என்க. கொம்பு—கொம்பர் எனக் கடைப்போலி மொழி
4. 'ஏறினார்' எனபது ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி. 'தாம் வந்தார் தொண்டனார்' என்பதுபோல இழித்தற் பொருளில் வந்தது. இதனை 'உயர் சொற்றானே குறிப்பு நிலையால் இழிவு விளக்கிற்று என்பது. (தொல். சேனா., நூற்.27) உரை பார்க்க,
5. இறுதி—இறுதிக்கு ஏதுவாகிய ஊக்கத்தை இறுதி என்றது காரணத்தைக் காரியமாகக் கூறியதாம் இதனைக் காரிய ஆகுபெயர் என்பர். காரியங் காரணமாகிய உபசார வழக்கமும் ஆம் என்பர். ஆகுபெயர்க்கும் உபசார வழக்குக்கும் வேறுபாடுண்டா அன்றா என்பது ஆயத்தக்கது.

உயிர்முடிவிற்கு ஏதுவாம் என்னும் பொருள் தோன்ற நின்றமையின், இதுவும் மேலையலங்காரம். அளவறிந்து நிற்றல்வேண்டும் என்றமை யின், இதனால் வினைவலி யறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

காரி.: ஏறினார் என்னும் பன்மை அறிவின்மை பற்றி இழித்தற் கண் வந்தது. 'பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்'[6] என்னும் பன்மை உயர்த்தற்கண் வந்தது.

ஊ) *கவிராசர்:* ஒரு மரத்தினுடைய நுனிக்கொம்பிலே ஏறினவர் அதுமட்டிலே நில்லாமல் தம்முடைய நினைவினாலே பின்னையுமுயர வேற நினைத்தால், அந்த நினைவு அவர் உயிருக்கிறுதியாகிப் பிராணஹானியைக் கொடுக்கும் எ—று.

ஈ) *பழைய 2:* ஒரு மரத்தின் கொம்பின் நுனிக்கண்ணே ஏறி அதனை மிகவும் அலைத்தானாகில் அவன் உயிர்க்கு இறுதியாய் முடியும்.

மல்லர்: மரத்தினுடைய கொம்பிலே ஏறினவன் அதின் நுனியிலே சென்று அதைக்கடந்து அப்பாலே ஏறவேணும் என்று துணிந்தால் அத்துணிவு அவனுடைய உயிருக்குச் சாவாய் முடியும் எ—று.

ராசா ஒருத்தன் மேலே படையெடுத்துத் தன்பலத்துக்கு ஒத்த இடத்திலே சேந்தாப்போலே தன்பலனுக்கெட்டாத இடத்திலே செல்லவேணும் என்று துணிந்தால் தனக்கவசியமாய்க் கேடுவரும் என்கிறதினாலே ராசா தன்னுடைய வல்லமையும் எதிராளியுடைய வல்லமையும் அறிந்து நடக்கவேணும் என்பது கருத்து.

இறுதி—சாவு; கொம்பர்—கொம்பு; அஃது—அது; இரத்தல்—விழுத்தல்—ஊக்கல்.

ஐ) *தொகுப்பும் குறிப்பும்:*

'நுனிக்கொம்பர்' எனக் குறட்பாவின் குறிப்பால் பனைமரம் அல்லாமை உணரப்படுவதாயினும் 'அடிப்பனை' என்ற இவ்வுரை ஏலாத ஒரு கற்பனையாம். அங்ஙனம் பிறிதுமொழிதலால் இவர் காட்டும் கருத்து தெளிவலது.

நுனிக்கொம்பருக்கு 'இளந்தழைக் கொம்பர்' என்ற **காளிங்கர்** உரை நயமுடைத்து. நுனிக்கொம்பே மனிதனுடைய எடையைத்

6. குறள். 816.

தாங்க இயலாதது. மேலும் உந்தி ஏற எண்ணினால் இறுதி தான் என்பது இவர் கருத்து. 'அதனை யறிந்து' என்ற உரைக்குறிப்பு இவர்கொண்ட பாடம் 'அஃதறிந்து ஊக்கின்' என்பது துணியத் துணை செய்யும்.

இப்பாவிற்கும் பிறிதுமொழிதலாற் கொள்ளுங் கருத்து சிற்சில உரைகளில் மாறுபடுகின்றன. மணக்குடவர் உரைக்குச் சிறந்த விளக்கம் போல அமைந்து கருத்தொற்றுமையைக் காட்டுவது பரிமேலழகர் உரையும் விளக்கமும், தேவநேயரின் 'நுனி' என்றது கிளைகளின் நுனியையன்று; மரத்தின் உச்சாணிக் கிளையை என்பது நல்ல கருத்து. தீமையைப் பெருக்கிக் காட்டுதலால்.

அணியால் ஆனபொருள்:

மணக்., பரிமேல்., 'அரசன் தன்னாற் செல்லக் கூடிய அளவும் சென்றால் மீளவேண்டும். மேலும் போதல் கூடாது' என்பர். பரிப்., கூறும் கருத்தே இங்கு இயைபிலதாதலைக் காண்க. காளி., ஓரளவு மணக்குடவரை ஒத்துப்போதலையுணரலாம்.

தேவநேயர், 'பகை மேற்சென்று முற்றுகையிட்டவன் பல அரண்களைக் கடந்துதான் செல்லுமளவும் சென்ற தோடு அமையாது மேலும் அரிய உள்ளரணைக் கைப்பற்ற எண்ணி முயலுவானாயின் அது அழிவுக்கு ஏதுவாம் என விளக்கந் தருவர். மு.ரா.அரு. போகக் கூடிய அளவு சென்று நின்றுவிடாமல் தன் வலிமைக்கு மிஞ்சிச் செல்வானாயின், என்பர்.,அஃதறிந்து, என்பதற்குத் தன் வலிமையின் எல்லை கடந்து என உரைகாண்கிறார் ஆதலை அறிக. மு.கோ., கொம்பு ஒடிதல் போல மேற்கொண்ட வினையுங்கெடும், என்பர். ஜீ.வரத., போரில் முன்னேறிப் போகிறவர் தன்வழியளவுக்குப் போகலாமே தவிர ஊக்கத் தால்மேலும் செல்லலாகாது, என்பர்.

இவற்றுள் பரிமேலழகர் தரும் விளக்கம் ஏனையவற்றின் இனிமையும் நுட்பமும் உடையது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

நெடுமரம் நீள்கோட் டுயர்பாய்தல் இன்னா. —இன்னா:,3

எல்லை கடந்தால் தொல்லை. —பழமொழி.

உச்சாணிக் கிளையிலே ஏறினால் உயிருக்கு ஆபத்துத்தானே.

—பழமொழி.

ஓ) மேற்கோள்பகுதி:

சுவாமி.: நுனிக்கொம்பர் என்பது மரூஉமொழி என்பர்.
—இ:கொ.,108.

நுனிக்கொம்பர் என்புழி நின்ற பகுபதங்களைக் கொம்பு எனப் பகாப்பதமாகவே பொருள் கொள்வர். —இ.கொ.,117.

காரி.: (485ம் குறள் காண்க.)

48.7 ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள் போற்றி வழங்கும் நெறி. (சஎஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பொருளை அளவறிந்து கொடுக்கும் வழியாலே கொடுக்க, பொருளையுண்டாக்கி வழங்கும் நெறி அது ஆதலான் எ-று.

இது பொருளினது வலியறிந்து அதற்குத் தக்க செலவு செய்ய வேண்டும் என்று கூறிற்று.

ஆ) பரிதி.: அரசன் இவர்கள் தனக்குதவியாவர் என்று அறிந்து பொருள் கொண்டானாகில் அப்பொருளும் கெடும்; மனிதரும் கூடார் எ-று.

இ) பரிப்.: வருவாய் அளவு அறிந்து கொடுக்க; பொருள் உண்டாக்கும் நெறி அது ஆதலான் எ-று.

இனிப் பொருளினது வலி அறிதல் கூறுகின்றார். ஆதலின், முதற்குத் தக்க செலவு செய்ய வேண்டும் என்றது.

ஈ) காளி.: பொருள் வரலாற்றினது சிறுமை பெருமை அளவு அறிந்து அதற்குத் தக்காங்கு அரசர் யாவர்க்கும் ஈந்து ஒழுக; மற்று அங்ஙனம் செய்யின், அஃது அப்பொருளினைக் காக்கும் இடம் காத்து வழங்கும் வழி வழங்கும் முறைமையாவது; எனவே யாவரும் தத்தம் பொருள் வரலாற்றுக்குத் தக்காங்குக் காக்குமிடம் காத்தும் ஈயுமிடம் ஈத்தும் சேறலே கடன் எ-று.

இனி, மற்று இங்ஙனம் பொருள்வலியும் துணைவலியும் முதலாக வலியனைத்தும் தேர்ந்து அறிந்தனனாயினும், வேந்தன் மற்று அவை செய்யுமிடத்து, அவையவையிற்றுக்கு ஏற்ற காலம் அறியாக்கால்

கருமம் சிதையும் ஆகலின், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக் கின்றது மேலையதிகாரம்.

உ) *பரிமேல்*: ஈயும் நெறியானே தமக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கேற்ப ஈக, அங்ஙனம் ஈதல் பொருளைப் பேணிக் கொண்டு ஒழுகும் நெறியாம்.

ஈயும் நெறி மேல் இறை மாட்சியுள் 'வகுத்தலும் வல்லதரசு' என்புழி உரைத்தாம்[1]. எல்லைக்கேற்ப ஈதலாவது, ஒன்றான[2] எல்லை யை நான்கு கூறாக்கி, அவற்றுள் இரண்டனைத் தன் செலவாக்கி ஒன்றனை மேல் இடர் வந்துழி அது நீக்குதற் பொருட்டு வைப்பாக்கி[3] நின்ற ஒன்றனை ஈதல், பிறரும் [4] 'வருவாயுட் கால் வழங்கி வாழ்தல்' என்றார். பேணிக் கொண்டொழுகுதல் ஒருவரோடு நட்பிலாத அவனைத் தம்மோடு நட்புண்டாக்கிக் கொண்டு ஒழுகுதல்[5]. முதலிற் செலவு சுருங்கின் பொருள் ஒருகாலும் நீங்காது என்பதாம்.

ஊ) *கவிராசர்*: பொருளைக் கொடுக்கிறவன் தனக்குள்ள பொருளின் அளவறிந்து அதற்கேற்கக் கொடுக்க; அப்படிக் கொடுக்கிறது பொருளை ரட்சிக்கிற வழியாம் எ—று.

ஏ) *பழைய* 2: கொடுக்கும் வழி, தனக்குள்ள பொருளின் அளவு அறிந்து கொடுக்க; அது பொருளைப் பேணிக் கொண்டு ஒழுகும் நெறியாம்,

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஆற்றின் அளவறிந்து'— 'பொருள் வரலாற்றினது சிறுமை பெருமை அளவு அறிந்து' *காளி*: 'ஈயும் நெறியானே' *பரிமேலழகர்*. இவற்றுள் அதிகார இயைபுடையது *காளிங்கர்* உரையே.

பரிதி., 'ஈக' என்ற உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்றை 'ஈயார் ஆயின்' என எதிர்மறையாக்கி அளவோடு ஈயவேண்டியவற்கு

---

1. 'காத்தபொருளை அறம் பொருளின்பங்களின் பொருட்டுச் செலவு செய்தலும் வல்ல வனே அரசன், எனக் கூறி கடவுளர், அந்தணர், வறியோர் என்றிவர்க்கும் புகழிற் கும் கொடுத்தலையறப்பொருட்டாகவும், யானை குதிரை படை நாடு அரண் இவற்றிற்குக் கொடுத்தலைப் பொருட் பொருட்டாகவும் மண்டபம் வாவி பொழில் முதலியன அமைத்தற்கும் நுகர்ச்சிக்கும் கொடுத்தலை இன்பப் பொருட்டாகவும் கொள்க' என்ற தனதுரையைச் சுட்டியதாம்
2. ஒன்றான-ஓரளவுக்குட்பட்டுத் தம்மிடம் ஒன்றாயிருக்கும்
3. வைப்பு - மூலதனம்
4. பிறரென்றது திரிகடுக ஆசிரியராகிய நல்லாதனாரை, திரிகடுகம்., செய் ,21
5. ஒருவரோடும் நட்பில்லாத அதனை என்றது ஒருவரிடத்தும் நட்பாய் நிலைத்திராத பொருளை எஞ்ஞ தம்மோடு என்றும் வழிவழியாக நிலைத்திருக்கச் செய்தல்-

ஈயாமையான் வருங்கேடு கூறுவதாகப் பொருள் தருவர். ஈய வேண்டிய வர்கள் யார் என்பதையும் இவ்வுரை விளக்குகிறது.

வள்ளுவர், 'ஈக' என்றதால் இது இல்லார்க்கீதலும், இரப் போர்க்கு ஈதலும் ஒப்புரவும் ஆகாது. ஆட்சியின் சூழ்ச்சியாக ஒற்றர்க் கும் தூதர்க்கும் வீரர்க்கும் ஈதலாம் என்க. இவை கையுறையாகவோ புகழ் தரும் ஈகையின் வேறுபடுக்க வள்ளுவர் கையுறை என்றேயாண்டி ருக்கலாமே எனின், பழந்தமிழ்க் காலத்து லஞ்சம் வாங்குதலின்மை யானும், கையுறை என்ற சொல்காணிக்கை என்ற பொருளிற் சிலம்பி லும், 'நன்கொடை' என்ற பொருளிற் கோவை யிலக்கியங்களிலும், 'மொய்ப்பணம்' என்ற பொருளில் நாட்டு வழக்கிலும் வழங்குதலான் வள்ளுவர் இதனையும் ஈகையென்ற சொல்லானே வழங்கலாயினர். இந்த ஈகையின் பயன் புகழன்று; வெற்றியும் பொருளாக்கமும் என்க.

'ஈகை—தானம்' என்பர் இராம. தானம் என்பது தக்கார்க்குத் தகுதியறிந்து கொடுக்கும் புண்ணியம் புகழ் தரும் செயல் அனைத் திற்கும் அளித்தலைத் தானம் என்றல் வடநூல் வழக்கு.

ஜி. வரத., 'அளவறிந்து — தன்பொருளளவையும், ஏற்பவ னுடைய தகுதியளவையும் அறிந்து' என்பர். இது அரசியல் ஈகைக்கு மிக ஏற்புடைய கருத்து.

பரிமேலழகரை ஒட்டித் தேவநேயரும் வருவாயுட் கால் வழங்கி வாழ்தலை மேற்கோளாகக்காட்டி, ஈகைக்கு காற்பங்கே ஒதுக்குவர். இது புகழீகையாகாமையை மனத்தெண்ணி, 'நெருக்கடிக் காலத்தில் சேமவைப்பில் நாடு காவலுக்கு எனச் சேர்த்த நிதியத்தையும் ஈக என்பதே' சிறந்ததாம். ஆகவே 'ஆற்றின் அளவறிந்து' எனின், 'சேமத்துள்ளது போக மேலும் இதற்காக எவ்வளவு மக்களிடமிருந்து வரக்கூடும் என்பதையும் அறிந்து ஈக' என்க.

ஒ ஒப்புமைப்பகுதி:

அளவறிந்து ஈக:

வளவனாயினும் அளவறிந்தழித் துண். —கொன்றை.,81.

வழி தெரியாத கொடை பழி. —பழமொழி

அளகேசனானாலும் அளவறிந்து செலவு செய்யவேண்டும்.
—பழமொழி.

விளைவதாயினும் அளவறிந்தழி. —பழமொழி.

பொருள் போற்றி வழங்கு நெறி:

திருமக ணிலைமயுஞ் செல்வர் கேட்டிரேன்
மருவிய மனிதரை யிகழ்ந்து மற்றவள்
பொருவறு புகழினர் புதிய காமுறு
ஒருவர்கண் ணுறவில ருணர்ந்து கொண்மினே. —சூளாமணி.,

முற்றும்:

வந்த பொருளில் காற்கூறுவருமே லிடர்நீக் குதற்கமைந்து
மைந்த இருகால் நினக்காக்கி மற்றைக் காலே வழங்கிடுக
சிந்து நெறிகள் அகலாமல் சேரும் நெறிகள் சுருங்கிடினும்
நந்தல் இலதாம் ஒப்பினுமா நாடின் அதிகச் செலவிழுக்காம்.
—வினா.அரசி.,66.

48.8 ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை போகா றகலாக் கடை (சஎஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பொருள் வரும்வழி யளவுசிறிதாயினும் கேடில்லை யாம்; அது போம் வழி பெருகாதாயின் எ–று.

இது முதலுக்குத் தக்க செலவு செய்ய வேண்டும் என்றது.

ஆ) பரிதி: ஆதாயவகை அற்பமாயினும்[1] நிருவாகம் பண்ணிக் கொள்ளலாம்; செலவு மிகுதியில்லாதபோது எ-று.

இ) பரிப்: பொருள் வரும் வழி சிறிது ஆயினும் கேடில்லை பார்; அது போம் வழி பெருகாது ஆயின் எ-று.

இது முதலுக்குச் செலவு குறைய வேண்டும் என்றது.

ஈ) காளி: பொருள் தமக்கு உளதாகின்ற வழியினது அளவு பெரிதும் சிறிதேயாயினும் அதனான் வருவதொரு கேடில்லை; என்னோ எனின், மற்று அப்பொருள்தான் வினியோகப்படுதலும், பிறர்க்கு உபகரித்த லும்[2] ஆகப் போகிற வழியால் அதனை விட்டு அகலாத இடத்துத் தனக்கு வலியாகியது சிறிது பொருளாயினும் அதுவே அமையும் எ-று.

உ) பரிமேல்.: அரசர்க்குப் பொருள் வருகின்ற நெறியளவு[3]

1 ஆதாயவகை அற்பமாயினும் - ஊதியவகை குறைவாயினும்; 2, உபகரித்தல்- உதவுதல்

3 பொருள் வருகின்ற நெறியளவு - 'ஊறுபொருளும்' 756ம் குறட்பாவில் கூறிய பொருள் செயல்வகைகளாகிற நெறிகளின் அளவு

சிறிதாயிற்றாயினும் அதனால்[4] கேடு இல்லையாம். போகின்ற நெறியளவு அதனின் பெருகாதாயின்.

இட்டிது எனவும், அகலாது எனவும் வந்த பண்பின் தொழில்கள் பொருண்மேல் நின்றன[5]. பொருளென்பது அதிகாரத்தான் வருவித்து, அளவு என்பது பின்னும் கூட்டி உரைக்கப்பட்டன. முதலும் செலவும் தம்முள் ஒப்பினும் கேடில்லை என்பதாம்.

ஊ) கவிராசர்: அரசனுக்குப் பொருள் வருகின்றவழி கொஞ்சமானாலும் கேடில்லை, பொருள் செலவழிகிறவழி வருகிறதிலும் அதிகமாகாமல் இருந்தால் எ-று,

ஏ) பழைய 2: அரசர்க்குப் பொருள் வருகின்ற நெறியளவு சிறிதாயினும், அதனாற் கேடில்லை, போகின்ற நெறியளவு அதனிற்பெருகாதாயின்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

காளிங்கர், 'போகாறு (வினியோகப்படுதலும்)பகுத்து அளித்தல் பிறர்க்கு உதவல் என இருவகைப்படும்' என்பர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

போகாறு அகலாக்கடை:

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. —நல்வழி, 25.
''தேடாதழிக்கின் பாடா முடியும்.'' கொன்றை., 44

48.9. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும். (சகெ)

உரைப்பகுதி:

அ) மணக்.: தன்வருவாயளவு அறிந்து வாழாதான் வாழ்க்கைகள்

4 அதனால் - வருவாயினும்.

5 அளவு என்னும் பண்பின்தொழில்கள் அளவையுடைய பொருள்கள் மேல் நின்றது உபசாரமாம்.

உளபோலத் தோன்றி, அதன்பின் இல்லையாகித் தோன்றாது கெடும் எ—று.

பின்பு ஆக்கம் தோன்றாது என்றவாறு. இது மேற்கூறியவாறு செய்யாதார் கெடுவர் என்றது.

ஆ) *பரிதி.:* தன்செல்வம் அறிந்து, மேல் வருகிற உதவி அறிந்து செலவழியாதான் செல்வம் சடுதியிலே கெட்டுவிடும் எ—று.

இ) *பரிப.:* தன் வருவாய் அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கைகள் உள்ளன போலத் தோன்றி, அதன்பின் இல்லையாகித் தோன்றாதுகெடும் எ—று.

தோன்றாக் கெடும் என்பது பின்பும் ஆக்கம் இன்றிப் போகும் என்றது. இது மேற்கூறியவாறு செய்யாதார் கெடுவர் என்றது.

ஈ) *காளி.:* தமது பொருள் முதலியவற்றின் எல்லையைக் குறிக் கொண்டு எய்தற்குத் தக்காங்கு செய்யாதான் ஒழுக்கமானது முன்னம் சில உளபோலக் காட்டி, இல்லையாய் விடும்; மற்று அங்ஙனம் கெடு மிடத்தும் தோற்றம் இல்லவாய்க் கெட்டு விடும் எ—று.

உ) *பரிமேல.:* தனக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கு[1] ஏற்ப வாழமாட்டாதான் வாழ்க்கைகள், உள்ளன போலத் தோன்றி மெய்ப்மையான் இல்லையாய்ப் பின்பு அத்தோற்றமும் இன்றிக் கெட்டுவிடும்.

அவ்வெல்லைக்கேற்ப வாழ்தலாவது அதனில் சுருக்கக் கூடாதா யின், ஒப்பவாயினும் ஈத்தும் துய்த்தும் வாழ்தல். தொடக்கத்தில் கேடு வெளிப்படாமையின், உளபோலத் தோன்றி[2] என்றார், முதலின் செலவு மிக்கால் வரும் ஏதம் கூறியவாறு.

ஊ) *கவிராசர்:* தனக்குள்ள பொருளை இம்மாத்திரமென்று அறிந்து அதற்குத் தக்கதாய், வாழாமல் அதிகமாய்ச் செலவழிக் கிறவன் வாழ்க்கை. இருக்கிறாப் போல இருந்து, ஒன்றுமில்லாமற் கெட்டுப்போம் எ—று.

ஏ) *பழைய 2:* 'தோன்றிக் கெடும்' பாடம்.

தனக்குப் பொருள் வரும் அளவறிந்து செலவு செய்து வாழ மாட்டாதவன் வாழ்க்கை, தனக்கு வந்த பொருள் நில்லாமல்,

1. அதற்கு — அப்பொருளின் அளவிற்கு
2. உளபோலத் தோன்றா என்றும் பாடமுண்டு.

செலவினால் இல்லையானது போலத் தன் வாழ்க்கையுந் தோன்றி, இல்லையெனக் கெடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்;

காளிங்கர் உரை 'ஓரளவு பொருள் சேர்த்து வைப்பதற்கு ஓர் எல்லையைக் குறித்து, அந்த அளவு சேர்ப்பதற்கு முயலவேண்டும்' என்பதை வற்புறுத்துவது போன்று உள்ளது. ஏனையோர் உரைகள் வருவாயின் எல்லையை அறிந்து அதற்கு அடங்கியவாறு. இன்றியமையாத செலவுகள் வருமானால் வருவாய்க்குச் சமமாகவாவது செலவழிக்க என்கின்றன. பரிதி., 'தன் செல்வமும் மேல் வருகின்ற உதவியும் அறிந்து' என்பர்.

ஜி. வரத., 'அளவு—செல்வம். தகுதி, நிலை, துணை இவற்றின் அளவு' என்பர். . ஏனையோர். பொருளளவையே கருதுவர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்

ஆனமுதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப் —போனதிசை
எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனா நாடு. —நல்வழி.

48. 10. உளவரை தூக்காத ஒப்புர வாண்மை வளவரை வல்லைக் கெடும் (சுஅ0)

உரைப்பகுதி:

அ) மணக்.: தனக்கு உள்ள அளவை நினையாதே ஒப்புரவு செய்வானது செல்வத்தினளவு விரைவில் கெடும் எ-று.

மேல், முதலுக்குச் செலவு குறைய வேண்டும் என்றார்; அவ்வாறு செய்யின் ஒப்புரவு செய்யுமாறு என்னை? என்றார்க்கு, இது கூறினார்.

ஆ) பரிதி.: தனது பொருள் இவ்வளவு என்று அறிந்து, அதற்குத் தக்கதாக ஒப்புரவு செய்யாதான் செல்வமும் சடுதியிலே கெடும் எ-று.

இ) பரிப்.: தன்அளவை நினையாதே ஒப்புரவு செய்வானது செல்வத்தின் அளவு விரையக் கெடும் எ-று.

மேல் முதலிற் செலவு குறைய வேண்டும் என்றார். அவ்வாறு செய்யின் ஒப்புரவு செய்யுமாறு என்னை என்றார்க்குக் கூறப்பட்டது. ஒப்புரவாண்மை என்று ஒப்புரவிற்கே போக்குவாரும் உளர்.

ஈ) காளி.: ஒருவன் தனக்கு உள்ள எல்லையைச் சீர்தூக்காத உபசார நடையும்[1], அதற்கு மூலமாகிய செல்வத்து எல்லையும் இரண்டும் வளத்தினது பெருமை இன்றி விரையக் கெடும்.

வல்லைக் கெடும் என்பது விரையக் கெடும் என்றது.

உ) பரிமேல்.: தனக்குள்ள அளவு[2] தூக்காமைக் கேதுவாய ஒப்புரவாண்மையால், ஒருவன் செல்வத்தினெல்லை விரையக் கெடும்.

ஒப்புரவே[3]யாயினும் மிகலாகாது[4] என்றமையான், இதுவும் அது. இவை நான்கு பாட்டானும் மூவகையாற்றலுள்[5] பெருமையின் பகுதியாய பொருள் வலியறிதல் சிறப்பு நோக்கி வகுத்துக் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: தனக்குள்ள பொருளையறியாமற் செலவு பண்ணினகீர்த்தியால் அவன் செல்வம் வகையறக் கெடும் எ-று.

ஏ) பழைய 2: தனக்குள்ள அளவு சீர்தூக்கிப் பாராத ஒப்புரவு ஆண்மையால் ஒருவன் செல்வத்தின் எல்லை உடனே கெடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஒப்புரவாண்மை' என்ற பண்பைப் பண்புடையவன் மேலதாக்கி ஒப்புரவு செய்வானது' என்றார் **மணக்குடவர்**.

காளிங்கர், 'ஒப்புரவு — உபகாரநடை, ஒப்புரவாண்மையும் வளவரையும் கெடும் என உம்மைத்தொகையாக்கி உரைப்பர். 'கெடும் என்பதற்கு வளத்தினது பெருமையின்றிக் கெடும்' என்பர். இதில் பெருமையின்றிக் கெடும் என்று மட்டுமிருப்பின் பொருட்சிறப்பு மிகுதியும் ஆம். மீண்டும் வளத்தினது என்றது சிறிது பொருட் குழப்பத்தைத் தருகிறது.

ஆனால், அதிகாரத் தலைப்பிற்கேற்ப 'வளவரை கெடும்; ஒப்புரவாண்மையாற் கெடும்' என்ற **பரிமேலழகர்** உரை சிறந்தது ஆம்

1. உபகார நடையும் ... உதவியும்.
2. அளவு — பொருளளவும் 'தானம்' என்பதும் நினைக்க.
3. ஒப்புரவு — ஒத்தல்' துப்புரவு என்புழிப்போல, உலகநடைக்கு ஒத்ததன்மையை ஆளுந்தன்மை — ஒப்புரவாண்மை.
4. மிகலாகாது — பொருள்ளவிற்கு மிகுதல் கூடாது.
5. மூவகையாற்றல் — பொருள், ஆண்மை, பெருமை என்பன.

உளவரை தூக்காத ஒப்புரவாண்மை அவனது கொடைச்சிறப்பு உயர்த்துமே யன்றிக் கெடுக்காது. ஆகையால் இரண்டும் கெடும் என்ற உரை அத்துணைச் சிறப்பினதன்று. முன்குறளில் அரசியல் நுகையைச் சொன்ன ஆசிரியர் ஈண்டுக் கூறிய ஒப்புரவும் அறப்பாற் பட்ட ஒப்புரவாகாது. அறப்பாற்பட்ட ஒப்புரவு தன்னளவில் உலக நடையை யறிந்து செய்தல் இங்குக்கூறிய ஒப்புரவு. வென்ற படை கட்கும், உயிரிழந்தார் சுற்றத்திற்கும். புள்வாய்ப்பச் சொன்னகணிக் கும், களம்பாடிய புலவனுக்கும் மகிழ்ச்சியைக் கொண்டாடும் மக்களுக்குமாக வழங்கல் இது எல்லைகடந்துபோம் ஆதலின் இதனை அளவறிந்து செய்க என்கிறார். அறப்பாற்பட்ட ஒப்புரவை தன்னை விற் றாவது செய்க என்றார். இவ்வேறுபாடும், அதற்குக் கட்டுப்பாடும் இன்றியமையாதது என்ற நியதியும் அறிந்தின்புறத் தக்கன.

ஓ ஒப்புமைப்பகுதி:

உளவரை தூக்கி ஒப்புரவு செய்க:

உடலளவு விரதம் பொருளளவு தானம். —பழமொழி.

பண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	வினைவலியும்	ஒல்வ	உடைத்தும்	அமைந்தாங்	பீலிபெய்	நுனிக்கொம்பர்	ஆற்றின்	ஆகா	அளவறிந்து	உளவரை
மணக்.	1	3	2	4	6	5	7	9	8	10
பரிதி.	1	10	2	4	5	3	6	8	9	7
பரிப்.	1	3	2	4	6	5	7	9	8	10
காளி.	1	3	2	9	7	6	10	8	4	5
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

48வது அதிகாரம் 'வலியறிதல்' முற்றிற்று.

49. காலமறிதல்

அதிகாரப் பொருள்:

அ) மணக்.: காலமறிதலாவது வினைசெய்தற்காங்காலம் அறிதல். வினைசெய்யுங் காலமும் அறிந்து செய்ய வேண்டுதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: காலம் அறிதலாவது காலங்கள் அறியவேணும் எ–று

இ) பரிப்.: காலமறிதலாவது வினைசெய்தற்கு ஆம் காலம் அறிதல். வலியறிந்தாலும் வினைசெய்யும் காலம் அறிந்து செய்ய வேண்டு தலின் அதன்பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது வலியான் மிகுதியுடையனாய்ப் பகைமேல் சேறலுற்ற அரசன் அச்செயலிற்கேற்ற காலத்தினையறிதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

ஊ) கவிராசர்: அஃதாவது பலத்தினாலே அதிகமான ராசா பகைவர் மேற் செல்லுமிடத்து அதற்கேற்ற காலத்தினையறிதல் எ-ம்.

ஏ) பழைய 2: அஃதாவது தன் வலியறிந்த அரசன் பகைவர் மேற் செல்லுங் காலம் அறிதல்.

மல்லர்: அதாவது அரசன் தனக்கேற்றதுமாய் எதிராளிக்கு ஆகாததுமாய் இருக்கிற காலத்தையறிந்து நடக்ககிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'காலம்' - 'பருவகாலம்' இராம,; 'பருவகாலமும், தமக்குச் சாதகமான காலமும், வரத.; 'காரியம் செய்வதற்கேற்ற காலம்' சாமி.சிதம்; 'போர்மேற் சேறற்கும், போருக்கும் ஏற்ற காலத்தை அறிந்து கொள்ளுதல்' தேவநேயர்; 'யாதொன்றையும் செய்தற்கு முன், அதற்கு ஏற்ற காலத்தை அறிந்து கொள்ளுதல்' கா.சு.

காலமறிதலுக்கு விளக்கந்தரும் முறையில் அனைவரும் ஒத்த கருத்தினராகத் தோன்றுவராயினும், தேவநேயர் உரை சிறிது

விளக்கமானது, காலநூற்கருத்துக் கொண்டு நன்றாங் காலமும், தீதாங் காலமும் அறிதல் என்பதும் அறியப்பெறும். இவைகளனைத் தினும் பருவகாலம் அறிதல் என்பது சிறந்தது. கடுங்கோடையும் மழையும் மிகுபனியும் போர்மேற் சேறற்கு விலக்கப்பட்ட காலங்களாம் என்பதை அடுத்துவரும் பரிமேலழகர் விளக்கத்தான் அறியலாம்.

49·I. பகல்வெல்லும் கூகையைக் காக்கை
இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. (சஅக)

உரைப்பகுதி:

அ) மணக்.: இராப்பொழுது வெல்லும் கூகையை[1]க் காக்கை பகற் பொழுது வெல்லும்; ஆதலான், மாறுபாட்டை வெல்லும் அரசர்க்குக் காலம் வேண்டும் எ-று.

இது காலம் அறிதல் வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: பகற்காலம் கூகையைக் காக்கை வெல்லும். இராக் காலம் காக்கையைக் கூகைவெல்லும். அத்தன்மைபோலக் காலமறிதல் செய்யில் வெல்லலாம் எ-று.

இ) பரிப் : இராட்பொழுது வெல்லும் கூகையைக் காக்கை பகற் பொழுது வெல்லும். ஆதலான் மாறுபாட்டை வெல்லும் அரசற்குக் காலம் வேண்டும் எ-று.

ஈ) காளி.: கூகையாகிய புள்ளினை எறியுமிடத்துத் தனக்குவாய்த்த காலமாகிய பகற்பொழுதின்கண் சென்று அடர்த்து வெல்லும் காக்கை யானது. மற்று அங்ஙனமே வெல்லும் காக்கையை எறியுமிடத்துத் தனக்கு வாய்த்த காலமாகிய இருட்பொழுதின்கண் சென்று அடர்த்து வெல்லும் கூகையானது. இனி இவைபோலத் தம்மில் தாம் மாறு பட்டுப் பொரும் மன்னவர்க்கும் தமக்குச் செயமாகிய வாய்ப்புடைக் காலம் அறிந்து அடர்த்தலே இயல்பு எ-று.

அரசர்தாம் செய்வினைக்கு அடுத்த காலம் அறிந்தாலும் வினை இயற்றும் இடத்து இதுவும் இயைய வேண்டுதலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

---

1. கூகை—கோட்டான் 'மரம்பயில் கூகையைக் கோட்டாள் என்றலும்' என்ற தொல் காப்பிய மரபியற் சூத்திரம் கூகையும் கோட்டானும் ஒன்றென்கிறது.

உ) *பரிமேல்.:* தன்னின் வலிதாய கூகையைக் காக்கை பகற்பொழு தின்கண் வெல்லா நிற்கும்[2], அதுபோல[3], பகைவரது இகலை[4] வெல்லக் கருதும் அரசர்க்கு அதற்கு ஏற்ற காலம் இன்றியமையாதது.

எடுத்துக்காட்டுவமை[5]. காலமல்லாவழி வலியால் பயனில்லை என்பது விளக்கி நின்றது. இனிக் காலமாவது[6] வெம்மையும் குளிர்ச்சி யும் தம்முள் ஒத்து, நோய் செய்யாது தண்ணீரும் உணவும் முதலிய உடைத்தாய்த் தானை வருந்தாது செல்லும் இயல்பினதாம். இதனால் காலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்:* தன்னிலும் அதிக பலத்தையுடைய கோட்டானைக் காக்கை பகலிலே வெல்லும்; ஆனபடியினாலே, பகைவரை வெல்ல நினைக்கிறவர்களுக்கு, அதற்கான காலம் வந்தாலொழிய வெல்லப் போகாது எ-று.

எ) *பழைய 2:* தன்னின் வலிய கோட்டானைக் காக்கை பகற்காலத் தில் வெல்லுமாதலால், பகைவரை வெல்லும் வேந்தருக்குங் காலங் கருத வேண்டும்.

மல்லர்.: எ-து காக்கை பகல்நேரத்திலே கூகையை வெல்லும். கூகை இருள்நேரத்திலே காக்கையை வெல்லுமாகையால் அரசன் பகைவரை வெல்லவேணுமானால் தனக்கேற்ற காலம் அறிய வேண்டியது எ-று.

பகைவரை வெல்லவேணுமானால் தன்னுடைய பலம் அவர் களுடைய பலத்தை மிஞ்சுகிற காலத்திலே அவர்கள் மேல் செல்ல வேண்டியது என்பது கருத்து.

இகல் - பகை; வேந்தன் - ராசா.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., பரிதி., காளி., உரைகள் 'காகமும், கூகையும் ஒத்த வலியுடையன; அவைகட்கு வெற்றியும் தோல்வியும் காலத்தாற்றான்

---

2. கூகைக்குப் பகலில் கண் தெரியாது; காக்கைக்கு இரவில் கண் தெரியாது: ஆதலால் காக்கை கூகையைப் பகல் வெல்லும் என்றதாம்.
3. ஆதலால் என்றும் பாடம்
4. இகல்- இருவர் தம்முள் போர் செய்து, ஆற்றலழிவதற்குக் காரணமான மாறுபாடு
5. எடுத்துக்காட்டுவமை— உவமையை ஒரு தொடராகவும் பொருளை (உவமேயத்தை) ஒரு தொடராகவும் தனித்தனியே கூறி உவமையுருபு தொக நிற்பது
6. தட்பவெட்பநிலை சமமாம் காலம் என்பர் பரிமேலழகர் வடமொழி நூல்களில் மனு மார்கழித் திங்களிற் போகவேண்டும். இல்லையானால் வெற்றியுறுதி என்று தோன்றில் எல்லாத் திங்களிலும் ஏகலாம்; பங்குனி சித்திரை மாதங்களிற் போகலாம் என்றும்கூறுவர்.

விளைகின்றன' என்பதையுணர்த்திக் காலமறிதலின் இன்றியமை யாமையை உணர்த்துகிறது.

பரிமேலழகர், கவிராசர், பழைய 2, கா.சு, சாமி. சிதம்., சி.இ., 'கூகை வலிதாயினும் என', 'கூகை வலியது; காகம் வலியற்றது. 'பகற்காலம் துணை செய்ய வலியற்ற காகம், வலியுள்ள கூகையை வெல்லுகிறது' என வலியற்றார்க்கும் காலம் துணையாம் என்பதைக் கூறுகின்றன.

தேவநேயர், 'கூகை காகத்தின் வலிது தான்; ஆனாலும் பகலிற் கண் தெரியாது; அதனால் காகம் கூகையை வெல்லும்' என்பர். இவ் வுரையில் காலத்திற்குள்ள இன்றியமையாமையில், கூகையின் குருட்டுத்தன்மையும் காரணமாகப் பங்கு கொள்கிறது. ஆதலால் காலத்திற்கே இன்றியமையாமை தரும் உரை சிறந்தது.

ஜி. வரத., 'காகம் கூகை ஒரேயளவு வலிமையுள்ள ஓரினப்பறவை. ஆனால் கூகைக்குப் பகலிலும் காகத்திற்கு இரவிலும் கண் தெரியாது. அதனாற் கொன்றுவிடும்' என்பர். இவ்வுரை இருபறவைக்கும் உள்ள உறுப்புக்குறை அவைகளின் வெற்றிதோல்விகட்குக் காரணமா கின்றன எனல் பெறப்பட்டுக் காலம் அறிதலின் தேவை குறைகிறது. கண்தெரியாமை அவற்றின் இயற்கையாயினும் அவற்றைக் காட்டாது ஒழுகார் உவமையாகப் பகலிற் கொல்லும் இரவிற் கொல்லும், காலந் தான் காரணம் என்ற உரைகள் சிறந்தன. அன்றியும் அவைகட்குக் கண் தெரியாமைக்கும் காரணம், காலமேயாதல் தெளிக.

பஞ்சதந்திரக்கதையுள், மேகவண்ணன் என்னும் காக்கை தம் மினத்திற்கே கேடு சூழ்ந்த அரிமர்த்தனன் என்னுங் கோட்டானை, அது வாழ்ந்த பொந்தினருகே பகல்முழுதும் தன்னினத்தோடு சுள்ளி களைக் குவித்து சூரியன் சாய்வதற்குமுன் தீயிட்டுக் கொளுத்தி அழித்த வரலாறு காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

பகல் வெல்லும் கூகையைக் காக்கை:

தடத்திடைக் காக்கை ஒன்றே ஆயிரம் கோடி கூகை
இடத்திடை அழுங்கச் சென்றாங் கின்னுயிர் செகுத்த தன்றே.

சீவக., 1627.

இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது:

காதுகொற்ற நினைக்கலாது பிறர்க்கெவ்வாறு கலக்குமோ

போது பிற்படல் உண்டி தேர்பொருள் அன்று நின்று புணர்த்தியேல்
யாதுனக்கிய லாததெந்தை வருந்தல் என்ன இயம்பினான்.

கம்பராமா., 7072.,

சீலமல்லன நீக்கிச்செம் பொற்றுலைத்
தாலமன்ன தனிநிலை தாங்கிய
ஞாலமன்னற்கு நல்லவர் நோக்கிய
காலமல்லது கண்ணு முண்டாகுமே. கம்பராமா.,

'சுபமான மார்கழி மாதத்தில் அரசன் சண்டைக்குப் போக வேண்டும்; தனக்குப் பலக்குறைவில்லா திருந்து பலகாலத்திலேயே சத்துருவின் தேசத்தையெதிர்க்க வேண்டும் என்று மனமிருந்தால் பங்குனி சித்திரை மாதங்களிலும் போகலாம்'.

'மற்ற மாதங்களிலும் தனக்கு நிச்சயமாக வெற்றியுண்டாகுமென்றும் தன் சத்துரு சதுரங்க பலமில்லாமல் துன்பப்படுகிறான் என்றும், தோன்றினால் போகலாம்'.

மனு.அதி.,7.

ஓ) மேற்கோள்பகுதி

நச்.: 'இடத்தொடு பொழுதுநாடி எவ்வினைக்கண்ணும் அஞ்சார்' வீரத்தையே கருதாமல் காலமும் இடமும் அறிந்து செய்க என்றான்; 'பகல்வெல்லும் கூகையைக் காக்கை' ..... தேவரும் கூறினார்.

சீவக., 1927

49.2. பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு (சஅஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: காலத்தோடு பொருந்த ஒழுகுதல், செல்வத்தை நீங்காமல் கட்டுவதொரு கயிறாம் எ-று.

இனிக் காலம் அறிந்ததனால் வரும் பயன் கூறுவார் முற்படச் செல்வம் கெடாது என்றார்.

ஆ) பரிதி.: தாயம்[1] வருமட்டும் பார்த்திருந்துகாலமறிந்து காரியம் கொள்வானாகில், அது[2] திருமாது தன்னைவிட்டு நீங்காமல் கட்டின கயிறு எ-று.

இ) பரிப்.: காலத்தொடு பொருந்த ஒழுகுதல் செல்வத்தை நீங்காமல் கட்டுவது ஒரு கயிறு ஆம் எ-று.

. தாயம் — உரிமை.
1 அது— அங்ஙனம் காலமறிந்து தொழிற்படுதல்

இனிக்காலம் அறிந்ததனால் பயன் கூறுவார் முற்படச் செல்வம் கெடாது என்றார்.

ஈ) காளி.: மற்று இவ்வாறு தாம் தொடங்கும் கருமத்திற்கு ஏற்கும் காலத்தொடு இயைய ஒழுகவே, அது தமது செல்வத்தை நீங்காமல் பிணிக்கும் கயிறு ஆம் எ-று.

ஒட்ட என்பது இயைய. தீராமை என்பது ஒழியாமை. ஆர்க்கும் என்பது பிணிக்கும்.

உ) பரிமேல்.: அரசன் காலத்தோடு பொருந்த வினை செய்து ஒழுகுதல், ஒருவர் கண்ணும் நில்லாது நீங்கும் செல்வத்தைத் தன்கண் நீங்காமல் பிணிக்கும் கயிறாம்.

காலத்தோடு பொருந்துதல் – காலந் தப்பாமல் செய்தல். தீராமை என்றதனால், தீர்தல்மாலையது[3] என்பது பெற்றாம் வினை வாய்த்து வருதலான், அதனினா[4]கும் செல்வம் எஞ்ஞான்றும் நீங்காது என்பதாம்.

ஊ) கவிராசர்: அரசன் காலத்தோடு பொருந்தக் காரியஞ் செய்கிறது. ஒருவரிடத்திலும் நில்லாத செல்வத்தைத் தன்னை விட்டு நீங்காமற் கட்டுங் கயிறாம் எ-று.

ஏ) பழைய 2: அரசன் பகைவரை வெல்லும் கருத்தொடு பொருந்தி ஒழுகுதல், ஒருவரிடத்தும் நில்லாத செல்வத்தைத் தன்னை விட்டு நீங்காமற் கட்டும் கயிறாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்

'பருவம்', பழைய ஆசிரியர்கள் அனைவரும் 'காலம்' எனப் பொதுமையிற் கூறித் 'தனக்குத் தளர்ச்சியற்ற காலம்', 'மாற்றானுக்குத் தளர்ச்சியாங்காலம்' முதலிய அனைத்தையும் கருதச்செய்வர். இராம. 'பருவகாலத்தை மட்டும் கருதுகிறார் என்பதை 'பருவகாலத்தை யறிதல் யுத்தத்திற்கு மட்டுமல்ல என்றும் அவர் குறிப்புக் காட்டுகிறது. கட்டியங்காரன், சச்சந்தன் மீது படையெடுத்தது அவன் காமபரவசனாயிருந்த காலமாதலின் அது இவர் கூறும் பருவகாலம் அன்மை தெளிக. ஆகவே போர்த்துணிபும் மாற்றானுடைய அரசு-ஒழுக்கம்-நட்பு முதலிய சூழ்நிலை கெட்டிருக்கிற பருவமும், மேற்செல்லும் போதும்,, பொரும்போதும்பருவகாலச் சூழ்நிலையும் வேண்டப்படும்.

---

3. தீர்தல் மாலையது — நீங்குந் தன்மையது.
4. அதனின் — அங்ஙனம் செய்தொழில் வெற்றிதரும் வகையில் கை கூடிவருதலால்;

ஆதலால் பருவம்–காலம் எனப் பொதுமையிற் கூறலே ஏற்புடைத்து.

வரத., 'பருவ காலத்துக்குத் தக்கவாறு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதல்' என உரை எழுதி 'இளமை முதுமைகளில் செயல்கள் வேறுபடுவதால் அதற்கேற்ப அமைத்துக் கோடல்' என விளக்கந் தருவர். மேலும் 'இளமையில் அறிவைப் பெறுதல் பால்யத்தில் பொருளீட்டல் இன்பந்துய்த்தல், முதுமையில் துறவுளங்கொளல் முதலாயின' எனவும் கூறுவர். பொருட்பாற்பகுதி சமுதாய வாழ்வுக்குரிய அறங்களை வகுப்பதாகலின் தனிமனிதனுடைய பருவவேறுபாட்டு முறைகளைப் பற்றி அவன் நடந்து கொள்வது அறப்பாற்படும். அன்றியும் சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் நேரே பயனளிப்பது ஆகாது. ஆதலால் இவ்வுரை ஆய்வுக்குரியது. ஏனைய வலிகள் சிறந்தனவாயின் இளம் பருவத்தினனும் அரசுகட்டில் ஏறி நீதி வழங்கியதைப் பழமொழி நானூறு பாடல் காட்டுகிறது. அவனே இளம் பருவத்திலேயே போர் வென்ற செய்தியை முற்காலச் சோழர் வரலாற்றால் அறிகிறோம். ஆகவே மனிதனைச் சார்ந்து வளரும் குழந்தை இளமை, காளை முதலிய பருவ வேறுபாடுகள் வினைமேற்சேரற்கு இடையீடாகா என்பது.

ஒ) ஒப்புமைப்பகுதி

பருவத்தோடு ஒட்ட ஒழுகல்:

பருவத்தே பயிர்செய்.	ஆத்திசூடி- 22
அடிக்கும் காற்றிலேயே எடுத்துத்தூற்றவேண்டும்.	பழமொழி
பருவத்தோ டொத்துவாழ்.	-பழமொழி
நாள்செய்வன நல்லவர் செய்வார்.	-பழமொழி

திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு:

நலவினைத் தீராமை யார்க்கும் கயிறு —திரி., 23.

49.3. அருவினை என்ப உளவோ கருவியான் காலம் அறிந்து செயின். (சஅசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: அரிய வினை என்று சொல்லப்படுவன உளவோ? முடிக்கலாங் கருவியோடே கூடக் காலத்தை அறிந்து செய்ய வல்லவராயின்எ—று

ஆ) பரிதி.: வெல்லுதற்கரிய வினை என்பது இல்லையே; கால மறிந்து கரியம் செய்வானாகில் எ—று

இ) *பரிப்.*: அருவினை என்று சொல்லப்படுவனவும் உளவோ? முடிக்கலாம் கருவியோடே கூடக் காலத்தை அறிந்து செய்ய வல்லவராயின் எ—று.

இது முடியாத வினையில்லை என்றது.

ஈ) *காளி.*: வேந்தர்க்குச் செய்தற்கு அரிய கருமங்கள் என்பனவும் சில உளவோ? இல்லை. மற்று எப்பொழுது எனின்; தாம் தொடங்குவதோர் கருமம் கடைபோவதற்கு ஏற்கும் உபாயத்துடனே அடுத்த காலத்தைக் குறிக்கொண்டு செய்வாராயின் எ—று.

கருவி என்பது உபாயம்; சாதுரங்கம்[1] என்றுமாம்.

உ) *பரிமேல்.*: அரசரால் செய்தற்கரிய வினைகள் என்று சொல்லப்படுவன உளவோ, அவற்றை[2] முடித்தற்கு ஏற்ற கருவிகளுடனே செய்தற்காங்காலம் அறிந்து செய்வராயின்.

கருவிகளாவன மூவகையாற்றலும்[3] நால்வகை உபாயங்களுமாம்[4]. அவை உளவாய வழியும் காலம் வேண்டும் என்பது அறிவித்தற்குக்கருவியான்[5] என்றார். எல்லாவினையும் எளிதின் முடியும் என்பதாம்.

ஊ) *கவிராசர்.*: ராசாக்களாலே செய்கிறதற்கு அரிதான காரிய முண்டோ? அந்தக் காரியங்களைச் செய்து முடிக்கிறதற்கான ஆயுதங்களுடனே அதற்கேற்ற காலமறிந்து செய்தால் எ—று.

ஏ) *பழைய.*: 2 அரசராற் செய்தற்கரிய வினைகள் என்று சொல்லப்படுவன உளவோ? அவற்றை முடிக்குங் கருவிகளுடனே செய்தற்காம் காலமறிந்து செய்வாராயின்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவோடு 'கருவியுங்காலமும் செய்கையும் செய்யும் அருவினையும் மாண்டது அமைச்சு' (அமைச்சு 1) என்பதனையும் இணைத்து எண்ணுக.

அரசுக்கு விதித்த இக்குறளில் 'செய்கை' என்பதில்லை. அருவினையென்ப உளவோ? என வினவுவதன் வாயிலாக அருவினையை உடம்பொடு புணர்த்திக் கூறப்பெற்றுள்ளது. ஆதலால்

1. சாதுரங்கம்—தேர் யானை குதிரை காலாள் என்ற நால்வகைப்படை.
2. அவற்றை — செய்தற்கரிய வினைகளை.
3. மூவகையாற்றல் — அறிவு ஆண்மை பெருமை என்பன.
4. நால்வகை உபாயம் — தான சாம பேத தண்டம் என்பன.
5. 'கருவியாற் காலமறிந்து செயின்' எனவும் பாடம்.

இருகுறள்களும் கருத்தொத்தனவே; அரசற்கு விதிப்பன யாவும் அரசன் செய்கையாகிற வினைவலி முதலியவற்றை அறிந்து, வினை மேற்கொள்க என விதிப்பன. அமைச்சர்க்கு 'மாண்டது அமைச்சு' அவற்றுட் சிறந்திருத்தல் வேண்டும்; அரசன் செயலாற்றும்போது துணையாதல் வேண்டும் என்ற அளவே விதிப்பன. இவ்வேறுபாடுகள் உணரத்தக்கன. கருவி —காலங்களைப் பற்றி அரசுக்கும் அமைச்சுக்கு மாக உரை கூறுவன.

'கருவி' —'அரசுக்கு—முடிக்கலாம் கருவி' மணக்.; கருமங்கடை போக ஏற்கும் உபாயம்' காளி.; 'மூவகை ஆற்றலும், நால்வகை உபாயமும்' பரிமேல்., 'செய்து முடித்தற்குரிய ஆயுதங்கள்' கவிராசர்.

அமைச்சுக்கு—' யானை குதிரை முதலிய படை' மணக்.; 'ஆயுத முதலானது' பரிதி.; 'மேற்கொண்ட வினைக்கு ஏற்ற கருவி கள்' காளி.; 'தானையும் பொருளும் முதலியன' பரிமேல்.

'காலம்' — அமைச்சு— 'நீரும் நிழலும் முதலாயின உள்ள காலம்' மணக்.; 'காலநீதி' பரிதி.; 'ஏற்ற காலம்' காளி.,

அரசுக்கு 'எடுத்த வினையை முடித்தற்குரிய காலம்' மணக்., பரிமேல். இங்ஙனம் அரசுக்கு விதிக்கப்பட்ட ஆறு அங்கங்களும்; அமைச்சுக்கு விதிக்கப்பட்ட ஐந்து அங்கங்களும் பெரும்பாலன ஒத்தனவாயினும் இரண்டற்குமுள்ள வேறுபாட்டினை உரைகளால் அறியலாம். ஆயினும் அரசன் அங்கங்களை நேரே தொழிற்படுத்த லாம். அமைச்சர் முதலாயினார் அவன் ஆணை வழிநின்று துணை யாதற்குரியவர் என வேறுபாடு காணலாம்.

1 இக்குறட்குரை எழுதிய தொல்லோர் 'என்ப உளவோ' என்ப தில் உள்ள ஓகாரம் எதிர்மறையாற் போந்த 'இல்லை' என்பதை யுணர்த்துகிறது என்பாரும்,... ... ... அறிந்து செயின் அருவினை என்பது உளவோ? என ஒரு தொடராக முடிப்பாருமாக இருதிறப்படி னும் கருத்து வகையிற் சிறிதும் மாற்றம் இலர்.

இராம.; 'காலம் கருவியான் அறிந்து செயின்' எனக்கூட்டிக் காரியத்தைக் காலம் என்னும் கருவியான் செயின் எனக் கருவிகளுள் காலம் என்பதும் ஒன்று' என்பர்.

மற்றும் 'கருவியான் என்பதைக்' கருவியோடு அல்லது கருவியுடன் எனப்பொருள் எழுதி ஆன் உருபை உடனிகழ்ச்சிப் பொருளதாக்குவர். இவர், (இராம.) 'கருவியான்' எனக் கருவிப்

பொருளதாகக் கூறிக் 'காலமும் ஓர் 'கருவியானதால்' என்றனர். இவரே அமைச்சதிகாரத்தில் 'கருவியும் காலமும்' என்பதனை இரண்டாகக் கருதுவர், இவையிரண்டன் ஒற்றுமை வேற்றுமைகளைத் தெரிக. அன்றியும் வள்ளுவர் ஆட்சி' பொருள் கருவி காலம்' எனத் தனித்தனியே எண்ணுதலையும் சிந்திக்க. அன்றியும், கருவியால் — கருவியானதால் எனல் வலிதிற் கொள்ளும் பொருள்.

தேவநேயர், 'ஐவகை ஆற்றல் வினைவலி, தன்வலி, மாற்றான் வலி, துணைவலிகளுடன் பொருள் வலியும் சேர்த்துப் போலும் நால்' வகை ஆம்புடைகள் (உபாயங்கள்) சாம-தான-பேத-தண்டம் என்பன என்பர். குழந்தை, 'வினை செய்யும் முறைகள்' என்பர் கா சு., தக்க உபாயம் என்பர். 'துணை இடம் பொருள்' என்பர் வரத இவருள் முறை எனப் பொருள் கூறுவார் தவிரக் கருவி ஏழு, ஒன்பது' மூன்று எனத்தொகையானும் விரியானும் வேறுபடுகின்றனர்.

மு.கோ 'காலம் அறியுங் கருவி' நாழிகை வட்டில், கன்னல் முதலிய கருவிகளால் அறிந்து' என்பர். இது இந்த வானநூல்காலத் திற்கு ஏற்ற உரைதான். 'அருவினை' இங்கு அருவினை என்ப தற்குச் 'செய்தற்கு அரிய வினை' என்றவர் அமைச்சியலில் சிறு முயற்சியால் பெரும் பயனைத் தரும் வினை என்றது காண்க

ஒ) ஒப்புமைப்பகுதி:

காலம் அறிந்து செயின்:

காலமறியாதோன் கையுறல் பொய்ய — முதுமொழி— 7:4

ஆற்றல் முன்றும் உபாயங்கள் நான்கும் இடத்தோ டமைந்திடினும்
போற்றி நினக்கு வென்றியுறும் பொழுது தேர்ந்தே வினைபுரிக

விநா அரசி ,97.

கருவியும் காலமும் அறிவில் அரிதென் — மனுநான் 1:5 .16

ஞால மன்னற்கு நல்லவர் நோக்கிய
கால மல்லது கண்ணுமுண் டாகுமோ. — கம்பராமா .,1514.

49.4. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தான் செயின். (சஅக)

உரைப்பகுதி:

அ) மணக்.: உலகமெல்லாம் 'பெறுதற்கு நினைத்தானாயினும் பெறலாம்; காலத்தைக் குறித்து இடனறிந்து செய்வனாயின் எ-று.

இஃது எல்லாப் பொருளும் எய்தும் என்றது.

ஆ) பரிதி.: பூலோகமெல்லாம் ஆளவேணும் என்றாலும் கைகூடும் காலமும் இடமும் அறிந்து செய்வானாகில் எ—று.

இ) பரிப்.: உலகம் எல்லாம் பெறுதற்கு நினைந்தானாயினும் பெறலாம். காலத்தைக் குறித்து இடன் அறிந்து செய்வனாயின் எ—று.

இஃது எல்லாப் பொருளும் எய்தும் என்றது. இனி இடன் அறிதல் கூறுகின்றார். ஆதலின் இனி அது பின் கூறப்பட்டது.

ஈ) காளி.: வேந்தரானோர் சில நாள் ஆண்டிருத்தலே அன்றி, இவ்வுலகம் முழுவதும் ஒருவர் தாமே ஆளக் கருதினும், கைகூடும்; எங்ஙனமோ எனின், தான் செய்யும் காரியத்துக்கு ஏற்ற பருவத்தைக் குறிக்கொண்டிருந்து மற்று அது வந்து எய்தியபொழுது பழுதுபடாமல் பருவத்தின்கண்ணே வினை செய்யின் எ-று.

உ) பரிமேல்.: ஒருவன் ஞால முழுதும் தானே ஆளக் கருதினானாயினும் அஃது[1] அவன் கையகத்ததாம்[2], அதற்குச் செய்யும் வினையைக் காலம் அறிந்து இடத்தோடு பொருந்தச் செய்வானாயின்.

இடத்தான் என்பதற்கு மேல் கருவியான் என்பதற்கு உரைத்தாங்கு உரைக்க[3] கைகூடாதனவும் கைகூடும் என்பதாம். இவை மூன்றுபாட்டானும் காலம் அறிதற்பயன் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்.: ஒருவன் பூமியெல்லாந் தானே யாளக் கருதினானாகிலும் அப்படியே வந்து கைகூடும். அதற்குச் செய்யவேண்டிய காரியத்தைக் காலமறிந்து செய்தால் எ-று.

ஏ) பழைய. 2 : ஒருவன் ஞாலமெல்லாம் தான் ஆளக் கருதினும் அவனுக்குக் கைகூடும். அதற்குச் செய்யுங்காலம் அறிந்து இடத்தொடு பொருந்தச் செய்வானாயின்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

ஆசிரியர் 'கருதுதலைக்' காலத்திற்கும், 'செய்தலை' இடத்திற்கும் இயைத்திருக்கப் **பரிதியார்** 'காலமும் இடமும் அறிந்து' என

1. அஃது — அவ்வுலக முழுதும்.
2. கையகத்தது—அவன் கையிலுள்ளதாம். இஃது ஒரு வழக்குத்தொடர்.
3. 'அருவினையும்' என்ற குறளில் மூவகையாற்றலும் நால்வகையுபாயங்களும் உண்டான போதும், காலம் வேண்டும் என உரைத்தாற் போல ஈண்டும் இடனறிந்தாலும் காலமும் வேண்டும் என்பது.

இயைத்து ஒன்றாக்குவர். **காளிங்கர்** உரையில் 'சிலநாள் ஆண்டிருத் தலேயன்றி' என்பதற்கேற்ப உலக முழுவதையும் பல ஆண்டு ஆளக் கருதினும் என்ற பொருளில் எழுதியிருப்பர் போலும் அதற்கு இயைந்த சொல்லமைதி உரையில் இல்லை. அல்லது சில பகுதிகளை என்றிருப்பின் உலகம் முழுதும் என்பதற்கு இயைபுடையதாகும். இதில் ஏதோ படிப்போர் பிழை பதிப்பிப்போரையும் ஏமாற்றியுள்ளது எனத் தோன்றுகிறது. **பரிமேலழகர்** உரை மிகச் செம்மையானது. **இராம.**, 'இடத்தான்—வாய்ப்பறிந்து 'காலங்கருதி — காலத்திற்குக் காத்திருந்து, இடத்தான்-வாய்ப்பு வந்ததையறிந்து' எனபது அவர் உரை. இடம் என்பதும் காலம் என்ற கருத்தில் வருதலின் சிந்திக்கத் தக்கதாம். இவ்வுரைப்போக்கு காலம் கருதுதலும் வாய்ப்பறிதலும் ஒன்றுபோல அறிவிக்கிறது.

ஜி.வரத., 'காலம்-நல்ல காலம்; இடம்-சந்தர்ப்பம்' என்பர். **மு.கோ.**, 'ஞாலம் கருதினும்-உலகமே போரை எண்ணி எதிர்த்து வந்தாலும்' என்பர். காலங்களை இணைத்து நோக்கின் **மணக்குடவர்** முதலானோரும் பின்னாசிரியர்களும் **இலக்குவனாரை** ஒத்தவர்களும், இடம்—வாய்ப்பான இடம் என்றே கருதுகின்றனர் எனலாம் **இராம.** 'வாய்ப்பு எனக் கருதுவர் அன்றியும் இடம் என்ற பொருளை மறுப்பர். இடனறிதல் பின்னே வரினும் 'அதற்குத் தோற்றுவாய் இது' என்னும் **பரிப்பெருமாள்** கருத்தும் இடம் என்பதனையே வலியுறுத்துகிறது. **தேவநேயரும்** 'வினை பெரிதாகலின் இடமும் வேண்டியதாயிற்று' என்பதும் இடம் என்பதற்கு அரண் செய்யும்

ஒ) ஒப்புமைப்பகுதி:

காலம் கருதி இடத்தாற் செயின்:

இடத்தொடு பொழுது நாடி எவ்வினைக் கண்ணும் அருசார்
மடம்பட லின்றிச் சூழும் மதிவல்லார்க் கரிய துண்டோ. சீவக 1927

இடனிது காலமீ தென்ன வெண்ணுவான். கம்பரா., 6548

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா — தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா -வாகை 5

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் வரவேணும் —பழமொழி

ஓ) மேற்கோள்பகுதி:

சிவஞான.: கைகூடும் என்பதை விளக்க வந்தவர் 'கை என்ற தூஉம் அவ்வாறு இடைச்சொல்லாய்க் கூடுதலாய்ச் சிறப்பித்து, எளிதில் கூடும் என்னும் பொருள்பட நின்றது எனக் கூறி, 'ஞாலங் கருதினும் கைகூடும்' என்பதை மேற்கோள் காட்டுவர்.
கம்ப. விருத்., பக். 11.

49.5. காலம் கருதி இருப்பர் கலங்காது ஞாலம் கருது பவர் (சஅநு)

உரைப்பகுதி:

அ) மணக்.: வினை செய்யுங்காலம் வருமளவும் நினைத்து அசை வின்றி இருப்பார்; ஞாலத்தைக் கொள்ளக் கருதுபவர் எ-று.

ஆ) பரிதி: காலங்களை அறிந்து இருப்பானாகில் அவன் கலங்காமல் ஞாலமும் ஆளப்பெறுபவன் எ-று.

இ) பரிப்.: வினைசெய்யும் காலம்வரும் அளவும் நினைத்து அசைவு இன்றி இருப்பர், ஞாலத்தைக் கொள்ளக் கருதுபவர் எ-று.

இது காலம் வரவு பார்த்து இருக்குங்கால் பின்பு செய்யும் வினை புலப்படாமல் இருக்க வேண்டும் என்றது.

ஈ) காளி.: தாம் செய்யக் கருதிய கருமத்திற்கு அடுத்தகாலம் அப் பொழுது இல்லெனில் மற்று அது வரும்வழி அதனைக் குறிக்கொண்டு அமைந்திருப்பார்; யாரோ எனின், வையம் தமது கையகத்தாய[1] நெறி தளராமல் ஆளக்கருதும் அரசர் எ-று.

உ) பரிமேல்.: தப்பாது ஞாலமெல்லாம் கொள்ளக் கருதும் அரசர், தம்வலி மிகுமாயினும் அது கருதாது[2], அதற்கு[3] ஏற்ற காலத்தையே கருதி அது வருந்துணையும் பகைமேல் செல்லார்.

தப்பாமை—கருதியவழியே கொள்ளுதல். வலிமிகுதி. காலங்கருதி என்றதனால் பெற்றாம். அது[4] கருதாது செல்லின் இருவகைப் பெரு

---

1. கையகத்தாய—உள்ளங்கையில் உள்ளதாகிய; 2. அதுகருதாது—தம் வலிமிகுதலைக் கருதாது.
3. அதற்கு—உலகத்தைக் கைக்கொள்ளுதற்கு; 4. அதுகருதாது-அங்ஙனம் காலத்தைக் கருதாமல்

மையும் தேய்ந்து வருத்தமும் உறுவராகலின், இருப்பர் என்றார். இருத்தலாவது[5] நட்பாக்கல் பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டல் என்னும் அறுவகைக் குணங்களுள் மேற்செலவிற்கு மாறாயது. இதனால் காலம் வாராவழிச் செய்வது கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: தப்பாமற் பூமியெல்லாம் தாம் கைக்கொள்ள நினைக் கிறவர்கள். தங்கள் பலம் அதிகமானாலும் அதை எண்ணாமல், அதற் கேற்ற காலம் பார்த்துக்கொண்டிருந்து, அந்தக்காலம் வருமளவும் பகைவர் மேலே தண்டுஎடார்கள்[6] எ—று.

ஏ) பழைய 2: தப்பாது ஞாலமெல்லாம் கொள்ளக் கருதும் அரசர் தம் வலிமிகுமாயினும் கருதாது, அதற்கேற்ற காலத்தைக் கருதி அக் காலம் வருமளவும் பகைமேற் செல்லார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., 'அசைவின்றிஇருப்பர்' என்ற உரைக்குப் பரிப் பெருமாள் பின்பு செய்யும் வினை புலப்படாமல் இருக்கவேண்டும்' என்பர். இது சிறந்த விளக்கம். காளிங்கர், 'அமைதியாக இருப்பர்' என்பர். 'பகை மேற்செல்லார்' என்பர் பரிமேலழகர். சி.இ., முயற்சித் துன்பங்களாலும் இடையூறுகளாலும் உள்ளங்கலங் காது இருப்பர்' என்பர். இவ்வுரைகளுள் 'அமைதியாக இருப்பர்' என்றால் வீரங்குன்றிச் செயலற்றிருப்பர்' என்றும் 'துன்பங்கள் நலிந்தும் பொறுத்திருப்பர்' என்றும் கருதப்பட்டு அங்ஙனமிருக்கும் வேந்தற்குப் பழிப்பையுண்டாக்கும். பரிப்பெருமாள் தரும் விளக்கம் காலத்தை வீண்படுத்தாமல் வரும் போர்க்கு என்னென்ன செய்யலாம் என்று திட்டம் இட்டும் அத்திட்டத்தை எவருக்கும் புலப்படுத்தாமல் இருப்பர் என்ற அரசியல் தந்திரத்தை அறிவிப்பதாதலின் மிகச் சிறந்ததெனலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

காலம் கருதி இருப்பர்:

காலம் ஈதெனக் கருதிய இராவணன். கம்பராமா., 8736

---

5. இருத்தல்-பகைவர் மேற்செல்லாது இருத்தல்- இவர் கூறும் நட்பாக்கல் முதலிய ஆறும் மாற்றான் மேற்செல்லும் மன்னன் சிந்திக்க வேண்டுவன. இவ்வாறானும் மேற்-சேறல்- இருத்தல் இரண்டும் தம்முள் மாறாயின ஆதலால் காலம் வருந் துணையும் மேற்செல்லாது இருத்தலே இருத்தலாம் என்பதை விளக்கியவாறாம்.
6. தண்டெடுத்தல்-படையெடுத்தல்.

முற்றும்:

இடத்தோடு பொழுதும் நாடி எவ்வினைக்கண்ணும் அஞ்சார்
மடம்பட லின்றிச் சூழும மதிவலலார்க் கரிய துண்டோ. சீவக.,1927,

கருத்துற நோக்கிப் போந்த காலமும் நன்று காதல்
அருத்தியும் அரசன் மேற்றே அறிவினுக் கவதி யில்லை.
—கம்பராமா.,6596

அயிருறக் கலந்த நன்னீ ராழிநின் றாழிநின்றாழி நீத்துச்
செயிருறக் கலந் தாண்டோர் தேய்வுவந் துற்ற போழ்தில்
வயிரமுற் றுடைந்து சென்றோர் வலியவற் செல்லு மாபோல்
உயிர்தெறக் கால னென்பா னொத்தன னுதயஞ் செய்தான்.
—கம்பராமா.'3270.

அராவணைத் துயிலு மண்ணல் காலமோர்ந் தற்ற நோக்கி
இராவண னுயிர்மே லுய்த்த திகிரியு மென்ன லானான்.
—கம்பராமா., 3271.

.... பின்
ஏகுறு நாளிடை யெய்தி ..... —கம்பராமா., 4352.

மூலம்பார்க் குறினுலகை முடிவிக்கு முறைத்தெனினும்
காலம் பார்த் திறைவேலை கடவாத கடலொத்தான்.—கம்பராமா, 5162

சீலமல்லன நீக்கிச் செம்பொற்றுலைத்
தால மன்ன தனிநிலை தங்கிய
ஞாலமன்னற்கு நலலவர் நோக்கிய
கால மல்லது கண்ணுமுண்டாங் கொலோ. —கம்பராமா.

'சத்துருவுடன் சமாதானமாதல் யுத்தஞ்செய்தல் யுத்தத்திற்குப்போதல் போகாமலிருத்தல் தன்சேனையை யிரண்டாகப் பிரித்தல், பலமுடை மற்றொருவனைத் தானடைதல் இவ்வாறனையும் ஆலோசிக்க வேண்டும்.,

—மனு.அதி.,7.

ஓ)மேற்கொள்பகுதி:

மயிலை.: 'காலம்.....கருதுபவர்' கொள்ளும்காலம் குறித்துக் கலங்காது இருப்பர் ஞாலம் கருதுபவர்... என வினையும் விலனயுள டங்கும் வினைக்குறிப்பும் கொண்டு முடிதலின் வினை எச்சம்' என்பர்.

(நன்.359.

49.6. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர் தாக்கற்குப் பேரும் தகைத்து. (சஅசு)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: மனமிகுதி[1]யுடையவன் கால வரவுபார்த்து ஒடுங்குதல், போரைக் கருதினதகர்[2] வலிபெறத் தாக்குதற்பொருட்டுப் பெயர்ந்தாற் போலும் எ—று.

இது காலம் வருமளவும் பொறுத்தால் வலிமிகும் என்றது.

ஆ) *பரிதி.*: விசாரமுள்ளவன் காலம் பார்த்து ஒடுங்கி இருப்பான்; எப்படி என்றால் கிடா[3]யானது பின்வாங்குவது போல எ—று.

இ) *பரிப்.*: மனம் மிகுதி உடையவன் காலம் வரவு பார்த்து ஒடுங்குதல் போரைக் கருதின தகர் வலிபெறத் தாக்குதற் பொருட்டுப் பெயர்ந்தாற் போலும் எ—று.

இது காலம் வரும் அளவும் பொறுத்தால் வலிமிகும் என்றது.

ஈ) *காளி.*: ஒரு கருமம் செய்ய நெஞ்சின்கண் மேற்கோள் உடையனாகிய வேந்தனாவன், மற்று அதற்கு அடுத்த பருவம் வந்து எய்தும் துணையும் மற்று அதன்கண் முயலாது ஒடுங்கியிருக்கின்ற ஒடுக்கமானது எத்தன்மைத்தோ எனின், மேற்கொண்டு நிற்கின்ற போர்க்கிடாய் பொட்டென[4]த் தலையொடு தலைமுட்டுதற்பொருட்டுச் சிறிது நீங்கிச் செவ்வி பார்த்து நிற்கும் தகைமைத்து எ—று.

உ) *பரிமேல்.*: வலிமிகுதியுடைய அரசன் பகைமேல் செல்லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பு பொருதகர் தன்பகை கெடப்[5] பாய்தற் பொருட்டுப் பின்னே கால்வாங்கும் தன்மைத்து.

உவமைக்கண் தாக்கற்கு என்றதனால், பொருளினும் வென்றியெய்தற்பொருட்டு என்பது கொள்க. இதனால் அவ்விருப்பின்[6] சிறப்புக் கூறப்பட்டது.

---

1 மனமிகுதி—மன எழுச்சி; 2. தகர்—ஆட்டுக்கடா.
3. எருமை? ஆடு இவற்றின் ஆண்பாற் பெயர் கடா, கிடா, கிடாய்.
4. பொட்டென—வீரைவாக.
5. தன்பகைகெட—தன்பகையான ஆட்டுக்கடா அழியும்பொருட்டு.
6. அவ்விருப்பு - காலம் பார்த்து இருக்கும் இருப்பு.

ஊ) கவிராசர்: அதிக பலமுடைய ராசா பகைவர்மேலே தண்டெடா மல் காலப்பக்குவம் பார்த்துக் கொண்டிருக்கிற இருப்பு எப்படிப் போலே என்றால், பாய்ச்சலுக்கு நிற்கிற ஆட்டுக்கடா அதன் பகை யெல்லாந்தீரப் பாய்கிறதற்காகப் பின் இடைந்து போகிறதோடொக் கும் எ—று

ஏ) பழைய 2: அறிவுடைய அரசர் பகைவர் மிகை செய்தது கணட வுடனே, பகைவர் அறியப் புறத்துக் கோபங் கொள்ளார்; அவரைத் தாம் வெல்லுங் காலம் வருமளவும் உள்ளே வெகுண்டு கொண் டிருப்பர், ஒள்ளிய வெற்றி யுடையவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஊக்கம்' — 'மனமிகுதி' மணக்.; 'விசாரம்' பரிதி.; 'மேற்கோள்' காளி.; 'வலிமிகுதி' பரிமேல்., பழைய 2; 'அதிக பலம்' கவிராசர்.,இவற்றுள் விசாரம் என்னும் பலபொருள் ஒரு சொல் ஆய்ந்து மேலுமுயல எண்ணுதல் என்னும் பொருளது. ஆயின் ஈண்டைக்கு ஏற்புடையது கவலை துன்பம் முதலிய ஆயின் ஏலாது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

''பாடு பெயர்ந்து இடிக்கும ஏடகம்போல
அகன்றுபெயர்ந் தழிக்கும் அரும்பெறல் சூழ்ச்சி''
பெருங்., 3:1:30—31.

முற்றும்:

''அடங்கவும் வல்லீர் காலம தன்றேல் அமர்வந்தால்
மடங்கல் முனிந்தா லன்ன வலத்தீர் ... ...''
—கம்பராமா., 4834.

''... ... பின்னுவ ரொன்றுவர் தழுவுவர் விழுவர்''
—கம்பராமா., 4093.

''ஏற்ற காலம் வருமளவும் எண்ணி யிருக்க அதுமைந்தா
வீற்றுச் சமர்க்குப் பின்வாங்கும் வெற்றித் தகரே யாகுமால்.''
—விநா.அரசி.,67.

ஒருபுடை:

''புலி பதுங்குவது பாய்ச்சலுக்கு அடையாளம்.'' —பழமொழி.
''புலி பதுங்கிப் பாயும்.'' —பழமொழி.

ஒ) மேற்கோள் பகுதி:

மயிலை.: ஊக்கம் என்பது உடம்பொடு கூடிய உயிர்க்குணம் என்பதற்கு மேற்கோள். —நன்., 451.

49.7. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த் (து)
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர். (சஅ எ)

உரைப்பகுதி:

மணக்.: கதுமென[1] அவ்விடத்தே உடம்பு வேரார், தமக்குச் செய்யலாங் காலம் வரவு பார்த்து மனம் வேர்ப்பர் ஒள்ளியர் எ—று.

வேர்ப்பு பொறாமையால் வருவதுஒன்று. இது பகைவர் பொறாதவற்றைச் செய்தாலும் காலம் பார்க்கவேண்டும் என்றது.

ஆ) பரிதி.: சடுதியிலே[2] தம்முடை நினைவைப் புறத்திலே சொல்லார் காலம் பார்த்துக் காரியத்தை மனத்திலே கொண்டிருப்பார் எ—று.

இ) பரிப்.: கதுமென அவ்விடத்தே உடம்பு வேரார்: தமக்குச் செய்யுங்காலம் வரவு பார்த்து மனம் வேர்ப்பர் ஒள்ளியார் எ—று.

வேர்ப்பு—பொறாமையால் வருவது ஒன்று. பகைவர் பொறாத வற்றைச் செய்தாலுங் காலம் பார்க்க வேண்டும் என்றது.

ஈ) காளி.: தாம் செய்யும் கருமம் வாய்க்கும் பருவம் வருங்காலம் தம்மேல் வியர்க்க வினை செய்ய முயலார்; மற்று என் செய்வர் எனின், அக்காலத்தைக் குறிக்கொண்டு நெஞ்சு புழுங்கி நிற்பார் அறிவுடை அரசர் எ—று.

பொள்ளென என்பது கடிதாக உள்வேர்ப்பர் என்பது நெஞ்சு புழுங்கி. புறம் வேரார் என்பது உடம்பு வேரார்.

உ) பரிமேல்.; அறிவுடைய அரசர்,பகைவர் மிகைசெய்த பொழுதே அவர் அறியப்புறத்து[3] வெகுளார், தாம் அவரை வெல்லுதற்கு ஏற்ற காலத்தினை அறிந்து அது வருந்துணையும் உள்ளே வெகுள்வர்.

1,2. கதுமென, சடுதியிலே என்பன விரைவுப் பொருளை இதன் மூலச் சொல்லாகிய பொள்ளென என்பது குறிப்புமொழி என்பர் பரிமேலழகர்.
3. 'விரைவாகப் புறத்து' எனவும் பாடம்.

பொள்ளென என்பது குறிப்புமொழி. வேரார், வேர்ப்பர் எனக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார்.[4] அறிய வெகுண்டுழித் தம்மைக் காப்பராகலின் புறம்வேரார் என்றும், வெகுளி ஒழிந்துழிப் பின்னும் மிகை செய்யாமல்[5] அடக்குதல் கூடாமையின் உள்வேர்ப்பர் என்றும் கூறினார்.

காரி.: பொள்ளென என்பது செயவெனெச்ச வாய்பாடு பெற்ற குறிப்பு மொழி. 'கதுமென'[6] என்பதும் அது. காரணத் தைக் காரியமாக்கி வேர்த்தல் வெகுளியாயிற்று.

ஊ) கவிராசர்.: அறிவுடையவர்கள் தம் பகைவர் குற்றஞ்செய்த பொழுதே அவர்களறிய கோபித்துக் கொள்ளார்; அவர்களை வெல்லு கிறதற்கான காலமறிந்து அந்தக் காலம் வருகிற பரியந்தம் மனதுக் குள்ளே தாமே கோபித்துக் கொண்டிருப்பார்கள் எ—று.

ஏ) பழைய 2: அறிவுடைய அரசர் பகைவர் மிகை செய்தது ண்டவுடனே பகைவர் அறியப் புறத்துக் கோபங் கொள்ளார்; அவரைத் தாம் வெல்லுங் காலம் வருமளவும் உள்ளே வெகுண்டு கொண்டிருப்பர், ஒள்ளிய வெற்றி யுடையவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்

பரிதி., 'புறம்வேரார்—தம் நினைவைப் புறத்தே சொல்லார் என்பர். இது சொற்பொருளாகாது. இக்குறளின் கருத்தும் நினைவு புலப்படுத்தாமையன்று. **காளி.**, 'காலம் பார்த்துப் புறம் வேரார்'; 'காலம் பார்த்து உள்வேர்ப்பர்' என ஈரிடத்தும் கூட்டி, புறம் வேரார் என்பதற்குத் 'தம் மேல் வியர்க்க வினைகளை செய்ய முயலார்' எனவும், .காலம் பார்த்து உள்வேர்ப்பர்' என்பதற்கு 'அக் காலத்தைக் குறிக்கொண்டு நெஞ்சு புழுங்கியிருப்பர்' எனவும் உரை கூறுவர்.

இவர் உரையமைதி பரபரப்பாக வினைமேற்செல்லலாகாது; காலம் பார்த்து நெஞ்சு புழுங்கியிருக்கவேண்டும் என்னும் கருத்தினது. இதில் முதற்கண் உள்ள வேரார் என்பது உடல் வியர்க்க வினைமேற் செல்லுதலை விலக்குகிறது. வேர்ப்பர் என்பது மனப் புழுக்கம் ஒன்றையே குறிக்கிறது.

---

4. வேர்த்தல் வெகுளியின் காரியம். ஆகவே வெகுளார் வெகுள்வர் எனக் கூறாது வேர்ப்பார், வேரார் என்றமை காரணத்தைக் காரியமாக உபசரித்ததாம். காரிய ஆகுபெயரெனினும் ஆம்.
5. மிகை செய்யாது—பகைவர் தவறு செய்யாது. 6. குறள்., 1173.

பரிமேல், 'பகைவர் அறியப்புறத்தே வெகுளார்; காலம் நோக்கி உள்ளே வெகுள்வர்' என்னுங் கருத்தினது. இது வெகுளியை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளுதலையும் அங்ஙனம் காட்டிக் கொள்ளாமையையுமே உணர்த்துகிறது.

புறம் வேரார் எனவே அகம்வேர்ப்பர் என்பதும். பொள்ளென வேரார் எனவே காலம்பார்த்து வேர்ப்பார் என்பதும் இக்குறளின் முற்கூற்றானே பெறப்படுதலின் அதனைக் காலம் பார்த்து உள் வேர்ப்பர் என மீண்டுங் கூறுதலாற் போந்த பயன் என்னையோ எனின், காலம் வாய்த்தாலும் மனப்புழுக்கத்தைச் செயலிற் காட்ட வேண்டுமேயன்றி வெகுளியை வெளிக்காட்டி வினையைக் கெடுக்கக் கூடாது என்ற உண்மையை உணரச் செய்கிறது இக்குறள் எனவும் எண்ணுக.

ஒ) ஒப்புமைப்பகுதி

பொள்ளென வேர்த்தல்:

பொள்ளென வியர்த்து. —சீவக., 256.

உள்வேர்ப்பர் ஒள்ளியவர்:

வேந்தன்மற் றதனைக்கே வேற்றுவனெறிந்த கல்லைக்
காந்திய கந்த தாகக்கவுட்கொண்ட களிறுபோலச்
சேர்ந்தவரூரைத்த மாற்றம் சிந்தையி னடக்கி வைத்து
நாந்தக கிழவர் கோமான் நயந்தெரி மனத்த னானான்.—சூளா., 666.

முற்றும்:

மிகைமிக் கியற்றித் திரிந்திடினும் வெல்லும் காலம் வருமளவும்
பகைமை புறத்தில் தோற்றாமல் பகைவர் தம்மைப் பண்போடு
நகைசெய் தமர்போல சுமந்திடுக நாடுங் காலம் வந்துவிடின்
தகைசெய் வினையை அவ்வளவில் தப்பா வண்ணம் முடித்திடுக.
—வினா.அரசி., 68.

ஒருபுடை:

யானையைப் போல வஞ்சனை, புலியைப் போலப் போர். —பழமொழி

ஒ) மேற்கோள்பகுதி:

தெய்வச்: என என்னும் இடைச்சொல் குறிப்பு உணரநின்றதற்கு மேற்கோள். (தொல். சொல். 254.)

மயிலை.: பொள் என்பது குறிப்புப்பொருண்மேல் வந்ததற்கு மேற்கோள். (நன்.420.)

சங்கர.: குறிப்புப் பொருளில் என என்ற இடைச்சொல் வந்ததற்கு மேற்கோள் (நன்.424.)

49.8. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை காணின் கிழக்காம் தலை. (சஅஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பகைவரைக் கண்டானாயின், தலையினால் சுமக்க; இறுமளவாயின் தலை கீழாய் விடலாம் எ—று.

ஆ) பரிதி.: சத்துருக்கள் காலமானால் அவர்களைச் சுமந்து கொள்க; தனக்குக் காலமானால் தலைகீழாகப் போடுக எ—று.

இ) பரிப்.: பகைவரைக் கண்ணினாலே காணின் தலையினாலே சுமக்க: இறுவரை காணின், தலை கீழாகி விடலாம் எ—று.

பகைவரைக் கண்டு வாளாதே இருப்பது ஆண்மை அல்ல என்று கருதவேண்டா; அவரைக் கண்டால் தலையிலே கொண்டாற் போலத் தாழ்ச்சி செய்து பின்பு அவர் இகழ்ச்சியாலே தலையினின்று வீழ விட்டாற் போல வினை செய்யலாம் என்று கூறப்பட்டது.

ஈ) காளி.: பகைவரைக் கண்டபொழுது இறுவரை காணாக்கால் சுமக்க; இறுவரை காணின் கீழாக விடவற்று ஆகும் தலை எ—று.

சுமக்க என்பது பொறுத்தல். கிழக்காம் தலை என்பது கீழ்ப்படுத்தல்.

உ) பரிமேல்.: தாம் வெல்லக்கருதிய அரசர் பகைவருக்கு இறுதிக் காலம் வருந்துணையும் அவரைக் கண்டால் பணிக; பணியவே அக்காலம் வந்து இறும்வழி அவர் தகைவின்றி[1] இறுவர்.

பகைமை ஒழியும்வகை[2] மிகவும் தாழ்க என்பார் சுமக்க என்றும், அங்ஙனம் தாழவே அவர் தம்மைக்காத்தல் இகழ்வராகலின்[3] தப்பாமல்

1. தகைவு இன்றி — தடையின்றி.
2. பகைமை ஒழியும் வகை — தம்மீது பகைகொள்ளவில்லை என்று பகைவர் நம்பித் தம்பகைமை ஒழியுர்படி.
3. அவர் தப்மைக் காத்தல் இகழ்வராதலின் — அப்பகைவர் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுதலை அவமதிப்பார்கள் ஆதலால்

கெடுவர் என்பார் அவர் தலைகீழாம்[4] என்றும் கூறினார். தலைமேற் கொண்டதொரு பொருளைத் தள்ளுங்கால் அது தன்தலைகீழாக விழுமாகலின், அவ்வியல்பு பெறப்பட்டது. இவையிரண்டுபாட்டானும் இருக்கும்வழிப் பகைமை தோன்றாமல் இருக்க என்பது கூறப்பட்டது.

காரி.: சுமத்தல்—பணிதல்; கிழக்கு—கீழ்.

ஊ) *சுவிராசர்*: தாங்கள் வெல்லவேணுமென்று நினைக்கிறவர்கள் தங்கள் பகைவர்க்கு முடிவுக்காலம் வருமளவும் அவரைக் கண்டால் வணங்கவேணும்; அந்தக்காலம் வந்தால் அவர்கள் பெருமையில்லாமற் கெடுவர் எ—று.

ஏ) *பழைய.* 2: தாம் வெல்லக் கருதிய அரசர் பகைவர்க்கு இறுதிக் காலம் வரும் துணையும் அவரைக் கண்டாற் பணிக; (பணியவே), அக்காலம் வந்து இறும் வழி அவர் தகைவின்றி இறுவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி, 'சத்துருக்கள் காலமானால்' என்பதற்கு இறந்தால் என்பது பொருளன்று; அவர்கட்கு வாய்ப்பான காலமாயின் என்பது பொருள்.

காளி., 'இறுவரை காணின் தலை கிழக்காம்' என்பதற்கேற்ப, செறுநரைக்காணின் (இறுவரை காணாக்கால்) சுமக்க எனச் சிலசொல் வருவித்துப் பொருள் காண்பர்.

பரிமேல்., (பகைவருக்கு இறுதிக்காலம் வருந்துணையும்) எனச் சில சொற்கள் வருவித்துப் பொருள் தொடர்பு காட்டுவர். இது காளிங்கர் உரையைத் தழுவி எழுந்த போக்கு. இறுவரை — இறும்வழி என்பர்.

இராம., 'இறுவரை காணின் கிழக்கு ஆம் தலை செறுநரைச் சுமக்க' என இயைத்து, பகைவரை வெல்லுங்காலம் தம்மறிவுக்குத் தெரிகிற வரையில்.....சுமக்க' எனப்பொருள் காண்பர். மேலும் 'சுமக்க—பொறுக்க. காணிற் கிழக்கு ஆம் தலை — உதயமாம் வரையிலும். தலை—வரைக்கும்' என்ற எல்லைப் பொருளைத் தரும் இடைச்சொல் என்பர். இது புத்தம் புதிய உரை. 'சுமக்க' என்பதற்குப் 'பணிக' எனப்பொருள் காண்பது கூடாது. பணிவது மானமும் அறிவும் அற்ற வஞ்சகம் என முன்னோரை மறுக்கவும் செய்வர். "கிழக்காந்

4. 'அவர்தலை கிழக்காம்' எனவும் பாடம்.

தலை' என்பதற்கு இவர் கூறும் உரை வலிந்து கோடலாகும். இங்ஙனம் வலிந்து கொண்டாலும் பெறும் பயனின்மை அறிக. தேவநேயர், பரிதி., காளி., உரையை ஒட்டிப்'பகைவரைக் காணின் அவருக்கு நல்லகாலம் உள்ளவரை பணிக' என்பர்.

மு.கோ., இறுவரை—செயல் முடியும் வரை தலையைக் கீழே சாய்க்காதே. அதாவது உறங்காதே' என்று உரைப்பர். இது புதிய சிந்தனை தான் அதிகாரப் பொருட்டொடர்புக்கு இயையுமாயின்.

ஜி.வரத., 'தலைகிழக்கு ஆம் — தலை குனியுமாறு பணிய வைப்பாயாக' என்பர். இதுவும் புதுப்பொருள்.

மயிலை. சிவ.. 'காலம் அமையாத போது பகைவர் செய்த குற்றங்களைப் பொறுத்துக் கொண்டு அமைதியாக இருக்க' என்பர்.

ஒ) மேற்கோள்பகுதி:

மயிலை:. 'செறுநரைக்... ... . தலை'; இது 'கிழக்காந்தலை என்பதன் துணிவு தோன்றுதற்கு ஒழிக்கப்பட்ட அவர் கெடுவர் என்பதைக்கொண்டு முடிதலின் ஒழியிசை எச்சம்' என்பர்.

—நன்.. 359.

49.9. எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே செய்தற் கரிய செயல். (சஅகூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பெறுதற்கு அரியகாலம் வந்தால், அப்பொழுதே தன்னால் செய்தற்கு அரியவாகிய வினைகளைச் செய்து முடிக்க எ—று.

இது காலம் வந்தால் அரிது என்று நாணாமல் செய்ய வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: ஒருகாலத்திலுங் கூடாதகாரியம் கூடினால் ஒருவராலும் செய்ய முடிக்க ஒண்ணாத காரியத்தைச் செய்வான் எ—று.

இ) பரிப்.: பெறுதற்கு அரிய காலம் வந்தால் அப்பொழுதே தன்னால் செய்தற்கு அரியவாகிய வினைகளைச் செய்து முடிக்க எ—று

இது காலம் வந்தால் அரிது என்று நாணாது செய்ய வேண்டும் என்றது.

ஈ) காளி : தாம் செய்வது ஓர் கருமத்திற்கு ஏற்குமாறு கிட்டுதற்கு அரிய பருவமானது வந்து கிட்டிய காலத்துப் பின் சென்று கழியாமல் பருவத்தே செய்தற்கு அரியனவற்றைச் செய்து கொள்க எ—று,

உ) பரிமேல் : பகையை வெல்லக் கருதும் அரசர் தம்மால் எய்துதற் கரிய காலம் வந்து கூடியக்கால், அது கழிவதற்கு முன்பே அது கூடா வழித் தம்மால் செய்தற்கு அரிய வினைகளைச் செய்க.

ஆற்றல் முதலியவற்றால்[1] செய்து கொள்ளப்படாமையின்[2] எய்தற்கரியது என்றும், அது தானே வந்தியைதல் அரிதாகலின் இயைந்தக்கால் என்றும், இயைந்தவழிப் பின் நில்லாது ஓடுதலின் அந்நிலையே என்றும், அது பெறாவழிச் செய்யப்படாமையின் செய்தற் கரிய என்றும் கூறினார். இதனால் காலம் வந்துழி விரைந்து செய்க என்பது கூறப்பட்டது.

ஊ) கவிராசர்.: பகையை வெல்ல நினைக்கிறவர்கள் தங்களாலெய் துதற்கரிய காலம் வந்து கூடினால் அந்தக் காலங் கழிகிறதற்கு முன்னே செய்ய வேண்டின காரியங்களைச் செய்து கொள்ளவேணும் எ—று.

ஏ) பழைய 2.: பகையை வெல்லக் கருதும் அரசர், தம்மால் எய்தற்கு அரிய காலம் வந்து கூடியக்கால், அது கழிவதற்கு முன்னே, செய்தற்கு அரிய வினைகளைச் செய்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'எய்தற்கு அரியது' - 'பெறுதற்கு அரிய காலம்' என்று அனை வரும் உரை கொள்வர். பரிதி., 'பெறுதற்குரிய காரியம்' என்பர். அதிகாரம் காலம் அறிதலாதலின் 'காலம்' என்ற உரையே சிறந்தது.

சி.இ.'அமைதற்கு முடியாது வந்து சேருமானால்' எனத் துணைப் பொருள் முதலியவற்றைக் கருதுகிறார் என்பது மேல்வரும்

1. 'ஆற்றல் முதலியவற்றால்' அறிவு, ஆண்மை, பெருமை என்ற மூவகையாற்றல் களேயன்றி, நால்வகையுபாயம், நால்வகை வலி, ஐவகைத்தொழில், அறுவகைக் குணம் இவைகளும் பிறவும் கொள்க.
2 செய்து கொள்ளப்படாமையின் —தமக்காங்காலத்தைத் தாமே வருவித்துக்கொள்ளக் கூடாமையால் என்க.

'அதனையே துணையாக கொண்டு' அச்சமயத்திலேயே என்ற தொடர் காட்டும்.

ஏனைய உரைகள் கருத்தொத்தனவே.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

வேண்டிய தெய்தப் பெற்றால் வெற்றியின் விழுமி தன்றோ
—கம்பராமா.,694.

எய்தற் கரிய இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயலென்று — வையத்(து)
ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு —பா.வி.சூ.,60 மேற்கோள்.

ஓ) மேற்கோள்பகுதி:

யா—வி.: இருவிகற்பத்தால் வந்த ஆசிடை நேரிசை வெண்பாவில் முன்னிரண்டடியாக இக்குறளை அமைத்துக் காட்டுவர். —கு.,60.

49.10. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. (சகூ0)

உரைப்பகுதி:

அ) மணக்.: காலம் பார்த்திருக்குமிடத்துக் கொக்குப் போல ஒடுங்கி இகழ்வின்றி இருக்க; வினை செய்தற்கு வாய்த்த காலம் வந்தவிடத்து அக்கொக்குக் குத்துமாறு போலத் தப்பாமல் விரைந்து செய்க எ—று.

இது காலம் வருமளவும் இகழ்ச்சியின்றிக் கொக்கு போல இருத்தல் வேண்டும் என்பதூஉம், காலம் வந்தால் தப்பாமை விரைந்து செய்யவேண்டும் என்பதூஉம் கூறிற்று.

ஆ) பரிதி.: மடைவாயிற்[1] கொக்குப்போலே தனக்குத்தாயமாகிற[2] வேளை வருமளவும் தூங்குக. மீன் தனக்கு நேர்பட்டளவில் கொக்கு குத்தினமுறைமை போலத் தாயமானால் காரியஞ் செயங்கொள்க எ—று.

1. மனட — வாய்க்காலிற் தண்ணீர் பாயும் வழி: 2. தாயமாகிற — உரிய.

இ) *பரிப்.*: காலம் பார்த்து இருக்கும் இடத்துக் கொக்குப் போல ஒடுங்கி இகழ்வின்றி இருக்க: வினை செய்தற்குச் சீர்த்த காலம் வந்த விடத்துக் கொக்குக் குத்துமாறு போலத் தப்பாமல் செய்க எ—று.

இது காலம் வரும் அளவும் இகழ்ச்சி பின்றி இகழ்ந்தார் போல இருத்தல் வேண்டும் என்பதூஉம், காலம் வந்தாற் றப்பாமல் விரைந்து செய்ய வேண்டும் என்பதூஉம் கூறிற்று.

ஈ) *காளி* : தாம் கருதிய கருமம் முடிவதற்கு ஒரு பருவம் வாய்க்கும் அளவும் உள் ஒடுங்கி இருக்கும் குருகின் தன்மை போலேயும், முடிவதற்கு ஒரு பருவம் வாய்த்த இடத்து மற்று அக்குருகு எறியும் தன்மைபோலேயும் காலம் கருதியிருக்கவேண்டும் அரசர் எ—று.

உ) *பரிமேல்.*: வினைமேல் செல்லாதிருக்குங் காலத்துக் கொக்கு இருக்குமாறுபோல இருக்க. மற்றைச் செல்லுங்காலம் வாய்த்தவழி அது செய்து முடிக்குமாறு போலத் தப்பாமல் செய்து முடிக்க.

மீன் கோடற்கு இருக்கும்வழி, அது வந்து எய்துந் துணையும் முன் அறிந்து தப்பாமைப் பொருட்டு உயிரில்லது போன்று இருக்குமாகலானும், எய்தியவழிப் பின் தப்புவதற்கு முன்பே விரைந்து குத்தும் ஆகலானும், இருப்பிற்கும் செயலிற்கும் கொக்கு உவமையாயிற்று[3]. கொக்கொக்க என்றாராயினும் அது கூம்புமாறு போலக் கூம்புக[4] என்றும், குத்தொக்க என்றாராயினும் அது குத்துமாறுபோலக் குத்துக என்றும் உரைக்கப்படும், இது தொழிலுவமமாகலின். உவமை முகத்தால் இருப்பிற்கும் செயலிற்கும் இலக்கணம் கூறியவாறாயிற்று.

ஊ) *கவிராசர்*: பகைவர் மேற் காரியஞ் செய்யாதிருக்குமளவுங் கொக்கைப் போலச் சும்மா பார்த்துக் கொண்டிருக்க; அந்தக் காரியஞ் செய்து முடிக்குங் காலம் வந்தால், கொக்கு மீனைப்பிடித்துக் கொள்ளுமாறு போல, தப்பாமற் செய்க எ—று.

எ) *பழைய 2*: வினைமேற் செல்லாதிருக்குங் காலத்து, கொக்கு இருக்குமாறு போல இருக்க; மற்றைச் செல்லுங்காலம் வாய்த்தவழி, அதுசெய்து முடிக்குமாறுபோலத் தப்பாமல் செய்து முடிக்க.

---

3. 'கொக்கு ஒக்க' என்பது இருப்பிற்கு உவமானமாம். குத்து ஒக்க என்றது செயலிற்கு உவமானமாம்.
4. கூம்புக — அடங்கியிருக்க.

மல்லர்: 'கொத்தொக்க' பாடம்.

கொக்கு சமயம் பார்த்துக் கொண்டு அசையாமலிருக்கும், அப்படிப் போல அரசன் தனக்கேற்ற காலம் வருமட்டுஞ் சும்மாயிருக்க வேண்டியது. பின்னைக் கொக்குச் சீருக்கு வந்தவுடனே மீனைக் கொத்துமே அப்படிப் போல் அரசன் தன் பகைவரைத் தாழ்த்துகிற துக்குச் சீரான காலம் வந்தால், அவர்களைத் தாழ்த்த வேண்டியது என்றவாறு.

சீராயிராத காலத்திலே பகைவர்மேற் சென்றால் வீண் பிரயாசமாயிருக்கிறதுமல்லாமல் தனக்குத் தானே கேடு வருகிறதுக்கேது வாயிருக்குஞ் சீரான காலத்திலே, செல்லாது போனாலச் சமயந் தப்பிப் போய்ப் பின்னுக்குத் தான் நினைத்த காரியம் முடியாது என்கிறதினால் கொக்கு செய்கிறாப் போலே காலத்தைப் பார்த்துக் கொண்டு, அதுவந்தாப்போலே நினைத்ததை முடித்துப் போட வேண்டியது என்பது கருத்து.

ஒக்குதல்—ஒத்தியிருக்கிறது; கூம்பல்—ஒடுங்கல்; மற்று—பின்னை; கொத்து—கொத்துதல்; சீர்த்த—சீருடைத்து; அதன்—அதனுடைய.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பிற்கால உரையாசிரியர்களிற் சிலர் 'ஓடுமீன் ஓட உறுமீன் வரும் வரை' வாடியிருக்குமாம் கொக்கு' என்பதை எடுத்துக்காட்டுவர். கொக்கு இருப்பது போல இருக்க என்றவரை ஒப்பாகலாம். மூதுரைப் பாட்டு. 'ஓடுமீன் ஓட' என்றதால் குறிக்கும் கருத்து, நம்முடைய அடக்கத்தைக் கலைத்து ஆற்றலைக் கெடுக்க இடையில் பலபோர்கள் சிற்றரசின் படை எடுப்பு, ஒற்றர், தூதர், கூலிப்படைஞர் முதலாயினாரால் நேரலாம். அவற்றைக் பொருட்படுத்திப் 6பார் மேற்சென்று தன்வலி வகைகளைக் கெடுத்துக் கொள்ளாது, தம்மால் தாக்கத்தகும் பேரரசன் வரும்வரை காத்திருக்க என்றதாம், மூதுரைப்பாடல் இதன் வழித்தோன்றியது ஆதலால், சில சிறந்த வகையில் கருத்து நிறைவுடையது எனலாம். சிந்தனையாகிற அறிவு மலர்தலும் கூம்பலுமில்லது என்ற ஆசிரியர், செயலாற்றும் வகையில் அவை வேண்டும் என்கின்றார்.

(ஒ) ஒப்புமைப்பகுதி:

கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து:

''ஒடுங்கி இருந்தே உன்னியது முடிக்கும்

கொடுங்கால் கொக்கின் கோளின மாகிச்
சாய்ப்பிடமாகப் போர்ப்படை பரப்பி
வலிகெழு வேந்தனை வணக்குதும். —பெருங். 3.17:61—64.

''அடக்கமுடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா — மடைத்தலையில்
ஓடுமின் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.'' —வாக்கு. 16.

''அடங்கவும் வல்லீர் காலம தன்றே லமர்வந்தால்
மடங்கன் முனிந்தா லன்ன வலத்தீர் .....'' கம்பராமா.,4834.

''..... ..... மீன் உண்ணக்
குளக்கரை இருக்கும் கொக்கென அடங்கி.'' —மனோன்..4:1.
31—32.

முற்றும்:

''மிக்கோ நடுவரெனின் வெல்லற் குபாயமுன் முன்று
எத்திறத்துந் தண்ட மிகுகபகை கீழாயிற்
கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.'' —இன்னிசை இருநூறு அதி.,17—3

''அக்கொடு வனத்தெதிர் அன்பென் கின்றதுட்
புக்கறி கிலாஒரு புளினன் கூன்புறக்
கொக்கென நாடொறும் கொலை குறித்தவன்
கைகொடு மரமொடு கடிது தோன்றினான்.'' —பிரபு.முனிவார்.,5

பண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	பகல்வெல்லும்	பருவத்தோ	அருளினை	ஞாலம்	காலம்	வாக்கம்	பொள்ளென	செறுநரைக்	எய்தற்	கொக்கொக்க
மணக்.	1	8	9	10	2	3	4	5	7	9
பரிதி.	3	9	1	2	10	6	5	7	4	8
பரிப்.	1	8	9	10	2	3	4	5	7	6
காளி.	10	2	1	7	4	5	8	6	3	9
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

49வது அதிகாரம் 'காலமறிதல்' முற்றிற்று.

50. இடனறிதல்.

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: இடனறிதலாவது வினைசெய்யும் இடம் அறிதல். காலம் அறிந்தாலும், இடனறிந்து வினைசெய்யவேண்டுதலின், அதன் பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: இடனறிதலாவது இடனறிய வேணும் எ—று.

இ) பரிப்.: இடன் அறிதலாவது — வினை செய்யும் இடன் அறிதல். காலம் அறிந்தாலும் இடன் அறிந்து செய்ய வேண்டுதலின், அதன்பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது வலியும் காலமும் அறிந்து பகைமேற் செல்வான், தான் வெல்லுதற்கேற்ற நிலத்தினை அறிதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

ஊ) கவிராசர்: அஃதாவது—வலியுங் காலமும் அறிந்து பகைவர் மேலே தண்டு போகிறவரசன் தனக்கேற்ற நிலத்தையறிந்து செல்லல் (எ—று.)

எ) பழைய 2: அஃதாவது, வலியும் காலமும் அறிந்து பகைமேற் செல்வான் தான் வெல்லுதற்கு ஏற்ற நிலத்தினை அறிதல்.

மல்லர்: அதாவது அரசன் தனக்கானதுமாய், தன்பகைவருக்கு ஆகாததுமாய் இருக்கிற இடத்தை அறிந்து நடக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

சாமி.சிதம். 'காரியத்தை முடிப்பதற்கேற்ற இடத்தையறிதல்'. குழந்தை, 'வலியுங் காலமும் அறிந்து பகை மேற்செல்வான் தான் செல்லுதற்கேற்ற இடத்தினை யறிதல்'. இராம., 'ஒருகாரியத்தைச்

செய்வதற்கான இடத்தை அறிதல், . வரத., 'வெற்றிக்குச் சாதக மான இடத்தையறிந்து, வினையை மேற்கோடல்'. தேவநேயர், 'வலியுங் காலமும் அறிந்து பகை மேற்செல்வான், தான் வெல்லுதற் கேற்ற இடத்தையறிதல்'.

இவையனைத்தையும் இணைத்து நோக்கும்போது மணக்குடவர் சென்ற வழியே அனைவரும் சென்றுள்ளனர் எனலாம். சிலர் முன்னதி காரங்களைத் தொடர்புபடுத்தி, இதனை விளக்குவர். சிலர் இதனை மட்டும் விளக்குவர். இவையே வரைவிலக்கணம் பற்றிய வேறுபாடுகள்.

பரிமேலழகர் போன்றார் உரைகள் இடனறிதலை படையெடுத்து வந்து முற்றுகையிடுவான் செயலாக்குதலையும், காளிங்கர் போன்றார் உரைகள் தன் நாட்டில் அரணகத்திருப்பானுடைய செயலாக்குதலையும், மணக்குடவர் போன்றார் உரைகள் இருசாரார்க் கும் பொதுவாகக் கூறுதலையும் ஊன்றியறியலாம்.

வலியறிதல் தன்வலியும் மாற்றான்வலியும் அறிதல்போலக் காலமும் இடமும் இருப்பார்க்கும் வருவார்க்கும் பொதுமையிற் புகன்றனவாதலே ஆசிரியர்க்குத் துணிபாதலைக் காண்க.

50.1. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும் இடங்கண்ட பின்னல் லது. (சகக)

உரைப்பகுதி:

அ) மணக்.: முடியுமிடங் கண்டாலல்லது, யாதொரு வினையும் தொடங்காது ஒழிக; எளிது என்று இகழாது ஒழிக எ—று.

இஃது இடமறிதல் வேண்டுமென்பது கூறிற்று.

ஆ) பரி.: யாதொரு காரியமும் எடுத்துக்கொள்ளக் கடவானல் லன்; எடுத்துக்கொண்டால் காரியம் நிறைவேறுமட்டும் சோரவிடக் கடவானல்லன் எ—று.

இ) பரிப்.: முடியும் இடம் கண்டால் அல்லது யாதொரு வினையும் தொடங்காதொழிக; எளிது என்று இகழ்வதும் செய்யாதொழிக எ—று.

இஃது இடன் அறிதல் வேண்டும் என்பதூஉம், பகைவர் இடம் சிறிது என்று இகழலாகாது என்பதூஉம் கூறிற்று.

ஈ) *காளி.*: உலகத்து மன்னர் முதலாக மாந்தர் யாவரும், அவையிற்றுக்கு இயைந்த இடம் கண்டபின், அல்லது போர்த்தொழில் முதலாய எல்லாத் தொழிலினும் யாதானும் ஒன்று தொடங்குவது செய்யற்க; மற்று, இது நமக்கு எளிது எனக்கொண்டு யாவையும் இகழ்வது செய்யற்க; மற்று, அதனால் எவ்வினையும் இடம் குறிக்கொண்டே இயற்றுக எ—று.

இனிப் பெரியாரைத் துணைக்கோடல் தொடங்கி, மற்று வலியறிதல், காலமறிதல், இடனறிதல் காறும், எஞ்சாமல் தெரிந்து பின் ஒன்றினைத் தெரிதலே கடன் என்பதனால், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை யதிகாரம்.

உ) *பரிமேல்.*: பகைவரை முற்றுதற்காவதோரிடம் பெற்றபின் அல்லது அவர்மாட்டு யாதொரு வினையையும் தொடங்காதொழிக; அவரைச் சிறியரென்று இகழாது ஒழிக.

முற்றுதல் — வளைத்தல், அதற்காமிடமாவது வாயில்[3]களானும் நூழை[4]களானும் அவர் புகலொடு போக்[5] கொழியும்வகை அரணினை[6]ச் சூழ்ந்து ஒன்றற்கு ஒன்று துணையாய்[7]த் தம்முள் நலிவி[8]லாத பல படையிருப்பிற்கும், மதிலும்[9] அகழும் முதலிய அரண் செய்யப்பட்ட[10] அரசிருப்பிற்கும்[11] ஏற்ற நிலக்கிடக்கையும்[12] நீரும்[13] உடையது. அது பெற்றால் இரண்டும் செய்க என்பதாம்.

---

1. எஞ்சாமல்—முற்றும்.
2. முற்றுதல்—முற்றுகையிடுதல். அஃதாவது பகைவர் எவ்வகையாலும் வெளியிற் செல்லாதபடி அவரை வளைத்தல் மட்டும் முற்றுகையாகாது. உணவு, நீர், துணைப் படை, படைக்கலங்கள், மருந்து முதலியன வெளியிலிருந்து உள்ளே வருதற்கு வாய்ப்புச் சிறிதும் இல்லையாம்படிச் செய்தலும் முற்றுகையாம். பாரியின் பறம்புக் கோட்டையை மூவருங்கூடி முற்றுகையிட்டிருந்த காலத்துக் கபிலர் கிளிகளைப் பழக்கி நெற்கதிர் கொணரச் செய்தமையானும், உழவர் உழாதன நான்கு பயனுடைமையானும், வேறல் எளிதன்று என்ற கபிலர் உரையானும் தெளிக.
3. வாயில்—குடிமக்களும் பிற ம் வெளிப்படையாகக் கோட்டைக்குள் வரவும் புறம்போகவும் பயன்படும் வழி.
4. நூழை—போர்க்காலத்து அடைமதிற்பட்டார் இரகசியமாக வெளியிற் போகவும் வரவும் அமைத்த நுழைவாயில் இதனைச் சுரங்கவழி சுருங்கைவீதி என்பாரும் உளர்.
5. புகலொடு போக்கு—உள் புகலும், வெளிச்செலவும்.
6. அரண்—இயற்கையும் செயற்கையுமாகிய ஐவகை அரண்கள்.
7. ஒன்றற்கொன்று துணையாய்—முன்படைக்குப் பின்னும் பக்கங்களிலும் உள்ள தார்ப்படையும் கழைப்படையும் உதவியாக.
8. நலிவு—இளைத்தல் அல்லது துன்பம்.
9. மதில்—பலவகைப் பொறிகள் அமைத்த மதில்கள். அகழ்—ஏகழ்ந்து ஆழமானதும், முதலை, சுறா, திமிங்கிலம் நச்சரவு நண்டு முதலியவற்றையு முடைய நீர் நிலை
10. அரண் செய்யப்பட்ட—காவல் செய்யப்பட்ட,
11. அரசிருப்பு-அரசன் வாழும் அரண்மனை.
12. நிலக்கிடக்கை-பரந்த நிலவெளி.
13. நீர்-முன்னர் அகழ்கூறப்பட்டமையான் ஈண்டு நீர் என்றது இயற்கையாகவே அமைந்த காட்டாறு, நச்சுப்பொய்கை முதலியன.

ஊ) கவிராசர்: சத்துருக்களை செயிக்கத்தக்க இடங்கண்ட பிறகு அல்லாமல் அதற்குமுன்னே பகைவர் மேலேயொரு காரியமுஞ் செய்ய வேண்டாம்; அவர்களைக் கொஞ்சமென்று இகழ வேண்டாம் எ—று.

ஏ) *பழைய* 2: (பகைவரை) முற்றுவதற்கு ஆவதோர் இடம் பெற்ற பின் அல்லது, (அவர்மாட்டு) யாதொரு வினையையும் தொடங்கா தொழிக; (அவரைச் சிறியரென்று) இகழா தொழிக.

(ஒ) தொகுப்பும் குறிப்பும்:

'மேற்செல்லும் மன்னன், தனக்கு முடியுமிடங் கண்டாலல்லது வினை தொடங்கற்க' என மேற்செல்லும் அரசன் இடனறிதலை வலியுறுத்துகிறது *மணக்குடவர்* உரை.

பரிப்பெருமாள் உரை 'பகைவர் இடஞ்சிறிது என்று எண்ணற்க எனப் பகைவரது இடனறிதலை வலியுறுத்துகிறது.

பரிதியுரை இடனறிதலை யுணர்த்தாமல் வினைவலியைக் கருதிச் செலவது போல் உள்ளது. *காளிங்கர்* உரை 'இடனறிதலை போர் மேற் சேறலுக்கு மட்டுமின்றி, எல்லாச் செயல்களுக்கும இன்றியமை யாதது' என்கிறது. அங்ஙனமே வேந்தர்க்கும் பொதுமக்கட்கும் இடனறிதல் வேண்டும் என்கிறது.

கவிராசர் போன்றார் உரைகள் *பரிமேலழகரைத்* தழுவி எழுந்தனவே.

உரைகள் மாறுபடும் இடங்கள் 'முற்றும் இடம்' 'தொடங்கற்க எவ்வினையும்' 'எண்ணற்க' என்பவை.

'முற்றுமிடம்' – 'முடியுமிடம்' *மணக்.*, *பரிதி.*; 'இயைந்த இடம்' *காளி.*; 'செயிக்கத்தக்க இடம்' *கவிராசர்*; 'முற்றுகைக் கான இடம்' *பரிமேல்.*, *பழைய*2; உரையாசிரியர்கள் இடனறிதலை மன்னருக்கும் மக்களுக்கும் ஆக்குவதால், மன்னர்க்காயின் முற்றுகை யிடுதலும், ஏனோர்க்காயின் முடியுமிடமும், இயைபுடையதாகும். அதிலும் வினை செயற் பொதுவாகாமல், போர் வினையைக் கருதும் போது முற்றுகையிடுதல் சிறந்ததாகும்.

'தொடங்கற்க எவ்வினையும்' – 'முடியுமிட முதலிய வேறு பொருள் காண்பார் வினைப் பொதுமையையுணர்த்துவர். போர்வினை யை மட்டும் கருதுவார் முற்றுகையிடுதல் தொடர்பான வேவுபார்த்தல்

நிரைகவர்தல் முதலான வெட்சி முறைகளைக் கையாளுதலைக் குறிப்பர்.

'எள்ளற்க' என்பதற்குள்ள உரைகளில் 'பகைவர் இடம் சிறிது என்று எள்ளற்க' என்ற உரை மிகச் சிறந்தது. இதன் கருத்துதான் முற்றுகையிடுமிடத்திலும், பகைவன் தங்குமிடம் சிறிது என்று எள்ளற்க என்பதாய்ப் *பரிமேலழகர்* போர் தொடங்குவதற்குமுன் பகைவனைப் பற்றி இழித்தும், தன்னை உயர்த்தியும் பாயிரம் கூறி விடுதல் மரபு; அதனைச் செய்யற்க என்ற கருத்தினராதல் வேண்டும். ஆனால், முற்றும் இடங்கண்டபின் அல்லது எவ்வினையும் தொடங்கற்க; எவ்வினையும் எள்ளற்க; எனக் கூட்டித் 'தொடங்கற்க' என்றது. தாமே படை எடுத்துப் போவார்க்கும், 'எள்ளற்க' என்பது தம்மேற் படை எடுத்து வருவார்மேல் தாம் சேறற்கும், கூறியனவாகக் கொள்ளுதலே சிறப்பாம். இக்கருத்திலேயே *பரிமேலழகரும்* பிறரும் 'பகைவரை' என்பதை வருவித்துரைத்தனராதல் கூடும். மு.கோ. முற்றும் என்பதைப் பல சொற்களோடு இணைத்துப் புதியபொருள் கொணருவர். முற்றும் இடம்–முடியுமிடம். முழுதும் எண்ணியபின் அல்லது எனலுமாம். முற்றும் தொடங்கற்க என்றெல்லாம் இணைப்பர். முழுதும் தொடங்கற்க எனின் அரைகுறையாகத் தொடங்குக எனப் பொருள் தந்து ஆசிரியர் கருத்தொடு மாறுபடும். எண்ணியபின் எனின் இடனறிதற்குப் பொருந்தாதாகும். எண்ணித் துணிக.

ஜி. வரத., இடம் முற்றும் கண்டபின் எனக்கூட்டி இடமுழுவதையும் எனப் பொருள் கொள்வர். இது *பரிப்பெருமாள்* கருத்தைத் தொடுகிறது.

(ஒ) ஒப்புமைப்பகுதி:

எள்ளற்க:

''வெள்ளம்போல் தானை வியந்து வீரவாரை
எள்ளி உணர்தல் இயல்பன்று.'' *பு.வெ., 166.*

முற்றும்

''வாயில் நூழில் வழக்கமற மதிலை வளைத்தொன் றற்கொன்று
மேய துணையாய்ப் பலபடையும் மெலிவற் றிருப்ப மதில்அகழி
ஏய இயற்றி அரசிருக்கல் ஏற்ற கிடக்கை நிலத்தோடு

பாய புனலும் உடையதுவே பகையை அழிக்கும் இடனாகும்.''
வி. நா. அரசி., 69

ஒருபுடை:

''இடங் கண்டால் மடத்தைப் பிடிக்கலாம்.'' பழமொழி.
சந்து விட்டால் வந்து பிட்டேன்.'' —பழமொழி.

50.2. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம் ஆக்கம் பலவும் தரும். (சகூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பகை கொள்ளும் வலியுடையவர்க்கும், அரணைச் சேர்ந்தாகின்ற ஆக்கம் பல பயனையும் தரும் எ—று.

இது பகைவர் இடம் அறிதலே யன்றித் தமக்கு அமைந்த இடமும் அறியவேண்டும் என்றது.

ஆ) பரிதி.: சதுரங்க பலமான[1] தன்படையும் உதவிப்படைக் குறைச்சலும் உண்டாகிலும் இடம் நல்லதாகில் தனக்குக் கைசென்ற[2] இடமானால் ஆக்கமுண்டாகும் எ—று.

இ) பரிப்.: பகை கொள்ளும் வலியுடையவர்க்கும் அரணைச் சேர்ந்தாகின்றஆக்கம் பல பயனையும் தரும் எ—று.

இது பகைவரிடம் அறிதலே அன்றித் தமக்கு அறிந்த இடமும் அறிய வேண்டுமென்று அது கூறிற்று.

ஈ) காளி.: மாறுபாட்டொடும் பயின்ற வலியினையுடைய மன்னவ ராயினும், மற்று அவர்க்குத் தாம்பயின்ற நிலமாகிய அரணினை யுடைய நிலத்தைப் பொருந்தியதனால் உளதாம் ஆக்கமானது வென்றி முதலிய நன்மைகளையும் கொடுக்கும் எ—று.

முரண் என்பது மாறுபாடு. மொய்ம்பு என்பது வலி.

உ) பரிமேல்.: மாறுபாட்டோடு கூடிய வலியினை உடையார்க்கும், அரணைச்சேர்ந்தாகின்ற ஆக்கம் பல பயன்களையும் கொடுக்கும்.

1. சதுரங்க பலம் தேர் யானை குதிரை காலாள் என்ற நால்வகைப்படை.
2, கைசென்ற - பழைய.

மாறுபாடாவது ஞாலம் பொதுஎனப் பொறா அரசர் மனத்தின்கண் நிகழ்வதாகலானும்[3], வலியுடைமை[4] கூறிய அதனானும் இது[5] பகை மேற்சென்ற அரசர் மேற்றாயிற்று. உம்மை சிறப்பும்மை. அரண் சேராது ஆம் ஆக்கமும் உண்மையின், ஈண்டு ஆக்கம் விசேடிக்கப் பட்டது. ஆக்கம் என்றது அதற்கு ஏதுவாய முற்றினை[6]. அது கொடுக்கும் பயன்களாவன பகைவரால் தமக்கு நலிவின்மையும், தாம் நிலைபெற்று நின்று அவரை நலிதலும் முதலாயின.

காரி: முரண்—மாறுபாடு. முரணொடு சேர்ந்தாரை, அரணைச் சேர்ந்து என மூன்றும் இரண்டுமாய உருபு விரிந்தது காண்க.

ஊ) **கவிராசர்:** அதிக பலத்தினையுடையவர்க்கும் அரணாகிய இடத்தைச் சேர்ந்தால் அநேக நன்மைகளைக் கொடுக்கும் எ-று.

ஏ) **பழைய 2:** மாறுபாட்டோடு கூடிய வலியினை யுடையார்க்கும் அரணைச் சேர்ந்து ஆகின்ற ஆக்கம் பல பயன்களையும் கொடுக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'முரண் சேர்ந்த மொய்ம்பினவர்க்கும்' என்பதன் உரையமைப்பில் **மணக்குடவர்** முதலான தொல்லாசிரியர்கள் இருவேறு கருத்தினர் ஆவர். **மணக்.**, 'பகைகொள்ளும் வலியுடையார்க்கும்' என்பதால், **பரிமேலழகர்** 'ஞாலம் பொதுவெனப் பொறாது ஊக்கம் துரப்பப் படை எடுக்கும் அரசன் மேற்று' என்றார். **காளிங்கர்** 'மாறுபாட் டோடு பயின்ற வலிவுடைய மன்னர்' எனப் பகைமேற் செல்வார்க்கும். அவர்தம் பகைவர்க்குமாகப் பொதுமையிற் பொருள் காண்பர். **பரிதியார்**, 'தன் படைக்குறைவும் துணைப்படைக் குறைவும் உண்டா கிலும்' என உரை காண்பதால் இவர் காணும் பாடம் 'மொய்ம்பில வர்க்கும்' என்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது. வேறு எவ்வலி யிலார்க்கும் அரண்வலியாக்கந்தரும் என்பது இடனறிதலின் இன்றி யமையாமையை நன்கு விளக்குகிறது. பின்வரும் 'ஆற்றாரும் ஆற்றி யடுப' என்பது இவர் உள்ளத்தில் உள்ளது.

'அரண் சேர்ந்து ஆம் ஆக்கம்' என்றமையால் இக்குறள் 'நெடும் புனலுள் வெல்லும் முதலை' என்றாற் போலத் தம்மரணில் தாமிருந்து வருவாரை வெல்வதாலாம் ஆக்கத்தைக் குறிப்பது போலத் தோன்று

---

3. இப்பகுதி 'பொதுச் சொற்பொறா அது, இடஞ்சிறிதென்னும் ஊக்கந்துரப்ப' புறநா., 8 கபிலர் பாட்டை நினைவிற்கொண்டு எழதப்பெற்றது
4. 'மொய்ம்பினவர்க்கும்' என வள்ளுவர் வலியுடைமை கூறியதாலும்.
5. இது - இம்மாறுபாடு.
6. முற்று - முற்றுகை - முற்றுகையால் விளைவது ஆக்கம். அதனையே ஆக்கம் என்றது காரிய ஆகுபொர்.

கிறது. போர்மேற் செல்வாரும், பகைவனது அரண் புறத்தே தமக்கும் கட்டரண் அமைத்துக் கொள்ளுதலும் உண்டாதலின், அதனைக் கருதிக் கூறியது எனப் படை எடுத்து வருவார்க்கும், அரணின் இன்றியமையாமை கூறியதும் ஆம்.

இராம., 'அரண் சேர்ந்து' என்பதால் தம்முடையகோட்டையன்று. தம்முடைய கோட்டையாயின் சென்று சேர வேண்டிய இன்றியமை யாமை இல்லை; எல்லாம் முன்னரே அறிந்து வைத்ததாதலான் புதிதாக அறிய வேண்டியதில்லை. ஆதலால் போகிற இடத்தில் பாது காப்பான இடத்தையறிதலே ஈண்டுக் கருதப்படுகிறது என்பர். அரண் சேர்ந்து அரணை நோக்கிப் போய் என்பது பொருளன்று. இயல் பாகவே பலவகையரண்களைச் சேர்ந்திருப்பதால் நன்மை விளையும் இடம்பெயர்ந்து பகைவர் நாட்டுப்புறஞ் சென்று பெயரின் ஆக்கம் விளையாது, அழியவும் கூடும் என்க. ஆதலால் செல்வார்க்கும், எதிர் ஏற்பார்க்கும் அரண் தேவை எனலே சிறப்பு. ஜி வரதராசரும் இக்கருத்துடையவர்.

தேவநேயர், 'முரணும் வலியுங் கூறியதால் இது பகைமேற் சென்ற வல்லரசர் செயலாயிற்று' என்பர். மேற்செல்வார் ஆங்காங்கு இயற்கையும் செயற்கையுமாகிய அரண்களைப் பெற இயலுமா? என்பதை ஆயின் இக்குறள் வருவாரை எதிரூன்றுவார்க்குக் கூறிய தாகும் எனலாம். இதைக் கருதியே **மு.ரா.அரு.** தமக்குக் காவலாம் இடம் என்று கட்டரணைக் கருதுகிறார். ஆகவே இக்குறள் பகைமேற் செல்வார்க்குக் கட்டரண் வலியும், எதிர் ஊன்றிப் பொருவார்க்குத் தம்மரண் சேர்தலும் வேண்டும் என இருதிறத்தாருக்கும் பொதுமையிற் பொருள்கோடலே பொருந்துவதாம்.

50.3. ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து போற்றார்கண் போற்றிச் செயின். (சகூக)

உரைப்பகுதி:

அ) மணக்.: வலியில்லாதாரும் வலியுடையராய் வெல்வர்; பகைவர்மாட்டு வினை செய்யும் இடமறிந்து, தம்மைக் காத்து வினை செய்வாராயின் எ—று.

ஆ) பரிதி.: சேவகமில்லாதாரும்[1] சேவகராவர்; இடமறிந்து சத்துருக்கள் எண்ணமறிந்து செய்யவல்லராயின் எ—று.

1. சேவகம் — வீரம். 'சேவகனாகித்தன் சிலையேந்தி' (திருவாச., 2—81), 'என்னெடுஞ்சேவகம் தோற்க' (கம்பராமா—நாகபா., 10)

இ) *பரிப்.*: வலியிலாதாரும் வலியுடையராய் வெல்வர், பகைவர் மாட்டு வினைசெய்யும் இடம்அறிந்து தம்மைக் காத்து வினை செய்வராயின் எ—று.

இது வலியிலாதாரும் வெல்வர் என்றது.

ஈ) *காளி.*: பெரும்படைவேந்தரோடு போர்ஆற்றாத[2] சிறுபடையாளரும் அவரோடு போர்ஆற்றிப் பொருகளத்து அடுவர்; அதுவும் எங்ஙனம்? எனின். தமக்குச் சென்று நிலையுள்ள இடத்தை அறிந்து மற்று அப்பகைவரிடத்து உற்றாலும் பெரிதும் குறிக்கொண்டு வினைசெய்ய வல்லாராயின் எ—று.

ஆற்றாரும் என்பது வருபகை வேந்தனோடு போர்ஆற்றாதவரும் என்றது.

உ) *பரிமேல்.*: வலியரல்லாதாரும் வலியராய் வெல்வர், அதற்கு ஏற்ற இடத்தினை அறிந்து தம்மைக் காத்துப் பகைவர்மாட்டு வினை செய்வராயின்.

வினை என்பதூஉம் தம்மை என்பதூஉம் அவாய்நிலையான் வந்தன[3] காத்தல் பகைவரான் நலிவு வாராமல் அரணானும் படையானும் காத்தல். இவ்வாற்றான்[4] வினை செய்வராயின் மேற்சொல்லிய[5] வலிபின்றியும்வெல்வர் என்பதாம்.

ஊ) *கவிராசர்*: பலவான்களல்லாதாரும் பலவான்களாய் வெல்வர், அதற்கேற்ற இடத்தினை யறிந்து சேர்ந்து தம்மைக் காத்துக்கொண்டு பகைவர்மேலே காரியம் பண்ணினால் எ—று.

ஏ) *பழைய 2*: வலியரல்லாதவரும் வலியராய் வெல்வர், அதற்கேற்ற இடத்தினை அறிந்து சேர்ந்து தம்மைக் காத்துப் பகைவரிடத்து வினையைச் செய்வாராயின்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதியாரின் 'இடன் அறிந்து' — 'சத்துருக்களின் எண்ணம் அறிந்து' என்னும் உரை 'இடனறிந்து' எனவும், 'அறிந்து' எனவும்

---

2. போர் ஆற்றாத —பொருதற்குத் தகுதியில்லாத.
3. 'போற்றி' 'செயின்' என்பன செயப்படுபொருள் குன்றாத வினைஎச்சங்கள். ஆதலின் 'தம்மைப்போற்றி' வினையைச் செய்வாராயின்' என செயப்படுபொருளை வருவித்துரைத்தது அவாய் நிலையாம்.
4. இவ்வாற்றான் — பகைவரையழித்தற்குரிய இடத்தினை யறிந்து, தம்மைப் பாது காத்துக் கொள்ளும் இவ்வழியான்.
5. மேற்சொல்லிய — 492ம் குறளிற் கூறிய,

பிரித்துப் பொருள் செய்திருப்பர் போலும். ஆனால் எண்ணமறிதல் ஈண்டுக் கருத்தின்று.

மு.ரா.அரு., சாமி.சிதம்., சி.இ., குழந்தை, 'இடன்—போர் செய்தற்குரிய இடம், என்பர். பரிமேலழகர் 'படையானும் அரணானும்' என்பதால், இடம் போர்க்களமட்டுமன்று; அரணுமாம் என்னுங் கருத்தினர். இவர் வழிவந்த பின்னோரும் இக்கருத்தினரே. ஆவர். ஜி.வரத., 'நல்ல இடத்தில் ஊன்றினதால்' என்பதால் போர் புரியும் இடத்தையே கருதினர் எனலாம். இங்ஙனம் உரையாசிரியர் கள் இடன்—போர்க்களம், அரண் என்ற இருகருத்தினராதலைக் காணலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி

ஒருபுடை:

மாற்றானுக்கு இடம் கொடேல். —ஆத்தி ,89.

50.4 எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து துன்னியார் துன்னிச் செயின். (சகூசை)

உரைப்பகுதி:

அ)மணக்.: தன்னைக் கெடுத்தற்கு எண்ணினவர் தங்களெண்ணம் இழப்பர்; வினைசெய்யும் இடமறிந்து நட்டோரானவர் மனம் பொருந்திச் செய்வாராயின் எ—று.

இஃது இடம் அறிந்தாலும் செய்வோர் அமைதியும் வேண்டும் என்றது.

ஆ) பரிதி., எண்ணிய எண்ணம் இழப்பர்; மாற்றார் இடம் அறிந்து காரியம் கொள்ள வல்லாராயின் எ—று.

இ) பரிப்.: தன்னைக் கெடுத்தற்கு எண்ணினவர்கள் தங்கள் எண்ணம் இழப்பர்கள்: வினைசெய்யும் இடம் அறிந்து நட்டோரவர்கள் மனம் பொருந்திச் செய்வராயின் எ—று.

இஃது இடம் அறிந்தாலும், செய்வோர் அமைதியும் வேண்டும் என்றது. இனி அமாத்தியர் இலக்கணம் கூறுகின்றார் ஆகலின் இது பின் கூறப்பட்டது.

ஈ) காளி.: போர்வினை செய்தற்கு எண்ணிவந்த பகைவரானவர் எண்ணமும் பழுதுபடுவர்[1]. எவ்விடத்து எனின், நமக்கு இடமாவது இது என்று அறிந்து மற்று அதனை விடாது பற்றி நின்றவர்கள் தாமும் அவ்வாறே எண்ணிக் கொண்டு வினை செய்வாராயின் மற்று அப்பகைவர்க்கு எண்ணமே உள்ளது; இவர்க்கு எண்ணமும் இடமும் இரண்டும் உண்டு எ—று.

இடன் அறிந்து துன்னியார் என்பது இது நமக்கு இடம் என்று அறிந்து பொருந்தி வாழ்வர் என்றது. துன்னி என்பது மற்று அவ்விடத்துக் கூடி நின்று என்றது.

உ) பரிமேல்.: தாம் வினைசெய்தற்கு ஏற்ற இடத்தினை அறிந்து சென்ற அரசர், அரணைப் பொருந்தி நின்று அதனைச் செய்வராயின், அவரை வெல்வதாக எண்ணி இருந்த பகைவர் அவ்வெண்ணத்தினை இழப்பர்[2].

அரசன் என்பது அவாய்நிலையான் வந்தது[3]. எண்ணம் என்றது எண்ணப்பட்ட தம் வெற்றியை[4] அதனை இழப்பர் என்றார், அவர்[5] வினைசெய்யாமல் தம்மைக் காத்தமையின். இதனால் அவர்[6] பகைவர் என்பதாயிற்று. இவை நான்குபாட்டானும் பகைவர் அரணின் புறத்திறுப்பார்[7] அதற்காமிடம் அறிதல் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: தாம் பகைவரைச் செயிக்கிறதற்கேற்ற இடத்தினை யறிந்து சென்று, அரணாகிய காவலைப் பொருந்திநின்று செய்தால், அவரை வெல்லுகிறோமென்று நினைத்திருந்த ராசாக்கள் அந்த எண்ணமழிந்து போவார்கள் எ—று.

ஏ) பழைய2: பகையை வெல்ல, எண்ணியவர் எண்ணத்தினை இழப்பர், சேருமிடன் அறிந்து சேர்ந்து தன்னின் அவர் துன்னிப் போரைச் செய்யின்

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'துன்னியார்'—'நட்டோர் என உரைகண்டு, 'இடம் அறிந்தாலும்

---

1. பழுதுபடுவர் எண்ணம் பழுதுபடுதல்—எண்ணம் ஈடேறாது ஒழிதல்.
2. இது அரணுள் இருந்த அரசர் எண்ணம் இழப்பர் என்கின்றது.
3. துன்னி — 'அரணைத்துன்னி' எனச் செயப்படுபொருள் வருவிக்க வேண்டியிருத்தலின் அவாய் நிலை.
4. 'எண்ணம்' என்ற தொழிற்பெயர் எண்பட்ட வெற்றிக்கு ஆதலின் தொழிலாகு பெயராம்.
5. அவர் என்றது ஈண்டுப் பகைவரை.
6. அவர் இடனறிந்து போருக்குச் சென்ற அரசர்.
7. புறத்திருப்பார் — போர்மேற்சென்று பகைவர் அரணின் புறத்துத் தங்கியிருப்பர்.

செய்வோர் அமைதியும் வேண்டும்' என்பது கருத்து என்பர் மணக்குடவர். இவர் உரையின் போக்கு அதிகாரத் தலைப்பிற்கு ஓரளவு சிறப்புந் தந்து, நட்டோர் மனம் ஒப்பி ஒத்துழைக்க வேண்டும் என்பதனையே வலியுறுத்துவதாய் நட்பிற்கும் சிறப்புத் தருகிறது. ஆதலால் இவருரை இவ்வதிகார இயைபுடைத்தன்று.

மணக்., பரிதி., பரிப., உரைகள், இடனறிதலை இருந்தார்க்கும், படையெடுத்து வந்தார்க்கும் இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகின்றன. காளிங்கர் உரை 'இடனறிந்து துன்னியார் என்பது அரணுள்ளிருப்பாரையும், எண்ணம் இழப்பர் என்றது' படை எடுத்து வந்தாரையும் குறிக்கிறது. இதனை வலியுறுத்துவது அவர் தரும் 'வந்த பகைவர்க்கு எண்ணமேயுள்ளது; இருக்கின்ற இவர்க்கு எண்ணமும் இடமும் இரண்டும் உள்ளன' என்ற குறிப்பு. இதனால் இடனறிதலோடு துன்னுதலை இருந்தார்க்கு மட்டும் உரிமையாக்குவதை அறியலாம். ஜி. வரதராசர் உரையும் அங்ஙனமே.

பரிமேலழகர், கவிராசர், மு.ரா.அரு., பழைய உரையாசிரியர்களனைத்துரையும் இடனறிதலை வருவார்க்கே உடைமையாக்குகின்றன. பிற்கால உரைகளில் சி.இ., சாமி. சிதம்., குழந்தை போன்றவர்களும் அங்ஙனமே.

இங்ஙனம் இவர்களை இருவேறு திசைகளில் திருப்பிவிட்டது 'துன்னியார்' என்ற சொற்குப் பொருள் காட்டிய முறையே எனலாம். பரிமேல்., போன்றார் 'துன்னியார் பொரச் சென்ற அரசர்' என்றனர். ஏனையோர் தம்நாட்டின் அரணகத்து இருந்த அரசரைக் காட்டினர். வந்தவர் வெல்லக் கருதி வந்தவர். இருந்தவர் தம்மையும் தம் நாட்டையும் காக்குங் கருத்தோடு இருந்தவர். ஆகையால் இடனறிதல் முதலியன இரு சாரார்க்கும் இன்றியமையாதனவே யாதலின் இரு சாரார்க்கும் இயையப் பொருள்காணலே ஏற்புடைத்தெனத் துணியலாம்.

50.5. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின் நீங்கின் அதனைப் பிற. (சகூடு)

உரைப்பகுதி:

அ) மணக்.: நெடிய நீரின்கண் பலவற்றையும் முதலை வெல்லும்; அஃது அந்நீரினின்று நீங்குமாயின், அதனைப் பிறவெல்லாம் வெல்லும் எ—று.

இது மேலதற்குக் காரணம் கூறிற்று. இவை ஐந்தும் இடமறிய வேண்டும் என்பது கூறின

ஆ) பரிதி ஃ தனக்குப் பலமான நீரிலே முதலை வெல்லும்; அல்லாத நிலத்திலே முதலை தோற்பதுபோலத் தனக்கு வெற்றியான இடம் அறிந்து கொள்க எ—று

இ) பரிப் ஃ நெடிய நீரின்கண் பலவற்றையும் முதலை வெல்லும்; அது நீரினின்று நீங்குமாயின் அதனைப் பிற எல்லாம் வெல்லும் எ—று.

இது மேலதற்குக் காரணம் கூறிற்று. இவை ஐந்தும் இடம் அறிய வேண்டும் என்பது கூறின

ஈ) காரி : நெடிய ஆழமுடைய புனல், தனக்குப் பயின்ற நிலம் ஆகலின், மற்று அவ்விடத்து யானை புலி மனிதர் மற்றும் அனைத்துப் பகையையும் வெல்லும் முதலையானது; மற்று அது தான் பயின்ற நிலம் அல்லாத கரைமீது படின், எறும்பும் அதனை அடும்; ஆகலான், அரசர் முதலாக அனைவர்க்கும் இடம் அறிதல் பெரிதுமன் எ—று

உ) பரிமேல் ஃ முதலை ஆழமுடைய நீரின்கண் ஆயின் பிறவற்றை யெல்லாம் தாம் வெலநிற்கும் அப்புனலின் நீங்குமாயின் அதனைப் பிறவெல்லாம்[2] வெல்லாநிற்கும்.

எனவே, எல்லாரும் தம்நிலத்து வலியர் என்பது கூறப்பட்டது. பிற என்பது முன்னும் கூட்டப்பட்டது. நிலைப்படா நீரின்கண் பிற எல்லாம் நிற்றலாற்றாமையின் அவையெல்லாம் முதலைக்கு எளிய வாம், அவை நிலைத்தநிற்ப நிலத்தின்கண் அஃது இவற்றலாற் றாமையின் அஃது அவற்றிற்கெல்லாம் எளிதாம் என்றது. மேற் செல்லும் அரசர் பகைவர் நிற்றலாற்றா இடம் அறிந்து செல்வராயின் அவர் தமக்கு எளியராவரன்றித் தாம் நிற்றலாற்றா இடத்துச் செல்வ ராயின் அவர்க்கு எளியராவர் என்னும் பொருள் தோன்ற நின்றமை யின் இது பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம். அவரை அவர் நிற்றலாற்றா இடத்துச் சென்று வெல்க என்பதாம்.

---

1. பயின்ற இடம் பழகிய இடம்.
2. பிறவெல்லாம் நாய் நரி முதலிய எளிய விலங்குகளும் பரிமேலழகர் கருத்தின்படி பிறவற்றை வெல்லும் என்னும்போது யானை புலி கரடி முதலிய வலிய விலங்கு களை எனவும் பிற வெல்லும் என்னும்போது இழிந்த விலங்குகள் எனவும் கொள்க

காரி.: 'நெடும்புனல்[3], 'கடலோடா[4], என்பன மேலையலங் காரம். நெடுந்தேர் – நெடிய தேர்[5], நெடும்புனல் – தாழ்ந்த புனல்[6], நெடுங்கடல் – ஆழமுடைய கடல்[7].

ஊ) கவிராசர்: முதலை ஆழமான தண்ணீரிலே இருந்தால் எல்லாச் சீவன்களையும் வெல்லும். அது தண்ணீரை விட்டு வெளியே வந்தால், மற்றைச் சீவன்களெல்லாம் முதலையை வெல்லும் எ—று. ஏ) பழைய 2: முதலை ஆழமுடைய நீரில் யானை முதலாயின வற்றையும் வெல்லும்? நீரைவிட்டு நீங்கில் அதனை எறும்பு முதலாயினவெல்லாம் வெல்லும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'நெடும்புனல்' — 'தனக்குப் பலமான நீர்' பரிதி.[2] 'நெடிய ஆழமுடைய புனல்' காளி,; 'ஆழமுடைய நீர்' பரிமேல்.; 'ஆழ மான தண்ணீர்' கவிராசர்; 'ஆழமுடைய நீர்' பழைய 2; 'தான் நிற்கக்கூடிய நீர்' மு.ரா.அரு.; 'தன் வாழிடமாகிய ஆழ நீர்நிலை' தேவநேயர். இவருள் ஆழத்தையும் அகலத்தையுமுணர்த்தும் காளிங்கர் உரை சிறந்தது. ஆழமிருந்து அகலமிலதாயின் அதில் முதலை வெல்லாமை குறித்து அங்ஙனம் கருதினர் போலும்.

நீரில் வாழும் திமிங்கிலம் போன்ற வலிய உயிரிகள் உளவேனும் ஆசிரியர் வள்ளுவனார் முதலையை உவமமாகக் கொண்டது முதலை நிலத்திற் செல்லக்காலும், நீரிற் செல்ல நீண்ட துடுப்புப் போன்ற வாலும் உடையது என்ற சிறப்பு நோக்கியாம் என்க. ஆயினும் மிகுதி யும் பயிற்சியும் நோக்கி வெற்றியிருத்தலின் இடனறிதல் இன்றியமை யாதது என்பதை வலியுறுத்தியவாறு.

இக்குறட்பாவிற்கு, தமக்குரிய இடத்திலிருந்து நீங்குதல் வெற்றியைத் தராது எனக் கருத்துரைப்பர். சி.இ. இக்கருத்து படையெடுத்துப் போதல் கூடாது; எடுத்து வந்தவரை வெல்லலாம் என்ற நோக்குடையதாதலின் முற்றும் பொருந்துவதாக இல்லை. தமக்குத் தகுந்த அல்லது ஏற்ற என்றிருக்குமாயின் அரணுள் இருப்பார்க்கும், வருவார்க்கும் இயைபுடையதாம். 'வருவாரும்; நெடும்புனலையே நாடிவரும் முதலையைப் போலத் தமக்கு வெற்றி தரும் இடனையே தேர்ந்து நேர்வராயின்' வெற்றி கிட்டும் எனின் மிக

3. குறள்., 495. 4. குறள்., 496. 5, குறள்., 496. 6. குறள்., 495. 7. குறள்., 17.

ஏற்புடையதாகும். 'நீங்கின்' என்பதற்கு 'நெடும்புனலை நீங்கின்' எனப் பொருள் கோடலே பொருத்தம். 'புனலை நீங்கின்', 'கரையைச் சேரின்' என்பன அத்துணைச் சிறப்புடையன ஆகா. இது கருதியே சபாபதி முதலியார் 'அந்நீர் நிலையை' என நெடும்புனலையே சுட்டிப் பொருள் விரித்தல் காண்க.

மு.கோ. ''முதலை நெடும்புனலுள் வெல்லும்; அடும்புனலின் நீங்கின் அதனைப் பிற வெல்லும்' எனக் கூட்டி இக்கருத்திற்கு இணைத்தலைக் காண்க: 'அடும்புனல்'—பிற உயிர்களைக் கொல்லத் தக்கதாக அகன்றதும் ஆழமானதுமான நீர் நிலை என்பது பொருள். இப்பொருள் பொருத்தமுடையது எனலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

நெடும் புனலுள் வெல்லும் முதலை:

மோட்டும் முதுநீர் முதலைக்கு வலிய துண்டேல்
காட்டுள் நமக்கு வலியாரையும் காண்டும் ... ... —சீவக., 446.

முதலை தன் இடத்தில் மலை ஒத்த பாம்பையும் இழுத்துச் செல்லும்
—பழமொழி.

ஒருபுடை:

கல்லிடை யிட்ட காட்டகங் கடந்து
வெள்ளிடைப் புகுந்த வேட்டுவப் படையினை
ஆட் டுதும் சென்றன —பெருங், 3:27:22—24.

கூறுடை யெயிற்றுக் கோண்மாச் சுறவின மெறிந்து கொல்லப்
போருடை யரியும் வெய்ய புலிகளும் யாளிப் போத்தும்
நீரிடைத் தோற்ற வன்றே தந்நிலை நீங்கிற் றென்றால்
ஆரிடைத் தோலார் மேலோ ரறிவிடை நோக்கி னம்மா.
—கம்பராமா, 6825

அதுகொ டென்சில வாரமர் மேலினி
மதிகெ டுந்தகை யோர்ந்து நாமுறை
பதிபு குந்தனர் தம்மைப் படுப்பதோர்
விதிகொ டுந்த விலைந்தது தானென்றான் —கம்பராமா, 6925.

வான்சேரின் புள்ளஞ்சா வல்லரில் சுற்றிய
கான்சேரின் மானின் கணம்அஞ்சா — வான்சேர்
சிகர வரைசேரின் தேன்அஞ்சா அஞ்ச

மிகுநீர்க் கயஞ்சேரின் மீன். —பா.வெ.,

உளையச் சிலைக்கும் உழுவையும் தான்தன்
அளையிற்றீர்ந் தூரடைந்த தாக —இளிவந் (து)
உயிரிழப்பதென்றால் உறுமிடநீத் தென்கொல்
செயிருழக்கும் தீங்கு செயல். —பா.வெ.,

தன் ஊருக்கு ஆனை மன் ஊருக்குப் பூனை. —பழமொழி.
தன்னிலத்தினிற் குறுமுயல் தந்தியின் வலிதென்று
இந்நிலத்தினிற் பழமொழி யறிதி நீயிறைவ
எந்நிலத்தினு முனக்கெளி தாயினு மிவர்நம்
நன்னிலத்தினில் வர வமர்தொடங்குதல் நன்றால்.
—பாரதச் செய்யுள்

ஒ) மேற்கோள்பகுதி:

தெய்வச்.: சொல்லெச்சத்திற்கு மேற்கோள் காட்டி, தமது நிலத்தில் எளியவர் நின்றாலும் பிறரது நிலத்தில் வலியாரும் எளியராவர் என்னும் பொருண்மையை இச்சொல் தானே உணர்த்தலின் சொல் லெச்சமாயிற்று என்பர். —தொல்.சொல்., 433.

காரி.: 48.5 ஆம் குறள் பார்க்க.

50.6. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும் நாவாயும் ஓடா நிலத்து. (சகூசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: கால் வலிய நெடுந்தேர் கடலின்கண் ஓடாது; கடலின் கண் ஓடும் நாவாயும்[1] நிலத்தின்கண் ஓடாது.

இஃது இடத்திற்காங் கருவி பண்ணவேண்டும் என்றது.

ஆ) பரிதி.: கடலோடும் மரக்கலம் நிலத்தில் ஓடாது; நிலத்திலோ டும் தேர் கடலில் ஓடாது; அதுபோல இடனறியவேணும் எ—று.

இ) பரிப்.: கால் வலிய நெடுந்தேர் கடலின்கண் ஓடாது; கடலின் கண் ஓடும் நாவாயும் நிலத்தின்கண் ஓடாது எ—று.

இஃது இடத்திற்கு ஆம் கருவி பண்ண வேண்டும் என்றது.

ஈ) காளி.: நிலத்து ஓடுதற்கு உரியனவாகிய கால்உரமு[2]டைய

1. நாவாய்-தோணி.
2. கால் உரம்—சக்கரங்களின் வலிமை.

பெருந்தேரானவை தமக்கு நிலமல்லாத கடலுள் ஓடமாட்டா? மற்று அக்கடல்மீது ஓடும் கடுஞ்செலவுடைய நாவாய்களும் தமக்கு இட மல்லாத தரைமீது ஓடவும் மாட்டா; எனவே அரசர் முதலாக அனைவர்க்கும் தத்தம் இடம் அறிந்து இயற்றுதலே உறுதி உடைத்து எ–று

உ) *பரிமேல்.*: நிலத்தின்கண் ஓடும் கால் வலிய நெடிய தேர்கள் கடலின்கண் ஓடமாட்டா, இனி அக்கடலின்கண் ஓடும் நாவாய்கள் தாமும் நிலத்தின்கண் ஓடமாட்டா.

'கடலோடா' என்ற மறுதலை யடையான்[3] நிலத்து ஓடும் என்பது வருவிக்கப்பட்டது. கால்வல் நெடுந்தேர் என்பது ஓடுதற்கேற்ற காலும் பெருமையும் உடையவாயினும் என்பதுபட நின்றது. மேற்சென்றார் பகைவரிடங்களை அறிந்து அவற்றிற்கு ஏற்ற கருவிகளான் வினை செய்க என்பது தோன்றநின்றமையின், இதுவும் மேலையலங்கார மாயிற்று.

ஊ) *கவிராசர்*: நிலத்திலே ஓடும் வெகு கால்களையுடைய தேர்கள் கடலிலேயோடமாட்டா. அக்கடலிலேயோடும் கப்பல்களும் பூமியிலே ஓடமாட்டா எ - று.

ஏ) *பழைய 2*: நிலத்தின் ஓடுங் கால் வலிய நெடுந் தேரும் கடலின் ஓடமாட்டாது. கடலின் ஓடுங் கப்பலும் நிலத்தின் ஓடமாட்டாது.

மல்லர்: காலம் என்று அயர இருக்கிற உருளையுடைய பலத்தைக் கொண்டிருக்கிற பெரிய தேர் கடலிலேயோடமாட்டாது. கடலிலே ஓடுகிற கப்பல் நிலத்திலே ஓட மாட்டாது என்றவாறு.

கடல் தேருக்கேற்ற இடமாயிராது. நிலங் கப்பலுக்கேற்ற யிடமா யிராது. ஆகையால் எத்தனைப் பிரயாசைப்பட்டாலும் அது கடலிலே இது நிலத்திலே ஓடமாட்டாது. அப்படிப்போல் அரசன் தனக்கேற்ற இடத்திலே பாளையம் போடாமல் தன்பகைவனுக்குச் சார்பா யிருக்கிற இடத்திலே போட்டால் எத்தனை உபாயங்களைச் செய்தா லும் பகைவனுடைய காரியம் ஓடுமேயல்லாமல் தன் காரியம் ஓட மாட்டாது என்பது கருத்து.

ஓடா —ஓடாது; வன்—வலியது; நெடுந்தேர்—நெடியதேர்; நாவாய்—கப்பல்.

---

3 மறுதலை யடையான்- 'ஓடா' என எதிர்மறை வாய்பாடாக வந்த அடைமொழியால்

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறள் 'இடத்திற்காங் கருவி பண்ணவேண்டும் என்பது. மணக்.; 'பகை மேற் சென்றார் பகைவரிடங்களை அறிந்து'' அவற்றிற்கேற்ற கருவிகளான் வினை செய்க என்பது பட நின்றது' என்பர் பரிமேலழகரும், அவர் வழி வரும் முரா அருவும். மணக்குடவர் உரை அதிகாரத்திற்கு இயைபின்று என்பதைக் கருதியே பரிமேலழகரும் பின்னவரும் இங்ஙனம இடனறிதலை இணைத்து எழுதினர் காளிங்கரும். கவிராசரும் இன்றைய உரை காரர்களும் இடன் அறிதலையே உணர்த்தின எனபர்

ஜி. வரதராசர், 'தேருக்கு நிலத்தில் ஓடத்தக்க உருளைகள் இருந்தும் அவை கடலுக்குப் பயன்படவில்லை கலத்திற்கு நீரில் ஓடத்தக்க கருவிகள் உள்ளிருந்தும் அவை நிலத்தில் ஓடப் பயன்பட வில்லை. அதுபோல பகை வெல்லக் கருதும் அரசன் அதற்கேற்ற இடத்தையும் கருவிகளையும் பயன்படுத்த வேண்டும், என்பர். அதிகாரம் இடனறிதலேயன்றி இடத்தோடு கருவியறிதலன்று. அன்றியும் 'கருவியும் காலமும் செய்கையும்' என்ற குறளால் கருவியை அமைச்சுக்குரிமையாக்கிய வள்ளுவர் காலமறிதலைப் போல அரசியலுக்கும் அமைச்சியலுக்கும் உரிமையாக்கிற்றிலர். ஆதலான் கருவியறிதலையும் உடன்கூறினார் என்ற உரைகள் ஈண்டைக்கு ஏற்புடையன வல்ல. அன்றியும்' கால்வல் நெடுந்தேர்' எனத்தேருக்கு அடைமொழியாக வந்ததேயன்றி காலுக்கு ஒரு சிறப்பின்மையும் தெளிவு. ஆகவே 'தேர்கடலோடா; நாவாய் நிலத்தோடா. அதுபோல 'வினைசெய்வார் இடனறிந்து செய்க' என்பதே வள்ளுவர் உள்ளமாய் இடனறிதலையே வலியுறுத்தினதாதல் தெளிவு. குழந்தை. கா.சு., சபாபதி முதலியார் முதலானவர்களும் இடனறிதலையே இயைப்பர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

நாவாயும் ஓடா:

பனிப் பெருக்கில் கப்பல் ஓடுமா.? —பழமொழி.

ஓ) மேற்கோள்பகுதி:

மயிலை.: 'கடல்ஓடா ... ... நிலத்து? இது 'இவ்விடம் இவர்க்குச் செல்லும் இவ்விடம் இவர்க்குச் செல்லாது என அவரவர்க்கு ஏற்ற

இடன் அறிந்து கருமம் கொள்க எனக் குறித்த பொருள் கொண்டு முடிதலின் குறிப்பெச்சம்' என்பர். —நன், 359.

சுவாமி.: இது சொல்லினுள் வெளிப்படை; புறப்பொருளில் குறிப்பு என்பர். —இ—கொ., 6.

பெருந்.; பிறர் கோள் கூறலில் காண்டலுக்கு மேற்கோள். வீர., 272.

காரி.: 48.5 பார்க்க.

50.7. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை எண்ணி இடத்தான் செயின். (சகூஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.; தப்பாமல் எண்ணி இடத்தோடு பொருந்த வினை செய்யவல்லராயின், அஞ்சாமையே வேண்டுவதல்லாமல், வேறு துணையாவாரைத் தேட வேண்வடுது இல்லை எ—று.

இஃது இடனறிந்தால், துணையின்றியும் வெல்வர் என்றது[1].

ஆ பரிதி.: இடமறிந்து காரியங்கொள்ள வல்லவனாகில் அவனுக்கு துணைவேண்டாம் திடபுத்தியே அமையும் எ—று.

இ பரிப்.: தப்பாமல் எண்ணி இடத்தோடு பொருந்த வினைசெய்ய வலனாயின், வேறு துணை ஆவாரைத் தேட வேண்டுவது இல்லை ; ஞ்சாமையே வேண்டுவது எ—று.

இடம் அறிந்தால் துணை இன்றியும் வெல்வர் என்றது.

ஈ காளி.: இவ்வாறு எண்ணவேண்டும் காரியம் அனைத்தும் ன்று ஒழியாமல் எண்ணிக்கொண்டு, பின் தனது இடத்துட்படுத்தி னைசெய்யின், தம்வீரப்பாடல்லது[2] வேறு படைத்துணை இவர்க்கு வேண்டாம்; எனவே, தமது இடமும் தறுகண்மையும் எண்ணமுமே ாலும் எதிர்த்தோரை வெல்லுதற்கு எ—று.

---

1. 'துணையின்றியும் வெல்வர்' என்ற இப்பகுதியும், 494ம் குறளில் இடனறிந்தாலும் செய்வோர் அமைதியும் வேண்டும்' என்பதும் முரணுவபோலத் தோன்றுமாயினும் இது அமைச்சர் சேனாபதியர் முதலிய துணையாவாரையும், அது உடனறிந்து வினை
2. செய்யும் காலாட் படைகளையும் குறிக்கும் என அமைதி காணலாம்.
வீரப்பாடு—வீரத்தின் வெளிப்பாடு.

எஞ்சாமை என்பது ஒழியாமை

உ) *பரிமேல்.*: பகையிடத்து வினைசெய்யுந் திறங்களையெல்லாம் ஒழியாதெண்ணி அவற்றை[3] அரசர் இடத்தோடு பொருந்தச் செய்வரா யின், அச்செயற்கு[4]த் தம் திண்மையல்லது பிறிதொரு துணைவேண்டு வது இல்லை.

திண்ணியராய்[5] நின்று செய்து முடித்தலே வேண்டுவதல்லது துணைவேண்டா என்றார், அவ்வினை தவறுதற்கு ஏது இன்மையின், இவை மூன்றுபாட்டானும் வினை செய்தற்காம் இடனறிதல் கூறப் பட்டது.

ஊ) *கவிராசர்*: பகைவரிடத்து யுத்தம்[6] செய்ய வேண்டினவர் அதற்கு வேண்டின கருவிகாரியங்களையெல்லாம் குறைவுபடாமல் எண்ணி, அவைகளை ராசாக்களுடனே பொருந்தச் செய்தால், அவனுக் குத் துணைவேண்டாம் எ—று.

ஏ) *பழைய* 2: பகைவரிடத்து வினைசெய்யும்போது, தனது வலியே அஞ்சாமையாகிய துணையல்லது, பிறிது துணைவேண்டா; பகை யிடத்து வினைசெய்யும் வகை எல்லாங் குறையாமல் எண்ணி வாய்த்த விடத்தொடு பொருந்தச் செய்யின்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்;

பழைய உரையாசிரியர்களுள் கருத்து மாற்றமில்லை. *இராமலிங்கனார்* 'அஞ்சாமையல்லால் துணைவேண்டா; எண்ணி இடத்தாற் செயின் எஞ்சாமை (ஆகும்)' என முடித்துப் பொருள் காண்பர். இதில் எஞ்சாமை—குறையாமை. இதற்கு 'ஆகும்' என ஒருமுற்றும், எது எஞ்சாமை என்ற வினா நிகழ்ந்தபோது அஞ்சாமை எஞ்சாமை என ஓர் எழுவாயும் வருவித்துப் பொருள் காண்பர். இப் பொருள் தெளிவும், பொருளியல்பும் விளங்காமையான் இக்கொண்டு கூட்டும், பொருளும் ஏற்புடையவாகா.

தேவநேயர் இடனறிதல் செம்மையினாற்றான் அஞ்சாமை ஒன்றே துணையாதல் அமையும். வேறு துணைவேண்டா என விளக்கந் தருவர்.

---

3 அவற்றை –பகைவர்மாட்டுப் போர்புரியும் வழிவகைகளை.
4. அச்செயற்கு– இடமறிந்து, அதனொடு பொருந்திச் செய்யும் செயற்கு.
5. திண்ணியராய்—'எண்ணியார் திண்ணியராகப் பெறின்' என்றாங்கு மனத்திட்பமுடைய ராய்,
6. யுத்தம்— போர்.

மு கோ. அஞ்சாமை அல்லால் துணை வேண்டா எனச் சிதைத்து 'அஞ்சாமை மட்டுமல்லாமல் துணையும் வேண்டா' எனப் பொருள் காண்பர். இதனாற் போதிய பொருட்சிறப்புளதேற் கொள்ளலாம்.

ஜி வரதராசர். 'தன்னிடத்திலுள்ள குறைகளைப் போக்கித் தகுந்த இடத்தில் செயலை மேற்கொள்வராயின், அந்தச் செயலைச் செய்து முடிக்கத் துணிவு ஒன்றே போதும். இடம்--படையாகவும், அஞ்சாமை — துணையாகவும் கொள்ள வைத்தார்' என்பர். இது ஒருவகைப் புது நோக்குத்தான். படை துணையாகவே மதிக்கப்படுதல் படைத்துணையழைத்த சருக்கம் முதலான இலக்கிய வழக்கால் அறிகிறோம். அங்ஙனம் துணையாகக் கருதப் பெறும் படையை இட மாகக் கருதுவதெப்படி? அங்ஙனம் கருதப் படுமானால், இடம் வேண் டாத தொன்றாக இவ்வதிகார இயைபிற்கு ஏலாததாகுமே என்றெல் லாம் எண்ணத் தோன்றுகிறது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

அஞ்சாமை:

அஞ்சாமை யீகை யறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு. —குறள்.,

50.8. சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான் ஊக்கம் அழிந்து விடும். (சகூஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: சிறுபடையை யுடையவனுக்கு இயலுமிடத்தே பெரும் படையையுடையவன் பொருந்துவனாயின், மனமிகுதி கெடும் எ—று.

இஃது இகழ்ந்து செல்லின், வெற்றியில்லையாம் என்றது.

ஆ) பரிதி.: அற்பப்படை யுடையவனாகிலும் அவனுக்குக் கை சென்ற விடத்திலே மிகுத்த படையுடையவன் சென்றாலும் கெடுவன் எ—று.

இ) பரிப்,: சிறுபடை உடையவனுக்கு இயலும் இடத்தே பெரும்படை உடையவன் பொருந்துவன் ஆயின் மனமிகுதி கெட்டுவிடும் எ—று.

இஃது இகழ்ந்து செல்லின் வெற்றி இல்லையாம் என்றது.

ஈ) *காளி.*: உலகத்து ஒரு வேந்தன் சிறுபடையாளனாயினும் மற்றை மிகுபடையாட்சி வேந்தனானவன் மற்று அவனது செலவு பயின்ற இடத்தைத்தான் மதியாது சென்றுகிட்டுமாயின் தனது வலி அழிந்து கெட்டுவிடும் எ—று.

உ) *பரிமேல்.*: பெரும்படையுடைய அரசன், ஏனைச்சிறுபடை யுடையானை அழித்தல் கருதி அவன் புகலைச்[1] சென்று சாருமாயின்,, அவனால் தன் பெருமை அழியும்.

செல்லிடம் அவனுக்குச் செல்லும் இடம். அழிந்துவிடும்[2] என்பது எழுந்திருக்கும் என்றாற்போல ஒருசொல். ஊக்கத்தினழிவு உடையான் மேல் ஏற்றப்பட்டது[3]. தன்படைப் பெருமை நோக்கி இடம் நோக்காது செல்வானாயின், அஃது அப்படைக்கு ஒருங்கு சென்று வினைசெயலா காமையானாகப் பயிற்சியின்மையானாகப் அப்பெருமையால் பயினின்றித் தான் அழிந்துவிடும் என்பதாம்.

ஊ) *கவிராசர்*: வெகு சேனைகளையுடைய ராசா, கொஞ்சமான சேனையையுடையவனைக் கொல்ல நினைத்து, அவன் அரணாகிய விடத்திலே சென்றால், அந்த வலிமையினாலே வெகு சேனைகளும் அழிந்து, அந்த ராசாவும் கெடுவன் எ—று.

பழைய 2; இது இடத்தின் வலி கூறியது, பெரும்படையான், சிறுபடையானை அழித்தல் கருதிச் சிறுபடையானுக்குச் செல்லு மிடத்தில் சேர்ந்தானாகில் பெரும்படையான் பெருமையும் வலியும் அழிந்துவிடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஊக்கம்' — 'மனமிகுதி, வலி, பெருமை எனப் பழைய உரை யாசிரியர்கள் உரை கூறுவர். *கவிராசர்* கருத்துப் பொருளாகச் 'சேனையழியும்; அரசனும் அழிவன், என்பர். *பழைய* 2 'பெருமை யும் வலியும்' என்னும் இவற்றுள் ஊக்கம்—மனமிகுதி என்ற பொருளே சிறந்தது. 'உரமொருவற்குள்ள வெறுக்கை, (600), 'உள்ளமுடைமை

1. அவன் புகலை— சிறுபடையினுடைய இருப்பிடத்தை-
2. விடு, ஒழி விகுதிகள் தமக்கென வேறு பொருளின்றிப் பகுதிப் பொருள் விகுதியாக வருமாதலின் அழிந்து விடும் என்பது அழியும் என்ற அளவிலே பொருள் தந்தது.
3. அழிவது ஊக்கமேயன்றி ஊக்கமுடையான் அல்லன், அங்ஙனமாகவும் உடையான் அழிந்து விடும் என்றது பண்பின் தொழிலைப் பண்பியின் மேல் ஏற்றிக் கூறியதாம். பண்புக்கும் பண்பிக்கும் உள்ள ஒற்றுமை நயம்பற்றி.

உடையான் அழிந்துவிடும் என்பதில் உடையான் என்னும் ஆண்பாற் படர்க்கைப் பெயர் விடும் என்ற செய்யுமென் முற்றுப் பயனிலை கொண்டதாம். இது திணைவழுவாகுமேல் அமைதியாகக் கொள்க.

உடைமை' (592), என்ற **வள்ளுவர்** வாய்மொழிகள் மனஎழுச்சி யையே கருதுகின்றன. அதனாலேயே 'வினைசெய்தற்கண் கிளர்ச்சியை உடையனாதல்' என அதிகாரத்தலைப்பிற்கு வரைவிலக்கணமும் எழுதினர் **பரிமேலழகர்**. அங்ஙனம் எழுதியவர் ஈண்டுப் பெருமையழி யும் என்பராயின் மனஎழுச்சியாலாம் பயனாகிய பெருமையைக் கருதினராதல் வேண்டும். ஊக்கத்திற்குப் பெருமை நேர்பொருளன்மை தெளிக.

இராமலிங்கர், 'செல்லிடம் — தகுந்த இடம்' என்பர். இவர் செல்லிடம் சிறுபடையான் சேரின் உறுபடையான் ஊக்கம் அழிந்து விடும் எனக் கூட்டி இடனறிதலை முதற்கண் சிறுபடையானுக்கு உரிய தாக்கிப் பின்னர் அவ்விடத்தை உறுபடையான் சேரின் கெடும் என்பர். **ஜி. வரதராசரும்** இங்ஙனமே கூறுவர் இதனைக்காட்டிலும் உறு படையான் சிறுபடையான் செல்லிடம் சேரின் ஊக்கம் அழிந்துவிடும் எனக் கூட்டிக் காணும் உரைகளே சிறந்தவை. தெளிவானவை.

தேவநேயரும், 'சிறுபடையான் தனக்குப் பாதுகாப்பான இடத் தைச் சேரின், பெரும்படையரசன் இடவலியின்மையால் திரும்புவன்' என உரை கூறி, 'விடும்' என்பதற்குப் 'போர்த் தொழிலையேவிட்டுத் திரும்புவான்' என விளக்கமும் தருவர். மேலும் 'உடும்பு முயல் இவை களைத் துரத்திச் சென்ற நாய் அவை வளையுள் நுழைந்ததும் திரும்பு வது போல' என, எடுத்துக் காட்டும் காட்டுவர். இவ்வுரையும் **இராமலிங்கர், வரதராசர்** உரைகளைத் தழுவியனவே.

இவைகளை இணைத்தெண்ணி, சிறுபடையானாயினும், உறு படையானாயினும் இடன் அறிந்து அதனைச் சார்ந்து பொருதல் வேண்டும்; படை எடுத்துப் போகிற உடன் கட்டரண்கள் வாய்த்த இயற்கையரண்களைப் பயன்படுத்தியும். எதிரூன்றித்தற்காப்பவன் வருகின்ற படைக்கேற்ற பாதுகாப்பு அரணை அடைதலும் இன்றி யமையாதன என இரு சாராருக்கும் இயையப் பொருள் காணுதல் சிறப்பாகும். 'செல்லிடம் சேரின்' என்னும் செயின் என்வாய்பாட்டு வினையெச்சம் செல்லிடம் சேரவேண்டியது இவனுக்கு இன்றியமை யாதது என்பதைக் குறித்தல் காண்க.

மயிலை சிவமுத்து, 'சிறுபடையான் செல்லிடம், உறுபடையான் சேரின் ஊக்கம் அழியும்' எனக் கூட்டி, 'வந்த பெருஞ்சேனைக்குப் போதிய தொழிலின்மையால் வந்த சேனை ஊக்கம் குன்றிக் கெடும்' என உரைப்பர். இவர் காட்டும் 'போதிய தொழில் இன்மையான்' என்னும் ஏது ஒத்தாரிடத்தும் மிக்காரிடத்தும் படை மேற்செல்லலே

தகுதி. தன்னிற் சூழ்ந்தாரிடம் சேறல் செல்வானது படைகள் ஊக்கம் கேட ஏதுவாகும் என்பதை விளக்குமேயன்றி இடனறிதற் சிறப்பை வலியுறுத்துவதாகாது; ஆதலால், எவ்வகையினும் பரிமேலழகர் உரைக்கருத்தே தகுந்தது. அடுத்து இருவர்க்கும் இடனறிதல் இன்றியமையாதது என்ற கருத்தமைந்த உரையும் தக்கதாகலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

''உறுபடை மன்னர் தம்மை உடற்றிஒன் றானு மின்றிச்
சிறுபடை யவர்கள் வென்று செகுப்பவோ என்ன வேண்டா
செறிஎயிற் றாளி வேழப் பேரினஞ் செகுத்த தன்றே
உறுபுலி ஒன்று தானே கலையினம் உடற்றிற் றன்றே.''

—சீவக., 814

''ஊக்க மிலனா யினும்இடத்தோ டுற்ற வினைசெய் குவனாயின்
ஊக்க முடையார்க் கிடனின்றா யொழியும் ஊக்கம் இலாதவனுக்(கு)
ஊக்க முடையா னாயிடினும் உற்ற படையும் பலவேனும்
ஊக்கம் அழிவன் இடத்தோடு முற்று வினைசெய் யாவிடினே.''.

—விநா. அரசி., 70.

ஒருபுடை:

''எள்ளி வந்த வம்ப மள்ளர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
ஈண்டவர் அடுதலும் ஒல்லான் ஆண்டவர்
மாணிழை மகளிர் நாணினர் கழியத்
தந்தை தம்மு ராங்கண்
தெண்கிணை கறங்கச் சென்றாண்டு அட்டனனே.''

—புறம். 78:7—12

''மறப்புலி உடலின் மான்கணம் உளவோ
இருளும் உண்டோ ஞாயிறு சினவின்.'' —புறம். 90:1, 3.

இலவஞ் சோலையில் இறைமகன் போதா
ஆளி கண்ட ஆனை இனம்போல்
வாளி வல்வில் வயவர் நீங்க.'' —பெருங். 1;56; 43—45.

''பாயும் புலிமுன்னர் புல்வாய்க்குப் போக்கில்.'' —பழ. நா.,

''இடம்புகுந் தினைய செய்த விதனொடு சீற்ற மெஞ்சேன்.''

—கம்பராமா., 5797.

''நாயும் தன் நிலத்துக்கு ராசா.'' —பழமொழி.

50.9. சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர் உறைநிலத்தோ டொட்டல் அரிது. (சகக)

உரைப்பகுதி:

அ) மணக்.: அரண் மிகுதியும் பெருமையும் இலராயினும், மாந்தர் உறைநிலத்தின்கண் பொருந்துதல்[1] அரிது எ—று.

இது மாந்தர் உறைவிடத்தின்கண் செல்லுங்கால், அறிந்து செல்லவேண்டும் என்றது.

ஆ) பரிதி.: அரணும் படையும் இல்லாத இடமாகிலும் விசாரவான்[2] இருந்த இடம் கொள்ளப்படாது எ—று.

இ) பரிப்.: அரண் மிதுதியும் பெருமையும் இலர் ஆயினும், மாந்தர் உறை நிலத்தின்கண் பொருந்துதல் அரிது எ—று.

இது, மாந்தர் உறைவிடத்துச் செல்லுங்கால் அறிந்து செல்ல வேண்டும் என்றது.

ஈ) காளி.: மதில் சிறை முதலாகிய நால்வகை வாய்ப்பும், யானை முதலிய படை வாய்ப்பும் இலர் ஆயினும், மற்று, அம்மன்னவர் முதலாக மறத்தொழிலாளர்[3] முன் பயின்ற நிலத்துப் பகை வேந்தர்க்குச் சென்று கிட்டுதல் அரிது வ—று.

உ) பரிமேல்.: அரணழித்தற்கு அருமையும் பெருமையுமாகிய ஆற்றலும்[4] உடையரல்லராயினும் வினைக்குரிய மாந்தரை அவர் உறைகின்ற நிலத்தின்கண் சென்று தாக்குதல் அரிது.

நிலத்தோடு என்பது வேற்றுமைமயக்கம். ஆண்மையுடையாரைச் சிறுமை நோக்கி இருப்பின்கண் சென்று தாக்கின் அவர் அதுவிட்டுப் போதல் துணிவினரன்றிச் சாதல் துணிவினராவர்; ஆகவே, அவர்க்குப் பெரும்படை உடையும் என்பதாம்.

ஊ) கவிராசர்: காவல்மிகுதியும் வலிமையுமில்லாதவர்களானாலும்

---

1. பொருந்துதல்—எதிர்ந்து போர் செய்தல்.
2. விசாரவான்—இடன் முதலியற்றை ஆராய்பவன்.
3. மறத்தொழிலாளர் —வீரர்.
4. பெருமையாகிய ஆற்றல் தமக்குள்ள சேனைவலியும் உணவு முதலிய பொருள் வலியும் என்க.
5. நிலத்தொடு என்னும் மூன்றாம் வேற்றுமை உடனிகழ்ச்சிப் பொருளைத் தரும் ஒரு உருபு, தன்பொருளிற் றீர்ந்து நிலத்தின்கண் என ஏழன் பொருளைத் தந்தது வேற்றுமை மயக்கம்.
6. சிறுமை—சிறை நலனும் சீரும் இல்லாத சிறுமை.

அரணாகியவிடத்திலே இருக்கிறவர்களுடன் சென்று பொருகிறது அருமை எ—று.

ஏ) *பழைய* 2: அரணின் நலமும் அதற்கேற்ற சீரும் இல்லாராயினும்' வினைக்குரிய சேனை உறையும் நிலத்திற் சென்று தாக்குதல் அரிது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி., 'அரணும் படையும் இல்லாத இடமாயினும்' என உரை எழுதுவதால் அவர் கொண்ட பாடம் 'இலதெனினும்' என்றிருத்தல் கூடும்.

'சிறை நலன், – 'அரண்மி குதி' *மணக்.*; 'மதில் சிறை முதலான வாய்ப்பும் யானை முதலிய படைவாய்ப்பும்' *காளி.*; 'அரண் அழித்தற்கு அருமை, *பரிமேல்.*; 'காவல் மிகுதி, *கவிராசர்*; 'அரணின் நலம்' *பழைய* 2; 'பாதுகாப்பு வசதிகள்' *இராம.*; 'பாதுகாவல்' *ஜி. வரத* ; 'அழித்தற்கரிய அரண் சிறப்பு' *தேவநேயர்*. இவர்களில் சிறை–நலன்–அரண், படை முதலியனவற்றின் அருமை என்னும் உரைகள் ஏற்கத்தக்கன.

ஜி. வரதராசர் நிலத்தின்கண் சென்று பொருதல் அரிது என்றது உடல்வலியும் படைவலியும் பழம்பெருமையும் இலராயினும் நாட்டுப் பற்றுக் காரணமாக இடம் பெயரார்; உயிர் விடத் துணிவர் ஆதலால் வந்தவர் தோற்பர் எனப் புதிய எண்ணத்தைப் பொருத்துவர்.

இராமலிங்கனார் பாதுகாப்பு வசதிகளும் ஏனைய சிறப்புக்களும் இல்லாதவர்களாயினும், சொந்த இடத்தைவிட்டுப் பெயராமல் இருப்பதே நல்லது என்பர். இவர் ஒட்டல்–பொருந்துதல்; ஒட்டியிருத்தல் என உரை காண்பர். ஒட்டல் அரிது–ஒட்டியிருப்பது மிகவும் அருமையானசெயல். அதாவது நல்லது என்றார். இவ்வுரை குறிப்பானன்றித் தெளிவான உரையாகாமையும் கருதத் தக்கது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

உறைநிலத்தோடு ஒட்டல் அரிது:

அதுகொ டென்சில வாரமர் மேலினி
மதிகெ டுந்தகை யோர்வந்து நாமுறை

பதிபு குந்தனர் தம்மைப் படுப்பதோர்
விதிகொ ஒந்த விளைந்தது தானென்றான். —கம்பராமா., 6925.

இருக்கும் வளையில் எலியையும் கொல்லமுடியாது. —பழமொழி.

50.10. காலாழ் களரின் நரியடும் கண்அஞ்சா வேலாள் முகத்த களிறு. (ருஂ)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'வேலாழ் முகத்த' பாடம்.

கண்ணஞ்சாத[1] வேலழுத்தப்பட்ட முகத்தினையுடைய களிற்றைக் கால் வீழப்பட்ட களரின்[2]கண் நரி கொல்லவற்றாம் எ—று.

ஆ) பரிதி.: நரிவெல்லுமாப் போல சத்துருவை, இடமறிந்து வெல்க எ—று.

இ) பரிப்.: கண்ணஞ்சாத வேல் அழுத்தப்பட்ட முகத்தினையுடைய களிற்றைக் கால் வீழப்பட்ட களரின்கண் நரி கொல்லவற்றாம் எ—று.

களர்—போரிற் புறமான கழி. மேலதற்குக் காரணம் கூறிற்று.

ஈ) காளி.: 'வேலாழ் முகத்த' பாடம்.

தன்சினம் தணிபாத தறுகண்மை[3]பெரிதும் உடைத்தாய்மேலவர்[4] எறியவும் கீழவர்[5] குத்தவும் பிறவும் ஆகிய வேல் அழுந்திய வடு அறாத முகத்தை உடைய கடுங்களிறானது, தனது கால் உள்ளழுந்தும் களரிடம் புக்குக் கொடுந்துயர் உறுமிடத்து, நரி குறுகி மத்தகத்தைக் கவ்விப் பறித்து நுகர்ந்து அதனைப் படுவினை[6] செய்யும்; அதனால் உறுபகை அஞ்சாத தறுகண் மன்னவராயினும் இடம் அறிய வேண்டும் எ—று.

உ) பரிமேல்.: பாகர்க்கு அடங்காவுமாய் வேலாட்[7]களைக் கோத்த கோட்டவுமாய களிறுகளை, அவை காலாழும் இயல்பிற்றாய சேற்று நிலத்துப் பட்டுழி, நரி கொல்லும்.

---

1. கண்ணஞ்சாத—பயப்படாத. 'கடாஅக் களிற்றினுங் கண்ணஞ்சா ஏற்றை' (கலித்., 101.31) அச்சத்தை மெய்ப்பாட்டால் வெளிப்படுத்துவது கண்ணாதலால் கண்ணஞ்சுதல் என இணைத்தே வழங்கப் பெற்றது.
2. கால் வீழப்பட்ட களர்—கால் புதையுண்ட களர் நிலம்.
3. தறுகண்மை—அஞ்சாமை; 4. மேலவர்—தேர்மீதும் தன் மீதும், பரிமீதும் உள்ள வீரர்.
5. கீழவர்—காலாட்படையினர். 6. படுவினை—கொல்லுந்தொழில்.
7. வேலாள்—வேலை ஏந்திய வீரன்.

முகம் ஆகுபெயர்[8]. ஆண்மையும் பெருமையும் உடையாரும் தமக்கு ஏலா நிலத்துச் செல்லின் அவற்றாற் பயனின்றி மிகவும் எளிய ரால் அழிவர் என்பது தோன்ற நின்றமையின், இதுவுய் அவ்வலங் காரம். வேலாழ் முகத்த என்று பாடம் ஓதுவாரும் உளர்[9] . வேற்படை குளித்த முகத்தவாயின் அதுவும் நரியடுதற்கு ஏதுவாய் முடிதலின், அது பாடம் அன்மை அறிக. இவை மூன்றுபாட்டானும் பகைவரைச் சார்தலாகா இடனும் சார்ந்துழிப்படும் இழுக்கும் கூறப்பட்டன.

காரி.: கண்ணஞ்சாமை—பாகர்க்கு அடங்காமை. கண்ணஞ்சாவு மாய், முகத்தவுமாய என்று உரைத்ததனால், ஆகாரவீறு அகரவீற்றுப் பலவறிசொல்லாயின.

ஊ) கவிராசர்: பாகராகிய மாவட்டியர்க்[10] கடங்காததாய் வேலைப் பிடித்திருக்கிறவர்களைப் பாய்ந்து கொம்பிலே கோத்துக் கொண்டிருக்கிற யானை' சேற்றுக்குள்ளே யகப்பட்டுக் கால் புதைந்து கொண்டால், அந்த யானையை நரி கொல்லும் எ—று.

ஏ) பழைய 2: பாகற்கு அடங்காமல் வேலுடைய சேவகனைப் பாய்ந்து கொம்பிற் கோத்த களிறு, கால்புதையும் சேற்று நிலத்தில் அகப்படில், நரி வெல்லும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'வேலாள் முகத்த களிறு' — 'வேல் அழுத்தப்பட்ட முகத்தினை யுடைய களிறு' மணக்.; 'வேல் அழுந்திய வடு அறாத முகத்தை யுடைய கடுங்களிறு' காளி.; 'வேல் ஆழ் முகத்த களிறு' எனப் பாடங்கண்டு மணக்குடவரும், காளிங்கரும் பொருள் தந்தனர்.

'வேல் ஆள் முகத்த களிறு' எனப்பாடங்கொண்டு 'வேல் ஆட்களைக் கோத்த கோட்டவாகிய களிறு' என்று உரை கண்டவர் பரிமேலழகரும், கவிராசர், பழைய உரை 2 முதலியோர்.

பரிமேலழகர் 'வேல் ஆழுமாயின் அதுவும் நரியடுதற்கு ஏதுவாம்' என அப்பாடத்தையும் அதனைப் பற்றி எழுந்த உரைகளை யும் மறுப்பர். பரிமேலழகர், காளிங்கர் மணக்குடவர் உரையை மனத்

8. முகம் ஆகுபெயர்—முகம் என்னும் முதற்பொருளின் பெயர் முகத்தின்கண் உள்ள சினையாகிய கொம்புக்கு ஆயினமையின் பொருளாகுபெயர் யானையை நோக்க முகம் சினையாயினும் கொம்பை நோக்க முகம் முதற்பொருளாதல் காண்க.
9. மணக்குடவர், காளிங்கர் கொண்ட பாடங்கள்.
10. மாவட்டியார் - மாவுத்தர்.

தெண்ணிக் களிறு வேலழுத்தப்பட்ட வடுவையுடைய வீரம் பொருந்தியது. களரில் சிக்குமாயின் அதனையும் நரியடும் என இடனறிதற் சிறப்புமிக உரை கண்டனர். மணக்குடவரும் 'வீரன் மெய்வேல் பறியா நக்கது போலக் களிறு வேல் ஆழ்முகத்தது ஆயினும் களரின் நரி அடும் என இடனறிதலின் இன்றியமையாமையையே விளக்கினர். ஈண்டு முகத்தில் வேல் ஆழ்தல் களிறு களரிற் சிக்குதற்குத் துணையாயும் நிற்பதனை யடுதற்குத் துணையாயும் ஆயிற்று என்ற மறுப்பிற்கும் எங்ஙனம் இடமாகிறது என்று சிந்திக்கச் செய்தலையும் உற்று நோக்குக, சிறந்தது கொள்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

களிறு காலாழ் களரின்:

''பாலார் மொழிஉமை பங்காளர் வெங்கையம் பாவைதந்த
மாலாழ் தரும்எனை வெவ்வுரை யாணண்ப வாட்டுகின்றாய்
காலாழ் களரின் அமிழ்ந்தவெங் கோட்டுக் களிற்றைஒரு
வேலா லெறிபவர் போலே இதுான் விதிவசமே.''

—வெங்கைக் ,48

களிறு காலாழ் களரின் நரியடும்:

''போன மாமுனி தன்தபோ வனத்தொரு புடைமிடை நெடுங்களரிக
கான மானது புகுந்துபா ரிடங்களும் கழுகினங் களுமதுறறி
யானை யோடிட நரிதுரந் திடுநிலத் தெரிவெயில் கழைமுத்தம்
வானெ லாநெடும் தாரகை போலெழும் மால்வரைப் புறம்சார்ந்தான்.''

—வில்லி—நச்சுப் ., 12.

ஒருபுடை:

''தன்னி லத்தினில் குறுமுயல தந்தியின் வலிதென்று
இந்நி லத்தினில் பழமொழி அறிதிநீ யிறைவ
வெந்நி லத்தினும் உனக்கெளி தாயினும் இவர்நந்
நன்னி லத்தினில் வரஅமர் தொடங்குதல் நன்றால்.''

—வில்வி – நிரை,. 50

கூருடை யெயிற்றுக் கோண்மாச் சுறவின மெறிந்து கொல்லப்
போருடை யரியும் வெய்ய புலிகளும் யாளிப் போத்தும்
நீரிடைத் தோற்ற வன்றே தந்நிலை நீங்கிற் றென்றால்
ஆரிடைத் தோலார் மேலோர் அறிவிடை நோக்கி னமமா.''

—கம்பராமா., 6825

''அதுகொ டென்சில வாரமர் மேலினி
மதிகெ டுந்தகை யோர்வந்து நாமுறை
பதிபு குந்தனர் தம்மைப் படுப்பதோர்
விதிகொ டுந்த விளைந்தது தானென்றான்.''

—கம்பராமா. 6925.

ஒ) மேற்கோள் பகுதி:

தெய்வச்.: சொல்லெச்சத்திற்கு மேற்கோள்.—தொல்.சொல்.,443

பேரா.: இறுதிக்குற்றுகரம் நிரைபசையானதற்கு மேற்கோள்.
—தொல். பொருள். 321.

நச்.: இடத்தொடு பொழுது நாடி எவ்வினைக்கண்ணும் அஞ்சார்; வீரத்தையே கருதாமல் காலமும் இடமும் அறிந்து செய்க என்றாள்; ...'காலாழ்களரில் நரியடும், என்று தேவரும் கூறினார்.
—சீவக. 1928.

சங்கர.: செய்த என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்திற்கு 'வேலாள் முகத்த களிறு' என்பது மேற்கோள். —நன்.,340.

பணிடைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	தொடங்கற்க	முரண்சேர்ந்த	ஆற்றாரும்	எண்ணியார்	நெடும்புனலுள்	கடலோடா	அஞ்சாமை	சிறுபடையான்	சிறைநலனும்	காலாழ்
மணக்.	1	8	7	10	5	9	6	2	4	3
பரிதி.	10	2	9	8	4	6	7	1	3	5
பரிப்.	1	8	7	10	5	9	6	2	4	3
காளி.	10	2	4	7	5	8	6	1	3	9
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

50வது அதிகாரம் 'இடனறிதல்' முற்றிற்று.

51. தெரிந்து தெளிதல்.

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: தெரிந்து தெளிதலாவது அமாத்தியரை[1] ஆராய்ந்து தெளிதல். காரியம் தப்பாமலெண்ணி, அதற்காங் காலமும் இடனும் அறிந்தாலும். அது செய்து முடிக்கும் அமாத்தியரையும் எண்ணிக் கொள்ள வேண்டுதலின் அதன்பின் இது கூறப்பட்டது எ—று.

ஆ) பரிதி.: தெரிந்து தெளிதலாவது யாதொரு காரியமும் பதறாமல் விசாரித்துச் செய்யவேணும் எ—று.

இ) பரிப்.: தெரிந்து தெளிதலாவது அமாத்தியரை ஆராய்ந்து தெளிதல். காரியம் தப்பாமல் எண்ணி அதற்கு ஆம் காலமும் இடனும் அறிந்தாலும் அது செய்து முடிக்கும் அமாத்தியரையும் எண்ணிக் கொள்ள வேண்டுதலின் அவற்றின் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்: அஃதாவது அமைச்சர் முதலாயினாரைப்[2] பிறப்பு குணம் அறிவு என்பனவற்றையும், செயலையும், காட்சி கருத்து ஆகமம் என்னும் அளவைகளான் ஆராய்ந்து தெளிதல். வலிமுதன் மூன்றும்[3] அறிந்து பகைமேல் செல்வானுக்குத் தானை[4] வினையுற்றுச் செய்தற் பொருட்டும் அறைபோகாமற்[5] பொருட்டும்இது வேண்டுதலின், அவற்றின்பின் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர்: அஃதாவது மந்திரிகள், புரோகிதர்கள், சேனாபதிகள் முதலானவர்களுடைய பிறப்பு குணம் வலி முதலானவைகளையும் செயல்களையும் ஆராய்ந்து தெளிதல்.

---

1. அமாத்தியர் — அமைச்சர்.
2. முதலாயினார்—புரோகிதர். சேனாபதியார். தூதர். ஒற்றர் எனும் இவர்கள்.
3 வலி முதல் மூன்று — வலிமை காலம் இடம் என்ற மூன்றையும அறிதல்,
4- தானை சேனை 'தான் வினையுற்று' எனவும் பாடம்
5' அறைபோதல் —உடனுறைபவன் போலிருந்து உளவறிந்துபகைவற்குச் சொல்லுதல்' இது ஒரு குறியீட்டுச் சொல், இதற்குக் கீழறுத்துப் போதல், சுரங்கவழியாற் போதல் சத்துருக்களுக்குப் பயந்து போதல், பின்வாங்குதல் என்றெல்லாம் பொருள் காண்பர்

ஏ) பழயை 2: அஃதாவது, அமைச்சரைச் சேனாவரையரைத் தெரிந்து தெளிந்து தன்கண் நிறுத்திக் கோடல். தெரிந்து தெளிவது, சாதி பிறப்பு குணந் தருமம் நூலறிவு உலக வியற்கை சாமித் துரோகம் வஞ்சை பொய் முதலாயினவெல்லாந் தெரிந்து நற்குண நற்செய்கை யறிந்து அரசன் தெளிதல்.

மல்லர்: அவனவனுடைய கண்களை ஆராய்ந்து பாத்து சந்தேகம் எல்லாம் ஒழிந்ததுக்குப் பிறகு மந்திரிகளுக்கு உத்தியோகங் கொடுக்கிறது.

ஐ)தொகுப்பும் குறிப்பும்:

கா. சு.;அரசன் அமைச்சர் முதலியோர்களை அவரவர் வேலைக்குத் தகுதியாய் இருப்பதைத் தெரிந்து அவர்களிடம் நம்பிக்கை வளர்ப்பது என்பர்.

தேவநேயர், 'அரசன் தன் ஆட்சி பற்றிய எல்லா வினைகளிலும், சிறப்பாகப் போர் வினையில் தனக்கு உதவியாக அமைச்சர் முதலிய துணையதிகாரிகளை, அவரவர் குடிப்பிறப்பு முதலியன பற்றி ஆராய்ந்து தெளிதல்' என்பர்.

இராமலிங்கனார், 'ஆராய்ந்து நம்புதல்; ஒருவன் தனக்காகத் தன் காரியங்களைச் செய்கிற துணைவர்களை ஆராய்ந்து அறிந்து, நம்பிக்கை வைத்தல். இது அரசர்க்கு மட்டும் உரியதன்று; அலுவலகர் கள் பலரை நியமிக்கும் அனைவருக்கும் சொல்லப்பட்டது' என்பர்.

ஜி.வரதராசனார், 'வினை செய்து முடிக்கத் தகுந்தவரைத் தேர்ந்து தெளிந்து அந்த வினையை அவரிடம் ஒப்படைக்கவேண்டும் என்பது. அவருடைய அறிவையும் திறமையையும் காட்சிப் பிரமாணம் அனுமானப் பிரமாணம் ஆகமப் பிரமாணம் முதலியவற்றால் ஆய்ந்து நம்பத்தக்கவரா என்று தெளிந்து அதன்பின் அவர்பால் அவ்வினையை ஒப்படைக்க வேண்டும் என்பது' என்பர்.

குழந்தை, இவர் இதனை 53வது அதிகாரமாகப் பொச்சாவா மையின் பின் வைப்பர். 'அஃதாவது அமைச்சர் முதலாயினாரை அறிவு குணம் செயல் என்பவற்றை ஆய்ந்து தேர்ந்து எடுத்தல். இது அரசியல் அதிகாரிகளுக்கு மட்டும் அன்று; பண்ணையம், கடை முதலானவற்றிற்கு அலுவலர்களைத் தேர்ந்து எடுப்பதற்கும் பொருந்தும்' என்பர்.

சி.இ., 'தம்மிடம் பணிபுரிய வருவாரைத் தெளிந்து தமக்குப் பொருந்திய துணையாவார் யார் எனத் தெரிந்து தெளிதல்' என்பர். சபாபதி, 'ஆராய்ந்து தெளிவடைதல்' என்பர்.

இவ்வுரைகளுள் இயலோடு தொடர்புறுத்திப் பொருள் விளக்கமும் தரும் உரைகளே சிறந்தவை. இயல் யாதாயிருந்தாலும், மக்கட் பொதுமையில் அனைவருக்கும் கூறியதாக விளக்கந்தருவன குழந்தை, இராமலிங்கனார், வரதராசர் உரைகள். முன்னைய உரைகள் இவ்வதிகாரக் கருத்துக்கள் அரசுக்குச் சிறப்பானது என்று கருதி ஆள்பவர்க்கே கூறி, ஏனையோர்க்கும் பெற வைத்திருக்கலாம் அன்றோ.

51.1. அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும். (๕๐க)

உரைப்பகுதி:

அ) மணக்.: அறமும் பொருளும் இன்பமும் உயிரச்சமும் என்னும் நான்கின் கூறுபாட்டினையும் ஆராய்ந்து, பின்பு ஒருவன் அரசனால் தெளியப்படுவான் எ—று.

முன்பு நான்கு பொருளையும் ஆராயவேண்டும் என்றார்; பின்பு தேறப்படும் என்றார்.

ஆ) பரிதி.: தன்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்னும் நாலு காரியமும் விசாரித்து யாதொரு காரியமும் செய்வான் எ—று.

இ) பரிப்.: அறமும் பொருளும் இன்பமும் உயிரச்சமும் என்னும் நான்கினையும் கூறுபடுத்து ஆராய்ந்து பின்பு தேறப்படும் எ—று.

மேற்கூறிய குற்றமும் குணமும் ஆராய்தலே யன்றி அறத்தை வேண்டியாதல், பொருளை வேண்டியாதல், இன்பத்தை வேண்டியாதல், அச்சம் உளதாம் என்றாதல் அரசன் மாட்டுத் தீமையை நினையாமையை ஆராய்ந்து பின்பு அவரைத் தேறப்படும் என்று கூறப்பட்டது.

ஈ) காளி.: மறை முதலாகிய நூல் யாவற்றினும் சொன்ன அறம் பொருள் இன்பம் வீடு என வகுத்த நால்வகையாகலின், அவற்றுள் அறமானது பாவம் அனைத்தையும் பற்று அறுப்பது என்றும், இருமை இன்பம் எய்துவிப்பது என்றும், அவற்றுள் பொருளானது பலவகைத் தொழிலினும் பொருள்வருமேனும் தமக்கு அடுத்த தொழிலினாகிய

பொருளே குற்றமற்ற நற்பொருள் என்றும், மற்று இனி இன்பமாவது கற்பின் திருந்திய பொற்புடையாட்டி இல்லறத்துணையும் இயல்புடை மக்களுள் இருதலையானும் இயைந்த இன்பம் என்றும், மற்றும் இவற்றுள் உயர்ந்த வீடாவது பேதைமையுற்ற பிறப்பு இறப்பு என்னும் வஞ்சப் பெருவலைப்பட்டு மயங்காது நிலைபெற நிற்கும் வீடு இது என்றும், இங்ஙனம் இவை நான்கின் திறம் தெரிந்து, பின் தமக்கு அடுத்தது ஒன்றினைத் தலைத்தேறித் தெளிய அடுக்கும் அரசர்க்கு எ—று.

உயிரெச்சம் என்பது முத்தி என்றது.

உ) *பரிமேல்.*: அரசனால் தெளியப்படுவான் ஒருவன், அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப்பொருட்டான் வரும் அச்சமும் என்னும் உபதை நான்கின் திறத்தான் மன இயல்பு ஆராய்ந்தால் பின்பு தெளியப்படும்.

அவற்றுள், அற உபதையாவது—புரோகிதரையும் அறவோரையும்[1] விட்டு, அவரால் இவ்வரசன் அறவோன் அன்மையின் இவனைப் போக்கி அறனும் உரிமையும்[2] உடையான் ஒருவனை வைத்தற்கு எண்ணினம், இதுதான் யாவர்க்கும் இயைந்தது. நின் கருத்து என்னை எனச் சூளுறவோடு[3] சொல்லுவித்தல். பொருளுபதையாவது —சேனைத்தலைவனையும் அவனோடு இயைந்தாரையும் விட்டு, அவரால் இவ்வரசன் இவறன்மாலையனாகலின்[4] இவனைப் போக்கிக் கொடையும் உரிமையும் உடையான் ஒருவனை வைத்தற்கு எண்ணினம், இதுதான் யாவர்க்கும் இயைந்தது, நின்கருத்து என்னை எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இன்ப உபதையாவது தொன்று தொட்டு உரிமையொடு[5] பயின்றாள் ஒரு தவமுது மகளைவிட்டு, அவளால் உரிமையுள இன்னாள் நின்னைக்கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்க வேண்டும் என்று என்னை விடுத்தாள், அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமே யன்றிப் பெரும்பொருளும் கைகூடும் எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். அச்ச உபதையாவது ஒரு நிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனால் ஏனையோரை அவன் இல்லின் கண் அழைப்பித்து, 'இவர் அறைபோவான் எண்ணற்குக் குழீஇயினார்' என்று தான் காவல் செய்து, ஒருவனால் இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச் செய்து நமக்கினிய அரசன் ஒருவனை வைத்தல் ஈண்டை யாவர்க்கும் இயைந்தது

1. அறவோர்--முனிவர்; 2. உரிமை--சுதந்திரம். தன் வயப்பட்டு நடக்கும்தன்மை, 3. சூளுறவு--சபதம்; 4. இவறன்மாலையன்-- உலோபகுணம் உடையான். 5. உரிமை -- மனைவி 'பிறர்க்குரியாள்' என்பதும் காண்க.

நின்கருத்து என்னை' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இந்நான்கினும் திரிபிலனாயவழி[6] எதிர் காலத்தும் திரிபிலன் எனக்கருத்தளவையால் தெளியப்படும் என்பதாம். இவ்வடநூற் பொருண்மையை உட்கொண்டு இவர் ஓதியது அறியாது பிறரெல்லாம் இதனை'உயிரெச்சம்' எனப்பாடம் திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்.

காரி.: உபதை—பரிசோதனை அது வால்மீக ராமாயணத்துக் கச்சிச்சருகத்துக் காண்க.

ஊ) *கவிராசர்*: அரசனாலே தெளியப்படுவான் ஒருவன் தருமமும் பொருளும் இன்பமும் பயமும் என்னும் நான்கு வகையால் அவன் மனவியல்பை ஆராய்ந்து தெளியப்படும் எ—று.

ஏ) *பழைய 2*: அரசனால் தெளியப்படுவா னொருவன் அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப்பொருட்டால் வரும் அச்சமும் என்னும் முதற்பகை நான்கின் திறத்தான் மனவியல்பு ஆராய்ந்து தெரிந்து, பின்பு தெளியப்படும் என்றவாறு. தேறப்படும் என்பது தெளியப்படும் எனக் கொள்க. அறம் பொருளின்பமுயிரச்ச நான்காவன; அறவுவதை பொருளுவதை, இன்பவுவதை, அச்சவுவதை என நான்கு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., 'அறமும் பொருளும் இன்பமும் உயிரச்சமும் என்னும் நான்கன் கூறுபாட்டையும் முன்பு ஆராயவேண்டும். பின்பு தெளிதல் வேண்டும் என்பது கருத்து' என்பர். இவர் உரைப்போக்கு உயிரச்சத்தையும் ஒரு பொருளாகக் கருதச் செய்கிறது. அச்சம் உடல்கொள் உயிர்க்குணமே யன்றி ஒருக்காலும் பொருளாகாது. இது கருதியே உயிர் எச்சமெனக் கொண்டு வீட்டைக் கருதினர் போலும் *காளிங்கரும் பரிதியாரும்*.

சிலர் அறமுதலிய நால்வகைப் பொருளையும் தாம் ஆராய்ந்து, அத்தெளிவினால் ஒருவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது இவர் கருத்தாகும் என்பர். *மணக்குடவர்*, உரைப்போக்கு 'நான்கன் கூறு பாட்டினையும் வந்தவன்பால் ஆய்ந்து தெளிக' என்பதே கருத்தென் பதைத் தெளிவாகக்காட்டி நிற்கிறது. *பரிதியார்*: 'தன்மார்த்த காமமோட்சம் என்னும் நாலுகாரியமும் ஆய்ந்து' என்றார். மோட்சத் தைச் சேர்த்தமையால் இவரும் உயிரெச்சம் என்ற பாடங்கண்ட வராதல் கூடும்.

---

6. திரிபிலனாயவழி -- மாறுபாடில்லாதவனாகிய இடத்து.

பரிப்பெருமாள் 'மேற்கூறிய குற்றமுங் குணமும் ஆராய்தலேயன்றி, நான்கன் திறன் தெரிந்து கொள்க, என்றனர். 'மேற்கூறிய' என்ற வழிமொழிதலுரையால் இவர் குறள்முறைவைப்பில் **மணக்குடவரைப்** பின்பற்றியவராதல் வேண்டும் என்பது துணியப்படும்.

காளிங்கர் மறை முதலான நூல்கள் சொல்வன அறம்பொருள் இன்பம் வீடு என்ற நான்குமேயாதலின், உயிர் எச்சம்—வீடு என்றனர். முதன்மூன்று பொருள்களின் பயனைத் தத்தம் வினைக் கீடாக நுகர்ந்து, கழித்தபின் உயிர் பிறவிக்கடலைக் கடந்து இன் பமே வடிவாய் நுகர எஞ்சிநிற்பது வீடாதலின் அதனை உயிருக்கு எச்சம் எனப்பட்டது என்பதை அவர் தரும் விளக்கமே காட்டுகிறது. வீடு காதலிப்பவர் தீயன சிந்தியாராதலின் உயிரெச்சமும் ஆய்தற் குரியதாயிற்று- சிலர், வீடுகூறுவது **வள்ளுவர்** உள்ளமாயின் வெளிப் படையாகக் கூறாது உயிர்எச்சம் என வேறொரு வாய்பாட்டாற் கூறார் என்பர்.

பரிமேலழகர். வீட்டினை **மணக்குடவர்** கூறாமையானும், உயிர் எச்சம் எனப்பாடங்கண்டு உயிருக்கு அஞ்சுவானை அமைச்சனாக அமைத்தல் கூடாமையானும் பாடமும் வேறுகண்டு, கௌடலீயம் போன்ற வடநூல் வழிக்கேற்ப இங்ஙனம் கூறுவாராயினர். அன்றி யும் வீடுளதாதனை நூலளவையானன்றிச் சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைத்தாதல் பற்றியும் பொருட்பாற் கூற்றிற்கு வேண்டப் படுவதொன்றன்றாதலானும் அச்சம் எனப்பாடங்கொண்டு பொருளும் வேறு கண்டனர்,

உபதை—மறைவிற் செய்யுஞ் சோதனை. அதனை **வள்ளுவர்** கூறினரா என்று ஆராயின் 'திறன் தெரிந்து' என்ற தொடராற் கொள்ளலாம் எனத்தோன்றும். நால்வகையுபதைகளானும் ஆயும் முறைமையை அவர் உரைப்போக்கில் விளக்கத்திற் காணலாம். அவற் றுள் அறவுபதையைப் பற்றி அவர் தரும் விளக்கம் 'புரோகிதரையும் அறவோரையும் விட்டு, நம்மரசன் அறவோன் அல்லன்: இவனை யகற்றி அறவோன் ஒருவனை அமைப்போமா? என்று வினவி அவன் மனக் கருத்தினை ஆராய்தல் என்பது. இது சோதனைக்காகச் சொல் லும் பொய்யுரையாயினும், அவன் அஃதுணரானாய் இதற்கு யான் உடன்படேன் என்றானாயின் அமைச்சன் அறம் பழித்தவனாவான். உடம்படுவனாயின். அரசற்குத் துரோகஞ் செய்தவனாவன். ஆதலால் இத்தகைய வினா இருவழியானும் அறவுபதை வினாத்தாளில் இடம் பெறத்தகாதது ஆதலால் அரசனோடு தொடர்பில்லாத அறமே பற்றிய வினாவாதல் சிறப்பு. எங்ஙனம் எனின் அரசன் அறநெறி சிறிதும்

வளைந்து கொடாதவன் அவனையகற்றலாமா எனின் வந்தவன் கூடாது என்பானாயின் அரசனைப்பற்றியும் அவன் நேர்மையைப் பற்றியும் உண்மையான அறப்பற்றுடையனாய் அறவுபதையில் தேர்ந்தவனாவான்.

அங்ஙனமே தீதின்றியும், அருளொடும் அன்பொடும் வந்ததுமான பொருளை விரும்பி அல்வழியால் வருபவற்றை விரும்பாதவனாயின் பொருளுபதையிற்றேரப் பட்டவனாவன், இன்பவுபதையிலும் தம்மில் இருந்து தமது பாத்துண்பவனாக, பகை பாவம் அச்சம் பழிகட்கு நாணுபவனாக இருப்பானா என்ற நோக்கில் ஆய்வுநிகழ்ந்து அதில் தெளியப்பட்டானாயின் அதில் தேர்ந்தவனாவான்.

உயிர் அச்ச வகையிலும் தம்முயிர்க்கிறுதி எண்ணாது, தலை மகன் வெகுண்ட போதும் வெம்மையைத் தாங்கி நீதி விடாது நின்றுரைப்பானாயின் அச்சவுபதையில் தெளியப் பட்டவனாவன்.

அரசன் நால்வகையுபதைகளையும் மேற்கொள்ளுங்கால் அரசன் தன்னையும் தன் தேவியையும் அல்லாத புறம்பான கருவிகளைக் கொண்டு ஆய்தல் வேண்டும்; கௌடீ. அதிக 1. அத்யா 10, சுலோகம் 5 கூறுகிறது. அங்ஙனமாகக் **கௌடிலீயம்** கூறுவனயாவும் அரசனைப் பற்றியும், அரசனுடைய உரிமை மகளிரைப்பற்றியுமே உசாவுவன வாக இருத்தலின், அறம் பிழைத்ததற்கு அஞ்சுபவனாகவும், ஏனை அறவழியீட்டாத பொருளுக்கும், அறவழி நுகரப்படாத இன்பத்திற் கும் அஞ்சுபவனாகவும், போர், ஒற்று, மெய்காவல் முதலியவற்றில் உயிருக்கு அஞ்சுபவனாகவும் இருப்பவனைத் தேர்தலுங்கூடாது தெளி தலும் கூடாது என்பார் 'அறம்.....நான்கின் திறந்தெரிந்து தெளியப் படும்' என்றல் காண்க. அறம், பொருள் இன்பம் என்ற மூன்றனோ டும் அச்சம் என்பதனையுங் கூட்டித் தெளியக்கூடிய அச்சம் முதல் மூன்றும் தெளியக்கூடாத அச்சம் உயிரெச்சம் எனவும் கொள்ள வைத்தார்.

தெரிந்து தெளிதல் வினை செய்ய வருவார்க்கும், தெரிந்து வினைக்கண் ஆளுதலை தேர்ந்து எடுக்கப்பெற்றவர்பால் வினைகளை ஒப்படைத்தலுக்குமாகக் கூறினமை காண்க.

இங்ஙனம் ஒப்படைக்கும் போது அறவுபதையாற்றெளியப் பட்டாரை நீதி மன்றத்தும் சிறுபகைகளைதலிலும் நியமிக்க. பொருள் வகையிற்றூயரை வரிவாங்குதல், பொருட்பண்டாரம் புரத்தல் முதலிய பொருள் தொடர்பான அலுவல்களில் அமர்த்துக; இன்பவுபதையால் தெளியப்பட்டாரை உவளகங்களில் அமர்த்துக; அச்சவுபதையால்

தெளியப்பட்டாரை மெய்காவல் முதலியவற்றில் நிறுவுக என்றும் கூறும் கௌடலீயம்.

இங்ஙனம் பொதுவகையில் அறமுதலாயினவற்றில் அச்சமும், தன் உயிருக்கு அஞ்சாமையும் உடையவர்கட்குத் தக்கவாறு நிலைகளை வழங்காமல் முதன் மூன்று வகையாலும் அரசற்குத் தீங்கு இழைக்க மாட்டானா? என்பதும், இறுதியிற் கூறி அச்சமின்மையால் அரசற்குத் துணையாவானா என்பதுமே தெரிந்து தெளிதலின் நோக்கமாயின் அது ஆட்சிக்கும் நாட்டுக்கும் பயன்தராத தேர்வுகளாக முடியும். அதனாலேயே *காளிங்கர்* அறம் என்பது பாவச்செயல்களில் பற்றற்று இருமையின்பமும் எய்துவிப்பது. பொருள் அறவழியீட்டிய பொருள்; இன்பம் தன்வரை நிற்பாளொடு இன்பந்துய்த்தல், வீடு-பிறப்பிறப் பற்று நிலை பெற நிற்கும் வீடு எனக் கூறினர். வீட்டுபதை எங்ஙனம் அரசுக்கும் நாட்டிற்கும் பயன்படும் எனின் வீடு காதலிப்பவர் எல்லா வகையாலும் அறநெறியே கடைப்பிடிப்பர் ஆதலான் என்க. ஆகவே *காளிங்கர்* கருத்துத் தமிழ் மரபோடு ஒத்ததும், ஆட்சிக்கும் நாட்டுக் கும் பொதுவானதுமாகு . *கௌடலீயர்* கூறும் உபதைகள் அனைத் தும் அரசன் உயிருக்குக் காப்பளிப்பதாகும். தக்கன கொள்க. *இராம.* 'அரசன் ஒருவனிடம் நம்பிக்கை வைக்கு முன், இவன் தருமங்களை மதித்து நடக்குந்தன்மை உடையவனா? பொருளை எப்படிச் சம்பாதிக் கிறான்? அவன் விரும்புகிற இன்பங்களின் வழிகள் யாவை? வாய்ப்பு நேர்ந்தபோது நாட்டுக்கும் ஆட்சிக்குமாக உயிரைக் கொடுத்தும் உதவு வானா? என்ற நான்கன் விவரங்களை ஆய்ந்து தெளிக' என்பர். *பரிமேலழகர்* உரைப்பகுதிகளின் பொருந்தாமையையும் காட்டுவர்.

குழந்தை, சி.இ. இருவரும் அறமுதலான நான்கன் கூறுபாட்டையும் 'ஆய்ந்து தெளிக' எனச் சுருக்க கூறுவர். இவர்கள் கொண்டபாடமும் 'உயிரச்சந்தான்'.

தேவநேயர், *பரிமேலழகர்* கண்டபாடத்தையும் உரைப்போக்கை யும் ஒட்டிச் சென்று, 'இந்த நால்வகைத் தேர்திறங்களும் தமிழர் கண்டவை' என்பர். *சோமசுந்தரம்* 'உயிரச்சம்—வினைவழிக்குற்ற மற்ற உயிர்கள் துன்பமுறுதல் கூடாது' என உயிர்கள் படுந்துன்பத்திற் காகத்தாம் அஞ்சுதல். 'இதனை தீத்திறத்தார் பக்கமே செல்க' எனத் தீக் கடவுளுக்குக் கண்ணகி தந்த ஆணையாலும் உணரலாம் என்றும், 'உயிரெச்சம்' எனப்பாடங்கொள்ளின் குழந்தைகளைக் காப்பாற்றுக என்பதாம் என்றும் கூறுவர். இவையிரண்டுமே அறவழிப்பட்ட செய்கைகளாய் அதனுள் அடங்குமாதலின் போந்த பயனின்று எனலாம். அன்றியும் உயிர்கள் துன்புறுவது வினைவழிக்குற்றத்தாலா

விதிவழிக்குற்றத்தாலா என்றறிய முடியாமையும் அதற்காக இரங்க முடியாமையையும் சிந்திக்க.(வினை உயிர்கள் மேற்கொண்ட செயல்)

ஆதலால், **பரிப்பெருமாள்** உரை எளிமையுடையது. **காளிங்கர்** உரை தமிழ் மரபு பற்றியது; **பரிமேலழகர்** முதலானோர் உரைகள் வடமொழி வழியன எனக்காணலாம். வள்ளுவர் இத்தனையுமாகியும் கடந்தும் விளங்குகிறார்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

'அறம்—அறவுபதை':

''அறவோர் புரோகி தரைவிடுத்திட் டவரால் இந்த அரசன்தான்
அறவோன் அல்லன் இவற்போக்கி அறனோ டுரிமை யுடையானை
உறவே வைத்தற் கெண்ணினமீ தொத்த தெவர்க்கும் நின்கருத்தென்
உறவோ தெனச்சூ ளுறவோடும் ஓர்ந்தே ஒருவன் தனைத்தெளிக.''

—விநா.அரசி.,72.

'பொருள்—பொருளுபதை':

''சேனைத் தலைவ னொடுமவனைச் சேர்ந்தா ரையும்விட் டிவ்வரசன்
ஈனப் பொருளா சையன்இவனை இழுக்கிக் கொடையோ டுரிமையுடை
யானைப் புரத்தற் கெண்ணினமீ தமைந்த தெவர்க்கும் நின்கருத்தென்
ஊனப் படாமை உரைத்தினச் சூளோ டுரைப்பித் தேதெளிக.''

—விநா.அரசி.,73.

இன்பம்—இன்பவுபதை:

''தொன்று தொட்ட உரிமையொடு சூழ்ந்த தவமுதாட்டியைவிட்டு
ஒன்றும் உரிமை தனிலின்னாள் உனைக்கண் டுயங்கி எனைவிடுத்தாள்
சென்றங் கவளைக் கூடுதியேல் சிறந்த பொருளும் கூடும்நினக்கு
என்று தெளியச் சூளுறவோடு இசைப்பித் திதனா னும்தெளிக.''

—விநா.அரசி..74.

உயிரச்சம்—அச்சவுபதை:

''ஒருநிமித்த மேலிட்டே ஓரைச்சால் அவன் மனையில் ஏனையோரை
ஒருமையுற அழைப்பித்திங் கிவர்பிழைப்பக் குழீஇயினரென் றுறுத்திக் காவல்
ஒருவனிலிவ் அரசன்நமை ஒறுக்கமுயன் றான்இவனை ஒறுத்து வேறே
ஒருவனைவைப் பதற்கிசைந்தேம் உன்கருத்தென் னெனச்சூளோ
டுரைப்பித் தோர்க.'' —விநா.அரசி.,75.

திறம் தெரிந்து தேறுதல்:

''பிறப்பும் குணமும் அறிவும்எனப் பேணும் இவையும் செயல்களையும்
சிறக்கும் காட்சி யொடுகருத்தே செயிரில் நூலென் றிவைதம்மால்
நிறுக்கும் அமைச்சர் முதலோரை நின்றா ராய்ந்து தெளிந்திடுக
அறுக்கும் வினையாற் றுதற்பொருட்டும் அறைபோ காமைப்
பொருட்டுமே.''

—**விநா.அரசி.,71.**

அறத்தின் திறம் தெரிந்து தேற்றாமை:

''..... .... அறத்தாறு முங்கத்
தேற்றாது செய்வார் களைத் தேறுதல் செவ்வி தன்றால்.''

—**கம்பராமா.,4079.**

51.2 குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும் நாணுடையான் கட்டே தெளிவு. (நிஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: உயர்குடியில் பிறந்து, காமம் வெகுளி முதலான குற்றத்தினின்று நீங்கி, தனக்கு வரும் பழியை அறுக்கவல்ல நாண முடையவன் கண்ணதே அரசனது தெளிவு எ—று.

இதுவும் உடன்பாடென்று கொள்ளப்படும் என்றவாறு.

ஆ) பரிதி.: இல்லறத்தில் செல்வக் குடியிலே பிறந்து குற்றமில்லாத நாணமுடையானிடத்திலே உலகம் தெளிவு பெறும் எ—று.

இ) பரிப்.: உயர்குடிப்பிறந்து காமம் வெகுளி முதலான குற்றத் தினின்று நீங்கித் தனக்கு வரும் பழியை அறுக்கவல்ல நாணம் உடை யான் கண்ணே தெளிதல் எ—று.

இது சுக்கிரர் மதம்[1]. இதுவும் உடம்பாடு என்று சொல்லப்படும்.

ஈ) காளி.: மற்று இவ்வுலகத்துத் தாமும் அருங்குடிப்பிறந்த அரசர் ஆகலான் தம்மொடும் அருந்துதற்கு அமைந்தோனாகி[2] நற்குடிப் பிறந்து மறந்தும் ஒரு குற்றம்வரின் அதனை விரைந்து அறுத்தற்கு அமைந்த மானம் உடையோன் யாவன்? மற்று அவன் கண்ணதே தாம் தெரிந்து தெளியும் தெளிவு எ—று.

1. சுக்கிரர்மதம் - பொருள்நூல் ஆசிரியராகிய சுக்கிரர் கொள்கை,
2. அருந்துதற்கு அமைந்தோனாகி - உடனிருந்து உண்பதற்குத் தக்கவனாகி,

ஈண்டுப் பரியும் என்பது அறுக்கும் என்றாயிற்று.

உ) *பரிமேல்.*: உயர்ந்த குடியில் பிறந்து, குற்றங்களினின்று நீங்கி, நமக்கு வடுவருங்கொல் என்று அஞ்சாநிற்கும் நாணுடையவன் கண்ணதே அரசனது தெளிவு.

குற்றங்களாவன மேல் அரசனுக்குச் சொல்லிய வகையாறும்[3], மடிமறப்பு[4] பிழைப்பு[5] என்றிவை முதலாயவுமாம்[6]. நாண்[7] இழி தொழில்களில் மனம் செல்லாமை. இவை பெரும்பான்மையும் தக் கோர்வாய்க் கேட்டலாகிய ஆகம அளவையால் தெரிவன. இந்நான் கும்[8] உடையவனையே தெளிக என்பதாம்.

ஊ) *கவிராசர்.*: உயர்ந்த குடியிலே பிறந்து குற்றத்தின் நீங்கி 'நமக்குக் குற்றம் வரப்போகிற' தென்று பயப்பட்டு நடக்கிறவனையே தெளிக எ—று.

ஏ) *பழைய 2*: உயர்ந்த குடியுட் பிறந்து, குற்றத்தை நீங்கி, வடு வினுக்கஞ்சிப் பரிகரிக்கும் நாணமுடையவன் கண்ணதே அரசனுக்குத் தெளிவு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்;

'குற்றம்' காமம் வெகுளி முதலாயின; '*பரியும்*'-அறுக்கும். இதுவும் உடன்பாடு என்றது. என்பது முன்னர்க் கூறப்பட்ட அறம் பொருள் இன்பம் உயிரச்சத்தோடு இவற்றையும் ஆய்ந்து தெளிதலும் உடன் பாடு என்பது.

பரி தி., 'குடி' 'செல்வக்குடி' என்றது ஆய்வுக்குரியது. அங்ஙன மே '*வடு பரியும் நாண்*'-குற்றமில்லாத நாணம்' என நாணத்திற்கே அடைமொழியாக்கியதும் 'பரியும்-நீக்கும்' என்பதைப் ''பரிவதூஉம் சான்றோர்கடன்'' என்பதுபோல குற்றத்திற்காக வருந்துதலும் நீக்க முயற்சித்தலும் என்ற உரை கொள்ளத்தக்கன. *பரிமேலழகர்* இதனையே கருதுவர்.

காளி., 'உடனிருந்து உண்ணத்தக்கவனும்' என்று தரும் விளக்கம் உயர்குடிப்பிறந்தோர் பொதுமக்களோடு உடனிருந்துண்ணும் பழக்க மின்மையைக் காட்டுகிறது. '*நாணம்*—மானம்' என்பர்.

---

3. வகையாறு - காமம் வெகுளி கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்பன
4. மடி - செய்தொழிலில் ஊக்கமின்றிச் சோம்பிக் கிடத்தல்.
5. பிழைப்பு - தவறுதல்.
6. இவை முதலாயின என்றதனால் கூடா ஒழுக்கம், கூடா நட்பு, ஒப்புரவின்மை என் பதையும் கொள்க.
7. 'நாண்' செய்யத் தகாதனவற்றுள் உள்ளம் ஒடுங்குதல் என்பர் நச்சினார்க்கினியர் 'ஒப்பும் உருவும்' என்னும் நூற்பாவுரையிற் காண்க.
8. இந்நான்கு - குடிப்பிறத்தல் முதலாக இக்குறளிற் கூறிய நான்கும்'

இராம., 'குற்றத்தின் நீங்கி இதுவரை குற்றமே செய்யாதவனாகவும், 'வடுப்பரியும்-குற்றங்கள் செய்துவிடக் கூடாதே எனக் கூசுகின்றவனாகவும்.' உள்ளவனைத்தேர்க' என்பர்.

வரதராசனார்,' நாண்–தவறான எண்ணத்திற்கு வெட்கப்படுவது என்பர். தேவநேயர் 'நாண்–இழிதொழில் பற்றிய நன்மக்களது அருவருப்பு ''கருமத்தால் நாணுதல் நாணு'' (குறள் 1011) குடிப்பிறப்பு தக்கார் உறவினருரையாலறியத் தக்கது. குற்றத்தினீங்குதலும் வடுப்பரியும்நாணும் அறமுதலான நால்வகைத் தேர்வு நெறிகளான் வெளிப்படுவன' என விளக்கமுந்தருவர் சி.இ. 'குடி-ஒழுக்கமுடைய நல்ல குடி.' இவ்வுரைகளுள் குடி-பண்பால் உயர்ந்த குடி, வடுப்பரியும்-'பழிவந்துவிடுமோ என்று அஞ்சுவதற்கு அஞ்சி அதனை நீக்க முயலும் என்ற உரைகள் தக்கவை.

குடிப்பிறப்பு இயற்கைக் குணத்தையும் பரந்த ஞானத்தையும் விளைவிப்பது. குற்றத்தின் நீங்குதல் இனத்தூய்மையானும் கல்வியறிவானும், பழிக்கு அஞ்சுதல் மனத்தூய்மையானும் விளைவன ஆதலின் இவற்றால் தெளிய மேற்கூறிய அனைத்தும் அமைந்திருக்கும் என்பது அறிந்தானாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

'குடிப்பிறந்து—நாணுடையான்':

''குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானை'' —குறள் 794.

குற்றத்தின் நீங்கி:

''செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார்...''
—கம்பராமா., 1407.

முற்றும்:

''நல்ல குடியில் பிறந்தாரும் நவையும் மறப்பும் மடிபிழைப்பென்று
அல்ல லுறுக்கும் இவை முதலாம் அனைத்தும் நீக்கிப் பழிக்கஞ்சி
ஒல்லல் உறுநாள் உடையானே ஓர்ந்து தெளியப் படும்மைந்தா
வல்ல கலைதேர்ந்(து) ஆசற்றார் மாட்டும் வெளிறு மருவிடுமே.''
—வி.நா.அரசி.76.

ஒருபுடை:

''குலம் சொல்லும் குணத்தை.'' —பழமொழி.

ஒ) மேற்கோள்பகுதி:

சிவஞான.: ஐந்தாம் வேற்றுமை நீக்கப் பொருள் நிலைத்திணை இயங்குதிணை பண்பாதியின் வரும் எனக்கூறி, ஆதி என்றமையால் 'குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி' என வருமெனவும் கொள்க என்பர்.
—நன்., 299

சுவாமி.: ஷை. —இ.கொ., 38

51.3. அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு. (நி๐๘)

உரைப்பகுதி:

அ) மணக்.: கற்றற்கரிய நூல்களைக் கற்றுக் குற்றமற்றார்மாட்டும் ஆராயுங்கால் குற்றமின்மை இல்லை எ—று.

ஆ) பரிதி.: நல்ல கல்வி கற்றார் குற்றமற்றார் விசாரித்தால் குற்றப் பரிமாகையால் அவர்களைக் குற்றமுடையரென்று கைவிடுவானல்லன் எ—று.

இ) பரிப்.: கற்றற்கு அரியனவற்றைக் கற்றுக் குற்றம் அற்றார் மாட்டும் ஆராயுங்கால் குற்றமின்மை இல்லை எ—று.

கல்வியுடையார் உள்ளும் புறம்பும் தூயாரைத் தேறலாம் என்பது துரோணாசாரியர் மதம்,[1] அவ்வளவில் தேறலாகாது என்று இது கூறப்[illegible].

ஈ) காளி.: இவ்வுலகத்துப் பலரானும் கற்றற்கு அரியனவாகிய திருந்திய நூல்களை நிறையக் கற்று மற்று அதனானே இருமைக் குற்றமும்[2] நீங்கினார்மாட்டும் பற்றி ஆராயுங்காலத்துக் குற்றமும் இல்லாமைச் சான்றோர் ஆதல் அரிது; எனவே கீழ்ச்சொல்லிய ஆங்கே தெரிந்து தெளிக என்பது பொருள் ஆயிற்று எ—று.

உ) பரிமேல்.: கற்றற்கு அரிய நூல்களைக் கற்று மேல் சொல்லிய[3] குற்றங்கள் அற்றார்மாட்டும் நுண்ணிதாக ஆராயுமிடத்து வெண்மை இல்லாமை அரிது.

---

1. துரோணரின் பொருள் நூல் கொள்கை.
2. இருமைக்குற்றம்-இம்மை மறுமை இரண்டற்கும் ஆம் குற்றம். அவை தீயவினைகள்.
3. மேற்சொல்லிய-502ஆம் குறளில் 'வடுப்பரிந்து' என்பதற்குப் பரிமேலழகர், காட்டிய குற்றங்கள்.

வெண்மை—அறியாமை[4]. அஃது[5] அவர்மாட்டு உளதாவது மனத்தது நிலையாமையான்[6] ஒரோவழியாகலின், தெரியுங்கால் என்றார். காட்சி அளவையால் தெரிந்ததால் அதுவுமில்லாதாரே தெளியப்படுவர் என்பது குறிப்பெச்சம். இவ்வளவைகளான்[7] இக் குணமும் குற்றமும் தெரிந்து குணமுடையாரைத் தெளிக என்பது இவை மூன்று பாட்டானும் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: கற்கவேண்டிய நூல்களைக் கற்றுக் குற்றங்களில்லா தவர்களிடத்திலேயும் நன்றாக வாராயுமிடத்து, அறிவின்மை இல்லா மலிருக்கிறது அரிது எ—று.

ஏ) பழைய 2: கற்றற்கரிய நூல்களைக் கற்று மேற்சொல்லிய குற்றங்கள் அற்றாரிடத்தும் நுண்ணிதாக ஆராயுமிடத்து வெள்ளறி வில்லாமை அரிது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்

மணக். 'வெளிறு-குற்றமின்மை' என்பர். பரிப், தெரியப்புகு வார் கல்வியுடையராயின் உள்ளும் புறம்புந்தூயாரைத் தேறலாம் என்பது **துரோணாசாரிய** மதம். அவ்வளவில் தெளியலாகாது' என்பது **வள்ளுவர்** கருத்து என்பர்.

பரிதி., 'அரியகற்று ஆசற்றார்' என்பதனை விகுதி பிரித்துக் கூட்டி 'அரிய கற்றார் ஆசற்றார்' என்பர். 'வெளிறு இன்மை அரிது-குற்ற மிலராதல் அரிது'; எனவே 'எல்லோரும் குற்றமுடையவர்களே ஆவர். ஆதலால் மன்னன் கைவிடுதலாகாது' என முடிபினை இவரே வழங்கு வர். இம்முடிபு அடுத்துவரும் குறளை நோக்கித் தோற்றுவாயாக எழுதப்பட்டது போலும். இவர் உரையமைதி இவர்கண்ட பாடம் 'அரிய கற்றார் ஆசற்றார்' என்பதாகலாம். இது தளை கெடாதாயி னும் ஓசையினிமையின்மை தெளிக. **காளிங்கரும் பரிதியார்** போன்று வருங்குறளின் வருவாயாகக் கொண்டு உரைப்பர்.

பரிமேல்., 'வெண்மை - அறியாமை'. இவ்வுரைகளுள் **மணக்குட வருரையும்** அவரை ஒட்டியெழுந்த **பரிமேலழகர்** உரையும் சிறந்தன.

---

4. வெண்மைப் பண்பு இனம் பற்றியும், இனம் பற்றாமலும், சினையை விட்டு முதலைப் பற்றியும், எதிர்வு பற்றியும், இழிபு பற்றியும், சாதி பற்றியும், புதுமை பற்றியும்' பொய் பற்றியும், உள்ளீடின்மை பற்றியும், இயல்பு பற்றியும் இன்னும் பலவாற் றானும் வரும். அவற்றுள் ஈண்டு உள்ளீடாகிய அறிவு இல்லாமை பற்றி வந்தது.
5. 'இஃது இவர் மாட்டு உளதாவது' எனவும் பாடம். அறியாமை அரியகற்றாரிடத்தும் உளதாவது என்பது பொருள்.
6. நிலையாமை - தடுமாற்றம்.
7. இவ்வளவைகளால் - காட்சியும் கருத்தும் நூலும் ஆகிய மூவகையளவைகளால்.

பிற்கால உரைகளுள், இரண்டாம் 'ஆசு-ஐயமுந்திரிபுமாகிய குற்றங்கள். 'வெளிறு-மனம் பொருந்தாமை என்பர். மனம் பொருந்தாமை இல்லாதிருப்பது கடினம் எனின் இரண்டு எதிர்மறை ஒருடம்பாட்டுக் கருத்தையே விளக்குமென்றல் தருக்கமுடிபாகலின் மனம் பொருந்தாமையில்லாமை-மனப்பொருத்த உண்மை என்றாய்விடும். அதற்காக இவரே மனம் பொருந்தாமையாவது நம்பத்தகாமையாம் எனப் பொருளும் எழுதவேண்டிய இன்றியமையாமை எற்பட்டதென்க 'வெளிற்றுப்பனை' என்பது போல உள்ளீடாகிய அறிவு இன்மையையே உணர்த்தும் பழஞ்சொல் இது. (புறநா) 'வெளிறு-மனப்பொருத்தமின்மை அதாவது நம்பத்தகாமை' என்பர்.

வரதராசனார் 'ஆய்ந்து நோக்கின். அவர்களிடத்தும் சிற்சில சமயங்களில் அறியாமை வெளிப்படும்' என்பர். இது ஏனையோர் கருத்தை ஒத்தேயுள்ளது

தேவநேயர் : 'ஆசு அற்றார்-ஐவகையும் ஆறுவகையுமாகிய குற்றங்கள் அற்றார்' என்பர் ஐவகைக் குற்றம், அவிச்சை, அகங்காரம், அவா ஆசை வெகுளி என்பன அறுவகைக் குற்றங்கள் காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம் என்பன. இவற்றுள் ஒன்றிரண்டு குற்றமும் இருந்தாலும்தெரியலாம்' என்பர். குழந்தை. கற்பவை கற்றுத் தெளிந்தவர்களிடத்தும் ஏதேனும்குறை காணப்படும். அதனால் நீக்கலாகாது' என்பர். ஏனையோரிடம் சிறிதும் கருத்து மாற்றமில்லை.

அரியகற்றல்-ஆட்சிக்குரிய பொருள் நூல், போர்நூல், நீதிநூல் முதலியவகைகளைக் கற்றல். ஆசு அறுதல்-ஐயந்திரிபு அறுதல் என்க.

ஒ) ஒப்புமைப்பகுதி

வெளிறு இன்மை:

வெளிறிலாக் கேள்வியானை வேறுகொண் டிருந்து சொன்னான்
— சீவக., 200.

வெளிறிலாக் கேள்வியான் விருப்பொடு எய்தினான்
— சீவக , 1617.

முற்றும்

''நற்பால கற்றாரும் நாடாது சொல்லுவரால்
இற்பால ரல்லார் இயல்பின்மை நோவதென்

கற்பால் இலங்கருவி நாடமற் றியாரானும்
சொற்சோரா தாரோ இலர். —பழ. நா.

விற்றாங்கு வெற்பன்ன விலங்கெழில் தோளமெய்ம்மை
உற்றார்சிலர் அல்லவ ரேபலர் என்பதுண்மை
பெற்றாருழைப் பெற்ற பயன்பெறு பெற்றியல்லால்
அற்றார்நவை யென்றலுக்கு ஆகுநர் ஆர்சொல் என்றான்.
—கம்பராமா , 4081

ஒ) மேற்கோள் பகுதி:

சிவஞான.: சேனாவரையர் கூற்றினை மறுக்கின்ற இடத்து, 'ஒரோ விடங்களில் மயங்கிக் கூறுவர்; அங்ஙனம் ஒரோவழி மயங்குதல் பற்றி அவரை இகழற்க. நச்சினார்க்கினியர் முதலியோர் போல யாம் பிடித்ததே சாதிப்போம் என்னும் செருக்கால் யாண்டும் மயங்காமையின், முக்குணங்களும் மாறி மாறி வருதலின் அதுபற்றி எனைத்துணை நுண்ணறிவாளரும் ஒரோவழி மயங்குதல் இயல்பென்க' எனக்கூறி இக்குறளையும் அடுத்த குறளையும் எடுத்துக் காட்டுவர்.
—தொல். விருத்.பக்., 46.

51.4. குணநாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல். (குஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒருவனுக்குள்ள குணத்தையும் ஆராய்ந்து குற்றத்தையும் ஆராய்ந்து அவற்றுள் மிக்கதனையறிந்து, அவற்றுள்ளும் தலைமையானும் பன்மையானும் மிக்கதனைக் கொள்க எ—று.

ஆ) பரிதி.: ஒருவன் செய்த குற்றமும் நன்மையும் சீர்தூக்கிப் பார்த்து அதில் நற்குணம் தீயகுணம் மிகுதி யாது? என்று ஆராய்ந்து அதில் குணத்தைக் கொள்க எ—று.

இ) பரிப்:. ஒருவனுக்கு உள்ள குணத்தையும் ஆராய்ந்து குற்றத்தையும் ஆராய்ந்து அவற்றுள் மிக்கதனை அறிந்து அவற்றுள்ளும் தலைமையானும் பன்மையானும் மிக்கதனை அறிந்து கொள்க எ-று.

இது கௌடலீயர் மதம். காரியம் பல ஆதலின் அது செய்வாரும் பலர் வேண்டும்; ஆதலால் அவரெல்லாரையும் நற்குணத்தராகத் தேடுதல் அரிது என்பதனால் இது கூறப்பட்டது.

ஈ) **காளி**.: ஒருவரைச் சீர்தூக்கிக் கொள்ளும் இடத்து இவர் மாட்டுக் குணம் எத்துணை உள என்றும், குற்றம் எத்துணை உள என்றும் தெரிந்து, மற்று அதன் பின்னர் அவற்றுள் மிகுதலுடையன வற்றைத் தெரிந்து. இதின் குணம் மிக்கனவாயின் தெளிந்து கொள்க; அல்லது குணம் மிகுதல் இல்லையாயின் தெளிய வேண்டா எ—று.

உ) **பரிமேல்**.: குணம் குற்றங்களுள் ஒன்றே உடையார் உலகத்து இன்மையின் ஒருவன் குணங்களை ஆராய்ந்து, ஏனைக் குற்றங்களை யும் ஆராய்ந்து பின் அவ்விரு பகுதியுள்ளும் மிக்கவற்றை ஆராய்ந்து அவனை அம்மிக்கவற்றானே அறிக.

மிகை உடையவற்றை மிகை என்றார்[1] அவையாவன தலை யானாகப் பன்மையானாக உயர்ந்தன[2] அவற்றான் அறிதலாவது குணம் மிக்கதாயின் வினைக்கு உரியன் என்றும், குற்றம் மிக்கதாயின் அல்லன் என்றும் அறிதல். குணமே உடையார் உலகத்து அரிய ராகலின், இவ்வகை யாவரையும் தெளிக என்பது இதனால் கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்**.: ஒரு குணமுமில்லாதவர்கள் லோகத்திலேயில்லை; ஒருகுற்றமுமில்லாதவர்களுமில்லை. ஆனபடியினாலே, ஒருவன் குணங் களையும் குற்றங்களையும் ஆராய்ந்து, குணம் அதிகமாயிருந்தால் தெளிக எ-று.

ஏ) **பழைய 2**: 'மிகனாடி' பாடம்.

குணத்தையும் குற்றத்தையும் ஒருவனிடத்து ஆராய்ந்து குண மிகுத்தானைக் குணவானென்றும் குற்றமிகுந்தானைக் குற்றத்தா னென்றும், குற்றத்தானைத் தள்ளிக் குணவானைக் கொள்க என்றவாறு.

மல்லர்: என்பது ஒருவனுடைய நற்குணங்களுள் ஆராய்ந்து குற்றங் களுமாராய்ந்து பார்த்து மிஞ்சின குணத்துக்கு அதுக்குள்ளே மிஞ்சின தொன்று ஆராய்ந்து பார்த்து மிஞ்சின குணத்துக்குத் தக்க அவனை மதிக்க வேணும் என்றவாறு.

ஒரு குத்தமும் இல்லாதவன் லோகத்திலே கிடையாதபடியினால் அரசன் ஒருவனை உத்தியோகத்தில் வைக்கவேணுமானால்

---

1 மிகை-குணமும் குற்றமும். குணம் குற்றம் என்னும் இயற்கைப் பண்பின் பெயர் அவற்றையுடைய செயல்களை உணர்த்தின

2 தலைமையான் உயர்தல் ஐம்பெரும் பாதகங்களுள் பொய்யாமை ஒன்றிருக்குமாயின் அதன் வாயிலாக ஏனைய நான்கும் நீங்குமாதலின் பொய்யாமை தலைமை பற்றிய குண மாம் அதுபோல தெரிவான் மாட்டுப் பல நீமைகளிலிருந்து தலையாய நன்மை யொன்றிருக்குமாயின் அதனைக்கொண்டு தெளிதல். பன்மைபற்றித் தெளிதல் குணங்குற்றங்களுள் பன்மைபற்றித் தெளிதல்.

அவனிடத்திலே யாதொரு குத்தமுங் கண்ட அப்போவே அவனை விடாமல் அவனுடைய நற்குணங்களுக்கு மிஞ்சின குற்றங்களுஞ் சோதித்துப் பாத்து நற்குணங்கள் குற்றங்களுக்கு மிஞ்சியிருந்தால் உத்தியோகத்துக்குரியவன் என்றும் நற்குணங்களுக்குக் குற்றங்கள் மிஞ்சினால் ஆகாதவன் என்றும் எண்ணிக் கொள்ள வேண்டியது என்பது கருத்து.

நாடல் - ஆராய்தல்; அவற்றுள் – அதுக்குள்ளே; மிகை – மிகுதி; கொளல் - எண்ணிக் கொள்ளுதல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவரை ஒட்டிப் பரிமேலழகரும் 'மிகை' என்பதனைப் பன்மையாலும் எண்ணுக; தன்மையாலும் எண்ணுக என்கின்றனர். பன்மை ஒன்றே கருதிக் கொள்ளவோ தள்ளவோ செய்தவராயின் பல தீயகுணங்கள் அதாவது குற்றங்கள் செறிந்துள்ள இடத்தில் சில நற்குணங்கள் வேறு எங்கும் காண இயலாத வண்ணம் இருக்கும். அத்தகைய ஒருவனுடைய சேவை நாட்டிற்கு மிகமிகத் தேவையாதலுங் கூடும். அங்குத் தன்மைக்கே தலைமை தருக என்றது மிகச் சிறந்த கருத்தாகும். தேவநேயரும் இக்கருத்தினரே.

காளிங்கர், பரிதி, பழைய உரை, கவிராசர் உரைகள் குணம் குற்றங்களின் பன்மையை மட்டுங் கருதிக் கொள்ளுக தள்ளுக என்கின்றன. இதனை ஒட்டியுரைப்பர் இராமலிங்கனாரும், குழந்தையும், இலக்குவனாரும், சாமி சிதம்பரனாரும், சபாபதி முதலியாரும்.

பரிப்பெருமாள், அரசியல் செயல்கள் பலவாதலால், அரசியற்கு நற்செயல் செய்வாரும் தீச்செயல் செய்வாருமாகிய இருதிறத்தாரும் தேவையாகலாம். குண—குற்றங்களின் மிகை நாடி அவரவரை அவரவர்க்குத் தக்க காரியங்களில் நிறுவுக; தேருக' என்கின்றார். இது ஏனையோர் கருத்தினும் புது நோக்குடையது. கொலைத் தண்டத்தை நிறைவேற்றக் கொலைக்குணம் உடையானுந்தேவை. ஆதலால் இவ்வுரை அரசியல் நோக்குடைய சிறந்த உரையாகும்.

கா.சு. 'ஒருவன் குணமுடையவனா குற்றமேயுடையவனா என்பதை மிகுதி பற்றித் தெளிந்து, அவனைக் குணவான் என்றோ குற்றவாளி என்றோ துணிய வேண்டும்' என்கிறார். ஏனை குறட் பாக்கள் தெரிந்து வினையாளுதலுக்குத் துணையான முன்னோடி யாகத் தெளிதலைக் கருதுகின்றன. ஆதலால் அமைச்சு ஒற்று முதலியவற்றிற் கொள்ளுக என்பதே கருத்தாதலைக் காணலாம்.

மு.கோ. 'மிகை' என்பதற்குக் குற்றமெனவே பொருள் கொண்டு 'மிக்கதுணம் மிக்கதாயின்' என இணைத்து இடர்ப்படுவர்.

வரதராசன் 'குற்றம் நாடி' என்பதால் 'குற்றங்காணக் கூடாது'' என்பதும், 'மிக்க கொளல் என்பதால் குணமே கொள்ளத்தக்கது, என்பதும் பெறப்படும் என நயங்காண்பர். இது குறட்பாவின் அமைப்புக்கு ஏற்புடையதானாற் கொள்ளலாம்.

இவ்வுரைகளுள் பாலமைப்புக்கும் இயற் கூறுகட்கும் இயைய நிற்பது பரிப்பெருமாள் உரை. அடுத்து நிற்பது மணக்குடவர் முதலானோருடைய உரைகள் என்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஒருபுடை

முத்திலும் சொத்தை உண்டு பவழத்திலும் பழுதுண்டு—பழமொழி.
... ... மெய்ம்மை
உற்றார்சில ரல்லவ ரேபல ரென்ப துண்மை —கம்பராமா.,4081

கைப்புகற் பாலனோ கழியற் பாலனோ
ஒப்புற நோக்கிலும் முணர்வி னாலென்றான் —கம்பராமா.,6547

குற்றமு மேனைக் குணமு மொருவனை
நட்டபி னாடித் திரிவே னேல் —நட்டால்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
அறைகேடல்சூழ் வையக நக —நாலடி. 230

ஒ) மேற்கோள்பகுதி:

சிவஞான.: முன் குறளைப் பார்க்க.

51.5. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல். (நஅந)

அ) மணக்.: ஒருவனைப் பெரியனாக்குதற்கும் மற்றைச் சிறியனாக்குதற்கும் வேறு தேட வேண்டா; அவரவர் செய்யவல்ல கருமந் தானே அதற்குத்தக ஆக்கும் படிக்கல்லாம் எ—று.

இஃது ஒருவனை ஒருகாரியத்திலே முற்படவிட்டு, அவன் செய்யவல்ல அளவுங் கண்டு, பின்னைப் பெரியனாக்க அமையும் என்றது. இது குற்றங்கூறாமை பலவற்றிற்குமுள்ள வேறுபாடென்று கொள்ளப்படும்.

ஆ) *பரிதி.:* இவர் பெரியவர் இவர் சிறியவர் என்னவேண்டாம்; அவரவர் செய்த தொழிலே சொல்லும் எ—று.

இ) *பரிப்.:* ஒருவனைப் பெரியன் ஆக்குதற்கும் சிறியன் ஆக்குதற் கும் வேறு தேட வெண்டா: அவர் அவர் செய்யவல்ல கருமம் தானே படிக்கல்லாம்: அதற்குத்தக ஒழுக எ—று.

ஒரு காரியத்தில் முற்பட விட்டு அவன் செய்யவல்ல அளவு கண்டு பின்னைப் பெரியன் ஆக்க அமையும் என்பது நாரதர் மதம். இது குற்றம் கூறாமையால் யாவர்க்கும் உடம்பாடு என்று கொள்ளப்படும்.

ஈ) *காளி.:* உலகத்துப் பெரியோரது பெருந்தன்மைக்கும் சிறி யோரது சிறுதன்மைக்கும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை ஒருவர் தேறி அறிய வேண்டுங்கால் வேறு ஒன்றும் வேண்டுவது இல்லை; மற்று என்னை எனின், அவர் அவர் செய்யும் செய்தி வேற்றுமைதானே அவரது தகுதி மாற்று[1] அறியும் கருவியாகிய உரைகல்லும் நிறை தூக்கிய கட்டளைக் கல்லும் எ—று,

உ) *பரிமேல்.:* பிறப்பு குணம் அறிவு என்பனவற்றான் மக்களெய் தும் பெருமைக்கும் மற்றைச் சிறுமைக்கும் உரைகல்லாவது, தாம் தாம் செய்யுங்கருமமே, பிறிது இல்லை.

இஃது ஏகதேச உருவகம்[2]. மக்களது பெருமையும் சிறுமையும் தப்பாமல் அறியலுறுவார்க்குப் பிற கருவிகளும் உளவாயினும், முடிந்த கருவி செயல் என்பது தேற்றேகாரத்தால் பெற்றாம். இதனால் குணங் குற்றங்கள் நாடற்குக் கருவி கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்:* பிறப்பு குணம் அறிவு என்பனவற்றால் மனுஷர்கள் எய்தும் பெருமைக்கும் சிறுமைக்கும் அவர்கள் செய்கிற காரியங்களே யல்லாமல் வேறொன்றில்லை எ—று.

ஏ) *பழை2 :* பிறப்பு, குணம், அறிவு என்பனவற்றால் மக்கள் பெருமைக்கும் மற்றச் சிறுமைக்கும் உரை கல்லாவது தாந்தாம் செய் யும் கருமமே; பிறிதில்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்

மணக்குடவர் 'கட்டளைக்கல்-படிக்கல்' என்பாராயினும் 'உரை கல்' என்னும் *பரிமேலழகர்* உரை சிறந்தது. படிக்கல்-நிறையறியும்

1. தகுதிமாற்று—தகுதியின் சிறப்பினை.
2. ஏகதேச உருவகம். கவிஞன் உருவகிக்கக்கருதிய பொருள்களுள் ஒன்றை உருவகித்து மற்றொன்றை உருவகிக்காது விடுவது. இங்குக் கருமத்தை உரைகல்லாக உருவகித் தவர் பெருமை சிறுமைகளைப் பொன்னாக உருவகிக்காது விட்டனர்

கல். உரைகல்-மாற்று அறியும் கல். இரண்டற்கும் வேறுபாடு இது.

பரிப். 'அவனவன் செயலைக் கொண்டு பெரியன் சிறியன் எனத் துணிதலான் யாரையும் குற்றங் கூறுவதாகாது. எல்லாரும் ஒப்புவர்' என அமைதியுங் கூறுவர். *காளிங்கர்* 'அவரவர் தகுதி மாற்று அறியுங் கருவியாகிய உரைகல்லும் நிறைகல்லும்' என இரு பொருளுங் காண்பர். இங்ஙனம் *காளிங்கர்* இருவகைக்கல்லையும் கொள்வதன் நோக்கம் தீச்செயல்களைக் கொண்டு குற்றங்களை அளந்து காணும் போது நிறைகல்லையும் நற்செயல்களைக் கொண்டு தரத்தை வரையறுக்கும் போது உரைகல்லையும் நாம் கொள்ள அமைத்தனர் எனலாம்.

அரசன் அமைச்சர் முதலாயினாரைத் தெரிந்து தெளிதலாதலின், *மணக்குடவர்* ''பெரியன் ஆக்குதற்கும் சிறியனாக்குதற்கும்'' எனப் பிறவினைவாய்பாட்டால் உரை கூறினர்.

பரிதியார்உரை 'ஒருவனைப் பெரியவன் அல்லது சிறியவன் என்று நீ சொல்லாதே; அவனவன் தொழிலே காட்டும்' என்கிறது. இது அரசன் தெரிந்து தெளிதலை நேரேயுணர்த்திலது. *பரிமேலழகர்* உரை 'பெருமையும் சிறுமையும் மக்களுக்குப் பிறப்பு குணம் அறிவு இவற்றான் விளைவன; செயல் அப்பெருமை சிறுமைகளைக் கண்டறியும் அளவையாகிறது' என்கிறது. இங்ஙனம் உரை முடிவு ஒத்தன போற்றோன்றினும் ஆங்காங்குச் சிறிது கருத்து வேறுபடுதலைக் காணலாம். *இராமலிங்கனார்* 'பெருமை சிறுமை என்பன முன் குறளில் சொன்ன குணம் குற்றம் என்பவைகளேயன்றி வேறல்ல' என்பர். மணிகளின் மதிப்பு, மதிப்பீடு செய்பவனால் உயர்வதுபோல குணம்-குற்றங்களின் பெருமைசிறுமைகள் மதிப்பவனால் அவனவன் செயலைக் கொண்டு வரையறுக்கப் படுவனவாதலின், குணமும் குற்றமும் காரணமும், பெருமை சிறுமை அவற்றின் விளைவுமாகின்ற வேறுபாடுடைமை தெளியப்படும் என்பது.

தேவநேயர் 'பெருமை மக்களுக்கு அறிவாற்றல், குணம், கல்வி, பொருள் ஆகியவற்றால் விளைவது' என்பர். *பரிமேலழகர்* 'பிறப்பு குணம் அறிவு' என்ற மூன்றைமட்டும் பெருமைக்கு ஏதுவாகக் கூறுவர். *தேவநேயர்* பிறப்பை நீக்கிக் கல்வியையும் பொருளையும்' இணைப்பர். கல்வியறிவினுள் அடங்குவதாலும், ''பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள' என்பது ஆசிரியர் ஆணையாதலானும் *பரிமேலழகர்* அவற்றை எண்ணாதிருக்கலாம். வேம்பிற்குக் கசப்பும் கடுக்காய்க்குத் துவர்ப்பும் பிறவிக்குணமாதல் போல பிறப்பியற்கையால் பெருமை சிறுமைகள் உண்டாதலும் கூடும் என எண்ணுக. கருமம் அளக்குங் கருவியன்றி அளக்கப்

படும் பொருள் ஆகாது ஏன்பது துணிவு. ஆனால் பிறப்பொக்கும் என்ற குறளால் செய்தொழில் வேற்றுமையாற் பிறப்பு சிறப்பு ஒவ்வா என 'விதித்தலின் பிறப்பையும் இணைத்து எண்ணுதலாற்றவறின் மையைக் காணலாம்.

ஓ) ஓப்புமைப்பகுதி:

கருமமே கட்டளைக்கல்:

இனையது ஆதலின் எக்குலத் தியாவர்க்கும்
வினையி னால்வரு மேன்மையுங் கீழ்மையும்.
—கம்பராமா.,4161

தருமம் பற்றிய தக்க வர்க்கெலாம்
கருமங் கட்டளை யென்றல் கட்டதோ. —கம்பராமா.4214

தத்தம் கருமமே கட்டளைக் கல். —பழமொழி

முற்றும்:

நன்னிலைக் கட்டன்ை நிறுட்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானுந தான். —நாலடி. 248

.... தன்னை
இறைவனாச் செய்வானும் தானேதான் தன்னைச்
சிறுவனாச் செய்வானுந் தான் —அறநெறி—171

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும
தானே தான்செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி. —அறநெறி—172

கோதில் நலவினை செய்தவர் உயர்குவர் குறித்துத்
தீது செய்தவர் தாழ்குவர் இதுமெய்ம்மை ... ...
—கம்பராமா.. 6368

பெருமை சிறுமை அளந்துகொளப் பேணும் கருவி தத்தமது
கருமம் அதுபோல் பிறகருவி கழியச் சிறந்த வலஅறிக.
—விநா.அரசி .78

பெருமையும் சிறுமையும் தான் தர வருமே. —பழமொழி

51.6. அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர் பற்றிலர் நாணார் பழி. (நுoசு)

அ) மணக்.: ஒழுக்கம் அற்றாரைத் தேறுதலைத் தவிர்க: அவர் ஓரிடத்துப் பற்றுடையரும் அல்லர்; பழிக்கும் நாணார் ஆதலான் எ—று.

ஆ) பரிதி.: பொருளும் கிளையும் கல்வியும் அற்றாரை நம்பாதே; ஏன் என்றால் அவர் பற்றும் இலர்; பழிக்கும் நாணார் எ—று.

இ) பரிப்.: ஒழுக்கம் அற்றாரைத் தேறுதல் தவிர்க; அவர் ஓரிடத்தும் பற்று உடையரும் அல்லர்; பழிக்கும் நாணார் ஆதலான் எ—று.

அரசனோடு ஒத்த மறைந்த குற்றம் உடையாரைத் தேறலாம்; அவர் தம் குற்றம் மறைக்குமாறு போல அவர் குற்றமும் மறைப்பர் ஆதலான் என்பது மகேச்சுரர் மதம். அது குற்றம் என்று இது கூறப்பட்டது.

ஈ) காளி.: உலகத்துச் சிலரோடு நண்பும் நயமும் அற்று ஒழுகுவாரைக் கண்டால் தாமும் அவரைத் தேறுதலைப் பரிகரிக்க; என்னை எனின் தம்மாட்டு அவர் அந்நிலையர் ஆகலான் பாங்கினால் தம்மொடு பரிவிலர்; மற்று அதுவேயும் அன்றிப் பழி அஞ்சுதலும் இலர் எ—று

உ) பரிமேல்.: சுற்றமில்லாதாரைத் தெளிதலை ஒழிக; அவர் உலகத்தோடு தொடர்பிலர், ஆகலான் பழிக்கு அஞ்சார்.

பற்றிலர் என்பதனால் சுற்றம் என்பது வருவிக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பன ஒழிதற்கும் புகழ்வன செய்தற்கும் ஏதுவாகிய உலக நடையியல்பு சுற்றமில்லாதார்க்கு இன்மையின், அவர் தெளியப் படார் என்பதாம்.

ஊ) கவிராசர்: சுற்றத்தாரில்லாதாரைத் தெளிய வேண்டாம். அச்சுற்றம் இல்லாதார் உலகத்தோடு பொருந்தார்; பழிக்கு அஞ்சார் எ—று.

ஏ) பழைய 2: சுற்றமும் அன்பும் அற்றாரைத் தெளிதல் ஒழிக; அவர் உலகத்தோடு பற்றிலர் ஆதலாற் பழிக்கு நாணமிலர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அற்றார்' என்பதற்கு விளக்கம் தரும் வகையில் உரையாசிரியர்கள் பலரும் வேறுபடுகின்றனர்.

'ஒழுக்கம் அற்றார்'—மணக்., 'பொருளும் கிளையும் கல்வியும் அற்றார்' பரிதி, 'மறைந்த குற்றம் உடையார்' பரிப்.; 'சிலரோடு நண்பும் நயமும் அற்று ஒழுகுவார்.காளி.; 'சுற்றமில்லாதார்' பரிமேல் கவிராசர், கா.சு., சபாபதி, சாமி சிதம்பரனார், மு.ரா.அரு., தேவநேயர் அனைவரும் 'பற்றில்லாதவர்' வரதராசர், 'அன்பில்லாதவர்' இராம.

அங்ஙனமே 'ஓம்புக' என்பதற்குத் 'தேறலாம்' என்பவர் பரிப் பெருமாள் ஒருவரே. அனைவரும் 'தேறற்க' 'பரிகரிக்க', 'நீக்குக' 'நம்பாதே' எனப்பொருள் காண்பர்.

'ஒழுக்கம் அற்றார்'; ஒழுக்கம் நற்குண நற்செயல்களனைத்தும் அடங்கியதோர் பொதுச் சொல் ஆதலின் அஃதற்றாரைத் தவிர்க என்னும் மணக்குடவர் உரை சிறந்தது.

பொருளற்றார் வறுமையாலும், கல்வியற்றார் அறியாமையானும், கிளையற்றார்க்கு உலகில் ஒரு பற்றுக்கோடும் இன்மையானும் தீய செய்வராகலின் அவரை நம்பாதே என்கிறார் பரிதி.

அற்றம்—சோர்வு, அழிவு, ''அறிவு அற்றம் பார்க்கும் கருவி'' என்பதைக் காண்க. இச்சொல் அறுதலையுடையது என வினைமுதற் பொருளில் வந்த அம் விகுதி பெற்ற பெயராய்ச் சார்பாற் பலபொருள் தருமேனும், பரிப்பெருமாள் குற்றம் எனப் பொருள் கொண்டு அற்றார்–குற்றம் உடையார் அதினும் மறைந்த குற்றம் உடையார் எனக் கண்டனர். ''குற்றமும் நாடி'' என்ற குறட்பகுதிக்கும் இவ்வாறே பொருள் கண்டு குற்றமுடையவனை வினை செய்தற்குத் தெளிக என்றமையும் காண்க. (குறள் 504 பரிப். உரை)

ஒ) ஒப்புமைப்பகுதி:

பற்றிலர்.:

பகைய லாதவ ரைப்பகை யாக்கலும்
நகையில் தீமனத் தாரைநண் பென்னலும்
முகையின் வேய்ந்ததோர் மொய்ம்மலர்க் கண்ணியாய்
மிகையின் மற்றவை பின்னைவெ துப்புமே. —சூளா.,647

பற்றிலர்:

''அங்கும் இருப்பான் இங்கும் இருப்பான்.
ஆக்கின சோத்துக்குப் பங்கும் இருப்பான்.'' —பழமொழி

முற்றும்:

சுற்ற மிலரா னவர்தம்மைச் சூழ்ேல் பழிபா வமும் நாணார்
பற்று மிலரா குவர் ிடுக பண்பார் தருநற் குணங்களே
முற்று மூடையா ரிலர்அதனான் முனியும குற்றம் குணமிவற்றைத்
தெற்றென் றுணர்ந்து குணமிகுந்த செம்மை யுடையார் தமைத்தெளிக.

விநா. அரசி., 77

51.7. காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும். (ருoஎ)

அ) மணக்.: அன்புடைமையே பற்றாக, அறிவுடையாரல்லா தாரைத்தேறுதல் எல்லா அறியாமையும் தரும் எ-று.

ஆ) பரிதி.: வெகுளியை ஆதாரமாக ஒருவரை நம்புவானாகில் அதனாலே அனேகம் விதனம் வரும் எ—று.

இ) பரிப்.: அன்புடைமையே பற்றாக அறிவுடையர் அல்லாதா ரைத் தேறுதல் எல்லா அறியாமையும் தரும் எ—று.

அரசற்கு அன்புடையாரைத் தேறலாம் என்பது பராசரர் மதம் இஃது இவ்வளவினால் தேறல் ஆகாது என்றது.

ஈ) காளி.: ஒருவரோடு ஒருவர் வைத்த காதலுடைமையே மூலமாக உலகத்து அறிவது அறியாதாரைத் தெளிதல் யாது; மற்று அது தானே ஒருவர்க்கு அனைத்து அறிவுக் கேட்டையும் கொடுக் கும் எ—று.

காதன்மை கந்தா என்பது ஒருவர்மாட்டு ஒருவர் வைத்த காத லுடைமையே மூலமாக என்றது.

உ) பரிமே.: -அன்புடைமை பற்றுக்கோடாகத்[1] தமக்கு அறிய வேண்டுவன அறியாதாரைத்தெளிதல், அரசனுக்கு எல்லா அறிய மையையும் கொடுக்கும்.

தன்னோடு அவரிடை[2] நின்ற அன்புபற்றி அரசன் அறிவிலார் மேல் வினையை வைப்பின், அஃது அவர் அறிவின்மையால் கெடும்: கெட்டால் அவர்க்கு உளதேயன்றி[3] வினைக்கு உரியாரை அறியாமை,

1. பற்றுக்கோடு—ஆதாரம்.
2. அவரிடை- அறிவு அறியாரிடத்து
3. அவர்க்கு உள்ளதேயன்றி—அவர்க்கு இயல்பாக உள்ள அறிய வேண்டியனவற்றை அறியாமை மட்டுமேயன்றி.

மேல்விளைவறியாமை முதலாக அவனுக்கு அறியாமை பலவும் உளவாம் என்பதாம்.

ஊ) **கவிராசர்:** ஒருவர்மேலே தயையே காரணமாக வெண்ணிக் கொண்டு, அறியத்தக்கவற்றை அறியாதவரைத் தெளிந்தால், அந்த ராசாவுக்கு எல்லா வறுமையும் வரும் எ—று.

எ) **பழைய 2:** அன்புடைமை பற்றுக் கோடாகத் தமக்கறிய வேண்டுவன அறியாரைத் தெளிதல், அரசனுக்கு எல்லா அறியாமையும் அதனால் வரும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., 'காதன்மை – அன்புடைமை' எனப்பொதுவகையாற் கூறினும் காதன்மை மனைவி உரிமைச் சுற்றம் முதலான காதற் றொடர்புடையாரின் சுற்றத்தாரையும் நியமித்தலாகாது என்பதுமாம்.

பரிதி., 'காதன்மை வெகுளி' என்பர். ''அவுணர் தங்கிளையைக் காதி'' (**கந்தபு.** விடை பெறு. 43) என்புழிக் கொலை செய்தல் என்ற பொருளிலும் 'குயத்தாற் காதி' என்ற (**ஷெ வில்வலன் வாதாபிவதை.** 15ல்) வெட்டுதல் என்ற பொருளிலும் ஆக வருவன சில ஆட்சிகளை நோக்கின் காதுதல், காதல் என்ற தொழிற் பெயர்கள் வெகுளியான் விளையுங் கொல்லுதல் வெட்டுதலைக் குறித்தன. ஆகவே காதன்மை என்பது அத்தொழினிகழ்ச்சிக்கு அடியான பண்பையும் உணர்த்து மாதலின் வெகுளி எனப் பொருள் கண்டாரிவர். அவன் தன் மீது செலுத்தும் வெகுளிக்குப் பயந்தோ, தான் அவன்மீது செலுத்தும் வெகுளியாலோ நம்புவானாயின் பல விதனம் வரும் என்ற இவ்வுரை ஆழ்ந்த சிந்தனைக்குரியது. **சந்திரகுப்தன்** மீது கொண்ட வெகுளி காரணமாக **நந்தர்கள்** அறிவுடைய **சந்திரகுப்தனைத்** தேர்ந்து அற நிலையக் கண்காணிப்பாளனாக நியமித்தும், நந்தகுலமே பூண்டோடு அழியக்காரணமாக இருந்த வரலாற்றை எண்ணிப் பார்க்க. ஆதலால் வெகுளி காரணமாகத் தெளிதலாகாது என்பதும் இயைபுடைய உரையே என்க. பதவியில் முன்னிருப்பார் மீதுள்ள வெகுளியால் அவரை நீக்கி எனப்பொருள் விரித்து காதன்மை-வெகுளி என்பர் **மயிலை சிவமுத்து.**

பரிப்பெருமாள் மணக்குடவருரைக்கு விளக்கம் தருகிறார், **பரிமேலழகர், பரிப், மணக், காளி,** இவர்கள் நால்வரும் ஒத்த கருத்தினரேயாவார்.

கவிராசர்., 'காதன்மை-தயை' என்றார். அன்பின் முதிர்ச்சி தயையாதலின் இங்ஙனம் கூறினர் போலும். 'பேதைமை-வறுமை

என்றனர். 'அறிவிலார் என்னுடையரேனுமிலராதலின் வறுமை' எள்றனர் போலும்.

இராமலிங்கர்., காதன்மை உண்டாவது வெவ்வேறு ஏதுக்களின் ஆகலாம். அதற்காக அவர்கள் அறியாத காரியத்தில் அவர்களை நியமிக்கக் கூடாது என உரை தந்து, அறிவு அறியார் என்பது அறிவில்லாதவர்கள் என்னும் பொருளது என்று முடிவு கட்டி விடக் கூடாது. அரசன் நியமிக்க எண்ணும் அலுவலுக்கு அறியவேண்டிய வற்றை அறிந்து கொள்ளாதவர்கள் என்பதே பொருள். ''அறிவதறிந் தஞ்சுவதஞ்சி (நாலடி, 74) அறிவதறிந்தும்'' (நாலடி, 108) என்ற ஆட்சிகளாலும் அறியலாம்.

'கந்து-காரணம்' என்பது நேர்பொருளன்று. கலிகெழுகடவுள் கந்தங் கைவிட (புறநா.) 'மாலைநீ கந்தாதல்' (கலி. 120) முதலிய ஆட் சியில் பற்றுக்கோடு என்ற பொருள் தொல் வழக்காதல் காண்க. ஆகையால் காரணம் என்பது கருத்துப் பொருளாதல் தெளிவு.

தேவநேயர் 'பேதைமை எல்லாந்தரும்'என்பதற்கு,வினையறியாமை, வினைக்கு உரியாரைத் தெளிய அறியாமை, தன்னாக்கம் அறியாமை, குடிகள் நலம் அறியாமை ஆகிய இவை போன்ற பலவற்றையுந் தரும் என விளக்கந்தருவர்.

மு.ரா.அரு. பேதைமை- வினைசெய்தற்குரியாரை அறியாமை. பின் வருங்காரியம் அறியாமை என்பர்.

வரதராசர் -காதன்மை–ஒருவர் மாட்டு ஒருவர் வைத்த காதலு டைமை என்பர்.

மு.கோ., காதன்மை கந்தா-காதல் காரணமாகப் பெண்களை வினையில் அமைத்தலும், என்பர். மேலும் தேர்வுக்களத்தில் தக் காரை விடுத்துத் தகாதாரை அன்பு காரணமாகத் தெளிதல் என்பர் **சுப்பிரமணியதாஸ்.**

இவற்றுள் என்றும் இயைந்த நீதி நூன் மரபுக்கேற்ற உரைகள் கொள்ளத்தக்கவை.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

சுற்றத்தார் நட்டார் எனச்சென் றொருவரை
அற்றத்தால் தேறார் அறிவுடையார் - கொற்றப்புள்

ஊர்ந்துலகம் தாவிய அண்ணலே யாயினும்
சீர்ந்தது செய்யாதார் இல். —பழ.நா., 67

உடைப் பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்க மிலுள்ளத் தானாகி —நடக்கையின்

ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல் —பழமொழி

51.8. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை தீரா இடும்பை தரும். (நுoஅ)

அ) **மணக்.:** பிறனை ஆராயாதே வழிமுறை[1]யென்று தெளிந்தவனுக்கு அத்தெளிவு தீர்தலில்லாத துன்பம் உண்டாக்கும் எ—று.

இது தன் குலத்திலுள்ளாருள் அமாத்தியராயினார் வழியின் உள்ளாரைத் தேறலாம் என்றது.

ஆ) **பரிதி.:** ஒருவனிடம் பொல்லாக் குணத்தை விசாரியாமல் நம்பு வானாகில், அதனாலே அவன் தலைமுறைதோறும் துன்பம் வரும் எ—று.

இ) **பரிப்.:** பிறனை ஆராயாதே வழிமுறை என்று தெளிந்தவனுக் குத் தீர்தல் இல்லாத துன்பம் உண்டாக்கும் அத்தெளிவு எ—று.

வழிமுறை என்றது தன் வழியின் உள்ளார்க்கு அவன் வழியின் உள்ளார் அமாத்தியராய்ப்போந்த முறைமை. குலத்தின் உள்ளார்க்கு அமாத்தியர் ஆயினார் வழியின் உள்ளாரைத் தேறலா மென்பது வியாதன் மதம். அது குற்றம் என்று இது கூறப்பட்டது.

ஈ) **காளி.:** தான் பிறன் ஒருவனோடு மருவுதற்கு முன்னமே அவனது குற்றமும் குணமும் தெரிந்து ஆராயாது வறிதே பிறன் ஒருவனை நமக்கு இவன் துணை என்று நம்புதலைச் செய்தால் அது மற்று அதன்பின் முறையே வேறு ஒன்றானும் தீராத மரபுக் கேட்டைக் கொடுக்கும் எ-று.

உ) **பரிமேல்.:** தன்னோடு இயைபுடையனல்லாதானைப் பிறப்பு முதலியவற்றானும் செயலானும் ஆராயாது தெளிந்த அரசனுக்கு, அத்தெளிவு தன் வழிமுறையினும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்

1. வழிமுறை-தம்மரபு இதனைப் பரிப்பெருமாள் உரையிற் காண்க

இயைபு-தன் குடியொடு தொடர்ந்த மரபு. இதனானே அதுவும் வேண்டும் என்பது பெற்றாம். தெளிதல் அவன்கண்ணே வினையை வைத்தல், அவ்வினை கெடுதலால் தன் குலத்துப் பிறந்தாரும் பகைவர் கைப்பட்டுக் கீழாய் விடுவர் என்பதாம். நான்கனுருபு விகாரத்தால் தொக்கது[2].

ஊ) **கவிராசர்:** தன்மேலே பட்சமில்லாதவனைப் பிறப்பு முதலான வற்றாலும் செய்கையாலும் ஆராயாது தெளிந்த அரசனுக்கு. அந்தத் தெளிவு, தன் வம்சபரம்பரையினும் நீங்காத துக்கத்தைக் கொடுக்கும் எ-று.

ஏ) **பழைய 2 :** தன்னோடு இயைபுடையன் அல்லாதானைப் பிறப்பு முதலியவற்றானுஞ் செயலானும் ஆராய்ந்து தெளிந்த அரசனுக்கு, அந்தத்தெளிவு தன்குலத்திற் பிறந்தார்க்குத் துன்பத்தைக் கொடுக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., தேர்வுக்காக வந்தவன் எவனாயினும் அவனை ஆய்ந்து தெளிதலே முறை. அங்ஙனமன்றி தன்வழிமுறை என்று தெளிந்தானாயின், அத்தெளிவு தீர்விலாத் துன்பம் தரும் என்றனர். இவர் கருத்து வழிமுறை வருபவனாயினும் ஆய்ந்தே தெளியவேண்டும் என்பது. இதனாற் போந்த முடிவு அமாத்தியர் வழிவருபவனையும் தேறலார். ஆனால் ஆய்ந்தே தெளிதல் நல்லது என்பது. 'வழிமுறை தெளிந்தான்' எனின் வழிமுறை என்று மட்டும் தெளிந்தான் அதாவது குணம் குற்றம், அறம் பொருளின்ப ஆசைகள் இவற்றைப் பற்றி ஆராயாமல் தெளிந்தானுக்கு தீர்வில் துன்பம் உண்டாம் என்பது.

பரிதி, இவர் உரைப்போக்கும் அனைவரையும் ஆய்ந்து தெளிக என்பதே. **பரிப.,** மரபு வழியரசருக்கு மரபு வழி அமைச்சர் இருப்பது வழக்கம். அவன் அமைச்சன் ஆகக்கூடாது. தேர்ந்தே கொள்ளுதல் வேண்டும் என்பர்.

காளிங்., பிறன் ஒருவனைத் தேர்ந்த பிறகே துணையாக மருவுக அங்ஙனம் அன்றாயின் தீராத்துன்பம் விளையும் என்பர்.

பரிமேல., யாரையும் தெரிந்தே தெளிக என்பாராயினும், இயைபு என்பதற்கு அவர் தரும் விளக்கம் தேர்ந்தெடுக்கப் பெறுபவனுக்கு அரசன் குடியோடு தொடர்ந்தும் மரபுரிமையும் வேண்டும் என்பது.

---

2. தெளிந்தான்-தெளிந்தானுக்கு என நான்கனுருபு விகாரத்தால் தொக்கது.

கவிராசர்., தேரான் பிறனை என்பதற்கு அரசன் தன்மேல் பட்ச மில்லாதவனாகிய பிறனை ஆய்ந்து தெளிக என்பர்.

பழையஉரை., இயைபில்லாதானை பிறப்பு முதலியவற்றால் ஆய்ந்து தெளிந்தாலும் அத்தெளிவு அரசமரபுக்குத் துன்பம் தருவதாம் என்பர். இதன் முடிவு ஆய்ந்து கொள்ளுதலும் தன்குலத்தானையே கொள்ளின் தன்குலத்தார்க்கு இன்பந்தருவதாம் என்றது.

இராம., ஆராயாமல் பிறனை நம்புகிறவன் வாழ்க்கை நடை முறையிலே ஓயாத துன்பத்தைத் தருவதாகும் என்பர். இதுசொற் கிடக்கை முறைக்கு ஏற்ற நேரிய பொருளாகும். இங்ஙனம் அன்றிப் பிறனைத் தேரான் வழிமுறை தெளிந்தான் எனக் கூட்டிப் பிறனைத் தேராமல் தம் மரபில் வந்தவனையே தெளிந்தவன் என்றும், வழி முறை இடும்பைதரும் என இயைத்து இவனுக்குப் பின் வழி வழி யாகத் துன்பந்தரும் என்றும் பொருள் கொள்வாரும் உளர்.

தேவநேயர்., தன்னோடு தொடர்பற்றவனாயின் தேர்ந்து தெளிய வேண்டும். அங்ஙனம் அன்றாயின் தீராததுன்பம் ஆம் என்பர். இவர் கருத்து பிறனுக்கே ஆய்வு இன்றியமையாதது என்பது— வரதராசரும் இக்கருத்தினரே. வழிமுறை வந்தடையும் எனக்கூட்டிப் படிப்படியாகத் துன்பம் வரும் எனவும் கூறுவர்.

51. 9. தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின் தேறுக தேறும் பொருள். (நிஅக)

அ) மணக்.: யாவரையும் ஆராயாது தெளியாது ஒழிக; ஆராய்ந்த பின்பு அவரால் தேறப்படும் பொருளைத் தேறுக எ று.

இஃது ஒருபொருளில் தேற்றமுடையாரை எல்லாப்பொருளினும் தெளிக என்றது.

ஆ) பரிதி.: ஒருவர் செய்யுங் குற்றம் நன்மை விசாரியாமல் நம்-பக்கடவானல்லன்; நம்பினபின் சந்தேகம்பண்ணக் கடவானல்லன் எ-று.

இ) பரிப்.: யாவரையும் ஆராயாது தெளியாது ஒழிக: ஆராய்ந்த பின் அவரால் தேறப்படும் பொருளைத் தேறுக எ-று.

மேல் நாலுபொருளையும் ஆராய வேண்டுமென்றார்: அந் நாலினும் ஓரோர் பொருளில் தேறமுடியாரை அவரவர் பொருளிலே தெளிக; எல்லாப் பொருளினும் தெளிக எ-று.

ஈ) காளி : யாதொரு காரியமும் தேர்ந்து செய்யும் இடத்தும் யாரையும் அவரது குணமும் குற்றமும் ஓர்ந்து உணராது தேறு தலைச் செய்யற்க மற்று அவரைத் தேர்ந்து உணர்ந்த பின்னும் தன்னுடன் பிறந்தார் சுற்றத்தாரேனும் அவர் அவரால் கொள்ள லாதம் கருமம் கொள்க; மற்று ஆராதன கொள்ளற்க என்று.

உ) பரிமேல :—யாவரையும் ஆராயாதுதெளியாதுஒழிக; ஆராய்ந்த பின் தெளியும் பொருள்களை ஐயுறாதொழிக.என்றவாறு

தேறற்க[1] என்ற பொதுமையான் ஒருவினைக்கண்ணும் தெளிய லாகாது என்பது பெற்றாம். ஈண்டுத் தேறுக என்ற தாற்பரியத்தால்[2] ஐயுறவினது விலக்கின்மேல்நின்றது. தேறும் பொருள்' என்றது அவரவர் ஆற்றற்கு ஏற்றவினைகளை. பொருள்[3] ஆகுபெயர்.

ஊ) கவிராசர்: எவரையும் ஆராயாமல் தெளிய வேண்டாம்; ஆராய்ந்து தெளிந்த பிறகு, அவர்கள்பேரிலே சந்தேகம் வேண்டாம் என்று,

எ) பழைய உரை: யாரையும் தேர்ந்தால் அல்லது தெளிய வேண்டா தேர்ந்து ஆராய்ந்த பின்பு, தான் தெளிந்த பொருளை ஐயுறாது தெளிந்து கொள்க வென்றவாறு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதியார்., உரை, தேர்ந்தபின் தேறும் பொருள் தேறுக என்ற தொடரின் பெறுபொருளாக மீளவும் சந்தேகம் பண்ணுவானல் லன் என்கிறது.

பரிப்பெருமாள்., நாலுபொருள்- அறம்பொருள் இன்பம் உயிரச்சம் என்ற நான்கு. நான்கு உபதைகளிலும் ஆராய முடியாதாரை ஒவ் வொன்றில ஆராய்ந்து பின அனைத்திலும தெளிக என்கின்றார். ஒருசேர அறமுதலிய நான்கு உபதைகளானும் தெளிய முடியாதாரை ஒவ்வொன்றாற்றெளிக என்பது இவர் கருத்தாகிறது. இவர் கருத்துக் குக் குறட் சொல்லமைதி எங்ஙனம் இடமாகிறது என்பது அறியக் கூடவில்லை. காளிங்கர் தெளியப்பட்டார் உடன் பிறந்தாராயினும்

1 இன்ன வினைக்கண் தேறற்க என்னாது பொதுமையிற் கூறியதால் என்க
2. தாற்பரியம்-கருத்து அஃதாவது கவியின் பொருளைச் சுருக்கிக் காட்டுதல் இச்சூத் திரம் என்னுதலிற்றோ எனின், என வருவன யாவும் தாற்பரியமாம் என்க.
3. பொருளுக்குக் காரணமாக வினையைப் பொருள் என்றது காரிய ஆகுபெயர்.

சுற்றத்தாராயினும் அவரவர்கட்குத்தக்க கருமங்களையே ஒப்படைக்க என்கிறார். இவருரையும் பரிதியார் உரைபோலத் தேர்ந்தாரை மீளவும் ஐயப்படற்க. அவரிடம் கன்மத்தையாய்ந்து கொடுக்க என் கிறது. ஆயின் ''நாடோறும் நாடுக மன்னன்'' (520) என்பத னோடு மாறுகொள்ளாதோ எனின், நாடுக என்பதற்கு அவனறி யாமல் ஆராய்க; கண்காணித்து வருக என்பதே பொருளாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

தேறற்க யாரையும் தேராது:

''நம்பியான் விட்டதே தீர்த்தம்.'' -பழமொழி

''மருவு காத லால் அறியார் மாட்டு வினையை வையற்க
ஒருவர் தமையும் தேராமே ஒருகா லத்தும் தெளியற்க.
''-விநா. அரசி., 78.

51.10 தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும். (நிக0)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒருவனை ஆராயாது தெளிதலும், தெளிந்து கொள்ளப் பட்டவன்மாட்டுத்தான் ஐயப்படுதலும் ஆகிய இவ்விரண்டும் நீங்காத துன்பத்தைத்தரும் எ-று.

ஆ) பரிதி.: ஒருவனை விசாரியாமல் நம்புதலும் நற்குணத்தானை நம்பின பின்பு சந்தேகப்படுவதும் ஆகிய இரண்டு குணத்தாலும் தனக்கு விசனம்[1] வரும் எ-று.

இ) பரிப்.: ஆராயாது தெளிதலும், தெளிந்த பின்பு ஐயுறுதலும், தீர்தல் இல்லாத துன்பத்தினைத் தரும் எ—று.

முன்பு ஒரு வினை செய்து அறியாதாரைத் தேறலாம். அவர்கள் வறியர் ஆதலான் என்பது உத்தவாசாரியர் மதம். அது குற்றம் என்று இது கூறப்பட்டது.

ஈ) காளி.: முன்னம் ஒருவனை ஒருகால் தேறானாய் மற்று அவனை

1. விசனம்-துன்பம்.

விரைந்து தெளிகின்ற தெளிவும், இனி இவ்வாறு அன்றித்தான் தெரிந்து தெளிந்தான் யாவன் அவன்கண் உளதாம் ஐயுறவும் என்னும் இவ்விரண்டும் தன் நெஞ்சுள் ஆறா அருந்துயரம் தரும்; எனவே ஒருவரை முன்னுறத் தெரியாது, தெளியற்க; பின் ஐயுறுதல் தன் குற்றமாதலான் இங்ஙனம் தெரிந்து தெளிந்தவர் மாட்டே எஞ்ஞான்றும் செய்யற்க என்று.

உ) *பரிமேல்* : அரசன் ஒருவனை ஆராயாது தெளிதலும், ஆராய்ந்து தெளிந்தவன் மாட்டு ஐயப்படுதலும் இவ்விரண்டும், அவனுக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

வினை வைத்தபின் ஒரு தவறு காணாதுவைத்து ஐயுறுமாயின் அதனை[2] அவன் அறிந்து இனி இது நில்லாது என்னும் கருத்தான் அவ்வினையை நெகிழ்த்துவிடும்; அதுவேயன்றிப் பகைவரால் எளிதில் பிரிக்கவும்படும்; ஆகலான் தெளிந்தான்கண் ஐயுறவும் ஆகாதாயிற்று. தெளிவிற்கு எல்லை கூறியவாறு. இவை ஐந்துபாட்டானும், தெளியப் படாதார் இவர் என்பதூஉம், அவரைத் தெளிந்தாற்படும் இழுக்கும்,[3] தெளிவிற்கு எல்லையும் கூறப்பட்டன

ஊ) *கவிராசர்*: ஒருவனை ஆராயாது தெளிதலும், ஆராய்ந்த வனைச் சந்தேகப்படுதலும் இந்த இரண்டும் தீராத குற்றங்களைக் கொடுக்கும் என்று.

ஏ) *பழைய 2*: அரசன் ஒருவனை ஆராயாது தெளிதலும், ஆராய்ந்து தெளிந்தவனை ஐயப்படுதலும், இவ்விரண்டும் அவனுக்கு நீங்காத் துன்பத்தைத் தருமென்றவாறு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'*தேரான் தெளிவும்*' என்பதற்கு ஒரு வினை செய்து அறியாதாரையும் அவர் வறியராதலின நியமிக்கலாம் ஆனால், அது கூடாது என்ற *பரிப்பெருமாள்* உரை சிறந்தது. ஏனைய உரை ஆசிரியர்கள் அனைவரும் ஒருவனை ஆராயாது தெளிதல் கூடாது' என்றே கூறினர். *காளிங்கர்*, இக்கருத்து 'தேரான் பிறனைத் தெளிந்தான்" (508) 'யாரையும் தேராது தேறற்க (509) எனப்பல குறட்பாக்களால் பெறப்படுவதாயிருக்க ஈண்டுக் கூறல் வேண்டுமா? கூறியது கூறலாகாதா?

---

2 உத்தவாசாரியர் மதம் - கிருஷ்ணன் மந்திரியாகிய உத்தவாசாரியின் கொள்கை.
3 அதனை அரசன் தன் மீது ஐயப்படுதலை
4. இழுக்கு- குற்றம்,

என்று எண்ணியிருக்கிறார். அதனால் 'விரைந்து தெளிகின்ற தெளிவு இடும்பை தரும்' எனச் சிறுவிளக்கந்தந்தார். பரிப்பெருமாள் 'ஏதோ ஏழை என்று இரக்கத்தால் வேலையொன்றுமே தெரியாதவனுக்கு வேலை கொடுப்பதும் தவறு; துன்பந்தருவது' என்றார்; இவ்வுரை சிறிது மாற்றந்தருவதால் சிறந்தது என்போம்.

இவ்வதிகாரம் அமைச்சர் முதலிய அங்கமாவாரைத் தேர்ந்து எடுக்கும் முறைகளையும், அவர்கள் தேர்ந்தாராயின் அவர்களைத் தெளிக என்பதை மட்டும் கூறுவது. வரும் அதிகாரம் தெளியப்பட்டாரை வினைக்கண் ஈடுபடுத்தி, அவர்களையாளுக என்கின்றது. தெரிந்து செயல்வகை அரசனே செயல் மேற்கொள்ளும் போது ஆராய்ந்து செய்க என்பது. இவ்வேறுபாடுகள் நினைக்கத்தக்கவை.

ஓ) ஒப்புமைப்பகுதி:

தேரான் தெளிவும் இடும்பை தரும்:

''அளிந்தார்க ணாயினும் ஆரா யானாகித்
தெளிந்தான் விரைந்து கெடும்.'' —பழ. நா.,42.

''ஆறாச் சினத்தன் அறிவிலன் மற்றவனை
மாறி ஒழுகல் தலைஎன்ப—ஏறி
வளியால் திரையுலாம் வாங்குநீர்ச் சேர்ப்ப
தெளியானைத் தேறல் அரிது.'' —பழ. நா.

''தெற்ற ஒருவரைத் தீதுரை கண்டக்கால்
இற்றே அவரைத் தெளியற்க – மற்றவர்
யாவரே வேண்டினும் நன்கொழுகார் கைக்குமே
தேவரே தின்னினும் வேம்பு.'' —பழ. நா.114.

''தீரா விடும்பையே தெளிவில் ஐயுறல்
எனைவகை தேறியக் கண்ணும் வினைவகை
கோடிய மாந்தர் கோடியின் மேலாம்.'' -மனோன்.2:1. 278-280

''பகைய லாதவ ரைப்பகை யாக்கலும்
நகையில் தீமனத் தாரைநண்பு என்னலும்
முகையின் வேய்ந்ததோர் மொய்ம்மலர்க் கண்ணீயாய்
மிகையின் மற்றவை பின்னைவெ துப்புமே.'' —சூளா. சீய

''தேற லார்தமைத் தேறலும் தேறினர்த் தேறல்லா மையும் என்றும்
மாறலாருடன் மலைதலும் மாறுடன் மருவிவாழ் தலும்முன்னே

ஆற லாதன அரசருக் கென்றுகொண் டரசநீ தியிற்சொன்னார்
கூற லாதன சொல்வதென் செல்வதென் கொடியவன் அருகென்றான்.''

-வில்லி.. சூது. , 72

தெளிந்தான் கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்:

''உறுமக்க ளாக ஒருவரை நாட்டிப்
பெறுமாற்ற மின்றிப் பெயர்த்தே ஒழிதல்
சிறுமைக் கமைந்தோர் செய்கை அதுவே
குறுமக்கள் காவு நடல்.'' —பழ.நா., 172.

முற்றும்:

''தேர்ந்து தெளியப் பட்டவன்பால் தேர்ந்தே வினையுளம் தகவிடுக்க
தேர்ந்து தெளியப் பட்டவனைத்தீது கானா தயிரற்க
தேர்ந்து தெளியப் பட்டஅவன் தீர வினையை விடும்அதனைத்
தேர்ந்து பகைவர் பிரித்திடுவர் தேரான் தெளிவே போல்கேடாம்.''

—விநா. அரசி., 79.

ஒருபுடை:

''நம்பவைத்துக் கழுத்தறுக்கலாமா'' —பழமெழி.

ஒ) மேற்கோள்பகுதி:

சுவாமி.: தொழிற் பெயர்க் கருத்தாவுக்கு மேற்கோள். (இ.கொ.26.)
தொழிற் பெயர் வினைமுதற் பொருளில் வந்ததற்கு மேற்கோள். (இ.கொ. 82.)

பண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	அறம்பொருள்	குடிப்பிறந்து	ஈயகம்	குணநாடி	பெருமைக்கும்	ஏற்றாரைத்	காதல்மை	தேரான் பிறனை	தேறற்க	தேரான் தெளிவும்
மணக்.	8	6	1	7	5	2	3	4	9	10
பரிதி.	1	2	4	5	3	10	6	8	7	9
பரிப்.	8	6	1	7	5	2	3	4	9	10
காளி.	1	10	8	7	5	4	6	2	3	9
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

51வது அதிகாரம் 'தெரிந்து தெளிதல்' முற்றிற்று.

52. தெரிந்து வினையாடல்.

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: தெரிந்து வினையாடலாவது வினைசெய்வாரால் செய்யப்படும் வினையும் பலவாதலின், அவரால் செய்யப்படும் வினைகளை அறிந்து அவரைவிட்டுச் செய்வித்தல்.

ஆ) பரிதி.: தெரிந்து வினையாடலாவது நன்மையும் தீமையும் நாடி அறிவது எ—று.

இ) பரிப்.: தெரிந்து வினையாடலாவது வினை செய்வாரும் அவரால் செய்யப்படும் வினையும் பல ஆதலின், அவ்வவரால் செய்யப்படும் வினைகளை அறிந்து அவரை இட்டுச் செய்வித்தல். மேல் வினை செய்வாரை ஆராய்ந்து கூட்ட வேண்டும் என்றார்; அவரால் செய்யப்படும் வினையும் ஆராய்ந்து செய்ய வேண்டும் என்பதனால் அதன்பின் இது கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது அத்தெளியப்பட்டாரை அவர் செய்ய வல்ல வினைகளை அறிந்து அவற்றின்கண்ணே[1] ஆளுந்திறம். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

ஊ) கவிராசர்: அஃதாவது இப்படித் தெளியப்பட்டவர்களை அவர்கள் செய்யவல்ல காரியங்களை அறிந்து ஆளுந்திறம்.

ஏ) பழைய 2: அஃதாவது தெளிந்த மந்திரியர், சேனாவரையர்[2] முதலாயினாரை அவர் செய்யவல்ல தொழிலை யறிந்து அவருக்குக் கொடுத்தாளுதல். வினையாளுதல், வினையாடலென்றாயின வென்க அது எழுத்துத் திரிவு[3].

---

1 அவற்றின்கண்—அவ்வினைகளைச் செய்தற்கண். 2. சேனாவரையர் — சேனாபதியர்.
3. ஆள்தல்—ஆடல். ளகர ஒற்றின் முன் தகர எழுத்து வர ளகரம் கெடத் தகரம். டகர மாதல் எழுத்துத் திரிபு.

மல்லர்: அதாவது சந்தேகங்கள் தீர்ந்து ஒருவனை உத்தியோகத்திலே வைத்ததுக்குப் பிறகு அவனுத்தியோகத்தைச் செய்கிற வகையைச் சோதிக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

கா.சு., 'தெரிந்தாரை அவரவர் செய்யவல்ல தொழில்களை யறிந்து அவர்களை அவைகளிற் செலுத்துதல்' என்பர்.

இராம; 'ஒரு வேலையை அந்த வேலை தெரிந்தவனை செய்யச் சொல்லுதல்' என்பர்.

ஜி வரதராசனார், தெளியப்பட்ட ஒருவரை அவர் வினை செய்யும்போது ஆளுவது அவர் செய்யும் வேலையை அவ்வப்போது கண்காணிக்கும் முறை என்பர்.

ஏனையோர் ஒத்த கருத்தினர். இவருள் *மணக்குடவர்,* 'வினை செய்வார் செய்யும் வினைகள் பல; அவர் செய்யக்கூடியவற்றை ஆராய்ந்து அவரை அது செய்யச் சொல்க' என்பர். இவர் உரை வினைக்கு வினை செய்வாரைத் தெளிதலா? வினை செய்வார்க்காக வினையா என்ற ஐயம் விளைவிப்பது. ஆதலால் ஆட்சியில் வினைகள் பலவாதலின் அவ்வவ் வினைகளில் அவரவரை ஆளுக என்ற கருத்து ஏற்புடையதாகும்.

பரிதி., 'தெளியப்பட்டவன் வினை செய்யும்போது அவன் பாலுள்ள நன்மையும் தீமையும் நாடி அறிவது; அறிந்து ஐயப்படுவ தன்று' என்ற கருத்தினதாயின் சிறந்ததாகும்.

இவ்வுரைகள் அனைத்தையும் எண்ணும்போது உபதைகளானும் பிறவற்றானும் தெளிந்த பின் அவனை அவனுக்குக் கைவந்த செயலில் ஈடுபடுத்தலாமா? என்ற ஐயங்கள் தோன்றுகின்றன.

வள்ளுவர் நோக்கிலே முதன்மூன்று குறட்பாக்கள் செயலில் ஈடு படுத்தப்பெறுபவன் இயல்புகளைத் தெரிவிப்பன வேலை கிடைப் பதற்கு முன் இருந்த மனநிலை, கிடைத்தபின் மாறுபடவும் கூடு மாத லால் வேலை தெரிந்து வேலை செய்பவனையே நியமிக்க வேண்டும். கண்காணிக்கவும்வேண்டும்; ஒழிக்கப்படுவானை ஒழிக்கவும் வேண்டும்; ஒப்படைத்தபின் மாறாகக் கருதவும் கூடாது; என்பனவற்றை ஆறு குறட்பாக்கள் அறிவிக்கின்றன. இறுதிப்பா கண்காணிக்கும் முறையை யும், வினைசெய்பவன் நேர்மையாளனாயின் குடிகளும் நேர்மை தவறார்கள் என்பதை தெரிவிக்கிறது. ஆனாலும் மன்னன் அவனை

நாடோறும் நாடவேண்டும் என்கிறது. ஆகவே இவ்வதிகாரம் தெளி தல், தெளிந்து வினைகளை ஒப்படைத்தல். மீளவும் நாடோறும் நாடு தல் ஆகிய மூன்றையுமே தெரிவிக்கிறது. ஆதலால் இம்மூன்றும் அமைய எழுதிய வரைவிலக்கணமே ஏற்புடையது. ஏனைய ஒருசார் ஏற்புடைன.

அதிகாரப்பெயர் தெரிந்து வினையாடலா? தெளிந்து வினை யாடலா? பொருந்துவதுயாது? என்பதும் ஆய்வுக்குரியது.

தெரிந்து தெளிதலையடுத்து, தெளிந்து வினையாடல் என்ற தலைப்பைக் கொண்டு இருக்கிறது; மு ரா. அருணாசலக் கவிராயர் தெளிபொருள் விளக்கம் ஆறுமுக நாவலர் (சென்ற) துன்மதிப்பதிப்பு முதல் இன்று வரையுள்ள பதிப்புக்கள் அனைத்தும் தெரிந்து வினை யாடல் என்பதை ஆளுகின்றன. ஆனால் உரையாசிரியர்களிற் சிலர் 'அத்தெளியப் பட்டாரை அவர் செய்யவல்ல வினைகளை ஆராய்ந்து வினைகளை அவர்களிடம் வைத்து ஆளுதல்' என்று தெளிதலை வழி மொழிந்தே தொடங்குகின்றனர். தெரிதல் சென்ற அதிகாரத்தாற் போந்தமையின் ஈண்டுத் தெளிந்து வினையாடல் என்றே ஆசிரியர் பெயரமைத்தனர் என்பது இவர்கருத்துப்போலும். தெளிந்தார் வினைக் குரியராகத் தெளியப்பட்டார். மீளவும் அவரவர்கட்குரிய வினைகளை யும் வினைசெய்யுங்கால் அவர்களை மீளவும் தெரியவேண்டிய இன்றி யமையாமையும் இருத்தலின் தெரிந்து வினையாடல்' என்றே பலரும் கருதுகின்றனர். இப்பாடமே சிறந்தது எனத் தோன்றுகிறது.

தெரிந்து செயல்வகை-அரசன் தான்மேற்கொள்ளும் செயல்களைத் தானே ஆய்ந்து செய்தல். தெரிந்து தெளிதல்-அரசன் வினை செய் வாரைத் தேர்ந்து தெளிதல்; தெரிந்து தெளிதல் தெளிந்த வினை செய் யார்க்கு உரிய வினைகளை அரசன் தெளிதலும் வினை செய்வான் தன் னிடம் ஒப்படைக்கப்பட்ட வினைகளின் தகுதியையும் பயனையும் தெரிதலும், வினைசெய்வான் தன் கடமையிற்றவறாமைப்பொருட்டு அவனைக் கண்காணித்தலுமாகிய மூன்றும் அடங்கியிருத்தலின் 'தெரிந்துவினையாடல்' என்றதலைப்பே ஏற்றதாதல் காண்க.

52.1: நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த தன்மையான் ஆளப் படும் (நிகக)

உரைப்பகுதி:

அ)மணக்.: நன்மையானவற்றையும் [1] தீமையானவற்றையும்

1. செயல்கள் பயக்கும் பயனால் நன்மையாயின இவை தீயன இவை எனப் பகுத் தறியப்படும் என்பார் இங்ஙனம் கூறினார்'

ஆய்ந்து தீமையைப் பொருந்தாது[2] நன்மையின்கண்ணே பொருந்தின தன்மையுடையவன் வினைசெய்வானாகச் செய்யப்படும் எ—று.

ஆ) பரிதி.: ஒருவன் நற்குணத்தையும் தீயகுணத்தையும் விசாரித்து இரண்டிலும் பெரிய குணத்தை உளம் கொள்வான் எ—று.

இ) பரிப்.: நன்மையானவற்றையும் தீமையானவற்றையும் ஆராய்ந்து தீமையை ஒருவி நன்மையின்கண்ணே பொருந்தின தன்மை யுடைய வனைச் செய்வானாக்கப்படும் எ—று.

இது பெரும்பான்மையும் அற ஆராய்ச்சிக்குக் கடவாரை நோக் கிற்று.

ஈ) காளி.: இவ்வுலகத்து வேந்தர் ஒருவனைக்கொண்டு ஒருவனை ஆட்சிசெய்யுமிடத்துக் கீழ்ச்சொல்லிப்போந்த முறைமையானே அவரது நன்மைக்கூறும் தீமைக்கூறும் தெரிந்து மற்று அவற்றுள் நல் லொழுக்கம் மிக்குவரும் தன்மைக்கண்ணே வினை ஆட்சிசெய்ய அடுக் கும் எ—று.

உ) பரிமேல்.: அரசன் முதற்கண் ஒருவினையைத் தன்கண் வைத் தால், அதன்கண் ஆவனவும்[3] ஆகாதனவுமாய செயல்களை ஆராய்ந் தறிந்து, அவற்றுள்[4] ஆவனவற்றையே விரும்பிய இயல்பினை யுடையான், பின் அவனால் சிறந்த வினைகளிலே ஆளப்படும்.

தன்னை[5] உரிமை அறிதற்பொருட்டு அகம்புறங்கட்கு[6] நடுவாய தோர் வினையை அரசன் தன்கண் வைத்தவழி அதன்கண் ஆஞ் செயல்களையே செய்தவன் பின்னும் அவ்வியல்பினனாதல்பற்றி அக மாய வினைக்கண்ணே ஆளப்படுவன் என்பதாயிற்று. 'புரிந்த' என்ற இறந்த காலத்தான், முன் உரிமையறிதற்பொருட்டு வைத்த வினை யாதல் பெற்றாம்.

---

2. பொருந்தாது—மேற்கொள்ளாது.
3. ஆவன—முடிவு பெறுவனவும், நன்மை பயப்பனவும் ஆகிய வினைகள். ஆகாதன—கடை போகச் செய்ய இயலாதனவும் தீமை பயப்பனவும். ஆனால் வள்ளுவர் நன்மை யும் தீமையும் என்பதற்கு ஆவன-ஆகாதன என்றல் காணற்குரியது 'தன்னால்ஆவன வும் ஆகாதனவும்' என்ற கவிராசர் உரையும் இதன் ஒரு பகுதிக்கு உதவுதல் காண்க
4. அவற்றுள் ஆவனவும் ஆகாதனவுமாகிய அவ்விரண்டனுள்
5. உரிமையறிதல்-எவ்வினையை இவற்கு உரிமையாக்கலாம் என்றறிதல்
6. அகம் புறங்கட்கு நடுவாய செயல்-அகப் பரிவாரங்கள் செய்யத்தகும் மந்தணச் செயல் களுக்கும், புறப்பரிவாரங்கள் செய்யத்தக்க போர் முதலியபுறச் செயல்களுக்கும் பொதுவாய செயல்கள்
7. புரிந்த உடன்பாட்டு இறந்தகாலப் பெயரெச்சம் 'புரிந்த தன்மையான்' என இறந்த காலத்தாற் கூறினமையின் உரிமையறிந்து ஆள்வதற்காக முன்னர் அவனிடம் ஒப்படைக்கப்பட்ட வினை என்பது பெறப்படும் என்கிறார்.

ஊ) கவிராசர்: ராசா முதற்கண் ஒருகாரியத்தைத் தன் [8]வசத்திலே வைத்தால், தன்னாலே ஆவனவு மாகாதனவுமான செய்கைகளை ஆராய்ந்து அறிந்து, அவற்றுள் ஆவனவற்றையே செய்க எ—று.

எ) பழைய 2: அரசன் ஒருதொழிலிலே ஒருவனை வைத்தால், நன்மையுந் தீமையும் ஆராய்ந்து பார்த்து, நலம் புரிந்த தன்மையன் ஆனால் சிறந்த தொழிலிலே வைத்தாளப்படுவன்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., 'வினை நன்மையானதா? தீமையானதா? என்று ஆராய்ந்து நன்மையே செய்பவன் வினைக்கண் ஆளப்படும்' என்பர். தன்மையான் தெளிந்தானாகிய மன்னனால் ஆளப்படுவன் என்பது கருத்து.

பரிதியாரும் அங்ஙனமே, 'நலம்புரிந்த தன்மையான் நற்குணமே விரும்புபவன்' என்பர். ஆனால் அதிகார இயைபு குறிக்கும் 'ஆளப்படும்' என்பதன் உரையை விடுத்தனர்.

பரிப் 'அற ஆராய்ச்சிக்குக் கடவாரை நோக்கிற்று' என்பதால் அறவுபதையான் தேர்ந்தெடுக்கப்பட்டான் நீதிமன்றம், அறங்களின் கண்காணிப்பு இவற்றில் நியமிக்கப் படுதலையும், நியமிக்கப்பட்டார் அதனைத் திறம்பட நடத்துதலையுமே கருதிற்று' என்பர். தெரிந்து வினையாடலிலுள்ள வினை அறஆராய்ச்சியை மட்டுமன்று; பொருதல் முதலிய அனைத்தையும் ஆதல் காண்க.

காளி., 'குணம் நாடி குற்றம் நாடி குணமிக்க நன்மையிலே ஆளச் செய்ய வேண்டும்' என்பர். இவர் கருத்துக் குறட்சொல்லமைப் பிற்கும் பொருணோக்கிற்கும் இயைபுடையதாக இல்லை எனலாம். இவர் கூறும் 'ஒருவனைக் கொண்டு குடிகள் பலரையும் ஆளுதலே ஆட்சி' என்பதை உன்னுக.

பரிமேல், 'நன்மையும் தீமையும் நாடி—அரசன் முதலில் ஒரு வினையைத் தன்கண்வைத்தால் அதன்கண் ஆவன — ஆகாதன செயல்களை ஆய்ந்து ஆவனவே செய்வான் ஆளப்படும்' என்கிறார்.

இவர்கள் உரை விரித்து எழுதும் சொல்லமைப்பான் வேறுபடினும் தெளியப்பட்டவன், அரசன் தன்மாட்டு ஒப்படைத்த செயல்களிலும் நல்லன—தீயன ஆய்ந்து நல்லனவே மேற்கோடல் தகும் என வினை

8. வசம்-பொறுப்பு

மேல் வைத்துரைப்பர் *பரிமேலழகர்*. *காளிங்கர்* தெளிந்தானது நன்மை தீமைகளை ஆய்ந்து, நன்மை மிக்கு வருந் தன்மையிலேயே ஆளுக என அவன் பண்பின் மேல்வைத்துரைப்பர். 'குணநாடி குற்றமு நாடி' என்ற குறளால் (504) பண்பு ஆய்வு முன்னரே கூறப்பட்டமை ஈண்டுங் கூறுதல் வேண்டா. ஆகையால் தெளியப்பட்டான் வினையையும் அதன் விளைவையுங் கண்டு ஒப்படைக்க என்ற *பரிமேலழகர்* கருத்துச் சிறந்ததாகும்.

காளிங்கர் 'தன்மையான்—தன்மையின்கண்ணே' என இடப் பொருட்டாகிய வேற்றுமை மயக்கம் ஆக்குவர். அன்றியும் 'ஒருவனைக் கொண்டு ஒருவனை யாட்சிசெய்யுமிடத்து' என்ற பாடம் 'ஒருவனைக்கொண்டு ஒரு வினையையாட்சி செய்யுமிடத்து' என்றிருத்தலே அதிகார இயைபுடையதாகும். அதிகாரம் தெரிந்து வினையாடல் ஆதலின் இது ஏடு எழுதுவாராலோ—பெயர்த்து எழுதுவாராலோ நேர்ந்த பிழையாகலாம்.

இக்குறள் முழுதும் தெரிதலையே கருதுதல் காண்க. இராம., 'ஏற்கனவே நல்ல காரியங்களைச் செய்து பழகியவன்' என்பர். *தேவநேயர்* 'முதற்கண் தனக்கிட்ட பணியிலே அரசனுக்கு நன்மை தருவனவும், தீமை தருவனவும் ஆய்ந்து' என்பர்.

குழந்தை., 'தனக்கிட்ட பணியிலே நல்லன தீயன ஆராய்ந்து' தீயனவிலக்கி நல்லனவே செய்வார்' என்பர்.

வரதராசனார்., செய்யச் சொன்ன அரசனுக்கு நன்மை பயப்பதா தீமை பயப்பதா என்பதையும், நாட்டு மக்களுக்கு நன்மை பயப்பதா தீமை பயப்பதா என்பதையும் ஆய்ந்து இருபாலார்க்கும் நன்மை செய்வானே ஆளப்படும்' என்பர். இங்ஙனம் ஓர்வினையமைதல் அருமை. ஆதலால் ஆளும் அரசன் தனக்குத் தீமை பயப்பதாயினும் நாட்டு நலனுக்கு ஏற்புடையதாயின், நாட்டு நலன் கருதி அத்தகைய வினையை அவனிடம் ஏற்புறுத்துதலும், நாட்டு நலனாதலின், வினை செய்வாரால் விளையும் நாட்டு நலனைக் கருதுவதாகவே இருக்க வேண்டும் என்பதை *வள்ளுவர்* 'வினைசெய்வான் கோடாமை உலகு கோடாது'எனக் குறித்தலும் காண்க.

'புரிந்த என்பதற்கு *இராமலிங்கனார்* 'செய்து பழகிய' என உரைக்க, ஏனையோர் 'விரும்பிய' எனவே கண்டனர். இது 'புகழ் புரிந்த' என்பதுபோல வள்ளுவர் உள்ளடக்கிடையுமாம்.

'தெரிந்து தெளிதலின்கண்' குணம்நாடி—குற்றமும் நாடி—

மிகை நாடி'' என்பது அரசன் வினைசெய்வானிடம் நுனித்தறியப் படும் குணங்குற்றங்களை ஆய்க என்கிறது. ஈண்டு 'நன்மையுந் தீமையுநாடி' என்பது தெளிந்தபின் அரசன் அளித்த பணியின் பயனான நன்மை தீமைகளை ஆய்க என வினைசெய்வானை ஏவுகின்றது. இவை தம்முள் வேற்றுமை என்க. ஆகவே ஈண்டுக் கூறிய 'நன்மையுந் தீமையும் நாடி' என்றது' வினைசெய்வான் மேற் கொள்ள வேண்டிய ஆய்வாம்' என்பதே சிறந்த உரை.

ஒ) ஒப்புமைப்பகுதி

முற்றும்:

''நல்லவும் தீயவும் நாடிப் பிறருரைக்கும்
நல்ல பிறவும் உணர்வாரைக் கட்டுரையின்
வல்லிதின் நாடி வலிப்பதே புல்லத்தைப்
புல்லம் புறம்புல்லு மாறு'' —பழ நா., 104.

''நல்லவுந் தீயவு நாடி நாயகற்கு
எல்லையில் மருத்துவ வியல்பி னெண்ணுவார்.''
—கம்பராமா., 1408

''நல்லவும் ஒன்றோ தீயவும் நாடி நவைதீரச்
சொல்லவும் வல்லீர் காரியம் நீரே துணிவுற்றீர்.''
—கம்பராமா., 4328.

''முன்னர்ப் பொதுவா கியவினையின் முள விடுத்துத் தீதகற்றி
நன்மை புரிந்து வருமாயின் நாடி அவனைச் சிறந்தவினை
தன்னில் விடுக்க சிறந்தவினை சார்ந்து புரிவான் இடைதிரியின்
பின்னர் அவனைப் பொதுவினையில் பெயர்த்துத் தழுவி விட்டிடுக''
—வினா. அரசி., 80.

52.2 வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை ஆராய்வான் செய்க வினை. (குகஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பொருள் வருவதற்கு இடமானவற்றை முன்பு நின்ற நிலையிற் பெருக்கி, அவ்விடங்களிலுண்டாகும் பயனை முன்பு நின்ற நிலையின் உண்டாக்கி, அவ்விடத்துற்ற மிகுதி குறைவுகளை ஆராய வல்லவன் வினைசெய்வானாக எ—று.

பொருள் வருவதற்கு இடமாவது நிலம் முதலான இடம்; அதனைப் பெருக்குதல் பொருளும் இன்பமும் உண்டாகச் செய்தல்

ஆ) *பரிதி.:* பொருள் தேடித் தேடின பொருளைப் பெருக்கி வரலாறு பண்ணிக்கூட்டிய பொருள் சேதம்வராமல் காக்கவல்லவன் ராசகாரியம் பார்ப்பான் எ—று.

இ) *பரிப.:* பொருள் வருவதற்கு இடம் ஆனவற்றை முன்பு நின்ற நிலையிற் பெருக்கி அவ்விடங்களில் உண்டாகும் பயனை முன்பு நின்ற நிலையால் உண்டாக்கி அவ்விடத்து உற்ற மிகுதி குறைவுகள் ஆராய வல்லவன் வினை செய்வானாக எ—று.

பொருள் வருவதற்கு இடமாவது நிலம் முதலான இடம். அதனைப் பெருக்குதலாவது காடு கெடுத்து நாடு ஆக்குதல் முதலா யின. வளம் படுத்தலாவது பயிர் ஏற்றுங்கால் வான்[1] பயிர் ஏற்றுவித்த லும் பாழான இடங்களிலே குடியேற்றி ஆயம்[2] பொருள் உண்டாக்கு தலும். இது பெரும்பாலும் .....செய்வானை நோக்கிற்று

ஈ) *காளி.:* பொருள்வருவாயைப் பலவாற்றாலும் பெருக்கி, மற்று அது வளப்படி வருகின்ற பொருள்களையும் சிதறாமல் ஒருவகைப் படுத்தி, இரண்டுக்கும் இடையூறு வந்துற்றகாலத்து மற்று அவ்விடை யூறு,தலையழிந்து போமாறு சிந்தித்துத் தெளிய வல்லான் யாவன்; மற்று அவன் செய்க அரசர்க்குக் கருமம் எ—று.

உ) *பரிமேல்.:* பொருள்வரு வாயில்களை விரியச்செய்து, அப்பொரு ளான் செல்வங்களை வளர்த்து அவ்வாயில்கட்கும் பொருட்கும் 'செல் வங்கட்கும்' உற்ற இடையூறுகளை நாடோறும் ஆராய்ந்து நீக்கவல்ல வன், அரசனுக்கு வினைசெய்க.

வாயில்களாவன மேல் இறைமாட்சியுள்[3] 'இயற்றலும்' என்புழி உரைத்தனவும், உழவுபசுக்காவல் வாணிகம் என்னும்[4] வார்த்தை யுமாம். செல்வங்களாவன ஆண்டுப் பொருளும் இன்பமுமாக உரைக் கப்பட்டன. [5]இடையூறுகளாவன அரசன்வினைசெய்வார். சுற்றத்தார், பகைவர், கள்வர் என்ற இவரான் வரும் நலிவுகள்.

ஊ) *கவிராசர்:* பொருள் வரப்பட்ட வழிகளை விஸ்தாரமாக்[6]செய்து அந்தப் பொருளாலே செல்வங்களை வளர்த்து பொருள்வருகிற வழிக்

1. வான்பயிர்—வானம் பார்த்த பயிர்வகைகளான கம்பு சோளம் முதலிய புன்செய்ப் பயிர்கள்.
2. ஆயம் சுங்கம் வரி. தீர்வை முதலியவற்றான் வரும் வருவாய்
3. இயற்றலாவது அடையப் பெறாத பொருள்களையடைய முயற்சித்தல் (குறள் 385)
4. வார்த்தை—பொருள் வரும் வழிகளான் உழவு. பசுக்காவல், வாணிகம் இம் மூன்றுமாம். கௌடலியம் அதிகரணம் 1: அதி 2. பார்க்க. இம்மூன்றையுங். கூறும் நூல்கள் என்பர் கோ.வடி.
5. இடையூறுகள்—எடுத்த வினையை முடிப்பதற்கு முன் இடையில் உறும் தடைகள்
6. விஸ்தாரம்—விரிவு.

கும் பொருளுக்கும் செல்வத்துக்கும் வரப்பட்ட இடையூறுகளை நாடோறும் ஆராய்ந்து விலக்கவல்லவன் அரசனுக்கு உத்தியோகம் பண்ணவேணும் என்று.

ஏ) *பழைய* 2: பொருள் வரும் வழியைப் பெருகப் பண்ணிப் பெருக வந்த பொருளையெல்லாம் பெரிதாக வளர்த்து அப்படிப் பெருகச்செய்யு மிடத்தும் வளரச் செய்யுமிடத்தும் வந்த விடையூற்றை நாடோறுமா ராய்ந்து நீக்க வல்லவன் அரசனுக்கு வினை செய்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''வாரி பெருக்கி''

பொருள் வருவதற்கு இடமானவற்றை முன்னிலையினும் மிகப் பெருக்கி அதாவது நில முதலானவற்றைப் பொருளும் இன்பமும் பொருட்பண்படுத்துதல்' என்பர் *மணக்குடவர்*.

'பொருள் தேடி அதனைப் பெருக்கி வரலாறுபண்ணி' *பரிதி*.;
'நிலத்தைக் காடுகெடுத்து நாடாக்குதல் முதலியன செய்து' *பரிப்*;
'பொருள் வருவாய்க்கான வழிவகைகளை அதிகப்படுத்தி' *இராம*, *குழந்தை*;
'விரிவாக்கியும் பல்குவித்தும் பெருக்கி' *தேவநேயர்*;
'அரசாங்கத்துக்கு நல்ல வருமானங்கட்டி' *வரதராசனார்*;

சொற்பொருள் அளவில் அனைவரும் ஒரு நோக்கினராயினும் வழி வகைகளை விரித்துரைக்கும் வகையில் ''பொருளும் இன்பமும் உண்டாகச்செய்தல்'' ''பொருளைத்தேட'' ',காடுகெடுத்து நாடாக்கு தல் விளை நிலம்பெருக்கச் செய்தல், குடியேற்றுதல், உழவு, பசுக்காவல் வாணிபம் முதலியன'' எனப்பல்வேறு குறிப்புக்களைத் தருவர். ஆனால் இத்தொடர் உழவுசெய்தலாகிய மூலப்பொருட் பெருக்கத்தையே உணர்த்துவது போன்றுள்ளது. மூலப்பொருள்களை விளைவிப்பதே மணியும் பொன்னும் முதலான பொருட் பெருக்கிற்கு அடியாதலின் வாரி—நீர் ''மாரிபொய்ப்பினும் வாரிகுன்றினும்' *புறநா*. 35) என்புழிப்போல நீர் என்று பொருள் கண்டு, நீர்வருவழி களைப் பெருக்கி எனவும் கூறலாம். ''நீர் நிலைபெருகத்தட்டோரம்ம இவண்டட்டோரே'' (புறநா. 8) ஆதலால் நீர் வருவாய்களைப் பெருகச்செய்து, எனவும் கூறலாம். பெரும்பாலான ஆசிரியர்கள் பொதுவகையான பொருளாதாரப் பெருக்கத்தை நினைவிற்கொண்டு உரை கூறப் *பரிப்பெருமாளும்* *தேவநேயரும்*, மூலப்பொருட் பெருக்கத்தை உழவு, நீர் வருவாய், ஏரிகுளம்பாதுகாப்பு முதலிய

வற்றைக் கூறினமை காண்க. அடுத்து வரும் 'வளம்படுத்து' என்பதற்கும் இது ஏற்றதாதல் காண்க.

''வளம் பெருக்கி''

'பொருளும் இன்பமும் உண்டாகச் செய்தல்' **மணக்குடவர்**; 'பொருளைப் பெருக்கி' **பரிதி**., 'பயிர் வற்றுங்கால் வான்பயிர் ஏற்றுவித்தல், குடியேற்றி ஆயம்பொருள் உண்டாக்குதல் முதலியன' என்பர். வான்பயிர்—நன்செய்ப்பயிர் புன்செய்ப்பயிரல்லாத பயன் மரம், செடி கொடிவகை வாழை தென்னை முதலாயின **பரிப்பெருமாள்**; ஈட்டிய பொருள் சிதறாமல் ஒருவழிப் படுத்துதல்' **காளிங்கர்**; 'பொருளான் செல்வங்களை வளர்த்து' **பரிமேல்**; **கவிராசர், பழைய 2**

இவற்றுள் **பரிப்பெரிமாள்** தரும்உரையும்விளக்கமும் சிறந்தவை.

''பொருளாதார நிலையை வளமுள்ளதாக்கி' **இராம**, 'வாரி பெருக்குதல் வாயிலாகவே செல்வ வளம் மேன்மேலும் உண்டாகச் செய்து' **தேவநேயர்**. ''வாரிபெருக்குதலால் வந்த செல்வங்களால் பயன்படுஞ்செல்வங்களை வளர்த்து'' **கா.சு**; 'நல்ல பயனைக் கொடுக்குமாறு செய்து' **வரதராசர்**; ''பெற்ற செல்வத்தை வளம் படுத்துதலாவது ஒன்று பத்தாகப் பெருக்கி உய்த்தீட்டுந் தேனீப் போலக் குவித்தல் மட்டுமன்று. அதனைக்கொண்டு நாட்டுக்குப் பயன்படும் செல்வங்களை வளர்த்தலே வளம்படுப்பதாகும் என்ற கா.சு.வின் கருத்து ஏனைய பிற்கால உரைகளில் சிறந்து விளங்குகிறது.

''உற்றவை ஆராய்வான்''

'அவ்விடத்துள்ள மிகுதிகுறைவுகளை ஆராய்தல்' **மணக்**; 'சேதம் வராமல் பாதுகாப்பவன்'' **பரிதி**; 'இடையூறு வந்தகாலத்து அது தலையழிந்து போதற்குரிய வழிகளையாய்ந்து நீக்கவல்லவன்' **காளி**, **பரிமேல்**., **கவிராசர், பழைய 2**. இவற்றுள் 'சேதம் நேராமற் பாதுகாத்தல்' என்ற பொதுவகை ஆய்வினும் **பரிமேலழகர்** முதலானோர் கூறும் சிறப்புவகை உபாயங்கள் சிறந்தன. வாரி பெருக்கல் புரவுவரி செக்கிறை முதலிய வரிகளைப் பெருக்குதல் அன்று. குடிகளைத் தலையளி செய்தலால் நாடு பல்லாற்றானும் வளமுறச்செய்தலும் அவர்கள் மனம் உவந்தீயச் செய்தலுமேயாம் அன்றி, வாரி பெருக்கி-ஆறு, குளம், கால் மடு அணை முதலான நீர்வரும் வழிகளைப் பெருக்கி, வளப்படுத்து — தன்னாடு வளம் பெருகச்செய்து. உற்றவை யாராய்வான்—நாட்டிற்கு வந்த இன்பத்துன்பஏதுக்களை ஆராய்பவன் வினை செய்க எனலுமாம். இன்பமேயாயினும்

தீயவழியிற் சேருமாயின் அது பிற்பயக்கும் பீழை பெரிதாமாகலின் இன்பமும் ஆயத்தக்க தொன்றாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

பரிசனம் பகைவர் கள்வர் படர்தரு முயிர்க டாமென்
றுரைசெயத் திடத்தினாலு முலகிடை யிடையூ றெய்தா
வரிசையிற் காத்து நீதி வழுக்கினார் தம்மைக் கொத்திக்
கரிசறப் பொருளுங் கோடல் காவலர் தருமை மைந்தா

—விநாயக.

52.3. அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும் நன்குடையான் கட்டே தெளிவு. (நகூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: அன்புடைமையும், அறிவுடைமையும், ஒருபொருளை ஆராய்ந்த துணிவுடைமையும், அவாவின்மையும் என்னும் இந் நான்கு குணங்களையும் நிலைபெற உடையான் மேலதே வினையை விட்டிருக்குந் தெளிவு எ—று.

ஆ) பரிதி.: அன்புடைமை அறிவுடைமை அவாவின்மை தெளி வுடைமை இந்த நாலு குணமுடையவனிடத்திலே உறவு பண்ணுவான் எ—று.

இ) பரிப்.: அன்புடைமையும் அறிவுடைமையும் ஒரு பொருளை ஆராய்ந்த துணிவுடைமையும் அவாவின்மையும் என்னும் நான்கு குணத்தினையும்முழுதே உடையவன் கண்ணதே எல்லாப்பொருளின் கண்ணும் தெளிதல் எ—று.

இது பெரும்பான்மையும் காரிய ஆராய்ச்சிக்கு அதிபதியை[1] நோக்கிற்று.

ஈ) காளி.: நட்டார் சுற்றத்தார் ஆயினும் ஆக; அன்றிப்பிறரே ஆயினும் ஆக; யாவன்ஒருவன்தன்மாட்டு அன்பும் காரியா காரியங்கள் தேறித் தெளியவல்ல அறிவும், தனது உயிரும் பொருளும் அவனுழைப் பெரிதும் தேறலாவதோர் தேற்றமும், மற்றும் நெறியல்லன வற்றின்கண்ணே அவாவின்மையும் என்று இங்ஙனம் சொல்லப்பட்ட

1. அதிபதி- உரிய தலைவன்'

நான்கும் குறைவின்றிப் பெரிதும் உடையான் மற்று அவன் கண்ணதேயாக; தெளிந்து வினைசெய்யும்திறம் எ—று.

உ) *பரிமேல்.*: அரசன் மாட்டு அன்பும், அவனுக்கு ஆவன[2] அறியும், அறிவும், அவை செயதற்கண் கலங்காமையும், அவற்றான் பொருள் கையுற்றவழி அதன்மேல் அவாவின்மையுமாகிய இந்நான்கு குணங் களையும் நிலைபெறவுடையான் மேலதே வினையை விட்டிருக்கும் தெளிவு.

இந்நான்கும் நன்குடைமை, இவன் செய்கின்ற வினைக்கண் யாதும் ஆராய வேண்டுவது இல்லை என்று அரசன் தெளிதற்கு ஏது வாகலின், அவனை அதன் பிறப்பிடனாக்கிக் கூறினார்.[3] இவை மூன்று பாட்டானும் ஆடற்கு உரியானது இலக்கணம் கூறப்பட்டது

ஊ) *கவிராசர்:* அரசனிடத்தில் அன்பும் அவனுக்காவன செய்யும் அறிவும் அவை செய்தற்குக் கலங்காத தெளிவும் அவற்றாற் பொருள் கையுற்றவழி யவாவின்மையும் ஆகிய இந்நான்கு செய்கையு முடை யானிடத்திலே தொழிலை விட்டிருக்கும் அரசனுக்குத் தெளிவு.

ஏ) *பழைய2:* அரசனிடத்தில் அன்பும் அவனுக்காவன செய்யும் அறிவும் அவை செய்தற்குக்கலங்காத தெளிவும் அவற்றாற் பொருள் கையுற்றவழி யவாவின்மையும் ஆகிய இந்நான்கு செய்கையுமுடை யானிடத்திலே தொழிலை விட்டிருக்கும் அரசனுக்குத் தெளிவு.

தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், பரிமேலழகர் உரைகள் *கருத்தான்* மட்டுமன்றிச் சொன்னடையானும் ஒத்திருத்தல் காண்க. 'அன்பு' என்பதற்குப் *பரிமேலழகர்* 'தன் மாட்டன்பும்' என்று *காளிங்கரை* ஒத்துரைத்தார். அரசன் மாட்டன்புடையனாதல் அச்சத்தானும், பதவிப்பற்றானும் பொருணசையானுங்கூட நிகழக்கூடுமாதலின் அரச அன்பு நாட்டன்பு இரண்டும் அடங்க *மணக்குடவர்* முதலிய சிலர் பொதுவகையான் 'அன்புடைமையும்' என வாளா கூறினர்.

இராம., அன்பு அறிவு முதலியவற்றிற்குப் பொதுவாக உள்ள பொருள்களைக் கொள்ளக்கூடாது. அரசனாகிய தன் மாட்டு அன்பு, மேற்கொண்ட வினைக்கேற்ற அறிவு, அதனை முடிக்குந்திறமை,

2. ஆவன - அனுகூலமானவற்றை.
3. 'நன்கு உடையான்கட்டே தெளிவு' என 'நன்குடையான்' என்பதனோடு இடவுருபு புணர்த்து வினை முதலை இடமாகக் கூறியதைக் குறிப்பித்ததாம்.

தன்னிடம் வரும் பணத்தின்மேல் ஆசையில்லாமை என்று கொள்ள வேண்டும்' என்பர். மு.ரா.அரு. வும் தேவநேயரும் இக்கருத்துடையவர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

''ஆளு மரசன் பால்அன்பும் அவனுக் காவ தறியறிவும்
நாளு மவற்றைக் கலங்காமல் நன்று முடிக்கும் உளத்துணிவும்
முளும் வினைக்குத் தன்கரத்தின் மொய்த்த பொருளின் விழையாத
கோளும் உடையான் புரிவினையில் குற்ற முறாது குணமேயாம்''
—விநா. அரசி., 81.

52.4. எனைவகையால் தேறியக் கண்ணும்
வினைவகையான்
வேறாகு மாந்தர் பலர் (நிகச)

உரைப்பகுதி:

அ) மணக்.: எல்லாவகையினாலும் ஆராய்ந்து தெளிந்தவிடத்திலும் அவர் செய்யும் வினையின் வகையினாலே மனம் வேறுபடும் மாந்தர் உலகத்துப் பலர் எ—று.

இது தெளிந்தேம் என்று இகழலாகாது என்றது.

ஆ) பரிதி.: நானாவகை[1]யினாலும் ஒருவனை விசாரித்து[2] நம்பினான் அவனிடம் உறவின்முறையில்லாதவன் வேறுபடும் எ—று.

இ) பரிப்.: உரை இல்லை.

ஈ) காளி.: உலகத்து அரசர் ஒருவரை எனைத்து வகையானும் தெளிந்த இடத்தும், பின்னும் கருமவகையினால்[3] வேறுபட்டு நிற்கும் மாந்தர் உலகத்துப் பலர் உளர். ஆதலின் அதனால் தாம் பிறர்க்குச் செய்யும் கருமத்தின்கண் வரும் பொருள் முதலாகிய பேறு கண்ட இடத்துத் தமது நெறியினைத் தேராது புரிய நிற்கும் புல்லிமை

1. நானாவகை—பலவகை. நானா—பல என்னும் பொருளைத் தரும் திசைச்சொல் பலபொருள் ஒருசொல்லை நானார்த்த பதம் என வடமொழியில் வழக்குண்மையின் இது வடசொல்லாகலாம் என்று எண்ணத் தோன்றினும் பகுதியும் அதன் பொருளும் அறியமாட்டாமையின் துணியக் கூடவில்லை.
2. விசாரித்து—ஆய்ந்து; 3. கருமவகையான்—செயல் வகையான்.

யுடையோரும்[4] உளர். ஆதலால் பெரிதும் தெரிந்து வினை அடைக்க வேண்டும்[5] எ—று.

உ) *பரிமேல்.:* எல்லாவகையானும் ஆராய்ந்து தெளிந்து வினை வைத்தபின்னும் அவ்வினையியல்பானே வேறுபடு மாந்தர் உலகத்துப் பலர்.

கட்டியங்காரன்[6] போல அரச இன்பத்தினை வெஃகி, விகாரப் படுவதல்லது[7], அதனைக் குற்றமென்று ஒழிந்து தம்மியல்பின் நிற்பார் அரியராகலின் வேறாகுமாந்தர் பலர் என்றார். வினை வைப்பதற்கு முன் எல்லாக் குணங்களும் உடையராய், வைத்தபின் விகாரப்படுவாரை இடையாயதொரு வினையை வைத்து அறிந்து ஒழிக்க என்பதாம். இதனான் ஒருவகையால் ஒழிக்கப்படுவார் இவர் என்பது கூறப்பட்டது.

காரி.: கட்டியங்காரன் கதையைப் பிரமாணமாக[8] எழுதினமை யால், சிந்தாமணி கட்டுக்கதை அன்றென்க. எனைவகை—எவ் வகை என எகரம்வினாமாத்திரையாய் நின்றது.

ஊ) *கவிராசர்:* எல்லாவகையானும் ஆராய்ந்து தெளிந்து ராச்சிய பாரத்தை வைத்த பிறகும், அந்த ராச்சியத்தினுடைய ஆசையினாலே வேறே நினைவாய்க் குணங்கெட்டுப் போகிறவர்கள் அனேகம் பேர் உண்டு எ—று.

ஏ) *பழைய 2:* எல்லா வகையானும் ஆராய்ந்து தெளிந்து தொழிலை வைத்த பின்னும், அத்தொழிலினியலால் வேறுபடு மாந்தர் பலர்.

மல்லர்: 'எனை வகையார்' பாடம். அனேக மனுஷர் எல்லா விதத்திலேயும் ஆராய்ந்து பார்த்ததினாலே இப்படிக்கு ஒத்தவர்கள் என்றும் நிலவரப்பட்டதுக்குப் பிறகு செய்கிற தொழில் வித்தகரால் பேதகமாய்ப்போனார்கள் எ—று.

அநேகம் பேர்களுடைய குணங்களைப் பார்த்து அவர்கள் உத்தியோகத்துக்கான மனுஷன் என்று நிலவரப்பட்ட அரசன் அவர் களை உத்தியோகத்திலே வைப்பான். ஆனால் அவர்கள் உத்தியோகத்

4. புல்லிமையுடையோரும்; இழிதகையுடையோரும் 5. அடைக்கவேண்டும்— ஒப்படைக்கவேண்டும்.
6. கட்டியங்காரன்—சீவகன் தந்தையாகிய சச்சந்த மன்னனின் அமைச்சன். அமைச்ச னால் அரசன் கெட்டொழிந்த வரலாற்றைச் சீவக சிந்தாமணி நாமகள் இலம்பகத் துட் காண்க.
7. விகாரப்படுதல்—வேறுபடுதல்; 8. பிரமாணமாக—எடுத்துக்காட்டாக.

திலே இருக்கிறபோது முன்காண்பித்த குணங்களைவிட்டுப் பொறுமையாய்ப் போறார்கள் என்கிறதினால் அரசன் ஒருவனை உத்தியோகத்திலே வைக்கிறதுக்கு முன்னே அவனுடைய குணங்களை யாராய்கிறதும் அல்லாமல் வைத்ததுக்குப் பிறகு அவனுத்தியோகத்தில் காணப் பிற குணங்களுஞ் சோதிக்க வேண்டியது என்பது கருத்து.

எனை—எல்லாம்; தேறுதல்—தெளிதல்; கண்—இடம்; வினை—தொழில்; மாந்தர்—மனுஷர்

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'எனைவகையான் தேறியக்கண்ணும்' — 'தெரிந்து தெளிதற்கண்' ஆசிரியர் கூறிய, 'அறம்பொருள் இன்பம் உயிரச்சம் ஆகிய நான்கு தேர்வுமுறையானும், குடிப்பிறப்பு—பழிக்கஞ்சும் பண்பு, குணம் குற்றம், சுற்றமில்லாமை, முதலான எனைத்துவகையானும்' என்க.

'வினைவகையான் வேறுபடுதல்' — 'வினையாற்றுங்கால் அவ்வினையின் முடிவு தனக்கும் சுற்றத்திற்கும் தீமையாதல், தன் ஆதாயத்தை யிழப்பித்தல் முதலிய பயன்வகையான் வேறுபட நேருதலைக் குறித்தது. உரைவேற்றுமையில்லையாயினும், 'வேறான வரை ஒழிக்க வேண்டுமாயின் வேறொருவரை அதன்கண் நிறுவி வேறு வினையை இவன்பால் தருக' என்ற காளிங்கர் உரை தெளிந்தாரை விலக்குதல் கூடாது எபன்தை வலியுறுத்துகிறது. 'அங்ஙனம் வைத்தவினையினும் தவறிழைப்பராயின் நீக்குக' என்பர்.

'உறவின் முறையில்லாதவன் வேறுபடும்' என்ற பரிதி., கொண்ட பாடம் 'இனவகையால் வேறுபடும்' என்றிருக்கலாம் போலும்.

ஈண்டு வினைவகையான் வேறுபடும் மக்கள் பலர் என்றவர் பின்னர் அத்தகையானையும் 'நாடோறும் நாடுக' என்றதும் காண்க.

தெரிந்து தெளிதலானும், தெளிந்தானிடம் ஒப்படைக்கும் வினைகளைத் தெரிதலானும் ஒருவனை ஆய்ந்து நம்பின மன்னன் ஒப்படைக்கும் வினைக்கண் உள்ள ஏற்றத்தாழ்வு விருப்பு வெறுப்புக்களானும், வினையாற்றும்போது இடையில் ஏற்படும் தடைகளானும் உறவின் முறையில்லாதவன் தனக்கு வேலை தந்த அரசனிடமே மாறுபடுதல் கூடும். ஆதலால் உறவின்முறையானையே நிலைபெறுத்துக என்பது பரிதி., கருத்துப்போலும். அடுத்த குறள் 'அறிந்தாற்றி என்பது

சிறந்தான் என்று நிறுவின் அவன் வினைவகையான் வேறுபடுதலுங் கூடும்; ஆகையால் உறவின் முறையானவனையும் ஆய்க என்கிறது என இரு குறளுக்கும் பொருள் தொடர்பு கூறுகிறார் போலும். இதில் வலிந்து இயைபு காண்பதால் ஏதோ பிறழ்வுள்ளது போலவும் தோன்று கிறது.

52.5 அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான் சிறந்தானென் றேவற்பாற் றன்று. நாகநி

அ) மணக்.: ——————

ஆ) பரிதி.: இராசகாரியத்தை அறிந்தவன் எந்த வகையாலும் நம்புதலாக இருந்தவன் காரியத்தின் விரோதத்தினாலே தீங்குண்டா தலால் உறவின் முறையானவனையே விசாரிப்பான் எ—று.

இ) பரிப்.: வினைதான் உள்பாடு அறிந்து செய்யும் காலத்து உற்ற துன்பத்தையும் பொறுத்துச் செய்ய வல்லாற்கு அல்லது தமக்குச் சிறந்தான் என்று ஒருவனை ஏவும் பகுதி உடைத்தன்று எ—று.

இது வினையினது இயல்பு கூறிற்று.

ஈ) காளி.: மற்று இங்குச்சொன்ன முறையே 'யாம் இவற்கு இது முடிக்குவம்' என்று அறிந்து, மற்று அவ்வினைமுடியும் அளவும் ஒழுக நடத்தி, அங்ஙனம் செய்ய வல்லோற்கு அல்லது வறிதே இவன் நமக்குப் பெரிதும் நட்பிற் சிறந்தான் என்று ஒரு வினையை நீ இது செய்வாயாக என்று ஏவுதற்குத் தகாது. எ—று.

உ) பரிமேல்.: -செய்யும் உபாயங்களை அறிந்து செயலாலும் இடை யூறுகளானும் வருந்துன்பங்களைப் பொறுத்து முடிவுசெய்ய வல்லானை யல்லது, வினைதான் இவன் நம்மாட்டு அன்புடையான் என்று பிற னொ[1]ருவனை ஏவும் இயல்பு உடைத்தன்று.

செய்கிற்பாற்கு[2] என்பது வேற்றுமைமயக்கம். அறிவு ஆற்றல் களான் அல்லது அன்பான் முடியாது என இதனால் வினையினது இயல்பு கூறப்பட்டது.

---

1. பிறன்-உபாயங்களையறிதலாலும் இடையூறுகளாலும் வருந்துன்பங்களைப் பொறுக்க லாற்றாதவன்,
2. செய்கிற்பாற்கு-என்பதில் உள்ள 'கு'உருபு நான்கன் பொருளாகிய கொடை முதலாய பொருளிற்றீர்ந்து, இரண்டாம் வேற்றுமைப் பொருளில் வந்தமையின் வேற்றுமை மயக்கம் என்றார். இதில் 'கில்' என்பது ஆற்றல் பொருளைத் தருவதோர் இடைச் சொல்.

ஊ) கவிராசர்: ஒருவன் குணங்களை ஆராய்ந்தறிந்து, செய்கிற காரியங்களுடைய இடையூறுகளையும் ஆராய்ந்து செய்யவேணும் அல்லாமல், அவன் நம்மிடத்திலே அன்புடையவன்'' என்று காரியங் களைச் செய்யச் சொல்லப் போகாது எ—று.

ஏ) பழைய 2.: செய்யும் உபாயங்களை அறிந்து செயலானும் இடையூறுகளானும் வருந்துன்பங்களைப்பொறுத்து முடிக்க வல்லானை யல்லது வினைதான் இவன் நம்மிடத்து அன்புடையவனென்று பிறன் ஒருவனை ஏவும் இயல்புடைத்தன்று.

தொகுப்பும் குறிப்பும்:

'சிறந்தான்'

தொல்லாசிரியர்களில், 'உறவின் முறையானவன்' பரிதி. 'தமக்குச் சிறந்தான்' பரிப்.; 'பெரிதும்நட்பிற் சிறந்தான்' காளி; நம்மாட்டு அன்புடையான்' பரிமேல்., கவிராசர், பழைய 2. தேவ நேயர்.

சென்ற அதிகாரத்துக் ''காதன்மை கந்தா அறிவு அறியார்த் தேறுதல். பேதைமை எல்லாந்தரும்'' என்ற பாவால் இக்குறட் கருத்துப் போந்தமையின் மீண்டும், அன்பால்—நட்பால்—உறவின் முறையால் சிறந்தானை ஏவுதல் கூடாது என்பதனாற் போந்த பய னென்னை? அன்றியும் இவ்வதிகாரத்து 'அன்பறிவு' (573) என்று வினையை ஒப்படைப்பதற்கு அன்பும் காரணமாகக் கூறியிருக்க அத னொடு மலைவாகக் கூறலாமா? என்பதனைச் சிந்திக்க. வேறுகருத்து இருத்தல் வேண்டும். 573, ஆம் குறளிற் கூறியவற்றை விடச் செயலாற்றுந்திறன் தெரிந்து ஒப்படைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவது இக்குறள் என்பது கருத்தாகும். இராம 'எடுத்த வேலையை அறிந்தவனாகவும் முடிக்கக் கூடிய வகையில் முடிப்ப வனாகவும் இருந்தாலல்லது இவன் பலவகைகளிற் சிறந்தவன் என்று கருதி, அந்த வேலையை அவனிடம் ஒப்படைக்கக்கூடாது, என்பர். குழந்தையும் இக்கருத்தினரே.

மு.ரா.அரு. இக்குறட்கருத்தாக முன் 513ல் கூறிய ''அன்பு அறிவு' முதலிய குணங்கள் உடையனாயினும் அறிதலும் ஆற்றுதலுமாகிய இருகுணங்களும் வேண்டும் என்பது வலியுறுக்கப் பெற்றது 'என்பர். வரதராசர்' செயலைப்பற்றிய இயல்புகளையும், அதனைச் செய்யும் வழிவகைகளையும் தெரிந்து, எந்த வகையானும் எடுத்த செயலை முடிக்கத் தெரிந்து இருப்பவர்களே செயலை முடிக்கத்தக்கவர்கள்.

அங்ஙனமன்றி வேண்டியவர் என்பதற்காக நியமிக்கக் கூடாது.' என்பர்.

பரிமேலழகர் உரைக்கு விளக்கந்தரும் மு.ரா.அரு. வுக்கும் அன்பாற் சிறந்தான் என்ற உரை அன்பு அறிவு என்ற தேர்வு முறை கட்கு முரணாகிறதே என்ற எண்ணம் உண்டாகி அன்பிருப்பினும் செயலறிவும் ஆற்றும் முறையும் வேண்டும் என்று விளக்கினர்.

இராமலிங்கர் இவைகளை எண்ணிப்பார்த்து சிறந்தான்—பல வகைகளாற் சிறந்தவனாயிருப்பினும் தேர்ந்து தெளிதற்குரிய காரணங் களோடு பிற எத்துணைச் சிறப்புடையனாயினும் எனக் கூறினர். இது மிகச் சிறந்த கருத்தாகும். ஏற்றது கொள்ளுக.

''வினையினது இயல்பு கூறிற்று' என்ற *பரிப்பெருமாள்* உரைக் குறிப்புக்கு *பரிமேலழகரது*' அறிவு ஆற்றல்களான் அல்லது..... வினையினதியல்பு கூறப்பட்டது' என்ற தொடர் விளக்கமாக அமைந் திருப்பது காண்க. இவர் இவ்விருவர்காலம் அறிதற்குக் கருவி யாகலாம்.

அரசகாரியத்தில் இருப்பார்க்கு இவன் பொருள் வாங்கினான்; பழிப்படுவசெய்தான் என அடாப்பழியும் குடிகளின் எதிர்ப்பும் அரசன் சினமும் வரக்கூடும். வரினும் உண்மையொன்றையே குறிக்கோளாகக் கொண்டு காலம் வருந்துணையும் அனைத்தையும் பொறுக்கும் வன்மைவேண்டும் என்பார் 'ஆற்றி' என்றும், அங்ஙனம் பொறுத் தலுடையாரும் இத்துணை நேர்மையாயிருந்தும் நமக்கு இந்தப் பழி யும் அரசு வெறுப்பும் வந்ததே என்று பின் அவ்வினையைச் செய்ய விரும்பார்; தொட்டதையும் விட்டுச் செல்வார் ஆகலின் செய்கிற் பார்க்கு என்றும் கூறினார் என்க.

ஒ) *ஒப்புமைப்பகுதி:*

முற்றும்:

''தெற்ற அறிவுடையார்க் கல்லால் திறனில்லா
முற்றலை நாடிக் கருமஞ் செயவையார்
கற்றொன் றறிந்து கசடற்ற காலையும்
அற்றதன் பாற்றேம்பல் நன்று.'' —பழ. நா. 373

''..... ..... அறத் தாற முங்கத்
தேற்றாது செய்வார் களைத்தேறுதல் செவ்வி தன்றால்.''
—கம்பராமா.. 4079.

526. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ(டு) எய்த உணர்ந்து செயல். (நிகழ்)

அ) மணக்.: வினை செய்வானையும் ஆராய்ந்து, அவ்வினையினது இயல்பையும் ஆராய்ந்து, அது முடியுங் காலத்தோடே பொருந்த அறிந்து, பின்பு அவ்வினை அவன் செய்வானாக அமைக்கவேண்டும் எ—று.

ஆ) பரிதி.: ஒருகாரியம் செய்யவல்லவனுமாய் அவன் குணத்தையும் அவன் நடக்கிற நீதியையும் காலாகாலங்களையு[1]ம் இந்த மூன்று காரியத்தையும் விசாரித்து செய்வான் எ—று.

இ) பரிப்.: வினை செய்வானையும் ஆராய்ந்து, அவ்வினையினது இயல்பையும் ஆராய்ந்து அதுமுடியுங் காலத்தோட பொருந்த அறிந்த பின் அவ்வினையை அவன் செய்வானாகப்படும் எ—று.

மேல் வினையினது இயல்பு கூறினார்: இது செய்விக்குமாறு பொதுவாகக் கூறிற்று.

ஈ) காளி.: கீழ்ச்சொன்ன வகையானே வினைசெய்யத் தகுந்த வனையும், ஆராய்ந்து வெல்லும் வினையினது இயல்பும் ஆராய்ந்து மற்று அதனை அதற்கு ஏற்ற காலத்துடன் அடுக்குமாறு குறிக் கொண்டு செய்க அரசர் எ—று.

உ) பரிமேல்.: முதற்கண்ணே செய்வானது இலக்கணத்தை ஆராய்ந்து; பின் செய்யப்படும் வினையினது இயல்பை ஆராய்ந்து; பின் அவனையும் அதனையும் காலத்தோடு படுத்துப் பொருந்த அறிந்துஅவனை அதன்கண் ஆட[2]லச்செய்க.

செய்வானது[3] இலக்கணமும் வினையினது இயல்பும் மேலே கூறப்பட்டன. காலத்தோடு எய்த உணர்தலாவது இக்காலத்து இவ் விலக்கணம் உடையான் செய்யின் இவ்வியல்பிற்றாயவினை முடியும் என்று கூட்டியுணர்தல்.

ஊ) கவிராசர்: செய்கிறவனை முதற்கண் ஆராய்ந்து அறிந்து, செய்யப்படுங் காரியத்தை அதன்பின் ஆராய்ந்தறிந்து, பிறகு இந்த

---

1. கால—அகாலம்—செய்யத்தக்க காலம்—தகாத காலம்.
2. ஆடல்—ஆளுதல்.
3. செய்வானை நாடு முறைகளை 511, 512, 513ம் குறள்களாலும், செயல் நாடுதலை 'அறிந்தாற்றி என்னும் முற்குறளானும் அறிக.

இரண்டையும் காலபக்குவத்தோடே ஆராய்ந்து இயன்றதாகிறதைச் செய்க எ—று.

ஏ) பழைய 2: முந்தி வினைசெய்வா னிலக்கணத்தை ஆராய்ந்து பின் செய்யப்படும் வினையின் இயல்பை ஆராய்ந்து பின் அவனையும் அதனையும் காலத்தோடு படுத்துப் பொருந்த அறிந்துஅவனை அத் தொழிலுக்கு உரித்தாகச் செய்க.

தொகுப்பும் குறிப்பும்:

செய்வானை நாடிப் பின் வினையை நாடுவதாயின் செயலுக்கு சிறப்பின்றாம். அரசியலில் செயல் நாடிச் செய்வானை நாடுதலே சிறப்பு; ஆயினும் அதிகாரம் தெரிந்து வினையாளுதல் ஆதலின் அதற் கியைய செய்வானை நாடுதல் முதற் கண்ணும் அவன் செய்யக் கூடிய வினையை நாடுதல் அடுத்தும் கூறப்பட்டன. இங்ஙனம் நாடுதலைப் பலமுறை பலவகையாகக் கூறப்பட்டுள்ளது. இங்கும் அதனை மீளக் கூறவேண்டுமா என்ற ஆய்வு பரிமேலழகர்க்கு உண்டாயிருக்கிறது. அவர் செய்வானியல்பு மேலே கூறப்பட்டன. காலத்தொடு எய்த உணர்தலோஈண்டுக்குறிப்பிடப்பட்டுள்ளது எனச் சிறப்புரையிற் கூறுவர் ஆதலால்காலத்தொடு எய்த செய்வானை நாடி,வினைநாடி உணர்ந்து செயல் என இயைத்துப் பொருள் கொள்ளுதலும் வாய்ப்பாகும்.

இக்குறட்பாவில் ''காலத்தோடு எய்த உணர்ந்து'' என்ற பகுதி பலருக்குப் பல கருத்துக்களை வழங்கியிருக்கிறது.

மணக்; 'முடியுங்காலத்தொடு பொருந்த அறியச் சொல்கிறார்.'
பரிதி; 'கால அகாலங்களை அறியச்சொல்கிறார்.'

காளி; 'அதனை அதற்கு ஏற்ற காலத்துடன் அடுக்குமாறு குறிக் கொண்டு' என்கிறார்.

பரிமேல்: 'அவனையும் அதனையும் காலத்தொடு பகுத்துப் பொருந்த அறிந்து' என்கிறார். இதற்கு விளக்கமாக 'இக்காலத்து இவ்விலக்கணம் உடையான் செய்யின் இத்தகைய வினைமுடியும் என்றுணர்தல்'என்றும் கூறுவர்.

இராம; 'இந்தச்சமயத்தில் இவனைக்கொண்டு அதைச் செய்வது பொருந்துமா? என்பதை அறிதல்' என்பர். இதற்கு விளக்கமாக 'வேலையாள் திறமையுள்ளவனாயினும், அவன் போகிற இடத்தில் உள்ளவர்களுக்கும் அவனுக்கும் ஏதாவது மனத்தாங்கல் இருந்தால்,

நம் காரியம் கெடும் ஆதலால் இவனை இப்போது அங்கு அனுப்புவது பொருந்துமா என்றாய்தல்' என்பர். குழந்தை 'அவ்வினை முடிவு பெறுங்காலத்தொடு பொருந்த உணர்ந்து' என்பர். வரதராசனார் 'எந்தெந்த காலத்தில் எதை எதைச்செய்யவேண்டும் என்று அறிந்து செய்தல் என்பர். மு.கோ. 'தொடங்குங்காலம், செய்யுங்காலம் முடிக்குங்காலம் உணர்தல்' என்பர். இவர்கள் சொல்லுவதனைத்தும் பொருந்துமாயினும் இது அரசியல் அலுவலாதலின், ஒரொரு காலத்து ஒரொருவன் அலுவல் மிகத் தேவையாதல் கூடும். அதற்கு ஏற்ப உணர்ந்து செய்க என்பது ஏற்புடையதாகுமா? எண்ணுக.

52.7 இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந் (து) அதனை அவன்கண் விடல்

நிகழ்

உரைப்பகுதி:

அ) மணக். : இக்கருமத்தினை இக்கருவியாலே இவன் செய்து முடிக்கவல்லவன் என்று ஆராய்ந்து பின்பு அக்கருமத்தினை அவன் கண்ணே விடுக எ—று.

இது பெரும்பான்மையும் சேனாபதியை நோக்கிக் கூறப்பட்டது.

ஆ) பரிதி. : இந்தக் காரியத்தை இன்ன காரியத்தினானே இவன் முடிக்கும் என்று அறிந்து அந்தக் காரியத்து அவனையே நாட்டுக எ—று

இ) பரிப். : இக்கருமத்தினை இக்கருவியாலே இவன் செய்து முடிக்க வல்லன் என்று ஆராய்ந்த பின் அக்கருமத்தினை அவன்கண் விடுக எ—று.

இது பெரும்பான்மையும் சேனாபதியை நோக்கிக் கூறப்பட்டது.

ஈ) காளி.: இக்கருமத்தை இதனால் இவன்பற்றி முடிக்கவல்லான் என்று ஆராய்ந்து தெளிந்தபின் மற்று அக்கருமத்தை அவனிடத்து விடுக; எனவே. இனிச் சிறிதும் அல்ல, ஆம்; என்று, கருதாது ஆங்கு அமைந்து ஒழுக எ—று.

உ) பரிமேல். : இவ்வினையை இக்கருவியால் இவன் முடிக்க வல்லன் எனக் கூறுபடுத்து ஆராய்ந்து, மூன்றுந் தம்முள் இயைந்த வழி அவ்வினையை அவன் கண்ணே விடுக.

---

1. மூன்றும்—வினையும், அதற்காம் கருவியும், செய்பவனும் ஆகிய மூன்றும்

கருவி—துணைவரும், பொருளும்[2] முதலாயின. வி[3]னைமுதலும் கருவியும் வினையும் தம்முள் இயைதலா[4]வது ஒரொன்றோடு ஏனைய இரண்டற்கும் பொருத்தம் உண்டாதல். விடுதல்—அதற்கு அவனை உரியனாக்குதல்.

ஊ) கவிராசர்: இந்தக் காரியத்தை இந்த வகையால் இவன் முடிக்கவல்லன் என்று ஆராய்ந்து மூன்று வகையு மொத்ததானால், அந்தக் காரியத்தை அவன்மே லிடலாம் எ—று.

அவன்கண் விடுகிறது—அந்தக் காரியத்துக்கு அவனைக் கர்த்தனாகப் பண்ணுதல் எ—று.

ஏ) பழைய 2: இவ்வினையை இக்கருவியாலிவன் முடிக்கவல்லனெனக் கூறுபடுத்தாராய்ந்து மூன்றுந் தம்முளியைந்த வழியவ்வினையை யவன்கண்ணே விடுக.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இதனால்' என்பதற்கு 'இன்ன கருவியால்' எனவும் கருவியாவன படையும் துணையும் எனவும் மணக்குடவரும் பரிமேலழகரும் கருதுவர். பழைய உரையும் 'துணைவரும் பொருளும்' என்னும். 'இன்ன காரியத்தினாலே' என்பர் பரிதி. 'இன்னவகையால்' என்பர் கவிராசர். 'கருவியால்' என்பதை மறுத்து 'இன்ன காரணத்தால்' என்பதே பொருந்தும் என்பர் இராமலிங்கர். 'காரணத்தால்—இடத்தால்—மற்றும் பிறசாதனங்களால்' என்பர் வரதராசனார், சி.இ, 'இவ்வழியால்' என்பர்.

அமைச்சர் முதலான அலுவலரின் செய்முறைகளைப் பின்னர் வினைசெயல் வகையான் ஆசிரியர் அறிவிப்பராதலின் அவற்றான் ஆய்ந்து எனல் ஏற்புடையதாகுமா? என்பதை எண்ணிப்பார்க்க.

இக்குறள் அமைப்பைக் கொண்டு 'பெரும்பான்மையும் சேனாபதியை நோக்கிக் கூறப்பட்டது' என்பர் மணக்குடவர். ஏனையோர் வாளா கூறுதல் காண்க. அதனால் அரச அலுவலர் அனைவருக்கும் பொதுவாகக் கோடலே பொருந்துவதாம்.

இக்குறளின் போந்த கருத்தாகக் காளிங்கர் கூறும் 'இனிச்

---

2. முதலாயின என்றதாற் காலமும், படையும், இடமும் கருதப் பெறும்.
3. வினைமுதல்—வினையைச் செய்யும் முதற்பொருளாகிய கருத்தா. அவன் செய்யும் செயலின் பயனைச் செயற்படுபொருளிற் சேர்ப்பது கருவி. கருவி, காரகம், காரணம், ஏது, சாதனம் என்பன ஒருபொருட் கிளவிகள்.
4. இயைதல்—தொழிலோடு செய்பவனுக்கும், கருவிக்கும், கருவியோடு தொழிலுக்கும் செய்பவனுக்கும், செய்பவனோடு தொழிலுக்கும் கருவிக்கும் பொருத்தமுண்டாதல்.

சிறிதும் அல்ல; ஆம்; என்று கருதற்க. அவனிடம் அப்பொறுப்பை ஒப்படைக்க என்பது 'விடுக' என்ற சொல்லாற் கிடைக்கும் பெரும் பயன். 'அவனை அதற்குரியனாகச் செயல்' என்பதாற் கிடைத்தலின் ஈண்டும் வேண்டுமா என்பதை ஆராய்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

''உற்றான் உறாஅன் எனவேண்டா ஒண்பொருளைக்
கற்றானை நோக்கியே கைவிடுக—கற்றான்
கிழவன் உரைகேட்கும் கேளான் எனினும்
இழவன் றெருதுண்ட உப்பு.'' —பழ.நா.,38

ஒருபுடை:

''கூரையேறிக் கோழிபிடிக்க மாட்டாத குருக்களா
வானங் கீறி வைகுண்டம் காட்டுவார்.'' —பழமொழி.

கூலிக்குக் குத்துகிறவளை கேளிக்கை யாடச்சொன்னாற் போல்.''
—பழமொழி.

52.8. வினைக்குரிமை நாடிய பின்றை அவனை அதற்குரிய னாகச் செயல் (நிகஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: இவ்வினைக்கு இவன் உரியவன் என்று ஆராய்ந்த பின்பு அவனை அவ்வினை செய்தற்கு உரியவனாகப் பண்ணுக எ—று.

இஃது, ஒழிந்த காரியங்களின் வினை செய்வாரை ஆக்குமது கூறிற்று.

ஆ) பரிதி.: ஒருவன் ஒருகாரியத்துக்கு வல்லவனாகில் அந்த காரியத்துக்கு அவனையே நாட்டுக எ—று.

இ) பரிப்.: ..... யாராய்ந்த பின் அவனை அவ்வினை செய்தற்கு உரியனாகப் பண்ணுக எ—று.

ஒழிந்த காரியங்களில் வினை செய்வாரை ஆக்குமாறு கூறிற்று.

ஈ) காளி. : வேந்தன் ஒருவனைத் தனது கருமத்திற்கு இனி இவனும் உரியன் என்பதோர் உரிமை ஆராய்ந்து அமைந்த பின்பு யாது செய்யத் தகுவது எனின், மற்று அவனை எவ்வாறு. பேணி ஆக்கினால் உரிமையாம் மற்று அவ்வாறு அனைத்தும் ஆக்கிய பின்பு மற்று அதற்கு உரியனாகச் செய்க எ—று.

உ) பரிமேல். : ஒருவனை அரசன் தன்வினை செய்தற்கு உரியனாக ஆராய்ந்து துணிந்தால், —பின் அவனை அதற்கு[1] உரியனாமாறு உயரச்செய்க.

உயரச்செய்தலாவது[2] அதனைத்தானே செய்துமுடிக்கும் ஆற்றல் உடையனாக்குதல். அது செய்யாக்காலும்[3] கெடும் என்பது கருத்து.

ஊ) கவிராசர்: ஒருவனைத் தன் காரியஞ் செய்தற்குரியவனாக வாராய்ந்து துணிந்தால் பிறகு அவனைக் காரியஞ் செய்கிறதற்குரியனாம்படிப்பெருமை பெறச் செய்க எ—று.

ஏ) பழைய 2 : அரசன் ஒருவனை வினை செய்தற் குரியவனாக ஆராய்ந்து துணிந்தபின் அவனை அவ்வினைக் குரியனாமாறு செய்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'உரியவனாகச் செயல்' என்பதற்குப் பரிமேலழகர் தரும் விளக்கம் தலையாயது. தேவநேயர், 'நாடிய பின்றை—வினை வகையான் வேறாகும் மாந்தன் அன்மையை அறிந்தபின்', என்றும் 'அதற்குரியனாகச் செயல்—உரிமையாக்கிய பின் அதிற்குறுக்கிடாதிருத்தல் 'என்றும், 'அங்ஙனம் இருப்பதே அவன் முழுப் பொறுப்புடன் வினையாற்றவும்? முடிவுபோக்கவும் துணையாம்' என்றும் கூறுவர். இவை நயமான விளக்கம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

''தெளிந்த வினையில் தெளிந்தவனைச் சிறந்த காலத் தொடும்விடுக்க
விளைந்த அறிவாற் றலும்இலையேன் மிக்க உரிமை நின்பாலே

1. அதற்கு உரியனாகச் செய்தலாவது— எடுத்ததற்கெல்லாம் கணத்திற்குக் கணம் தன்னிடம் ஒப்புதல் பெற வேண்டாம் அவனே தன் உரிமையுடன் செய்ய விடுதல்.
2. உயரச்செய்தல்— பதவியான் உயரச் செய்தலும், வெளிப்படையாகப் பதவியினுயர்த்த முடியாவிட்டாலும், எடுத்த காரியத்தில் மட்டும் தன்னைப்போல இயங்கவிடுதல்.
3. அது செய்யாக்காலும்— உரியனாக்குதலைச் செய்யாவிடத்தும்; வினைகெடும் எனவும், வினைப் பயனை அடையும் அரசனாகிய தான் கெடும் எனவும் பொருள் கொள்ள நிற்றல் காண்க. அரசன் கெடுதலின் அவனது பொருட்கேட்டை மட்டும் வருங்குறளிற் குறித்தல் காண்க.

தளைந்த மனத்தா னாயிடினும் தன்பால் வினையைச் சார்த்தற்க
வளைந்துவினையில் விடுத்தவனை அதற்குத் தகுமா றுரிமைசெய்க.''
—விநா. அரசி., 82

52.9. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக நினைப்பானை நீங்கும் திரு. ருக௯

உரைப்பகுதி:

அ) மணக்.: வினையிடத்து வினைசெய்ய வல்லவனது நட்பை வேறுபாடாக நினைக்கும் அரசனைத் திருமகள் நீங்குவள் எ—று.

ஆ) பரிதி.: ஒருவன் ஒருகாரியத்துக்கு வல்லவனாகி, அவனை அவநம்பிக்கை பண்ணுவனாகில் அரசனாகிலும் திருமகளும் விட்டுப் போம் எ—று.

இ) பரிப்.: வினையிடத்து வினை செய்ய வல்லவனது நட்பை வேறாக நினைக்கும் அரசனைத் திருமகள் நீங்குவாள் எ—று.

இது வினை செய்ய வல்லாரை அருள்பண்ண வேண்டு மென்பதூஉம், அவருடன் மாறுபட ஒழுகிற் பொருட்கேடுவரும் என்பதூஉம் கூறிற்று.

ஈ) காளி.: தனது காரியத்தின்கண் சூழ்ச்சி பெரிதும் உடை யோன் யாவன்! அவனது நட்பினை யாதானும் ஒருவாற்றான் வேறு படக் கருதும் வேந்தனை நீங்கிப்போம் செல்வம்: ஆதலான் அது நோக்கி அவனோடு பெரிதும் நட்புடையான் ஆதல் அரசற்கு இயல்பு எ—று.

உ) பரிமேல்.: எப்பொழுதும் தன்வினையின் கண்ணே முயறலை உடையான் அவ்வுரிமையால்[1] தனக்குக் கேளாயொழுகுகின்ற தன்மையை, அது[2] பொறாதார் சொற்கேட்டு[3] அரசன் மாறுபடக் கருதுமாயின், திருமகள் அவனைவிட்டு[4] நீங்கும்.

கேளாயொழுகுகின்ற தன்மையாவது தான் பிறனாய் நில்லாது கேளிர்செய்யும் உரிமையெல்லாம் செய்து ஒழுகுதல். அவனை அவ

1. அவ்வுரிமையால்—தன் தொழிலைத்தான் செய்தற்கு அரசன் வழங்கிய சுதந்திரத் தினால்
2. அது பொறாதார்—அவன் கேள்போல உரிமையுடன் இயங்குதலைப் பொறாத ஏனையோர்.
3. சொல் என்றது, பொய்யும் குறளையும் இடுவந்தியும் முதலான சொற்கள்.
4. அவனை—அரசனை.

மதிப்பாகக்கொண்டு செறக்கருதுமாயின் பின் ஒருவரும் உட்பட்டு முயல்வார் இல்லையாம், ஆகவே, தன் செல்வங்கெடும் என்பது கருத்து. இந்நான்குபாட்டானும் ஆடற்கு உரியானை ஆளுந்திறம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: எப்பொழுதும் தன் காரியத்திலே முயற்சி யுடையான், அந்த காரியத்தினாலே தனக்கு உறவாயிருக்கிறவர் களைக் கண்டு, அது பொறாத பேர் சொல்லுகிறதைக் கேட்டு வேறாக நினைத்தால், லட்சுமி அவனைவிட்டுப் போவாள் எ—று.

ஏ) பழைய 2: எப்பொழுதும் தன்வினையின் கண்ணே முயற்சி யுடையான் கேண்மையைப் பிரிப்பார் சொற் கேட்டு அரசன் மாறு பாடாகக் கருதுமாயின் அச்செல்வம் அவனை விட்டு நீங்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'கேண்மை' 'நட்பு' மணக். காளி; 'தனக்குக் கேளாய் ஒழுகு கின்ற தன்மையை' என உரை எழுதி, 'கேளாம் தன்மையாவது தான் பிறனாய் நில்லாது, கேளிர் செய்யும் உரிமை எல்லாம் செய்து ஒழுகு தல்' என்பர் பரிமேலழகர், கவிராசர், பழைய 2 'உறவு போல் நடத்தல்' தேவநேயர்: 'தொடர்பு' வரதராசனார். இவருள் 'கேளாந்தன்மை' என்ற பரிமேலழகர் உரையே பின்னுள்ளோர் அனைவருக்கும் வழிகாட்டியாகிறது.

தன் கடமையையுணர்ந்த வினையாளன் கருமமே கண்ணாக ஒழுகும்போது, அவன்மேற்கொண்ட வினைக்காக உரிமையோடு பல செயல்களைச் செய்தாலும், பொறாமைக்காரர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு அரசன் ஐயுறுவானாயின் அரச செல்வமே அழியும் என்பதாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

''போயின மனிசரைக் குரங்கைப் பூமியில்
தேயுமின் கைகளால் தின்மின் என்றெமை
ஏயினை இருக்குவ தன்றி என்னினி
ஆயுமிது எம்வயின் அயிர்ப்புண் டாங்கொலோ.''

—கம்பராமா. 6226.

''வினைக்கண் முயற்சி தவறாது வினையின் கேண்மை வேறாக
நினைக்கு மவன்மற் றவ்வினையின் நீங்கும் பிறரும் அதின்நோரார்''.
—விநா.அரசி.,83.

52.10. நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான் கோடாமை கோடா துலகு. (குஉ0)

உரைப்பகுதி:

அ) மணக். : வினைசெய்வான் கோடாது ஒழிய உலகம் கோடாது செவ்வையிலே[1] நிற்கும்; ஆதலான், அவன் செயலை மன்னவன் நாடோறும் ஆராயவேண்டும் எ—று.

இது வினைசெய்வார் செயலை நாடோறும் ஆராயவேண்டும் என்றது.

ஆ) பரிதி. : இராசகாரியம் பார்க்க வைத்த பேர், நாள்தோறும் செங்கோல் கோடாமை விசாரித்தானாகில், செங்கோல் கொடுங் கோலாகாமல் நடக்கும் எ—று.

இ) பரிப். : வினை செய்வான் கோடா தொழிய உலகம் கோடாது செவ்வையிலே நிற்கும். ஆதலால், அவன் செயலை நாள்தோறும் ஆராய்க மன்னவன் எ—று.

இது வினைசெய்வான் செயலை நாள்தோறும் ஆராய வேண்டு மென்றது. முறை செய்வான் என்றதனால், அற ஆராய்ச்சி செய்வாரை நோக்கிற்றே ஆயினும், ஏனை அமாத்தியர் ... ... செய்தல் தொழிலுடையராதலால்... ... ...

ஈ) காளி. : யாவரையும் கருமத்தின்கண் தெளிதல் அருமைத்தாக லான், தான் தெளிந்தவர் மாட்டும் அவர் தனது வினைசெய்யுமிடத்– தும் அதனை இகழாது பெரிதும் ஆராய்ந்து போதுக அரசனானவன். அது என்னையோ எனின், இங்ஙனம் ஆராயவே மற்று அவ்வினை செய்வோன் தனது இயல்பினாலும் அச்சத்தாலும் நெறி கோடான்; ஆகலான் கோடாமையாலே அவ்வினைவழி யடிப்பட்டு வருகின்ற உலகம் கோடாது; எனவே உலகத்து மக்கள் அனைவரும் அரசன் சூழ்ச்சி அறிந்து, அருநெறிக்கண்[3] நிற்பார் எ—று.

---

1. செவ்வையிலே—செம்மையாக
2. அமாத்தியர்—அமைச்சர்.
3. அருநெறி—அரிய அரசியல் நெறி.

உ) *பரிமேல்.* : வினைசெய்வான் கோடாதொழிய[4] உலகம் கோடாது[5], ஆதலான் அரசன் அவன் செயலை[6] நாடோறும் ஆராய்க.

அஃது ஒன்றனையும்[7] ஆராயவே அதன் வழித்தாய உலகமெல்லாம் ஆராய்ந்தானாம்; அதனால், அவனுரிமை அழியாமல் தன்னுள்ளே ஆராய்ந்து போதுக[8] என்பதாம். இதனான் ஆண்டவழிச்[9] செய்வது கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்* : உத்தியோகம் பண்ணுகிறவன் பொல்லாதவனல்லாவிட்டால், உலகமும் பொல்லாதது ஆகாது. ஆனபடியினாலே, அரசன் காரியஞ் செய்கிறவனைத் தினமும் ஆராயவேணும் எ—று.

ஏ) *பழைய* 2: வினை செய்வான் கோடாமையால் உலகு கோடாது; ஆதலால், மன்னன் வினை செய்வானை நாடோறும் ஆராய்க.

மல்லர் : என்பது உத்தியோகத்தைச் செய்கிற மந்திரிகள் கோணலாய் நடவாதே போனால் லோகங்கோணலாய்ப் போகாது; என்கிற--தினால் அரசன் அவர்களுடைய நடத்தைகளை நாள்தோறும் ஆராய்ந்து பார்க்கவேண்டியது எ—று.

சீர்மையுடைய அலங்கோலமெல்லாம் உத்தியோகஞ் செய்கிறவர்களுடைய பொல்லாத நடத்தைகளால் வருகிறதினால் அரசன் உத்தியோகங்களுக்கு ஒத்த சாமர்த்தியமுள்ளவர்களை சம்பாதிக்கிறதும் அல்லாமல் அவர்கள் நடத்தைகளும். அவர்கள் உத்தியோகத்திலே நடக்கிற விதமும் இடைவிடாமல் சோதிக்க வேண்டியது என்பது கருத்து.

நாடோறும்—நாள்தோறும்; நாடுதல்—ஆராய்தல்; மன்னவன்—ராசாவின் தொழில்; கோடுதல்—கோணல்; உலகு—உலகம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிப்பெருமாள் 'வினைசெய்வான்' என்பதனை 'முறைசெய்

4. கோடாதுஒழிய—மனமொழி மெய்களான் மாறுபடாமலிருக்க.
5. உலகங்கோடாது—உலகியல்பு மாறுபடாது; அதாவது மன்னவன் ஆணைவழி அறநெறிக்கண் நிற்றல் என்பதாம்
6. அவன் செயலை—வினை செய்வான் செயலை. அதனை நாடும்போது அவன் அறியாமல் ஆய்தல் வேண்டும் என்பதாம்.
7. அஃதொன்றனை—வினை செய்வான் செயல் ஒன்றனை.
8. போதுக—செல்லுக.
9. ஆண்டவழி—ஒருவனை ஒருசெயற்குரியவனாக வைத்து ஆண்ட வழி.

வான்' எனப்பாடந் திரித்துக் கொண்டனராதல் வேண்டும் என்பதனை அவர் உரை தெரிவிக்கிறது.

இராம., 'அரசாங்க ஊழியர்கள் அதிருப்தியடையாமல் இருக்க வேண்டும். அவர்கள் அப்படியிருந்தால், நாட்டின் நலங்கெடாது. அதற்காக அரசன் நாடோறும் ஊழியர்களின் நிலையை அறிதல் வேண்டும் என்பர். இவர் உரை அதிகாரிகளின் மனநிறைவையும் குறைவையும் ஆராய்ந்து வரவேண்டும் என்பதாகக் கருதுகிறது. ஏனையோர் உரைகள் வினைவகையான் வேறாகா வண்ணம் ஆய்தல் வேண்டும் என்கிறது.

இங்ஙனம் ஆராய்தல் வினையுடையான் கேண்மையை வேறாக எண்ணுதல் ஆகாதோ எனின், ஆகாது. கண்காணித்து வருதல் வேறு; ஐயுறுதல் வேறு. ஐயுறுதல் கூடாது என்பதுதான் அக்குறளின் கருத்து. அவரறியாமல் அவன் மேற்கொண்ட வினையின் வளர்ச்சியையும், பயனையும் அவன் முயற்சியையும் நாடோறும் கண்டு வருதல். இது அவன் மிக முயலுதற்கு ஏதுவாதலின், மாறாகாது என்பது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

முனைக்கும் வினைஞன் கோடாதே முதிர்நீர் உலகம் கோடாது
தனைப்பின் வைகல் தொறும்நாடிச் சாரும் வினையும் நாடுகவே,

—விநா., அரசி., 83

பண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்பு முறை.

	நன்மையும்	வாரி	அன்பறிவு	எனைவகையால்	அறிந்தாற்றிச்	செய்வானை	இதனை	வினைக்குறுமை	வினைக்கண்	நாடோறும்
மணக்.	3	5	4	9	1	2	7	6	8	10
பரிதி.	1	3	2	9	8	5	6	4	7	10
பரிப்.	3	5	4	10	1	2	7	6	8	9
காளி.	1	7	6	8	5	4	2	3	10	9
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

52வது அதிகாரம் 'தெரிந்து வினையாடல்' முற்றிற்று.

53. சுற்றந்தழால்

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: சுற்றந்தழாலாவது அரசன் தன்கிளைஞரைத்[1] தன்னின் நீங்காமல் அணைத்தல். மேல் அமாத்தியர்மாட்டு அரசன் ஒழுகுந் திறங் கூறினாராதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: சுற்றந்தழாலாவது அரசன் தன் சுற்றத்தைப் பாதுகாப் பான் எ—று.

இ) பரிப்.: சுற்றம் தழாலாவது அரசன் தனது சுற்றத்தினோடு பொருந்தி ஒழுகுதல். மேல் அமாத்தியர் மாட்டு அரசன் ஒழுகும் திறன் கூறினார்: இனிச்சுற்றத்தார் மாட்டு அரசன் ஒழுகும் திறன் கூறுகின்றார். ஆதலின் இதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது அரசன் தன்கிளைஞரைத் தன்னின் நீங் காமல் அணைத்தல். வினைசெய்வாரைக் கூறி ஏனைச்சுற்றம் கூறு கின்றாராகலின் இது தெரிந்து வினையாடலின் பின் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர்: அஃதாவது—ஒருவன் தன் சுற்றத்தாரைத் தன்னை விட்டு நீங்காமல் அணைத்தல்.

ஏ) பழைய 2: அஃதாவது அரசன் கிளைஞரைத் தன்னினீங்காமல் அணைத்தல்.

மல்லர்: அஃதாவது ராசாத் தன்னுடைய உறமுறையாரைப்[2] பட்சமாய் ஆதரிக்கிறது.

---

1. கிளைஞர்—சுற்றத்தார்
2. உறமுறையார்—சுற்றத்தார்

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பழைய உரையாசிரியர்கள் அனைவரும், இவ்வதிகாரம் அரசியலில் இடம் பெற்றுள்ளதால் சுற்றத்தார் தன்னைவிட்டு நீங்காது பாதுகாத்தலை அரசன் கடமைகளுட் சிறந்ததாகவே கருதுகின்றனர். இங்ஙனம் அணைத்துக்கோடல் உறவின்முறைமையால் மட்டுமன்று. அரசியல் தந்திரமே என்று கருதுகின்றனர். **தேவநேயர்** 'வினைச்சுற்றமும் இனச்சுற்றமும் என்ற இரண்டில், வினைச்சுற்றத்தைச் சொல்லிமுடித்ததால், இனச் சுற்றத்தையும் அணைத்துக் கோடல் அரசனது ஆட்சிக்கும் வாழ்விற்கும் இன்றியமையாதது' என்பர்.

இராம. சுற்றம் என்றால் சொந்தக்காரர்கள் மட்டும் அல்லர் நண்பரும் உறவினரும் எல்லாருந்தாம். இக்குணம் அரசற்கு மட்டுமல்ல. அனைவருக்கும் வேண்டியதுதான்' என்பர்.

குழந்தை., இதனைச் சிற்றினஞ் சேராமையின் பின்னும், தெரிந்து செயல்வகையின் முன்னும் நாற்பத்தேழாவது அதிகாரமாகக் கொண்டார். 'தழுவலுக்கு ஏனையோர், அரசன் சுற்றத்தாரைத் தழுவிக் கொள்ளுதல் என்றும், தழுவல் —தன்னைச் சுற்றத்தார் நீங்காமல் இருக்கச் செய்தல்' என்றும் உரைப்பர்.

வரத. 'சுற்றத்தாரைச் சூழ்ந்திருத்தல். பிறப்பால் சுற்றமும், அன்பால்—அறிவால்— வாழ்க்கையினால் சுற்றமும் எனச் சுற்றம் இருவகைப்படும். இருவகையாரையும் சூழ்ந்து வாழவேண்டும்' என்பர். **சாமி. சிதம்.** இங்ஙனமே. அரசன் சுற்றத்தாரைத் தழுவிக் கொள்ளலும், அரசன், சுற்றம் தன்னைத் தழுவ நடத்தலும் என இருவகையாற் பொருள் காணப்பட்டுள்ளது. இரண்டும் ஒரு நோக்குடையன ஆயினும் சுற்றம் தன்னைத்தழுவ நடத்தலில் சிறப்புண்மை அரசியற் போக்குக்கு ஏற்றதாம்.

53.1. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல் சுற்றத்தார் கண்ணே உள. (நூஉக)

உரைப்பகுதி:

அ) மணக்.: பொருளற்ற கண்ணும் பழைமையைக் கொண்டாடி விடாது, ஒழுகுதல் சுற்றத்தார் மாட்டே உளவாம் எ—று.

இஃது இல்லாக் காலத்தினும்[1] விடார் என்றது.

ஆ) *பரிதி.*: உறவின் முறையாற்கு அரசனிடத்திலே பற்றற்ற இடத்திலும் பழைமை பாராட்டிச் சூழ்ந்திருப்பது சுற்றத்தாரிடத்தில் உண்டு எ—று.

இ) *பழப்.*: பொருள் அற்ற கண்ணும், பழைமையைக் கொண்டாடி விடா தொழிதல் சுற்றத்தார் மாட்டே உளவாம் எ--று.

இஃது இல்லாத காலத்தும் விடார் என்றது.

ஈ) *காளி.*: அரசரானவர் வையம் காவல் பற்றிக்கொண்டு வாழும் காலம் வாழ்தலேயும் அன்றி மற்று அவர் பற்று அற்ற இடத்தும் பழைமையை மேற்கொண்டு அவரைக்கைவிடாது நிற்றலும் சுற்றத்தார் மாட்டே உளவாம் எ —று.

உ) *பரிமேல்.*: ஒருவன் செல்வம் தொலைந்து வறியனாயவழியும் விடாது தம்மோடு அவனிடைப் பழைமையை எடுத்துக் கொண்டாடும் இயல்புகள், சுற்றத்தார் மாட்டே உளவாவன.

சிறப்பும்மை[2] வறியனாயவழிப் பாராட்டப்படாமை விளக்கி நின்றது. பழைமை-பற்றறாக்காலத்துத் தமக்குச் செய்த உபகாரம். பிறரெல்லாம் அவன் பற்றற்றபொழுதே தாமும் அவனோடு பற்றறுவர் ஆகலின், ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இதனான் சுற்றத்தது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: ஒருவன் செல்வந் தொலைந்துபோய்த் தரித்திரனான போழ்தும், விடாமற் பழைமையைப் பாராட்டும் இயல்பு சுற்றத்தாரிடத்திலே யுண்டு.

ஏ) *பழைய* 2.: ஒருவன் சேவகந்[3] தொலைந்து வறியனான விடத்தும் பழைமை பாராட்டுதல் அரசன் பழைமையாகிய சுற்றத்தாரிடத்தேயுளவாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் உரைப்போக்கு அரசன் பொருளற்றானாயினும் பழைமைபாராட்டுதல் சுற்றத்தார் கண்ணே' என்றும் பொருள் தரு நிலையில் உள்ளது. அரசன் பொருளற்றவனாதல் இல்லை. ஆதலால்

1. இல்லாக் காலம்- பொருளற்ற வறுமைக்காலம்.
2. சிறப்பும்மை-இழிவு சிறப்பும்மை.
3. சேவகம்-அரசியலலுவல்.

சுற்றத்தார் ஏழையானாலும் பழைமை பாராட்டி அவர்களைத் தழுவிக் கொள்ளுதல் சுற்றத்தார் கண்ணே அரசன் செய்யத் தக்க கடமையாம் என்ற பொருளும் தருவதாகும். ஆதலால் இயலுக்கும் அதிகாரத்திற்கும் ஏற்றவாறு பொருள் காணுதலே தக்கது. விடார்—அரசர் விடார் என்க.

பரிதியார் உரை 'சுற்றத்தார் அரசன் மாட்டு வெறுப்புடையராயினும் அரசன் பழைமை பாராட்டிச் சூழ்ந்திருக்கச் செய்க' என்கிறது. *காளிங்கர்* முடிபும் இதுவேயாகிறது.

பரிமேல்., 'சுற்றத்தார் ஏழையாயினும் பழைமை பற்றித் தழுவிக் கொள்ளல் வேண்டும்' என்கிறது. *கவிராசர்* முதலியோர் வழக்கம் போலப் *பரிமேலழகரைப்* பின்பற்றுவோர் ஆதலின் கருத்தில் வேறுபாடின்று.

இராம 'பற்று—தொடர்ச்சி: செல்வம் அல்ல; நெடுங்காலமாக உறவு அற்றுப்போனாலும் பழைய உறவைக் கொண்டாடுதல் சுற்றத்தாரிடம் உண்டு' என்பர். *தேவநேயர்*, பழைய உரையாசிரியர்களை ஒட்டிச் 'செல்வம் அல்லது அதிகாரம் தொலைந்து போனாலும். பழைமை—பழைய இன உறவாட்டு. அதாவது பழைய இனவுறவாட்டு அதனான நிகழ்ச்சிகளையே' என்பர். இதனால் இவர் *இராமலிங்கனாரிற்* சிறிது வேறுபடுகிறார்.

மு.கோ. 'அரசற்குத் தன் சுற்றத்தினிடம் பற்றற்றாலும், சுற்றத்தாருக்கு அரசனிடம் பற்றற்றாலும் என இருபாற்கும் உரியது' என்பர். பற்றுவானும் பற்றப்படுவதொரு பொருளுமாகிய இரண்டிருந்தாலன்றிப் பற்றென்பதொன்று இல்லையாம். ஆதலால், பற்று என்பது இருவரினியலும் ஒரு பொதுத்தன்மை. ஆதலால் சுற்றத்தால் இருவகையினருமேயாவர்.

வரத. 'உலகம் கைவிட்டாலும் சுற்றத்தார் தொடர்புகருதிப் பாராட்டுவர் என்ற பொருளும் இதனுள் உண்டு' என்பர்.

குழந்தை. வறுமைக்காலத்தும் கைவிடாத்தன்மை சுற்றத்திற்கேயுண்டு' என்பர்.

இக்குறட்போக்கை, உரைகளைவிட்டு எண்ணின், செல்வத் தொடர்போ இனத்தொடர்போ அற்றாலும் சுற்றத்தார் பழைமை பாராட்டி உறவாடுவர் என்ற பொதுக்கருத்தையே அறிவிப்பதாகிறது. அரசற்கு வேண்டிய சிறப்பியல்பாக இயலைக் கொண்டுதான் எண்ண வேண்டியுள்ளது .பற்றென்பது செல்வம், அன்பு,உறவு முதலிய

பல்வேறு காரணங்களால் ஒருவர்க்கு ஒருவரிடை நிகழும் அன்புள் மாகிய குணம். அதற்குச் செல்வம் எனப் பொருளாக மட்டும் பொருள் கூறுதல் ஏற்புடையதாகாது. அன்றியும், பற்று செல்வங்காரணமாக மட்டும் விளைவதன்று. ஆதலால் செல்வத்தை மட்டும் கருதும் மணக்குடவர் பரிமேலழகர் உரைகள் 'அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல் ஒட்டி உறவார் உறவல்லர்' என்பன போன்ற கருத்துக் களை உட்கொண்டு எழுந்ததாம்.

ஆதலால், சுற்றத்தார் பற்றற்ற கண்ணும், அரசன் பழைமை பாராட்டுதல் அரசற்குச் சுற்றத்தார் கண்ணே உள ஆகும் செயல் என்ற கருத்துடைய உரைகள் இயலுக்கும் அதிகாரத்திற்கும் ஏற் புடையன.

ஒ) ஒப்புமைப்பகுதி:

பழைமை பாராட்டுதல்:

''பழமை பாராட்டினால்தான்.'' .—பழமொழி

முற்றும்:

''காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்—ஏலா
இடரொருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையேம் என்பார் சிலர்.'' —நாலடி., 131.

''அல்லல் ஒருவர்க் கடைந்தக்கால் மற்றவர்க்கு
நல்ல கிளைகள் எனப்படுவார்—நல்ல
வினைமரபின் மற்றதனை நீக்கும்அதுவே
மனைமர மாய மருந்து.'' —பழ. நா., 53

''முன்னின்னா ராயினும் மூடும் இடர்வந்தால்
பின்னின்னா ராகிப் பிரியார்—ஒருகுடியார்
பொன்னாச் செயினும் புகாஅர் புனலூர!
துன்னினார் அல்லார் பிறர் —பழ. நா., 66

''அற்ற குளத்தில் அருநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.'' —வாக்கு

53.2 விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா ஆக்கம் பலவும் தரும். (நுஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: அன்பறாத சுற்றம் ஓரிடத்துப் பொருந்தி ஒழுகு மாயின் அது கிளைத்தலறாத[2] ஆக்கமாகிய பலவற்றையும் தரும் எ—று.

ஆ) பரிதி.: தன்மேலே விருப்பமுள்ள சுற்றமுண்டாகில் கொழுந்து விட்டுப் படருகிற பயிர்போல வருகிற செல்வமாகிய ஆக்கமுண்டாம் எ—று.

இ) பரிப்.: அன்பு அறாச் சுற்றம் ஓரிடத்தே பொருந்தி ஒழுகு மாயின் அது கிளைப்புஅறா ஆக்கம் ஆகிய பலவற்றையும் தரும் எ—று.

பிள்ளைகளை வேறு வேறு இடத்து நிறுத்த வேண்டும் என்பது சில ஆசாரியர் மதம்.[3] அதனை மறுத்து மக்களை ஓரிடத்தே கொண் டிருக்கவேண்டும் என்பதூஉம் அதனானே குலம் வளரும் என்பதூஉம் கூறிற்று.

ஈ) காளி.: தம்மாட்டு உள்ளத்தால் விரும்புதலை அறாச்சுற்ற மானது தம் பொருள்கொண்டு நுகரின், மற்று அது மேன்மேலும் வந்து அரும்பித் தோன்றுதலறாத செல்வம் பலவற்றையும் கொடுக்கும்: எனவே, அவர் நுகர்தலின் மறுமைப்பயனும் மற்று ஈண்டு அவரால் ஆகும் ஆக்கமும் பலவுள ஆகலின் இருமைப்பயனின் விரிவாகிய ஆக்கம் பலவும் தமக்கு எய்தும் எ—று.

உ) பரிமேல்.: அன்பறாத சுற்றம் ஒருவற்கு எய்துமாயின், அஃது அவற்குக் கிளைத்தலறாத செல்வங்கள் பலவற்றையும் கொடுக்கும்.

உட்பகையின் நீக்குதற்கு விருப்பறாச்சுற்றம் என்றும், தானே வளர்க்கும்[5] ஒருதலையாய செல்வத்தின் நீக்குதற்கு அருப்பறா—

---

2. கிளைத்தலறாத-மேன்மேலும் வளர்தல் ஒழியாத. மரத்திற் கிளைகள் போல ஒன்றி லிருந்து ஒன்றாகத் தேன்றி வளர்தல்.
3. ஆசாரியர் மதம்- குருக்கள்ா மதம்.
4. உட்பகையாவது நீறுபூத்த நெருப்புப்போலப் புறத்தே நட்பும் சுற்றமும் உள்ளார் போல நடந்து, மனத்திலே பகைமையை மறைத்து வைத்து ஒழுகுதல். இது புறப் பகைக்கு வழி பலகாட்டிப் புறப்பகை வெல்லுமளவும் உள்ளாய் நிற்பது புறநட்டு அகம் வேர்த்தலாம் இதனை நச்சுப் பகைமை என்பர் குமரகுருபரர்.
5. தானே வளர்தலாவது நூற்றுக்குமேல் ஊற்று என்றாற்போல பிற செல்வங் களும் வளர்தற்குத் துணையாதல்.

ஆக்கம் என்றும் விசேடித்தார்[6]. தொடை நோக்கி விகாரமாயிற்று[7] இயையின் என்பது அதன் அருமை விளக்கி நின்றது. ஆக்கம் என்பது ஆகுபெயர்[8]. பலவும் என்றது அங்கங்கள் ஆறனையும் நோக்கி[9]. பலர் கூடி வளர்த்தலின் அவை மேன்மேற் கிளைக்கும் என்பது கருத்து.

காரி.: அருப்பு — அடிப்பாட்டுக்காரணவிகாரம்[10]. அரும்பு முதனிலைத் தொழிற்பெயர்.

ஊ) *கவிராசர்.*: ஒருவனுக்கு அன்பறாத சுற்றம் வந்தெய்துமாயின், அஃது அவனுக்குப் பெருக்கமறாத செல்வங்கள் பலவற்றையும் கொடுக்கும் எ—று.

ஏ) *பழைய2.*: அன்பறாத சுற்றம் ஒருவற்கெய்துமாயின் அவனுக்குக் கிளைத்தல் அறாத செல்வம் பலவற்றையுந் தரும்.

தொகுப்பும் குறிப்பும்:

''அருப்பறா ஆக்கம்'' என்பதற்கு *மணக்*; கிளைத்தலறாத ஆக்கம் பலவற்றையும்' எனச் செல்வமட்டுமன்று, எல்லாவகையான ஆக்கமும் என்றனர். பரிதி அருப்பு அறா என்பதிலிருந்து கொழுந்துவிட்டுப் படருகிற' என்றனர். பரிப்பெருமாள் தன் மக்களை வேறுவேறு இடத்தில் வைக்கவேண்டும் என்ற வட நூற்கருத்தை மறுத்து எல்லா மக்களையும் ஓரிடத்தே வைத்திருக்கவேண்டும் என்றனர். மனைவி மக்கள் தாய்தந்தை முதலிய முறைச் சுற்றத்தினின்றும் சிறந்தது ஏனைய சுற்றம் ஆதலின் அதனைத்தழுவுதலையும் வள்ளுவர் கூறினார் என்றலே சிறந்ததாம். ஆதலால் மக்கள் என்பது மட்டும் பொருளாகாது. இத்தவறு 'இயையின்' என்பதற்கு அவர் ஓரிடத்திலேயே சேர்ந்திருக்குமாயின் என உரை கண்டதால் நிகழ்ந்ததாம் அன்றியும் சுற்றம் மக்களின் வேறாதலை மக்களொடு துவன்றி அறம் புரிசுற்றமொடு'' எனவரும் (தொல் பொருள் 192) ஆன்றோராட்சியானும் தெளிக.

காளிங்கர். இயையின்—தம் பொருள் கொடு நுகரின் என்பர். இவர்

6. சுற்றம் விருப்பு அறாச் சுற்றம் என்றும், ஆக்கம் அருப்பு அறா ஆக்கம் என்றும் பிறப் பளிக்கும் அடைமொழி கொடுத்துச் சிறப்பித்துக் கூறல் விசேடித்துக் கூறல் ஆகும்.
7. அரும்பு என்னும் முதனிலைத் தொழிற்பெயர் தொடைநோக்கி 'அருப்பு' என ஆயிற்று இது ஒரு எதுகைத் தொடையாம் என்க.
8. ஆக்கம என்பது-மேன்மேல் உயர்தல் என்பது பொருள், அம் விகுதிபெற்ற தொழிற் பெயர்.அது காரிய ஆகுபெயராய் உயர்தற்குக் காரணமாய செல்வத்தை உணர்த் திற்று.
9. அங்கங்கள் ஆறு- அமைச்சு, நாடு, அரண்' பொருள், படை, நட்பு என்பன.
10. அடிப்பாட்டுக் காரணஷிகராம் - முதல் காரணமாகவுள்ள அரும்பு என்றசொல் அருப்பு என விகாரப்பட்டமையைக் குறிப்பது.

கருத்து அரசன் தன் சுற்றத்திற்கு நுகர்ச்சிக்குரிய பொருளைக் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். அப்போது தான் கற்றம் அன்பு நீங்காதிருக்கும் என்ற குறிப்பினது. மேலும், 'ஆக்கம் பல என்பதற்கு இருமைப்பயனும் என்பர். *பரிமேலழகர்*., அருப்பு— அரும்புதல். அருப்பு என்றது விகுதி கெட்ட முதனிலை திரிந்த தொழிற்பெயர். *இராம*; ஒருவருக்கு ஒருவர் சந்திப்பது விட்டுப் போனாலும் விருப்பம் விட்டுப்போகாது என்பர். மற்றும் 'அரும்புதல் அறாத' என்ற சொல்லாற்றலால் அன்பு அறாத உறவு ஈரம் அறாத மரத்திற்குச் சமம். ஈரம் உள்ள வரையில் மரம் தளிர்க்கும். அன்பு உள்ளவரை ஆக்கம் பல உண்டு எனவும் கருதுவர்.

குழந்தை: விருப்பு அறாச் சுற்றம்—உட்பகை சிறிதும் இல்லாத சுற்றம்.

வரத: செல்வமும் சிறப்பும் உள்ள காலத்தும் இல்லாத காலத்தும் விருப்பறாத சுற்றம், இத்தகைய சுற்றம்சூழ்ந்திருந்தால் ஆக்கத்திற்குத் தடையில்லை என்பர்.

தேவநேயர்: அன்பார்ந்த சுற்றத்தார் பல்வகைச் செல்வத்தையுங் காத்து வளர்ப்பார் என்ற கருத்துக் கொணருவர். இவ்வுரைகளில் *பரிப்பெருமாள்* உரை ஏதோ ஒருவடநூற்கருத்தை மறுக்கும் நோக்குடன் எழுந்ததாகலின் இயைபில்லது. அருப்பு—அரும்பு என உருவகப் பொருள் கண்டு அதற்கேற்ப விரியும் உரையும் அங்ஙனமே. ஆதலால் மணக்குடவர் *பரிமேலழகர்* உரைகளும், அவர்களை ஒட்டிய பின்னுரைகளும் சிறந்தன.

கற்றமாயினும் அழுக்காறு உயிர்க்குணமாதலின் அது காரண மாகக் கேடு சூழ்தல் மக்களியற்கை ஆதலின் விருப்பறாச் சுற்றம் என்றார். இவ்வழக்காற்றானும், தன்னலம், பேதைமை யிவற்றானும் பிறர் சொற் கேட்டு விரும்பு அறாத சுற்றம் எனலுமாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

விருப்பறாச் சுற்றம்:

. ஈரமில்லாதது கிளைநட் பன்று.'' —முதுமொழிக்., 5:3

''வரம்பறு சுற்றமும்..... .....'' —*கம்பராமா*., 6203.

புறநட்டகம் வேர்ப்பார் நச்சுப் பகைமை— *நீதி நெறி விளக்கம்*

அருப்பறாவாக்கம்

''நூற்றுக்கு மேல் ஊற்று''— *பழமொழி*

முற்றும்:

''பற்றும் வெறுக்கை ஒழிந்துளியும் பழைமை எடுத்துப் பாராட்டும்
சுற்ற மதனைப் பெருங்கொடையால் தூய மொழியால் தழுவலுறின்
அற்றம் அவனுக் கொருகாலும் அணுகா தாக்கம் மிகப்பெருகும்
முற்ற நினைக்கும் பகைவர் தொழில் முற்றா தேம கண்டனே.''

— வினா. அரசி., 84.

53.3. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று. (நிஉகூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: கலக்கப் படுவாரோடு கலப்பின்றி ஒழுகுவானது வாழ்க்கை குளப்பரப்புக் [1] கரையின்றி நீர் நிறைந்தாற் போலும் எ—று.

இது சுற்றந் தழுவாக்கால் செல்வங் காக்கப்படாது என்றது. இத் துணையும் சுற்றத்தார் எல்லோரோடும் ஒழுகும் திறம் [2]கூறிற்று.

ஆ) பரிதி: அளவுக்களவாகச் செலவழியாதான் பெற்ற செல்வம் கட்டுக் கரையும் கொடியும் காவலுமில்லாத குளம் நீர்நிறைந்ததற்கு ஒக்கும் எ—று.

இ) பரிப்.: கலக்கப் படுவானோடு கலப்பின்றி ஒழுகுவானது வாழ்க்கை குளமாகிய வளைவு கரை இன்றி நீர் நிறைந்தாற் போலும். எ—று.

இது சுற்றம் தழுவிக் கொள்ளாக் கால் செல்வம் காவல் படாது என்றது. இத்துணையும் சுற்றத்தார் எல்லாரோடும் ஒழுகும் திறன் கூறிற்று.

ஈ) காளி.: அரசர்க்கு வரம்பாகிய செல்வமானது இவ்வாறு சுற்றம் சூழ்தல்; இவை இன்றித் தனித்துடைய அரசர் வாழ்க்கையானது எத்தன்மைத்தோ எனின், மற்று அது உலகில் குளச் சூழலானது சூழ்ந்து நின்று பாதுகாக்கும் கரைஇன்றி நீர் வந்து நிறைந்த அத் தன்மைத்து எ—று.

உ) பரிமேல்.: அச்சுற்றத்தோடு நெஞ்சுகலத்தல் இல்லாதவன் வாழ்க்கை குளப்பரப்புக் கரையின்றி நீர்நிறைந்தாற் போலும்.

---

1. குளப்பரப்பு—குளத்தின் பரந்த விரிவான இடம்.
2. ஒழுகும் திறம்—நடை முறை

கற்றத்தோடு உசாவுதலான் வருவதாகலின், அளவளாவு என்பது ஆகுபெயர்.[3] வாழ்க்கை என்றதூஉம் அதற்கு ஏதுவாய செல்வங்களை நிறைதல் என்னும் இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது.[4] சுற்றமில்லாதான் செல்வங்கள் தாங்குவாரின்மையின்[5] புறத்துப்போம் என்பதாம்.

காரி: அளவளாவு—மிகுதிக்கன் இரட்டித்தது. 'அன்பு மிகுதியின் அளவளாயவளை[6]' என்னுங்கொளுவுட் காண்க. குளவரை—குளப்பரப்பு.

ஊ) *கவிராசர்*: ஆசையறாத சுற்றத்தாருடனே சினேகமில்லாதவன் வாழ்க்கை, குளவிசாலம் கரையில்லாது தண்ணீர் நிறைந்தாற் போல எ—று.

ஏ) *பழைய 2*: சுற்றத்தொடு நெஞ்சு கலவாதவன் வாழ்க்கை குளப் பரப்பு கரையில்லாமல் நீர் நிறைந்தாற் போலும்.

மல்லர்: என்பது தன்னுடைய அளவும் உறமுறையாளருடைய அளவும் கலக்காமல் தன்னை ஓரளவாகவும் நடப்பிக்கிற அரசனுடைய செல்வம் விளைச்சலும் கரையுமில்லாத குளம் தண்ணீரினால் நிறைந் தாற் போலும் என்றவாறு,

கரையில்லாத குளத்திலே விழுந்த தண்ணீர் அதிலே நில்லாது என்பது போல் அரசன் தன்னுடைய உறமுறையாரைத் தனக்குச் சரியாக நடப்பிக்காதே போனால் அவர்கள் அவனை விட்டுப் போகிற படியினால் அவனுடைய செல்வத்தைக் காப்பாரில்லாமல். அது அவனிடத்திலே நிற்கப் போகிறதில்லை என்பது கருத்து.

அளவு—அளவு, அளாவு —கலப்பு, இல்லாதான்—இல்லாதவன் அளாவல்—வளைதல், கோடு—கரை, இன்றி—இல்லாமல், அற்று—உவமைச்சொல்.

---

3. அளவு கல் அளாவுதல் இரண்டும் கலத்தல் என்னும் பொருளன ஒரு பொருளைத் தரும் இருசொற்புணர்ந்தமையின் நெஞ்சு கலத்தல் என்றனர் பரிமேலழகர். இக் காலத்தில் மனம் விட்டு ஒன்றையும் ஒளியாது பேசிக் கொள்வதால் விளைவது அளவளாவு—முதனிலைத் தொழிற்பெயர். அளவளாவு என்னும் தொழிற்பெயர் அதன் காரியமாகிய நெஞ்சு கலத்தலை உணர்த்துதலான் கருவியாகுபெயர்.
4. 'குளம் நிறைந்தற்று என்பதில் குளம்—நீர் தேங்கி நிற்கும் இடம் நீர்—குளத்தி லுள்ள இடத்து நிகழ் பொருள். நிறைதல் நீரின் தொழில் நீரின் தொழிலை அது நிறைதற்கு இடமான குளத்தின்மேல் ஏற்றிக் கூறினமையின் இது உபசார வழக்கி னுள் ஒன்று. இக்குறள் பிரயோக விவேகத்து 'மருளறு காரணம்'' என்னும் செய்யு ளுரையிலும்காட்டப்பெற்றுள்ளது.
5. தாங்குதல்—தடுத்தல். ' வருதார் தாங்கி யமர்மிகல் யாவது'' (புறநா 62) என்புழி யும் இப்பொருளதாதல் காண்க. தடுத்து நிறுத்துவார் என்னும் பொருட்கண் வந்துள்ளது.
6. திருக்கோவை, 165

மணக்குடவர், 'பரிமேலழகர் உரைகள் 'சுற்றத்தாரோடுகலந்து பழுகுதல் குளத்திற்குக் கரைகட்டுதல் போன்றது. நீர் நிறைதல் செல்வஞ் சேர்தலும் இன்றியமையாத. வழியிற் பயன்படுதலும் ஆம்' என்னும் ஒரே கருத்தைக் காட்டுவன. இவையே. ஏனையோர் உரையினும் தெளிவானது. பரிதியார் கொண்ட பாடம் 'அளவளவு இல்லாதான்' என்பது போலும். 'அளவுக்களவாகச் செலவழியாதான் செல்வம் கரை முதலியன இல்லாத குளம் நீர் நிறைந்தாற் போலும்' என்றது நீர் நிறையவே நிறையாது என எதிர்மறைப் பொருளது. இப்பொருள் 'அளவறிந்து வாழாதான்'' என்ற குறட் கருத்தை உட் கொண்டதாய் 'ஈண்டுச் சிறிதும் இயைபிலதாகும்.

காளி., வரம்பாகிய செல்வமும் என்பதால் இவர் கொண்ட பாடமும் 'அளவளவு' என்பதேயாகும் என்று கருதலாம். கரையின்மையால் குளம் நிறைவதுமில்லை. சுற்றமில்லாத அரசன் வாழ்க்கையில் செல்வம் புறத்துப்போம் என்கிறார் தேவநேயர், இராமலிங்கர் முடிபில் பரிமேலழகர் மணக்குடவரோடு ஒத்த கருத்தினர். இராமலிங்கர் சொற்களைக் கூட்டிப் பொருள் காணும் வகையிற் சிறிது மாற்றங் காட்டுவர். வரத. 'இன்பத்துன்பங்களைப் பங்கிட்டுச் கொள்ளச் சுற்றமில்லாதவன் வாழ்க்கை வடிகாலும் வந்தநீரைத் தேக்கிக்காக்கும் கரையும் இல்லாத குளம் போலாகும்' என்பர். இவர் கருத்தகலம்'' குளவளாக் கோடின்றி நீர் நிறைந்தற்று'' என்ற தொடரையடியாகக் கொண்டு வளர்ந்த கற்பனையாகும்

அளவுதல்—கலத்தல். கலந்து பேசுதல். அளாவு என்பது அளவு என்பதன் நீட்டம். அது இரட்டித்து, அளவளாவு எனக்கூட்டுச் சொல்லாய் முதனிலைத் தொழிற்பெயராய் நின்றது என்பர் தேவநேயர்.

அளவளாவுதல் — நலந்தீங்குகளைக் கேட்டு ஆய்ந்து அறிதல். இது அளவளாவு என நின்றது, 'முதனிலைத் தொழிற்பெயர் இங்கு கலந்து பேசுதலின் காரியமான மனங்கலத்தலையுணர்த்துதலின் கருவியாகுபெயர்' என்பர் கோ.வ. காரண ஆகுபெயர்என்பர் வை.மு.கோ. அளவு—நலந்தீங்குகளின் அளவு. அளாவுதல்—விசாரித்து அறிதல். அளவினை விசாரித்தறிதல் இரண்டாம் வேற்றுமைத்தொகை என்பர் வை.மு.கோ.

''அளவளாவு—மிகுதிக்கண் இரட்டித்தது; ''அன்பு மிகுதியின் அளவளாயவனை (கோவை,165) என்பது போல என்பர். காரி. இவர் கருத்து 'அளாய கூழ்' என்பது போல அளவுதலும் கலத்தற்பொருளது. அளாவுதலும் கலத்தல் நன்றாகக் கலந்து என்னும் பொருளில் மிகுதிக்

கண் இரட்டித்தது. இக்குறிப்புக்களால் அளவுதல் அளாவுதல் இரண்டும் கலத்தற்பொருளைத்தரும் தனிப் பகுதிகள்; அளவு என்பதன் நீட்டம் அன்று. அளாவு என்பதும் அவையிரண்டும் கூடி அளவளாவு ஆயிற்று என்பதும், அளாவு என்பதே முதனிலைத்தொழிற்பெயரன்றி அளா என்பதன்று என்பதும் அறியத்தக்கன. சிலர் அளாவு—அளாவு என்பன அடுக்கி அளவளாவு ஆயிற்று என்பர்.

கோடில்லாக் குளத்திற்கு நீர் நிறைவதுமில்லை. அதுபோல அளவளாவில்லாதான் வாழ்க்கையில் செல்வம் சேர்வதுமில்லையாம் என நிகழாநிகழ்ச்சியாகக் கொள்ளினும் ஆம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

குளவளாக் கோடின்றி நீர்நிறைந்தற்று:

''தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ.'' —புறம் 118:3.

ஒருபுடை:

''தன் இனம் தன்னைக் காக்கும் வேலி பயிரைக் காக்கும்.''
—பழமொழி.

53.4. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான் பெற்றத்தால் பெற்ற பயன். (நூஉசு)

உரைப்பகுதி:

அ) மணக்: சுற்றத்தாராலே சூழப்பட ஒழுகுவது செல்வத்தைப் பெற்றதனால் உண்டான பயன் எ—று:

இது சுற்றஞ் சூழ்ந்து வருவதாக ஒழுகவேண்டும் என்றது.

ஆ) பரிதி.: தொன்றுதொட்டு வருகிற சுற்றம், தன்னைச் சுற்றியிருக்க வாழ்வதன்றோ செல்வம் பெற்றபயன் எ—று.

இ) பரிப்.: சுற்றத்தாலே சூழப்பட்டு ஒழுகுவது செல்வத்தைப் பெற்ற அதனான் உண்டாய பயன் எ...று.

இது சுற்றம் தழுவ ஒழுக வேண்டும் என்றது.

ஈ) காளி.: அரசனானவன் தான் பெருஞ் செல்வம் பெற்றதனால் முன்பு பெற்ற பயன்யாதோ எனின், அதனை வழங்குமாறு வழங்கி அங்ஙனம் சுற்றத்தால் சூழப்படுமாறு செய்து ஒழுகலே எ—று.

உ) *பரிமேல்.*: செல்வம் பெற்ற அதனால் ஒருவன் பெற்ற பயனாவது, தன் சுற்றத்தால் தான் சூழப்படும்வகை அதனைத் தழீஇ ஒழுகுதல்.[1]

பெற்ற என்பதனுள் அகரமும். அதனான் என்பதனுள் அன்சாரியையும் தொடை நோக்கி விகாரத்தால் தொக்கன.[2] இவ் வொழுக்குப்பகையின்றி அரசாடற்கு ஏதுவாகலின், இதனைச் செல்வத் திற்குப்பயன் என்றார். இவை மூன்றுபாட்டானும் சுற்றந்தழால் செல்வத்திற்கு ஏதுவும் அரணும் பயனுமாம் என்பது கூறப்பட்டது.

காரி: பெற்றதனால் என்பதனுள் அகரமும். அன்சாரியையும் விகாரத்தால் தொக்கன. பெற்றத்தால் எனத் தகர ஒற்றுமிகல் 'கேழேழ்வரையும் இல்லோன்'[3] என்னுங்கோவையாருள் 'வருட்டி' என்பதும் அது.

ஊ) *கவிராசர்*: செல்வம் பெற்றவதனாலே ஒருவன் பெற்ற பலனாவது, தன் சுற்றத்தால் தான் சூழப்படும்வகை செய்தல் எ—று.

ஏ) *பழைய 2*: 'சுற்றத்தார் சுற்றப்படவொழுகல்' பாடம். செல்வம் பெற்றதனாற் பெற்ற பயனாவது, தன் சுற்றந் தன்னைச்சுற்றித் தழீஇக் கொண்டொழுகுதலாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

தொல்லாசிரியர் அனைவரும் ஒரு கருத்தினர்.

வரத., 'செல்வந்தான் பெற்றவதனாற் பெற்ற பயன், என்பதற்குப் 'பொருளைப் படைத்த பயனும் பொருளின் பயனும்' என்பர். 'பெற்ற தாற் பெற்ற பயன்—சுற்றத்திற்கு உதவுதல், அதனை ஏதுவாகப் பல சுற்றத்தார் சூழ இருத்தல்' என்றும், 'செல்வப் பயன் துன்பந் துடைத்தலும் இன்பமாக வாழ்தலும்' என விளக்கமும் தருவர். ''செல்வத்துப் பயனே ஈதல்'' என்ற கருத்தோடு மாறுதலானும்,'' ''ஈத்துவக்கும் இன்பமே'' தானடையும் செல்வப் பயனாதலானும் இவ் விளக்கத்தின் நலந்தீங்குகளை எண்ணி அமைக. தேவநேயர், 'சுற்றம் அருப்பறா ஆக்கம் பலவுந்தரும்' என்ற ஆசிரியர், இக்குறட்பாவால் செல்வத்தாற் பெறும் பயன் சுற்றம் என்கிறார். இது மறுதலை நயம் படக் கூறியது' என்பர்.

---

1. தழீஇ ஒழுகல்—நெஞ்சுகலந்து தழுவி நடத்தல்.
2. பெற்ற அதனால் என்பது தொடை நோக்கிப் பெற்றத்தால் எனச்செய்யுள் விகார மாயிற்று என்பதனைப் பிரித்துப் புணர்த்தி விளக்கியவாறு.
3. திருக்கோவை, 269.

செல்வத்துப் பயன் சுற்ற முதலிய யாவர்க்கும் கொடுத்துத் தானும் உண்டலாம், ஆதலானும் தனித்துண்ணத் தொடங்கின் அழிவன பலவாதலானும், சுற்றம் சூழ ஒழுகுதல் செல்வம் பெற்ற பயனாயிற்று எனினுமாம். 'பகையின்றி அரசாளுதற்கு ஏதுவாதலின் செல்வத்திற்குப் பயன் என்றார்' என்ற பரிமேலழகர் உரை, செல்வமே அங்ஙனம் அரசாளுதலால் மேலும் செல்வத்தைப் பெருக்கவும், காக்கவும் வழிசெய்தலின் அச்செல்வத்திற்கே பயனாயிற்று என்ற நுண்ணிய சிந்தனையைத் தருதலும் கண்டு இன்புறத்தக்கது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல்:

''தொலையாக் கொள்கைச் சுற்றம் சுற்ற.'' —பதிற்று., 70:17.

''நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந்துடையார்
கொடுத்துத் தான்துய்ப்பினுந் ஈண்டுங் காலீண்டும்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்.'' —நாலடி., 93.

''செல்வம் உடையாருஞ் செல்வரே தற்சேர்ந்தார்
அல்லல் களைப எனின்.'' —நாலடி., 170.

''அழல்மண்டு போழ்தின் அடைந்தவர்க் கெல்லாம்
நிழல்மரம் நேரொப்பத் தாங்கிப்—பழமரம்போல்
பல்லார் பயன்துய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.'' நாலடி—., 202.

''மல்லற் பெருஞ்செல்வம் மாண்டவர் பெற்றக்கால்
செல்வுழியும் ஏமாப்பச் செய்வதாம்.'' —பழ—நா., 289.

''தமக்குற்ற தேயாகத் தம்மடைந்தார்க் குற்ற (து)
எமக்குற்ற தென்றுணரா விட்டக்கால் என்னாம்.''
—பழ—நா., 368

''செவல்த்தைப் பெற்றால் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு—நல்லதாம்
தானம் மறவாத தன்மையரேல் அ:தென்பர்
வானகத்து வைப்பதோர் வைப்பு.'' —அறநெறி., 76.

''ஒரு தனிக்குடிகளோடு உயர்ந்தோங்கு சுற்றத்தான்''
—சிலப்.மங்கல: வரி. 32.

''சுற்றஞ் சூழ்ந்து பெருக்கலும் சூதரோ.'' —சீவக., 1921.

''சுற்றத்திற் கழகு சூழ இருத்தல்.'' —கொன்றை.. 30.

''ஆரியன் அருளில் போயவ் வகன்மலை யகத்த னான
சூரியன் மகனும் மானத் துணைவரும் கிளையும் சுற்ற.''
—கம்பராமா.,4250.,

''அடைந்தவர்க் கருளா னாயின் அறமென்னாம் ஆண்மை பென்னாம்.
—கம்பராமா.,6600

''தமதெலாம் வவுவந்தனைய தன்மை முனிவன்.''
—கம்பராமா.,2608.

செல்வம் பெற்ற பயன்:

சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழலின்றி.''
—கலித்.,10. 2

''நன்னெறி யறிவு சான்றோர் நான்மறைக் கிழவர் மற்றைச்
சொன்னெறி யறிவு நீரார் தோமறு புலமைச் செல்வர்
மன்னெறி தோறுந் தோன்றும் பருணிதர் பண்பின் கேளிர்
மன்னவர்க் கரசன் பாங்கர் மரபினாற் சுற்ற மன்னோ.''
—கம்பராமா.,10507.

''வருநிதி பிறர்க்கார்த்தும் மாசாத்து வான்என்பான்
இருநிதிக் கிழவன்..... ....'' —சிலப். 16:33—34.

மேற்கோள்பகுதி:

சிவஞான.: ஆனத்தால் அன்பின் தொழு: ஆனதனால் என்பது ஆனத்தால் என மரீஇயிற்று; 'பெற்றத்தால் பெற்றபயன்' என்புழிப் போல. (சிவஞான போதம். சூ.12. அதி.4.)

53.5. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய சுற்றத்தால் சுற்றப் படும். (நூடு)

உரைப்பகுதி:

அ) மணக்.: வேண்டும் அளவு[1] கொடுத்தலும் இன்சொற் கூறுதலும் செய்வானாயின் தனக்கு முன்னதாகியும் பின்னாகியும் வருகின்ற சுற்றத்தாராலே சூழப்படுவன் என்று.

1. வேண்டும் அளவு — சுற்றத்தின் தேவையறிந்து எவ்வளவு விரும்பும் அளவு எனினுமாம்.

இஃது ஒழுகும் திறம் கூறிற்று.

ஆ) பரிதி.: பொருள் கொடுத்தலும் இன்சொல்லும் உள்ள அரசர்க்குத் தொன்றுதொட்டு வருகிற உறவின் முறை உண்டாம் எ—று.

இ) பரிப்.: வேண்டும் அளவு கொடுத்தலும் இன்சொல் கூறுதலும் செய்வான் ஆயின் தனக்கு முன்னாகியும் பின்னாகியும் வருகின்ற சுற்றத்தாலே சூழப்படுவான் எ—று.

இஃது ஒழுகும் திறன் கூறிற்று.

ஈ) காளி.: பொருள் வழக்கமும் இன்சொல் வழக்கமும் இவர்க்கு[2] நடத்த வல்லவன் ஆயின் மற்று அவன் பெரிதும் பயின்ற சுற்றத்தினால் சூழப்படும் எ—று.

உ) பரிமேல்,: ஒருவன் சுற்றத்திற்கு வேண்டுவன கொடுத்தலையும் இன்சொல் சொல்லுதலையும் வல்லனாயின், தம்மில் தொடர்ந்த[3] பலவகைச் சுற்றத்தானே சூழப்படும்.

இரண்டும்[4] அளவறிந்து ஆற்றுதல்[5] அரிது என்பது தோன்ற ஆற்றின் என்றார். தம்மின் தொடர்தலாவது சுற்றத்தது சுற்றமும் அதனது சுற்றமுமாய் அவற்றான்[6] பிணிப்புண்டு வருதல். இவ்வுபாயங்களை வடநூலார் தானமும் சாமமும் என்ப.

ஊ) கவிராசர்: ஒருவன் சுற்றத்தார்க்கு வேண்டியதைக் கொடுத்தலும் நல்ல வசனங்களைச் சொல்லுதலு முடையானாகில், பலவகைச் சுற்றங்களும் அவனைத் தாங்களே சூழ்ந்து கொள்ளுவார்கள் எ—று.

ஏ) பழைய: 2: ஒருவன் சுற்றத்திற்குக் கொடுத்தலும் இனிய சொல்லும்வல்லனாயின், தம்மிற்றொடர்ந்த பலவகைச் சுற்றத்தானே சூழப்படுவன்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் முதலானோர் 'வேண்டுமளவு கொடுத்தல்,' 'வேண்டுவன கொடுத்தல்' என்பார்கள். இரண்டற்கும் சிறிது

2. இவர்க்கு என்பது சுற்றத்தாரை உணர்த்திற்று,
3. தொடர்ந்த — ஒன்றோடு ஒன்று தொடர்ந்து வருகிற சுற்றம் என்க.
4. இரண்டாவன வேண்டுவ அளித்தலும், இன்சொற் கூறுதலும் ஆம்.
5. அளவு அறிந்து ஆற்றல்—தன் செல்வத்தினளவையும், சுற்றத்தின் தேவையளவையும் அறிந்து.
6. அவற்றான்—சுற்றத்தால்

வேறுபாடுண்டு. 'வேண்டும் அளவு கொடுத்தல்' என்பதில் அளவிற் பொருட் சிறப்பு. 'வேண்டுவன கொடுத்தல்' தேவையறிந்து அவர் கேளாமலே கொடுத்தல். இவ்விரண்டையும் விட்டு இராமலிங்கனார் 'வெகுமதி கொடுத்தல்' பரிசு கொடுத்தல் என்பர், ஏதேனும் ஓராற்றான் சிறந்தார்க்குக் கொடுப்பதே வெகுமதியும் பரிசும் ஆவன. அவை மற்றோர்க்கும் ஆகலாம். சுற்றத்தார்க்கே சிறப்பிருப்பினும் கொடுக்கப்படுமாயின் அது சுற்ற நோக்கிக் கொடுக்கப்பட்டதாகக் கருதப் பெறுமேயன்றிப் பரிசாகாது.

மு.கோ. 'அருகிலுள்ள சுற்றம் இன்சொல்லாலும், சேய்மைச் சுற்றம் கொடையாலும் சுற்றப்படும்' என்பர். இங்ஙனமாயின் அருகிலுள்ள சுற்றம் மன்னர் திருவைத் துன்னியார் துய்ப்பர் என்பதற்கு மாறாக உண்மையறிந்து மனமாறுபடுவர். சுற்றமாக விளங்கார். இதனை எண்ணியே மணக்குடவர் போன்றோர் பொது வகையில் இரண்டும் வேண்டுவன என்றார்கள்.

வரத. 'அடுக்கிய சுற்றம்—நெருங்கிய சுற்றமும், அவரைச் சார்ந்த வழிவழிச் சுற்றமும்' என்பர். இது பரிமேலழகரினும் வேறு படாமை கருதத்தக்கது. மு.ரா அரு. 'சுற்றஞ்சூழ வாழ்தல் ஆட்சி யுபாயம்' என்பர்.

ஆற்றின்—அளவறிந்து செய்யின், நேசனைக் காணாவிடத்து நெஞ்சாரவே துதித்தல்—... ... எனவும் ''வினையாளை வேலை முடிவில்'' என்பவாகலின் இன்சொல்லும் கொடையும் தரமறிந்து அளவறிந்து செய்தலிலேயே அதன் அருமைப்பாடு அறியப் பெறுமாத லின் 'தெரிந்து செய்யின்' என்றதாம்.

வை.மு.கோ. 'அளவு அறிந்து — கொடுக்கப் பெறும்சுற்றத் தின் அளவையும் தன்பொருளளவையும் அறிந்து' என்பர். ஏன்? பெறுவோன் தகுதியறிந்தும் கொடுத்தல் வேண்டும் என்பதையும் கருதுக.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

''... .....நானவர்க் குற்றுள பொருளெலாங் கிளத்தி
அடைத்த நல்லுரை விளம்பின னளவளா யமையுற்று
உடைத்த பூசனை வரன்முறை யியற்றவென் றுரைத்தான்.''

—கம்பராமா.,9414.

53.6. பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின் மருங்குடையார் மாநிலத் தில். (நிஉசூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: மிகக் கொடுக்க வல்லவனாய்ச் சினத்தையும் விரும்பானா யின் அவனின் துணையுடையார் பெரிய உலகின்கண் இல்லை எ—று.

இது மேற்கூறிய அளவின்றி இவ்வாறு செய்யின் துணையுடையா னாம் என்றது.

ஆ) பரிதி.: கொடையினாலே பெரியவன் கோபமில்லாதவனாகில் அந்த அரசனைப்போலே சுற்றம்[2] இல்லை எ—று.

இ) பரிப்.; மிகக் கொடுக்க வல்லனாய்ச் சினத்தையும் விரும்பான் ஆயின், அவனின் மிக்க துணை உடையார் பெரிய உலகின்கண் இல்லை எ—று.

மேற்கூறியவாறு அன்றி இவ்வாறு செய்யின், துணை உடையன் ஆம் என்றது: இது செய்தல் அருமையின், வேறு வகுத்துக் கூறினார்.

ஈ) காளி.: உலகத்து வேந்தனானவன் இனமும் வரிசையும் அறிந்து அணைத்தலேயன்றி, மற்றும் யாவரும் வந்து தன்னோடு மருவும்[3] பெருங் கொடையாளனுமாய், பின் சினத்தை விரும்பானுமாம் எனில் இவனைப்போலச் சுற்றம் உடையார் மற்று இனி இடம்படு[4] ஞாலத்து யாவரும் இல்லை எ—று.

பேணான் வெகுளி என்பது. சினத்தைக் கொண்டிரான் என்பது. மருங்குடையார் என்பது சுற்றமுடையார் என்பது. மற்று இங்ஙனம் உலகத்துப் பலரையும் சுற்றமாக மருவும் பண்புடைய வேந்தர்க்குப் பலரையும் இகழ்தல் செய்யாமை இயல்பாகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது.

உ) பரிமேல்.: ஒருவன் மிக்க கொடையை உடையனுமாக வெகுளியை விரும்பானுமாயின் அவன்போலக் கிளையுடையார் இவ்வுலகத்து இல்லை.

---

1. சினம்—கோபம்.
2. சுற்றம் இல்லை—சுற்றம் உடையார் பிறர் இல்லை என்பது சுற்றுதலையுடையது என்னும் பெயர் அங்ஙனம் சூழ்ந்து இருப்பாரை உணர்த்தியது.
3. மருவும்—பொருந்தும்
4. இடம்படு ஞாலம்—அகன்றவுலகம். மலர்தலையுலகம் என்றாற்போல.

மிக்ககொடை—ஒன்றானும் வறுமை எய்தாமல் கொடுத்தல், விரும்பாமை இஃது[5] அரசற்கு வேண்டுவதொன்றென்று அளவிறந்து செய்யாமை.

ஊ) *கவிராசர்.*: ஒருவன் மிகுந்த கொடையை உடையவனுமாய்க் கோபத்தை விரும்பாதவனுமானால், அவனைப் போல் சுற்றமுடைய வர்கள் இந்த உலகத்திலே இல்லை எ—று.

ஏ) *பழைய 2*: பெருங்கொடையான் கோபமில்லான் அரசனாகில், அவனைப் போலக் கிளையுடையார் இவ்வுலகத்தில்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்.:

,மருங்கு துணை, சுற்றம் கிளை எனப் பொருள் கூறுவர். அனைத்தும் ஒரு நோக்குடையன. மருங்கு—பக்கம் என்ற இடப் பெயர் அங்குள்ள துணைவரையும் சுற்றத்தாரையும் உணர்த்திற்று. இடத்தின் பெயர் நிகழ்பொருளுக்கு வந்தமையின் இடவாகுபெயர். இங்ஙனம் வருவதனை இலக்கணை என்பர் வை.மு.கோ *தேவநேயர்* 'பெருங்கொடை—வறுமை நீங்குமளவு கொடுத்தல்' என்பர். இது சிறந்த கருத்து. அங்ஙனமே சினத்தொடுங்கொடுப்பின் கொடை பயனின்றாம் என்பது.

இராம. பெருங்கொடை—பெரிய தொகையான கொடையன்று; பல பேருக்குக் கொடுத்தல்' என்பர். வெகுளியைப் பேணாமையை இங்குக் கூறவேண்டியதென்னை எனின் 'பெருங்கொடையிற் சேர்ந்தவர்கள் பிரியாமைப் பொருட்டாக' என்பர்.

மூ.கோ. 'மருங்கு—இடுப்பு, அவ்வரசனுடைய தோளிலும் இடுப்பிலும் பேணிக்காக்கப்படுவர்' என்பர். இது வலிந்த பொருளாம். *வரத.* 'அரசனது கொடையாற் பலர் அவனைப் போன்ற தகுதி பெறுவர். வெகுளி பேணாமையால் அவன் செய்த நன்றியை எப்போ தும் பேணுவர்' எனக் காரணம் கூறுவர்.

---

5. இஃது ஆதற்கு, எனவும் பாடம் இஃது—இக்கோபம்; ஆதற்கு—செல்வம் வளர் தற்கு. இஃது அரசற்கு வேண்டுவதொன்றென்று அளவிறந்து செய்யாமை என்றதால் அரசன் வெகுளியை அளவோடு செய்க என்பது பெறப்படும். ஆகவே சினம் துவரத் துறக்கத்தரும் குற்றம் அன்று என்பதாயிற்று 440ம் குறளுரையில் காமம் வெகுளி உவகை என்பன முற்றக்கடியுங் குற்றமன்மையின்'' என்றும் 84ம் அதிகாரத்துத் தொடக்கவுரையில் ''பகைதான் முற்றக் கடியும் குற்றமன்மையின் உளவாய வெகுளி யானும் காமத்தானும் வருவதாம் என்றும் பரிமேலழகர் கூறுதலை இங்குஎண்ணுக

ஓ) ஒப்புமைப்பகுதி:

ஒருபுடை:

''குற்றம் பார்க்கில் சுற்றமில்லை,'' —கொன்றை., 18

''கோணிக் கோடி கொடுப்பதிலும்
கோணாமல் காணி கொடுப்பது நல்லது.'' —பழமொழி.

''பரிவுடன்மற் றிவைகூறும் பவனகுமா ரனைமலர்க்கை பணித்து நோக்கிக்
குருகுலத்தார் போரேறே குற்றமது பார்க்குங்கால் சுற்றமில்லை
ஒருகுலத்தில் பிறந்தார்கள் உடன்வாழும் வாழ்வினைப்போல் உறுதியுண்டோ
இருவருக்கும் வசையன்றோ இருநிலம்கா ரணமாக எதிர்ப்ப தென்றான்,''
—வில்லி, கிருட்., 17.

53.7. காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. (நூஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: காக்கை ஓரிரை[1] பெற்றால் அதனை மறையாது தன் சுற்றம் எல்லாவற்றையும் அழைத்து உண்ணும்; அதுபோலச் செல்வம் பெற்றால் அதனைத் தன் சுற்றத்தார் எல்லாரோடும் நுகர்வார்க்கே[2] ஆக்கம் உளதாவது எ—று.

இவை மூன்றும் அன்பமைந்த மக்கட்குச் செய்யும் திறன் கூறின.

ஆ) பரிதி.: காக்கை இரைபெற்றால் தானே புசியாமல் இனங் கூட்டிப் புசிப்பது போலச் செல்வம் பெற்றால் தானே புசியாமல் இனத்தைக்கூட்டிக்கொள்வான் எ—று.

இ) பரிப்.: காக்கை ஓரிரை பெற்றால் அதனை மறையாது தன் இனமாயின எல்லாவற்றையும் அழைத்து உண்ணும்: அதுபோலச் செல்வம் பெற்றால் அதனைத் தன் சுற்றத்தார் எல்லாரோடும் நுகர் வார்க்கே ஆக்கம் உளதாவது எ—று.

இது மக்கள் பலர் உண்டானால் எல்லார்க்கும் பகுத்து உண்ணக் கொடுக்கவேண்டும் என்றது. இவை மூன்றுபாட்டானும் அன்பு அறாத மக்கட்குச் செய்யும் திறன் கூறிற்று.

---

1. இரை—உண்ணும் பொருள். இது ஊர்வன பறப்பன நீர்வாழ்வன உண்ணும் உணவுப் பெயர்.
2. நுகர்வார்—அனுபவிப்

ஈ) *காளி.*: காக்கைகளானவை யாதானும் பலி[3] முதலிய இரை பெற்றால் பலவும் அறியாமல் கரந்து ஒழுகாது[4] என்செய்யும் எனின், தம்[5] இனத்தையும் விளித்துக்கொண்டே நுகரும்; அதுபோல் அரசர்க்குச் சுற்றம் ஆகின்ற ஆக்கமும் அத்தன்மையார்க்கே உளவாவது எ—று.

உ) *பரிமேல்.*: காக்கைகள் தமக்கு இரையாயின கண்டவழி மறையாது இனத்தை அழைத்து அதனோடும் கூட உண்ணாநிற்கும்; சுற்றத்தான் எய்தும் ஆக்கங்களும் அப்பெற்றித்தாய இயல்பினை யுடையார்க்கே உளவாவன.

அவ்வாக்கங்களாவன பகையின்மையும், பெருஞ்செல்வம் உடைமையும் முதலாயின.[5] எச்சவும்மையான் அறமும் இன்பமுமே அன்றிப் பொருளும் எய்தும் என்பது பெறுதும்.[6] அப்பெற்றித்தாய இயல்பு என்றது தாம் நுகர்வன எல்லாம் அவரும் நுகருமாறு வைத்தல்.

ஊ) *கவிராசர்*: காக்கை தனக்கு இரை கண்டால், அதைத் தான் மாத்திரம் தின்னாமல் தன் இனத்தை யழைத்து அதனோடேகூட உண்ணும்; நல்ல சுற்றத்தையுடையவன் செல்வமும் அப்படியே பல ருடனுங்கூட உண்ணப்படும் எ—று).

ஏ) *பழைய 2*: காக்கை தனக்கு இரையாயின கண்ட இடத்து மறையாது இனத்தை யழைத்துண்ணும்; காக்கை போலக் குண முடை யான் செல்வமும் அப்படியழைத்துண்ணப்படும்.

மல்லர்: என்பது காக்கை தனக்கு ஏதாகிலும் அகப்பட்டால் அதை மறையாமல் இனத்தைக் கூப்பிட்டுத் தின்னுமே அப்படிப்பட்ட குணத்தையுள்ளவர்களுக்கும் பிரயோசனம் உண்டு என்றவாறு.

அரசனுக்குண்டான செல்வங்களை உறவின்முறையாரோடே கூட அனுபவித்தால் இவர்கள் இவனிடத்திலே காத்திருந்து அவனுக்கு உதவியாய் இருப்பார்கள். செல்வம் அழியாமல் இருக்கும் என்கிற பிரயோசனத்தைக் கைக்கொள்வான் என்பது கருத்து.

கரத்தல்—மறைத்தல், கரைதல்—கூப்பிடல், ஆக்கம்—இலாபம்

---

3. பலி—உணவு: காக்கைக்கு இடும் உணவின் மரபுப் பெயர்.
4. கரந்து ஒழுகுதல்—மறைந்து ஒழுகுதல்.
5. முதலாயின என்றதனால் கள்வரால் நலிவின்மை, தொழிலாளிகளால் நலிவின்மை இவைகளையும் கருதுக.
6. எச்சவும்மை இறந்தது தழீஇயது. இதனாற்றழுவப்பட்டது அறமும் இன்பமுமே யன்றிப் பொருளும் என்பது.

அன்ன—உவமைச்சொல், நீர்—குணம், நீரார்—குணமுள்ளவர்கள். உள—உண்டு

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'காக்கையின் தன்மைகள் அன்பு, ஒற்றுமை, கூட்டுறவு முதலியன. அது போல அரசனும் இம்முக்குணங்களும் உடையவனாகச் செல்வத்தைப் பொதுவுடைமையாக்கி உண்ணுக' எனக் கருத்து வழங்குவர் *தேவநேயர்*.

'காக்கை உணவு பெற்றால் கரைந்து மற்றவற்றையும் அழைத்துண்ணும்' என்பர் *இராமலிங்கனார்*. மற்றவைகளும் அங்ஙனமே. ஏனையவற்றையழைத்து உண்ணும். இங்ஙனம் இனம் பெருக்கும் அரசனும் அங்ஙனம் செய்க என வேறு கருத்தும் இதன்கண் உள்ளது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

காக்கை கரைந்துண்ணும்:

''காக முறவு கலந்துண்ணக கண்டீர்.'' —*தாயுமானார்*

''... ... ... சூதரோ
கொற்றங் கொள்குறிக் கொற்றவற் கொள்பவே.''

—*சீவக., 1921.*

53.8. பொதுநோக்கான் வேந்தன், வரிசையா நோக்கின் அதுநோக்கி வாழ்வார் பலர்.

(நுஉ அ)

உரைப்பகுதி:

அ) **மணக்.:** அரசன் எல்லாரையும் பொதுவாகப் பாராதே ஒருவனைத் தலைமையாலே பார்ப்பானாயின் அப்பார்வை நோக்கி அவனைவிடாது வாழுஞ் சுற்றத்தார் பலர் எ—று.

இஃது ஒருவனை இளவரசாக்க வேண்டும் என்றது.

ஆ) **பரி:.:** அரசன் உறவின் முறையரான பதினெட்டுப்பேர் முதலான பேரை, யெல்லாரும் ஒக்கும் என்று விசாரியாமல்[1] தராதர

1, விசாரியாமல்—ஆராயாமல்.

பாவ னை[2] யறிந்து பார்ப்பானாகில் அது நோக்கி அரசனைச் சூழ்ந்து இருப்பார் பலர் எ—று.

இ) *பரிப்.*: எல்லோரையும் பொதுவாகப் பாராதே ஒருவனைத் தலைமையாலே அரசன் பார்ப்பானாயின், அத்தலைமையை நோக்கி வாழ்வார் பலர் எ—று.

மக்கள் பலர் உண்டானால் எல்லாரையும் ஒக்கப் பாராது, நீதி மான் ஒருவனை இளவரசு ஆக்க வேண்டும் என்றது.

ஈ) *காளி.*: கீழ்ச்சொன்ன முறைமையின் பொதுப்பட அணைத்தலே யும் அன்றிப் பின்னும் பிறர் குலமும் ஒழுக்கமும் குணமும் கல்வியும் முதலிய மேம்பாட்டு வேற்றுமையானும் குறிக்கொண்டு அணைப்பனா யின், மற்று அம்மரபு நோக்கித் தாமும் அங்ஙனம் ஒழுகுவர் உலகத் தோர்; எனவே இதனைப் படிமரபாகக்கொண்டு[4] யாவரும் தம்தம் சுற்றம் ஓம்புவார் எ—று.

உ) *பரிமேல்.*: எல்லாரையும் ஒரு தன்மையராக நோக்காது அரசன் தத்தம் தகுதிக்கு ஏற்ப நோக்குமாயின், அச்சிறப்பு நோக்கி அவனை விடாது வாழும் சுற்றத்தார் பலர்.

உயர்ந்தார் நீங்குதல் நோக்கிப் பொதுநோக்கை விலக்கி, எல்லா ரும் விடாதொழுகுதல் நோக்கி வரிசை நோக்கை விதித்தார். இந் நான்கு பாட்டானும் சுற்றந்தழுவும் உபாயம் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: எல்லாரையும் ஒருசரியாய்ப் பாராமல் அவரவர்கள் மரியாதை[5] யறிந்து நடப்பித்தால், அதைக் கண்டு அவனைவிடாமல் வாழுஞ் சுற்றத்தார் பலர் எ—நு.

எ) *பழைய 2*: 'வரிசையாய் நோக்கின்' என்பது பாடம். எல்லோரையும் போல நோக்காது சுற்றத்தாரை அறிந்து வரிசையாக வேந்தன்பார்க்குமாகில் அச்சிறப்பினைப் பார்த்து அவனை விடாது வாழுஞ் சுற்றத்தார் பலர்.

தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர்., 'ஒருவனை இளவரசராக்க வேண்டும்' என்றது

---

3 தராதர பாவனை —உயர்வு தாழ்வான எண்ணம் அதாவது தகுதி பார்த்து மதித்தல்.
4 ஒக்கப் பார்த்தல்—ஏற்றத்தாழ்வின்றி ஒத்த நிலையினராக எண்ணுதல்,
, படி மரபு—தகுதி பற்றிய முறை. இதனைச் சோபானக் கிரமம் என்னும வடமொழி வரிசை நோக்கு என்பர் வள்ளுவர். 'பொது நோக்கொழிமதி புலவர் மாட்டே' (புறநா 121) என்பதும் அது.
5. மரியாதை—ஒழுக்கம் நேர்மை முதலிய சிறப்புதோக்கிய தகுதி.

என்பர். இது எங்ஙனம் இக்குறட்கு ஏற்புடையதாகக் கருதுகிறார் என்பது தெரியவில்லை. பரிப்பெருமாளும் இங்ஙனமே கருதுவர்.

பரிதி., கூறும் 'உறவின் முறையினரான பதினெட்டுப்பேர்' என்பது பள்ளும் பறையும் பதினெட்டுச் சாதியும் என்ற பழமொழியைக் கருதிக் கூறப்பட்டதாக இருக்கலாம். வேறு அறியக் கூடவில்லை. வரிசையா நோக்கல்—அவரவர்களுடைய அந்தஸ்துக்குத்தக அளித்தல் என்பர் இராம. மு.கோ. அடிப்படைத் தேவைகளைப் பொதுநோக்காலும் சிறப்புத் தேவைகளை வரிசையறிந்தும் அளிப்பின் என்பர்: இது சிறந்த கருத்தாகும்.

ஒ) ஒப்புமைப்பகுதி

வரிசையா நோக்கின்:

"வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை" —புறம்., 47.

"பரிசில் மாக்கட்கு வரிசையின் நல்கி" —புறம்., 6.

"வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த." —சிறுபாணா.,217,218.

"தத்தம் வரிசையான் இன்புறூஉம் மேல்." —நான்மணி.,66.,

"மோதர னென்னு நாமத் தொருவனை முறையி னோக்கி."
—கம்பராமா., 7763.

"... ... ... றென்முறை யிற்றவென் றுரைத்தான்."
—கம்பராமா.,9416.

"..... .... நிரம்பி
மனையு மக்களும் வலியரே யென்றனன் மறவோன்."
—கம்பராமா., 9416.

முற்றும்:

"ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை அறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்!
அதுநற் கறிந்தனை யாயின்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே." —புறம்., 121.

53.9. தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக் காரணம் இன்றி வரும். (நிஉசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: முன்பு தனக்குத் தமராகி வைத்துத் தன்னை விட்டுப் போனவர் பின்புவந்து சுற்றமாதல்; அவர்மாட்டு அமராமைக்குக்[1] காரணம் இன்றி ஒழுக வரும் எ—று.

இது தன்னைவிட்டுப்போன இராஜபுத்திரரைக் கூட்டிக்கொள்ளுமாறு கூறிற்று.

ஆ) பரிதி.: உறவின் முறையானைக் காரியங்கண்டு சேர்த்தலும், காரியங்கண்டு பிரித்தலும், செய்வானாகில் அந்தச்சுற்றம் ஓரிடத்திலும் நிலைபெறுதலின்மை காரணமின்றியே வரும் எ—று.

இ) பரிப்.: முன்பு தமக்குத் தமராகி வைத்துத் தன்னைவிட்டுப் போனவர்கள் சுற்றமாதல், தான் அவர்மாட்டு அமராமைக்குக் காரணம் இன்றி ஒழுக வரும் எ—று.

காரணம் இன்றி ஒழுகுதலாவது அவனுடைய சுற்றத்தோடு மேவி ஒழுகுதலும் அது போல்வனவும். இது விட்டுப்போன புத்திரனைக் கூட்டிக் கொள்ளுமாறு கூறிற்று.

ஈ) காளி.: குரவர் முதலிய மூத்தோர் யாவர், மற்று இவர் தாம் தகாதன செய்யின் தகாது என்று அடித்தலும், கல்லாது இகழின் கல்லென்று கழறலும்[2] செய்தால் நமக்கு இவை உபதேசம் என்று கொள்ளாது செய்யின் மற்று அச்சுற்றத்தாரது பொருந்தாமையால் தம்மைக் கைவிடுதல் காரணம் இன்றி வரும் எ—று.

தமராகி என்பது தமக்கு உரியராகி என்றது; தன் துறந்தார் என்பது தன்னைத் துறந்தார் என்றது; கல்லுதலாவது அடித்துச் சொல்லுதல்; அமராமை என்பது பொருந்தாமை.

உ) பரிமேல்.: முன் தமராய் வைத்துத் தன்னோடு அமராது[3] யாதானும் ஒரு காரணத்தால் தன்னைப் பிரிந்துபோயவர் பின்னும் வந்து

---

1. அமர்தல்—விரும்புதல். "அமர்பிணை தழீஇ" (அகநா23) அமராமை — விரும்பாமை. அமராமைக் காரணம் இன்றி—விரும்பாமைக்குரிய காரணமின்றி. பொருந்தாமை என்பர் காளி.
2. கழறுதல்—இடித்துரைத்தல்.

சுற்றமாதல் அவ்வமராமைக்காரணம் தன்மாட்டு இல்லையாகத் தானே உளதாம்.

அமராமைக்காரணமின்றி என்றதனான், முன் அஃது உண்டாய்த் துறத்தல் பெற்றாம். அஃதாவது அரசன்,[3] தான் நெறிகெட ஒழுகல்[4] வெறுப்பன செய்தல்,[5] என்றிவை முதலியவற்றான்[6] வருவது. ஆக்கம் வருவிக்கப்பட்டது.[7] இயற்கையாகவே அன்புடையராய சுற்றத்தார்க்குச் செயற்கையான் வந்தநீக்கம்[8] அதனை ஒழிய ஒழியும், ஒழிந்தால் அவர்க்கு அன்புசெய்து கொள்ளவேண்டா, பழைய இயல்பாய் நிற்கும் என்பார் வரும் என்றார்.

ஊ) *கவிராசர்:* முன்பு தன்னோடு சுற்றமாயிருந்து, பின்பு யாதானும் ஒரு காரணத்தினாலே தன்னைவிட்டுப் பிரிந்து போனவர்கள் திரும்பவந்து உறவாயிருக்கிறது, தன்னிடத்திலே குற்றமில்லாவிட்டால் எ—று.

ஏ) *பழைய 2:* தமக்கு உறவாகியிருந்த சுற்றத்தார் தம்மைவிட்டு நீங்குதல் யாது காரணத்தால்? சுற்றத்தார் நீங்கு மென்றால்' அரசனிடத்தில் அடக்கமில்லையென்றால் நீங்கும்; அடங்கி நடந்தானாகில் நீங்கின சுற்மும் வரும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., முன்பு மிக நெருங்கிய சுற்றமாக இருந்தவன்; பிரிந்து போனான்; மீள வந்தான்; அவன் எப்போதும் சுற்றமாக இருக்க வேண்டுமானால், முன்பு எதனால் நம்மைவிட்டுப் பிரிந்து போனானோ அந்தக் காரணம் மீண்டும் தம்மிடை நிகழ்ந்து விடாதபடி நடந்தால் தானே சுற்றம் உண்டாம்' என்னுங் கருத்தினர். இது அவர் கூறும் 'கூட்டிக் கொள்ளும் வழியைக் கூறியது' என்ற எழுத்தே காட்டும்.

பரிதி., 'உறவின் முறையானை ஏதோ ஒரு காரியங்கண்டு சேர்த்தலும், பின்பு அவன் செயல் கண்டு பிரித்தலும் செய்தால் அந்தச் சுற்றம்

---

3. அமராது—விரும்பாது.
4. நெறிகெட ஒழுகல்—அறநூல், பொருணூல், நீதிநூல், உலகியல் இவற்றுடன் ஒத்து நடவாமல் தன் மனம்போன போக்கிலே அரசற்குரியமுறை கெட நடத்தல்.
5. வெறுப்பன செய்தல்— சான்றோர் வெறுக்கத்தக்க செயல்களைச் செய்தல்.
6. 'முதலியவற்றால் என்றது 'கள்ளே காமங் கழிகண்ணோட்டம்' என்பவற்றைச் செய்தலும் அமைச்சர் சான்றோர்களை ஆதரியாமையும் கொள்க.
7. சுற்றம் ஆதல் என ஆக்கச் சொல் வருவிக்கப்பட்டது.
8. செயற்கையான் வந்த நீக்கம்—நெறிதவறி நடத்தல் முதலிய செயற்கையான் நேர்ந்த பிரிவு —அத்தீய ஒழுக்கம் நிகழாத வழி இயல்பாகவே அன்புடைய சுற்றத்தார் சுற்றமாச் சூழ்வர் என்பதாம்.

ஓரிடத்திலும் நிலைபெறாது. காரணமின்றியே பிரியும்; வரும்' என்பர்.

பரிப்., 'போனவன் திரும்ப வந்து பழகும்போது காரணமில்லாமலே பிரிந்தவனைச் சேர்ந்த சுற்றத்தோடு விருப்புடன் பழகுவான்; அது போன்ற சில நிகழ்ச்சிகளால் ஒட்டிப் பழகுவான்' என்பர். 'ஓடிப்போன பிள்ளையைக் கூட்டிக் கொள்ளும் விதம்' என்பர்.

காளிங்கர்., 'பிள்ளை ஓடிப்போவது, தந்தை படி என்று அடித்தாலும், தீயன செய்யாதே என்று கண்டித்தாலும், நமக்கு நல்லதுதானே சொலுகிறார்கள் என்று எண்ணாமையே யாகும்; தந்தை சொல்வது அவருக்குப் பிடிக்கவில்லை. ஆதலால் அத்தகைய சுற்றத்தாரைக் காரணமின்றிக் கைவிடுதல் நிகழலாம்' என்பர்.

பரிமேல்., 'பிரிந்து போனவர் மீளவந்து சுற்றமாவாராகில், அப்போது அவர் பிரிதற்குக் காரணமான குற்றம் இப்போது அரசனிடம் இல்லாமையே யாகும்' என்பர். விளக்கமாகப் பிரிந்து போதற்குக் காரணம் இவை இவை என்று விவரமும் தருவர். இது *மணக்குடவர்* போனவழியாகும்.

இராம 'சுற்றமாகப் பழகினவன் உறவு பொருந்தாமற் போவதற்கு ஒரு காரணம், போவதற்குக் காரணமான தீய குணங்கள் இப்போது இல்லாமையே யாகும்' என்பர்.

வரத., 'தம்முடன் நெருங்கிய சுற்றத்தார் பிரிந்து போனால் ஒரு காரணமும் இன்றித் தன்னையறியாமலே மன அமைதி கெடும்' என்பர்.

இவ்வுரைகளில் பிரிந்தவன் கூடினால், முன் அவன் பிரிதற்குக் காரணமாக இருந்த செயல்களை மீட்டும் செய்யக் கூடாது என்றும், வேண்டியபோது சேர்த்தலும் வேண்டாத போது பிரித்தலும் கூடாது என்றும், போனவன் வருவான். பின்பு ஒட்டிப் பழகுவான்; சரியென்று, சேர்த்துக்கொள்ள வேண்டியது தான் என்றும், கண்டித்தால் ஓடுவான்; அப்படிப்பட்டவனைக் கைவிடுதல் நலம் என்றும், காரணமில்லாமலும் பிரிவான்; அதற்காக நாம் கவலுதல் கூடாது என்றும், காரணமில்லாமல் சுற்றத்தார் பிரிந்தால் மன அமைதி கெடும் என்றும் ஆறுவகையான பொருளையும் கருத்தையும் இக்குறட்பாவுக்குத் தருகின்றனர். இவற்றுட் சில குறளமைதிக்கு ஏலாதன. சில வலிந்து கூறுவன.

இதுவரை தமராயிருந்து பின் பிரிந்தவர்கள் சுற்றமாயின் காரண மில்லாமலே நாம் அவரை விரும்பாமை வரும் எனலும் இதன் கருத்து. காரணமில்லாமற் பிரிந்தான்; வந்தான்; அத்தகைய சுற்றத்தை விரும்புதல் கூடாது என்பது. இத்தனையுரைகளும் அதிகார இயைபுக்கு ஏற்புடையனவா என்று ஆய்தல் இன்றியமையாதது.

53.10. உழைப்பிரிந்து[1] காரணத்தின் வந்தானை வேந்தன் இழைத்திருந் தெண்ணிக் கொளல். (நிகo)

உரைப்பகுதி:

அ) மணக்.: தன்னிடத்தினின்று நீங்கி, ஒரு காரணத்தால் வந்த வனை அரசன் அக்காரணத்தைச் செய்துவைத்து, பின்பு காரியமான படி எண்ணி அதற்குத் தக்கபடி கூட்டிக்கொள்ளுக எ—று.

ஆ) பரிதி., அரசனிடத்திலே பலனுண்டாகில் சூழ்ந்திருந்து. பலனற்றால் கைவிட்டுப்போய் மீண்டுவந்தும் இப்படியேயுள்ள பேரை யும் அறிக எ—று.

இ) பரிப்: தன்னிடத்தினின்று நீங்கி, ஒருகாரணத்தால் வந்த வனை அரசன் இனிமை செய்து வைத்துப் பின்பு காரியமானபடி எண்ணி அதற்குத் தக்கபடிக் கூட்டிக் கொள்க எ—று.

எண்ணிக் கோடலாவது அவன் வந்த காரணத்தை எண்ணுதலும் ஒருவனாகில் அதற்குத் தகவும் பலர் உண்டாகில் அதற்குத் தகவும் எண்ணுதலும். இது மீண்டு வந்த இராஜ புத்திரனோடு செய்யும் திறன் கூறிற்று

ஈ) காளி: தன் முதுகுரவர் மாட்டினின்று[2] நீங்கி, மற்று யாதா னும் ஒரு காரணத்தினால் தன்மாட்டு[3] வந்தான் ஒருவனை மற்று அம் மன்னனானவன் யாதுசெய்யற் பாலதோ எனின், அவன் தன்மையைப் பலபடியும் ஆராய்ந்து, அமைந்து, பின்னையும் கடிதின் தேறாது, கசடற[4] விசாரித்துத் தகும் எனின் தம் சுற்றத்தோடு ஒக்கத்தழீஇக்[5] கொள்ளினும் கொள்க: அல்ல எனின் அது செய்யாதொழிக எ—று.

---

1. உழை—இடம்
2. முதுகுரவர் மாட்டினின்று — தாய்தந்தையர் ஆசிரியர் முதலிய பெரியோர் களிடமிருந்து,
3. தன்மாட்டு—அரசனாகிய தன்னிடத்து.
4. கசடு அற—குற்றமற
5. ஒக்கத்தழீஇ—ஒருசேரத் தழுவிக் கொள்ளினும்'

உழைப்பிரிந்து[6] என்பது தன் முதுகுரவர் மாட்டினின்று நீங்கி என்றது.

உ) *பரிமேல்.*: காரணம் இன்றித் தன்னிடத்து நின்றும் பிரிந்து போய்ப் பின் காரணத்தான் வந்த சுற்றத்தானை அரசன் அக்காரணத்தைச் செய்துவைத்து[7] ஆராய்ந்து தழீஇக் கொள்க.

வாளா[8] உழைப்பிரிந்து என்றமையின், பிரிதற்குக் காரணமின்மை பெற்றாம். வருதற்காரணத்தைச் செய்யாவழிப் பிரிந்துபோய்ப் பகையோடு கூடுமாகலின் இழைத்திருந்து என்றும், அன்பின்றிப் போய்ப் பின்னும் காரணத்தான் வந்தமையின் எண்ணிக்கொளல் என்றும் கூறினார். பிரிந்துபோய சுற்றத்தாருள் தீமை செய்யப்போய் அதனையொழிய வருவானும், அது செய்யாமற்போய்ப் பின் நன்மை செய்ய வருவானும தழுவப்படுமாகலின், தழுவுமாறு முறையே இவ்விரண்டு பாட்டானும் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்* : ஒரு காரணமுமில்லாமல் தன்னிடத்திலே இருந்து விட்டுப் போனவன், பின்பு ஒரு காரணத்தாலே திரும்பிவந்து தன்னைச் சேர்ந்தால், அவன் வந்த காரியத்தைச் செய்து பிறகு ஆராய்ந்து குற்றமில்லாவிட்டால், அவனுடனே சினேகம் பண்ணவேணும் எ—று.

ஏ) *பழைய* 2: தன்னிடைப் பிரிந்து போய்ப்பின்பு தான்ழைக்குங் காரணத்தான் வந்த சுற்றத்தானை, வேந்தன், பிரிய வேண்டிய காரணம் யாதென்று அவனைத் தன்னிடந் தழீஇக் கொண்டிருந்து எண்ணிக் கொள்க.

ஐ) *தொகுப்பும் குறிப்பும்.*:

'வேந்தன் எண்ணிக் கொளல்' என்றமையால் அவன் சுற்றமும் அரசனாக இளவரசனாகத் தான் இருக்கக்கூடும் என்று நினைத்த *மணக்., பரிபெருமாள்* 'பிரிந்து சென்று திரும்பவந்தவன் இராஜபுத்திரர்' என்று உரைகண்டனர்.

பரிமேலழகர் 'பிரிந்து போய் வந்தவன் அரசற்கு உறுதிச் சுற்றம்—ஐவரில் ஒருவனாகவோ, ஐம்பெருங்குழுவில் ஒருவனாகவோ, எண்பேராயத்துன் ஒருவனாகவோ இருத்தல் கூடும் என்று எண்ணிப்

6. உழை என்பது இடப்பெயராய் நின்று பின் தன்னுழை நின்று ஏழனுரூபாய் நின்றது காண்க,
7 செய்துவைத்து—நிறைவேற்றி,
8 வாளா - சும்மா. அதாவது அடைமொழியொடு புணர்த்தாமல். பிரிதற்குக் காரணம் ஒன்றுமின்றி என்பது பொருள்.

பொதுவகையில் 'வந்தானை' என வள்ளுவர் கூறியது போல் 'வந்த சுற்றத்தானை' என்றனர். இவருள் பொதுவகையிற் 'சுற்றம்—அரசன்' என்ற மணக்., பரிமேலழகர் உரையே கொள்ளத் தக்கன.

'உழைப்பிரிந்து' பிரிதற்குக் காரணமாக, பரிதி. 'பலனற்றால்' பிரிந்து' என்றனர் கவிராசர். 'காரணம் இன்றித் தன்னிடம் இருந்து பிரிந்து என்பர். ஏனையோர் பொதுவாகப் 'பிரிந்து' என்றனர். நெடுநாட் பழகியவன் பிரிய நேரிய காரணம் இல்லையாயினும் ஒரு காரணத்தைப்படைத்திட்டுக் கொண்டு அதனைப் பலரறியப் பரப்பியே பிரிவன். காரணமின்றிப் பிரிதல் நிகழாது என்பதனைக் கருதிய உரை யாசிரியர்களிற் பழையோர் பொதுமையினும் 'பயனற்றால்' எனவும் கூறினர். ஆதலால் இவையே சிந்தனைக்குகந்த உரை.

தேவநேயர், பரிமேலழகரை ஒட்டிப் பொருளும் விளக்கமும் தந்து.'முந்தின குறளில் தீமைசெய்யப்பிரிந்துபோய் அது நீங்கியவழித் திரும்பிவந்த உறவினனையும், இக்குறளில் காரணமின்றிப் போய் ஒருபயன் நோக்கித் திரும்பிய உறவினனையும் தழுவிக்கொள்ளும் முறைகள் கூறப்பட்டன' என்று உறவினரின் பிரிவிற்கு இரு காரணம் காட்டுவர்.

குழந்தை, 'பிரிந்தவர்களில் தனக்குத் தீமைசெய்யப்போய் அதைச் செய்யாது வருவாரும், சும்மா பிரிந்துபோய்ப் பின் நன்மை செய்ய வருவாரும் என இருவகையர். இருசாராரையும் மன்னன் தழுவுக' என்பர். இங்ஙனம் இக்குறள் முகம்பார்க்குங் கண்ணாடியைப் போல அவரவர் அனுபவக் கருத்தைக் காட்டும் மனம் பார்க்கும் கண்ணாடி யாகிறது. காளிங்கர் 'தன்முதுகுரவர்' என்றது ஐம்பெருங்குரவர் களையும் சுட்டியதன்றித் தாய்தந்தையரைப் பிரிதலை மட்டுமன்று என்க.

காரணமின்றி எந்தக் காரியமும் நிகழாது ஆதலின், பிரியும்போது உறவினர் படைத்துமொழிகளைப் பரப்பியும், திரும்பும்போது காரணத்தை மனத்துளடக்கியும் வருவான். அவனை எண்ணிக்கொள்க என்ற கருத்தும் இயற்கையோடு இணைந்த எண்ண எழுச்சியாதலைச் சிந்திக்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

தாழுற வெளிவருந் தகைமை யாரவர்
நாமுற வல்லவர் நம்மை நண்ணினால்

தோமுற நீங்குத லல்துணிவ ராதலின்
யாமிவன் வரவிவற் றென்னென் றுன்னுவாம்.
—கம்பராமா., 657

பண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	பற்றற்ற	விரும்பறாச்	அளவளா	சுற்றத்தால்	கொடுத்தலும்	பெருங்கொடையான்	காக்கை	பொதுநோக்கான்	தமராகித்	உழைப்பிரிந்து
மணக்.	4	6	5	1	2	3	8	7	9	10
பரிதி.	9	3	4	2	1	10	5	6	8	7
பரிப்.	4	6	5	1	2	3	8	7	8	10
காளி.	5	3	4	2	1	10	8	9	6	7
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

53வது அதிகாரம் 'சுற்றந்தழால்' முற்றிற்று.

54. பொச்சாவாமை

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: பொச்சாவாமையாவது மறவியின்றி ஒழுகுதல். அது தனது சோர்வு பார்த்துப் பிறர் வஞ்சகஞ் செய்யுமிடங்களினும், அறம் பொருள் இன்பங்கள் செய்ய வேண்டுமிடங்களினும் மறத்தலின்மை. பொச்சாப்பு எனினும், மறவி எனினும், இகழ்ச்சி எனினும் ஒக்கும்.

ஆ) பரிதி.: பொச்சாவாமையாவது செல்வம் பெற்றோம் என்னும் ஆங்காரத்தினால்[1] அறிவிலனாதல் எ—று.

இ) பரிப்.: பொச்சாவாமையாவது மறவி இன்றி ஒழுகுதல் : அஃது எவ்விடத்து எனின், தனது சோர்வு பார்த்துப் பிறர் வஞ்சம் செய்யும் இடங்களினும், பொருள் இன்பங்கள் செய்ய வேண்டும் இடங்களினும் மறத்தல் இன்மை. பொச்சாப்பு எனினும், மறவி எனினும், இகழ்ச்சி எனினும் ஒக்கும். மேல் அமாத்தியர்[2] மாட்டும், சுற்றத்தார் மாட்டும் ஒழுகும் திறன் கூறினார்; அதனால் பயன் உண்டாவது தன்னைத் தான் கடைப்பிடித்து ஒழுகின் என்று அதன்பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது உருவும்[3] திருவும்[4] ஆற்றலும்[5] முதலாய வற்றான்[6] மகிழ்ந்து தற்காத்தலினும் பகையழித்தல் முதலிய காரியங் களினும்[7] சோர்தலைச் செய்யாமை. மேற்சொல்லிய சுற்றத்தாரால்

---

1. ஆங்காரம்—இறுமாப்பு
2. அமாத்தியர்—மந்திரியர்.
3. உரு—வடிவழகு 'இல்லத்து உருவுடைக் கன்னியரைப் போல' (நான்மணி., 274) 'வனப்பு' என்பர்-இளம்பூரணர்.
4. திரு—செல்வம்.
5. ஆற்றல்—பொருளானும் படையானும் உளதாய வலிமையும், ஆன்மையானும் வினையும் வலிமையும் என இருவகையானும் விளையும் பெருமை
6. முதலாய என்றதால் நாடு அரண் இவற்றான் ஆயதுங் கொள்க.
7. முதலிய காரியங்களாவன தன்சேனை பகைவர் வசமாகாமை காத்தலும், அமைச்சர் முதலான பெரியார்களோடு கலந்து சிந்தித்தலும் ஆம்.

பயனுள்ளது இச்சோர்வில்வழியாகலின், இது சுற்றந்தழாலின் பின் வைக்கப்பட்டது.

ஊ) *கவிராசர்*: அஃதாவது தன்னுடைய ரூபமும் செல்வமும் பலமும் முதலானவற்றைக் கண்டு மகிழ்ந்து தன்னைக் காத்துக் கொள்ளுகிறதும், பகைவரை அழித்தலும் முதலாகிய காரியங்களில் சோர்தலைச் செய்யாமலிருக்கிறது,

ஏ) *பழைய* 2: அஃதாவது, அரசன் வெகு செல்வத்திலுஞ் செருக்கினாலுஞ் செய்ய வேண்டிய காரியங்களை மறவாமற் செய்தல் பொச்சாப்பு: மறப்பு.

மல்லர்: அதாவது செல்வங்களை வருத்திவிக்கிற மிகுதியான சந்தோஷத்தினால் சீர்மைக் காரியங்களில் அசதி வராதபடிக்குப் பார்க்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பொச்சாப்பு—மறதி. பொச்சாப்பு, மறவி, இகழ்ச்சி ஒரு பொருளன என்பர் *மணக்குடவர்*. 'செல்வம் பெற்றோம் என்னும் ஆங்காரத்தால் அறிவிலனாதல்' *பரிதி*., 'உரு, திரு, ஆற்றல் முதலியவற்றால் மகிழ்ந்து தற்காத்தல் பகையழித்தல் முதலிய காரியங்களிற் சோர்தல்' *பரிமேலழகர், கவிராசர், பழைய உரை*.

'செய்ய வேண்டிய காரியத்திற் சோர்வின்மை' கா.சு; 'மறந்து விடாமை அஃதாவது வாழ்க்கையின்பங்களில் மயங்கிக் கடமைகளையும் நன்முயற்சியையும் மறந்துவிடாமை' இராமலிங்கர், 'அறிவாற்றல் படையரண், பொருள் புகழ் முதலியவற்றால் மகிழ்ந்து தம் அரச கடமைகளில் சோர்ந்துவிடாமை' தேவநேயர், 'மறதியின்மை சுற்றத்தைப் பேண மறவாமை' வரத, 'செய்யவேண்டியவற்றைச் செய்தலில் மறதியின்மை' குழந்தை;

இவ்வுரைகள் அனைத்தும் பொச்சாப்பு—மறதி அல்லது சோர்வு' பொச்சாவாமை—மறதியின்மை சோர்வின்மை என்ற பொருளிலேயே வழங்குகின்றன. *மணக்குடவரோ* பொச்சாப்பு, மறவி முதலியன ஒரு பொருட்கிளவி என்றனர்.

''வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம்
மறவி யினைய உடல் கொள் உயிர்க்குணம்''

(நன், உரியியல்: நூற். 11

எனப் பொச்சாப்பும் மறவியும் வேறான இருகுணங்கள் என்னும் நன்னூல்.

வள்ளுவர் 'மகிழ்ச்சியான் மைந்துறும்போது' என்பதால் மகிழ்ச்சியான் விளைவது மதம் அல்லது செருக்கு என்பர். அதன் விளைவு இகழ்ச்சி. ஈண்டுக்கூறிய இகழ்ச்சி என்பது புகழ்ச்சிக்கு மாறாய செயலன்று. ஆலசியம் அல்லது ஒரு பொருளாக மதியாமை யாகிய புறக்கணிப்பாகும். ஆகவே இவை ஒரு பொருட்கிளவியாகா. பேராசிரியர் தொல். பொருள். 274 உரையில் ''கடைப்பிடியின்றி நெகிழ்ந்திருத்தல்' எனவும், நூற்பா 260 உரையில் ''பொச்சாப்பு என்பது அற்றப்படுதல்; அஃதாவது பாதுகாத்துச் செல்கின்ற பொருட் கண் யாதானுமோரிகழ்ச்சியான் இடையறவு படுதல்'' எனவும் கூறுவர். இக்கருத்து 'உவகை மகிழ்ச்சியிற் சோர்வு என்பதனானும் வலியுறும். இவற்றால் மகிழ்ச்சியான் விளையும் மைந்தே பொச்சாப்பா கும். ஆதலானும் இது மறதியாகாமை தெளிவு.

மறதி நினைப்பிற்கெதிரான உள்ளப்பண்பு. பொச்சாப்பு சோர்வாய் வெளிப்பட்டுக் காலத்தோடு செய்ய வேண்டிய செயலை யும் இது என்னாற்றற்குத் தாழ்ந்தது; இலேசானது; என்று எண்ணச் செய்யும் ஆலசியம் ஆகும். இப்போதென்ன அவசரம்? என்ற அலட்சி யறிவு தான் இது. இதுவே பொச்சாப்பு. மறதியன்று. இதற்கு ஏற்ற சான்று பேராசிரியர் பொச்சாப்பிற்குச் சொல்லும் வரைவிலக்கணங் களும் நன்னூலார் கூறும் நூற்பாவுமாகும்

மேலும் பொச்சாப்பென்பதும் மறவி என்பதும் ஒரு பொருட்கிளவி கள் என்பதை

'வழுக்கொடு மறவிபுன்மை மறலொடு பொல்லாங் கேகீழ்
இழுக்கொடு சோர் வுபொச்சாப் பிகழ்ச்சியு மறத்தலின்போர்'

என்று சூடாமணி நிகண்டு விளக்கும்.

வள்ளுவர், சோர்வு (531), இகழ்தல் (535) வழுக்குதல் (536) என்ற மூன்று சொற்களாலேயே விளக்குதலுங் காண்க.

54.1. இறந்த வெகுளியின் தீதே சிறந்த உவகை மகிழ்ச்சியின் சோர்வு. (நிகழ)

உரைப்பகுதி:

அ) மணக்.: மிகுந்த வெகுளியினும் தனக்குத் தீமையைச் செய்யும்; மிக்க உவகைக் களிப்பினால் வரும் மறப்பு எ—று.

தனக்குச் சிறத்த உவகை தன்மகிழ்ச்சியால் சோருஞ் சோர்வு என்றும், உயிக்க வேண்டுமவரிடத்து உய்க்கும் உவகை என்றுமாம்.

ஆ) *பரிதி.:* அறிவு போன[1] கோபத்திலும் பொல்லாது, செல்வம் பெற்றோம் என்னும் பிரியத்தினால் உள்ளம் மறப்பது எ—று.

இ) *பரிப்.:* மிக்க வெகுளியுடையனாதலினும் தீது, மிக்க உவகையால் உண்டான மகிழ்ச்சியால் தன்னை மறந்திருத்தல் எ—று.

இது காமத்தின் கண்ணும் வெகுட்சியின் கண்ணும் கடைப்பிடித்தல் கூறிற்று.

ஈ) *காளி.:* அரசராய் உள்ளவர் தமக்கு அடாதவழிச்[2] சினக்கின்ற மிகுசினம் போல மிகவும் தீது என்பது யாதோஎனின், தமது மனச் செருக்கினாலே யாவர் மாட்டும் இன்புற்றிராது மிக்க உவகையைச் சோரவிடுக்கின்ற சோர்வு எ—று.

உ) *பரிமேல்.:* மிக்க உவகைக் களிப்பான்[3] வரும் மறவி, அரசனுக்கு அளவிறந்த வெகுளியினும் தீது.

மிக்கஉவகை — பெருஞ்செல்வம். பேரின்பம், பெருமிதம்[4] என்று இவற்றான் வருவது. அளவு[5] —பகைவரை அடர்த்தற்கும் கொடியோரை ஒறுத்தற்கும் வேண்டுவது. இறந்த வெகுளி ஒரோவழிப் பகைவரையும் கொல்லும்; இஃது[6] அன்னதன்றித் தன்னையே கோறலின், அதனினும் தீதாயிற்று.

ஊ) *கவிராசர்:* மிகுந்த சந்தோஷ மகிழ்ச்சியினாலே வந்த மறப்பு அளவில்லாத கோபத்திலும் பொல்லாது எ—று.

ஏ) *பழைய 2:* மிகுந்த வுவகைக் களிப்பான் வரும் மறப்பு அரசனுக்கு அளவிறந்த கோபத்தினுந் தீது.

மல்லர்: என்பது அரசனுக்கு மிஞ்சின கோபஞ்செய்கிற பொல்லாப்பைப் பார்க்க அதிகமான பொல்லாப்புச் செய்யும் மிஞ்சின சந்தோஷத்தின் களிப்பினால் வருகிற மறதி என்றவாறு.

---

1. அறிவு போன—அறிவகன்ற.
2. அடாதவழி—பொருந்தாவிடத்து
3. மகிழ்ச்சி—உணர்வழிந்த மயக்கம். 'உள்ளக்களித்தலும்' என்னுங் குறளுரையில் களித்தல்—உணர்வழியாதது மகிழ்ச்சி—அஃதழிந்தது எனப் பரிமேலழகர் உரை வகுப்பர்.
4. பெருமிதம்—படை அரண் மூதலியன வாய்ப்பாயுண்மையால் விளைந்த மதம்.
5. அளவு என்றது ஈண்டு வெகுளியின் எல்லையை.
6. 'இஃது' அன்னதன்றி' என்ற தொடரிலுள்ள இஃது' என்பது அளவுகடந்த உவகை மகிழ்ச்சியான் வரும் சோர்வினை.

அரசனுடைய மிஞ்சின கோபம் பிறத்தியாருக்குப் பொல்லாப்புச் செய்யும். செல்வம் அனுபவிக்கிற சந்தோஷத்தினால் சீர்மைக் காரியங்கள் பேரிலேயும் மந்திரிகளுடைய நடத்தைகள் பேரிலேயும் மறதியிருந்தால் சீர்மையிலே வேண்டிய அநியாயங்களும் நடந்து அரசனுக்கு வேண்டிய உட்பகைகளும் பிறந்து எல்லாம் அலங்கொலையாய்ப் போய் அரசனுடைய ராசாங்கத்துக்குத் தானே கேடுவரும் என்கிறதினால் இப்படிப்பட்ட மறதி மிஞ்சின கோபத்தைப் பார்க்க விஷம் என்பது கருத்து.

இரத்தல்—மிகுதல், வெகுளி — கோபம்பண்ணு, தீது—பொல்லாப்பு, இரத்தல்—மிகுதல், உவகை—சந்தோஷம், மகிழ்ச்சி—களிப்பு, சோர்வு—மறதி.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இப்பாவில் பொச்சாப்பு, 'சோர்வு' என்ற சொல்லாற் குறிக்கப் பெறுகின்றது. 'சோர்வு—மறப்பு' என்கின்றனர் **மணக்குடவரும் பரிமேலழகரும்.** மணக்குடவர், ''உவகை மகிழ்ச்சியின் சோர்வு'' என்னுந்தொடர்க்குத் தனக்குச் 'சிறந்த உவகைதன் மகிழ்ச்சியால் சோருஞ் சோர்வு' எனவும், 'தனக்குச் சிறந்த உவகையாவது உய்க்க — வேண்டுமவரிடத்தேயுய்க்கும் உவகை' எனவும் விளக்கந் தந்தனர். இவை இரு வேறான உரையன்மை தெளிக.

பரிப்பெருமாள் உரைப்போக்கு 'இறந்த வெகுளியும் பொச்சாப்புண்டாக்கும்; அதனால் விளையும தீதைவிட உவகை மகிழ்ச்சியால் விளையும் பொச்சாப்பு உண்டாக்கும் தீமை பெரிது என்பதே. ஆசிரியர் **வள்ளுவனார்** இங்ஙனம் உறழ் பொருளிற் கூறியதின் நோக்கம் உவகை மெய்ப்பாட்டின் நிலைக்களன் நான்கனுள் புணர்வாகிய காமத்தான் விளையும் மகிழ்ச்சியான் வரும் பொச்சாப்புத் தீது என்பதாற் போந்த கருத்து காமத்தானும் வெருட்சியானும் பொச்சாப்பு வரலாகாது என்பதை வலியுறுத்தவே எடுத்தெழுதினார் இதனை அவருரையிற் காணலாம்.

காளிங்கர் ''இறந்த வெகுளி'' என்பதற்கு அடாதவழி விளையும் சினம் என்றும், அதைப்போன்றது மகிழ்ச்சியால் சிறந்த உவகையைச் சோரவிடுகின்ற சோர்வு என்றும் உரை கண்டனர். இவா உரையமைதி ஏனோர் உறழ் பொருளிற் கண்டவுரையை இவர் ஒப்புப் பொருளதாக்குகின்றார். இவர் கொண்ட கொண்டுகூட்டு 'மகிழ்ச்சியின் சிறந்த உவகை சோர்வு இறந்த வெகுளியின் தீது' என்பதாகும் என்பதை அவர் உரை நடையிற் காணலாம்.

இராமலிங்கனார், அளவிறந்த வெகுளி ஒருவருக்கு அபாயம் உண்டாக்கும். மகிழ்ச்சியிற் சோர்வு தனக்கே தீமையாம். அதனால் வெகுளியின் சோர்வு தீது என்றார் என நயம் தருவர். வெகுளியும் தனக்கே தீமை பயப்பது என்பதனை ஆசிரியர் **வள்ளுவனாரே** 'தன்னையே கொல்லும் சினம்' 'சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி, என்ற தொடர்களான் வலியுறுத்துவர். ஆதலான் தன்னைக் கொல்லும் சினத்தினும் தன்னையும் நாட்டையும் குடிகளையும் கொல்லும் பொச்சாப்பு தீது என்ற நயம் சிறந்ததாகுமோ என்பதை எண்ணுக.

வரதராசர் 'மகிழ்ச்சியின் சோர்வு வெகுளியின் தீது எனஉறழ் பொருளில் உரை எழுதித் தம் சிறப்புரையில் கோபத்தையும் மறதியையும் சமமாகக் கூறினார் என ஒப்புரைப்பர். ஆனால் பலருரையின் வண்ணம் உறழ்பொருளே ஆசிரியர் கருத்தாகலாம் என்பது. மு.கோ.' வெகுளியாலும் மகிழ்ச்சியாலும் மறதி உண்டாகும். அதனால் வெகுளியை எடுத்துக்காட்டி அதனிற் சோர்வு தீது என்றார்' என்பர். 'மேலும் உவகை- உள்ள நிறைவு; மகிழ்ச்சி-உடலின் பூரிப்பால் துள்ளிக் குதிப்பது' என வேறுபாடு காட்டுவர். ஏலுமேற் கொள்ளலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

இறந்த வெகுளி தீது:

தீராக் கோபம் போரார் முடியும் —**பழமொழி.**

முற்றும்:

பெருமிதம் பெரிய செல்வம் பேரொழில் பெரிய இன்பம்
தருமிகு களிப்பின் முழ்கித் தங்குறின் ஏம கண்டா
வருமிகு பொச்சாப் பந்தம் மறவியான் நின்னைக் காத்துப்
பொருமிகு பகையை வெல்லும் பொருளெலாம் இழப்பதாகும்.
—**விநா., அரசி. ,85**

சிறந்த உவகை:

அரசியற் பாரம் பூரித் தயர்ந்தனை யிகழா தையன்
மரைமலர்ப் பாத நீங்கா வாழுதி .... —**கம்பராமா. 4182**

54.2. பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. (நிஉஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: மறவியாகின்றது புகழைக்கொல்லும்; நாடோறும் இரவால் வருந்தி வயிற்றை நிறைக்கும் ஊண் அறிவைக் கொல்லுமாறு போல எ—று.

இவை மூன்றினாலும் பொருளின்கண் கடைப்பிடித்தல் கூறினார்

ஆ) பரிதி.: பொச்சாப்பாகிய மதம் தன் புகழைக் கொல்லும் அறிவினை மிடி[1] கொன்றது போல எ—று.

இ) பரிப்.: மறவியாகின்றது புகழைக் கொல்லும்; அற்றைத் தேட்டுண் அறிவைக் கொல்லுமாறு போல எ—று.

புகழ்பட வாழுங்கால் தன்அளவை மறந்து கொடுப்பன் ஆயின் தான் கருதின புகழும் முடியச் செல்லாது அளவிலே நின்று சாம் இயற்கையாகிய அறிவு நல்குரவினால்[2] சாமாறு போல என்றவாறு ஆயிற்று இது கொடையில் கடைப்பிடித்தல் வேண்டும் என்றது. இவை மூன்றினாலும் பொருளிற் கடைப்பிடித்தல் கூறிற்று.

ஈ) காளி.: உலகத்துத் தாம் பிறரை இகழும் இகழ்ச்சியாவது, மற்று அது தம் புகழினைத் தலையழிக்கும் என்போல எனின், ஒருவரது அறிவுடைமையைச் சிலர்மாட்டு நாள்தோறும் சென்று இரக்கும் இரப்பானது தலையழித்தாற்போல எ—று.

உ) பரிமேல்.: ஒருவன் புகழினை அவன் மறவி கெடுக்கும்; அறிவினை நிச்சநிரப்புக் கெடுக்குமாறு போல.

நிச்சநிரப்பு-நாடோறும் இரவான் வருந்தித் தன்வயிறு நிறைத்தல். அஃது[3] அறிவுடையான்கண் உண்டாயின் அவற்கு இளிவரவானும்[4] பாவத்தானும் எள்ளற் பாட்டினை[5] விளைத்து அவன் நன்கு மதிப்பினை அழிக்கும்; அதுபோல மறவியும் புகழுடையான்கண்

1, 2 மிடி—நல்குரவு—வறுமை.

3. அஃது—அந்த நிச்சநிரப்பு (நித்திய தரித்திரம்) நிரப்பு என்பது நிரப்புதல் என்ற தொழிற்பெயரின் விகாரம் நிரப்புதல் எதிர்மறையிலக்கணையால் வறுமைக்குப் பெயராயிற்று.

4. இனிவரவு-இழிவு (அவமானம்)

5. எள்ளற்பாடு—இகழ்ச்சி.

உண்டாயின் அவற்குத் தற்காவாமையானும் காரியக்கேட்டானும் எள்ளற்பாட்டினை விளைத்து அவன் நன்குமதிப்பினை அழிக்கும் என்பதாயிற்று, இவை இரண்டுபாட்டானும் பொச்சாப்பினது குற்றம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்; ஒருவன் புகழினை அவன் மறப்புக் கெடுக்கும். அது எப்படிப்போல என்றால், அறிவைத் தரித்திரங் கெடுத்தாற் போல எ—று.

ஏ) பழைய 2: ஒருவன் புகழினை அவன் மறவி கெடுக்கும்; அறி வினைத் தரித்திரம் நிச்சயமாகக் கெடுப்பதுபோல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவரை, ஒட்டியே எழுதுபவர் பரிமேலழகர். ஆனால் 'நிரப்பு அறிவினைக் கொல்லுமாறு போல்' என்பதை மாற்றிப் பரிமேலழகர் 'அவன் நன்கு மதிப்பினையழிக்கும்' என்றார். வயிரம் முதலியன மதிப்பார்கண்ணதாக அவற்றின் பெருமையறியப்படுதல் போல ஒருவன் அறிவு நினைப்பும் மறைவுமாய் என்றும் உயிரினை ஒட்டி நிற்கும் பண்பாதலின் அதனை அவ்வப்போது தோன்றி மறை யும் நிரப்பு கொல்ல இயலாது. அறிவும் அழியாது என்பதனை எண்ணிப் பார்த்த பரிமேலழகர் அறிவின் பயனாகிய நன்கு மதிப்பினையிழக்கும் என்றது மிக நயமானபகுதி. ''நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார் சொற்பொருள்சோர்வு படும்'' (குறள் 1046) ''எனைத்துணையவேனும் இலம்பட்டார் கல்வி, தினைத்துணையும் சீர்பாடிலவாம்'' ஆகலின். ''என், அறிவு கெட நின்றது நல்கூர்மையே'' (புறநா. 266: 13) என்பவாலோ எனின் ஆண்டும் நன்மதிப்பினையே கருதியதாம் என்க.

பரிப்பெருமாள், 'பொச்சாப்பு—மறதி'யெனப்பொருள் கண்டு 'ஒருவன் புகழுண்டாக வாழும்போது தன்பொருளளவை மறந்து கொடுத்து வாழ்வானாயின் அவனிறுதிக்காலம் வரை புகழும் போகாமல் தடைபட்டுவிடும்' எனச் சிறிது மாற்றம் காட்டுவர். புகழ் ஈகையொன்றாலேயே விளைவதென்ற ''ஈதலிசைபட வாழ்தல்' ''இரப்பார்க்கொன்றீவார் மேல் நிற்கும் புகழ்'' என்ற வள்ளுவருள் ளத்தைக் கருதி இவர் இங்ஙனம் உரைத்தார் என்க. கல்வி தறுகண் இவற்றாலும் விளையுமன்றே எனின் அவை பெருமிதமாமே அன்றிப் புகழாகா. இசைமையும் கொடையும் காரிய காரணங்களாய் அவை

யும் பெருமிதநிலைக் களன்களுள் ஒன்றாதலை மெய்ப்பாட்டியலான் தெளிக.

காளிங்கர் ''பொச்சாப்பு—இகழ்ச்சி' யெனப் பொருள் கண்டு 'அது புகழையழிக்கும்' என்பர். இவர் ஈண்டுக்கூறும் இகழ்ச்சி, புகழ்ச்சிக்கு மறுதலையாகிய இகழ்ச்சியன்று. புறக்கணித்தலாகிய ஆலசியத்தை என முன்னர்க் காட்டினார். வரத. 'மறதி—அறிவின்மை' என்பர். அறிவிற்கு இன்மை என்றுமில்லை. அது வேண்டுங் காலத்து வெளிப்படாமையே மறதி என வேறுபாடு கொள்க. பொச்சாப்பு புகழை விளைக்காது என்னாது 'புகழைக் கொல்லும்' என்றமையான். இப்போது புகழை விளைக்காமை மட்டுமன்றி முன்ன ரீட்டிய புகழையும் அழிக்கும் என்றாராம். நிச்சநிரப்புத்தான் அறிவினைக் கொல்லும்.ஒரொருகால் பொச்சாப்பை மேற்கொள்ளினும் புகழ்பொன்றும் ஆதலால் நிச்சநிரப்பினும் பொச்சாப்பு தீயது என்றதுமாம்.

நிரப்பு—வறுமை: குறையாய் நிரப்பிக்கொண்டேயிருக்க வேண்டுதலின் குறையை நிரப்பு என்றது மங்கல வழக்காகிய காரணக்குறி, முதனிலைத் தொழிலாகுபெயர். அறிவுடைமையும் பசிவந்திடப் பறக்கும் பத்தனுள் ஒன்றாதல் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

அறிவினை நிச்சநிரப்பு கொள்ளுதல்:

என், அறிவுகெட நின்ற நல்கூர்மையே. —புறம். 266:13

குடிபிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணைவிடூஉம்
நாணணி களையும மாணெழில சதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி. —மணி: 11. 76—80

பிறந்த குலமாயும்; மாயும் பேராண்மை மாயும்;
சிறந்ததங் கல்வியும்; மாயும்-கறங்கருவி
கன்மேற் கழூஉங் கணமலை நன்னாட!
இன்மை தழுவப்பட் டார்க்கு —நாலடி., 285

நீர்மையே யன்றி நிரம்ப எழுந்ததம
கூர்மையும் எல்லாம் ஒருங்கிழப்பர்—கூர்மையின்

முல்லை யலைக்கும் எயிற்றாய் இரப்பென்னும்
அல்லல் அடையப்பட் டார் —நாலடி., 289

ஓ) மேற்கோள்பகுதி:

மயிலை.: பொச்சாப்பு என்பது உடம்போடு கூடிய உயிர்க்குணம் என்பதற்கு மேற்கோள். (நன்.45:1)

54.3 பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை அதுஉலகத் (து)
எப்பானூ லோர்க்குந் துணிவு. (நஉஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பொச்சாப்பு உடையார்க்குப் புகழுடைமையில்லை யாம்; அஃது உலகத்து வழங்குகின்ற எவ்வகைப்பட்ட நூலோர்க்குந் துணிவு எ—று.

இது பொச்சாப்பார்க்குப் புகழாகாது [1]என்றது.

ஆ) பரிதி.: மதப்பட்டால் அறிவில்லாதார்க்குப் புகழில்லை; அது எல்லாச்சமயத்தார் சொல்லுஞ் சாத்திரத்திலுங் கேட்க எ—று.

இ) பரிப்.: பொச்சாப்பு உடையார்க்குப் புகழுடைமை இல்லை யாம், அஃது உலகத்து வழங்குகின்ற அறுவகைப்பட்ட நூலோர்க்கும் துணிவு எ—று.

இது பொச்சாப்பு ஆகாது என்றது.

ஈ) காளி.: தத்தம் கோட்பாட்டால் பெறும் பயன் வேறுபடுத்து அமைக்கும் அறுவகைச் சமயத்தோர்க்கும்[2] அவைகடந்த அப்பா லோர்க்கும் பிறரை அவமதிபண்ணி இகழாது ஆற்றல் உடையராதலே தத்தம் பெறுபயனுக்கு உறுதி நெறி யென்பது. தாம் கற்ற நூல்களில் பெறுபயன் அறியும் பிற நூல்களினும் இக்குற்றம் நன்று என்பார் யாரும் இல்லை எ—று.

உ) பரிமேல்.: பொச்சாந்து ஒழுகுவார்க்குப் புகழுடைமை இல்லை, அவ்வின்மை இந்நீதி நூலுடையார்க்கே அன்றி உலகத்து எவ்வகைப்பட்ட நூலுடையார்க்கும் ஒப்ப முடிந்தது.

1. ஆகாது—உண்டாகாது.
2. அறுவகைச் சமயத்தோர்—சைவமுதலாகக் கௌமாரம் ஈறாகவுள்ள வைதிக மதம் ஆறினும். காபில முதலாக—சைமினியம் ஈறான வேதாந்த மகும் ஆறினும், பௌத்த முதலாக சூனியவாத மீறான புறச்சமயம் ஆறினும். வைணவம் முதலாகச் சைவமீறான அகப் புறச்சமயம் ஆறினும் உள்ளோர்.

அரசர்க்கே அன்றி அறம் முதலிய நான்கினும் முயல்வார் யாவர்க்கும் அவை[3] கைகூடாமையின் புகழில்லை என்பது தோன்ற, 'எப்பால் நூலோர்க்கும் துணிவு' என்றார்.

ஊ) *கவிராசர்:* பொச்சாப்பாகிய மறப்புடையவர்களுக்குக் கீர்த்தி[4] யில்லை. அவ்வின்மை இந்நீதி நூலுடையவர்களுக்கே அன்றி, உலகத்து எவ்வகைப்பட்ட நூலுடையார்க்கும் ஒப்ப முடிந்தது எ—று.

ஏ) *பழைய 2:* பொச்சாந் தொழுகுவார்க்குப் புகழுடைமையில்லை; அது நூலுடையார்க்கே யன்றி, உலகத்து எவ்வகைப்பட்ட நூலோர்க்கும் துணிவாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி. பொச்சாப்பார்—மதப்பட்டால் அறிவில்லாதார் ஆவர் என்பர். பொச்சாப்பிற்கு இப்பொருள் சொல்லோதிகளிலும், இலக்கியத்திலும் கண்ணிற்படவில்லை. அன்றியும் பொச்சாப்பும் மதமும் உடல்கொள் உயிர்க்குணமாக வேறு வேறாதலைப் பெற்றுள்ளன ஆதலால் இது பொருளாகாது எனலாம்.

காளிங்கர், காலத்து அறுவகைச் சமயப்பாகுபாடும் அவற்றது இலக்கணமும் பரவியிருக்க வேண்டும் ஆதலால் எப்பால் நூலோர்க்கும் என்பதற்கு 'அறுவகைச் சமயத்தோர்க்கும்' என்கின்றார்.

இவர், குறட்கருத்தை வலியுறுத்த நேரிய தொடராக அமைந்துள்ள குறட்பாவின் பொருளை எதிர்மறைத் தொடராக்கி மாற்றி எழுதுகிறார். 'உலகத்து எப்பால் நூலோர்க்கும்' என்பதற்கு அமைந்த இவர் உரை 'தத்தம் கோட்பாட்டால் என்பது முதல் அப்பாலோர்க்கும்' என்பது வரை உள்ள உரைப்பகுதி. 'பொச்சாப்பார்க்குப் புகழ்மை இல்லை' என்பதனை உடன்பாட்டு வாக்கியமாக மாற்றி 'பிறரை அவமதி பண்ணி இகழாது ஆற்றல் உடையராதலே தத்தம் பெறுபயனுக்கு உறுதி நெறி என்பது கற்ற நூல்களிற் பெறுபயன்' என்பர். இங்ஙனம் பாவின் போக்கில் எதிர்மறை வாக்கியத்தை உடன்பாட்டு வாக்கியமாகவும், உடன்பாட்டு வாக்கியத்தை எதிர்மறையாகவும் மாற்றினர். அதனால் பொருட்டெளிவின்மை காணலாயிற்று. ஆயினும் பண்டையோர் கருத்தில் மாற்றமில்லை எனலாம். 'பிறரை இகழ்தலால், தான், புகழுடையனாக இயலாது' என்பது இவர் கருத்துப் போலும்.

---

3. அவை—அற முதலிய நான்கும்,
4. கீர்த்தி—புகழ்.

பரிமேலழகர், தரும் 'அரசர்க்கேயன்றி அறமுதலிய நான்கினும் முயல்வார் யாவர்க்கும்' என்னும் விளக்கம் 'எப்பால் நூலோர்க்கும்' என்பதற்கு எழுதப்பட்டது. இதுமணக்குடவர் முதலிய முந்தையோர் கருத்தின் சிறிது வேறுபட்டது எனலாம்.

இராமலிங்கனார், 'களிப்பிலாழ்ந்து கடமைகளை மறந்தவர்கள் யாரும் புகழுடையார்; இது உலகில் எந்நாட்டிலுள்ளவர்களும் கண்ட உண்மை' என்பர். இதில் 'எப்பால் நூலவர்-பால்-இடம்' எனக் கொண்டு 'எந்தநாட்டிலுள்ள நூலறிந்தவர்களுக்கும்' என உரை கண்டனர். இது புதுமை.

தேவநேயர், 'எப்பால் நூலார்—அறநூல் உடையார்க்கும் அன்றி உலகிலுள்ள எவ்வகை நூலார்க்கும்' என்பர். இது இராம லிங்கனார் கருத்துடன் ஒத்தது.

இவ்வுரைகளுட் பெரும்பாலன *மணக்குடவர் பரிமேலழகரோடு* ஒத்தனவே. *காளிங்கர்* உரை கருத்தின் ஒத்ததாயினும் உரையமைப் பில் மாற்றம் உள்ளது. *பரிதியார்* பொச்சாப்புக்குப் புதிய உரை காண் கிறார்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

பொச்சாப்பார்க்கில்லை புகழ்மை:

பொச்சாப் பிலாத புகழ்வேள்வித் தீப்போல
எச்சாரும் மின்னும் மழை — *கார்., 7*

54.4. அச்சம் உடையார்க் கரணில்லை ஆங்கில்லை பொச்சாப் புடையார்க்கு நன்கு. (நிஉ ச)

உரைப்பகுதி

அ) மணக்.: அச்சமுடையார்க்கு ஆவதொரு அரணில்லை; அது போலப் பொச்சாப்புடையார்க்கு வருவதொரு நன்மையில்லை எ—று

இது பொச்சாப்புடையார்க்குக் காவலில்லை என்றது.

ஆ) பரிதி.: பேடியான பேர்க்கு அரண் இல்லை; அதுபோலப் பொய்யாகிய மதம்'[1] பெற்றார்க்கு ஆக்கமில்லை எ—று

இ) பரிப்.: அச்சம் உடையார்க்கு அவ்வச்சம் தீர்க்கவல்லது ஓர்

1, பொய்யாகிய மதம்-உண்மை யல்லாத முனைப்பு

அரண் இல்லை: அது போலப் பொச்சாப்பு உடையார்க்கு வருவது ஒரு நன்மை இல்லையாம் எ—று.

அச்சம் புகுந்துழி எல்லாம் புகுதும்; ஆதலின் அதனைக் காப்பது ஓர் அரண் இல்லை என்றார்—மறந்தார் செய்வதோர் பொருளில்லை, ஆதலின் நன்மை இல்லை என்றார். இது பொச்சாப்பு உடையார்க்குக் காவல் இல்லை என்றது.

ஈ) *காளி.*: அச்சம் உடைய அரசர்க்குப் புறத்து எல்லாம் அரண் உடையரே ஆயினும், ஒன்றும் இல்லையானவாறு எவ்வண்ணம்; மற்று அவ்வண்ணமே இல்லை; யாது எனின் பிறரை எளியர் என்று அவமதி பண்ணி அவமதிப்பினை அகத்துடையார்க்கு நன்மைகள் ஒன்றும் இல்லை; தீமைகளே எ—று.

இ) *பரிமேல்.*: காடு மலை முதலிய[2] அரண்களுள்ளே நிற்பினும், மனத்தின்கண் அச்சம் உடையார்க்கு அவற்றால் பயனில்லை அது போலச் செல்வமெல்லாம் உடையராயினும், மனத்தின்கண் மறவியை உடையார்க்கு அவற்றால் பயனில்லை.

நன்மைக்கு ஏதுவாகலின் 'நன்கு'[3] என்றார். அச்சமுடையார் நின்ற அரண் அழியுமாறு போல மறவியுடையாருடைய செல்வங்களும் அழியும் என்பதாயிற்று.

உ) *கவிராசர்.*: காடும் மலையும் கோட்டையும் முதலாகிய அரணானவிடத்திலே இருந்தாலும், மனசிலே பயமுடையவர்களுக்கு அந்த அரண்களாலே பலனில்லை அப்படிப்போலே எல்லாச் செல்வமுமுடையவரானாலும் மனசிலே மறப்புடையவர்களுக்கு அந்தச்செல்வத்தாற் பயனில்லை எ—று.

ஏ) *பழைய* 2: காடு மலை கோட்டை முதலிய அரணிலே இருந்தாலும் அச்சமுடையவன் அந்த அரணை இழப்பான். அப்படிப்போல மறப்புடையவர் எல்லாச் செல்வமுமுடையவராகி இருந்தாலும் அச் செல்வத்தை இழப்பார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி. 'அச்சம் உடையான் பேடி' எனக்கருத்துப் பொருள்

2. 'முதலிய' என்றமையின் மதிலுங் கடலும் கொள்க
3. நன்கு—நன்மை. 'கு பண்புப் பெயர் விகுதி' நன்மைக்கு ஏதுவாகிய செல்வத்தை நன்கு என்றது காரிய ஆகு பெயராம்.

காண்பர். மேலும் 'பொச்சாப்பு-பொய்யாகிய மதம்' என்பர். இவர் கருத்துப்படி 'பொய்ச்சாப்பு' என்று சொல்லுருவங் கொண்டிருப்பதோ என்று எண்ணத் தோன்றுகிறது. இவ்வதிகார முழுதும் 'மதம்' என்ற பொருளே இவரால் ஆளப்படுகிறது. காளிங்கர் பொச்சாப்பிற்குத் தரும் விளக்கம் சிறந்தமை காண்க. குழந்தை 'அரண்-காவல்' என்றும், 'நன்கு-செல்வங்கள்' என்றும் உரைப்பர். 'நன்மைகளைத் தருதலாற் செல்வம் நன்கு' எனப்பட்டது எனவும் கூறுவர். இராமலிங்கனார் 'அரண்-பாதுகாப்பு, நன்கு-நல்வாழ்வு' என்பர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

அச்சம் உடையார்க்கு அரண் இல்லை:

நிச்ச யமெனுங் கவசந்தா னிலைநிற்ப தன்றி
அச்ச மென்னுமீ தாருயிர்க் கருந்துணை யாமோ
—கம்பராமா., 3113

அஞ்சினாம் பழியும் பூண்டா மம்புவியாண்டு மாவி
துஞ்சுமா றன்றி வாழ வொண்ணுமோ.....
—கம்பராமா., 9482

வன் சார் புடைய ரெனினும் வலிபெய்து
தஞ்சார் பிலாதாரைத் தேதூன்றலாகுமோ—மஞ்சுதூழ்
சோலை மலை நாட யார்க்கானும்
அஞ்சு வார்க்கில்லை யரண் —பழமொழி

54.5. முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை பின்னூ றிரங்கி விடும். (நிஉநி)

உரைப்பகுதி:

அ) மணக்.: ———

ஆ) பரிதி.: தனக்கொரு விதனம்[1] வருமுன்னே காவாதான், விதனம் வந்தால் ஒருவிதனம் நூறு விதனமாக இரங்கிவிடும் எ—று.

இ) பரிப்.: எதிரது ஆகவே பழிவரும் வழியைக் காவாதே[2] அதனை இகழ்ந்து தப்புச் செய்தவன், அத்தப்பினால் வரும் குற்றத்துக்கு இரங்கிவிடும் எ—று.

1. விதனம்—விசனம் என்பதன் போலி. துன்பம் என்னும்பொருளது.
2. காவாது—தன்னைக் காத்துக் கொள்ளாமல்

தன்பழி முன்னுறக் காவாதா னென்று கூட்டுக. மேற்கூறியவாறு செய்யாதார் முன்பே செய்யப் பெற்றிலேம் என்று இரங்குவர் என்றது.

ஈ) *காளி.*: யாம் பிறரை அவமதிப்பின், பின்பு எமக்கே பலரானும் கேடு வந்து எய்தும் என்று முன்கோலித்[3] தேர்ந்து பரிகரியாது[4] பிறரை அவமதி பண்ணினான் யாவன்: மற்று அவன் தன் பழி பின் எண்ணி றந்த பலவாவதும் செய்து மற்றும் துயர் ஆற்றாது பெரிதும் சோதித் துக் கெட்டுவிடும் எ—று.

பின்னூறு என்பது நூறு வகையால் இரக்கத்தைத் தரும் என்றது.

உ) *பரிமேல்.*: தன்னால் காக்கப்படும் துன்பங்களை அவை வரு வதற்கு முன்னே அறிந்து காவாது மறந்திருந்தான், பின் வந்து உற்ற காலத்துக்[5] காக்கலாகாமையின் அப்பிழைப்பினை நினைந்து இரங்கி விடும்.

காக்கப்படும் துன்பங்களாவன—சோர்வு பார்த்துப் பகைவர் செய்வன. ஊற்றின்கண் என்புழி உருபும் சாரியையும் உடன் தொக்கன. உற்றகாலத்துக் காக்கலாகாமையின் இரங்கிவிடும் என்றார். இவை மூன்று பாட்டானும் பொச்சாப்புடையார்க்கு வரும் ஏதம் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்.*: தன்னாலே காக்கப்படும் துன்பங்களை அவை வருவதற்கு முன்னே அறிந்து காவாமல் மறந்திருந்தவன், பின்பு அந்தத் துன்பங்கள் வந்தால், தன் மறப்பை நினைந்திரங்கிக் கெடுவன் எ—று.

ஏ) *பழைய 2.*; தன்னாற் காக்கப்படுந் துன்பங்களை வருவதற்கு முன்னே அறிந்து காவாது மறந்திருந்தான், பின் வந்துற்ற காலத்துக் காவாமல் நாம் மறந்திருந்தோம் என்று, தன் பிழையை நூறு விதமாக நினைந்து இரங்கிவிடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'முன்னுற' '(தனக்கொரு விதனம்) வருமுன்னே' *மணக்.*; 'எதிரது ஆகவே' *பரிப்.*; '(யாம் பிறரை அவமதிப்பின் பின்பு எமக்கே பலரானும் கேடு வந்தெய்தும் என்று) முன்கோலித் தெரிந்து

3. முன்கோலி —முன்னே எண்ணி
4. பரிகரியாது—நீக்காது.
5. ஊறு இரங்கிவிடும்—உற்றகாலத்து இரங்கிவிடும்- ஊறு—முதனிலை திரிந்த தொழிற் பெயர்; அது உற்ற காலத்திற்கானமையின் தொழிலின் பெயர் தொழில் நிகழும் காலத்திற்கு ஆனமையின் தொழிலாகுபெயர்.

காளிங் ; '(தன்னால் காக்கப்படுந்துன்பங்களை அவை) வருவதற்கு முன்பே அறிந்து காவாது' பரிமேலழகர்; கவிராசர்; பழைய; தேவ நேயர் முதலிய பின்னுரையாசிரியர்கள் அனைவரும். இதில் முன்னுற' என்பதில் அனைவரும் ஒரு கருத்தினராயினும் எதற்கு முன்னே என்பதை விளக்குகின்ற முறையில் பல்வேறு கருத்தினரா 'கின்றனர். அவற்றுள் காளிங்கர் உரை 'பொச்சாப்பு—இகழ்ச்சி எனக் கொண்டமையால் உருவானது. 'துன்பங்கள் வருமுன்னே' எனப்பொது வகையில் உருவானவை ஏனையோர் உரைகள். இவற் றுள் பொதுவகையிற் கொள்வதே சிறந்தது.

வரத. 'இன்பத்திலே திளைத்துப் பின்வரும் துன்பத்தை நினையாது' என்பர். மேலும் இன்பத்துன்பங்களைச் சமநோக்குடன் கண்டு என வும், மகிழ்ச்சியும் வருத்தமும் இல்லாது எனவும் நிகழ்கால எதிர் காலங்களை அறிந்து' என்றும் பல நோக்கில் உரை கூறுவர். துன்பம் வருமுன்னர்க் காவாது என்பதே நேரிய பொருளாகும்.

''இழுக்கியான்'' 'இகழ்ந்து தப்புச் செய்தவன்' பரிப்.. 'நீக்காமற் பிறரை அவமதி பண்ணினான்' காளி.; ''முன்னமே காவாது மறந்திருந்தான்'' பரிமேலழகர்; 'மறந்திருந்தான்' கவிராசர், பழைய 2, பின்னுரையாசிரியர்கள். இவற்றுள் பரிமேல கர் உரையே சிறந்தது.

'பின் ஊறு இரங்கிவிடும்' எனப் பிரித்து, மணக்., பரிப்., பரிமேல்., கவிராசர்., முதலியோர் 'பின் வரும் துன்பங்களுக்கு' என உரை காண்பர். பரிதி., காளிங்கர்., 'பின் நூறு' எனப்பிரித்துப் 'பின் வரும் பல துன்பங்களுக்கு' என்பர். பிற்காலஉரையாசிரியர்கள் அனைவரும் 'ஊறு—துன்பம்' என்றனர்.

'இரங்கிவிடும்' என்பதில் விடு, ஒழி விகுதிகள் பகுதிப்பொருள தாய் இரங்கும் என்றே பொருள் தருவன ஆதலைக் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முன்னுறக் காவாது இழுக்கியான்:

முன்னை உடையது காவா திகழ்ந்திருந்து
பின்னைய:. தாராய்ந்து கொள்குறுதல்—இன்னியற்
பைத்தகன்ற அல்குலாய் அ:.தாதல் அவ் வெண்ணெய் மேல்
வைத்து மயில் கொள்ளு மாறு —பழமொழி.நா., 325

54.6. இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை வாயின் அதுஒப்ப தில். (நூஉசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: யாவர் மாட்டும் எல்லா நாளும் தப்புச் செய்யாமை தப் பாமல் வாய்க்குமாயின், அதனை[1] யொக்க நன்மை பயப்பது பிறிதொன்று இல்லை எ—று.

இது முறைமை செய்யுங்கால் கடைப்பிடித்துச் செய்யவேண்டும் என்றது.

ஆ) பரிதி.: தான்பிடித்த நெறி குலையாமல் யார்க்கும் ஒருதன்மை யான குணம் பெற்றால் அதுபோல ஒரு குணமும் இல்லை எ—று.

இ) பரிப்.: யார் மாட்டும் எல்லா நாளும் தப்புச் செய்யாமை தப் பாமல் வாய்க்குமாயின் அதனை ஒக்கநன்மை பயப்பது பிறிது இல்லை எ—று.

இது முறை செய்யுங்கால் கடைப்பிடித்துச் செய்ய வேண்டும் என்றது.

ஈ) காளி.: உலகத்து மன்னரானவர் ஒருவர்மாட்டு ஒருவரை இகழாமையாகிய குணம் உளதாயினும் ஒருபடிப்படநிற்றல் யாவர்க் கும் அரிது; மற்றும் இங்ஙனம் வழுவாமை வாய்ப்பின் அதனை ஒப்பதோர் நன்மை உலகத்து யாதும் இல்லை எ—று.

இழுக்காமை என்பது வழுக்காமை; இகழாமை என்றபாப்.

உ) பரிமேல்.: அரசர்க்கு மறவாமைக்குணம் யாவர்மாட்டும் எக் காலத்தும் ஒழிவின்றி வாய்க்குமாயின் அதனை ஒக்கும் நன்மை பிறிது இல்லை.

வினைசெய்வார்[2] சுற்றத்தார் என்னும் தம்பாலார்கண்ணும் ஒப்ப வேண்டுதலின் 'யார்மாட்டும்' என்றும், தாம் பெருகியஞான்றும்[3] சுருங்கியஞான்றும் ஒப்பவேண்டுதலின் 'என்றும்' என்றும், எல்லாக் காரியங்களிலும் ஒப்பவேண்டுதலின் 'வழுக்காமை' என்றும் கூறினார்.

---

1. அதனை—மறவாமைக்குணத்தை.
2. ''பகைவரிடத்து மாத்திரமன்றி வினைசெய்வார்'' என்றும் பாடம்.
3. பெருகிய ஞான்றும்-செல்வம் செல்வாக்கு முதலியவற்றால் வளர்ந்தோங்கியகாலத்தும்

'வாயின்' என்பது முதனிலைத் தொழிற்பெயரடியாக வந்த வினையெச்சம்.[4] வாய்த்தல் நேர்படுதல்.

காரி.: 'இழுக்காமை .....இல்'' வாய்க்குமாயின் எனப்பொருள் பட்ட 'வாயின்' என்பது முதனிலைத் தொழிற்பெயரின் அடியாக வந்த வினையெச்சம். முதனிலைத் தொழிற் சொல்லாய் வந்த வினையெச்சமாகில் வாய்க்கின் என்று இருக்கும் ''பூண்பதென்றே கொண்ட''[5] என்னும் கோவையாருள் 'எழில்வாய்' என்பதும் அது.

ஊ) *கவிராசர்*: ஒருவனுக்கு மறவாமைக்குணம் எல்லாரிடத்திலேயும் எப்பொழுதும் குற்றங்களைச் செய்யாமல் நன்மையும் நல்ல வசனத்தையும் செய்யுமாயின், அவனுக்கு அதிலும் நன்மை வேறில்லை எ—று.

ஏ) *பழயை 2*: அரசர்க்கு மறவாமைக் குணம் யாவரிடத்தும் எக்காலத்தும் ஒழிவின்றி வாய்க்குமாயின், அதனை யொக்கும் நன்மை பிறிதில்லை.

ஐ) *தொகுப்பும் குறிப்பும்*:

'யார் மாட்டும் என்றும், வழுக்காமை இழுக்காமை வாயின் அஃது ஒப்பது இல்'' என்று கூட்டிப் பொருள் காண்பர் *மணக்*.

'இழுக்காமை யார் மாட்டும், வழுக்காமை வாயின் அது ஒப்பதில் எனக் கூட்டிப் பொருள் காண்பர் *பரிதி*. இதில்'என்றும்' என்பது விடுபட்டது என்பர் *பரிதி*.

காளிங்கர் 'வழுவாமை' என்ற பாடங்கொண்டவர் என்பதை அவருரை காட்டும். அன்றியும் 'இழுக்காமை வழுக்காமை ஒருபொருளன' என்பர். இகழாமை எனவும் உரைப்பர். 'வழுக்காமை ஒருபடிப்பட நிற்றல்' எனவும் கூறுவர். இங்ஙனம் இவர் உரை பலதிறப் பொருளையுடையது. இங்ஙனம் கூறி அவர் கொணர முயற்சிக்கும் கருத்து 'மன்னர் ஒருவரைப் பற்றி ஒருவரிடம் இகழாமலிருந்தாலும், அடிக்கடி மாறுவர்; ஒருதன்மையராய் நில்லார். அக்குணமும் வாய்த்

4. வாய்த்தால் என்னும் பொருளதாய், வாய் என்னும் வினைப் பகுதியடியாகப் பிறந்த செயின் என்னும் வாய்பாட்டு வினைஎச்சம் வாயின் என்பது. இதனை 'வாய்த்தல்' என்னும் தொழில் பெயர் விகுதிகெட்டு, முதனிலை மட்டுமாய்ப்பெயர்ச்சொல்லடியாகப் பிறந்த வினை எச்சம் என்பாரும் உளர். தொழிலையுணர்த்தும் பெயர் முதனிலை மாத்திரமாய் நிற்பின் அது வினைப் பகுதியும் ஆமே. ஆதலான் அதனோடு இதனை டையேவேற்றுமை என்ன? என்று ஐயப்படநேரும். ஆகவே இக்குறிப்பு உரையாசிரியரதாதற்கு இடமின்று எனலாம்.
5. திருக்கோவை 323.

தால் அதுவே ன்ற நற்குணம் இல்லை' என்பதாம். இழுக்காமைக்கு இகழாமை என்ற பொருள் ஏற்புடையதேல் இவ்வுரையையும் ஏற்கலாம். இங்ஙனம் வலிந்து கொள்ளுங் கருத்தினும் மணக்குடவர் போன்றார் கருத்துச் சிறந்தது.

54.7. அரியஎன் றாகாத இல்லைபொச் சாவாக் கருவியான் போற்றிச் செயின். (நிகூஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: செயற்கு அரியன என்று செய்யலாகாதன இல்லை; மறவாமையாகிய கருவியாலே பாதுகாத்துச் செய்வானாயின் எ—று.

இது வினைசெய்யுங்கால் மறவாமை வேண்டும் என்றது.

ஆ) பரிதி : தான் நினைத்த காரியம் முடிகிறது அருமையில்லை; தன்மனத்தில் மதப்பாடாகிய[1] அறிவின்மை யில்லையாகில் எ—று.

இ) பரிப்.: செய்தற்கு அரிய என்று செய்தல் ஆகாதன இல்லை: மறவாமையாகிய கருவியாலே பாதுகாத்துச் செய்வனாயின் எ—று.

இது வினை செய்யுங்கால் மறவாமை வேண்டும் என்றது.

ஈ) காளி.: இவை இவை செய்தற்கு அரியன என்று தம்மால் செயற்படாது இருப்பன யாவும் இல்லை; எப்பொழுது எனின் உலகத்து நல்லோரையும் நல்லனவற்றையும் இகழ்ந்து அவமதி பண்ணாமையாகின்ற இந்தச் சாதனமாகிய உபாயத்தினைக் குறிக்கொண்டு செய்யுங்காலத்து எ—று.

இனி மற்று இவ்வாறு அவரவர் குணத்தன்மைக்குத் தக்காங்கு அளிக்க வல்ல அரசர்க்கல்லது செங்கோலாகிய நீதி நடாத்தும் நெறியிலக்கணம் நிகழாமையால் மற்று இதன்பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

உ) பரிமேல்.: இவை செய்தற்கு அரியன என்று சொல்லப்பட்டு ஒருவற்கு முடியாத காரியங்களில்லை மறவாத மனத்தானே எண்ணிச் செய்யப்பெறின்.

---

1. மதப்பாடு—மதத்தான் விளைவதாகிய செருக்கு.

பொச்சாவாத என்பதன் இறுதிநிலை விகாரத்தால்தொக்கது,[2] அந்தக்கரணமாகலின் கருவி என்றார். இடைவிடாத நினைவும் தப்பாத சூழ்ச்சியும் உடையார்க்கு எல்லாம்எளிதின் முடியும் என்பதாம். இவை இரண்டுபாட்டானும் பொச்சாவாமையது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்:** இந்தக் காரியஞ் செய்கிறது அருமை; இது முடிக்கப் போகாது என்பதில்லை, மறவாத மனசினாலே எண்ணிச் செய்தால் எ —று.

ஏ) **பழைய 2.;** செய்தற்கரியன வென்று சொல்லப்பட்டு ஒருவற்கு முடியாத காரியங்களில்லை, மறவாக் கருவியாகிய மனத்தானே யெண்ணிச் செய்யப்பெறின்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதியும் காளிங்கரும் மதப்பாடாகிய அறிவின்மை, உலகத்து நல் லோரையும் நல்லவற்றையும் இகழ்ந்து அவமதி பண்ணாமையாகிற சாதனம்' என மறவாமை என்ற பொருளைவிட்டு அதன் உண்மைக் கருத்தை உணர்த்துதல் காண்க.

---

2. ''பொச்சாவாக் கருவியான'' என்பதைப் 'பொச்சாவாத அந்தக்கரணங்களுள் ஒன்றாகிய மனம்'என விரித்துப் பொருரெச்சத் தொடராகக் கொண்டு 'பொச்சா வாத' என்னும் பெயரெச்சத் நிறு விகாரத்தால் தொக்கது என்றார் பரிமேலழகர். பொச்சாவாமையாகிய கருவி, எனப் பொருள்கண்டு இருபெயரொட்டுப் பண்புத் தொகையாக்கினர் மணக்குடவர். 'நிலனும் பொழுதும்'' என்னும் தொல்—சொல்-உஎச-ஆம் நூற்பாவுரையில் சேனாவரையர்''நின்முகங்காணும் மருந்தினேன்''(கலித் தொகை)என்புழிக் காட்சியை மருந்தென்றானாதலின் காணுமருந்தானேன் என்பது வினைப்பெயர் கொண்டதாம். ''பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின்'' என் புழிப் பொச்சாவாக் கருவி என்பதும் அது என்பர் இதிற் காணுமருந்தினேன் என்பது வினைப்பெயர் கொண்டதாகலாம். பொச்சாவாக் கருவி எங்ஙனமும் வினைப் பெயராகாமை தெளிக. சேனாவரையரும் 'காணுமருந்தினேன்' வினைப் பெயர் கொண்டது என்னாது காணு மருந்து என்பது வினைப்பெயர் கொண்டதாம் என்பது பதிப்புத் தவறேயாம் என்க; இத்தொடரில் வினைப் பெயரின்மையான்.

நச்சினார்க்கினியர் ,பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின், என்பது, கருவிக்கண்அடங்கும் என்பர்.

இவற்றால் இருவரும் மாறுபடுகின்றனராலெனின், அன்று: சேனாவரையரும் பொருளாதி ஆறு பொருட்டும் செய்யும் என்னும் பெயரெச்சம் உரித்தாதலை யுணர்த்தி அவற்றுள் 'காணுமருந்து' என்பது அறுவகைப் பெயருள் ஒன்றாகிய கருவியை உணர்த்தும் என்பார். அங்ஙனம் கூறாது பெயர்கொண்டது என்றார். நச்சி னார்க்கினியரீ கருவியின் (அதாவது) கருவிப் பெயரின் அடங்கும் என்றார்.

ஆனால் சேனாவரைய— நச்சினார்க்கினியங்களின் பதிப்பாசிரியர்கள் 'வினை பெயர்'கொண்டது, என அச்சிட்டமையால்' காணுமருந்து' என்பதில்' எதுவினைப் பெயர் என்ற ஐயத்தை விளைவித்து மயக்கந் தருவதாகிறது. ஆதலால்' வினை பெயர் கொண்டது எனத் திருத்தி வாசிப்பது நலம். வினை—வினையடியாகப் பிறந்த பெயரெச்சம். பெயர் கொண்டது—பொருளாதி ஆறுவகையான பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிந்தது என்க.

மணக்குடவர் 'பொச்சாவாக் கருவி' என்பதற்கு 'மறவாமையாகிய கருவி' என்றனர். பரிமேலழகர் 'மறவாத மனம்' என்றனர். இதனால் பொச்சாத்தல் மனத்தின் பண்பாதல் தெளியப்பெறும். ஆனால் மறத்தல் உயிரின் குணமா? மனத்தின் குணமா? என்ற ஐயம் உண்டாம். உயிரை உள்ளம் எனவும் உள்ளத்தையுயிரெனவும் கூறும் மரபு ஒற்றுமை நயத்தான் வந்தமையை ''உணர்த்தினாலன்றி உணரா உளங்கள்'' முதலான (சிவ.போ.) ஆட்சிகளான் அறியலாம். எங்ஙனமாயினும் பொச்சாப்பு மறதியின் வேறானது என்பதற்கு ஐயமின்று.

இராமலிங்கர் பொச்சாவாமையைக் கருவியாகச் சொன்னதற்குக்'' ''கருவியான் காலமறிந்து செயின்'' என்பதைப் போல மறவாமையே கருவியாயிற்று என்பர். முடிவு நன்று. எடுத்துக் காட்டிய மேற்கோள் பிழைபட்டது. உரையாசிரியர்கள் அனைவரும் ''காரியங்களை முடித்தற்குரிய உபாயம் அல்லது கருவிகளுடன் செய்தற்கேற்ற காலமும் அறிந்து செய்வாராயின்'' எனக் கருவியை வேறொரு சாதனமாகவே கருதுகின்றனர். ஈண்டு அங்ஙனமின்மை காண்க.

தேவநேயர், பரிமேலழகர் உரையைத் தழுவியே எழுதி, ''பொச்சாவாக் கருவி'' அவர் கூறியபடி பொச்சாவாத கருவி என ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் அன்று; பொச்சாவாமையாகிய கருவி என இருபெயரொட்டாகக் கொள்வதே இயற்கையான இலக்கணம்' என்பர். பொச்சாவாமை—பொச்சாவா என்றாயது ஈறுகெட்ட எதிர்மறைத் தொழிற்பெயர் என்பர். பொச்சாவாமை குணப் பண்பா? தொழிற்பண்பா? எனக்கண்டு, தொழிற் பண்பு என்ற முடிவு கண்டபின் ஈறுகெட்ட எதிர்மறைத் தொழிற்பெயராதலைத் துணியவேண்டும். 'மறவாமையாகிய மனம்' என்றே மணக்குடவரும் கருதுதல் காண்க.

ஒ) மேற்கோள்பகுதி:

நச்சி : கருவிப்பொருள் கொண்டு முடிந்த பெயரெச்சத்திற்கு மேற்கோள். (தொல். சொல். 136.)

சிவஞான.: பரிமேலழகியார் 'கனங்குழை' என்றதனை ஆகுபெயர் என்றாரால் எனின் அவர் 'பொச்சாவாக் கருவியால் போற்றிச் செயின்' என்பதற்குப் பொச்சாவாமனம் என அந்தக்கரணத்தைக் கருவியாகக் கூறினார். அதனை மறுத்துப் பொச்சாவாமையாகிய கருவி எனத் தாமும் பெயரெச்சச் சூத்திரத்துள் உரைத்தாராகலின் அவர் கூறியன எல்லாம் உடன்பாடு என்பது தமக்கும் கருத்தன்று என்க.

(இலக். சூறா. பக் 81)

54.8. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யா(து) இகழ்ந்தார்க் கெழுமையும் இல். (நிகஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: உயர்ந்தாரால் புகழப்பட்டவையிற்றைக் கடைப் பிடித்துச் செய்தல்வேண்டும்; இவையிற்றைச் செய்யாது இகழ்ந்த வர்க்கு எழுபிறப்பிலும் நன்மையில்லையாமாதலான் எ—று.

இஃது அறத்தின்கண் இகழாமற் செய்வது கூறிற்று.

ஆ) பரிதி.: உலகம் புகழ்ந்த காரியம் தனக்கு வந்தால் அந்தக் காரியத்தைப் போற்றிச் செய்வான்: செய்யானாகில் எழுசெனனத் தாலும் கீர்த்தி இல்லை எ—று.

இ) பரிப்.: உயர்ந்தோரால் புகழப்பட்டவையிற்றைக் கடைப் பிடித்துச் செய்தல் வேண்டும்: அவற்றைச் செய்யாது இகழ்ந்தவர் களுக்கு ஏழு பிறப்பினும் நன்மை இல்லையாம் ஆதலான் எ—று.

இஃது அறத்தின்கண் இகழாமை கூறிற்று.

ஈ) காளி.: தொல்கலையும்[1] தொல் சான்றோரும்[2] இவை இவை நல்ல என்று புகழ்ந்தவற்றை நீரும் குறிக்கொண்டு செய்தலை விரும்புமின்; என்னை எனின் இங்ஙனம் செய்யாது அவற்றை இகழ்ந்தவர்க்கு இம்மை ஆக்கமும் அன்றி மறுமை ஆக்கமும் இல்லை எ—று.

உ) பரிமேல்.: நீதி நூலுடையார் இவை அரசர்க்கு உரியன என்று உயர்த்துக்கூறிய செயல்களைக் கடைப்பிடித்துச்[3] செய்க, அங்ஙனம் செய்யாது[4] மறந்தவர்க்கு எழுமையினும் நன்மை இல்லையாகலான்.

அச்செயல்களாவன மூவகை ஆற்றலும்[5], நால்வகை உபாயமும்[6],

1. தொல்கலை —பழமையான நூல்கள். கலை என்ற காரியத்தின் பெயர் அதனை யுணர்த்தும் கருவியாகிய நூலுக்கு ஆயிற்று. காரிய ஆகுபெயர்.
2. தொல்சான்றோர் —பழங்காலச் சான்றோர்கள்.
3. கடைப்பிடித்து — உறுதியாகக் கொண்டு.
4. அங்ஙனம் செய்யாது—கடைப்பிடியாது
5. மூவகையாற்றல் — அறிவு, ஆண்மை, பொருள்படையிவற்றானாம் பெருமை என்பன.
6. நால்வகை உபாயம் — கொடுத்தலும் சொற்சொல்லுதலும் வேறுபடுத்தலும் ஒறுத்தலும் ஆம்.

ஐவகைத் தொழிலும்[7] அறுவகைக்குணமும்[8] முதலாய செயல்கள்[9], சாதி தருமமாகிய இவற்றின்[10] வழீஇயோர்க்கு உள்ளது[11] நிரயத் துன்பமேயாகலின்[12], எழுமையும் 'இல்' என்றார். எழுமை ஆகு பெயர்.[13] இதனால் பொச்சாவாது செய்யவேண்டுவன கூறப்பட்டன.

ஊ) கவிராசர்: நீதி நூலுடையார் இவை அரசர்க்கு உரியன வென்று சொல்லுஞ் செயல்களைச் செய்யவேண்டும்; அப்படிச் செய்யாமல் மறந்துவிட்டவர்களுக்கு ஏழேழு பிறப்புக்களிலேயும் நன்மை இல்லை எ—று.

ஏ) பழைய 2.: நீதி நூலுடையார் இவை யரசர்க்குரியன வென்று உயர்த்திச் சொல்லிய செயல்களை மறவாமற் கடைப்பிடித்துச் செய்ய வேண்டும். செய்யாது மறந்தவர்க்கு ஏழு பிறப்பும் நன்மையில்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பொச்சாந்தார்க்கு என்பதனைச் செய்யாது இகழ்ந்தார் என்று வள்ளுவரே தெரிவித்தலால் மறதியன்மையை உன்னுக. மணக்குடவரும் பரிமேலழகரும் ''புகழ்ந்தவை'' என ஆசிரியர் பொதுமையிற் கூறுதலின் 'அறத்தின்கண்' என்றுரை கண்டனர். எல்லாரானும் புகழப்படுவது அறமேயாகலான் என்க. பரிமேலழகர் இகழ்ந்தார்க்கு என்பதற்கு வழக்கமாறாமல் மறந்தார்க்கு என உரைத்தனர்.

காளிங்கர், நூலகளேயன்றித் தொல்லோர்வாயுரைகளும் நல்ல என்று புகழ்ந்தவைகளை என்பது மிகச் சிறந்த உரை. 'எழுமையும் இல்' என்பதற்கு இம்மையிலாக்கமும், மறுமையில் ஏழுபிறப்பின் கண்ணும் எனக் கருதினராதல் வேண்டும். எழுமை—மறுமை என்ற குறிப்பால். இகழ்ந்தார்—அவமதி செய்தார் என்றமையின் இவர் கருத்தும் புறக்கணித்தற்பொருளது என்பதைக் குறிக்கிறது.

---

7. ஐவகைத்தொழில் —எளிய முயற்சியுடையது, செய்தாற் பயனுள்ளது, பெரும் பயன் தருவது, ஐயமில்லாதது, பின்பு இன்பம் அளிப்பது ஆகிய ஐந்துமாம். 'ஐவகைப் பட்ட அரசர் பக்கம்' என்று தொல்காப்பியத்தைச் சான்றுகாட்டுவார்கள். ஓதல், வேட்டல், ஈதல். காத்தல், தண்டம் செய்தல் என்ற ஐந்து தொழில் என்பாரும் உளர்.
8. அறுவகைக்குணம் — நட்பாக்கல், பகையாக்கல், பகைமேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டல்,
9. முதலாய என்றதனால் — அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையையும் கொள்க.
10. சாதிதருமமாகிய — குடிகளுக்குள்ள இயல்பு.
11. இவற்றின் — மூவகையாற்றல் முதலியவற்றில்.
12. நிரயத்துன்பம் — நரகத்துன்பம்.
13. எழுமை — எழுவகைப் பிறப்பு- ஏழு என்னும் எண்ணுப்பொருளை உணர்த்தும் எழுமை என்பது எழுவகைப் பிறப்பை உணர்த்துதலால் எண்ணல்லவை ஆகு பெயராம்.

வரத.: எழுமையும் இல்—பின்னால் முன்னேற்றம் பெறவே இயலாது என்பர். எழுமை என்பதற்குப் பின்னர் என எங்ஙனம் கண்டனர் என்பது அறியக் கூடவில்லை. பரிமேலழகர் பொச்சாவாமையை அரசர் மேலதாகக் கருதினும், இக்குணம் அரசர்க்குச் சிறப்பாகவும், ஏனையோர்க்குப் பொதுவாகவும் கூறியதாம் என்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

உற்றிடும் ஆற்றல் முன்றும் உபாயங்கள் நான்கும் நன்மை
பற்றிய தொழில்கள் ஐந்தும் பண்புறு குணங்கள் ஆறும்
மற்றைய அனைத்தும் கேடாம் வளர்பிறப்பு ஏழன் காறும்
பற்றிடு நன்மை யின்றாம் பாழ்த்தபொச்சாப்புச் சாரின்

விநா.அரசி.,86

54.9. இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம் மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. (நிகூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: அரசர் குறித்துணரும் உணர்ச்சியின்மையாலே முன்பு கெட்ட அரசரை நினைக்க, தாமும் தம்முடைய மகிழ்ச்சியாலே வலியராயிருக்கும் பொழுது எ—று.

இஃது உண்பவை, உடுப்பவை, பூசுபவை சோதித்துக்[1] கொள்க என்றது.

ஆ) பரிதி.: கர்வத்தின் மிகுதியினாலே முன்னாளில் கெட்டாரை எண்ணுக; தாமுஞ் செல்வம் பெற்றோம் என்னும் கர்வத்தினால் ஏதம்[2] பெறும் போழ்து எ—று

இ) பரிப்.: குறித்து உணரும் உணர்ச்சி இன்மையானே முன்பு கெட்ட அரசரை நினைக்க: தாமும் தம்முடைய மகிழச்சியாலே; வலிதாயிருக்கும் பொழுது எ—று.

1. சோதித்து—ஆய்ந்து
2. ஏதம்—துன்பம்

இதனால் சொல்லியது வலியாரைப் பகைவர் வெல்லுங்கால் அவரைச் சோர்வு பார்த்துக் களவினால் கொல்வார்; ஆதலால் தன் வலியை நினையாது பகைஉண்டாகும் என்று நினைத்துக் கோயிலும்[3] அந்தப்புரமும்[4] நீர் விளையாட்டு ஆடும் இடமும் இளமரக்காவும் வேட்டையாடும் காடும் உண்பனவும் பூசுமவையும் இகழாது சோதித்துக்கொள்க.

ஈ) காளி.; இவ்வுலகத்து வேந்தருள் முற்காலத்துத் தாம் பிறரை இகழ்ந்து வலிசெய்யும் பொழுது..... எ—று.

இதற்குப் பாரதத்தில் நூற்றுவரையும், இராமாயணத்து இராவணனையும் பிறரையும் எண்ணிக் கொள்க. மைந்துறூஉம் போழ்து—வலியினைச் செய்யும் போது என்றது.

உ) பரிமேல்.: அரசர் தம்மகிழ்ச்சிக்கண் தாம் வலியுறும்பொழுது, முற்காலத்து அதனினாய சோர்வால் கெட்டவர்களை[5] நினைக்க.

காரணங்களோடு[6] அவர்க்கு உளதாய உரிமையை மகிழ்ச்சிமேல் ஏற்றித் தம் மகிழ்ச்சியின் என்றும்[7], இகழ்ச்சியும் கேடும் உடன் தோன்றுமாகலின், 'மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து' என்றும் கூறினார். கெட்டாரை உள்ளவே, நாமும் அவ்வாறே கெடுதும் என்று அதன்கண் மைந்துறார் என்பது கருத்து. 'எண்ணுக' என்று பாடம் ஓதுவாரும் உளர்[8].

ஊ) கவிராசர்: அரசர், தங்கள் மகிழ்ச்சியினாலே மயக்கமுறுகிற போழ்து, முன்பு அந்த மகிழ்ச்சியினாலே கெட்டவர்களை நினைக்க எ—று.

ஏ) பழைய 2: அரசர் அகமகிழ்ச்சியில் தாம் வலியுறும் போழ்து முற்காலத்துச் செய்யுங் காரியஞ் செய்யாத மறந்து கெட்ட அரசர்களை நினைக்க.

---

3. கோயில்—அரண்மனை
4. அந்தப்புரம்—மகளிர் வாழிடமாகிய உள்ளிடம்
5. கெட்டவர்களைக் காளிங்கர் உரையானுணர்க.
6. காரணங்களாவன பொருள், படை, துணை, அரண், வலி முதலியன.
7. மகிழ்ச்சிக்குக் காரணமாயுள்ளவற்றுடன் அரசர்க்கு உளதாய உரிமையை மகிழ்ச்சியின் மேல் ஏற்றிக் கூறியது காரணத்தினுரிமையைக் காரியத்தின்மேல் ஏற்றிக் கூறிய உபசார வழக்கு. முற்கூறிய பொருள் முதலாயின காரணம். மகிழ்ச்சி — அதன் காரியம்.
8. 'எண்ணுக' என்பது காளிங்கர் கொண்ட பாடம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''மகிழ்ச்சியின் மைந்து உறும்போது''

''தம்முடைய மகிழ்ச்சியாலே வலியராக இருக்கும்போது'' மணக்; மைந்து—வலி; ''மைந்து பொருளாக வந்த வேந்தனை'' எனத் தொல்காப்பியம் 'வலி' யென்றது கருதி இவருங் கூறினார், இவரை ஒட்டிப் பரிதி., பரிப்., பரிமேல்., பிற்கால உரையாசிரியர் களிற் சிலர் கூறுவர்.

காளிங்கர் 'மைந்துறூஉம் போழ்து—வலியினைச் செய்யும் போது' என்பர். இதன் கருத்து 'மனவருத்தத்தை உண்டாக்கும் போது' என்பது போலும். இவர் எழுதும் பின் விளக்கம் இங்ஙனம் கருதச் செய்கிறது.

பரிதி., 'ஏதம் பெறும்போது' என்பதால் 'கர்வத்தால் துன்பப் படும் போது' என்பது, இவர் கருத்தாகிறது.

பரிப்., 'சோர்வு பார்த்தே பகைவர் கொல்வர் ஆதலான் எல்லாவகை யினும் சோதித்துக் கொள்க' என்பர். இது அரசர்க்கேயுரியதான சோதனைகளை வலியுறுத்துகிறது..

தேவநேயர், 'மைந்துறுதல்—மயங்கல்' எனப்பொருள் கண்டு, அங்ஙனம் மயங்குங்கால்,முன்பு மயங்கிக் கெட்டாரை எண்ணின் தான் திருந்தநேரும். திருந்துதலாவது மறவாது கடமையைச் செய்தல்' என்பர். இவர் உரையும், *இராமலிங்கர்* குழந்தை உரைகளும் இக்குறட்பாவை மக்கட்பொதுமைக்கு உரைக்கின்றன. மணக்., பரிப்பெருமாள் உரைகள் அரசர்க்குரிய நீதியாக்கின.

'இகழ்ச்சி—மறதி, குறித்துணரும் உணர்ச்சியின்மை, கர்வத்தின் மிகுதி, சோர்வு' என்றெல்லாம் பொருள் காண்பர். இத்தனையும் சொற்பொருளாகாமையும், மறதியின் விளைவும் அதன்வழிவழிப் பயன்களும் ஆவதையும் கருதுக.

இவற்றுள், 'இகழ்ச்சியிற்கெட்டாரை எண்ணுக' *காளிங்கர்* பாடம் சிறந்தது. மகிழ்ச்சியாகிய உவகையுண்டாவதற்கு நிலைக்களன் நான்குள. அவற்றால் விளைவனயாவும் உவகையே. செல்வத்தான் மட்டும் விளைவதன்று என்பது முன்னரே சுட்டப் பெற்றது.

மகிழ்ச்சியின் மைந்துறும்போது இகழ்ச்சியிற் கெட்டாரை எண்ணத்தோன்றுமா? *இராவணன்* எண்ணினானா? துரியோதனன்

எண்ணினானா? என்பதைச் சிந்தித்த பரிதியார் 'கர்வத்தால் ஏதம் பெறும்போது கெட்டாரை எண்ணுக' என்றார். துன்பந்தலைக் காட்டத் தொடங்கியபோது கெட்டாரை எண்ணத் தோன்றுவதும், தேறுதல் பெறுவதும், திருந்துவதும் இயல்பாதலால் கூறியதாம். ஆதலால் இவர் காட்டும் காரணம் ஏற்புடையதாம்.

இங்ஙனம் மகிழ்ச்சியின் மைந்துறும்போது, இமயமலையரசன் பார்வதியைத் தாரைவார்த்துக்கொடுக்கும்போது தக்கனை மனத்தில் எண்ணிக்கொண்டே கொடுத்தான் என்பதை 'வாச நல்துதகம் உய்த்தரன் மருகன் என்றவனை உன்னி'' என்ற கந்தபுராணப்பகுதியும் காட்டும்.

ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

செம்மாந்து செல்லும் செறுநரை யட்டவர்
தம்மேல் புகழ்பிறர் பாராட்டத் — தம்மேல்தாம்
வீரஞ்சொல் லாமையே வீழ்க களிப்பினும்
சோரப் பொதியாத வாறு —பழ . நா., 131

இகழ்ச்சியின் விட்ட இறைவன் போல
மகிழ்ச்சி யெய்தி மணிமுடி வேந்தன் —பெருங்., 1.44:65-66
மகிழ்ச்சி எய்தி மாற்றோர் இல்லெனும்
இகழ்ச்சி ஏதம் தலைத்தது எனக்கு
—பெருங்.,3:24: 164—165

இகழ்ச்சி யிற்கெடு வார்களை எண்ணுக
மகிழ்ச்சி யின்மன மைந்துறும்போ தெனப்
புகழ்ச்சி நூலுட் புகன்றனர் பூவினுள்
திகழ்ச்சி சென்றசெம் பொன்முடி மன்னனே
—சூளா . , 628

அரசியற் பாரம் பூரித் தயர்ந்தனை யிகழா தையன்
மரைமலர்ப் பாதம் நீங்கா வாழுதி —கம்பராமா., 4182

மூவரை வென்று மூன்றுலகு முற்றுறக்
காவலின் நின்றுதம் களிப்புக் கைம்மிக
வீவது முடிவென வீந்த தல்லது
தேவரை வென்றவர் யாவர் தீமையோர் —கம்பராமா.,6267

நெகிழ்ச்சியொன் றின்றிச் செய்ய நினைந்தகா ரியத்தில் சென்று
புகழ்ச்சிசெய் முயற்சி செய்யின் பொருள்பய வாமை யில்லை

இகழ்ச்சியிற் கெட்டார் தம்மை எண்ணுதல் செய்வை யாயின்
மகிழ்ச்சியின் மைந்து றாத வண்மைவந் தடுக்கு மைத்தா
—விநா. அரசி,. 87

ஓ) மேற்கோள்பகுதி:

நச்சி.: ஐந்தாம் வேற்றுமைப் பொருள்பற்றிவரும் வாய்பாடுகள் உணர்த்தும் சூத்திரத்தில் அன்னபிறவும் என்றதனால் இகழ்ச்சியாற் கெட்டான், மகிழ்ச்சியின் மைந்துற்றான் என்பனபோல்வனவும் கொள்கஎன்பர். (தொல். சொல்.79.)

54.10. உள்ளிய தெய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளிய துள்ளப் பெறின். (நிசை)

உரைப்பகுதி:

அ) மணக்.: தான் நினைந்த பொருளைப் பெறுதல் எளிது; பின்பும் அதனை மறவாதே நினைக்கக்கூடுமாயின் எ—று.

இனிப் பொருளின்கண் மறவாமை கூறுவார் முற்பட நினைத்த தனை மறவாமை வேண்டும் என்றார்.

ஆ) பரிதி.: தான் நினைத்த காரியங் கூடல் எளிது; தான் நினைத்த காரியத்தைப் பலகாலும் நினைத்துச் செய்வானாயின் எ—று.

இ) பரிப்.: தான் நினைத்த பொருளைப் பெறுதல் எளிது, பின்பும் அதனை மறவாதே நினைக்கக் கூடுமாயின் எ—று.

இனிப் பொருளின்கண் மறவாமை கூறுவார் முற்பட நினைத்த தனை மறவாமை வேண்டும் என்றார்.

ஈ) காளி.: அரசன் தான் கருதிய நன்மையைக் கருதியாங்குப் பெறுதல் மிகவும் எளிது; எப்பொழுது எனின் இவ்வுலகத்து ஒருவரும் தன்னை அவமதி பண்ணாது மதித்தல் வேண்டித் தான் கருதியிருப்பது பிறர்க்கும் இவ்வாறே கருதப்பெறின் எ—று.

உலகத்தார் செய்யும் வினையின் விளைவு வித்தியது விளை தலோடு ஒக்கும் ஆதலால் பிறர்மாட்டு இகழ்ச்சியின்றி நன்மை கருது வார்க்கும் வந்து விளைவது நன்மை எ—று.

உ) *பரிமேல்.*: அரசனுக்குத் தான் எய்த நினைத்த பொருளை அந் நினைத்த பெற்றியே எய்துதல் எளிதாம். பின்னும் அதனையே நினைக்கக் கூடுமாயின்.

அது கூடாது என்பது ஒழிந்து நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது[1]. அதனையே நினைத்தலாவது மறவியின்றி அதன்கண்ணே முயறல். இவை இரண்டு பாட்டானும் பொச்சாவாமைக்கு உபாயம் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*; அரசர்க்குத் தாங்கள் பெற நினைத்த பொருளை நினைத்தபடியே பெறுகிற தெளிதாம், நினைத்த பொருளை மறவாமல் பின்னையும் நினைக்கக் கூடுமாயின் எ--று.

ஏ) *பழைய* 2.: அரசன் தான் நினைத்த பொருள் கிடைத்தல் எளிதாம், பின்னும் அதனை மறவாமல் நினைக்கக் கூடுமாயினென்ற வாறு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் முதலிய பழைய உரையாசிரியர்கள் அனைவரும், 'தான் நினைத்ததை மறவாமல் நினைக்கப் பெற்றால் நினைத்ததை நினைத்தபடி எய்தலாம்' என்பார்கள். இதுவே நேரிய உரை.

காளிங்கர் 'நினைத்த நன்மையை நினைத்தவண்ணம் எய்தலாம்; தனக்கு நன்மையை நினைப்பது போலவே பிறர்க்கும் விளைய வேண்டும்' என்று கருதுவானாயின் என்று கருதுகிறார். இக்கருத்தை வாங்கி எழுதிய சிலர், 'தான் எண்ணியதையே பிறரும் எண்ணுவாராயின் அவ்வினை இனிது முடியும் என்பர். *காளிங்கர்* 'தன்னைப் பிறர் அவமதி பண்ணாமல் மதிக்கவேண்டித் தான் கருதியிருப்பதைப் பிறருக்கும் கருதப்பெறின் எய்தல் எளிது' எனப்பிறரை ஏழுவாயாக்காமல் பிறருக்கு என நான்கனுருபு தந்து விரித்தலான் என்க. அஃதேயுமன்றி, விளக்கந்தரும் அவர் 'வினைவிதைத்தவன் வினையறுப்பான் தினை விதைத்தவன் தினையறுப்பான்' என்பது போல ''பிறர் மாட்டு இகழ்ச்சியின்றி நன்மை கருதுவார்க்கு வந்து விளைவது நன்மை என்றவாறு'' என்பது அவர் கண்ணிற்பட்டிலது போலும்.

தேவநேயர் 'மன் தான் உள்ளியது எய்தல் எளிது' எனக் 'குட்டி மன்னன் தான் கருதிய பொருளைக் கருதியவாறே எய்துதல் எளிதாம்'

1. 'அது கூடாது—அடைய எண்ணிய பொருளை இடைவிடாது நினைத்தல் முடியாது என்னும் பொருளை உணர்த்துதலின் என்பது. ஒழியிசைப் பொருளில் வந்தது என்றார்.

என உரை காண்பதோடு 'மன்ஒழியிசைப் பொருளில் வந்தது என்ற பரிமேலழகர் இலக்கணக்குறிப்பு ஈண்டுப் பொருந்துவதன்று' எனவும் மறுப்பர். 'உள்ளப்பெறின்' என்ற செயின் என்னும் எச்சமே உள்ளுதல் அரிது என்பதைப் புலப்படுத்து நிற்றலானும். உள்ளுதல் வேண்டும் என வலியுறுத்த வந்தவர் ஒழியிசையால் அது கூடாது என்பது பெறுவாராயின், அது இக்குறட்போக்கிற்கு மாறாகலானும் இவர் மறுப்பு ஏற்புடையது என்க. 'மன்' அசையாகலாம். வள்ளுவர் அசைச் சொல்லைப் பெரும்பாலும் பெய்துரையார் என்ற மரபு கருதி 'மன்' என்பதை எழுவாயாக்கிக் கூறினர் **தேவநேயர்** என்க.

இக்குறளின் பொருளமைதியும் 'எண்ணியார் எண்ணியாங்கு எய்துப. எண்ணிபார் திண்ணிபராகப்பெறின்'' (666) என்பதன் பொருளமைதியும் வேறுபாடறிதற்கரிதாயினும் அதிகாரத் தலைப்பு நோக்கி அது வினைசெய்வானுக்குத் தான் மேற்கொண்ட வினைக்கண் திட்பம் வேண்டும் என்பதை வலியுறுத்துவது. இது எடுத்த காரியம் முடிகிற வரையில் நினைத்ததை மறவாமல் நினைத்துக்கொண்டே யிருந்தால் நினைத்ததை நினைத்தபடி அடைதல் எளிது என மகிழ்ச்சி யால் மறத்தல் கூடாது; நினைத்தால் எப்தலாம் என உபாயங் கூறு கிறது எனலாம். பொச்சாவாமையும் வினைக்கண்திட்பங்களுள் ஒன்று தானே! இது எங்ஙனம் வேறுபாடாகும் எனலாம். இதற்கு அமைதி காட்டிய என்னாசிரியர்[1] அது வினைமுதல் மேல் வைத்துப் பயன் கூறியது. இது செயல்மேல் வைத்துக் கூறியது என்றனர். இவ்வேறு பாடு இலக்கண வகையால் ஏற்புடையதாயினும் கருத்து வகையால் தெளிவு பெறக் கூடவில்லை.

1. டாக்டர் உ.வே சாமிநாதய்யர்

பண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்பு முறை.

	இறந்த	பொச்சாப்பு	பொச்சாப்பா	அச்சம்	முன்னுறக்	இழுக்காமை	அரியன	புகழ்ந்தவை	இகழ்ச்சியின்	உள்ளிய
மணக்.	10	7	1	3	9	8	6	4	2	5
பரிதி.	2	5	7	3	4	8	10	6	1	9
பரிப்.	8	7	1	3	10	9	6	4	2	5
காளி.	5	1	7	4	3	6	10	9	2	8
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

54வது அதிகாரம் 'பொச்சாவாமை' முற்றிற்று.

55. செங்கோன்மை

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: செங்கோன்மையாவது செவ்விதாகிய முறை செய்தலுடைமை. குற்றமும் குணமும் தூக்கி ஆராய்தலால் கோல் என்றார்; அது கோடாமையால் செங்கோல் ஆயிற்று. மேல் அமாத்தியர் மாட்டும்[1] சுற்றத்தார்மாட்டும் தன்மாட்டும் செய்யுந்திறம் கூறினார். உலகத்தார்மாட்டும் செய்யுந்திறம் கூறுகின்றாராதலான், அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி : செங்கோன்மையாவது அரசன் செங்கோல் நீதியைச் சொல்லுதல் எ—று.

இ) பரிப்.: செங்கோன்மையாவது செவ்விதாகிய முறை செய்தலுடைமை. குற்றமும் குணமும் தூக்கிப் பார்த்தலால் கோல் என்றார். அது கோடாமையால் செங்கோல் ஆயிற்று. மேல் அமாத்தியர் மாட்டும் சுற்றத்தார் மாட்டும் தன் மாட்டும் செய்யும் திறன் கூறினார். இஃது உலகத்தார் மாட்டுச் செய்யும் திறன் கூறுகின்றது ஆகலின் அதன்பிற் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது அரசனால் செய்யப்படும் முறையினது[2] தன்மை. அம்முறை ஒருபால் கோடாது செவ்விய கோல்போறலின் செங்கோல் எனப்பட்டது[3] வடநூலாரும் தண்டம்[4] என்றார். அது சோர்வில்லாத அரசனால் செயற்பாலதாகலின், இது பொச்சாவாமையின்பின் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர்: அஃதாவது அரசனாலே செய்யப்படும் முறைமை

---

1. அமாத்தியர்—அமைச்சர்; 2. முறை - நீதி
3. செவ்விய கோல் என்பது ஒருபாலும் வளையாத கோல் போன்று நீதியையும் உணர்த்துவதால் உவமையாகுபெயர்
4. தண்டம்—கோல் கோணாத நீதியுணர்த்துதலால் உவம ஆகுபெயரேயாம்

யுடைய நன்மை. அந்நன்மையும் செவ்வை[5] தப்பாமல் நடக்கிறபடியி னாலே செங்கோல் என்பதாம்.

ஏ) பழைய 2: அஃதாவது, அரசனுலகை நடத்து முறை மை செவ்வியகோல் போல விருத்தலாற் செங்கோல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., பரிப்., பரிமேல்., முதலிய உரைகள் 'குற்றமும் குணமும் தூக்கி ஆராய்தலால் கோல் எனப்பட்டது' என்று தரும் விளக்கம் 'சமன்செய்து, சீர்தூக்குங்கோலை' நினைவூட்டுகிறது. செம்மை-நீதி தவறாமை அல்லது ஒருபாற் கோடாமையாம். பழைய காலத்துமன்னர்களின் அத்தாணி மண்டபத்து முகப்பில் சீர்தூக்குங் கோலின் உருவம் அமைந்திருக்கும். பின்னர் இரண்டரை முழ நீள முள்ள ஒருபொற் பிரம்பு அந்த இடத்தை அழகு செய்வதாக அமைந் தது. அது அரசனுடைய நேர்மையைக்காட்டும் ஓரடையாளமாகக் கருதப்பெற்றது. பரிமேலழகர், வடநூல் மரபு பற்றி 'முறைகோடாது செவ்விய கோல் போறலின் செங்கோல் எனப்பட்டது' என்றார். கௌடலீயத்துத் தண்டம் நால்வகை உபாயத்துள் இறுதியதாகிய தண்டனையையும், ஒறுத்தலாகிய அதற்கும், அதனைச் செய்யும் அரசற்கும் உள்ள காரணகாரிய ஒற்றுமையான் அரசனையும் (அதி.,1, அத்.,4) படைப்பகுப்புள் ஒன்றையும் (அதி., 10, அத்., 1) நீரை மிகுதியாகப் பயன்படுத்தியபோதும், புறம் போக்கில் ஆணை வழியும் ஆணையின்றியும் பயிர் செய்தபோது வாங்கும் தண்டத் தீர்வையையும் (அதி.,2, அத்., 22) உத்தம—மத்திய சாகசங்களாகிய தீர்வை வகைகளையும் (அதி.,2, அத்.,27) குறிப்பதாக உள்ளன. சுக்கிர நீதியில் நிலம் அளக்கும் கோலாகவும் (அதி.,2, சு.,198) நால்வகையுபாயங்களுள். ஒன்றாகவும் (அத்.,4, பிர.,1, சு , 30) கூறுகின்றன. ஆனால் 'செங்கோல்' என்பதற்குப் பரிமேலழகர் காட்டும் விளக்கங்கள் அவ்விருநூல்களிலும் இல்லை. ஆகவே அது வேறு ஏதோ ஒரு வடநூற் கருத்தாகல் வேண்டும்.

கா.சு., 'நடுநிலையாக ஆளும் அரசின் தன்மை' என்பர். தேவநேயர், 'அரசன் கையாளும் நேர்மையான ஆட்சி முறைமை' என்பர். இராம., 'அரசன் செம்மையாக ஆளும் விதம்; இது அரசற்கே கூறியது'. ஜி.வரத., 'அரசாட்சியின் செம்மைத்தன்மை அரசாட்சியின்மேல் ஏற்றப்பட்டது'. குழந்தை 'முறைசெய்தலின் தன்மை'.

5. செவ்வை—நேர்மை.

இவையனைத்தும் துலாக்கோல் போன்ற செவ்விய ஆட்சி முறையை உணர்த்தின என்றே சொல்கின்றன. ஆதலால் கருத்து வேற்றுமை யில்லை.

55.1. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை. (நிசக)

உரைப்பகுதி:

அ) மணக்.: ., ஒருவன் செய்த குற்றத்தை ஆராய்ந்து, நட்டோர் என்று கண்ணோடாது,[1] தலைமையைப் பொருந்தி, யாவர்மாட்டும் குற்றத்திற்குத் தக்க தண்டத்தை நூல்முகத்தால்[2] ஆராய்ந்து, அதன் வழியே செய்வது முறை என்று சொல்லப்படும் எ—று.

யாவர் மாட்டும் என்றது தன்சுற்றமாயினும் என்றது.

ஆ) பரிதி.: ஓர்ந்து[3]ஒருவன் பேரில் கண்ணோட்டமற்று எல்லோர்க்கும் ஒரு தன்மையாக நடப்பது செங்கோன்மை எ—று.

இ) பரிப்.: ஒருவன் செய்த குற்றத்தை ஆராய்ந்து நட்டோர் என்று கண்ணோடாது தலைமையைப் பொருந்தி யாவர் மாட்டும் குற்றத்திற்குத் தக்க தண்டத்தை நாளும் நூல் முகத்தான் ஆராய்ந்து செய்வது முறை என்று சொல்லப்படும் எ—று.

யாவர்மாட்டும் என்றது தன் சுற்றம் ஆயினும் எ—று. இறை புரிதலாவது சுற்றம் என்று கண்ணோடாத அரசனாயிருத்தல். இதுசெங்கோன்மையாவது இத்தன்மைத்து என்று கூறிற்று.

ஈ) காளி.: வேந்தனானவன் தனக்குத் தகுதியும் தகுதியல்லாமையும் ஆராய்ந்து யாவர் மாட்டும் காதல் காரணமாகக் கண்ணோட்டம் செய்யாது நெறியினை விசாரித்து[4] அதன்கண்தங்கிச்[5] செய்யும் செய்கை யாது மற்று அதுவே செங்கோலாகிய நீதி எ—று.

---

1. கண்ணோடாது -தாட்சண்யங்காட்டாமல்.
2. நூல் முகத்தான் ஆராய்ந்து -அரசியல் கூறும் நீதிநூல்களான் அறநூல்களான் ஆராய்ந்து
3. ஓர்ந்து
4. விசாரித்து } -நூற்பிரமாணங்களாலும், பெரியோரிடம் உசாவுவதாலும் ஆய்ந்து தெளிந்து.
5. தங்கி -நிலைவாக நின்று,

ஓர்ந்து என்பது ஆராய்ந்து என்றது. புரிந்து என்பது அதன்கண் தங்கி என்றது.

உ) *பரிமேல்.*: தன்கீழ் வாழ்வார் குற்றம் செய்தால் அக் குற்றத்தை நாடி, யாவர்மாட்டும் கண்ணோடாது, நடுவு நிலைமை யைப் பொருந்தி, அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோ ரோடும் ஆராய்ந்து, அவ்வளவிற்றாகச் செய்வதே முறையாம்.

நடுவு நிற்றல் இறைக்கு இயல்பாகலின் அதனை இறை[6]என்றும், சிறந்தார்கண்ணும் என்பார் யார்மாட்டும் என்றும் கூறினார். இறைமை இறை[7] எனவும், செய்வது செய்வஃது எனவும் நின்றன. இதனால் செங்கோன்மையது இலக்கணம் கூறப்பட்டது.

காரி.: இறைமை—இறை எனவும், செய்வது—செய்வஃது என வும் நின்றன. ஈண்டு ஆய்தம் பெறுதற்கு விதியின்மையின் அவ்வாறு உரைத்தார்; செய்யுட்டொடைக் காரண விகாரம்.

ஊ) *கவிராசர்*: தன்கீழே வாழ்வார் குற்றஞ்செய்தால், அந்தக் குற்றத்தைப் பார்த்து ஒருவரிடத்திலேயும் பட்சபாதம் வையாமல், எல்லாரையுஞ் சரியாகப் பார்த்து அந்தக் குற்றத்துக்குச் சொன்ன தண்டனையைச் சாத்திரங் கற்றவர்களுடனே கூட ஆராய்ந்து குற்றத் திற்குத் தக்கதாகத் தண்டிக்கிறதே முறைமை எ—று.

ஏ) *பழைய 2*: தன்குடைக்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால், செய்த குற்றத்தை நாடி அவர்மேற் கண்ணோட்டம் வையாமல், நடுவு நிலைமையைப் பொருந்தி, அக்குற்றத்துக்குச் சொல்லிய தண்டத்தை நூலாரோடும் ஆராய்ந்து, அதற்குத் தக்க தண்டஞ் செய்வதே முறை யாம்.

இது செங்கோ லிலக்கணங் கூறியது.

ஐ) *தொகுப்பும் குறிப்பும்*:

'கண்ணோடுதல்' – *'தாட்சண்ணியப்படுதல்.'* கண்ணோடற் காரணங்களாக *மணக்குடவர்* உரையில் *'நட்டோரையும்'*, *'யாவர்*

6. இறையென்னுஞ் பொருட்பெயர் அதன் பண்பாகிய நடுநிற்றலையுணர்த்துவதால் பொருளாகுபெயராம். இறை - அரசன்
7. பரிமேலழகர் இறைமை இறை என நின்றது எனக் குறிப்பதால் இவர் ஈறுகெடு தல் ஆகிய செய்யுள் விகாரமாகக் கருதியிருப்பர் எனவும், ஆகுபெயராகக் கருதி யிருக்கமாட்டார் எனவும்தெளிதல் கூடும். நுண்பொருண்மாலையுடையாரும் செய்யுட் டொடைக் காரணவிகாரம் என்று கூறுதலையும் காண்க. ஆகவே இது கடைக்குறை யாகும் என்க.

மாட்டும், என்றமையின் தம் சுற்றத்தையும் குறிப்பர். பரிதி. 'ஒருவன் மீது' எனப் பொதுமையிற் கூறுவர். பரிப். கண்ணோடாத இறை எனப்பிரித்துப் பொருள் கண்டிருப்பர் போலும்; சுற்றத்தைக் கருதுவர். காளி., 'காதல் காரணமாகக் கண்ணோடாது' என்பர். பரிமேலழகர் கவிராசர், பழைய, 'தன் கீழ்வாழ்வார்' எனக் குடிமக்கள் அனைவரையும் கருதுவர். கண்ணோடுதலே சுற்றத்தார், நட்பினர், நன்றி செய்தார் இவர்கள் மேலாதலின் இவர்களைக் குறித்து எழுதிய உரைகளே சிறந்தவை. ஏழ்மை, பேதைமை, முதிர்வு முதலியன பற்றி அரசற்கு நிகழ்வன இரக்கம். அது கண்ணோட்டமாகாது; ஆகவே 'கண்ணோடாது' என்பதற்கு இவர் 'நட்டார் சுற்றத்தார் நன்றி செய்தோர் எனத் தாட்சண்ணியங் காட்டாமல்' என்பதே நேரிய பொருளாதலைக் காண்க.

காளிங்கர் 'ஓர்ந்து' என்பதற்கு ஏனையோர் அனைவரும் செய்த குற்றத்தை யாய்ந்து தெளிந்து' என உரை கண்டிருக்க, இவர், முறை செய்கின்ற மன்னன் தனக்குள்ள தகுதி தகுதியின்மைகளையாராய்ந்து' என உரைக்கிறார்; இவர் எண்ணத்திலே **கரிகாற் பெருவளத்தான்** தன் ஆண்டிளமை காரணமான தகுதியின்மையை யறிந்து' நரை முடித்துச் சொல்லால் முறை செய்த' நிகழ்ச்சி நிழலோடியுள்ளது (பழமொழி 6). ஆதலால் இங்ஙனம் உரைத்தார் எனலாம். இதுவும் வரவேற்கத்தக்கக் கருத்து. உரையாசிரியர்கள் அனைவரும் வேறுபடும் இடம் ''**இறை புரிந்து**'' என்பது, ''இறைபுரிந்து'' ''தலைமையைப் பொருந்தி'' மணக்; சுற்றம் என்று கண்ணோடாத அரசனாயிருத்தல்' பரிப்., 'நெறியின்கண் தங்கி' காளி.; 'நடுவு நிலைமையைப் பொருந்தி' பரிமேல்., கவிராசர் முதலியோர், ''தெய்வத்துக்குப் பயந்து'', ''தெய்வத்தை விரும்பி'' என்றெல்லாம் பொருள்கொள்வர் வரத.; இவ்வுரைக்கு இறைபுரிந்து ஓர்ந்து யார் மாட்டும் கண்ணோடாது தேர்ந்து செய்வதே முறை' எனக் கூட்டுவர். இராமலிங்கனார் இறைவனுடைய தன்மையைச் செய்தல்; கடவுள் அனைத்துயிர்களையும் சமமாகக் காப்பதுபோல அரசன் அனைவரையும் சரிசமமாகக் காக்கவேண்டும் என்பர். 'ஆட்சிபுரிந்து' என்பர் சி. இ.

இங்ஙனம் பொருள் கொள்வதால் 'இறை' என்ற சொற்கு இலக்கணங் கூறிப் பொருளை நிலைபெறுத்த வேண்டிய நிலைமை பரிமேலழகர் போன்றார்க்கு இன்றியமையாததாயிற்று. இறை —அரசன். வள்ளுவரே முறைசெய்து காப்பாற்றும் ''மன்னவன்'' என்ற குறளில் 'இறை' என்று வைக்கப்பெறும் என்கின்றார். ஆதலால் இறைக்கு நேர்பொருள் அரசன். அவனது தொழிற்குணம் முறை செய்தல். பண்பிக்கும் பண்புக்கும் உள்ள தொடர்பு பற்றி

அரசன் பெயராகிய இறை என்பதே அவன் குணமாகிய முறைக்கும் ஆயிற்று என்பர். இங்ஙனம் பண்பியின் பெயர் பண்புக்கு தலை முதலாகுபெயர் எனல் மரபாயினும், ஈண்டு அங்ஙனம் கூறிற்றிலர்: இங்ஙனம் வருதல் 'தொன்முறை வருவன அல்ல ஆகலான்' என்க. இவரே பின்னர் 'இறைமை இறை எனவும் செய்வது செய்வஃது எனவும் நின்றன' என வேறுகுறிப்பும் தருவர். இதன் விளக்கம் தந்த *நுண் பொருள் மாலையுடையார்* 'செய்யுட்டொடைக் காரண விகாரம்' என்றனர். இங்ஙனம் இறைமை எனற்பாலது தொடையமைதி நோக்கி விகாரமாய் இறை என வந்ததாயின் முன்னர்க் கூறிய பண்பியின் பெயர் பண்புக்கான இலக்கணம் வேண்டா. ஆகவே பாடங் கேட்டார், ஏடெழுதுவார் இவர்கள் எழுதிச் சேர்த்த சேர்க்கையாகும்: சிந்திக்க. பின்னது *இரத்தின கவிராயர்* காலத்தும் வழங்கியமை பெறப்படுதலின் முன்னரே சேர்க்கையாதல் பெறுதும். *தேவநேயரும்* தமதுரையில் 'இறைமை இறை என ஆயிற்று' என்பதை மட்டும் குறித்தல் காண்க.

வரதராசர் கூறும் நயமான உரைகளில் 'தான்செய்யும் முடிவுகள் நேர்மையற்றதாதல் கூடாது' எனத் தெய்வத்துணையை விரும்புதல் இயைவதாயினும், அரசன் தன்னைத் தெய்வப் பிரதிநிதியாக எண்ணுதல் கூடாது. அவன் கூறும் முடிபை ஏற்கிற இருபாலாரும் இது தெய்வம் விட்ட வழியென ஏற்கலாம். ஆனால் அரசன் அங்ஙனம் எண்ணுதல் கூடாது. அங்ஙனம் எண்ணின் தவறிக் கோல் கோடிய வழித் தான் தப்பத் துணை தேடிக்கொண்ட இழிநிலையாகும் என்க. சிந்திக்க.

ஓ) ஒப்புமைப்பகுதி:

கண்ணோடாது இறை புரிதல் முறை:

முறை எனப்படுவது கண்ணோடாது உயிர் வௌவல் —*கலி. 133:13*

கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்
முறைமைக்கு முப்பிளமை இல் —*பழ.நா,93*

எங்கண் ணனையர் எனக்கருதின் ஏதமால்
தங்கண்ணே யானும் தகவில கண்டக்கால்
வன்கண்ண னாகி ஒறுக்க ஒறுக்கல்லா
மென்கண்ண னாளான் அரசு —*பழ நா.,322*

பழைமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றும கொள்ளார் -வெகுளின்மன்

காதன்மை யுண்டே இறைமாண்டார்க்கு ஏதிலரும்
ஆர்வலரும் இல்லை அவர்க்கு. —நீதிநெறி. , 47

அண்ணியர் அகன்றவர் திறத்தும் ஆணையான் —சூளா . ,52

தேர்ந்து செய்வஃதே முறை:

நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி —புறம் 10:-34

தேர்ந்தினி தியற்று முன்ற னரசியற் றருமந் தீர்தி —கம்பராமா .4338

ஏமம் வேண்டுவோன் முறை செயல் தண்டான் —முதுமொழிக். ,10:9

முற்றும்:

எய்திய குற்றத் தோர்கள் யாவரா யினும்கண் ணோடா (து)
ஐதென நாடி நீதி அறந்தலை பிழையாத் தண்டம்
செய்தலே செங்கோ லாகும் —விநா. அரசி. ,38

ஒருபுடை:

சினையலர் வேம்பன் தேரானாகிக்
கன்றிய காவலர்க் கூய்அக் கள்வனைக்
கொன்றச் சிலம்பு கொணர்க..... —சிலப். , பதிகம். 28-30

தேரா மன்னா செப்புவ துடையேன் —சிலப். 20:50

.... முனிவுழி முனிந்து .... —கம்பராமா. ,51

55.2. வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன் கோனோக்கி வாழும் குடி. (நிசஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: உலகத்துயிரெல்லாம் மழையை நோக்கி[1] இன்புறா நிற்பர்; அது போல, குடிகளும் அரசனது செங்கோன்மையை நோக்கி இன்புறா நிற்பர் எ—று.

---

1. நோக்கி வாழ்தலாவது பற்றப்பட்ட ஒனறனையே இன்றியமையாத்துணையாகக் கொண்டு வாழ்தல். இது குடிகள் மன்னவனுடைய நல்லாட்சியையே நோக்கி வாழ் தலைத் ''துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன், அளியின்மை வாழும் உயிர்க்கு'' (குறள் 557) என்பதாலும் அறியலாம் நோக்குதல் கண்ணால் நோக்கு தலன்று. தாற்காணுதலாம். கண்டு அதனையே துணையாகக் கொண்டு வாழ்தலே நோக்கி வாழ்தல் என்றது.

ஆ) *பரிதி.:* மேகத்தைப் பார்த்த உலகமதுபோல, மன்னவன் செங்கோல் பார்த்து வாழும் குடிகள் எ—று.

இ) *பரிப :* உலகத்து உயிர் எல்லாம் மழையை நோக்கி இன்புறா நிற்கும்; அதுபோலக் குடிகளும் அரசன் செங்கோன்மையை நோக்கி இன்புறுவர் எ—று.

இது முறை செய்தல் குடிமக்கட்கு இன்றியமையாதது என்பது கூறிற்று.

ஈ) *காளி.:* மழை நமக்கு உளது என்று அதனைக் குறிக்கொண்டு அஞ்சாது வாழும் உலகமானது; மற்று இதுபோல மன்னவன் செங்கோல் நமக்கு எளிது என்று அதனைக் குறிக்கொண்டு அஞ்சாது வாழும் குடிமக்களும் எ—று,

உ) *பரிமேல்.:* உலகத்து உயிரெல்லாம் மழை உளதாயின் உளவாகா நிற்குமே எனினும், குடிகள் அரசன் செங்கோல் உளதாயின் உளவாகா நிற்கும்.

நோக்கி வாழ்தல்—இன்றியமையாமை. வானினாய உணவை வான் என்றும், கோலினாய ஏமத்தைக்[2] கோல் என்றும் கூறினார்[3] அவ்வேமமில்வழி உணவுளதாயினும் குடிகட்கு அதனால் பயனில்லை என்பதாம்.

காரி.: நோக்கி வாழ்தல்—இன்றியமையாமை. மூன்றன் சூத்திரத்துள்[4] நோக்கல் நோக்கம் என்பதும் அது.

ஊ) *கவிராசர்:* உலகத்திலே உண்டான சீவன்களெல்லாம் மழை உண்டானால் உண்டாம்; என்றாலும் குடிகளெல்லாம் அரசன் செங்கோல் உண்டானால் உண்டாம் (எ—று).

மழை சீவன்களை ரட்சிப்பதுபோல[5], அரசன் செங்கோலனானால் குடிகள் நன்றாய் இருப்பார்கள்.

2, ஏமம்—பாதுகாப்பு.

3. வான் என்பது வானத்தையும் இடஆகுபெயரான் மேகத்தையும் உணர்த்துதல் தொல் மரபு மேகத்தின் பெயர் அதனானாய உணவையுணர்த்துதல் தொன்முறையன்று ஈண்டு தகுதியாற் கொள்ளப்பட்ட பொருள். கார் என்னும் மேகத்தின் பெயர் கார் விளைந்தது என்புழி நெல்லையுணர்த்திற்று அன்றோ எனின் அது மரபு பற்றி வருவதாம், அதனாலேயே பரிமேலழகர் ''வானினாய உணவை வான் என்றும், கோலினாய ஏமத்தைக் கோ-லென்றும் கூறினார்.'' என ஆகுபெயரென்னாது வாளா போயினர். இவ்வேற்றுமையுணரார் சிலர் கருவியாகுபெயர் என்றும் மும்மடியாகுபெயர் என்றும் குறித்துப் போயினர், அதன் பொருந்தாமை ஓர்க,

4. தொல். சொல். 93,

5. ரட்சிப்பது—காப்பது,

ஏ) பழைய 2: உலகத்து உயிரெல்லாம் மழை பெய்யின் வாழும்: எனினும் குடிகள் அரசன் கோல் செங்கோலாயின் வாழும்.

வான் பெய்யினுயிர்வாழும்; கோல் நடத்தின் குடிவாழும். நோக்கல் அஃதுண்டாயின் வாழும்; இல்லாயிற் கெடும் என்றது.

மல்லர்: என்பது மழையைப் பத்தி லோகத்தின் உயிரெல்லாந் தன்னுடம்பிலே நிற்கிறது. அரசனீதியைப் பத்திச் சீர்மையிலே குடிகள் நிற்கிறது என்றவாறு.

நீதியில்லாத சீர்மையிலே குடிகள் தெரிச்சுப்போம் என்பதனால் சீவனைக் காப்பாத்துகிறதுக்கு வேண்டிய மழை பெய்தாலும் அரசனுக்கு நீதியில்லாதே போனால் மழையினால் ஆகிற பிரயோசனம் அனுபவிக்கத்தக்க குடிகளில்லாதபடியினால் நீதியில்லாத சீர்மையிலே மழை குறையில்லாமல் பெய்தாலும் பிரயோசனம் இல்லை என்பது கருத்து.

வான்—மழை; உலகு—லோகம்; மன்னவன்—ராசா; கோல்—செங்கோல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், பரிதி., பரிப ., காளிங்கர் அனைவரும் எடுத்துக் காட்டுவமையாகக் கொண்டே பொருள் விரித்தனர். *பரிமேலழகரும்* அவர் வழிப்பட்டோரும், 'மழை உளதாயின் உலகத்துயிர்கள் உளவாகும்; எனினும், செங்கோல் உளதாயின் குடிகள் உளவாகும் என 'எனினும்' வினை எச்சத்தை இடைப்பெய்து மழையினும் செங்கோலின் இன்றியமையாமையை வேறுபடுத்திக் காட்டுவர். ஏனையோர் 'அதுபோல' என்ற உவமவாசகத்தை இடைப்பெய்து எடுத்துக்காட்டுவமையாகக் கூறினர்.

இவற்றுள் மழை உலகிலுள்ள உயிர்கள் எல்லாவற்றிற்கும் வேண்டப்படுவது குடிமக்கட்கோ மழை மட்டும் போதாது; அரசனது செங்கோலும்வேண்டும் என்ற சிறப்பைத் தரும் *பரிமேலழகர்* முதலியோர் கருத்து சிறந்தது.

உரைவளப்பதிப்பில், 'வானை மழை வேண்டியும் வெயில்காற்று முதலியன வேண்டியும் நோக்குதல் போலக் கோலைக் கொலையிற் கொடியாரை ஒறுக்கவும், நல்லோரை ஆக்கவும் குடிகள் நோக்குவர். வான் என்பது நீரை மட்டும் அன்று; உலகம் வாழ்வதற்கும் வளர்வதற்கும் வேண்டிய காற்றும் வெப்பமும் முதலிய ஏனையவுமாம் என்று

எழுதியுள்ள குறிப்புரையை உரைவேற்றுமை ஆசிரியர் இங்ஙனம் பொருத்திக் காட்டுதல் உய்த்துணரும் முறையன்று; என்று கூறி, வான் சிறப்பு என்ற அதிகாரம் மழையை யன்றி ஏனைய பூதங்களைக் குறித்துக் கூறியதாகாது; கொடுங்கோன்மையில் மேல்வரும் துளி யின்மை என்ற குறளால் வள்ளுவர் மழையையே குறிக்கின்றார். ஆதலால் வானை இடப்பெயராகமட்டும் கொண்டு காற்றையும் கதிரை யும் குறித்தல் கூடாது என மறுப்பர். அன்றியும் உயிர்கட்கு வானைக் காட்டிலும் செங்கோன்மையின்றியமையாதது என்பதே *பரிமேலழகர்* கருத்து என்பர். இக்குறட்கு இது கருத்தன்று உயிர்கட்கு மழையின்றி யமையாதது உயிர்களுட் சிறந்த இவன்கீழ் வாழும் மக்கட்கு செங்கோன்மையும் இன்றியமையாதது என்பதே வள்ளுவர் கருத்து. இல்லையானால் உயிர்என்றும் குடி என்றும் பிரித்தோதார். அன்றி யும், செங்கோன்மையால் வரும் நன்மையை நேரே நுகர்பவர் குடி மக்களேயாதலான் என்க.

''நெல்லும் உயிரன்றே'' என்ற புறப்பாட்டு மன்னன் மக்கட் குயிர் போல்வான் என்பதனைக் குறிக்குமேயன்றி, அவன் செங்கோலினது இன்றியமையாமையைக் குறியாது. 'கோலினாய ஏமத்தைக் கோல் என்றார்; ஏமம் இல்வழி உணவு உளதாயினும் குடி கட்கு அதனாற் பயனின்று' என்னும் *பரிமேலழகர்* உரை கள்ளரை ஒறுத்துக் காத்தலும், உழைப்பு உழைத்தவனுக்கே பயன்படச் செய்தலு மாகிய தண்ணளியையும் தண்டத்தையும் குறித்து நிற்றல் காண்க. ஆசிரியரே இவ்வதிகாரத்து முடிந்தமுடிபாக வேந்து ஒறுத்தலையும் வலியுறுத்தல் காண்க.

'உய்த்துணர வைப்பு'—சில சூத்திர விதிகளைக் கொண்டு ஆராய்ந்து அறியும்படி ஒரு பொருளை வைத்தல். இது இலக்கண நூலின் உய்த்துணர வைப்பு. பொதுவான பொருள் ஆராய்ந்து அறிதல் என்பது.

'வான்' என்பதை விண்ணுலகு, வான் முதலியவற்றை உணர்த்தும் இடப்பெயராகவும் பெருமை பொருளைத் தரும் பண்புப் பெயராகவும் வான் சிறப்பில் இடவாகுபெயரால் மழையை உணர்த்திய வள்ளுவரே ஆளுகின்றார். *மணிமேகலையில்* ''வான் தேர்ப் பாகனை'' என்னு மிடத்து வான் தென்றற் காற்றைக் குறிக்கின்றது. உலகியலில் 'வானம்' கொளுத்துகிறது' என்பது வெப்பத்தைக் குறிக்கிறது வேறு சில இலக்கியங்களில் வேற்றுப் பொருளினும் வரக் காண்கிறோம். ஆதலால் வானத்தை இடப்பெயராகக் கொண்டு ஆகு பெயரிலக்கணத் தால் மழையை மட்டுமன்றி விசும்பு தைவரு வளியையும், கதிராற்ற

லாகிய வெப்பத்தையும் பொருளாக உய்த்து, அவைகள் உயிர்களின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் காரணமாதலை அடியாகக் கொண்டு, அது போலச் செங்கோன்மைக்குக் கொடியாரை ஒறுத்தலும் உவந்தாரை யாக்கலுமாகிய காவற்றன்மையைக் குடிகள் நோக்கும் என உணர வைத்ததாம் என்க. உய்த்துணர வைப்பு இலக்கண நூல்களில் விதி முறைகளை உணரவைப்பதாகவும், அகப்பொருணூல்களில் கருப் பொருள் பற்றிய அடைகளானும் குறிப்பானும் ஆண்டியையுடைய தோர் வேறுகருத்தினை உணரவைப்பதாகவும், புறப்பொருள்நூல்களில் கூறப்படும் உவமப் பொருளின் தன்மைகளைக் கொண்டு உவமேயத் தின் தன்மைகளை யுணரவைப்பதாகவும் இருத்தலைக் காணலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

வானோக்கி வாழும் உலகம்:

வித்திவா னோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற் றாயினும் நண்ணி யாளும்
இறைவன் தாட்குதவாதே —புறம். 18:24-26

வானம் துளிமாறு பொழுதினில் உலகம் —கலி. 25;28

வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்த மென்றுணரற் பாற்று —குறள். 11

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு —குறள் 20

மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை —நான்மணி., 48

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் —குலசேகரர்., 5:7

மன்னன் கோல் நோக்கி வாழும்குடி:

தானோக்காது எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனோக்கி வாழும் குடிபோன்றிருந்தேனே —குலசேகரர்., 5:3

கோலிடை யுலக மளத்தலில்..... —கம்பராமா., 103

முற்றும்:

கோனோக்கி வாழும் குடிஎல்லாம் தாய்முலையின்
பானோக்கி வாழும் குழவிகள் —வானத்
துளிநோக்கி வாழும் உலகம் —நான்மணி., 28

வானோக்கி நிற்கும் உலகென்னவும் மன்னவன் செங்
கோல் நோக்கி நிற்கும் குடி என்னவும் —கந்த. திருநகரப், 62

வானோக்கி நிற்கும்பைங் கூழ்போல வும்ஒரும ன்னவன்செங்
கோனோக்கி நிற்கும் குடிபோல வும்தடக் கோட்டிமயத்
தேனோக்கி நிற்கும் எழிலுடை யான்வெங்கைச் செல்வியுனைத்
தானோக்கி நிற்குநல் லாயத்து ளேசென்று சார்ந்தருளே
—திருவெங்கைக்., 41

ஓ) மேற்கோள்பகுதி:

சேனா.: 'வானோக்கி... குடி' என்புழி வானைநோக்கி வாழும், கோலை நோக்கி வாழும் என இரண்டாவது வருதலேயன்றி, வானான் நோக்கி வாழும், வானின் நோக்கி வாழும், கோலான் நோக்கி வாழும், கோலின் நோக்கி வாழும் என மூன்றாவதும் ஐந்தாவதும் வந்தவாறு கண்டு கொள்க. (தொல் சொல் 93)

நச்.: வான்நோக்கி வாழும் என்புழி வானை நோக்கி வாழும் எனவிரியும் வழி வானான் ஆய பயனைக்கருதி உயிர்வாழும் எனவும், வானின் ஆய பயனைக் கருதி உயிர் வாழும் எனவும், செயப்படு பொருளும் ஏதுவும் ஒப்பப்பிறந்து நிற்றல் இச்சூத்திரத் திற்குக் கருத்து. இஃது உருபும் பொருளும் மயங்கிற்று. (தொல். சொல். 94)

சிவஞான.: வேம்பு தின்ற புழுப் போல நோக்கிற்றை நோக்கி நிற்கும்: 'ஈண்டு நோக்கு என்றது மன எழுச்சி விசேடத்தை; 'வானோக்கி வாழும்' என்புழிப்போல'. (சிவஞான. சூ. 9. அதி, 3)

55.3. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். (நிசாரு)

உரைப்பகுதி:

அ) மணக்.: அந்தணர்க்கு உரித்தாகிய வேதத்திற்கும் அதனால் கூறப்பட்ட அறத்திற்கும் முதலாக நின்றது அரசன் செய்யும் முறைமை எ—று.

1. அந்தணர்—பார்ப்பனர்.

ஆ) *பரிதி.:* வேத நெறிக்கும்[2] தன்மநெறிக்கும் முதலானது அரசன் செங்கோல் எ—று.

இ) *பரிப.:* அந்தணரது ஆகிய வேதத்திற்கும், அதனால் கூறப் பட்ட அறத்திற்கும் முதலாய் நின்றது. அரசன் செய்யும் முறைமை எ—று.

ஓதுவாரும் அறம் செய்வாரும் முறை செய்யும் அரசன் நாட்டகத்து உளராவார்: ஆதலான் முதல் ஆயிற்று இது கல்வியும் அறமும் வளரும் என்றது.

ஈ) *காளி.:* உலகத்து அனைத்து நீதியையும் வழுவற உணர்த்து வது மறைநூல் அன்றே; அதனால் அவ்வருமறையாகிய நூலிற்கும் மற்று அதன் வழி நடைபெற்று வருகின்ற அறமனைத்திற்கும் இவ்வுல கத்து ஆதியாக நிலைபெற்றது யாதோ எனின், வேந்தனானவன் மற்று அவ்வற நெறிகோடாமல் பாதுகாக்கின்ற செங்கோலாகிய நீதி எ—று,

மற்றும் அறநூல் என்றும், நூல் என்றும் இங்ஙனம் ஒன்று சொல் லாது அந்தணர் நூல் என்றது, அரசர் நெறியாகிய செங்கோலும் நால் வருணத்தார் நடையுள் ஒரு நடை ஆகலானும், அவை யாவையும் பிற வும் துறவுமாகிய அனைத்தினையும் பழுது அற உரைப்பது பார்ப்பார் ஓதியும் ஓதுவித்தும் இங்ஙனம் விளங்க நடைபெற்று வருகின்ற வேதம் ஆகலானும் எ—று.

உ) *பரிமேல்.:* அந்தணர்க்கு உரித்தாய வேதத்திற்கும் அதனால் சொல்லப்பட்ட அறத்திற்கும் காரணமாய் நிலைபெற்றது, அரசனால் செலுத்தப்படுகின்ற செங்கோல்.

அரசர் வணிகர் என்னும் ஏனையோர்க்கும் உரித்தாயினும் தலைமைபற்றி அந்தணர்[4] நூல் என்றார். மாதவர் நோன்பும்

---

2. வேதநெறி—வேதங்களிற் கூறப்பட்ட ஒழுக்க நெறிகள்.
3. தன்மநெறி—மனுதரும சாத்திரம் முதலான 18 மிருதிகளில் கூறப்பட்ட நெறிகள்.
4. அந்தணர்—'' அந்தணர் என்போர் அறவோர்'' என வள்ளுவர் கூறிய நீத்தார். இவர் கள் கண்டனவே வேதங்கள் என்பதை 'மந்திர திருஷ்டர்கள்' என்ற மரபாலும் அறியலாம், சிலர் சாதிப் பெயர் மாத்திரையாய் நின்றது என்பர். பரிமேலழகரும் இக்கருத்துப்பட அரசர் வணிகர் என்னும் ஏனையோர்க்கு உரித்தாயினும் ஓதுகலும், ஓதுவித்தலுமாகிய இருவகை உரிமையால் வருந் தலைமைபற்றி அந்தணர் நூல் என்றதாம் என்பர். இதற்குப் பலமேற்கோள் காட்டி நிறுவுவர் கோ.வ. ஆனால் வள்ளுவர் குறிப்பிடும் நிறைமொழி மாந்தர் தம் ஆணையாய்ப் பொதுவாய் அனை வரையும் நடத்தும் நூல் என்பதே கருத்தாதலையும் இணைத்து எண்ணுக

மடவார் கற்பும் காவலன் காவலன்றித் தங்கா[5] ஆகலின், ஈண்டு அறம்[6] என்றது அவையொழிந்தவற்றை. வேதமும் அறனும் அநாதியாயினும் செங்கோலில்வழி நடவா ஆகலின், அதனை அவற்றிற்கு ஆதி என்றும், அப்பெற்றியே தனக்காதியாவது[7] பிறிதில்லை என்பார் நின்றது என்றும் கூறினார். இவை இரண்டு பாட்டானும் செங் கோலது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: அந்தணருக்கு உரித்தான வேதத்திற்கும் அந்த வேதத்திலே சொல்லப்பட்ட தருமத்திற்கும் காரணமாய் நின்றது மன்னவன் செங்கோலாகிய நீதி எ—று.

அரசன் நீதியாய் நடத்தினால், வேதமும் சாஸ்திரமும் தருமமும் வர்த்திக்கும்[8],

ஏ) பழைய உ.: அந்தணர்க் குரித்தாகிய வேதத்திற்கும் அதனால் சொல்லப்பட்ட அறத்திற்கும் முதற் காரணமாகி நின்றது மன்னவன் செலுத்துஞ் செங்கோல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக், பரிமேல், கவிராசர், பழைய உரைகள்—'அந்தணர் நூல்

5. மணிமேகலை 22:202—209 ''மாதவர் நோன்பும் மடவார் கற்பும்'' என்ற இப் பகுதிக்கு பாடவேறுபாடுகள் மூன்று உண்டு—1, காவலன் காவலிற்றங்கா' என்பது ஒன்று; காவலன் காவலன்றித்தங்கா என்பது மற்றொன்று; காவலன்றித் தங்கா வலான் ஆகலின்' என்பது மற்றொன்று. இவற்றுள், முதலாகிய பாடங்கொள்பவர் கள் ''சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்'' என்றகுறளையும், உற்றநோய் நோன்றல் என்ற குறளையும், இக்கருத்துடைய பிறநூல் மேற்கோள்களையும் காட்டி கற்பும் தவமும் அவர்களாகக் காத்துக்கொள்ள வேண்டுவன; அதற்கு மன்னவன் காவல் வேண்டா; ஆதலான் அறமென்றது அவையொழிந்தனவற்றை என்பர் இக்கருத்தை விளக்குவதே முன்றாவதான பாடமும். இரண்டாவது பாடம் கற்பையும் நோன்மை யும் காக்க மன்னவன் காவலும் வேண்டும என்னுங் கருத்தினது. ஈண்டு அரசியலில் செங்கோன்மையின் இன்றியமையாமை பேசப் பெறுகிறது. அதற்கு உரியதும் இயைந் ததும் இரண்டாவதான பாடமே. மாதவர் நோன்பும்-மடவார் கற்பும் அவரவர் பண்பாக அமைவதாயினும் அழிந்து படாமல் தங்கியிருப்பதற்கு காவலும் வேண்டும் தற்காப்பும்காவலுமாகிய இரண்டும் வேண்டப்படுவது என்பதனை வலியுறுத்துவதாய் மன்னவன் காவல் ஒன்றானே நிலை பெறுவன இவ்விரண்டும் ஒழிந்த ஏனைய அறங்கள் என்பார் அறம் என்றது அவை ஒழிந்தவற்றை என்றார். இதன்பயன் அறங்களுள் தற்காப்பும் மன்னவன் காவலும் வேண்டப்படுவனவும், மன்னன் காவலொன்றுமே வேண்டப்படுவனவும் என அறம் இருவகைத்தாம் என்பது பொருளாமேயன்றி அவையிரண்டும் முரண்பட்டபொருளன ஆகா. அதனாலேயே பரிமேலழகர் ''காவலன் காவல் இன்று எனின் இன்றாம்' என்று இன்மையொடு படுத்துக் கூறும் மேற்கோளை 'அன்றித் தங்கா' எனத் திரித்து உரைநடையில் அமைத்தனராதலைத் தெளிக. இன்மை ஒன்றன் இல்லாமையையும் ஒன்றின் ஒன்றில்லாமையையும் உணர்த்துவது; அன்மை இஃதன்று வேறு ஒன்றின் உண்மையைவிளக்குவது. ஆதலால் காவலன்றித் தங்கா' என்ற பாடமே சிறந்ததும், பரிமேலழகர் கருத்துமாகும், ஏனைய பாடங்கள் மேற்கோள் மலைவா கவும், முரணானவையும் ஆகும். மடவார் கற்பும் மாதவர் நோன்பும் மன்னன் காவலாலேயே தங்குவன என்பதைத் ''தவமும் அரசிலார்கில் வழியில்'' என்ற நான் மணிக்கடிகையானும் பிறவற்றானும் அறியலாம்.

6. அறம்—அறநூல் தரும சாத்திரங்கள்.

7. தனக்கு—செங்கோலாகிய தனக்கு, 8. வர்த்திக்கும்—நிலைபெறும்.

—அந்தணர்க்கு உரித்தாகிய நூல்,' 'அறம்—அதனாற் கூறப்பட்ட அறம். ஆதியாய்—காரணமாக—முதலாக' எனப் பொருள் தருவன.

பரிதியுரை 'வேதநெறி தன்மநெறி இரண்டற்கும் முதலாவது அரசன் கோல்' என்னும்.

பரிப் உரை 'நாட்டில் செங்கோன்மை நிலவுவதால் ஓதுவாரும் அறஞ் செய்வாரும் உளர்' என்னும். இவ்வுரை கருத்துரை எனலாம். 'சொற்பொருள் என்பேமாயின் இவர் கண்ட பாடம் வேறாதல் கூடும்.

காளிங்கர் உரை 'மறைநூலுக்கும், அதன்வழி நடைபெறும் அறம் அனைத்திற்கும் ஆதியானது மன்னவன் கோல்' என மறைகளை அனைவருக்கும் பொதுவுடைமையாக்கும். இதனை விளக்குவது இவர் சிறப்புரைப்பகுதி. ஆனால், இவரும், 'ஓதலும் ஓதுவித்தலும் பார்ப்பார்க்குரிய தொழில்' என்பர்.

தொல்காப்பியம் படித்தான் என்றவழி அது கூறும் இலக்கணம் படித்தான் என்பதே பொருளாதல் போல வேதம் எனவே அது கூறும் அறம் என்பதே பொருளாதலின் ஆசிரியர் அந்தணர் நூலையும் அறத்தையும் வேறோதல் வேண்டா. ஆசிரியர் வள்ளுவர் ஓதினராதலான் நூலையழியாமற் பாதுகாப்பதும். அது கூறும் அறம் சமுதாயத்தில் இயங்குகின்றனவா என்பதைப் பாதுகாப்பதும் அரசன் கடமையாகிறது என்பது போதரும். தன்னலப்பற்றும் இனப்பற்றும் சமயக்காழ்ப்பும் கடல் கோளும் இயற்கையின் பூசலும் விளைந்த காலத்தில் நூல்களும் அழிக்கப்படும்; மாற்றப்படும், இடைச் செருகல் நிகழ்த்தப் பெறும். அவை நிகழாமற் பாதுகாப்பதும் அரசன் கடமையாகிறது; செங்கோலாகிறது என்ற கருத்தை நூலிற்கும் ஆதியாய்' என்பதற்குக் *'காளிங்கர்* தரும் சொற்பொருட் குறிப்பு விளக்குகிறது. இது சிறந்த புதுநோக்கு எனலாம்.

மணக்குடவர் கருத்தின் வண்ணம் மறை அந்தணர்க்குரிய தாயின் அது கூறும் அறம் ஒழுக்கங்கள் மட்டும் அனைவர்க்கும் உரியவாதல் யாங்ஙனம் என்ற ஐயம் எழக் கூடும் ஆதலாற் சில உரையாசிரியர்கள், அந்தணர்—வேத மந்திரங்களையருளிய நிறைமொழி மாந்தர் அவர்கட்கும் வேதங்களுக்கும் உள்ள கிழமை செய்யுள் தற் கிழமையாம் என்க 'கம்பன் கவிதை' என்றாற் போல.

பரிமேலழகர் கூறும் 'உரிமை பயிலுதற்கு அந்தணர் அரசர் வணிகர் உளவேனும் பயிற்றுதற்கு உள்ள உரிமையும் பயிலுதற்குள்ள உரிமையும் அந்தணர்க்கேயுரித்தாம் என்ற தலைமை பற்றியதாம்'

என்று அவர் விளக்கம் காட்டுகிறது. இவற்றின் போக்கைக் கண்டு *காளிங்கர், பரிதி, பரிப்பெருமாள்* உரைகள் மதிக்கலாம்.

தேவநேயர் 'ஆதியாதலாவது பரிசளித்தும் முற்றூட்டுதவியும் நூலாசிரியரைப் போற்றியும், அவர் நூல் வழங்குமாறு அரங்கேற்றுவித்தும் ஆதரித்தல்' என்பர். மற்றும் 'அந்தணர்—தமிழறிவர் அதிலும் சிறப்பாகத் துறவியரையே உணர்த்தும் என வினையினீங்கிய முனைவன் கண்டதே முதனூல் எனவும் நூல்—மறை நூல் மட்டும் அன்று; தமிழ் மந்திர நூல்களும் சித்தமருத்துவ நூல்களுமாம்' எனவும் கூறுவர்.

குழந்தை 'அறவோர் செய்த நூற்கும், அந்நூல் கூறும் அறத்திற்கும் அடிப்படையானது செங்கோல்' எனப்பொருள் கூறி 'ஆதியாதலாவது நூலைப் போற்றுவாரும் அறங்களைக் கடைப்பிடிப்பாரும் பலராகச் செய்தல்' எனவும் கூறுவர்.

இராம.: 'அறிவு நூல் பரவுதற்கும், அறங்கள் சரியாக நடப்பதற்கும் ஆதரவாவது கோல். அந்தணர் நூல்—அந்தண்மைக்காக ஓது நூல்களும், பிறருக்கு விளங்க எழுதும் நூல்களும்' என்பர். இது ஒரு புதிய நோக்கு. ஆயினும் 'அந்தணர் நூல்' என்ற தொடர்க்கு இப்பொருள் இயையுமாயின் ஏற்புடையதாம்.

வரத. 'ஒழுக்கமுடைய நல்லோர் கூறும் அறவழி நூற்கும் அது சொல்லும் அறச் செயற்கும் காரணம் ஆட்சி' எனக் கூறி, 'அந்தணர்—நீத்தார்' என்பர்.

ந.சி.க. அந்தணர் புரிகின்ற அறத்திற்கும் என நூற்கும் என்பதனைச் செய்யும் என் வாய்பாட்டுப் பெயரெச்சமாகக் கொண்டு 'புரிகின்ற' எனப் பொருள் காண்பர். அறத்திற்கும் என்பதிலுள்ள உம்மையை எதிரது தழீஇயதாகக் கொண்டு ஏனையர் செய்யும் ஏனைய அறங்கட்கும் என்பர். இங்ஙனம் இவர் எழுதும் சூழ்நிலை அந்தணர் நூலும் அறமாகவே அறம் என்றது எதனை? என்ற ஐயத்தின் விளைவான தெளிவாகும். இவர்கட்குப் பின்னணியில் துணையாவது *பரிமேலழகரின்* ''அரசர் வணிகர்..... அவையொழிந்த வற்றை'' என்பது வரையுள்ள பகுதியாகும்.

மயிலை சிவமுத்து 'மேலுலக இன்பத்திற்காக ஞானிகள் எழுதிய தத்துவ நூலுக்கும் அறிஞர்கள் எழுதிய நீதி நூலுக்கும் ஆதி என்றதாம்' என்பர்.

சபாபதி. 'முன்னோர் முடிபொருங்கொத்து, நின்றது — நின்று உலகத்தைக் காப்பது' என உரைப்பர்.

இங்ஙனம், அவரவரும் உரைகாணக் கையாளும் உத்தி வகைகளையும், சொன்மாற்றங்களையும், விட்டுக் கருத்துவகையால், அந்தணர் நூல்—முனிவர்களும் அவர்களைப் போன்ற தன்னலத் தியாகிகளும், உலக நன்மைக்காக் கால—தேயச் சூழலுக்கியைய உதவியகருத்துக் கருவூலங்கள் நிறைமொழி மாந்தர் அருளிய மறை மொழி எனலாம். அறம்—அவை சமுதாயத்தில் தவறாமற் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்ற மேற்கொள்ளு முறை ஆகிய இரண்டையும் பாதுகாத்தல் அரசன் கடமை என்ற மனவேறுபாடும் இனவேறுபாடும் விளையாத *காளிங்கர் குழந்தையுரைகள்* சிறந்தன ஆகும்.

'ஆதியாய்' நின்றலாவது நூலும் நூல் சொல்லும் அறமும் உலகில் நிலைபெற உதவுதல் அந்த உதவி நூல் மரபு கெடாத வண்ணம் பாதுகாப்பதாகலாம்; சமுதாயம் அறத்தை மறவாமல் மேற்கொள்ளச் செய்யும் முறையிலாகலாம். வழீஇயினாரைத் திருத்தும் வகையில் ஆகலாம் என்க.

ஒ) *ஒப்புமைப்பகுதி:*

அருந் திற லரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க் கற்புச் சிறவாதெனப்
பண்டையோ ருரைத்த தண்டமிழ் நல்லுரை —*சிலப்;நடுகல்*: 207-209

மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனில் இன்றாம் —*மணி.*, 22:208–209

தவமும் அரசிலார் இல்வழியில்லை —*நான்மணி.*, 49

அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன்கோல்:

தீயூட்டித் தாம்உண்ணும் செய்தவத்தோர் ஆனினங்கள்
நோயூட்டு காயம்இகழ்ந் தியற்றும் நோன்பினோர்
வேயூட்டு தோளார் விருத்தர்சிறு பாலர்தமைத்
தாயூட்டிப் போற்றுதல்போற் றார்வேந்தன் காக்குமால்
—*பிரமோத். பத்திராயு.* 19

அந்தணர் நூற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்:

அறமென்ன வொருதனியே திரிந்தமரா பதிகாத்தான்
—*கம்பராமா.*, 726

.... வேதியர்
நடையுறு நியமமு றவையின் றாருக
புடைகெழு விழவொடு பொலிக வெங்கணும் —கம்பராமா. ,292
அந்தண ரறத்தினெறி நின்றனர்க ளானார் —கம்பராமா. ,2765
வாழுமுறை வாழுமனு நீதியறம் வாழும் —கம்பராமா. ,2774

ஒருபுடை:

மன்னவன் கோல்:

என்னனைய முனி வரரு மிமையவரு மிடையூறொன் றுடைய ரானால்
பன்னகமு நகுவெள்ளிப் பனிவரையும் பாற்கடலும் பதுமபீடத்
தன்னகருங் கற்பக நாட் டணிநகரு மணிமாட வயோத்தியென்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டோ விகல்கடந்த புலவுவேலோய்
—கம்பராமா

ஔ) மேற்கோள் பகுதி:

சேனா.; கு என்ற நான்காம் வேற்றுமை உருபு தொடர்ந்து அடுக்கி ஒரு முடிக்குஞ் சொல் பெற்றதற்கு மேற்கோள். (தொல். சொல்.102.)

நச்.: ஷி (தொல்.சொல்.103.)

கட்டளை மெல்லின எதுகைக்கு மேற்கோள்.
(தொல்.பொருள்.செய்.94)

மயிலை.: நான்காம் வேற்றுமைச் சூத்திரத்தில் 'ஆதி என்ற மிகையால் ஏனை வேற்றுமைகள் போல அளவுபட்ட பொருண்மைத்தன்றி வரும்; அவையும் இதற்கு இது என்பதேபடி உரைத்துக் கொள்க' எனக்கூறி இக்குறளையும் மேற்கோள் காட்டுவர்.
(நன்.297)

55·4.. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. (நெசை)

உரைப்பகுதி:

அ) மணக்.: குடியைப் பொருந்தி முறைமை செலுத்துகின்ற பெரிய நிலமன்னன் அடியைப் பொருந்தி நிற்கும் உலகு எ—று.

இது முறைமை செய்யும் அரசன்கண்ணதாம் உலகு என்றது.

ஆ) *பரிதி.:* குடியைப் பரிந்துகாத்துச்[1] செங்கோல் நடத்தும் மன்னனடியைப் பற்றிவிடாது உலகம் எ—று.

இ) *பரிப.:* குடியைப் பொருந்தி முறைமையைச் செலுத்துகின்ற பெரிய நில மன்னனது அடியைப் பொருந்தி நிற்கும் உலகு எ—று.

இது முறைமை செய்யும் அரசன்கண்ணது ஆம் உலகம் என்றது.

ஈ) *காளி.:* தனது கோற்கீழ் வாழும் குடியாகிய குலமக்களைக் குலையாமல் அணைத்துக்கொண்டு செங்கோல் நடாத்தும் பூபாலனைத்[2] தமது ஆக்கத்திற்கு எல்லாம் அடியாக அடைந்து நிலைபெற்று வாழும் அனைத்து உயிர்களும் எ—று.

அடிதழீஇ என்றது தமது ஆக்க நிலைக்கு அவனே முதலாக நிற்க என்றது.

உ) *பரிமேல்.:* தன்குடிகளையும் அணைத்துச் செங்கோலையும் செலுத்தும் பெருநிலவேந்தனடியை, பொருந்தி விடார் உலகத்தார்.

அணைத்தல்—இன்சொல் சொல்லுதலும், தளர்ந்துழி வேண்டுவன கொடுத்தலும் முதலாயின.[3] இவ்விரண்டனையும் வழுவாமல் செய்வான் நிலமுழுதும் ஆளுமாகலின் அவனை 'மாநிலமன்னன்' என்றும், அவன்மாட்டு யாவரும் நீங்கா அன்பினராவர் ஆகலின் 'அடிதழீஇ நிற்கும் உலகு' என்றும் கூறினார்.

ஊ) *கவிராசர்:* தன்னாட்டிலே யிருக்கிற குடிகளையும் ரட்சித்துக் கொண்டு செங்கோலையும் முறைமை தப்பாமல் நடத்தும் ராசாவை உலகத்தார் விடாமல் இருப்பார்கள் (எ—று).

ரட்சிக்கிறதாவது—நல்ல வசனம்[4] சொல்லுதலும் வறுமையான பொழுது வேண்டுவன கொடுத்தலுமாம்.

எ) *பழைய 2:* குடிகளை அணைத்துச் செங்கோலைச் செலுத்தும் பெருநிலவேந்தன் அடியைப் பொருந்தி விடாருலகத்தார்.

அணைத்தல் இன்சொற் சொல்லலும் தளர்ந்துழி வேண்டுவன கொடுத்தலும் முதலாயின.

---

1. பரிந்து—வருந்தி, விரும்பி எனலுமாம்.
2. பூபாலன்—பூமியைப் பாதுகாப்பவன், மன்னன்.
3. முதலியன என்றமையின் ஊனமிகு பகைத்திறத்தாலும் கள்வராலும் தம் பரிசனத்தாலும் கேடு உண்டாகா வண்ணம் காத்தலும் கொள்க.
4. வசனம்—வார்த்தை

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவில் 'குடிதழீஇ' 'அடிதழீஇ' என்பதன் உரைகள் மாறுபடுகின்றன. மணக்., குடியைப் பொருந்தி' என்பர். பரிதி., 'குடியைப் பரிந்து காத்து' என்பர். காளி., 'குலமக்களைக் கலையாமல் அணைத்துக்கொண்டு' என்பர்.

பரிமேல்., 'குடிகளையணைத்துக்கொண்டு' என்று பொருள் கூறி அதன் விளக்கமாக 'அணைத்தல்—இன்சொல் சொல்லுதலும், தளர்ந்துழி வேண்டுவன கொடுத்தலும்' என்பர். இதனை ஒத்தே உரைப்பவர் கவிராசர், பழைய, தேவநேயர், குழந்தை முதலியோர். 'குடிமக்களின் கருத்தை ஒட்டி' இராம., ''குடிகளின் நன்மையைக் கருதி' வரத,

''அடிதழீஇ''

'அடியைப் பொருந்தி' மணக்., ''ஆளும் அரசனின் அடியினைப் பற்றி'' பரிதி.; 'தமது ஆக்கத்திற்கெல்லாம் அடியாக அமைந்து காளிங்கர், 'அவன் மாட்டு நீங்காத அன்பினையுடையார்' பரிமேல்., 'விடாமல்' கவிராசர். இங்ஙனம் சுருக்கியும் விரித்தும் கூறுவாராயினும், அணைத்தல்—கொடையால் இன்சொல்லாற்றழுவிக் கோடலும், அடிதழுவல்—தத்தம் ஆக்கநிலைக்கு அவனே முதலாக நிற்றலும் சிறந்தன.

மு.கோ. தழீஇ என்ற செய்து என்வினைஎச்சத்தைச் செயவெனச்சமாக்கிக் 'குடிகள் ஆதரிக்க' எனப்பொருள் காண்பர். 'அடிதழீஇ—அவனுடைய ஆட்சியின் அடிப்படைத்தத்துவங்களை' என்பர். 'தழுவி' என்பர். இவை இக்கால கருத்தாகும். வரத. 'குடிகளின் நன்மைக்காகக் குடிமக்களைத் தழுவி' என்பர். அரசன் தன்னலத்திற்காகக் குடிகளைத்தழுவாமல் என்றவாறாம். இங்ஙனம் முடிபில் வேறுபாடிலவாயினும் கருதுகோண் முறையில் வேறுபாடு கண்டின்புறத்தக்கது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்:

குடிகொன் றிறைகொள்ளும் கோமகற்குக் கற்றா
மடிகொன்று பாலகொளலும் மாண்பே -குடிஒம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல —நீதிநெறி., 29

குடிபழியாமை ஓம்பின் கொற்றவேல் மன்னர் மற்றுன்
அடிவழிப் படுவர் கண்டாய் அரும்புகழ் கெடுத லஞ்சி
நொடியலோ ரெழுத்தும் பொய்யை நுண்கலை நீத்த நீந்திக்
கொடியெடுத் தவர்க்கு நல்கு கொழித்துணர் குமர என்றான்.
—சீவக. ,2911

முற்றும்:

மறந்திலை மயங்கி வையத் தொருவரை ஒருவர் வாட்ட
இறந்துஅலை யுறாமை நோக்கி யின்னுயிர் போலக் காக்கும்
அறந்தலை நின்ற வேந்தர் அடிநிழ லன்றி யார்க்கும்
சிறந்த தொன் றில்லை கண்டாய் திருமணி திகழும் பூணோய்.
—சூளா. 662

பொருத்த மழியாத பூந்தண்டார் மன்னர்
அருத்த மடிநிழ லாரை -வருத்தாது
கொண்டாரும் போலாதே கோடல் அதுவன்றோ
வண்டுதா துண்டு விடல் —பழ. நா.,

முறையறிந் தவாவை நீக்கிமுனிவுரி முனிந்து வொக்கும்
இறையறிந் துயிர்க்கு நல்கும் இசைகெழு வேந்தன் காக்கப்
பொறை தவிர்ந் துயிர்க்குந் தெய்வப் பூதம் ..... —கம்பராமா., 51

கோலிடை யுலக மளத்தலில் ..... —கம்பராமா. ,103

நாயகன் நல்லன் நம்மை நனிபயந் தெடுத்து நல்கும்
தாயென இனிது பேணத் தாங்குதி —கம்பராமா., 4232

55.5. இயல்புளிக் கோலோச்சு மன்னவன் நாட்ட பெயலும் விளையுளும் தொக்கு. (நிசெநு)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'நாட்டுள்' பாடம். மழைபெய்தலும் விளைதலுங் கூட, நூல் சொன்ன இயல்பினானே முறையை நடத்தவல்ல அரசனது நாட்டகத்தினவாம் எ—று.

இது மேற்கூறிய முறைமை செய்ய மழையும் விளைவும் உண்டாம் என்றது.

ஆ) பரிதி.: செங்கோல் நடத்தும் அரசன் தேசத்தில் மழையும் விளைவும் உண்டாம் என்பது எ—று.

இ) பரிப்.: நூல் சொல் சொன்ன முறையினானே முறைமையை நடத்த வல்ல அரசனது நாட்டாம் மழை பெய்தலும் விளைதலும் கூட. எ—று.

மேற்கூறிய முறை செய்ய மழையும் விளைவும் உண்டாம் என்றது.

ஈ) காளி.: 'நாட்டில்' பாடம். சிறிதும் கோடாமல் குறிக்கொண்டு[1] மரபின்கண்ணே செங்கோல் நடாத்தும் வேந்தனது நாட்டிடத்து உள; யாவை எனின் பருவத்து வந்து உதவும் மழையும் பலவளமாகிய விளைச்சலும் என்னும் இவை முழுவதும் குறைவறக்கூடி எ—று.

உ) பரிமேல்.: பருவ மழையும் குன்றாத விளைவும் ஒருங்குகூடி, நூல்கள் சொல்லிய இயல்பால் செங்கோலைச் செலுத்தும் அரசனது நாட்டின் கண்ணவாம்.

உளி என்பது மூன்றாவதன் பொருள்படுவதோர் இடைச்சொல்[2] வானும் நிலனும் சேரத் தொழிற்பட்டு வளஞ்சுரக்கும்[3] என்பதாம்

ஊ) கவிராசர்: முறைமை தப்பாமல் நடத்தும் மன்னவன் நாட்டிலே மழையும் விளைவும் நிறைந்திருக்கும் எ—று.

அரசன் செங்கோலனானால் அவன்நாட்டிலே எல்லாச் செல்வங் களுமுண்டாம் எ—று.

எ) பழைய 2: 'நாட்டிற்' பாடம். நீதி நூல் சொன்ன வியல்பாற் செங்கோல் செலுத்து மன்னவன் நாட்டிடத்துப் பருவமழையும் விளை வும் தொக்கு நிற்கும்.

தொக்கு: கூடி நிற்றல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இப்பாவில் 'இயல்புளி' என்பதன் பொருள் பெரிதும் வேறுபடு கின்றது.

'நூல் சொன்ன முறைமையினால் 'மணக்,;' 'மரபின் கண்ணே'

1. குறிக்கொண்டு—இலக்காக எண்ணி
2. உளி என்பது ஏழாம் வேற்றுமையின் இடப்பொருள் உணர்த்தும் உருபு இடைச்சொல். இலக்கணக்கொத்து நூலார் உளி- இடப்பெயர்ச்சொல் அது போயிற்று என்பர், அது ஈண்டு இயல்பான் என மூன்றாம் வேற்றுமை கருவி பொருளதாய் வேற்றுமை மயக்க மாயிற்று.
3. வான்தொழிற்பட்டு வளஞ்சுரத்தல்—மழைபெய்ய வேண்டுங் காலத்துப் பெய்தும் வேண்டாத காலத்துப் பெய்யாதும், மிகுதியும் குறையுமாகாமற் பெய்து நிலத்தை வளஞ்சுரக்கச் செய்தல். நிலம் வளஞ்சுரத்தல்—விளையவேண்டுங் காலத்துவிளைதல்;

காளி.; 'இயல்பால் செங்கோல் செலுத்தும்' 'பரிமேல்.;' 'முறைமை தப்பாமல்' 'கவிராசர், தேவநேயர், குழந்தை. இவர்கள் இங்ஙனம் கருத நேர்ந்தமை 'உளி' என்பதை ஏழனுருபாகக் கண்டதே யாம்: மணக்குடவரும் அவரைப் பின்பற்றினோரும் இயல்புளி என்பதனை இட வேற்றுமையுருபாகக் கொண்டால், அது கோலோச்சு தற்கு இடமாக இயையாமையின், இயல்பான் இயல்பினான் எனத் திரித்து 'உளி' என்பது மூன்றாவதன் பொருள் படுவதோர் இடைச்சொல் என்றார். தொல்காப்பியக்காலத்து உளி ஏழனுருபாகப் படிக்கப் பெற வில்லை. ஆனால் ''மந்திரவிதியின் மரபுளி வழாஅ அந்தணர்'' (முருகு.95) எனத் திருமுருகாற்றுப்படையினும் ''உழையுளி உள் அகம் புறம் இல் இடப்பொருள் உருபே'' என நன்னூலிலும் வழங்குதலானும், உருபு மயக்கம் ஆகவன்றி, இயல்பான் மூன்றாவதன் பொருள்படுவதொன்று அன்றாகலானும் சிந்திக்கத்தக்கது. ஆதலான் இயல்பு + உள்ளி எனக் கொண்டு இடைக்குறையால் இயல்புளி யானமை ஏற்புடையது. அதிலும் பொய்மையும் வாய்மையிடத்து ஆதல்போல, நூற்பிரமாணம் உளதாயினும், குடிமக்களிற் பெரும் பாலோர் இயல்புக்கு ஏலாதாயின் அங்ஙனம் ஒழுகுதல் செங்கோ லாகாது. 'குடிமக்களின் இயல்பை உள்ளி ஒழுகுதலும் வேண்டும் அதுவும் செங்கோலின் பாலதாம் என்பார் இயல்புளிக் கோலோச்சும் என்றார்' என்றநயந்தநும் இலக்குவனார் உரை ஏற்ற முடையதாம்.

மு.கோ. 'மன்னவன் ஆட்ட (விரலசைக்க அல்லது தலை யசைக்க) மழை பெய்யும்' என்பர். மன்னவன் ஆட்ட—தொக்குப் பெய் யும் என்பதில் மழைபெய்தல் கூடும் வினையுள் பெய்தல் என்ற வினைக்கு ஏலாமை கண்டு இங்ஙனம் பொருள்கோடல் இயையுமாயின் ஏற்க.

சி.இ, 'நல்லாட்சியின் இயல்பை எண்ணி' என்பர். இவர் உளி என்பது உள்ளி இடைக்குறையாகக் கொண்டு பொருள் செய்வர்.

''நாட்ட'' என்பதற்குப் பரிப்பெருமாள் 'நாட்டுள்,' எனவும், காளிங்கர் 'நாட்டில்' எனவும் பாடங்கொண்டனர் என எண்ணச் செய்தது ஏடு எழுதுவோரால் நேர்ந்த பிழையும், பரிப்பெருமாள் 'நாட்டகத்தினவாம்' என்றும், காளி 'நாட்டிடத்து உள' என்றும் எழுதிய உரை, 'நாட்ட' என்பதற்கும் ஏற்றன என்பதைச் சிந்தியாத படித்தார் செய்த பிழையுமாமே. 'நாட்ட' இடப் பெயரடியாகப் பிறந்த பலவின்பாற்பன்மைக் குறிப்பு முற்று அது பிரியுங்கால் இங்ஙனம் விரிதல் இயல்பு. 'தேசத்தில் உண்டாம்', 'நாட்டின் கண்ணவாம' என்பனவும் இதில் வேறுபடாதன ஆதலைக் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன்:

பெரும்பொ ருள்நீதிச் செங்கோல் பெருமகன் ஆக்கம் போலப்
பரந்திட மின்றி மேலார் படமுலை குவிந்த கீழாய்
அரும்பொருள் நீதி கேளா அரசனிற் சுருங்கி நந்தும்
மருங்குநொந் தொழிய வீதி மடந்தையர் இடங்கொண் டாரே
—சீவக., 2534

இன்னது தகைமை யென்ப இயல்புளி மரபின் எண்ணி
மன்னர ்யற்றி —கம்பராமா., 273

இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக்கின்படி பூண்டது
சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
உரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம் —கம்பராமா., 23

உருளுடை நேமியால் உலகை யோம்பிய
பொருளுடை மன்னவன் புதல்வ —கம்பராமா., 2737

முற்றும்:

முறை வேண்டு பொழுதிற் பதனெளியோர் ஈண்டு
உறைவேண்டு பொழுதிற் பெயல் பெற்றோர் —புறநா., 35:15—16

கோஒல் செம்மையின் சான் றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே —புறநா., 117:6-7

வெஞ்சின வேந்தன் முறை நெறியிற் சேர்தலும்
திங்கள்மும் மாரிக்கு வித்து —திரி., 98

முற்றும்:

மழைவளம் சுரக்கு மாறும் வயல்நிலம் விளையு மாறும்
பிழையறம் வளரு மாறும் வேதநூல் விளங்கு மாறும்
தழைபொருள் ஈட்டு மாறும் சமரிடை வெல்லு மாறும்
பிழைதப வாழு மாறும் பிறழ்தராக் கோலி னாகும்— விநா அரசி., 89

ஒ) மேற்கோள்பகுதி:

நச்.: இயல்புளிக் கோலோச்சு மன்னவன் என்புழி முறைமையிலே செங்கோல் நடாத்தும் என ஏழன்உருபு விரிதலால் உளி என்பது

மூன்றன் உருபின் பொருள்பட வந்தது அன்று; பகுதிப்பொருள் விகுதியாய் நின்று தனக்கு ஏற்ற உருபை ஏற்று நின்றது என்பர். (தொல். சொல்.252)

55.6. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின். (நிசசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'கோடான் எனின்' பாடம். அரசனுக்கு வெற்றி தருவது அவன் கையிலுள்ள வேலன்று, முறைசெய்தல்; அவன் அரசனைக் கோடச்செய்யானாயின் எ—று.

இது செங்கோன்மை செய்ய வெற்றியுண்டாம் என்றது.

ஆ) பரிதி.: அரசற்கு ஆயுதம் வெற்றி கொடாது, செங்கோல் வெற்றி கொடுக்கும்; ஆதலால் செங்கோல் கைவிடுவானல்லன் எ—று

இ) பரிப்.: அரசனுக்கு வென்றி தருவது அவன் கைவேல் அன்று; முறை செய்தல்; அதனைக் கோடச் செய்யாதொழியின் எ—று.

இது செங்கோன்மை செய்ய வெற்றி உண்டாம் என்றது.

ஈ) காளி.: வேந்தர்க்கு வேலே அன்று வெற்றியைக் கொடுப்பது; மற்று மன்னனானவன் மரபினைக் கோடாமல் நடத்தும் கோலானது வெற்றியைக் கொடுக்கும். மற்று அது சிறிதும் கோடாதவாறு நடத்துமாயின் எ—று.

உ) பரிமேல்.: மன்னவனுக்குப் போரின்கண் வென்றியைக் கொடுப்பது அவன் எறியும் வேலன்று கோல், அஃதும் அப்பெற்றித்தாவது தான்கோடாதாயின்.

கோல் செவ்விதாயவழியே வேல் வாய்ப்பது என்பார் 'வேலன்று' என்றார்.'மாண்ட—அறிநெறி முதற்றே அரசின் கொற்றம்'[1] என்றார் பிறரும். 'கோடான்'[2] என்பது பாடமாயின் கருவியின் தொழில் வினைமுதன்மேல் நின்றதாக உரைக்க.

காரி: கோடான் என்பது பாடமாயின் கருவியின் தொழில் வினைமேல் நின்றது. இனி, எழுத்தாணி எழுதும் என்பது, வினை

---

1. புறநா., 55, பொன் மாட்சிமைப்பட்ட அறநெறியை முதலாக உடையது அரசனுடைய வெற்றி என்பதாம்,
2. கோடான்—வளையச் செய்யான். கோணுதல் செங்கோலின் தொழில், கோலின் தொழில் மன்னன் மேல் நின்றது.

முதலின் தொழில் கருவி மேல் நின்றது. 'மரப்பாவை நாணால் உயிர் மருட்டியற்று'[3] என்பதும் அது.

ஊ) *கவிராசர்*: ராசாவுக்குச் சண்டையிலே செயத்தைக் கொடுக்கிறது அவனாலே எறியப்பட்ட வேல் வாள் இவைகளல்ல; அவன் நடத்தும செங்கோல்முறைமை எ—று.

அரசன் நீதியாய் நடந்தால் அவன் சத்துருக்கள் தாமே கெடுவர் எ—ம்.

ஏ) *பழைய* 2: 'கோலது கோடாதெனின்' பாடம். மன்னவனுக்குப் போரினிடத்து வெற்றியைத் தருவது வேலாகிய வாயுதமன்று. செங்கோல் முறைமை கோணாமல் நடத்துவது தானே தரும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்

முற்கால உரைகளில் வேற்றுமையின்று. சிறுவேறுபாடு. 'வேல்' என்பதை ஆயுதப் பொதுப் பெயராகக் கொண்டவர்கள் *பரிதி., கவிராசர்* இருவரும். *இராமலிங்கனார்* 'வென்றி என்பது போரில் வெல்லும் வெற்றியல்ல; அங்ஙனம் கொண்டால் இக்குறளின் உயிர் நாடி 'வேலன்று' என்பது. அது உயிரற்றுப்போம். ஆதலால் செல்வ பலம் துணைபலம் குடிகளின் ஆதரவு, வேற்றரசரின் நன்மதிப்பு எல்லாஞ் சேர்ந்த வல்லமை' என்பர். கோடாத ஆட்சி குடிகளின் ஆதரவையும் அரசன் நன்மதிப்பையும் தரும் ஏனைய வலிவகைகள் வலியறிதலால் வகுக்கப்பட்டன. ஆதலால் இங்ஙனம் கருதுதலல்லாற் பயனுண்டேற்கொள்ளலாம்,

'வேல் அச்சத்தால் வென்றி விளைப்பது; கோணாத கோல் அன்பால் வென்றி விளைப்பது. இவ்விரண்டனுள் அச்சத்தால் விளைந்த வென்றி வெல்லப்பட்டாரால் அற்றநோக்கி அழியவுங்கூடும். நிலைத்த வென்றியாகாது. அன்பால் விளைந்த வென்றியோ பிறரால் தீமை வந்துழியும் குடிமக்களால் உயிரையுங் கொடுத்துக் காக்கச் செய்யும் ஆதலால் கோணாத கோலே வென்றி தருவது' என்றார். செங்கோல் ஏற்ற வழி ஆட்சிச் செருக்கால் கொடுங்கோலாகவுங் கூடுமன்றே அதுவும் ஆகாதென்பார் 'கோடாது எனின்' என்றார்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

மன்னவன் கோல்:

அங்கோல் அவிர்தொடி ஆழியான் ஆயினும்
செங்கோலன் அல்லாக்கால் சேர்ந்தாரும் எள்ளுவரால்

3. குறள். 1020.

வெங்கோன்மை வேந்தர்கள் வேண்டும் சிறிதெனினும்
தண்கோல் எடுக்குமாம் மெய் —பழ நா. 250

கோல் வருஞ் செம்மையும் .... —கம்பராமா. ,1141

சான்றெனத் தகையசெங் கோலினான் ..... —கம்பராமா..1242

பிறங்கும் கோலான் மாறாடு கொற்றம் பெறு வேந்தன்
—திருவிளை, பழியஞ்சின., 28

ஒருபுடை:

அறம்புரிந்தன் றம்ம அரசிற் பிறத்தல்
துறந்த தொடர்பொடு துன்னிய கேண்மை
சிறந்தார்க்கும் பாடு செயலீயார் தத்தம்
பிறந்தவேல் வென்றிப் பொருட்டு —தகடூர்

ஓ) மேற்கோள்பகுதி:

நச்.: அன்று என்னும் அஃறிணைக் குறிப்பு வினைமுற்று குறிப்பு உணர்த்திவருவதற்கு மேற்கோள். (தொல். சொல். 222)

சுவாமி.: வினைமுற்றுப் பெயர் கருவிப்பொருள் பெற்றுவந்ததற்கு 'வேலன்று வென்றிதருவது' என்பது மேற்கோள். (இ.கொ 83.)

55.7. இறைகாக்கும் வயைகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். (நசஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: வையகமெல்லாவற்றையும் அரசன் காக்கும்; அவ்வரசனை அவன்றான் செய்யும் முறைகாக்கும்; அதனைத் தப்பாமல் செயின் எ—று.

இது தனக்குக் காவலாம் என்றது.

ஆ) பரிதி.: உலகத்தைச் செங்கோல் முறையாலே அரசன் காப்பானாகில் அரசனை உலகம் காக்கும் எ—று.

இ) பரிப்.: வையகம் எல்லாவற்றையும் அரசன் காக்கும்: அவ்வரசனை அவன் தான் செய்யும் முறைமை காக்கும்: அதனைத் தப்பாமல் செய்யின் எ—று.

இது தனக்குக் காவல் ஆம் என்றது.

ஈ) காளி.: இவ்வையகத்து வாழும் மக்கள் முதலாகிய உயிர்கள்

அனைத்தையும் மன்னனானவன் ஒன்றனை ஒன்று நலியாமல் பாது காத்து ஒழுகும். இனி மற்று அம்மன்னவன் தன்னைத்தான் நடாத்து கின்ற செங்கோலாகிய நீதியானது நிறையக் காத்து நிற்கும்: மற்று இதனை இடைமுறியாமல் பரிகரித்துச்[1] செய்யுமாயின் எ—று.

உ) *பரிமேல்:* வையகத்தை எல்லாம் அரசன் காக்கும்: அவன் தன்னை அவனது செங்கோலேகாக்கும், அதனை[2] முட்ட வந்துழியும்[3] முட்டாமல் செலுத்துவனாயின்.

முட்டாமல் செலுத்தியவாறு மகனை முறைசெய்தான்கண்ணும்[4], தன்கை குறைத்தான்[5] கண்ணும் காண்க முட்டாது என்பதன் இறுதி நிலை விகாரத்தால் தொக்கது[6]. இவை நான்கு பாட்டானும் அதனைச் செலுத்தினான் எய்தும் பயன் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்.:* பூமியையெல்லாம் ராசா காப்பான்; ராசாவை அவன் செங்கோல் காக்கும், அந்தச் செங்கோல் கோணாமல் நடந்தால் எ—று.

செங்கோல் கோணாமையாவது—நீதி முறைமையாய் நடக்க வேணும் என்பதாம்.

ஏ) *பழைய 2.:* வையகத்தை யெல்லா மரசன் காக்கும் அரசனை அவன் செங்கோல் காக்கும், அதனை முட்டு வந்துழியும் முட்டாமற் செலுத்துவனாயின்.

முட்டாது செய்தல்; அரசனுக்கு முட்டு வந்துழியும் உலகத்திற்கு முட்டுவாராமற் காத்தல்.

---

1. பரிகரித்து—நீக்கி
2. அதனை—அச்செங்கோன்மையை
3. 'முட்டுவந்துழியும்' எனவும் பாடம்.
4. மகனைமுறை செய்தவன்—மனுநீதிச் சோழன், இவன் மகன் வீதிவிடங்கன். ஒரு நாள் தேரேறிச்சென்ற போது ஒரு பசுங்கன்று தேர்ச்சக்கரத்தில் வந்து சிக்கியுயிர் மாண்டது அதற்காக மன்னன் தன்மகனைத் தேர்க்காலின் கிடத்திக் கொன்று தண்டம் கொடுத்தான் என்பது பெரிய புராணத்தில் திருவாரூர்ச் சிறப்பிலுள்ள வரலாறு விரிவை ஆண்டுக் காண்க.
5. மதுரையை யாண்ட பாண்டியன் ஒருவன் தன்பால் அடைக்கலமாக வைத்துச் சென்ற ஒரு வேதியன் மனைவியைப் பாதுகாத்து வந்தான் ஒரு நாள் அவள் வீட்டில் ஆண் குரல் கேட்டது பாண்டியன் யார் என்றறிந்து அந்தணன் ஐயுறாதிருக்க அத்தெருவி லுள்ள கதவுகளைத் தட்டிச் சென்றான். மறுநாட்காலையில் அரசவை கூடியதும், ஆளில்லா வீட்டில் கதவைத் தட்டியவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று அவையோரைக் கேட்டான் அவையோர் இத்துணைப் பெரிய குற்றம் செய்தவன் கையை வெட்டி விடுவதே முறையென்றனர். மன்னன் தன் உடைவாளையுருவித் தன் கையை வெட்டிக் கொண்டு நிகழ்ந்ததை விளங்கச் சொன்னான் பொன்னார் கை இணைத்துப் பொற்கைப் பாண்டியன் எனப் பெயர் பெற்றான் அவனது இயற் பெயர் குலசேகரப் பாண்டியன் என்பர். இவ்வரலாற்றை பழமொழி நானூற்றில் 76ம் பாட்டானும் அறியலாம்.
6. முட்டாது என்னும் எதிர்மறை வினையெச்சத்தின் இறுதியாகிய 'து' செய்யுள் விகாரத் தால் தொக்கு 'முட்டா' என நின்றது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்.

மணக்குடவர் முதலிய அனைவர் உரைகளும் 'உலகத்தை மன்னன் காப்பான்: அவனை அவனது ஆட்சியே காக்கும்' என்பது. பரிதி. இக்குறளின் பிற்பகுதிக்கு 'அரசனை உலகம் காக்கும்' என்றனர். இது கருத்து வகையான் பெற்ற முடிபுப் பொருளேயன்றி நேர்பொருளாகாமை காண்க. பழைய உரை 'முட்டாச் செயின்' என் பதற்கு 'அரசனுக்கு முட்டு வந்துழியும் உலகத்திற்கு முட்டு வராமல்' எனக் கூறுகிறது. ஏனைய உரைகள் அச்செங்கோலுக்குக் கோணல் வராமல் காக்க என்கின்றன. இதுவே சிறந்ததாகும்.

ஒ) ஒப்புமைப்பதி:

இறைகாக்கும் வையகம்:

தன்னுயிர் போல மன்உயிர் காக்க —பழமொழி

அவனை முறைகாக்கும்:

அனைய மன்னற் கழிவுமுண் டாங்கொலோ —கம்பராமா. 1513

முற்றும்:

முறைமைமுட் டாது செய்து முழுநிலம் காப்பின் அந்த
இறைவனைச் செங்கோல் காக்கும் —விநா. அரசி., 92

ஓருபுடை:

நாடொன்றும் வாழக் கேடொன்றும் இல்லை —கொன்றை., 49

சாலமறைத்தோம்பிச் சான்றவர் கைகரப்பக்
காலை கழிந்ததன் பின்றையும் —மேலைக்
கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையு மூர்ந்தான்
முறைமைக்கு மூப்பிளமை யில் —பழமொழி., 242

எனக்குத் தகவன்றா லென்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் றானாய்த்-தவற்றை
நினைத்துத்தன் கைக் குறைத்தான் தென்னவனுங் காணா
ரெனச் செய்யார் மாணா வினை —பழமொழி., 76

தீமை செய்தாற் போற் செங்கை குறைத்தாய்
—திருவிளையாடற்புராணம்

ஓ) மோற்கோள் பகுதி:

சிவஞான.: காட்டிய கண்ணே தனைக்காணா: 'காணாது என்னும்

துவ்வீறு தொக்கு நின்றது; 'முறைகாக்கும் முட்டாச் செயின்' என் புழிப்போல. (சிவஞான.சூ.9 அதி.2.)

55.8. எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தால் தானே கெடும். (நாசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: எளிய காலத்தோடே நூலாராய்ந்து முறைமை செய்யாத அரசன், தனது தண்பதத்தினானே கெடுப்பாரின்றியும் தானே கெடும் எ—று.

எண்பதமாவது வந்தவர் தங்கள் குறையைச் சொல்லுதற்கு எய்துங்காலம்; தண்பதமாவது குறையைச் சொல்லுதற்குத் தாழ்க்குங் காலம்.

ஆ) பரிதி.: எளிதாகிய செங்கோல் முறையாலே உலகம் காவாத மன்னவன் தெய்வசகாயத்தினாலே எளிதாகக் கெடுவன் எ—று.

இ) பரிப்.: எளிய காலத்தோடே நூல் ஆராய்ந்து முறைமை செய்யாத அரசன் தனது தண்பதத்தாலே கெடுப்பார் இன்றியும் தானே கெடும் எ—று.

எண்பதம் ஆவது வந்தவர்கள் தம் குறையைச் சொல்லுதற்கு எளிய காலம். தண்பதம் ஆவது குறையைச் சொல்லுதற்குத் தாழ்க்கும் காலம். இது காலம் தப்பாமல் கேட்டுச் செய்யவேண்டும் என்பதூஉம் முறை செய்யாக்கால் வரும்குற்றமும் கூறிற்று.

ஈ) காளி.: விசார வழியில்[1] ஆராய்ந்து செங்கோல் நடத்தாத மன்னவன் மற்று இனித் தான் செய்யும் தண்ணிய வழியாலே தானே கெட்டுவிடும் எ—று.

எண்பதத்தான் என்பது எண்ணு நெறியால் என்றது. தண்பதத் தான் என்பது தண்ணியநெறியான் என்றது.

உ) பரிமேல்.: முறைவேண்டினார்க்கு[2] எளிய செவ்வியை[3]

1. விசார வழி— ஆராயுமுறை
2. முறை வேண்டினார்க்கு- பிறர் தமக்குச் செய்த தீமையைக் கூறி நீதியை வேண்டினோர்க்கு
3. எளிய செவ்வி —அரசனையில் யாவரும் கண்டு தங்குறைகளைச் சொல்வதற்கு எளியனாயிருத்தல்.

உடையனாய் அவர்[4] சொல்லியவற்றை நூலோர்[5] பலரோடும் ஆராய்ந்து நின்றவுண்மைக்கொப்ப முறை செய்யாத அரசன். தாழ்ந்த பதத்திலே நின்று தானே கெடும்.

எண்பதத்தான்[6] என்னும் முற்றுவினையெச்சமும், ஓரா என்னும் வினையெச்சமும், செய்யா என்னும் பெயரெச்ச எதிர்மறையுள் செய்தல் வினைகொண்டன. தாழ்ந்த பதம் பாவமும் பழியும் எய்தி நிற்கும் நிலை. அல்லவை செய்தாற்கு அறங்கூற்றம்[7] ஆகலின் பகைவரின்றியும் கெடும் என்றார். இதனான் முறைசெலுத்தாதானது கேடு கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்:** முறையிடுகின்றவர்களுக்கு எளியனாய் அவர்கள் சொன்னதைக் கேட்டு நீதிமான்கள் பலரோடும் ஆராய்ந்து, அதற்கு ஏற்கச் செய்யாத அரசன், தாழ்ந்த விடத்திலே நின்று, தானே கெடும் எ—று.

தாழ்ந்தவிடமாவது — முறையிடுகிறவர்கள் காணாத விடம் என்பதாம்.

ஏ) **பழைய 2:** 'எண்பதத்தான் நாடி' பாடம். நீதிநூலை எண்ணுஞ் செவ்வியாலாராய்ந்து நீதி நூலின்படி முறை செய்யாத மன்னவன் தாழ்ந்த பதத்திலே நின்று தானே கெடும்.

எண்பதம்: எண்ணுஞ் செவ்வி. தண்பதம்: தாழ்ந்த பதவி. அது பாவமும் பழியுமென்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் 'எளிய காலத்தோடே நூல் ஆராய்ந்து முறைமை செய்யாத அரசன் கெடும்' என்கிறார். இதில் எளிய காலம் என்பது காட்சிக்கு எளியனாயிருக்குங் காலமா? அல்லது குறைகளைக் கேட்டசுருங்கிய காலத்துள்ளே ஆய்ந்து என்பதா? இரண்டுமா? என்பது துணியமாட்டாமையால் 'வந்தவர் தங்கள் குறையைச் சொல்லுதற்கு

அவர்-நீதியை வேண்டி வந்தவர்கள்.

5. நூலோர் — ஆட்சிக்குரிய அரசியல் நூல்களைக் கற்றறிந்த அமைச்சர் முதலான எண்பேராயத்தோர்.

6 'எண்பதத்தான்' —என்னுங்குறிப்பு வினைமுற்று' எண்பதத்தானாகி' என எச்சப் பொருள்பட நிற்றலின் 'முற்றுவினை எச்சமும்' என்றார்' ஓரா—ஓர்ந்து எனச் செய்யா என்வாய்பாட்டு உடன்பாட்டு இறந்தகால வினைஎச்சம். இவையிரண்டும் செய்யா என்னும் எதிர்மறைப் பெயரெச்சத்தின் செய் என்னும் வினைப்பகுதியைக் கொண்டு முடிந்தது. வினைப் பகுதியனைத்தும் தொழிற் பெயராதலின் என்க

7: நான்மணிக்கடிகை 85: அறமல்லாத செய்தாற்கு அறமே கூற்றுவனாம்என்பது,

எய்துங்காலம் என்ற குறிப்பு எழுதிக் காட்சிக்கு எளியனாதல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். இவரது பொழிப்புரை குறைகளைக் கேட்ட அரசன் விரைந்து ஆய்ந்து முறை செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. இரண்டுமே முறை செய்வானுக்கு இன்றியமையாதன ஆகலான் கொள்ளத் தக்கனவே. காலந் தாழ்த்து முடிவு கூறின் செங்கோன்மை தவறவும் காரணங்கள் உண்டாகக் கூடும் ஆதலான் என்க.

'தண்பதம்' என்பதற்குக் 'குறையைச் சொல்லத் தாழ்க்குங் காலம்' என்கிறார். அதாவது வந்தவன் விரைந்து சொல்லிக் கொள்ள முடியாமல் காலம் நோக்கிக் காத்திருக்க வேண்டிய நிலை. தாழ்ந்த நிலை' என்பர்.

பரிப்பெருமாள், *மணக்குடவர்* உரையை அடித்தளமாக வைத்துச் சிறப்புக் குறிப்பு எழுதுபவர். இக்குறட்கு 'காலந்தப்பாமற் கேட்டு செய்ய வேண்டும்; அங்ஙனம் செய்யாக்கால் குற்றம் வரும்' என்றனர். இவர் கருத்தும் கேட்பதையும் காக்க வைக்காமற் கேட்டுக் காலத்தோடே அதாவது தாழ்த்தாமல் முறைசெய்ய வேண்டும் என்பதாகிறது.

பரிதியார் 'எளிதாகிய செங்கோன் முறைமையால் காவாத மன்னன் தெய்வ சகாயத்தால் எளிதாகக் கெடுவன்' என்பர். இரண்டையும் 'எளிதாக' என்பதால் இவர் கொண்ட பாடம் ''எண்பதத்தான் ஓரா''..... ''எண்பதத்தால் தானே கெடும்'' என்பதாக இருத்தல் கூடும். கெடுவதற்கும் தெய்வ சகாயம் வேண்டப்படுவதா? என்ற ஐயம் விளைவதால் ஏதேனும் பாடப்பிறழ்ச்சியிருத்தல் கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது.

காளிங்கர் 'எண்பதம்—எண்ணுநெறி. தண்பதம்—தண்ணியநெறி' என்பர்.

பரிமேல். 'எண்பதம்—எளிய செவ்வி; தண்பதம் தாழ்ந்த பதம்; அஃதாவது பழியும் பாவமும் எய்துநிலை' என்பர்.

கவிராசர் 'எண்பதம்—எளிய செவ்வியனாய், தண்பதம்—தாழ்ந்த இடம். அஃதாவது முறையிடுகிறவர்கள் காணாத இடம்' என்பர்.

பழைய உரை. எண்பதம்—எண்ணும் செவ்வி. தண்பதம்—தாழ்ந்த பதவி. 'அது பழியும் பாவமும்' என்று கூறும்.

இவற்றுள் 'வந்தவனைக் காக்க வைக்காமல் விரைந்து கேட்டு ஓர்ந்துணர வேண்டியவர்களோடு உடனே ஓர்ந்து, காலந்தாழ்த்தாது முறை வழங்காத மன்னன் தானே கெடுவன்' என்ற *மணக்குடவர்* உரை புதுமையும் பொருந்துவதுமாகும். காலந்தாழத்து முடிவு கூறலாம் என்றிருக்குமாயின் கண்ணோட்ட முதலியன நிகழ்ந்து கருத்தை மாற்றிச் செங்கோன்மையைச் சீர்குலைக்கவும் கூடும். ஆதலின் 'விரைந்து செய்க' என்றது சிறந்ததாயிற்று. பிற்கால உரையாசிரியர்களில் *குழந்தையும்* 'தண்பதம் முறைசொல்வதற்குத் தாழ்க்கும் நிலை' என இக்கருத்தை விளக்குவர். 'நெறியான்' என்ற *காளிங்கர்* உரையும், 'கருணையான்—கண்ணோட்ட முதலிய வற்றான்' என்ற கருத்தினைத் தந்து *மணக்குடவரையே* ஒட்டிச் செல்கிறது.

இராம. 'தன் பதவிக்கு எண்ணப்பட்ட தன்மையோடு விசாரித்து நீதி நடத்தாமல் ஓரரசன் இரக்கங் காட்டி விடுவானாயின் செங்கோன்மை கெடும்' என உரை வகுத்து, 'எண்பதம்—எண்ணப்பட்ட பதவி, தண்பதம்—தாழ்ந்த நிலையன்று; இரக்கக் குணத்தால்' என்பர். இக்கருத்து 'ஓர்ந்து கண்ணோடாது' என்ற முதற்குறளானே பெறப் படுதலின் மீண்டுங் கூறல் வேண்டா என்பது.

வரத. 'தண்பதம்—ஆழ்ந்து முடிவு காணும் நிலை; எண்பதம்—எளிய நிலை' எனக்கொண்டு மக்கள் மனநிலையையறிந்து அவசரப்படாமல் ஆய்ந்து முடிவு காணவேண்டும் எனக் கருத்துரைப்பர். இதற்கியைந்த சொல்லமைதியில்லாமையும் சிந்திக்கத் தக்கது.

ஆகவே இவ்வுரைகளுள் *மணக்குடவருரையும்*, *குழந்தையுரையும்* சிறத்தற்குக் காரணம் முன்னரே கூறப்பட்டது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முறைவேண்டு பொழுதிற் பதன் எளியோர் —புறநா., 35:15.

எண்பதத்தான்:

காட்சிக் கெளியன் —குறள் 386

தன்னுணர் பொறிபிறர் தன்கண் கூட்டென
இன்னணம் இருவகைத் திறைவர் வாழ்க்கைதான்
தன்னுணர் பொறிப்புலந் தன்னி னாம்பிறிது
இன்னணம் இயற்றுகென் றமைச்சர் ஏவுவார் —சூளா., 233.

எளிவரும் இயல்வினன் —திருவாய்மொழி—1, 3:2

யாருமோர் நிலைமையன்என அறிவெளிய எம்பெருமான்
—திருவாய்மொழி—1.3:4

முற்றும்:

.... எளியசெவ் வியனு மாகான்
குறைவளர் குற்றம் ஓரான் குணத்தொடு முறைசெய் யானை
நிறைதரு பாவந் தேய்க்கும் நெடும்பகை யின்றா மேனும்.
—விநா. அரசி,92

அல்லாத மாந்தர்க்கு அறங் கூற்றம் —மூதுரை

அல்லவை செய்தார்க் கறங்கூற் றமா மென்னும்
பல்லவையோர் சொல்லும் பழு தன்றே —சிலம்பு. வழக்கு

55.9. குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல் வடுவன்று வேந்தன் தொழில். (நிசகூ)

உரைப்பகுதி:

அ) மணக்., பரிப்.: குடிகளை நலியாமல்[1] காத்து ஓம்புதற்காகக் குற்றஞ் செய்தாரை ஒறுத்தல் குற்றமன்று; அரசன் தொழில் எ—று.

ஆ) பரிதி.: குடியை அறுவகைப் பயந்[2] தீர்த்துக் குடியில் உண்டான குற்றமெல்லாம் பார்த்துத் தீர்ப்பது செங்கோல் எ—று.

இ) பரிப்.: குடிகளை நலியாமல் காத்து ஓம்புதற்காகக் குற்றம் செய்தாரை ஒறுத்தல் குற்றம் அன்று அரசனது தொழில் எ—று.

ஓம் என்று திரிக்க. பிறர்க்கு இன்னா செய்தல் அறம் அல்ல என்றார் ஆகலின், ஈண்டுக் கூறுகின்றது அறம் அல்லவாம் பிற என்று ஐயுற்றார்க்கு இது கூறப்பட்டது.

ஈ) காளி.: தமது அகங்காவல் குடிகட்கே இயல்பானது; அதனால் தனது கோல்கீழ் வாழும் குடிமக்களைப் புறங்காவல் காத்து மற்று

1, நலியாமல்—வருந்தாமல்,

2, அறுவகைப் பயங்களாவன அரசனாகிய தன்னாலும், தன் ஏவலர்களாலும் பகைவரானும் கள்வரானும்,வேடரானும் விலங்கு முதலியவற்றானும் நேரும் அச்சங்கள். பெரியபுராணம் தன்னால் தன் பரிசனத்தால் என்னும் பாடலில் ஐவகைப் பயங்களையே அறிவிக்கின்றது.

அப்பாதுகாவற்கு இடையில் சோர்வு வராமல் செலுத்துமிடத்து, குடிமக்கட்குச் சோர்வு முதலிய குற்றம் உளதாயின் அதனைக் கடியுமாறு கடிந்தொழுகுதல் கொடுங்கோன்மை அன்று; அரசர்க்குச் செங்கோன் முறைமை எ—று.

உ) *பரிமேல்.*: குடிகளைப் பிறர் நலியாமல் காத்துத் தானும் நலியாது பேணி, அவர் மாட்டுக் குற்றம் நிகழின் அதனை ஒறுப்பான் ஒழித்தல்[3], வேந்தனுக்குப் பழியன்று தொழிலாகலான்.

துன்பஞ் செய்தல், பொருட்கோடல், கோறல் என ஒறுப்பு மூன்று; அவற்றுள் ஈண்டைக்கு எய்துவன முன்னைய என்பது குற்றங்கடிதல் என்பதனால் பெற்றாம். தன்கீழ் வாழ்வாரை ஒறுத்தல் அறனன்மையின் விடுவாம் என்பதனை ஆசங்கித்து,[4] அஃதாகாது, அரசனுக்கு அவரை அக்குற்றத்தினீக்கித் தூயராக்குதலும் சாதிதருமம்[5] என்றார்.

ஊ) *கவிராசர்*: குடிகளைப் பிறர் வாதை பண்ணாமல்[7] காத்து, தானும் நலியாது பேணி, அவர்மாட்டுக் குற்றம் நிகழின் அதனைத் தண்டனையால் ஒழித்தல் வேந்தனுக்குப் பழியன்று; நல்ல தொழிலாம் எ—று.

தன்கீழ் வாழ்வாரைக் குற்றத்திற்குத் தக்க தண்டனை செய்து அவரை அந்தக் குற்றஞ் செய்யவொட்டாமல் அடக்குகிறது நீதியாம்.

எ) *பழைய 2*: குடிகளைப் பிறர் நலியாமற் காத்துத் தானும் நலியாமற் பேணி, குடிகளிடத்துக் குற்றங்களை நீக்குதல், வேந்தனுக்கு வடு அன்று; தன்றொழிலாகலான்.

வடுவாவது, குடிகளை நலிவாரைக் கொலை செய்தலும், குடிகள் குற்றத்துக்குத் தக்க தண்டஞ் செய்தலும் பழியல்ல வென்றவாறு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக். பரிப். 'குடிகளைக் காப்பதற்காகக் குற்றஞ் செய்தாரை ஒறுத்தல் வேந்தன் தொழில்' என்பர். இவர் 'ஓம்பி' என்ற செய்து

3. 'ஒழிப்பான் ஒறுத்தல்' எனவும் பாடம்
4. ஆசங்கித்து— ஐயுற்று.
5. அஃது என்றது குற்றஞ்செய்தாரை ஒறுத்தலை.
6. சாதி தருமம் என்பார் வடுவன்று வேந்தன்தொழில் என்றார்' எனவும் பாடம், சாதி தருமம —(அரச) சாதியின் இயல்பு.
7. வதை பண்ணாமல்—துன்புறுத்தாமல்.

என் எச்சத்தைக் காரணப் பொருளில் வந்த செயவென் எச்சமாக்கி முடித்தார். ஓம்புதலும்—கடிதலும் ஒரு வினைமுதல் வினையாதலின் கொண்டு முடிதற்கு இழுக்கின்று. திரிக்க வேண்டிய இன்றியமை யாமையும் இல்லை என்க. *பரிப்பெருமாளும்* இங்ஙனமே கூறுவர். ஆயினும் அங்ஙனம் திரித்து, குடிமக்கள் நலங்கருதியே ஒறுத்ததாம் என்பதை வலியுறுத்தற்கென்க.

பரிதி. 'காத்தலும் கடிதலும் செங்கோன்மை' என்றார். கடிதல்—குடிகட்குத் தீமை செய்யும் பிறரை மட்டும் அன்று. குடிகளும் பிறர்க்குத் தீமை செய்யாமற் காத்து என்ற கருத்தினர்.

பரிப். 'பிறர்க்கு இன்னா செய்தலும் அறமாம். குடிகளைக் காக்கும் முறையில் அரசற்காயின்; என்பதாம்' என்பர்.

காளி: 'அவரவர்கள் ஒழுக்கங்கெடாமல் காத்துக் கொள்வது அகக் காவல், அதனைக் குடிமக்களே காத்துக் கொள்வார்கள். அவர்கட்குத் தீமை பிறரால் விளையாதபடி பாதுகாக்கும் புறக்காவல் அரசன் கடமை. அதனைச் செய்வதில் அரசன்சோர்வு படுதல் கூடாது. குடிகள் சோர்வால் அகக்காவலை நழுவவிட்டுக் குற்றஞ்செய்ய முற்படுவராயின் அவர்களைத் தண்டித்துத் திருத்துதல் அரசன் கடமையேயன்றிக் கொடுங்கோன்மையாகாது' என்பர். இவர் உரையால் அரசனும் சோர் வுறுதல் கூடாது. குடிகளும் சோர்வுறுதல் கூடாது என இருவகையாக் குற்றத்தையும் எடுத்துக் காட்டி அரசன் தன் சோர்வைத் தானே கடி தல் வேண்டும். குடிகளின் சோர்வைக்கடிதல் வேண்டும் என்ற கருத்துக் கிடைக்கிறது. இவர்'புறம் காத்தல்' என்பதனை ஒரு சொல்லாகக் கொள்ளாமல் இரு சொல்லாகக் கொண்டு 'புறக் காவல் அகக்காவல்' எனப் பொருள் காண்பர்.

பரிமேலழகரும் 'குடிகளைப் பிறரும் அரசனும் நலியலாகாது' என இருவகை நலிவுகளைக் கூறுவர்.'ஒறுக்கும் வகையை மூன்றாக்கி அவற்றுள் 'துன்பஞ் செய்தலை மட்டும் குற்றங்கடிதல்' என்றார். இவர் உரை சிறப்புடையது.

தேவநேயர் 'குடிபுறங்காத்து ஓம்புதற்குக் கூறும் விளக்கமும், குற்றத் தண்டவகைகளும் மிகச் சிறந்தன. ஓர்ந்துணரத் தக்கன. அவை: ''தண்டிக்குமுறை மன்றுபாடு—தண்டம்—குற்றம் என மூவ கைப்படும். மன்று பாடு -பணத்தண்டனை தண்டம் -துன்பத்தண் டனை உறுப்பறைத் தண்டனை, காலத்தண்டனை முதலியன.குற்றம்-

கோயில் விளக்கெடுத்தல் முதலிய கடமைத் தண்டனை. துன்பத்தண்டனை பொதுவும்-இடந்தோறும் வேறுபடுவதாகிய சிறப்பும் என இருவகைத்து. அவை ஒவ்வொன்றும் மானக்கேட்டோடு கூடியதும் கூடாததும் என இருவகைப்படும், 'குற்றங்கடிதல் என்றதனால் கொலை யொழிந்த ஏனைய தண்டனைகள் ஈண்டுக் கருதப்படும்' என்பர்.

வரத: 'புறங்காத்து என்பதால் வெளிநாட்டுப் பகையைத் தடுத்தலும் ஓம்பல் என்றதால் குடிகளின் வளர்ச்சியில் கருத்தூன்றலும், குற்றங் கடிதல் என்றதால் உள் நாட்டில் தீயரைத் தண்டித்தலும் அரசன் கடமையெனக் கருதியவாறாம்' என்பர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

குடிபுறம் காத்து:

துளங்குடி திருத்திய வலம்படு வென்றி —பதிற்று., 37

கொற்றம் கொண்டு குடிபுறங் காத்துச்
செற்ற தெவ்வர் தேஎம்தம தாக்கியும் —மணி., 23:11.12

.... கிளர்வேந்தன் தன்நாடு
வாட்டானன் றென்றல் வனப்பு —சிறுபஞ்ச., 9

குடிபுறங்காத்து —பெருங்.,5.8:20

குடிபுறம் காத்து ஓம்பி:

குடிபுறம் காத்தோம்பும் செங்கோலான் —கலி., 130;19

மாநிலம்கா வலனாவான் மன்னுயிர் காக்கும்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும்தீர்த் தறங்காப்பான் அல்லனோ
—பெரிய. மனுநீதி., 36

குடிபழி யாமை ஓம்பின் கொற்றவேன் மன்னர் மற்றுன்
அடிவழிப் படுவர் கண்டாய் அரும்புகழ் கெடுத லஞ்சி
நொடியலோ ரெழுத்தும் பொய்யை நுண்கலை நீத்த நீந்திக்
கொடியெடுத் தவர்க்கு நல்கு கொழித்துணர் குமர என்றான்
—சீவக, 2911

முற்றும்:

நாயக னல்ல னம்மை நனிபயந் தெடுத்து நல்குந்
தாயென வினிது பேணத் தாங்குதி தாங்கு வாரை

யாயது தன்மை யேனு மறவரம் பிகவா வண்ணந்
தீயன வந்த போது சுடுதியாற் றீமை யோரை —கம்பராமா., 4232

பரிசனம் பகைவர் கள்வர் படர்தரும் உயிர்கள் தாம்என் (று)
உரைசெய்ஐந் திடத்தி னாலும் உலகிடை இடையூ றெய்தா
வரிசையில் காத்து நீதி வழுக்கினார் தம்மை மொத்திக்
கரிசறப் பொருளும் கோடல் காவலர் தருமம் மைந்தா —விநா.அரசி.91

ஒருபுடை:

..... முனிவழி முனிந்து ..... —கம்பராமா.,51

கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்
சென்று மற்றவன் சிந்தையை தேர்குவாய் —கம்பராமா., 4376

குற்ற மாயதொன்று உண்டு குணங்களால்
அற்ற கீழுயிர் மேலரு ளாமையே —சூளா., 140

55.10. கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனோடு நேர். (நநo)

உரைப்பகுதி:

அ) மணக.: கொடுமை செய்தாரைக் கொலையினானே அரசன் ஒறுத்தல் குற்றமன்று; உழவன் பைங்கூழ் வளர்தற்குக் களை களைந்ததனோடு ஒக்கும் எ—று.

கொடியாராவார் கள்வர், ஆறலைப்பார்,[1] சூறைகொள்வார்[2].

ஆ) பரிதி.: அரசன் கொலையில் மிகுத்தாரைக் கொல்வது பயிர்க் குக் களைபிடுங்குதல் ஒக்கும் எ—று.

இ) பரிப.: கொடுமை செய்தாரைக் கொலையினானே அரசன் ஒறுத்தல் குற்றம் அன்று; பைங்கூழ் வளர்தற்குக் கவர்களை களைந்த தனோடு ஒக்கும் எ—று.

கொடியராவார்கள் பலர்: ஆறலைப்பார், சூறைகொள்வார் இவர்கள் போல்வார். பிறரைக் கொல்லாதாரைக் கொல்லுதல் நீதி

1. ஆறு அலைப்பார்-வழிப்பறி செய்பவர்கள்.
2. சூறை—கொள்ளை.

அன்று ஆயினும் கொடியாரைக் கொல்ல வேண்டும் என்றது.

ஈ) காளி.: தகுதி ஆராயாது உலகத்துக் கொலைத் தொழிலினால் சாலக் கொடியராய் உள்ளாரை அரசனானவன் தக்காங்கு செறுத்தல்[3] ஆகிய நீதி யாதினை ஒக்கும் எனின், பசும்பயிர் பாழ்பட நெருக்குவ தாகிய களையினைக்[4] கண்டு பறித்து எறிந்த அதனோடு ஒக்கும் எ—று.

உ) பரிமேல்.: அரசன் கொடியவர்களைக் கொலையான் ஒறுத்துத்[5] தக்கோரைக் காத்தல், உழவன் களையைக் களைந்து பைங்கூழைக் காத்தலோடு ஒக்கும்.

கொடியவர் என்றது தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார். சூறைகொள்வார், பிறனில் விழைவார் என்றிவர்முதலாயினாரை. இவரை வடநூலார் ஆததாயி கள் என்ப. இப்பெற்றியாரைக் கண்ணோடிக் கொல்லாவழிப் புற்களைக்கு அஞ்சா நின்ற பைங்கூழ்போன்று நலிவுபல எய்தி உலகு இடர்ப்படுதலின், கோறலும் அரசற்குச் சாதிதருமம் என்பதாயிற்று. இவை இரண்டுபாட்டானும் செங்கோல் செலுத்தும் வெண்குடை வேந்தற்குத் தீயார்மாட்டு மூவகை ஒறுப்பும்[6] ஒழியற்பாலவல்ல என்பது கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: அரசன் கொடியவர்களைத் தண்டித்து நல்லவர் களைக் காக்கிறது எப்படிப் போலே என்றால், பயிரிடுகிறவன் பயிருக் குள்ளே இருக்கிற புல்லைப் பிடுங்கிப்போட்டுப் பயிரை ரட்சிக்கிறாப் போலே எ—று.

கொடியவர்களாவார் — தீக்கொளுத்துகிறவர், நஞ்சிடுவர், ஆயுதங்களாலே கொல்லுகிறவர், கள்ளர், ஒருவர்மேலே பகையாய்த் தூற்றுகிறவர், கொள்ளையிடுகிறவர், பிறனுடைய இல்லாளைச் சேருகிறவர் முதலாயினோர். இவர்களைத் தண்டியாவிட்டால், புல் அதிகமாய்ப் படர்ந்த பயிர்போல நாட்டுமக்கள் நலிவுபடுவர் என்பதாம்.

---

3. செறுத்தல்—தண்டித்தல்
4. களை—பயிர்களின் சத்துணவைக் கவர்ந்து வளரும் கோரை, ஆரைக்கீரை முதலியன ஊடுருவற்றாவரங்கள்.
5. ஒறுத்து – தண்டித்து
6. மூவகை ஒறுப்பு—துன்புறுத்தல், பொருள் கோடல், கொல்லுதல் என்ற மூவகைத் தண்டனையும்.

ஏ) *பழைய* 2 : அரசன் கொடியவர்களைக் கொலை செய்து ஒறுத்துத் தக்கோரைக் காத்தல், உழவன் களையைக் களைந்து பைங் கூழாகிய பயிரைக் காத்ததனோடு ஒக்கும்.

கொடியர்: தீயிடுவார், நஞ்சிடுவார், களவு கொள்வார், கொலை செய்வார், வழிபறிப்பார், சூறை கொள்வார், பிறர் மனை விழைவார் முதலாயினார் இவர்களை மன்னவன் கொலை செய்வது.

மல்லர்: அரசன் கொடுமையுள்ளவர்களைத் தலையாக்கிணையி னாலத் தெண்டிக்கிறது களைவெட்டிப் பயிர்களைக் காக்கிறதுக்கு ஒக்கும் என்றவாறு.

களையினால் நல்ல பயிருக்குச் சேதம் வாராதபடிக்குக் களை வெட்ட வேண்டியது போலப் பொல்லாதவர்களால் நல்லவர்களுக்குக் கேடு வராதபடிக்கு அரசன் அவர்களைக் கலைக்க வேண்டியது என்பது கருத்து

கொலையில்—கொலையினால்; கொடியார்—கொடுமையுள்ளவர் கள்; வேந்து—ராசா; ஒறுத்தல் — தெண்டித்தல்; பைங்கூழ்—பயிர்; கட்டல்—காத்தல்; நேர்—உவமை

ஐ) தொகுப்பும் குறிப்பும்

பரிப்., 'கொலை இல் கொடியாரை' எனப் பிரித்துப் 'பிறரைக் கொல்லாதாரைக் கொல்லுதல் நீதி அன்று; ஆயினும் கொடியாரைக் கொல்லவேண்டும்' என்பர். இது குறட்பாவின் சொல்லமைதிக்குப் பொருந்துமேல் சிந்திக்கலாம்.

காளிங்கரின் 'தகுதி யாராயாது' என்ற குறிப்பு கொடியவனு டைய தகுதிகள் பலவற்றையும் கருதச்செய்கிறது. 'ஒருவன் கொடியனாதற்குச் சிறந்த காரணம் கொலையே' என்பார். கொலை யிற் கொடியார் என்றார் நயந்தோன்ற இவர் உரை செல்லுகிறது.

பரிமேலழகர், 'ஒறுத்தல் வகை பலவாதலின் கொலையிற் கொடியார்க்குக் கொலையே ஏற்றது' என்பர்.

கொலையின் ஒறுத்தல் எனத் தண்டனைச் சிறப்புத் தோன்றவும் உவமைக்கியையவும் உரைத்தனர். ஒறுத்தல் வகைகளைத் *தேவ நேயருரையாக* 549 குறளிற் காண்க.

ஜி.வரத., 'கொலையிற் கொடியாரை' என்பதைப் பிரித்து 'கொலை செய்வாரையும் மக்கள் வளர்ச்சியைத் தடுக்கும் கொலை போன்ற

செயல் செய்வாரையும் ஒறுக்க' என்பர். கொலையிற் கொடியாரையும் கொடியாரையும் என மீளவும் பிரித்துப் பொருள் கோடலை வடநூலார் யோகவிபாகம் என்னும் நூற்புணர்ப்பு என்பர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கொலையின் கொடியாரை ஒறுத்தல்:

கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வென்வேற் கொற்றம்..... —சிலப்.,20: 64—65

தொகைமை சான்றநங் குரவர்பல் லோர்உயிர் தொலைத்த
பகைஞ ராதலின் அமரரைச் சிறையிடைப் படுத்தேன்
மிகைசெய் தார்களை நாடியே வேந்தொ றுத்திடுதல்
தகைமை யேஎன நூல்களும் சாற்றும்
—கந்த.சூரனமைச்., 140

களை கட்டதனொடு:

கரன்படை படுத்தவனை வென்று களைகட்டா
—கம்பராமா., 6251

முற்றும்:

நன்று தீதென் றியல்தெரி நல்லறிவு
இன்றி வாழ்தலன் றோவிலங் கின்னியல்
நின்ற நன்னெறி நீயறி யாநெறி
ஒன்று மின்மையுள் வாய்மை யுணர்த் துமால்
—கம்பராமா., 4157

நன்றி கொன்றரு நட்பினை நார்அறுத்
தொன்று மெய்மை சிதைத்துரை பொய்த்துளார்க்
கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்
சென்று மற்றவன் சிந்தையைத் தேர்குவாய்
—கம்பராமா. கிட்கிந். 3

நாயகன் அல்லன் நம்மை நனிபயந் தெடுத்து நல்கும்
தாயென இனிது பேணத் தாங்குதி தாங்கு வாரை
ஆயது தன்மை யேனும் அறம்வரம் பிகவா வண்ணம்
தீயன வந்த போது சுடுதியால் தீமை யோரை
—கம்பராமா., 4232

நஞ்சம் அன்ன வரைநலிந் தால்அது
வஞ்சம் அன்று மனுவழக் காதலால்

அஞ்சில் ஐம்பதில ஒன்றறி யாதவன்
நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாய்
—கம்பராமா., 4378

ஆவா என்னா துலகத்தை அலைக்கும் அசுரர் வாழ்நாள்மேல்
தீவாய் வாளி மழைபொழிந்த சிலையா திருமா மகள்கேள்வா
—திருவா.6.10:4

முற்றும்:

கருவிநஞ் சாதி தம்மால் காமரார் உயிரைக் கொல்வோர்
வெருவரச் சூறை கொள்வோர் மேவியா றலைப்போர் கள்வர்
உருவளர் பிறனில் வேட்போர் உவர்முத லோரைக் கோறல்
பருவரு பாவம் அன்று பயிர்க்களை களைதல் போலாம்
—விநா. அரசி., 90

ஒருபுடை:

குற்ற மாயதுஒன்று உண்டு குணங்களால்
அற்ற கீழுயிர் மேலரு ளாமையே —சூளா., 140

வளமலர் வனத்துள் தீயமனிதரோ டனையசாதி களைபவன்
—யசோ., 229

கள்ளப்போ ரரக்க ரென்னுங் களையினைக் களைந்து வாழ்த்தி
—கம்பராமா,, 3615

.....அவனெனக் காருயிர்க்
காத லானென லானுநிற் கட்டனென் —கம்பராமா., 4148

வெம்பு கண்டகர் விண்புக வேரறுத்து
இம்பர் நல்லறஞ் செய்ய வெடுத்தவில் —கம்பராமா., 4377

.....முனிவுழி முனிந்து..... —கம்பராமா., 51

.....மறைநெறி வந்தன
குணமு மில்லை குலமுதற் கொத்தன
வுணர்வு சென்றுழிச் செல்லு மொழுக்கலால்
—கம்பராமா., 4151

ஓ) மேற்கோள்பகுதி:

நச்சி.: ஐவகை மரபின் அரசர் பக்கத்தில் தண்டித்தற்கு மேற்கோள். (தொல். பொருள். 75)

பனிரெண்டு உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	ஓர்ந்துகண்	வானோக்கி	அந்தணர்	குடிதழீஇக்	இலம்பூளிக்	வேலன்று	இறைகாக்கும்	எண்பதத்தான்	குடிபுறம்	கொலையின்
மணக்.	1	4	7	5	6	8	9	10	2	3
பரிதி.	1	6	4	8	5	3	9	10	7	2
பரிப்.	1	4	7	5	6	8	9	10	2	3
காளி.	1	9	3	7	2	5	6	8	10	4
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

55வது அதிகாரம் 'செங்கோன்மை' முற்றிற்று.

56. கொடுங்கோன்மை

அதிகாரப்பொருள்:

அ) மணக்., பரிப்.: கொடுங்கோன்மையாவது கொடுங்கோன்மையால் வருங்குற்றங் கூறுதல். அது முறைமை செய்யாமையும். அருள் செய்யாமையும், பிறர் நலியாமற் காவாமையும் முறைகெடச் செய்தலும், குடிகளுக்குத் தண்டனை ஆராயாது செய்தலும், அல்லவை செய்தலும், குடிகளை இரத்தலும் எனப் பலவகைப்படும். இது மேற் கூறிய செங்கோன்மையின் மாறுபட்டுவருதலின், அதன்பின் கூறப் பட்டது.

ஆ) பரிதி.: கொடுங்கோன்மையாவது கொடிய வசனமும்[1] கொடிய தண்டமும் இரண்டுந் தவிரவேணும் எ—று.

இ) பரிப்.: கொடுங்கோன்மையாவது கொடுங்கோன்மையால் வரும் குற்றம் கூறுதல். அது முறை செய்யாமையும் பிறர் நலியாமல் காவாமையும், முறைகெடச் செய்தலும், குடிகளுக்குத் தண்டனை ஆராயாது செய்தலும், அல்லவை செய்தலும், குடிகளை இரத்தலும் எனப் பலவகைப்படும். இது மேல் கூறிய செங்கோன்மையின் மாறு பட்டு வருதலின் அதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது அம்முறையினது[2] கோடுதற்றன்மை.

---

1. கொடிய வசனம்—இன்னாச் சொல். அதாவது கேட்பார் மனத்தில் துன்பத்தைத் தோற்றுவிக்கும் சொல்
2. அம்முறை யினது—அச்செங்கோலினது. முறை—நீதி.

ஈண்டும் உவமையின் பெயர் பொருண்மேலாயிற்று[3]. செங்கோன்மைக்கு மாறாகலின், இஃது[4] அதன்பின் வைக்கப்பட்டது.

ஊ) **கவிராசர்**: அஃதாவது அரசன் நீதிமுறைமை தப்பிக் குடிகளை அநியாயம் பண்ணுகிறது.

ஏ) **பழைய 2**: அஃதாவது, செங்கோல் முறைமை தப்பச் செலுத்தல் கொடுங்கோலெனக் கொள்க.

மல்லர்.: அதாவது நீதியில்லாதார் யாட்சியைப் பார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., **பரிப்**, இருவரும் 'கொடுங்கோன்மையாகிய பண்பை அதன் விளைவாகிய குற்றத்தைக் கொண்டல்லது அறியலாகாமையின் கொடுங்கோன்மையான் வருங்குற்றம்' என்று பொருள் கூறினார். குற்றங்களின் வகைகளையும் தருவர்.

பரிதி, 'கேட்பதற்கு மட்டும் இன்னாத சொல் அன்று; பயனாலும் கொடிய சொல்லும் செய்த குற்றத்தின் தகுதிக்கேற்றதாயின்றி அதற்கு விஞ்சிய தண்டனையும் கொடுங்கோன்மை 'என்று கூறுவர்.

---

3. பொருள்—உவமேயம். ஈண்டும் என்ற இறந்ததுதழீ இய எச்சவும்மை செங்கோன்மையிற் கூறிய 'செவ்விய கோல் போறலின் செங்கோல் எனப்பட்டது என்பதைத் தழுவி நின்றது

கோல்—திரண்ட மரக்கொம்பு. 'கோல் வளை' என்றாற்போல. செங்கோல்—கணுவும் வளைவும், கவரும் இல்லாத நேர்மையான கொம்பு. கொடுங்கோல்—முற் கூறியவற்றுள் ஏதாயினும் ஒன்றையுடைய கோல். கொடுமை—வளைவு அல்லது கவரு. ஈண்டுச்செம்மையுங் கொடுமையும் கோலின் வடிவைப் பற்றியன. இவை உவமமாக நின்று உருவகமாய் அரசனது ஆட்சிச் சிறப்பையும் சிறப்பின்மையையும் குறிக்கும்போது பண்பைப்பற்றியதாகின்றது உவமத்திற்கும் பொருளுக்கும் உள்ள பொதுத்தன்மை வேறு வேறாதலின் உவமமாகுமா? அது பற்றி வரும் ஆகுபெயராகுமா? என்ற சிந்தனை எழுகின்றது. குணமும் வடிவும் வேறாயினும் ஆசிரியர் தொல்காப்பியர்,

வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையினென்—
றன்ன பிறவும் அதன் குணம் நுதலி
இன்ன திதுவென வருஉம் இயற்கை

என்ன இளவியும் பண்பின் றொகையே என்புழி வடிவையும் பண்பெனக் கூறினார் ஆகலின் உவமமும் ஆகும் அதுபற்றி வந்த ஆகுபெயரும் ஆகலாம் என்க.

பரிமேலழகர் செங்கோல் கொடுங்கோல் என்பவற்றை வடநூலார் தண்டம் என்ப என்றனர் தண்டம் என்ற சொல் கோல் என்னும் பொருளில் உலகியலிலும், வியூகவகையுள் ஒன்றற்கும் ஒறுத்தற்கும், தீர்வைக்கும், குற்றத் தண்டத்திற்குமாக கௌடிலீயம் சுக்ர நீதிபோன்ற அரசியல் பொருள் நூல்களிலும் வழங்குவதைக் காணலாம். ஆதலால் பரிமேலழகர் பொதுவகையாற்கோலின் பெயர் என்பாரேனும் சிறப்பாகப் பொருணூல்களில் ஒறுக்குந்தன்மையும் உவக்கும் தன்மையும் வாய்ந்த அரசுக்கே உரியதாதலைக் காணலாம். (கௌடிலீய. அதி.1 அத்.4)பார்க்க.

4. இஃது என்றது கொடுங்கோன்மையை.

கொடுங்கோன்மையின் செயல்கள் பலவற்றுள்' இவையிரண்டும் ஒன்றாமே யன்றி இவையே கொடுங்கோன்மையாகாது என்பதனை மணக்குடவர் கூறும் குற்ற வகைகளா காண்க.

பழைய உரைகள் அனைத்தும் கருத்து வகையின் ஒத்தனவேயாம். மு.ரா.அரு. 'அரசன் நீதியில் தவறுந்தன்மை' என்பர்.

வரத, அரசன் நீதிதவறி நடப்பதால் குடிமக்கட்குவரும் தீங்குகளைப் பற்றிக் கூறுவது' என்பது.

இவ்வதிகாரம் கொடுங்கோலரசன் இயல்பும், கொடுங்கோன்மையால் அரசற்கு வருந்தீங்குகளும், அவனால் குடிகட்கும் நாட்டிற்கும் வரும் நலிவும் கூறுவன. இதில் குடிகட்கு வருந்தீங்கு இறுதி நான்கு குறட்பாக்களால் கூறப்படுகின்றன. ஆதலால் குடிமக்கட்கு நேருந் தீங்கு மட்டும் கூறப்படவில்லை என ஓர்க.

தேவநேயர், 'நேர்மையில்லா ஆட்சி முறைமை' என்பர்.

இராம, 'கொடுமையுள்ள அரசாட்சி' என்பர்

இங்ஙனம் கொடுங்கோன்மையினியல்பும், அதனால் அரசற்கு வருந்தீங்கும் பிறவும் கூறப்பெறுதல் காண்க.

56.1. கொலைமேற்கொண் டாரின் கொடிதே அலைமேற் கொண்(டு)
அல்லவை செய்தொழுகும் வேந்து. (நிநிக)

உரைப்பகுதி:

அ) மணக்., பரிப்.: கொலைத்தொழிலை மேற்கொண்டவரினும் கொடியன்; அலைத்தல்[1] தொழிலை மேற்கொண்டு நீதியல்லாதன செய்து ஒழுகுகின்ற அரசன் எ—று.

ஆ) பரிதி.: கொலைத்தொழிற்கு மேலான வேடரினும் கொடியன் குடிகளை மிடைசெய்யும்[2] அரசன் என்றறிக.எப்படி என்றால் வேடன் பறித்துக் கொண்டு விட்டுவிடுவன்; இவன் தண்டங்கொண்டும், பிழைக்கிறவாக்கிலே[3] போகவொட்டாமல் காவல் செய்கையால் எ—று.

---

1. அலைத்தல்—வருத்துதல்.
2. மிடை செய்யும்—வருத்தும் (சங்க அகராதி)
3. பிழைக்கிற வாக்கிலே—பிழைக்கிற வழியிலே

ஈ) *காளி.* : அதனைப் பிறர் நோவுக்கு[4] இரங்காது கொலைத் தொழிலை என்றும் கொண்டொழுகும் கொடுவினையாளரினும் சாலக்[5] கொடிதே; யாது எனின், தன்கோல்கீழ் வாழும் குடிகளை அவர்கள் நோவு அறியாது அலைத்தலை ஏன்றுகொண்டு [6]முறை யல்லவற்றைச் செய்து அங்ஙனம் ஒழுகும் வேந்தனானவன் எ—று.

உ) *பரிமேல்.* : பகைமை பற்றிக் கொல்லுதல் தொழிலைத் தம் மேற்கொண்டு ஒழுகுவாரினும் கொடியன், பொருள் வெஃகிக் குடி களை அலைத்தல் தொழிலைத் தன்மேற்கொண்டு முறையல்ல வற்றைச்[7] செய்தொழுகும் வேந்தன்.

அவர்[8] செய்வது ஒரு பொழுதைத் துன்பம், இவன் செய்வது எப் பொழுதும் துன்பமாம் என்பது பற்றி, அவரினும் கொடியன் என் றார். பான்மயக்குறழ்ச்சி, வேந்து என்பது உயர்திணைப் பொருட் கண் வந்த அஃறிணைச்சொல், அலைகொலையினும் கொடிது என்ப தாயிற்று.

காரி. : கொண்டாரின் கொடிது வேந்து என்றதனால் பன்மை யும் ஒருமையும் பால்மயங்கு; உறழ்ச்சி இன்னுருபு— இரண்டி லக்கணமுங் கூட எழுதினார். 'அறனழீஇ'[9] என்பதுள்ளும் அது. 'குடிப்பிறந்தார் கண்விளங் தம் குற்றம்'[10] என்பதனைப் பால் மாறுபட்டது என்றதனானும் அறிக. வேந்து என்பது உயர் திணைப் பொருட்கண் வந்த அஃறிணைச்சொல். அரசு அமைச்சு ஒற்று, தூதும் அது. 'குடிமையாண்மை'[11] என்னுஞ் சூத்திரவிதி யால் வேந்து அஃறிணைச் சொல்லாய் 'நின்றாங் கிசைத்த லிவணியல் பின்றே'[12] என்னும் விதியால் கொடியன் என்று உரையிட்டார் போலும். அவர் கருத்து எம்மனோர்க்கு அறிதல் அரிதென்க.

ஊ) *கவிராசர்*: பகைமைவைத்துக் கொல்லுகிறவர்களிலும் பொல் லாதவனாம், பொருண்மேல் ஆசையுடையவனாய்க்குடிகளை வாதை[13] பண்ணி முறைமையல்லாத காரியங்களைச் செய்யுமரசன் (எ—று).

4. நோவுக்கு—துன்பத்திற்கு
5. சால—மிக
6. ஏன்றுகொண்டு—ஏற்று.
7. முறையல்லவற்றை—அநீதிகளை.
8. அவர்—கொலை மேற்கொண்டொழுகும் பகைவர்.
9. குறள் 188. பன்மையும் ஒருமையும் மயங்கிய பால்மயக்காயினும் கொலைஞர் பலரினுள்ளும் இவன் கொடியன் என்ற பொருள் நயம் சிறத்தல் காண்க.
10. குறள், 957
11. தொல்.சொல் 57
12. தொல்—சொல் 59.
13. வாதை—துன்பம்

பகையாளி செய்கிறது ஒருநாளைத் துன்பம்; பொல்லாத அரசன் செய்கிறது எப்பொழுதும் துன்பமாகலின், அவனிலும் அரசன் பொல்லாதவன் என்பதாயிற்று.

ஏ) *பழைய* 2: பகை பற்றிக் கொல்லுதற் றொழிலைத் தம்மேற் கொண்டொழுகுவாரினும் கொடியனாம், பொருட்காசை பற்றிக் குடிகளை அலைத்தற் றொழிலைத் தன்மேற் கொண்டு நீதியல்ல வற்றைச் செய்தொழுகும் வேந்தன்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி, கொலைத் தொழிலை வேடருக்கு உரியதாக்குவர். இவர் ஏனையோர் அத்தொழிலை கால வயப்பட்டோ–வினைவயப்பட்டோ-பொருணசையாலோ-பகைமையினாலோ மேற்கொண்ட அனைவரையும் கருதுவர். அனைவருக்கும் உரியதாக்குவதே சிறப்பு. வேடர்க் குரியதாக்குதலை ஆசிரியர் ''வேலொடு நின்றான்'' என்ற வருங்குறளான் குறிக்கின்றனராதலின்,

'கொண்டாரின்' என்பதன்கண் ஐந்தனுருபை உறழ்பொருளாக எண்ணி, கொலை மேற்கொண்டானைக் காட்டினும் கொடுங் கோலரசன் தீயன் என உறழ்பொருள் தீமைக் கண் வந்தது என்பர் அனைவரும். ஆயினும் *பரிமேலழகரும் பரிதியும்* அதனை விளக்கி எழுதுவர். *கா.சு.* முதலிய பின்னுரைகாரர்களும் அங்ஙனமே கருதுவர்.

'அல்லவை' என்பதற்குப் பொதுவகையில் 'நீதியல்லவற்றை', 'முறையல்லவற்றை' என எழுதினர் அனைவரும். *இராமலிங்கனார்* 'குடிகளையும் துன்புறுத்திக்கொண்டு, தனக்குத் தகுதியில்லாத காரியங்களையும் செய்கின்ற அரசன்' என இருசாரும் பொருத்தியுரைப்பர்.

வரத. 'அலைமேற்கொண்டு' என்பதற்குத் 'தடுமாற்ற ஆசை எண்ணத்தால்' என்பர். 'அலை–அலைதல். தடுமாறுதல்' எனக் கொண்டனர் போலும். 'கொலைஞனுக்கும் கொடுங்கோலனுக்கும் வேற்றுமை காட்டும் போது கொலைஞன் பகை காரணமாக எதிரியைக் கொன்று விடுகின்றான். அவ்வளவில் இருவரும் சாந்தியடைகின்றனர்' என்றார். கொலைச்சாக்காடு ஒரு சாந்தியா என்பது சிந்திக்கத் தக்கது.

இவ்வுரைகளில் 'கொலை மேற்கொள்ளல்', 'அலைமேற் கொள்ளல்' என்பவற்றுள் 'மேற்கொள்ளல்' என்பது யாதானுமொரு

தன்னலங் கருதிப் புதிதாக ஏறிட்டுக் கொள்ளுதல் ஆதலின், பகைமை-பொருள் முதலியன கருதிக் கொலை மேற்கொள்வாரினும், பொருள் கருதிக் குடிகளை வருத்துதலை மேற்கொள்ளுங் கொடுங்கோலன் கொடியன்' என்ற கருத்தினை வழங்கும் மணக்குடவர் போன்றார் உரைகளும், விளக்கங்களும் சிறந்தன எனலாம்.

'இன்ன' என்னாது 'அல்லவை' என்றமையான், நினைக்கவும் நெஞ்சு நடுங்கும் தீவினைகளை நினைத்து நினைத்துச் செய்வர் என்பது கருதி. அலை-முதனிலைத் தொழிற்பெயர். 'அல்லவை செய்யும் வேந்து' என்னாது 'செய்து ஒழுகும்' என்றது இடைவிடாமல் தீமைகளைச் செய்வதையே ஒழுக்கமாகக் கொண்டவன் என்பது விளங்க.

ஓ) ஒப்புமைப்பகுதி:

அல்லவை செய்தொழுகும் வேந்து:

குடிநடுக்குறூஉம் கோலேன் ஆகுக —சிலப்., 18.26

ஓ) மோற்கோள் பகுதி:

சிவஞான.: 'கொலை மேற்கொண்டாரின் கொடிதே' என்ற விடத்து, மேல் என்ற இடைச்சொல் தாம் சேர்ந்த வினையைச் சிறப்பித்துப் பொருட்கு உபகாரப் பட்டுவந்தது என்பர்

(கம்ப.விருத்.பக்.11.)

56.2. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும் கோலொடு நின்றான் இரவு. (நிநூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: தனியிடத்தே வேலொடு நின்றவன் கையிலுள்ளனதா என்றல் போலும்; முறை செய்தலை மேற்கொண்டு நின்றவன் குடிகள் மாட்டு இரத்தல் எ—று.

கோலொடு[1] நிற்றல்—செவ்வை செய்வாரைப் போன்று நிற்றல்.

1. கோல் என்ற செங்கோலையும், அது உவம ஆகுபெயரான் உணர்த்தும் முறை செய்தலையும் என்க.

நிச்சயித்த கடமைக்குமேல் வேண்டுகோளாகக் கொள்ளினும், அது வழியிற் பறிப்பதனோடு ஒக்கும் என்றவாறு.

ஆ) *பரிதி.:* வேல்கொண்டு நடுக்காட்டிலே பறிக்கிற வேடற்கு ஒக்கும்; கொடுங்கோல் மன்னவன் கொள்ளுகிற கடமை எ—று.

இ) *பரிப.:* தனியிடத்தே வேலொடு நின்றவன் நின் கையில் உள்ளனதா என்றாற் போலும் முறை செய்தலை மேற்கொண்டு நின்ற வன் குடிகள் மாட்டு இரத்தல் எ—று.

கோலொடு நிற்றல்—செவ்வை செய்வாரைப் போன்று நிற்றல். நிச்சயித்த கடமைக்குமேல் வேண்டுகோளாகக் கொள்ளினும் வழியில் பறிப்பானோடு ஒக்கும் என்றது.

ஈ) *காளி.:* தான் கைப்பற்றிய மூவிலை வேலொடு[2] நின்றான் ஒரு மூர்க்கன் அதனை ஓங்கி வேலே கடிதின் கொணர்ந்திடு பலி என்றதனை ஒக்கும், யாது எனின், தான் கைக்கொண்டு செலுத்து கின்ற கொடுங்கோலோடு நின்ற மூர்க்கனாகிய அரசன் மற்று ஒரு வனை நீ எமக்கு இத்துணைப் பொருள்தரவேண்டும் என்று இரக்கும் இரவானது எ—று.

மற்றும் தாம் உலகத்துச் சிலர் வேறுபலி வேண்டுதலும், இடுபலி அடுதலும்[3] முறைமை யாகலான், அதுபோல அரசரும், தாம் பெறு கடன்[4] வேண்டுதலும், இடுகடன்[5] இடுதலும் முறைமை யாகலான், இவ்வாறு அன்றி ஒருவன் வந்து வலிதின் அடர்த்தலும்,[6] பிறர் அஞ்சி வந்து ஒன்று இடுதலும் போலும் ஆறில் ஒன்றாகிய செங்கோல் நெறி அன்றி அயுதம்[7] கொள்ளும் கொடுங்கோன்மையும் என்பது பொருளாயிற்று என அறிக.

உ) *பரிமேல்.:* ஆறலைக்குமிடத்துத்தனியே வேல்கொண்டு நின்ற கள்வன் ஆறுசெல்வானை நின்கைப் பொருள் தாவென்று வேண்டுத லோடு ஒக்கும் ஒறுத்தற்றொழிலோடு நின்ற அரசன் குடிகளைப் பொருள் வேண்டுதல்.

'வேலொடு நின்றான்' என்றதனாற் பிறரொடு[8] நில்லாமையும்,

---

2. மூவிலைவேல்—சூலப்படை.
3. இடுபலியிடுதல்—பலியாக இடும் விலங்கினங்களைக் கொல்லுதல்.
4. பெறுகடன்— அரசன் தானாகக் கேட்டுப்பெறுங்கடன்.
5. இடுகடன் இடுதல்—அரசன் தான் நாட்டுமக்களுக்கு இடவேண்டிய கடன்களை வழங்கு தல்.
6. அடர்த்து—நெருக்கி:
7. அயுதம் எள்பது பதினாயிரம் என்னும் பெரெண்ணின் பெயர்
8. பிறர்—அமைச்சர், சேனாபதியர், புரோகிதர் முதலிய பிறர்

'இரவு'[9] என்றதனால் இறைப்பொருள்[10] அன்மையும் பெற்றாம். தாராக்கால் ஒறுப்பல் என்னுங் குறிப்பினனாதலின், இரவாற் கோடலுங் கொடுங்கோன்மை யாயிற்று. இரண்டுபாட்டானுங் கொடுங் கோன்மையது குற்றங் கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்:** வழிப்போகிறவர்களைப் பொருள் பறிப்பதற்கு வேலாயுதம் எடுத்துக் கொண்டு வழியிலே தனியே நின்று, வழிப் போகிறவனை, 'உன் கையிலே இருக்கிற பொருளைத் தா' வென்று சொல்லுதலோடு ஒக்கும், பொல்லாதவனான அரசன் குடிகளைப் 'பொருள்தம்மின்' என்று கேட்கிறது (எ—று).

கொடாவிட்டால் கொல்லுவன் என்பதாயிற்று.

ஏ) **பழைய 2:** வழிபறிக்கும் இடத்துத் தனியே வேல்கொண்டு நின்ற கள்வன் வழிச்செல்வானை நின்கைப் பொருளைத் தாவென்று வேண்டுதலோ டொக்கும், ஒறுத்தற் றொழிலோடு நின்ற அரசன் குடி களைப் பொருள் தரச் சொல்லி வேண்டுதல்.

கொடா தொழியில் வெட்டுவேன் என்னும் கள்வனோடு ஒக்கும் தாவென்று வேண்டும் வேந்தன் எனக் கொள்க.

மல்லர்: என்பது வழியிலே சில்லரை பண்ணுகிற கள்ளன் ஆயுதத் தோடே நின்று வழிப்போக்கனை உன் கைப்பொருள்களைத் தாவென்று கேட்கிறதுந் தெண்டிக்கிற தொழிலோடே நிற்கிற அரசன் பகுதியில்லாமலக் குடிகளுடைய பொருள்களைக் கேட்கிறதும் ஒக்கும் என்றவாறு.

கள்ளன் வழிப்போக்கனை யடியாதே போனாலும் ஆயுதத்தோடே நிற்கிறதனால் இவன் பயந்து கேட்டதெல்லாம் குடுப்பான். அப்படிப் போல ராசாப்பகுதியல்லாமலக் கேட்கிறபொருளைக் குடியானவனுக்கு வேறே உவத்திரவம் பண்ணாமலக் கேட்டாலுந் தெண்டிக்கிற தொழிலோடே நிற்கிறதினால் அவர்கள் குடுக்காதே போனாலக் குடி கெடுத்துப்போடுவார்கள் என்கிற பயத்தினால் குடுப்பார்கள் என்பது. ஆகையால் இப்படிப்பட்ட தொழில் கள்ளன் தொழிலுக்குச் சரியாயிருக் கிறதினால் ராசாவுக்கு ஆகாது என்பது கருத்து.

இடுதல்-கொடுத்தல்; கோல்-செங்கோல்; இரவு—யாசகம்.

---

9. இரவு—இரத்தல்.
10. இறைப்பொருள்—வரிப்பணம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்.:

'கோலொடு நின்றான்' — 'செவ்வை செய்வாரைப் போல நின்றான்' என்பர்.

மணக்; 'கொடுங்கோல் மன்னவன்' என்பர் பரிதி; 'கொடுங்கோலொடு நின்ற மூர்க்கனாகிய அரசன்' என்பர் காளி; 'ஒறுத்தற் றொழிலோடு நின்ற அரசன்' என்பர் பரிமேல். மணக்குடவர் கோலைச் 'செங்கோல்' எனப் பொருள் கண்டு 'செங்கோல் ஏந்திச் செவ்வை செய்யாது, செய்பவர் போல நின்று' எனப் பொருள் கொண்டனர். ஏனையோர் அதிகாரம் நோக்கிக் 'கொடுங்கோல்' எனவே கொண்டனர். பரிமேலழகர் அதிகார வரைவிலக்கணம் எழுதும் போதே 'ஈண்டும் உவமையின் பெயர் பொருள் மேலதாயிற்று' என்றது கொண்டு 'கோல் என்பதற்கு அதிகாரப் பொருண்மைக்கு ஏற்ப 'கொடுங்கோல்' எனக் கொண்டு அதன் செயலாகிய 'ஒறுத்தற் றொழிலைக்' கூறினர்.

காளிங்கர், 'வேலொடு நின்றான்' 'வெறியாடும் வேலன்' எனக் கருதி, அவன் ஆவேசம் வந்த போது கூறுவது போல 'வேலே' பலியை விரைவிற் கொண்டுவா 'என்று பணித்ததைப் போலும் கொடுங்கோலரசன் குடிமகன் ஒருவனைப் பார்த்து நீ இவ்வளவு பொருள் தர வேண்டும் என்று இரப்பது' என்றார். இவ்வுரைப் போக்கினால் கொள் கருத்து ஒன்றாயினும் உரையின் நடை வேறு பட்டுள்ளது, இத்துணை மாற்றமும் வேலொடு நின்றான் என்பதை வெறியாடும் வேலன் எனக் கருதியதன் விளைவாகும். இவ்வுரை இக்குறட்கு ஏற்புடையதன்று. பரிமேலழகர் உரையும் சொன்னயமும் தகுதியுமுடையன. 'இரவு' என்பதற்குக் 'கெஞ்சுவது' என்பர் வ.சுப.மா. 'பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரல் முகத்திற் றேக்கி' நிற்பது இரவாதலின் கெஞ்சுதல் என்பது இரவின் முழுப் பொருளையுங் கருதச் செய்வதாகும்.

கோல் பிடித்த மன்னன் கன்றையூட்டவிட்டுப் பால் கறப்பவனைப் போலக் காலம் அறிந்து கொள்ளத் தக்கவன்.வேல் பிடித்தவன் கொன்று கொள்பவன், இவன் செயலை மன்னவன் மேற்கொண்டான் என்பதாம். இதனை எண்ணியே ஒப்புமைப்பகுதியிற் காட்டும் 'இன்று கொளற் பால' என்னும் பாடல் எழுந்தது.

வேலொடு நின்றான்—வேலுடைய திருடன் என்று எழுதுவது பரிதியின் கருத்தை ஒட்டியதாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கோலொடு நின்றான் இரவு:

குடிபுர விரக்கும் கூரில் ஆண்மைச்
சிறியோன் —புறநா., 75:4—5

.... வலியா லொன்றுங்
கொண்டிலென் .... —கம்பராமா., 9242

அன்பின் நெகிழ வழிபட்டுக் கொள்ளாது
நின்ற பொழுதின் முடிவித்துக் கொள்வதே
கன்றுவிட் டாக்கறக்கும் போழ்தில் கறவானாய்
அம்புவிட் டாக்கறக்கு மாறு —பழ. நா.,

இன்று கொளற்பால நாளை கொளப்பொறான்
நின்று குறையிரப்ப நேர்படான் — சென்றொருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான் ஆறலைக்கும்
வேடலன் வேந்தும் அலன் —நீதிநெறி., 30

ஏடவிழ்பைந் தாரோய் இமையோர் பதம்பெறினும்
நாடு நடுங்க நன்கல் லவை புரியார்
வேடர் பரிவேட்டம் செய்யார் ... அரசரே —பிரமோத்.
பத்திராயு., 22

உறையில் வாளொடு மாவழங்குறுவனத் தோடி
மறவ னோர்பொருள் தருகென இரத்தலை மானும்
இறைவன் வாழ்குடி தன்னில்ஒன் றொருபொருள் இரத்தல்
—பிரபு. அக்கமா. துறவு., 22
மன்றுபறித் துண்ணேல் —ஆத்தி., 23

ஓ) மேற்கோள்பகுதி:

சுவாமி.: வேற்றுமையுருபுகள் அல்லாதனவும் வேற்றுமையுருபுகள் போல் வெளிப்படும் என்பதற்கு 'வேலொடு நின்றான்' என்பது மேற்கோள். (இ.கொ.19.)

வேலொடு நின்றான் என்றவிடத்து உருபு இடையை. கொண்டு என்னும் வினையாகவே துணிந்தது, (இ.கொ.122)

பெருந்.: ஒடு என்னும் பிரத்தியம் வந்ததற்கு மேற்கோள். (வீர.34.)

56.3. நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன் நாடொறும் நாடு கெடும். (நிநிசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: குற்றமும் குணமும் நாடோறும் ஆராய்ந்து, அதற்குத் தக்கமுறை செய்யாத அரசன்நாடு நாடோறும் கெடும் எ—று.

இது நாடுகெடும் என்றது.

ஆ) பரிதி.: நாடொறும் குடிகள் செய்கிற கிரமங்களை[1] விசாரித்துச் செங்கோல் முறைமை செய்யாத மன்னற்கு நாள்தோறும் நாடு கெடும் எ—று.

இ) பரிப்.: குற்றமும் குணமும் நாள்தோறும் ஆராய்ந்து அதற்குத் தக முறை செய்யாத அரசன் நாடு நாள்தோறும் கெடும் எ—று.

இது நாடு கெடும் என்றது.

ஈ) காளி.: ஒரு மாத்திரைப் பொழுதும்[2] இடைப்படாமை[3] நாள்தோறும் ஆராய்ந்து செங்கோன்மை செய்து ஒழுகாத மன்னவன்தன் நாடானது நாள்தோறும் கெட்டுச் செல்லும் எ—று.

இனி இவ்வாறு அன்றி அரசனும் நாள்தோறும் கெட்டுச்செல்லும் எ—று.

உ) பரிமேல்.: தன்நாட்டு நிகழும் தீமைகளை நாடோறும் ஆராய்ந்து, அதற்கொக்க முறைமையைச் செய்யாத அரசன், நாடோறும் நாடு இழக்கும்.

அரசனுக்கு நாடு உறுப்பாகலின்.[4] அதன்வினை[5] அவன்மேல்

---

1. கிரமங்களை - முறைகளை.
2. மாத்திரைப் பொழுதும் கைந்நொடிக்காலமும் கண்ணிமைக்காலமுமாகிய கால அளவு.
3. இடைப்படாமை - இடையில் காலக் கழிவு உண்டாகாதபடி
4. அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும் அங்கங்கள் ஆறனுள் நாடும் ஒன்றாகலின் 'நாடு உறுப்பு எனப்பெற்றது.
5. அதன் வினை—கெடுதலாகிய நாட்டின் வினை அவன் மேல் - அரசன்மேல். கெடும் என்பது செய்யுமென்முற்றாய் இருதிணைக்கும் பொதுவினையாதலின் ஈண்டு அரசன் மேலதாயிற்று என்றார், நம்பி நாடுபெரியன்' என்றாற்போலத் திணைவழுவமைதியாம் என்பாரும் உளர், நம்பி நாடு பெரியன் என்பதில் நம்பி எடுத்தோதப் பெற்ற ஆண் பாற்பெயர். அதுபெரியன் என்ற குறிப்பு வினைகொண்டது. பெருமை நாட்டினுடையது. அதனால் நம்பியும் நாடும் பெரியன் என்பதைக்கொண்டு முடிவதால் திணை வழுவமைதி, மன்னவன் நாடுகெடும் என்பதில் அங்ஙனமின்று. கெடும் என்பது திணை சுட்டாப் பொதுவினையாதலான் இவ்வேறுபாடு கண்டு ஆய்தற்குரியது. அன்றியும்வருங்குறளில் அரசு சூழும் குடியும் ஒருங்கிழப்பதைக் கூறுவதால் இக் குறள் நாடு கெடுதலையே குறிக்கும் என்றல் ஏற்புடையதாம்.

நின்றது. இழத்தல் — பயன் எய்தாமை. மன்னவன் நாடு நாடொறும் கெடும் என்று உரைப்பாரும் உளர்[6].

ஊ) **கவிராசர்:** தன் நாட்டிலே உண்டாகிற தீமைகளைத் தினமும் ஆராய்ந்து, அதற்கு ஏற்ற முறைமையைச் செய்யாத அரசன், நாடோறும் நாட்டை இழந்துபோவான் எ—று.

இழக்கிறதாவது — பலனெய்தாமை.

ஏ) **பழைய 2:** நாட்டில் நடப்பன செயல்களை நாடோறும் நாடிச் செங்கோல் முறைமை செய்யாது கொடுங்கோல் முறைமை செய்யும் மன்னவன் நாடு நாடோறுங்கெடும்.

நாளிலே சுருங்கிக் கெடும் என்றவாறு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'மன்னவனது நாடு கெடும்' என்பர் **மணக்., பரிதி., பரிப்., காளி.**; 'மன்னன் நாடோறும் நாடிழக்கும்' என்றனர் **பரிமேலழகரும்** அவரைப் பற்றிய பின்னோரும். **பரிமேலழகர்** 'கெடும்' என்பதற்கு 'இழக்கும்' எனப் பொருள் கண்டு இங்ஙனம் உரைத்தார்.

'கெடும்' என்பது செயப்படுபொருள் குன்றியவினை. இழக்கும் என்பது செயப்படு பொருள் குன்றாத வினை. ஆதலால் **பரிமேலழகர்** 'அரசன் நாட்டை இழக்கும் என்றார். அவர் எழுதும் 'அரசனுக்கு நாடு உறுப்பாகலின் அதன் வினை அவன் மேனின்றது' என்ற இலக்கணக்குறிப்பு ''இழக்கும்' எனப்பொருள் கூறின்வேண்டாவாம். இது வேண்டாது போகவே இழத்தல் என்பதற்குக் கூறும் பொருளும் அங்ஙனமாகிறது. 'மன்னவன் நாடு கெடும்' என்பதற்கே இக்குறிப்பு வேண்டத்தக்கதாம் என்க. இந்த இலக்கணக்குறிப்புக்கு விளக்கம் எழுதினர் பலர். அவர்கள் விளக்கத்தின் நலத்தை இக்குறள் அடிக் குறிப்பிற் காணலாம்.

மன்னவன் கெடும்; நாடு கெடும் எனப் பொதுவினை கொடுத்து முடித்த **வள்ளுவர்** கருத்து மன்னவன் முறை செய்யாமையிற் கெடும். அவனால் நாடும் கெட்டது என்ற பொருணயங் கொள்ள நின்றது. 'கெடும்' என்ற செய்யுமென் முற்று மன்னன் என்ற ஆண்பால் வினை முதற்கு வினையாதற்கு ஓர் இழுக்குமின்று.

---

6. பரிதி, காளிங்கர் இருவரும் இவ்வாறு உரைப்பவர்.

,நாடு கெடுதல் — நாளுக்கு நாள் சீர்கெட்டுப் போதல் என்ற இராமலிங்கரும் மணக்குடவரின் கருத்தினரேயோவர்.

வரத. 'முறைசெய்யாமன்னவன் நாள் தோறும் கெடும்; நாடும் கெடும்' எனப் பிரித்துக் கூட்டிப் பொருள் காண்பர்.

சிதம்பர. 'நாட்டையே யிழப்பர்' என்பர்.

வள்ளுவர் நாடு கெடும் என்றாரேயன்றி யிழப்பர் என்றாரல்லர். ஆகவே முறை செய்யாமையால் நாட்டு மக்களிடம் பலவகைத் தீமை வளரும் என்ற அளவிற் பொருள் கோடலே தக்கது. அதுவே பலர் கருத்துமாகும்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முறைசெய்யா மன்னவன் ... நாடு கெடும்:

ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
முறையில் அரசன் நாடு நல்கூர்ந்தன்று — முதுமொழி., 9:11

பழிபடர் மன்னவன் படைத்த நாட்டினுங்
கழிவதென் காரணம் அறிஞகூ றென்றான் — கம்பரா., 361

முற்றும்:

நாடோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாடோறும் நாடி அவநெறி நாடானேல்
நாடோறும் நாடு கெடுமூட நண்ணுமால்
நாடோறும் செல்வ நரபதி குன்றுமே — திருமந்., 239

56.4. கூழும்[1] குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச் சூழாது செய்யும் அரசு. (நருசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: பொருளையும் பொருள்தரும் குடியையும்கூட இழப்பன் முறைகோடி ஆராயாது செய்யும் அரசன் எ—று.

1. கூழ்—உணவு. அதற்குக் காரணமாய பொருளைக் கூழ் என்பதற்குப் பொருளாகக் கொண்டது காரிய ஆகுபெயரான் என்க.

இஃது ஆராயாது செய்வதனால் வருங் குற்றம் கூறிற்று.

ஆ) *பரிதி.*: மழையும் மற்றுக் குடியும் இழப்பன், கொடுங்கோல் நடத்தி நல்ல மந்திரி வார்த்தை கேளாத மன்னவன் எ—று.

இ) *பரிப்.*: பொருளையும் பொருள் தரும் குடியையும் கூட இழப்பன், முறை கோடி ஆராயாமல் செய்யும் அரசன். இஃது ஆராயாது செய்வதனால் வரும் குற்றம் கூறிற்று எ—று.

ஈ) *காளி.*: இவ்வாறு அன்றிப் பின்னும் தனது நாட்டுள் வாழும் குடிகளையும் அக்குடிகளால் உளவாகும் உணவுப் பொருள்களையும் உடனே இழப்பன்; யாவன் எனின் நெறியும் நெறியல்லதும் தேராது, கோல்கோடி மற்று இங்ஙனம் செய்யும் அரசனானவன் எ—று.

உ) *பரிமேல்.*: மேல் விளைவது[2] எண்ணாது முறைதப்பச் செய்யும் அரசன், அச்செயலால்[3] முன் ஈட்டிய பொருளையும் பின் ஈட்டுதற்கு ஏதுவாகிய குடிகளையும் சேர இழக்கும்.

கோட என்பது திரிந்து நின்றது[4]. முன் ஈட்டிய பொருள் இழத்தற்கு ஏது, வருகின்ற பாட்டால் கூறுப.

ஊ) *கவிராசர்*: மேலே வரப்போகிறதை எண்ணாமல் முறைமை தப்பச் செய்யும் அரசன், அந்த அநியாயத்தினாலே முன் தேடிய பொருளையும் இழந்து, பின், பொருளைக்கொடுக்குங் குடிகளையும் இழந்துவிடும் எ—று.

முன் தேடின பொருளை இழக்கிறதற்குக் காரணம் மேல் வருங் கவியிற் சொல்லுகிறோம்.

எ) *பழைய 2*: மேல் விளைவது எண்ணாது, முறைமை தப்பக் கொடுங்கோல் செலுத்தும் அரசன், அச்செயலாற் பயிரையுங் குடியையு மொருமிக்க இழப்பன்.

சூழாது என்பது, எண்ணாது என்க.

---

2. மேல் விளைவு—பின் விளைவது.
3. அச்செயலான்—முறை தவறிச்செய்யுங் கொடுஞ்செயலால்.
4. கோடுதல் — வளைதல். வளைதல் கோலின் செயல். அதனடியாகப் பிறந்த கோடி என்னும் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் அரசனது வினையாகிய செய்யும் என்னும் பெயரெச்சவினையைக் கொண்டு வேண்டுதலின் கோட எனச் செயவென் எச்சமாகத் திரிக்கப் பெற்றது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'கூழ்'

'பொருள்' மணக்.; 'மழை' பரிதி.; 'உணவுப் பொருள்கள்' காளி.; 'முன் ஈட்டிய பொருள்' பரிமேல்., கவிராசர்.; 'பயிர்' பழைய.; 'நாடு' குழந்தை.; 'நாட்டு வளம்' வரத.; 'தன்செல்வம்' தேவநேயர்.; 'பொருள்' வ. சுப. மா.,

'குடி'

'பொருள் தருங்குடி' மணக்., 'குடி' பரிதி., காளி., பரிமேல்., கவிராசர், பழைய 2, தேவநேயர், குழந்தை. ஆகவே குடி என்றது குடிமக்களையே கருதுகின்றனர். 'குடிமக்கள் ஆதரவை' இராமலிங்கர், 'தன் வளம்' வரத.,

'சூழாது'

'ஆராயாது' மணக்.; 'நல்ல மந்திரிகளின் வார்த்தை கேளாத' பரிதி., இராமலிங்கனார்; 'நெறியும் நெறியல்லதும் தேராது' காளிங்கர்., 'மேல் விளைவது எண்ணாது' பரிமேல்., கவிராசர், பழைய., வரத.; 'தன் தவற்றால் மேல்விளைவதையும் தன்குடிகட்கு நன்மையையும் எண்ணாது' தேவநேயர்.

இக்குறட்பாவில் கருத்து மாற்றங்களுக்கு நிலைக்களன் இம் மூன்று சொற்களே. 381-வது குறளில் குடி நாடு என்ற பரிமேலழகர் 'குடி' எனக் கூறுதலைக் காண்க.

'கூழ்', உணவு என்ற பொருளுக்கு உரியதாகி, அதற்கேதுவாகிய. பயிரையும், அதற்கு இன்றியமையாத மழையையும், பின் உணவுப் பொருள்கள் அனைத்தையும், நெல் முதலியன பொருள் வகையுள் ஒன்றாதலின் பொருள்-செல்வம்- முன் ஈட்டிய பொருள்-தன்பொருள் என்ற வகையில் பொருள்பட்டுப் பின் நாட்டையும் நாட்டு வளத்தையும் உணர்த்தியதாகக் கொள்கின்றனர். இவற்றுள் உணவுப்பொருள் என்ற பொருளே சிறந்தது. அங்ஙனமே 'சூழாது' என்பதற்கு 'ஐம் பெருஞ்சுற்றம் எண்பேராயங்களுடன் நூலாதாரத்தைத் துணைக் கொண்டு கொடுங்கோன்மையால் விளையும் தீமைகளையும்-குடி மக்களுக்கு நன்மையையும் ஆராயாது' என்ற பொருள் சிறந்தது.

'கூழ்-நாடு' எனக் கூறும் குழந்தையுரை, ''நாடொறும் நாடு கெடும்'' என முன்னர்க் (553) கூறின்மையால் மீண்டும் கூறல் குற்றமாதலின் இவ்வுரை பொருந்தாது. அன்றியும் கூழ் என்று நாட்டிற்குப் பெயராதல் யாண்டும் வழக்கின்மையும் உணர்க.

அங்ஙனமே 'கூழ்-மழை' என்ற பரிதியுரையும் 'முறை கோடி' என்ற குறளால் (559) மழை பெய்யாது என்றலின் இங்கும் கூறல் வேண்டா, மழைக்குப் பெயரின்மையும் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

அரசு கூழ் இழக்கும்:

அரும்பொருள் நீதி கேளா அரசனிற் சுருங்கி நந்தும்
—சீவக., 2534

முற்றும்:

கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாறிவறம் கூரின் மன்னுயிர் இல்லை மணிமே.,7:8—10

கோள்நிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி
நீணில மாரி இன்றி விளைவ.ஃகிப் பசியும் நீடிப்
பூண்முலை மகளிர் பொற்பின் கற்பழிந்து அறங்கள் மாறி
ஆணையில் உலகுகேடாம் அரசுகோல் கோடின் என்றான்
—சீவக., 255.

தீயினம் படர்ந்து வேந்தன் செறுவதே புரியு மாயின்
போயினம் படர்ந்து வாழும் புகலிடம் இன்மை யாலே
வேயினம் படர்ந்த சாரல் வேங்கையை வெருவிப் புல்வாய்
மாயினம் படர்வ தெல்லாம் வையகம் படரும் அன்றே
—சூளா., 265

முறைபெய லொழியும் கூழும் குடிகளும் ஒருங்கு நீங்கும்
.... காவலை விடுப்பின் —விநா. அரசி., 93

56.5. அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை. (நிநிரு)

உரைப்பகுதி:

அ) மணக்.: நீதியல்லன செய்தலானே அல்லற்பட்டு, அதற்கு ஆற்றாது, அழுத கண்ணீரன்றோ செல்வத்தைத் தேய்க்கும் ஆயுதம் எ—று.

இஃது அவ்வரசன் கெடும் என்றது.

ஆ) *பரிதி* கொடுங்கோல் பொறாமல் குடி அழுத கண்ணீரன்றோ அரசன் பாக்கியத்தை வெட்டும் ஆயுதம் எ—று.

இ) *பரிப.:* நீதி அல்லன செய்தலானே அல்லல்பட்டு அதற்கு ஆற்றாது அழுதகண்ணீர் அன்றோ, அரசன் செல்வத்தைத் தேய்க்கும் படையாவது எ—று.

இஃது அவ்வரசன் தான் கெடும் என்றது. இவை இரண்டும் அல்லவை செய்ததனாலே இம்மை மறுமை இழப்பர் என்று கூறின.

ஈ) *காளி.:* கொடுங்கோல் மன்னவன் செய்யும் கொடுவினையால் குடிகள் சாலத்துயரம்[1] உற்று அது பொறுக்கமாட்டாது அழுத கண்ணீர் அதுவே அரசனானவன் அங்ஙனம் ஈட்டிய பெரும் பொருளைத் தேய்க்கும் வழிக்குக்கருவியாகலான் இவ்வினையாளர்க்கு வேறு ஓர் பகைவினை வேண்டா எ—று.

உ) *பரிமேல்.:* அரசன் முறை செய்யாமையால் குடிகள் துன்ப முற்று அதனைப் பொறுக்க மாட்டாது அழுதகண்ணீரன்றே[2], அவன் செல்வத்தைக் குறைக்கும் கருவி.

அழுத கண்ணீர்—அழுதலான் வந்த கண்ணீர். செல்வமாகிய மரத்தை என்னாமையின், இஃது ஏகதேசவுருவகம், அல்லற்படுத்திய பாவத்தது தொழில் அதற்கு ஏதுவாகிய கண்ணீர்மேல் நின்றது[3] அக்கண்ணீரில் கொடிது பிறிதின்மையின், செல்வங்கடிதில்[4] தேயும் என்பது கருத்து

ஊ) *கவிராசர்:* அரசன் முறைசெய்யாத படியினாலே குடிகள் துக்கப்பட்டு, அந்தத் துக்கத்தைப் பொறுக்கமாட்டாமல் அழுத கண்ணீர், கொடுங்கோலனாகிய மன்னவன் செல்வத்தைக் கெடுக்கிற ஆயுதமாம் (எ—று).

ஆயுதத்தைப் பார்க்கிலும் துக்கப்பட்டு அழுத கண்ணீர் கொடிய தாகையினாலே, செல்வம் கடிதிற் றேய்ந்துபோம் எ—ம்;

ஏ) *பழைய 2:* 'அன்றோ' பாடம். அரசன் கொடுங்கோலால்

---

1. சாலத்துயரம் — மிகுந்த துன்பம்
2. அன்றே என்பது வினாவகையால் தேற்றப் பொருளை யுணர்த்திற்று.
3. அல்லற்படுத்திய பாவம் செல்வத்தைத் தேய்க்கும் படை என்பர். அல்லற்படுத்தியதால் விளைந்த கண்ணீர் தேய்க்கும் படை என்றார், இது உபசார வழக்கு. ஆதலால் பாவத்தது தொழில் தேய்த்தல். அது கண்ணீர் மேல் நின்றது.
4. கடிதில் — விரைவில்

அல்லற்பட்டு அழுத கண்ணீர் அல்லவோ அவன் செல்வத்தை அறுக்கும் வாள்?

மல்லர்: என்பது குடிகள் அரசனாலத் துன்பம் அனுபவித்து ஆற்றாமல் அழுதுகொண்டு விடுகிற கண்ணீர் அரசனுடைய செல்வத்தை அன்றைக்குத் தானே குறைக்கத் தக்க ஆயுதம் என்றவாறு.

நெஷ்ட்டூரனுடையபேர் அரசனுக்கு வெகுயீனமாயிருக்கிறதினால் அவன் படுத்துகிற கஸ்தியினாலக் குடியானவன் இடுகிற அழுகைச் சத்தத்தினாலே அரசனுக்கு நெஷ்ட்டூரன் என்கிற பேர் உண்டாகிற படியினாலேயும் ஈனம் உண்டாகிற படியினாலேயுங் குடியானவள் அழுகிற போது தானே ராசாவினுடைய செல்வமாகிய பெருமை குறைந்து போம் என்பது கருத்து.

அல்லல்-துன்பம்; ஆற்றாது-ஆற்றாமல்; அன்றே-அன்றைக்கு; படை-ஆயுதம்.

ஐ) தொகுப்பும் குறிப்புரை:

'தேய்க்கும்' என்பதற்கு வெட்டும், அறுக்கும், குறைக்கும் என்ற பொருள்களைக் காட்டிலும் 'தேய்க்கும்' என்ற பொருள் சிறக்கும். ஒருமருங் குருவகமாகக் கொண்டு செல்வத்தை மரமாக உருவகித்தலினும் இரும்பாக உருவகித்தலும் தேய்க்கும் படை அரமாக உருவகித்தலும் பொருணயமுடையதாகலாம். காரணம் அரசன் தன் செல்வத்தை எஃகிரும்பாகக் கருதி, அது என்றும் அழியாது என்ற உறுதிப் பாட்டாலேயே கொடுமை செய்கிறான். மக்கள் சொல்லமாட்டாமல் கண்ணீர் விடுகின்றனர். கண்ணீரோ 'புண்ணீர்' ஆதலின், அரம் அராவிச் சிறுதுகளாக்கி முற்றும் இல்லாகச் செய்தல் போலக் கண்ணீரும் அழிவது புலனாகாமலே அழித்துவிடும் என்றவாறாம் இது 'தேய்க்கும்' என்ற சொல்லாற் பெற்ற நயம்.

''இம்மை மறுமையிழப்பர்'' என்ற பரிப்பெருமாள் கருத்துரை செல்வந் தேய்ந்தமையானும், கொடுங்கோன்மையானும் விளைந்த பயனைக் கூறுவது.

காளிங்கர் உரை செறிவிலதாயினும் நேரியபொருளதாம் **பரிமேலழகருரை** அங்ஙனமே.

செல்வத்தை என்பதற்கு அரசை என்பர் வ.சுப.மா.

ஒ) ஒப்புமைப்பகுதி:

அல்லற்பட்டு ஆற்றாது அழுதல்:

அல்லலுற்றாற்றாது அழுவாளைக் கண்டேங்கி
மல்லல் மதுரையா ரெல்லாருந் தாமயங்கி
—சிலப்.,19: 15—16

அழுத கண்ணீர் தீமை பயத்தல்:

தோற்றத்தால் பொல்லார் துணையிலார் நல்கூர்ந்தார்
மாற்றத்தால் செற்றார் எனவலியர் அட்டக்கால்
ஆற்றாது அவரழுத கண்ணீர் அவரவர்க்குக்
கூற்றமாய் விழ்ந்து விடும் —பழ.நா.166

கண்ணீனீர் கொல்ல உயிர்
கொடுத்த கோவேந்ஏன் வாழியரோ —சிலப்.29:13

செல்வத்தைத் தேய்க்கும் படை:

வெருவரு முறைபுரி வேந்தை விட்டகல்
திருவொடு பெயர்வதோர் செல்வம் போலவே
—கந்த மாயை நீங்கு., 4

அழுத கண்ணீர்..படை:

ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளைஒக்கும் —பழமொழி.

முற்றும்

இருவர்தஞ் சொல்லையு மெழுதரங் கேட்டே
இருவரும் பொருந்தவுரை யாராயின்
மனுமுறை நெறியின் வழக்கிழந்தவர் தாம்
மனமுற மறுகி நின்ற ழுத கண்ணீர்
முறையுறத் தேவர் முவர் காப்பினூஉம்
வழிவழி யீர்வதோர் வாளாகும்மே —வெற்றிவேற்கை.

56.6. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல் மன்னாவாம் மன்னர்க் கொளி. (நுநிசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: அரசர்க்கு ஒளி நிலை பெறுதல் செங்கோன்மையான் ஆம்: அஃதில்லையாயின், அரசர்க்கு ஒளி நிலையாதாம் எ—று.

முறை செய்யாமையால் அவன் நிலைபெறுதல் அருமையெனக் குற்றங் கூறுவார் முற்படப் புகழில்லையாம் என்றார்.

ஆ) *பரிதி.*: அரசற்குச் செங்கோல் செயங்கொடுக்கும்: மன்னவர் புகழ் பெறுவர்; கொடுங்கோலாகில் செயமும் இல்லை; புகழும் இல்லை எ—று.

இ) *பரிப்.*: அரசர்க்கு ஒளி நிலை பெறுதல் செங்கோன்மையான் ஆம்; அஃது இல்லையாயின் அரசர்க்கு ஒளி நிலையாதாம். முறை செய்யாமையால் வரும் குற்றம் கூறுவார் முற்படப் புகழ் இல்லை யாம் என்றார் எ—று.

ஈ) *காளி.*: மன்னரானவர் தமக்குத் தமது ஒளி நிலை பெறுதலா வது செங்கோன்மை நிலை பெறுதல்; மற்று அஃது இல்லெனின் மன்னர்க்கு நிலையாவாம் ஒளிகளானவை எ—று.

மன்னுதல் என்பது நிலைபெறுதல்; மன்னாவாம் என்பது நிலை யாவாம் என்றது. ஒளி என்பது குலமும் குணனும் கல்வியும் உணர்வும் மரபும் பிறபும் ஆகிய ஒளிகளான் பெறுபொருள்கள் என அறிக.

உ) *பரிமேல்.*: அரசர்க்குப் புகழ்கள் தாம் நிலைபெறுதல் செங் கோன்மையானாம்; அச்செங்கோன்மை இல்லையாயின், அவர்க்கு அப்புகழ்கள் தாம் உளவாகா.[2]

விகாரத்தால் தொக்க மூன்றாவது விரித்து ஆக்கம் வருவித்து உரைக்கப்பட்டது.[3] மன்னுதற்கு ஏதுபுகழாதல்'' இந்நிலத்து மன்னு தல் வேண்டின் இசைநடுக''[4] என்பதனால் அறிக. மன்னாமை — ஒரு காலும் நிலையாமை.[5] பழிக்கப்பட்டால் ஒளி மன்னாவாம், ஆகவே தாமும் மன்னார் என்பதாயிற்று. வென்றி, கொடை முதலிய[6] ஏதுக் களால் புகழ் பகுதிப்படுதலின், பன்மையால் கூறினார். அவையெல் லாம் செங்கோன்மையில் வழி இலவாம் என்பதாம். இவை நான்கு பாட்டானும் கொடுங்கோலனாயினான் எய்தும் குற்றம் கூறப்பட்டது.

---

1. ஒளி-மிகுபுகழோடு கடவுட்டன்மை. ''உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி, கறங்குதெண்டிரை ஞாலங் காக்குமால்'' (சீவக. 248)
2. ஒளி மன்னா என்றது ஒளி என்ற பால்பகா அஃறிணைப்பெயர் பன்மை முடிவு ஏற்றது. அதனை விரித்துப் புகழ்கண்மன்னாவாம் எனப்பட்டது.
3. செங்கோன்மை என்ற சொல்லோடு 'ஆன்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு விரித்து, கொண்டு முடிக்குஞ் சொல்லாக 'ஆம்' என்பதனையும் புணர்த்துச் செங் கோன்மையான் ஆம் என உரைக்கப்பட்டது என்பதாம்
4. நான்மணி: செய் 15. இவ்வுலகில் நிலை பெறுதலை விரும்பினால் புகழை நிலை பெறச் செய்க என்பது பொருள்.
5. ஒருகாலும் நிலையாமை — சிறுபோதும் நிலையாமை.
6. முதலிய என்றமையின் கல்வி, தறுகண் முதலியவற்றானும் வருதலைக் காண்க.

ஊ) கவிராசர்: அரசர்களுக்குக் கீர்த்தி யுண்டாகிறது செங்கோல் முறைமையா லேயாம்; அந்தச் செங்கோல் முறைமை இல்லாவிட்டால் அந்த அரசர்களுக்குக் கீர்த்தியுண்டாகாது எ—று.

கொடுங்கோலனானால் அபகீர்த்தி வரும் என்பதாம்

ஏ) பழைய 2: 'மன்னற்கு' 'அஃதன்றேல்' பாடம்.

அரசற்குச் செங்கோல் செலுத்திற் கீர்த்தி மன்னி நிற்கும்; அச்செங்கோல் முறைமையில்லையாயில், மன்னி நில்லாதாம் கீர்த்தி.

மன்னி நிற்பது அவகீர்த்தி என்பதாயிற்று. ஒளி—கீர்த்தி. செங் கோல் செலுத்திற் கீர்த்தி நிற்கும்: கொடுங்கோல் செலுத்தில் அவ கீர்த்தி மன்னி நிற்கும் என்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் ஒளி மன்னுதலை எழுவாயாகக் கொண்டு, செங் கோன்மையை ஏதுவாக்கி, 'மன்னர்க்கு ஒளி மன்னுதல் செங்கோன் மையான் ஆம்' என்றும், பின்வரும் தொடர்க்கு ஒளியை எழுவாயாக்கி 'ஒளி மன்னாவாம்' என்றும் முடித்துப் பொருள் கூறுவர்.

கருத்துரையில் 'முறைசெய்யாமையால் அவன் நிலைபெறுதல் அருமை' என்பர். இக்கருத்து இவர்க்குத்தோன்றியதன் பின்னணி ''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கிறை யென்றுவைக்கப் படும்'' என்ற வாய்மொழி. பரிதி. வழக்கம் போலக் கருத்துரை தருவர்.

'ஒளி என்பது அரசனுக்குள்ள கடவுட்டன்மை' என்பர் நச்சி னார்க்கினியர். ''உறங்குமாயினும் மன்னவன்றன்னொளி' என்றது காண்க. இவ்வொளி விளைவது ஆட்சியின் நேர்மையால் ஆதலால் ஒளியை எழுவாயாகக் கொண்டு, 'மன்னர்க்கு ஒளி மன்னுதல் செங் கோன்மை (யான்) ஆம்' என்ற பரிமேலழகர் உரை சிறந்தது.

மரபுவழி மன்னனுங் கூட மன்னுதல் செங்கோன்மையான் ஆம் என்றதன் கருத்து ஊழ்வினைவயத்தான் மன்னன் மகனாகப் பிறந்தமையால் உளதாங்காலம்வரை அப்பதவியில் நிலைபெறுதல் செங்கோன்மையான் ஆம் என்றதன் நயத்தையும் ஓர்க. இதுதான் பொருள் என்பதன்று. பொருளால் தோன்றும் நயமேயாம். இந்த

எண்ணத்தைப் பெறத் துணைசெய்தது 'இறையென்று வைக்கப்படும்' என்ற தொடரும், இக்குறட்பாவுக்கு *மணக்குடவர்* தரும் 'அவன் நிலைபெறுதல் அருமை' என்ற விளக்கமுமாம்.

'ஒளி' என்பதற்குக் 'கீர்த்தி,' 'புகழ்,' 'கீர்த்திகள் சேர்ந்த பிரகாசம்,' எனப்பலவாறு உரைப்பர். கடவுளைக் கண்டபோது உண்டாகும் அன்பு கலந்த அச்சவுணர்வு போன்றதோர் உயர்ந்தநிலை என்பதனைச் *சிந்தாமணிச்* செய்யுள் கொண்டு துணியலாம்.

தேவநேயர் 'ஒருவன்' தன் வாழ்நாளில் எல்லாராலும் மதிக்கப்படும் மதிப்பு; அது பெரும்பாலும் வாய்ச் சொல்லாகநிகழ்வது' என்று கூறி ஒளிக்கும் புகழ்க்கும் வேறுபாடு காட்டுவர்.

'ஒளிமன்னா' என்ற பன்மை முடிபிற்கு, *பரிமேலழகர்* 'வென்றி' கொடை முதலிய ஏதுக்களால் புகழ்பலவாகலின் பன்மையாற் கூறினார்' என்பர். 'குணமும், குலமும், கல்வியும், உணர்வும், மரபும் பிறவும் ஆகியவற்றால் ஒளி பலவாயின' என்பர் *காளிங்கர்*. 'ஒளி 'அதிகாரம்' என்பர் *வ. சுப மா.*; இது நேர் பொருளன்று. கருத்துப் பொருளாகலாம்.

56.7. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன் அளிஇன்மை வாழும் உயிர்க்கு. (நிநெ)

உரைப்பகுதி:

அ) மணக்.: உலகத்தில் பல்லுயிர்க்கும் மழையில்லையானால் வருந்துன்பம் எத்தன்மைத்தாகின்றது அத்தன்மைத்து; அரசன் அருளிலனாதல் அவன் கீழ் வாழும் மக்கட்கு எ—று.

இஃது அருள் செய்யாமையால் வருங் குற்றம் கூறிற்று.

ஆ) பரிதி.: மழை இல்லாத போது பூமி எப்படித் துயருறும்; அத்தன்மையின் அரசன் செங்கோல் கோணின் மண்டலம்[1] எ—று.

இ) பரிப.: .....

ஈ) காளி.: பருவத்து வந்து பெய்யும் மழையில்லாமை இவ்வையகத்துக்குப் பெருமை யில்லாதது எத்தன்மைத்து; மற்று அத்தன்மைத்து

1. மண்டலம்—பூமி

யாது எனின், வேந்தனது தண்ணளி[2] இல்லாமையாகிய கொடுங் கோன்மை மற்று ஈண்டு வாழும் உயிர்கட்கு எ—று.

உ) *பரிமேல்.*: மழையில்லாமை வையத்து வாழும் உயிர்கட்கு எவ்வகைத் துன்பம் பயக்கும், அவ்வகைத்துன்பம் பயக்கும் அரசன் தண்ணளியில்லாமை அவன் நாட்டு வாழும் குடிகட்கு, (எ—று).

சிறப்புப்பற்றித் துளிஎன்பது மழைமேல் நின்றது[3]. உயிர் என்பது குடிகள்மேல் நின்றது.[4] மேல் 'வானோக்கி வாழும்'[5]என்றதனை எதிர் மறை முகத்தால் கூறியவாறு.

காரி.: பாற்றுளி, நெய்த்துளி எனலுமாம் ஆகலின், சிறப்புப் பற்றித் துளி மழைமேல் நின்றது.

ஊ) *கவிராசர்*: மழையில்லாவிட்டால் பூமியிலே இருக்கிற சீவன் களுக்கு எத்தனை துக்கமுண்டோ; அத்தனை துக்கமுண்டாம், அரசன் நீதிமுறைமை தப்பி நடந்தால் அவன் நாட்டிலே இருக்கிற குடிகளுக்கு எ—று.

மழை இல்லாதபோழ்து பசியாலும் வெயிலினாலும் வருந்து கிறாப் போலே அரசன் நீதியாய் நடத்தாவிட்டால் குடிகளுக்கு எல்லாத் துக்கமுமுண்டாம் எ—ம்.

ஏ) *பழைய 2*: மழையில்லாமை வையகத்தில் வாழும் உயிர்கட்கு எவ்வகைத்துத் துன்பம் பயக்கும், அவ்வகைத் துன்பம் பயக்கும் மன்னன் கருணையில்லாமை, அவன் நாட்டுக் குடிகட்கு.

உயிரென்பது குடிகண் மேல் நின்றது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்

வ.சுப.மா., 'அளி—அன்பு' என்பர். அன்பின் முதிர்ந்த நிலையே அளியாகும். *ஜி.வரத.*, 'துளியை யளியோடு உவமித்த தால் அளியும் அரசன் பயன் கருதாது இரக்கத்தால் வழங்க வேண்டும் என்பதை உணர்த்தியவாறாம்' என்பர்.

---

2. தண்ணளி—அருள்.
3. துளி என்பது பாற்றுளி நெய்த்துளி தேன்துளி என்றாற்போல நீரியப் பொருளின் சிறுபகுதியை உணர்த்துமேனும்; ஈண்டு ஞாலத்திற்கு என்ற குறிப்பான் மழைத் துளியையே சிறப்பாக உணர்த்திற்று.
4. உயிர் என்பது புல் முதல் தேவரீறான அனைத்துயிர்களையும் குறிக்குமாயினும் வேந்தன் அளியைப் பெற்றுய்வன மக்களுயிரேயாதலின் அவற்றை உணர்த்திற்று.
5. செங்கோன்மை 2ம் குறள்.

வேந்தன் அளியே மழைக்குக் காரணம் என்ப ஆதலின், அளியின் மையைத் துளியின்மையோடு இணைத்துக் கருதுகிறார்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே:

வானம் துளிமாறு பொழுதினில் உலகம். ...கலி., 25:28

பெயன் நந்தி வளப்பிற்சாம் புலத்திற்குப் பெயல் போல்
—கலி., 78:19

மண்குளிர் கொள்ளக் காக்கும் மரபொழிந் தரசர் தங்கள்
விண்குளிர் கொள்ள வோங்கும் வெண்குடை வெதும்புமாயின்
கண்குளிர் கொள்ளப் பூக்கும் கடிகயத்தடமுங் காவும்
தண்குளிர் கொள்ளு மேனும் தாமிக வெதும்பு மன்றே
—சூளா., 264

வறனுழக்கும் பைங்கூழ்க்கு வான் சோர்வு இனிதே
—இனியது., 16

கார்வர வலர்பயிர் பொருவுவர் களியால்
—கம்பராமா., 311

56.8. இன்மையின் இன்னா துடைமை முறைசெய்யா மன்னவன் கோல்கீழ்ப் படின். (நாநா அ)

உரைப்பகுதி:

அ) மணக்.: நல்குரவினும்[1] செல்வம் துன்பமாகும்; முறை செய்யாத அரசனது கொடுங்கோலின் கீழே குடியிருக்கின் எ—று

இது பொருளுடையாரும் துன்பமுறுவர் என்றது. இவைமூன்றும் முறை செய்யாமையாலே வரும் குற்றம் கூறின.

ஆ) பரிதி.: மிடியிலும்[2] பொல்லாது கொடுங்கோல் மன்னவன் மண்டலத்திற் குடிகள் மிடைப்படுவது[3] எ—று.

இ) பரிப்.: நல்குரவினும் செல்வம் துன்பம் ஆகும், முறை செய்யாத அரசனது கொடுங்கோலின் கீழே குடி இருக்கின் எ—று.

1,2, நல்குரவு, மிடி—வறுமை
3. மிடைப்படுவது—செறிந்திருப்பது.

இது பொருளுடையாரும் துன்பம் உறுவர் என்றது. இவை மூன்றும் முறை செய்யாமையாலே வரும் குற்றம் கூறின.

ஈ) *காளி.*: உலகத்தோர்க்கு மிகவும் இன்னாதது யாதோ எனின், இல்லாமை அன்றே; மற்று அதனினும் சால இன்னாதது உடைமை யானது; எவ்விடத்து எனின், முறைமை செய்யாத மன்னவனது கொடுங்கோலிடத்தகப்பட்ட குடிகட்கு எ—று.

இனி மற்றுக் கொடுங்கோன்மை குற்றம் என்று கடிந்து ஒழுகும் குணமுடைய வேந்தன் செய்யவேண்டுவது ஒன்று உண்டு; அது யாதோ எனின், முறை செய்வழியும் உயிர்கள் அஞ்சத்தக்கனவாகிய வினை செய்யற்க என்பதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.[4]

உ) *பரிமேல்.*: முறை செய்யாத அரசனது கொடுங்கோலின் கீழ் வாழின், யாவர்க்கும் பொருளினது இன்மையினும் உடைமை இன்னாது.

தனக்குரிய பொருளோடு[5] அமையாது, மேலும் வெஃகுவோனது[6] நாட்டுக் கைந்நோவ யாப்புண்டல்[7] முதலிய[8] வருவது பொருளுடை யார்க்கேயாகலின், அவ்வுடைமை இன்மையினும் இன்னாதாயிற்று. இவை இரண்டுபாட்டானும் அவன்நாட்டு வாழ்வார்க்கு வரும் குற்றம் கூறப்பட்டது.

காரி.: உடைமை-எழுவாய், கட்டியிறக்குதல்-கிட்டி கட்டுதல் முதலாயின காண்க.

ஊ) *கவிராசர்*: நீதிமுறைமையாய் நடவாத அரசன்கீழே வாழுகிற குடிகளுக்குத் தரித்திரத்திலும் பொல்லாதது ஐசுவரியம் உண்டாயிருக் கிறது எ—று.

ஏ) *பழைய 2*: முறை செய்யா மன்னவன் கொடுங்கோலின்கீழ் வாழின், யாவர்க்கும் பொருளில்லா வறுமையிலும் பொல்லாது பொருளுடைமைச் செல்வம்.

---

4. இக்குறட்பாவைக் காளிங்கர் இவ்வதிகாரத்து இறுதிப்பாவாகக் கொண்டன ராதலின் மேலையதிகாரத்திற்குத் தோற்றுவாய் கூறினர் என்க.
5. தனக்கு உரிய பொருள்—மன்னன் குடிகளிடமிருந்து நாடுகாவற்பங்காகத் தனக் குரிய வருவாயுள் ஆறிலொரு பங்குப் பொருள்
6. வெஃகுவோன்—விரும்புபவன்.
7. கைந்நோவ யாப்புண்டல்—கிட்டிகட்டுதல், கட்டியிறக்குதல் விலங்கிடல் போல்வன என்பர் நுண்பொருண்மாலையுடையார்.
8. முதலிய என்றதால், அடித்தல், குத்தல், உதைத்தல், கையில் ஊசி ஏற்றுதல், கண் பறித்தல், கை குறைத்தல், கொலை முதலிய அனைத்தும் எண்ணுக.

மல்லர்: என்பது நீதியில்லாத அரசனுடைய கோலுக்குக்கீழிருந் தாலத் தரித்திரத்தைப் பார்க்க ஆஸ்தி பொல்லாதது என்றவாறு.

நீதியில்லாத அரசன் ஆஸ்தியாயிருக்கிற குடியாளுக்கு வேண்டிய நெஷ்ட்டூரங்களைச் செய்கிறதினாலேயும் இஷ்ளச்சியிருக்கிற குடி களைத் தேடத் தக்கதில்லை என்கிறதினாலேயும் ஆஸ்திக்காரனுக்கு வருகிற துன்பம் தரித்திரனுக்குயில்லாத படியினால் அவன் சீர்மை யிலே ஆஸ்திக் காரனாயிருக்கிறதைப் பார்க்கத் தரித்திரனாயிருக் கிறது நல்லது என்பது கருத்து.

இன்மை-இல்லாமை; இன்னாது-பொல்லாப்பு; செய்யா-செய்யாத; மன்னவன்-ராசா; படின்-பட்டால்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்;

பரிதி., 'குடிகள் மிடைப்படுதல்' என்ற உரை அவர் கொண்ட. பாடம் 'இன்மையின் இன்னாது மிடைமை' என்பது. மிடைமை என்பது மிகுத்திடல் செறிதல் என்னும் பொருளது (அருங் — நிகண்டு) ஆதலைக் காண்க.

பெற்றிழத்தலைக் காட்டிலும் இல்லாமலே இருத்தல் பெருந் துன்பந் தருவதன்மையின் உடைமை இன்மையின் இன்னாத தாயிற்று. *பரிமேலழகரும்* பிறரும் 'கைநோவ யாப்புண்ணல், கொலையுண்ணல், விறைப்படுதல் முதலிய நிகழ்தலால் இன்னாத தாயிற்று' என்பர். எக்காலத்தும் துன்பத்தை எதிர்நோக்க வேண்டி யிருத்தலின் கொடுங்கோலரசன்கீழ் உடைமை யின்னாததாயிற்று'. 'இன்மையின் இன்மையே இன்னாதது' என்ற ஆசிரியர் 'அதனினும் இன்னாதது உடைமை' என்றல் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முறைகோடி மன்னவன் செய்யின்:

ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
முறையில் அரசன் நாடு நல்கூர்ந் தன்று —*முதுமொழிக்*.9:1

முற்றும்:

வெஞ்சின வேந்தன் முறைநெறியில் சேர்தலும்
திங்கள்மும் மாரிக்கு வித்து —*திரி*.98

கொள்பொருள் வெ∴கிக் குடியலைக்கும் வேந்தனும்
வல்லே மலையறுக்கும் கோள் —திரி., 50

தருமதத்தன் கூற்று:

கோணிலை திரிந்துநூழி குறைபடப் பகல்கண் மிஞ்சி
நீணில மாரியின்றி விளைவ∴கிப் பசியு நீடிப்
பூண்முலை மகளிர் தங்கள் கற்பழிந்தறங்கண் மாறி
ஆணையிவ்வுலகு கேடாம் அரசுகோல் கோடினென்றான்
—சீவக., 255

முற்றும்:

கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும்
கோணிலை திரிந்திடின் மாறிவறங்கூரும்
—மணி.காதை., 7.வரி. 8–9

கொண்மூ மழைகால் ஊன்றா வளவயல் விளையா
கொடுங்கோல் வேந்தன் காக்கு நாடே —ஆசிரிய

பெறுபயன் நாட்டில் குன்றும் பிறங்கொளி நிலைபெறாது
.....பொருள்கைக் கொண்டு காவலை விடுப்பின்
—விநா. அரசி., 93

வேந்தன் முறைதிறம்பின் வேத விதிதிறம்பும்
ஏந்திழையார் தம்கற்பும் இல்லறமும் நில்லாவாம்
மாந்தர் பசியால் உணங்க மழைவறந்து
பாந்தள் முடிகிடந்த பாரின்விளை வ∴குமால்
—பிரமோத். பத்திராயு.28

ஒருபுடை;

மீன் வயினிற்ப வானம் வாய்ப்ப —பதிற்.செய்., 90

வான மின்னு வசிவு பொழிய வானா(து)
இட்ட எல்லாம் பெட்டாங்கு விளையப்
பெயலொடு வைசிய வியன்கண் இரும்புனம்
—மலைபடு., 97–99

மழைதொழிலுதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப் பினாயிரம் வித்தியது விளைய
....
உலக மாண்ட உயர்ந்தோர் மருக —மதுரைக்., 10–11
வான மும்மாரி பொழிக மன்னவன்
கோணிலை திரியாக் கோலோனாகுக —மணி.காதை. 1:34-35

569. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். (நிநிகூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: முறைமைகோட மன்னவன் செய்வனாயின், மழை துளி விடுதலைத் தவிர்த்துப் பெய்யாதொழியும் எ—று.

இது முறை கோடினால் வருங்குற்றங் கூறப்பட்டது.

ஆ) பரிதி.: செங்கோல் முறைமை நடவாத அரசன் மண்டலத்துக்கு மழை பெய்ய நாணும் எ—று.

இ) பரிப்.: முறைமை கோட மன்னவன் செய்வனாயின், மழையானது துளி விடுதலைத் தவிர்ந்து பெய்யா தொழியும் எ—று.

இது முறைமை கோடினால் வரும் குற்றம் கூறிற்று.

ஈ) காளி.; உலகத்து வேந்தனானவன் நீதி வழுவி நெறியல்லன செய்யுமாயின், கொண்டலானது[1] பருவம் கோடி[2] மற்று ஈண்டு மழை பெய்தலைச் செய்யாது எ—று.

முறைகோடி என்பது நீதி வழுவி என்றது. உறை என்பது மழைத் துளி என்றது. ஒல்லாது என்பது அதனைச் செய்யாது என்றது. வானம் என்பது கொண்டல் என்றது.

உ) பரிமேல்.: மன்னவன்தான் செய்யும் பொருளை முறை தப்பச்[3] செய்யுமாயின், அவன் நாட்டுப் பருவமழை இன்றாம்வகை மேகம் பொழிதலைச் செய்யாது.

இரண்டிடத்தும்[4] கோட என்பன திரிந்துநின்றன. உறைகோடு தலாவது பெய்யுங்காலத்துப் பெய்யாமை. அதற்கு ஏது வருகின்ற பாட்டால் கூறுப.

ஊ) கவிராசர்: மன்னவன் தான் செய்யுங் காரியங்களை முறை தப்பச் செய்தால், அவன் நாட்டிலே மேகங்கள் பருவத்துக்குப் பெய்யாது எ—று.

1. கொண்டல்—மேற்குப் பருவ மழை. 2. கோடி—மாறுபட்டு
3. முறை தப்ப—நெறி தவற
4. இரண்டிடத்தும்—முறைகோடி உறைகோடி என்ற இரண்டிடத்தும். 'கோடி'என்ற செய்து என்னும் வாய்பாட்டு வினைஎச்சம் முதனிலை மூன்றும் வினை முதல் முடியின் ஆதலின்' பிறவினைமுற்றுக் கொண்டு முடியாது. ஆகவே கோட எனச் செயவென்னெச்சமாகத்திரிக்கப் பெற்றது.

ஏ) **பழைய 2:** மன்னவன் தான் செய்யு முறைமை தப்பிக் கொடுமை செய்யுமாயின், அவனாட்டுப் பருவ மழையு மில்லாமற் பருவந் தப்பியபோது மேகம் மழை பெய்தற்கும் பொருந்தாது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பழைய உரைகளிலும், 'மன்னன் முறைதவறி ஆட்சி செலுத்தினால், அவன் நாட்டில் வானமும் தன் இயல்பான பெருமை தவறி மழைபெய்ய இணங்காது' என்ற **இராமலிங்கர்** உரை தெளிவானது.

'**உறைகோடல்**' – 'பெய்யுங் காலத்துப் பெய்யாமை' என்பர் **பரிமேலழகர்**. **வரத**. 'பெய்ய வேண்டிய காலத்துப் பெய்யாமையும், வேண்டாத காலத்து மிகுதியால் பெய்தலுமாம்' என்பர். கோடுதல்—இயற்கைக்கு மாறுபடுதல். இரண்டும் மாறாதற்கிழுக்கின்று என்க. ஆதலால் இவருரையும் ஏற்புடையது. **பழைய** உரை 'பருவந் தப்பிய போதும் பெய்தற்குப் பொருந்தாது' என்பர்.

'இயல்புளிக் கோலோச்சும் மன்னவன்' (545) என்றதும் உடன் பாட்டு வகையான் கூறியதாம் என்பர் **தேவநேயர்**.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

கோணிலை திரிந்திடிற் கோணிலை திரியும்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை —**மணி**., 7:8—9

கோணிலைதிரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி
நீணில மாரியின்றி விளைவ∴கிப் பசியு நீடிப்
பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழிந் தறங்கண் மாறி
யாணையிவ் வுலகு கேடா மரசுகோல் கோடி னென்றான்
—**சீவக**., 255

56.10. ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர் காவலன் காவான் எனின். (நூ○)

உரைப்பகுதி:

அ) **மணக்.:** பசுக்கள் பால் குறையும்; அந்தணர் வேதம் ஓதார் அரசன் காவானாயின் எ—று.

இது காவாமையால்வருங் குற்றம் கூறிற்று.

ஆ) *பரிதி.:* ஆவின் பயன் குன்றும்: வேதநீதியும் கெடும்; மன்னவன் செங்கோல் குன்றின் எ—று.

ஈ) *காளி.:* உலகத்து முந்நிரைப் பசுக்களானவை[1] கறவையும் கன்றுமாகப் பயன்பட்டு வருகிற பயனும் குன்றும்; மற்று அதுவேயும் அன்றி அறுவகைத் தொழிலுக்கு உரியராகிய அந்தணரும் அருமறை ஓதலும் மறந்துவிடுவர்; என்னை எனின் வையங்காவலன் ஆகிய மன்னவன் செங்கோல் முறையால் பாதுகாவாது கொடுங்கோன்மை செய்து ஒழுகின் எ—று.

உ) *பரிமேல்.:* காத்தற்கு உரிய அரசன் உயிர்களைக் காவானாயின் அறனில்லாத அவன்நாட்டுப் பசுக்களும் பால்குன்றும் அந்தணரும் நூல்களை மறந்துவிடுவர்.

ஆபயன் – ஆவாற்கொள்ளும் பயன்.[2] அறுதொழிலாவன ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என இவை. பசுக்கள் பால்குன்றியவழி அவியின்மையானும்[3], அது கொடுத்தற் குரியார்[4] மந்திரம்[5] கற்பம்[6] என்பன ஓதாமையானும், வேள்வி[7] நடவாதாம்; ஆகவே, வானம் பெயலொல்லாது என்பதாயிற்று. இவை இரண்டு பாட்டானும் அவன் நாட்டின்கண் நிகழுங்குற்றம் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்:* உலகத்திலே இருக்கிற பிராணிகளைக் காத்து ரட்சிக்கும் அரசன் காவாவிட்டால், அவன் நாட்டிலே தருமம் இல்லாமலும், பசுக்கள் பாலில்லாமலும் போம்; அந்தணரும் வேதசாஸ்திரங்களை மறந்துவிடுவர் எ—று,

---

1. முந்நிரை பசுக்கள்—பசு, எருமை, ஆடு என்ற மூவினமான மந்தைகளில் ஒன்றாகிய பசுக்கள்.
2. பயன்—பயம் என்பதன் போலி. 'பயசு துத்தம் பயம் பால்' என்பது நிகண்டு. ஆதலால் பயனாகிய பால் எனல் வேண்டா. பயம் என்பதே பாலின் பெயர்:
3. அவி—வேள்வித்தியில் தேவர்கட்காகக் கொடுக்கப்பெறும் உணவுவகைகள்.
4. கொடுத்தற்குரியார்—வேதமோதிய இருத்துவிக், ஓதா (ஹோதா) முதலிய அந்தணர்கள்.
5. மந்திரம்—வேதத்தில் தெய்வங்களை அழைப்பதற்குப் பயன்படும் ஒருபாகம். அது மந்திர பாகம் என்றே அழைக்கப்பெறும்.
6. கற்பம்-வேள்வி முதலியவற்றை நடத்தும் வகையைக் கூறுவது. வேத அங்கங்கள் ஆறில் ஒன்று: அவை போதாயநீயம், பாரத்வாசம், ஆபத்தம்பம் ஆத்திரேயம் முதலியனவாம்.
7. தேவர்களை நோக்கி அக்கினியிற் செய்யப்படும் ஓமங்கள் சூரியனை அடைகின்றன சூரியனிடமிருந்து மழை உண்டாகிறது. அதனால் தானியங்கள் விளைகின்றன. அவற்றால் உயிரினங்கள் வளர்கின்றன. எனவேதம் சொல்கிறது.

ஏ) பழைய 2 'அறுதொழிலார் நூலிழப்பர்' பாடம். காத்தற்குரிய காவலன் உயிர்களைக் காவானாயின், தன்மம் நில்லாது, அவன் நாட்டுப் பசுக்களும் பால் குன்றிப் போம்; அந்தணர் நூல்களை இழப்பர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

முற்கால—பிற்கால உரையாசிரியர்களின் கருத்து மாற்றம் இக் குறளில் ''ஆபயன் குன்றும்'' ''அறுதொழிலோர் நூன் மறப்பர்'' என்ற இருபகுதியைப் பற்றியனவேயாம்.

'ஆபயன் குன்றும்' பசுக்கள் பாலாகிய பயனைத் தருதலிற் குறைவுபடும்' என்பதே பழையோர் அனைவர் கருத்தும். கா.சு. ஆபயனை வினைத்தொகையாகக் கொண்டு, 'முயல்வார்க்கு அம் முயற்சியால் இயற்கையில் உளதாம் பயன் இல்லாமற் போம்' என்பர் குழந்தையும் இதனை ஒத்துரைப்பர். 'முதன்மையான தொழிலுடை யோர் தம் தொழிலுக்குரிய அறிவை மறந்து விடுவர்' எனவும் கூறுவர், சுப்பிரமணியதாசரும் வினைத்தொகையாகவே கொண்டு 'அரசனுக்கு ஆகும் பல வருவாய்கள் குறையும்' என்பர்.

ஆ, போ என்பன வினைப்பகுதிகளாய் ஏனைய வினை வேறு பாடுகள் தோன்ற இடந்தருவதாயினும், வினைத்தொகைக் கண் 'கு' பெற்று வருதலே மரபு என்பதை இலக்கண ஆசிரியர்களே 'ஆ பெயர்' என்னாது ஆகுபெயர் என்றமையானும் வள்ளுவர் ஆகு + ஊழ் = ஆகூழ், போகு + ஊழ் = போகூழ் என்றமையானும் பெறப் படுதலின் ஆகுபயன் ஆமேயன்றி ஆ பயன் எனவராது ஆதலால் 'ஆபயன்' என்றற்கு வினைத்தொகையாகப் பொருள் கோடல் பொருந்தாது என்க.

அன்றியும், ஆவையும் ஆனியற் பார்ப்பன மாக்களையும் இணைத்தே கூறுதலும் (புறநா. 9) ''வாழ்க அந்தணர் வானவ ரானினம்'' எனப் பிற்கால வழக்குண்மையுங் காண்க. ஆதலால் பால் முதலிய தந்தும், முதற்றொழிலுக்கு உதவியும் வருதலாகிய ஆவின் பயனே வள்ளுவராற் கருதப் பெற்றது என்க. மு.கோ. 'ஆவினது பயன்—பசு கன்றீனாமை' என்பர்.

''அறு தொழிலோர் நூன் மறப்பர்''

அறுதொழிலோர் —அந்தணர். நூல் — வேதம், நூல்மறத்தல்— வேதம் ஓதார் மணக்; ''வேத நீதி கெடுதல்'' என்பர் பரிதி; 'அறு

வகைத்தொழிலுக்கு உரியராகிய அந்தணர் வேதம்ஓதுதலை மறப்பர்' **காளிங்கர்**, பழைய ஆசிரியரனைவரும் இங்ஙனமே கருதுவர்.

கா.சு. 'அறியுந் தொழிலினையுடைய கலைஞர் நூலினைப் படிக்கா மல் மறந்து விடுவர்' என்பர்.

வரத. 'பணி செய்வதையே கடமையாகக் கொள்ளும் பெரியோர் அறவழித் தொண்டு செய்வதை மறந்து விடுவர்.'

சி.இ. 'அறுவகைப்பட்ட தொழிலோரும் தம் தொழிலைச் செய்ய இயலாமல் மறந்து விடுவர். அறுதொழிலாவன உழவு செய்தல், அமைச்சு, அரசு, கற்பித்தல், வாணிகம் என்பன' என்பர்.

மு.கோ., அறுதொழிலோர் — அறத்தை வரையறுக்கும் நீதி நூலார்!

இராம. 'ஆ — பசு முதலான கால்நடைகளின் பொதுப்பெயர். ஆபயன் குன்றிய நாட்டில் உணவு குறையும்; அது குறைந்தால் மக்களிடை நடக்கும் ஆறு தொழில்களும், அவற்றிற்கான நூல்களும் மறந்து விடப்படும். ஆறு தொழில்களாவன; கற்றல், கற்பித்தல், பொதுநல முயற்சிகளைச் செய்தல், அதற்கு உதவுதல், நன்கொடை யளித்தல், நன்கொடை வசூலித்தல் முதலான அறிவு முயற்சிகளைச் செய்தல், அதற்கு உதவுதல், நன்கொடையளித்தல், நன்கொடை வசூலித்தல், பிச்சை போடுவதும் எடுப்பதும் அன்று' என்பர். மேலும் 'அந்தணர் நூற்றும்' என்ற குறட்பாவையும் 'மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்' என்பதையும் காட்டி 'அறுதொழிலோர்– அந்தணர். நூல்—அறநூல் ஞானநூல் நீதி நூல் ஆகிய வேதங்களே' எனவும் வற்புறுப்பர்.

குழந்தை, 'அறுதொழில் — இன்றியமையாதன' என்று அறுதி செய்யப்பட்ட தொழில்; அவை உழவு, வாணிகம், நெசவு, தச்சு, கொல் முதலியன' என்பர்.

தேவநேயர் 'ஆபயன்—ஆகும் பயனும் பசுவான் விளையும் பயனும், அறு தொழிலோர் — உழவு முதலிய ஆறுவகைத்தொழில் புரிவோர்' எனக் கொண்டு *பரிமேலழகரை* வன்மையாக மறுப்பர். 'எத் தொழிலும்' எனக் கருத்துப் பொருள் உரைப்பர் **வ.சுப.மா.**

ஆகவே இவ்வேறுபாடுகள் அந்தணர் நூல் மறப்பர் — அந்தணர் வேள்விக்குரிய நெய் முதலியன பயனைத்தரும் ஆ தன் பயனிற்குறை யும் என்ற வருணம் பற்றிய விளக்கத்தால் விளைந்தமை வெள்ளிடை

மலையரம். அந்தணர் ஒழிந்த ஏனையோர்க்குள்ள தீமைகளைக் கூறாது அந்தணர்க்கு மட்டும் கூறுதல் வள்ளுவர் உள்ளமாகுமா? என்ற ஐயமே இத்தனை புதுநோக்குக்கும், அமைதிக்கும் மறுப்புக்கும் காரணமாதலைக் கண்டு பின்னோர்கள் இங்ஙனம் உரைத்தனர்.

''அறுவகைப்பட்ட அந்தணர் பக்கமும்'' ஐவகை மரபின் அரசர் பக்கமும் இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்'' என விதித்த தொல் காப்பியச் சூத்திரம் பொருளதிகாரம் புறத்திணை 20 ம் நூற்பா ஓதுவித்தல் ஒழிந்த ஐந்தையுமே அரசர்க்கு உரிமையாக்குகிறது. அறுதொழிலோர் எனக் குறிக்கப்பட்டார் அந்தணர் முதலிய நான்கு நிலையாரையுமே அவருள் ஓதுவித்தல் தொழில் அந்தணர்க்கே யுரிமையின் சிறப்புப்பற்றி அறுதொழிலோர் அந்தணர் என்றனர் உரை ஆசிரியர் அனைவரும்.

இதனால் ஓரினத்தாருக்கு நேருந்தீங்கே விதிக்கப்படுதலின் அனை வர்க்கும் ஆதல் வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த நூற்றாண்டுப் புலவர்கள் இங்ஙனம் உரைப்பர்.

ஆனால் வள்ளுவர் என்றும் பொதுமையின் நிற்பவர். பொது மையே வேண்டுவர் ஆதலால் ''மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்'' (134) ''அந்தணர் நூற்கும்'' (543) என அவ்விரண் டிடத்தும் விதந்து ஓதியவர் ஈண்டு 'அறுதொழிலோர்' என்றதில் அறுவகைப்பட்ட பார்ப்பன பக்கமும் இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்'' (தொல் பொருள்75) என்பதாற் குறிக்கப்பெற்ற ஓதுதல் ஓது வித்தல் வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு தொழிலை யுடைய பார்ப்பனரும், ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம் என்ற ஆறுதொழிலையுடைய வேளாளரும் அடங்குவரா தலின் அறுதொழிலோர் என்றார். ஏனைய அரசர் ஐவகை மரபினை உடையோராதலானும், இவ்வதிகாரம் அரசர்க்கே விதித்தலானும் அவரை இத்தொகையுள் குறியாது விடுத்தனர். அதனால் அறுதொழி லோர் அந்தணர் முதலிய மூவரையும் குறிப்பதாதல் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

அறு தொழிலாளர் நூல்கள் அயர்ப்பர்ஆன் பயனின் றாகும்
கறையின்மேல் பொருள்கைக் கொண்டு காவலை விடுப்பின் மைந்தா
—விநா. அரசி., 93

ஆபயன் குன்றும்

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலா ரில்வழியில்லை தவமும்
அரசிலா ரில்வழியில்லை யரசனும்
இல்வாழ்வா ரில்வழியில் —நான்மணி

ஒருபுடை:

வானம் சுருங்கில் தானம் சுருங்கும் —பழமொழி

பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழிந்து அறங்கண் மாறி
ஆணையிவ் வுலகு கேடாம் ... ... —சீவக., 255

.... முனிவுழி முனிந்து ... . —கம்பராமா., 51

ஒ) மேற்கோள்பகுதி:

நச்.: ஐவகை மரபின் அரசர் பக்கத்தில் காவலுக்கு மேற்கோள். (தொல். பொருள். 75)

காரி.: ஒற்றுத் தோன்றும் சந்தி ஒற்றின்றி இயல்பாய் நின்றதற்கு 'ஆபயன்' என்பது மேற்கோள். (மாற. 266.)

பணடைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	கொலைமேற்கொண்	வேலொடு	நாடொறும்	கூழும்	அல்லற்பட்	மன்னார்க்கு	துளியின்மை	இன்மையின்	முறைகோடி	ஆபயன்
மணக்.	8	10	2	7	9	1	4	3	6	5
பரிதி.	10	7	1	2	8	3	6	9	4	5
பரிப்.	7	10	2	6	9	1	8	3	5	4
காளி.	6	3	1	2	4	8	7	10	5	9
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

56வது அதிகாரம் 'கொடுங்கோன்மை' முற்றிற்று.

57. வெருவந்த செய்யாமை

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: வெருவந்த செய்யாமையாவது பிறர்க்கு அச்சம் வருவன செய்யாமையும். தனக்கு அச்சம் வருவன செய்யாமையும் கூறுதல். தான் முறை செய்வாரைப் போன்றிருந்து, அதனை உலகத்தார் வெருவுமாறு செய்வனாயின், அதுவுங் கொடுங்கோலொடு ஒக்கும் என்று அதன் பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: வெருவந்த செய்யாமையாவது குடியானவன் வெருவுவது செய்யுந் தொழில் செய்யாமை எ—று.

இ) பரிப்.: வெருவந்த செய்யாமையாவது பிறர்க்கு அச்சம் செய்யாமையும், தனக்கு அச்சம் செய்யாமையும். தான் முறை செய்வாரைப் போன்றிருந்து, அதனை உலகத்தார் வெருவுமாறு செய்வனாயின், அதுவும் கொடுங்கோலொடு ஒக்கும் என்று அதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது குடிகள் அஞ்சுவதும் பகுதி[1] அஞ்சுவதும் தான் அஞ்சுவதுமாய தொழில்களைச் செய்யாமை. அவை செய்தல் கொடுங்கோன்மைப்பாற்படுதலின், இஃது அதன்பின் வைக்கப் பட்டது.

ஊ) கவிராசர்: அஃதாவது-குடிகள் அஞ்சுவதும், பகுதி அஞ்சுவதும், தான் அஞ்சுவதுமான தொழில்களைச் செய்யாமை. இவை செய்தல் கொடுங்கோன்மை என்பதாம்.

---

1. பகுதி—அரசின் பகுதியாகிய அமைச்சு, சேனை முதலியன.

ஏ) பழைய 2: அஃதாவது, குடிகளஞ்சுவதும் தானஞ்சுவதுமாகிய தொழில்களைச் செய்யாமை.

மல்லர்: குடிகளும் அரசன் கிட்ட செவிக்கிறவர்களும் தானும் அஞ்சத் தக்க தொழில்களைச் செய்யாமலிருக்கிறது,

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மு.ரா.அரு., வரத. 'குடிகளும்-தானும் அஞ்சற்கேதுவான காரியங்களைச் செய்யாமை' என்பர்.

இராம. 'பிறர் தன்னைக் கண்டு அஞ்சும்படியான காரியங்களைச் செய்யாமை. அதாவது குடிகள் அஞ்சும் வகையில் தான் நடந்து கொள்ளுதலும், குற்றவாளிகளைத் தண்டிக்கும்போது மக்கள் நடுங்கும்படிக் கடுந்தண்டம் விதியாமையும் ஆம்' என்பர்.

குழந்தை. 'குடிகள் அஞ்சத்தக்கவற்றைச் செய்யாமை' என்பர்.

வரத. 'கொடுங்கோன்மை-பிறர் அஞ்சத்தக்கனவும் வருந்தத்தக்கனவுமான செயல்களைச் செய்தல். இது தானும் பிறரும் அஞ்சுவது என்பர்.

தேவநேயர். 'குடிகளும், வினைச்சுற்றமும், தானும் அஞ்சத்தக்க செயல்களைச் செய்யாமை' என்பர்.

இவற்றுள், சில உரைகள் 'அச்சம் வருவன செய்யாமை, என்னும். 'சில தனக்கும் பிறர்க்கும் அச்சம் வருவன செய்யாமை' என்னும். இராம. 'இயல்பான காலத்தில் அஞ்சும்படி நடத்தலும், தண்டிக்கும் காலத்தில் பிறர் அஞ்சும்படி நடத்தலும்' என்பர் பரிமேலழகரும், அவர் வழிவருவோரும், தேவநேயரும் 'குடிகள், சுற்றம், அலுவலர்கள், தான் அஞ்சத்தகாதன செய்யாமை' என்பர். இங்ஙனம் நால்வகையினராவர்.

பிறர் அஞ்சுதலையும் வெருவந்த செய்தலின் தீமைகளையும் சொல்லி வந்த ஆசிரியர் ''செருவந்த போழ்தில்'' என்ற குறளால் தான் அஞ்சுதலைக் கூறுவர். அதனால், பிறரும்–தானும் அஞ்சும் செயல்களைச் செய்யாமை என்ற பொருள் சிறந்தது.

'வெருவரல்–அஞ்சுதல்! எனப் பொருள் செய்வர் இன்றுவரையுள்ள உரையாசிரியர்கள் அனைவரும்; ஆனால் வெருவரல்-அஞ்சுதல் அன்று என்பதனை, வெரூஉதல் அச்சம் போல நீடுநில்லாது கதுமெனத் தோன்றி மாய்வதொரு குறிப்பு. தலைவன் ஒருவன் பரத்தை

பாற் சென்று மீண்டு தலைவியிடம் வருகிறான்; அவள் ஊடினள். தோழி ஊடலகற்றினள். அந்நிலையில் அவள் மனத்துள் பேசிக் கொள்கிறதாக வரும். ''யாம் நின்னை வெரூஉதுங் காணுங்கடை'' என்ற **கலித்தொகை** (87)ப் பாடலைக் காட்டி இதில் அஞ்சத்தக்கன கண்டஞ்சுதலின்மையும், அஞ்சினார்க்குள்ள வேறுபாடு அதன் பின் இல்லாமையுங்கொண்டு, வெரூஉதல்-திடுக்கிடுதல், அஞ்சுதல்-நீடு அஞ்சுதல் என வேறுபாடு காட்டுவர் **இளம்பூரணர்**. இது கொண்டு வெரூஉதல்—துணுக்குறல் என அறியலாம்.

57.1. *தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால் ஒத்தாங் கொறுப்பது வேந்து.* (நிசுக)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: குற்றத்திற்குத் தக ஆராய்ந்து, ஒருவர்மேற்செல்லாமை காரணமாக உலகத்துப் பொருந்துமாறு ஒறுப்பவன் அரசன் எ—று.

ஆ) *பரிதி.*: குடிக்குத்தக்க கடமை நீதியாலே கொண்டு தனக்குத் தலைசெல்லாத மாற்றாரை வெல்பவன் அரசன் எ—று.

இ) *பரிப்.*: குற்றத்துக்குத் தக்கவை யாராய்ந்து ஒருவர் ஒருவர்மேற் செல்லாமை காரணமாக உலகத்தார்க்குப் பொருந்துமாறு ஒறுப்பவன் அரசன் எ—று.

இது செங்கோன்மை யன்றோ எனின், ஒக்கும்: முறை செய்யுங் கால் அரசன் வெகுட்சி உடையனாய் உலகத்தார் அஞ்சுமாறு செய்யாது இம்முறை செய்யாக்கால் ஒருவரொருவரை அடர்ப்பரென்று[1] உலகத்தார் தாமே இசையச் செய்ய வேண்டும் என்றற்கு வேறுபடுத்துக் கூறப்பட்டது. இவ்வாறு செய்தல் வெருவந்த செய்யாமை என்றது.

ஈ) *காளி.*: மற்று இப்படி யாகலான் அவை அவை செய்யத்தக்க பரிசு[2] ஆராய்ந்து மற்று ஒருதலைச் சென்று[3] ஒதுங்காத தன்மையான், ஒன்றினும் ஏற்றத்தாழ்வு இன்றி ஒத்து நிற்கும் பரிசே ஒறுக்க

1. அடர்ப்பர்—வருத்துவர்
2. பரிசு—தன்மை
3. ஒருதலைச்சென்று — ஒருசார் ஒதுங்கி. அதாவது நடுநிலைதவறி ஒருபால் அன்பு கொண்டு

வேண்டும் அதனை ஓர்ந்து ஒறுப்பது வேந்தாவது; எனவே அது செய்யாவிடத்து எல்லாம் நல்லளி செய்தலே அரசர்க்கு அழகு எ—று.

உ) *பரிமேல்.*: ஒருவன் தன்னின் மெலியார்மேல் சென்றவழி அதனை நடுவாக நின்று ஆராய்ந்து, பின்னும் அது செய்யாமற் பொருட்டு அவனை அக்குற்றத்திற்கொப்ப ஒறுப்பானே அரசனாவான்

தக்காங்கு ஒத்தாங்கு என்பன ஒருசொல்.[4] தகுதி என்பது நடுவு நிலைமையாதல் ''தகுதி யென ஒன்று நன்றே''[5] என்பதனாலும் அறிக. இதனானே தக்காங்கு நாடாமையும், பிறிதோர்காரணம்பற்றி மிக ஒறுத்தலும், குடிகள் அஞ்சும் வினையாதல் பெற்றாம்.

ஊ) *கவிராசர்*: ஒருவன் தனக்கு எளியவனானவனை உபத்திரவம்[6] பண்ணினால்: அதனைக் கேட்டு, இரண்டுபேரையும் சரியாகப் பார்த்து ஆராய்ந்து, குற்றமுள்ளவனை அதற்கு ஏற்கத் தண்டிக் கிறவனே அரசன் எ—று.

ஏ) *பழைய* ?: ஒருவன் தன்னின் மெலியார் மேற்சென்ற வழி, அதனை நடுவாக நின்று ஆராய்ந்து, பின்னும் அது செய்யாமற் பொருட்டு, அவனை அக்குற்றத்திற்கேற்ப ஒறுப்பானே அரசனாவான்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'*தக்காங்கு நாடி*' :— 'குற்றத்திற்குத் தக ஆராய்ந்து'—'செய்த குற்றத்திற்கு ஏற்பத் தண்டனையிருத்தல் வேண்டும்' என்பது *மணக்குடவர்* கருத்து. *பரிதி.*, 'குடிக்குத் தக கடமை நீதியாலே கொண்டு' குற்றஞ் செய்தவனுடைய குடியின் செல்வநிலை, மரபு வழிப்பெருமை, செல்வாக்கு முதலானவற்றிற்கேற்பக் குற்றத் தண்ட மான பொருளை, வாங்கும்போதும் நீதிவழி வாங்கி என்பது அபராதத் தொகை வசூலிக்கும்போதும் நீதியொடு வசூலிக்கவேண்டும். தொகை யும், பொருளிலார்க்கு மிகுந்த தொகையும், அஃதுடையார்க்குச் சிறு தொகையுமாக இல்லாமல் நியாயமாக வாங்கவேண்டும் என்பது இவ ருரையில் வரும். இதனைக் 'கடமை' 'கொண்டு' என்ற சொற்கள் காட்டுகின்றன.

---

4. தக்காங்கு ஒத்தாங்கு என்பன தொடர்மொழியல்லாதன. ஒருமொழிகள்.
5. நடுநிலைமை குறள் 1. இ ள்: 'நடுவுநிலைமை எனப்படும் ஒரறமுமே நன்று' என்பதாம். நடுநிலைமையாவது பகை—நட்பு—நொதுமல் என்னும் மூவரிடத்தும் ஒப்ப நிற்குநிலைமை எ—ம்.
6. உபத்திரவம்—கொடுமை

பரிப்., இக்குறள் கருத்தால் **செங்கோன்மையில்** இடம்பெற வேண்டியதாயிற்றே **வெருவந்த செய்யாமையில்** இடம் பெறுதல் எப்படி? என்ற ஐயம் இவருக்குத் தோன்றியிருக்கிறது; அதற்கு அமைதியாக தக்காங்கு நாடுதல் முதலாக ஒறுப்பதீறாகச் செய்யும் போதும் அதாவது செங்கோன்மை வழங்கும்போதும் உலகர் அஞ்சச் செய்தல் கூடாது. உலகர் ஒப்பச் செய்ய வேண்டும் என்கிறார். இது மணக்குடவருரையாற் போந்த ஐயம் விலக்கிற்று.

காளி., 'அவை அவை செய்யத்தக்க பரிசு ஆராய்ந்து' என்பர். இது பொது வகையில் அமைந்த கருத்து. பின்னோரும் முன்னோரும் இத்தொடர்க்குக் காணும் உரை வேற்றுமைகள் அனைத்தையும் எண்ணின் இதனுட் காணலாம்.

பரிமேலழகரும் அவர்வழிச் செல்வாரிருவரும், 'குடிகளில் ஒருவன் தன்னின் மெலியான் ஒருவனை வருத்தியவழி, இருவரையும் நடுவாக நின்றாராய்ந்து தண்டிக்க' என்கின்றனர்.

இத்தொடர்க்குள்ள உரைகளில் ஒன்று இது செங்கோன்மையா யினும் பிறர் வெருவரச் செய்தல் கூடாது. என்ற ஐய மகற்றுவது. ஒன்று தண்டத்துள் ஒருவகையான் பொருளால் தண்டம் விதித்த லைக் கருதி எழுந்தது. ஏனைய பொதுமையின் ஆய்தலையுணர்த்தின.

புதிய உரைகளில் மணக்குடவரை ஒத்துரைப்பவர்கள் **கா.சு.**, சி.இ., குழந்தை. பரிமேலழகரை ஒத்துரைப்பவர்கள் **மு.ரா.அரு.**

சிதம்பர., 'குற்றம் புரிந்தவனை நாடி' என்பர். குற்றத்தை நாடுதல்தான் அரசனீதியாகுமேயன்றி புரிந்தவனை நாடில் அது கண்ணோட்டத்திற் செலுத்தினும் செலுத்தும். சிந்திக்க.

ஜி.வரத., குற்றத்தையும் குற்றஞ் செய்தாரையும் ஆய்ந்து என்பர். இவ்வுரை குற்றத்தின் சிறப்பும், செய்தார் தன்மையும் பொருந்துமாயின் இவர் இதனைச் செய்திருக்கலாம் அல்லது செய்யா திருக்கலாம் என்று முடிவு செய்யலாம். ஆதலின் ஒருவகையிற் சிறப் புடையதாகும். பட்டினத்தடிகள் கழத்தில் அரசன் வீட்டுக் களவுபோன காசுமாலை இருக்கக்கண்ட அரசன் அவர் தகுதி நோக்கி இச்செயலை இவர் செய்திருக்கமாட்டார் எனத் துணிந்தது போல என்பதாம்.

தலைச்செல்லா வண்ணத்தால்:

மணக்குடவர் உரை 'தொடர்ந்து இக்குற்றத்தை மேலுஞ் செய்யாமைக்காக என்னுங் கருத்தினது.

பரிதி., 'தன்னைவிடத் தலைமையில்லாத' என்பது கருத்துப் போலும். மாற்றாரை என்பதால் பகை மன்னரைக் கருதுகிறார். அதிகாரம் குடிகள் வெருவந்த செய்யாமையே ஆதலின் ஏற்புடையதா! சிந்திக்க.

காளி:, '(பாரபட்சம்) அதாவது ஓரவஞ்சனையில்லாமல்' என்பர். இது அரச நீதிக்கு மிக அமைவுடையது. *பரிமேல்*., *பழைய* 2., *கவிராசர்*, *தேவநேயர்*, *மு.ரா.அரு*., *ஜி.வரத*. முதலான அனைவரும். 'மேலும் அதனைச் செய்யாமல்' என்றது தண்டம் குறைவாயிருப்பினும், கண்ணோட்டத்தாலே நன்றாக ஆராயாமையாலோ தண்டனை கொடாது விடுபடினும் அதே குற்றத்தைத் திரும்பவும் செய்ய முற்படுவர்; அங்ஙனம் முயலாமைப் பொருட்டு என்னுங் கருத்தினது. இது எல்லா வகையிலும் சிறப்பு உடைய உரை. *பரிப்பெருமாள்* தரும் விளக்கம் இதற்கு அணி செய்யும். 'மேலும் குற்றஞ் செய்யாவாறு என' இதனை ஒட்டியே உரைப்பர் *வ.சுப.மா*.

'*ஒத்தாங்கு ஒறுப்பது*':

'உலகத்திற்குப் பொருந்தும் வகையில்' *மணக்*.; இதற்கு ஏற்ற தொரு சிறந்த விளக்கம் *பரிப்பெருமாளுடைய* உரை 'உலகத்தார் தாமே இசையும்படிச் செய்ய வேண்டும்' என்பது.

'மாற்றாரை வெல்பவன்' என்ற *பரிதி*. உரை ஏற்றதாகத் தோன்றவில்லை. *காளி*., 'ஒன்றினும் ஏற்றத்தாழ்வின்றி ஒத்து நிற்கும் பரிசே ஒறுக்கவேண்டும்'. *பரிமேல்*., 'ஏனையோரும் — அக் குற்றத்திற்கு ஒப்ப ஒறுப்பானே' என்பர். பின்னுள்ள உரைகளும் இதனை ஒட்டியே செல்கின்றன.

காளிங்கர் கூறும் உரைப்போக்கு தக்காங்கு நாடுதற்கு இயைந் தாற் போன்றுள்ளது. ஆதலால் *பரிப்பெருமாள்* கூறும் விளக்கம் ஏற்புடையதாகும்.

ஆகவே, தக்காங்கு நாடுதற்குப் *பரிமேலழகர்* உரையும், தலைச் செல்லா வண்ணத்தால் *மணக்குடவர்* உரையும் 'ஒத்தாங்கு ஒறுப்பது' என்பதற்கு *மணக்குடவர் பரிப்பெருமாள்* உரையும் விளக்கமும் ஒருங் கியைத்து எண்ணத் தக்கன.

ஒ) ஒப்புமைப்பகுதி:

தக்காங்கு நாடி:

இன்ன நாடுது மிங்கிவர்க் கும்வலி
துன்னி னாரை யெனத்துணிந் தாரெனின்
உன்னை வெல்ல வுலகொரு மூன்றினு
நின்ன லாற்பிற ரின்மை நிகழ்த்துவாய் —கம்பராமா., 4380

நீதி யாதி நிகழ்த்தினை நின்றது
வேதி யாத பொழுது வெகுண்டவன்
சாதி யாதவர் சொற்றார்த் தக்கனை
போதி யாதியென் றான் புகழ்ப் பூணினான் —கம்பராமா., 4381

57.2. *கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம் நீங்காமை வேண்டு பவர்.* (நிகூஉ)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* கடிதாகச் செய்வாரைப் போன்று மெல்லிதாகச் செய்க; நெடிதாக வருகின்ற ஆக்கம் நீங்காமையை வேண்டுவார் எ—று.

இது குற்றத்திற்குத் தக்க தண்டத்தைக் குறையச் செய்ய வேண்டும் என்றது.

ஆ) *பரிதி.:* குடியானவர்களை மிகுபயங்காட்டி உடனே நல்லது சொல்லுக; அரசற்கு ஆக்கம் மென்மேல் வர்த்திக்க[1] வேண்டுமாகில் எ—று.

இ) *பரிப்.:* கடிது ஆகச் செய்வாரைப் போன்று மெல்லிது ஆகச் செய்க: நெடிது ஆகி வருகின்ற ஆக்கம் நீங்காமையை வேண்டுபவர் எ—று.

இது குற்றத்துக்குத் தக்க தண்டத்தினும் குறையச் செய்ய வேண்டும் என்றது. இனி வெருவந்த செய்ததனால் உளதாகும் குற்றம் கூறுகின்றனர்.

1. வர்த்திக்க—நிலைபெற; 2. செறுத்து – தண்டித்து.

ஈ) *காளி.*: இவ்வாறு ஆகலான் ஒருவரைத் தண்டம் செய்யும் இடத்து முன்னம் அவர் அஞ்சுமாறு கடிது செய்வார்போல் காட்டிப் பின்மெல்லெனச் செறுத்து[2]விடுக. மற்று யார் எனின், தமது நெடிய செல்வம் இடையறாது வேண்டும் அரசர் எ—று.

உ) *பரிமேல்.*: அவ்வொத்தாங்கு ஒறுத்தல் தொடங்குங்கால் அளவிறப்பச் செய்வார்போல் தொடங்கி, செய்யுங்கால் அளவிறவாமல் செய்க, ஆக்கம் தங்கண் நெடுங்காலம் நிற்றலை வேண்டுவார்.

கடிதோச்சல் குற்றஞ்செய்வார் அதனை அஞ்சுதற் பொருட்டும், மெல்ல எறிதல் யாவரும் வெருவாமைப் பொருட்டுமாம். தொடங்கின வளவில் குறைதல் பற்றி மென்மை கூறப்பட்டது. ஓச்சுதல் எறிதல் என்பன இரண்டும் உவமைபற்றி வந்தன.[3] இவை இரண்டு பாட்டானும் குடிகள் வெருவந்த செய்யாமையது இயல்பு கூறப்பட்டது.

காரி.: நெடிது-நெடுங்காலம். ஓச்சுதல், எறிதல் என்பன இரண்டும் முறையே கோல் என்னும் உவமை பற்றி வந்தன.

ஊ) *கவிராசர்*: குற்றத்துக்குத் தக்க தண்டனை பண்ணத் தொடங்குகிறபோது, வெகுவாய் தண்டனை பண்ணப்போகிறாப் போலே கோபித்துக்கொண்டு, தண்டிக்கிறபோது பிரமாணந்தப்பாமற்[4] செய்க, செல்வந் தன்னைவிட்டு நீங்காமல் நெடுங்காலம் நிற்க வேண்டுவார் எ—று.

ஏ) *பழைய 2*: ஒத்தாங்கு ஒறுக்கத் தொடங்கு மிடத்து, மிகு தண்டஞ் செய்வார் போல் தொடங்கி, தண்டஞ் செய்யுமிடத்து மெலிதாகத் தண்டஞ் செய்க, செல்வந் தன்கண் நெடுங்காலம் நிற்க வேண்டுவார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் 'குற்றத்திற்குத் தக்க தண்டத்தைக் குறையச் செய்ய வேண்டும் என்றது' எனக் கருத்துரைப்பர். அது முற்குறளிற் கூறிய தக்காங்கு நாடுதற்கு மாறாதலின் முன்னோடு பின் முரணாதல் அறிக. உரை ''போன்று'' என்ற ஒரு சொல்லால் *வள்ளுவர்* கருத்தை வலியுறுத்திச் செல்கிறது. அதனாலே *மணக்குடவருரைக்கு* விளக்கந்தரும் *பரிமேலழகர்* 'அளவிறப்பச் செய்வார்போல் தொடங்கி அளவிறவாமற் செய்க' என்றது மிக அருமையானது.

---

3. ஓச்சுதல் — ஓங்குதல் எறிதல்—அடித்தல். இவ்வினைகளிரண்டும் உவமை பற்றி வந்த தொழிற்பெயர்
4. பிரமாணந் தப்பாமற் — விதிநூலில் கூறப்பட்ட தண்டத்தின் அளவு மிகாமலும் குறையாமலும்.

பரிதி: 'பயங்காட்டி நல்லது சொல்லு' என்றது தண்டனை செய்யற்க என்ற கருத்தைத் தருமாயின் ஏற்புடையதன்று. தக்க தண்டம் விதித்துப் பயங்காட்டுக; பின்னர் அவன் திருந்த நல்லது சொல்க என்பதாயின் ஏற்புடையதாம்.

காளிங்கர் 'பின் மெல்லெனச் செறுத்துவிடுக' என்பது தக்காங்கு நாடித் தண்டம் விதித்தலை விலக்கலின் *மணக்குடவர்* உரைபோல முன்னோடு பின் முரணாம்.

ஆதலால் பழைய உரைகளில் *பரிமேலழகர்* உரையே தெளிவானது. சிறந்தது.

தேவநேயர் பரிமேலழகரை ஒத்து எழுதி, ''தக்க தண்டத்தைக் கொடுக்கும் போதும் தொடக்கத்தில் அளவிறந்து கொடுப்பது போலக் காட்டிக் கொடுக்குங்கால் அளவுடனும், அளவிற்குக் குறையாமலும் கொடுக்க'' என்பர்.

வரத. 'குற்றவாளியைக் கடுமையான விசாரணைக்கு உட்படுத்திக் குறைந்த தண்டனை விதிக்க' என்பர். 'கடிதோச்சுதல் விசாரணையைக் காட்டாது: குறைந்த தண்டனை தக்காங்கு நாடுதற்கு முரணாம் ஆதலால் விசாரணை செய்து குற்றவாளியாகத் துணியப்பட்டவனுக்குக்குற்றத்தண்டம் கொடுக்குங்கால் மிகக் கடுமையாகக் கொடுப்பது போல் காட்டி, செய்த குற்றத்திற்குத் தக அதாவது குறையாமற் கொடுக்க 'என்பதே சிறந்த உரையாகும்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

பேதைமைப் பாலி னாதல் பெருங்கிழ மையினா னாதன்
மேதக நட்டோர் மாட்டு விரவிடும் பிழைக ளெல்லாம்
காதுதற் பால அல்ல காதிடின் கண்ணி னோடி
நோதக ஒச்சி மெல்ல நோன்றவே எறிகு வாரால்

—தணிகை.வீரட்ட.,205

ஒருபுடை:

அடிக்கும் ஒருகை, அணைக்கும் ஒருகை —பழமொழி.

57.3. வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின் ஒருவந்தம் ஒல்லைக் கெடும். (நிசூஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: அரசன் அஞ்சத்தகுவனவற்றைச் செய்தொழுகும் வெங்கோலை யுடையனாயின், அவன் ஒருதலையாகக் கடிதிற் கெடும் எ—று.

ஆ) பரிதி.: யாரும் வெருவ[1] நடத்துங் கொடுங்கோல் மன்னன் ஒருக்காலே கிளையுடனே கெடும்எ—று.

இ) பரிப்.: அரசன் அச்சம்வருவன செய்துஒழுகும் வெங்கோலை உடையனாயின், அவன் ஒருதலையாக விரைந்து கெடுவன் எ—று.

இது நாடும் நகரமும் பொறுப்பினும் தெய்வத்தினால் கெடுவன் என்றது.

ஈ) காளி.: அரசன் செங்கோல் நீதி செலுத்துமிடத்து உயிர்கள் பெரிதும் அஞ்சத் தக்கனவற்றைச் செய்து ஒழுகுமது கொடுங்கோல் போலும் தன்மையது உடைத்து. மற்று அதனால் அவனது பெருஞ் செல்வம் கடிதில் தலை அழியும்; எனவே ஒருவரைத் தண்டிக்கும் காலத்தும் இதற்குத் தகுதி என்று முன்னோர் சொன்ன முறைநூல் வழியால், மற்றவன் மனம் பொருந்தக் காட்டிய வழக்குடையானா தலே மன்னர்க்கு இயல்பு எ—று.

ஒருவந்தம் என்பது பெருஞ்செல்வம்.

உ) பரிமேல்.: குடிகள் வெருவிய செயல்களைச் செய்து நடக்கும் வெங்கோலனாமாயின், அரசன் ஒருதலையாகக் கடிதில் கெடும்.

வெங்கோலன் என்பது ஈண்டு வாளா பெயராய் நின்றது[2]. ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தம் என்பன ஒரு பொருட்கிளவி. அச்செயல்களும் கேடுகளும் முன்னர்க் கூறப்படும்.

காரி: ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தம் என்பன ஒரு பொருட் கிளவி. வெங்கோலன் என்பது வாளா பெயராய் நின்றது, வெரு

1. வெருவ —அஞ்ச;
2. 'வெருவந்த செய்தொழுகும்' என்ற அடைமொழியே வெம்மையை உணர்த்துதலின் வெங்கோலன் என்பது மன்னன் என்ற அளவில் பொருள் குறியாத பெயராக-நின்றது என்பதாம்.

வந்த செய்தலும் அப்பொருட்டாதலின் என்க. ''அடியளந்தான் றாயது''[3] என்பதும், கோவையாருள் ''கருங்கண்ணனை''[4] என்பதும், ''தெள்ளி நறவந் திசைதிசை பாயு மலைச்சிலம்பா''[5] என்பதும் அது. ''பெயர்நிலைக் கிளவியின்''[6] என்னுஞ் சூத்திரத்தில் ''களிறு கண்டல்லது வாளுறை கழிப்பறியாவேலோன்'' எனவும், ''செழுந்தாமரையன்ன வாட்கண்'' எனவும், நச்சினார்க்கினியரும் உரைத்தார் என்க.

ஊ) **கவிராசர்:** குடிகள் பயப்பட்டு நடுங்கத்தக்க செயல்களைச் செய்து நடக்கும் வெங்கோலனாமாயின், அரசன் சீக்கிரத்திலே கெட்டுப்போவான் எ—று.

ஏ) **பழைய 2:** 'ஒல்லைகெடும்' பாடம். குடிகள்அஞ்சவரும் செயல்களைச் செய்து நடக்குங் கொடுங்கோலனாகில் அரசன் ஒரு தலையாகக் கடிதிற் கெடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி. 'ஒருவந்தம் — ஒருக்காலே' என உரை காண்பர். இவர் கருத்து பலகால் தப்பி வாழ்வானல்லன் ஒருக்காலே கெடுவன் என்று உறுதி அல்லது துணிவு என்ற பொருளையே சுட்டுமாயின் ஏற்புடைய தாகும்.

பரிப்பெருமாள் 'தெய்வம்' என்பர். இக்குறிப்பு கொடுங் கோலனுக்கு அஞ்சி மக்கள் பொறுக்கக்கூடும். தெய்வம் பொறுக்காது; உடனே கொல்லும் என எண்ணிக் கூறினர் போலும்.

காளிங்கர் இயலையும் அதிகாரத்தையும் எண்ணி 'ஒருவகைச் சூழ்நிலையைப் படைக்கிறார்; குற்றஞ் செய்தாரை ஒறுத்தல் செங் கோல் நீதிதான். ஆயினும் ஒறுத்தல் உயிர்கள் அஞ்சத்தக்க நிலைய தாயின் அது கொடுங்கோல் போல்வதாகும். அதனால் அரசன் செல்வம் அழியும்' என விளக்கந்தருகிறார். இவர் உரை செங்கோல் வெங்கோலானமைக்குக் காரணமுங் கூறுவதாகிறது. 'ஒருவந்தம்-பெருஞ் செல்வம்' என்பர். இதனைப்பற்றிய ஆய்வு பின்னர்க் காட்டு தும்.

வள்ளுவர், மன்னன் இயல்பு செங்கோலனாக இருத்தல்.

---

3. குறள்., 610. 4. திருக்கோவை.,53. 5. திருக்கோவை.,128.
6. தொல். சொல்., 449.

அவன் வெங்கோலனாயினன். ஒருபோது இருபோதல்ல.. வெருவந்த செய்து, எப்போதும் ஒழுகுகிறான். அதனால் உறுதியாகக் கெடும் எனச் செங்கோலன் வெங்கோலனாயினான் என ஆதற்கு ஏதுவுங் காட்டிக் கூறினர். ஆயின் எனச் செயின் என்னும் வாய்பாட்டு ஆக்கச் சொற்புணர்த்தமையால் வெருவந்த செய்து ஒழுகுவதால் செங்கோல னாவான்; ஆயின் எனக் காரணம் தொடர்ந்த தொடராகக் கூறினர். ஆதலான், 'வெங்கோலன் என்பது வாளா பெயராய் நின்றது' என்பது சிந்தித்தற்குரியது. இதனாலேயே *இலக்கணக்கொத்து* ஆசிரியர் 'பலசொல்லினை ஒருசொல்லாகக் கூறியது' என்றனர் (*இ.கொ.* நூற்பா 116) 'வெருவந்த செய்தொழுகல்-குடிகளை மிரட்டுதல்'. வ.சுப.மா.

வரத. 'குற்றத்திற்கேற்ற தண்டனை கொடுக்காமல் குடிகளை அச் சுறுத்தி அதிகம் தண்டனை செய்யும். அரசன் நிச்சயமாக ஒருசேரக் கெடுவான்' என்பர். ஒல்லை–ஒருசேர. தக்க தண்டனை கொடுக்காமல் மிகுதண்டம் செய்பவன் என்பது இவர் கருத்து. கையிகந்த தண்டம்' பின் (567) வருதலால் ஈண்டுங் கூறுவாரா என்று எண்ணிப் பார்க்க.

மணக்குடவர், பரிமேலழகர் உரைகள் தெளிவுடையன. இலக் கணக்குறிப்புக்கள் எண்ணத்தக்கன

''ஒருவந்தம்'' என்ற சொல்லைப்பற்றிய. இச்சொல் *திணை மாலை நூற்றைம்பதும் திருக்குறளுமாகிய கீழ்க்கணக்கு* நூல் களிலே மட்டும் மூன்றிடங்களில் ஆட்சி பெற்றது. ஏனைய சங்க நூல் களிலே இல்லை. திணை–150 ல் ஒருவந்தம் அன்றால்-(கார்ப்பருவம் என்பது) உறுதியன்று' எனவும், *திருக்குறளில்* அதே பொருளிலும் வந்துள்ளன ஆதலால் இச்சொற்படைப்புக்கும் ஆட்சிக்கும் கூட *வள்ளுவரே* தந்தையாகிறார் பழைய ஆட்சி அறியப்படுகிற வரை யில். பின் 593 குறிப்பையும் பார்க்க.

இதற்கு *மணக்குடவர் பரிமேலழகர்* 'ஒருதலை' என்றும், *பரிதி* 'ஒருக்காலே' என்றும், *காளிங்கர்*, 'பெருஞ்செல்வம்' என்றும் பிற்கால உரையாசிரியர்கள் அனைவரும் உறுதியாக 'ஒரு தலையாக' என்றும் கூறுவர். *பரிமேலழகர்* 'ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தம் என்பன ஒரு பொருட்கிளவி' என்பர். ஏகாந்தம் இச் சொல் லின் வடமொழிவடிவம் போலக் காணப்படினும், வேறு, தனித்திருத் தல் முதலான வேறு பொருளதாகவே வடமொழியில் காணப்படுகிறது. பிற்காலத்துத் *தமிழ்ச் சொல் அகர* முதலிகள் *திருக்குறள் பரி மேலழகருரையைக்* கண்டு ஏகாந்தம்–நிச்சயம் என்று பொருள் தரு

கின்றன. இப்பொருள் தமிழுக்குப் பொழுமையானதுமன்று; வேறு ஆட்சியும் இல்லை.

இம்மொழிப் பொருட் காரணங்காட்ட முற்பட்டார் ஒரு+அந்தம் எனப் பிரித்து 'ஒன்றாகிய முடிவு அதாவது உறுதி' என்றனர். சிலர் ஒருவு+அந்தம் எனப் பிரித்து இப்பொருளே காட்டுவர். ஒருவு–ஒரு என்ற பொருளைத் தராது. ஒருவு–வினையடி 'நீங்கு' என்றும் பொருளது. ஆதலால் ஒருவிய–நீங்கிய முடிவினையுடையது. இதுவே முடிவானது; உறுதியானது என்ற பொருளையுங் காணலாம். ஆயினும் அந்தம் வடசொல்லேயாகிறது; விகாரப்பட்ட எண்ணுப் பெயராகிய ஒரு என்னும் தமிழ்ச் சொல்லும் 'அந்தம்' என்ற வடசொல்லும் கலந்து இங்ஙனம் ஆயிற்று எனல் பொருத்தமாகத் தோன்றவில்லை. இதனைக் கலவைச் சொல்லெனக் கொண்டு வள்ளுவர் காலத்தைக் காட்டுங் கருவியாகக் கொள்வர் சிலர். அதற்கு வன்மையான மறுப்பும் வழங்குவர் தெ.பொ. பழனியப்பப்பிள்ளை.

காளிங்கர் இக்குறட்பாவிலும், 593ம் குறட்பாவிலும் 'ஒரு வந்தப்-பெருஞ் செல்வம்' எனவே கூறுவர். இவர் கூறுவதைத் தவிர்த்து வேறு ஆட்சி கிடைக்கவில்லை. அதனால் இதுவும் சிந்தனைக்குரியது பரிமேலழகர்க்கு முற்பட்டவர் என்பதால் மட்டும் இவ்வுரை ஏற்புடையதாகாது.

ஆகவே, எரிவந்தம்-எரிச்சல் என்பது போல ஒருவந்தம்–ஒன்றானது; துணிவு என்ற பொருளதாய் வந்தம் என்ற பண்பு விகுதி பெற்று வந்தது எனலாம். 'அந்தம் பண்புப் பெயர் விகுதியென' நன்னூலும், உரைக் குறிப்புக்களும் சொல்லாமையானும், உலக வழக்கிலன்றிச் செய்யுள் ஆட்சியில்லாமையானும் இதுவும் ஆய்வுக்குரியது. வள்ளுவரின் சொற்படைப்பானாலும் இதனால் இவர் காலம் பிந்தியதெனற்கு இது ஏற்ற சான்றாகாது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஒருபுடை:

ஊருடன் பகைக்கின் வேரொடும் கெடும் —கொன்றை. 6

ஒ) மேற்கோள்பகுதி:

சுவாமி.: பல சொல்லினையே ஒரு சொல்லாகவும் கற்றறிந்தோர் கருதுவர் என்பதற்கு மேற்கோள். (இ.கொ.116.)

57.4. இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும். (நிசுசை)

உரைப்பகுதி:

அ) மணக்.: தன்னிழலில் வாழ்வாரால் அரசன் கடியனென்று கூறப்பட்ட இன்னாத சொல்லையுடைய வேந்தனானவன், தான் உறையுமிடம் வெகுளப்பட்டு விரைந்து கெடும் எ—று.

இது நாடும் உறையும் இடமும் பொறுப்பினும் தெய்வத்தினாற் கெடுவன் என்றது.

ஆ) பரிதி.: குடிக்கடமையை வாங்குதற்கு வலியன் குடியைக் காக்க எளியனென்னும் அரசன் சடுதியிலே[1] நகர் இழப்பான் எ—று.

இ) பரிப்.: தன்கீழ் வாழ்வார் அரசன் கடியன் என்று கூறப்பட்ட இன்னாத சொல்லையுடைய வேந்தன் அவன் தான் உறையும் இடம் வெகுளப்பட்டு விரைந்து கெடும் எ—று.

இவனை நாடும் நகரமும் பொறாது என்றது.

ஈ) காளி.: மற்று இம்மன்னவன் சாலக்கடியன் என்று மக்கள் யாவரும் சொல்லுகின்ற இன்னாத சொல்லினையுடைய வேந்தனது நாடும் ஊரும் விரையக் கெட்டுவிடும்; முன் சொல்லியவையும் அன்றியும் எ—று.

உறை என்பது இடம்; இறை என்பது கடமை.

உ) பரிமேல்.: குடிகளான் நமது இறைவன் கடியன் என்று சொல்லப்படும் இன்னாத சொல்லையுடைய வேந்தன், ஆயுளும் குறைந்து செல்வமும் கடிதின் இழக்கும்.

நெஞ்சு நொந்து சொல்லுதலான், இன்னாமை பயப்பதாய சொல்லை இன்னாச்சொல் என்றார், உறை என்பது முதனிலைத் தொழிற்பெயர்[2] அஃது ஈண்டு ஆகுபெயராய் உறைதலைச் செய்யும் நாள்மேல் நின்றது. அது குறைதலாவது அச்சொல்லில்லாதார்க்கு உள்ளதில் சுருங்குதல்.[3]

---

1. சடுதியிலே — விரைவில்
2. உறை என்னும் பகுதி, இருத்தல் என்னும் பொருளைத் தருதலால் முதனிலைத் தொழிற்பெயர், அது உறையும் இடத்தையும், காலமாகிய ஆயுளையும் உணர்த்துதலால் முதனிலைத் தொழிலாகு பெயர்.
3. இப்பகுதியின் விளக்கத்தை இக்குறட்பாவின் தொகுப்பாசிரியர் குறிப்பிற் காண்க.

ஊ) **கவிராசர்:** குடிகளாலே 'நம்முடைய அரசன் பொல்லாதவன்' என்று சொல்லப்படுகின்ற வார்த்தையுடைய அரசன், ஆயுசுங் குறைந்து செல்வமுங் கொப்பெனா[4] இழக்கும் எ—று.

ஏ) **பழைய 2:** 'ஒல்லைகெடும்' பாடம். குடிகள் 'நம்மிறைவன் கடியன்' என்று சொல்லப்படும் பொல்லாத சொல், வேந்தனுடைய ஆயுளுங் குறைந்து செல்வமுங் கடிதிற் கெடும்.

மல்லர்: என்பது குடிகளுக்குப் பயங்கரமான அரசன் என்கிற பொல்லாதபேர் கட்டிக் கொண்ட ராசா ஆயுசு சீக்கிரமாய்க் கெட்டுப் போவான் என்றவாறு.

குடிகளுக்குப் பயங்கரமான அரசனைக் குடிகள் எல்லாம் பகைத்து அவன் சீக்கிரமாய்ச் சாகவேணும் என்று விரும்புகிறதினால் அவர்களுடைய மனசிலே ராசாவினுடைய ஆயுசு குறைந்து போறதுந் தவிரக் குடிகளுக்குப் பயங்கரமான அரசன் சீர்மையிலே குடிகள் நில்லாததினால் அவர்களால் வருகிற பிரையோசனத்தை அரசன் கைக்கொள்ளாமலத் தன்னுடைய செல்வத்தைச் சீக்கிரமாய் இழந்து போய் அழிந்து போவான் என்பது கருத்து.

இறை, குடிகடிதல் — சினத்தல்; உரைத்தல் — சொல்லுதல்; இன்னா—பொல்லாத; வேந்தன்—ராசா; உரை—வாழ்நாள்; கடுதல்—குறைதல்; ஒல்லை—சீக்கிரத்தின் குறிப்பு.

(ஐ தொகுப்பும் குறிப்பும்:

''இறைகடியன்''

'அரசன் கடியன்' மணக்., 'குடிக்கடமையை வாங்குவதற்கு வலியன்' பரிதி., 'மன்னவன் சாலக்கடியன்' காளி., 'இறைவன் கடியன்' பரிமேலழகர் தேவநேயர், வரத; பிறரும். இவற்றுள் 'இறைவேந்தன்' என்ற மணக்குடவர் முதலியோர் உரைகளில் 'வேந்தன்' என்பது மீண்டும் வருதலால் 'இன்னாச் சொல்லையுடைய வேந்தன்' என வேந்தனுக்கு அடையாக்கிக் 'கெடும்' என்பதனோடு முடித்தனர். பரிதி. 'இறை—வரி'யெனக் கொண்டு 'வரிவாங்குவதில் கடியன் என்று குடிகள் உரைக்கும் கொடுஞ்சொல்லையுடைய வேந்தன் ஒல்லை கெடும்' என முடித்தனர். அல்லது 'வேந்தன் சொல்லால் கெடும்' எனக் கூட்டிப் பொருள் கோடலுமாம். இதன்

4. கொப்பென — விரைவாக.

பயன், ஏனையோர் கண்டதுபோல 'இறை', 'வேந்தன்' என இரு முறை ஒரு பொருள் வருதலைத் தவிர்த்தலோடன்றி எதிர்மறையாகக் குடிகளைக் காப்பதில் மிகவும் எளிபனாயுள்ளான் என வேறும் ஒரு பொருள் கருதக் கிடத்தலாம். ஆதலின் பரிதியுரை சிறக்கிறது 'உறை கடுகி—உறையும் இடம் வெகுளப்பட்டு' என்பர் மணக்குடவர் . கடுகுதல்—வெகுளப்படுதல். பரிமேலழகர் ''இறைகடியன்'' என்பது மக்கள் கூற்றாதலின் இந்முறை ஒரு பொருளில் வந்ததாகாது எனக் கருதச் செய்வர்.

'உறை–உறையும் இடம்; நாடு-நகர் முதலாயின என்பது மணக். பரிப்.. பரிதி., காளி., வ.சுப.மா. முதலியோர். ,உறை-ஆயுளும்,செல்வமும்' என்பது பழைய உரை 2. பரிமேலழகர்'ஆயுள்' என்பர். ஈரிடத்தும் 'உறை' யென்னும் முதனிலைத்தொழிற் பெயர் ஆகுபெயராக உறையும் இடத்தையும், கால அளவையும் கையுறை யாகிய செல்வத்தையும் உணர்த்தியதாம்.

'ஆட்சிக்காலம்' என்பர் இராம., தேவநேயர். காலங்குறுகி அழிவன் என்பதைக் காட்டிலும் நாடு-நகரமிழந்து. உறையும் அரண் மனையையும் இழப்பான் என்பது சிறந்த கருத்தாகும்.

கடுகி-ஒல்லை-கெடும் என்பது ஒரு பொருட்பன்மொழியாய்க் கெடுதலின் விரைவைக் குறித்தது. வரத. 'உறை–உறைதற் கேது வாய செல்வம்-உறையுங் காலம்' இரண்டையுங் கொள்வர்.' ஆயுள்' என்பர் சாமி. சிதம்., குழந்தை , 'ஆட்சி' பென்பர் சி. இ , இராம., 'செல்வம் ஆயுள்' இரண்டும் என்பர் சபாபதி; 'நாடு' என்பர் மு.கோ.

இவற்றுள் உறை-முதனிலைத் தொழிலாகு பெயராய் உறையும் இடம் அதாவது நாடு நகரம் என்பதே இயைபுடைய உரை என்க.

''அதுகுறைதலாவது''

''அச்சொல் இல்லாதார்க்கு உள்ளதிற் சுருங்குதல்'' என்ற பரிமேலழகரின் சிறப்புக் குறிப்பு ஆழ்ந்து பன்முறை சிந்தித்தற்கு உரியது. அவர் உரைநடையமைப்பில் 'அது' என்பது இறைதலைச் செய்யும் நாளைக் குறிக்கிறது. 'அச்சொல்' என்ற சுட்டு 'இறை கடியன் என்னும் இன்னாச் சொல்லைக் குறிக்கிறது. 'அச்சொல் இல்லாதார்க்கு' என்பது 'இறைகடியன் என்னும் சொல்லில் லாத மன்னர்க்கு' என்ற பொருள்படுகிறது. 'அச்சொல்லில் லாதவன்' எனவே செங்கோல்மன்னர்க்கு' என்ற பொருள் பெறப்படுகிறது. செங்கோல் மன்னர்க்கு உள்ள ஆயுள் நாளிற் சுருங்குதல் எனின் குறட்கருத்தோடு மாறுபடுகிறது. ஆதலால் பரிமேலழகர் உரைக்குறிப்பு பழுதுபடுகிறது.

அங்ஙனமன்றி அச்சொல் இல்லாதார்க்கு உள்ளதில் என இயைத்து செங்கோல் மன்னர்க்கு உள்ள ஆயுளில் இறைகடியன் என்னும் சொல் உடையானுக்குச் சுருங்குதல் என்று சில விரித்துக் குறட் கருத்தொடு இயைவிக்க முயற்சிக்கின், ''அளந்தனபோகம் அவரவராற்றான்'' என்பவாகலின், அவரவர்க்குரிய பிரார்த்த கன்ம நுகர்ச்சிக்கேற்ப ஆயுள் அவரவர்க்கு வரையறுக்கப்பட்டுள்ளதாகலின் இன்னாச் சொல்லில்லாதான் ஆயுளை அளவுகோலாக வைத்து கொடுங்கோலரசன், செங்கோலனாயுளிற் குறைபடுவான் என்னுதல் பொருந்தாது. ஆயுளும் போகமும் அனைவர்க்கும் ஒத்தனவும் அல்ல; ஆதலால் அவனளவின் இவன்குறைவான் என்பது இயைபில் கூற்றாய் மெய்ப்பொருளியற் கூற்றோடு முரணும். கொடுங்கோலரசர்க்குரிய ஆயுள் வெருவந்த செயலால் அவனுக்குக் குறையும் என்பதே ஆசிரியர் நோக்கு.

'பரித்த உரையெல்லாம் *பரிமேலழகன்* தெரித்த உரையாமோ தெளி' என்று சிறப்பிக்கப் பெறும் *பரிமேலழகர்* இங்ஙனம் மயங்கவும், மாறுபடவும் ஏழுதார் என்ற துணிபால் பாடவேறுபாடு இருக்கலாம் என்று சிந்திக்கின் சற்றேறக்குறைய நூறு ஆண்டுகட்கு முற்பட்ட பதிப்புக்களிலும் இப்பாடமே உள்ளது. ஆயினும் 'அச்சொல் உள்ளார்க்கு உள்ளதிற் சுருங்குதல்' என்று பாடம் இருந்திருக்கக் கூடும் என எண்ணத் தோன்றுகிறது. சிந்தித்துச் சிறந்தது கொள்க.

ஒ) ஒப்புமைப்பகுதி.:

'தேரா மன்னா':

உறைகடுகி ஒல்லைக் கெடும் —சிலப்:20:50
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகஎன் ஆயுள் —சிலப்:20:75–77

ஒருபுடை:

அரசியல் பிழைத் தோர்க்கு அறம் கூற்றானமை —சிலப்:பதி.,55

57.5. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து. (நூசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: காண்டற்கரிய செவ்வியையும் இன்னா முகத்தையும்

உடையவனது பெரிய செல்வம் பேயைக் கண்டதொக்க அச்சம் தருதல் உடைத்து எ—று.

ஆ) *பரிதி.*: கிருபை யில்லாதவன் குளிர்ந்த முகம் இல்லாதவன் செல்வம் நல்லோற்கு ஆகாத படியினாலே பேய் செல்வம் பெற்ற தற்கு ஒக்கும் எ—று.

இ) *பரிப.*: காண்டற்கு அரிய காலத்தினையும் கண்டால் இன்னாத முகத்தினையும் உடையவனது பெரிய செல்வம் பேயைக் கண்டால் ஒக்க அச்சம் தருதல் உடைத்து எ—று.

இது செல்வத்தை வாங்குவார் இன்மையின் படை சேராது என்றது.

ஈ) *காளி.*, அரசர் முறை செய்யுமிடத்து உவகைச் செவ்வியும்[1] கண்ணோட்டமும் அரியன் ஆகிய இன்னா முகத்தானது பெரிய செல்வமானது எதனை ஒக்கும் எனின், பேயினது நோக்கம் தாக்கிய உருவானது எத்தன்மை உடைத்து மற்று அத்தன்மைத்து ஆம்; எனவே பேய் தாக்கிய உருவு பெண்ணுருவு ஆயினும் ஆணுருவு ஆயினும் உருவு ஒன்று இருந்து உள் ஓய்ந்துவிடும்; அதுபோல இங்கும் செல்வம் உள்ளது போன்று இருந்து உள் உடைந்துவிடும் எ—று

உ) *பரிமேல்.*: தன்னைக் காணவேண்டுவார்க்குக் காலம்[2] அரியனாய்க் கண்டால் இன்னாத முகத்தினை[3] உடையானது பெரிய செல்வம், பேயால் காணப்பட்டாற் போல்வதொரு குற்றம் உடைத்து

எனவே, இவை இரண்டும்[4] வெருவந்த செய்தலாயின; இவை செய்வானைச்[5] சார்வார் இன்மையின், அவனது செல்வம் தனக்கும் பிறர்க்கும் பயன்படாது என்பது பற்றிப் பேய் கண்டன்னதுடைத்து என்றார். காணுதல்—தன்வயமாக்குதல்.

ஊ) *கவிராசர்*: தன்னைக் காணவேண்டினவர்களுக்குக் காணக்

---

1. உவகைச் செவ்வி—மகிழ்ச்சியான காலம்
2. காலம்—காணும் சமயம்
3. இன்னாத முகம்—கடுகடுப்பைக் காட்டுகிற முகம்.
4. இவையிரண்டும்—அருஞ்செவ்வியும் இன்னாமுகமும் ஆகிய இரண்டும்.
5. இவை செய்வானை—அருஞ்செவ்வியும் இன்னாமுகமும் செய்பவனை.

கிடையாதனவாய், கண்டவர்களுக்குப் பொல்லாத முகத்தை உடைய வனான ராசாவுடைய பெரிய செல்வம், பேயால் காணப்பட்டாற் போல்வதொரு குற்றமுடைத்து எ—று.

ஏ) *பழைய* 2: 'பேய் கண்டன்ன' பாடம்.

காணப்படுதற்கு அரிதாக, கண்டாற் பொல்லாத முகத்தானாக இருக்கும் அரசன் பெரிய செல்வம் பேயிருந்து அனுபவித்தாற் போலும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''பேய் கண்டன்னது உடைத்து''

இக்குறட்கு 'செல்வம்' வினைமுதல். 'உடைத்து' முடிக்குஞ் சொல்.

'பேயைக் கண்டாற் போன்ற அச்சந்தருவது' என்பர் *மணக்குட வர்*. 'பேய் பெற்ற செல்வம் போலும்' என்பர் *பரிதி*.; 'பேயினது நோக்கம் தாக்கிய உருவமானது எங்ஙனம் தன்னுருவத்திற்கமைந்த குணநலங்களைவிட்டுப் பேயின் குணமாகவே ஆகிறதோ அது போலும்' என்பர் *காளிங்கர்*. 'பேயாற் காணப்பட்ட செல்வம் போலும்' என்பர் *பரிமேலழகரும்* பிறரும்.

'பூதங்காத்தாற் போன்றது' என்பர் *தேவநேயர்*, வரத.; அச்சந்தரும் பொருளைக் கண்டது போல அச்சந்தருவதாம்' என்பர் குழந்தை. இவர்க்குப் பேய் உடன்பாடன்மையின் பேய் என்பது அச்சப் பொருளைத் தரும் உரிச்சொல்லாகக் கொண்டு 'பேய்—அச்சந் தரும் பொருள்' என்றனர். 'பேயைப் பார்த்தாற் போன்றது' என்றும், 'பெருஞ்செல்வம்—ஆட்சிச் செல்வம்' என்றும் கூறுவர் சி. இ.;இராம. 'பெருஞ்செல்வம்—அவன் அணிந்த ஆடையணிகள். பேய் கண்டது அன்னது—அலங்காரங்கள் காணும் ஆசையை மிகுவிப்பதாகவும், இன்னாமுகம்—பேயைக் கண்டது போல அச்சத்தைத் தருவது' என்பர்.

இக்குறட்பாவில் வினை முதலாய் நிற்பது 'பெருஞ்செல்வமே' யாதலானும், அது அவன் அணிந்த ஆடையணிகளை மட்டுமன்றி நாடுகாவலுக்கு அவன் சேர்த்து வைத்த செல்வம் அனைத்தையும்

குறிப்பதாலும், அது பலருக்கும் பயன்படாமையால் பூதங் காத்த செல்வமாயிற்று என்ற கருத்தமைந்த உரைகளே ஏற்புடையன.

'பேய் கோட்பட்டான் பேயின் குணமேயாய்த் தன் குணம் இழத்தல் போல ஆட்சிச் செல்வமும் அச்சந்தருவது' என்ற காளிங்கர் கருத்து குறட்பாவில் உள்ள சொல்லமைதியிலும் விஞ்சியிருப்பதால் சிந்தனைக் குரியது.

பரிப்பெருமாள் கூறும் 'படை சேராது' என்ற கருத்தும் ஆய்வுக் குரியதொன்று. அரசன் செல்வம் குடிமக்கட் பாதுகாப்பிற்கு ஆயின போக எஞ்சியதே படைகட்கு வழங்கப்படுவன; அப்போதும் நாடு காவல் என்ற தலைப்பிலே வழங்கப் படுவன. ஆதலால் படை சேராது என்பதைக் காட்டிலும் தங்கட்குப் பயன்படாமையின் குடிமக்கள் நயவார். ''செல்வத்துப் பயனேயீதல்'' என்ற நோக்கம் பாழ்பட்டு நன்றியில் செல்வமாம் என்பது கருத்தாதல் காண்க.

57.6. கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ் செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும். (நுசுசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: அரசன் கடியசொல்லை உடையவனுமாய்க் கண் ணோட்டமும் இலனாயின், அவனது தொன்றுதொட்டு வருகின்ற செல்வம் பின்பு நிற்றலின்றி அக்காலத்தே கெடும் எ—று.

இஃது குறைதலேயன்றி முழுதும் கெடும் என்றது.

ஆ) பரிதி.: கொடிய சொல்லனுமாய்க் கிருபை—அற்றவனுமாகில் தொன்றுதொட்டுவரும் செல்வம் நிலையறக்கெடும் எ—று.

இ) பரிப்.: கடிய சொல்லை யுடையனுமாய்க் கண்ணோட்டமும் இலன் ஆயின், அவனது தொன்றுதொட்டு வருகின்ற செல்வம் பின்பு நிற்றல் இன்றி அக்காலத்தே கெடும்.

இது குறைதலே அன்றி முழுவதும் கெடுவன் என்றது.

ஈ) காளி.: யாவர்மாட்டும் கடிய சொல்லினை யுடையனுமாய்க்

கண்ணோட்டம் இலனும் ஆயின் அவ்வரசற்கு நெடுஞ் செல்வமானது நீட்டித்தலின்றி அவை அவை செய்யும் காலத்தே கெட்டுவிடும் எ—று

கண்ணிலனாயின் என்பது கண்ணோட்டம் இலன் என்றது.

உ) *பரிமேல்.*: அரசன் கடிய சொல்லையும் உடையனாய்க் கண்ணோட்டமும் இலனாயின் அவனது பெரிய செல்வம் நீடுதலின்றி அப்பொழுதே கெடும்.

வேட்டம், கடுஞ்சொல், மிகுதண்டம், சூது, பொருள்ஈட்டம், கள் காமமோடேழு எனப்பட்ட விசனங்களுள் கடுஞ்சொல்லையும் மிகு தண்டத்தையும் இவர் இவ்வெருவந்த செய்தலுள் அடக்கினார். கண் ஆகுபெயர்[2]. இவை[3] செய்தபொழுதே கெடுஞ்சிறுமைத்தன்றாயினும் என்பார் நெடுஞ்செல்வம் என்றார். நீடுதல்—நீட்டித்தல்.

ஊ) *கவிராசர்*: கடிய சொல்லையும் தயையில்லாமையையுமுடைய வன் செல்வம் நெடுநாள் நில்லாமல் அப்பொழுதே கெட்டுப்போம் எ—று.

ஏ) *பழைய 2*: கடிய சொல்லும் குற்றத்தின் மிகுந்த தண்டமும் வேந்தன் பகைவரை வெல்லு மாண்மையாகிய கடிய இரும்பை அராவும் அரமாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., கூறும் 'குறைதலேயன்றி முழுதும் கெடும்' என்ற கருத்து குறள் முறைவைப்பில் 670ம் குறளாக இதனைக் கொண்டமை யாலும், இதற்கு முன் குறள் 'சினத்தாற்றிச் சீறின் சிறுகுந் திரு' என்று ஆசிரியர் கூறியதாலும் அதனை அனுவதித்தது என்க.

'நெடுஞ் செல்வம்—தொன்று தொட்டு வழிவந்த செல்வம்' என்ற மணக்குடவர் கருத்து ஏற்புடையது ஒன்று. தேவநேயர், 'விரைந் தழியத்தகாத செல்வம்' என்பர். 'கண்ணிலன்' என்பதற்குக் 'கண்ணிற் கடுமையன் ஆயின்' என்பர் வ.சுப.மா. ஏனையோர்

---

1. விசனம்—துன்பந்தருஞ்செயல்கள். இதனைக் கௌடலீயம் விதனம் என வழங்கும் இதன் வகைகளையும் விளக்கத்தையும் கௌடலீயம் அதிகரணம் 8ல் காண்க.
2. கண் என்னும் உறுப்பின் பெயர், அதன் காரியமாகிய கண்ணோட்டத்திற்கு ஆயிற்று கருவியாகுபெயர்.
3. இவை—கடுஞ்சொல்லும் மிகுதண்டமும்

'கண்ணோட்டம்' என்பர். கண்ணிற் கடுமையின்மையே கண்ணோட்ட மாதலால் இங்ஙனம் கூறுதல் இயைவது ஒன்றாம்.

57.7. கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன் அடுமுரண் தேய்க்கும் அரம். (நிசுஎ)

உரைப்பகுதி:

அ) மணக்., கடுஞ்சொல் கூறுதலும் குற்றத்தின் மிக்க தண்டம் செய்தலும் அரசனுடைய பகைவரை வெல்லும் வலியைத்தேய்க்கும் அரமாம் எ—று.

இது வலியைக் கெடுக்கும் என்றது.

ஆ) பரிதி.: வெவ்விய வசனமும் கொடிய ஆக்கினையுமுள்ளது[1] அரசன் செல்வத்தைக் கெடுக்கும் அரம் எ—று.

இ) பரிப்.: கடுஞ்சொல் கூறுதலும், குற்றத்தின் மிக்க தண்டம் செய்தலும் அரசனது ஆகிய பகைவரை வெல்லும் வலியைத்தேய்க்கும் அரம் எ—று.

இது வலியைக் கெடுக்கும் என்றது.

ஈ) காளி.: யாவர்மாட்டும் இன்சொல் வழக்கம் இன்றி வெஞ்சொல் விடுத்தலும், செய்யும் நீதியைக்கடந்து தண்டம் செய்தலும் இவை இரண்டும் மன்னவன் மாற்றாரைக்[2] கொல்லும் வலியாகிய பொருள் வலி, படைவலி, துணைவலி, மற்று அரண்வலி. தன்வலி முதலிய அனைத்து வலியையும் பொடிபட த் தேய்த்துவிடும் அரம் எ—று

கை என்பது ஒழுக்கம்: ஆவது நீதி.

உ) பரிமேல்.: கடிய சொல்லும் குற்றத்தின் மிக்க தண்டமும் அரசனது பகை வெல்லுதற்கு ஏற்ற மாறுபாடாகிய இரும்பினைத் தேய்க்கும் அரமாம்.

கடுமொழியால் தானையும் கையிகந்த தண்டத்தால் தேசமும் கெட்டு முரண்[3] சுருங்கி வருதலின் அவற்றை அரமாக்கி, திண்ணிதா

1. ஆக்கினை—ஆணை
2. மாற்றார்—பகைவர்.
3. முரண்—வலிமை.

யினும் தேயும் என்றற்கு அடுமுரணை இரும்பாக்கினார். ஏகதேசவுரு வகம்[4].அரம் என்பதனைத் தனித்தனி கூட்டுக.[5] இவை ஐந்து பாட்டானும் செவ்வியின்மை, இன்னாமுகமுடைமை, கண்ணோட்டமின்மை, கடுஞ்சொல் சொல்லல், கையிகந்ததண்டம் என்றிவைகள் குடிகள் அஞ்சும் வினை என்பதூஉம், இவைசெய்தான் ஆயுளும் அடுமுரணும் செல்வமும் இழக்கும் என்பதூஉம் கூறப்பட்டன.

ஊ) *கவிராசர்:* கடினமான வார்த்தையும் குற்றத்தின் மிக்க தண்டமும் அரசனுடைய பலத்தைக் கெடுக்கும் எ—று.

ஏ) *பழைய* 2: 'கை கலந்த தண்டமும்'–பாடம்.

கடிய சொல்லும் குற்றத்தின் மிகுந்த தண்டமும் வேந்தன் பகைவரை வெல்லு மாண்மையாகிய கடிய இரும்பை அராவும் அரமாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''கையிகந்த தண்டம்''

'குற்றத்தின் மிக்க தண்டம்' என்பர் *மணக்.*; 'கொடியஆக்கினை' என்பர் *பரிதி.*; 'நீதியைக் கடந்து தண்டித்தல்' என்றும், கை—ஒழுக்கம், ஒழுக்கம்—நீதி, கையிகந்த தண்டம்—நீதியைக் கடந்த தண்டனைஎன்றும் கூறுவர் *காளி*,

'அடு முரண்'

பகை வெல்லும் வலி, மணக்.: 'செல்வம், *பரிதி.*; 'மாற்றாரைக் கொல்லும் வலியாகிய பொருள் வலி, படைவலி, துணை வலி, மற்று அரண்வலி, தன் வலி முதலிய அனைத்து வலிகளையும் என்பர் *காளி.*; படைவலி என்பர் *வ.சுப.மா.*

பரிமேலகழர், ஆசிரியர் கடுமொழி-கையிகந்த தண்டம் இவற்றை

---

4. கடுமொழியால் சேனையும், கையிகந்த தண்டத்தால் குடிகளும் மனம் உடைந்து அரசன் மாட்டன்பு குன்றுவர். அதனால் அரசன் வலிகுன்றும் என்றதாம். கடுமொழியையும் கையிகந்த தண்டத்தையும் அரமாக உருவகித்த ஆசிரியர் அரசனது வலிமையை இரும்பாக உருவகிக்காது விட்டமையின் ஏகதேச உருவகமாயிற்று.
5. கடுமொழி—அரம்; தண்டம் அரம்; எனத் தனித்தனியே கூட்டுக. அரம் என்பது ஒருமைப் பெயராதலின் கடுமொழியும் கையிகந்த தண்டமும் என உம்மை பெற்ற தொடர் பன்மைப் பெயர்ச்சிக்கு முடிபாகாமையின் தனித்தனிக் கூட்டுக என்றதாம்: 'ஒருசொல் நின்றே தனித்தனியுதவுதலுக்கு'' மேற்கோள் ஆக்குவர் இலக்கணக் கொத்து நூலார்,

அரம் ஆக்கியதால் அடுமுரணை இரும்பாக்கி ஏகதேச உருவகம் என்ற விளக்கம் மிகமிக ஏற்புடையது.

பின்னவர் உரைகள் அனைத்தும் பரிமேலழகர் உரைக்கு விளக்கம் போல அமைவதால் கருத்து மாற்றம் இன்றாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

சினனே காமம் கழிகண் ணோட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்புமிக வுடைமை
தெறல் கடுமை யொடு பிறவு மிவ்வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும்
தீது —பதிற்றுப்., 22:1–5

கடுமொழி கண்ணோ டாமை கையிகந் திட்ட தண்டம்
நடுநிலை யின்மை செவ்வி யின்மைநன் முகமு றாமை
உடனுறுச் சூழ்ந்து செய்யா துறுபிழை அமைச்சர்க் கேற்றல்
படுசமர்ச் சிறைசெய் யாமை பலவும்தீங் காக்கும் மைந்தா
—விநா.அரசி.,94

ஒ) மேற்கோள்பகுதி:

சுவாமி.: 'இதனுள் அரம் என்ற ஒரு சொல் நின்றே தனித்தனி உதவுதல் காண்க' என்பர். (இ.கொ.130.)

57.8. இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச் சீறின் சிறுகும் திரு. (நுசூஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பிறர் செய்த குற்றத்தைத் தனக்கு இனமானாரோடே அமைந்து[1] ஆராயாத அரசன் கடியசொல்லனுமாய்க் கண்ணோட்டமும் இலனாயின், அவனது செல்வம் நாடோறும் சுருங்கும் எ—று.

ஆராயாத அரசன் சினநெறியில் தீரானாயின், அவன் செல்வம் குறையும் என்றவாறு. இனம்—மந்திரி, புரோகிதர்.

1. அமைந்து—மனம் பொருந்தி.

ஆ) *பரிதி.:* தன்னைச் சேர்ந்த துன்மந்திரிகளையும் மற்றுமுள்ள பேரையும் வாழவைத்துக் குடிகளைப் பீடைபண்ணும்[2] அரசன் சினம் மேற்கொண்டால் அச்செல்வமும் சிறுகும் எ—று.

இ) *பரிப.:* பிறர் செய்த குற்றத்தைத் தனக்கு இனம் ஆயினாரோடு அமைந்து ஆராயாத அரசன் சினத்தின் நெறியானே சீறுவன் ஆயின் செல்வம் குறைபடும் எ—று

இனம் என்றது மந்திரி புரோகிதரை. இது செல்வம் குறைபடும் என்றது.

ஈ) *காளி.;* வேற்றரசரோடு வினை செய்யும் இடத்தும் அத்தனையும்முன்கோலித்[3] தன்னோடு எண்ணுதற்குரிய இனத்தோடு எண்ணிச் செலுத்தாத மன்னனானவன் சினத்துவழி கன்றி[4] எழுவனேல் சிறுகும் செல்வம்; எனவே அரசன் உரிமை அழிவன் என்பது பொருள் எ- று.

உ) *பரிமேல்.:* காரியத்தைப் பற்றி வந்த எண்ணத்தை அமைச்சர் மேல்வைத்து அவரோடு தானும் எண்ணிச் செய்யாத அரசன், அப்பிழைப்பால்[5] தன்காரியம் தப்பியவழித்[6] தன்னைச் சினமாகிய குற்றத்தின்கண்ணே செலுத்தி அவரை[7] வெகுளுமாயின் அவன் செல்வம் நாடோறும் சுருங்கும்.

அரசர்பாரம் பொறுத்து உய்த்தல் ஒப்புமையான் அமைச்சரை இனம்[8] என்றும், தான் பின் பிழைப்பாதல் அறிந்து அமையாது அதனை அவர்மேலேற்றி வெகுளின் அவர் வெரீஇ நீங்குவர் நீங்கவே, அப்பிழைப்புத் தீருமாறும் அப்பாரம் இனிது உய்க்குமாறும் இலனாம் என்பது நோக்கித் திருச்சிறுகும் என்றும் கூறினார். இதனால் பகுதியஞ்சும்[9] வினையும் அதுசெய்தான் எய்தும் குற்றமும் கூறப்பட்டன.

ஊ) *கவிராசர்:* அரசன் ஒரு காரியத்தைச் செய்கிறபோது மந்திரிகளுடனேயும் தன் சுற்றத்தாருடனேயும் ஆலோசனை பண்ணிச் செய்

---

2. பீடை பண்ணும்—துன்புறுத்தும்
3. முன்கோலி—முன்னாடி
4. கன்றி—சினந்து
5. அப்பிழைப்பால்—அத்தவற்றான்
6. தப்பிய வழி—தவறியபோது.
7. அவரை—அமைச்சரை.
8. இனம்—சுற்றம்போலத் தன்சாதியாயுள்ளவர். அமைச்சரை இனம் என்றது அரசன் பாரத்தைத் தாம்பொறுத்து நடத்துதலான் ஆம்.
9. பகுதி—அரச காரியம் பார்ப்பவர்களின் கூட்டம்.

யாமல், தன் கோபத்தினாலேயும் கர்வத்தினாலேயும் எண்ணாமற் செய்தால், அந்தக் காரியம் தப்பிதமாய் அதனாலே அவன் செல்வம் கெடும் எ—று.

ஏ) *பழைய 2*: காரியந் தப்பாக வந்த வெண்ணத்தை அமைச்சர் மேல் வைத்து, அவரோடு தானும் எண்ணிச் செய்யாமல், தான் தப்பிதஞ் செய்து அந்தத் தப்பிதத்தை அமைச்சர் மேல் வைத்து அவரைக் கோபித்துச் சீறும் வேந்தன் செல்வம் நாடோறும் சுருங்கு மென்றவாறு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

அனைவரும், குடிகளில் ஒருவன் செய்த குற்றத்தை ஐம்பெருங் குழுவுடன் ஆராய்ந்து தெளியாமல் கண்ணோட்டமும் இன்றிச் சினத்தான் மிக்குத் தண்டிப்பனாயின் அவன் செல்வம் சுருங்கும் என்றனர்.

இக்குறட்பாவுக்குப் *பரிதியார்* உரை புதிய நோக்குடையது. 'ஆற்றி' - என்பதற்கு 'வாழவைத்து' எனப்பொருள் கொண்டு; இவனுடைய கொடுங்கோன்மைக்குத் துணையான துன்மந்திரிகட்கும்; அதற்கு வேண்டிய பேர்களுக்கும் உதவி, என்றனர், 'எண்ணாத' என்பதற்குக் 'குடிமக்கள் நன்மையைக் கருதாத' என்றும் 'சினத்தாற்றின்' என்பதற்கு 'மேலும் சினந்தால்' என்றனர். ஆதலால் புதுநோக்குடையது இது.

காளிங்கர் 'வேற்றரசரோடு போர் மேற்கொள்ளும் போது தன்னினத்தோடு ஆராயாமல் கோபத்தால் செல்வனாயின்' என்கின்றனர். இவ்வதிகாரம் குடிமக்கள் வெருவந்த செய்யாமையாக இருக்கவும் படை எடுப்பைப் பற்றித் திசை திருப்புகிறார் இவர். இவ்வதிகாரத்திற்கு இயையுமேல் கொள்க.

பரிமேலழகர் 'காரியத்தைப் பற்றிய எண்ணத்தை' எனப்பொது வகையால் குடிகளைப்பற்றியும் மாற்றானைப் பற்றியும், அங்கங்களைப் பற்றியும் ஆன காரியங்களைக் கருதச் செய்கிறார். 'அக் காரியங்களைத் தன் இனத்தோடு சூழாமற் செய்ததால் தவறு நேருமாயின் அதனைக் கோபத்தால் அமைச்சர்கள் மேலேற்றுவனாயின் என மன்னன் தன் தவறினை இனத்தின்பாற்படுத்திச் சினப்பனாயின் கெடும்' என்றார். இதுவும் ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்குகிறது.

கவிராசர் உரை, *பரிமேலழகர்* வழியே செல்வதாயினும் இங்கு

'இனத்தோடு எண்ணாமல் கோபத்தாலும் கர்வத்தாலும் செய்தால் கெடுவன்' என்கிறது

பழைய உரை பரிமேலழகரை முழுதும் பின்பற்றியுள்ளது. இங்ஙனம் பழைய உரைகள் ஐந்து விதமான நோக்கில் அமைகின்றன:

கா.சு., தேவநேயர், வரத., குழந்தை, பரிமேலழகரை ஒத்து உரைப்பர். *இராம*; 'குற்றம்' குற்றவாளி என்ற இனத்திற்கு ஒத்தபடி எண்ணாத அரசன் தன் கோபத்திற்கு ஒத்தபடி தண்டனை தந்தால் திரு சிறுகும்' என்பர். இவன் இனத்திற்குக் கூறும் உரை முன்னவரில் வேறானது.

இங்ஙனம், சில சொற்களை வருவித்துச் சொற்பொருள் விரிப்பதால் இங்ஙனம் பொருள் மாறும் திருக்குறட் கண்ணாடியில் உள்ளீடாக விளங்கும் *வள்ளுவர்* கருத்து எது என்பது அறியக்கூடவில்லை ஆயினும், 'அரசகாரியங்கள் எதுவாயினும் சூழ்வார் கண்ணாகச் சூழ்ந்து செய்யவேண்டிய அரசன் அங்ஙனம் செய்யானாயினும் சினத்தால் செய்யவும் முற்படுவானாயினும் அவன் செல்வங் கெடும்' என்ற உரை சொல்லமைதிக்கு ஏற்றதாகும்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

இனத்தாற்றி எண்ணாத வேந்தர்:

இனமாம் என்றுரைப் பினுமே தமெணான்
முனமா கியபான் மைமுளைத் தெழலால் —சீவக., 215

57.9. செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன் வெருவந்து வெய்து கெடும். (நிகூக)

உரைப்பகுதி:

அ) மணக்., தனக்குக் காவலானவற்றை முன்னேயமைத்துச் செய்யாத வேந்தன் செருவந்த காலத்து அச்சமுற்றுக் கடிதுகெடும் என்று.

இது தனக்கும் அச்சம் வருவன செய்யலாகாது என்றது.

ஆ) *பரிதி.*: குடிக்கடமையை அன்பினாலே வாங்கி மாற்றார்[1] வந்தால் அக்குடியைக் காட்டிக் கொடுக்கு மன்னவன் சடுதியிலே கெடும் எ—று.

இ) *பரிப்.*: தனக்குக் காவல் ஆனவற்றை முன்னே அமையச் செய்யாத வேந்தன் செருவந்த காலத்து அச்சம் உற்றுக் கடிது கெடும் எ—று.

இது தனக்கு அச்சம் வருவன செய்யலாகாது என்றது.

ஈ) *காளி.*: முன்னமே மதிற்சிறை முதலிய வன்சிறை நான்கும் வில்லரணும் வேலரணும் தோலரணும் துர்க்க அரணும்[2] உளவாகிய வியூகச் சிறையும்[3] உடையரேனும், மற்று அச்சிறை நீங்கிச் செருந் தொழில் புரியச்சென்ற தேயத்துப் புறத்திறை மன்னரால்[4] போரழிவு வந்தகாலம் நோக்கிய இடத்து இறையும்[5] சிறை பலவும் செய்து கொள்ளாத மன்னனானவன் முனையெதிர்[6] படைபோந்து முற்றிய காலத்து வெருவுதல் கடிதின் கெட்டுவிடும் எ—று.

உ) *பரிமேல்.*: செரு வருவதற்கு முன்னே தனக்குப் புகலாவதோர் அரண் செய்துகொள்ளாத அரசன் அது வந்த காலத்து ஏமமின்மை[7] யான் வெருவிக் கடிதின் கெடும்.

பகையை வெருவிச்[8] சேர்ந்தார் நீங்குதலின் தமியனாய்த் தானும் வெருவி அப்பகைவயத்தனாம் என்பதாம். இதனால் தான் அஞ்சும்[9] வினையும், அது செய்தான் எய்தும் பயனும்[10] கூறப்பட்டன.

ஊ) *கவிராசர்*:: சண்டை வருவதற்குமுன்னே தனக்கு அரணாகிய காவலைப் பண்ணிக்கொள்ளாத அரசன், சண்டை வந்தபோது அரண் இல்லாதபடியினாலே பயப்பட்டுச் சீக்கிரத்திலே கெட்டுப்போவான் எ—று.

ஏ) *பழைய* 2: பகைவர் சண்டை வருவதற்கு முன்னே தனக்குச் சேமமாவதோர்[11] அரண் செய்து கொள்ளாத, வேந்தன், சண்டை

---

1. மாற்றார்—பகைவர்.
2. துர்க்கஅரண்—கோட்டையாகிய அரண்.
3. வியூகம்--படைவகுப்பு. இதுவும் அரண்வகையுள் ஒன்று.
4. புறத்து இறை மன்னரால்—நாட்டின்புறம்பே முற்றுகையிட்டுத் தங்கிய அரசர்களால்
5. இறையும்—சிறிதும்.
6. முனை—போரின் முகப்பு.
7. ஏமமின்மை—பாதுகாப்பு இன்மை.
8. பகையை வெருவி—பகைக்குப் பயந்து:
9. தான் அஞ்சுதல் தன்னை யரண் செய்து கொள்ளாமையான் விளைந்தது,
10. அதன் பயன்—அங்ஙனம் சிறைசெய்யாமையான் வெருவந்து வெய்து கெடுதல்.
11. சேமம்—பாதுகாப்பு

வந்த காலத்தில் தன்னைத் தாங்குஞ்சேமம் இல்லாமையால் வெருவிக் கடிதிற் கெடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் உரை குற்றங்கடிதலிற் கூறும் வருமுன் காத்தலை வலியுறுத்துகிறது.

பரிதியுரை ''செருவந்த காலத்தில் குடிகளைப் பாதுகாப்பான இடத்தில் வைத்துக் காப்பாற்றக் கடமைப்பட்ட அரசன் அங்ஙனம் செய்யாது தான் தன்னினத்தொடு அரணிற் புகுந்து மக்களைக் காட்டிக் கொடுத்து மாற்றானிடம் தப்பலாம். ஆயினும் குடிகளிடம் வெருவந்து அழிவன் என்பதுபட நிற்றலின், குடிகளைக் காட்டிக் கொடுத்தல் கொடுங்கோன்மை. அதனால் விளைந்த பயன் குடிகளிடம் தான் அஞ்சுதல்' என்பது பட நிற்கின்றது. சிறை செய்தல்—அரண்களில் வைத்துப் பாதுகாத்தல் இவ்வுரை இவ்வதிகாரத்திற்கு ஏற்புடையது. இதுவரை குடிமக்கள் வெருவரும் செயல்களைச் செய்தலாகாது என்ற ஆசிரியர் இக்குறளால் குடிமக்களை வெருவரச் செய்தமையால் தானே வெருவரநேரும், கெடவரும் என்று அதனை வலியுறுத்துகிறார். ஆதலால் இவ்வுரை சிறந்தது எனலாம்.

காளிங்கர், 'தன்னாட்டில் நால்வகை வன்சிறைக்குள்ளும், நால்வகை வியூகச் சிறைக்குள்ளும் இருக்கும் மன்னன் வேற்று நாட்டுக்குப் படை எடுத்துப் போம் போதும் அவ்வெல்லையில் தமக்குத் தகுதியான அரண்களை அமைத்துக் கொள்ள வேண்டும்' என்ற கருத்தினராவர். அதிகாரம் குடிகட்கு வெருவந்த செய்யாமையேயன்றித் தனக்கு வெருவந்த தேடிக்கொள்ளாமையோ அரண் அமைக்க வலியுறுத்துதலோ அன்று ஆகையால் இவ்வுரையின் நோக்கு எம்மால் அறியக் கூட இல்லை. அதிகார இயைபிலது என்றுதான் கருத நேருகிறது.

பரிமேலழகர் உரையும் மன்னன் தனக்கு அரண் அமைத்துக் கொள்ள வேண்டியதன் இன்றியமையாமையையே வலியுறுத்துவதால் இயைபிலதாகின்றது. இவர் வழிச்செல்வோர் உரைகளும் அங்ஙனமே.

தேவநேயரும் 'அரசன் தானே யஞ்சும் வினையும் அதன் தீங்கும் கூறப்பட்டன' என்பர். இவ்வதிகாரப்போக்கு ஆள்வோர் ஆளப்படுவோரிடையுள்ள உறவின் வரையறை வாயிலாக ஆளப்படுவோர்

அஞ்சும் செயலை ஆள்வோர் செய்தலாகாது என்பதையே கூறுவதாக லின் பரிமேலழகருரை போல இதுவும் இயைபிலதாம். மு.ரா.அரு., குழந்தை முதலியோர் உரைகளும் அன்ன.

வரத. 'செருவந்த போதின்—போர் வருவதற்கு முன்னும் வந்த பிறதம்' என்பர்7 செருவந்த என்ற இறந்தகாலப் பெயரெச்சம் வருவதற்கு முன்னும் என்று உரை செப்ப எங்ஙனம் இடந்தந்தது என்பது வினாக்குறியேயாகும் பண்டையோர் சென்ற நெறியென்று சென்றனர் போலும். 'சிறைசெய்தல்—இனத்தாலும் அரணாலும் பாதுகாவலை உண்டாக்கிக் கொள்ளுதல். வெய்து—வருந்தி என்பர். இதனுள் வெய்து என்பது வெம்மையுடையது, வெய்யது, துக்கம், வெப்பம், விரைவு என்னும் பெயர்ப் பொருள் தந்து பெயர்ச் சொல்லா மேயன்றி, வருந்தி என்ற வினை எச்சப் பொருள் படாமை ஓர்க. ஆதலால் வருத்தத்தால் கெடும் எனப் பொருள் கோடல் தக்கதாம்.

இராம: 'வெருவந்த செய்யாதிருந்து தமக்கு முன்னெச்சரிக்கை செய்து கொள்ளாத வேந்தன் தன்னோடு குடிகளுக்குப் பிணக்கு வருகிறபோது சடுதியில் கெட்டுப் போவான்' என்பர். செரு—என்று உள்நாட்டுப் போரைக் கருதுகிறார் போலும். உள் நாட்டுக் கலகம் மக்களுக்கும் மன்னனுக்கும் நிகழ்வது.

இவ்வுரைகளோடு, சிறை செய்யா வேந்தன்— (குடிதழீஇக் கோலோச்சுதலால் அடுதழீஇ நிற்குமாறு செய்து) தற்காப்பரண் தேடிக்கொள்ளாத மன்னன் செருவந்த போதின்— (புறப்பகையாலோ உட்பகையாலோ) போர்வந்தகாலத்து வெருவந்தது (புறப்பகையைக் காட்டிலும், உட்பகை தீதாகலின்) அஞ்சிக் கெடும் என்பதையும் இணைக்கலாமா என்று எண்ணுக. 'போர்க்காலத்தில் தீயகுடியைச் சிறைசெய்யாத அரசன் கலங்கி வெதும்பி அழிவன்' என்பர் வ.சுப.மா.

இப்பொருளில் சிறை செய்தல்—நேரே அரணமைத்தலன்று: குடிகள் தன்னை விரும்பி நிற்குமாறு பாதுகாத்துக் கோடல்.

57.10. கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுஅல்ல(து) இல்லை நிலக்குப் பொறை. (நிஙo)

உரைப்பகுதி:

அ) மணக்.: கடுங்கோலனாகிய அரசன் அறிவில்லாதாரை அமாத்

யாராகக்[1] கூட்டிக்கொள்ளும் அவ்வரசனல்லது நிலத்துக்குப் பாரம் வேறொன்றும் இல்லை எ—று.

அறிவில்லாதார் அமாத்தியர் ஆனால் அவரானே உலகம் அச்சம் உறும்; அதற்காகக் கடுங்கோல் அரசன் அவரைக்கூட்ட அவனை நிலம்பொறாது என்றது.

ஆ) *பரிதி.*: பூமிக்த எட்டுமலையும்[2] எழுகடலும் பாரமல்ல[3]; கொடுங்கோல் மன்னவன் பாரம் எ—று.

இ) *பரிப.*: கடுங்கோலன் ஆகிய அரசன் அறிவில்லாரை அமைச்சராகக் கூட்டிக் கொள்ளும்; அவ்வரசன் அல்லது நிலத்துக்குப் பாரம் வேறு ஒன்று இல்லை எ—று.

அறிவில்லாதார் அமாத்தியர் ஆனால் அவரானே உலகம் அச்சம் உறும். அதற்காகக் கடுங்கோல் அரசன் அவரைக் கூட்ட அவனை நிலம் பொறாது என்றது.

ஈ) *காளி.*: கல்லாதார் ஆகிய மூர்க்கரை அரசனானவன் தனது அன்பினால் பிணித்துக்கொள்ளும் நீதிக் கேடு யாது? மற்று அது வல்லது இல்லை இந்த நிலத்து வாழுகின்ற உயிர்கட்குக் கிலேச பாரம்:[4] பிறிது ஒன்றும் இல்லை எனவே மற்று அது உயிர்கட்கு வெருவந்த செய்தலுள் ஒன்று எ—று.

உ) *பரிமேல்.*: கடுங்கோலனாய அரசன் நீதிநூல் முதலிய கல்லாதாரைத் தனக்குப் பகுதியாகக் கூட்டா நிற்கும்; அக்கூட்டமல்லது நிலத்திற்கு மிகையாய பாரம்[5] பிறிது, இல்லை.

கடுங்கோல் என்பது ஈண்டு மிக்கதண்டத்தின் மேற்று அன்றி, அதனைச் செய்வான்மேற்றாயிற்று.[6] அவன் அது செய்தற்கு

---

1. அமாத்தியர்—அமைச்சர்.
2. எட்டுமலை—இமயம், மந்தரம், கைலாயம், விந்தியம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம், ஏழுகடல், உப்புக்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், கட் கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், நன்னீர்க்கடல் என்பன.
3. பாரம் அல்ல—சுமையல்ல.
4. கிலேசபாரம்—துன்பம் அல்லது கவலைச்சுமை.
5. மிகையாய பாரம்—அதிகமான பளு
6. கடுங்கோல்—கடிய தண்டம், மிக்க தண்டம், அது தண்டனையின் மேற்றன்றித்தண்டம் செய்வாரின் மேலதாயிற்று. உபசாரவழக்கு. கொடுந்தண்டனை என்ற குணம் அதனைச்செய்யும் அரசனாகிய குணி மேலதாதலின் பண்பாகுபெயர் எனலுமாம். உபசார வழக்கிற்கும்—ஆகுபெயர்க்கும் பெரிதும் வேற்றுமையுண்மையின் இது ஊன்றியாய்தற்குரியது.

இயைவாரையல்லது[7] கூட்டாமையின் கல்லார்ப்பிணிக்கும் என்றும், ஏனையவற்றையெல்லாம் பொறுக்கின்றது இயல்பாகலின் நிலத்திற்குப் பொறை அதுவல்லது இல்லை என்றும் கூறினார். நிலக்கு என்பது செய்யுள்விகாரம்[8]. இதனால் வெருவந்த செய்தலின் குற்றம் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: கடுங்கோலனான அரசன், நீதிநூல் முதலானவைகளைக் கல்லாதபேரைத் தனக்குத் துணையாகக் கூட்டிக் கொள்வன்; அந்தக் கூட்டத்தைச் சுமந்து கொண்டிருக்கிற பூமிக்கு வெகுபாரம் எ—று.

ஏ) *பழைய 2*: 'கடுஞ்சொல்' பாடம். கடுஞ் சொல்லனாய வரசன் நீதி நூல் முதலிய கல்லாதாரைத் தனக்குத் தேர்ச்சித் துணையாகக் கூட்டும் அக்கூட்ட மல்லது நிலத்துக்கு மிகையான பாரம் பிறிதில்லை-

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், பரிப்பெருமாள் இருவரும், 'கடுங்கோல்' என்பதனை முறையே ஆட்சிக்கும் ஆள்பவனுக்கும் ஆக்கிக் 'கடுங்கோலரசன்' எனப்பொருள் கொண்டனர். அதனால் 'அது' என்பதற்கு 'அவ்வரசன்' எனப்பொருள் கூற வேண்டிய நிலை விளைந்தது. அதனால், 'பொறை' என்பதற்குப் பொறை ஆவார் இல்லை என்று ஒரு சொல்வருவித்து இருக்க வேண்டும். அங்ஙனம் அன்றிப் பொழிப்புரைக்கும் கருத்துரைக்கும் இடைநிலையதாக அமைகிறது இவ்வுரை.

பரிதியார் 'கொடுங்கோல் மன்னன் பாரம்' என்றனர். இவர் கருத்து வழங்குபவர் ஆதலின்.

காளிங்கர் 'கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோல் யாது? அது. அல்லது நிலக்குப் பொறையில்லை' எனக் கூட்டி, 'கொடுங்கோல்—நீதிக்கேடு' என்றனர். இக்குறட்பாவை அதிகாரத் தலைப்போடு இயைபுபடுத்த 'கல்லார்ப் பிணிக்கும் அதுவே வெருவந்த செய்தலாம் என்றனர்.

பரிமேலழகர் 'கொடுங்கோல் அரசன் கல்லாதாரைத் தனக்குப் பகுதியாகக் கூட்டும். அக்கூட்டம் நிலக்குப் பொறை' என்பர்.

---

7. இயைவார்—பொருத்தமானவர்
8. நிலத்திற்கு எனற்பாலது அத்தும், இன்னுங்கெட்டு நிலக்கு என ஆயது செய்யுள் விகாரம்; 'நிலத்திற்குப் பொறை' என்றிருப்பின் வெண்டளை பிழைபடும் அதனால் நிலக்கு என ஆண்டனர்.

தேவநேயநம், குழந்தையும், சாமிசிதம்பரனாரும், இலக்குவனாரும் இவரை ஒத்துரைப்பர்.

வரத. கொடுங்கோல் மன்னனும் அவனைச் சார்ந்த தீயரும் நாட்டிற்குப் பொறை யாவர். அதாவது தீயன செய்வர்' என்பர். அது என்ற ஒருமைச் சுட்டுக் கூட்டத்தைக் குறிக்குமேயன்றிக் கொடுங்கோலனையும் இணைத்துக் குறிக்குமா? என்பது எண்ணுதற்குரியது.

இவருள், மணக்., பரிப்., பரிதி. மூவரும் 'பிணிக்கும்' என்பதைப் பெயரெச்சமாகக் கொண்டு 'பிணிக்கும் கொடுங்கோல்' எனக் கூட்டி, கொடுங்கோல் என்பதனைக் 'கொடுங்கோல'னாக்கிக் கூறினர்,

பரிமேலழகர் 'கொடுங்கோல் (மன்னன்) கல்லார்ப் பிணிக்கும்; அது அல்லது நிலக்குப் பொறையில்லை' என்பர். இங்ஙனம் இருவகையினர்.

வள்ளுவர் குறளை இவ்வுரைக் கண்ணாடிகளையணியாமல் நோக்கினால், கடுங்கோல் கல்லார்ப் பிணிக்கும்; அது அல்லது (கடுங்கோலல்லது) நிலக்குப் பொறையில்லை என நேரிய பொருள் கொள்வதாற் காணும் குறையின்னது என்று அறியக் கூட வில்லை. எண்ணுக. இப்பொருளையே கருதுவர் வ.சுப.மா.

ஒ) ஒப்புமைப்பகுதி:

நிலக்குப் பொறை:

நிலத்தார் அவர் தமக்குப் பொறையாய் நாளும்
—பதிகம்., 260—பா.4

கல்லார்ப்பிணிக்குங் கடுங்கோல் (ஒருபுடை):

புத்திகெட்ட ராசாவுக்கு மதிகெட்ட மந்திரி —பழமொழி
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் —பழமொழி

ஓ) மேற்கோள்பகுதி:

தெய்வச்.: பண்புதொகவரும் அன்மொழித் தொகைக்கு மேற்கோள் காட்டி, கடுங்கோல் என்பது அஃதுடைய அரசர்க்குப் பெயராகி வருதலின் அன்மொழித் தொகையாயிற்று; கோலிற்கு அடையாகின்ற கடுமையும் அரசன்மேல் ஏறியவாறு கண்டுகொள்க என்பர்.
(தொல்.சொல். 412)

பனிடைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	தக்காங்கு	கடிதோச்சி	வெருவந்த	இறைகடியன்	அருஞ்செவ்வி	கடுஞ்சொல்லன்	கடுமொழியும்	இனத்தாற்றி	செருவந்த	கல்லார்ப்
மணக்.	1	2	10	4	8	6	7	5	9	3
பரிதி.	8	9	4	5	3	1	6	2	7	10
பரிப்.	1	2	5	4	9	7	8	6	10	3
காளி.	2	3	1	7	5	4	6	10	9	8
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

57வது அதிகாரம் 'வெருவந்த செய்யாமை' முற்றிற்று.

58. கண்ணோட்டம்

அதிகாரப்பொருள்:

அ) *மணக்.:* கண்ணோட்டமாவது கண்ணால் காணப்பட்டாரை அருள் செய்தல். குற்றஞ்செய்தாரை ஒறுக்குங்கால் உலகத்தாரிசைய ஒறுக்கவேண்டுமென்றாராயினும் அவ்வாறு செய்தவரைத் தமது கண் முன்னாகக் கண்டால் அதனைப் பொறுத்தலும் வேண்டுமென்று அதன்பின் இது கூறப்பட்டது. இது பெரும்பான்மையும் முன்புகண்டு பழகினார்மேற்று.

ஆ *பரிதி.:* கண்ணோட்டமாவது அரசற்குக் கிருபையாகிய பார்வை வேணும் எ—று.

இ) *பரிப்.:* கண்ணோட்டமாவது கண்ணாற் காணப்பட்டாரை அருள் செய்தல். குற்றம் செய்தாரை ஒறுக்குங்கால் உலகத்தார் இசைய ஒறுக்க வேண்டும் என்றாராயினும், அவ்வாறு செய்து அவரைத் தமது கண்முன்னாகக் கண்டால் அதனைப் பொறுத்தலும் வேண்டும் என்று அதன்பிற் கூறப்பட்டது. இது பெரும்பான்மையும் முன்பு பழகினார் மேற்று.

உ) *பரிமேல்* : அஃதாவது தன்னோடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை. இஃது அவர்மேல் கண்சென்றவழி நிகழ்வதாகலின், அப்பெயர்த்தாயிற்று. மேல் வெருவந்த செய்யாமையுள்[1] கூறிய அதனையே சிறப்புப்பற்றி விரித்துக் கூறுகின்றமையின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

1: "கடுஞ்சொல்லன் கண்ணிலனாயின்" என்னுங் 566ம் குறளில், கண்ணோட்டமின்மையை வெருவந்த செய்தலுள் அடக்கிக் கூறப்பட்டிருத்தல் காண்க.

ஊ) கவிராசர்: தன்னுடனே சினேகம் பண்ணியபேர் சொன்ன காரியங்களை மறுக்க மாட்டாமை. இது அவர்கள்மேல் கண்ணோட்ட மாகிய தயையுண்டானபடியினாலே அப்பெயர்த்தாயிற்று.

ஏ) பழயை 2: அஃதாவது, பழகினவரைக் கண்டால் அவர் சொல் லும் மாற்றம்[2] மறுக்க மாட்டாமை. கண்ணாற் கண்டு முகவாட்டஞ் செய்யாமை கண்ணோட்டம் (இன்மை) என்க.கண்மறுக்க மாட்டாமை, கண்மறுத்துச் சொல்லாமை எனப்பெரியோர் சொல்லுஞ் சொல்.

மல்லர்: அதாவது இரக்கமுடையவனாய் இருக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக். பரிப். கண்ணால் காணப்பட்டாரை அருள் செய்தல். முன் குற்றஞ் செய்தாரை உலகத்தால் ஒப்பும் வகையில் ஒறுக்க வேண்டும் என்றார். ஈண்டுக் குற்றஞ்செய்தார் தன்னை வந்து கண்டால்— அல்லது தன்னெதிர்ப் பட்டால் பொறுத்தலும் வேண்டும்' என்பர்.

பரிதி. 'அரசற்குக் கருணை நோக்கமும் வேண்டும் என்பதாம்' என்பர்.

பரிமேல். 'தன்னோடு பழகினவரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை' என்பர். மேலும், 'முன்பு வெருவந்த செய்யாமை யையே சிறப்புப் பற்றி விரித்துக் கூறுகின்றார்' எனவும் கூறுவர்.

கவிராசர் 'சிநேகம் பண்ணிய பேர் சொன்ன காரியங்களை மறுக் காமை' என்பர்.

பழைய2 பரிமேலழகர் தந்த விளக்கத்துடன் 'கண்ணாற் கண்டு முக வாட்டஞ் செய்யாமை' என்பர்.

இவ்வுரைகளால், கண்ணோட்டம் என்பது ஒரு செயலா? பண்பா? எதனால் விளைவது என்பது தெளிய அறியக் கூடவில்லை. பொறுத் தலே கண்ணோட்டமாயினும், மறுக்காமையே அதுவாயினும் செயல் ஆகிறது. முற்கால உரைகளையும், பிற்கால உரைகளையும் இணைத்து எண்ணும்போது இன்னதென்றும் இதனால் விளைந்தது என்றும் வரையறுத்து உணர்த்த இயலாத இனக் கனிவின் வெளிப் பாடு எனலாம். அன்புஅல்லது அருளின் வெளிப்பாடு என்றுஞ்

2. மாற்றம்—சொல்.

சொல்லி விடமுடியாது. அன்புக்கும் அருளுக்கும் வேறுபாடுகளை வரைவிலக்கணமாக உரையாசிரியர்கள் அவ்வவ்வதிகாரத் தலைப்பில் கூறி உள்ளனர். இது அதனின்—வேறுபட்டுள்ளது,

பிற்கால உரைகளுள்; மு.ரா.அரு. 'தம்மோடு பழகியவரைக் கண்டால் அவர் சொன்னகாரியங்களை மறுக்க மாட்டாமை' என்பர்.

தேவநேயர் 'உறவினர்—நண்பர்— பழகியவர்—தொடர்புடையார்—உதவி செய்தவர்கள் எளியவர் ஆகிய இவர்கட்கு நன்மை செய்வதை மறுக்க முடியாத அன்பே கண்ணோட்டம்' என்பர். இது அத்தகையாரைக் கண்டவுடன் மனம் விரைந்து ஓடுதல் பற்றி வந்த காரணப் பெயர். இது 'ஓர்ந்து கண்ணோடாது தேர்ந்து செய்வதாகிய நடுநிலை திறம்பாத கண்ணோட்டமும், இவ்வதிகாரத்தாற் கூறப்படும் நடுநிலைதிறம்பிய கண்ணோட்டமும் ஆக இருவகைப்படும்' என்பர். இவ்வதிகாரத்திலேயே ''கருமஞ் சிதையாமல் கண்ணோடுக'' (578) எனவும் ''அளவினால் கண்ணோடுக'' (574) எனவும் நடுநிலை திறம்பாத கண்ணோட்டமும் கூறப்பெறுதலைக் காணுக. குழந்தை பழக்கமுடையார் சொல்லை மறுக்கமாட்டாமல் இரக்கங் காட்டுக' என்பர்.

வரத. 'கண் ஓட்டம்—கண்ணின் வழியாக அன்பைச் செலுத்துதல். மனத்திற்கு முன்னே பழகின இடத்தில் அன்பைச் செலுத்துதல்' என்பர். அன்பைச் செலுத்துதல் என்பது எங்ஙனம் பொருந்துவதாகும்? ஆதலால் கண்ணின் வழியாக அன்பைச் செலுத்துதலே இயைந்ததாம். ''கண்ணிற் சிறந்த உறுப்பில்லையாவதுங் காட்டியதே'' என்ற கோவையாரினும் கண்ணே கருத்தைக் காட்டும் கருவியாதல் தெளிக.

இராம. கண்ணோட்டம்—தாட்சண்யம். நட்பு, உறவு, நன்றி, கருணை ஒப்புரவு இவை காரணமாக ஒருவர்க்கொருவர் கட்டுப்பட்டு நடக்குங் குணம். அதாவது ஒருவரைக் கண்டவுடன் கருத்தால் அவரிடத்திற் பரிவு கொள்வது' என்பர்.

கா.சு. 'வேண்டியவர்களைக் கண்டால் அவர் சொன்னதை மறுக்க முடியாத நிலை' என்பர்.

சாமி.சிதம். 'பழகியவர்களின் சொற்களை மறக்காமை' என்பர்.

இராமலிங்கரும் தேவநேயரும் கூறுவது போல, உறவு காரண

மாக விளைவது எனிலோ தொடர்புடையார்கட்டோன்றும் காதன்மை யாம். நட்புடையார் மாட்டுச் செலுத்தப் படுவது எனிலோ நண்பாகும்; தொடர்புடையாரும் உறவினரும் வேறாகார். உதவி காரணமாகச் செய்யப்படுவதெனிலோ கைம்மாறாகும். எளியார் மாட்டுச் செய்யப் படுவதெனிலோ இரக்கமுடைமையாம். இவையாவும் ஏதுவாகாமை யின் கண்ணோட்டம் பழகியவர்களிடத்திற் காட்டவேண்டிய பண்பு எனல் இயைபுடையதாகும்.

ஆசிரியர் **வள்ளுவனார்** செங்கோன்மையில் ''ஓர்ந்து கண்ணோ டாது யார் மாட்டும் தேர்ந்து செய்வஃதே முறை'' என்று கண்ணோட் டமே கூடாது என்றார். கண்ணோட்டம் பற்றி வலியுறுத்திக் கூறும் இவ்வதிகாரத்தும் ''கருமஞ்சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு உரிமையுடைத்திவ்வுலகு'', என்றும், ''அளவினாற் கண்ணோடுக'' என்றும் கூறுகிறார்.

ஆகவே நாட்டுக்கு நலம் பயக்கும் நிலையில், உலகவர் யாவரும் 'அரசன் செய்தது சரி' என்று ஒப்பும் வகையில் உள்ள கண் ணோட்டமே ஆசிரியர் கருதுவதென்க. உறவினர் உதவியவர் முதலிய வர்களுடைய ஆக்கவழி நன்மைகளை எண்ணிப் பொருள் கொடுத்தல், துணை நிற்றல், நியாயம் வழங்கல் முதலியவைகளால் குடிமக்களில் ஒருவருக்கும் இடையூறின்றிச் சலுகை காட்டுதலே கண்ணோட்டமாம் என்க.

அங்ஙனமாயின், ''ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் பொறுத் தாற்றும் பண்பே கண்ணோட்டம்'' என்றது மாறுபாடாம் பிறவெனின் அவ்வொறுத்தல், தன்னையரசன் என்று தெரிந்தோ தெரியாமலோ ஒருவன் தன்னை ஒறுத்த வழி, அதனைப் பொறுத்தலே கண்ணோட் டம் என்றதன்றிக் குடிமக்களை ஒறுத்ததைப் பொறுத்தலன்றாம் என்க.

ஆகவே, கண்ணோட்டம் என்பது ஏனையோர்க்குத் தீங்காகாத நிலையில், ஒல்லும் வகையெல்லாம் உதவுதலும், தனக்குச் செய்த தீமையைப் பொறுத்தலும் செங்கோன்மை வெருவந்த செய்தலாக முடியாமல் இனையர் இனமுறையர் என்ற பட்சபாதமின்றித் தன்கீழ் வாழ்வார் அனைவருக்கும் ஒப்ப நடத்தல் ஆகிய இவையே என்பது ஆசிரியர் உள்ளமாதலைத் தெளிக.

58.1. கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் உலகு. (நுசெ)

உரைப்பகுதி:

அ) மணக்.: கண்ணோட்டமாகிய பெரிய அழகு அரசன்மாட்டு உண்டானபடியினாலே இவ்வுலகநடை ஆகின்றது எ—று.

இஃது, அஃது இல்லையாயின், உலகம் கெடும்; ஆதலால், கண்ணோட வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: கண்ணோட்டம் என்கிற திருமாது உண்டாகில் அரசற்கு உலகம் உண்டு எ—று.

இ) பரிப்.: கண்ணோட்டம் ஆகிய பெரிய அழகு அரசன் மாட்டு உண்டானபடியாலே, உலகநடை உண்டாகின்றது. இஃது இல்லை யாயின் உலகம் கெடும். ஆதலாற் கண்ணோட்டம் வேண்டும் என்றது. செங்கோன்மை கூறுகின்ற வழிக் கண்ணோடாது முறை செய்க என்று கூறி, ஈண்டுக் கன்ணோடுக என்று கூறுதல் மாறுபடக் கூறுதலாம் பிற எனில், அற்று அன்று; அது முறை செய்யும் திறன் கூறிற்று. இஃது உலகத்தார் பலர் ஆதலால் குற்றம் செய்வார் மிகுந் திருப்பர். அதற்குஎல்லாம் தண்டஞ் செய்யின் உலகம் என்பது ஒன்று இல்லையாம்; அதற்காகப் பொறுக்க வேண்டுவன பொறுக்கவேண்டும் என்று கூறிற்று.

ஈ) காளி.: கண்ணோட்டம் என்று சொல்லப்பட்ட மிகவும் பெரிய நன்மையானது அரசர் முதலிய பெரியோர்மாட்டு உளதாய் வருவ தால் உளது இவ்வுலகத்து உயிர்களின் வாழ்க்கை எ—று.

எனவே மற்று இவர்கள்மாட்டு அஃது இல்லையாயின் பல உயிர்க்கும் துன்பம் வருவது பொருள் என அறிக.

உ) பரிமேல்.: கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற சிறப்பு டைய அழகு அரசர்மாட்டு உண்டாகலான், இவ்வுலகம் உண்டாகா நின்றது.

கழிபெரும் காரிகை என்புழி ஒருபொருட்பன்மொழி[1] இவ்வுயி

1. ''கழிபெருங்காரிகை' என்பதில் பெருங்காரிகை—பேரழகு என்னும் பொருளதாய் அழகின் பெருமையைக் குறிக்க, கழி என்னும் உரிச்சொல் உள்ளது சிறத்தலாகி பேரழகு சிறத்தலைக் குறிக்கிறது. ஆதலால் ஒருபொருட்பன்மொழியாயிற்று.

ழகது[2] சிறப்புணர நின்றது. இவ்வழகு அதற்கு[3] உறுப்பாகலின், உண்மையான் என நிலைபேறும் கூறினார். இன்மை வெருவந்த செய்தலாகலின் அவர்நாட்டு வாழ்வார் புலியையடைந்த புல்வாயினம் போன்று ஏமஞ்சாராமைபற்றி, இவ்வுலகு உண்டு என்றார்.

ஊ) **கவிராசர்:** கண்ணோட்ட மென்று சொல்லப்படுகின்ற தயை அரசரிடத்திலே உண்டானபடியினாலே, இந்தவுலகம் சுகமாய் இருக்கின்றது எ—று.

ஏ) **பழைய 2:** கண்ணோட்டம் என்று சொல்கின்ற மிகுத்த பெரிய அழகு வேந்தரிடத்து உண்டாகலான் இவ்வுலகம் உண்டாகா நின்றது

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிப்பெருமாளின் சிந்தனை இவ்வதிகாரத்துக் கண்ணோட்டம் அரசற்கும் வேண்டும் என்பது இயையுமா என்ற ஐயத்தை எழுப்பியிருக்கிறது. 'கண்ணோட்டம் என்றது முறை செய்வதற்கு ஈண்டுக் குடிகளில் குற்றமே செய்யாதார் சிலர் கூட இருத்தல் இயலாது. எல்லாருக்கும் தண்டனை தந்தால் உலகமே இல்லையாம். ஆதலால் மன்னிக்க வேண்டும்' என அமைதி கூறுவர். ஆனால் **வள்ளுவர்** ''கண்ணோட்டம் என்னும் காரிகை'' ''கண்ணோட்டம் இல்லாத கண்'' என்ற குறட்பாக்களில் கண்ணோட்டம் கண்ணின் பண்பாகச் சொல்லப்படுகின்றனவேயன்றிச் செயலாகக் கூறப்படவில்லை. அன்றியும் கருமஞ் சிதையாமலும் அளவினானும் கண்ணோட்டம் வேண்டும் என்றும் கூறுவன கண்ணோட்டத்திற்கும் எல்லை குறிப்பன. ஆதலால் செங்கோன்மையிற் கூறியது நீதிக்கு. இங்குக் கூறியது அளவோடு—தன்னரசாகிய காரியத்திற்குக் கேடு வராமல், அதாவது கொடுங்கோலனாகாமல் செய்க என்றதாம். அரசனுக்குப் பழக்கம் இல்லாதார் சிலராயும் உடையார் பலராயும் இருத்தல் இயல்பு. பழகியாரிடத்துக் கண்ணோடின் செங்கோன்மைக்கு இடம் இல்லையாய் விடும் ஆதலின், சிலருக்கேனும் கண்ணோட நேரின் அளவிற்செய்க என விலக்களித்ததேயன்றி இவ்வதிகாரம் விதித்ததாகாமையைத்தெளிக.

காரிகை—அழகு என்ற பொருளே ஏற்புடையது. ''இவ்வுலகு உண்டு'' என்பதனை ஏற்று, 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்ற புறப்பாட்டின் பகுதி தோன்றியிருப்பதாலும், 'பண்புடையார்ப்பட்டுண்

---

2. இவ்வுயிர் அழகது—இவ்வரசனது உயிரின் அழகான கண்ணோட்டத்தினது என்க.
3. அதற்கு — அரசருயிர்க்கு.

டுலகம்' (996) என இவரே கூறுதலானும் இவ்வுலகம் அறியாது இருந்து வருகிறது என்ற உரையே சிறந்தது. உலக இன்பம் முதலியன ஏலா உரைகள்.

வரத. 'கண்+நோட்டம்—கண்+ஓட்டம் எனப் பிரித்துப் பிறரைத் தானறிவதற்கும், தன்னைப் பிறரறிவதற்கும் துணையாயிருப்பது' என்பர். இக்கருத்து வலிந்து கோடலாகும்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கண்ணோட்டம் என்னும்:

பயின்றவர் தம்மால் கூறப் பட்டன மறுக்க மாட்டா
இயன்றநற் குணம்கண் ணோட்டம் இத்தகு கண்ணோட் டந்தாம்
முயன்றுசெய் முறைக்குக் கேடு முன்னுநர் மாட்டுக் கூடா
நயந்தப நினக்குத் தீங்கு நாட்டினார் தம்பால் நாட்டல்

—விநா.அரசி., 95.

58.2. கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார் உண்மை நிலக்குப் பொறை. (நிஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: உலகநடை கண்ணோட்டத்தின் கண்ணது; ஆதலால், அஃது இல்லாதார் உளராயிருத்தல் நிலத்துக்குப் பாரமாம் எ—று.

இது கண்ணோட்டமில்லாதாரை நிலம் பொறாது என்றது.

ஆ) பரிதி.: கிருபைக்கண் ஆகிய மன்னவன்[1] பூமிபாரஞ்சுமந்தவன்; கொடுங்கோல் மன்னவன் பூமிக்குப் பாரம் எ—று.

இ) பரிப்.: உலக நடை கண்ணோட்டத்தின் கண்ணது ஆதலான், அஃது இல்லாதார் உளராதல் இந்த நிலத்துக்குப் பாரம் ஆம் எ—று.

இது கண்ணோட்டம் இல்லாதாரை நிலம் பொறாது என்றது.

ஈ) காளி.: கீழ்ச் சொன்ன பரிசே[2] கண்ணோட்டத்தின்கண்ணே உள்ளது உலகத்து உயிர்களது நடை: ஆதலான் மற்று அதனைத்

1. கிருபைக்கண் ஆகிய மன்னன்—கருணையோடு கூடிய அரசன்
2. கீழ்ச் சொன்னபரிசே—கீழ்ச் சொன்னபடி

தங்கண் இல்லாதோர் உளராயிருத்தல் நிலத்துக்குப் பாரம். எனவே இங்குள்ள உயிர்கட்குப் பெரியதோர் கிலேசபாரம்[3] என்பது பொருள் எ—று.

உ) *பரிமேல்.*: உலகநடை கண்ணோட்டத்தின்கண்ணே நிகழ்வது, ஆகலான், அக்கண்ணோட்டம் இல்லாதார் உளராதல் இந்நிலத்திற்குப் பாரமாதற்கே, பிறிதொன்றற்கு அன்று.

உலகநடையாவது ஒப்புரவுசெய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தல் என்றுஇவைமுதலாயின. அவை[4] நிகழாமையால் தமக்கும் பிறர்க்கும் பயன்படார் என்பதுபற்றி, நிலக்குப்பொறை என்றார். ஆதற்கு என்பது சொல்லெச்சம்[5]. இவை இரண்டுபாட்டானும் கண்ணோட்டத்தது சிறப்புக்கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: உலக இயற்கை கண்ணோட்டத்தினாலேயுண்டாம் ஆகலான், அந்தக் கண்ணோட்டமில்லாதவர்கள் உண்டாகிறது பூமிக்குப் பாரம் எ—று.

ஏ) *பழைய* 2: உலகநடை கண்ணோட்டத்தினால் நடப்பதாகலின், அக்கண்ணோட்டம் இல்லாதார் சாவாமலிருப்பது நிலத்திற்குப் பாரமாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'உலகியல்'

'உலகநடை' *மணக்.*, *பரிப்.*, 'உலகத்து உயிர்களது நடை' *காளி.*; 'உலகநடை எனப் பொதுமையிற் கூறிய *மணக்குடவ ருரைக்கு* விளக்கமாகக் *காளிங்கர்* 'உலகத்து உயிர்களது நடை' என மக்களை மட்டும் அன்றி ஏனையவற்றையும் தழுவினர். அதற்கு விளக்கமாகப் *பரிமேலழகரும்* பிறரும் 'மக்களுக்குச் செய்யும் ஒப்புரவு செய்தலையும், ஏனைய உயிர்கட்குரிய புறந்தருதலையும் பிழைத்தன பொறுத்தலையும்' என விரித்தோதினர். இவர் 'ஒப்புரவு அறிதல்—உலகநடையினை அறிந்து செய்தல்' என்று உரை கண்டவர்; பாதுகாக்கப்படுதலும், தவறிழைத்தாற் பொறுத்தலுமாகிய உலக நடைகள் மக்களுக்கும் ஏனைய உயிர்கட்கும் பொதுவானவை. *கவிராசர்* உலகியல்—உலக இயற்கை' என்பர்.

---

3. கிலேச பாரம்—துன்பச் சுமை
4. அவை—ஒப்புரவு செய்தல் முதலாயின.
5. பொறை என்பதன்பின் 'ஆதற்கு' என்ற சொல் எஞ்சி நின்றமையின் சொல்லெச்சம் என்றார்.

தேவநேயர். 'உள்ளது—நடைபெற்று வருவது. உலகியல்—ஒப்புர வொழுகல்' என்பர்.

வரத. 'கண்ணோட்டத்து உள்ளது உலகியல்; அஃதிலார் நிலக்குப் பொறை; உண்மை' எனக் கண்ணழித்து, 'கண்ணோட்டத்தால் அரசன் பலராதரவைப் பெறுகிறான் அவன்தான் உலகத்தைத் தாங்க முடியும். அங்ஙனமன்றாயின் அவன் உலகத்திற்குச் சுமையா கிறான்' எனப்பொருள் கண்டு 'கண்ணினால் நோட்டம் அறிவதில் உலகம் உள்ளது' என்ற கருத்தைப் புகுத்த முயற்சிக்கிறார். இதில் கண்+நோட்டம் சொற் சிதைவும் அதன் பொருளும் அத்துணைச் சிறப்பின அல்ல.

சி.இ. உலகியல்—உலக இயக்கம். அஃதிலார் உண்மை—அப்பண்பு இல்லார் இருப்ப' என்பர்.

குழந்தை 'உலக நடை கண்ணோட்டத்தால் நடைபெறுகிறது' என்பர்.

கா.சு. 'உயர்ந்தாரியல்பு கண்ணோட்டத்தின் சார்பாக உள்ளது' என்பர்.

இராம. 'உலக வாழ்வு நடந்து வருவது தாட்சண்யத்தில் அடங்கி யுள்ளது' என்பர். இவற்றுள் 'கண்ணோட்டத்தான்' என மூன்றனுருபு விரித்து ஏதுப் பொருளதாக்குதல் சிறப்பு. ஒப்புரவறிதலை மட்டும் கருதாது ஒப்புரவறிதல் புறந்தருதல் முதலாகப் பரிமேலழகர் தந்த அனைத்தும் கோடல் சிறப்புடையது. ஒப்புரவு செய்தல் கண்ணோட்ட விளைவுகளுள், ஒன்றேயன்றி அதுமட்டும் கண்ணோட்டமாகாமை யறிக.

58.3. பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண். (நெஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பண் என்ன பயனுடைத்தாம் பாடலொடு பொருந்தா தாயின்; அதுபோலக் கண் என்ன பயனுடைத்தாம் கண்ணோட்ட மிலலாத காலத்து எ—று.

இது பிறர்க்கும் இன்பம் பயவாது என்றது.

ஆ) பரிதி.: சங்கீத லட்சணம் இல்லாத பாட்டு பாட்டாமோ? அது போல, கண்ணோட்டம் இல்லாத கண் புண்ணோடு ஒக்கும் எ—று.

இ) *பரிப்.*: பண் என்ன பயன் உடைத்து ஆம்? பாடலொடு பொருந்தாது ஆயின், அதுபோலக் கண் என்ன பயன் உடைத்து ஆம் கண்ணோட்டம் இல்லாத காலத்து? எ—று.

பாடல் ஆவது பாடுதல் தொழில். அஃதாவது மந்தம், உச்சம், சமம், குடிலம்[1] முதலாயின. அதனொடு பொருத்தம் இன்மையாவது எடுத்துக் கொண்டபண், இவ்விடங்களில் ஒவ்வாது நின்று கேட்டாற்கு இன்பம் பயவாமை. இது பிறர்க்கு இன்பம் பயவாது என்றது.

ஈ) *காளி.*: இலக்கண முறையான் இசை அறியாது மயக்க மாந்தர் தமது இயற்கைச் செவியினால் கேட்டு மற்று இது மிகவும் இனியது ஓர் பண் என்றார் ஆயினும், அதனை யாம் பண் என்று சொல்லோம்; என்னையோ எனின் பாடல் தூக்காகிய இசைத்தொடர்பின்கண் தான் வந்துமேவி நின்று அவ்விசை நூல் யாப்பிற்கு இனிது இயைபு இன்றி நிற்குமாயின்; மற்று அதுபோல ஈண்டு நுண்ணுணர்வில்லோர் கண் என்றாராயினும் அதனைக் கண்என்று சொல்லோம், கண்ணோட்டம் இல்லாத கண்ணினை எ—று.

உ) *பரிமேல்.*: பண் என்ன பயத்ததாம் பாடல் தொழிலோடு பொருத்தம் இன்றாயின் அதுபோலக் கண் என்ன பயத்ததாம் கண்ணோட்டம் இல்லாத விடத்து.

பண் கண் என்பன சாதிப்பெயர், பண்களாவன[2] பாலையாழ் முதலிய நூற்று மூன்று. பாடல்தொழில்களாவன யாழின்கண் வார்தல்[3]

---

1. 5—வது அடிக்குறிப்பைக் காண்க.

2. செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை. மேற்செம்பாலை யென்னும் இவ்வேழு பெரும்பாலையினையும் முதலடுத்து நூற்றுமூன்று பண்ணும் பிறக்கும். அவற்றுள் செம்பாலையுட் பிறக்கும் பண்கள், பாலையாழ், நாகராகம், ஆகரி, தோடி, கௌடி, காந்தாரம், செந்துருத்தி, உதயகிரி யெனவிவை. பிறவும் விரிப்பின் உரைபெருகுமாதலின் அவற்றை வந்தவழிக்கண்டு கொள்க'', ''நாற்பெரும் பண்ணுஞ் சாதி நான்கும் பாற்படு திறனும் பண்ணெனப்படுமே, என்றார்'' என்றும். ''பன்னிருபாலையின் உரு தொண்ணூற்றொன்றும் பன்னிரண்டு மாய்ப் பண்கள் நூற்றுமூன்றாதற்குக் காரணமாமெனக் கொள்க'' என்றும், 'பெருந்தான மெட்டினும் கிரியைகளெட்டினும் பண்ணிப் படுத்தலாற் பண் என்று பெயராயிற்று'' என்றும் சிலப்பதிகார வுரையில் அடியார்க்கு நல்லார் கூறியிருக்கின்றார்.

3. ''வார்தலென்பது சுட்டுவிரற் செய்தொழில்; வடித்தலென்பது சுட்டுவிரலும் பெருவிரலுங் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல்; உந்தலென்பது நரம்புகளை உந்தி வலிவிற்பட்டதும் மெலிவிற்பட்டதும் நிரல்பட்டதும் நிரலிழிபட்டதும் என்றறிதல்; உறழ்த்தலென்பது ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் ஆராய்தல்; உருட்டலென்பது இடக்கைச் சுட்டுவிரல் தானேயுருட்டலும், வலக்கைச் சுட்டுவிரல் தானேயுருட்டலும் சுட்டொடு பெருவிரல் கூட்டியுருட்டலும், இருபெருவிரலும் இயைந்துடனுருட்டலும் என வரும். 'தெருட்டலென்பது செப்புங்காலை யுருட்டி வருவதொன்றெ மற்ற, வொன்றன் பாட்டீமடையொன்ற நோக்கின், வல்லோராய்ந்த நூலே யாயினும். வல்லோர் பயிற்றுங் கட்டுரையாயினும், பாட்டொழிந் துலகினி னொழிந்த செய்கையும், வேட்டது கொண்டு விதியுறநாடி, எனவரும்; இவை இசைத்தமிழ்ப்பதினாறு படலத்துட் கரணவோத்துட் காண்க.'' ''பட்டடையென்பது நரம்புகளில் இளிக்குப் பெயர்; என்னை? எல்லாப் பண்ணிற்கும் அடிமனையாதலின்'' என்றனர் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர்.

முதலிய எட்டும், பண்ணல்[4] முதலிய எட்டும், மிடற்றின்கண் எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பிதம் குடிலம்[5] என்னும் ஐந்தும், பெருவண்ணம் இடைவண்ணம் வனப்புவண்ணம் முதலிய வண்ணங்கள்[6] எழுபத்தாறுமாம். இவற்றோடு இயையாதவழிப் பண்ணால் பயனில்லாதவாறு போலக் கண்ணோட்டத்து இயையாதவழிக் கண்ணாற் பயனில்லை[7] என்பதாம். கண் சென்றவழி நிகழ்தல் பற்றி அதனை இடமாக்கினார். இறுதிக்கண் கண் என்பதனைக் ''கண்ணகன் ஞாலம்''[8] என்புழிப்போலக் கொள்க.

காரி.: இறுதியில் கண் என்பது 'கண்ணகன் ஞாலம்'[9] போல முற்றிடப் பொருள் பெற்று ஏழாம்வேற்றுமையாகாமை அறிக 'வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது'[10] என்பது பற்றி.

ஊ) *கவிராசர்*: இராகம் பாடுகிறவன் பாடுகிறதினுடைய லட்சணங்களை அறியாவிட்டால், அந்த ராகத்தால் என்ன பலன் உண்டாம். அதுபோல, கண்ணோட்டமில்லாத கண்கள் என்ன பயனைச் செய்யும் எ—ம்.

4, ''பண்ணல் பரிவட் டணையா ராய்தல், தைவரல், கண்ணிய செலவு விளையாட்டு கையூழ், நண்ணிய குறும்போக்கு என்ற வெட்டும்'', பண்ணல் பாட நினைத்தபண்ணுக்கு இணை, கிளை, பகை, நட்பான நரம்புகள் பெயருந்தன்மை மாத்திரையறிந்து வீக்குதல். பரிவட்டணை-அவ்வீக்கினநரம்பை அகவிரலாலும் புறவிரலாலும் கரணஞ் செய்து தடவிப் பார்த்தல். ஆராய்தல் ஆரோகண அவரோகண வகையால் இசையைத் தெரிதல். அது சுருதி யேற்றுதல். தைவரல், ஆளத்தியிலே நிரம்பப்பாடுதல் செலவு: பாடநினைத்த வண்ணத்திற் சந்தத்தை விடுதல் விளையாட்டு. வண்ணத்திற் செய்த பாடலெல்லாம் இன்பமாகப்பாடுதல் கையூழ். குடகச் செலவுந் துள்ளற்செலவுமாகப் பாடுதல் குறும் போக்கு'' என்று நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணி— காந்தருவதத்தையாரிலம்பகம் 'சிலைத்தொழில்'' என்னுஞ் செய்யுளின் விசேடவுரையிற் கூறினர்.

5. 'எடுத்தல்பாட்டுச்சமமாம் எண்படுத்தல் மந்தம். தடுத்து நலிதல் சமமாம்—தொடுத்தியன்ற, தள்ளாத கம்பிதந் தானடுக்கல் நற்குடிலம், உள்வாங்கிப் பாடலுணர்' என்பதிங் கறியத்தக்கதாம்.

6. ''சொல்வகை நான்கு வகைப்படும்; சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என; சுண்ணம் நான் கடியான் வருவது, சுரிதகம் எட்டடியான் வருவது. வண்ணம் நானான் கடியான் வருவது, வரிதகம் முப்பத்திரண்டடியான் வருவது; என்னை? சுண்ண நான்கடி சுரிதகமெட்டடி, வண்ணநானான்கு வரிதக மெண்ணான்கென், றெண்ணிய வடித்தொகை யெய்தவும் பெறுமே' என்றாராகலின். வண்ணம் ஒரு வகையான் மூன்று வகைப்படும்; பெருவண்ணம், இடைவண்ணம், வனப்புவண்ணமென; அவற்றுள், பெருவண்ணம் ஆறாய்வரும்; இடைவண்ணம் இருபத்தொன்றாய்வரும் வனப்புவண்ணம் நாற்பத் தொன்பதாய் வரும்'' என்று அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் கூறினர்.

7. ''ஒன்று நரம்பென்கோ வொன்றாத வென்பென்கோ, இன்றசை தானென்கோ யாதென்கோ — மென்றொடையாழ். பண்ணோட்டு மின்சொற் பணைத் தோளாய் சேர்ந்தவர்பாற், கண்ணோட்டமில்லாத கண்'' என்று பாரதவெண்பா கூறுகின்றது.

8. திரிகடுகம், கடவுள் வாழ்த்து.

9 ''

10. தொல். சொல். வினை 1,

ஏ பழைய 2: பண்ணினாலென்ன பயன் பாட்டுப் பிழையாக விருக்கில்; அப்படிப் போல கண்ணினாலென்னபயன் கண்ணோட்டம் இல்லாத விடத்து?

மல்லர்: என்பது பண் என்கிறது பாடல் தொழிலோடே கூடாதே போனால் என்ன செய்யும் கண் என்கிறது கிருபாகிடாஷசமில்லாதே போனால் என்ன செய்யும் என்றவாறு.

பண் என்கிறதாவது பாலையாழ் முதலக் கொண்டு மத்த வாச் சியங்களுடைய தொகுப்பு. பாடல் என்கிறதாவது அந்த வாச்சியங் களில் வரும் வெவ்வேறே வண்ணங்களை அறிகிற சாஸ்திரம். இப் படிப்பட்ட சாஸ்திரம் அறியாதவன் கையிலே அந்த வாச்சியங்கள் இருந்தால் அதுகள் காதுக்கு இன்பஞ்செய்யாது அப்படிப்போல இல் லாதவன் முகத்திலே இருக்கிற கண்கள் அழகாயிராது என்பது கருத்து.

என்—என்ன; இயைபு–பொருத்தம்; இன்று இல்லை; ஏல்– ஆனால்; கண்ணோட்டம்–இரக்கம்; கண்-முதல் விசை கண்ணாமே; இரண்டாம்விசை–இடமாகும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்.

மணக்., 'பண்–இசை. அது பாடலொடு பொருந்தி வருதல் வேண்டும். அங்ஙனம் பொருந்தி வராதாயின் பயனின்றாம்' என்று உவமையை விளக்கினர். பண்ணும் பாடலும் பருந்தும் அதன் நிழலும் போலப் பிரிக்க இயலாதவை. அங்ஙனமாகிய இசை பாடலுக்கு இயைபிலதாயின் கேட்கயினிமை பயவாது என்பதாம்.

பாடல் என்பது கவிதையையா? பாடுதல் தொழிலையா? பண் ணோடு இயைபுடையது எது? என்ற ஐயம் எழுவதியல்பு. அதனை விளக்கப் *பரிப்பெருமாள்*, 'பாடலாவது பாடுதல் தொழில் அது மந்த முதலாக நால்வகைப்படும். இயைபின்மையாவது எடுத்த பண் பாடு கின்ற பாடல் தொழிலுக்கு இயையாதிருத்தல். அதாவது இனிமை பயவாமை' என விளக்கினர் இதனையடியாகக் கொண்டு *பரிமே லழகர்*, பாடல் தொழில் வகைகளை விரித்துக் கூறுவர். ஆகவே *பரிப்பெருமாள்* தந்தசிறு விளக்கம் *பரிமேலழகர்க்குப்* பெருந்துணையா யிற்று. *சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார்* உரை உதவி செய்தது.

பரிதி., உரை 'இலக்கண இசையோடு அமையாத பாட்டு பாட்டா மோ' என்கின்றது. இவர் 'பண்-சங்கீத இலக்கணம்' எனக் கொண்

டனர். வள்ளுவப் போக்கு பாட்டோடு ஒட்டாத இசை இசையாகுமோ என்பது. அதனை இங்ஙனம் மாற்றுவதாலான பயனை அறியக்கூட வில்லை.

காளிங்கர். இசையிலக்கணமே யறியாதான் ஒருவன் பாட்டைக் கேட்டு இசை இனிமையானது என்றால் அதனைப் பண் என்று நாம் ஒப்பமாட்டோம். அது போல, கண்ணோட்டம் இன்றேல் அதனைக் கண் என்றும் கருதோம்' எனக் கருத்துக் கொணருவர். இசையின் இலக்கண அறிவுள்ளவன் பாடலிசை இனிமையானது என்றால்தான் ஏற்றுக் கொள்வது போலக்கண்ணோட்டம் உள்ள கண்ணையேகண் என்போம் என்றாராம். 'என்னாம்' என்பது இவருரையில் எதிர்மறைத் தன்மைப் பன்மை வினைமுற்று. ஏனையோர் உரையில் வினாவோடு கூடிய செய்யும் என் வினைமுற்று.

மு.ரா.அரு., தேவநேயர், சாமி. சிதம்., கா.சு. போன்றவர்கள் *பரிமேலழகரை* ஒட்டியுரைப்பர். *குழந்தை*, 'இசை பாட்டோடு பொருந்தாவிட்டால் பயனின்றாம்' எனப் பொதுவகையில் உரைப்பர். *சி.இ.*, பண்பாடற் பொருளுக்குப் பொருத்தமில்லையானாற் பண்பயனில்லை' என்பர்.

இங்ஙனம் *பரிப்பெருமாள்*, *பரிமேலழகர்* தந்த விளக்கத்தை உள்ளீடாகக் கொண்டு பலர் உரைப்பதாலேயே அதன் தனித்தன்மை உணரப் பெறும். பாடற் பொருளுக்கும் இசைக்கும் இயைபு இருக்க வேண்டும் என்ற இலக்குவனார் கருத்து புது நோக்குடையது.

இராம., 'பண்' என்பதனையும் 'பாட்டு' எனக்கொண்டு 'பாடுதற்கு இசையா விட்டால் பாட்டு எதற்கு' என்பர். இதற்கு விளக்கமாகக் 'கேட்பதற்கு இனிமையாக இருக்கும்படிப் பதங்களை நீட்டவும் குறுக்கவும் நிரவல் செய்யவும் இராக தாளங்களுக்கு இசையாத பாட்டு பயனற்றது' என்பர்.

ஜி.வரத., 'இசை மட்டும் எல்லார்க்கும் இன்பந் தராது; பாட்டோடு பொருந்தினால் தான் இன்பந்தரும்' என்பர். இவ்வுரை என்ன கருதுகிறது என்று அறியக் கூடவில்லை. 'சுரம் பாடுதல் வெற்றிசை தாம் அது இன்பம் பயப்பதை உலகம் அறியும். சாகித்தியமும் சுரமும் இணைந்திருப்பது பொன்மலர் நாற்றமும் உடையதானாற் போலும். ஆகவே இசை மட்டும் இன்பந் தராது' என்பது எண்ணுதற்குரியதாம் என்க.

இவற்றுள்ளும் 'பாடல்–பாடுதல்; தொழிற்பெயர். உயர்த்தும்

தாழ்த்தும் வலிந்தும் மெலிந்தும் பல்லாற்றான் பாடுந்தொழிலுக்குப் பொருந்தாத இசையாற் பயனின்று அதுபோலப் பழகியவர்களைக் கண்ணுடன் பரிவு காட்டாத கண் பயனின்று' என்ற உரையே சிறந்தது.

'இல்லாத கண்' என்பதிலுள்ள 'கண்' என்பதனைக் 'காலத்து' எனக் காலப் பொருளாகக் கருதினர் மணக்குடவர்.

பரிதி., 'இல்லாத கண்' என்பதிற் கண்ணைச் சினைப் பெயராகவே கொண்டு, 'கண் என்னாம்' என்றவிடத்துக் 'கண் என்று சொல்ல மாட்டேம் (575) புண் என்பேம்' என்றனர். இவ்வுரை பின் வரும் 575ன் பொருளைக் கருதுதலால் அது கூறியது கூறலாமே என்று கருதிய மணக்குடவர் காலம் இடமானதாகவுரைத்தனர். பரிமேலழகர் இடப்பெயராக்கினர்.

காளிங்கரும் சினைப் பெயராகவே கொண்டனர். ஆதலால் சினைப்பெயராகவே கொள்ளினும் தவறில்லையாதலால் வேண்டியவாறு கொள்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கண்ணோட்டமில்லாத கண்:

கண்ணருள்செய் கண்ண .... —கம்பராமா. ,2863

யாவர் வரினும் எதிரேற்கும் தெய்வமடப்
பாவை அகத்திருந்தும் பாழன்றே — மேவினரைத்
தண்ணார் காலத்தால் தள்ளாவாய்த் தாமுமொரு
கண்ணாகி நிற்கின்ற கண் —பா.வெ

வெண்மை கருமை விரிசெம்மை நீண்மைவனப் (பு)
ஒண்மை இவற்றொன் றொழித்தேனும் — கண்மையினை
வையாது மாந்தர் மயில்போல் எனத்தனது
கையால் இறைவகுத்தான் கண் —பா.வெ

பண் பாடற்கு இயைதல்:

பாடலொ டியைந்த பண்ணின் சுவைபருகி —யசோதர.88

ஒன்று நரம்பென்கோ வொன்றாத வென்பென்கோ
இன்றசை தானென்கோ யாதென்கோ — மென்றொடையாழ்
பண்ணோட்டு மின்சொற் பணைத்தோளாய் சேர்ந்தவர்பாற்
கண்ணோட்ட மில்லாத கண் —பாரதவெண்பா

58.4. உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால் கண்ணோட்டம் இல்லாத கண். (நுஎசை)

உரைப்பகுதி:

அ) மணக்.: அவரவர் வாழ்வு காரணமாகக் கண்ணோடுதலைச் செய்யாத கண்கள், முகத்தின்கண் உள்ளனபோன்று இருப்பதன்றி வேறு என்ன பயனைச் செய்யும் எ—று.

அளவு என்றது தகுதியை. இது தனக்கும் பயன்படாது என்றது.

ஆ) பரிதி.: முகத்திலே இரண்டுகண் என்றுஇருந்தால் ஆரளவிலும் கிருபைப்பார்வை[1] இல்லாதபோது கண்ணால் ஏது பயன் எ—று.

இ) பரிப்.: அவரவர் வாழ்வு காரணமாகக் கண்ணோடுதலைச் செய்யாத கண்கள் முகத்து உளபோன்று தனக்கு என்ன பயனைத் தரும் எ—று.

அளவு என்றது தகுதியை. இது தனக்கும் பயன்படாது என்றது.

ஈ) காளி.: முகத்து உளபோலத் தோன்றி அங்ஙனம் வரும் பொருட்களைக் கண்டதேயாயினும் அதனால் என்ன பயன்? மற்று அவர்க்கு இரங்கவேண்டும் அளவினால் குறிக்கொண்டு கண்ணோடுவது ஓர் கண்ணோட்டம் இல்லாத கண்ணானது எ—று.

உ) பரிமேல்.: கண்டார்க்கு முகத்தின்கண் உளபோல் தோன்றலல்லது வேறென்ன பயனைச்செய்யும் அளவிறவாத கண்ணோடுதலை உடையவல்லாத கண்கள்.

தோன்றலல்லது என்னுஞ்சொற்கள் அவாய்நிலையான்[2] வந்தன. கழிகண்ணோட்டத்தின்[3] நீக்குதற்கு 'அளவினான்' என்றார். ஒரு பயனையும் செய்யா என்பது குறிப்பெச்சம்.[4]

---

1. கிருபைப்பார்வை— கருணைநோக்கு.
2. அவாய்நிலை—தன்னை முடிப்பதொரு சொல்இன்மையால் முடிவுபெறாது முடிக்குஞ் சொல்லை அவாவி நிற்பது. ஈண்டு 'உளபோல்' என்பது 'உளபோல் தோன்றுதலல்லது' என்னுஞ்சொற்களை வேண்டிநிற்றலான் அவாய்நிலை எனப்பட்டது.
3. கழிகண்ணோட்டம்—அளவிற்கு மிஞ்சியதாட்சண்யம்.
4. குறிப்பெச்சம்—குறிப்பானுணருமாறு குறைந்து நிற்கும் பொருள். 'எவன் செய்யும் என்புழி ஒருபயனையுஞ் செய்யாது என்பது குறிப்பானுணருமாறு எஞ்சி நிற்றல்' காண்க.

ஊ) கவிராசர்: கண்டவர்களுக்கு முகத்திலே கண்கள் இருக்கிறாப் போலே காண்பிக்கிறதல்லாமல் வேறொன்றில்லை. அளவிறவாத கண்ணோட்டமில்லாத கண்கள் ஒரு பலனையும் செய்யமாட்டா எ—று

ஏ) பழைய 2: கண்டார்க்கு முகத்திலுள்ளது போலத் தோன்றல் அல்லது வேறு என்ன பயனைச் செய்யும் அவரவர் தன்மை யறிந்து கண்ணோட்டஞ் செய்யாத கண்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''அளவினால் கண்ணோட்டம் இல்லாத கண்''

மணக். 'அளவு-தகுதி. பழகியார் தகுதி-ஆளும் அரசின் தகுதி' என்பர். கண்ணோட்டம் பழகியவர் ததுதிக்கேற்பச் செய்ய வேண்டும் என்பது இவர் கருத்து.

பரிதி. 'யார் அளவிலும்' எனப் பழகியவர் ததுதியையே கருதுகிறார் எனலாம்.

காளி. 'இரங்க வேண்டும் அளவிற்கு' என்பர். 'அளவு கடவாத கண்ணோடுதல்' என்பர்.

பரிமேலழகர் 'கழிகண்ணோட்டம் கூடாது' எனவும் கருதுவர். தேவ நேயர், சபாபதி, இங்ஙனமே.

இராம, 'அளந்தறியக்கூடிய தன்மையோடு சுற்றும்முற்றும் பார்த்து நிலைமையை ஆய்ந்தறிய இயலாத கண்கள்' என்பர். ''வேண்டிய அளவு கண்ணோட்டம் இல்லாத கண்'' என்பர் கா.சு.; 'அளவு கடவாத வகையில் கண்ணோட்டம் செய்யாத கண்'' சி, இ; குழந்தை; 'அளவு கடவாமை' மு.கோ.; 'அன்பைத் தகுதியளவறிந்து வெளிப் படுத்தாத கண்' வரத.

இங்ஙனம், உரையாசிரியர்கள், தகுதி-குற்றத்தகுதி—குற்றஞ் செய்தவன் தகுதி—தன் தகுதி இவற்றை அறிந்து மூவகைத்தகுதிகளை யும் தனித்தனியே கருதுதலைக் காண்க. இந்த மூன்றாலும் வரை யறுக்கப் பெறுவது கண்ணோட்டம் எவ்வளவு செய்யலாம். எவ்வளவு செய்தால் உலகம் ஒப்பும் என்பதை அறிந்து செய்தலேயாதலின் கண்ணோட்டத்தின்தகுதியறிந்து எனல்பொருத்தமும் சிறந்ததுமாகும்

58.5. கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல் புண்ணென் றுணரப் படும். (நெஞ)

உரைப்பகுதி:

அ) மணக்.: கண்ணிற்கு அழகு செய்யும் அணிகலமாவது கண் ணோட்டமுடைமை; அஃதில்லையாயின். அவை புண் என்று அறியப் படும் எ—று.

இது கண்ணோட்டமில்லாத கண்ணிற்குப் பெயர் கூறிற்று.

ஆ) பரிதி.: கண்ணுக்கு ஆபரணம் கிருபை; அது அல்லது முகத் தில் இரண்டு புண் எ—று.

இ) பரிப்.: கண்ணிற்கு அழகு செய்யும் அணிகலன் ஆவது கண்ணோட்டம் உடைமை: அஃது இல்லையாயின் அவையிற்றைப் புண் என்று அறியப்படும். எ—று.

இது கண்ணோட்டம் இல்லாத கண்ணுக்குப் பெயர் கூறிற்று.

ஈ) காளி.: எல்லா உறுப்பிற்கும் அணிகலம் அணியலாம். மற்றுக் கண்ணுக்கு அணிவது ஓர் அணிகலன் இல்லை என்று இங்ஙனம் கருதற்க. என்னை எனின், கண்ணுக்கு அணியும் கலனாவது கண் ணோட்டம் ஆகலான். அஃது ஒருவர்க்கு இல்லை எனின் மற்று அது வெறும் புண் என்றே அறிய அடுக்கும்[1] எ—று.

உ) பரிமேல்.: ஒருவன் கண்ணிற்கு அணியும் கலமாவது கண் ணோட்டம், அக்கலம்[2] இல்லையாயின் அஃது அறிவுடையாரால் புண் என்று அறியப்படும்.

வேறு அணிகலம் இன்மையின் கண்ணிற்கு அணிகலம் என்றும் கண்ணாய்த் தோன்றினும் நோய்களானும் புலன்பற்றலானும்[2] துயர் விளைத்தல்[3] நோக்கிப் ''புண்என்று உணரப்படும்'' என்றும் கூறினார். இவை மூன்றுபாட்டானும் ஓடாது நின்ற கண்ணின்குற்றம் கூறப்பட்டது.

---

1. அடுக்கும் —பொருந்தும்,
1. அக்கலம் — கண்ணோட்டமாகிய அந்த அணிகலன்.
2. புலன்பற்றல் — விஷயங்களையறிதல். 'புனல்பற்றலானும்' என்பது பாடமாயின், கண்ணீர் ததும்புதலானும் என்க புலன்களாவன உருவம், சையோகம். வியாகம் எண்முதலியவற்றைஅறிதல்.
3. துயர்விளைத்தலாவது கண்ணோட்டமில்லாதகண் கண்நோயானும், புலன்களைப் பற்றி வருத்துவதாலும் தன்னையுடையவனுக்கு துன்பத்தையுண்டாக்குதல்.

ஊ) கவிராசர்: ஒருவன் கண்ணுக்கு ஆபரணமாவது கண்ணோட்டம். அந்தக் கண்ணோட்டமில்லாவிட்டால், அந்தக் கண்கள் அறிவுடையவர்களாலே புண்ணென்று சொல்லப்படும் எ—று-

ஏ) பழைய 2: ஒருவன் கண்ணிற்கு அணிகலமாவது கண்ணோட்டம். அந்த அணிகலம் இல்லையாயின் அது கண்ணன்று. புண்ணென்று அறியவேண்டும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

கருத்து மாற்றம் பெரிதும் இல்லாதகுறள் இது. ஆயினும், அவ்வுரைகளில் 'கண்ணோட்டம்-கண்ணின் வழியாகப் புலப்படும் அன்பு' என்று காணப்படுவதால் கண்ணோட்டம் பண்புப்பெயராகிறது. அணிகலம் பொருட்பெயர். பண்புக்குப் பண்பையும், பொருளுக்குப் பொருளையும் உவமித்தலே மரபு என்பதைச் சிந்தித்த தேவநேயர் 'அணிகலம்-அணிகலத்தான் அழகுபோல அழகு செய்வது கண்ணோட்டம்' என்றனர். அணி-அணிகலன் அன்று; அதனால் ஆம் அழகு. பண்பைப் பண்பிற்கே உவமித்ததாகக் காட்டுகிறார்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம் —திரி. 52

சண்வனப்புக் கண்ணோட்டம் —சிறுபஞ்ச. 9

பண்ணுக்கு வாம்பரித்தேர் ஆதவனும் பணிந்துபசு பதியை நோக்கி
மண்ணுக்குத் தவம்புரியும் தனஞ்சயற்குக் கோடையினும் மதியம்
போன்றான்.

எண்ணுக்கு வரும்புவனம் யாவினுக்கும் கண்ணாவான் இவனே யன்றோ
கண்ணுக்குப் புனைமணிப்பூண் கண்ணோட்டம் என்பதெல்லாம் கருணை
யன்றோ —வில்லி. அருச்சுனன்தவ., 43

.....மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணும் கண்ணொக்குமோ காண் —நன்னெறி

முற்றும்:

ஒன்று நரம்பென்கோ ஒன்றாத என்பென்கோ
இன்தசைதான் என்கோ யாதென்கோ — மென்தொடையாழ்
பண்ணோட்டும் இன்சொல் பணைத்தோளாய் சேர்ந்தவர்பால்
கண்ணோட்டம் இல்லாத கண் —பா.வெ

58.6. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ(டு)
இயைந்துகண் ணோடா தவர். (நஎசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: சுதைமண்ணோடு கூடிச்செய்த மரப்பாவையோடு[1] ஒப்பார்; ஒருவன் கண்ணோடு தங்கண் கலந்தபின்பு கண்ணோட்டத் தைச் செய்யாதவர் எ—று.

இது கண்ணோடாமை மரப்பாவைக்கு ஒக்கும் என்றது.

ஆ) பரிதி.: மண்[2]ணோடுஇயைந்த சித்திரத்தில் எழுதிப் பழுத்த மாமரத்துக்கு நிகராவன் கிருபைக்கண் இல்லாத அரசன் எ—று.

இ) பரிப்.: சுதை மண்ணோடு கூடிச் செய்த மரப்பாவையோடு ஒப்பர்; ஒருவன் கண்ணோடு தம் கண் கலந்த பின்பும் கண்ணோட்டத் தைச் செய்யாதவர் எ—று.

கண் காணாமை பாவைக்கும் ஒக்கும். இது மகன் அல்லன் என் றது.

ஈ) காளி.: வண்ணம் எழுதா வகைத்து உருவாகிய மண்மேல் எழுதிய கற்பகதரு முதலிய மரத்தைப் போல்பவர்: யார் எனின் செய்யவாயும் செவ்வரிக் கண்ணும் கரிய குழலும் வெளிய நகையும் பிறவும் ஆகிய வகையமை உறுப்பின் வனப்பு வேற்றுமை தகை பெற உடைய தன்மையரேனும் கண்ணுறுப்புக்கு நுண்ணுறுப்பாகிய கண்ணோட்டம் இல்லாத கடு வினையாளர்[3] எ—று.

உ) பரிமேல்: ஓடுதற்குரிய கண்ணோடு பொருந்தி வைத்து அஃதோடாதவர், இயங்கா நின்றாராயினும் மண்ணோடு பொருந்தி நிற்கின்ற மரத்தினை ஒப்பர்.

ஓடாதவர் என்புழிச் சினைவினை முதல்மேல் நின்றது[4]. மரமும் கண்ணோடு இயைந்து கண்ணோடாமையின், இது தொழிலுவமம்[5].

---

1. சுதைமண்—சுண்ணாம்புமண்; சுதைமண்ணோடு கூடிச்செய்த மரப்பாவை— சுதை பூசிச்செய்யப்பட்ட மரத்கானியன்ற பதுமை.
2. மண்—ஓவியந்தீட்டும் பலநிறமண்.
3. கடுவினையாளர்—கொடுந்தொழிலர்
4. ஓடாமையாகிய கண்ணின் வினை, கண்ணையுடைய முதன்மேல் நின்றது, சினை வினை முதலொடு இயைந்து ஓடாதவர் என வந்தது. (தொல்—சொல் 233)
5. தொழிலடியாகப் பிறந்த உவமம். தொழிலுவமம் கண்ணோடாமை தொழிலால் மரக்சுண்ணிற்கும் மன்னன் கண்ணிற்கும் ஒப்பு வந்தவாறு காண்க.

இதனைச் சுதைமண்ணோடு கூடிய மரப்பாவை என்று உரைப்பாரும் உளர்[6]. அஃது உரையன்மை[7], காணப்படும் கண்ணாலன்றி அதனுள் மறைந்து நிற்கின்ற ஒருசாருள் வீட்டால் கூறினமையானும், ''மரக் கண்ணோ மண்ணாள்வார் கண்ணென், றிரக்கண்டாய்''[8] என்பதனானும் அறிக.

காரி.: மரக்கண் என்பதனை இக்காலத்தார் 'கணு' என்பர்.

ஊ) *கவிராசர்*: ஓடுதற்குரிய கண்ணோட்டமில்லாதவர்கள் நடந்து திரிந்தாலும், மண்ணோடே பொருந்திநிற்கிற மரத்தினை யொப்பர் எ—று.

ஏ) *பழைய 2*: மண்ணொடு பொருந்திய மரமாம், மனிதர் அல்லர் கண்ணொடு பொருந்தியுங் கண்ணோட்டம் இல்லாதவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவில் ''மண்ணோடியைந்த மரத்தனையர்'' என்ற உவமத் தொடர் உரையாசிரியர் பலரை மயக்குகிறது.

பரிப்., மணக்குடவர் உரைகள் 'மரப்பாவை'யைக் குறிக்கின்றன. *பரிதியார்* உரை 'சித்திரத்தில் எழுதிய பழுத்த மாமரம்' என்கிறது; *காளிங்கர்* உரை 'மண்மேல் எழுதிய கற்பக தரு' என்கிறது.

மணக்குடவர் கூறிய வண்ணம் 'மரப்பாவை'யைக் கொள்ள விரும்பாத *பரிதியார்* 'மண்ணோடியைந்த மரம்—மண்ணில் உள்ள பழுத்தமாமரம்' என்றார். பழுத்த மாமரம் மாம்பழம் ஒன்றைத்தானே கொடுக்கும். கண்ணோட்டம் பொன்னைப் பொருளைப் பதவியைப் பாராட்டை அனைத்தையும் தருமே என்று எண்ணிய *காளிங்கர்* 'விரும்பிய போதெல்லாம் விரும்பிய அனைத்தையும் கொடுக்கும் கற்பக மரத்தைக்' கருதினர். இவ்வளவும் *வள்ளுவர்* 'மரம்' என்றதனாலான வளர்ச்சிகள்.

பரிமேலழகர் பொழிப்பில் 'ஓடுதற்குரிய கண்ணிருந்தும் கண்ணோடாதவர் மண்ணில் நிலைத்த மரம்போல்வர்' என்றார். விளக்கத்தில் 'கண்ணோடாதவர் இயங்குவராயினும், இயங்காமலே

6. உரைப்பவர்கள் மணக்குடவர், பரிப்பெருமாள்.
7. இதன் நடைவிடைகள் தொகுப்பாசிரியர் குறிப்பில் தரப்பெற்றன.
8 முத்தொள்ளாயிரம்.

நிலத்தொடு இயைந்துள்ள மரத்தை ஒப்பர்' என்றனர். இதனால் கண்ணோடுதலாகிய இயக்கமின்மையால். இயக்கமே இல்லாத மரத்தை ஒப்பாவர் என்பது. அதாவது கண்ணோடாதவர் இயங்கு திணையாயினும் நிலைத்திணைப் பொருளோடு ஒப்பர் என்பதாம். இது, 'அவை நடுவே நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம்' என்றாற்போல்வதொரு வழக்கம். உவமை புடைபெயர்ச்சியின்மையை மட்டும் உணர்த்தியது. இதுவரை *பரிமேலழகர்* பொழிப்பும் கருத்து விளக்கவுரையும் இணைந்தவை.

பொழிப்பில் 'இயங்காநின்றாராயினும் என அவாய் நிலையான் ஒரு தொடரை வருவித்துக் கூறியவர், 'மரத்தனையர்' என்பதற்கு மரத்தினை ஒப்பர்' என்று மட்டும் உரை கண்டு, கணுவோடு கூடிய மரத்தினை எனக் கூறாதொழிந்தார். இதுவரை 'நிலைபெயராத் தன்மையால் — உணர்ச்சியற்றிருக்கிற தன்மையால் கண்ணோடாத மன்னனும் மண்ணோடியைந்த மரமும் ஒப்பாம்' எனத்தொழில் உவமங்கொண்டு கூறினார் 'கண்ணோடியைந்த' என்னும் பொருளடையை உவமத்திற்கும் கூட்ட எண்ணியபோது, ஆங்கு 'மண்ணோடியைந்த' என்ற அடையிருப்பதைக் கண்டு. அதனைத்தாவரம் என்ற இழிவு விளக்கவந்த அடைமொழியாக்கி 'மரமும் கண்ணோடியைந்து கண்ணோடாமையின் மன்னனும் ஒப்பாவர் எனத் தொழிலுவமம்' என்றார். மேலும் 'மரக்கணுவை மரக்கண்' எனக் கண்டுமணக்குடவர் *பரிப்பெருமாள்* உரைகளை மறுப்பர். 'காணப்படுங் கண்ணானன்றி அதனுள் மறைந்து நிற்கின்ற ஒருசார் உள்ளீட்டாற் கூறினமையும் ''மரக்கண்ணோ மண்ணாள்வார்கண்'' என மரக்கண் மன்னன் கண்ணுக்கு ஒப்பாகுமோ என்ற இலக்கிய வழக்குண்மையும் காண்க என இரண்டு காரணங்கூறுவர். ஒன்று தன்கோள் காட்டுதல். மற்றொன்று ஆன்றோர் ஆட்சி கூறித் தன் கருத்திற்கு அரண் செய்தல்,

பரிமேலழகர் உரையில் காணப்படும் 'கண்ணானன்றி என்பது முதல் உள்ளீட்டாற் கூறினமையானும்' என்பது வரையுள்ள பகுதி சில ஏடுகளிலில்லை என்று *கோ வ.கூறுவர். வை.மு.கோ*— 'காணப்படும் கண்ணானன்றி' என்பதற்கு 'மண்ணானன்றி' என ஒரு பாடம் கொண்டு மரத்தையுள்ளே வைத்து மேலே சுதையினாலமைக்கப்பட்ட பாவையை முன்னே *'கல்லாமை'* என்ற அதிகாரத்தில் ''நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம் மண்மாண் புனை பாவையற்று'' என்றதில் உள்ள மண்மாண் புனைபாவைபோல, மண்ணாலியைந்த பாவை என்னாது மண்ணோடியைந்த மரத்தனையர் என்றது வெற்றெனத் தொடுத்தலாய் முடிதலின் மரப்பாவை எனப்பொருள்

கோடல் குற்றமாம்' என மணக்குடவர் உரையை மறுத்தவாறாம் என்பது.

இவ்வுரை குறட்பகுதியைக் காட்டிலும் பலவாறாகப் பொருள் காணச் செய்து மயங்க வைத்தலாகிறது. கோ.வ. 'ஒருசார் உள்ளீட்டால் – ஒருவகையான தாட்சண்யம் பற்றி' என்பர். வை.மு.கோ. அங்ஙனமே. வேறொருவர், முற்கூறிய இருவர் கருத்தையும் என் பாரும் உளர் என வேறுரையாகக் கூறி' ஒருசார் உள்ளீடு—அதனுள் மறைந்து கிடக்கும் மரப்பாவையது கண், சுதை மண்ணின் மீது காணப்படும் கண்ணையும், அதனுள் மறைந்து கிடக்கும் மரப்பாவையின் கண்ணையுமே உவமை குறிக்கிறது. பொருளிலோ கண்ணையும் அதன் தொழிலாகிய கண்ணோட்டத்தையும் குறிக்கின்றது. உவமையும் பொருளும் இயையாமையின் பொருந்தாதென்றார்' என விளக்கமுந்தருவர்.

இத்தனைச் சிந்தனைகளும் 'கண்—கணு' என்ற பொருள் கோடலே சிறப்பு என்றதை வலியுறுத்துகிறது. ஆனால் 'கணு' எல்லா மரங்களுக்கும் இருப்பதில்லை. உட்டுனை மூங்கில் கரும்பு நாணல் போன்றவற்றின் வரையையே 'கணு' என்றல் மரபு. வாழை போன்றவை கிளையில்லாதன. மரங்களாதலால் அவைகட்கும்—அவ்வினத்தைச் சார்ந்த மரங்களுக்கும் கணு இல்லை. ஏனைய மரங்களுக்கு, கவர்பட்ட கிளைகள் தோன்றுமிடத்தைக் 'கணு' எனலாம். கிளைத்து ஒடிந்து பட்டுப்போன முளிகளையும் 'கணு' என்கிற வழக்குண்டு. இதனை மரநூல்வல்லார்க் கேட்டறியலாம்.

அன்றியும் கண்ணோட்டமில்லாத கண் மரக்கணுவோடு ஒக்கும் எனின், மரப்பாவைக் கண்ணை மறுக்கக் காட்டிய ஏது இதனையும் சாடும். யாங்ஙனம் எனின் மன்னன் கண்ணுக்குள்ள ஒருசாருள்ளீடு அதாவது கண்ணோட்டம் பாவைக்கண்ணிற்கு இல்லாதது போல மரக்கணுவுக்கும் இல்லை தானே.

வெற்றெனத் தொடுத்தலாகாது ஆண்டு 'மண் மாண்புனை பாவை' என்பதால் சுதையால் மட்டும் பாவைசெய்யும் முறையை நினைத்துக் கூறியது. அது விரைவில் உடையும் ஒடியுந் தன்மைத்து. அது உள்ளீடாகிய நுண்மாண் நுழைபுலம் இல்லானுக்கு ஒப்பாதல் இயையும். ஈண்டு, கோபுரச் சிற்பங்களைப்போலக் கைகால் விரல் முதலான உறுப்புக்களுக்கு மரச்சட்டங்கட்டி அதன்மேல் சுதை பூசுதல் வழக்கம். ஆதலால் மணக்குடவர் உரையுந் தவறாகாது. மண் ஏன்ப

தைப் பன்னிறக் கலவை எனக்கொண்டு மர ஓவியங்களைக் கருதினர் பரிதியும் காளிங்கரும்.

ஓட்டமுள்ள கண்ணிருந்தும் கண்ணோடாதவனுக்கு—உயிரிருந்தும் பயன்படாத மரத்தை உவமித்ததாகக் கருதும் பரிமேலழகர் பொழிப்புரை சிறக்கும்.

அவருடைய சிறப்புக்குறிப்புக்கள் சில பிரதிகளில் இல்லாமையும், பாடவேறுபாடும் உடைமையும் இடைச் செருகலாகவும் இருக்கக்கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

மண்ணோடு இயைந்த மரத்தனையர்:

நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று —குறள். 407
கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டாளரும் —சிலப். 5,30
நெடுநிலை மண்ணீடுநின்ற வாயிலும் —மணி. ,6. 4
பாங்குற மண்ணீட்டிற் பண்புற வகுத்து —மணி. ,6. 200
ஈங்கிம் மண்ணீட்டியாரென வுணர்வேன் —மணி. ,18–156

ஒ) மேற்கோள்பகுதி:

அடியார்.: கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டாளரும்; மண்ணீட்டாளர்-சிற்பாசாரிகள்; மண் ஈண்டுச் சுதை; 'மண்ணோடு இயைந்த மரத்தனையர்' என்றாராகலின். (சிலப்.இந்திர. 30.)

அரும்பத.: ஷை.

58.7. கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடை யார்
கண்ணோட்டம் இன்மையும் இல்[1]. (நெஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: கண்ணோட்டமில்லாதவர் கண்ணிலரே; கண்ணுடையார் கண்ணோட்டமிலராதலும் இல்லை எ—று.

1. யாண்டுத்தியில்லை. ஆண்டுப்புகையில்லை; யாண்டுப்புகையுண்டு ஆண்டுத் தியுண்டு என்பது போல, யாண்டுக் கண்ணோட்டமுண்டு. ஆண்டுக்கண்ணுண்டு; யாண்டுக்கண்ணோட்டமில்லை. ஆண்டுக்கண்ணில்லை என்பதாம்.

ஆ) *பரிதி.:* கிருபை இல்லாதார் அந்தகற்கு[2] ஒப்பர்; கிருபையான பார்வை உள்ளவர் கண்ணுடையர் எ—று.

இ) *பரிப.:* கண்ணோட்டம் இல்லாதார் கண்ணிலரே; கண்ணுடையார் கண்ணோட்டம் இன்மையும் இலார் ஆதலான் எ—று.

உம்மை ஐயத்தின் கண் வந்தது. கண் உண்டாயின் நோக்குமாயின் வந்து நிலைமையைக் கண்டு கண்ணோடும்; ஆதலான் கண்ணோட்டம் இல்லாதவர் கண்ணிலர் என்று மிகுத்துக் கூறிற்று.

ஈ) *காளி.:* இனிப்பல சொல்லி என்? உலகத்துப் பிறர்மாட்டுக்கண்ணோட்டம் இல்லாதவர் யாவர்? மற்று அவரே கண் இல்லாதோர் ஆவார்; மற்று இனிக் கண்ணுடையராவார் கண்ணோட்டம் இல்லாமையும் இல்லை எ—று.

இனி மற்று இங்ஙனம் கண்ணோட்டம் உடைய அரசர்க்குத் தம் கண்ணெதிர் அணுகாதார்க்கு உள்ள இடர்களும் தேர்ந்து குறிக்கோடலும் அரசியல் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) *பரிமேல்.:* கண்ணோட்டம் இல்லாதவர் கண்ணுடையரும் அல்லர்; கண்ணுடையவர் கண்ணோட்டமிலராதலும் இல்லை.

கண்ணுடையராயின் காட்சிக்கண்ணே அஃது ஓடும்[3] என்பது பற்றிக் 'கண்ணோட்டமில்லவர் கண்ணிலர்' எனக் கூறிப் பின் அதனை எதிர் மறைமுகத்தான்[4] விளக்கினார். உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை.[5] இவை இரண்டுபாட்டானும் கண்ணோடாதாரது இழிபு கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்:* கண்ணோட்டம் இல்லாதவர் கண்ணில்லாதவர்; கண்ணுடையவர் கண்ணோட்டம் இல்லாமலிருப்பதும் இல்லை.

ஏ) *பழைய 2:* 'கண்ணுடையர்' பாடம். கண்ணோட்டமில்லாதவர் கண்ணுண்டாயிருந்தாலும் கண்ணுடையவர்கள் அல்லர்; கண்ணுடையவர்கள் கண்ணோட்டமில்லாமல் இருக்கிறது மில்லைஎ—று.

---

2. அந்தகற்கு— இயமனுக்கு.
3. காட்சிக்கண்ணே அஃதோடும்—தன்னுடன் பழகினவரைக் கண்டவிடத்து அக்கண் தாட்சண்யம் காட்டும்.
4. எதிர்மறை முகத்தான் விளக்கியது கண்ணிலர் என்றதற்கு மாறாகக் கண்ணுடையர் என்றது.
5. இன்மையும் என்பதிலுள்ள உம்மை 'கண்ணிலராதலன்றி' என்பதைத் தழுவி நிற்றலின் இறந்தது தழுவிய எச்சவும்மையாயிற்று. இதனைப் பரிப்பெருமாள் ஐயவும்மை என்பர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

குறள் மிகத் தெளிவான கருத்தினது. ஆதலால் உரையாசிரியர் களில் மாறுபாடு தோன்றவில்லை.

கண்ணோட்டத்திற்கும் கண்ணுக்கும் உள்ள இயைபு பண்புக்கும் பண்பிக்கும் உள்ள இயைபு. குண குணி சம்பந்தம் என்பர் வடநூலார். இத்தொடர்பு பிரிக்க முடியாத தொடர்பு. அதாவது சமவாய சம்பந் தம்; தீயும் சூடும் போல. ஆதலால் கண்ணோட்டமில்லையாயின் கண்ணில்லை, கண்ணிருந்தால் கண்ணோட்டமும் இல்லாமலிருக்காது என்கிறார் வள்ளுவர்.

கண்ணின் தொழிற் பண்பு பொருள்களைக் கண்டறிதல். குணப் பண்பு கண்ணோட்டம். கண்டறிதலே கண்ணோட்டத்திற்காகத்தான். ஆகவே கண் பொருள்களைப் பார்த்தறியுமாயினும் கண்ணோட்டம் செய்யாதாயின் இல்லாதது போலத்தான். கண் இருந்தால் கண்ணோட்டமில்லாமலிராது என்பது.

இதனைப் *பரிமேலழகர்* 'முன்னது கண்ணோட்டம் இல்லார் கண்ணிலர் என முடிபு கூறிப் பின் எதிர்மறை முகத்தானும் வலியுறுத் தினர்' என்பர். எதிர்மறை முகத்தான் கூறியது மட்டும் அன்று; பண்புக்கும் பண்பிக்கும் உள்ள இயைபு என்றும் பிரிக்க இயலாது ஆதலின், கண்ணுடையார் கண்ணோட்டமிலராயின் கண்ணும் இல்லாத வரே' என்றனர்.

தேவநேயர் 'வலியுறுத்தவும், குறள் நிரம்புவும் பின்னும் அதனை எதிர்மறை முகத்தாற் கூறினர்' என்பர். குறள் நிரம்ப வெற்றுச் சொல்லை வள்ளுவர் பெய்யார் என்பதனைப் *பாவாணரே* 'ஓரும்' என்பன போன்ற சொற்கிடை வைத்து வற்புறுத்தியவர். இங்கு இடம் நிரம்பச் சொன்னார் என்பது சிந்தித்து ஏலாக் கருத்து என்று எண்ணத்தக்கதேயாம்.

மு.ரா.அரு. 'அங்ஙனமாயின் கருணையில்லாதவராகச் சிலர் இருக் கின்றனரே எனின் அவர் மேற்சொல்லிய மரத்தை ஒப்பர் என்க. கண் ணோட்டமுள்ள கண்ணே பயனுடையது. அஃதிலாத கண்பயனற்றது என்றனர்: இதில் (அனுவாத முகத்தான்) வழிமொழிதலால் முற்குற ளோடு இயைபு காட்டியது இவருடைய சிறந்த கருத்து.

வரத. 'ஆசிரியர், ''கண்ணைப் பெற்றதனால் கண்ணோட்டம் உண்டு என்று புதிய கருத்தை வெளியிடுகின்றார். 'எல்லா உயிர்

களுக்கும் சிறிதளவாவது கண்ணோட்டம் உண்டு என்பது கருத்து ஆனால் அதனைப் பெருக்கிப் பிறர் பயன்படச் செய்வது மக்கள் கடமை என்று வள்ளுவர் விளக்குகிறார்' என விளக்கந்தருவர்.

இதில் 'எல்லாவுயிர்களுக்கும்' என்ற இடத்தால் கட்பொறியுடைய தும்பி வண்டாதி நாலறி உயிர்களிலிருந்து மக்களுயிரீறாக உள்ள என்பதனை இணைத்துப் படித்தல் இன்றியமையாதது.

இராம. 'கண் இலர்–கண்ணேயில்லாதவர் என்பது கருத்தன்று. பிறரைக் கண்டறியக் கண்ணில்லாதவர்' என்பர். அங்ஙனமே 'கண்ணுடையார்' என்பதற்கும் 'பிறரைக் கண்டறியும் கண் உடையார்' எனக் கூறுவர்.

''இன்மையும் இல்'' என்றதிலுள்ள உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை' என்பர் பரிமேலழகர்; ஐயவும்மை என்பர் பரிப்பெருமாள். பரிமேலழகரின் எச்சவும்மையை விளக்கவந்த விளக்கவுரையாசிரியரில் வை மு.கோ. இப்பகுதிக்கு விளக்கந் தரவில்லை. கோ.வ. 'கண்ணிலராதலேயன்றிக் கண்ணோட்டம் இன்மையும் உடையவராவர்' எனத் தழுவிநின்றதை விளக்குவர்.

உரைத்திறன் கண்ட அன்பர் பரிமேலழகர் தந்த குறிப்புக்கு விளக்கந்தராமல் பரிப்பெருமாள் ஐயவும்மை என்றதை மட்டும் கொண்டு அவர் தந்த விளக்கத்தைத் தந்தனர்.

கோ.வ. இக்குறட்பாவினுள்ளேயே 'இன்மையும்' எனப்பின் நின்றது 'கண்ணிலர்' முற்பகுதியின் நின்றதைக் காட்டி விளக்குவர். மு.ரா.அரு. 'கண்ணோட்டம் இன்மையும் என்ற உம்மை முன்குறளில் மண்ணோடியைந்த மரத்தனையராதலைக் காட்டியது' எனக் குறிப்பாற் கூறுவர். ஏற்பன கொள்க.

58.8. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்(கு)
உரிமை உடைத்திவ் உலகு. (நாஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: கருமத்திற்கு அழிவு வாராமல் கண்ணோட வல்லவர்க்கு, இவ்வுலகம் உரிமையாதலை உடையது[1] எ—று.

1. உடைத்து என்பர் பரிப்பெருமாள்.

இது. நற்குணமாவது கண்ணோட்டமாயினும், அரசர்க்குப் பொருட்கேடு வாராமல் கண்ணோடவேண்டும் என்று கூறிற்று.

ஆ) *பரிதி.:* இராசகாரியம் குன்றாமல் அதுவே கண்ணாக இருக்கும் அரசற்கும் பூமிக்கும் உரிமை உடைத்தாம் எ—று.

இ) *பரிப.:* தம் கருமத்திற்கு அழிவு வாராமல் கண்ணோட வல்ல வர்களுக்கு இவ்வுலகம் உரிமையாதலை உடைத்து எ—று.

நற்குணமாவது கண்ணோட்டம் ஆயினும் அரசர்க்குப் பொருட் கேடு வாராமல் கண்ணோட வேண்டும் என்று எய்தியது விலக்கிக் கூறிற்று. உரிமை யிருந்ததென்று பாடம் ஆயினும் அமையும்.

ஈ) *காளி.:* தாம் செய் கருமம் வாய்த்தற்பொருட்டாக யாவர் மாட்டும் கண்ணோட வல்லா..... வழிச்செல்லுதல் உடைத்து இவ்வுலகு எ—று.

சிதையாமல் என்பது அழியாதவாறு என்றது.

உ) *பரிமேல்.:* முறைசெய்தலாகிய தம் தொழில் அழியாமல் கண்ணோடவல்ல வேந்தர்க்கு உரித்தாந் தன்மையுடைத்து இவ் வுலகம்.

தம்மொடு பயின்றார் பிறரை இடுக்கண்[2] செய்துழி அவரைக் கண்ணோடி ஒறாதார்க்கு[3] முறைசிதைதல் மேல் ''ஓர்ந்துகண்ணோ டாது''[4] என்ற முறையிலக்கணத்தானும்[5] பெற்றாம். முறை சிதைய வரும் வழிக் கண்ணோடாமையும் வாராவழிக் கண்ணோடலும் ஒருவர்க்கு இயல்பாதல் அருமையின் கண்ணோடவல்லார்க்கு என்றும், அவ்வியல்பு[6] உடையார்க்கு உலகமுழுதும் நெடுங்காலம் சேறலின் உரிமையுடைத்து என்றும் கூறினார். இதனால் கண்ணோடு மாறு கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்:* முறைசெயலாகிய தங்கள் தொழில் அழியாமற் கண்ணோடவல்ல வேந்தர்களுக்கு உரிமை உடையது இவ்வுலகம் எ—று.

ஏ) *பழைய உ:* செங்கோல் முறைமை சிதையாமற் கண்ணோட்டம் வல்லவேந்தருக்கு உரித்தாம் இவ்வுலகம்.

---

2 இடுக்கண்—துன்பம்.
3. ஒறாதார்—தண்டிக்காத மன்னர்.
4 குறள் 541
5. முறையிலக்கணம்—நீதிவழங்கும் முறைக்குள்ள இலக்கணம். குறள் செங்கோன்மை!
6 அவ்வியல்பு —நீதிகெடின் கண்ணோடாமையும், கெடாவிடத்துக் கண்ணோடுதலும் ஆகிய இயல்பு'

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவில் கருத்து வளர்ச்சி ஆய்வு ''கருமஞ் சிதையாமல்'', ''இவ்வுலகு உரிமை உடைத்து'' என்ற இரண்டிலே அமைகிறது.

''கருமஞ்சிதையாமல்''

'தங்கருமத்திற்கு அழிவு வராமல்' 'அரசர்க்குப் பொருட் கேடு வராமல்' என்பர் மணக்குடவர். ''இராசகாரியம் குன்றாமல்'' பரிதி.; 'தாம் செய்யுங்கருமம் வாய்த்தற் பொருட்டாக' காளி.; தொடராக்கி 'கருமஞ்——————வல்லார்க்கு'' என்றவரை ஒரு அன்பினால்ஏனைய மக்களைப் பிணித்துத் தாம்எண்ணிய காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றல் உடையவர்க்கு எனப் பொழிப்பு உரைப்பர்.' முறைசெய்த லாகிய தம்தொழில் சிதையாமல்' பரிமேல்., கவிராசர், பழைய 2, 1 இராம. 'காரியமுங் கெட்டுப் போகாமல் (தாட்சண்யமுங்காட்டி)' என்பரீ. விளக்கத்தில் 'கருமஞ் சிதைவதாக இருந்தாலும். கூடுமான வரையில் ஒவ்வொரு மனிதனும் பிறருக்குத் தாட்சண்யம் காட்டித்தான் ஆகவேண்டும்' என்பது இக்குறளின் கருத்து என்பர். இத்தகைய முடிவை இக்குறளிலிருந்து பெறுவது எப்படி! என்று சிந்திக்க வேண்டி யுள்ளது.
சாமி. சிதம். 'கடமை தவறாத கண்ணோட்டம் உள்ளவர்கட்கே இவ் வுலகம் சொந்தம்' என்பர். சி. இ. கருத்தும் இதுவே.

''உரிமையுடைத்திவ்வுலகு''

'உரிமையாதலையுடையது உலகம்' மணக்.; 'அரசற்கும் பூமிக் கும் உரிமை உடைத்தாம் என்றது ஏனையோர். உலகு — இடவாகு பெயராக மக்களைக் குறியாமல் நிலத்தினையே கருதுகிறார் இவர். 'வழிச் செல்லுதல் உடைத்து' என்பர் காளிங்கர். 'உரித்தாந் தன்மை' என்பர் பரிமேலழகர்.

பின் வந்த உரையாசிரியர்களில் இராம. 'உலகம் கடமைப் பட்டதாக இருக்கும்' என்றனர். ஏனையோர் பரிமேலழகரைப் பின் பற்றினர். வரத. 'உலகத்தார் அவர்களைப் போற்றுவது தங்களது உரிமை எனக் கருதுவர்' என்பர். இது கருத்துப் பொருளாகுமே யன்றிச் சொற்பொருளாகாது, தேவநேயர் ' 'உலகு' என்றது. அதன் பகுதியாகிய நாட்டைக் குறித்ததாகலின் முதலாகுபெயர்.' இது ஏற்புடைய குறிப்பு. மேலும் 'கருமந்தவறும் இடமாகச் சுற்றத் தார் குற்றம் செய்யின் தண்டிக்க விரும்பாமை' எனவும், 'தவறா

இடம் தன்னால் வெறுக்கப்படுபவன் குற்றம் செய்யாவிடினும் தண்டித்தலும், சிறுகுற்றத்திற்குக் கடுந்தண்டம் போல்வனவுமான இவை' என்ற விளக்கமும் மிகச் சிறந்தன.

58.9. ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. (நெகூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: தம்மை ஒறுத்துச் செய்யும் இயல்புடையார் மாட்டும் கண்ணோடிப் பொறுத்துச்செய்யும் குணமே தலையான குணம் எ—று

ஆ) பரிதி.: தமக்கு ஒறுப்புச்[1] செய்யும் மாற்றாரிடத்தும் கிருபை செய்து காரியத்தைக் கொள்வது தலையான காரியம் எ—று.

இ) பரிப்.: தம்மை ஒறுத்துச் செய்யும் இயல்பினை உடையார் மாட்டும் கண்ணோடிப் பொறுத்துச் செய்யும் குணமே தலையான குணம் எ—று.

அன்றியும் ஒறுத்துச் செய்ய வேண்டும் இயல்பினை உடையார் மாட்டும் என்றும் ஆம். உம்மை சிறப்பும்மை[2]. பிறர்க்குக் குற்றம் செய்தாரையே அன்றித் தமக்குக் குற்றம் செய்தாரையும் பொறுக்க வேண்டும் என்றது.

ஈ) காளி.: தம்மை ஒருவர் உணர்ந்தும் உணராதும் ஒருகாலத்து ஒறுத்தாராயினும், அவர் மாட்டுத் தாம் கண்ணோட்டம் உடையராய் மற்று அவர்செய்த பிழையினைத் தாம்பொறுத்து மற்று அதனை ஒழுகச் செய்யும்இயல்பே தலைமைப்பாடாவது எ—று.

உ) பரிமேல்.: தம்மை ஒறுக்கும் இயல்புடையாரிடத்தும் கண்ணோட்டம் உடையராய்க் குற்றத்தைப் பொறுக்குமியல்பே அரசர்க்குத் தலையாய இயல்பாவது.

பண்பினார் என்றதனால் அவர்[3] பயிற்சி பெற்றாம். ஒறுத்தாற்றும், பொறுத்தாற்றும் என்பன ஈண்டு ஒருசொல்நீர.[4]

ஊ) கவிராசர்: தம்மை ஒறுக்குமியல்புடையாரிடத்தும் கண்

1. ஒறுப்பு—துன்பம்.
2. பண்பினார்கண்ணும் என்பதிலுள்ள உம்மை இழிவு சிறப்பும்மை
3. அவர்—துன்புறுத்தும் இயல்புடையார்.
4. இவ்விரு சொற்கண்ணும் உள்ள ஆற்றுப என்பது தனிப்பொருள்தராது ஒறுத்தல் பொறுத்தல் என்ற இயல்பான பொருளைக் குறித்,தலின் ஒருசொல் நீர்மைய எனப் பெற்றது.

ணோட்ட முடையராய் அவர் செய்த குற்றத்தைப் பொறுக்கிறதே அரசர்க்குத் தலையான இயல்பு எ—று.

ஏ) பழைப 2: தம்மை . ஒறுக்குமியல்புடையாரிடத்தும் கண் ணோட்டமுடையார் குற்றத்தைப் பொறுத்து, உலகத்தைக் காக்கும் பண்பே அரசர்க்குத் தலைமை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஒறுத்தாற்றும் பண்பினார்'

மணக், பரிதி. உரைகள் 'அரசனையே ஒறுத்து, அவனுக்கு இன்னா செய்யும் இயல்புடையார்' என்னுங் கருத்தினது. பரிப். உரை 'தண்டித்தேயாகவேண்டும் என்ற இயல்புடையார்' என்னுங் கருத்தினது. அரசன் ஒறுக்க வேண்டியதன் காரணத்தையும் கூறுவது. மணக். பரிதி. உரைகள்; பரிப் உரை காரணங் கூறாது தண்டித் தேயாக வேண்டும் என்ற இயல்பு மட்டும் கூறுகிறது.

காளி. உரை, மணக்குடவர் பரிதி. உரைகளின் விளக்கமாக அமைகிறது. பரிமேலழகர் உரையும் அங்ஙனமே. ஆனால் ஒறுத் தாற்றும் என்பதனை ஒரு சொல்லாகக் கொண்டு ஒறுக்கும் இயல்பு எனப்பொருள் கூறுவர். அங்ஙனமே 'பொறுத்தாற்றம்' என்பதற்கும் 'பொறுக்கும்' என்பர். தேவநேயர், மு.ரா.அரு., கா.சு. இவர் களும் பரிமேலழகரை ஒத்துரைப்பர். இராமலிங்கனார் பரிப்பெரு மாளை ஒத்துரைப்பர். சி.இ 'தண்டித்துத் திருத்துங் குற்றவாளி களையும் கண்ணோடித் திருத்துவது நல்லது' என்பர். வரத, மணக் குடவர், பரிதி. இவர்களைப் போல 'ஒறுத்து + ஆற்றும், பொறுத்து +ஆற்றும்' எனப் பிரித்துத் தண்டித்துத் திருத்திப் பொறுத்து நோக்கி 'எனப்பொருள் கண்டு அதற்கு விளக்கமாகச் சில சொற்களை வருவிப்பர். பரிமேலழகரும், அவர் வழி வருவோரும் ஒரு சொல்லாகக் கொண்டு' பொறுக்கும் ஒறுக்கும்' என உரை எழுதினர். வரத, பொறுத்து—பொறுத்துப் பார்த்து அதாவது குற்றஞ் செய்தவன் உணருகிற வரைபொறுத்திருந்து' என்பர். முடிபு மாறாத கருத்துக் களைக் கொள்ளலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாமறிந் துணர்க என்ப மாதோ —நற். ,116:1—2

பகைவர் தேஎத் தாயினும்
சினவா யாகுதல் இறும்பூதாற் பெரிதே —பதிற்று. , 32: 16—17

ஒருபுடை:

பகைவராரப் பழங்கண் அருளி —பதிற்று. ,37,3

வெட்டெனப் பேசேல் —ஆத்தி. ,501

58.10 பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர். (நுஅ0)

உரைப்பகுதி:

அ) மணக்.: நஞ்சு பெய்தது கண்டும் அதனை மாற்றாது உண்டு அமைவர்; எல்லாரானும் விரும்பத்தக்க நாகரிகத்தை விரும்புவர் எ—று.

நாகரிகம் - அறம் பொருள் இன்பத்தின்கண் நற்குணங்கள் பலவும் உடைமை.

ஆ) பரிதி.: மாற்றார் தமக்கு நஞ்சிட்டாலும் இது அமிர்தம் என்று இருப்பர்; காரியத்தினாலே சுவர்க்கம் வேண்டியும் இந்தப்பூமி வேண்டியும் மன்னவர் எ—று.

இ) பரிப்.: நஞ்சு பெய்தது கண்டும் அதனை மாற்றாது உண்டு அமைவர்: எல்லாரானும் விரும்பத் தக்க நாகரிகத்தை வேண்டி விரும்புவார்கள் எ—று.

நாகரிகம் அறம், பொருள், இன்பத்தின் நற்குணங்கள் பலவும் உடைமை. மறாமையாற்[1] கண்ணோட்டம் ஆயிற்று. இது பொறுத் தலே அன்றித் தமக்குச் செய்யும் தீமைக்கும் உடன்படுவர் புகழ் வேண்டுபவர் என்றது.

ஈ) காளி:. ஒருவர் தமக்கு இன்னாமையால் கொணர்ந்து இடக் கண்டு வைத்தும் அவரிட்ட நஞ்சினைத் தாம் உண்டு உயிர் வாழ்க்கை சமைந்து விடுவர்[2]; யார் எனின், பெரியோரால் விரும்பத்

1: மறாமையால் — மறுத்து உரையாமையால்;
2: சமைந்து விடுவர் — அமைவர்

தக்க உம்பர்[3] உலகினுள் சிறப்புடைய உத்தரகுருவினைத்[4] தாம் எய்தி இனிது வாழ்ந்திருக்க வேண்டும் அவர் எ—று.

பெயக்கண்டும் என்பது கொணர்ந்திடக் கண்டும் என்றது.

உ) *பரிமேல்.*: பயின்றார் தமக்கு நஞ்சிடக் கண்டுவைத்தும் கண் மறுக்கமாட்டாமையின் அதனை உண்டு பின்னும் அவரோடு மேவுவர் யாவரானும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தினை வேண்டுமவர்.

நாகரிகம் என்பது கண்ணோட்டமாதல் 'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின், நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்[5] என்பதனானும் அறிக. அரசர் அவரை ஒறாது கண்ணோடற்பாலது தம்மாட்டுக் குற்றஞ்செய்துழி என்பது இவ்விரண்டு பாட்டானும் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: தம்முடன் சிநேகிதமானபேர் நஞ்சையிட்டாலும் அவர்கள் மேலே கண்ணோட்டத்தினாலே அந்த நஞ்சைத்தள்ள மாட்டாமல் உண்டு, பின்னையும் அவர்களுடனே சினேகமாய் இருப்பார்கள், எல்லாராலும் விரும்பப்பட்ட கண்ணோட்டத்தை உடையவர்கள் எ—று.

ஏ) *பழைய* 2: தம்மொடு பழகினவர் தமக்கு நஞ்சு கூட்டி இடக் கண்டும் கண் மறுக்க மாட்டாமையால், அதனையுண்டு பின்னும் அவரொடுமேவி அமைந்திருப்பர், விரும்பத் தக்க கண்ணோட்டத்தினை வேண்டுவார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''*நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்*'' என்பது இக்குறட்பாவில் சிந்தனைக்குரியது.

'*நாகரிகம்*'

'அறம் பொருள் இன்பத்தின் கண் நற்குணங்கள் பலவும் உடைமை' மணக்.;

'சுவர்க்கம் வேண்டியும் பூமி வேண்டியும் இருக்கும் மன்னர்' பரிதி,

---

3. உம்பர் — தேவர்
4. உத்தரகுரு — போகபூமி ஆறனுள் ஒன்றாகிய புண்ணிய பூமி
5. நற்றிணை. ,355, தம் கண்ணெதிரிலேயே தம் நண்பர் நஞ்சிட்டாலும் உண்பர் கண்ணோட்டமிக்கவர் என்பது பொருள்.

'உம்பருலகினுட் சிறப்புடைய உத்தர குருவினை எய்தி வாழ விரும்புபவர்'' காளி.;

'கண்ணோட்டம்' பரிமேல்., கவிராசர், பழைய 2, குழந்தை;

'நாகரிகப் பண்பாகிய கண்ணோட்டம்' தேவநேயர்;

'கண்ணோட்டமாகிய கருணை' மு.ரா.அரு.;

'தாட்சண்ணியத்தை விரும்புகிறவர்கள்'–இராம., சபாபதி;

'யாரும் விரும்பத்தக்க நல்வாழ்வு' வரத.

மணக்குடவர் 'நற்குணமே உருவான அறத்தாலும் தீமை விளைதல் கூடும்' என்று கருதியிருப்பர் போலும். பொருளீட்டற் கண்ணும், துய்த்தற் கண்ணும் நற்குணங்கள் அல்லவும் நிகழலாம். அறத்தின்கண் நிகழ இடமில்லையன்றே; அங்ஙனமாகவும் அறத்தை யும் உடனெண்ணியமை ஆய்வுக்குரியது.

பரிதி., காளிங்கர் உரைகள் 'இம்மையிலும்-மறுமையிலும்' என்ற இரு சொற்களைத் தகுதியாற் கொண்டு இவ்வுரையைத் தரு கின்றன. அஃது இவ்வதிகார நோக்கிற்கு வேண்டப்படுவதா? என் பதனை எண்ணுக.

பரிமேலழகர் முதலியோர் கொண்ட 'கண்ணோட்டம்' என்ற பொருள் நாகரிகத்திற்கு நேரான சொற்பொருளன்று. அதிகாரத்தாற் பெற்ற பொருள். தேவநேயர் இது கருதியே 'நாகரிகத்தின் பண் பாகிய கண்ணோட்டம்' என்றனர். மு.ரா.அரு. கூறுவது போலக் கண்ணோட்டம் கருணையாகுமா?' என்பது ஆழ்ந்து எண்ணித் துணிதற்குரியது. 'நாகரிகத்தின் பயன் நல்வாழ்வாகலாம்;' காரணகாரிய ஒற்றுமை நயம் பற்றி வரதராசனார் இங்ஙனம் உரைத்தனர் போலும்.

''பெயக்கண்டும்'' என்பதற்கு நயங் கூற வந்த குழந்தை, 'நஞ்சைக் கலப்பதைப் பார்த்தும் அவரை வருத்தாது, அவர் மீது கண்ணோடி அதனையுண்டு பின்னும் அவருடன் கூடிவாழ்வர்' என்பர். 'நஞ்சுண்டான்சாம்' என்பது முடிபாகலின் பின்னர் கூடுவ தெங்கே? வாழ்வது எங்கே? என எண்ணுக.

மு.கோ. நஞ்சனைய சொற்களைப் பெய்தும்' என்றும், 'பிறர் தம்மீது நாகரிகத்தைப் பெயக்கண்டும், அவர்க்கு வரும் நஞ்சினைத் தாம் உண்பர் அதாவது அவர்க்கு வரும் துன்பத்தைத் தாமேற்று மகிழ்வர்' எனக் கருத்துக் கொணருவர். முன்னதை உவம ஆகு பெய

ராகக் கொண்டாவது அமையலாம். பின்னதின் இருப்பு அறியக் கூட வில்லை.

பரிப்பெருமாள் தரும் உரை விளக்கம் மிக ஏற்புடையதும் இன் பூட்டுவதும் ஆம். *பரிமேலழகர்* தரும் சிறப்புரையாகிய 'பின்னும் அவரோடு மேவுவர்' என்பதற்கு, 'நஞ்சுண்ட பின்னும், உயிர்பிரிகிற வரையில் நஞ்சூட்டிய அவரோடு விரும்பியிருப்பர்' எனக் கருத்துக் கோடல் ஏற்புடையதாகும். 'மேவல் விருப்பாகும்' ஆதலால்.

நாகரிகம் *வள்ளுவத்திலும்*, ஆசிரியர் பெயரறியப் பெறாத *நற்றிணை* (355) யிலும் அன்றிப் பிற சங்க கால இலக்கியங்களில் ஆட்சியில் இல்லாத சொல், சமுதாய வாழ்வினால் விளைந்த நற் குணங்களில் ஒன்று எனலாம். *பெருங்கதையில்*, 'நகரத் தொடர் பான செப்பம் (*பெருங்*. உஞ்சை., 41, 83) என்ற பொருளிலும், 'பலகலை வன்மை' என்ற பொருளில் (*சீவக*. 1110) *சீவக சிந்தா மணியிலும்* வந்துள்ளன. இவற்றைக் கொண்டு நாகரிகம் நாகரீகம் இரண்டும் ஒன்றா? பகுதிப் பொருள் எது? வட சொல்லா? தமிழ்ச் சொல்லா? என்பன ஆய்தற்குரியன.

பரிமேலழகருரையில் ''அரசர் அவரை ஒறாது கண்ணோடற் பாலது, தம்மாட்டுக் குற்றஞ் செய்துழி'' என்பதில் 'கண்ணோடற் பாலது' என்பது கண்ணோடற் பாலராவது என்றிருந்திருக்குமோ? அரசர் என்ற எழுவாய்க்கு ஏற்ப. பாலது முடிக்குஞ் சொல்லாகுமோ என்பதும், சிந்தித்து, ஏடு பார்த்துத் துணியத்தக்கது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர் —*நற்*., 355:6—7

நஞ்சுயிர் செகுத்தலும் அறிந்துண்டாங்கு அளிஇன்மை
கண்டுநின் மொழிதேறும் பெண்டிரும் ஏமுற்றார் —*கலி*. 74:8—9

பிணைடைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	கண்ணோட்டம்	கண்ணோட்டத்	பண்ணென்னாம்	உவோல்	கண்ணிற்	மண்ணோ	கண்ணோட்டம்	கருமம்	ஒறுத்தாற்றும்	பெயக்கண்டும்
மணக்.	1	5	7	3	9	10	6	4	2	3
பரிதி.	1	2	5	6	4	3	7	8	10	9
பரிப்.	1	5	7	8	9	10	6	4	2	3
காளி.	1	2	6	8	5	7	10	9	3	4
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

58வது அதிகாரம் 'கண்ணோட்டம்' முற்றிற்று.

59. ஒற்றாடல்

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: ஒற்றாடலாவது ஒற்றரையாளவேண்டும்[1] என்பதும், அவ்வொற்றர் திறனும் கூறுதல். பெரியாரைத் துணைக்கோடல் முதலாகக் கண்ணோட்டம் ஈறாகத் தன் அரசிலிருந்து செய்யவேண்டுவன கூறினார். அது செய்யுங்கால் அவரவர் செய்தியை ஒற்றரான் ஒற்றியறியவேண்டுதலானும், இனிப்பிறர்நாடு கொள்ளுங்கால் செய்ய வேண்டுவன கூறுகின்றாராதலின் அந்நாட்டு இயல்பறிந்து வினை செய்ய வேண்டுதலானும், இவ்வதிகாரம் வேண்டப்பட்டது. மேலத னோடு இயையும் அது.

ஆ) பரிதி.: ஒற்றாடலாவது அரசற்கு ஒற்றுவிட்டுக் காரியங் கொள்ள வேணும் எ—று.

இ) பரிப்.: ஒற்றாடல் ஆவது ஒற்றரை ஆளவேண்டும் என்பதும் அவர் ஒற்றும் திறனும் கூறுதல். பெரியாரைத் துணைக்கோடல் முத லாகக் கண்ணோட்டம் ஈறாகத் தன் அரசிலிருந்து செய்ய வேண்டுவன கூறினார்: இது செய்யுங்கால் அவர் அவர் செய்தியை ஒற்றரானே அறிய வேண்டுதலானும் இனி அவர் பிற நாடு கொள்ளுங்கால் செய்ய வேண்டுவன கூறுகின்றார் ஆதலின் அந்நாட்டு இயல்பும் அறிந்து வினை செய்ய வேண்டுதலானும் இவ்வதிகாரம் வேண்டப்பட்டது. மேலதனோடு இயையும் அது.

உ) பரிமேல்.: அஃதாவது பகை, நொதுமல், நட்பு என்னும்

1. ஒற்றர்—அங்கங்கே நடக்குஞ் செயல்களை மறைவாக ஒற்றியறியும் வேவுகாரர்.

மூன்று திறத்தார் மாட்டும் நிகழ்ந்தன அறிதற்கு[2] ஒற்றரையாளுதல். மேற்சொல்லிய[3] இலக்கணத்தானாய அரசனுக்குத் தன் நாடு செலுத்துங்காலும் பிறர்நாடு கொள்ளுங்காலும் வேண்டுவன கூறுகின்றாராகலின், அவ்விருமைக்கும்[4] இன்றியமையாததாய இது முன் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர்.: அஃதாவது-பகைவர் பிறர் சினேகிதர் என்னு மூன்று திறத்தாரிடத்திலேயும் நடந்த காரியங்களை அறிகிறதற்கு ஒற்றரை ஆளுகிறது. முன்னே சொன்ன லட்சணத்தையுடைய அரசர்கள் ஒற்றரையாளவேண்டும் என்பதாம்.

ஏ) பழைய உ: அஃதாவது, பகை நொதுமல் நண்பு என்னும் முத்திறத்தாரையும் உலகத்து நடப்பனவற்றையும் அறிதற் பொருட்டு ஒற்றரை ஆளுதல்.

மல்லர்: அதாவது தன்சீர்மையிலேயு மத்த ஆஸ்தானங்களிலேயும் நடக்கிற சேதி வேஷகாரரைக் கொண்டறிகிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இராம., 'துப்பறிந்துவந்து சொல்லும் வேவுகாரர்கள். தன் நாட்டிலும் அயல்நாடுகளிலும் சென்று உளவறிந்து வரும் இரகசியச் சேவகர்கள்'.

தேவநேயர், 'மாறுகோலங்கொண்டு, பகையரசர் உவளகமும்[5] புகுந்து, பிறர் ஐயுறாவண்ணம் அங்கங்குள்ள அருமறைகளையும் மருமங்களையும்[6] அறிந்து, பகைவராற் கைப்பற்றாத நிலையில் அருமறைசோரா இயல்பினராய மாபெருந் திறலோரும், மறவோரும்' என்பர்.

ஜி.வரத., ஒற்றரை ஆளுவது. பிறரிடம் உள்ள பொருளைத் தன்னிடம் உள்ளதாகக் கேட்டு அறிதல்'.

கா.சு., 'பிறர்பால் நிகழ்வனவற்றை மறைவாக அறிந்து

---

2. நிகழ்ந்தனஅறிதல்—நடந்த செயல்களை அறிதல்
3. மேற்சொல்லிய—அரசியலில் இறைமாட்சி முதலாகக்கண்ணோட்டமிறுதியான அதிகாரங்களாற் கூறிய இலக்கணங்கள் அனைத்தையும் என்க.
4. அவ்விருமைக்கும்—தன் நாடு காக்கவும் பிறர்நாடு பிடிக்கவும்.
5. உவளகம்—அந்தப்புரம். அரசனுடையஉரிமைச் சுற்றத்தார் வாழிடம்.
6. மருமங்கள்—உயிர்நிலை போன்ற இரகசியங்கள்.

கூறுபவர் ஒற்றராவார்' ஒற்று என்ற முதனிலைத் தொழிற்பெயர் ஆகுபெயராக ஒற்றரைக் குறித்தது. ஒற்றாடலின் இன்றியமையாமையையும் ஏதுவையும் காட்டும் மணக்குடவர், பரிமேலழகர் விளக்கங்கள் சிறப்புடையன; ஏற்புடையன.

குழந்தை, இவ்வதிகாரத்தைத் தெரிந்து வினையாடலின் பின்னும், செங்கோன்மையின் முன்னும் ஆக ஐம்பத்தைந்தாம் அதிகாரமாக வைப்பர். ஆனால் அதற்குரிய ஏதுக்காட்டிற்றிலர்.

59.1. ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்
தெற்றென்க மன்னவன் கண். (நி அக)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'முறைசான்ற' பாடம். ஒற்றினையும் முறையமைந்த நூலினையும் தெளிய அறிந்த மன்னவனுக்கு இவையிரண்டையும் கண்களாகத் தெளிக எ—று.

அரசர்க்குக் கல்வி இன்றியமையாதது போல ஒற்றும் இன்றியமையாதது என்றவாறு. இஃது ஒற்றுவேண்டும் என்றது.

ஆ) பரிதி.: மனுநீதிநூலும் ஒற்றும் அரசற்குக் காவலாகிய இரண்டும் ....

இ) பரிப்.: ஒற்றினையும் உரை அமைந்த நூலினையும் தெளிய அறிக மன்னவன், இவை இரண்டும் கண்கள் ஆகலான் எ—று.

மறைந்தவை காணுங்கால் ஒற்றரானாதல், நூலினானாதல்காண வேண்டுமாதலின், அதற்காக இரண்டினையும் தெளிய அறிக. ஐயம் ஆகிய பொருள் உண்மை தோற்றாது என்று ஆயிற்று. ஈண்டு நூல் கூறியது எற்றுக்கு எனில் அரசனுக்குக் கல்வி இன்றியமையாது என்றற்கு. இஃது ஒற்று வேண்டும் என்றது.

ஈ) காளி.: ஒற்றரைக் கொண்டு ஒற்று ஆடலும் அரசியற்கு உரித்தாகிய உரைசான்ற கலைநூல்களும் என்னும் இவை இரண்டும்சாலத் தெளிவுற்று நிற்க மன்னனிடத்து எ—று.

தெற்று என்பது தெளிவுற என்றது.

உ) பரிமேல்: ஒற்றும் புகழமைந்த நீதி நூலுமாகிய இவை இரண்டினையும், அரசன் தன் இரண்டு கண்ணுமாகத் தெளிக.

ஒற்று–தன்கண் செல்லமாட்டாத பரப்பெலாம் சென்று கண்டு ஆண்டு நிகழ்ந்தன எல்லாம் உணர்த்தலானும், நூல் அந்நிகழ்ந்த வற்றிற்குத் தன்னுணர்வு செல்லமாட்டாத வினைகளையெல்லாஞ் சொல்லி உணர்த்தலானும், இவ்விரண்டனையுமே தனக்கு ஊனக் கண்ணும் ஞானக்கண்ணுமாகத்[1] துணிந்துகொண்டு ஒழுகுக என்பதாம் ஒற்றனை ஒற்று என்றார், வேந்தனைவேந்து என்றாற் போல[2] தெற்றென்க என்பது தெற்றென் என்பது முதனிலையாக வந்த வியங் கோள். அது தெற்றென என்னும் செயவெனெச்சத்தான் அறிக. இத னால் ஒற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

காரி: தெற்றென்க என்பது, தெற்றென் என்பது முதனிலையாக வந்த வியங்கோள். 'தெற்றென நன்கறிந்த நாளும் விரைந்து' என்னும் பாட்டில் தெற்றென என்னும் செயவெனச்சத்தாலுங் காண்க. 'பொள்ளென[3] 'கதுமென'[4] 'தவ்வென'[5] என்பனவும் அது. 'எழுந்திருந்தான்'[6] உய்த்துவிடும்'[7] என்பவற்றிற்கும் எழுந்திரு உய்த்துவிடு என முதனிலை காட்டுக.

ஊ) *கவிராசர்:* ஒற்றும் கீர்த்தியுடனே கூடின நீதிநூலும் ஆகிய இந்த விரண்டையும் அரசன் தன் கண்களிரண்டுமென்று தெளிக எ—று.

ஏ) *பழைய* 2: ஒற்றும் புகழமைந்த நீதிநூலும் இவையிரண்டும் அரசன் தன்னிரண்டு கண்களாகத் தெளிக.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பழைய உரைகளில் 'கண் தெற்றென்க' எனக்கூட்டி, கண் எனற் குரிய காரணங்களையும் காட்டும் *பரிமேலழகர்* உரை தெளிவானது; சிறந்தது.

பரிதியார் 'உரை சான்ற நூல் மனுநீதிநூல்' என்பர். பொது வகையாற் கூறிய *வள்ளுவர்* கருத்து ஒன்றனைச் சுட்டாது என்க.

பரிப்: உரையில் 'ஈண்டு நூல் கூறியதற்குக் காட்டுங் காரணம்

---

1. ஊனக்கண்-ஊனால் ஆயகண். ஞானக்கண்-அறிவேயாகிய கண். ஊனக்கண் ஒற்றன் ஞானக்கண் நூல் என்க.
2. வேந்து அரசு அமைச்சு என்பனபோல ஒற்று சொல்லால் அஃறிணை. பொருளால் உயர்திணை.
3. குறள் 487 4. குறள் 1173 5. குறள் 1144
6. " 121 7. " 168

ஏற்புடையதன்று: கல்வி கல்லாமை கேள்விகளில் கல்வியைப்பற்றிக் கூறிய ஆசிரியர் ஈண்டுக் கல்வியெனப் பொதுமையிற் கூறாது 'உரை சான்ற நூல்' என அடையொடு புணர்த்தி நூலைக் கூறியது மனு நூலையுமன்று; அறநூல்களையுமன்று அரசியல் ஆட்சியின் சூழ்ச்சியைத்தெரிவிக்கும் ஆட்சி நூல்களையேயாம்' என்க

காளி. 'மன்னவன்கண்' என்பதனை ஏழனுருபாகக் கொண்டு 'மன்னவனிடத்து' எனப் பொருள் காண்பர்.

தேவநேயர் 'அரசு, அமைச்சு, வேந்து என்பன போல ஒற்று சொல்லால் அஃறிணை; பொருளால் உயர்திணை' என்பர்.

இராம; உரைசான்ற நூல்-அரசியல் சட்டதிட்ட நீதிநூல்கள்' என்பர். சி.இ. 'புகழமைந்த நீதிநூல்' என்பர். 'அரசியல் நூல்' என்பர் கா.சு. 'கண்டு திருந்திய சட்ட நூல்' புகழ்படைத்த நீதிநூல்' 'விளக்கமுற்ற நூல்' எனப் பலவாறாக உரை காணலாம் என்பர் மு.கோ., 'முறைசான்ற நூல்' எனவும் பாடம் என்பர். 'அறிவை விளக்கும் நீதிநூல் 'அதாவது ஒற்றர் கூறும் உரைகளில் எவ்வளவு உண்மை என்றறிதற்கு உதவியான நூல் என்பர் வரத.

'முறை சான்ற நூல்' எனப்பாடங்கண்டவர் மணக். அதனைப் பின் பற்றியவர் மு.கோ.

மணக்குடவர் முதலான அனைவரும் கூறும்'கண் தெற்றென்க' என இயைத்துப் பொருள் செய்யின் 'ஆக' என ஒரு சொல் தந்து முடிக்கவேண்டியுள்ளது ஆதலானும், ஆசிரியர் வள்ளுவனார் கருத்து இதுவாயின்''இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' என்றாற் போல ஈண்டும், 'இவையிரண்டும் கண்ணென்க காவலற்கு' எனமுடித் திருப்பராதலானும் 'கண்' என்பதனைச் சினைப்பெயராக்காது ஏழனுருபாக்கிய காளிங்கர் உரை சிறக்கும் என்பர் உரைவேற்றுமை யுடையார். ஆயின் 'கண்ணென்ப வாழும் உயிர்க்கு' எனப் பொது மையிற் கூறிய ஆசிரியர் 'மன்னவன் கண் தெற்றென்க' என மன்ன வற்குச்சிறந்தகண் இவையிரண்டும் எனக்கொள்ளவைத்து அதனையே தெளிக என மக்களுக்கும் அறிவுறுத்தியிருப்பார் என்பதில் வலியுறுத் திக் கூறலும், ஒற்றாடலும் கலைநூல்களும் மன்னனிடத்துத்தெளி வுற்று நிற்க' எனின் செய்யாதனவற்றைச் செய்தனபோற் கூறும் வழுவமைதியாய்த் தெளிவுறுத்தாமையானும் காளிங்கர் உரை நடை யமைப்பில் தெளிவுற்றதாக இல்லை. ஏனையோர் உரைகள் சிறந்த னவாதல் கூடும்.

(ஒ) ஒப்புமைப்பகுதி:

ஒற்றும்.....மன்னவன்கண்;

புடைவரு சூழல் புலமான் வழுதி
பட மயிலோரும் மனைய வரோடும்
கடனறி காரியக் கண்ணவரோடும் நின்
தூருறை குன்றிற் றடவரையேறி —பரிபா., 19:20—23

உரைசான்ற நூல்...மன்னவன் கண்:

மண்ணியன் மன்னர்க்குக் கண்ணென வகுத்த
நீதி நன்னூல் ஓதிய நாவினள் —பெருங்.,4:10;13—14
காதிவேல் மன்னர் தங்கள் கண்ணென வைக்கப் பட்ட
நீதிமேல் சேறல் தேற்றாய் —சீவக.,233
நூல்நெறி நடக்குஞ் செவ்வையின்..... —கம்பராமா.,103

ஆயது செய்கை யென்ப தறத்துறை நெறியி னெண்ணித்
தீயவர்ச் சேர்க்கி லாது செவ்வியோர்ச் சேர்த்துச் செய்தல்
தாயினு முயிர்க்கு நல்குஞ் சவரியைத் தலைப்பட் டன்னாள்
ஏயதோர் நெறியி னெய்தி யிரலையின் குன்ற மேறி
—கம்பராமா.,3798

முற்றும்:

உளக்கண் நீதி நூலாக ஒற்றே வெளிக்கண் என விடுத்து
விளைக்கும் செயலால் மொழிதன்னால் வேண்டாச்
சுற்றம் வினைஞரையும்
அளக்க மைந்தா —விநா.அரசி.,96

ஓ) மேற்கோள்பகுதி:

பரிமேல்.:கடனறி காரியக்கண்ணவரோடு நின்; 'ஒற்றும்.....கண்' என்பதனால் கண்ணவர் என்றார் என்று விளக்குவர். (பரி 19:23.)

59.2. எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும் வல்லறிதல் வேந்தன் தொழில். (நஅ)

உரைப்பகுதி:

அ) மணக்:. பகைவராகியும் நட்டாராகியும் மத்திமராகியும்[1] உதா

. மத்திமர்— நண்பும் பகையுமின்றி நடுநிற்போர்.

சீனராகியும்[2] இருக்கின்ற அரசர்க்கும், அவர்சுற்றத்திற்கும், தம் சுற்றத்திற்கும், அறம் பொருள் இன்பங்களைப் பற்றி நிகழ்பவை எல்லாவற்றையும் நாடோறும் பிறர் அறிவதன் முன்னர்த் தான் ஒற்றால் விரைந்து அறிதல் வேந்தனது தொழில் எ—று.

ஆ) *பரிதி.:* சத்துருவுக்கும்[3] மித்துருவுக்கும்[4] உண்டான காரியத்தை ஒற்றினாலே அறிவது வேந்தன் தொழில் எ—று.

இ) *பரிப்.:* பகைவர் ஆகியும் நட்டோர் ஆகியும் மத்திமராகிய உதாசீனர் ஆகியும் இருக்கின்ற அரசர்க்கும் அவர் சுற்றத்திற்கும் தன் சுற்றத்திற்கும் அறம் பொருள் இன்பங்களைப்பற்றி நிகழ்பவை எல்லாவற்றையும் நாடோறும் பிறர் அறிவதன் முன்னம்தான் அறிதல் வேந்தனது தொழில் எ—று.

ஈ) *காளி.:* ஒற்றாமை பெரிதும் குற்றம் ஆகலான் அகத்தோரும் புறத்தோரும் அருகலரும்[5] ஆகிய அனைவர்க்கும் நிகழ்வனவாகிய நலம் தீங்குகளை நாடோறும் ஒற்றுவித்து விரைவின் உணர்தல் வேந்தனது செய்தி எ—று.

உ) *பரிமேல்.:* எல்லார் கண்ணும் நிகழ்வன எல்லாவற்றையும் நாள்தோறும் ஒற்றான் விரைந்தறிதல், அரசனுக்கு உரிய தொழில்.

எல்லார்க்கும் என்றது மூன்று திறத்தாரையும்[6]. நான்காவது ஏழாவதன் பொருட்கண் வந்தது[7]. நிகழ்வனவெல்லாம் என்றது நல்லவும் தீயவுமாய சொற்களையும் செயல்களையும்[8] அவை நிகழ்ந்த பொழுதே அவற்றிற்குத் தக்க அளியாகத் தெறலாகச் செய்ய வேண்டுதலின் வல்லறிதல் என்றும், அவ்விரு தொழிற்கும்[9] அறிதல் காரணமாகலின் அதனையே உபசார வழக்கால்[10] தொழில் என்றும் கூறினார். ஒற்றான் என்பது அதிகாரத்தான் வந்தது. இதனால் ஒற்றினாய பயன் கூறப்பட்டது.

---

2. உதாசீனர்—அயலார்.
3. சத்துரு—பகைவன்;
4. மித்துரு—நண்பன்
5. அருகலர்—அருகு—அலர்—அண்மையிலன்றிச் சேய்மைக்கண் இருப்பார்.
6. பகைவர் நட்பினர் அயலார் என்னும் மூன்று திறத்தார்.
7. எல்லார்க்கும் என்பதிலுள்ள நான்கனுருபு ஏழாவதன் பொருட்கண் வந்தது.
8. நிகழ்பவை—அரசனையும் ஆட்சியையும் பற்றிய நல்லனவும் தியனவுமாகிய சொற்களும் செயல்களும் ஆம்.
9. அவ்விரு தொழில்களாவன சொற்செயல்கட்குத் தக்கவாறு செய்தலும், தெளிந்திருத்தலும்.
10. அறிதல்காரணமும், தொழில்காரியமும் ஆகலான் அறிதலாகிய காரணத்தைத் தொழில் எனக் காரியமாகக் கூறியது உபசார வழக்கு.

காரி: நான்காவது ஏழாவதன் பொருட்கண் வந்தது. 'இதனது இது இற்று'[11] என்னும் சூத்திரத்துள், 'அன்ன பிறவும்' என்றதனால் ஊர்க்கட் சென்றான். ஊர்க்குச் சென்றான் என்பது போலும் என்க. ஞாபகத்தைக் காரணமாக்கி, அறிதலைத் தொழில் என்றது உபசார வழக்கு.

ஊ) *கவிராசர்:* எல்லாரிடத்திலேயும் நடக்கிற காரியங்களையெல்லாம் நாள்தோறும் ஒற்றராலே விரைந்து யறிதல் அரசனுக்கு உரித்தான தொழில் எ—று.

ஏ) *பழைய 2;* எல்லாரிடத்தும் நடப்பன எல்லாவற்றையும் நாள்தோறும் விரைந்து அறிதல் வேந்தனுக்குரிய தொழில்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''*எல்லார்க்கும்*'' என்பதற்குப் 'பகை நட்பு என்ற இருதிறத்தார்க்கும்' எனப் *பரிதியும்*, 'பகை நொதுமல் நட்பு என்ற முத்திறத்தார்' எனப் *பரிமேலழகரும்*, இவருடன் உதாசீனரையுஞ் சேர்த்து நால்வரிடத்தும்' என *மணக்குடவரும்* 'எல்லாரிடத்தும்' எனப் பொதுமையின் ஏனோரும் உரை காண்பர். *காளிங்கர்* 'அகத்தோரும் புறத்தோரும் அருகலரும்' என்பர்.

இவ்வுரைகளுள், இராமனாண்டால் என்ன? இராவணனாண்டால் என்ன? என்றிருக்கும் உதாசீனர் அரசியற்பற்றும் பகையும் இலராயினும் அவரறியாமலே ஆட்சிக்கு நன்மையும் தீமையும் அவர்கள் சொல்லானும் செயலானும் விளையலாம். ஆதலின் உதாசீனர்களையும் இணைத்துக் கூறிய *மணக்குடவர்* சிறக்கின்றார். உதாசீனர் மத்திய மருள் அடங்காரோ எனின், அடங்கார். மத்தியமர் நல்லது கெட்டது என அரசியற் போக்கையறிந்து ஒன்றினும் சாராமல் நடுநிற்பார். உதாசீனர் அவற்றைத் தம் சித்தம் வரையிற் கொண்டு சென்று சிந்தியாமல் வாளா இருப்பார் ஆதலான் என்க. *காளிங்கர்* 'அருகலர்' என்றது 'பகைவரை' என்க. பின்பு ''வினைசெய்வார், தஞ்சுற்றம், வேண்டாதார் என்றாங்கு ஐவரையும் ஆராய்வது ஒற்று'' குறள் (584) என்பாராதலின் ஈண்டு அவரல்லாதாரை எண்ணுதலே இயைபுடையதாகும். ஆண்டுக் கூறியது கூறல் நிகழாமைப் பொருட்டு ஏற்பன கொள்க.

---

11. தொல். சொல். 110

''எஞ்ஞான்றும் வல்லறிதல் வேந்தன் தொழில்' எனக் கிடந்த நிலையில் ''நாடோறும் அறிதல்'' எனவே பொருள் காண்பர் அனைவரும். வரத. 'எஞ்ஞான்றும் நிகழ்பவை' எனக்கூட்டி 'எல்லார்க்கும் என்றைக்கும் எல்லாம் நிகழ்தல் கூடும் அவைகளை விரைந்தறிதல் வேந்தன் தொழில்' என்பர். எஞ்ஞான்றும் அறிதல் என்பதனாலேயே எஞ்ஞான்றும் நிகழ்தல் அடங்குதலின் அதுவேண்டா கூற்றாம் என்க.

59.3. *ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன் கொற்றம் கொளக்கிடந்தது இல்.* (நிஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒற்றாலே ஒற்றிப் பொருள் விசாரியாத மன்னவன் கொள்ளக்கிடந்ததொரு வெற்றி இல்லை எ—று.

இஃது ஒற்றின்மையால் வரும் குற்றம் கூறிற்று.

ஆ) பரிதி.: மாற்றார் செய்யும் தொழிலை ஒற்றினாலே உறுதியாக விசாரித்து அந்த ஏகாந்தத்தை[1] அடக்கி அதற்குத்தக்க பரிகாரம் செய்வான் கொற்றத்தை[2] ஒருவராலே வெல்லப்படாது எ—று.

இ) பரிப்.: ஒற்றராலே ஒற்றிப் பொருளை விசாரியாத மன்னவன் கொள்ளக் கிடந்தது ஒரு வெற்றி இல்லை எ—று.

இஃது ஒற்று இன்மையால் வரும் குற்றம் கூறிற்று.

ஈ) காளி.: தனது நாட்டகத்து வாழ்வாரது வன்மை மென்மையும் வேற்றரசர்மாட்டுள்ள வன்மையும் மென்மையும் ஒற்றாளரை உழலவிட்டு[3] மற்று அவர்களான் ஒற்றுவித்துப் பின்னும் அவர் உரைப்பதன்கண் பொருட் கருத்தும் தெரிந்து உணரவல்லாத[4] மன்னனானவன் அரசியல் திறமை கோடற்கு இயைபாவது யாதும் இல்லை எ—று.

உ) பரிமேல்.: ஒற்றினானே எல்லார்க் கண்ணும் நிகழ்ந்தவற்றை ஒற்றுவித்து அவற்றான் எய்தும் பயனை ஆராயாத அரசன், வென்றி அடையக்கிடந்தது வேறொருநெறி இல்லை எ—று.

1: ஏகாந்தம்—தனிமை
2: கொற்றம்—வெற்றி
3: உழலவிட்டு—சுற்றவிட்டு
4, உணரவல்லாத உணர ஆற்றலற்ற

அந்நிகழ்ந்தனவும் பயனும் அறியாது பகைக்கு எளியனாதல் பிறிதின் தீராமையின், 'கொற்றம் கொளக்கிடந்ததில்' என்றார். இதற்குக் கொளக்கிடந்ததொரு வென்றிஇல்லை என்று உரைப்பினும் அமையும். இதனால் அத்தொழில்[5] செய்யாதவழி வருங்குற்றம் கூறப் பட்டது.

ஊ) கவிராசர்: ஒற்றினாலே எல்லார்கண்ணும் நடக்கிற காரியங் களையறிந்து, அதனாலெய்தும் பலன்களை யறியாத வரசன் வெற்றி யடையக் கிடந்தது வேறொரு நெறியில்லை எ—று.

ஏ) பழைய 2: ஒற்றினாலே எல்லாரிடத்தும் நிகழ்ந்தனவற்றை ஒற்றுவித்து அவற்றான் எய்தும் பயனை ஆராயாத அரசன் வெற்றி கொள்ளக்கிடந்தன காரியம் வேறொன்றும் இல்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக். 'கொளக் கிடந்தது கொற்றம் இல்' எனக் கூட்டிப் பொருள் காண்பர். இதனால்'இல்' என்ற பயனிலைக்குக் 'கொற்றம்' எழுவாய் ஆகிறது. பரிமேலழகர் 'கொற்றங் கொளக்கிடந்தது' என் பதனை வினையாலணையும் பெயராக்கி 'வெற்றியடையக் கிடந்த வேறொரு நெறி இல்லை' என்பர். இதனால் 'கிடந்தது' என்ற வினை யாலணையும் பெயர் எழுவாய் ஆகிறது. இவருள் காணப் பெறும் கருத்து வேறுபாடு 'ஒற்றாடலாற் கொள்ளுங் கொற்றமே கொற்றம் வேறு இல்லை' என்பது. மற்றொன்று 'வேறு நெறியில்லை' என்பது இஃதொன்றே வெற்றிக்கு வழி என்பது. இரண்டன் முடிநிலைக் கருத் தும் ஒன்றாதலைக் காண்க. பரிமேலழகர் கூறும் அமையும் என்ற உரை மணக்குடவரதேயாதல் காண்க.

பரிதியார் 'ஒற்றினான்—ஒற்றினாலே, ஒற்றி— (உறுதியாக) விசாரித்து, பொருள் தெரியா—அந்த ஏகாந்தத்தை யடக்கி ஏற்ற பரிகாரஞ் செய்யாதவன் வெற்றியடைய இயலாது' என்ற எதிர்மறைத் தொடரை உடன்பாடாக மாற்றி எழுதுகிறார். இங்ஙனம் எழுதுதல் இவர் மரபு. இவரிடம் பாட மாற்றம் இல்லை. 'ஏகாந்தம்' என்பது அவனுடைய தனிமையான உணர்ச்சி. வேறு எவருக்கும் தெரியாத மறைநிலை என்பதே அதன் கருத்தாதலைத் தெளிக.

இராம. உரையில் 'பொருள் தெரியா' என்பதற்கு 'உளவுகளை அறிந்து கொள்ளாத' எ ர்பர். இப்பொருள் 'ஒற்றி' என்பதனாலே

5. அத்தொழில்—ஒற்றிப்பொருள் தெரிந்தொழில்

கிடைத்தலின் 'பொருள் தெரிதல்' உரைபெறாத் தொடராகிறது. அதனால் 'ஒற்றி, அவர் அங்ஙனம் செய்வதன் நோக்கத்தை அறிந்து கொள்ளாத அரசன்' என்றிருப்பின் தெளிவுடையதாகும். பொருள்–கருத்து அல்லது நோக்கம் என்பது. இதற்கு 'அவற்றால் அடையும் பயனை யாய்ந்து அறியாத அரசன்' என உரைப்பர் சபாபதியாரும் ஏனையோரும். இவைகளும் அக்கருத்தை யரண் செய்வனவாகும்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஒற்றினான் ஒற்றிப் பொருள் தெரிதல்:

''ஒற்றினான் ஒற்றிப் பொருள் தெரிதல் முன்னினிதே
முற்றான் தெரிந்து முறைசெய்தல் முன்னினிதே.''. —இனிய.36

59.4. வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார்
என்றாங் (கு)
அனைவரையும் ஆராய்வ தொற்று (நெ அ)

உரைப்பகுதி:

அ) மணக்.: தனக்குக் காரியமானவற்றைப்பார்த்துச் செய்வாரும், தமக்குச் சுற்றமாயிருப்பாரும் தம்மை வேண்டாதிருப்பாருமாகிய அனைவரையும் ஆராய்ந்தறிவான் ஒற்றனாவான் எ—று.

இவை இரண்டும் ஒற்றவேண்டுமிடம் கூறின.

ஆ) பரிதி.: இராசகாரியஞ்செய்வாரையும் அரசன் சுற்றத்தாரையும், பகைவரையும், இங்குச்சொன்ன மூவரையும் மற்றுள்ளோரையும் கசடற[1] ஆராயவல்லதே ஒற்று எ—று.

இ) பரிப்.: தனக்குக் காரியமானவை பார்த்துச் செய்வாரையும், தனக்குச் சுற்றமாய் இருப்பாரும் தம்மை வேண்டாது ஆகிய அனைவரையும் ஆராய்ந்து அறிவான் ஒற்றன் எ—று.

மேல் எல்லார்க்கும் நிகழ்பவை ஒற்ற வேண்டும் என்றார்: இது தன் காரியத்திற் செய்வார் செய்கின்ற அளவும் தனக்கு நட்பும் பகையுமாய் இருப்பாரையும் ஒற்றவேண்டும் என்றது. இவை இரண்டும் ஒற்ற வேண்டும் இடம் கூறின.

1. அற –குற்றமற

ஈ) காளி.: இவர் உரை பரிதியார் உரை போன்றதே.

உ) பரிமேல்.: தம் காரியஞ் செய்வார், சுற்றத்தார், பகைவர் என்று சொல்லப்பட்ட அனைவரையும் சொற்செயல்களான் ஆராய்வானே ஒற்றனாவான்.

தம் என்றது அரசனோடு உளப்படுத்தி. அவனுக்குக் காரியம் செய்வார் செய்வனவும், சுற்றத்தார் தன்னிடத்தும் நாட்டிடத்தும் செய்வனவும், பகைவர்தன் அற்றமாராய்தலும்[2] மேல் தேறப்படுதலும் முன்னிட்டுத் தன்னிடத்துச் செய்வனவும் அறிந்து, அவற்றிற்கு ஏற்றன செய்ய வேண்டுதலின், இம்மூவகையாரையும் எஞ்சாமல்[3] ஆராய வேண்டும் என்பார் 'அனைவரையும் ஆராய்வது ஒற்று' என்றார்.

ஊ) கவிராசர்: தம் காரியஞ் செய்வார் சுற்றத்தார் பகைவரென்று சொல்லப்பட்ட அனைவரையுஞ் சொற்செயல்களான் ஆராய்வானே ஒற்றனாவான் எ—று.

ஏ பழைய 2: மந்திரியர், சேனாவரையர், மணியஞ் செய்வார்[4],, கணக்கெழுதுவார், இத்தகைக் காரியஞ் செய்வார், சுற்றத்தார், பகைவர் என்று சொல்லப்பட்டவரையும் மற்று மெல்லாரையும் அவரவர் செய்யும் காரியங்களையும் அவரவர் சொல்லும் சொற்களையும் ஆராய்ந்தறிதல் ஒற்று.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'வினைசெய்வார்'

'தனக்குக் (அரசனுக்கு) காரியமானவற்றைச் செய்வார்' மணக். பரிப்., பரிமேல், கவிராசர்; இராசகாரியஞ்செய்வார்' பரிதி.

இவற்றுள் அரச காரியர் செய்வோராகிய அமைச்சர் முதலாயினாரையும் ஒற்றியறிதல் வேண்டும் என்றதே சிறப்புடையது. இப்பகுதிக்குப் பழைய உரை தரும் விளக்கம் மிக ஏற்புடையது. வினை செய்வான் கோடாமை உலகு கோடாது ஆகலின் மன்னன் நாடோறும் நாடுக என்பதனை ஒற்றரால் நாடுக என விதிப்பது இக்குறள்.

---

2 அற்றம்– சோர்வு
3. எஞ்சாமல் – குறையாமல் அதாவது ஒருசிறிதும் எஞ்சியிராமல்.
4. மணியஞ்செய்வார்—வரிவசூலிப்பவர்

'தம் சுற்றம்' என்பதிலுள்ள 'தம்' என்பதைப் பிரித்து இங்கும் கூட்டித் 'தம் வினை செய்வார், தஞ்சுற்றம் தம் வேண்டாதார்' என இயைத்துப் பொருள் கண்டவர் இராமலிங்கர். 'தம்வினை செய்வார்' என்றே மணக்குடவர் முதலானோரும் உரைத்தனர். ஆயினும் வினை செய்வார்-அரசகாரியம் பார்ப்பார் எனப் பொதுமையில் இருந்தலே சிறப்பு.

59.5 கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று. (நி.அ)

உரைப்பகுதி:

அ) மணக் : வினாவப்படாத வடிவோடேகூடி, கண்ணஞ்சுதலும் இன்றி, அறிந்த பொருளை எவ்விடத்தினும் சோர்வின்றியே அடக்க வல்லவன் ஒற்றனாவன் எ—று.

ஆ) பரிதி.: கடவுதலையுடைய[1] வடிவோடுநின்று மனத்தில் கலக்க மின்றி எவ்விடத்தும் சோராமை வல்லது ஒற்று எ—று.

இ) பரிப்.: வினாவப் படாத வடிவோடே கூடிக் கண்ணஞ்சுதலும் இன்றி அறிந்த பொருளை எவ்விடத்தினும் சோர்வின்றியே அடக்க வல்லவன் ஒற்றன் ஆவன் எ—று.

வினாவப்படாத வடிவு ஆவது வணிகரும் பார்ப்பாரும் ஆகிய ஒற்றற்குத்தக எவ்விடத்துஞ் சோர்வு இன்றியே அடக்கவல்லவன் ஒற்றன் எ—று.

ஈ) காளி.: அறவோர் வேடமும் துறவோர் வேடமும் வறியோர் வேடமும் பிறவுமாகிய நல்லுருவு கொண்டு ஒற்றாடுமிடத்து அமைச்சரும் பிறரும் ஆகிய அறிவுடையாளருள் யாவரேனும் தன்னைக்கண்டு ஐயுற்று இவ்விடைவந்து எய்திய நீ யாரோதான் என்று வினவுதல் செய்யாதபடி உருவேடத்தோடு[2] திரிதலும் மற்று இங்ஙனம் திரியுமிடத்தும் ஐயுற்றுக் கைப்பற்றியும் சிறைப்படுத்தியும் வருத்தம் செய்யுமிடத்துச் சிறிது நெஞ்சு அஞ்சாது நிறை உரம் செய்தலும்[3] மற்றுத் தான் தகைந்து உட்கொண்ட மறைபொருளினை வேறு ஓரிடத்தும்

---

1. கடவுதல்– ஏவுதல்
2. உருவேடம்— ஐயுற்று வினவத்தோன்றாத உட்கும் வேடம்.
3 நிறைஉரஞ் செய்தல்– மிக்க உறுதி காட்டுதல்.

சோர விடாமையும் வல்லது யாது? மற்று அதுவே அரசர்க்கு ஒற்றா வது எ—று.

மற்றும் தனது தந்தை தாயர் நட்டோர் சுற்றம் என்னும் இவர் மாட்டும் சோரவிடாமை ஒற்று என அறிக.

உ) *பரிமேல்.*: ஒற்றப்பட்டார்[4] கண்டால், ஐயுறாத வடிவோடு பொருந்தி அவர் ஐயுற்று அறியலுறின்செயிர்த்து நோக்கிய அவர் கண்ணிற்கு அஞ்சாது நின்று, நான்கு உபாயமும்[5] செய்தாலும் மனத்துக் கொண்டவற்றை உமிழாமை[6] வல்லவனே ஒற்றனாவான்.

கடா[7] என்பது கடுக்கும் என்னும் பெயரெச்சத்து எதிர்மறை. ஐயுறாத வடிவாவன பார்ப்பார், வணிகர் முதலாயினார் வடிவு.

காரி.: கடா என்பது, கடுக்கும் என்னும் பெயரெச்சத்தெதிர் மறை. கடுத்த என்னும் இறந்தகாலப் பெயரெச்சத் தெதிர்மறை யாகிற கடாத என இறந்தகாலத் தகர இடைநிலை பெற்றே நிற்கும் என்பது இவர் கருத்துப்போலும். தகர இடைநிலை பெறாது நிற்கில் விகாரமென்பர். அது 'கெடாஅ வழிவந்த கேண்மையார்'' 'வளங்குன்றா நாடென்ப'[9] இவற்றின்கண் காண்க.

ஊ) *கவிராசர்.*: ஒற்றப்பட்டார் கண்டால் சந்தேகப்படாத வடி வோடு பொருந்தி, அவர்கள் அண்டையிலே யிருக்கையிலே அவர்கள் கடினமாகப் பார்க்கிற பார்வைக்கும் பயப்படாமல் மனத்திடமாயிருந்து மறவாமற் கேட்டிருக்க வல்லவனே ஒற்றனாவான் எ—று.

ஏ) *பழைய 2*: ஒற்றுக் கேட்பவரைக் கண்டால் ஐயப்படாத வடி வொடு பொருந்தி, அவரையுற்றறியலுறின். செயிர்த்து நோக்கிய வரிடத்து அஞ்சாது நின்று, சாம பேத தான தண்டஞ் செய்தாலும் மனத்துட் கொண்டவற்றை உமிழாமைவல்லவனே யொற்றாவான்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''கடாஅ உரு''

''வினவப்படாத உரு'' மணக்., பரிப்., காளி.;

4, ஒற்றப்பட்டார்—ஒற்றர்களால் ஆராயப்படும் பகைவர்.
5. நான்கு உபாயங்கள்—தானம், சாமம், பேதம், தண்டம்என்ற நால்வகை யுபாயங்கள்.
6. உமிழாமை—வெளிப்படுத்தாமை.
7. கடா என்பதன் விளக்கத்தைத் தொகுப்பாசிரியர் குறிப்பிற் காண்க
8. குறள் 809 9. குறள் 736.

''ஐயுறப்படாதவடிவு'' —பரிமேல்.; கடுக்கும்-ஐயுறும். கடா—ஐயுறப்படாத. எனக் 'கடுக்கும்' என்பதற் எதிர்மறை 'கடா' என்பர் பரிமேலழகர். இது நுண்ணிய கருத்து. கவிராசர் முதலியோர் கருத்தும் இது.

''கடவுதலையுடைய வடிவு'' என்பர் பரிதி., 'விருந்தினர் சுற்றத்தார் இவர் வடிவிற்சென்று நலந்தீங்குகளை வினவுதலை யுடைய வடிவம்' என்றனர். கடா—செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டுவினை எச்சம். இது ஒற்றான் இயையுமாயினும் துறந் தார் வேடத்தொடு சேறல் முதலான பிறவடிவோடு செல்லுதலை அடக்காமையின் இவ்வுரை அத்துணைச் சிறப்பினதன்று.

தொல்லாசிரியர்கள் 'கடா உரு' என்பதில் உள்ள 'கடா' என்ப தற்கு வினவப்படாத, ஐயுறப்படாத, வினவுதலையுடைய என எழுதித் தம்முள் மாறுபடுகின்றனர். பரிமேலழகர் 'கடுக்கும்' என்னும் பெய ரெச்சத்தெதிர்மறை என்று இலக்கணக் குறிப்புந் தருவர்; பரிமேலழகர் கொண்ட பொருள் கடுத்தல்-ஐயுறுதல் என்பது. ''நெஞ்சு நடுக்குறக் கேட்டும் கடுத்தும்'' (கலி. 24.1.) எனவும், ''கௌவை நோயுற்றவர் காணாது கடுத்த சொல்' (கலி.76.7) எனவும் இப்பொருளில் பெரும் பான்மை வழக்குடையது. ஆதலின் கடு-ஐயுறு என்னும் பகுதியடி யாகப் பிறந்த கடுக்கும் என்னும் செய்யுமென் பெயரெச்சம் எதிர்மறை யாங்கால் கடு+ஆ+த்+அ = கடாத என்றாகி, அது ஈறு கெட்டு 'கடாஅ உரு' என்று ஆயிற்று. இதிலுள்ள 'ஆ' எதிர்மறையிடை நிலை. ஐயுற்றவழியே வினா நிகழுமாதலின் கடா என்பது வினாவுக் கும் பெயராய்த் தனிப்பகுதியாயிற்று. ஆகவே 'கடாவுருவோடு' என் பதற்கு இருசாரார் உரையும் ஏற்புடையதாகும். பரிதி, கூறும் கடவு தலையுடைய (வினவப்படுகின்ற)என்ற பொருளிலோ இவர் கடாவு+ உருவு = கடாவுரு எனப் பிரித்துப் பொருள் கொண்டிருப்பர் எனக் கருதலாம். விகாரத்தால் உகரங்கெட்டதாகலாம்.

காரிரத்னகவிராயர், இதற்கு விளக்கந்தரும்போது, கடுக்கும் என்னும் பெயரெச்சத்து எதிர்மறை கடுத்த என்பதன் மறையாகிய கடாத என்பதும் 'த்' என்னும் இறந்தகால இடைநிலையைப் பெற்றே நிற்கும் போலும் எனக் கூறுவர். எதிர்மறையாங்கால், கடுத்த, கடுக் கின்ற, கடுக்கும் என்ற மூன்றும் கடாத எனவே நிற்கும். இதில் உள்ள 'த்' காலங்காட்டும் இடைநிலையன்று; எழுத்துப்பேறு என்க. ,'கேடறியாக் கெட்டவிடத்து'' என்னும் குறளிலும் அறியா, குன்றா

என்ற பெயரெச்சங்களிலும் அவை கால உறுப்பாகாமையும் எழுத்துப் பேறாதலையும் உன்னுக. இதனாலேயே நன்னூலார் ''எதிர்மறை மும்மையும் ஏற்கும்'' என்றது. ஆகவே இக்குறிப்பு பாடங்கேட்டார் சிலரால் ஏடுகளிலேயே சேர்ந்திருக்கலாம்.

'உகாமை–உமிழாமை' *பரிமேல்.*; உகுத்தல்–சிதறுதல். அது போலப் பலவிடத்தும் பலரும் அறியப் பரப்புதல். அஃதில்லாமையே ஒற்றர்க்குச் சிறப்பு என்றவாறு.

(ஒ ஒப்புமைப்பகுதி:

கடாஅவுருவொடு:

தாயினும் பழகி னார்க்கு தன்னிலை தெரிக்க லாகா
—*கம்பராமா.*, 68 96

மாயவல் லுருவத் தாண் —*கம்பராமா.*:7075

இற்றிது கால மாக இலங்கையர் வேந்தன் ஏவும்
ஒற்றர்வந் தளவு நோக்கிக் குரங்கென உழல்கின் றாரைப்
பற்றினன் என்ப மன்னோ பண்டுதான் பலநாட் செய்த
நற்றவப் பயன்கள் துய்ப்பான் முந்துறப் போந்த நம்பி
—*கம்ப., ஒற்றுக்.*24

முற்றும்:

.... ஒற்றாவதை ஐயுறாத உருவோடு
துளக்க மின்றி என்செயினும் சோர்வி லாத தெனஅறிக
—*விநா., அரசி.*, 96

ஒ) மேற்கோள்பகுதி:

இளம்.: பொருளொடு புணர்ந்த பக்கம்; பக்கம் என்றதனால் ஒற்று, தூது, வினைசெயல்வகை, குடிமை, மானம் என வருவனவெல்லாம் கொள்க எனக் கூறி ஒற்று என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 75.)

பெருந்.: இதனை எப்படி ஓசை ஊட்டுவது எனில் குற்றியலிகரம் என்று ஒன்றாக்கி இகரம் அலகு பெறாதாக்கி ஓசை ஊட்டுக என்பர்; அதுவும் பிழை என்க. இகரம் குற்றெழுத்தாய் நின்று அலகுகாரியம் பெறுதல் அல்லது ஒற்றெழுத்தே போல் அரைமாத்திரை உடைத்தாயினும் அலகுகாரியம்பெறாது ஒழிதற்குக் காரணம் இன்மையால் என்க' என்று இக்குறளுக்குக் குறிப்பு எழுதுவர். (வீர. 125.)

இது ஈரடி ஒவ்வாது வந்தமையால் சிந்துப் போலியாம் என்பர். (வீர. 127.)

59.6. துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்(து)
என்செயினும் சோர்வில தொற்று. (நஅசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: தவஞ்செய்வார் வேடத்தராகி நாட்டெல்லையைக் கடந்து போய், அங்குள்ள செய்தியை ஆராய்ந்து, அவ்விடத்து அகப் பட்டால் அவ்விடத்துள்ளார் துன்பமாயினும் இன்பமாயினும் செய்து கேட்டாலும், தன் உள்ளக்கருத்தைச் சோரவிடாதவன்[1] ஒற்றனாவன் எ—று.

ஆ) பரிதி.: தவஞ்செய்வார் வேடத்தராகி மிகஆராய்ந்து பொறுக்க அல்லாத துன்பங்களைப் பிறர் செய்யினும் வாய்சோராதது ஒற்று எ—று.

இ) பரிப்.: தவம் செய்வார் வேடத்தார்ஆகி, நாட்டு எல்லையைக் கடந்து போய், அங்கு உள்ள செய்தியை ஆராய்ந்த இடத்து, அகப் படாமல் துன்பம் ஆயினும் இன்பம் ஆயினும் செய்யினும் தனது உள்ளத்தைச் சோர விடாதவன் ஒற்றன் ஆம் எ—று.

ஈ) காளி.: துறந்தோர் வேடம் முதலாகப் பல வேடங்களிலும் ஒற்று ஆராயும் இடத்துப் பிறர் தன்னையும் பற்றி ஆராய்ந்து கட்டு தல் கடுத்தல் எற்றுதல்[2] முதலிய இடரால் இடர்படுத்திக் கடாவினும் தன் தன்மையில் சிறிதும் சோர்வுபடாதது யாது; மற்று அதுவே அரசர்க்கு ஒற்றாவது எ—று.

உ) பரிமேல்.: முற்றத்துறந்தாராயும் விரத ஒழுக்கினராயும் உள் புகுதற்கரிய இடங்களெல்லாம்[3] உள்புக்கு ஆராயவேண்டுவன ஆராய்ந் தறிந்து, ஆண்டையார் ஐயுற்றுப் பிடித்து எல்லாத் துன்பமுஞ்[4] செய்து கேட்டாலும் தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற்றனாவான்.

---

1. சோரவிடாதவன்- மறந்து பிறர் அறிய சொல்லாதவன்
2. கட்டுதல். கடுத்தல். எற்றுதல் -செயல்படாது தடுத்தல்; ஒறுத்தல். களியேற்றல் போல் வன.
3. உள்புகுதற்கரிய இடங்கள் - அந்தப்புரம் பொற்பண்டாரம், படைக்கலச் சாலை, மந்தணப் பேரவையாகிய மந்திரிசபை முதலாயின.
4. எல்லாத்துன்பமும்-கிட்டிகட்டுதல். அண்ணாந்தாளிடுதல். தலைகீழாகத் தொங்கவிடு தலும், மூக்கில் மிளகு நீரேற்றுதலும், மிளகாயை இட்டுப் பொசுக்குதலும் போல் வன செய்தல், நகக்கணுவில் ஊசியேற்றுதல். தொப்பூழில் பிள்ளைப் பூச்சியை வைத் துக் கட்டுதல், காதில் எறும்பு, ஈ இவைகளை விட்டுக் குடையச் செய்தல் போல்வன.

விரத ஒழுக்கம் தீர்த்தயாத்திரை முதலாயின.[5] செயினும் என்பது அறவோர் என்று செய்வாரின்மை விளக்கி நின்றது.[6] மேல்[7] நால் வகை உபாயத்தினும் சோர்வின்மை சொல்லிவைத்து ஈண்டும்[8] தண் டத்தைப் பிரித்துக் கூறியது அதனது பொறுத்தற்கு அருமைச்சிறப்பு நோக்கி. இதனுள் படிவம் என்றதனை வேடமாக்கித் துறந்தார் வேடத்தராகி என்று உரைப்பாரும் உளர்.[9]

ஊ) கவிராசர்: சகலத்தையும் துறந்தவர்களாயும் விரதசீலாசாரங் களுள்ளவர்களாயும் உள்புகுதற்கரிய விடங்களெல்லாம் உள்புகுந்து ஆராய வேண்டியதை யாராய்ந்தறிகிறதிலே அவர்கள் கண்டு பிடித்துக் கொண்டு எத்தனை வாதைப்படுத்திக் கேட்டாலும் தன்னை யின்னானென்று வெளிப்படுத்தாதவனே ஒற்றனாவான் எ—று.

ஏ) பழைய 2: முற்றத்துறந்தார் ஆகியும் விரத வேடத்தர் ஆகியும் பார்ப்பார் வணிகர் ஆகியும் வேடதாரிகள் ஆகியும் ஐயமேற்பவர் ஆகியும் உள்புகற்கு அரியவிடத்தும் உள்புக்கு ஆராயவேண்டுவன வெல்லாம் ஆராய்ந்து பார்த்துக் கேட்டு நிற்கும் இடத்து, கண்டு ஐயுற்றுப்பிடித்து எல்லாத் துன்பமுஞ் செய்து கேட்டாலும், தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற்றனாவான்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''துறந்தார் படிவத்தராகி''

ஆறாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு 'தவஞ் செய் வாரின் வேடத்தராகி' என்பர் மணக்., பரிப்.,பரிதி., காளி.,கா.சு.: தேவநேயர்.

'உம்மைத்தொகையாகக் கொண்டு' 'துறந்தாரும்,விரத ஒழுக்கத் தினரும் ஆகி' பரிமேல்., கவிராசர்., பரிப்., 'துறந்தார் என்பது ஒப்புமைபற்றி தீர்த்த யாத்திரை புரிவரையும் காட்டும்' என்பர் தேவ நேயர்.

இராம; ''துறந்தார் படிவத்தராகி'' என்பதற்குத் துறவிகளைப்

5: உண்டி சுருக்கல், ஆலய வழிபாடு முதலியன.
6: செயினும் என்பது செய்வாரில்லாமையை உணர்த்துதலால் எதிர்மறையும்மையாம்
7, 585—ஆம் குறளில் 'யாண்டு முகாஅமை' என்பது:
8: 'ஈண்டுத்' என்றும் பாடமுண்டு:
9. உரைப்பாரும் உளர் என்றது மணக்குடவர், பரிதி., பரிப்பெருமாள், காளிங்கர் இவர் களை என்க.

போல வேடம் பூண்டு என்பது பொருள் அன்று. 'கடாஅ வுருவொடு' என முற் கூறினமையின் ஆசிரியர் கூறியது கூறார் ஆதலான் என்க. 'பற்றற்றார் போல அதாவது அரசகாரியங்களிற் றொடர்பில்லா தாரைப் போல' என்பதும், ' இறந்தாராய்ந்து— என்பதற்கு 'நுழைய முடியாத இடங்களில் எல்லாம் புகுந்து ஆய்ந்து' என்பது பொருளல்ல, இது முற் கூறிய 'யாண்டும்' என்பதில் அடங்கியது; என்றும் 'இறந்து' என்பதற்குப் பரிமேலழகர் கூறுவது பொருளன்று; இதுவும் முற்குறளில் வந்த 'யாண்டும்' என்பதனுள் அடங்கியதே. ஆதலால் 'இறந்து ஆராய்ந்து' எனக்கூட்டி முடிய அல்லது தீர ஆராய்ந்து என் பதே பொருள்' என்றும் கூறுவர். 'இவ்வுரை பரிமேலழகரை மறுப்ப தாயினும் இறுதியான் கொள் முடிவில் எங்ஙனம் மாறுபடுகிறது என் பது காண இயலவில்லை.

வரத. 'துறந்தார்' சந்நியாசி, அந்த நாட்டைவிட்டுத் துறந்த பர தேசி என்றும் இறந்து ஆராய்ந்து எல்லையைக் கடந்து, 'புகை நுழையாத இடத்தும் புகுந்தாய்ந்து' என்றும் பொருள் தருவர்.

இவ்வுரைகளுள் தாம் ஆராய வந்த பொருள்களிற் பற்றற்றவர் போலிருந்து, தீர ஆய்ந்து, பொறுக்க இயலாத துன்பத்தைச் செய் யினும் சோர்விலது ஒற்று என்ற இணைப்புரை ஏற்புடையது.

மணக்குடவர் 'என்செயினும்' என்பதற்கு 'இன்பஞ் செயினும், துன்பஞ்செயினும்' என்றுரைப்பர். ஏனையோர்' துன்பஞ் செயினும், ஒறுப்பினும்' என்பர். இதற்குக் 'கடுத்தல் கட்டுதல் எற்றுதல் முதலிய இடரால் கடாவினும்' என்ற காளிங்கர் விளக்கம் நயமுடையது. ஆத லால் பலருரையுளும் நயமுடையனவற்றை இணைத்து எண்ணித் துணிதல் சிறந்தது ஆம் என்க.

ஏ) ஒப்புமைப்பகுதி:

துறந்தார் படிவத்தர் ஆகி;

பாத்தில்சீர்ப்பது முகன் படிவவொற் றாளர்சொல்
கோத்தெனக் கொடுத்தனன் கொழுநிதி —சீவக.1845

தாழ்ச்சி யின்றித் தருசகன் தமரோடு
ஏழ்ச்சியும் எறிபடை அளவும் எம் பெருமான்
சூழ்ச்சியும் சூழ்பொருள் துணிவும் எல்லாம்
படிவ ஒற்றின் பட்டாங்கு உணர்ந்து —பெருங்.3:25:51

என்செயினும் சோர்விலது ஒற்று:

இனமாழ் என்றுரைப் பினுமே தாமணான்
முனமா கியபான் மைமுளைத் தெழலால்
புனிமா மலர்வேய் நறும்பூங் குழலாள்
மனமா நெறியோ டியமன் னவனே —சீவக ,215

கல்விக்கண் மிக்கோன் சொல்லக் கருமன நிருதக் கள்வர்
வல்விற்கை வீர மற்றிவ் வானரர் வலியை நோக்கி
வெல்விக்கை அரிதென் றெண்ணி வினையத்தால் எம்மை எல்லாம்
கொல்விக்க வந்தான் மெய்ம்மைக் குரங்குநாம் கொள்க என்றார்
—கம்பராமா. ,6902

59.7. மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை ஐயப்பா டில்லதே ஒற்று. (நி.அ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பிறரால் மறைக்கப்பட்டவற்றைக் கேட்டு அறிய வல்லனாகி, அறிந்தவற்றைத் தீர அறியவல்லவனே ஒற்றனாவன் எ—று.

இவை மூன்றும், ஒற்றிலக்கணம் கூறின.

ஆ) பரிதி.: பிறர்மனை செய்வனவற்றைக் கேட்டறியவற்றால் அறிந்த பொருள்களை ஐயமின்றித் துணிந்து அறியவல்லது ஒற்று எ—று.

இ) பரிப்.: பிறரால் மறைக்கப்பட்டவற்றைக் கேட்டு அறிய வல்லன் ஆகி அறிந்தவையிற்றை ஐயம் தீர அறிய வல்லன் ஒற்றன் ஆவான் எ—று.

இவை மூன்றினாலும் ஒற்றன் இலக்கணம் கூறிற்று.

ஈ) காளி.: வேந்தரிடத்தும் பிறரிடத்தும் மிகவும் மறைபொருளாகிய வினைச்சூழ்ச்சிகளை வினாவியும் விடுத்தும்,[1] நட்பினும் நகையினும் பிறவினும் தெரிந்து, விளங்கக் கேட்டுணர வல்லனும் ஆகி, அங்ஙனம் அறிந்தவைதம்பால் சிறிதும் ஐயப்பாடு இன்றித் தெளிவுற உரைக்கும்திறமையுள்ளது யாது? மற்று, அதுவே அரசற்கு ஒற்றாவது எ—று.

---

1. விடுத்தும்—விடையளித்தும்.

இனி மற்று இங்ஙனம் ஒற்றரைக்கொண்டு உறுதி வினைப்பண்பு உணர்ந்த அரசனானவன், அவ்வுறுதி வினைவாய்ப்பின் அக்காலம் கழிவதன் முன்னரே கீழ்ச் சொல்லிப் போந்த காலம் அறிதல். இடன் அறிதல் என்னும் கருத்தினைக் கூறுவழுவாமல்[2] குறிக்கொண்டு மற்று அவ்வினைமாட்டுப் பெரிதும் மேற்செலவு உடையனாக வேண்டுதலான். மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) *பரிமேல்.*: ஒற்றப்பட்டார்[3] மறையச் செய்த செயல்களை அவர்க்கு உள்ளாயினாரால்[4] கேட்க வல்லனாய், கேட்டறிந்த செயல்களில் பின் ஐயப்படாது துணிய வல்லவனே ஒற்றனாவான்.

மறைந்தவை சொல்லுவாரை அறிந்து, அவர் அயிராமல்[5] சென்று ஒட்டித்[6] தாமே சொல்லும் வகை அதற்கு ஏற்ற சொல்லாக செயலாக முன்னே விளைத்து அத்தொடர்பால் கேட்குங்காலும் உறாதார் போன்று நின்று கேட்க வேண்டுதலின் கேட்கவற்றாகி என்றும் கேட்டறிந்தவற்றைத் தானே ஐயுற்று வந்து சொல்லின் அரசனால் அவற்றிற்கேற்ற வினை செய்யலாகாமையின் ஐயப்பாடில்லதே என்றும் கூறினார். இவை நான்குபாட்டானும் ஒற்றினது இலக்கணம் கூறப்பட்டது.

காரி:. வற்று–வல்லது.

ஊ) *கவிராசர்*: ஒற்றப்பட்டார் மறையச் செய்த காரியங்களை அவர்க்குள்ளாயினாராற் கேட்கவல்லனாய்க் கேட்டறிந்த செயல்களிற் பின்னை ஐயப்படாது துணியவல்லவனே ஒற்றனாவான் எ—று.

ஏ) *பழைய* 2: ஒற்றுக்கேட்போன் தன்னை மறைத்து இரகசியப் பொருள் கேட்க வல்லவனாகிக் கேட்டறிந்த செயல்களைப் பின் ஐயப் படாது துணிய வல்லவனே ஒற்றன் ஆவான்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'மறைந்தவை' என்பதற்கு *மணக்குடவர் பரிமேலழகர்* முதலாயினார் தரும் உரை 'மறைக்கப்பட்டவற்றை' : 'மறையச் செய்த செயல்களை' என்பர். ஆதலின் இவர் கொண்டபாடம் 'மறைத்தவை'

---

2. கூறுவழுவாமல் — சிறுபகுதியும் தவறாதபடி
3 ஒற்றப்பட்டார் — ஒற்று கேட்கப்பட்டவர்கள்
4. உள்ளாயினார் —அகப்பரிவாரங்களும், உயிர்த்தோழர்களும், உரிமைச்சுற்றமும் அவர் சிலதியரும் போல்வர்,
5. அயிராமல்—ஐயப்படாமல்.
6, ஒட்டி—அடுத்து.

என்ற பிறவினை வாய்பாட்டுப் பாடம் ஆகும், ஆகவே மணக்குடவர் பரிமேலழகர் உரைகளே ஏற்புடையன.

இராம 'கேட்கவற்று ஆகி' கேள்விகள் கேட்டு அறிந்து சென்றாயும் ஆற்றலுடையனாகி'' என்பர். இது புதிய நோக்கு.

காளி 'அறிந்தவை ஐயப்பாடு இலதே' என்பதற்கு 'ஐயமின்றித் தெரிந்து, தெரிந்தவற்றைச் சிறிதும் ஐயப்பாடின்றித் தெளிவுற உரைக்கும் திறமையுள்ளதே ஒற்று' என்பர். இதனால் ஐயமில்லாமை அறிதலில் மட்டுமன்று; ஐயப்படாமல் உரைக்கவும் வேண்டும்என்பது. அங்ஙனமே 'வேந்தரிடத்தும் பிறரிடத்தும் மிக மறைபொருளாயுள்ள வற்றை வினவியும், விடுத்தும், நட்பு–நகை- பிற இவற்றானும் அறிதல்' என்பர். இவை சிறந்த விளக்கமாகும்.

ஓ) ஒப்புமைப்பகுதி:

அறிந்தவை ஐயப்பாடிலதே ஒற்று:

எள்ளப்படுமரபிற் றாகலும் உள்பொருளைக்
கேட்டு மறவாத கூர்மையும் முட்டின்றி
உள்பொருள் சொல்லும் உணர்ச்சியும் இம்மூன்றும்
ஒள்ளிய ஒற்றாள் குணம் —திரிகடுகம்.,85

தெள்ளிய தெரிக்குந் தெவ்வர்..... ..... —கம்பராமா., 6903

59.8. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர் ஒற்றினால் ஒற்றிக் கொளல். (நிஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒற்றர், மாற்றரசர்மாட்டும் பொருள் பெற்று மாறு படச்சொல்லுதல் கூடுமாதலால், ஒரொற்று அறிந்து சொன்ன பொருளைப பின்னையும் ஒரொற்றினாலே ஒற்றியறிந்து பின்பு அதனுண்மை கொள்க எ—று

ஆ) பரி.: ஒருவன் சொன்ன ஒற்றின் சேதியை வேறொருவரைப் போகவிட்டு, அறிந்த ஒற்றர் சொல்லும் நிகராகில்[1] ஒப்புக்கொள்ள எ—று.

1. நிகராகில்—ஒப்பாகில்

இ) *பரிப்.*: ஓர் ஒற்றன் அறிந்து சொன்ன பொருளைப் பின்னையும் ஓர் ஒற்றினாலே ஒற்றி அறிந்து பின்பு அதனது உண்மை கொள்க எ—று.

ஒற்றர் தங்களிலே மாற்றரசர் மாட்டும் பொருள் பெற்று மாறுபடச் சொல்லுவாரும் உளராதலான், அவர் சொன்ன பொருளைப் பின்பும் ஒருவனை விட்டு ஆராய வேண்டும் என்றது.

ஈ) *காளி.*: இவ்வாறு செய்யும் இடத்து ஒற்றன் ஒற்றிக் கொணர்ந்து உரைத்த உரைப்பொருள் தன்னையும் அவன் அறியாமல் வேறெயும் ஒரு ஒற்றினால் ஒற்றுவித்து ஒத்ததாயின் கொள்க; இல்லையாயின் அது செய்யற்க எ—று.

உ) *பரிமேல்.*: ஒரொற்றின் ஒற்றி வந்து அறிவித்த காரியந்தன்மையும், பிறனோர் ஒற்றனாலும் ஒற்றுவித்து[2] ஒப்புமை கண்டு கொள்க.

ஒற்றப்பட்டாரோடு ஒத்து நின்று மாறுபடக்கூறலும்[3] கூடுமகாலின், ஒருவன் மாற்றம்[4] தேறப்படாது என்பதாம்

காரி.: மற்று—பிறிது.[5] பின்னூல் செய்தாரும் மற்றுக்கு வினைமாற்று அசைநிலை பிறிது,[6] என்றாராதலால் அஃது இவ்வுரையாசிரியர்க்கும் ஒத்தது.

ஊ) *கவிராசர்*: ஒரொற்றன் கண்டுவந்தறிவித்த காரியத்தைப் பின்னையோரொற்றனை விட்டுப் பார்த்துவரச் சொல்லிப் பிறகு தெளிக எ—று.

ஏ) *பழைய 2*: ஒரொற்றன் ஒற்றிக் கண்டு கேட்டு வந்து அறிவித்த காரியம் தன்னையும் பின்னுமோர் ஒற்றனாலு மொற்றுவித்து ஒப்புத் தொகை கண்டு கொள்க.

மல்லர்: என்பது வேவுகாரனைக் கொண்டு வேவுபார்ப்பித்து விசாரித்துக் கொள்ள வேண்டியது. ஒருவேவுகாரன் சொன்ன சேதியை வேறே வேவுகாரனைக் கொண்டு விசாரித்து இவனும் அவனுஞ் சொல்லுகிற

---

2. ஒற்றுவித்து—ஒற்றிவரச் செய்து.
3. மாறுபட—நிகழ்ச்சிக்கும் உண்மைக்கும் மாறாக
4. மாற்றம்—வாய்ச்சொல்.
5. மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்று அசைநிலை என்ற இருபொருள் பற்றியே வரும் ஆசிரியர் ஆணையை மாற்றி, இளம்பூரணர் தொழிலும் காலமும், இடனும் பற்றி வரும் என்றனர். அந்நிலையில் ஈண்டு பிறிது என்ற பொருளில் வந்தமை காண்க. வழிநூலாசிரியர் பிறிது என்பதையும் நூற்பாவில் இணைத்துப் பேசினர்.

சேதி சரியாயிருந்தால் அது மெய்யென்று நப்பலாம் சரியாயிராதே போனால் சேதியையும் வேவுகாரனையும் நப்பப்படாது என்பது கருத்து.

ஒற்று- வேவுக்காரன், ஒற்றல்–வேவுசெய்தல், மற்று- பின்னை, கொளல் -கொள்ளுதல்,

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

உரை மாற்றமும் கருத்து மாற்றமுப் இக்குறட்கு இல்லை.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும் .....
கொற்றங் கொள்குறிக் கொற்றவர்க் கென்பவே —சீவக..1921

முற்றும்:

ஒற்றொற் றியவரை ஒற்றின் ஆய்ந்து
முன்னம் கொள்ளும் உபாய முயற்சியோடு —பெருங்.3:23:53—54
ஒற்று மாக்களை ஒற்றரின் ஆயா — பெருங். ,3:25—48
அமைச்சரால் தெளிந்தும் வெவ்வேறு
ஒற்றுவிட் டுணர்ந்தும் .... —திருவிளை.தடா. அவதார.23

ஒற்றரைத் தூண்டி அன்னோர் உறுவலி உணர்வரேனும்
மற்றுமோர் ஒற்றி னல்லால் அன்னது மனத்துட் கொள்ளார்
சுற்றுறு மனிக மன்றி ஒருபுடை துவன்றிச் சூழும்
பெற்றியும் உளதோ என்னா வேய்ஒரீஇத் தேர்வர் பின்னும்
—கந்த, அசுரேந். ,51

59.9. ஒற்றொற் றுணராமை ஆள்க உடன்மூவர் சொல்தொக்க தேறப் படும். (நி அசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒற்றரை விடுங்கால், ஒருவரையொருவர் அறியா மல் விடுக; மூவர்சொல் உடன்கூடின், அது தெளியப்படுமாதலால் எ—று.

இவை இரண்டும், ஒற்றரை யாளும்திறம் கூறின.

ஆ) பரிதி.: ஒற்றரும் ஒற்றரும் அறியாமல் வேறே போகவிட்டு

அவர்கள் சொன்ன சேதியை மூன்றுபேர் ஒருமொழியாகச் சொன்னால் ஒப்புக்கொள்க எ று.

இ) *பரிப்.*: ஒற்றரை விடுங்கால், ஒருவரை ஒருவர் அறியாமல் விடுக: மூவர் சொல் உடன் கூடின், அது தெளியப்படும் ஆதலான் எ—று.

இஃது இருவர் சொன்னாலும் தெளியப்படாது: மூவர் சொன்னது தெளிவு என்றது. இவை இரண்டும் ஒற்றரை ஆளும் திறம் கூறின.

ஈ) *காளி.*: இவ்வாறும் அன்றி இன்னமும் ஒற்றரைக்கொண்டு யாவர்மாட்டும் உள்ள நன்மை தீமைகள் ஒற்றுவிக்குமிடத்து, ஒருவரை ஒருவர் அறியாமல் ஆண்டு, அவ்வாறு பலரையும் கொண்டு ஒற்றுவித்த இடத்துத் தனித்தனி தனக்கு உரைத்த மூவர் சொல்லும் ஒக்குமாயின், மற்று அவை அரசன் தெளிய அடுக்கும்; எனவே, மூவர் சொல்லிற் குறைபடின், தெளிய அடாது எ—று.

உ) *பரிமேல்.*: ஒற்றரை ஆளுமிடத்து ஒருவனை ஒருவன் அறியாமல் ஆள்க; அங்ஙனம் ஆண்ட ஒற்றர் மூவரை ஒருபொருள்மேல் வேறு வேறுவிட்டால் அம்மூவர் சொல்லும் பயனால் ஒத்தனவாயின், அது மெய்யென்று தெளியப்படும்.

ஆயின் என்பது வருவிக்கப்பட்டது.[1] ஒருவனை ஒருவன் அறியின் தம்முள் இயைந்து ஒப்பக்கூறுவாராகலின் 'உணராமையாள்க' என்றும், மூவர்க்கு நெஞ்சொற்றுமைப் படுதலும் பட்டால் நீடுநிற்றலும் கூடாமையின் 'தேறப்படும்' என்றும் கூறினார். இதனானே அஃது ஒத்திலவாயின் பின்னும் ஆராய்க என்பதூஉம் பெற்றாம்.

ஊ) *கவிராசர்*: ஒற்றரை யாளுமிடத்து ஒருவனையொருவன் அறியாமல் ஆள்க; அப்படி ஆண்ட ஒற்றர்மூவரை ஒருபொருள்மேல் வேறு வேறுவிட்டால், அம் மூவர் சொல்லுகிறதும் பயனால் ஒத்திருந்தால், மெய்யென்று தெளியப்படும் எ – று.

ஏ) *பழைய 2*: ஒற்றனை ஆளுமிடத்து ஒருவனை ஒருவன் அறியாமை யாள்க. அப்படி யாண்ட ஒற்றரை மூவரை ஒரு காரியத்தின் வேறுவேறிட்டால் அம்மூவர் சொல்லும் ஒன்றாக ஒத்தனவாகில் அது மெய்யென்று தெளிக.

---

1. தொக்க -- தொக்கன என்னும் பொருள் தரும் அஃறிணைப் பலவின்பால் வினை முற்று அது அன் சாரியை கெட்டுத் தொக்க என்றாகி, அதனை எச்சப்படுத்த ஆயின் என ஒருசொல் வருவித்து உரைக்கப்பட்டது

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'உணராமை யாள்க' என்ற பகுதிக்கு 'ஒற்றரை ஒற்றர் உணரா வகை ஆள்க' என்ற பழைய உரைகள் அனைத்தினும் 'உய்த்துணர்வா லும் அறியாதவாறு ஆள்க' என்ற தேவநேயர் உரையும் விளக்கமும் சிறந்தன.

'தொக்க இடத்து என்பதற்கு 'ஒற்றி வந்த மூவர் சொல் ஒத்தி ருக்குமாயின்' என்பது பழைய உரைகள். இராம. 'ஒற்றிய மூவர் சொல்லையும் சேர்த்து ஒக்கயாராய்ந்த பிறகு' என்பர்.

வரத. 'ஒற்றரின் செயலை ஆராய, அவரறியாதபடி, வேறொரு ஒற்றரை அமைக்க வேண்டும். மேலும் மூவர் வாய்மொழியும் ஒத்திருந் தால் உண்மை என்று துணிய வேண்டும்' என்றவர் விளக்கத்தில் 'ஒரு ஒற்றன் அறிந்து வந்து சொன்ன செய்தியை இன்னொரு ஒற்ற ரைக் கொண்டு பரிசீலனைக் செய்யச் சொல்ல வேண்டும். மேலும் ஒற்றரையே வேறொரு ஒற்றரைக்கொண்டு அவர் நடவடிக்கைகளைக் கவனிக்கச் செய்யவேண்டும். இந்த மூவர் சொல்லும் ஒத்திருந்தால் அந்தச் செய்தியை உண்மை என்று துணியவேண்டும்' என்பர். இத் தனை விளக்கத்திற்குக் குறட் சொல்லமைப்பு இடந்தராமை மட்டு மன்றி இவர் பொழிப்புரையினும் இடமின்மையையறியலாம்.

''ஒற்று ஒற்று உணராமை யாள்க'' என்ற ஆசிரியர் அனுப்பிய ஒற்றர் இத் துணையர் தாம் என்பதையுணர்த்தினர். அவர்கள் எத் துணையராயினும், அவர்கள் கூறும் நிகழ்ச்சி எத்துணையவாயினும் மூவர் சொல் ஒத்திருக்குமாயின் அதனைக் கொள்க என்கின்றார். இதனை ஓரளவு வலியுறுப்பது காளிங்கர் உரை. அயல் நாட்டிற் சென்று தம் ஒற்றனை வேறொரு ஒற்றனை ஏவி ஒற்றச் சொல்வா ராயின், அஃதெதற்கு? என்ற ஆய்வுணர்வின் அனுப்பும் ஒற்றற்குப் பிறந்து, அவனை யாயும் போதே அவனைப்பற்றிய வரலாறுகளை யறியக்கூடும். அதனால் அவனைநன்குணர்ந்து இருவரும் ஒத்தியங்கி உணர்தலும் கூடும். அதனை நன்கறிந்த அரசியல் ஞானியாகிய வள்ளுவர் ஒற்றர் பலரையனுப்பி அவர் சொல்லுமொழிகள் மூவர் சொல் ஒத்திருப்பதைக் கொண்டு இதுதான் உண்மை என்று உணர்க என்கின்றார். பிற வுரைத்தல் பொருந்தாதாகும்.

பலரை ஒருகாலத்திலேயே ஏவியோ, ஒருவர் பின் ஒருவராக ஏவியோ, அறிந்து வரச்செய்து மூவர்சொல் தொக்கதாயின் கொள்க என்ற ஆளுமுறையே அவரால் உணர்த்தப் பெறுதலைத் தெளியலாம். இக்குறள் முற்குறளாற் கூறப்பட்ட மற்றுமோர் ஒற்றினால் ஒற்றும் போது இங்ஙனம் ஆளுக; இதனைக் கொள்ளுக என வரையறை கூறியதேயாம் என்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஒற்று ஒற்று உணராமை:

மாற்றவ ரொற்றர் ஒற்றா வகையினின் —சீவக. 2142

முற்றும்:

அறிந்த ஒற்றாளா செறிந்தனர் உரைப்ப
ஒற்று மாக்களை ஒற்றரின் ஆயா
முன்தனக் குரைத்த மூவர் வாயவும்
ஒத்தது நோக்கி மெய்த்தகத் தேறி —பெருங்.3:25:47–50

ஒன்றிமுன் விடுத்தவர் மூவரொற் றாட்கள்வந்த
தின்றிதாற் பட்டதென் றியம்புகின்றார்களே —சீவக., 1829

ஒருவர் ஒருவர் தமை அறியாது ஒருமை வினைக்கண் மூவர்தமை
மருவ விடுக்க ....
—விநா.அரசி.,97

கோத்தெனக் கொடுத்தனன் கொழு நிதி —சீவக. ,1845

இம்மியன நுண்பொருள்க ளீட்டிநிதி யாக்கிக்
கம்மியரும் ஊர்வர்களி றோடைநுதல் சூட்டி
அம்மிமிதந் தாழ்ந்துசுரை வீழ்ந்ததறஞ் சாலகென்று
உம்மைவினை நொந்துபுலந்து ஊடலுணர் வன்றே —சீவக.,495

59.10. *சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின் புறப்படுத்தா னாகும் மறை.* (நிகூ0)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒற்றர்க்குச் சிறப்புச் செய்யுங்கால், பிறரறியாமல் செய்க; பிறரறியச் செய்வனாயின், அவர் ஒற்றிவந்த பொருளைப் புறத்துவிட்டானாம் எ—று.

இஃது ஒற்றர்க்குச் சிறப்புச் செய்யுங்கால் பிறரறியாமல் செய்ய வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: ஒற்றற்குச் சிறப்புச் செய்யும்போது ஒருவர் அறியாமல் செய்க; அவர் அறிய ஒற்றற்குப் பாலித்தால்[1] இராச்சியத்தில் பிரகாசம்[2] பண்ணியதாம் எ—று.

1. பாலித்தால்—கொடுத்தால்
2. பிரகாசம்—விளக்கம்.

இ) பரிப்.: ஒற்றர்க்குச் சிறப்புச் செய்யுங்கால் பிறர் அறியாமல் செய்க: பிறர் அறியச் செய்தானாயின், அவர்ஒற்றி வந்த பொருளைப் புறத்து விட்டானாம் எ–று.

இஃது ஒற்றர்க்குச் சிறப்புச் செய்யுங்கால் பிறர்அறியாமல் செய்ய வேண்டுமென்றது.

ஈ) காளி.: இங்ஙனம் அகத்தும் புறத்தும் அருமையும் பெருமையும் நுட்பமும் ஒட்பமும் ஓர்ந்து உணர்ந்த இடத்தும் ஒற்றர்க்கு அரசர் செய்யும் சிறப்புப் பலவும் உள அன்றே. அவற்றுள் யாதானும் ஒரு சிறப்பினையும் பிறர் அறியுமாறு தாம் செய்யாது ஒழிக: செய்வராயின் அங்ஙனம் அவரால் தாம் அரிதின் பெற்ற மறையுரையினை[3] அவ்வுரைப் பொருளாகிய வினை முடிவதன் முன்னரே தாமே புறத்து வெளிப்படுத்தினர் ஆவர் எ—று.

உ) பரிமேல்.: மறைந்தவை அறிந்து கூறிய ஒற்றின்கண் செய்யுஞ் சிறப்பினை அரசன் பிறரறியச் செய்யாதொழிக, செய்தானாயின் தன்னகத்து அடக்கப்படும் மறையைத் தானே புறத்திட்டானாம்.

மறையாவது அவன் ஒற்றனாயதூஉம் அவன் கூறியதூஉம் ஆம். சிறப்புப் பெற்ற இவன் யாவன்? என்றும், இது பெறுதற்குக் காரணம் யாது? என்றும் வினவுவாரும் இறுப்பாரும்[4] அயலாராகலின் 'புறப்படுத்தானாகும்' என்றார். இவை மூன்றுபட்டானும் ஒற்றரை ஆளுமாறும், அவரான் நிகழ்ந்தன அறியுமாறும், அறிந்தால் சிறப்புச் செய்யுமாறும் கூறப்பட்டன.

ஊ) கவிராசர்: மறைந்து நின்று கேட்டுவந்து சொன்ன ஒற்றனுக்குச் செய்யுஞ் சிறப்பைப் பிறரறியச் செய்ய வேண்டாம். பிறரறியச் செய்தால், தன் மனசிலே வைத்திருக்கிற ரகசியத்தைப் பிறரறியப் பண்ணினதாம் எ—று.

ஏ) பழைய 2: மறைந்தவை யறிந்து கூறிய ஒற்றனிடத்துச் செய்யும் வெகுமானம் அரசன் பலரும் அறியச் செய்யவேண்டா. மறைத்துச் சிறப்புச் செய்க; பலருமறியில் இரகசியத்தைத் தானே வெளிப்படுத்தினான் ஆம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''ஒற்றின்கண் சிறப்பு அறியச் செய்யற்க'' என்புழி ஒற்றர்க்குச்

3. மறையுரை—இரகசிய வார்த்தை.
4. இறுப்பார்—மறுமொழி கூறுவார்.

சிறப்பு அறியச் செய்யற்க ஏழனுருபு நான்கன் பொருளில் வந்தமை காண்க.

''எல்லாவுருபொடுங் கொள்வோன் எழுமே'' என்பவாகலின். நாகர்கண் அன்பு செய்தான் என்புழிப் போல.

ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

..... மூவர்களும் வந்து மொழிவ தேர்ந்து பிடின்
கரும மதனை மிகத்தெளிக கரும மறைப்ப வேண்டுதியேல்
பொருவில் அவர்தம் பாற்சிறப்புப் புறந்தோன் றாமல் செய்திடுக
—விநா.அரசி. ,97

பணிடைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	ஒற்றும்	எல்லார்க்கும்	ஒற்றினான்	வினைசெய்வார்	கடாவு	துறந்தார்	மறைந்தவை	ஒற்றொற்றித்	ஒற்றொற்	றிறப்பறிய
மணக்.	1	5	10	6	2	3	4	7	8	9
பரித்.	1	2	3	10	7	8	9	4	5	6
பரிப்.	1	5	10	6	2	3	4	7	8	9
காளி.	1	3	2	8	6	7	10	4	5	9
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

59வது அதிகாரம் 'ஒற்றாடல்' முற்றிற்று.

60. ஊக்கமுடைமை

அதிகாரப்பொருள்:

அ) மணக்., ஊக்கமுடைமையாவது ஒருவினை செய்யுங்கால் அதனது[1] அருமையை ஓராது, இவ்வாறு செய்யக்கடவேனென்று[2] கருதும் கருத்துடைமை. பிறர்நாடு கொள்ளுங் காலத்து அவ்விடத்துள்ள செய்தியை ஒற்றரால் அறிந்த பின்பு அதனைக்கொள்ளக் கடவேன் என்று நினைக்குங் கருத்து வேண்டுதலின், அதன் பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: ஊக்கமுடைமையாவது எப்போதும் விசாரமுடைமை[3] எ—று.

இ) பரிப்.: ஊக்கம் உடைமையாவது ஒருவினை செய்யுங்கால் அதனது அருமையை ஓராது இவ்வாறு செய்யக் கடவேன் என்று கருதும் கருத்து உடைமை. பிறர் நாடு கொள்ளுங்கால் அவ்விடத்து உள்ள செய்தி ஒற்றரான் அறிந்த பின்பு அதனை அறிந்து கொள்ளக் கடவேன் என்று நினைக்கும் கருத்து வேண்டுதலின் அதன் பின் கூறப் பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது மனம் மெலிதலின்றி வினைசெய்தற்கண் கிளர்ச்சியுடைத்தாதல்[4], ஒற்றரான் நிகழ்ந்தன அறிந்து அவற்றிற் கேற்ற வினைசெய்வானுக்கு. இஃது இன்றியமையாமையின், ஒற்றாடலின்பின் வைக்கப்பட்டது.

---

1. 'அதனைச் செய்யுமிடத்துக் காலத்து' என்பது பாடம்.
2. 'அறிந்து கொள்ளக் கடவேன்' என்பது பாடம்:
3. விசாரமுடைமை — ஆய்வுடைமை.
4. கிளர்ச்சி — மனஎழுச்சி:

ஊ) கவிராசர்: அஃதாவது மனஞ்சலியாமற் காரியஞ்செய்கிறதிலே முயற்சியுடையராதல்.

ஏ) பழைய 2: அஃதாவது மனமெலிவின்றி வினைசெய்தற்கண் கிளர்ச்சியுடைத்தாதல், ஊக்கம் வலி முயற்சி மனவெழுச்சி' என்பதனாலறிக.

மல்லர்: அருமையான காரியங்களை மேலப் போட்டுக் கொள்ளுகிறதுக்குத் துணிவு உடையவனாய் இருக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

கா.சு., 'வேலை செய்தற்கண் மனந்தளர்வின்றிக் கிளர்ச்சியுடையனாதல்'.

சி.இ., 'மனம் மெலியாமல் வினைசெயற்கண் கிளர்ச்சி யுடையனாதல்'.

இராம., 'காரியத்தைச் செய்து முடிக்க முடியும்' என்ற தன்னம்பிக்கையும், செய்து முடிக்க வேண்டும் என்ற துடிப்பும் கூடிய மனக் கிளர்ச்சி யுடையராதல்.

தேவநேயர், வினைசெய்தற்கண் தளர்ச்சியின்றி மேன்மேலுங் கிளர்ச்சி பெறுதல். ஊ—ஊங்குமுன். ஊங்குதல்—முன் செல்லுதல் ஊக்குதல்-முற்செலுத்துதல்; ஊக்கம்-உள்ளத்தை வினைகளில் முன்னேறிச் செல்லத் தூண்டுதல்' என்பர்.

ஜி. வரத., 'மனந்தளராமல், காரியஞ் செய்தற் பொருட்டு உள்ளக்கிளர்ச்சியைப் பெற்றிருத்தல்' என்பர்.

உரைகளில் மாற்றம் இல்லை, ஆயினும் மணக்குடவர் பரிமேலழகர் உரைகள் தெளிந்த கருத்துடையவை.

60.1. உடையர் எனப்படுவ தூக்கமஃ தில்லார் உடைய துடையரோ மற்று. (நகக)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'உடைமை எனப்படுவது' பாடம், ஒற்றரையுடைமை என்று சொல்லப்படுவது ஊக்கமுடைமை; அஃதிலாதார் மற்றுடையதாகிய பொருளெல்லாம் உடையராகார் எ—று.

ஆ) பரிதி.: அரசன் செல்வன் என்று சொல்லப்படும் விசாரமுள்ள வனாகில்[1], விசாரஈனனாகில்[2] அரசற்கு எத்துணை செல்வம் உண்டா கிலும் இல்லையாம் எ—று.

இ) பரிப்.: ஒன்றை உடையர் என்று சொல்லப்படுவது ஊக்கம்: அஃது இல்லாதார் மற்று உடைமையாகிய பொருள் எல்லாம் உடைய ராகார் எ—று.

இஃது ஊக்கம் உடைமை வேண்டும் என்றது.

ஈ) காளி.: உலகத்து அரசரானோர் எனைத்து வகைப்பட்ட பொருள்களையும் உடையரேனும் அவற்றுளெல்லாம் பலரானும் எடுத் துரைக்கப்படுவது சிறந்த ஊக்கம் உடைமையே; ஆகலான்; அஃது இல்லாதார் வேறு தமக்கு உடையதாக வதத்து எண்ணப்பட்ட உடைமை உடையரேனும் யாதும் இலர் எ—று.

உ) பரிமேல்.: ஒருவரை உடையரென்று[3] சொல்லச் சிறந்தது[4] ஊக்கம்; அவ்வூக்கமில்லாதார் வேறுடையது தானும் உடையராவரோ ஆகார்.

வேறுடையது என்றது, முன் எய்தி நின்ற பொருளை, உம்மை விகாரத்தால் தொக்கது[5]. காக்குமாற்றல் இலராகலின், அதுவும் இழப்பர் என்பதாம்.

காரி.: 'உடையது எனப்படுவது ஊக்கம்' என்று முன்னும் அஃறிணை வாய்பாட்டாற் சொல்லாது' உயர்திணை வாய்பாட்டாற் சொல்லியதால் அதற்குரியர் என்று சொல்லச் சிறந்தது 'ஊக்கம்' என்றார். அது வினவி அறிக. மற்று—வேறு.

ஊ) கவிராசர்: ஒருவரை உடையரென்று சொல்லச் சிறந்தது ஊக்கமே. அந்த ஊக்கமில்லாதவர்கள் மற்றதென்ன வுண்டாயிருந் தாலும் இல்லாதவர்கள். எ—று.

ஏ) பழைய 2: 'அஃதிலார் உடைய ருடையரோ' பாடம்.

ஒருவரை எல்லாப் பொருளுமுடையர் என்று சொல்லப்படுவது

---

1. விசாரமுள்ளவன்—கவலையுள்ளவன்.
2. விசாரஈனனாகில்—கவலையற்றவனாகில்.
3. உடையர் — பொருளுடையர்.
4. சொல்லச் சிறந்தது — சொல்லுதற்கு ஏற்ற காரணமாயிருப்பது.
5. 'உடையதும் உடையரோ' என்றதிலுள்ள தெரிநிலை உம்மை கெட்டுச் செப்பலோசை சிதையாவாறு காத்தலின் விகாரத்தால் தொக்கது என்றார். ஆவரோ என்ற வினா வில் வந்த ஓகாரம் ஆகார் என்பதைப் பயந்து நின்றது.

ஊக்கம்; அவ்வூக்கமில்லாதார் வேறு பொருளுடையதுதானு முடையர் ஆவரோ? ஆகார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''உடைமை எனப்படுவது ஊக்கம்'' எனப் பாடங் கொண்டனர் மணக்.; இப்பாடங் கொள்ளின், அஃதிலார் உடையதும் உடையரோ மற்று' எனப்பொருள் எளிதின் முடிவதாகும். ஆனால் 'ஒற்றரை உடைமை' எனின் ஒற்றர் உடைமையாகார் ஆதலான் இப்பொருள் எண்ணிக் கொள்ளுதற்குரியதாகும். மணக்குடவர்உரையையே தம தாக ஏற்று உரையும் விளக்கமும் தரும் பரிப்பெருமாளும் பரிமேலழ கரும் 'உடையர் எனப்படுவது' எனவே பாடங் கொண்டு, 'ஒருவரை உடையர் என்று சொல்லச் சிறந்தது (சிறந்த காரணமாக இருப்பது) ஊக்கம்' எனப்பொருள் கண்டனர். முன்னோர் மொழிப் பொருளைப் பொன்னே போற் போற்றும் இவர்கள் இருவரும், வள்ளுவனார் அடுத்த குறளில் 'ஊக்கம் உடைமை உடைமை' என ஊக்கத்தை உடைமையாகக் கூறலின் ஈண்டும் அதனைக் கூறியிருக்க மாட்டார் ஆதலானும், 'அஃதில்லார்' என அடுத்து உடையர் என்பதன் மறை யாகிய 'இல்லார்' எனவே கூறியிருத்தலானும் 'உடையர்' என்ற பாடமே கொள்ளத்தக்கது என்று கருதினராதல் கூடும். பரிதியும் 'அரசன் விசாரம் உள்ளவனாகில்' என்பதும் இப்பாடத்தையே கொண்டவர் என்பதைத் தெளிவிக்கும். ஏனைய காளிங்கர் முதலா னோர் கருத்தும் இது. ஆகவே பரிப்., பரிமேல். இவர்கள் போக்கின் படி, இத்தொடர்க்கு 'உடையார் என்று சொல்லச் சிறந்தது ஊக்கம்' என்பதே தெளிந்த உரையாதல் காண்க.

மு.ரா.அரு. 'பொருள் உடையர் எனச் சொல்லச் சிறந்தது' என்பர்.

வரத. 'பொருளையோ செல்வத்தையோ கல்வியையோ உடையவர் என்று சொல்லப்படுவது அவற்றைப் பெற்றிருக்கிறோம் என்ற எண்ணத்தை மனத்திலே கொண்டிருப்பது' என்பர். இது பெரு மிதமாய்–உள்ளக்கிளர்ச்சிக்கு இடையூறாய் பொச்சாப்பை விளைவிப்ப தாயும் முடியுமாதலின் இவ்வுரை மிகமிகச் சிந்தித்தற்குரியது.

உடையர் எனச் சிறப்பித்துச் சொல்லப்படுவது ஊக்கத்தான்; அஃதிலார் உடையதும் மற்று உடையரோ என்று கூட்டிப் பொருள் கொள்ளின் மூன்றனுருபு இறுதிக்கட்டொக்கதும், சிறப்பு உம்மை விகாரத்தாற்றொக்கதும் என்ற இரண்டிலக்கண அமைதியோடு,

எளிதிற் பொருள் கோடற்கு இயைவதாகுமோ என்பதையும் சிந்திக்க. பரிமேலழகருரைக்கு விளக்கந்தரும் நுண்பொருண்மாலையுடையாரும் பரிமேலழகர் உரை விளக்கம் எழுதி 'இது வினவி யறிக' என்றனர். இதுவே இங்ஙனம் எண்ணத் தூண்டியது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

உடையர் எனப்படுவது ஊக்கம்:

ஊக்கமது கைவிடேல் —ஆத்திசூடி.

ஊக்கமுடைமை ஆக்கத்திற் கழகு —கொன்றை, 86

60.2. உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை நில்லாது நீங்கி விடும். (நிகூஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'ஊக்கம் உடைமை உடைமை' பாடம்.

உடைமையாவது ஊக்கமுடைமை; பொருளுடைமை நிலை நில்லாது நீங்கும் எ—று.

பொருள் உடையார்க்கு எல்லாம் உண்டாம் என்பார்க்கு இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: அரசர்க்கு உடைமையாவது விசாரமுடைமை; அது இல்லாதபோது எட்டுவகைச் செல்வமும்கெடும்[1] எ—று.

இ) பரிப்.: ஒருவனுக்கு உடைமையாவது அறிவு உடைமை: மற்றப் பொருள் முதலாகிய செல்வம் நில்லாது தன்னை விட்டு நீங்கும் எ—று.

ஈ) காளி.: 'நீத்துவிடும்' பாடம். மற்று இப்படியாகலான் ஊக்கம் உடைமையே ஒருவர்க்குச் செல்வமானது; மற்று இவ்வுலகத்துப் பொருளானது நிலையாது; முன்னே வினைவழியினால் தமக்கு வரும்பொருள் வருதலும், கெடும்பொருள் கெடுதலும் யாவராலும் ஒழித்தற்கு அரிது ஆகலான்; மற்று உணர்வு ஊக்கம் ஆகின்றது; அவ்விருபாலும் சிறந்ததாகலான் இதனை ஒப்பது ஓர் ஆக்கம் வேறு இல்லை எ—று.

---

1. எட்டுவகைச்செல்வம்— அடிமை அரசாங்கம் சுற்றம் பொன் மக்கள் மனை வாகனம்

உ) *பரிமேல்.*: ஊக்கமுடைமையே ஒருவனுக்கு நிலைநின்ற உடைமையாவது; மற்றைப் பொருளுடைமை நிலைநில்லாது நீங்கிப்போம்.

உள்ளம் ஆகுபெயர்[2]. ஊக்கம் உள்ளத்துப் பண்பாகலின், அதற்கு நிலைநிற்றலும், பொருள் உடம்பினும் வேறாய் அழிதன்மாலைத் தாகலின்[3] அதற்கு நிலைநில்லாமையும், கூறினார். கூறவே, அஃது உடைமையன்று என்பது பெறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: ஊக்கமுடைமையே ஒருவற்கு நிலைநின்றவுடை மையாவது; மற்றைப் பொருள் முதலான வுடைமைகள் நில்லாமல் விட்டு நீங்கிப்போம் எ—று.

ஏ) *பழைய 2*: ஊக்கம் உடைமையே ஒருவனுக்கு நிலைநின்ற உடைமையாவது. மற்றப் பொருளுடைமை நில்லாது நீங்கிப்போம்.

மல்லர்: மனத்தினுடைய துணிவென்கிற உடைமை நிலைபெற்ற உடைமை பொருள் என்கிற உடைமை நிலை பெறாமல் நீங்கிப் போறதினால் என்றவாறு.

மனத்தின் துணிவுஉயிருடைய குணமாயிருக்கிறதினால் உயிருக்கு மட்டும் நிக்கும் பொருளோ என்றால் சிலவாய்ப்போய் அடிக்கடி ஒருத்தன் வசத்தைவிட்டு வேறொருத்தர் வசமாய்ப் போறது. ஆகை யினால் இது நில்லாத உடமை அது இப்போது நடக்கிற உடமை என்பது கருத்து.

உள்ளம்—மனத்தின் மிகுதி.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

முதற்குறளில் ''உடையது உடையரோ'' என்று பொதுவகை யான் வினவுதல் வாயிலாக உடையராகார் என்பதை உணர்த்திய ஆசிரியர் சிறப்புவகையான் 'பொருள் உடைமை நீங்கும் என்கிறார். மணக்குடவர் 'பொருளுடையார்க்கு எல்லாம் உண்டாம் என்பார்க்குக் கூறியது' எனக் கருத்து உரைப்பர். இக்கருத்து ''பொருளிலார்க்கு இவ்வுலக மில்லாகியாங்கு'' (247) ''ஒண்பொருள் காழ்ப்ப இயற்றி யார்க்கு எண்பொருள் ஏனையிரண்டும் ஒருங்கு'' (760) என்ற குறட் பாக்கள் நினைவுக்கு வர, அப்பொருளும் ஊக்கமில்லையானால்

2. உள்ளம் – மனம். இச்சொல் அதன் பண்பாகிய ஊக்கத்திற்கு ஆயினமையின் பண்பி யின் பெயர் பண்புக்கான பொருளாகுபெயர்.
3. அழிதன்மாலைத்தாகலின்—அழியுந்தன்மையதாகலின்.

இல்லாகும் எனக் கூறுவது இக்குறள் என்றார். ஏனையோர் உடைமை இரண்டு; அவை உள்ளம் உடைமையும் பொருளுடைமையும். அவற்றுள் 'பொருளுடைமை ஊக்கமில்லான்கண் நில்லாது நீங்கிவிடும்' என்று பொருள் உடைமையின் இயல்பு கூறி வேற்றுமை கருதுகின்றனர். இவற்றுள் ஏதுக்காட்டி ஊக்கத்தை வலியுறுத்துதலின் பின்னதே சிறந்தது எனலாம்.

காளிங்கர், பொருட்செல்வம் 'கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ் செல்வம், போக்கும் அது விளிந்தற்று' என்றாற்போல 'வினை வழி வரும்; வினை வழிக்கெடும். அதனை யாரும் தடுக்க ஒண்ணாது. ஊக்கம் உணர்வாகையால், அது ஆங்காலத்தும் போங்காலத்தும் சிறந்தது; ஆகலான் ஊக்கத்தை ஒப்பது ஓர் ஆக்கம் இல்லை' என்ற கருத்தமைய உரைவகுப்பர். இவர் உரைநடை பலகால் கருதிப் பார்த்து அறிய வேண்டிய தொன்றாகலின் வந்த பதிப்பாசிரியர்கள் அப்படியே படி எடுத்தும் தெளிவின்றியே கொண்டு கூட்டியும் இடர்ப்படுவாராயினர். ஆதலால் ''ஆம் பொருள்கள் ஆகும் துயர்க்கும் அழிக் கொண்ணாம்; போம்பொருள்கள் போகுமவை பொறியின் வகை வண்ணம், தேம்புனலை நீர்க்கடலும் சென்றுதரலின்றே, வீங்கு புனல்யாறு மழை வேண்டியறியாதே'' என்ற சீவக. 848ஆம் பாடல் கருத்துதவக் *காளிங்கர்* இங்ஙன் எழுதினாராதல் காண்க. அங்ஙனம் ஊழான்வரும் பொருட்டும் ஊக்கம் இன்றியமையாதது; ஆகூழிருப்பின் சிறுமுயற்சியான் பெரும் பயனையும், போகூழிருப்பின் மெய் வருந்தக் கூலி பெறுதலையும் அடைய உதவும் என்பதை உணர்த்தியது.

(ஒ) ஒப்புமைப்பகுதி:

உள்ளம் உடைமை உடைமை:

உள்ளமுடை யான்முயற்சி செய்யஒரு நாளே
வெள்ளநிதி வீழ்விளை யாததனின் இல்லை —சீவக., 496

முற்றும்

அருவிலை மாண்கலனும் ஆன்ற பொருளும்
திருவுடைய ராயின் திரிந்தும் வருமால்
பெருவரை நாட விரிவின் றதனால்
திருவினும் திட்பமே நன்று —பழ.நா 136

60.3. ஆக்கம் இழந்தேமென் றல்லாவார் ஊக்கம் ஒருவந்தம் கைத்துடை யார். (நிகூடு)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: செல்வத்தை இழந்தோம் என்று அலமரார்[1] உள்ள மிகுதியை ஒரு தலையாகத் தம்மாட்டுடையார் எ—று.

இது பொருட்கேடுவரினும் தளரார் என்றது.

ஆ) *பரிதி.*: செல்வம் ஒரு காலத்திலும் போகாது; தனம் சேத மானாலும் விசனப்படார்; விசாரத்தின் பெருமை கைவந்த விசார வான்[2] எ—று.

இ) *பரிப்.*: செல்வத்தைஇழந்தேம் என்று அலம் வருவார் அல்லர்; உள்ளம் மிகுதியை ஒருதலையாகத் தம்மாட்டு உடையார் எ—று.

இது பொருட்கேடு வரினும் தளரார் என்றது.

ஈ) *காளி.*: தம்மாட்டு முன்னமே உளதாகிய பெருஞ்செல்வத்தைப் பின்பு ஒருகால் இழந்தோம் என்று கொண்டு அலமருதல் இலர். யார் எனில், பின்னும் ஊக்கம் உடைமையாகிய பெருஞ் செல்வத்தைத் தம் மிடத்து உடையவர் எ—று.

ஒருவந்தம் என்பது பெருஞ் செல்வம் என்றது.[3] கைத்துடையார் என்பது தம்மிடத்து உடையவர் என்றது.

உ) *பரிமேல்.*: இழந்தாராயினும்[4] யாம் கைப்பொருளை இழந் தேம் என்று அலமரார், நிலைபெற்ற ஊக்கத்தைக் கைப்பொருளாக உடையார்.

ஆக்கம் ஆகுபெயர்[5]. ஒருவந்தமாய ஊக்கம் என்க. கைத்து— கையகத்தாய பொருள். 'கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம் செய்ம்மின்[6]' என்றார். பிறரும் அல்லாவாமைக்கு ஏது வருகின்ற பாட்டால் கூறுப.

---

1. அலமரார்—கலங்கார்
2. விசாரவான்—உள்ளக்கிளர்ச்சியுடையான்; ஆராய்ச்சியாளன்.
3. 563 ஆம் குறள் தொகுப்புரை பார்க்க.
4. இழந்தாராயினும்—கைப்பொருளையிழந்தாராயினும்
5. ஆக்கம்—ஆக்கந்தரும் செல்வத்தை ஆக்கம் என்றது காரிய ஆகுபெயர்.
6. நாலடியார், 19.

ஊ) கவிராசர்: பொருளையிழந்தாராயினும் 'யாம் கைப்பொருளை யிழந்தோ' மென்று அங்கலாயார்[7], நிச்சயமான அறிவை எகப்பொருளாகவுடையர் எ—று.

ஏ) பழைய 2: இழந்தோமென்றலம்வரார்' பாடம்.

யாம் கைப்பொருளை இழந்தோம்; என் செய்வோம்; என்று, அல்லற்படார், நிலைபெற்ற ஊக்கத்தைப் பொருளாக உடையார் என்றவாறு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அல்லாவார்'

'அலமரார்'; 'வினைப்படார்'; 'அலமருதல் செய்யார்'; 'அலமரார்'; 'அங்கலாயார்'; 'அல்லற்படார்' என்பர் முறையே மணக்குடவர் முதல் பழைய உரையாசிரியர் ஈறானவர்கள்.

'வருந்தமாட்டார்' 'கா.சு; 'மனம் வருந்திக் கலங்கமாட்டார்' சபாபதி; 'வருந்தார்' —சி.இ; 'வருந்தார்' வரத., தேவநேயர் முதலிய அனைவரும். இது உயர்திணைப்பலர்பாற்பன்மை எதிர்மறை வினைமுற்று.

'ஒருவந்தம்' 'ஒருதலையாக' மணக்., 'பெருமை' பரிதி: 'பெருஞ் செல்வம்' காளிங்கர்; 'நிலைபேறு' பழைய, பரிமேல்,; 'நிச்சயமான அறிவு' கவிராசர்; 'உண்மையாக, அல்லது நிச்சயமாக' என்பர் இராம.;

இச்சொல் திருக்குறளில் (563,593) இரண்டிடங்களில் வள்ளுவரால் ஆளப்பெற்றுள்ளது. பரித. 363இல் 'ஒருக்காலே' என்றுரை காணுகிறார். காரி ரத்தின கவிராயர் 'ஒருதலை, ஏகாந்தம், ஒருவந்தம் என்பன ஒருபொருட் கிளவிகள்' என்பர். அகராதிகளும், சூடாமணி நிகண்டும் முறையே 'சம்பந்தம், தனியிடம்' என்கின்றன. இவை இலக்கிய ஆட்சி காட்டிற்றில. நமது திருக்குறளுரையாசிரியர்கள் கூறும் உரைக்குத் துணையாகக் கூறுவாரும் பிறரில்லர். ஆகவே இச்சொற்படைப்புக்கும் ஆட்சிக்கும் வள்ளுவரே தந்தையாகிறார் (563 குறட்பாவின் தொகுப்பையும் குறிப்பையும் பார்க்க).

காளிங்கர் 'பெருஞ்செல்வம்' என்றுரைத்தது ஒருக்கால்,

7. அங்சுலாயார்—புலம்பார்,

ஒருவு + அந்தம் எல்லையற்றது என்ற எண்ணத்தின் விளைவாக லாமோ என்று நினைக்கத்தக்கது.

மணக்குடவர் போன்று தேவநேயர் 'ஊக்கம் ஒருவந்தம் கைத் துடையார்' எனக்கூட்டி 'ஊக்கத்தை நிலையாகக் கைப்பொருளாகக் கொண்டவர்' என உரை காண்பர். பரிமேலழகர் 'ஒருவந்தமாகிய ஊக்கம்' எனக் கொண்டு பண்புத்தொகை என்பர். இவற்றுள் மணக் குடவர் உரை தெளிவானது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

உள்ளமுடை யான்முயற்சி செய்யவொரு நாளே
வெள்ளநிதி வீழும்விளை யாததனின் இல்லை
தொள்ளையுணர் வின்னவர்கன் சொல்லிமடி கிற்பின்
எள்ளுநர்கட் கேக்கழுத்தம் போலவினி தன்றே.'' —சீவக., 496

ஊக்கம் ஒருவந்தம் கைத்துடையார்:

ஊக்க முரண்மிகுதி ஒன்றிய நற்சூழ்ச்சி
ஆக்கம் அவன்கண் அகலாவால்—வீக்கம்
நகப்படா வென்றி நலமிகு தாராற்கு
அகப்படா வில்லை அரண்.'' —பு.வெ., 100

60.4. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையா னுழை. (நாகூசை)

உரைப்பகுதி:

அ) மணக்.: அசைவில்லாத[1] ஊக்கமுடையான்மாட்டு ஆக்கம், தானே வழிகேட்டுச் செல்லும் எ—று

நினைத்ததனாலே ஆக்கமுண்டாமோ என்றார்க்கு இது கூறப் பட்டது.

ஆ) பரிதி.: இலட்சுமி வழிகேட்டு வருவள்; உறுதியான விசாரம் உள்ள அரசனிடத்து எ—று.

இ) பரிப்.: அசைவு இல்லாத ஊக்கம் உடையான் மாட்டு ஆக்கம் தானே வழிகேட்டுச் செல்லும் எ—று.

1. அசைவு—சோம்பலாற்றளர்தல். பரிமேலழகர் உரைக்குறிப்பு பிறந்தது.

நினைத்ததனானே ஆக்கம் உண்டாமோ என்றார்க்கு, இது கூறப்பட்டது.

ஈ) காளி.: ஒருவனுக்கு இருமைக்கும் உரிய ஆக்கமானது தானே வழிதேடிச் சென்று எய்தும்: யாவர்மாட்டு எனின், சிறிது அசைவும் இல்லாத நெஞ்சு ஊக்கத்தை உடையார்மாட்டு; ஆதலான் ஊக்கம் உடைமை உளதாயினல்லது தமக்குரிய தாளாண்மை உள ஆகா எ—று.

அதர் என்பது வழி என்றது.

இனி மற்று இந்நெஞ்சூக்கம் உடையோர்க்கல்லது மடியின்மை நிகழாதாதலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

உ) பரிமேல்.: அசைவில்லாத ஊக்கத்தையுடையான்மாட்டு,பொருள் தானே வழி வினவிக்கொண்டு செல்லும்.

அசைவின்மை — இடுக்கண்[2] முதலியவற்றால்[3] தளராமை. வழி வினவிச்சென்று சார்வார்போலத் தானே சென்று சாரும் என்பார் 'அதர்வினாய்ச்செல்லும்' என்றார். எய்தி நின்ற பொருளினும் அதற்குக் காரணமாய ஊக்கம் சிறந்தது என்பது, இவை நான்கு பாட்டானும் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: அசைவில்லாத ஊக்கத்தை யுடையானிடத்திலே பொருள் தானே வழிகேட்டுக்கொண்டு வரும் எ—று.

ஏ) பழைய 2: அசைவில்லாத ஊக்கத்தை உடையானிடத்துச் செல்வமானது வழிவினவிக் கொண்டு வரும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'முற்குறளில் ஊக்கத்தை உறுதியாகக் கடைப்பிடித்தவர்கள் வருந்தார்கள் என்றார், ஊக்கம்—உள்ளப் பண்பு. அதனை நினைத்தலால் ஆக்கமுண்டாய் விடுமோ என்பதாக வினா எழுப்பி அதற்கு விடை போல அமைந்தது இக்குறள்' என்பர் மணக்குடவர், இதில் கருத்து மாற்றம் இல்லை.

---

2. 'இடுக்கண் என்பது மலர்ந்த நோக்கமின்றி மையனோக்கம் பட வரும் இரக்கம்' நச்சி
3. முதலிய என்றதனால் பகைவர் தடுத்தல் செய்தொழிலிற் சோர்வுடைமை முதலியனவும் கோள்ளலாம்.

'ஆக்கம் இருமைக்கும் உரியது' என விளக்கந்தருவர் காளிங்கர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

அசைவிலா ஊக்கம்:

அசைவில் நோன்றாள நசைவளம் ஏத்தி —புறம்.148:2
அசைவில நோன்றாள் —அகநா.,29:1
தாழ்வில் உள்ளம் —அகநா.,29:4

அசைவிலா:

ஊக்கமது கைவிடேல் —ஆத்தி.,6

ஆக்கம் அதர்வினாய்ச்செல்லும்:

பெருமுழங்கு திரைவரைகள் நீந்திப்பிணி உறினும்
திருமுயங்கல் இல்லைஎனின் இல்லைபொருள் ஈட்டம்
ஒருமுழமும் சேறலில ரேனும்பொருள் ஊர்க்கே
வரும்வழிவி னாயுழந்து வாழ்கதவம் மாதோ —சீவக.,2556

ஆக்கம்—அசைவிலா ஊக்கம் உடையான் உழை:

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு —குறள்.,610
முயற்சி திருவினை யாக்கும் —குறள்.,616
மடியிலான் தாளுளாள் தாமரையினாள் —குறள்.,617
மடியிலான் செல்வம் போல் மரம்நந்த —கலித்.,35
ஊக்க வேந்தன் ஆக்கம் போல —பெருங்.,3,5:20

முற்றும்:

ஆக்கமிங் கொருவரால் அணுக வேண்டுமேல்
ஊக்கம்உண் டாவரேல் உறுவர் அன்னது
நீக்கமில் கொள்கையின் நிற்ப ரேனின்
மேக்குறு பெருந்திரு விரைவின் மேவுமால் —கந்த.மாயைஉப.13

ஒருபுடை:

உண்மை ஓராப்பித்தர் உடைமை மயக்கென்ப
வண்மை யுறவூக்கல் ஒருதலையே—கண்ணீர்

இருபாலும் தோன்றன்ன ஈர்க்கலார் போழ்வாள்
இருபால் இயங்கலினோ டொப்பு —இன்., 11

60.5. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனைய துயர்வு. (நிகூந)

உரைப்பகுதி:

அ) மணக்.: புகுந்த நீரின் அளவினது பூக்களது வளர்ச்சி; அது போல, மாந்தரது உள்ளத்தின் அளவினது ஊக்கம் எ—று.

இஃது ஊக்கம் இதனானே உண்டாம் என்றது.

ஆ) பரிதி.: சலம் எத்தனை ஆழம் உண்டு அத்தனை வளரும் நீர்ப் பூ; அதுபோல அரசற்கு எத்தனை கல்வி உண்டு அத்தனையும் விசா ரம் உண்டாம் எ—று.

இ) பரிப்.: புகுந்த நீரினது அளவினது பூக்களது வளர்ச்சி: அது போல மாந்தரது உள்ளத்தின் அளவினது ஆக்கம் எ—று.

ஆக்கம்—அனைய மலர் நீட்டம்: ஆக்கம் இதனானே வரும் என்றது.

ஈ) காளி.: குளத்தின்கண் நின்ற வெள்ளம் எத்தன்மைத்து; மற்று அத்தன்மைத்து நீர்ப்பூத் தண்டின் நீளமானது; மற்று அதுபோல மன்னர் தமது நெஞ்சு ஒருப்பாடு[1] எத்தன்மைத்து; மற்று அத்தன் மைத்து ஒருவர்க்கு உரியவாகப் பெரியோரான் உரைக்கப்பட்ட உயர்வுப் பொருள் அனைத்தும் எ—று.

உ) பரிமேல்.: நின்ற நீரின் அளவினவாம் நீர்ப்பூக்களின் தாளி னது[2] நீளங்கள், அதுபோல் மக்கள் தம் ஊக்கத்து அளவினதாம் அவ ருயர்ச்சி.

மலர்—ஆகுபெயர்[3]; நீர்மிக்க துணையும் மலர்த்தாள் நீளும் என்பது பட, 'வெள்ளத்தனைய' என்றார். இவ்வுவமையாற்றலான் ஊக்கமிக்க துணையும் மக்களுயர்வர் என்பது பெறப்பட்டது. உயர் தல்—பொருள் படைகளான் மிகுதல்.

---

1. ஒருப்பாடு—ஒன்றிருக்கும் தன்மை.
2. தாள்—அடிக்காம்பு. இதனைத் தண்டுஎன்பர்.
3. மலர்—பூவைக் குறியாதுஅதன் தண்டினை யுணர்த்துதலின் சினையின் பெயர் அதனையுடைய முதலுக்காயிற்று. சினையாகுபெயர்.

ஊ) கவிராசர்: நீர் நின்ற வளவினவாம் நீர்ப்பூக்களுடைய காம்பு அதுபோல, மனுஷர்களுக்கும் தங்கள் அறிவுக்குத் தக்க உயர்ச்சி யுண்டாம் எ—று.

ஏ) பழைய ?: நின்ற நீரின் அளவினவாம் நீர்ப்பூவின் நீளம், அப்படிப்போல மக்கள் தங்கள் ஊக்கத் தளவினவாம் உயர்ச்சியும்.

மல்லர்: என்பது நிற்கிற தண்ணீருக்களவாக நீர் பூவினுடைய கொடிகள் நீண்டுபோம்படிப்போலத் தங்களுடைய மனத்திலிருக்கிற துணிவுக்கு அளவாக மனுஷர் உசந்து போறார்கள் என்றவாறு.

தண்ணீர் மேல் நின்றால் நீர்ப்பூச் சிலத்தியாயிருக்கும் அப்படிப் போல் அரசனுக்குத் துணிவின் மிகுதிபிருந்ததானாலப் பொருள்களி லேயும் படையிலேயும் மிஞ்சிப்போவான் என்பது கருத்து.

வெள்ளம் - தண்ணீர்; அனைய — அளவாகும்! மலர்நீட்டம்— கொடி, மாந்தர்— மனிதர், உள்ளம்— மனத்தின் மிகுதி, அனையது— அளவாகும்; உயர்வு—பெருமை;

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவில், 'உள்ளம்' என்பதற்குப் பொருள் வேறுபாடு ஆசிரியர்களிடம் காணப்படுகிறது 'உள்ளம்' என்றே பொருள் காண் பர் மணக்.; 'கல்வி' என்பர் பரிதி:, 'நெஞ்சின் ஒருப்பாடு' என்பர் காளி.; 'ஊக்கம்' என்பர் பரிமேல்.; 'அறிவு' என்பர் கவிராசர். இவர்கள் உள்ளம் என்பதற்குக் கூறும் பொருள்கள் யாவும் பண்பு— பண்பி என்ற இயைபால் அமைவன. மிகுதியான கருத்து மாற்றம் இன்று. ஆயினும் 'ஊக்கம்' என்பதே நேர்பொருளாம்.

அங்ஙனமே உயர்வு' என்பதற்குப் பொருளாக மணக்குடவர் 'ஊக்கம்' என்றும், பரிதி. 'விசாரம்' என்றும், காளிங்கர் 'பெரியோ ரான் உரைக்கப்பெற்ற உயர்வுப் பொருள்' என்றும், பரிமேலழகர் 'உயர்ச்சி' என்றும் கூறுவர். பரிமேலழகர், 'உயர்தல்—பொருள் படைகளான் மிகுதல்' என விளக்கந்தருவர்.

ஊக்கம், உயர்வு, என்பன உயிர்களின் அறிவுப் பண்பின் பண் பாய் அதனோடு என்றும் இருப்பன. அப்பண்பு முறையே வளரின் திரும்பச் சுருங்காது; ஆனால் மறப்புக்கும் நினைப்பிற்கும் உரிய தாகும் என்பது மன நூலார் துணிபு. அதனாலேயே வள்ளுவர் ''மலர் தலும் கூம்பலும் இல்லது அறிவு'' (425) என்றார். உள்ளம் காட்சிப்

பொருளல்லாதது; கருத்துப் பொருள். ஆகவே அதன் உயர்வு அவ் வுள்ளத்தின் எழுச்சி மிகுதி நேர்பொருளாகாது. அதனாலேயே புகும் வெள்ளத்தினளவாக உயரும் மலர் நீட்டம்போல உள்ளத்தின் அள வாக வளர்ந்த உயர்வும் மனத்தில் மடங்கி மறைந்து கிடக்கும் என முதற்பதிப்பில், பரிமேலழகர் உரையால் பெறும் நயங்களுள் இதுவும் ஒன்று என்றே கூறப்பெற்றமை காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

வெள்ளத் தனைய மலர்நீட்டம்:

... ... அழகார் அம்புயப்
பூவின துயர்வு பொய்கையின் ஆழத்து
அளவா வதுபோல் .... —மனோன்., 4:3.85—87

நீரளவே யாகுமாம் நீராம்பல் —வாக்கு.. 7

606. உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து. (நிகூகூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'உள்ளுவ எல்லாம்' — பாடம். நினைப்பன எல்லாம் உயர்வையே நினைக்க; அந்நினைவு முடியாமல் தப்பினும், முயன்று பெற்றதனோடு ஒக்கும் எ—று.

இது தப்பினும் பழிக்கப்படாது என்றது

ஆ) பரிதி : விசாரிப்ப தெல்லாம் பாரமானதே விசாரிப்பான்; விசாரித்தாலும் முடியாதபோதும் பாரகாரியம்[1] எ—று.

இ) பரிப்.: நினைப்பன எல்லாம் உயர்வையே நினைக்க: அந் நினைவு முடியாமல் தப்பினும் முயன்று பெற்றதனோடு ஒக்கும்எ—று.

இது தப்பினும் பழிக்கப்படாது என்றது.

ஈ) காளி.: அரசர் தாம் செய்வதாகச் சிந்திப்பது எல்லாம் மேம்படு

1 பாரகாரியம் — பெருஞ்செயல்

கருமம் சிந்திக்க; மற்று அது பிழைப்பினும் பிழையாத நீர்மை உடைத்து எ—று.

உயர்வுள்ளல் என்பது உயர்வினை உள்ளுக என்றது: தள்ளினும் என்பது பிழைப்பினும் என்றது: தள்ளாமை நீர்த்து என்பது பிழையாத நீர்மை உடைத்து என்றது.

உ) *பரிமேல்.*: அரசரியினார் கருதுவதெல்லாம் தம் உயர்ச்சியையே கருதுக; அவ்வுயர்ச்சி பால்வகையால்[2] கூடிற்றில்லையாயினும்: அக்கருத்துத் தள்ளாமை[3] நீர்மையுடைத்து

உம்மை, தள்ளாமை பெரும்பான்மையாதல் விளக்கிற்று[4]. தள்ளிய வழியும் தாளாண்மையில் தவறின்றி நல்லோரால் பழிக்கப் படாமைபின், தள்ளாவியற்கைத்து என்பதாம். மேல் 'உள்ளத்தனையது உயர்வு' என்றதனையே வற்புறுத்தியவாறு.

ஊ) *கவிராசர்*: ஒருவன் நினைக்கிறதெல்லாம் தன்னுடைய உயர்ச்சியையே நினைக்க, அந்த உயர்ச்சி வந்தெய்தாமற்போனாலும் பெருமையுடைத்து எ—று.

ஏ) *பழைய 2*: ''தாளாண்மை நீர்த்து'' பாடம் அரசர் கருதுவதெல்லாம் தம் உயர்ச்சியே கருதுக மற்றது வாராதெனினும் வந்ததற்கொக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் நீங்க ஏனைய உரையாசிரியர்கள் ''உள்ளுவது எல்லாம்'' எனப்பாடங்கொண்டனர். அதற்குக் காரணம் 'மற்றது' எனப் பின் ஒருமையாற் சுட்டப்படுதலாற் போலும். மணக்குடவர் 'எல்லாம்' என்ற பன்மைப் பெயர் அடுத்து வருதலின் உள்ளுவனவும் பலவாதல் வேண்டும் எனக் கருதி 'உள்ளுவ எல்லாம்' எனப்பாடங் கொண்டனராதல் வேண்டும் 'அது' என்னும் சுட்டுச் சொல் உள்ளலாகிய தொழிலைச் சுட்டியதாகலின் பன்மை மயக்கம் விளையாது; ஆதலால் மணக்குடவர் பாடமே சிறந்தது.

''உயர்வு''

'பாரமானது 'பரிதி.; 'மேம்படுகருமம்' காளி,; இதன் சொற்

---

2 பால்வகையால்—ஊழ் வயத்தான்.
3 தள்ளாமை—கவறாமை.
4 தள்ளினும்' என்ற உம்மை தள்ளாமையே பெரும்பான்மை; தள்ளுதல் சிறுபான்மை என்பதை விளக்குதலால் எதிர்மறைக்கண் வந்தது

பொருளைக் காளிங்கர் குறிப்பது 'உயர்வு' என்பதே. பரிமேலழகர் 'தம் உயர்ச்சியையே கருதுக' என்பர். கவிராசர் உரையும் பழைய உரையும் இரண்டும் அங்ஙனமே கருதும்.

தேவநேயர், 'தள்ளாமை நீர்த்து' என்பதற்கு, 'உயர்வு தவறினும், உள்ளினவரின் உயரிய நோக்கத்தையும், அவர் செய்த முயற்சியையும் அறிவுடையோர் பாராட்டுவர்' எனப் பண்டையோரை ஒத்துரைப்பதோடு ''மெய்வருந்தக் கூலி தரும் ஆகையானும் தள்ளாமை நீர்த்து என்றார்'' என்பது நயத்தகு உரையாம்.

இராம. ஊக்கத்தோடு எண்ணுவதை எல்லாம் உயர்ந்த செயல்களாகவே எண்ணவேண்டும்; கீழான செயல்கள் விலக்கினாலும் விலக்க முடியாத் தன்மையுடையன ஆதலால் உயர்ந்த செயல்களுக்கே ஊக்கமும் முயற்சியும் தேவை' என்பர்.

வரத. 'உயர்வு—உயர்ந்த பொருள். தள்ளினும் தள்ளாமை நீர்த்து—(கை கூடத்) தவறினாலும் அச்சிந்தனை உடைமையால் ஒருக்கால் வந்தடையும். உள்ளுவது—முழு நினைவோடு முயல்வது' என்பர். உள்ளுதல்—உள்ளத்தின் செயல். அது புறத்தில் செயற்படும் போது முயற்சியாகும். இவ்வேறுபாடு தெளியும்வகை உரையமைமின் நலமாகும்.

'தள்ளாமை நீர்த்து' என்பதற்கு ஏனையோர் அனைவரும் 'முடியாமற்போனாலும் முயன்று முடித்ததனோடு ஒக்கும்' என்றனர். அதற்கு விளக்கமாக' முயற்சியிற் குறைபாடில்லை என்று நல்லோரால் புகழப்படும்' என்றனர். இவர் அதே நினைப்பாக இருப்பதால் 'ஒரு காலத்தடையலாம்' என்கிறார். இது பெறுங் கருத்தானாலும் ஆகுமேயன்றி நேர்பொருளாகாது.

தன் உயர்ச்சி—தம் உயர்ச்சி—படை பொருள்களின் மிகுதி என்ற உரைகளிலும் பொதுவகையின் அனைத்து வகையானும் உயர்ந்த எண்ணங்களையே எண்ணுக என்பது சிறந்ததாகலாம். வள்ளுவர் தனிமனிதற்குக் கூறுவார் போலச் சமுதாயத்திற்கும் அரசனுக்குக் கூறுவார்போல அனைவர்க்கும் கூறும் மரபு உடையராதலை எண்ணி ஈண்டும் அத்தகைய பொதுவுரை கொள்ளத்தக்கது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஒருபுடை:

... ...சிறியனசிந்தி யாதான் —கம்பராமா.,416

60.7. சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பின்
பட்டுப்பா டுன்றும் களிறு. (நாகை)

உரைப்பகுதி:

அ) மணக்.: தளர்ச்சி வந்த விடத்துத் தளரார் உள்ள மிகுதியுடை யார்; மெய்புதைந்த அம்பினுள் பட்டும் பாடுன்றும் களிறுபோல எ—று.

இஃது உயிர்க்கேடு வரினும் தளரார் என்றது.

ஆ) பரிதி.: இவர் உரை கிடைக்கவில்லை.

இ) பரிப்.: தளர்ச்சி வந்த இடத்துத் தளரார் உள்ளம் மிகுதிஉடை யார்:மெய்புதைந்த அம்பினுள் பட்டும்பாடு ஆற்றும் களிறுபோலஎ—று

இது உயிர்க் கேடு வரினும் தளரார் என்றது.

ஈ) காளி.: நெஞ்சு ஊக்கம் உடைய அரசரானவர், தமது விதி வகையான் யாதானும் ஒருவாற்றான் தமது ஆக்கம் அழியுமிடத்துத் தளர்வுறார்: அது என்போல எனின், ஒருவன் எய்த அம்பானது தன் மெய் அழுந்தப்பட்டு வைத்தும் பின்னும் தனது பெருந்தன்மையை உரைத்து நிற்கும் அண்ணல் யானையானது மற்று அது எ—று.

உ) பரிமேல்.: களிறு புதையாகிய அம்பால் புண்பட்டவிடத்துத் தளராது தன்பெருமையை நிலைநிறுத்தும், அதுபோல ஊக்கமுடை யார் தாம் கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்தவிடத்துத் தளராது தம் பெருமையை நிலைநிறுத்துவர்.

புதை—அம்புக்கட்டு; ப மை கூறியவாறு[1]. பட்டால் என்பது பட்டு எனத் திரிந்து நின்றது[2]. ஒல்காமை களிற்றுடனும், பாடுன்று

---

1. பன்மை கூறியவாறு-பல அம்புகள் தைத்தும் என்பதைக் குறிக்கப் புதையம்பிற் பட்டும்' எனறதாம்

2. 'பட்டால்' பட்டெனத் திரிந்து நின்றது' என்றதின் குறிப்பாக, 'பட்டு என்பது செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அது அம்பின் வினை ஊன்றும் என்பது களிற்றின் வினை. செய்தென் எச்சம் பிறவினைகொண்டு முடிதல் மரபன்று; விதியுமின்று ஆதலால் 'பட்டால்' என்பதுதான் அதனை இயற்கை வடிவம் ஆகவே 'பட்டு' என்றிருப் பினும் முடிபுகருதிப் பட்டால் எனக் கொள்க என்பார். இங்ஙனம் கூறினார் என்பர் செய்யுளில் இருப்பது 'பட்டு' என்பது, அது பிறவினை கொண்டு முடியாதாகையான் பட்டால் எனத் திரிக்க. மழை பெய்து நெல்விளைந்தது என்பதனைப் 'பெய்ய' எனத் திரித்துப் பொருள் கோடல் போல ஆகையால் பட்டு என்பதனைப் பட்டால் எனத் திரிக்க என்றிருப்பது தெளிவாகும்.

அன்றியும் 'அம்பு சென்றிறுத்த அரும்புண்' என்பதுபோல் செல்லுதல் வினை அம்பினதாகலும் படுதலும், அதனால் துன்புறுதலும் யானையின் செயலேயாதலின் முடிபு கருதி இவ்விலக்கணம் வேண்டுமா? என்பதும் சிந்திக்கத்தக்கது, மேலும் அம்பின் பட்டு என்னும்போது அம்பால் புண்பட்டாலும் என ஈரிடத்து எதுப்பொருண்மை இருத்தல் ஏற்புடையதா என்பதும் ஆய்வுக்குரியது. ஆகவே களிறு புதையம்பிற் (புண் பட்டும் பாடு ஊன்றும் என முடித்தலே ஏற்புடையதாதலைச் சிந்திக்க 'அம்பு பட்டு பாடுன்றும் களிறு' என்பது குறட்பாடமாயின் பரிமேலழகர் கூறும இலக்கண முடிபு ஏற்புடையதாகலாம். இவையனைத்தும் ஆய்வுக்குரியன

தல் உரவோருடனும் சென்று இயைந்தன[3]. தள்ளினும் தவறாது உள்ளியது முடிப்பர் என்பதாம். இவை மூன்று பாட்டானும் ஊக்க முடையாரது உயர்ச்சி கூறப்பட்டது

ஊ) கவிராசர்: யானை கூரிய வம்பாற் காயம் பட்டவிடத்துந் தளராது தன் பெருமையை நிலைநிறுத்தும்; அதுபோல, ஊக்கமுடை யார் தாங்கருதிய உயர்ச்சிக்குத் தப்பு வந்தாலும் தளராமல் தம் பெருமையை நிலைநிறுத்துவர் எ—று.

ஏ) பழைய 2: களிறு புதையாகிய அம்பாற் புண்பட்டவிடத்தும், தளராது தன் பெருமையை நிலைநிறுத்தும், அப்படிப்போல ஊக்க முடையார் தாம் கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்தவிடத்துத் தளரார். தம் பெருமையை நிலை நிறுத்துவர்.

தொகுப்பும் குறிப்பும்:

'சிதைவிடத்து'—'தளர்ச்சி வந்தவிடத்து' மணக்.; 'உயிர்க்கேடு வரினும்' எனவும் கூறுவர். 'ஆக்கம் அழியுமிடத்து' காளி.; 'தாம் கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்த விடத்தும்' பரிமேல்., முதலி யோர். 'தப்பு வந்தாலும்' கவிராசர்; 'முயற்சிகளில் தோல்வி வந்தால்' இராம.; 'முயற்சிக்கு அழிவு வந்தபோதும்' குழந்தை; 'எண்ணிய எண்ணம் சிதறவரினும், யானைக்குத் தந்த அம்பு மேலும் ஊக்கம் விளைப்பதுபோலத் தளர்ந்தவனுக்கு இடர்ப்பாடு விரைந்த முயற்சியை விளைக்கும் என்ற நயமும் தருவர் ஜி.வரத.; சொற் பொருள் அளவில் அனைவரும் ஒத்தனராயினும் விளக்கங் காணும் வகையிலே சிறிது மாறுபடுகின்றனர்.

'உரவோர்'—'உள்ளமிகுதியுடையோர்' மணக்.; 'நெஞ்சூக்கம் படைத்த மன்னர்' காளி., 'ஊக்கம் உடையார்' பரிமேல்,,கவிராசர், பழைய 2, கா.சு., தேவநேயர், குழந்தை; 'ஊக்கம் உடைய நல்லோர்' ஜி.வரத.; இவற்றுள் அதிகார இயைபு நோக்கி உள்ள மிகுதி என்ற உரையே சிறந்தது. ஊக்கம் உடையார் என்பது அதன் விளக்கமாகிறது.

'புதையம்பின் பட்டு' — 'மெய்புதைந்த அம்பினுட்பட்டும்' மணக்.;

3. களிறு பாடு ஊன்றுதல் உவமை. உரவோர் சிதைவிடத்து ஒல்காமை பொருள். பொரு ளுக்குக் கூறிய ஒல்காமையை உவமமாகிய களிற்றிற்குக் கூறிய பாடு ஊன்றுதலைப் பொரு ளாகிய உரவோருக்கும் கூட்டி. களிறு ஒல்காமை பாடுன்றும் எனவும், உரவோர் ஒல்கா மை பாடுன்றுவர் எனவும் கொள்க முன்னரும் நடுவுநிலைமை யதிகாரத்துச் 'சமன் செய்து' என்னும் குறளில் பரிமேலழகர் உவமையடையைப் பொருட்கண்ணும் பொருள டையை உவமைக்கண்ணும் கூட்டுக' என்றது நினைக்கத்தக்கது

'எய்த அம்பானது தன் மெய்யிற் பட்டு' காளி.; 'புதையாகிய அம்பால், அம்புக்கட்டிலுள்ள அம்பால் பன்மை கூறியவாறு' பரிமேல்., பிறரும்; 'உடம்பை புதைக்கும் அளவு அம்புகள்பட்டு' மு.வ.

'மெய்புதைந்த அம்பினுட் பட்டும்' என்ற மணக்குடவர் உரை 'எய்போற்கிடந்தான் என் ஏறு' என்ற ஏறாண்முல்லைக் குறிப்பைக் கருதச் செய்கிறது

'களிறு புதையம்பிற் பட்டு பாடுன்றும்' எனக் கொண்டு கூட்டி. 'களிறு புதையாகிய அம்பால் புண்பட்ட இடத்துத் தளராது தன் பெருமை நிலைநிறுத்தும்' எனப் பரிமேலழகர் வழங்கும் உரை 'பட்டு' என்பதை யானையின் வினையாகவே கருதுகிறது. அங்ஙனம் கருதவே 'பட்டு' என்னும் செய்து என்னும் எச்சம் தன்வினை முதல்வினையைக் கொண்டு முடிந்த வழாநிலையேயாம்.

'அம்பால்' எனக் கருவிப் பொருள் தரும் ஆல் உருபைப் புணர்த்து, 'பட்டு' என்பதற்குப் புண்பட்ட இடத்து என யானையின் வினையாக்கி. 'ஊன்றும்' என்ற வினையொடு முடித்தலின், 'பட்டால்' என்பது 'பட்டு' எனத் திரிந்து நின்றது என்ற குறிப்புப் பரிமேலழகரதாக இருத்தல் இயலாது. இடைச்செருகலாகும். சிந்திக்க.

இவற்றுள் 'புதையம்பிற் பட்டும்' என உம்மையை வருவித்து, அம்பு தன் மெய்யிற் புதைந்திருந்தும் அதனைப் பொருட்படுத்தாது எதிர்த்துத் தன் பெருமையை நிலைநிறுத்தும்களிறு என்ற உரை நேரியதும் சிறந்ததுமாகும்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

சிதைவிடத்து ஒல்கார் உரவோர்:

....மானமே பெரிது
சிதைவிடத் துரவோர் பதையார் சிறிதும், —மனோன்4:3.163—164

60.8. உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு. (நிகூ அ)

உரைப்பகுதி:

அ) மணக்.: உள்ளமிகுதி யில்லாதார் உலகின்கண் வண்மை யுடைமை என்னும் களிப்பினைப் பெறார் எ—று.

இஃது உள்ள மிகுதி இல்லாதார்க்குப் பொருள்வரவு இல்லை யாம்; ஆதலான் அவர் பிறர்க்கு ஈயமாட்டார் என்றது.

ஆ) *பரிதி.:* விசாரமில்லாதவர் உலகத்துச்செல்வவான் என்று...

இ) *பரிப.:* உள்ளம் மிகுதி இல்லாதார் உலகின்கண் வண்மை உடையேம் என்னும் களிப்பினைப் பெறார் எ—று.

இஃது ஊக்கம் இல்லாதார்க்கு ஈயமாட்டார் என்றது.

ஈ) *காளி.:* யாதானும் ஒரு கருமத்தின் கண்ணும் தமது நெஞ்சு ஊக்கம் இல்லாத அரசரானோர் என்றும் எய்துவதிலர்; யாதினை எனின் இவ்வுலகத்து வாழ்வார் பலரினும் யாம் சாலச்செய் கருமத் தின்கண் வளவியேம் என்று உள்ள மனச்செருக்கினை எ—று.

உ) *பரிமேல.:* ஊக்கமில்லாத அரசர், இவ்வுலகத்தாருள் யாம் வண்மையுடையேம்[1] என்று தம்மைத் தாம் மதித்தலைப்[2] பெறார்-

ஊக்கமில்லையாகவே முயற்சி, பொருள், கொடை, செருக்கு இவை முறையே இலவாமாகலின்' செருக்கெய்தார் என்றார். கொடைவென்றிபினாய[3] இன்பம் தமக்கல்லது பிறர்க்குப் புலனாகா மையின் தன்மையால் கூறப்பட்டது[4].

ஊ) *கவிராசர்:* ஊக்கமில்லாதவர்கள் இந்த உலகத்தாருக்குள்ளே 'யாம் வண்மையுடையோ' மென்று தம்மைத் தாம் மதித்தலைப் பெறார் எ—று.

ஏ) *பழைய 2:* ''வள்ளியோம்'' பாடம். ஊக்க மில்லாதவர் இவ் வுலகத்தாருள் யாம் வண்மையுடையோ மென்று தமைத் தாம் மதித் தல் என்னுஞ் செருக்கைப் பெறமாட்டார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'வள்ளியம்' என்பதற்குச் 'செய்கருமத்தின்கண் வளவியேம்' என் பர் *காளிங்கர்*. ஏனையர் 'வண்மையுடையேம்' எனக் கொடைச் செருக்கைக் குறிப்பர். 'யாம் நல்லவர் என்ற இன்பக் களிப்பு' என்பர் *இராம:*, 'கொடுத்துவரும் பெருமித எண்ணம்' *வரத:*, இவற்றுள்

1. வண்மை உடையேம்—ஈகைக் குணம் உடையேம்:
2. தம்மைத்தாம், மதித்தல் — பெருமிதம் பெருமிதத்திற்கு வாயில்களானநான்கில் கொடையும் ஒன்றாகலின் செருக்கு எய்தான்
3. கொடைவென்றி கொடுத்தலால் விளையும் வென்றி
4. வள்ளியம்—வண்மையுடையேம் எனத் தன்மைப் பன்மை வினைமுற்று.

ஊக்கத்தான் முயற்சியும் முயற்சியாற் பொருளும், பொருளாற் கொடையும் கொடையால் வள்ளியம் என்னுஞ் செருக்கும் விளைதலின் இக்கருத்தைத் தரும் *பரிமேலழகர்* போன்றார் உரைகளே சிறந்தன.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

ஊக்க முடையார் கைப்பொருளை ஒழிந்தா ரேனும் ஒழிவில்லா
ஆக்க முடைய ரேயாவர் ஆக்க மிருந்தும் அசைவில்லா
ஊக்க மிலரேல் ஏதுமிலர் உரூற்று முயற்சி பொருள்கொடைகள்
தேய்க்கும் புகழ்நற் செருக்கிவைபின் சேரா ஏம கண்டனே

—விநா. அரசி.,98

ஒருபுடை:

... ... உள்ளமிக்க
குலந்தரு நல்லோர் செல்வம் குன்றினும் தம்பால் இல்லென்று
அலந்தவர்க்கு உயிரை மாறி யாயினும் கொடுப்ப ரன்றோ

—திருவிளை. தருமி., 17

60.9 *பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை*
வெரூஉம் புலிதாக் குறின். (நிகூக)

உரைப்பகுதி :

அ) மணக் : யானை பெரிய உடம்பினதாய், கூரிய கோட்டையும் உடைத்தாயினும்: புலி பொருமாயின் அஞ்சும் எ—று.

இஃது உள்ளமுடைமை யில்லாதார் பெரியராயினும் கெடுவார் என்றது.

ஆ) *பரிதி.*: அங்கபாரமும்[1] கூரிய கொம்பும் யானைக்கு உண்டாகிலும் மனோபலம்[2] இல்லாதபடியினாலே புலிக்குப் பயந்ததுபோல, மனோபலமில்லாதார் ஒருகண் ஒற்றினால் விசாரம் தாழ்வுவந்தாலும் அதனாற்குறை இல்லை. அது என்போல் என்னில் அம்பிலே நொந்த யானை பின்பும் அதன் பெலம் பெற்ற தன்மைபோலும் எ—று.

இ) *பரிப்.*: யானை பரிய உடம்பினதாய்க் கூரிய கோட்டையும் உடையதாயினும் புலி பொருமாயின் அதற்கு அஞ்சும் எ—று.

---

1 அங்கபாரம்— பருத்த உடல்.
2 மனோபலம்— மனவலிமை

ஊக்கம் இல்லாதார் பெரியராயினும் கெடுவார் என்றது.

ஈ) காளி.: சாலப் பரியதுமாய்க் கூரிய கோட்டினை உடையது மாய் இருந்ததே ஆயினும் யானையானது மிகவும் அஞ்சும் : எவ் விடத்து எனின், ஒரு புலி வந்து தன்னொடு பொரத் தாக்குறு வதான இடத்து; மற்று அத்தன்மைத்து மன்னர்க்கும்; பொருபடை ஆண்மையும் வருபடைத்துணையும் மற்றும் பிறவும் பெரியராகிய மாற்றரசர் வந்துற்றனர் ஆயினும், மற்று இவரை நோக்கிச் சிறியரே ஆயினும், நெஞ்சு ஊக்கம் என்னும் நிலைமையே அரசர்க்கு இயல்பு எ—று.

உ) பரிமேல்.: எல்லா விலங்கினும் தான் பேருடம்பினது; அதுவேயு மன்றிக் கூரிய கோட்டையும் உடையதாயினும் யானை தன்னைப் புலியெதிர்ப்படின் அதற்கு அஞ்சும்.

பேருடம்பான் வலிமிகுதி கூறப்பட்டது. புலியின்மிக்க மெய் வலியும் கருவிச் சிறப்பும்[3] உடைத்தாயினும் யானை ஊக்கமின்மை யான் அஃதுடைய[4] அதற்கு அஞ்சும் என்ற இது, பகைவரின் மிக்க மெய்வலியும் கருவிச்சிறப்பும் உடையராயினும் அரசர் ஊக்கமிலரா யின், அஃது உடைய அரசர்க்கு அஞ்சுவர் என்பது தோன்றநின்றமை யின் பிறிதுமொழிதல்.

ஊ) கவிராசர்: எல்லாமிருகத்துக்குள்ளேயும் பெரியது யானை அது கூர்மையான கொம்பையுடையது; ஆயினும் புலியெதிர்ப்பட்டால் அதற்குப் பயப்படும் எ—று.

ஏ) பழைய :2 ''வெருவும் புலிதாக் குறின்'' பாடம். பெரிய உடம்பையும் கூரிய கொம்பையும் உடையதாயினும். யானை ஊக்க மில்லாமையால் ஊக்கமுடைய சிறு புலி எதிர்ப்படில் அதற்கஞ்சி நிற்கும்:

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி., 'வலியும், கருவியும் இருந்தும் யானை புலிக்குப் பயந் தது போல, மனவலிமையில்லாத ஒருவன் வந்து எதிர்த்தால் தாழ்வு வரினும் குற்றமில்லை, புதையம்பிற்பட்ட யானை மீளவும் வன்மை பெற்றது போல' என்பர். இவ்வதிகாரத்துள்ளேயே இரண்டிடத்து

கருவிச்சிறப்பு– வலிய கொம்பால் ஆம் சிறப்பு;
அஃதுடைய– ஊக்கமுடைய

யானை உவமமாக வருதலின் ஒன்றற்கொன்று முரணான கருத்தின தாகுமா என்று எண்ணி இயைபுபடுத்த எண்ணி இங்ஙனம் குழப்ப மான உரையெழுதிப் பிழைபட்டனர் எனலாம். ஏனைய பழைய–புதிய உரைகள் அனைத்துமே 'உடல்வலிமையும் கொம்பாகிய கருவி வன்மையும் படைத்திருந்தும் யானை ஊக்கமின்மையின் புலிதாக்க அஞ்சும் அதுபோல மன்னன் சிறப்பான வலியனைத்தும் பெற்றவனா யினும் ஊக்கமுடைய ஓரரசன் தாக்கத் தோற்பன்' என்ற பொருள் தோன்ற நிற்பதால் பிறிதுமொழிதல் அணி என்றே கூறுகின்றன. ஆதலால் மணக்குடவர் பரிமேலழகர் போன்றாருரைகளே சிறந்தன.

ஏ) ஒப்புமைப்பகுதி:

யானை வெரூஉம் புலிதாக்குறின்:

கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கில் துஞ்சும் யானை
நனவிற்றான் செய்தது மனத்த தாகலின்
கனவிற் கண்டு கதுமென வெரீஇ —கலி., 49:1—4

கந்தடு களிறு கொல்லும் கருவரை உழுவை யன்னான்
—சீவக., 1219

நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை நாகநண்ணி
மறமனை வேங்கை யெனநனி யஞ்சும் —திருக்கோவை

ஒருபுடை:

அரண்தரு திரள்தோள் சால உளவெனின் ஆற்றலுண்டோ?
திரண்டதோள் வனத்தை எல்லாம் சிறியதோர் பருவந் தன்னில
இரண்டுதோ ளொருவ னன்றோ மழுவினார் எறிந்தா னென்றான்
—கம்பராமா., 3479

60. 10 *உரமொருவற் குள்ள வெறுக்கை அஃதில்லார் மரமக்க ளாதலே வேறு.* (உ00)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒருவனுக்கு அறிவாவது உள்ளமிகுதி யுடைமை; அஃதில்லாதார் மரமென்று சொல்லப்படுவர்; மக்கள் வடிவாதலே மரத்தின் வேறாகத் தோன்றுகின்றது எ—று

இஃது அறிவும் இதுதானே என்றது.

ஆ) *பரிதி.:* அரசற்குச் சத்துவமாவது[1] விசாரம்; அது அரசனும் மரமும் நிகர் எ—று.

இ) *பரிப்.:* (மணக்குடவருரையே) அறிவும் இதுதானே என்றது.

ஈ) *காளி.:* ஒருவர்க்கு உணர்வுடைமையாவது யாதோ எனின் ஓர்ந்து உற்ற கருமத்தின்கண்[2] பெரிதும் நெஞ்சுஊக்கம் உடையர் ஆதலே செல்வம்! அஃது இல்லாதார், மரமானது மக்களுள் உருவு கொண்டது எத்தன்மைத்து அத்தன்மைத்து எ—று.

உரம் என்பது அறிவுடைமை. வெறுக்கை என்பது செல்வம் என்றும் வெறுப்பு என்றும் சொல்லுவாரும் உளர்.

உ) *பரிமேல்.:* ஒருவருக்குத் திண்ணிய அறிவாவது ஊக்கமிகுதி, அவ்வூக்கமிகுதி இல்லாதார் மக்களாகார் மரங்களாவார்; சாதிமரங்களோடு[3] இம்மரங்களிடை வேற்றுமை வடிவு மக்கள்வடிவே, பிறிதில்லை.

உரம் என்பது அறிவாதல் 'உரன் என்னும் தோட்டியான்'[4] என்பதனாலும் அறிக. மரம் என்பது சாதியொருமை. மக்கட்குள்ள நல்லறிவும் காரியமுயற்சியும் இன்மைபற்றி மரம் என்றும், மரத்திற்குள்ள பயன்பாடின்மைபற்றி[5] மக்களாதலே வேறு என்றும் கூறினார். பயன் பழம் முதலியவும், தேவர்கோட்டம்[6] இல்லம் தேர் நாவாய்கட்கு[7] உறுப்பாதலும் முதலிய இவை மூன்றுபாட்டானும் ஊக்கமில்லாதாரது இழிபு கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்:* ஒருவனுக்கு அறிவு ஊக்கமிகுதி; அந்த ஊக்கமிகுதி யில்லாதவர் மனுஷராகார்: மரங்களோடொப்பர். வடிவு மாத்திரமே யல்லாமல் அறிவு பேதமில்லை எ—று.

ஏ) *பழைய உ:* ஊக்கம் ஒருவருக்கு உள்ள செல்வம்; அவ்வூக்கம் இல்லாதவர் மக்களாகார் மரங்களாவார்; சாதி மாத்திரமே வேறு.

---

1. சத்துவம் — வலிமை
2. ஓர்ந்துற்ற கருமம்- ஆராய்ந்து மேற்கொண்ட வினை
3. சாதி மரங்கள்—இயல்பான மரங்கள்
4. குறள் 4
5. பயன்பாடு - பயனால் விளையும் பெருமை
6. தேவர் கோட்டம்—கடவுள் உறையும் கோயில்கள்
7. நாவாய் — தோணி கப்பல் முதலியன

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'உரம்' 'அறிவுடைமை' மணக்: 'உணர்வுடைமை' அறிவுடைமை காளி.: 'திண்ணிய அறிவு' பரிமேல்.,கவிராசர்;'வலிமை' தேவநேயர், இராம.: 'சிறந்த அறிவு' குழந்தை; 'திடம்' கா.சு. 'பலமான அறிவு' மு.ரா.அரு.; 'ஊக்கமுடைமை' வரத.

உள்ள வெறுக்கை

'உள்ளம் மிகுதியுடைமை' மணக்.; 'ஓர்ந்து உற்ற கருமத்தின் கண் பெரிதும் நெஞ்சூக்கம் உடையனாதல்' காளி.; 'ஊக்கமிகுதி' பரிமேல்., தேவநேயர்; 'மனவலிமை' இராம.; 'உண்மைச்செல்வம்' வரத.

இவ்வுரைகள், உள்ளம்—வெறுக்கை—உரம் என்பன பலபொருள் ஒரு சொல்லாதலை உணர்த்தி ஈண்டு எல்லாப்பொருளையும் இயைத்துக் கோடல் பொருந்துவதாம் என்பதை யறிவிக்குந்துணையாகும், ஆயினும் ஈண்டு அதிகார இயைபும், சொற்கிடக்கையமைப்பும் பொருட்சிறப்பும் நோக்கி உரனென்னும் தோட்டி முதலிய வழக்கான் உரம் — அறிவாற்றலையும், உள்ளவெறுக்கை — ஊக்கமிகுதியையுமே உணர்த்துவன எனல் ஏற்புடையதாகும்

'உள்ள வெறுக்கையைக்' குறிப்புப் பெயரெச்சமாகக் கொண்டு உரை காணுதல் அதிகார இயைபிற்கு இடமில்லாமையை விளைவிக்கிறது. உள்ளம்—ஊக்கம் ''உள்ளம் உடைமை'' ''உள்ளம் இலாதவர் எய்தார்'' என்பன போன்ற ஆசிரியர் ஆட்சியொடு மாறுகொள்ளும் என மதிக்க.

(ஒ ஒப்புமைப்பகுதி:

உள்ள வெறுக்கை:

உள்ள வெறுக்கை —குறள்: 571

பிணைடைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	உடையர்	உள்ளம் உடை	ஆக்கம் இழந்து	ஆக்கம் அதர்	வெள்ளத்	உள்ளுவ	சிதைவிடத்	உள்ளக் இலா	பரியது	உருமொருவற்
மணக்.	1	2	8	4	3	5	7	9	10	6
பரிது.	1	2	4	3	6	8	10	5	9	7
பரிப்.	1	2	8	4	–	5	7	9	10	6
காளி.	1	8	7	10	2	4	3	5	9	6
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

60 வது அதிகாரம் 'ஊக்கமுடைமை' முற்றிற்று.

61. மடியின்மை

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: மடியின்மையாவது சோம்பலில்லாமை. செய்யுங் காரியம் உயர நினைத்தாலும் அதனைச் செய்து முடிக்குங்கால், சோம்பாமை வேண்டும் என்று அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: மடியின்மையாவது சோம்பலினை விட்டுவிடுதல் எ—று.

இ) பரிப்.: மடியின்மையாவது சோம்பல் இன்மை. செய்யும் காரியம் உயர நினைத்தாலும் அதனைச் செய்து முடிக்குங்கால், சோம்பாமை வேண்டும் என்று அதன்பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது கருதியன செய்யுங்கால் சோம்புதல் இல்லாமை, ஊக்கமுடையார்க்கு ஒரோவழிக் குணவயத்தான்[1], மடி வருதல் தோக்கி, இஃது ஊக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர்: அஃதாவது நினைத்த காரியங்களைச் செய்கிற போது சோம்புதல் இல்லாமல் திடமாயிருக்கிறது.

ஏ) பழைய 2: அஃதாவது கருதிய காரியஞ் செய்யுமிடத்துச்சோம்புதலில்லாமை.

மல்லர்: அதாவது தன்தொழிலுக்கடுத்த காரியங்களைச் சோம்பலில்லாமல் செய்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

தேவநேயர், 'மடியுண்டாதற் காரணங்களாக, வானிலை,

---

1. குணவயத்தான் — சாத்துவிகம் இராசதம் தாமதம் என்ற குணங்களில் தாமதத்தின் வயப்பட்டு. தாமத குணத்தின் வடிவம் மோகம், பேருண்டி, அநீதி, உறக்கம், மறதி சோம்பல், கொலை, களவு, வஞ்சனை முதலிய தாமதத்தின் விளைவுகளாம்.

உணவின் இயல்பு, சோம்பேறியின் நட்பு, நெஞ்சுரக் குறைவு. சிற்றின்ப ஈடுபாடு இவை முதலிய இல்லாமை' என்பர்.

இராம., 'ஊக்கம் உள்ளத்தின் எழுச்சி; அஃது இருந்தும் உடலின் சோம்பலால் வாழ்க்கை கெடுவதுண்டு அங்ஙனம் உடல் சோம்பலில் ஈடுபடாமைக் காத்தலே மடியின்மை' என்பர் இவர் உரை ஊக்கம் — உள்ளக் கிளர்ச்சி மடி — உடம்பின் சோம்பல் என்ற வேறுபாடு உணரச் செய்கிறது. வரத., இக்கருத்தினரே. இன்றைய ஆசிரியர்கள் அனைவரும் ஒத்த கருத்தினரே யாவர்.

61. குடிஎன்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்
மாசூர மாய்ந்து கெடும். (கூ0க)

உரைப்பகுதி:

அ) மணக்: குடியென்று[1] சொல்லப்படுகின்ற குறைவில்லாத ஒளி மடி என்று சொல்லப்படுகின்ற மாசு மறைக்கத் தோன்றாதுகெடும் எ—று.

முன்பே தோற்றமுடைத்தாகிய குடியும் கெடும் என்றவாறு.

ஆ) பரி—: செல்வக்குடி என்னும் ஒருவிளக்கு, மடி என்னும் இருட்டுக்குக் கெடும் எ—று.

இ) பரிப்: குடி என்னா நின்ற குறைவு இல்லாத ஒளி, மடி என்று சொல்லப்படுகின்ற மாசு மறைக்கத் தோன்றாது எ—று.

இது முன்பே தோற்றம் உடைத்தாய குடியும் கெடும் என்றது.

ஈ) காளி.; அரசர் குலம் என்று எடுத்து உரைக்கப்பட்ட கெடாத விளக்கானது... வந்து பரக்கவே[2] தனது ஒளி மறைந்து பின்னும் கெட்டு விடும் எ—று

உ) பரிமேல்.: தான் பிறந்த குடியாகிய நந்தா விளக்கு, ஒருவன் மடியாகிய இருள் அடர நந்திப்போம்

உலகநடை[3] உள்ள துணையும் இடையறாது[4] தன்னுள் பிறந்

1 குடி – குலம் 2 பரக்கவே – பரவ
3. உலக நடை- சமுதாயம் நாடு—நகர அமைப்பில் காலந்தோறும் நடைபெறும் பழக்க வழக்கங்கள். இங்ஙனமன்றி அவன் அவள், அது நான் நீ என்றற்றொடக்கத்து வழங்கும் உலக வியவகாரம் என்பாரும் உளர் அவை மெய்ப்பொருளியற் கூறாதலின் ஈண்டு இயைபுடையதா என்று எண்ணுதற்குரியது
4. இடை அறாது—நடுவில் அற்றுப் போகாமல்.

தாரை[5] விளக்குதலின் குடியைக் 'குன்றாவிளக்கம்' என்றும், தாமத குணத்தான் வருதலின் மடியை 'மாசு' என்றும்[6], அஃது ஏனை இருள்போலாது அவ் விளக்கைத் தானடர்த்து மாய்க்கும் வலியுடைமையின் மாசூர மாய்ந்து கெடும் என்றும் கூறினார். கெடுதல் பெயர் வழக்கமும் இல்லையாதல்.

காரி.: விளக்கம் மாசூர மாய்ந்து கெடுதல் விரோதப்பொருள் 'மெய்ம்மலர்க் காந்தளைப் பாந்தளொன் றெண்ணிந்துண் ணென் றொளித்நுக், கைம்மல ராற்கண் புதைத்துப் பதைக்தம்மங் கார்மயிலே'[7] என்னும் கோவையும் அது.

ஊ) கவிராசர்: ஒருவன் தான் பிறந்த குடியென்னப்பட்ட விளக்கு, தன்னிடத்திலே மடியென்னப்பட்ட இருள் வந்தடர, நந்திக்[8] கெட்டுப் போம் எ—று.

ஏ) பழைய 2: தான் பிறந்த குடியாகிய அவியாத விளக்கு[9] ஒருவன் சோம்பாகிய இருட்டு வந்துமூட அவிந்து விடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'குறைவில்லாத விளக்கு', 'ஒருவிளக்கு', 'கெடாத விளக்கு' என்ற உரைகளிலும்' 'நந்தாவிளக்கு' என்ற உரை சிறந்தது. நந்தா விளக்கு வேறு; நுந்தா விளக்கு வேறு நந்தா விளக்கு அணையாத விளக்கு. நுந்தா விளக்கு—தூண்டாவிளக்கு என்க.

விளக்கு என்பது பொருள்களை உணரச்செய்யும் ஒளிக்கே பெயர். அது ஆகுபெயராக அதன் தண்டிற்கும், ஆகுபெயரான் அமைவதுண்டு.

'மடி என்னும் மாசு'

சோம்பல் என்னும் புகைக்கரி; இருட்டு' என்பர் பரிதி.; ,தாமத குணத்தால் வரும் மாசு'என்பர் பரிமேலழகரும் பிறரும். 'தூசு'என்பர் தேவநேயர். சிறுதூசாயினும் தீயின் முன்னில்லாது ஆகலின் பொருந்தாது. மாசு எதுவும் தீயின் நில்லாது. இருட்டெனிலே விளக்குப்புக

5. தன்னுள் பிறந்தாரை—குடியாகிய தன்னுள் தோன்றிய மக்களை
6. தாமத குணம் அறிவை மறைத்தலின் அதனைக் கருநிறமாகக் கூறுதல் மரபு. தாமதத்தின் கருமை அதனால் விளையும் மடியின்மேல் ஏற்றி மடியென்னும் மாசு எனப்பட்டது.
7. திருக்கோவை 233
8. நந்தி—குறைந்து
9. அவியாத விளக்கு—அணையாதவிளக்கு

இருள் மாய்ந்தாங்கொருவன் தவத்தின் முன் நில்லாதாம் பாவம் ஆகலின் இருள் எத்துணை வலிதாயினும் இருளைத் தன் வலிக்கு ஏற்ப ஓட்டுமேயன்றி இருளால்தான் அழியாது ஆதலால் புகையெனப் பொருள்கண்டு புகைபடர விளக்கு அழியும்' என்ற உரையே சிறந்தது.

விளக்கு பிராண வாயு குறைந்து கரிக்காற்று மிதமாயிர் அவிந்தே போம்; அதுபோலக் குடி விளக்கம் ஊக்கம் என்னும் உயிர்க்காற்று உள்ள வரையில் ஓங்கி விளக்கும். மடி என்னும் கரிக்காற்று ஊர்ந்தாற் போதும் உடனே அவிந்துபோம்.

மாய்தல் தடிவிளக்கிற்கும் விளக்கிற்கும் பொதுவாயினும், குடி விளக்கு மாய்ந்தால் திரும்பத் தோன்றாது என்பார் 'மாய்ந்து கெடும்' என்றார். மாசு. குற்றம் விளக்கின் குற்றம் புகைதல் மாசு ஊர—புகைபரவ என்பது இருளால் ஒளி மாய்வதின்று; ஒளியால் இருளும் அகலும் என்பதே நியாய நூல் வல்லார் துணிபு ஆதலால், 'ஒளி மாசுமறைக்கத் தோன்றாது கெடும்' என்ற மணக்குடவர் உரை மிக ஏற்புடையது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

தாளிலான் குடியே போல் தமியவே தேயுமால் —கலி., 149:8

குடிகெடும் மடியால்:

குடி மடியும் தன்னினும் முந்து —குறள், 603
குடி மடிந்து குற்றம் பெருகும் —குறள், 604

மடியென்னும் மாசு:

குறியு நீல மயக்கமும் கோதிலா
நெறிக டம்மை யிகழ்தலு நித்திரை
செறித லானது மற்றிவற் றாற்றிண்ணென்
றறிவை மாய்க்கு மதுதம மாவதே —பகவத் கீதை:

61.2. மடியை மடியா ஒழுகல் குடியைக் குடியாக வேண்டு பவர். (சுஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: மடிசெய்தலை மடித்து[1] ஒழுகுக; தம்குடியை உயர் குடியாக வேண்டுபவர் எ—று

[1] மடித்து— கொன்று அதாவது அகற்றி என்பதாம்.

இது சோம்பாமை[2] வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: மடி என்னும் பொல்லாத குணத்தினையும் மடியப் பார்க்க வேணும்; தன்குடியைக் குடியாக வேண்டில் எ—று

இ) பரிப்.: மடி செய்தலை மடித்து ஒழுகுக; தம் குடியை உயர் குடியாக வேண்டுவார் எ—று.

இது மடியாமை வேண்டும் என்றது,

ஈ) காளி.: தாம் யாதானும் ஒரு கருமம் செய்யக்கருதிய காலத்துத் தம் மனத்து ஒரு மடி வந்துற்ற இடத்து அதற்கும் இடங்கொடாது அம்மடியை மடியா ஒழுக வல்லார் மற்று அவரே, தமது நாட்டு வாழும் குடிகளைக் குலம் தழீஇயாது[3] குடி நெருங்கி வாழவேண்டும் அரசர் எ—று.

உ) பரிமேல்.: தாம் பிறந்த குடியை மேன்மேல் உயரும் நற்குடி யாக வேண்டுவார், மடியை மடியாகவே கருதி முயற்சியோடு ஒழுகுக.

முயற்சியோடு என்பது அவாய் நிலையான் வந்தது. நெருப்பில் கொடியது பிறிதின்மைபற்றி, நெருப்பை நெருப்பாகவே கருதுக என் றாற் போல மடியில் தீயது[4] பிறிதின்மைபற்றிப் பின்னும் அப்பெயர் தன்னானே கூறினார். அங்ஙனங்கருதி அதனைக்கடிந்து முயன்று ஒழுகவே தாம் உயர்வர்; உயரவே குடியுயரும் என்பார், குடியைக் குடியாக வேண்டுபவர் என்றார். அங்ஙனம் ஒழுகாக்கால் குடியழியும் என்பது கருத்து. இனி மடியா என்பதனை வினையெச்சமாக்கிக் கெடுத்தொழுகுக என்று உரைப்பாரும் உளர்[5].

ஊ) கவிராசர்: தான் பிறந்த குடியை மெத்தமெத்த உயரும் நற் குடியாகச் செய்ய வேண்டினவன், மடியைக் கெட்டுப்போக நடக்க வேணும் எ—று.

ஏ) பழைய 2: தான் பிறந்த குடியைச்செல்வக்குடியாக வேண்டு வார், தன் சோம்பாகிய மடியை மடிந்துவிடக் கருதி முயற்சியுடன் ஒழுகுக.

---

2. 'மடியாமை' என்பர் பரிப்பெருமாள்
3. குலந்தழீஇ' பாடம்.
4 மடியின் தீயது —சோம்பலைக் காட்டிலும் தீமையைத் தருவது.
5. இங்ஙனம் பொருள் கொள்வார் மணக்.. பரிதி.. கவிராசர் முதலானோர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், பரிதி., காளிங்கர் உரைகள் 'மடியை மடித்து ஒழுகுக' என்பதும் அக்கருத்து வரச்சொன்ன விளக்கங்களும் உடையன. இவர்கள் 'மடியா' என்பதனைச் செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினை எச்சமாகக் கொண்டனர்,

பரிமேலழகரும் அவர் வழிப் பிறரும் 'தீயைத்தீயாக எண்ணுக' என்பதுபோல 'மடியை மடியாகவே எண்ணி ஒழுகுக' என்றனர். இவர் 'மடி' என்பதனைப் பெயர்ச்சொல்லாகக் கொண்டு இருமுறை வந்ததற்கு நயமும் தருவர்.

உரைவேற்றுமையாசிரியர் பின்வரும் குடியைக் குடியாக வேண்டுபவர்' என்பதற்கு இயைப 'மடியை மடியாகக் கொண்டொழுகுக' என்பதே ஏற்புடையது எனக் காரணம் காட்டுவர்.

ந.சி.க. 'சோம்பலைத் தான் அடக்கக்கூடியதாக நினைத்து முயலுக' எனவும், ஞானபூபதி 'சோம்பலைச் சோம்பும்படிச் செய்க' எனவும் கூறுவர். மயிலை சிவ. 'சோம்பலைச் சோம்பாமல் ஒழிக்க' என்பர். இவையனைத்தும் 'மடியா' என்பதைச் செய்யா என்னும் வாய்பாட்டு வினை எச்சமாகவும். செய்யாது என்ற வினைஎச்சத்தீறு கெட்டதாகவும் கொள்வதால் வந்த பொருள் வேறுபாடுகளாம் என்க.

கா.சு. 'சோம்பலை இடையூறாகக் கடிந்து' என்பர். வரத., இராம. 'சோம்பலை ஒழித்து' என்பர். குழந்தை 'சோம்பலைச் சோம்பலாகவே கொண்டு முயற்சியுடன் நடக்க' எனப்பரிமேலழகரை ஒத்துரைப்பர்.

வரத. ' 'மடி' என்ற பெயர் அடி, உரை, இடி என்பன போல வினை முதற்பெயர்' என்பர். வினைமுதற்பெயர் எனின் கருத்தாவின் பெயர் எனவும் பொருள் பட்டு மயங்கவைக்கும் ஆதலின் முதனிலைத் தொழிற்பெயர் என்றலே மரபாம் என்க.

மு.கோ., 'மடியா ஒழுகல்' — 'மடியைக் கொள்ளுதலில் சோம்பலாய் ஒழுகுக' எனவும், மடியை மடியிற்கட்டிக்கொண்டு ஒழுகற்க எனவும் பொருளாம்'என்பர்.தேவநேயர் 'முயற்சியின்மையில் முயற்சியின்மையைக் கொண்டு ஒழுகுக' என்றும், இங்ஙனம் கூறுதல் 'இன்மையுள் இன்மை', 'வறுமையுள் வறுமை' எனவும் வரும் வழக்குப்போல்வதாம் என்றும் கூறுவர்.

இவைகளை இணைத்து எண்ணும்போது செய்யா என்னும் உடன் பாட்டு வினைஎச்சமாகக் கொண்டு உரைவகுத்த மணக்குடவர் உரையே தெளிவும் விளக்கமும் உடையது.

61.3. மடிமடிக் கொண்டொழுதும் பேதை பிறந்த குடிமடியும் தன்னினும் முந்து. (கூ0ஙூ)

உரைப்பகுதி:

அ) மணக்: நெஞ்சத்து மடியினாலே வினையின்கண் மடித்தலைச் செய்து, ஒழுகாநின்ற அறிவிலி பிறந்தகுடி தனக்கு முன்பே கெடும் எ—று.

சோம்புடையார்க்கு[1] உளதாகும் குற்றம் என்னை என்றார்க்கு இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: மடித்த புத்தியுள்ளவன் கெடுவதற்கு முன்னே அவன் உறவின்முறை முந்தக்கெடும் எ—று.

இ) பரிப.: நெஞ்சத்து மடியினாலே வினையின் கண் மடித்தலைச் செய்து ஒழுகா நின்ற அறிவிலி பிறந்த குடி தனக்கு முன்பே கெடும் எ—று.

மடி உடையார்க்கு உளதாகும் குற்றம் என்னை என்றார்க்கு இது கூறப்பட்டது.

ஈ) காளி.: மடித்தலாகிய இதனைத் தன்மாட்டுக் கொண்டு ஒழுகும் மடவோனாகிய மன்னவன் தான் மாய்தலேயும் அன்றித் தன்னினும் முந்துறத் தனது குடி முழுதும்மாயும் எ—று.

மடி மடிக்கொண்டு ஒழுகும் என்பது மடியாகிய இதனைத் தன் மேல் வைத்துக்கொண்டு என்றது.

உ) பரிமேல்.: விடத்தகுவதாய மடியைத் தன்னுள்ளே கொண் டொழுகும் அறிவில்லாதான் பிறந்தகுடி அவன்றன்னினும் முந்துற அழியும்.

அழிவு தருவதனை அகத்தே கொண்டு ஒழுகுதலின் பேதை

1. 'மடியுடையார்க்கு' பரிப்பெருமாள் பாடம்.

என்றும், அவனால் புறந்தரப்படுவதாகலின்[2] குடி[3] தன்னினும் முந்துற அழியும்[4] என்றும் கூறினார். ஆக்கத்திற் பிற்படினும் அழிவில் முற் படும்[5] என்பதாம்.

காரி.: மடிக்கொண்டொழுகல்—அகத்தேகொண்டொழுகல்.

ஊ) *கவிராசர்*: விட்டுவிடத்தக்க மடியைத் தன் மனசிலே வைத் திருக்கப்பட்ட அறிவில்லாதவன் பிறந்தகுடி அவனுக்கு முன்னே தானே அழிந்துபோம் எ—று.

ஏ) *பழைய* 2: மடியாகிய சோம்பலை மடியென்னும் புடவையாக உடுத்தித் திரியும் பேதைதான் பிறந்த குடி முந்திக் கெடத்தான் பின்பு கெடுவானென்றவாறு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவில் '*மடிமடிக்கொண்டு*' என்ற தொடர் உரை யாசிரியர்களைப் பலவாறு சிந்திக்கச் செய்திருக்கிறது.

மணக்குடவர் 'நெஞ்சத்து மடியினாலேவினைக்கண் சோம்பி' என்கிறார். *பரிதி*. 'சோம்பலால் மடித்தபுத்தியுடையவன்' என்கிறார். *காளி*. 'மடித்தலைத் தன்மாட்டுக்கொண்டு' என்று உரைகூறி 'மடியைத்தன்மேல் வைத்துக்கொண்டு' என்று கருத்துரைக்கின்றார். 'மடியைத் தன்னுள்ளே கொண்டு' என்பர் *பரிமேல்., கவிராசர், தேவநேயர்*; 'சோம்பலை புடவையாக உடுத்தி' என்கிறார் பழைய உரையாசிரியர்.

'*மடிக்கொண்டு*'

'விடாது பிடித்திருந்து, *வரத*.; 'மடித்தக்க மடியைக்கொண்டு' வினைத்தொகை என்பர் *குழந்தை*. ஆக, இரண்டாவதாக உள்ள மடி 'மடிக்கத்தக்க', 'அழியத்தக்க' என்ற பொருளிலும்' 'நெருப்பை மடியிற் கட்டிக்கொண்டான்' என்பதுபோலத் தன்னிடம் — தன்னகம் தனக்குள் என்ற பொருளிலும் ஆளப்பட்டிருப்பதை அறியலாம்.

இவற்றுள் 'தன்னகத்து'—'தன்னிடம்' என்று உரை வகுத்தவர்

---

2. அவனால் புறந்தரப்படுவதாகலின் — பேதையாகிய அவனால் பாதுகாக்கப்படுதலின்.
3. குடி என்றது குடிவாழ்க்கையை
4. முந்துற மடியும் எனவும் பாடம்.
5. சோம்பல் கொண்ட பேதைக்குக் குடி மேன் மேலுயர்தலில் பிற்பட்டாலும் அழிவில் அவனினும் முந்தும் என்பதாம்.

கட்கு ''சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி'' என்ற குறட்பா ஓரளவு கருத்தினை ஒத்து உதவியிருக்கிறது. மடிமடி என்பது வினைத்தொகையாயின் மடிந்த மடிக்கின்ற — மடியும் என்கிற பெயரெச்சங்கள் தொக்கு வினைத்தொகையாகுமேயன்றி 'மடிக்கத்தக்க' என்ற துணைவினைக்கண் வந்த பெயரெச்சம் தொக்கு வருமோ என்பது ஆய்தற்குரியது. ஆதலால் மடியிற்கொண்டு, அகத்துக் கொண்டு, நெஞ்சிற்கொண்டு என்னும் பொருளனவே சிறந்த உரைகளாம். மடி மனப் பண்பாய் செயலுக்கு வராதிருக்கும் நிலையிலே அப்பெயரைப் பெறுகின்றது ஆதலின் என்க. பரிமேலழகர் உரைக்கு விளக்கக் குறிப்பு வழங்கும் காரிரத்ன கவிராயரும் 'அகத்தே கொண்டு' எனல் காண்க.

(ஒ) ஒப்புமைப்பகுதி:

மடி மடிக் கொண்டொழுகும்: (ஒருபுடை)

சோம்பித் திரியேல் —ஆத்தி., 54.

61.4. குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து மாண்ட உளுற்றி லவர்க்கு. (சுஒசை)

உரைப்பகுதி:

அ) மணக்.: குடியுங் கெட்டுக் குற்றமும் மிகும்; சோம்பின் கண்ணே பொருந்தி[1] மாட்சிமைப்பட்ட முயற்சி இல்லாதார்க்கு எ—று.

இது பிறரால் இகழப்படுவர் என்றது,

ஆ) பரிதி.: குடியும் கெட்டுக் குற்றமும் பெருகும்; மடித்தபுத்தி[2] உள்ளாற்கு எ—று.

இ) பரிப்.: குடியும் கெட்டுக் குற்றமும் மிகும்: மடியின் கண்ணே ஒன்றி மாட்சிமைப்பட்ட முயற்சி இல்லாதார்க்கு எ—று.

இது குடி கெடுதலே அன்றிக் குற்றம் உண்டாம் என்றது.

ஈ) காளி.: தன் கோல்கீழ் வாழும் குடிகளும் தத்தம் வினைச் செயலைச் செய்யாது மடிந்து பின்னும் தமக்கும் குற்றம் பெருகும்;

1. 'மடியின் கண்ணே ஒன்றி' பரிப்பெருமாள் பாடம்
2. மடித்த புத்தி — சோம்பல்

யார்க்கு எனின், மடியின்கண் தங்கியதனாலே மாட்சிமை உடைய முயற்சி இல்லா மன்னவர்க்கு எ—று.

குடி மடிந்து என்பது குடிகள் வினைமடிந்து என்றது. குடிமடிந்து என்பதனைச் சுற்றத்தார் மாய்ந்து என்பாரும் உளர்.[3] மடி மடிந்து என்பது மடியின் கண்ணே மடிந்து எ—று.

உ) *பரிமேல்.*: மடியின் கண்ணே வீழ்தலால் திருந்திய முயற்சி இலராயினார்க்கு குடியும் மடிந்து குற்றமும் பல்கும்.

மடிந்து எனத் திரிந்து நின்ற வினையெச்சம் இலவர் என்னும் குறிப்பு வினைப்பெயர் கொண்டது.[4] குற்றங்கள் முன்னர்க் கூறுப. இவை நான்கு பாட்டானும் மடியின் தீமை கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: மடியின் கண்ணே வீழ்தலான் நல்ல முயற்சி யில்லாதவர்களுக்கு அவர்கள் குடியும் கெட்டுப்போய்க் குற்றமும் பெருகும் எ—று.

ஏ) *பழைய* 2: குடியு மடிந்து குற்றமும் பெருகும் சோம்பினாலே சோம்பிக் கிடந்து செல்வம் வருந்தொழில் இல்லாதவர்க்கு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''மடி மடிந்து''

'சோம்பின்கண்ணே தங்கி' *மணக்.*
'மடித்தபுத்தியுள்ளார்க்கு' *பரிதி.*; இது கருத்துரை.
'மடியின்கண் தங்கியதாலே' *காளி* ;
'மடியின்கண்ணே வீழ்தலால்' *பரிமேல்., கவிராசர்*;
'சோம்பினாலே சோம்பிக்கிடந்து' *பழைய* 2

இவற்றுள், உயிர்க்கண் இடத்து நிகழ்பொருளாகிய மடியாகிய குணத்தை இடப்பொருளாக்கி 'மடியின் கண்ணே' என உரை கூறி அதற்கு ஈண்டுப் பண்பு இடமாயிற்று என அமைதி கூறுவதினும், மூன்றனுருபு விரித்து எழுதும் பழைய உரை ஏற்றதாகும்

---

3. குடிமடிந்து – சுற்றங்கெட்டு என்பார் யார் என்பது கிடைத்த உரைகளாற்றெரியக் கூட வில்லை.

4. மடிந்து—வீழ்தலால் என்ற உரை, மடி என்பது மனப்பண்பாதலால் அதனை விரும்பி என்னும் பொருளையும், மடி தன்னையுடையானைத் தாழ்த்தும் படுகுழி போறலின் அப்பொருளையுந் தரும் குழியின்கண்ணே அறியாது வீழ்தலால் என்பதையும் உணர்த்துவது.

குடிமடிந்து

'குடியுங்கெட்டு' மணக்., பரிதி., பரிமேலழகர் முதலியோர்.

'தன் கோற்கீழ் வாழுங் குடிகளும் தத்தம் வினைச்செயலைச் செய்யாது மடிந்து' காளிங்கர்

குற்றம் பெருகும்

'(தமக்கும்) குற்றம் பெருகும்.' காளி.

இவற்றுள், 'மடியின்கண்ணே வீழ்தலால், மாட்சிமைப்பட்ட முயற்சியிலார்க்கு, குடிமக்களும் சோம்ப (அதனால் அவர்கட்கேயன்றி) மன்னராகிய தமக்கும் குற்றம் பெருகும்' என்ற இணைந்த உரை எண்ணிப் பார்த்தற்கு உரியது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

குடி மடிந்து:

கேளிர்கள் நெஞ்சழுங்கக் கெழுவுற்ற செல்வங்கள்
தாளிலான் குடியேபோல் தமியவே தேயுமால் —கலி., 149:8—9

ஒருபுடை:

ஒன்றால் சிறிதால் உதவுவதொன் றில்லையால்
என்றாங் கிருப்பின் இழுக்கம் பெரிதாகும்
அன்றைப் பகலேயும் வாழ்கலார் நின்றது
சென்றது பேரா தவர் —பழ.நா.,

ஓ) மேற்கோள்பகுதி.

சிவஞான.: அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிந்து; தெரிவித்து என நிற்கற்பாலது தெரிந்து என விவ்விகுதி தொக்கு நின்றது- 'குடி மடிந்து குற்றம் பெருகும்' என்பதும் அப்பொருளவாய் நின்றது.
(தொல்.விருத். பக். 10.)

சுவாமி.; பிறவினை முதனிலை திரியாமல் வந்ததற்கு மேற்கோள்.
(இ.கொ. 73.)

61.5. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்.
கெடுநீரார் காமக் கலன் (கூ0ரு)

உரைப்பகுதி:

அ) மணக்.: விரைந்து செய்யும் வினையை நீட்டித்தலும், செய்ய

நினைந்ததனை மறத்தலும், அதனைச் செய்தற்குச் சோம்புதலும், அதனைச் செய்யாது உறங்குதலுமாகிய இவை நான்குங் கெடுந் தன்மையுடையார் காதலித்து ஏறும் மரக்கலம் எ—று.

காமக்கலன் என்றது தன்னைக் காதலித்து ஏறினாரை நடுக் கடலுள் தள்ளும் மரக்கலம் போல என்றது. இத்துணையும் மடியினால் வரும் குற்றம் கூறினார்.

ஆ) *பரிதி.*: முடியாத காரியத்தை முயலுதலும் செய்யுங்காரி யத்தை மறந்திருப்பதும் மடித்தபுத்தியும் நித்திரையும் என்கின்ற நாலு குணமும் மடித்தபுத்தியுள்ளாற்கு ஆபரணம் எ—று.

இ) *பரிப.*: விரைந்து செய்யும் வினையை நீட்டித்தலும் செய்ய நினைத்ததனை மறத்தலும், அதனைச் செய்தற்குச் சோம்புதலும், அதனைச் செய்யாது உறங்குதலும் இவை நான்கும் கெடும் தன்மை யார் காதலித்து ஏறும் மரக்கலம் எ—று.

தம்மைக் காதலித்து ஏறினாரை நடுக்கடலுள் தள்ளும் மரக்கலம் போறலின் கலம் எனப்பட்டது. துயிலும் மறவியும் நெடு நீர்மையும் மடியினோடு ஒத்த இயல்பின ஆகலான் இவையும் ஒருவாற்றால் கூற வேண்டுமாதலின் ஈண்டுக் கூறப்பட்டது. இத்துணையும் மடியினால் வரும் குற்றம் கூறிற்று.

ஈ) *காளி.*: விரைந்து எழவேண்டும் கருமத்தை நீளவிடுவதோர் நெடுநீர்மையும், குற்றத்தின்கண் பற்றிய மறவியும் அதற்கு உரிய மடிமையும், கருமம் இயற்றக் காமுறாது கண் துயில்தலும் இந் நான்குமே கெடுதல் தன்மையராகிய அரசர் ஆசைப்பட்டு அணிந்து கொள்ளும் அணிகலமாவது; மற்று இது அன்றி அரசர்க்கு உரிய நன்கலம் ஆகிய கடகமும்[1] கண்டமாலையும்[2] ஆரமும்[3] தடுக்கும்[4] அணிதல் இலர் எ—று.

உ) *பரிமேல.*: மடியும் விரைந்து செய்வதனை நீட்டித்துச்செய்யும் இயல்பும் மறப்பும் துயிலும் ஆகிய இந்நான்கும், இறக்கும் இயல் பினையுடையார் விரும்பி ஏறும் மரக்கலம்.

முன்நிற்கற்பாலதாய மடி செய்யுள் நோக்கி இடை நின்றது.[5] நெடுமையாகிய காலப்பண்பு அதன்கண் நிகழ்வதாய செயல்மேல்

1. கடகம் — முழங்கைக்கு மேல் அணியும் அணி
2. கண்டமாலை — கழுத்தணி.
3. ஆரம் — முத்துமாலை.
4. தடுக்கு — தகட்டு வடிவாக்கக் காதிலணியும் ஒருவகையணி.
5. மடியே ஏனைய மூன்றற்கும் முதலாதலின் முன்னிற்கற்பாலது என்றார்.

நின்றது[6] காலநீட்டத்தை உடைய செயல்முதல் மூன்றும் தாமத குணத்தில் தோன்றி உடனிகழ்வனவாகலின் மடியொடு ஒருங்கு எண்ணப்பட்டன. இறக்கும் இயல்பு—நாளுலத்தல். இவை துன்புறு நீரார்க்கு இன்புறுத்துவ போன்று காட்டி அவர் விரும்பிக்கொண்ட வழித் துன்பத்திடை வீழ்த்தலின் நாளுலந்தார்க்கு ஆக்கம் பயப்பது போன்று காட்டி அவர் விரும்பியேறிய வழிக்கடலிடை வீழ்க்கும் கலத்தினை ஒக்கும் என்னும் உவமைக் குறிப்புக்[7] காமக்கலன் என்னும் சொல்லால் பெறப்பட்டது. இதற்கு விரும்பிப் பூணும் ஆபரணம்[8] என்று உரைப்பாரும் உளர்.

ஊ) **கவிராசர்:** கொப்பெனச்[9] செய்கிற காரியத்தை மெத்தெனச் செய்கிறோம் என்கிறதும் மறப்பும், மடியும், நித்திரையுமாகிய இந்த நாலும் சாகவேணும் என்கிறவர்களும் கெட்டுப் போகவேணுமென் கிறவர்களும் ஏறுங் கப்பல் எ—று

ஏ) **பழைய2:** விரைந்து செய்வதனை நீட்டித்துச் செய்யு மியல்பும், செய்யுங் காரியத்தைச் செய்யாது மறந்து போதலும், தூக்கமும், இந்நான்கும் இறக்கும் இயல்புடையார் விரும்பியேறும் மரக்கலம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''நெடுநீர்''

'விரைந்து செய்யும் வினையை நீட்டித்தல்' **மணக்., காளிங்கர், பரிமேல்., கவிராசர், பழைய, கா.சு., தேவநேயர், இராம.** முதலிய அனைவரும்.

'முடியாத காரியத்தை முயலுதல்' **பரிதி.** இப்பகுதிக்குள்ள உரைகளில் **மணக்குடவர்** முதலானோர் கூறும் உரையே சிறந்தது.

''மறவி''

'செய்ய நினைத்ததை மறத்தல்' **மணக்., பரிதி ;**
'குற்றத்தின்கடபற்றிய மறவி' **காளி.;**

---

6. நெடுநீர் என்னும் காலத்தின் குணம் அக்காலத்தில் நிகழும் செயல்மேல் நின்றது உபசாரவழக்கு
7. உவமைக்குறிப்பு—உருவகம் (உவம இயல் நூற்பா நச்சி உரை காண்க) நெடுநீர் மறவி முதலிய நான்கும் காமக்கலன் எனவே அக்கலன் செல்லும் கடல் வாழ்நாள் எனவும், அவை கெடுத்தல் முற்றப் போகாவாறு இடைக்கண் அமிழ்த்திக் கொல்லுதல் எனவும் உருவகத்தை விரித்து ஒப்புக் காண்க.
8. ஆபரணம் என்பார் பரிதி, காளிங்கர் இருவரும்.
9. கொப்பென—விரைய.

'மறப்பு' பரிமேல். முதலிய அனைவரும். இவையனைத்தும் மறப்பையே உணர்த்துகின்றன. 'கடமைகளை மறந்திருத்தல்' என்பர் இராம.

'கெடுநீரார்'

'கெடுந்தன்மையுடையோர்' மணக்.;
'மடித்த புத்தியுள்ளார்' பரிதி.;
கெடுதல் தன்மையராகிய அரசர்' காளி.;
'இறக்கும் இயல்பினையுடையார்' பரிமேல். முதலிய அனைவரும்.

இவற்றுள் 'கெடும்—இறக்கும்' என்ற இரண்டையும் இணைத்து இருக்கும் வரையில் கெட்டலைந்து பின் அழியும் தன்மையை உடையார் என்ற உரை சிறக்கும்.

'காமக் கலன்'

'விரும்பி ஏறும் மரக்கலம்' மணக்., பரிமேல். முதலிய அனைவரும். பிற்கால உரையாசிரியர்களும்.

'விரும்பியணியும் ஆபரணம்' பரிதி.; 'ஆசைப்பட்டு அணியும் ஆபரணம்' காளிங்கர். மணக்குடவர், பரிப்பெருமாள், பரிமேல். அனைவரும், காட்டும் விளக்கத்தால் அவருரைகளே சிறந்தன. இராமலிங்கரும் அங்ஙனமே.

அணியெனல் பொருந்தாது; அதற்கும் இசைவுகாண வேண்டுமாயின் இங்ஙனம் கொள்க எனவும் கூறும் 'விரும்பிப் பூணும் அணியெனல் பொருந்தாது; பொருந்தவேண்டுமாயின் எரிமருந்து கலந்த அணிகள் எனக் கொள்ள வேண்டும்' என்ற தேவநேயர் உரைப்பகுதியை உற்றுக்காண்க. ஆதலால் 'மரக்கலம்' என்ற உரையே ஏற்புடைய தாதல் காண்க.

வரத. 'கெடும் நீரார்' என்பதற்கு 'அழிவு நிலையினர் என்றும், அழிவுதரும் நீராகிய கடல் என்றும் இருபொருள் கொள்ளலாம்' எனபர். நீரார் என்பது நீரையுடைய கடல் என அஃறிணைப் பொருளைக் காட்டுவதியாங்ஙனம் எனவினவி அதன் அமையாமையை ஓர்க. ஒருக்கால் கெடுநீர் + ஆர் + கலன் என இயைத்திருப்பரோ எனின், அதுவும் பொருந்தாது. ஒருவர்க்கு என ஒரு சொல் வருவிக்க வேண்டிவரும் ஆதலான்.

ஆகவே விளக்கத்தோடு கூடிய பரிமேலழகர் உரையும் கருத்து ஒத்த பலருரையுமே ஏற்புடையன.

ஒப்புமைப்பகுதி:

துயில். . . .கெடுநீரார் காமக்கலன்:

உறக்க முற்றார் என்னுற்றார் என உணர்வி னொடும் ஒதுங்கி
கம்பராமா., 4582

61.6. படியுடையார் பற்றமைந்தக் கண்ணும்[1] மடியுடையார் மாண்பயன் எய்தல் அரிது. (கூ0சு)

உரைப்பகுதி:

அ) மணக்.: பூமியுடைய வேந்தர்[2] பல பொருளினாலும் அமைந்த விடத்தும் மடியுடையாராயின், மாட்சிமைப்பட்ட பொருளைப் பெறுதல் இல்லை எ—று.

இது செல்வமுண்டாயினும் கெடுவர்[3] என்றது.

ஆ) பரிதி.: மண்டலத்தரசர் செல்வம் நிலையில்லை; அது நிலை பெற்றாலும் மடித்த புத்தியுள்ளார் பயன்பெறமாட்டார்கள் எ—று.

இ) பரிப்.: நில வேந்தர் பல பொருளினாலும் அமைந்த இடத்தும் மடி உடையராயின் மாட்சிமைப்பட்ட பொருளைப் பெறுதல் இல்லை எ—று.

இது செல்வம் உண்டாயினும் கெடும் என்றது.

ஈ) காளி.: மண் ஆளும் வேந்தரானவர் தம்மினும் வலிய வேந் தரைப்பற்றி வாழ்தல் முற்றும் பெற்ற இடத்தும், மடியுடைய மன்னரா யின், மாட்சிமை உடைய அரசர் வாழ்க்கைப்பயன் எய்தல் அரிது எ—று.

உ) பரிமேல்.: நிலமுழுதும் ஆண்டாரது செல்வம் தானே வந்தெய் திய இடத்தும் மடியுடையார் அதனான் மாண்டபயனை[4] எய்துதல் இல்லை.

---

1. 'அமைந்தக்கண்ணும்' — வந்தவிடத்து' உண்டக்கடை' என்புழி கடை இடத்து முதலியன வினைஎச்ச விகுதியாய்ப் பெயரெச்சத்தோடு இயைந்து ஒரு சொல்லாய் வினை எச்சமானாற்போல இதுவும் கண்விகுதி பெற்ற வினை எச்சம் அது 'உம்' பெற்று நின்றது—இங்ஙனம் காரைக்கால் அமைந்தக்கண்ணும் என வல்லினமிக்க தற்கு விதியில்லையாதலின் வழுவாகும் சிந்திக்க.
2. 'நிலவேந்தர்' பரிப்பெருமாள் பாடம்.
3. 'கெடும்' பரிப்பெருமாள் பாடம்,
4. மாண்டபயன்—மாட்சிமையுற்ற பயன்,

உம்மை எய்தாமை விளக்கி நின்றது. மாண்பயன்—பேரின்பம். அச்செல்வம் அழியாமல் காக்கும் முயற்சியின்மையின் அழியும்; அழியவே, தம் துன்பம் நீங்காது என்பதாம். இதற்கு நிலமுழுவதும் உடையவேந்தர் துணையாதல் கூடியவிடத்தும் என்று உரைப்பாரும்[5] உளர்.

ஊ) கவிராசர்: ஒருவனுக்குப் பூமி முழுதும் ஆண்டவர்களுடைய செல்வம் தானே வந்து எய்தியவிடத்தும், மடியுடையவன் அதனால் வரப்பட்ட பலனை அடைகிறது அரிது எ—று,

ஏ) பழைய2: 'பற்றமைந்தக் கண்ணு' 'பயமெய்தல்' பாடம். படியையுடைய அரசர் கைப்பிடித்து மிகுத்த செல்வம் அமைந்திருப்பினும், மடி வந்து கூடிற்றாயின் அச்செல்வம் பின்பு கிடைப்பது அரிது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்: 'மண் முழுதும் உடைய மன்னன் பலவகைப் பொருளான் அமைந்திருப்பினும் மடியுடையனாயின் பெரும்பயன் எய்தான்' என்பர். இவர் கருத்து மண் முழுதாளும் மன்னராயினும் மடியுடையார் மாட்சியுற்ற பயனை எய்தார் என்பது. பரிதியாரும் இங்ஙனமே கருதுவர்.

காளிங்கர் 'மண்ணாளுமன்னன் தன்னிலும் எல்லா வகையானும் வலிய மன்னர் மன்னனது ஆதரவைப் பெற்றிருந்தாலும் மன்னன் மடியுடையனாயினும், மன்னர் மன்னன் மடியுடையனாயினும் பெரும் பயன் எய்த இயலாது' என்பர்.

பரிமேலழகரும் அவர் வழி வந்தாரும் 'நிலமுழுதாளும் மன்னனது செல்வம் தானே வந்து சேர்ந்தாலும் இவன் மடியுடையனாயின் மாண் பயன் எய்தலரிது' என்பர்.

இக்குறளை 'அரசியல்' என்ற இயற்சார்பற்ற நிலையில் நோக்கின் ஒருவனுக்கு மன்னர் ஆதரவிருந்தாலும் அவன் மடியன் ஆனால் பெரும்பயன் எய்த இயலாது என மக்களனைவருக்கும் பொதுவறம் கூறுவது போலத் தோன்றுகிறது.

இத்துணைக் கருத்து மாற்றம் 'பற்று' என்ற ஒரு சொல்லின் விளைவே எனலாம். மணக். முதலியோர் 'பற்று—பற்றப்படுவதாய

---

5. இங்ஙனம் உரைப்பவர் காளிங்கர்.

செல்வம் அல்லது பொருள்' என உரை கண்டனர். மற்றொருவர்' பற்று—பற்றுக் கோடு 'அல்லது ஆதரவு' என்றுகண்டனர்.

இவற்றுள், சிற்றரசற்குப் பேரரசன் துணையிருப்பினும் துணை மட்டும் பெரும் பயனைத் தராது. அவனிடம் பயன்படுத்திக்கொள்ளத் தக்க ஊக்கமுடைமையும் வேண்டும் என்ற உரையே அரசியலுக்கு ஏற்புடையது. தேவநேயர் கருத்தும் இது.

பிற்கால உரையாசிரியர்களில் கா.சு. 'படிமுழுதுடையராயும் பொருள் உடையராயும் இருந்த இடத்தும்' என இருதகுதிகளைக் கூறுவர். இராம. 'உலகவர் நன்மதிப்பைப் பெற்றவராயினும்' என்பர். வரத. 'உலகமக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றவராயினும்' என்பர். இவ்விருவர் உரைகளும் குடியரசுக் காலக் கருத்துக்கள்

'படியுடையார்' என்பது மக்களையுணர்த்தும் போது உடையார் என்பது வேண்டாச் சொல் ஆகுமாதலின் அரசனையே உணர்த்தும் என இராமலிங்கனாரையும் வரதராசனாரையும் மறுப்பர் உரை வேற்றுமையுடையார். பொன்னையுடையான் பொன்னன். பொருளுடையான் பொருளன் என்றாதல் போலப் படியுடையான் படியன் என்றல் மரபின்மையின் படியுடையார் என்பது முடியாட்சிக் காலத்து மன்னரையும், குடியாட்சிக்காலத்து மக்களையும் உணர்த்துவதாய் எக்காலத்தும் ஏற்புடைத்தாதல் காண்க.

பரிமேலழகர் உம்மை எய்தாமை விளக்கி நின்றது என்றனர். அதன் கருத்து அத்துணைச்சிறப்பிருந்தும் மடியாளன் மாண்பயன் எய்தான் என்பதைச் சுட்டுகிறது, ஆகவே உம்மை 'குறவரும் ஏறாக்குன்றம்' என்றாற் போல உயர்வு சிறப்பாதல் கூடும்.

ஒ) மேற்கோள்பகுதி:

யா—வி: இது பதினாறு எழுத்தடி(நெடிலடி) வெண்பா (சூ.95.)

61.7. இடிபுரிந் தெள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து மாண்ட உஞற்றி லவர். (கூ0எ)

உரைப்பகுதி:

அ) மணக்.: கழறுதலைச்[1] செய்து பிறர் இகழ்ந்து சொல்

1. கழறுதல் — இடித்துரைத்தல்.

லுஞ் சொல்லைக் கேட்பர்; மடியைச் செய்து மாட்சிமைப்பட்ட முயற்சி யில்லாதார் எ—று.

ஆ) *பரிதி.*: மாற்றார் தன்னை இகழ்ச்சி சொல்வது கேட்பர்; மடிந்த புத்தி மிகுத்தார்கள் எ—று.

இ) *பரிப.*: நட்டோரால் கழறுதலையும் பெற்று ஏதிலார்[2] இகழ்ந்து சொல்லும் சொல்லையும் கேட்பர், மடியை விரும்பிச்செய்து மாட்சிமைப் பட்ட முயற்சி இல்லாதார் எ—று,

இது பிறரால் இகழப்படுவர் என்றது.

ஈ) *காளி.*: தம்மைப் பிறர் இடித்தலைச் செய்து இகழ்ந்துரைக்கும் சொல்லினைக் கேட்பார், யார் எனின், மடியின்கண் தங்கி மற்று அதனானே மாட்சிமைப்பட்ட முயற்சி இல்லாத மன்னவர் எ—று,

உ) *பரிமேல்.*: மடியை விரும்புதலான் மாண்ட முயற்சி இல்லா தார், தம் நட்டார் முன் கழறுதலை மிகச்செய்து அதனால் பயன் காணாமையின் பின் இகழ்ந்து சொல்லும் சொல்லைக் கேட்பர்

இடி என்னும் முதனிலைத் தொழிற்பெயரான், நட்டார் என்பது பெற்றாம்[3]. அவரிகழ்ச்சி சொல்லவே, பிறரிகழ்ச்சி சொல்லாமையே முடிந்தது. அவற்றிற்கெல்லாம்[4] மாறுசொல்லும் ஆற்றல் இன்மை யின், கேட்பர் என்றார்.

காரி.: புரிதல்—முன்னது செய்தல்; பின்னது விரும்புதல்

ஊ) *கவிராசர்*: மடியை விரும்பி நல்ல குணங்களை விரும்பாதார் தம்முடைய சுற்றத்தார் முன் கழறுதலை மிகச்செய்து பின், அவர் களாலே இகழ்ந்து பேசும் வார்த்தையைக் கேட்பார் எ—று.

ஏ) *பழைய* 2: சுற்றத்தார் நட்புடையார் இடித்துச் சொல்ல, பிறர் இகழ்ச்சி சொல்ல, கேட்டுப் பொறுத்துக் கிடப்பர். சோம்பலை விரும்பிப் பெரிய முயற்சியைச் செய்த லில்லார்.

மல்லர்: என்பது தனக்குப் புத்தி சொன்னவர்கள் பின்னுக்குச் சொல்லும் நிந்தையான வார்த்தை கேட்பார்கள் சோம்பலை விரும்பிப் பெருமையான சுறுசுறுப்பு இல்லாதவர்கள் என்றவாறு.

---

2. ஏதிலார் — அயலார்.
3. 'நட்டல் மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு' என்பதனை நினைவு கூர்ந்து 'இடிபுரிந்து' என்பதன் குறிப்பு எழுதப் பெறுகிறது
4. அவற்றிற்கெல்லாம் — நட்டாரும் பிறரும் இகழ்வன எல்லாவற்றிற்கும்,

சோம்பலாலக் கேடுவரும் என்று இது முதலான புத்தி சொன்னவர்கள் அந்தப்புத்தி கேளா அரசன் சோம்பலினால் கெட்டுப்போறதைக் கண்டால் அவன் மேல் நிந்தையான வார்த்தை சொல்லுவார்களே இப்படிக்கு ஒத்த வார்த்தைகளைச் சோம்பலை விடாத அரசன் மறு பேச்சுப் பேசுகிறதுக்கு ஞாயமில்லாமலப் பேசாமல் கேட்க வேண்டியதாயிருக்கும் என்பதாகையில் சோம்பலினால் சேதம் வருகிறது மல்லாமல் நிந்தையும் வரும் என்பது கருத்து.

இடி—உறுதி; புரிதல் — செய்தல்; என்னாதல் — நிந்தித்தல்; கேட்பர் — கேட்பார்கள்; மடி — சோம்பல்; புரிதல் — விரும்புதல்; மாண்ட— பெருமையுடைத்த; உளுற்று—முயற்சி; இலவர்—இல்லாதவர்கள்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'எள்ளுஞ்சொல்' — 'பிறர் இகழ்ந்து சொல்லும் சொல்' எனப் பொதுவகையாற் கூறுவர் *மணக்., பரிப்.*; 'மாற்றார் இகழுஞ் சொல்' என்பர் *பரிதி.*; 'பிறர் இடித்தலைச் செய்து இகழ்ந்துரைக்கும் சொல்' *காளி., கா.சு.*; 'தம் நட்டார்முன் கழறுதலைச் செய்தும் (பயன் காணாமையான்) இகழ்ந்து சொல்லும் சொல்' என்பர் *பரிமேல்.*, குழந்தை, பிறரும்; 'பலர் இடித்துக் கூறும் இகழ்ச்சிகளை' *இராம.*; 'அமைச்சர் கண்டித்துக் கூறியும் கேளாமையாற் பின் அவர் கூறும் இகழ்ச்சியைக் கேட்பர்' *தேவநேயர்*; 'இடிபுரிதலை நண்பர்கள் செயலாகவும், இகழ்ந்துரைத்தலைப் பொதுமக்கள் செயலாகவும் உரைப்பர்' *பரிப்., ஜி.வரத.*; மக்களால் இடித்தும் இகழ்ந்தும் உரைக்கப்பட்டு' என்பர். *சி.இ.*

இங்ஙனம் இப்பகுதிக்குள்ள உரை இடிப்பார் யார்? இகழ்வார் யார்? என்ற வகையாலும், விளக்கத்தாலுமே மாறுபடுகின்றன. செயலால் மாற்றமின்று.

இவ்வுரைகளில் 'மாண்ட உளுற்றிலவர்' என்பது அரசனைக் குறிப்பதாகச் சிலரும் மக்களைக் குறிப்பதாகச் சிலரும் கூறுவர். அரசன் மேல் வைத்துக் குடிகட்கும், குடிகள் மேல் வைத்து அரசற்கும் அறம் உரைத்தல் வள்ளுவர் வழக்கு. அறம் இருபாலார்க்கும் இன்றியமையாதது என்பதை வலியுறுத்த வேண்டி இங்ஙனம் கூறுகிறார்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஒருபுடை:

உள்ளமுடை யான்முயற்சி செய்யவொரு நாளே
வெள்ளநிதி வீழும்விளை யாததனின் இல்லை
தெள்ளியுணர் வின்னவர்கள் சொல்லிமடி கிற்பின்
எள்ளுநர்கட் கேக்கழுத்தம் போலவினி தன்றே —சீவக., 496

சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர் —கொன்றை., 36

நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு —குறள்

61.8. மடிமை குடிமைக்கண் தங்கின் தன் ஒன்னார்க்(கு) அடிமை புகுத்தி விடும் (சுஎஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: குடிப்பிறந்தார்மாட்டே மடிமை[1] தங்குமாயின், அது தன்பகைவர்க்கு அடிமையாக்கிவிடும் எ—று.

இது கீழ்ப்படுத்தலேயன்றி அடிமையும் ஆக்கும் என்றது.

ஆ) பரிதி.: மடித்த புத்தி உள்ளவன் மற்றார்க்கு அடிமையாவன் எ—று.

இ) பரிப்.: குடிப்பிறந்தார் மாட்டே மடிமை தங்குமாயின் அது தன் பகைவர்க்கு அடிமையாக்கிவிடும் எ—று.

இது கீழ்ப்படுத்தலே அன்றி அடிமையும் ஆக்கும் என்றது.

ஈ) காளி.: அரசர் தனக்கு உரிய வாழ்க்கைக்கு உரியனவற்றை முயலாது மடிந்து ஒழுகும் மடித்தன்மையும், தன்கோல்கீழ் வாழும் குடிகளது குணமும் குற்றமும் ஆராயாமல்[2] மடித்தலும் மற்று ..... பருவம் வழுவாமல் ஆங்கு உழவு முதலிய முயற்சியின் மடித்தலும் தனது பகை வேந்தர்க்குத் தான் ஏவல்கேட்டுப் பணிந்து ஒழுகும் அடிமைப்படுத்திவிடும் எ—று.

உ) பரிமேல்.: மடியினது தன்மை குடிமையுடையான் கண்ணே

---

1. மடிமை — சோம்பலுடைமை.
2. 'குணமும் ஆராயாமல்' என்ற பாடம் உளது குணமும் என உம்மையிகுப்பதால் குணமும் குற்றமும் என்ற பாடமே சிறந்தது.

தங்குமாயின், அஃது அவனை[3]த் தன் பகைவர்க்கு அடியனாந் தன்மையை அடைவித்துவிடும்.

மடியினது தன்மை—காரிய[4]க்கேடு. குடிமை[5]—குடிசெய்தற் றன்மை.[6], அஃது அதனை உடைய அரசன் மேற்றாதல்[7], தன் ஒன்னார்க்கு என்றதனால் அறிக. அடியனாந்தன்மை—தாழ்ந்து நின்று ஏவல் கேட்டல். இவை நான்குபாட்டானும் மடிமைக்குற்றங் கள் கூறப்பட்டன.

ஊ) கவிராசர்: மடிமை நல்ல வங்கிசத்தானிடத்திலே தங்கியிருந் தால் அது அவனுடைய சத்துருக்களுக்கு அவனை அடிமையாகப் பண்ணிவிடும் எ—று.

ஏ) பழைய 2: மடியினது தன்மை குடிமை யுடையான் இடத்தே தங்கியிருக்குமாயின். அது தன் பகைவர்க்கு அடிமைப்படுத்திவிடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

காளிங்கர் உரைப்பகுதியில் முதலுள்ளது 'அரசர் தனக்குரிய அரசர் வாழ்க்கைக்கு உரியனவற்றை முயலாது மடிந்தொழுகும் மடித் தன்மையும்' என்ற பாடம் பொருட்டொடர்பு இன்மையைக் கருதுக. 'பருவம் வழுவாமல் ஆங்கு உழவு முதலிய முயற்சிகளில் மடித்தலும்' என்பது ஏடெழுதுவோரான் நிகழ்ந்த இடைச்செருகல் ஆகக் கூடும். அரசர்க்குரிய ஐவகை மரபின் அரசர் பக்கத்துள் உழவு இல்லாமையை ஓர்க. 'அரசர் வாழ்க்கைக்கு உரியனவற்றை முயலாது' எனத் தொடங்கியவர், பின்பும் 'தன் பகை வேந்தர்க்கு ஏவல் கேட்டு' எனத் தொடர்ந்து பயன் கூறுபவர் இடைக்கண் உழவை மறத்தலை ஓதி யிருக்க மாட்டார்.

ஆனால் இக்குறள் அரசியலில் மடியின்மை கூறுவதாக அமைந் திருப்பினும், பொதுமக்களுக்குக் கூறும் அறமாகவே மிளிர்கிறது. 'ஒன்னார்க்கு எனினும் பகை மன்னற்கு என்றுமட்டும் கருதல்

3. அவனை - குடிமையுடையவனை
4. காரியக்கேடு மேற்கொண்ட தொழில் முற்றுப் பெறாமை
5 குடிமை — குடிப்பிறப்பிற்கேற்ற ஒழுக்கம். (நச்சினார்க்கினியர்) (தொல். பொருள் நூற்பா. 273)
6. குடிசெய்தற்றன்மையாவது குடிசெய்வல் என்னும் ஒருவற்கு' என்புழிப் போலப் பிறந்த குடியை உயர்த்துவேன் என்னுந்தன்மை.
7 குடிமை என்னும் பண்புப்பெயர் அதனையுடையவனை யுணர்த்தியது பண்பாகு பெயர்.
8. வங்கிசத்தான் — மரபில் வந்தவன்,

வேண்டா. பகைவர்க்கு எனவும் கருதலாம். ஆதலால் முதற்கண் கூறியது அரசர் மடிமையையும், உழவு முதலாயினவற்றின் மடிதல் ஏனோர் மடிமையையும் உணர்த்தியதாகக் கொண்டனர் எனின் பொருந்துவதாகும்.

பரிமேலழகர் 'குடிமை—குடி செய்தற்றன்மை' எனப்பொருள் கண்டு அரசன் மேலதாக்குவர். ''குடிசெய்வல் என்னும் ஒருவற்கு'' என்புழித் 'தான் பிறந்த குடியை உயர்த்துவேன்' என்று உரை கண்ட பரிமேலழகர், ஈண்டு அதிகார இயைபுநோக்கி'' குடிமை—குடிசெய்தற்றன்மை என்றாராயினும் அதுவும் பொதுமையிற் செல்லுதலை நோக்கி அஃது அதனையுடைய அரசன்மேற்றாதல் தன் ஒன்னார்க்கு என்றதால் அறிக'' என்றார். ஒன்னார் ஏனைய மக்களுக்கு இலர் என்பது இவர் துணிவு போலும்.

'தங்கின்' என்பதற்ற இராமலிங்கர் தரும் 'குடிமை — குடும்ப காரியம். சோம்பேறித்தனம் சில சமயங்களில் தங்கினாலும் குற்ற மில்லை. எப்போதும் தங்கி விட்டால் வருந்தீமை பல' என்ற நயம் சிறந்தது. அரசியலில் வைத்து அனைவருக்கும் அறம் கூறுவதாகக் காண்பவர்கள் *கா.சு., இராம.; வரத.; சி.இ; குழந்தை* முதலிய அனைவரும்.

மு.கோ 'மடிமைக் குடியிடம் அரசு தங்கின்' எனவும், 'மடிமை யரசிடம் குடி தங்கின்' எனவும் கூட்டிப் பொருள் காண்பர்; பொது நிலையறமாக்குவர்.

ஓ) மேற்கோள்பகுதி:

நச்சி.: உயர்திணை இருபாலையும் உணர்த்துதற்கு 'மடிமை குடிமைக்கண் தங்கின்' என்பது மேற்கோள். (தொல்.சொல்.57.)

61.9. குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன் மடியாண்மை மாற்றக் கெடும். (கூ0கூ)

உரைப்பகுதி:

அ) மணக்.; குடியை யாளுதலுடைமையின்கண் வந்த குற்றமானது ஒருவன் சோம்பு[1]டைமையைக் கெடுக்கக் கெடும் எ—று.

குற்றம்-குடிக்கு வேண்டுவன செய்யாமையால் வருங்குற்றம்.

1. சோம்பு — சோம்பல்.

ஆ) பரிதி.: தன்தடிபிலே ஒரு குற்றம் வந்தால் மடித்த புத்தியை விட்டுக் காரியவாதிபாகில்[2] அந்தக் குற்றம் கெடும் எ—று,

இ) பரிப்.: குடி ஆர்தலை உடைமையின்கண் வந்த குற்றமானது. ஒருவன் மடி ஆர்தல் உடைமையைக் கெடுக்கக் கெடும் எ—று.

குற்றம் என்பது தடிக்கு வேண்டுவன செய்யாமை வரும் குற்றம்; இது மடி இல்லார்க்குப் போக்கலாம் என்றது.

ஈ) காளி.: குடிகளைத் தான் ஆண்டு ஒழுகுமிடத்து அவர்க்கு வந்து எய்திய வடுப்பாடும்[3], மற்று அம்மன்னவன் தனக்கு வந்த வடுப்பாடும் மற்று இங்ஙனம் வந்த மடியாட்சியைத் தவிர்க்கவே கெட்டுவிடும் எ—று.

உ) பரிமேல்.: ஒருவன் தன் மடியாளும் தன்மையை ஒழிக்கவே, அவன் தடியுள்ளும் ஆண்மைபுள்ளும் வந்த குற்றங்கள் கெடும்,

மடியாளுந்தன்மை மடியுடைமைக்கு ஏதுவாய தாமதகுணம்,[4] குடியாண்மை என்பது உம்மைத்தொகை. அவற்றின்கண் வந்த தற்றம் என்றது மடியானன்றி முன்னே பிறகாரணங்களான் நிகழ்ந்த வற்றை[5] அவையும் மடியாண்மையை மாற்றி முயற்சியுடையனாக நீங்கும் என்பதாம்.

ஊ) கவிராசர்: ஒருவன் தன் மடிமையை ஒழித்துவிட்டால், அவன் குடிபிலேயும் ஆண்மையிலேயும் வந்த குற்றங்கள் கெட்டுப்போம் எ—று.

ஏ) பழைய 2 குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றத்தை ஒருவன் தன்னை ஆளும் தன் சோம்பைத் தான் தள்ளிவிட, அவை யிரண்டும் கெடும் என்றவாறு

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக். 'குடியாண்மையை' ஒருதொடராகக் கொண்டு 'குடியை யாளுதல் உடைமை' என்பர் காளி. குடிகளைத்தான் ஆளும்போது

---

2 காரியவாதி —செயலில்சிந்தை பதித்தவன். 3. வடுப்பாடு — குற்றப்படுதல்.

4. தாமத குணம் ராஜஸம், சாத்விகம், தாமதம் என்ற மூக்குணங்களில் இறுதி யானது ஐம்பெரும் பாதகங்களைச் செய்யவும் ஒழுக்கங்கெடவும் ஊக்குவிக்கும் அறியாமை நிறைந்த ஒருகுணம்

5. பிறகாரணங்களாவன காலம் இடம் செய்வினையின் மூலம் இவற்றை யறியாமையும் விளைவு அறியாமையும், தன்வலி மாற்றான்வலி துணைவலி முதலியன அறியாமை யும் ஆவன,

அவர்களுக்கு அதாவது குடிகட்கு வந்த குற்றமும், தனக்கு வந்த குற்றமும் மடியாட்சியை மாற்றக் கெடும்' எனக் குற்றத்தை இருவகையாகக் கொண்டனர். ஆனால், பரிமேலழகர் 'குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்கள்' எனக் காளிங்கரைப் போன்று குற்றத்தை இருவகைப்படுத்த 'உள்' என்பதைக் குடிக்கும் ஆண்மைக்கும் கூட்டிப் பொருள் கண்டனர். அவரை ஒத்துரைப்போர் அனைவரும் அங்ஙனமே உரைப்பர்.

இராம. 'குடித்தனத்திற்கு வந்த குறைகள். குடும்பத்திற்கு வந்த பல துன்பங்கள்' என்பர்,

வரத. 'பிறந்த குடியினாலும்தன் செயலாலும் வந்த குற்றம்' எனக் குற்றத்தின் அடிப்படை இரண்டு என்பர். இரண்டாம் அடிக்கு 'ஆண்மை (யால்) மடியை மாற்றக் குற்றங்கெடும்' எனக் கூட்டிப்பொருள் கொள்க என்பர்.

சபாபதியும் 'குடியிலும் ஆண்மையிலும் வந்த குற்றங்கள்' என்பர். சாமி சிதம்பரனாரும் இங்ஙனமே உரைப்பர்,

ஆகவே உரையாசிரியர்களில் குடியும் ஆண்மையும் என இரு கூறாக்கிக் கேட்டினைக் கூறுவாரும் ஒன்றாக உரைப்பாரும் என இருவகையினர். மடியாண்மையை ஒன்றாகக் கொள்ளும்போது குடி யாண்மையும் ஒரு தொடராகவே இருத்தல் வேண்டும் என்பர் உரை வேற்றுமையாசிரியர். மணக்குடவர் உரைப்போக்கு அங்ஙனம் இருத்தலையும் குறிப்பர். காளிங்கர் தன்னால் குடிகட்கும், தனக்கும் வந்த வடுப்பாடும் என இருகூறாக்கி வேறுரை வகுப்பர்.

ஆதலால், 'ஒருவன் மடியை மாற்ற அவன் குலத்திற்குள்ள பழி யெலாம் நீங்கும்' என்ற உரையே சிறத்தல் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

> மடியொன் றுளதேல் வல்விரைந்து வகுக்கும் தொழிலை நீட்டிக்கும் கடியும் மறவி துயில் விளைக்கும் கலதி தனைச்சேர்த் திடும்பகைவர்க்கு அடிமை புகுத்தும் குடிகெடுக்கும் அதனை விடுப்பின் ஆண்மையினும் குடிமை யிடத்தும் வேறுளவாம் குற்றம் பலவும் ஒழிக்குமே.
>
> —விநா.அரசி.,99

61.10. மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு. (சுக0)

உரைப்பகுதி:

அ) *மண.*: க்மடியில்லாத மன்னவன் எய்துவன்; அடியினான்அளந் தானால் கடக்கப்பட்ட உலகமெல்லாம் ஒருங்கே எ—று.

இது மடியின்மையால் வரும் பயன் கூறிற்று.

ஆ) *பரிதி.*: மடித்தபுத்தி யில்லாத அரசன் பெறுவன்; மகா விட்டுணுவின் பாதத்திலே அடங்கின உலகம் எ—று.

இ) *பரிப.*: மடி இல்லாத மன்னவன் எய்துவன், அடியினான் அளந்தானால் கடக்கப்பட்ட உலகம் எல்லாம் கூட எ—று.

இது மடியின்மையால் வரும் பயன் கூறிற்று.

ஈ) *காளி.*: தனது நெஞ்சு ஊக்கத்துக்குத் தக்க முயற்சி உடை யனாய்த் தனதிடத்து ஒருநாளும் மடிப்பது ஓர் மடி இல்லாத மன்னவன் யாவன்? அவன் எய்தும்: யாதினை எனின், முன் ஒரு நாள் அசுரேசனிடத்துச்[1] சென்று மூவடி வேண்டி அளந்தவனாகிய திருமால் அடியில் தாவிக்கொண்ட அனைத்து உலகினையும் எ—று.

உ) *பரிமேல்.*: தன் அடியளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்பு[2] முழுதையும் மடியிலா அரசன் முறை யானன்றி[3] ஒருங்கே எய்தும்.

அடியளந்தான் என்றது வாளா பெயராய்[4] நின்றது. தாவியது என்பது இடைக்குறைந்து நின்றது[5]. எப்பொழுதும் வினையின் கண்ணே முயறலின், இடையீடின்று எய்தும் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் மடியிலாதான் எய்தும் பயன் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: மடிமையில்லாத அரசன், சகல லோகத்தையும்

---

1. அசுரேசன் — மாவலி.
2. கடந்தபரப்பு — தாவியளந்த சுவர்க்க—மத்திய—பாதாளம் என்னும் உலக பரப்பு பரப்பு என்னும் பண்புப்பெயர் அதனையுடைய உலகத்திற்கு ஆயிற்று பண் பாகுபெயர்.
3. முறையானன்றி —தான் செய்த நல்வினைக்கேற்ப அடைதலன்றி ஒருசேரஅப்பொழுதே அடையும் என்பதாம்.
4. வாளாபெயர்—காரணப் பெயராயிருந்தும் காரணங்குறியாது திருமால் என்னும் அளவில் பொருள் தருவது.
5. தாவியது தாயது தொகுத்தல் விகாரம் என்பர் இன்றுள்ளோர்.

அளந்த சுவாமி கடந்த பரப்பெல்லாவற்றையும், வரிசையாலல்லாமல் ஒருங்கே அடையும் எ—று.

ஏ) பழைய 2: 'தா அய வெல்லாம்' பாடம். மடியில்லாத மன்னவன் எய்துவன், திருவிக்கிரமன் அடியினால் தாயியளந்த எல்லா நிலத்தையும் ஒருமிக்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

புராண வரலாற்றைக் குறிப்பதாகக் கருதி விரும்பாத குழந்தை மடியளந்து எனப்பிரித்துச் சோம்பலைக் கலந்து என்றும், ஆன்று—நீங்கி என்றும் சிதைத்துச் சோம்பலற்ற மன்னன் சோம்பலுற்றதால் முன்பு இழந்த செல்வத்தையும் ஒருங்கே பெறுவான் என முடிபு காண முயல்வர். .

ஞானபூபதி அடியளந்தானைப் படியளந்தான் எனப் பாடந்திரித்து தமக்கு வேண்டியவாறு உரைப்பர். பரிமேலழகரும் தொல்லாசிரியர்கள் பலரும் பாவாணர், சி.இ.முதலிய அனைவரும் சொற்பொருளைச் செவ்வன உரைப்பர். ஆகவே பரிமேல்., மணக் முதலியவர்கள் உரை சிறப்பானது.

(ஒ) ஒப்புமைப்பகுதி:

நாலினோ டுலக முன்றும்.....
.... விண்டு
காலினா லளந்த வான முகட்டையும் ..... —கம்பராமா., 4879

... ... காலாற்
புலிகொ ணாயகற்கு ... ... —கம்பராமா., 6347

தாள்ப ரப்பிமண் தாவிய ஈசனை —திருவாய்.3.3:11

முன்னம் குறளுருவாய் மூவடிமண் கொண்டளந்த
மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன் —பெரியதிரு.,9—4:2

அடியளந்தான்:

மண்ணும் விண்ணுந்தாய டியளந்தான் —சம்பந்தர்: தூங்கானை ,9

மடியிலா:

மடியிலா வரசன் மார் பினினுளானோ... ... —கம்பராமா.,1121.

உள்ளமுடை யான்முயற்சி செய்ய ஒரு நாளே
வெள்ளநிதி வீழும்விளை யாததனின் இல்லை
தொள்ளையுணர் வின்னவர்கள் சொல்லின்மடி கிற்பின்
எள்ளுநர்கட் கேக்கழுத்தம் போல இனி தன்றே —சீவக.,496

முற்றும்:

இனியாரு மில்லாதார் எம்மிற் பிறரரியார்
தனியேம்யாம் என்றொருவர் தாமடியல் வேண்டா
முனிவில ராகி முயல்க முனிவில்லார்
முன்னிய தெய்தாமை யில் —பழமொழி நா.,161.

ஒ) மேற்கோள்பகுதி:

சிவஞான.: சத்தாம் அறிவறியா மெய்சிவன்றாளாம்; ''சத்தாகிய மெய் எனக் கூட்டுக. 'அடியளந்தான் தாயது' என்புழிப்போல அறி வறியாமெய் என்றது வாளா பெயராய் நின்றது''.
(சிவஞான.சூ.6.அதி.2.)

சுவாமி.: கற்றறிந்தோர் பல சொல்லினையே ஒரு சொல்லாகவும் கருதுவர் என்பதற்கு 'அடியளந்தான் தாயதெல்லாம்' என்பதை எடுத்துக்காட்டி 'அரி' என ஒரு சொல்லாகவே கொள்வர் என்பர்.
(இ.கொ. 116)

பண்டைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	குடிஎன்னும்	மடியை	மடிமடிக்	குடிமடிந்து	நெடுநீர்	படியுடையார்	இடிபுரிந்	மடிஇலா	குடியாண்மை	மடியிலா
மணக்.	3	1	2	4	7	6	10	5	8	9
பரிதி.	4	3	6	5	10	9	8	7	2	1
பரிப்.	3	1	2	4	8	7	5	6	9	10
காளி.	8	7	5	2	10	9	3	4	6	1
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

61 வது அதிகாரம் 'மடியின்மை' முற்றிற்று.

62. ஆள்வினையுடைமை

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: ஆள்வினையுடைமையாவது முயற்சியுடைமை செய்யுங்காரியம் உயர நினைத்துச் சோம்புதல் இல்லாதிருந்தாலும் அது முடியுமாறு முயல வேண்டுதலின் அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: ஆள்வினையுடைமையாவது காரியத்தில் முயற்சியுடைமை எ—று,

இ) பரிப்.: ஆள்வினை யுடைமையாவது முயற்சியுடைமை செய்யும் காரியம் உயர நினைத்துச் சோம்புதல் இலராயிருந்தாலும் அதனை முடியுமாறு முயல வேண்டுதலின் அதன்பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது இடைவிடாத மெய்ம்முயற்சி உடையனாதல் அஃது ஆளும் வினை[1] எனக் காரியத்தால் கூறப்பட்டது. மடிகெடுத்தாலும் வினை முயற்சியானன்றி ஆளப்படாமையின், இது மடியின்மையின் பின் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர்: அஃதாவது இடைவிடாத மெய்ம்முயற்சியை உடையனாதல், இது ஆள்வினையென்று காரியத்தாற் சொல்லப்பட்டது.

ஏ) பழைய 2: அஃதாவது, வினையை ஆளுதல், வேலை கொள்ளுதல் என்பன போலக் கொள்க.

---

1 மெய்ம்முயற்சியாகிய காரணத்தால் தொழிலை ஆளுந்தன்மை விளைதலின், ஆள்வினை என்ற காரியப் பெயர். அதன் காரணமாகிய மெய்ம்முயற்சிக்கு ஆயிற்று ஆதலால் காரிய ஆகுபெயராம் ,ஆள்வினை' —வினைத்தொகை.

மல்லர்: அதாவது உடம்பு கஸ்தியைப் பாராமல் இடைவிடாமல் தன் காரியத்துக்குப் பிரயாசப்படுகிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

கா.சு., விடா முயற்சியுடைமை.

தேவநேயர், இடைவிடாது கருமத்தை ஆண்டு நடத்துந் திறம். இது மடியின்மையால் நேர்வது. ஆகலின் அதன்பின் கூறப்பட்டது.

சி.இ.. இடைவிடாத மெய்ம்முயற்சியுடையராந் தன்மை.

இராம., ஆள்வினை என்றால் மெய்ம்முயற்சி அதாவது உடல் முயற்சியுடையனாக இருத்தல். அதாவது விடாமுயற்சி. இது எல் லோருக்கும் வேண்டியது என்பர்.

குழந்தை, முன் ஊக்கம் என்றது மனமுயற்சியை. ஈண்டு ஆள் வினை என்றது உடல் முயற்சியை. அதனையுடையனாதல் ஆள் வினையுடைமை.

ஜி.வரத., எண்ணத்தில் சோம்பல் இன்மை மடியின்மை. செயலில் முயற்சியுடைமை இது. ஆள்வினை: செயலைத் திறம்படச் செய்தல்.

சாமி சிதம்., இடைவிடாத உடல் முயற்சியால் அடையும் நன்மை.

'முயற்சியுடைமை' என்பதைக் காட்டிலும் 'அது முடியுமாறு முயலுதல்' என்பதும், 'வேலை கொள்ளுதல்' என்பதும் தெளிவான விளக்கம். இவர்கள் உரைகளில், ஊக்கம் —ஆள்வினைகளின் வேறு பாடு தெளிவாக உணரத்தக்கவை.

62.1. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும். (கூகக)

உரைப்பகுதி:

அ) மணக்., ஒரு வினையைச் செய்தல் அருமையுடைத்து என்று முயலாமையைத் தவிர்தல் வேண்டும்; முயற்சி தனக்குப் பெருமை யைத் தருமாதலால் எ—று.

இது வினைசெய்து முடித்தல் அரிதென்று; தவிர்தலாகா தென்றது.

ஆ) *பரிதி.:* இந்தக் காரியத்தை எடுத்து முடிக்க அருமையுண்டு என்று விசாரிக்க[1] வேண்டாம்; உத்தியோக பலத்தினாலே காரியம் முடியும் எ—று.

இ) *பரிப.:* ஒரு வினையைச் செய்தல் அருமை உடைத்தென்று முயலாமையைத் தவிர்தல் வேண்டும். முயற்சி தனக்குப் பெருமையைத் தரும் ஆதலால் எ—று.

இது வினைசெய்து முடித்தல் அருமை உடைத்தென்று தவிர்தல் ஆகாது என்றது.

ஈ) *காளி.:* அரசரானோர் தமக்குச் சிறந்த கருமம் செய்யும் இடத்துப் பெரிதும் செய்தற்கு அருமை உடைத்து என்று கண் சோம்பி[2] இராமையை விரும்பவேண்டும்; அதனால் அம்முயற்சி யானது மிகவும் பெரிய மேம்பாட்டினைத் தரும் எ—று.

உ) *பரிமேல்.:* தம் சிறுமை[3] நோக்கி நாம் இவ்வினை முடித்தல் அருமையுடைத்தென்று கருதித் தளராதொழிக, அது முடித்தற்கேற்ற பெருமையைத் தமக்கு முயற்சியுண்டாக்கும்.

சிறுமைநோக்கி என்பது பெருமை தரும் என்றதனானும், வினை முடித்தல் என்பது அதிகாரத்தானும் வருவிக்கப்பட்டன. விடாது முயலத்தாம் பெரியராவர்; ஆகவே, அரியனவும் எளிதின் முடியும் என்பதாம்.

காரி.: அசாவாமை—தளராதொழிக; மையீறு வியங்கோளா னது. அவற்றுள், முன்னிலை தன்மை ஆயிரிடத்தொடு'[4] என்னுஞ் சூத்திரத்தில் 'அஞ்சாமை அஞ்சினேன்'[5] என நச்சினார்க்கினியரும் உரைத்தார் என்க.[6].

ஊ) *கவிராசர்:* தம் சிறுமையை நோக்கி 'நாம் இந்தக் காரியத்தை முடிக்கிறது அருமை' என்று நினைத்து விசாரப்படாமல்

---

1. விசாரிக்க--கவலைப்படல் விசாரம் என்ற பெயரிலிருந்து தோன்றிய செய என் எச்சம்.
2. கண்சோம்பி—மனச்சோம்பலைக் கண்கள் குவிந்து சுருங்கிக் காட்டுதலின் கண் சோம்பி என்றார்
3. சிறுமை—பொருளாலும் படையாலும் துணைகளாலும் ஆன குறைவு.
4. தொல் சொல். 228.
5. 'அஞ்சாமை அஞ்சுவதொன்றின்' கல்லாடர் பாடம்
6. இவை நுண்பொருள் மாலையுடையார் குறிப்பாக இருத்தல் இயலாது என்பதைத் தொகுப்பாசிரியர் குறிப்பிற் காண்க.

இருக்கவேண்டும். அந்தக் காரியத்திற்கு ஏற்ற பெருமையைத் தமக்கு முயற்சியுண்டாக்கும் எ—று.

ஏ) பழைய 2: 'அயாவாமை' பாடம். தமது சிறுமையை நோக்கி' நாம் இவ்வினை முடித்தல் அருமையுடைத்து என்று கருதித் தள்ளா தொழிக. அது முடித்தற்கேற்ற பெருமையைத் தனக்கு முயற்சி யுண்டாக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அசாவாமை' — 'முயலாமையைத் தவிர்தல்' மணக்., பரிப். 'கண்சோம்பியிராமை' காளி. 'தளராமை' பரிமேல்.; 'தள்ளாமை பழைய 2.

அசாவாமை' என்பதை எண்ணித் 'தளராது ஒழிக' என்றவர் பரிமேலழகர். 'முயலாமையைத் தவிர்தல் வேண்டும்' என்றவர் மணக் குடவர் முதலியோர். ஆயினும் கருத்தில் மாறுபாடின்மை காண்க.

ஏனைய உரையாசிரியர்கள் அசாவாமையை எதிர்மறைத் தொழிற்பெயராகக் கொண்டு, 'வேண்டும்' என்ற வினைமுற்றோடு முடித்தார்கள்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்:

அருமை யேதுனக் கவலங் கூர்தியோ —கம்பராமா.,4019

பெருமை முயற்சி தரும்:

முயற்சியின் முடிப்பாக் கருமம் இல்லென —பெருங்.,5;4:14

பெருமை உடையதன் அருமை பழியார் —முதுமொழிக்.,3:3

உண்டோ ... பார்மேல்
முயன்றான் முடியாப் பொருள்

முற்றும்:

இசையா தெனினும் இயற்றிற் ராற்றால்
அசையாது நிற்பதாம் ஆண்மை — இசையுங்கால்

கண்டல் திரையலைக்கும் கானலம் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாரோ மற்று —நாலடி.,19

எங்கணொன் றில்லை எமரில்லை என்றொருவர்
தங்கண் அழிவுதாம் செய்யற்க — எங்கானும்
நன்கு திரண்டு பெரியவாம் ஆற்றவும்
முன்கை நெடியார்க்குத் தோள் —பழ.நா.,

ஓசனை யொன்று நூறு முள்ளடி யுள்ள தாக
ஈசன்மண் ணளந்த தேய்ப்ப விருங்கட லினிது தாவி
வாசவன் முதலோர் வந்து மலையினு மிலங்கை வாழும்
நீசரை யெல்லா நூறி நினைத்தது முடிப்பல் பின்னும்
—கம்பராமா.,4840

62.2. வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு. (கூக.)

உரைப்பகுதி:

அ) மணக்.: வினைசெய்யுங் காலத்து வினைகெடுதலைத் தவிர்க; வினைக்குறையை முடித்தாரினின்றும் உலகம் விடப்பட்டதன்று[1] எ—று.

இது தொடங்கின வினையைக் குறைபட விடலாகாது என்றது.

ஆ) பரிதி.: ஒரு காரியத்தை எடுத்தால் அந்தக்காரியம் குறையாமல் முடிப்பான்; அப்படிக்கு ஏதொரு காரியமும் முடிப்பவனை உலகம் கைவிடாது எ—று.

இ) பரிப்.: வினை செய்யும் காலத்து வினை கெடுதலைத் தவிர்க. வினைக்குறையை முடித்தாரினின்றும் உலகம் விடப்பட்டது இல்லை எ—று.

இது தொடங்கின வினையைக் குறைபட விடலாகாது என்றது.

ஈ)காளி: அரசரானோர் தமக்குத் தகுவதாகிய கருமம்செய்ய முயலும் இடத்து அதற்குப் பழுதுவராமல் பாதுகாத்து வரக்கடவர்.

1. விடப்பட்டதன்று —அவர்களைச் சேர்ந்தே வாழும் என்பது கருத்து. விடப்பட்டதில்லை' பரிப். பாடம்.

வினைகுறைபாடு[2] நீங்கிய பெரியோர்மாட்டே தெளிவுற நிலை பெற்றது இவ்வுலகம் எ—று.

உ) *பரிமேல்* : வினையாகிய குறையைச் செய்யாது விட்டாரை உலகம் விட்டது; ஆதலால், செய்யப்படும் வினைக்கண் தவிர்ந்திருத் தலை ஒழிக.

குறை—இன்றியமையாப்பொருள். அது[3] ''பயக்குறை இல்லைத் தாம் வாழுநாளே'' என்பதனானும் அறிக. இதற்கு வினை செய்யவேண்டும் குறையை நீங்கினாரின் நீங்கிற்று என்று உரைப் பாரும் உளர்.[5]

காரி: தீர்ந்தன்று—தீர்ந்தது என அஃறிணையொருமைக்கண் வந்த றுவ்வீற்று வினைமுற்றுச் சொல். 'களம் வேட்டன்று'[6] நகையமர்ந்தன்று என்பனவும் அது.

ஊ) *கவிராசர்*: காரியமாகிய குறையைச் செய்யாது விட்டாரை உலகமும் விடும். ஆதலால், செய்யப்படும் காரியங்களை விடாமற் செய்ய வேண்டும் எ—று.

ஏ) *பழைய 2*, வினைகள் செய்யுமிடத்துச் செய்யப்படும் வினை களைச்செய்து குறையாக விடாமல் முழுதுஞ் செய்து முடிக்க. குறை வேலையாக விட்டவரை உலகமும் விடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்;

''வினைக்குறை முடிந்தாரின் உலகு தீர்ந்தன்று''

மணக். 'வினைக்குறையை முடித்தாரினின்றும் உலகம் விடப்பட்ட தன்று' என்பர். இதன் விளக்கம்போல அமைந்தது 'அப்படிக்கு ஏதொரு காரியமும் முடிப்பவனை உலகம் கைவிடாது' என்ற *பரிதியுரை*. 'வினைக்குறைபாடு நீங்கிய பெரியோரிடத்துத் தெளிவுற நிலைபெற்றது இவ்வுலகம்' என்பது *காளிங்கர்* உரை. இவர்கள் அனைவரும் வினைக்குறை வினையினது குறை என ஆறனுருபு தொக்க தொகையாகக் கொண்டு பொருள் காண்பவர்கள்.

---

2. வினை குறைபாடு--எடுத்த முயற்சியில் முடிவு பெறாமலிருப்பது.
3. அது அக்குறையை.
4. புறநா 188. (மயக்கும்பிள்ளைகளையில்லதார்க்கு) யனாகிய முடிக்கப்படும் பொருளில்லை; தாம் டயிர்வாழும் நாளின்கண்' என்பது இதன் பொருள்.
5. உரைபாரும் என்றது கவிராசரை. ஆதலால் கவிராசர் பரிமேலழகர்க்கு முந்தியவரா கலாம் என்பதும் சிந்திக்க.
   'தீர்ந்தன்று' தீர்ந்தது என்பது அன்சாரியை பெற்று வந்தமையின் 'து' விகுதி 'று' விகுதியாயிற்று
6. திருமுருகு 100
7. திருமுருகு., 102'

தீர்ந்தன்று—தீர்ந்தது அன்று என்றதன் விகாரமாகக் கொண்டு 'விடப் பட்டது அன்று', 'கைவிடாது' 'நிலைபெற்றது' என்றன இவர்களின் உரைகள்.

பரிமேலழகர் 'வினையாகிய குறையை விட்டவரை உலகமும் விடும்' என்பர். இவரை ஒத்துக் *கவிராசர்* உரையும் *பழைய உரையும்* செல்லும் இவ்விரண்டனுள்ளும், 'காரியமாகிய குறையைச் செய்யாது விட்டாரை' என்னும் *கவிராசர்* உரை வினையாகிய குறை என்ற *பரிமேலழகரை* ஒட்டி முயற்சியையே குறை என்கிறது. *பழைய உரை* 'குறையாக விடாமல் முழுதும் செய்து முடிக்க' என்கிறது. இது வினையினது குறை என ஆறாம் வேற்றுமையுருபு விரித்துக் குறை வேலையாக விடாதே முழுதும் செய் என்கின்றது. இவ்விரண்டுரையிலும் உள்ள மாற்றம் இது. 'வினைக்குறையை விட்டவரை உலகம் விடும்' என்ற *பரிமேலழகரை* ஒட்டி, முற்கூறிய இருவரேயன்றிக் *கா.சு., இராம., சி.இ. சபாபதி, குழந்தை, தேவநேயர், மு.ரா. அரு.* முதலான அனைவரும் உரைப்பர்.

இங்ஙனம் இவர்கள் அனைவரும் மாறுபடக் காரணம் 'தீர்ந்தாரின்' என்பதற்கு 'வினைக்குறையை விட்டவர்' எனவும், 'வினைக் குறையை முடித்தவர் எனவும் பொருள் காண நேர்ந்தமையேயாம். இது அவர்களை 'வினைக்குறையை முடித்தவர்களை அதாவது வினைகளைக் குறைவின்றி இறுதி வரை முடித்தவர்களை உலகம் விடாது' என்றும், 'வினைகளைக் குறைவாகவே வைத்து முடிக்காமல் விட்டவர்களை உலகம் விட்டு விடும்' என்றும் பொருள் காண வைத்தது. ஒன்று நற் பயன் கூறி வினையை முடிக்கத் தூண்டுவது மற்றொன்று கேடு கூறி முயலத் தூண்டுவது, இவை தம்முள் வேறுபாடிது என்க.

வினையாகிய குறை ஒருவன் மேற்கொண்டு இயற்ற வேண்டிய வினையைத் தொடங்காமலே இருப்பதையும், வினையின் குறையாகிய மற்றொன்று தொடங்கிய வினையை முடிக்காமல் குறை வைத்திருப்பதையும் அறிவிப்பனவாகும். இவற்றுள் 'வினையின் குறையை உணர்த்தும் ''வினைபகை என்றிரண்டின் எச்சம்'' என்றாற்போன்ற வினையின் எச்சமாகும். அந்த ஆசிரிய வசனத்தை யகத்துட்கொண்டு *மணக்குடவர்* முதலியோர் 'வினைக்குறை—வினையின் குறை' என்றனர்,

'வினையாகிய குறை' என்ற *பரிமேலழகர்* உரை வினையை மேற் கொள்ளாமலே இருப்பதாகலின் அதிற்குறை அமைதல் எங்ஙனம்

என்று எண்ணவும் தோன்றுகிறது ஆதலால் வினைக்குறைக்கு மணக்குடவர் உரையே சிறந்தது எனலாம்.

''தீர்ந்தாரின்'' ''தீர்ந்தன்று'' என்பதற்கு மணக்குடவர் 'முடித்தாரினின்றும்' என்றும், 'விடப்பட்டது அன்று' எல்றும் உரை கூறுதல் தகாது; விட்டார் விட்டது என ஈரிடத்தும் விடற்பொருட்டாக வே உரைக்கும் பரிமேலழகர் உரை ''தீர்தலும் தீர்த்தலும் விடற் பொருட்டாகும்'' (தொல்.சொல், 318) என்ற தொல்காப்பிய மரபை ஒட்டி இயல்வது எனச் சான்று காட்டி மணக்குடவரை மறுப்பர் சிலர்.

பரிமேலழகரே 'வினை செய்ய வேண்டும் குறையை நீங்கினாரின் உலகு நீங்கிற்று' என உரைப்பாரும் உளர் என வேறுரையும் ஒப்பிக் கூறுவர்.

''தீர்தல்—தீர்த்தல்'' (தொல் சொல் 318) என்ற நூற்பா, இச்சொல் இரண்டும் குறிப்பான் விடல் என்னும் பொருளை உணர்த்துவது என்றும், 'ஊரிற்றீர்ந்தான்' என்புழிப் 'பற்று விட்டான்' என்பதையும் 'பேயிற்றீர்த்தான்' எல் புழிப் 'பேயை விடுவித்தான்' என்பதையும் உணர்த்துவதாய்த் தன்வினை பிறவினைகட்கு முறையே வரும் என்பதையும் விளக்க வந்தது என்பர் இளம்பூரணர். (தொல், சொல். 312). நச்சினார்க்கினியர் 'விடல் என்னும் உரிச்சொல் குறிப்புப்பொருண்மையுடைத்தாம்' எனவும், 'தன் வினையும் பிற வினையும் பற்றிப் பிறக்கும்' எனவும் கூறுவர் (தொல—சொல் 318). தெய்வச்சிலையாரும் இங்ஙனமே கருதுவர். ஆகவே இந் நூற்பா விடற் பொருளில் தன்வினை பிறவினைகட்குப் பொதுவாக வரும் என்பதை விளக்க வந்ததேயன்றி விடல் ஒன்றுதான் பொருள் என்பதை வலியுறுத்த வந்ததன்று. 'விடல் பொருட்டாகும்' எனவே இப்பொருளைத்தரும் 'முடித்தல்', 'நீங்கல்' அறுதல் 'ஆறுதல் இல்லையாதல்' முதலான பொருள்களிலும் ஆளப்பட்டதென்பதைக் கலித்தொகை, புறநானூறு முதலான சங்க நூல்கள் பலவற்றினும் அறியலாம். ஆதலால் மணக்குடவர் கூறிய முடித்தார் என்பதும் விட்டார் என்னும் பொருண்மைத்து என்பதையே பரிமேலழகர் கருதினராதல் வேண்டும். எங்கும் பரிமேலழகர் மணக்குடவரைப் பின்பற்றியே விளக்கம் கூறும் மரபினர் என்பது இதற்குத் துணை செய்யும்.

இவர்களிடை காணப்படும் வேறுபாடு 'வினைக்குறை' என்பதை 'வினையாகிய குறை' எனவும் 'வினையினது குறை' எனவும் பொருள் கண்டது ஒன்று. தீர்ந்தன்று என்பதில் அன்சாரியை யாகக் கொண்டு தீர்ந்தது' என உடன்பாட்டு வினை

முற்றாகவும். 'விட்டதன்று' என எதிர்மறைமுற்றாகவும் கண்டது ஒன்று. ஆக இரண்டிடத்திலேயே என்பதையும் எண்ணுக. இவற்றுட் பொருட் சிறப்பு வலியுறுத்துக் கூறுமாற்றான் வினைக்குறையை முடித்தவரை உலகம் விடாது என்பதே எனல் தகும்.

62.3. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே வேளாண்மை என்னும் செருக்கு. (கூகஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: முயற்சியாகிய நன்மையின் கண்ணே கிடந்தது; பிறர்க்கு உபகரித்தலாகிய பெருமிதம் எ—று.

இஃது அறஞ் செய்தலும் இதனானே யாகும் என்றது.

ஆ) பரிதி.: தாளாண்மை என்னும் முயற்சியாலே வேளாண்மை என்னும் பிரியம்[1], ஆகையால் உத்தியோகங்[2]கண்ணாக இருப்பான் எ—று

இ) பரிப்.: முயற்சியாகிய நன்மைபின்கண்ணே கிடந்தது: பிறர்க்கு உபகரித்தல் ஆகிய பெருமிதம் எ—று.

இஃது அறம் செய்தலும் இதனானே ஆகும் என்றது.

ஈ) காளி.: அரசர்க்கு ஆள்வினையுடைமை என்னும் அத்தகுதிப் பாட்டின் கண் தங்கியது; யாது எனின் யாவர்க்கும் உகப்ப[3] வழங்கும் உபகாரம் என்று எடுத்துரைக்கப்பட்ட பெரிய செருக்கு எ—று.

உ) பரிமேல்.: முயற்சி என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தின்கண்ணே நிலை பெற்றது. எல்லார்க்கும் உபகாரம் செய்தல் என்னும் மேம்பாடு.

பொருள் கைகூடுதலான் உபகரித்தற்கு உரியார் முயற்சியுடையார் என்பார் அவ்வக்குணங்கள் மேல் வைத்தும்,[4] அது[5] பிறர்

1 செருக்கு- பிரியம் என்பது செருக்கால் விளைவது இன்பமாதலிற் கூறியது, இதனை ஆகுபெயர் என்னாது வாளா கூறினார் தொன்னெறியானபையின்.
2 உத்தியோகம் முயற்சி.
3 உகப்ப உவப்ப என்பதன் திரிவு மகிழ என்பது பொருள்.
4. தாளாண்மையுடையாரைத் தாளாண்மை என்றும் தகைமை வேளாண்மை உடையாரை வேளாண்மை என்றும் செருக்கு என்றும் பண்புடையபொருளைப் பண்பின் மேல் வைத்துக் கூறியதாம்.
5. அது—வேளாண்மையென்னுஞ் செருக்கு

மாட்டு[6] இல்லை என்பார் தங்கிற்றே[7] என்றும் கூறினார். இவை மூன்றுபாட்டானும் முயற்சியது சிறப்புக் கூறப்பட்டது.

காரி.: தாளாண்மை—உபகாரியாந்தன்மை. வேளாண்மை—. வேளையாளுதல் தன்மை வேள் என்பது. முதனிலைத் தொழிற்பெயர்

ஊ) கவிராசர்: முயற்சி என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தின் கண்ணே நின்றது, எல்லார்க்கும் உபகாரம் செய்தல் என்னும் மேம்பாடு எ—று.

ஏ) பழைய 2: வினை முயற்சி என்னுந் தகைமையினிடத்தே நிலை பெற்று நின்றது, எல்லார்க்கும் உபகாரஞ் செய்தல் என்னும் மேம்பாடு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'தகைமை' — 'நன்மை' மணக்.; 'முயற்சி' பரிதி.; 'தகுதிப் பாடு' காளி,; 'உயர்ந்த குணம்' பரிமேல்., கவிராசர், மு.கோ., மு.ரா.அரு., குழந்தை சி இ.; 'பெருமை' இராம.; 'மேம்பாடு சபாபதி; 'உயர்ந்த பண்பு' தேவநேயர்.

'வேளாண்மை' — 'உபகாரம்' மணக்.; காளி.; 'பரிமேல்.; 'வேளிரது ஆண்மை', முருகனது என்பர் மு.கோ.;வேள் ஒருவனேயாயினும் அவனை ஒத்த வீரர் பலராயினும் இங்ஙனம் கூறினார் எனலுமாம். 'நன்றி செய்தல்' தேவநேயர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே வேளாண்மை:

(ஒருபுடை):

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை —குறள்.,614

தாளாளனென்பான் கடன் படா வாழ்பவன்
வேளாளனென்பான் விருந்திருக்க வுண்ணாதான்
—திரிகடுகம்

6 பிறர் மாட்டு—முயற்சியில்லாதவரிடத்து
7; ஏகாரம்பிரிநிலை,
8 , வேள் ஆண்மை—வேளையாளுதல் என்ற காரியார்க்குருத்து வேள் போன்றாராகிய வீரர் பலரை ஆளுதல் என்பதுபோல. இதைக்கருதியே மு:கோ: உரை செல்கிறது

வேளாண்மை செய்து பிருந்தோம்பி வெஞ்சமத்து
வாளாண்மை யாலும் வபியராய்த் — தாளாண்மை
தாழ்க்கு மடிகோ ளிலாய் வருந்தாதார் —பழமொழி

முற்றும்:

வேளாளர் என்றபர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும்
தாளாளர்... ... ... —சம்பந்தர்: ஆக்கூர்:3.

62,4, *தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை*
வாளாண்மை போலக் கெடும். (சுகசை)

உரைப்பகுதி :

அ) **மணக்.:** முயற்சியில்லாதான் பிறர்க்கு உபகரித்தல், படை கண்டால் அஞ்சுமவன்கை வாள் பிடித்தாற்போலக்கெடும் எ—று.

இஃது அறம்செய்யமாட்டான் என்றது.

ஆ) **பரிதி.:** முயற்சியில்லான் உபகாரியாந் தன்மை எப்படி என்றால் பேடி கையில் வாள் ஒக்கும் எ—று.

இ) **பரிப்.:** முயற்சி இல்லாதான் பிறர்க்கு உபகரித்தல், படை கண்டால் அஞ்சும் அவன் கையில் வாள் பிடித்தாற் போலக் கெடும் எ—று.

இஃது அறம் செய்ய மாட்டான் என்றது.

ஈ) **காளி':** தனது ஆண்மைக்கு உரிய முயற்சியினை இல்லாத மன்னவனது கைவண்மை எத்தன்மையதோ எனின், உறையகத்து இருந்த வாளாண்மை போலக் கெடும் எ—று.

இனி மற்று இவ்வாறும் அன்றி, ஆண்மகன் அல்லாத பேடி கைப்பற்றின வாள் ஆட்சிபோல ஆள்வினை முயற்சியும் மாற்றார் மேல் வழக்கும் அன்றிக் கெட்டு நின்றாற்போலப் பொருளில் முயற்சியும் பொலிவுறு வழக்கமும் இன்றிக்கெடும் எ—று.

வேளாண்மை என்பது யாவர்க்கும் வழங்கும் கைவண்மை என்றது பேடிகை[1] என்பது வாளினது உறை என்றது. வாளாண்மை என்பது வாள் ஆட்சி என்றது.

1. தொடர்பும் குறிப்பும் காண்க.

உ) *பரிமேல்.*: முயற்சி இல்லாதவன் உபகாரியாந் தன்மை, படைகண்டால் அஞ்சும் பேடி அதனிடைத் தன்கையில் வாளை ஆளுதற்றன்மை போல்இல்லையாம்.

ஆள் என்பது முதனிலைத் தொழிற்பெயர்[2]. பேடி[3] வாளைப்பணி கோடல் கருத்துடையளாயினும் அது[4] தன் அச்சத்தான் முடியாதவாறு போல முயற்சியில்லாதான் பலர்க்கும் உபகரித்தல் கருத்துடையனா யினும் அது[5] தன் வறுமையான் முடியாது என்பதாம். வாளாண்மை என்பதற்கு வாளால் செய்யும் ஆண்மை[6] என்று உரைப்பாரும் உளர். இதனான் அஃது இல்லாதானது குற்றம் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: முயற்சியில்லாதவன் உபகாரம் பண்ண வேணு மென்று நினைக்கிறது, படையைக் கண்டால் அஞ்சும் பேடி பல கையில் வாளை ஆளுந்தன்மை போல வில்லையாம் எ—று.

ஏ) *பழைய 2*: ஆள்வினை யில்லாதவன் உபகாரம் பண்ட கண்டால்அஞ்சும் பேடி கையில் வாளை ஆளுந் தன்மை யில்லாதது போல வில்லையாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் 'தாளாண்மையில்லாதான் உபகரித்த' எனப் பயன்படாது என்பது கருதச் செய்வர். *பரிதி* யுரையும் 'உபகாரியாக முடியாது' என்பதையே விளக்கும்; *காளிங்கர்* 'உறையகத்து இருந்த வாளைப் போலும்' எனப்பயன்படாது எனக் கூற வந்தவர் 'பேடிகை-உறை' எனக் கொண்டனர். பேடிகை—பெட்டி அல்லது உறையை யுணர்த்தும் ஆரியச் சிதைவு. இலக்கிய வழக்கில் இல்லாது *அகத்திய நிகண்டில்* 'உறை' என்ற பொருளில் வந்துள்ளது. பேடிகை வாள் பயன்படாமைக்குப் *பரிமேலழகர்* தரும் நயம் பாராட்டத்தக்கது.

இராம. 'பேடி—பயங்கொள்ளி' என்பர்.

---

2. 'ஆள்' என்பது ஏனைய பெயரெச்ச வினையெச்ச, முற்றுப்பெயர் முற்றுக்களும் தோற்றுதற்கிடனாய வினைப்பகுதி.
3. ஆணிலக்கணமும் பெண்ணிலக்கணமும் விரவி ஒருபாலும் நிரம்பாதது என்பர் நன்—வி. ஆண்மை திரிந்த பெண்மைக்கோலத்து காமனாடிய பேடியாடலும் (சிலப்.—கடலாடு) என்ற சிலம்புப் பகுதியின் சிறப்புரையில் அடியார்க்கு நல்லார் 'நுகரும் பெற்றியும், விசாரமும், வீரியமும், பத்தியும் பிறவுமில்லாதார் பேடி என்பர். ஆண்மை திரிதல் தாடியிருந்தும் பெண்ணுறுப்பு உடையராதல்.
4. அது—வாளைப் பணிகோடற் கருத்து,
5. அது—பலருக்கும் உபகரிக்கும் எண்ணமும்.
6. ஆண்மை—ஒன்றற்கும் அஞ்சாத தன்மை. ,வேள் ஆண்மை—வேளிர்தன்மையான வழங்குந்தன்மை.

வரத. 'வேளாண்மை—உபகாரம்' என்ற அளவில் உரை காணாது, 'உபகரிக்கும் வண்ணம்' என்ற வரை பொருள் காண்பர்.

தேவநேயர் 'ஆண்மை—ஆளுந்தன்மை. பேடிக்கு வினையாளுந் தன்மையில்லாதது போல உபகாரம் செய்தல் விடாமுயற்சியுடையானுக்கு இல்லை' எனக் கருத்துரைப்பர்.

பரிமேலழகர் மற்றவர் கருத்தாகக் காட்டி 'ஒப்பும் வாளாண்மை வாளாற் செய்யும் ஆண்மை என்றுரைப்பாரும் உளர்' என்றதை 'இதனால் வேறு ஆண்மையுண்மை குறிக்கப்படுதலான் அது உரையாகாது' எனக் காரணங் காட்டி மறுப்பர். 'பேடி பெண் தன்மையை விரும்பும் ஆண் என்ற இலக்கண மரபு பாலுறவு பற்றியதன்றிப் போர் மறம் பற்றியதன்று; பேடியருள் போர் மறம் உடையாரும் உளர் ஆதலால் ஈங்குக் கூறியபேடி வாட்போர் செய்ய விருப்பமிருப்பினும் அச்சத்தால் அது செய்யாதவன் என்னும் பொருளது' என்பர்.

மு.கோ. 'பயன் கெடுவதன்றி வினையே கெடும்; பேடிக்கெதிராக யாரும் படைதொடார் ஆதல் காண்க'— என உரைப்பர். இவ் விளக்கம் 'வேளாண்மை கெடும்' என்பதற்கு உபகாரமே கெடும்; அதாவது தாளாண்மையில்லாதானிடம் யாரும் ஏற்க வரமாட்டார்கள் என்னுங் கருத்தினதாகிறது. இது மரபுக்கும் அதிகார இயைபிற்கும் ஏற்குமேல் கொள்க.

ஓ) மேற்கோள் பகுதி:

சிவஞான.: பெண்ணவாய் ஆணிழந்ததனைப் பேடி எனக் கூறுதலே வழக்காறு என்பதற்கு மேற்கோள். (இலக். சூறா. பக், 175)

62.5. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண். (சுகரு)

உரைப்பகுதி:

அ) மணக்.: தன்னுடம்பிற்கு இன்பத்தை விரும்பாது வினைசெய்தலை விரும்புமவன், தன்கேளிர்க்கு[1] உற்றதுன்பத்தை நீக்கி அவரைத் தளராமல் தாங்குவதொரு தூணாம் எ—று.

ஆதலால், வருத்தம் பாராது முயலவேண்டும் என்றது.

1. கேளிர் நலந்தீங்குகளைக் கேட்டு மகிழ்தலும், துன்புறுதலும் உடையார். கேளிர் போலக் கேள் கொளல் வேண்டி என்ற (பொருந: 74) பகுதியும் கேள் என்ற வினைப்பகுதி யடியாக இச்சொல் வந்தமையைக் காட்டும்.

ஆ) *பரிதி.:* தான் இன்பம் விரும்பாமல் பிறர்க்கே இன்பம் தரு வான், தன் உறவின் முறையாரது துன்பம் துடைக்குந்தூண் எ—று.

இ) *பரிப.:* தன் உடம்பிற்கு இன்பத்தை விரும்பாது வினை செய் தலை விரும்பும் அவன் தன் கேளிர்க்கும் உற்ற துன்பத்தை நீக்கி அவர் தளராமல் தாங்குவது ஒரு தூண் ஆவான் எ—று.

ஆதலால் வருத்தம் பாராது முயல வேண்டும் என்றது.

ஈ) *காளி.:* என்றும் தனக்கு ஓர் இன்பநுகர்ச்சியை விரும்பானாகிக் கருமத்தின்கண் ஆள்வினையுடைமையையே விரும்புவான் யாவன்? மற்று அவனே கேளிராகிய நட்டோர்க்கும் சுற்றத்தார்க்கும் சான் றோர் முதலிய அனைவோர்க்கும் தாளாண்மை நிலைபெறுத்தித் துன்பத்தைத் துடைத்து ஊன்றும் தூண் எ—று.

உ) *பரிமேல்.:* தனக்கு இன்பத்தை விரும்பானாகி, வினைமுடித்த லையே விரும்புவான், தன் கேளிராகிய பாரத்தின் துன்பத்தினை நீக்கிஅதனைத்[2] தாங்கும் தூணாம்.

இஃது ஏகதேசவுருவகம்[3]. ஊன்றும் என்றது அப்பொருட்டாதல்[4] ''மதலையாய் மற்றதன் வீழுன்றி யாங்கு''[5] என்பதனானும் அறிக. சுற்றத்தார் நட்டாரது வறுமையும் தீர்த்து அவர்க்கு[6] ஏமஞ்செய்யு மாற்றலை[7] உடையனாம் எனவே. தன்னைக்கூற வேண்டாவா யிற்று.[8] காரியத்தை விழையாது காரணத்தை விழைவான் எல்லாப் பயனும் எய்தும் என்றதனால், காரணத்தை விழையாது காரியத்தை விழைவான் யாதும் எய்தான் என்பது பெற்றாம். இதனான் அஃது உடையானது நன்மை கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்:* ஒருவன் தனக்குச் சுகத்தை விரும்பாமற் காரியங் களையே முடிக்கிறதை விரும்புவான், தன் சுற்றத்தாராகிய பாரத் தினுடைய துன்பத்தினை நீக்கி, அவர்களைத் தாங்குந் தூணாம் எ—று.

2: அதனை—கேளிராகிய பாரத்தை.

3, இன்பம் விழையானாகித் தொழில் முடித்தலை விரும்புவானைத் தூண் என உரு வகித்த ஆசிரியர் சுற்றத்தைச் சுமை என்னாமையின் ஏகதேச உருவகமாயிற்று.

4: அப்பொருட்டாதல் — தாங்கும் என்னும் பொருளையுடையதாதல்;

5: நாலடி; தாளாண்மை 7. செல்லரித்த ஆலமரத்தை அதன் விழுது தூணாக நின்று தாங்குவது போல' என்பது பொருள்:

6: அவர்க்கு – உறவினர்க்கும் நண்பினர்க்கும்.

7. ஏமம் பாதுகாவல்;

8. தன்னைக் கூறவேண்டாவாயிற்று — சுற்றத்தாராகிய சுமையைத் தூக்குவான் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுப் இயல்பினன் ஆவன் ஆதலின் அதனைக் கூற வேண்டா என்றார்.

ஏ) பழைய 2 : தகைக்கு இன்பம் விரும்பாமல் வினை செய்தலை விரும்புவான் தன் குடும்பமாகிய பாரத்தின் துன்பத்தினை நீக்கித் தாங்கி நிற்குந் தூணாம்.

மல்லர் : என்பது தான் சுகமாயிருக்க வேணும் என்று விரும்பாமலத் தொழில் காரியங்களைக் குறையில்லாமல் தன்னுரை முறையார் துன்பத்தை நீக்கியவர்களுடைய பாரத்தைத் தாங்கத்தக்க தூணாம் என்றவாறு.

அரசன் தன் தொழிலைக் குறையில்லாமலச் செய்கிறதுக்கு வேண்டிய பிரையாசப் பட்டாலச் செல்வங் குறையாததினால் தானுஞ் சுகமாயிருப்பான் தன்னுடைய உறமுறையார் தரித்திரத்தை நீக்கிய வர்களையுஞ் சுகமாயிருக்கப் பண்ணுவான் தான் சுகமாயிருக்க வேணும் என்று விரும்பிச் சோம்பலாயிருந்தால் நாளுக்கு நாள் அச் செல்வங் குறைந்துபோய்த் தானுஞ் செல்வமாயிருக்கிறதுக்கும் உறை முறையாருடைய பாரத்தைத் தாங்கிரதுக்கும் அவகாசமில்லை என்பது கருத்து.

விழைதல் — விரும்புதல். வினை, ஆள்வினை — முயற்சி, கேளீர் — நட்புடையார், துடைந்தல் — நீக்கல், உள்ளல்—தாங்கல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'முயற்சி மெய்க்கு வருத்தந்தருவது' என்பது ஆசிரியர் கருத்தும் ஆகும்; ஆதலால் உடம்பிற்கு இன்பத்தை விரும்பாது என்றும், முயற்சியுடையான் கேளிர்க்கு உற்ற துன்பத்தை நீக்கி அவரைத் தாங்கும் தூண்போல்வன் 'எனவும் கூறுகிற மணக்குடவர் உரைப் போக்கு 'விழைவான் தூண் ஆம்' துன்பமாகிய பாரம் கேளிர்க்கு எய்தாத வண்ணம் அதனைத் துடைத்து, அவர்களை நிலை பெறச் செய்யும் தூணாம்' என்ற கருத்தினைப் பயக்கிறது.

'உறவின் முறையாரது துன்பந் துடைக்குந் தூண்' என்ற பரிதி யுரையும் மணக்குடவரை ஒத்துளது.

காளிங்கர் உரை, 'வினை விழைவான் கேளிர் முதலிய அனை வர்க்கும், தாளாண்மை நிலைபெறுத்தி துன்பத்தைத் துடைத்து ஊன்றுந்தூண் என்பது. இதன் போக்கு கேளிரையும் முயற்சிக்கண் ஈடுபடச் செய்வதும், அதன் வாயிலாகத் துன்பந் துடைப்பதும், வினைவிழைவான் கடமையாகி, அவனைத்தூண் போன்றவனாகச் செய்கிறது என்பதாம்,

வினைவிழைவான் மேன்மேலும் முயன்று கேளிரைத் தாங்குவான் என்பதைக் காட்டிலும் அவர்களையும் தாளாண்மையில் நிலை பெறுத்துவான் என்றும் அவர்கள் வாழ வழிவகுப்பதாகலின் இவ் வுரை ஏனையோர் உரையிலும் விஞ்சி நிற்கிறது எனலாம்.

பரிமேலழகர், உரையளவில், 'விழுது, செல்லரித்த ஆலின் கிளை களைத் தாங்குவதுபோல வினைவிழைவான் தம் சுற்றத்தாரைத் தாங்கும் தூண்போல்வான் என்னுங் கருத்தினர். *கவிராசர்* முதலான பின்னுரை ஆசிரியர்கள் அனைவரும் இவரை ஒத்த கருத்தினர். பின்னுரைகளும் *பரிமேலழகரையே* ஒத்தன.

இவற்றுள் 'துன்பந் துடைத்து' என்பதற்குக் கேளிர்க்குக் கொடுத்துக் கொடுத்துச் சோம்பேறிகளாக்காமல் துன்பப்படுகிற காலத்தில் அவர்கள் துன்பத்தைப் போக்கி அவர்களையும் முயற்சிக்கண் ஈடுபடுத்தித் தாங்குவான், என்ற *காளிங்கர்* உரை சிறந்தது ஆதலைக் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

வினை விழைவான்:

வினையே ஆடவர்க் குயிரே —குறுந்., 135:6

வினைநன் றாதல் வெறுப்பக்காட்டி அகநா., 38:1

ஒருபுடை:

இன்பம் வெய்யோர்க்குத் துன்பம் எளிது —முதுமொழிக்., 8:1

வருந்தினால் வாராததில்லை —பழமொழி

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் —பழமொழி

ஓ) மேற்கோள்பகுதி

யா—வி.: இக்குறள் வெண்பா முரண்தொடையான் வந்தமைக்கு மேற்கோள். (சூ, 59.)

ஓரசைப்பொதுச்சீர் வந்ததற்கு மேற்கோள். (சூ.15.)

எதுகை முரணுக்கு மேற்கோள். (சூ 53.)

அலகிட்டு ஓசையூட்டுதற்கு மேற்கோள். (சூ.57.)

62.6. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும், (கக)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: முயற்சி செல்வத்தை உண்டாக்கும்; முயலாமை வறுமையை உண்டாக்கும் எ—று.

இது செல்வமும் நல்குரவும் இவற்றாலே வரும் என்றது.

ஆ) *பரிதி.*: உத்தியோகம் செல்வம் தரும்; உத்தியோகம் இன்மை வறுமை தரும் எ—று.

இ) *பரிப்.*: முயற்சி செல்வத்தினை உண்டாக்கும், முயலாமை வறுமையை உண்டாக்கிவிடும் எ—று.

செல்வமும் நல்குரவும் இதனானே வரும் என்றது.

ஈ) *காளி.*: இங்ஙனம் முயல்கின்ற முயற்சியானது செல்வத்தை உளதாக்கும்; மற்று அப்முயற்சி இல்லாமையானது அவர்க்கு வறுமையைக் கொடுக்கும் எ—று.

உ) *பரிமேல்.*: அரசர்மாட்டு உளதாய முயற்சி அவரது செல்வத்தினை வளர்க்கும் அஃது இல்லாமை வறுமையை அடைவித்துவிடும்.

செல்வம் —அறுவகை அங்கங்கள்[1]. வறுமை–அவற்றான்[2] வறியராதல். அதனை[3] அடைவிக்கவே, பகைவரான் அழிவர் என்பது கருத்து.

ஊ) *கவிராசர்*: ஒருவனிடத்திலே உண்டான முயற்சியாவது அவன் செல்வத்தினை வளர்க்கும்; முயற்சியில்லாமை தரித்திரத்தை அடைவித்து விடும் எ—று,

ஏ) *பழைய 2*: முயற்சியாவது செல்வத்தினை வளர்க்கும்; முயற்சியில்லாமை வறுமையிற் றள்ளிவிடும்.

---

1. அறுவகை அங்கங்களாவன!—அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பன
2. அவற்றான்—முற்கூறிய அறுவகையங்கங்களான்.
3. அதனை—அங்கங்களின குறைவாலான வறுமையை.

ஐ)தொகுப்பும் குறிப்பும்:

'ஆக்கும்' என்பதற்கு அனைவரும் 'உண்டாக்கும்' என்று மட்டும் உரை கண்டனர். தேவநேயர் 'உண்டாக்கவும் வளர்க்கவும் செய்யும்' என ஆக்குதலுக்குப் புதிதாக உண்டாக்குதலும், உள்ளதையும் உண்டாக்கியதையும் வளர்த்தலுமாகிய இரண்டையும் செய்யும் என இருபொருள் காண்பர்.

வரத. 'முயன்று கொண்டிருக்கும் போதே எதிர்பாராத பல செல்வம் வந்து சேரும்; முயற்சியில்லாதவன் அறியாமலே வறுமை வந்து சாரும்' என உரை காண்பர். 'புகுத்தி விடும்' என்ற பிறவினை வினை எச்சத்திற்கு இப்பொருள் ஏற்புடையதா? என்பது எண்ணிப் பார்த்தற்குரியது.

திருவையும் வினையையும் ஆக்கும் என உம்மைத்தொகையாகவும் கருதலாம் என்பர். அது 'இன்மை புகுத்தி விடும்' என வறுமை ஒன்றையே கருதும் வள்ளுவர் செய்யுணடைக்கு ஏலாமை அறிக.

மு.கோ. 'திருவினையாக்கும்–சிறந்த வினைகளை முடிக்கும். முயற்று இன்மை புகுத்தி விடும்-முயற்சியின்மை நற்செயலையும் தீயதுள் புகுத்திவிடும்' என்பர். இவ்வுரைகட்கு ஏற்ற சொல் பாவில் இல்லாமையும் நோக்குக.

இவ்வுரைகளுள் மணக்குடவர் போன்றார் உரையே செவ்விது.

(ஒ) ஒப்புமைப்பகுதி:

முயற்சி திருவினை ஆக்கும்;

முயற்சி திருவினை ஆக்கும் —பழமொழி

பாடுபட்டா லல்லது பலனில்லை —பழமொழி

முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்:

முயலாது வைத்து முயற்றின்மை யாலே
உயலாகா ஊழ்த்திறத்த என்னார் — மயலாயும்
ஊற்றம் இறுவிளக்கம் ஊழுண்மை காண்டுமென்று
ஏற்றார் எறிகால் முகத்து —நீதிநெறி., 50

62.7. மடியுளாள் மாமுகடி[1] என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள். (கூகஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: வினை செய்யுங்கால் அதனைச் செய்யாது சோம்பியிருப்பானது சோம்பலின் கண்ணே மூதேவி உறைவள்; அதனைச் சோம்பலின்றி முயலுபவன் முயற்சியின் கண்ணே திருமகள் உறைவள் என்று சொல்லுவர் எ—று.

இது வினையை மடியின்றிச் செய்யவேண்டும் என்பது கூறிற்று.

ஆ) பரிதி.: உத்தியோகம் லட்சுமியைத் தரும்; மடிந்த புத்தி சேட்டையைத் தரும் எ—று.

இ) பரிப்.: வினை செய்யுங்கால் சோம்புவானது சோம்பலின் கண்ணே மூதேவி உறைவாள்; அதனைச் சோம்பு இன்றி முயலுவான் முயற்சிக் கண்ணே திருமகள் உறைவாள் என்று சொல்லுவார் எ—று.

இது வினையை மடியின்றிச் செய்ய வேண்டும் என்றது.

ஈ) காளி.: தனக்கு ஏற்ற கருமத்தின்கண் முயலாது மடிப்பானுடைய மடியானது, மற்று இது அளித்தாள் யார் எனின் வறுமை நெறியில் பெரியளாகிய மூதேவி என்று சொல்லுவர் சான்றோர்: மற்று மடியானது தன்னிடத்து இல்லாதோனது தாளாண்மை இடத்தாள் திருமகள் எ—று.

உ) பரிமேல்.: கரியசேட்டை[2] ஒருவன் மடியின்கண்ணே உறையும்; திருமகள் மடியிலாதானது முயற்சிக்கண்ணே உறையும் என்று சொல்லுவர் அறிந்தோர்.

பாவத்தின் கருமை அதன்பயனாய முகடிமேல் ஏற்றப்பட்டது[3]. மடியும் முயற்சியும் உடையார்மாட்டு நிலையை அவைதம்மேல்[4]

1. மாமுகடி—கரிய நிறம்பொருந்தியவளான மூதேவி.
2. சேட்டை—மூத்தாள் ஜ்யேஷ்டா என்னும் ஆரியச்சிதைவு; இவள் தேவர்கள் பாற்கடலைக் கடைந்த காலத்து பாற்கடலிலிருந்து வெளிப்பட்ட சிதேவி முன்னே தோன்றியவளாதலின் மூத்தாள் எனப்பட்டாள், மக்களுக்குச் சோம்பலைத் தரும் தெய்வமாவாள். கருமை நிறமும், பாம்பு அணியும், கழுதை வாகனமும் காக்கைக் கொடியும் உடையவள்- இவள் ஆயுதம் துடைப்பம்.
3. பாவம் கருமை நிறமுடையது எனல் கவிமரபு; பாவங்கள் அறியாமையால் செய்யப்படுவன ஆதலால், அறியாமையின் நிறம் கருமை அது அதன் காரியமாகிய பாவத்திற்கும், பாவத்தின் கருமை அதன் பயனாகிய முகடியின் மேலும் ஆயின இஃதோர் உபசார வழக்கேயன்றி ஆகுபெயராகாதென்க.
4. அவைதம்மேல்—மடியும் முயற்சியுமாகிய இவை தம்மேல்;

வைத்துக் கூறினார். இவை இரண்டு பாட்டானும் அவ்விருமைக்கும் ஏது[6] கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்:* மடியுடையவனிடத்திலே மூதேவி இருப்பள்; மடியில்லாதானது முயற்சிக்கண்ணே மகாலட்சுமி விட்டுப் போகாமல் இருப்பாள் எ—று

எ) *பழைய 2:* 'மடியுளான்' பாடம், சோம்புதலுடையான் பெரிய மூதேவியாம்; சோம்புதலில்லாதவன் தொழிலினிடத்தே யிருப்பாள் தாமரையினாள்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

வரதராசனார் கண்ட திருக்குறள் மூலத்தில் 'முடியுளாள் மாமுகடி என்ப' என்ற தவறான-அதிகார இயைபுக்கு ஒவ்வாத பாடம் இருந்திருக்கும் போலும். அதனால் அவர் 'சோம்பலையுடையவனது தலையிலே மூதேவியிருக்கிறாள்' என உரை கண்டார்.

மடியென்பது மடி என்னும் உறுப்பிற்கும், சாம்பற்கும் பெயராதலும் 'தாள்' என்பது காலுக்கும் முயற்சிக்கும் பெயராதலும் ஆகிய இயைபு இனிமை பயப்பதொன்று. ''அசந்து நடப்பவன் அடிமடியில் அக்கா; கடுகி நடப்பவன் காலிலேயே சீதேவி'' என்ற *பழமொழியுங்* காண்க.

(ஒ) ஒப்புமைப்பகுதி:

மடியிலான்தாள் உளான் தாமரையினாள்:

மடியிலான் செல்வம் போல் மரனந்த —*கலி*

மடியிலா அரசினாள் மார்புளா ளோவளர்
முடியுளா ளோதெரிந் துணர்கிலா முளரியாள்
— *கம்ப., எதிர்கோட்.,8*

ஆக்கமிங் கொருவரால் அணுக வேண்டுமேல்
ஊக்கமுண் டாவரேல் உறுவர் அன்னது
நீக்கமில் கொள்கையின் நிற்ப ரேனின்
மேக்குறு பெருந்திரு விரைவின் மேவுமால்
—*கந்த., மாயையுப 13*

5: அவ்விருமை—செல்வமும் வறுமையுமாகிய இரண்டு.
6. ஏது — செல்வத்திற்கு ஏது முயற்சி 3. வறுமைக்கு ஏது மடி எனக்கொள்க.

... . தாமரைப்
பொன்னுந் தானுமோர் தேர்மிசைப் போயினான்
—கம்பராமா., 1929

ஒருபுடை:

நேரொ டுங்கலிற் பகையினை நீதியால் வெல்லும்
சோர்வி டம்பெரு வுணர் வினன் சூழ்ச்சியே போலக்
காரொ டுந்தொடர் கவட்டெழின் மராமரக் குவட்டை
வேரொ டுங்கொடு கிரியென நடந்ததோர் வேழம்.
—கம்பராமா., 899

செய்வினை மடிந்தோர்ச் சேர்ந்துறை விலளே
மையறு தாமரை மலர்மகள் —பெருங்.2:17;39—40

62.8. பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந் (து) ஆள்வினை இன்மை பழி. (கூகஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: யார்க்கும் புண்ணியமின்மை[1] குற்றமாகாது அறியத்தகுவன அறிந்து முயற்சியில்லாமையே குற்றமாவது எ—று.

அறிவு—காரிய அறிவு. புண்ணியமில்லாதார் முயன்றால் வருவது உண்டோ என்றார்க்கு, இது கூறப்பட்டது,

ஆ) பரிதி.: மெய் வாய் கண் மூக்குச் செவி குறைந்தது பங்கமல்ல;[2] அறிவின்மை பங்கம் எ—று.

இ) பரிப்.: யாவர்க்கும் புண்ணியம் இன்மை குற்றம் ஆகாது அறிவன அறிந்து முயற்சி இன்மையே குற்றம் ஆவது எ—று.

அறிவு காரிய அறிவு. புண்ணியம் இல்லாதார் முயன்றால் வருவது உண்டோ என்றார்க்குக் கூறப்பட்டது.

ஈ) காளி.: தாம் ஒரு கருமத்தை முயலின், அது விதிவழி இடத்தால் தமக்கு ஆக்கம் இல்லாமை மன்னவர்க்கும் மற்று யாவர்க்கும் பழியாவது அன்று: மற்று யாதோ பழியாவது எனின், தமக்குச்

1. பொறி என்பது ஊழ்வினையின் பெயர். அது ஊழின் விளைவாகிய புண்ணியத்திற்கு ஆனது
2. பங்கம்—குறை

செய்யத்தகுவதாகத் தாம் அறியும் கருமம் யாது: அதனையே குறிக் கொண்டு அறிந்து மற்று அதன்கண் முயல்வது ஓர் முயற்சி இல்லா மையே எ—று.

பொறி இன்மை என்பது விதி இல்லாமை என்றது.

உ) *பரிமேல்.*: பயனைத் தருவதாய விதிப்பில்லாமை[3] ஒருவற்கும்[4] பழியாகாது; அறிய வேண்டுமவற்றை அறிந்து வினைசெய்யாமையே பழியாவது.

அறியவேண்டுவன-வலி முதலாயின.[5] தெய்வம் இயையாவழி ஆள் வினையுடைமையால் பயனில்லை என்பாரை நோக்கி. உலகம் பழ வினை[6] பற்றிப் பழியாது ஈண்டைக் குற்றமுடைமை பற்றியே பழிப்பது என்றார்;[7] அதனால் விடாது முயல்க என்பது குறிப் பெச்சம்.[8]

ஊ) *கவிராசர்*: பலனைத் தருவதாய விதியில்லாதது ஒருவற்கும் பழியன்று; அறியவேண்டுமவற்றை அறிந்து காரியஞ் செய்யாததே பழியாவது எ—று.

எ) *பழைய 2*: செல்வந் தருவதாய பொறி இல்லாமை ஒருவற்குப் பழியாகாது; அறிய வேண்டுவனவற்றை அறிந்து தொழில் செய்யா மையே பழியாவது.

மல்லர்: காரியங்களை முடிக்கிறதுக்கேத்த அறிவில்லாமல் போறது ஒருவருக்குங் குற்றமல்ல. அறியத்தக்க வேண்டியதெல்லாம் அறிந்து காரியங்களைச் சோம்பலினாலே முடியாமல் போறது குற்றம் என்றவாறு.

கூர்மையான புத்தியவனவனுக்கு ஆண்டவர் குடுத்தால் உண்டு. மற்றபடியவனுடைய மனசிலே வராது சோம்பலும்பிறை யாசமும். அவனவனுடைய மனதினாலே வருவது சோம்பலும் பிறையாசமும் ஆனபடியினாலே கூர்மையான புத்தியில்லாதவன் ஒரு காரியத்தை

3. விதி—முனமுன் பிறவிகளிற் செய்த நல்வினை தீவினைகளின் காரியமாய் ஒவ்வொரு வனுடைய நுகர்ச்சிக்கும் வரையறுக்கப் பெற்றவை.
4. 'எவர்க்கும்'' — பாடபேதம்.
5. வலிமுதலாயின என்றதால் காலம் இடம் முதலியனவும் கொள்க.
6. பழவினை -- முன்செய்த கன்மவினைகள், இதனைச் சஞ்சிதம் என்பர்;
7. பழிப்பதென்பார் எனவும் பாடம்.
8. அதனால் — ஆள்வினையின்மை பழி என்றதனால். குறிப்பெச்சம் — குறிப்பாக எஞ்சிநிற்பது. ஈண்டு 'விடாது முயல்க' குறிப்பான் எஞ்சி நின்று உரைப் படுவதாயிற்று:

முடிக்கிறதுக்கு வேண்டிய பிறை பாசைப் பட்டாலும் புத்திக்குறையி னாலே அந்தக் காரியத்தை முடிக்காதே போனால் அவன் பேரிலே குற்றமில்லை. வேண்டியறிவு பெற்றவன் தன்னுடைய சோம்பலி னாலே காரியத்தை முடிக்காதே போனால் அந்தக் காரியம் முடியாத குற்றம் அவன் பேரிலே நிக்கும் என்பது கருத்து.

பொறி—அறிவு, அன்மை—இல்லாமை, யாரும்—எல்லாரும், பழி—நற்றம், இன்று—அல்ல, ஆள்வினை—முயற்சி.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'பொறி' 'புண்ணியம்' *மணக்*, 'மெய் முதலிய ஐம்பொறி களும்' *பரிதி*. 'விதியில்லாமை' *காளி., பரிமேல்., கவிராசர்.*. விதி என்பது ஒருவன் செய்த புண்ணிய பாவங்களின் பயனாக விளையும் விதியாதலின் காரண காரியத் தொடர்பால் ஒரு கருத்தினதேயாம். ஐம்பொறிகளை எண்ணுதல் ஈண்டு இயைபின்று. 'பொறி—அறிவு' *இராம.*, 'செல்வமில்லாமை' குழந்தை; அறிவு, செல்வமின்மை என்ற பொருள்களும் இதற்கு நேரான பொருளன்று பொறி ஐம்பொறிகளின் பொதுப் பெயர். அது அவற்றால் அறியப்படும் அறிவுக்காயது. அங்ஙனமே பொறி—ஆகூழ்; அது ஆகூழான் ஆகிய செல்வத்திற்குப் பெயராயிற்று. பொறியின்மை உறுப்புக் குறைபாடு' என்பர் சி.இ. பொறி என்பது அறிகருவிகளாகி உறுப்புக்குப் பெயராமேயன்றிப் பொதுவான உறுப்புக்களுக்கு ஆகாது. இவை யனைத்தையும் எண்ணின் பழைய உரைகளே சிறந்தன. 'அறிவ றிந்து ஆள்வினை' என்பதற்கும் 'அறியாமை' எனப் பொருள் கண்டவர் *பரிதி* இதுகருத்து ஆகலாம் பொருள் ஆகாது.

(ஒ) ஒப்புமைப்பகுதி:

பொறியும் ஆள்வினையும்:

கூட்டமுற் றிருந்த வீரர் குறித்ததோர் பொருட்கு முன்னாள்
ஈட்டிய தவமும் பின்னர் முயற்சியும் இயைந்த தொத்தார்

—*கம்பராமா:*, 390.

பொறியின்மை யார்க்கும் பழியன்று:

இம்மியென நுண்பொருள்க ளீட்டிநிதி யாக்கிக்
கம்மியரும் ஊர்வர்களி றோடைநுதல் சூட்டி

அம்மிதந் தாழ்ந்துகரை வீழ்ந்ததறஞ் சால்கென்று
உம்மைவினை நொந்துபுலந்து ஊடலுணர் வன்றே

சீவக.,495

நேரொ டுங்கலிற் பகையினை நீதிபால் வெல்லும்
சோர்வி டம்பெறா வுணர்வினன் சூழ்ச்சியே போலக்
காரொ டுந்தொடர் கட்டெழின் மராமரக் குவட்டை
வேரொ டுங்கொடு கிரியென நடந்ததோர் வேழம்
—கம்பராமா., 899

வென்றி பாய் விதியின் தன்மை பழியல... ... —கம்பராமா., 3534

வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பில்
தூங்கும் எயிலும் தொலைத்தலால் — ஆங்கு
முடியும் திறத்தால் முயல்கதாம் கூரம்(பு)
அடி இழுப்பின் இல்லை அரண் —பழ.நா.

ஆம் பொருள்க ளாகு மது யார்க்கு மழிக்கொண்ணா
போம் பொருள்கள் போகுமது பொறியின் வகை வண்ணம் —சீவக.

எண்ணியொரு கருமம் யார்க்கும் செய்யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லால் —நல்வழி

முற்றும்:

முயற்சிக்குப் பயனின்றாதல் ஊழ்வலியானாம்; அதுபற்றி
முயற்சி குற்ற முடையது ஆகாது —சுக்கிர. அத்,1,சு,386

62.9. தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும். (சுகக)

உரைப்பகுதி:

அ) **மணக்.:** புண்ணியம் இன்மையால் ஆக்கம் இல்லையாயினும் ஒருவினையின் கண்ணே முயல்வனாயின், முயற்சி தன்னுடம்பினால் வருந்திய வருத்தத்தின் அளவு பயன் கொடுக்கும் எ—று.

இது புண்ணியமில்லையாயினும், பயன் கொடுக்கும் என்றது.

ஆ) **பரிதி.:** தெய்வ சகாயத்தினாலேயாகிற[1] காரியம் தன் முயற்சியாலே ஒன்று பாதி பலிக்கும் எ—று.

1. சகாயம் — துணை

இ) *பரிப்.*: புண்ணியம் இன்மையான் ஆக்கம் இன்று ஆயினும் ஒரு வினையின் கண்ணே முயல்வன் ஆயின், முயற்சி தம் உடம்பினான் வருந்திய வருத்தத்து அளவு பயன் கொடுக்கும் எ—று.

இது புண்ணியம் இன்மை ஆயினும் பயன்படும் என்றது.

ஈ) *காரி.*: இவ்வுலகத்து ஒருவர்க்கு விதியினால் சிலகாலம் ஆக்கம் இலதாயினும் இருந்தேயாயினும் பின்பு குறிக்கொண்டு முயல்வான் ஆயின், அம்முயற்சிதானும் விதியினால் விளைவது ஆகலின், மற்று இதுவும் தம் மெய்வருத்தத்தால் உள்ள பலத்தினை இறுதிக்கண் கொடுக்கும் எ—று.

உ) *பரிமேல்.*: முயன்றவினை பால்வகையால் கருதிய பயனைத் தராதாயினும், முயற்சி தனக்கு இடமாய உடம்பு வருந்திய வருத்தத் தின் கூலியளவு தரும்; பாழாகாது.

தெய்வத்தானாயவழித் தன்னளவின் மிக்க பயனைத் தரும் என்பது உம்மையால்[2] பெற்றாம். இருவழியும்[3] பாழாகல்[4] இன்மை யின் தெய்வநோக்கி யிராது முயல்க என்பது கருத்து.

ஊ) *கவிராசர்*: முயன்ற வினை விதிவகையால் நினைத்தபடிக்குப் பலன் தாராவிட்டாலும், முயற்சியினாலே தன் உடம்பு வருந்தினால் கூலியாகிலும் வரும்; விருதாவாய்ப்[5] போகாது எ—று.

ஏ) *பழைய 2*: 'மெய்வருந்தக் கூலி தரும்' பாடம், முயன்ற தொழில் விதிவகையாற் கருதிய பயனைத் தாராது எனினும், முயற்சி தனக்கிடமாகிய உடம்பு வருந்திய வருத்தத் தினளவு கூலி தரும்.

தொகுப்பும் குறிப்பும்:

'தெய்வம்' 'புண்ணியம்' மணக்.; 'தெய்வசகாயம்' *பரிதி.*; 'வினை' *காளி.*; 'வரையறை' *கா.சு.*; 'இயற்கைச் சூழ்நிலை' *சி.இ.*; 'ஊழ் அதாவது உலகியலின் இயற்கைச் சூழ்நிலை' என்பர் குழந்தை. இவருள் ஊழ்வினையை ஒப்பாதவர்களும், அதனை யொத்து உரை தருபவர்களும் என ஆசிரியர் கொள்கை வகையான்

2: உம்மை — எதிர்மறை யும்மை

3. முயற்சி ஊழ்வகையால் கருதிய பயனைத் தந்தவிடத்தும், தராதவிடத்தும் என்க:

4: பாழாகல்—பயனின்றி வீணாதல், பாழாகலின்மையாவது மேற்கொண்ட வினை ஊழின் துணையால் முற்றுப் பெற்றவிடத்துப் பெரும் பயனைத் தருதலும், ஊழின் தடையால் முற்றுப் பெறாதாயினும் முயற்சியினளவு பயனைத் தருதலும் ஆம்.

5. விருதாவாய் — பயனற்றதாய்

இருதிறப்படுவர். குழந்தை ஊழை ஒத்துக் கொண்டு 'ஊழ்—முறைமை. அது உலகியல் முறைமை' என வேறு விளக்கந்தருவர். எந்தச் சொல்லாற் கூறினும் அது விதியையே உணர்த்துதல் காண்க.

வரத. 'ஊழ் அல்லது தெய்வம் இவற்றால் பெறானாயினும் முயற்சியாற் பெறுக என்றதாம்' என்பர். மு.கோ. 'தேவர் செய்யாமையும் முயற்சி செய்யும்' என்பர். இராம. 'தெய்வாதீனமாக ஒரு காரியம் கைகூடாமற் போனாலும் முயற்சி முயன்ற அளவு கூலி தரும் என்பர். தேவநேயர் 'ஊழ்-தெய்வ ஏற்பாடு' என்பர். தெய்வம் ஒறுக்கிட்டாலும் முயற்சியால் சாதிக்கலாம் என்பது பிற்கால உரைகளின் கருத்து.

இவ்வுரைகளில் விதியின் வலிக்குக் குறை நேராமலும் முயற்சியின் இன்றியமையாமையை விளக்கும் உரைகள் சிறந்தன. வள்ளுவர் விதியின் வலியை ஒப்புங் காலத்தவர்.

விதியுபகாரப்படின் சிறுமுயற்சியான் பெரும்பயனையும் எய்துவன். அஃதிலதாயின் பெரும் முயற்சி சிறு பயனைத் தரும். ஆகவே முயற்சி பயனின்றிக் கழியாது என்பதே இக்குறளின் நோக்கம்.

62.10. ஊழையும் உப்பக்கம்[1] காண்பர் உலைவின்றித் தாழா துஞற்று பவர். (ஈஉ0)

உரைப்பகுதி:

அ) மணக்.; ஒரு வினையை மனத்தில் தளர்வு இன்றி நீட்டியாமல் முயலுமவர், பயன்படாமல் விலக்குகின்ற தீய வினையையும் முதுகு புறங்காண்பர் எ—று.

இஃது ஊழ்தன்னையும் வெல்வர் என்றது.

ஆ) பரிதி.: ஊழினையும் புறங்காண்பான் மனத்தின்கண் தாழ்வின்றி முடியாது முயல்வான் எ—று.

இ) பரிப்; ஒரு வினையை மனத்தில் தளர்வு இன்றியே நீட்டியாமல் முயலுமவர், அது பயன்படாமல் விலக்குகின்ற தீவினையை முதுகு புறம் காண்பர் எ—று.

இஃது ஊழ் தன்னையும் வெல்வர் என்றது.

---

1. உகரச் சுட்டு—எதிர்முகமின்றிப் பின்னிற்கும் பொருளையும் சுட்டும் என்பதற்கு 'உப்பக்கம்' என்பதனைக் காட்டித் திருக்கோவையாரில் 'உங்ஙனே வந்து தோன்றுவனே' என்பதும் அது என்பர் இராமானுசகவிராயர் (நன்னூற்காண்டிகையுரை)

ஈ) *காளி.*: தமது விதிதன்னையும் புறத்து இடுவர் போலும்: யார் எனின் தமக்குத் ததுவதாகிய கருமம் செய்யும் இடத்துக் காலத்தாழ்வு வாராமல் பருவத்தோடு வினை முயலும் வேந்தர் எ—று.

ஊழையும் உப்பக்கம் காண்பர் என்பது விதி தன்னையும் புறத் திடுவர் என்றது.

இனி மற்று இவ்வாறு அரசரானோர்க்கு ஆள்வினையுடைமை அமைந்து ஒழுகவும், நெடும் பொருள் இழத்தல் முதலிய இடுக்கண் வந்துழிச் சிறிதும் நெஞ்சு அழிவுறாமை தமக்கு உளதாக வேண்டுத லான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

உ) *பரிமேல்.*: பயனை விலக்குவதாய ஊழினையும் புறங் காண்பார் அவ்விலக்கிற்கு[2] இளையாது வினையைத் தாழ்வற முயல்பவர்.

தாழ்வறுதல் சூழ்ச்சியினும், வலி முதலிய அறிதலினும் செயலி னும் குற்றம் அறுதல் ஊழ் ஒருகாலாக இருகாலாக அல்லது விலக்க லாகாமையின் பலகான்[3] முயல்வார் பயன் எய்துவர் என்பார், உப்பக்கங் காண்பர் என்றார்.[4] தெய்வத்தான் இடுக்கண்வரினும் முயற்சி விடற்பாலதன்று என்பது, இவை மூன்றுபாட்டானும் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: பலனை விலக்குவதாய ஊழ்வினையையும் புறம் காண்பர், அந்த விலக்குக்கு இளையாமல்[5] வினையை விடாமல் முயல் பவர். எ—று.

ஏ) *பழைய 2*: ஊழின் பயனையும் விலக்குவர், அவ்விலக்கிற்கு இளையாது தாம் தொடங்கிய வினையைத் தாழ்வறச் செய்து முடிப்பவர்.

ஐ) *தொகுப்பும் குறிப்பும்*:

'தெய்வத்தான் ஆகாது' என்ற குறளில் விதியை ஒத்துக் கொள்ளாத குழந்தை இக்குறளில் 'பயனை விலக்கும் என்று கூறப்

---

2. அவ்விலக்கிற்கு—ஊழ்வினை முயற்சியின் பயனை விலக்குதற்கு
3. ஊழ் அதிகாரத்து 'ஊழிற்பெருவலியாவுள' என்பதனோடு முரணாகாமையைக் காட்ட இது கூறியதாம்
4. பல்கால் முயறலாவது மார்க்கண்டேயர் போலவும். சுவேதன் போலவும் விடாது முயலுதலாம
5. இளையாமல் — சலிக்காமல்

படும் விதியையும் வெல்வர்' என்று கூறுவதையும் 'பயனை விலக்கு' மென்பதைப் பிறர் கூற்றாகவும் நோக்குக.

இராம, 'உப்பக்கம் காண்பர் — முதுகு காட்டப் பார்ப்பார்கள் முயல்வானுக்கு முதுகு காட்டி ஊழ் ஓடும் என்பதாம்' என்பர். மு.கோ 'உப்பக்கம் — அடுத்த பிறவி' என்பர். இவருள் ஊழையும் வெல்வர் என்பதே சிறந்தது.

ஊழ் என்பது யாது? அதுவுர் முற்பிறப்பில் மேற்கொண்ட ஆள்வினை புடைமையின் பயன். அது ஊழ்த்துப் பயன் தருங்கால் இப் பிறப்பில் ஆகூழாகவும் போகூழாகவும் இருந்து பயன்மிக அளித்தும், முயற்சிக்குத் தக அளித்தும் உதவும் ஆதலான் ஆள்வினையை மேற் கொள்க என்பது இக்குறளின் முரணாகாத கருத்து.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஊழையும் உப்பக்கங் காண்பர்:

விதியினை விலக்கமாட்டார் மெலிபவே தெளிய நீரார்
— சூளா., 668

உற்றது கொண்டு... ... .
மற்ற வினையின் வந்த தாயினும் மாற்ற லாற்றும்
பெற்றியர் ... ... — கம்பராமா., 1405

விதிக்கும் விதியாகும் என் விற்றொழில் காண்டி.....
— கம்பராமா., 1825

விதிகாயினும் வீரம் வெலற்கரியான் — கம்பராமா., 7863

விதியையும் மதியால் வெல்லலாம் — பழமொழி

முற்றும்:

உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே — உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலும் சுரி — நீதிநெறி., 51

முழுதுடன் முன்னே வகுத்தவன் என்று
தொழுதிரந்தக் கண்ணே ஒழியுமோ அல்லல்
இழுகினா னாகாப்ப தில்லையே முன்னம்
எழுதினான் ஓலைபழுது — பழ. நா.

விடாது தனுவில் செயும்முயற்சி மென்மேற் பொருளை மிகவளர்க்கும்
கெடாது சுற்ற நட்பினர்தம் கிளையும் தாங்கும் யாவர்க்கும்
தடாத உபகா ரம்புரியும் தடந்தா மரையா ளையும் சேர்க்கும்
படாத ஊழ்வந் திடுகாலும் பயனே விளைக்கும் பழியின்றாம்
—விநா. அரசி., 100.

ஒ) மேற்கோள் பகுதி:

சொக்கப்ப.: முயன்றால் ஐந்தலை நாகநன்மணியும் பெறலாம் இத்தரணியிலே; தவஞ்செய்து முயன்றோர்க்கும் எய்துதற்கு அரிதாகிய இவளை நம்முயற்சியால் பெற்றமையான் நாகமணியும் பெறலாம் என்று தம்முயற்சியின் பெருமை கூறினான் என்க. என்னை? 'ஊழையும்..... உளுற்றுபவர்'; இக்குறளில் ஊழான் ஒருவற்கு பேறில்லாவிடினும் முயற்சி ஊழைப்புறங்கண்டு நினைத்தது முடிக்கும் எனக் கூறினாராகலின். (தஞ்சை. 18.)

பலரையுடைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	அருமை	வினைக்கண்	தூவாண்மை என்	தூவாண்மையில்	இன்பம்	முயற்கி	மடியுளாள்	பொறியின்மை	தெய்வத்தான்	ஊழையும்
மணக்.	2	3	5	6	1	7	4	8	9	10
பரிதி.	1	6	2	5	3	4	8	7	9	10
பரிப்.	2	3	10	5	1	6	4	7	8	9
காளி.	1	4	2	5	3	8	6	9	7	10
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

62 - வது அதிகாரம் 'ஆள்வினையுடைமை' முற்றிற்று.

63. இடுக்கணழியாமை

அதிகாரப்பொருள்:

அ) மணக்.: இடுக்கணழியாமையாவது யாதானும் ஒரு துன்பம் வந்துற்ற காலத்து அதற்கு அழியாமை. வினைசெய்யுங்கால்[1] அதனை முடிவு செய்வதன் முன்னர்ச் சில இடையூறு வந்தால் அவற்றைப் பொறுத்துச் செய்கின்ற வினையை முற்ற முயலவேண்டும் என்று அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: இடுக்கண் அழியாமையாவது ஒரு விதனம் வந்தாலும் கலங்காமல் இருக்கும் தன்மை எ—று.

இ) பரிப்.: இடுக்கண் அழியாமையாவது — யாதானும் ஒரு துன்பம் வந்துற்ற காலத்து அதற்கு அழியாமை. வினை செய்யுங்கால் அதனை முடிவு செய்வதன் முன்னம் சில இடையூறு வரும்: வந்தால் அதனைப் பொறுத்துச் செய்கின்ற வினையை முற்றி முயல வேண்டும் என்று அதன்பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது வினையின்கண் முயல்வான் தெய்வத்தானாக, பொருளின்மையானாக. மெய்வருத்தத்தானாகத் தனக்கு இடுக்கன வந்துழி, அதற்கு மனங்கலங்காமை அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

1- 'வினைசெய்யுங்காலத்தினை' பாடம்

ஊ) கவிராசர்: அஃதாவது வினையின் கண் முயல்வான், தெய்வத் தாலாதல் பொருளில்லாததினாலேயாதல் உடம்பு வருத்தத்தானாதல் தனக்கு உபத்திரவம்[2] வந்தால், அதற்கு மனசு கலங்காமல் இருக்கிறது.

ஏ) பழைய 2: அஃதாவது ஊழ்வினை வயத்தால் இடுக்கண் வந்துழித் துன்பப்படாமை.

மல்லர்: அதாவது தனக்கு வந்த துன்பங்களாலும் விக்கினங்களாலுஞ் சலிச்சுப்போகாமலுந் துவக்கின காரியங்களை விடாமலும் இருக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இடையூறால் மனங்கலங்காமை' கா.சு.; 'துன்பம் வந்தபோது மனங்கலங்காமல் இருத்தல்' குழந்தை, சி.இ.; 'இடையூறுகளால் துன்புற்று மனமுடைந்து போகாதிருத்தல்' இராம 'செயலை நடத்தும்போது உண்டாகும் இடர்ப்பாடுகளுக்கு வருந்தாதிருத்தல்' ஜி.வரத.: 'ஆள்வினையில் ஈடுபட்டவன் இயற்கையாலேனும் தெய்வத்தாலேனும் இருவகைப் பகைவராலேனும் வினைக்கு எதிராகத் துன்பங்கள் நேர்ந்தவிடத்து மனங்கலங்காமை' எனப் பரிமேலழகரை ஒட்டித் தேவநேயர் உரைப்பர்.

பொதுவகையான் 'இடையூறுகளுக்குக் கலங்காமை' என்பதை காட்டிலும் இயைபு நோக்கி, 'ஆள்வினை மேற்கொண்டபோது நேரும் இடுக்கண்களுக்கு அழியாமை' எனல் ஏற்புடையது.

63.1. இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத்தூர்வ தஃதொப்ப தில். (சுஉக)

உரைப்பகுதி :

அ) மணக்.: தனக்குத் துன்பம் வந்த காலத்தும் நகுக; அத் துன்பத்தை மேன்மேலும் அடர்க்க வல்லது அந்நகுதல் போல்வது பிறிதில்லை எ—று.

ஆ) பரிதி.: இடுக்கண் வந்த காலத்துக்கு நகுக; அது துன்பத்தை அறுக்கிற அரம் எ—று.

. உபத்திரவம் — துன்பம்.

இ) *பரிப.:* தனக்குத் துன்பம் வந்த காலத்து அதனை இகழ்ந்து நகுக; அத்துன்பத்தை மேன்மேலும் அடர்க்க வல்லது அந்நகுதல் போல்வது பிறிது இல்லை எ—று.

இஃது இடுக்கணுக்கு அழியாமை வேண்டும் என்றது.

ஈ) *காளி.:* உலகத்து அரசரானோர் தமக்கு யாதானும் ஒரு வழியால் இடுக்கண் வந்த இடத்துக் கலங்காது மகிழ்ந்திருக்க; என்னை எனின், மற்று இவ்விடுக்கணினை அடர்த்து மேற்பட்டு நின்று நக வல்லனாயின்; இதனை ஒப்பது ஓர் இன்பம் பிறிது யாதும் இல்லை எ—று..

நகுக என்பது மகிழ்ந்திருக்க என்றது. அதனை அடுத்தூர்வது என்பது அவ்விடுக்கணினை நெருக்கி மீதுபோய் நிற்கவல்லது என்றது.

உ) *பரிமேல்.:* ஒருவன் வினையால் தனக்கு இடுக்கண் வருமிடத்து அதற்கு அழியாது உள்மகிழ்க; அவ்விடுக்கணை மேன்மேல் அடர வல்லது[1] அம்மகிழ்ச்சிபோல்வது பிறிதில்லை யாகலான்.

வினை இனிது முடிந்துழி நிகழற்பாலதாய மகிழ்ச்சியை அதற்கு இடையே இடுக்கண் வருவழிச் செய்யவே, அவன் அழிவின்றி மன வெழுச்சியான் அதனைத் தள்ளி அக்குறை முடிக்கும் ஆற்றல் உடையனாமாகலின், 'அதனை யடுத்தூர்வது அஃதொப்பது இல்' என்றார்.

ஊ) *கவிராசர்.* ஒருவன் செய்த வினையால் தனக்கு உபத்திரவம் வந்தால், அதற்கு மனங்கலங்காது சந்தோஷப்படவேணும்; அந்த உபத்திர[3] வத்தை மேன்மேலும் கெடுக்க வல்லது சந்தோஷத்தைப் போல்வது வேறொன்றில்லையாகலான் எ—று.

எ) *பழைய* 2: ஊழ்வினையால் இடுக்கண்வருமிடத்து அதற்கு அழியாது உள் மகிழ்க; அவ்விடுக்கணைக் கெடுக்க வல்லது மகிழ்ச்சி போலப்பிறிது இல்லை யாதலால்,

ஐ)தொகுப்பும் குறிப்பும்:

'இடுக்கண் வருங்கால்' 'துன்பம் வந்தகாலத்தும் நகுக' என்னும் மணக்குடவர் உரை 'வருங்கால் என்னும் எதிர்கால வினையை

1: அடரவல்லது — நெருக்கிப் பொரவல்லது.
2. அக்குறை — அத்தொழிற்குறையை.
3: உபத்திரவம் — துன்பம்.

இறந்த காலமாக்கிற்று. வருங்கால்—வந்த காலத்தும் என உம்மையையும் விரித்தது. இடுக்கண் நேருங்காலத்து நகை தோன்றாது. இடுக்கண் வருதலால் அசைவு என்னும் மெய்ப்பாடு பற்றி அழுகை தோன்ற வேண்டிய போதும், நகை தோன்றச்செய்க என்ற நயம் பயத்தலின் உம்மை விரித்தெழுதிய *மணக்குடவர்* பாராட்டுக்குரியர்.

காளிங்கர் இக்குறட் கருத்தை அரசற்குரியதாக்குவர். ஏனையோர் மக்கட்குப் பொதுமையாக்குவர், *பரிமேலழகர்*, 'அதனையடுத்து ஊர்வது' என்பதற்குத்தரும் விளக்கம் மிக நயமானது 'இடுக்கண் வருங்கால்' என்பதற்கு 'ஒருவன் வினையால் தனக்கு இடுக்கண் வருமிடத்து' எனத் துன்பம் வருவது பிறன் செய்யும் வஞ்சகத்தால் என்று கருதுகிறார். *மணக்குடவர்* 'தனக்குத் துன்பம் வந்தவிடத்து' எனப் பொதுமையிற் கருதுகிறார். *காளிங்கர்* 'யாதானும் ஒருவழியால் துன்பம் வரும்போது 'என விளக்கந்தருகிறார். *பழையஉரை* 'ஊழ் வினையால் துன்பம் வருங்காலத்து' என்கிறது. *தேவநேயர்* 'இடையில் தடை போலத் துன்பம் வந்தால்' என்பர். ஏனையோர் அனைவரும் 'துன்பம் வரும்போது' எனப் பொதுமையின் உரைப்பர் ''*அடுத்து ஊர்வது*'' 'துன்பத்தை மேன்மேலும் அடர்க்கவல்லது' *மணக்குடவர்*. இவ்வுரைக்கு ''அடர்த்தூர்வது என்ற பாடமேயிருந்திருக்க வேண்டும். *காளிங்கர்* பாடமும் உரையும் இதுவே. இவரது குறிப்பிலும் 'நெருக்கி மேற்பட்டு நிற்க வல்லது' எனல் காண்க.

அறுக்க வல்லது '*பரிதி*; இவர் பாடம் 'அறுத்தூர்வது, என்றிருந்திருக்கும்.

'மேன்மேல் அடர வல்லது' என்றே உரை காணுகிறார்பரிமேல். இவ்வுரையமைதிகளை நோக்கும் போது *பரிமேலழகர் மணக்குடவர்* முதலிய அனைவரும் கொண்டபாடம் 'அடர்த்து' என்றுதானிருக்கக் கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது.

'அடுத்து' என்பதற்கு *இராமலிங்கனார்* 'வென்று' என்று பொருள் கண்டு 'அடுதல்—கொல்லுதல் வெல்லுதலாதலின் வென்று' என்ற பொருளே சிறந்தது என்பர், கொல்லுதற்பொருட்டாகிய 'அடு என்னும் வினைப்பகுதி 'கொன்று' என்னும் பொருளில் அட்டு என்றா' மேயன்றி அடுத்து என வருமா? என்பது ஐயுறுதற்குரியது[1]. ஆதலால் இவ்வுரை ஏலாது.

1— 'அடு' என்னும் பகுதியடியாக 'அடுத்து' என்னும் வினை எச்சம் பிறவாமையை அட்ட—மதுரைக்' 295, கலி, 91. முதலாகப் பலவேறு வினை வேறுபாட்டான் சங்க காலச் சொல்லாட்சிகளை எமது சங்க இலக்கியச் சொற்களஞ்சியங் கொண்டு தெளிக

வரத. 'அடுத்து—தடுத்து. ஊர்வது—அதன் மேற்செல்வது' என்பர்.

குழந்தை ,அடுத்தூர்வது' என்பதனை ஒரு சொன்னீர்மைய தாக்கி 'மேன்மேலும் எதிர்க்க வல்லது' என்பர்.

கா. சு. 'கடப்பது' என்பர்

மு.கோ. 'அடுத்துக் கெடுப்பது என்றும் 'துன்பத்தை யடுத்துள்ள இன்பத்தில் ஊர்தல் என்றும் உரைப்பர். இவற்றுள் சிலர் உரைகள் முன்னோர் உரையினும் புதுமை காணும் முனைப்போடு சிந்திக்கப் பெற்றனவாதல் தெளிவு. அதனாலே அவை வலிந்து கோடலாகி யுள்ளன.

ந.சி.க. 'துன்பத்திற்குப் பின் இன்பம் வருதலை எண்ணி நகுக' என்ற உரை சிறப்பின்மை உணர்க.

சிலர் 'அடுத்தூர்தல்' என்பதற்கு 'அடர்த்துக் கெடுத்தல்' எனவே பொருள் கண்டிருக்கலாம் அடுத்தல்—மேன்மேலும் ஒன்றன்மேல் ஒன்றாக அடுத்து அடர்த்தல் என்று எண்ணியிருப்பர் போலும் ஆயினும் அடத்தூர்வது நேரிய சொல்லாட்சியாகிறது. எண்ணிப் பார்க்க.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்பதற்கு 'எதிர்த்து வரும் பகைவனை எள்ளி நகையாடுதல் போல, வினைக்கு இடையூறாக வரும் துன்பத்தையும் பொருட் படுத்தற்க; நகுக என்ற நயம் மிக விளக்கம் தருவது. அடுத்தூர்தல் அடங்காத ஓடாத குதிரையை நெருங்கி ஏறியடக்குதல் போல்வது' என்பர்.

ஆகவே 'பல் வேறு வழிகளான் துன்பம் வருங்காலத்தும் நகுக; அத்துன்பத்தை அடர்த்து மேலோங்கி நிற்பது அந்நகை போன்ற தொரு கருவி பிறிதில்லை' என்னும் பொருளே இவ்வுரைகளின் இணைப்பாற் கொள்ளத்தக்கது.

துன்பமும் இன்பமும் உடல்கொள் உயிர்கட்குள்ள இயல்பான குணங்கள்; ஒன்று மேவி உள்ளத்தைத்தனதாக்கிக் கொள்ள, மற் றொன்று மறைந்து மாறுமேயன்றி அழிந்தே போகாது. ஆதலால் கைப்பின் சுவையை மாற்ற இனிப்பில் தோய்த்து உண்பதுபோல கையைக் கொண்டு துன்பத்தை வெல்கஎன்பதே பொருள்.

(ஒ) ஒப்புமைப்பகுதி:

இடுக்கண் வருங்கால்:

இடுக்கண்வந் துறவும் எண்ணா தெரிசுடர் விளக்கி னென்கொல்
நடுக்கமொன் றின்றி நம்பால் நதுபொருள் கூறுக —யாசோ.,62

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின் புயங்கண்தானே புத்திவைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையும் இனியோரிடையூறடையாமே
—திருவா.,608

முற்றும்:

இடுக்கண்வந் துற்ற காலை எரிகின்ற விளக்குப் போல
நடுக்கம்ஒன் றானும் இன்றிநகுகதானீ நக்க போழ்தவ்
இடுக்கணை அரியும் எ:காம் இருந்தழு தியாவர் உய்ந்தார்
வடுப்படுத் தென்னை ஆண்மை வருபவந் துறுங்கள் அன்றே
—சீவக., 509

எடுத்த கருமம் முடிவதன்முன் எய்தும் தெய்வத் தானாக
தொடுத்த முயற்சி யாலுடலில் தோன்றும் வருத்தத் தானாக
மடுத்த பொருள்இன் மையினாக மைந்தா அடுக்கி வந்திடினும்
இடுக்கண் தனக்குள் அழியற்க இன்பம் அதுவே எனத்தெளிக
—விநா. அரசி.,101

ஒருபுடை:

நம்நாட்டிற்கு அப்பால் ஆறைங் காதமே —சிலப்.

நெளிந்துறை புழுவை நீக்கி நறவுண்டு நிறைகின் றேறல்
கம்பராமா., 4464

இடுக்கண் வருங்கால் நகுக:

சிரிக்கத் தெரியாதவன் பிழைக்கத் தெரியாதவன் —பழமொழி

63.2. வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். (கூஉஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: வெள்ளம் போன்ற துன்பம், அறிவுடையவன் நெஞ்சினாலே வினைப்பயன் என்று நினைக்கக் கெடும் எ—றி.

இது பலவாய் ஒருங்கு வரினும், அறிவுடையான் உற்ற இடுக்கண் கெடும் என்றது.

ஆ) *பரி தி.*: வெள்ளம் போல வந்த துன்பம் அறிவுடையவன் உத்தியோக அக்கினியினாலே[1] கெடும் எ—று.

இ) *பரிப்.*: வெள்ளம் போன்ற துன்பம் அறிவுடையவன் தெஞ்சினானே வினைப்பயன் என்று நினைக்கக் கெடும் எ—று.

இது பலவாய் ஒருங்கு வரினும் அறிவுடையான் உற்ற இடுக்கண் கெடும் என்றது.

ஈ) *காளி.*: அளவுபட்டது அன்றிக் கடல் போன்ற இடுக்கண் ஆயினும், அறிவுடையாளராகிய அரசர் தம் அறிவினால் உள்ளத்து உணர்ந்து யாம் முன்செய்த வினைப்பயனே எய்திய இன்பமும் இடரும் ஆகலான், இவை இனிப் பகுத்துக் கோடல் பிறர்க்கு அரிது என்று, இங்ஙனம் உண்மை உணரவே எய்திய இடுக்கண் தானே கெட்டுவிடும் எ—று.

உ) *பரிமேல்.*: வெள்ளம் போலக் கரையிலவாய இடும்பைகளெல்லாம், அறிவுடையவன் தன் உள்ளத்தான் ஒன்றனை[2] நினைக்க, அத்துணையானே கெடும்.

இடும்பையாவது உள்ளத்து ஓர்கோட்பாடே[3]யன்றிப் பிறிதில்லை என்பதூஉம் அது மாறுபடக் கொள்ள நீங்கும் என்பதூஉம் அறிதல் வேண்டுதலின், அறிவுடையான் என்றும், அவ்வுபாயத்து எண்மை[4] தோன்ற உள்ளத்தின் உள்ள என்றும் கூறினார். இவை இரண்டு பாட்டானும் ஊழினானாய இடுக்கணால் அழியாமைக்கு உபாயம் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: வெள்ளத்தைப் போல அளவில்லாத துக்கங்களெல்லாம், அறிவுடையவன் தன் மனசிலே ஒன்றை நினைத்தவுடனே, கெடும் எ—று.

ஏ) *பழைய உ*: வெள்ளம் போலத் தன்னை அழித்துக் கரைபுரள வரும் இடுக்கணெல்லாம், அறிவுடையான் உள்ளத்தினால் வேறொன்றை நினைக்க நினைத்த போதே கெடும்.

---

1. உத்தியோக அக்கினியாலே—முயற்சித்தியால்; கடல்வெள்ளம்.
2. ஒன்றனை—துன்பத்திற்கு மாறுபட்டது ஒன்றை.
3. கோட்பாடு—மனத்தின் கொள்கை.
4. எண்மை—எளிமை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்.:

''வெள்ளத் தனைய இடும்பை''

'வெள்ளம் போன்ற துன்பம் 'மணக்., பரிப்., பரிதி., பரிமேல், கவிராசர், பழைய, குழந்தை முதலிய அனைவரும்

'சமுத்திரம் போன்ற', 'கடல் போன்ற இடுக்கண்' காளி., இராம., முதலியவர்கள்.

''உள்ளத்தின் உள்ளக் கெடும்''

நெஞ்சினாலே நினைக்கக் கெடும்' மணக்:

''உத்யோக அக்கினியினாலே கெடும்'' பரிதி.; உள்ளம் என்ப தற்கு இடவாகு பெயரான் ஊக்கம், முயற்சி என்பனவும் பொருளாகு மாதலின் முயற்சி—உத்தி யோகம் என்றனர் இவர். முயற்சியாகிய அக்கினியாலே துன்பவெள்ளம் கெடும் என்றார் தீயால் நீர் வற்றுதல் இயல்பாதல் கருதி. சிலர் இங்ஙனம் இவர் கூறும் உரையால் 'உள்ளத்தீ உள்ளக் கெடும்' என இவர் பாடம் கண்டிருப்பர் போலும் என்று குறித்தனர். அடுத்து வரும் 'உள்ளக் கெடும்' என்பதற்கியைய 'உள்ளத்தின்' என்ற பாடமே ஆசிரியர் கொண்டதும். உரையாசிரியர் கண்டதும் ஆகும் என்பது துணியலாம். இடுக்கணை வெள்ளம் என்ற மையான் உள்ளத்தைத் தீயென உரையாசிரியரே விரித்தனர். தீயின் வெப்பத்தால் நீர் வற்றி இல்லையாதல் இயல்பாதலின்.

காளிங்கர் 'கடல் போன்ற இடுக்கண்' என்றனர். வெள்ளமும் வடியும், வற்றும். ஆனால் கடல் தன்னீர்மை குன்றுமேயன்றி இல்லையாகாது. அதுபோல வற்றாத கடல் போன்றதாயினும் என இடுக்கண்ணைச் சிறப்பிப்பது வாயிலாக, இடுக்கண்களை மாற்றவோ நீக்கவோ முடியாது; ஆனால் தீதும் நன்றும் பிறர் தர வந்தனவன்று; பழவினைப்பயன்; அதனை நுகர்ந்தேயாதல் வேண்டும் என அமைதியை எண்ணி ஆறுதல் அடையலாம் என்கின்றார்.

பரிமேலழகர் 'துன்பம் இன்பம் என்பன மனத்தின் கோட்பாடே யன்றிப் பிறிதில்லை என எண்ணுதலால் மாற்றலாம்' என்பர்.

இராம. 'மனவுறுதியினால் துன்பங்களை வெல்லலாம்' என்பர். 'மனத்தில் நினைத்தவுடனே கெடும்' எனச் சொற்பொருள் விரிப்பர். 'உள்ளத்தின்'' என்ற ஏதுப் பொருட்டாகிய இன் உருபை, இடப் பொருட்டாகிய 'இல்' எனக் கோடல் இயைபிலதாம்.

குழந்தையும் 'உள்ளத்தான் துன்பை இன்பாக எண்ணத் துன்பங் கெடும்' எனப் பரிமேலழகரை ஒட்டியுரைப்பர்.

தேவநேயர் 'வெள்ளம்போல ஏராளமாக வந்த இடுக்கண்' என வெள்ளம் அம் ஈற்றுப் பேரெண்ணின் பெயராகக்கொண்டு 'ஏராள மாக' என்றனர். 'வெள்ளம் அளவினதான துன்பமும் ஒன்றும் இல்லை என மனத்தால் எண்ணக்கெடும். இது ஒரு நொடி நேர நினைவே' என்பர்.

வரத. 'வெள்ளத்தனைய இடும்பை—வெள்ளம் அத்தனை அதிகமான துன்பங்கள் உள்ளம்—ஊக்கம்' என்பர்.

கா.சு. 'உள்ள துன்பங்களை நீக்கும் எளிய வழியை எண்ணி' என்பர். 'தன் குறிக்கோளை நினைக்க' என்பர் சி.இ.; 'ஒன்றை இன்பமாக நினைத்த அளவில்' என்பர் சபாபதி.

மு.கோ. 'பிறவிப் பெருங்கடல் இறைவனடியை உள்ளக்கெடும்' எனவும் ஒரு கருத்துரைப்பர். இது ஈண்டு வேண்டப்படுவதொன்றன்று.

ஆதலால், எல்லையற்ற துன்பங்களும் மனத்தால் நினைத்துப் பார்க்கக் கெடும் என்பது கருத்தாயினும் எப்படி நினைக்க என்பதி லேயே ஆசிரியர்கள் மாறுபடுகின்றனர். 'ஒன்று நன்று உள்ளக்கெடும் என்பதுபோல இன்பம் ஒன்றை எண்ணை' என்ற பரிமேலழகர் உரையும் ஏற்புடையதாகும்.

(ஒ) ஒப்புமைப்பகுதி:

வெள்ளத்தனைய இடும்பை:

என்றும் சனனத் திடர்க்கடலி லேமுழ்கிப்
பொன்றுமன மே உனக்கோர் புத்திகேள் —சிவபோ., 12

முற்றும்:

முற்றுநீ ருலக முற்றும் விழுங்குவான் முழங்கி முந்நீர்
உற்றதேயெனினு மண்ட முடைந்துபோ யுயர்ந்த தேனும்
இற்றைநும் மருளு மெங்கோ னேவலு மிரண்டு பாலுங்
கற்றைவார் சிறைக ளாகக் கலுழனிற் கடப்பல் காண்டிர்.
—கம்பராமா., 4841

சொற்றார்கள் சொற்றதுணை பல்தொகைய தன்றோ
முற்றா முடிந்தநெடு வானினிடை முந்நீர்

இற்றாவி யெற்றெ னினும் யானினி யிலங்கை
உற்றால் விலங்குமிடை யூறென வுணர்ந்தான்
—கம்பராமா., 4934

ஊறுகடி தூறுவன வூறிலற முன்னாத்
தேறலி லரக்கர்புரி தீமையவை நீரார்
ஏறுவலை யிங்குளதி ராமவென வெல்லாம்
மாறுமதின் மாறுபிறி தில்லென மதித்தான் —கம்பராமா., 4935

63.3. இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக் (கு) இடும்பை படாஅ தவர். (கூஉ கூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: துன்பத்திற்குத் துன்பத்தைச் செய்வார், அத்துன்பத் திற்குத் துன்பம் உறாதவர் எ—று.

இது பொறுக்க வேண்டும் என்றது; இவை மூன்றும் பொதுவாகக் கூறப்பட்டன.

ஆ) பரிதி.: துன்பம் வந்தால் துன்பம் அதற்கு இடுவர்; துன்பம் வந்தாலும் துன்பப் படாதவர் எ—று.

இ) பரிப்.: துன்பத்துக்குத் துன்பத்தைச் செய்வர்: அத்துன்பத்துக் குத் துன்பம் உறாதவர் எ—று.

இது பொறுக்கவேண்டும் என்றது. இவை மூன்றும் பொதுவாகக் கூறப்பட்டன.

ஈ) காளி.: யாதானும் ஒருவாற்றான் வந்து எய்திய இடும்பைக்குத் தாம் பெரிதும் இடும்பையைச் செய்வார்: யார் எனின் அங்ஙனம் எய்திய இடும்பைக்கு இங்ஙனம் தெளிந்து தாம் சிறிதும் இடுக்கண் உறாத இகல்வேந்தர் எ—று.

உ) பரிமேல்.: வினை செய்யுங்கால் அதற்கு இடையே வந்த துன்பத்திற்கு வருந்தாதவர் அத்துன்பந் தனக்குத் தான் துன்பம் விளைப்பர்.

வருந்துதல்—இளைத்து விட நினைத்தல்.[1] மனத்திட்பம் உடைய ராய் விடாது முயலவே வினை முற்றுப்பெற்றுப் பயன்படும்; படவே,

1. விட நினைத்தால்—மேற்கொண்ட தொழிலை இடையில் விட நினைத்தல்.

எல்லா இடும்பையும் இலவாமாகலின், இடும்பைக்கு இடும்பை படுப்பர் என்றார். வருகின்ற பாட்டு இரண்டினும்[2] இதற்கு இவ்வாறே கொள்க. சொற் பொருட்பின் வருநிலை[3].

ஊ) கவிராசர்: ஒரு காரியத்தைச் செய்கிற காலத்திலே அதற்கு வந்த துன்பத்திற்கு வருந்தாதவர் அத்துன்பத்துக்குத் தாங்கள் துன்பம் விளைப்பர் எ—று.

ஏ) பழைய2: 'இடும்பைப் படுப்பர்' இடும்பைப் படாஅதவர், பாடம், வினை செய்யுமிடத்தில் வந்த துன்பத்துக்கு வருந்தாதவர், துன்பந் தனக்குத் துன்பம் விளைப்பர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இவை மூன்றும் பொதுவாகக் கூறப்பட்டது' என்ற மணக்குடவர், பரிப், உரைக்குறிப்புக்கள் இவ்வதிகாரம் அரசியலில் இடம் பெற்றிருந்தாலும் இடுக்கணழியாமையைப் பற்றிக் கூறும் இம்முதல் மூன்று பாக்களும் அரசற்குச் சிறப்பாகவும், மக்களனைவர்க்கும் பொதுவாகவும் கூறப்பட்டது என்னும் கருத்தினதாம்.

காளிங்கர் இக்குறட் செய்தியை மன்னர்க்கே கூறியதாகக் கருதுவர்.

கா.சு. 'இடுக்கண் இடும்பை என்பன இடையூறு என்னும் பொருளன' என்பர்.

வரத. 'இடும்பைக்கு இடும்பை விளைவித்தலாவது இடர்ப்பாடு செய்தவனே ஏன் இவனுக்குத் தீமை செய்தோம் என்று தானே துன்பப்படச் செய்தலாம்' என்பர். இது நல்ல விளக்கம்.

இராம. 'இடும்பை—இடையூறு.'

இடையூறு—வினை செய்யுங்கால் அவ்வினையின் இடையிலே எதிர்ப்படும் தடை. ஊறு—முதனிலை திரிந்த தொழிற்பெயர். உறுவன என்னும் பொருளது. இடையூறால் வினை செய்வாற்கு விளைவது துன்பம் அதாவது இடுக்கண். இடையூறுக்கும் இடுக்கண்ணிற்கும் உள்ள இயைபு காரண காரியத்தொடர்பு. ஆகவே இடை

---

2 "வருகின்ற பாட்டு இரண்டாவன 624, 625 ஆகிய இரண்டும்" இதற்கு ' இடுக்கண் இடர்ப்பாடுடைத்து; இடுக்கண் இடுக்கட்படும் என்ற இரண்டற்கும்.

3 சொல் பொருள் பின்வருநிலை அணி—முன்வந்த சொல்லும் பொருளும் பின்னும் வருதல். இக்குறளில் முன்வந்த இடும்பை' என்னும் சொல் அதே பொருளில் பின்னும் மூன்று முறை வருதல் காண்க.

யூறு என்பார் காரணகாரிய ஒற்றுமைபற்றிக் காரியத்தைக் காரணமாக உபசரித்தனராதல் வேண்டும் என அமையலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

இடும்பைக்கு இடும்பை படும்பர்:

இடையூற்றுக் கிடையூறாய் யான்காப் பென் கம்பராமா., 329

63.4. மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து. (கூஉச)

உரைப்பகுதி:

அ) மணக்.: இடுக்கண் வந்து உற்றவிடத்தெல்லாம் பகடுபோலத் தளர்வின்றிச் செலுத்த வல்லவனை உற்ற துன்பம் இடர்ப்படுதலை யுடைத்து எ—று.

இது தளர்வில்லாதவன் உற்ற துன்பம் கெடும் என்றது.

ஆ) பரிதி.: மேடு என்றும் பள்ளம் என்றும் பாராமல் நடக்கின்ற வண்டில்[1] போலே திடமுடையவன் பக்கல் வந்த இடுக்கண் தானே விதனப்படும் எ—று.

இ) பரிப்.: இடுக்கண் வந்து உற்ற இடத்து எல்லாம் பகடு போலத் தளர்வு இன்றிச் செலுத்த வல்லவனை உற்ற துன்பம் இடர்ப்படுதலை உடைத்து எ—று.

இது தளர்வில்லாதவன் உற்ற துன்பம் கெடும் என்றது.

ஈ) காளி.; தான் சென்று முகம்மடுத்த[2] இடத்து எங்கும் ஏறானது[3] எத்தன்மைத்து, மற்று இத்தன்மைப்பட்ட அஞ்சாத் தறுகண்மையை உடைய அரசனானவன் தன்னைவந்து உற்ற இடுக்கணானது தான் பெரிதும் இடர்ப்பாடு உடைத்தாம் இத்துணையாம் எ—று.

பகடன்னான் என்பதனைக் களிறு அன்னான் என்று உரைத்தலும் ஒன்று

1 வண்டில்—வண்டி
2 முகம் மடுத்தல்—முகத்தைக் கீழே ஊன்றி மண்டியிட்டு இழுத்தல்
3 ஏறு—காளை

உ) *பரிமேல்.:* விலங்கிய இடங்களெல்லா வற்றினும் சகடம்[4] ஈர்க்கும் பகடுபோல வினையை எடுத்துக் கொண்டு உய்க்க வல்லானை, வந்துற்ற இடுக்கண் தானே இடர்ப்படுதலை உடைத்து.

மடுத்தவாயெல்லாம் என்பது பொதுப்பட நின்றமையின், சகடத்திற்கு அளற்றுநிலம்[5] முதலியவாகவும், வினைக்கு இடையூறுகளாகவும் கொள்க. பகடு மருங்கு ஒற்றியும் மூக்கு ஊன்றியும் தாள் தவழ்ந்தும் அரிதின் உய்க்குமாறு போலத் தன் மெய் வருத்தம் நோக்காது முயன்று உய்ப்பான் என்பார் 'பகடன்னான்' என்றார்.

ஊ) *கவிராசர்:* வண்டி விலங்கியவிடத்திலே[7] அதனை விலங்காமல் இழுக்கும் பகடுபோலத் தான் எடுத்துக் கொண்ட காரியத்தை முடிக்க வல்லவனை வந்தடைந்த இடுக்கண் தானே துக்கப்படும் எ—று.

ஏ) *பழைய 2:* வண்டில், நடவாது புதைந்த இடமெல்லாம் அதனை இழுக்கும் பகடுபோலத் தொழில் செய்யுமிடத்து இடுக்கண் வந்தால் அவ்விடுக்கண்ணைத் தவிர்த்துத் தொழில் செய்ய வல்லவனுக்கு இடுக்கண் தானே இடர்ப்படுதலையுடைத்து.

மல்லர் : என்பது பள்ளமான வழிகள் எல்லாத்திலேயும் வண்டிலை இழுக்கிற மாட்டைப்போல் ஒருத்தனுக்கு வருகிற துன்பந்தான் தானே அவனால்அத்துன்பப்படுகிற குணத்தை யுடைத்து என்றவாறு.

ஒருவன் தனக்கு விக்கினம் பண்ணவந்தவனை மிதித்துச் செயித்துத் தன் காரியத்தை முடித்தால் விக்கினம் பண்ணவந்தவன் துன்பப்பட்டு போவான் என்பதாகையில் அரசனுக்கு வருகிற துன்பங்களுக்கும் விக்கினங்களுக்கும் அறிவுண்டானால் அதுகளைச் செயித்து அரசன் தன் காரியத்தை முடித்தால் அதுகள் தானே துன்பப்பட்டுப்போம் என்கிறதைப்பத்தி விக்கினமுள்ள வழிகளிலேயும் பின் வாங்காமல் வண்டிலை இழுக்கிறமாடு செய்கிறாப் போலே அரசனுந் தான் நினைத்த காரியத்தை அழிக்கத்தக்கதாக வந்த துன்பத்துக்குப் பின் வாங்காமல் அதைச் செயித்து தன் காரியத்தை முடித்துக் கொண்டுபோனால் வந்த துன்பத்தைத் தான் ஏத்துக் கொண்டுதுன்பப்படுத்துவான் என்பது கருத்து.

மடுத்த—பலமுள்ள, வாய்—வழி, பகடு—மாடு, அன்னான்—உவமை—யுடைத்தவன், உற்ற — வருதல், இடுக்கண் — துன்பம், இடர்—துன்பம், பாடு—குணம், உடைத்து — உடைத்து,

---

4 சகடம்—வண்டி

5. அளற்றுநிலம்— சேற்றுநிலம்

6. முதலியன என்றது மேட்டுநிலம், மணல்நிலம், களர்நிலம் முதலிய அனைத்தும் என்க

7. விலங்கியவிடத்து — வழி மாறி விலகிய இடத்து' குறுக்கிட்ட இடத்து எனலுமாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'பகடு என்னும் பலபொருள் ஒருசொல்லுக்கு எருது என்றும் களிறு என்றும் பொருள். காளிங்கர் தன்னுரையில் 'ஏறு' என்றும், வேற்றுரையாகக் 'களிறென்றும்' உரைத்தார். களிறு என்ன உதவியது காடுகளில் களிறு சுமையிழுத்ததைக் கண்ட உலகியலறிவு.

காளிங்கரும், பரிமேலழகரும் பிறரும் 'ஏறு' என்றது ''ஆரைச் சாகாட்டாழ்ச்சி போக்கும் உரனுடைய நோன்பகடு'' என்பன போன்ற இலக்கிய உணர்வு. இதனை ஒப்புமைப் பகுதியுட் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கழியுப்பு முகந்து கல்நாடு மடுக்கும்
ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்ம
உரனுடை நோன்பகட் டன்ன எங்கோன் —புறம்.,60:7—9

அச்சொடு தாக்கிப் பாருற்று இயங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய
வரிமணல் ஞெமிரக் சற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ —புறம்., 90:6—9

மடுத்த வாய் எல்லாம் பகடன்னான்:

அள்ளல் தங்கிய பகடுறு விழுமம்
கள்ளார் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே —மதுரைக்259—260

நிரம்பாத நீர்யாற்று இடுமணலுள் ஆழ்ந்து
பெரும்பார ஆடவர்போல் பெய்பண்டம் தாங்கி
மருங்கொற்றி மூக்கூன்றித் தாள்தவழ்ந்து வாங்கி
உரங்கெட்டு உறுப்பழுகிப் புல்லுண்ணா பொன்றும் —சீவக:,2784

குண்டுதுறை இடுமணல் கோடுற அழுந்திய
பண்டி துறை ஏற்றும் பகட்டினைப் போல —பெருங்.,1:53:53—4

உற்ற இடுக்கண் இடர்ப்பாடுடைத்து:

பகையுடை யரக்க ரென்றும் பலரென்றும் பயிலு மாயம்
மிகையுடைத் தென்றும் பூண்ட விரதத்தை விடுது மென்றால்
நகையுடைத் தாகு மன்றே .... —கம்பராமா.,3399

என்றா னென்னாப் பின்னு மிசைப்பானிடர் தன்னை
வென்றா தரன்றே வீரர்க ளாவார் விரவாரின்

தன்றாய் தந்தை தம்மு னெனுந்தன் மையர்முன்னே
பொன்றா னென்றா னீங்குவ தன்றா புகழம்மா **கம்பராமா.,377**

63. 5. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற இடுக்கண் இடுக்கண் படும். (கூஉநி)

உரைப்பகுதி:

அ) மணக்.: மேன்மேலே துன்பம் வந்தனவாயினும், மனனழிவு[1] இல்லாதவன் உற்ற இடுக்கண், தான் இடுக்கண்படும் எ—.

இது மனனழிவு இல்லாதவன் உற்ற துன்பம் மேன்மேல் வரினும் கெடும் என்றது.

ஆ) பரிதி: மேன்மேல் துயரம் வந்தாலும் கலங்காதவனை உற்ற இடுக்கண் துயரப்படும்.

இ) பரிப்.: மேன்மேலே துன்பம் வந்தன ஆயினும் மனன் அழிவு இல்லாதவன் உற்ற இடுக்கண் தான் இடுக்கப்படும் எ—று.

மனன் அழிவு இல்லாதான் உற்ற துன்பம் மேன்மேல் வரினும் கெடும் என்றது.

ஈ) காளி.: நாளும் நாளும் ஒன்று இரண்டு அன்றிப் பல அடுக்கி வரினும் தனது அறிவுடைய நெஞ்சத்தான் அழிவு உறுதல் சிறிதும் இலனாகிய அரசனானவன் தன்னை வந்துற்ற இடுக்கணானது தான் பெரிதும் இடர்ப்படும்; அது அன்றி அவனை இடர்ப்படுத்தல் எஞ் ஞான்றும் இல்லை எ—று.

உ) பரிமேல்.: இடைவிடாது மேன்மேல் வந்தனவாயினும், தன் உள்ளக்கோட்பாடு[2] விடாதான் உற்ற இடுக்கண் தாம் இடுக்கணிலே பட்டுப்போம்.

ஒன்றே பலகால் வருதலும் வேறுபட்டன விராய்வருதலும் அடங்க, அடுக்கி வரினும் என்றார். அழிவு என்னும் காரணப்பெயர் காரியத்தின் மேல் நின்றது[3] இவை மூன்று பாட்டானும் தெய்வத் தானாயதற்கு அழியாமை கூறப்பட்டது.

---

1. மனைழிவு—மனம் உடைதல்
2. உள்ளக்கோட்பாடு—மனக்கொள்கையாகிய தைரியம் அல்லது உறுதி.
3. அழிவு என்னுந் தொழிற்பெயர் காரணப்பெயராய் அழிவால் விளையும் மனக் கலக்கத்தைக் காட்டியது- ஆதலால் கருவியாகுபெயர் என்ப.

ஊ) கவிராசர்: இடைவிடாது மேன்மேலும் இடுக்கண் வந்தன வாயினும், தன் மனசு திடம் விடாதவனுக்கு அந்த இடுக்கண்கள் தாமே கெட்டுப்போம். எ—று.

ஏ) பழைய 2: இடைவிடாது மேன்மேல் வந்தனவாயினும், தன் மனவலிவிடாதானையுற்ற இடுக்கண் தான் இடுக்கண்ணிலே பட்டுப்போம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அழிவிலான்'

'மனனழிவு இல்லாதவன்' மணக். 'நெஞ்சத்தால் அழியாதவன்' காளி; 'உள்ளக்கோட்பாடு விடாதவன்' பரிமேல்; 'ஊக்கத்தை விடாதவன்' கா.சு.; 'தன்குறிக்கோளழியாதவன்' சி.இ ''மனம் சரியாது செயல் செய்யும் பெரியார்'' வரத.; 'மனங் கலங்காதவன்' தேவநேயர். பிறரும் சொல்லால் வேறுபடினும் கருத்தால் ஒத்துள்ளனர்.

பரிமேல். '633—635' மூன்று பாட்டும் தெய்வத்தானாயதற்கு அழியாமை கூறிற்று' என்பர். இவர்க்கு இவ்வெண்ணத்தை நல்கியது 633 குறள் வாளா கூறுவதும், அடுக்கி வருதலும், ஆகிய சொற்களின் பயன் என எண்ணலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி

அழிவிலான் உற்ற இடுக்கண் இடுக்கண் படும்:

இடும்பை யெத்துணை யும்மடுத் தெய்தவும்
குடும்பந் தாங்கும் குடிப்பிறந் தாரினே. —கம்பராமா.6855.

பகையுடை யரக்க ரென்றும் பலரென்னும் பயிலு மாயம்
மிகையுடைத் தென்றும் பூண்ட விரதத்தை விடுதும் என்றால்
நகையுடைத் தாகு மன்றே ... ... கம்பராமா.,3399

உற்ற நின்ற வினைக்கொடும்பிணி ஒன்றின்மேலுட னொன்றுராய்
மற்றுவெம்பிணி பற்றினாலென வந்தெதிர்ந்தது மாரியே
—கம்பராமா.,4322

ஒருபுடை

மனந்தடு மாறேல் —ஆத்தி.,88

63.6 அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்(று)
ஓம்புதல் தேற்றா தவர். (கூஉகூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பொருளற்றேம் என்று இரங்கித் துன்பம் உறார்: அதனைப் பெற்றோம் என்று போற்றிவைத்தலை நன்று என்று தெளியாதவர் எ—று.

ஆ) பரிதி.: பொருளும் கிளையும் அற்றோம் என்று விதனப்படார் பொருளும் கிளையும் நிலையில்லை என்று அறிந்திருப்பார் எ—று.

இ) பரிப்.: பொருள் அற்றேம் என்று இரங்கித் துன்பம் உறார்கள்: என்று போற்றி வைத்தலை நன்று என்று தெளியாதவர் எ—று.

தெளிவு — துணிவு. இது பொருட்கேட்டினால் வரும் துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று.

ஈ) காளி.: யாம் ஈப்பொருள் அற்றேம் என்று கொண்டு அல்லற் படுவார்களோ? படார் அன்றே: யார் எனின் பெரும் பொருள் பெற்றேம் என்று கொண்டு அதனைப் பேணிப் பிடித்தலை அறியாது பலர்க்கு உபகாரம் செய்யும் அரசர் எ—று.

உ) பரிமேல்.: வறுமைக் காலத்து யாம் வறியமாயினேம் என்று மனத்தால் துயர் உழப்பரோ செல்வக் காலத்து இது பெற்றேம் என்று இவறுதலை[1] அறியாதார்.

பெற்றவழி இவறாமை[2] நோக்கி அற்ற வழியும்[3] அப்பகுதி[4] விடாது ஆகலின், அல்லற்பாடு இல்லையாயிற்று. இதனான் பொருளின்மையானாயதற்கு [5]அழியாமையும் அதற்கு உபாயமும்[6] கூறப்பட்டன.

ஊ) கவிராசர்.: வறுமைக்காலத்து 'யாம் வறியமாயினம்' என்று

---

1. இவறுதல் — ஊர்தல்
2. இவறாமை — உலோபஞ் செய்யாமை:
3. அற்றவழியும் — பொருளற்ற காலத்தும்.
4. அப்பகுதி என்றது அமைச்சர் புரோகிதர் சுற்றத்தார் கிநேகிதர் முதலாயினாரை.
5. உள்ளகாலத்து அனைவர்க்கும் கொடுத்திருப்பதால் பொருளற்ற காலத்து அரசனை அமைச்சர் முதலாயினார் விட்டுப்பிரியார். பிரியராகவே பொருளற்ற காலத்துளதாம் துன்பம் இவனை வருத்தாது என்பதாம்
6. அதற்கு — மனங்கலங்காமைக்கு: உபாயமாவது உள்ள காலத்து உலோபஞ் செய்யாது உதவியிருத்தல்.

மனத்திலே விசாரப்படுவரோ? செல்வக் காலத்து ஐசுவரியம் வந்த தென்று சந்தோஷப்படாதபேர் எ—று.

ஏ) பழைய உ: 'அற்றோம்', 'பெற்றோம்' பாடம். வறுமைக்காலம் வந்தால், யாம் வறுமை யாயினேம் என்று மனத்தாற் துயருழப்பரோ' செல்வம் பெற்றோம் என்று வறுமை வாராமற் காக்க மாட்டாதவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி. 'பெற்றேம்' என்பதற்குப் 'பொருளையும் கிளையையும் பெற்றேம்' என்று பொருள் காண்பர். பெறுதற்குரியதும், அதனால் 'பேறு' எனப்படுவதும் பொருளேயன்றிச் சுற்றமன்றாதலின் கிளை யையும் எண்ணுதல் ஆய்வுக்குரியது. ''சுற்றத்தாற் சுற்றப்பட வொழுகல் செல்வந்தான், பெற்றத்தான் பெற்ற பயன்'' ''ஈத்துவக் கும் இன்பம்'' என்பனவும் அற்றேம் என்றல்லற்படாமையை அரண் செய்வன ஆதலால் பெற்றேம் என்று இவறாமைக் காரணங்களும் ஆதல் காண்க.

வரத. 'செல்வம் பெற்ற போது பேணி வாழவறியாதவர் இழந்த போது வருந்தலாமோ எனினும் பொருந்தும்' என்பர். இது இவறன் மையால் தொகுத்து மகிழ்தலை வலியுறுத்துவதாதலின் 'வைத்திழக் கும் வன்கணவர்' என்பதனோடு மாறுகோடலின் இக்குறட்குச் சிறிதும் இவ்வுரை இயையாது என்க. ஏனையோர் உரைப்போக்கு ஈத்து வந்த மகிழ்வால் அதன் விளைவாகிய வறுமைத் துன்பத்தைப் பொருட்படுத்தான்.

இது பொருளின்மை காரணமாக வரும் இடுக்கண்ணிற்கு அழியாமை கூறியது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

> உற்றநின்ற வினனக்கொடும்பிணி ஒன்றின் மேலுட னொன்றுராய்
> மற்றுவெம்பிணி பற்றினாலென வந்ததெதிர்ந்தது மாரியே.
>
> —கம்பராமா.,4322

63.7. இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக் கையாறாக் கொள்ளாதாம் மேல். (சூஉ ஏ)

உரைப்பகுதி:

அ) மணக்.: உடம்பு இடும்பைக்கு இலக்கம்[1] என்று கருதி

1. இலக்கம்—குறி, இலட்சியம்.

தமக்கு உற்ற துன்பத்தைத் துன்பமாகக் கொள்ளார் மேலாயினோர் எ—று.

ஆ) *பரிதி.*: உடம்பு துன்பத்துக்கு இலக்கு என்று துன்பத்தால் துன்பப்பட்டார்; உடம்புக்கு அடுத்த கன்மம்[2] அனுபவிக்கும் என்று எண்ணுவார் எ—று.

இ) *பரிப்.*, உடம்பு இடும்பைக்கு இலக்கு என்று கருதித் தமக்கு உற்ற துன்பத்தை துன்பம் ஆகக் கொள்ளார் கற்று மேல் ஆயினார் எ—று.

மேல் என்றமையால் தவம் செய்யுங்கால் வரும் துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று: அதுவும் ஒருவினை ஆதலான்.

ஈ) *காளி.*: மற்று இவ்வுடம்பானது என்றும் இடும்பைக்கு இலக்கம் என்று இங்ஙனம் தெளிந்து மற்று இது வந்த இடத்து மனம் கலங்குவதோர் கலக்கத்தைத் தமது ஒழுக்க நெறிக்கு உரியதாகக் கொண்டிடார் உணர்வினும் தறுகண்மையினும்[3] பெரிய அரசரானோர். எ—று.

உ) *பரிமேல்.*: நாற்கதியினும்[4] உள்ள உடம்புகள் இடும்பை என்னும் வாளுக்கு இலக்கு என்றும் தெளிந்து' தம்மேல் வந்த இடும்பையை இடும்பையாகக் கொள்ளார் அறிவுடையார்.

ஏகதேசவுருவகம்.[5] உடம்பு — சாதிப்பெயர். கலக்கம் என்றும் காரியப் பெயர் காரணத்தின்மேல் நின்றது. கையாறு என்பது ஒரு சொல்; இதற்கு ஒழுக்கநெறி என்று உரைப்பாரும் உளர்.[6] இயல்பாகக் கொள்வர் என்பது குறிப்பெச்சம்.

---

2. கன்மம் — வினை
3. தறுகண்மை — அஞ்சாமை.
4. நாற்கதி—மக்கள் தேவர் நரகர் விலங்கு என்னும் நால்வகைப்பிறப்பு முதலிய அனைத்தும் அடங்க முட்டையிற்றோன்றுவன, வியர்வையிற்றோன்றுவன, சிழங்கு வித்தை முதலியவற்றிற்றோன்றுவன, கருப்பையிற்றோன்றுவன. இவற்றை வட நூலார் அட்சம், சுவேதசம், உற்விசம் சராயுசம் என்பர், மக்கள் முதலிய நாற்கதிகளும் சுருவிற்றோன்றுவன ஒன்றிலடங்கும். மனதுணர்வுடையன இவையேயாகலின ஈண்டு ஏற்புடைத்து என்க,
5. ஏகதேச உருவகம், உருவகிக்கக் கருதிய இரண்டில் ஒன்றை உருவகித்து மற்றொன்றை உருவகியாது விடுதல் ஈண்டு உடம்பை இலக்காக உருவகித்து, இடும்பையை வாளாக உருவகியாமற் கொள்ளவைத்தமையின் ஏகதேச உருவகமாயிற்று
6. இருசொல்லாகக் கொண்டு ஒழுக்கநெறி எள்பவர் காளிங்கர், ஒரு சொல்லாயின் செயலற்ற தன்மை அதாவது துன்பம் என்பர் பரிமேலழகர்முதலானோர்.

ஊ) கவிராசர்: தேவகதி, மனுஷகதி, விலங்குகதி, நாரககதி என்று சொல்லப்பட்ட நாலுகதிகளிலும் உள்ள உடம்புகள் துக்கமென்னும் வாளுக்கிரையென்று கருதி, தனக்கு வந்த துக்கத்தைத் துக்கமாக நினையார் அறிவுடையார் எ—று.

ஏ) பழைய 2: நாற்கதியிலும் உள்ள உடம்புகள் இடும்பையென்னும் வாளுக்கு இலக்கு என்று தெளிந்து, தம்மேல் வந்த இடும்பையை இடும்பையாகக் கொள்ளார் அறிவுடையோர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

காளிங்கர் இக்குறட்கருத்தையும் அரசர்க்கேயாக்குவர். ஏனையோர் அனைவர்க்கும் ஆக்குவர். இலக்கம்—இலக்கு இலக்கு. என்ற ஒரு சொல்லைக் கண்டு இடும்பையை வாள் என்று கூறி ஏகதேச உருவகம் என்கிறார் பரிமேலழகர்.

‘‘மேல்’’ என்னும் பண்புப் பெயர். அதனையுடைய மேலோரை யுணர்த்தியது எனவும், தவஞ்செய்யும் காலத்து உடலுக்கு நேரும் இடுக்கண்ணிற்கு அழியாமை கூறுவது’ இக்குறள் எனவும் கூறுவர் மணக்குடவர்.

‘கையாறாக் கொள்ளாதாம் மேல்’

‘கையாறு’ ‘துன்பம்’ ‘மணக்.; பரிப்., பரிதி.; ‘ஒழுக்கநெறி: காளி.; ‘இடும்பை’–பரிமேல்.; ‘தளர்ந்து செயலறுதல்’ இராம.’ ‘மேற்கொள்ளுதல்’ வரத.;

இவற்றுள் செயலற்ற தன்மையாகக் கொள்ளார் என்ற பொருளே ஏற்றது. கலக்கத்தை துன்பமாக—இடும்பையாக—ஒழுக்கநெறியாக கொள்ளார் என்பதில் பொருளியைபு இன்மையை எண்ணுக.

ஒ) ஒப்புமைப்பகுதி:

இலக்கம் உடம்பிடும்பைக்கு:

சாதலும் பிறத்தல் தானும் தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலும் அழிவும் எல்லாம் அவைபொருட்கு இயல்பு கண்டாய்
நோதலும் பரிவும் எல்லாம் நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாப் பெய்வளைத் தோளி என்றான்.
—சீவக.,269

யாவதும்துன்பம் மன்னா யாக்கை கொண்டவர் கட்கென்றான் சீவக—

தெரிவுறு துன்பம்வந் தூன்றச் சிந்தையை
இரிவுசெய் தொழியும திழுதை நீரதால் —கம்பராமா.,1035

தீவினைப் பிறவிவெஞ் சிறையிற் பட்டயாம்
நோயுறு துயரென நுடங்க னோன்மையோய் —கம்பராமா.,37

வேதனைக்கிட மாதல்வீரதை யன்றுபேதமையாரோ
—கம்பராமா435;

இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே —நல்வழி

63.8. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான் துன்பம் உறுதல் இலன். (சூஉஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: இன்பமுறுதலை விரும்பாது இடும்பையுறுதலை இயல்பாகக் கொள்ளுமவன், துன்பமுறுதல் இல்லை எ—று.

ஆ) பரிதி.: இன்பம் வந்தாலும் பிரியப்படான்; 'துன்பத்துடனே கூடப்பிறந்தது' என்று துன்பம் வந்தாலும் துயர்ம் உறான் எ—று.

இ) பரிப்.: இன்பது உறுதலை விரும்பாது இடும்பை உறுதலை இயல்பாகக் கொள்ளுமவன் துன்பம் உறுதல் இலன் எ—று.
இடுக்கணை இயல்பாகக் கொள்ள வேண்டும் என்றது.

ஈ) காளி.: மற்று இவ்வாறும் அன்றி ஓர் இன்பம் வந்த இடத்து அதனை விரும்பானுமாய் இடும்பை வருதல் இயல்பு என்று கருதும் இறைவன் எஞ்ஞான்றும் ஒருவாற்றானும் துயரம் உறுதல் இலன் எ—று.

உ) பரிமேல்.: தன்னுடம்பிற்கு இன்பமானவற்றை விரும்பாதே வினையால் இடும்பை எய்துதல் இயல்பு என்று தெளிந்திருப்பான் தன் முயற்சியால் துன்பம் உறான்.

இன்பத்தை விழையினும், இடும்பையை இயல்பு[1] என்னாது காக்கக் கருதினும்,[2] துன்பம் விளைதலின், இவ்விரண்டும்[3] செய்யாதானைத் 'துன்பமுறுதல் இலன்' என்றார்.

1, இயல்பு—கூடப்பிறந்து இயல்பானது.
2' காக்கக் கருதினும் — தடுக்க நினைத்தாலும்
3, இரண்டு—இன்பத்தை விரும்புதலும், துன்பத்தைத் தடுத்து நிறுத்த எண்ணுதலுமாகிய இரண்டும்

ஊ) கவிராசர்: தன் உடம்புக்கு இன்பமானவற்றை விரும்பாதே, காரியத்தினாலே துக்கப்படுகிறதே இயல்பு என்று தேறி இருப்பவன் தன் முயற்சியாலே துக்கப்படான் எ—று.

ஏ) பழைய 2: தன்னுடம்பிற்கு இன்பமானவற்றை விரும்பாதே, ஊழ்வினையால் இடும்பை யெய்துதல் இயல்பென்று தெளிந்திருப் பான் தன் முயற்சியால் துன்பமுறான்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி. உரை தெளிவில்லது. 'துன்பத்துடனே கூடப்பிறந்தது என்று துன்பம் வந்தாலும்' என்பது துன்பம் கூடப்பிறந்தது என்றி நப் பின் நலம், 'கூடப்பிறந்தது' என்பதே உடனாதலை யுணர்த்த மேலும் 'உடனே' எனல் வேண்டுவதின்றாம். வேறு ஏடு கிடைப்பின் இப்பாடம் திருந்தக் கூடும்.

இவ்வுரைகளுள் மணக்குடவர் பரிமேலழகர் உரைகள் தெளி வானவை. இக்கருத்தையே உலகியலோடு ஒத்த நடையில் எழுதும் இராமலிங்கர் சிறக்கின்றார். சபாபதி 'இன்பம் உடம்பிற்குரியது என்றும் துன்பம் வினைத்தொடர்பால் வருவன என்றும் தெளிந்திருப் பவன் துன்பம் உறான்' என்பர்.

சி.இ. 'தன் உடம்பிற்கு இன்பமானதை விரும்பாமல் துன்பம் அடை தல் வாழ்வின் இயல்பு என்பர்.

தேவநேயர் 'இடும்பையியல்பு என்பான்—இவ்வுலக வாழ்வினும் வினைமுயற்சியிலும் துன்பம் நேர்வது இயல்பு என்று தெளிந்தவன்' என்பர்.

துன்ப— இன்பங்களை உடலைக் கருவியாகக் கொண்டு உணர்வது உயிரேயாதல் தெளிந்து அக்கருத்தமைந்த உரைகள் கொள்ளத்தக்கன.

(ஒ) ஒப்புமைப்பகுதி:

இன்பம் விழையான்:

இன்பம், நயவாமை யன்றே நலம் —நீதிநெறி.:19

துன்பம் உறுதல் இலன்:

துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது. —முதுமொழிக்.8:5

இடும்பை இயல்பு என்பான்:

விலங்கிவில் உமிழும் பூணான் விழுச்சிறைப் பட்ட போழ்தும்
அலங்கலந் தாரி னான்வந் தருஞ்சிறை விடுத்த போழ்தும்

புலம்பலும் மகிழ்வும் நெஞ்சில் போலிதலும் இன்றிப் பொன்னார்ந்(து)
உலங்கலந் துயர்ந்த தோளான் ஊழ்வினை என்று விட்டான்.
—சீவக..1167

புகழ்ந்துரை மகிழ்ச்சியும் பொற்பில் பல்சனம்
இகழ்ந்துரைக் கிரக்கமும் இன்றி அங்கநூல்
அகழ்ந்துக்கொண் டருும்பொருள் பொதிந்த நெஞ்சினார்
திகழ்ந்தெரி விளக்கெனத் திலக மாயினார் —சீவக.,2640

வாய்ச்சிவா யுறுத்தி மாந்தர் மயிர்தொறும் செத்தி னாலும்
பூச்சுறு சாந்தம் ஏந்திப் புகழ்ந்தடி பணிந்த போதும்
தூக்கிஇவ் இரண்டும் நோக்கித் தொல்வினை என்று தேறி
நாச்செறு பராவு கொள்ளார் நமர்பிறர் என்றும் உள்ளார்—சீவக.2825

வேரிக் கமழ்தார் அரசன்விடு கென்ற போழ்தும்
தாரித்த லாகா வகையாற்கொலை சூழ்ந்த பின்னும்
பூரித்தல் வாடல் இவற்றாற்பொலி வின்றி நின்றான்
பாரித்த வெல்லாம் வினையின்பயன் என்ன வல்லான் —குண்டல

மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதிலும்
இத்தி ருத்துறந்தேகென்ற போதிலும்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கும் முகத்தினை உன்னுவாள் —கம்ப.,காட்சிப்.,20

அல்லலும் உளஇன்பம் அணுகலும்உளவன்றோ.—கம்பராமா,2114

இன்பமுன்டேல் துன்பமுண்டு ஏழை மனைவாழ்க்கை
—சுந்தரர்: எதிர்கொ:,8

63.9. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள் துன்பம் உறுதல் இலன். (சூஉக)

உரைப்பகுதி:

அ) மணக்.: இன்பம் நுகருமிடத்து அதனை விரும்பாதவன், அதனால் வரும் துன்பம் நுகருமிடத்து வருத்தமுறுதல் இலன் எ—று.

இன்பம் நுகருமிடத்து அதனை விரும்பாமையாவது அவ்விடத்துத் தான் அழிந்து நில்லாமை.[1] இதுகாமத்தால் வருந்துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று.

ஆ) பரிதி.: இன்பம் வந்தால் இன்பப்படாதவன் துன்பம் வந்தாலும் துன்பம் கெடுப்பான்.

1. தான் அழிந்து நில்லாமை—உணர்வு கெட்டு மயங்கிச் சோர்வடையாமை

இ) *பரிப்.*: இன்பம் நுகரும் அதனை விரும்பாதவள், அதனால் வரும் துன்பம் நுகநம் இடத்து வருத்தம் உறுதல் இலன் எ—று.

இன்பம் நுகரும் இடத்து அதனை விரும்பாமையாவது அவ்விடத்துத் தான் அழிந்து நில்லாமை. இது காமத்தால் வரும் துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று.

ஈ) *காளி.*: இன்பம் வந்து எய்திய இடத்து அவ்வின்பத்தை ஒரு பொருளாகக் கொண்டு விரும்பாத வேந்தனானவான், ஏனைத்துன்பம் வந்து எய்திய இடத்தும் தான் சிறிதும் துயர் உறுதல் இலன்: இவ் விரண்டும் இயல்பு என்னும் திட்பம் உடையார் ஆடவர் எ—று.

உ) *பரிமேல்.*: வினையால்[2] தனக்கு இன்பம் வந்துழி அதனை அனுபவியா நின்றே மனத்தான் விரும்பாதான் துன்பம் வந்துழியும் அதனை அனுபவியா நின்றே மனத்தால் வருந்தான்.

துன்பம்—முயற்சியான் வரும் இடுக்கண். இரண்டையும் ஒரு தன்மையாகக்[3] கோடலின், பயன்களும் இலவாயின.

ஊ) *கவிராசர்*: தான் செய்த காரியத்தினாலே தனக்கு இன்பம் வந்தபோது, அதனை அனுபவியாநின்று மனத்தால் விரும்பாதவன்' துன்பம் வந்தபோதும் அதனை அனுபவித்து மனத்தால் வருந்தான் எ—று.

ஏ) *பழைய 2*: வினையால் தனக்கு இன்பம் வந்துழி அதனை அனுபவியாநின்றே மனத்தான் விரும்பாதான், துன்பம் வந்துழியும் அதனை அனுபவியா நின்று மனத்தான் வருந்தான் என்றவாறு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்.,பரிப்., இது காமத்தான் வருந்துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று, என்பர், இடுக்கணழியாமைக்கு வரைவிலக்கணம் தரும்போது 'வினை செய்யுங்காலத்து அதனை முடிப்பதற்குள் வரும் இடையூறுகளைப் பொறுத்து முடிக்க வேண்டும், என எழுதிய இவர் 'காமத்தான் வருந்துன்பத்திற்கு அழியாதாரை கூறிற்று' எனல் முரண்பட்ட கருத்தாகும். ஆதலால் இக்குறட்பாவுக்கு இத்தகைய கருத்தை அவர் எழுதியிருக்கமாட்டார். இது இடைச் செருகலாகும். யாரோ இன்பத்துள் இன்பம் எனவே காமத்துள் இன்பம் என்று கருதித் துன்பத்துள் துன்பம்—காமத்துள் துன்பம், என்றனர் போலும் ஆசிரியர் செய்யுள் நடை இன்மையுளின்மை, வன்மையுள் வன்மை

2. வினையால்—தொழிலைச் செய்தலால்.
3. ஒருதன்மையாக—சமமாக.

என்பன போல இன்பத்துள் இன்பம் துன்பத்துள் துன்பம் என்கிறது எனலாம். ஆயினும், மணக்குடவர், 627ம் குறள் மேல், நன்மையால் தவஞ் செய்யுங்கால் வரும் துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று எனவும், 628ம் குறள் பொருட்கேட்டினால் வருந்துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று எனவும் கூறுதலின் இது காமத்தால் வருந் துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று எனல் பொருந்துவதாகும் எனக் கூறுதல் பொருந்துவதாம். இத்தகைய பாகுபாட்டை வேறு ரையாசிரியர்கள் கருதாமையும் நோக்கத்தக்கது. ஆனால் 'ஆள்வினை யை யடுத்து வரும் இடுக்கண் அழியாமை' ஆட்சியின் முயற்சிக்கு வரும் துன்பத்தையே குறிப்பதாய்த் தவ முதலிய அறத்தையோ பொருளழிவையோ—காமத்தையோ பற்றி வரும் துன்பமாதல் ஏற்புடையதா என எண்ணவும்' வேண்டும். எண்ணித் துணிக.

ஒ) ஒப்புமைப்பகுதி:

துன்பத்துள் துன்பம் உறுதல்இலன்:

மறிய மறியும் மலிர்ப மலிரும்
பெறுப பெறும்பெற்று இழப்ப இழக்கும்
அறிவது அறிவார் அழுங்கார் உவவார்
உறுவது உறும்என்று உரைப்பது நன்று —குண்டல.

அலக்சணு மின்பமு மணுகு நாளவை
விலக்குவ மென்பது மெய்யிற் றாகுமோ —கம்பராமா., 36

அந்தரம் வருதலு மனைய தீர்தலும்
சுந்தரத் தோளினிர் தொன்மை நீரவால் —கம்பராமா., 3613

63.10. *இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன் ஒன்னார் விழையும் சிறப்பு.* (அஉ0)

உரைப்பகுதி:

அ) மணக்.: இன்னாமையை இன்பம் போலக் கொள்வா னாயின்' அது தன் பகைவரும் விரும்புவதொரு சிறப்பாம் எ—று.

மேற்கூறியவாற்றால் செய்தலேயன்றித் துன்பத்தையும் இன்ப மாகக் கொள்வானாயின், அவனைப் பகைவரும் மதிப்பர் என்றது.

ஆ) பரிதி.: தனக்கு வர்த பொல்லாங்கினால் கலங்காமல் அதுவே பெலமாகக் கொள்வானாகில் தனக்குச் சத்துருக்களும் திறையிடுவர் எ—று.

இ) பரிப்.: இன்னாமையை இன்பம் போலக் கொள்வனாயின், அது பகைவரும் விரும்புவது ஒரு சிறப்பு ஆம் எ—று.

மேற்கூறிய வாற்றால் செய்தலே அன்றித் துன்பத்தை இன்பம் போலக் கொள்வானாயின் பகைவரும் மதிப்பர் என்றது.

அரசியல் முடிந்தது.

ஈ) **காளி.:** தனக்கு ஓர் இன்பம் வந்த இடத்து அதனையும், செய்தியின் வந்த சிற்றின்பம் ஆகலான் இன்னாத் தன்மையது என இங்ஙனம் இறைவன் கருதிக் கொள்வானாயின் மற்று அது தெவ்வரும்[1] தன்னை விரும்பும் சிறப்புடைத்தாகும் எ—று.

அன்றியும், உலகத்து இனிமை செய்தோர். இனியர் ஆகலும், மற்றும் இன்னாமை செய்தோர் இன்னாதார் ஆகலும், இயல்பு அன்றே: அதனான், ஒருவர் தம் கருத்தால் இன்னாமை செய்யினும், அதனை இவர் எமக்கு இதின் அடுக்கும் எனக் கருதிக் கொள்வராயின், தாம் அவர்க்கு இனியராம். அத்துணையல்லது இன்னார் ஆதல் இன்று என்பதுவும் கூறியவாறு.

உ) **பரிமேல்.:** ஒருவன் செய்யுமிடத்து முயற்சியான் வரும் துன்பந் தன்னையே தனக்கு இன்னாமை கற்பித்துக் கொள்வானாயின், அதனால்[2] தன்பகைவர் நன்கு மதித்தற்கு ஏதுவாய உயர்ச்சி உண்டாம்.

துன்பந்தானும் உயிர்க்கு இயல்பின்றிக் கணிகமாய்[3] மனத்திடை நிகழ்வதோர் கோட்பாடாகலின், அதனை மாறுபடக்கொள்ளவே, அதற்கு அழிவின்றி மனமகிழ்ச்சி உடையனாய் அதனால் தொடங்கிய வினை முடித்தேவிடும் ஆற்றலுடையனாம் என்பது கருத்து. இவை நான்கு பாட்டானும் மெய்வருத்தத்தானாயதற்கு அழியாமையும், அதற்கு உபாயமும் கூறப்பட்டன-

(ஊ)**கவிராசர்:** ஒருவன் காரியஞ்செய்யுமிடத்து முயற்சியான் வந்த துன்பந்தன்னையே தனக்கு இன்பமாகக் கற்பித்துக் கொள்வானாகில், அதனால் தன் பகைவர் தன்னை எண்ணத் தக்க உயர்ச்சி உண்டாம் எ—று.

ஏ) **பழைய 2:** ஒருவன் தொழில் செய்யுமிடத்து முயற்சியான் வரும் துன்பந் தன்னையே தனக்கு இன்பமாகக் கற்பித்துக்கொள்வானாயின் அதனாற்றன் பகைவர் நன்கு மதித்தற்கு ஏதுவாய உயர்ச்சியுண்டாம்.

1, தெவ்வர் - பகைவர்.
2. அதனால் - அங்ஙனம் கற்பித்துக் கொள்வதனால்.
3. கணிகம் - கணப் பொழுது நிற்பது.

மல்லர்: என்பது தான் நினைத்த காரியத்துக்கு விக்கினமாக வருகிறது பொல்லாப்புக்களைத் தனக்கு நன்மையென்று எண்ணிச் சந்தோஷமாய் ஏத்துக் கொள்ளுகிறவனுக்குத் தன்பகையாழி சூழுங் காரியம் கார்படுகிறதுக்கு ஏதுவான பெருமையுண்டாகும் என்றவாறு

அரசன் தனக்கொரு விக்கினம் வந்தியிடத்திலே இந்த விக்கினத்தோடே தானே என் காரியத்தை முடித்தால் என்னுடைய வல்லமை விளங்கும் என்கிற நன்மையைக் கருதி அந்த விக்கினத்தைத் தன்னுடைய வல்லமையைக் காண்பிக்கிறதுக்கு ஏதுவான நன்மை போலே சந்தோஷமாய் ஏத்துக்கொண்டு தன் காரியத்தைச் செய்கிறதுக்கு வேண்டிய பிரையாசைப்பட்டு தன் காரியத்தை முடித்துக் கொண்டு போனால் அவனுடைய பகைவர் தாங்கள் அவனுக்குச் செய்கிற பொல்லாப்புக்கள் எல்லாம் நன்மையாய்ப் போகுது என்றும் அவனைச் செயிக்தங்காலம் காரப்படுவார்கள் என்பது கருத்து.

இன்னாமை-பொல்லாப்பு; என-என்று; கொளின்-ஏத்துக்கொண்டால்; ஒன்னார்-பகைவர்; விளைதல்-விரும்புதல்; சிறப்பு-பெருமை.

ஐ) தொகுப்பும். குறிப்பும்.:

மணக்.,பரிப்.'துன்பத்தையும் இன்பமாக் கொள்ளின்,' பரிதி. 'துன்பத்திற்குக் கலங்காமல் அதனையே பெலமாக் கொள்ளின்' இன்பம் என்று மட்டும் புத்தி பண்ணாமல் ஒருவகை வலியாம் என்று கருதின்' என்பர். இது பகைவர் பாராட்டுதற்கு ஏற்ற கருத்து. சொற்பொருளன்றாயினும் என்க.

காளிங்கர் இரண்டுரை கூறுகின்றார்:—

1 இன்பம் இன்னாமை எனக்கொள்ளின் அது தெவ்வரும் விரும்பும் சிறப்பு'எனக் கூட்டி, 'வந்த இன்பம், செயலால் வந்த சிற்றின்பம்: இன்னாதது எனக் கருதின் பகைவரும் பாராட்டுவர்' என்பது.

2. மற்றொன்று; 'பிறர் தமக்கு இன்னாசெய்யினும் நமக்கு இது அடுக்கும் எனக் கருதின் தாம் அவர்க்கு இனியராம். அவ்வளவின்றி இன்னாராதல் இன்று எனலுமாம்' என்பர். இவற்றுள், குறள் கூறுவது இன்னாமையை இன்பம் எனக் கொள்ளின்' என்கிறதேயன்றி 'இன்பத்தை இன்னாமை எனக் கூறவில்லை; 'இடும்

பையை இயல்பென்று கொள்க' என்ற வள்ளுவர் வாயுரைக்கும் முரணும் ஆகிறது. அதிகார இயைபும் இன்று. ஆதலால் காளிங்கரின் முதலுரை ஏற்புடையதன்று

பின்னுரையும் முன் விளக்கமும்—பின் விளக்கமும் தந்து கருத்தை மறைக்கிறது. தேவநேயர் 'ஒன்னார் விழைதலாவது பாராட்டிப் பகை தீர்தல்; துன்பத்தை இன்பமாக் கோடல் ஞானியர் இயல்பு. அந்நிலை யடைந்தமை பற்றிப் பகைவர் விழையுஞ் சிறப்புண்டாகும் எனினுமாம்'.

துன்பம் இன்பம் என்பன மனக்கோட்பாடுதாம். அதனை மாறு படக் கொள்ளலாம் என்ற அமைதி மிகச் சிறப்புடையது.

இவ்வுரைகள் அனைத்திலும் பரிமேலழகரும் அவரை ஒட்டி எழுந்த உரைகளும் ஏற்புடையன.

ஒ) ஒப்புமைப்பகுதி:

இன்னாமை இன்பம்:

துன்பத்தால் துகைக்கப் பட்டார் துகைத்தவர் துன்பம் தாங்கி
இன்பம்என் றிருத்தல் போலும் அரியதிவ் வுலகில் என்றான்.,
--சீவக.,13

....வீரரை யார்விய வாதார் —கம்பராமா.,459

துன்பத்திற் கிடம் கொடேல். —ஆத்தி.,

பிணைடைய உரையாசிரியர்களின் குறள் வைப்புமுறை

	இடுக்கண்	வெள்ளத்	இடும்பைக்	மடித்தவா	அடுக்கி	அற்றேமென்	இலக்கம்	இன்பம்	இன்பத்துள்	இன்னாமை
மணக்.	1	6	3	4	5	8	7	2	9	10
பரிதி.	10	2	6	3	5	4	8	9	7	10
பரிப்.	1	6	3	4	5	8	7	2	9	10
காளி.	1	2	3	5	6	8	7	9	4	10
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

63 - வது அதிகாரம் 'இடுக்கணழியாமை' முற்றிற்று.

நூலோதி

1. அகநானூறு, களிற்றியானை நிரை, சோமசுந்தரனார், பொ.வே உரை. தி. தெ. சை. சி. நூ. ப. க. லிமி. சென்னை. 1970.

2. அகநானூறு, மணிமிடைபவளம், நித்திலக்கோவை, சோமசுந்தரனார், பொ. வே. உரை. தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை. 1970.

3. அடியோக பிரதீபிகை, மொழிபெயர்ப்பு, குப்புசாமி ராஜு, த., தஞ்சை.

4. அறநெறிச்சாரம், முனைப்பாடியார், எஸ். பி. சி, கே, அச்சகம், வேப்பேரி, 1912.

5. ஆசாரக்கோவை, பதவுரை விளக்கவுரைகளுடன்: தி. தெ. சை. சி. நூ ப. க. லிமி., சென்னை, 1968.

6. ஆதிநாதர் பிள்ளைத்தமிழ்

7. இலக்கணக் கொத்து மூலமும் உரையும், சுவாமிநாததேசிகர், ஆறுமுகநாவலர் பதிப்பு, மூன்றாம் பதிப்பு.

8. இலக்கண விளக்கம், வைத்தியநாத தேசிகர், தஞ்சை சரசுவதி மகால், 1973.

9. இலக்கண விளக்கம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்— மூலமும் உரையும், வைத்தியநாத தேசிகர், திருவாரூர் தி. தெ. சை. சி. நூ. ப. க. லிமி., சென்னை. 1973.

10. இன்னாநாற்பது , மூலமும் உரையும், தி. தெ. சை. சி. நூ.ப.க. லிமி .சென்னை 1971

11. இனியவை நாற்பது மூலமும் உரையும், தி. தெ. சை.சி.நூ.ப.க. லிமி., சென்னை, 1971.

12. உண்மை விளக்கம், மனவாசகங் கடந்தார், சிவஞானபோத யந்திர சாலை, சிந்தாதிரிப் பேட்டை.

13. உதயணகுமார காவியம், சோமசுந்தரனார், பொ. வே., விளக்க வுரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1973,

14. உரைவேற்றுமை, சாரங்கபாணி, கோ., செல்வி பதிப்பகம், காரைக்குடி.

15. கம்பராமாயணம், பதிப்பாசிரியர் குழு, அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு, அண்ணாமலை நகர்.

16. கலித்தொகை, நச்சினார்க்கினியர் உரையும் விளக்கமும், சோமசுந்தரனார், பொ. வே.. விளக்கவுரை. தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1970.

17, குண்டலகேசி, சோமசுத்தரனார். பொ. வே,, விளக்கவுரை, தி, தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1970.

18. குறுந்தொகை, சோமசுந்தரனார், பொ- வே.. உரை, தி. தெ. சை. சி. நூ. ப, க,, லிமி., சென்னை, முதலாம் பதிப்பு, மறு அச்சு, 1972.

19, குறள் அறப்பால், இராமாநுசகவிராயர், வெள்ளுரையும் புத்துரையும், சென்னை, 1840.

20. குறள் மூலமும் சுகாத்தியர் இயற்றிய கருத்துரை அட்டவணையும் பொழிப்புரையும், 1889.

21. கௌடலீயம் பொருணூல், தமிழ் மொழிபெயர்ப்பு, கதிரேசச் செட்டியார், பண்டிதமணி, மு., இராமாநுஜாசாரியார், பி, ஸ்ரீ' அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1955,

22. சட்தரிசன சங்கிரகம்.

23. சிலப்பதிகாரம், இளங்கோ வடிகள், சோமசுந்தரனார், பொ.வே. விளக்கவுரை, தி,தெ, சை. சி. நூ. ப,க, லிமி., சென்னை,1726.

24. சிவபெருமான் இரட்டைமணிமாலை, 11— ஆம் திருமுறை, ஸ்ரீ குமரகுருபரள்சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1971.

25. சீவகசிந்தாமணி மூலமும் உரையும், பகுதி— க, அரசு, புலவர், சோமசுந்தரனார், பொ. வே. உரை, தி. தெ. சை. சி. நூ, ப, க, லிமி., சென்னை, 1967.

26. சீவகசிந்தாமணி மூலமும் உரையும், பகுதி— உ. அரசு, புலவர்' சோமசுந்தரனார், பொ, வே. உரை, தி. தெ. சை. சி.நூ.ப. க. லிமி., சென்னை, 1968

27. சுக்கிரநீதி (தமிழ்), கதிரேசச் செட்டியார், பண்டிதமணி, மு., மொழிபெயர்ப்பு, சன்மார்க்க சபை, மேலைச்சிவபுரி, 1926.

28. சூதசங்கிதை. தேவராஜபிள்ளை, ரிப்பன், அச்சியந்திரசாலை சென்னை.

29. சூடாமணி நிகண்டு, மண்டலபுருடன், வித்தியாநுபாலன யந்திர சாலை, தங்க சாலைத் தெரு, சென்னைப் பட்டினம்.

30. சூளாமணி மூலமும் உரையும், பகுதி— க, சோமசுந்தரனார், பொ. வே., தி. தெ. சை. சி. நூ. க. லிமி., சென்னை, 1970.

31. சூளாமணி மூலமும் உரையும், பகுதி— உ, சோமசுந்தரனார், பொ. வே., தி. தெ. சை. சி. நூ. க., லிமி., சென்னை, 1962.,

32. செந்தமிழ், தொகுதி 1, பகுதி 8, மதுரைத் தமிழ்ச் சங்கப்பதிப்பு

33. சேந்தன் திவாகரம், சேந்தனார், மனோன்மணி விலாச அச்சுக் கூடம், சென்னை, 1904.

34. தத்துவார்த்த சூத்திரம்.

35. தண்டியலங்காரம், தண்டியாசிரியர், சுப்பிரமணியதேசிகர்உரை' தி.மு.சை.சி.நூ.ப.க.. லிமி., சென்ன, 1960.

36. தமிழர் மதம், தேவநேயன், நேசமணிப் பதிப்பகம், காட்பாடி விரிவு, வ.ஆ.மாவட்டம், 1972.

37. தனிப்பாடல் திரட்டு.சந்திரசேகர கவிராஜபண்டிதர் (பதிப்பு), வித்தியாரத்தினாகரம் அச்சகம், சென்னை, 1902.

38. திராவிடப் பிரகாசிகை, சபாபதி நாவலர், தி.தெ.சை.சி.நூ.ப. க.லிமி., சென்னை, 1976.

39. திருக்கலம்பகம், உதீசிதேவர், மதுரைத் தமிழ்ச் சங்க முத்திரா சாலை.

40. திருக்குறள்- அறத்துப்பால், தண்டபாணி விருத்தியுரை, தண்டபாணிப் பிள்ளை, நாகை. சொ., தி.தெ.சை.சி.நூ,ப.க. லிமி., சென்னை, 1956.

41. திருக்குறள் அறத்துப்பால், பாலருரையுடன், சுப்பிரமணிய சாஸ்திரி, பி.சா., காசிமடம், திருப்பனந்தாள், 1930.

42. திருக்குறள், உரைவளம், அறத்துப்பால், தருமபுர ஆதினம் 1950.

43. திருக்குறள் உரை விளக்கம், வரதராசன், ஜி., பழனியப்பா பிரதர்ஸ், சென்னை,1958.

44. திருக்குறள் எளிய பொழிப்புரை, இலக்குவனார்,சி., வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1963.

45. திருக்குறள், கவிராசபண்டிதர், சாது அச்சுக்கூடம், சென்னை, 1949.

46. திருக்குறள், குழந்தையுரை,குழந்தை, புலவர், பாரி நிலையம், 1967.

47. திருக்குறள் தமிழ் மரபுரை, தேவநேயன், ஞா., நேசமணி பதிப் பகம். காட்பாடி விரிவு, இ, 1969.

48. திருக்குறள் தெளிபொருள் வசனம், மு.ரா. அருணாசலக் கவராயர், மீனலோசனி அச்சியந்திர சாலை, மதுரை.

49. திருக்குறள் தெளிவுரை, டாக்டர் மு.வரதராசனார், தி.தெ.கை. சி. நூ.ப.க. லிமி., சென்னை,

50. திருக்குறள் நயவுரை. கோவிந்தசாமி, மு., பாரி நிலையம், 1962.

51. திருக்குறள் பரிமேலழகருரையுடன் குறிப்புரையும், கோபால கிருஷ்ணமாசாரியர் ஸ்ரீ உ.வே.வை.மு., சென்னை, 1965

52. திருக்குறள் புது உரை இராமலிங்கன், நாமக்கல், வெ., சென்னை.

53. திருக்குறள் பொழிப்புரை, சுப்பிரமணியபிள்ளை, கா., தி. தெ. சை. சி. நூ. ப. க. லிமி., சென்னை, 1955.

54. திருக்குறள் மணிவிளக்கவுரை, கா, அ., அலமேலு நிலையம், சென்னன, 18

55. திருக்குறள் மூலமும் ஓர் பழைய உரையும், டாக்டர் உ. வே. சாமிநாதஐயர் நூல் நிலையம், அடையாறு வெளியீடு, சென்னை, 1961.

56. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் — அறத்துப்பால், வடிவேலுச்செட்டியார், கோ. மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை. 1972.

57. திருக்கோவையார், மாணிக்கவாசகர், ஆறுமுக நாவலர் பதிப்பு, வித்தியாநுபாலன யந்திரசாலை, தங்கசாலைத் தெரு, சென்னை.

58. திருநூற்றந்தாதி, அவிரோதி ஆழ்வார், மதுரைத் தமிழ்ச் சங்க முத்திரா சாலை. 1905.

59. திருமந்திரம், திருமூலர், திருவாவடுதுறை ஆதீனம், தண்டபாணி தேசிகர் உரையுடன்.

60. திருவந்தாதி

61. திருவருட்பயன், உமாபதிசிவாசாரியார், கோ, சண்முகசுந்தர முதலியார், சென்னை.

62. திருவள்ளுவர் திருக்குறள் அறத்துப்பால், விருத்தியுரை, சிதம் பரம் பிள்ளை, வ, உ,, தூத்துக்குடி, 1935.

63. திருவள்ளுவர் திருநாள்விழாமலர், தி. தெ, சை. சி. நூ. ப. க. லிமி:, சென்னை, 1968.

64. திருவாசகம், மாணிக்கவாசகர், தண்டபாணிதேசிகர் செய்த பஞ் சாக்கர விளக்கவுரையுடன், திருவாவடுதுறை ஆதீனம்.

65. திருவிசைப்பா, 9— ஆம் திருமுறை, தி, தெ, சை, சி, நூ, ப, க, லிமி,, சென்னை.

66. திருவிளையாடல் புராணம், பரஞ்சோதி முனிவர், தி, தெ. சை, சி, நூ, ப, க., லிமி., சென்னை.

67. திருவெம்பாவை (சமண நூல்), திருக்குறள் மூலமும் கட்டுரை களும், ஜைன இளைஞர் மன்றம், சென்னை.

68. திருவெற்றியூர் ஒருபா ஒருபஃது.

69. தேவாரம், அப்பர் சுவாமிகள், 4,5,6—ஆம் திருமுறை-தலமுறை. ஸ்ரீகுமர குருபரன் அச்சகம், ஸ்ரீ வைகுண்டம், 1971.

70. தேவாரம், சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஏழாம் திருமுறை-தலமுறை, ஸ்ரீ குமர குருபரன் அச்சகம். ஸ்ரீ வைகுண்டம், 1971.

71. தேவாரம், திருஞானசம்பந்த சுவாமிகள், 1,2,3-ஆம் திருமுறை-தலமுறை, ஸ்ரீ குமர குருபரன் அச்சகம், ஸ்ரீ வைகுண்டம், 1971.

72. தொல்காப்பியச் சூத்திர விருத்தி, சிவஞான சுவாமிகள், ஆறுமுக நாவலர் பதிப்பு, மூன்றாம் பதிப்பு.

73. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணருரை, தி.தெ. சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1972.

74. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியருரை, தி.தெ. சை.சி, நூ.ப.க., லிமி., சென்னை, 1961

75. தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணருரை. தி.தெ. சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை,

76. தொல்காப்பியம் சொல்லதிகாரம், கல்லாடனாருரை, தி.தெ. சை.சி.நூ. ப.க., லிமி. சென்னை, 1964.

77. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையர்உரை, தி, தெ.சை.சி. நூ.ப.க, லிமி., சென்னை, 1970.

78. தொல்காப்பியம், சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை. தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை,1963.

79. தொல்காப்பியம், சொல்லதிகாரம், நச்சினார்க்கினியருரை, தி. தெ.சை.சி. நூ.ப.க., லிமி., சென்னை, 1962.

80. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, தி.தெ. சை.சி. நூ.ப.க., லிமி., 1969.

81. தொல்காப்பியம், பொருளதிகாரம் (செய்யுளியல்). நச்சினார்க் கினியருரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை,1965

82. தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியருரை தி.தெ.சை. சி.நூ.ப.க., லிமி., 1971.

83. தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் உரை,தி.தெ சை.சி. நூ.ப.க., லிமி., சென்னை, 1971.

84. தொன்னூல் விளக்கம், திறனாய்வு மூலம் விளக்கம், சுப்பிரமணி யன், டாக்டர் ச.வே., தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978.

85. தோத்திரத் திரட்டு.

86. நரிவிருத்தம், திருத்தக்க தேவர், 'செந்தமிழ்' வெளியீடு, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

87. நற்றிணைநானூறு. நாராயணசாமி ஐயர், பின்னத்தூர், அ., உரையும் விளக்கமும், தி. தெ. சை. சி. நூ. ப. க. லிமி., சென்னை, 1967.

88. நன்னூல், காண்டிகையுரை, சடகோபராமாநுஜாசாரியார், வை, மு., கிருஷ்ணமாசாரியார். சே., 18— ஆம் பதிப்பு, சென்னை. 1958.

89. நன்னூல் மூலமும் விருத்தியுரையும், புத்தம்புத்துரை, சிவஞான சுவாமிகள், ச, தண்டபாணி தேசிகர். குறிப்புரைகள், பாரி நிலையம். சென்னை, 1968.

90. நால்வர் நான்மணிமாலை, சிவப்பிரகாச சுவாமிகள், துரை மங்கலம், மைலம் மடம் பதிப்பு.

91. நாலடியார், பாலசுந்தரம்பிள்ளை, தி, சு., உரை, தி. தெ. சை, சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1968.

92. நான்மணிக்கடிகை, பதவுரை விளக்கங்களுடன், தி, தெ, சை, சி, நூ, ப, க, லிமி., சென்னை, 1966.

93. நீலகேசி, சோமசுந்தரனார், பொ, வே., விளக்கவுரை, தி, தெ, சை. சி. நூ. ப. க. லிமி., சென்னை, 1964.

94. நேமிநாதம், குணவீர பண்டிதர், கோவிந்தராச முதலியார், கா, ர., குறிப்புரைகள், தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை 1964.

95. பத்துப்பாட்டு மூலமும் உரையும், பகுதி— உ, சோமசுந்தரனார், பொ. வே. உரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1971.

96. பத்துப்பாட்டு மூலமும் உரையும், பகுதி— க, சோமசுந்தரனார், பொ, வே, உரை, தி. தெ, சை, சி, நூ, ப, க., லிமி., சென்னை, 1968.

97. பதிற்றுப்பத்து, மூலமும் விளக்கவுரையும், துரைசாமிப்பிள்ளை, ஔவை, சு., தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1968.

98. பரிபாடல் மூலமும் உரையும், சோமசுந்தரனார், பொ, வே., உரை, தி, தெ, சை, சி. நூ, ப, க., லிமி.. சென்னை, 1969,

99. பழமொழி நானூறு, மூன்றுறையரையனார், இராசமாணிக்கம் பிள்ளை, புலவர், ம., உரை, தி, தெ, சை, சி, நூ, ப, க., லிமி., சென்னை, 1967.

100. புறநானூறு துரைசாமிபிள்ளை, ஔவை, சு., விளக்கவுரை, தி. தெ. சை. சி. நூ. ப, க., லிமி., சென்னை, 1970.

101. புறநானூறு மூலமும் பழைய உரையும், சாமிநாதையர், உ, வே.பதிப்பு, சென்னை, 1971.

102. புறப்பொருள் வெண்பாமாலை, ஐயனாரிதனார், சோமசுந்தரனார், பொ, வே., விளக்கவுரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1967.

103 பிரயோகவிவேகம் மூலமும் உரையும், சுப்பிரமணிய தீட்சிதர் தஞ்சை சரசுவதி மகால், 1973.

104. பெருங்கதை, சாமிநாதையர், உ, வே., பதிப்பு, டாக்டர்உ.வே சாமிநாதையர் நூல்நிலையம் 4 ஆம் பதிப்பு, திருவான்மியூர் சென்னை 1968,

105. பொன்வண்ணத்தந்தாதி, சேரமான் பெருமாள் நாயனார், ஸ்ரீகுமரகுருபரன் அச்சகம், ஸ்ரீ வைகுண்டம், 1972.

106. மணிமேகலை, மதுரைக் கூலவாணிகன் சாத்தனார், சோமசுந்தரனார், பொ, வே., விளக்கவுரை, தி, தெ, சை, சி. நூ, ப, க, லிமி., சென்னை, 1971.

107. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, கோபாலகிருஷ்ணக்கோன், இ, மா. வெளியீடு, மதுரை, 1956.

108. மாறனலங்காரம், காரிரத்னகவிராயர், மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு, 1915.

109. முத்துவீரியம், முத்துவீர உபாத்தியாயர், திருப்பாற்கடல்நாத கவிராயர் உரை, தி. தெ. சை. சி. நூ. ப.க., லிமி, சென்னை. 1972

110. முத்திநிச்சயப் பேருரை, தண்டபாணி தேசிகர், ச., குறிப்புரை யுடன் குருஞானசம்பந்தர், தருமபுர ஆதீனம், 1942.

111. முருகு தனுஷ்கோடி விழாமலர் மலர்க் குழு, சென்னை, 1957.

112 மேருமந்திரபுராணம், வாமனமுனிவர், சாது அச்சுக்கூடம், சென்னை, 1922.

113. யசோதர காவியம், துரைசாமிபிள்ளை, ஒளவை. சு., உரை, தி, தெ, சை, சி, நூ, ப, க., லிமி., சென்னை, 1970.

114. யாப்பருங்கலக் காரிகை.

115. வள்ளுவம், மாணிக்கம், வ, சுப., பாரி நிலையம், சென்னை, 1969.

116. வள்ளுவர் கண்ட நாடும் சுமமும், மீனாட்சி சுந்தரனார், தெ. பொ., சென்னை, 1954.

117. வள்ளுவர், நேரிசை, அரசஞ்சண்முகனார், ஸ்ரீ கிருஷ்ண விலாசம் விலாசம் அச்சுயந்திரம், 1919.

118, வளையாபதி, சோமசுந்தரனார், பொ. வே,, விளக்கவுரை, தி.தெ.சை. சி.நூ.ப.க., சென்னை, 1970.

119. வில்லிபாரதம், வில்லிபுத்தூர்ஆழ்வார், ஆறுமுக நாவலர்பதிப்பு, வித்யாநுபாலன யந்திர சாலை,

120. வீரசோழியம், புத்தமித்திரனார், பெருந்தேவனார் உரை, தி.தெ சை.சி. நூ. ப.க., லிமி., சென்னை, 1970.

121. Tamil Lexicon, University of Madras, 1966.

அரசியல் —முதற்குறிப்பகராதி

அச்ச முடையார்க்கு நிஉள
அஞ்சாமை அல்லால் சலள
அஞ்சாமை ஈகை உக
அஞ்சுவ தஞ்சாமை ககஉ
அடுக்கி வரினும் அஉல
அந்தணர் நூற்கும் நிநிஅ
அமைந்தாங் கொழுகான் நஙக
அரங்கின்றி கலஉ
அரியஎன்று நிஙச
அரியகற்று சஙக
அரியவற்றுள் உசஉ
அருஞ்செவ்வி சுசல
அருமை உடைத்தென்று எளஅ
அருவினை நசுசு
அல்லற்பட்டு சுலநி
அழிவதூஉம் நலக
அளவளாவு சகஙந
அளவறிந்து வாழாதான் நநிநி
அற்றாரைத் சசக
அற்றேமென்று அஉஉ
அறம்பொருள் சஉக
அறனறிந்து மூத்த உஙநி
அறனிழுக்கா உக
அறிந்தாற்றிச் சளல
அறிவற்றங் களக
அறிவுடையார் ஆவ ககஙல
அறிவுடையார் எல்லாம் கக்ஙஅ
அன்பறிவு தேற்றம் சசுநி
ஆக்கம் அதர்வினாய்ச் எஙக
ஆக்கம் இழந்தேமென்று எஉக
ஆக்கங் கருதி நலசு
ஆகாறு அளவிட்டி நநிச
ஆபயன் குன்றும் சுகஅ
ஆற்றாரும் நகஙசு
ஆற்றின் அளவறிந்து நநிக
ஆற்றின்வருந்தா நகஅ
இகழ்ச்சியின் நிஙக
இடிக்குந் துணையாரை அநிச
இடிப்பாரை அநிள
இடிபுரிந்து எசுநி
இடுக்கண் வருங்கால் அலள
இடும்பைக்கு அகநி
இதனை இதனால் சளநி
இயல்புளிக் நிசுள
இயற்றலும் ஈட்டலும் நநி
இலக்கம் உடம்பிடும்பைக் அஉங
இவறலும் அலள
இழுக்கல் உடையுழி கநில
இழுக்காமை நிங்அ
இறந்த வெகுளியின் நிகஅ
இறைகடியன் சுஙள
இறைகாக்கும் நிளங
இன்சொலால் சஙங
இன்பத்துள் இன்பம் விழை அஉஅ
இன்பம்விழையான்இடும்பை அஅசு
இன்பம் விழையான் வினை எஅக
இன்மையின் இன்னாது சுகங்
இன்னாமை இன்பம் அஙல
இனத்தாற்றி சுசள
உடைத்தம் நஙள
உடைய ரெனப்படுவது எஉங
உடையார்முன் எஅ
உரமொருவற்கு எசநி
உலகம் தழீஇய கஅங
உவப்பத் தலைக்கூடி எச
உழைப்பிரிந்து நிகஉ
உள்ளம் இலாதவர் எசக
உள்ளம் உடைமை எஉசு

உள்ளியது எய்தல்	நிசாங	கண்ணோட்டத்து	சுசுச
உள்ளுவதெல்லாம்	எஙசு	கல்லா ஒருவன்	ககங
உளபோல்	சுஎஉ	கல்லாதவரும்	கயக
உளரென்னும்	ககடு	கல்லாதான் ஒட்பம்	ககல
உளவரை	ஙடுள	கல்லாதான் சொற்கா	கலசு
உற்றநோய் நீக்கி	உஙஅ	கருமம் சிதையாமல்	கஅங
ஊக்கமுடையான்	ஙஎடு	கல்லார்ப் பிணிக்கும்	சுஅங
ஊழையும் உப்பக்கம்	அலஉ	கற்க கசடறக்	சுல
எண்ணித் துணிக	ஙகடு	கற்றிலனாயினும்	கசஎ
எண்ணியார்	ஙகஅ	காக்கை கரவா	நிலச
எண்ணென்ப	சுடு	காட்சிக் கெளியன்	சல
என்பதத்தான்	நிஎசு	காதல காதல்	உஉக
எண்பொருள வாகச்	கஅல	காதன்மை	சசக
எதிரதாக்	ககசு	காலம் கருதி	ஙஎஉ
எப்பொருள்	களடு	காலாழ்	சகடு
எய்தற் கரியது	ஙஎஅ	குடிதழீஇக்	நிசுச
எல்லார்க்கும் எல்லாம்	சுகஅ	குடிப்பிறந்து குற்	சஉஅ
எவ்வ துறைவது	கஅஅ	குடிபுறம்	நிஅல
எள்ளாத எண்ணிச்	ஙஉச	குடிமடிந்து	எடுள
எனைத்தானும் நல்லவை	கடுச	குடியாண்மை	எளல
எனைவகையான்	சசுள	குடியென்னும்	எடுல
ஒருமைக்கண்	ககல	குணம்நாடிக்	சஙச
ஒல்வ தறிவது	ஙஙச	குற்றமே	உகஉ
ஒற்றினான் ஒற்றி	எலக	கூழும் குடியும்	சுலஉ
ஒற்றும் உரைசான்ற	சுகடு	கேட்பினும் கேளாத்	கடுக
ஒற்றொற்றித்	எகச	கேடில் விழுச்செல்வம்	ககள
ஒற்றொற்று	எகசு	கொக்கொக்க	ஙஅச
ஒறுத்தாற்றும்	சுஅசு	கொடுத்தலும்	சகக
ஓர்ந்துகண்	நிசக	கொடையளி	நிஙங
கடலோடா	சகச	கொலைமேற்கொண்	நிகஉ
கடா உருவொடு	எலடு	கொலையிற்	நிகச
கடுஞ்சொல்லன்	சுசஙங	சிதைவிடத்து	எஙக
கடுமொழியும்	சுசடு	சிற்றினம்	உசுக
கடிதோச்சி	சுஙல	சிறப்பறிய	எகக
கண்ணிற்கு	சுஎச	சிறுபடையான்	சலக
கண்ணுடையர்	எல	சிறைநலனும்	சகங
கண்ணோட்டம் இல்லவர்	சுஅல	சுற்றத்தால்	சகசு
கண்ணோட்டம் என்னும்	சுசுஉ	சூழ்வார்கண்	உசள

செய்தக்க அல்ல ஙகஉ
செய்வானை சளஙு
செயற்பால உஉய
செருக்கும் உயச
செருவந்த சுருய
செல்வத்துள் கஙருி
செவிக்குண கஙுஅ
செவிகைப்பச் சக
செவியிற் கசுருி
செவிபுணவிற் கசஉ
செறுநரைக் ஙுஅய
சென்ற இடத்தால் களஙு
ஞாலம் கருதினும் ஙுசுக
தக்காங்கு சுஉசு
தக்காரினத்தனாய்த் உருிக
தம்மிற் பெரியார் உசச
தமராகித் ருியக
தன்குற்றம் உகசு
தாமின்புறுவது கச
தாளாண்மை இல்லா எஅள
தாளாண்ரை என்னுந் எஅருி
தினைத்துணையாம் உகய
துளியின்மை சுஙக
துறந்தார் படிவத் எயக
தூங்காமை உசு
தெய்வத்நான் அயய
தெரிந்த இனத்தொடு ஙயச
தெளிவிலதனைத் ஙயஅ
தேரான் தெளிவும் சருிய
தேரான் பிறனைத் சசசு
தேறாற்க சசஅ
தொடங்கற்க ஙகய
தெட்டனைத்தூறும் உஅங
நல்லார்கண் கஉஉ
நல்லினத்தினூங்குந் உகசு
நன்மையும் சருிள
நன்றாற்றல் ஙஉஉ
நாடொறும் நாடி சுயய
நாடொறும் நாடுக சஅக
நிலத்தியல்பால் உளஉ
நுண்மாண் ஙஙள
நுணங்கிய ஙசுஉ
நுனிக்கொம்பர் ஙசள
நெடுநீர் எருிக
நெடும்புனலுள் சயய
பகல்வெல்லும் ஙசுக
படியுடையார் எசுங
பணைகுடி கருி
பண்ணென்னாம் சுசுசு
பரியது எசஙு
பருவத்தோடு ஙசுச
பல்லார் உசுஉ
பற்றற்ற கண்ணும் கஅசு
பற்றுள்ளம் உஉச
பிழைத்துணர்ந்தும் கருிசு
பீலிபெய் ஙசஉ
புகழ்ந்தவை ருிஙள
பெயக்கண்டும் சுஅஅ
பெருங்கொடையான் ருியஉ
பெருமைக்கும் சஙள
பொச்சாப்பார்க்கு ருிஉருி
பொச்சாப்புக் ருிஉஉ
பொதுநோக்கான் ருியசு
பொள்ளென ஙளள
பொறியின்மை எகள
மடிமடிக் எருிரு
மடிமை குடிமைக்கண் எசுஅ
மடியிலா மன்னவன் உஅங
மடியுளாள் எகருி
மடியை மடியா எருிஉ
மடுத்தவா அகருி
மண்ணோ டியைந்த சுஅஅ
மறைந்தவை எகஉ
மன்னர்க்கு சுயஅ
மனத்தானாம் உளக
மனத்துளது போலக் உருிள

மனந்தூய்மை உஅஉ
மனந்தூயார்க் உஅடு
மனநலத்தின் உகசா
மனநலம் நன்குடைய உகக
மனநலம் மன்னுயிர்க் உஅஅ
முதலிலார்க்கு உடுக
முயற்சி திருவினை எகஙந
முரண் சேர்ந்த நகசா
முறை கோடி சுகள
முறை செய்து சள
முன்னுறக் காவாது நிஉக
மேற்பிறந்தா ராயினும் கஉடு
யாதானும் அசு
வகையறச் சூழா நகல
வருமுன்னர்க் உகசா
வாரி பெருக்கி சசுக
வானோக்கி வாழும் நிடுங
வியவற்க உஉசு
விருப்பறாச் சுற்றம் சகல
விலங் கொடு கஉஅ
வினைக்கண் வினைகெடல் எஅக
வினைக்கண் வினையுடையான்
சளக
வினைக்குரிமை சளள
வினை செய்வார் எலங
வினைவலியும் தன்வலியும் ஙஙல
வெருவந்த சுஙங
வெள்ளத் தனைய இடும்பை அகக
வெள்ளத் தனையமலர் எஙச
வேலன்று வென்றி நிளக
வேலொடு நிகடு

திருக்குறள் ஆய்வக வெளியீடுகள்

	ரூ.	பை
1. குறள் கண்ட பொருள் வாழ்வு டாக்டர் தி. முருகரத்தனம்.	5.	00
2. குறள் கூறும் இறைமாட்சி டாக்டர் தி. முருகரத்தனம்	7.	00
3. வள்ளுவர் வகுத்த அரசியல் (கருத்தரங்கக் கட்டுரைகள்)	6.	00
4. வள்ளுவர் வகுத்த பொருளியல் (கருத்கரங்கக் கட்டுரைகள்)	6.	00
5. குறள் கூறும் சமுதாயம் செல்வி காமாட்சி சீனிவாசன்	10.	00
6. திருக்குறளும் விவிலியமும் (இரண்டாம் பதிப்பு) செல்வி காமாட்சி சீனிவாசன்	29.	00
7. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் —அறம் கோ. வடிவேலுச்செட்டியார். வ. பதிப்பு	10.	00
8. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் –பொருள் கோ. வ. பதிப்பு	15.	00
9. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் -காமம் கோ. வ. பதிப்பு	10.	00
10. திருக்குறள் உரைக்களஞ்சியம் –பாயிரவியல் முதுபெரும்புலவர் ச. தண்டபாணி தேசிகர்	20.	00
11. திருக்குறள் உரைக்களஞ்சியம் -இல்லறவியல் முதுபெரும்புலவர் ச. தண்டபாணி தேசிகர்	30.	00
12. குறள் கூறும் அரசு டாக்டர் தி. முருகரத்தனம்	8.	00
13. திருக்குறள் உரைக்களஞ்சியம் – துறவறவியல், ஊழியல் முதுபெரும்புலவர் ச. தண்டபாணி தேசிகர்	30.	00
14. திருக்குறள் உரைக்களஞ்சியம் –காமத்துப்பால்- களவியல், கற்பியல் முதுபெரும்புலவர் ச. தண்டபாணி தேசிகர்	60.	00
15. திருக்குறள் உரைக்களஞ்சியம் - பொருட்பால்–அரசியல் முதுபெரும்புலவர் ச. தண்டபாணி தேசிகர் (அடுத்துவருவன)		
16. திருக்குறளும் உறுதிப்பொருள்களும் (கருத்தரங்கக் கட்டுரைகள்)		